211,31 N68
31 N69:12
6.14-41

வெளியீடு—21—10—1968]
Issued—21—10—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*புதன்கிழமை, 1968 மார்ச் 20*
**Wednesday, 20th March 1968**

தொகுதி XII—எண். 1
**Volume XII—No. 1**

©
*தமிழக அரசு*
*1968*
©
GOVERNMENT OF MADRAS
1968

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

V2;11,31 N68
61441

# Tamil Nadu Legislative Assembly Debates

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

**20th to 23rd March 1968.**

---

**Volume XII (Nos. 1 to 4).**

TABLE OF CONTENTS.


PAGES.

*Wednesday, 20th March 1968.*

1. Questions and Answers ... ... ... 1–24
2. Calling Attention—
   (i) Alleged harassment of ryots in Gingee taluk for sale of fruit juice mixed with alcohol ... ... ... ... ... ... 24–26
   (ii) Non-implementation of water supply scheme for Ramanathapuram Municipality 26–27
3. Voting on Demands for Grants for 1968–69—*cont.*
   Demand No. 12—Police ... ... ... 27–119
4. Papers laid on the Table of the House ... 119

*Thursday, 21st March 1968.*

1. Questions and Answers ... ... ... ... 129–156
2. Adjournment Motions—
   (i) Accumulation of handloom cloth in Madurai district ... ... ... ... ... 156–157
   (ii) Air transport jasmine from Madurai to Madras ... ... ... ... ... 157–158
3. Calling Attention—
   (i) Failure of monsoon and failure of crops in Radhapuram sub-taluk in Tirunelveli district ... ... ... ... ... 158–159
   (ii) Reduction in intake of students in Engineering Colleges ... ... ... 159–162

PAGES.

*Thursday, 21st March 1968*—cont.


4. Point of order *re.*—
Chief Minister's visit to America ... ... 162

5. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 34—Stationery and Printing ... 162–199
Demand No. 19—Co-operation ... ... 199–258

6. Papers laid on the Table of the House ... ... 258–288


*Friday, 22nd March 1968.*


1. Questions and Answers ... ... ... ... 289–314

2. Adjournment Motion—
Closure of Raja Mills, Madurai ... ... 314–315

3. Calling Attention—
Failure of monsoon and supply of foodgrains through family cards in certain taluks in Tirunelveli district ... ... ... 315

4. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 20—Industries ... ... 315–383
Demand No. 40—Capital Outlay on Industrial Development ... ... ... ...

5. Papers laid on the Table of the House ... ... 383


*Saturday, 23rd March 1968.*


1. Questions and Answers ... ... ... 479–508

2. Adjournment Motions—
(i) Adverse effect on Tamil Nadu due to construction of an anicut across Periyar at its source ... ... ... ... ... 509
(ii) Siva Sena's agitation against screening of Tamil film in Maharashtra ... ... 509–510
(iii) Prevention of Tamilians to enter Katcha Theevu ... ... ... ... ... 510–511

3. Calling Attention—
Failure of monsoon in Palladam taluk and postponement of recovery of Co-operative Society loans ... ... ... ... 511–512




*Saturday, 23rd March 1968*—cont.

PAGES.


4. Government Motion—
Change in order of the Business of the House 512

5. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 26—Irrigation ... ...
Demand No. 41—Capital Outlay on Irrigation
Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ... ...
Demand No. 27—Public Works—Works ...
Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... 512–605

6. Announcement—
Panel of Chairmen ... ... ... ... 575

7. Papers laid on the Table of the House ... 605–606

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling attention to a matter of urgent public importance. |
| C.A. St. ... ... | Calling Attention Statement. |
| **Consid.** ... ... | Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. **(iii) Amendment to circulate.** |

**(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.**

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of Clauses of a Bill. |
| D.E.E. ... ... | ... Demands for Excess Expenditure. |
| Dis. S.D. ... ... | ... Discussion for short duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... | ... Demands for Supplementary Grants. |
| G.A. ... ... | ... Governor's Address. |
| G.D. ... ... | ... General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... Half-hour Discussion. |
| Int. ... ... ... | ... Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | ... Legislative Assembly. |
| L.C. ... ... ... | ... Legislative Council. |
| M. ... ... ... | ... Motion. |
| P.M. ... ... ... | ... Privilege Motion. |
| R/Res. ... ... | ... Resolution. |
| St. ... ... ... | ... Statement. |

## தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழக ஆளுநர்
### சர்தார் உஜ்ஜல் சிங்.

1. **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை (முதல் அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், உணவு உற்பத்தி.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி, தொழில் அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலை வாய்ப்பும், பயிற்சி அளித்தலும், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும், சட்டப் பேரவையும்.

3. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசன திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (உணவு வருவாய்த் துறை அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (விவசாய அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்ப, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நல, செய்தி அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது-பொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்)** பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

**8. மாண்புமிகு** திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

**9. மாண்புமிகு** திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகள், பூதான, கிராமதான இயக்கம், கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்,

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

### Governor of Madras

SARDAR UJJAL SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief Minister*) : *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Industries*) : *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*) : *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*) : *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*) : *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*) : *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*) : *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (*Minister for Public Health*) : *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. The Hon. Thiru M. MUTHUSWAMY (*Minister for Local Administration*) : *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project and Ex-servicemen.*

## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்

### பேரவைத் துணைத் தலைவர்

புலவர் கா. கோவிந்தன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. அ. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்எல்.பி.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்எல்.பி.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)

திரு. ஜி. இராகவன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (பேரவைத் தலைவர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ.கோ. .. .. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. .. .. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், எ. .. .. | கொளச்சல். |
| 32 | சின்னராஜி, சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. ... .. .. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 35 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி.எஸ். .. ... | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 37 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 38 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. .. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 41 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். .. | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 45 | எல்லப்பன, பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 46 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கொ. இர. .. .. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 52 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). .. | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், [illegible] .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராகன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). .. | முகையூர். |
| 60 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. .. .. .. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. .. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். .. .. .. | கிணத்துக்கடவு. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 81 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, கி. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.). |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி–1. |
| 101 | மணி, வி. எஸ்.எஸ். | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, எ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 107 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 114 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, எ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 117 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 120 | முனுசாமி, செஞ்சி, வெ. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 122 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. | முசிரி. |
| 127 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், எ. சி. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.) |
| 142 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், எ. ஆர். | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. | பனைமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, ஏ. எம். | பவானி. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர் (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 171 | ராமசாமி நாயுடு, எஸ். | சாத்தூர். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே.என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 185 | சேனாபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 189 | சண்முகம், வி.எஸ் | விராலிமலை. |
| 190 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.) |
| 191 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 192 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 193 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 194 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 195 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 196 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 197 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 198 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 199 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |
| 200 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 201 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 202 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 203 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 204 | சுப்பையா, கே.வி. | ஆலங்குடி. |
| 205 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 206 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 207 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 208 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 209 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 210 | சுவாமிநாத ஒடையார், த.சி. | மன்னார்குடி. |
| 211 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 212 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 213 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 214 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 215 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 216 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 217 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 218 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 219 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 220 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 221 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம் |
| 222 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 223 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 224 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 225 | வெள்ளைத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 226 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 227 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 228 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 229 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 230 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 231 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 232 | விநயகம், கே. | திருத்தணி. |
| 233 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 234 | வில்லியம், எம். | இள்ளியூர். |
| 235 | வெற்றிடம் | தென்காசி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
|---|---|
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்), |

# தமிழக சட்டப் பேரவை

**புதன்கிழமை, 1968 மார்ச் 20**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள் விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### வேலூர் வட்டத்திற்கு சிமிட்டி தொழிற்சாலை

*256 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டத்தில் அதிகமாகக் கிடைக்கும் சுண்ணாம்பை பயன்படுத்தும் வகையில் அங்கு சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை. ஆனால் அந்த இடத்தில் எவரும் ஆலை நிறுவுவதை அரசாங்கம் வரவேற்கிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, ஒரு சிமெண்ட் தொழிற்சாலை துவங்குவதற்கு என்னென்ன மூலப் பொருள்கள் தேவை என்று அரசு கருதுகிறது? மூலப் பொருள் மேலூர் வட்டத்தில் மதுரை மாவட்டத்திலே இல்லை என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கு மிக முக்கியமாகத் தேவைப் படுவது சுண்ணாம்புக்கல்தான். மேலூருக்குப் பக்கத்தில் சுண்ணாம்பூர் என்ற இடத்தில் 14 லட்சம் டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. அங்கே ஒரு சிறிய சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** திருச்சி மாவட்டத்தில் லால்குடிக்குப் பக்கத்திலே டால்மியாபுரத்திற்கு அருகில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று வேலைகள் எல்லாம் முடிந்துங்கூட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அங்கே டால்மியாபுரத்தி இருக்கின்ற ஆலைக்காரர்கள் தலையீட்டால் தான் அது நிறைவேறும இருக்கிறது என்று பேசப்படுகிறதே அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, டால்மியாபுரத்திற்கு அருகிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை பைலட் பிளாண்ட் ஆக ஆரம்பிக்கப்படுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்காக பெரிய பெரிய தொழிற் சாலைகளை வைத்துக்கொண்டு இருக்கிறோம். சிறிய பைலட் பிளாண்ட் முதலிலே பாதுகாப்புத் துறையினரால் நிறுவப்பட்டு எல்லைப்புறத்தில் பல இடங்களில் பாதைகளைப் போடுவதற்காக உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக இருக்கிறது. ஆலங்குளத்திலே பெரிய அளவிலே உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே நம்முடைய மாநிலத்திலே தேவையான அளவிற்கு சிமெண்ட் உற்பத்தியாகிறது. சிமெண்ட் தொழிற்சாலை வெளி மாநிலங்களில் பெறுவதற்கும் சில இடங்களிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. வெளி நாடுகளிலிருந்தும், சிலோன் போன்ற நாடுகளிலிருந்தும் வந்திருக்கின்றன. பைலட் பிளாண்ட் சம்பந்தமாக ஏற்படுகின்ற நிர்வாகச் செலவு, வாடகை முதலியவற்றைப் பெறுவதற்குத்தான் பயன்படுமே தவிர சிமென்ச உற்பத்தியாவதற்கு வகைப் படுத்துவதற்கில்லை.

**திரு. ஆலடி அருணா :** நெட்டூர், ரெட்டியார்பட்டி, ஊத்துமலை ஆகிய இடங்களில் தேவையான அளவிற்குச் சுண்ணாம்புக்கல் இருக்கின்றன. அங்கே சிறிய அளவிலாவது சிறிய சிமெண்டு தொழிற்சாலை துவக்கி வைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்னால் நிலநூல் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து 9 இடங்களில் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிற தென்று தெரிவித்திருக்கிறார்கள். கயத்தார், அம்பாசமுத்திரம், சுண்ணாம்பூர், அறியலூர், கயிறுல்லாபாட், சாமல்பட்டி, வாலையாற்றில் சேதுராப்பட்டு வாணூர், குளித்தலைக்கு அருகில் சிந்தாமணிப்பட்டி முதலிய இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அந்த இடங்களில் சுண்ணாம்புக்கல் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி நிலநூல் ஆராய்சியாளர்கள் ஆராய்ந்து அறிந்து அதைப்பற்றிக் கருதது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரத்திற்கு அருகே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டும் கூட அது ராஜபாளையத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. அங்கே சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பும் வசதியும் இருப்பதாலே சிறிய அளவிலேயாவது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளம் பகுதியிலே அரசாங்கம் சார்பில் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இராமநாதபுரத்திலே சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது என்பதற்காக அதை அங்கே ஆரம்பிப்பதற்கு யாராவது முன்வந்திருக்கிறார்களா என்பதற்கு வேறு குறிப்புகள் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவை மாவட்டத்திலே உடுமலைப் பேட்டை பொள்ளாச்சி இரண்டு தாலுக்காக்களும் சேரக்கூடிய பகுதியிலே சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. அங்கே சிறிய அளவிலே சிமெண்ட் தொழிலை ஏற்படுத்த வேண்டுமென்று அங்கேயுள்ள அபிவிருத்தி கவுன்சிலில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே அதை ஏற்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே குறிப்பிட்டபடி 9 இடங்களில் தான் சிறிய அளவிலே சிமெண்ட் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில இடங்களில் சுண்ணாம்புக்கல் சிறிய அளவில் கிடைக்கலாம். ஆனால், தொடர்ந்து சிமெண்ட் தொழிற்சாலை நடத்தக் கூடிய அளவிலே கிடைக்குமா என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு அந்த 9 இடங்களில் தான் வைக்கலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். யாராவது அவ்வாறு வைப்பதற்கு முன்வந்தால் அதைக் கவனிக்கலாம். இப்போது அதைப் பொறுத்தவரை "டி-லைசென்ஸ்டு" ஆக்கியிருக்கிறார்கள். அனுமதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை. சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது.

**திரு. டி. தங்கப்பன் :** தலைவர் அவர்களே, மேலூர் பகுதியிலும் மற்ற பகுதியிலும் சுண்ணாம்புக்கல் இருப்பதாக சொல்லப்படுகிறது. அது போல் இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியிலே நாள்தோறும் நூற்றுக் கணக்கான அளவில் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுத்துச் செல்லுகிறார்கள். அதை தாளையூத்து போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். அப்படி யில்லாமல் கச்சா பொருள் கிடைக்கின்ற இராமநாதபுரம் பகுதியிலேயே [illegible] தொழிற்சாலை ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 9 இடங்களில் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவற்றைப்பற்றி எல்லாம் நிலநூல் ஆராய்ச்சியாளருக்கு தகவல் அனுப்பி வைப்பார்களேயானால் போதுமான அளவிற்கு சுண்ணாம்புக்கல் கிடைக்கிறதா என்று பார்த்து, அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் யாரைக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்பது பற்றிய முயற்சிகள் எடுத்து தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. இல. பலராமன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் தாலூக்காவில் சுண்ணாம்புக்கல் அதிகமாகக் கிடைப்பதால் அங்கே சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஆராய்ச்சி செய்யப்பட்டதா ? அதன் விவரம் என்ன ? வட ஆர்க்காடு மாவட்டத்திலே வேறு ஊர்களிலே சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முயற்சி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வட ஆர்க்காடு மாவட்டத்திலே சாலைப்பட்டியிலே 75 லட்சம் டன் சிமெண்ட் கிடைக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. அதே போல் கயிறுல்லாபாட் என்ற இடத்திலே 125 டன் சிமெண்ட் கிடைக்கக் கூடும் என்று தெரிகிறது. ஆகவே, சிமெண்ட் தொழிற்சாலை அங்கே ஆரம்பிக்கவில்லை. ஆரம்பிப்பதற்கு தனியார்கள் யாராவது முன்வருவார்களானால் அதற்குத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எஸ். முருகையன் :** மாநிலம் பூராவும் பரவலாக சிறிய அளவிலே சிமெண்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கமே எந்தெந்த இடங்களில் என்று சர்வே செய்து தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களைக் கொண்டோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ அல்லது அரசாங்கமோ ஆரம்பம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சிமெண்ட் உற்பத்தியைப் பொறுத்த வரை நம்முடைய தேவையை நிறைவேற்றுகிற அளவிற்கு இந்த மாநிலத்தில் நிலைமை இருந்து வருகிறது. 6 கோடி, 7 கோடி அளவில் ஆலங்குளத்தருகே ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பிப்பதற்கு தனியார் துறையில் யாராவது அந்த இடங்களிலே முன் வந்தால், அதற்கு ஆதரவு தரலாம்.

**Thiru K. S. KOTHANDARAMIAH :** Sir, limestone of good quality is available in many places in Dharmapuri district, especially in firkas like Voppanapalle in Krishnagiri taluk, So. will the Government take steps to have a small factory there ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சுண்ணாம்புக்கல் இருப்பது பற்றி விவரக் குறிப்பு இல்லை. போதுமான அளவிற்கு சூழ்நிலை ஏற்படுமானால் தொழிலை ஆரம்பிக்கலாமா வேண்டாமா என்பது பற்றி ஆராய்சியாளர்கள் கண்டறிந்த வாய்ப்புக் கூறுகளை எடுத்துச் சொல்வார்கள். அந்த அடிப்படையில் ஆரம்பிப்பதற்கு யாராவது முன்வருவார்களானால் எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு கிடைக்கும் என்ற விவரக் குறிப்பும் ஆரம்பிக்கலாமா என்ற விவரக் குறிப்பும் கிடைக்கவில்லை. கிடைத்தால் பரிசீலிக்கலாம்.

**ஹாஜி. ம. மூ. பீர் முகம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அரசு ஆறு கோடி ரூபாய்க்கு மேல் பெரிய அளவுக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்களே, அது எந்த மாவட்டத்தில், எந்த இடத்தில் என்பதைத் தெரிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளம் பகுதியில்.

**திரு. ஏ. கே. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது இடங்களில், வானூர் தொகுதியில் சேதராபட்டு என்ற இடத்தைச் சொன்னார்கள். அந்த சேதராபட்டு என்னும் இடம் நமது எல்லையைச் சேர்ந்தது அல்ல : அது பாண்டிச்சேரியைச் சேர்ந்தது. சேதராபட்டு பாண்டிச்சேரி எல்லையில் இருப்பதால், அந்தப் பெயரை எடுத்துவிட்டு, வானூர் பகுதியில் இருக்கும் கடப்பேரிகுப்பம் என்று மாற்றியமைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதே நேரத்தில், அந்த ஒன்பது இடங்களில் துவக்கப்படுவதாகச் சொல்லப்படுவது எல்லாம் தனியார்த் துறைக்குத்தான் விடப்படுவதாகத் தெரிகிறதே தவிர அரசாங்கத் துறையில் அதை எடுத்துக்கொள்வதற்கு அபிப்பிராயம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத் துறையில் எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சேதராப்பட்டு "அண்டு" வானூர் என்று இருக்கிறது. சேதராப்பட்டிலும் சுண்ணாம்புக் கற்கள் இருக்கக்கூடும். வானூரிலும் சுண்ணாம்புக் கற்கள் இருக்கக்கூடும். வானூரில் தொழிற்சாலையை ஆரம்பித்தால், சேதராபட்டு வரையிலும் உள்ள கற்களை எடுப்பதற்கு நாம் முயற்சி செய்யலாம். ஆனால், சிறிய அளவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் முதலில் கூறியபடி, சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கமே பெரிய அளவில் அதனுடைய மூலதனத்தை முடக்கி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதால், சிறிய சிறிய தொழிற்சாலைகளை அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. 45 லட்சம், 50 லட்சம் ரூபாய் செலவில் சிறிய தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். ஆகவே தான் தனியார் முன்வந்தால், அதைத் துவக்கலாம். அவ்வாறு, நான்கு இடங்களில் வைக்க சில பேர் முன்வந்திருக்கிறார்கள். தனியார்த் துறையில் அப்படி முன்வருவார்களானால், அதற்கு ஆதரவு தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா-விடை நேரத்தில் வேண்டுகோள் விடுக்கக் கூடாது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், யாராவது ஐம்பது லட்ச ரூபாய் கொடுக்க முன்வந்தால் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். அந்தத் தொகையில் பாதி அளவாவது அரசாங்கம் கடனாகக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய கேள்விக்கு இப்பொழுது இடம் இல்லை. அது ஆராயப்பட வேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் செய்வது என்பது சிறிய தொழிலாக இருக்கிறது. கடன் கொடுக்க வேண்டிய கஷ்டம் எல்லாம் இருக்கிறது. ஆகவே, நல்ல உறுதியாகவுள்ள பழைய காலக் கட்டடங்கள் சுண்ணாம்பைக் கொண்டு கட்டப்பட்டவை என்பதை மனதிற்கொண்டு, இடித்தால் கூட இடிக்கப்பட முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு அழுத்தமாக இருப்பதால், சிறிய குடிசைத் தொழில்கள் மாதிரி சுண்ணாம்புக்கற்களைப் பயன்படுத்தும் வகையில் அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தேவைகளையொட்டித்தான் தொழிற்சாலை அங்கங்கு நிறுவப்படுகிற சூழ்நிலை ஏற்பட முடியும். சுண்ணாம்பைப் பயன்படுத்தும் அளவுக்குத் தேவை மிகுமானால், அதற்கேற்றபடி சிறிய சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். ஆனால்,



சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், அதற்கு ஒரு காலத்தில் அதிகக் கிராக்கி இருந்தது. டிமாண்டு அதிகமாக இருந்தது. ஆகவே, அவற்றையெல்லாம் கூட, வேறு பல வகைகளில் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது. இப்பொழுது ஓரளவு உற்பத்தியாகி, தேவையை நிறைவேற்றும் அளவுக்கு வந்திருப்பதை ஒட்டி, டீ-கண்ட்ரோல் பண்ணினார்கள். சிமெண்ட் விற்பனையில் டீ-கண்ட்ரோல் மட்டுமல்ல ; டீ-லைசன்சும் பண்ணியிருக்கிறார்கள். லைசன்ஸ் வாங்காமல் யாரும் ஆரம்பிக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் நிலைமையில், யாரும் புதிதாக சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வரமாட்டார்கள். ஏனென்றால், ஆரம்பித்த மற்ற பெரிய பாக்டரிகளோடு போட்டி போடும் சூழ்நிலை வருமா என்ற அச்சம் இருக்கிறது. காலம் செல்லச் செல்ல, வேறு பல கட்டடங்கள் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளும் நேரத்தில், புதிய புதிய திட்டங்கள் வரும் நேரத்தில், மந்த நிலை மாறுகிறபோதுதான், அதற்கு கிராக்கி ஏற்படும். அப்பொழுது இப்படிப்பட்ட தொழிற்சாலைக்கு நல்ல வாய்ப்பு வசதிகள் ஏற்படக்கூடும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** அந்த சிமெண்ட் தொழிற்சாலையை 52 லட்சம், 55 லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்து வைக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அத்தகைய ஒரு தொழிற்சாலை வைக்க எவ்வளவு முதல் வைக்க வேண்டும் ? எவ்வளவு முதல் வைத்தால், சர்க்கார் கடன் அதற்கு எவ்வளவு கிடைக்கும் என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எவ்வளவு முதல் வைக்க வேண்டும் என்பது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் பலரை அணுக வேண்டிய நிலையை வைக்காமல், 45 லட்சம் முதல் 50 லட்சம் ரூபாய் வரையில் ஆகக்கூடும் என்று சொன்னேன். ஒருவரோ பலரோ சேர்ந்து அத்தகைய தொழிற்சாலையை வைக்கலாம். பத்து, பதினைந்து, ஐம்பது பேர்கள் கூடச் சேர்ந்து வைக்கலாம். அப்படி முன் வந்தால், அதற்குப் பிறகு, என்னென்ன வழிகள், வகைகள் என்பதைத் துறையினர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்கு அறிவிக்க வாய்ப்பு இருக்கும்.

## திருமங்கலம் வட்டத்தில் உலோகப் பொருள்கள்

* 257 வினா —**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகாவில் உலோகப் பொருள்கள் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆமெனில் என்ன என்ன உலோகங்கள் எங்கெங்கு எவ்வளவு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அவைகளை எடுப்பதற்கு இதுவரை எந்த அளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ), and (இ) : மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு வடக்கு-வடமேற்கில் 4 மைல் தொலைவில் உள்ள ஜோசியர் ஆலங்குளம் என்னுமிடத்தில் செப்புப் படிவம் இருப்பதாக இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறை கண்டுபிடித்துள்ளது. செப்புக் கனிகளும் தொடர்பான ஏனைய சல்பைடு கனி வகைகளும் எந்த அளவுக்கு உள்ளன என்பது இன்னும் மதிப்பிடப்படவில்லை. இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறை தற்போது துளை போடுவது மூலம் கனிகள் உள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

(உ) ஆய்வு வேலைகள் இன்னும் முடிவுறவில்லை ; எனவே, கிடைக்கும் கனிகளை வெட்டியெடுப்பது குறித்த வினா இந்த நிலையில் எழவில்லை,

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, அந்த இடத்தில், வெள்ளிப் படிவங்கள் இருப்பதாகவும், அதைத் தோண்டி ஆராய்ச்சி நடத்துவதாகவும் சொல்லப்படுகிறது. அப்படித் தோண்டி எடுக்கப்படுகிற உலோகப் பொருள்களைப் பொறுத்த வரையில், மாநில அரசுக்கு, மத்திய அரசு விகிதாசார அடிப்படையில் தொகை கொடுக்குமா ? உலோகப் பொருள்களை வெட்டி எடுக்கும்போது, அந்த உலோகப் பொருள்களை வைத்து நடத்தும் தொழிற்சாலையையும் அந்த இடத்திலேயே ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் அங்கே என்ன என்ன உலோகங்கள் எந்த அளவுக்குக் கிடைக்கின்றன என்று கண்டுபிடித்த பிறகுதான், வெட்டி எடுப்பதற்கான முயற்சிகளில் எப்படி ஈடுபட வேண்டும் என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அங்கே இப்பொழுது செப்புப் படிவம் இருப்பதாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளிப் படிவங்கள் கிடைக்கின்ற குறிப்புகள் இப்பொழுது கிடைக்கவில்லை. இப்பொழுது 9 இடங்களில், 9 துளைகள் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறை 9 துளைகளைப் போட்டு, 1,012 மீட்டர் தூரத்திற்குப் போட்டுப் பார்த்ததில், 600 மீட்டர் அளவுக்குக் கனிப் படிவங்கள் கிடைக்கின்ற கூறுபாடு இருக்கிறது. அதை மட்டுமே வைத்துக் கொண்டு, எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாது. அதன் பரப்பளவு எவ்வளவுக்குப் போகும், கன அளவு எவ்வளவு என்பதைக் கணக்கிடும்போது, அதனுடைய மொத்த அளவு நமக்குத் தெரியும். மொத்த அளவு நமக்குத் தெரியும்போதுதான், வெட்டி எடுப்பதில் நமக்குக் கட்டுபடியாக இருக்குமா என்று கண்டறிந்த பிறகுதான், வெட்டி எடுக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறை இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்திய கனிவள ஆராய்ச்சித் துறையோடு, மாநில கனிவள ஆராய்ச்சித் துறையும் இணைந்தே இப்படிப்பட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடி, உட்கார்ந்து, எப்படிப்பட்ட பணிகளை எப்படி எப்படி எடுத்துக் கொள்ளலாம், எப்படி அதை விரிவுபடுத்தலாம் என்று ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள். இதுபற்றி முழு விவரம் அறிந்த பிறகுதான் தொழிற்சாலை நிறுவுவதற்கான வாய்ப்புகளை ஆராயவேண்டும். அதை மத்திய சர்க்கார் செய்ய வேண்டுமா, மாநில சர்க்கார் செய்ய வேண்டுமா என்பதையெல்லாம் கூட்டு ஆராய்ச்சியின் முடிவைப் பொறுத்ததாக இருக்கும். மிகக் குறைந்த செலவாக இருந்தால் நாமே கூட எடுத்துக் கொள்ளலாம். பெருந் தொழிலாக இருந்தால், மத்திய அரசைக் கேட்க வேண்டிய நிலை ஏற்படும்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் அழகர்மலைக் குன்றுகளையொட்டிய பகுதிகளில் சில உலோகப் பொருள்கள் கிடைப்பதுபற்றி அரசுக்குத் தெரியுமா ? மேலும், இவற்றை ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கேள்வி, திருமங்கலம் வட்டத்தைப் பற்றியது. அதுபற்றித் தான் நான் ஆரம்பத்தில் சொன்னேன். அதற்குப் பிறகு, தனிக் கேள்வி கேட்டால், அதுபற்றி விவரக் குறிப்பு தரப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் உள்ள செப்பப் படிவங்களைப் போல், தென்னாற்காடு மாவட்டத்திலே கூட; கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த மாமண்டூரில் கண்டுபிடிக்கப்பட்டதாக சில ஆண்டுகளுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டது. அங்கே தோண்டி எடுக்கக் கூடிய நிலை எந்த அளவுக்கு இருக்கிறது ? மின்சார இலாகாவில் செப்புக் கம்பிகள் இல்லாத காரணத்தால், மின்சாரம் கொடுப்பது சாத்தியப் படாமல் இருப்பதால், அதைத் தோண்டி எடுக்கக்கூடிய வேலையைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூல வினாவுக்கு இது தொடர்புடையதல்ல. என்றாலும், மாமண்டூர் பகுதியில் செப்புப் படிவங்கள் கிடைக்கும் என்பதற்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். முழு விவரம் தெரிந்த பிறகு வெட்டி எடுக்கும் பணி மேற்கொளளப்படும்.

### *List Irrigation Scheme in Manavalakurichi*

* 258 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the present position of the Lift Irrigation Scheme from Periyakulam tank in Manavalakurichi village in Kalkulam taluk ;

(*b*) whether the Government have received the unanimous resolutions recommending to take up this scheme from the District Development Council of the Kanyakumari district ; and

(*c*) if so, the progress so far made to acheive this end?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) பெரியகுளம் இறைவைப் பாசனத் திட்டம் 1957-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டது. இத் திட்டத்திற்கு அதிகச் செலவாகுமென்று தெரிந்ததால தொடர்ந்து இதனைச் செயல்படுத்தவில்லை.

(இ) இல்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

### மதுராந்தகம் ஏரி

* 259 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஏரி தூர் வாருவதற்காக எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரி மிகவும் தூர்ந்து போயிருக்கிறது. அதனுடைய கரைகள் வெள்ளக் காலத்தில் மிகவும் அபாயகரமாகயிருப்பதால் ஏரியின் உள்ளே இருக்கும் மண்ணைக் கொண்டோ அல்லது வெளியிலேயிருந்து மண்ணைக் கொண்டு வந்தோ அதன் கரைகளைப் பலப்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கரையைப் பலப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் உள்ளேயிருக்கும் மண்ணைக் கொண்டு ஏரியின கரைகளை அகலப்படுத்த இப்பொழுது பல இடையூறுகள் இருக்கின்றன. காரணம், அங்கே தண்ணீர் தேங்கியிருப்பதால் மண்ணை எடுக்க வழியில்லை. தண்ணீரை வற்றச் செய்துவிட்டு மண்ணை எடுத்து கரைகளை அகலப்படுத்தலாம் என்றால் விவசாயிகள் சம்மதிப்பதில்லை. கனம் உறுப்பினர்கள் விவசாயிகளின் சம்மதத்தை வாங்கினால் அந்த மண்ணை எடுத்து கரைகளை அகலப்படுத்த இயலும். இல்லாவிட்டால் 7 அல்லது 8 மைல் தூரத்திலிருந்து மண்ணைக் கொண்டுவந்து அகலப்படுத்த வேண்டியிருக்கும். அதற்குத் திட்டமிட்டிருக்கும் செலவைவிட 4 மடங்கு அதிகமாகச் செலவாகும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, இந்தக் கண்மாய் மராமத்துச் செய்யும் பொழுது கரைகளைப் பலப்படுத்துகிறார்கள். அப்பொழுது மணல் மேடாகி விடுகிறபடியால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு ஒரு

போகம் தண்ணீர் இல்லாமல் சாவியாகப் போகிறது. ஆகவே "புல் டோஸர்" உபயோகப்படுத்தி அவைகளை ஆழப்படுத்த அரசாங்கம் யோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எங்கெங்கு வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றனவோ, நான் முதலில் குறிப்பிட்டபடி இடையூறுகள் இல்லாத தன்மையில், அங்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரிய ஏரி மதுராந்தகம் ஏரியாகும். அது சரித்திர சம்பந்தப்பட்ட ஏரியும் ஆகும். அப்படிப்பட்ட ஏரிக்கு, அதிகப்படியான மதிப்பீடுகள் இருந்தாலும் கூட பரவாயில்லை என்று வெளியிலிருந்தாவது மண்ணை எடுத்து வந்தாவது மராமத்து செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுராந்தகம் ஏரி பெரிய ஏரி என்பதிலே இப்பொழுது யாருக்கும் எந்தவித ஆட்சேபணையுமில்லை. கேள்வி கேட்டவர்களும் பெரியவர்கள். அதிலும் ஆட்சேபணையில்லை. இப்பொழுதிருக்கின்ற பிரச்சினை, அங்கிருக்கும் தண்ணீரை வற்றச் செய்தால் தான் அங்கிருக்கும் மண்ணை எடுத்துப் போட முடியும். இல்லாவிட்டால் 8 மைல் தூரத்திலிருந்து அங்கு மண்ணைக் கொண்டுவர வேண்டியிருக்கும். எனவே, செங்கற்பட்டு மாவட்டத்திலிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்து விவசாயிகளை இணங்க வைத்து அவர்கள் சம்மதத்தைப் பெற்றுக் கொடுத்தால் குறைந்த செலவில் ஏரியின் கரைகளைப் பலப்படுத்த இயலும்.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த மதுராந்தகம் ஏரியைப் பொறுத்த வரையிலே, "கடல் அலை எப்பொழுது ஓய்வது, நாம் எப்பொழுது குளிப்பது" என்ற பழமொழிப்படி, மதுராந்தகம் ஏரியிலே தண்ணீர் வற்றுவது எப்பொழுது, நீங்கள் எப்பொழுது மராமத்து வேலையைச் செய்வது? தண்ணீரை வெளியேற்றுவதற்கு விவசாயிகளின் சம்மதத்தைக் கேட்டுச் செய்வதைவிட, "ட்ரெஜ்ஜர்ஸ்" என்ற இயந்திரத்தைக் கொண்டு வந்து ஏரிக்கரை மீது வைத்து மண்ணை எடுக்க முயற்சி செய்யலாம். அவ்வாறு அந்த "ட்ரெஜ்ஜர்ஸ்" இயந்திரத்தைக் கொண்டு செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நண்பர் விநாயகம் அவர்களின் யோசனைப்படி செய்வதென்றால் முதலில் அந்த "ட்ரெஜ்ஜர்ஸ்" இயந்திரத்தைக் கொண்டு வந்து கரை மீது வைப்பதற்கே கரையை அகலப் படுத்த வேண்டும். அவ்வாறு கரையை அகலப் படுத்திக் கொண்டு அதன் பிறகு "ட்ரெஜ்ஜர்ஸ்" இயந்திரத்தைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். இதனால், "கல்யாணம் செய்து கொண்ட பிறகு பைத்தியம் தெளியுமா அல்லது பைத்தியம் தெளிந்த பிறகு கல்யாணம் செய்து கொள்வதா" என்ற பிரச்சினை எழுகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார், இந்த மதுராந்தகம் ஏரி மாத்திரம் அல்ல, பொதுவாகவே இராஜ்யத்திலேயுள்ள பல ஏரிகளிலும் பல வருஷங்களாகத் தூர் எடுக்காமல் இருக்கிறது. உதாரணமாக வீராணம் ஏரியிலும் தூர் எடுக்காமல் இருக்கிறது. அதனால் தூர் நிறைய வந்து குவிந்ததன் விளைவாக 300 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்க முடியாத நிலையிருக்கிறது. புதிய பாசனத் திட்டமும் கிடையாது. எனவே அரசாங்கம் ஏரிகள், நதிகளிலே உள்ள தூரை எடுப்பதற்குப் பெரிய திட்டம் போட்டு அவைகளை நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல செம்மைப்படுத்தப்பட வேண்டிய ஏரிகளைப் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. ஆவன செய்யும்.



**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியில மொத்த ஆயக்கட்டு எவ்வளவு? நீரில்லாமல் அந்தப் பயிர்கள் சாவியாகி இருக்கின்றன என்பது தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுராந்தகம் ஏரியில் பொதுவான ஆயக்கட்டு ஒரு போகம் 2,841 ஏக்கர். சாகுபடி செய்யப்படுகிற ஆயக்கட்டு ஐந்து வருஷ சராசரி கணக்குப்படி 2,630 ஏக்கர். இருபோகம் பொதுவாக 734 ஏக்கர். இது 734 ஏக்கராகயிருந்தாலும் 1,866 ஏக்கர் இப்பொழுது சாகுபடி செய்யப்படுகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியைப் பலப்படுத்த மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மதிப்பீட்டின் தொகை எவ்வளவு? வெளியிலிருந்து மண்ணைக் கொண்டு வந்து பலப்படுத்துவது என்றால் அதிகச் செலவாகும் என்று சொன்னார்கள். எவ்வளவு அதிகச் செலவாகும் என்று தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கரையைப் பலப்படுத்துவது என்பது நண்பர் முருகையன அவர்கள் கேட்டதுபோல் பாசன வசதிக்காக அல்ல. ஏனென்றால் தண்ணீர் வசதி போதுமானதாக இருக்கிறது. வெள்ளக் காலத்தில், புயல் காலத்தில் ஏரி உடைப்பெடுத்து மக்களுக்குப் பேராபத்து விளைவிப்பதால் அந்த ஏரியின் கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அதற்காக அமைச்சர் என்ற முறையில் நானும் சென்று பார்த்துவிட்டு வந்தேன். பலப்படுத்துவதற்கு அங்கிருக்கும் மண்ணைக்கொண்டு செய்வதென்றால் எழுபதாயிரம், எண்பதாயிரம் ரூபாய் ஆகும். ஆனால் வெளியிலிருந்து மண்ணை எடுத்துக்கொண்டு வந்து செய்வதென்றால் இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் ஆகும்.

**திரு. கே. விநாயகம் :** ஏரிக்கரையைப் பலப்படுத்துவதற்கு இப்பொழுது முடியாது, அப்படிச் செய்வதென்றால் அதிகமாகச் செலவாகும் என்று அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறதே, அதை விட்டு விட்டு, அங்கு அந்த ஏரியைக் காத்த இராமரே, கடவுளே இருக்கின்றாரே, அவரிடம் இதைவிட்டு விட அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏரியைக் காத்த இராமர் அங்கு இருக்கிறாரோ, இல்லையோ எனக்குத் தெரியாது. நான் அந்த ஏரிப்பக்கம் போயிருக்கிறேன். இராமர் பக்கம் அவர் போயிருப்பார் என்று கருதுகிறேன். நான் ஏரிப்பக்கம்தான் போயிருக்கிறேன்.

### *Ban on Export of Groundnut*

260 *Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR :
THIRU S. RAMACHANDRAN :

Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether this Government have requested the Union Government to ban export of groundnut and its allied products from this State; and

(*b*) if so, whether any reply has been received in this regard?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம். வேர்க்கடலை, மற்றும் கடலை எண்ணெய் ஆகியவற்றை இம் மாநிலத்தினின்று ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்க இந்திய அரசின் ஒப்புதல் வேண்டி, தமிழக அரசாங்கம் இந்திய அரசுக்கு கடந்த ஜூன் திங்களில் எழுதியது.

(இ) இந்திய அரசிடமிருந்து பதில் வந்துள்ளது. இது குறித்து மறு ஆய்வு செய்யுமாறு இந்திய அரசு இவ்வரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. இவ்வரசாங்கமும் இது குறித்து ஆய்வு செய்து வருகின்றது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிற்குத் தேவையான நிலக்கடலையையோ, நிலக்கடலைப் பொருள்களையோ வைத்துக்கொண்டு மீதமுள்ளதை வெளியில அனுப்பினால் எண்ணெய், உணவு உற்பத்திக்கு வேண்டிய உரம், பிண்ணாக்கு ஆகியவற்றின் விலைகள் ஏறுமல, ஏழை எளிய மக்கள் வாங்க கூடிய அளவிற்கு இறங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முயற்சியைத்தான் நான் சொன்னேன். இந்தக் காரியத்தில், பிண்ணாக்கு, வேர்க்கடலை எண்ணெய், மற்ற எந்தப்பொருள்களாக இருக்கட்டும்,

"In accordance with clause (*d*) of Section 3 of the Essential Commodities Act of 1955, the prior concurrence of the Central Government is necessary if the State Government proposes to regulate the movement of any foodstuff. The Government of India were accordingly addressed in 1967 for their concurrence for issuing an order restricting the movement of groundnut, groundnut oil and groundnut cake from this State to other States."

இதன்படி அத்தியாவசியப் பொருள்கள் சட்டப்படி உணவுப் பொருள்களை வேறு மாநிலங்களுக்கு போகக்கூடாது என்று தடை விதிக்க வேண்டுமென்றால அதற்கு மத்திய சர்க்காரின் ஒப்புதல் வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் நாம் சட்டம் இயற்றினால் வெல்லத்தடைச் சட்டம் அடிபட்டதைப்போல் ஆகிவிடும். அதற்காகத்தான் மத்திய சர்க்காரிடம் ஒப்புதல் கேட்டது. இந்திய அரசாங்கம் ஒப்புதல் அளிக்கவில்லை. வெளியிலே இருக்கிறவர்களுக்கு சௌகரியமாக இருக்க வேண்டுமென்கிறது. இந்த அரசாங்கம் மீண்டும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, உணவுப் பொருள்களின் விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்பதற்காக, கடலையெண்ணெய்ப் போன்றவற்றின் விலைகளைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்திய சர்க்கார் இதற்கு ஒப்புதல் அளிக்கத் தடையாக இருக்கிறது. ஒப்புதல் அளிக்காததற்குக் கூறும் காரணங்கள் யாவை என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** காரணங்கள் இந்த அரசுக்கு ஏற்புடையதாக இல்லை. மொத்தமான காரணங்கள்தான் சொன்னார்கள். கல்கத்தா போன்ற இடங்களில் விலை குறைவாகவில்லை. இதையும் தடுத்து விட்டீர்கள் என்றால் அவர்கள் என்ன செய்வார்கள் என்று சொன்னார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று, அத்தியாவசியமான பொருள்களும், குடும்பச் சமையல் காரியங்களுக்கு வேண்டிய பொருள்களும், உரம்போல இருக்கின்ற பொருள்கள் மற்றும், கடலைப்பிண்ணாக்கு ஆகியவைகள் வெளியே செல்லத் தடை விதிப்பது உசிதமானது அல்ல என்று கூறியதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

DR. H. V. HANDE: It is really unfortunate that each State thinks of its own interests. Some other States are preventing the movement of dhall to this State and the Madras Government have requested the concurrence of the Centre for banning the export of groundnut and groundnut oil from this State. If all States think like this, where is the end? Recently there was a conference of Chief Ministers and it was not attended by the Chief Minister of our State. At the next Chief Ministers' meet, our Chief Minister must take a bold step, show a way to the other States and say that this State is prepared to export to other States. This will pave the way for the other States to export their commodities to this and the other





States, so that India will be taken as one country. Will the Government take this bold step even at the risk of initially having a set-back and show a way to the other States ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை நான் முழுமனதோடு ஒத்துக்கொள்கிறேன். நான்கு நாட்களுக்கு முன்பு வடக்கு தேசத்தில் இருக்கிற பல மாநிலங்கள் தாங்கள் விதித்த தடை உத்திரவை எடுத்து விடுவது என்று வந்தன. முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக உணவு அமைச்சர் மிகமிக அழுத்தம் திருத்தமாக இந்த மாநில அரசின் கருத்தை, எங்களை மட்டும் கேரளாவுக்கு அரிசி அனுப்ப வேண்டுமென்று சொல்கிறீர்களே, ஆனால் எங்களுக்கு பருப்பு அனுப்ப மாட்டேன் என்கிறார்களே, ஆகையால் தடை உத்திரவை உடனே எடுத்துவிடுமாறு ஹரியானா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு உத்திரவு போட வேண்டும், தடை இருக்குமானால் நீங்களாவது ப்ரொக்யூர் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டதன் விளைவாக அந்தக்கருத்துக்கு ஒரு பெரிய ஆதரவு இருந்தது. அப்போது வேறு மந்திரி சபைகள் இருந்தன. 4 தினங்களுக்கு முன்பு முதலமைச்சர் மாநாட்டில் தமிழக உணவு அமைச்சர் உங்கள் சார்பாக அந்தக் கருத்தை சொல்லியதன் விளைவாக இது நடந்திருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தமிழ்நாட்டில் எண்ணெய், பிண்ணாக்கு போன்றவை எவ்வளவு தேவை, விளைச்சல் எவ்வளவு என்று இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து சர்க்கார் இந்த சிபாரிசை செய்ததா ? அப்படி இந்த சிபாரிசு மத்திய அரசினால் ஏற்கப்பட்டால் விலைச்சரிவு ஏற்படுமா அல்லது நியாயமான விலை இருக்குமா ? அரசாங்கம் எப்படி கருதுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இடைத்தரகர்கள், வியாபார நோக்கத்தோடு வர்த்தக சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள், ஸ்பெகுலேடிங் மார்க்கெட்டில் இருப்டவர்கள இங்கிருந்து ஏராளமாக இப் பொருள்களை அனுப்புவதால் இங்கு பற்றாக்குறையை ஏற்படுத்தி இதனால் விலைவாசி உயர்வு ஏற்படும்படியான நிலைமை வந்தது. உறுப்பினர்களுக்கு நான் ஒரு மகிழ்ச்சியான செய்தி கூற விரும்புகிறேன். கடந்த 4, 5 மாதங்களாக தென்னாற்காடு, பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் வேர்க்கடலை விளைச்சல் நல்ல நிலையில் இருப்பதால் விலை இறங்குமுகமாக இருக்கிறது. ஒரு கட்டுதிட்டத்துக்கு அடங்கும் நிலை இருக்கிறது. நிரம்ப அதிகமான விலை இருந்ததால்தான் இந்த தடை உத்திரவு வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தியது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்ட இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு மிக அதிகமாக கை கொடுக்கிற மணிலா போன்ற பணப்பயிர்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்தால் இவற்றுக்கு விலை அதிகம் கிடைக்கும், விவசாயிகளுக்கு இதனால் நன்மை கிடைக்கும். ஆகவே வெளி மாநிலங்களுக்கு மணிலாவை மறுபடியும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நியாயமான விலை இருக்க வேண்டும் என்பதை அரசு ஒப்புக்கொள்கிறது. அதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகிறது. விவசாயிகளுக்கு நிரம்ப லாபம் வேண்டும் என்ற பெயரால் 3½ கோடி மக்களுக்கு வீட்டில் எண்ணெய் இல்லாமல் இருக்கும் பயங்கர வரட்சி நிலை ஏற்படுத்துவது பொதுமக்களுக்கு செய்கிற துரோகமாகும் என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், வேர்க்கடலை அதிலிருந்து தயாரிக்கக்கூடிய பொருள்கள் என்று சொல்லும் நேரத்தில், மனிதனுக்கும் கொழுப்புச்சத்தாக, கால்நடைக்கும் கொழுப்புச்சத்தாக, விவசாயத்துக்கும் கொழுப்புச்சத்தாக இருக்ககூடிய பொருள்கள் இந்த ஸ்டேட்டிலிருந்து வெளி ஸ்டேட்டுக்கு கொண்டு போய் உபயோகிப்பதில் கூட

ஆட்சேபணை கிடையாது. இதைக்கொண்டு போய் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் விலைவாசி உயர்ந்து போகிறது. ஆகவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது. இங்கிருந்து புண்ணாக்கை ஒரு ரூபாய்க்கு வாங்கி அதை பிஸ்கட்டாக ஆக்கி இறக்குமதி செய்து 10 ரூபாய்க்கு விற்பதன் மூலமாக அதிலிருந்து கொள்ளை லாபம் அடைகிறார்கள். ஆகவே வெளிநாடுகளுக்கு கண்டிப்பாக ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடையை போடக்கூடிய அளவுக்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு முழுவதும் ஒத்துக்கொள்கிறது. அதன் காரணமாக முன்பு குறிப்பிட்டது போல், ஹரியானா மாநிலத்துக்கு மட்டும் தடை விதிக்க அனுமதி கொடுத்திருக்கிறீர்களே, இங்கிருந்து கிரவுண்ட்நட் ஆயில், கேக் இவைகளை கேரளாவுக்கு போகக்கூடாது என்று தடை விதிக்க மாநில அரசுக்கு அனுமதி அளிக்க ஏன் ஓரவஞ்சனை, ஒரு கண்ணில் சுண்ணாம்பு இன்னொரு கண்ணில் வெண்ணெயும் இருக்கிறதென்பதை எல்லாம் இந்த மாநில அரசு வற்புறுத்தியது. இதைத் தொடர்ந்து மத்திய அரசிடம் சொல்லி ஆவன செய்துகொண்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** பிண்ணாக்கை உரமாக உபயோகிக்கக் கூடாது என்று உத்திரவு போட்டு கூட்டுறவு மூலம் விவசாயிகளுக்கு பிண்ணாக்கு வாங்கிக்கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டது. அதுபற்றி அரசுக்குத் தெரியுமா ? திரும்ப அப்படி வாங்கி விவசாயிகளுக்கு கொடுக்கலாமென்று உத்தரவு போடப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தொடக்கக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

**திரு. கே. சகாதேவ கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் விவசாயிகளுக்கு மிகமிக அதிகமாக வருவாய் கொடுக்கக்கூடிய, லாபம் கொடுக்கக்கூடிய பொருள் இந்த மணிலாதான். அதை நாம் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு பாதகம் ஏற்படக்கூடிய வகையில் தடை செய்யாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வினா இல்லை.

**திரு. கே. சகாதேவ கவுண்டர் :** ..........தடை செய்யாமல் இருக்க இந்த அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையைவிட விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதிலும், அவர்களின் முன்னேற்றத்திலும் இந்த அரசுக்கு பெருத்த அக்கறை இருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து மைசூர் மாநிலத்திற்குச் செல்லக்கூடிய எண்ணெய்க்கு குவிண்டால் ஒன்றுக்கு ஒரு ரூபாய்சுங்கச்சாவடியில் செலுத்தியபிறகு தான் அந்த மாநிலத்திற்குள் செல்ல வேண்டுமென்ற விதி இருக்கிறது. அதன்படி ஆண்டு ஒன்றுக்கு மைசூர் மாநிலத்திற்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கம் நம் மாநிலத்திற்கு வெளியே இருந்து அனுப்ப தடை விதிக்கும் வரையில், மாநில அரசு இங்கே இருந்து வெளியேசெல்லக்கூடிய எண்ணெய்க்கு குவிண்டால் ஒன்றுக்கு 5 ரூபாய் வசூலிக்கலாம். அது மற்ற மாநிலங்களைத்தான் பாதிக்கும். ஆனால் நம் மாநிலத்துக்கு வருவாய் அதிகம். இதை உடனடியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அங்கத்தினரவர்களின் கருத்து என்னவென்று பரிசீலனை செய்து பார்க்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** எண்ணெய் ஏனைய மாநிலங்களில் விற்கப்படுவதை விட தமிழ்நாட்டில் தற்போது விற்கப்படும் கடலை எண்ணெய் விலை அதிகமாக இருக்கிறது. வெளிமாநிலங்களில் இருந்து தற்போது தமிழ்நாட்டுக்கு கடலை எண்ணெய் இறக்குமதி செய்வது அரசுக்கு தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது இருக்கிற நிலைமை நம் மாநிலத்திலிருந்து போவது இங்கேயே தங்கினால் எவ்வளவோ மலிவாக இருக்கும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தற்போது சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கையின் மேல் கடலை எண்ணெய் விலை குறைந்திருப்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் ஒரு நியாய விலையை ஏற்படுத்த எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகள் காரணமாக மேலும் குறைந்து விடாமல் இருக்கவேண்டும் என்பதால் நியாய விலை நிர்ணயிக்க ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி ஒரு நிலை ஏற்படுகிற நேரத்தில் கண்டிப்பாக அதுபற்றி பரிசீலனை செய்யலாம். அந்த நிலை இப்போது ஏற்படவில்லை. ஓரளவுக்குத்தான் இன்று குறைந்திருக்கிறது. உற்பத்தி கொஞ்சம் அதிகமாகியிருப்பது அதற்கு ஒரு காரணம். வட மாநிலங்களிலும் இன்று ஓரளவு மணிலா பயிராகிற காரணத்தினால் அங்கேயும் கிராக்கி இல்லாததால் சமப்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. இல. பலராமன் :** நம் மாநிலத்தில் மணிலா பயிர் விளையும் அளவு மொத்தம் எவ்வளவு ? வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வது எவ்வளவு ? வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது எவ்வளவு ? தமிழ்நாட்டுக்கு எந்த அளவுக்கு இது இருந்தால் சரிப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின்போது கேட்கவேண்டும், அல்லது வேளாண்மைத் துறை அமைச்சரவர்களிடம் கேட்கவேண்டிய வினா இது.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** வேர்க்கடலையை ஏற்றுமதி செய்யலாமா, செய்யக்கூடாதா என்ற கருத்து வேறுபாடு இந்த மன்றத்தில் இருந்து வருகிறது. ஆகவே, விளைச்சலில் இத்தனை பர்செண்ட் தான் ஏற்றுமதி செய்ய முடியும் என்று திட்டவட்டமாக அரசு ஏதாவது செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாநிலத்தில் இருந்து எதுவும் போகாமல் இருந்தால்தான் இங்குள்ளவர்களை காப்பாற்ற முடியும் என்ற நிலை 6 மாதங்களுக்கு முன்னால் இருந்தது. இன்று அறுவடைக்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற நிலையில் இங்கு அதிக விளைச்சல் இருந்திருக்கிறது. வட மாநிலத்திலும் அவர்கள் வாங்குகின்ற நிலைமையும் கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆக சமப்பட்டிருக்கிறது. எவ்வளவு பர்செண்ட் ஏற்றுமதி செய்வது அல்லது செய்யக்கூடாது என்ற நிலை இப்போது எழவில்லை.

### வெள்ளத்தினால் இழப்பு.

*261—வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1957 முதல் 1966 வரை மழை பொழிந்த வெள்ளத்தின் காரணமாக வருடா வருடம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ?

(இ) அதற்காக சர்க்கார் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) and (இ) பேரவை முன்புள்ளி விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 120-121-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 20

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மிகப் பெரிய அளவுக்கு உயிரிழப்பும், பொருள் விரயமும், இன்னும் பல்லாயிரக்கணக்கான வீடுகள் விரயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த விவர அறிக்கையில் உள்ளபடி 1964-65-லே 760 கிராமங்களும் சுமார் 7 இலட்சம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், 383 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய விரயம் ஏற்பட்டதனாலே இதற்கு கூடுதலான உதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இது எந்த எந்த மாவட்டத்திலே ஏற்பட்டது ? இதற்காகவேண்டி மத்திய சர்க்காரை அணுகி உதவி கேட்கப்பட்டதா ? எவ்வளவு கேட்கப்பட்டது ? எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கேட்கப்பட்டதா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல நம்முடைய மாநிலத்திற்கு ஐந்தாண்டு திட்டங்களிலே வெள்ளச் சேதம், வெள்ளப் பெருக்கு என்பதற்காக 10 கோடி ரூபாய்க்கு மேலே கொடுக்கிறார்கள். 5 வருஷங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை இது. ஆனால், அஸ்ஸாம், பீஹார் போன்ற மாநிலங்களுக்கு இந்த இனத்தின் கீழ் பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கு வருவதைப் போல் தமிழகத்தில் காவேரியிலும் வெள்ளம் வருகிறது. கடந்த அரசு இதற்காக பெரிய முயற்சிகள் எடுத்தது. ஆனால், அந்த முயற்சிகள் கை கூடாமல் போய்விட்டன. அந்தக்காரணத்தினால் இந்த வெள்ளச் சேதம், வெள்ளப் பெருக்கு, வெள்ளத் தடுப்பு என்ற இனத்தின்கீழ் பலகோடி ரூபாய்கள் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய்விட்டது. இந்த அரசு வட மாநிலங்களிலே இயற்கையினுடைய சீற்றத்தினாலே ஏற்படுகிற இதுபோன்ற பயங்கரங்களுக்கு பல கோடி ரூபாய் ஒதுக்குவதைப் போல், இங்கும் எவ்வளவு ஒதுக்கவேண்டுமோ அவ்வளவு ஒதுக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. நா. காசிராமன் :** சார், 1961-62-ம் வருஷத்திலே ஏற்பட்ட பெரிய வெள்ளத்தின் காரணமாக, காவேரியிலே உடைப்பு ஏற்பட்டு, அரசலாற்றங்கரையில் உடைப்பு ஏற்பட்டு அதன் காரணமாக பெரும்பகுதி தண்ணீரிலே மூழ்கியது. அதற்குப் பரிகாரம் தேடும் வகையிலே இன்னும் காவேரியிலும் அரசலாற்றங் கரையிலேயும் கரைகள் கட்டப்படவில்லை. வருஷா வருஷம் அதற்குச் சில்லரை ரிப்பேர்களே செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, இதைக் கவனித்து, நல்ல முறையில் கரைகளை உயர்த்தி அதைக் கவனிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைப் பொதுப்பணி துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுமானவரையில் அரிசன மக்களாக இருக்கிறார்கள். இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 30, ரூ. 40 வரை தான் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படுகிற நிதி உதவி ரூ. 80. தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களும் ஒரே நிலையில்தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரூ. 80 கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தப் பெரிய மனது கனம் உறுப்பினர் அவர்களுக்கு இருப்பதற்காக பாராட்டுகிறேன். ஆனால், தீ விபத்தினாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 40 தான் கொடுக்கப்பட்டு வந்தது. அண்ணா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகுதான் இந்த ரூ. 40-ஐ ரூ. 80 ஆக உதவித் தொகை வழங்க வேண்டுமென்று மாற்றியிருக்கிறது. நிலைமைகள் சீராகுமானால், சாத்தியக் கூறு இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்பற்றி பரிசீலிக்கலாம். ஆனால், இப்பொழுதாவது இவ்வளவு பெரிய கருணை வந்திருப்பது பாராட்டத்தக்க விஷயம்.



1968 மார்ச் 20]

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதைப்போல, அதே இடத்தில் புயலினால் பாதிக்கப்பட்டப் புள்ளி விவரமும் இதில் சேர்ந்திருக்கிறதா ? அல்லது அதற்குத் தனிப்பட்ட புள்ளிவிவரம் இருக்கிறதா ? இதை அறிய விரும்புகிறேன். அண்மையில் 1966-ம் ஆண்டில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பதை சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரங்கள் ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது என்னிடத்தில் அதுபற்றிய தகவல் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், இந்த வெள்ளத் தடுப்பிற்காக ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கப்படுவதால், ஏதாவது நிரந்தரமான பரிகாரம் செய்யப்படுகிறதா ? இந்த மாதிரி உதவித்தொகை கொடுத்துக் கொண்டிருந்தால் வருஷா வருஷம் செலவுகள் அதிகமாகிறது. ஆகையால், வெள்ளத் தடுப்புக்கு நிரந்தரமான பரிகாரம் தேடுகின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அத்தகைய தடுப்புகள் ஏற்படுத்தும் முறையிலே ஒரு ஃப்ளட் டிவிஷன் ஆரம்பித்து, காவிரியினுடைய பெரும் சீற்றத்தாலே வெள்ளம் ஏற்பட்டபோது நிரந்தரத் தடுப்புகள் ஏற்படுத்தும் முறையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மத்திய அரசாங்கம் இங்கே காவேரி நதியினுடைய சீற்றத்தாலே ஏற்படுகிற வெள்ளமும் வடபுலத்திலே, பிரம்மபுத்திரா நதியிலே, கங்கை நதியிலே ஏற்படுகிறதைப்போல் ஏதோ சாதாரணமானது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய அழுத்தமான கருத்து, தஞ்சை மாவட்டத்திலேயும், இராமநாதபுரத்திலேயும், 2 கோடி, 3 கோடி செலவு செய்து நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டுமென்பதுதான். இந்த மாதிரி வெள்ளத்தாலும், புயலாலும் சிரமப்படுவதைப் பார்த்து, இதற்காக ஒரு நிரந்தரமான நடவடிக்கை, இந்த மாதிரி ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய காரியங்கள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவன் :** உதவிகள் செய்ததைப் பற்றியெல்லாம் பல வேறு விவரங்கள் இருக்கின்றன. ஆனால், 1960-61-ல் 28,000 வீடுகளும், 1961-62-ல் 22,000 வீடுகளும், 1963-64-ல் 16,000 வீடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜனங்களுக்கு வேறு வீடுகள் கொடுக்கப்படவில்லை யென்று தெரிகிறது. ஆகவே அவர்கள் எந்த இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள் என்ற தகவல், வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற தகவல் இருக்கிறதா ? அப்படி வீடுகள் கொடுக்கப்படவில்லையென்றால், கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைக் கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும். ஆனால், இதைக் கேட்பதன் மூலம், நானும் கனம் உறுப்பினரும் சேர்ந்து பிரேத விசாரணை செய்கிறோம் என்று தான் ஆகுமே தவிர, இந்த அரசுக்கும் இதற்கும் பொறுப்பே இல்லை. இதைப்பற்றிக் கேள்வி கேட்பது ஒரு பிரேத விசாரணை செய்கின்ற காரியமாகத்தான் முடியும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1965-66-ம் வருஷம் வரையில்தான் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1967-ம் ஆண்டு நவம்பர், டிசம்பரிலே பெருத்த வெள்ளத்தின் காரணமாக, புயலின் காரணமாக இராமநாதபுரத்திலே பல ஆயிரக்கணக்கான வீடுகள், விவசாயிகளுடைய ஆடு, மாடுகள் இவைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதைப் பற்றிய விவரம் அளிக்கப்படவில்லை. அரசாங்க நிதி உதவி செய்யப்பட்டதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது நம் முன்னுல் இருக்கிற கேள்வி "1957 முதல் 1966 வரை மழை பொழிந்து வெள்ளத்தின் காரணமாக வருடாவருடம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? அதற்காக சர்க்கார் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தது" என்பது. இந்த வரையறைக்குள் அனுபவமிக்க கனம் உறுப்பினர் கேள்வி கேட்டால் நல்லது.

**Thiru K. VINAYAKAM** Sir, these floods have become incessant and they are periodically repeated every year and the Government aid given to the poor people affected by the floods is very tantalisingly negligible. So, I want to know what concrete steps have this Government taken to prevent such kind of incessant floods instead of merely thinking of affording small relief to them?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் நான் சொன்னேன். இந்த அரசு வந்த குறுகிய காலத்திற்குள்ளாகவே இப்படி நிரந்தரமான காரியங்கள் எடுக்கப்படவில்லையே என்ற கவலையில் நிரந்தரமான பரிகாரம் செய்கின்ற விஷயங்கள் ஆய்வுரையில் இருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் சொன்னேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** 1964–65-ல் 2,24,285 ஏக்கர் சேதம் அடைந்துள்ளதாகவும், அதற்காக ரூ. 55,72,000 கடன் வழங்கியிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அதன் பலனுக எவ்வளவு ஏக்கர் மீண்டும் விவசாயத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப்பற்றிய விவரம் என்னிடம் தற்பொழுது இல்லை.

## FOOD PRODUCTION CORPORATION.

*262 Q.—**Thiru K. VINAYAKAM** : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Government propose to start a "Food Production Corporation "; and

(*b*) if so, from when and the objects of the same?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** (அ) இல்லை.

(இ) இந்த வினு எழவில்லை.

**திரு. கே. விஞயகம் :** இந்த உணவு விஷயத்தில் நாம் மக்களுக்குத் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்ய முடியவில்லை. அதை வைத்துக்கொண்டு, விலை நிர்ணயம் செய்வது, பங்கீடு செய்வது, கொள்முதல் செய்வது, இப்படியெல்லாம் கஷ்டப்படுவதைவிட, புட் கார்ப்பரேஷன் என்று ஒன்று இருக்கிறதே, அந்த நிறுவனம் உற்பத்தியான பொருள்களை வாங்கி விநியோகம் செய்வதற்கு எல்லா மாநிலங்களுக்கும் அவர்கள் பொறுப்பேற்ற மாதிரி, நம்முடைய சர்க்கார் ஒரு புட் ப்ரொடக்ஷன் கார்ப்பரேஷன், அதாவது உணவு உற்பத்தி செய்வதற்காக வேண்டி ஒரு நிறுவனத்தை உண்டாக்கி, அதன் மூலம் விவசாயிகளுக்கு சலுகை கொடுத்து, எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும் என்பதற்கு ஏதாவது ஒரு குறிப்பு அரசாங்கத்தில் இருக்கிறதா? அதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நமது விஞயகம் அவர்களுடைய கேள்வி உணவு உற்பத்தியைப் பொறுத்த மட்டும் இருக்கிறது. ஆனுல், விவசாயத்தைப் பொறுத்து மொத்தமாக ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக நமது மாநில அரசாங்கம் ஒரு சிறப்புத் திட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது. வேளாண்மை மேம்பாட்டு கார்ப்பரேஷன் நிறுவப்பட இருக்கிறது. அதன் மூலமாக இந்தக் கார்ப்ப



ரேஷனுக்கு அனைத்து நாடுகளின் மேம்பாட்டிற்கு உதவி புரியும் அமெரிக்க நிறுவனத்திடமிருந்து ரூ. 50 கோடி வரையிலும் உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே ஆரம்பமாக ரூ. 5 கோடியிலிருந்து ரூ. 10 கோடி வரையிலும் நமக்கு மூலதனச் செலவுக்காகக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா பூராவும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஐந்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றன. அந்த ஐந்து இடங்களில் தமிழ்நாட்டுக்கு ஒன்று கிடைக்கும். அதன் மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியம் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** அமெரிக்க உதவியுடன் விவசாய அபிவிருத்தி காாப்பரேஷன் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அதிலிருந்து நம்முடைய தமிழ்நாட்டிற்கு எவ்வளவு பணம் கிடைக்கும்? அந்தப் பணத்தை எந்த வகையில் செலவழிக்கப் போகிருர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. விஞயகம் அவர்களின் கேள்விக்கு நான் பதில் சொல்லும்பொழுதே, ரூ. 50 கோடி வரையிலே கிடைக்கும் என்று எதிர்பார்க்கிரும் என்று சொன்னேன். ஆரம்பச் செலவுக்காக ரூ. 5 கோடியிலிருந்து ரூ. 10 கோடி வரையிலும் கிடைக்கலாம். இதிலிருந்து கிணறுகள் வெட்டுதல், நிலங்களைப் பண்படுத்துதல், வேளாண்மைக் கருவிகளையும், இயந்திரங்களையும் வாங்குவது போன்ற காரியங்களுக்கு உழவர்களுக்கு நடுத்தரக் காலக் கடன் (மிட் டெர்ம் லோன்) வழங்கப்படும். இது தவிர கார்ப்பரேஷன் விற்பனைக் காரியங்களுக்காக கடன் வழங்கலாம். உரங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவைகளைப் பகிர்ந்து அளிக்கும் நிறுவனங்களுக்கு கார்ப்பரேஷன் கடன் வழங்கலாம். உணவுப் பொருள் சேமிப்பு, உணவுப் பொருள்களை விற்பனை செய்தல், கருவி, இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் போன்றவைகளுக்கும், வேளாண்மைக் காரியங்களுக்காக வர்த்தகம் செய்பவர்களுக்கும் அமெரிக்கா கடன் கொடுக்கும் தொகையில் மூன்றில் ஒரு பாகம் நமக்கு மானியமாகவும், பாக்கி இரண்டு பகுதி நீண்ட காலக் கடனுகவும் வழங்கப்படும். ஆனுல், வட்டி மட்டும் கூடுதலாக இருக்கும். அவர்கள் 12 சத விகிதம் கேட்கிருர்கள். அதில்தான் பிரச்னை இருக்கிறது. இதை 7 ஆண்டு காலத்திற்குள் திருப்பித் தர வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி ஆராய்வதற்கு வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்களும் கூட்டுறவு பதிவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களும் கூடி ஆலோசித்து, அவர்களிடமிருந்து திட்டங்கள் கோரப்பட்டிருக்கின்றன. அவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** போர்டு பவுண்டேஷன் நிதி என்பதும், அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதும் ஒன்றுதாஞ என்று அறிய விரும்புகிறேன். அப்படியாஞல் அந்த போர்டு பவுண்டேஷன் நிதியின் மூலம் கொடுக்கப்படுகிற பணம் எவ்வளவு, விவசாயிகளுக்கு எந்த முறையில் செலவு செய்யப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இரண்டும் ஒன்றுதான். நான் திரு. முருகையன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். கிணறுகள் வெட்டுதல், நிலங்களை பண்படுத்துதல், இயந்திரம்; கருவிகள் வாங்குவதற்கு நடுத்தரக் காலக் கடன் வழங்கப்படும். விவசாய சம்பந்தமாக நடத்தப்படுகிற வியாபாரம் செய்பவர்களுக்கு அந்தக் கடன் உதவி தரப்படும். அதில் அரசாங்கத்திற்கு மூன்றில் ஒரு பகுதி மானியமாகவும், இரண்டு பகுதி கடனுகவும் தரப்படும். அந்தக் கடனை 7 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரவேண்டும். அதற்கு 12 சத வீதம் வட்டி கேட்கிருர்கள். இந்தக் கடன்களெல்லாம் விவசாயிகளுக்குக் கிடைக்கிறபொழுது, திரு. விஞயகம் அவர்கள் கேட்பது போல, உணவு உற்பத்தி கணிசமான அளவுக்குப் பெருகும். ஆரம்பத்தில் செலவழிப்பதற்கு அரசு கேட்கிற பணத்தை மத்திய அரசு கொடுத்து உதவினுல், உணவுத் துறையில் நாம் தன்னிறைவு பெறுவதோடுகூட, மற்ற மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை கூட உருவாகலாம்.

**திரு. வி.டி. அண்ணாமலை :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் பற்றிக் கூறினார்கள். 12 சத வீதம் வட்டி இந்த கார்ப்பரேஷனுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக "பாடி கார்ப்பரேஷன்" என்ற ஒன்றை அமைத்து, நெல் உற்பத்தி செய்பவர்களுக்கு மட்டும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் கொடுக்கிற முறையை சர்க்கார் யோசனை செய்யுமா, அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 12 சத வீதவட்டியானது அமெரிக்காவுக்கு நமது அரசு கொடுக்க வேண்டிய வட்டித் தொகை. கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வி வேறு விஷயம். அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

## கோடைக்கானலை சுற்றுலா மையமாக்கல்

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கோடைக்கானலை முக்கியமான மலைஸ்தலமாகவும் சுற்றுப் பயணஸ்தலமாகவும் பிரபலமாக்கும் வகையில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கோடைக்கானலில் ஒரு சுற்றுலா மாளிகை பயணிகளுக்குக் கட்டி, தக்க வசதிகள் செய்ய அரசு உத்தேசித்தது, இது குறித்து நில ஆர்ஜித நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் முன் இருந்தன. இந்த நில ஆர்ஜித நடவடிக்கைகளை நிறுத்தி, உயர்நீதி மன்றத்தில் "அமெரிக்கன் மாஜேனட் மிஷன்" காரர்களால் கொடுத்த ஒரு ரிட்டை (writ) உயர் நீதி மன்றம் ஏற்றுக்கொண்டது. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் நகல் கிடைத்தபின் மேல் நடவடிக்கை பற்றி ஆராயப்படும்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** அந்தச் சுற்றுப்பயண ஸ்தலத்தை மேம்பாடு செய்யும் வகையில் அரசாங்கம் சாங்ஷன் செய்த தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். அந்தக் கட்டடம் எப்போது எழுப்பப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** புருட்டன் காம்பவுண்டு என்ற இடத்தில் 2·37 எக்கர் நிலத்திற்கு ரூ. 58,700 செலவு செய்து ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது நிலத்தின் சொந்தக்காரர் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அதனால் இன்னும் நில ஆர்ஜிதம் செய்யவில்லை. மேலும், அங்கு இருக்கிற கோடைக்கானல் ஏரியில் தூர்வாரி சுத்தப்படுத்தி, அதைச் சுற்றிலும் நல்ல ரோடுகளை அமைத்து, அதிலே நடைபாதைக்கான வசதிகளும் செய்து கொடுத்து, உல்லாசிகள் வந்து உட்கார சிமெண்டு பெஞ்சுகள் அமைத்துத் தந்து, மேலும் அங்கிருக்கிற படகுத் துறையை விரிவுபடுத்தி, அங்கு நல்ல படகுகள் விடவும், இப்படிப்பட்ட வகையில் பயணிகளுக்கேற்ற உல்லாச இடம் அமைப்பதற்காக ரூ. 6 லட்சம் ஒதுக்கி, அதற்கு நல்ல நடவடிக்கை எடுத்து, தற்சமயம் அது தலைமை பொறியாளரிடத்தில் இருக்கிறது. அவரும், அந்த மாவட்ட கலெக்டரும் கலந்து பேசி ஒரு அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இவை [illegible] இன்றைக்கு அந்த நிலச் சொந்தக்காரர் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.





**திரு. வி.எஸ். எஸ். மணி :** கோடைக்கானல் மலையிலுள்ள அந்த நகரம் மதுரை மாவட்டத்தில் சிறப்பாக அமைந்துள்ள ஒரு நகரம். எழில்மிகுந்த ஒரு நகரம். அருமையான ஏரியைக் கொண்ட நகரம். வெள்ளையர் ஆட்சி காலத்தில் அதற்கு அதிக முக்கியம் கொடுத்து வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதெல்லாம் அடிப்படை உண்மைகள். எழில் மிகுந்த நகரம், மதுரை மாவட்டத்தில் அந்த நகரம் இருக்கிறது என்பதெல்லாம் விட்டுவிட்டு, உறுப்பினர் அவர்கள் தயவு செய்து வினாவை கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**Thiru V. S. S. Mani :** It is neither the king of the hill stations nor the queen of the hill stations. To use a democratic phrase, it is a premier hill station. இப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸ்தலத்திற்கு நமது ஆட்சியானது அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். குறிப்பாக அங்கே ஒரு ரேஸ் கோர்ஸ் போல ஒன்றை அமைத்து, அந்த நிகழ்ச்சியை ஏற்படுத்தினால், அதிகமான டூரிஸ்டுகள் அங்கே போகக் கூடிய ஒரு நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல. அங்கே ஒரு ரயில் பாதை உண்டாக்கலாம். அதையெல்லாம் ஏற்படுத்தி மேம்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர் மு. ப. 10-00
களே, கனம் உறுப்பினர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் ஏற்றுக் கொள்கிற அளவில் அமைந்திருக்கின்றன. இந்த அரசு அவருடைய கருத்துக்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கத் தக்க முயற்சிகளை எடுக்கும். கனம் உறுப்பினர் அரசுக்குக் கருத்துக்களைக் கூறியமாதிரி, கோடைக்கானலில் இருக்கும் "அமெரிக்கன் மாஜேனட் மிஷன்" சங்கத்தாரை அணுகி, கொடைக்கானலின் முக்கியத்துவத்தை விளக்கமாக எடுத்துக்கூறி, வழக்கு மன்றத்தில் இருக்கும் வழக்கைத் திரும்பப் பெற ஆலோசனைகளைக் கூறினால் நல்ல பலன் அளிக்கும். மேலும் ரயில் போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். ரயில்பாதைகளைப் போடும் வாய்ப்புக்காக இன்றைக்குச் சர்க்கார் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான் :** தலைவர் அவர்களே கோடைக்கானலில் டூரிஸ்ட்டுகள் வந்து தங்குவதற்காக "புருட்டன் மாளிகை"யை அரசாங்கம் எடுத்திருந்தது. ஆனால் அமெரிக்கன் மாஜேனட் மிஷன்காரர்கள் கோர்ட்டிலே வழக்கு போட்டு அதைத் தடை செய்துவிட்டது. இப்பொழுது கோடைக்கானலுக்கு அதிகமாக டூரிஸ்ட்டுகள் வருவதால், அரசாங்கம் மாற்றுத் திட்டமாக ஒரு புதிய கட்டடத்தைக் கட்ட முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்தின் தீர்ப்பு நமக்கு விரோதமாக அமைந்துவிட்டால் அதுபற்றி பின்னர் யோசித்து புதிய கட்டடம் கட்ட தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். தற்போதைய நிலையில் புதிய கட்டடம் கட்டும யோசனை இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, கோடைக்கானல் பகுதியைப்போல, வேறு மலைவாசஸ்தலப்பகுதிகளும் இருக்கின்றன. கோடைக்கானலைப் போன்றே சேலம் ஜில்லாவில் ஏர்க்காடு பகுதியும் சிறந்த கோடைவாசஸ்தலமாக இருந்து வருகிறது. ஆகவே, இந்தப் பகுதியையும் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த வினா மூல வினாவை ஒட்டியதாக இல்லை. அமைச்சர் அவர்கள் விரும்பினால் விடை அளிக்கலாம்.

(விடை இல்லை.)

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தியாவிலிருந்து வருகின்ற அத்தனைபேரும் கோடைக்கானல் பகுதிக்கு வருகிறார்கள். வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வருகின்றவர்கள் கோடைக்கானல் பகுதிக்கு வந்து பார்க்காமல் செல்வதில்லை. அப்படி வருகின்றவர்களுக்குத் தங்க வசதியில்லாத காரணத்தால் உடனேயே திரும்பிப் போய் விடுகிறார்கள். அமெரிக்கன் மாஜேனெட் மிஷன்காரர்களுடைய வழக்கு நீதிமன்றத்தில் இருப்பது இருக்கட்டும்,இப்பொழுது வேறு இடங்களைத் தயார் செய்து புதிதான கட்டடங்களை எழுப்ப அரசு உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்தத் திட்டம் மத்திய சர்க்காரின் துணையுடன் நாம் 50 சதவிகிதம், மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் என்ற அளவில் சேர்ந்து செய்யப்படுகின்ற திட்டமாகும். வழக்குமன்றத்தின் தீர்ப்பு நமக்குப் பாதகமாக இருந்தால் இதுபற்றி தக்க நடவடிக்கைகளை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா-விடை நேரம் முடிவடையும் தறுவாயில் இருப்பதால், இதுவரை ஒரு துணை வினா கூட கேட்காத உறுப்பினர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். அடுத்த வினா 264. திரு. எ. சிதம்பரநாத நாடார் அவர்கள் வினாவிற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

### *Slums in City*

*264 *Q.*—Thiru A. CHIDAMBARANATHA NADAR :<br>
Thiru N. MARUDACHALAM :<br>
Thiru K. VINAYAKAM : } Will

the Hon. Minister for Law and Co-operation be pleased to satte :

(*a*) the number of slums in the City of Madras :

(*b*) the slums among them taken up for improvement during the current financial year, and

(*c*) the proposed expenditure towards the Scheme ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :**

(அ) 491.

(இ) 12.

(உ) சென்னை மாநகரில் நிறைவேற்றவிருக்கும் குடிசை வாழ்வோர் மேம்பாட்டு குடிசை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி முடிப்பதற்கு 1967–68-ல் ரூ. 63·70 லட்சம் தேவைப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது எடுக்கப்பட்டிருக்கும் 12 ஸ்லம்களில் அதற்காக 63 லட்சம் ரூபாய் செலவிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எப்பேர்ப்பட்ட அபிவிருத்திகள் அந்தப் பகுதி மக்களுக்குச் செய்து தரப்படுகின்றன, அந்தப் பகுதிகளிலேயே வீடு கட்டித் தரப்படுகிறதா அல்லது வேறு இடத்தில் வீடுகள் கட்டி அந்த இடத்திற்கு அப்பகுதி மக்கள் மாற்றப்படுகிறார்களா ? அந்த வீடுகள் எல்லாம் தீப்பிடிக்காத முறையில் அதாவது ஃபயர் ப்ரூப் முறையில் கட்டப்படுகிறதா ? மேலும் குடிசைவாழ் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இப்போது சுமார் 35 லட்சம் ரூபாய் வரையிலும் வசூல் செய்து வைத்திருக்கிறார்களே, அந்தப் பணத்திலிருந்து இந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** தலைவர் அவர்களே, குடிசைவாழ் [illegible]க்காக இரண்டு திட்டங்களை வைத்திருக்கிறோம். ஒன்று தாங்களே வீடுகளைக் கட்டிக்கொள்ள இடம் வாங்கித் தருவது. இரண்டாவது வீடுகள் கட்டி, குறைந்த வாடகையில் கொடுப்பது. இந்த இரண்டு



திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறோம். தீப்பிடித்த குடிசைவாழ் மக்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு அந்தப் பணம் வசூல் செய்யப் பட்டது. அந்த நிதியிலிருந்து இவர்களுக்கு உதவ முடியாது. தனியாக ஒரு நிதி குடிசைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

Dr. H. V. HANDE : Sir, I want to make a practical suggestion in the form of a question. I want this Government to examine very carefully two things. One is that we can give them good houses on a permanent basis and a sum of about Rs. 65 lakhs has been allotted and we can make their life much better than it is today. The other is to build tenements in slums on a temporary basis. Now some basic amenities like tap water and taps have been completely denied to them. For instance, the people living in the slum behind the Elephant Gate Police Station wanted four taps but so far they have not been provided with taps and it is a bitter and sad sight to see such people without drinking water. So far as this matter is concerned there is a conflict between the Housing Board and the Corporation and when the Housing Board is approached, they say that the work is not theirs and when the Corporation is approached they say that it is not theirs. It is just like a no-man's land.

Mr. SPEAKER : We have got a rule, Rule 31 (3), and according to that rule, when an hon. Member makes a statement, he must make himself responsible for the accuracy of it. Now the hon. Member (Dr. Hande) has stated that a certain portion is a non-man's land. Is he prepared to make himself responsible for the accuracy of that statement?

Dr. H. V. HANDE: I know the rules and I am in the Rules Committee. The Hon. Speaker must be aware that we both were in the Legislative Council. I am an expert in the rules, but you have forgotten it . . .

Thiru P. G. KARUTHIRUMAN: Sir, on a point of order. The Hon. Member is speaking against the ruling of the Hon Speaker

The Hon Thiru A. GOVINDASAMY : Sir, on a point of order. ஸ்பீக்கர் ஒருவேளை மறந்திருக்கலாம் என்று உறுப்பினர் கூறுகிறார் இப்படிச்சொல்வது அவைத்தலைவரைக் குற்றம் சொல்வதாக இருக்காதா ?

(Dr. H. V. HANDE rose.)

Mr. SPEAKER : Is the hon. Member, Dr. Hande, prepared to make himself responsible for the accuracy of that statement as per sub-rule (3) of Rule 31.

Dr. H. V. HANDE : First of all, I agree with what the Hon. Minister has stated and the Hon. Speaker has perfect memory like an electronic machine.

Now I come to the next point.

Thiru P. G. KARUTHIRUMAN rose. (Interruption).]

DR. H. V. HANDE : You rescue yourself.

(THIRU P. G. KARUTHIRUMAN rose.)

MR. SPEAKER : When the hon. Member says 'you', he means me.

DR. H. V. HANDE: Let the hon. the Leader of the Opposition rescue himself first, and I have not made any insinuation against the Chair. I stand by what I have stated before. There are several places—it is also in the constituency of the Hon. Minister for Harijan Welfare—like Division No. 33 where we have got certain areas which do not belong either to the Corporation or the Housing Board and many of us in the City know about it. Now the point is that the basic necessities like tap water or taps—in some cases taps are not working—are not provided in such places and this will not cost more than a few rupees. This Government after it assumed power, have raised a lot of hope among the slum-dwellers and so will they see their way to provide those basic amenities in those areas. Will the Hon. Minister answer this question ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளையும் ஒன்றுக்கொன்று போட்டுக் குழப்புகிறார்கள். இப்போது இருக்கக்கூடிய கேள்வி குடிசைவாழ் மக்களுக்கு ஹௌசிங் போர்டு என்ன செய்து கொடுக்கிறது என்பது. ஸ்டேட் ஹௌசிங் போர்டு எடுத்துக் கொண்ட திட்டங்களிலே தன்னுடைய காரியங்களையெல்லாம் செய்து முடித்தபிறகு, வீடுகளை மாநகராட்சியிடத்திலே ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் சென்ற சில ஆண்டுகளாக மாநகராட்சிக்கும், ஸ்டேட் ஹௌசிங் போர்டுக்கும் சில கருத்து வித்தியாசங்கள் இருந்ததால், வேலைகள் சரியாக நடைபெறவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இரண்டு இடங்களிலும் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதால், மாநகராட்சித் தலைவரையும், ஹௌசிங் போர்டு தலைவரையும் அழைத்துப் பேசி யாருக்கும் சங்கடம் ஏற்படாமல் உடன்பாடு செய்துவைத்தோம். தகராறுக்குரிய பிரச்சினைகள் ஏதாவது எழுந்தால் இருதரப்பாரும் கூடிப்பேசலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. குடிசைவாழ் பகுதி மக்களுக்கு வேண்டிய நிவாரணங்களை ஸ்டேட் ஹௌசிங் போர்டு செய்வதில்லை. ஸ்டேட் ஹௌசிங் போர்டு ஒரு இடத்தை எடுத்துக் கொண்டு, திட்டம் போட்டு அதன்படி காரியங்களைச் செய்து வருகிறது. 12 குடிசைவாழ் பகுதிகளை ஸ்டேட் ஹௌசிங் போர்டு தன்னுடைய திட்டத்தில் எடுத்துக் கொண்டிருந்தது. தற்போது 19 இடங்களை எடுத்துக்கொண்டு, 63 லட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டும் திட்டத்தை மேற்கொண்டு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சில இடங்களில் வீடுகள் கட்ட திட்டம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நான் குழம்புகிறேன் என்றார்கள். எனக்கு ஒன்றும் குழப்பம் இல்லை. அமைச்சர் அவர்கள் தான் குழம்புகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : confusion என்பது ஒன்றும் தவறான சொல் அல்ல. 'Confusion' is not an unparliamentary word.

THE HON. THIRU C. N. ANNADURAI : As a doctor he should know that one should not get unnecessarily excited.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரையும், மாண்புமிகு பேரவைத் தலைவரையும் பார்த்து என்ன என்னவோ சொல்லக்கூடிய நேரத்தில் நான் அவர் குழப்புகிறார்கள் என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறது.



திரு. எம். ஆர். கண்ணன் : நான் சார்ந்துள்ள பேசின் பிரிட்ஜ் பகுதியில் அதிகமான குடிசைப் பகுதிகள் இருப்பதால், அங்கே எடுக்கப்பட்டுள்ள குடிசைப் பகுதிகள் எவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக எந்த ஸ்கீமைப்பற்றிக் கேட்டாலும் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் அவருடைய பெயரின் முதல் இரண்டெழுத்திற்கு ஏற்றாற்போல இப்போது கேட்பார்கள். (சிரிப்பு.)

THIRU K. VINAYAKAM : Whereas there are different kinds of slums, Government-owned slums, Corporation-owned slums and privately-owned slums, what is the programme which this Government has got to give relief to the dwellers in privately-owned slums ? The Chief Minister's Fund has been swelling up and it has come to Rs. 40 lakhs. What effective measures to the Government take to bring succour and build houses in private slums which are affected by fire havoc ?

THE HON. THIRU C. N. ANNADURAI : First I want to remove the misconception that the Fund is swelling. It is not swelling, it is standing still. It is not Rs. 40 lakhs, but Rs. 36 lakhs out of which several lakhs have already been spent. When we wanted to build huts in private slums, the owners have objected to it and they have gone to the court also. When we negotiated to purchase certain portions they wanted the market price which is very prohibitive. Therefore we have not built any huts in private slums. If there are huts in private slum areas, even the Corporation cannot provide certain amenities because private slums have to conform to certain rules before they get the Corporation amenities.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. 491 ஸ்லம்கள் இருக்கின்றன. இவற்றில் 57 ஸ்லம்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய பணம் மத்திய அரசிடம் இருந்து கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

## குடியாத்தம் நகருக்கு புதைச் சாக்கடைத் திட்டம்

*வினு 255—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :—

குடியாத்தம் நகரில் பாதாள சாக்கடை நிறுவும் திட்ட வேலை தற்போது எந்த நிலைமையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: குடியாத்தம் நகருக்கு பாதாள சாக்கடை திட்டத்தை மேற்கொள்ளும் உத்தேசம் இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன் : வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய வேலூருக்கு அடுத்தாற்போல மிகப் பெரிய ஜனத்தொகை கொண்ட தொழிலாளர்கள் நிறைந்த பகுதி இந்த நகரம். அப்பேற்பட்ட நகரத்தில் பாதாளச் சாக்கடை இல்லாத காரணத்தினால் கொசு

ஈ போல இருக்கிறது. கொஞ்ச நாளில் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஆகவே இனிமேலாவது உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** உடனடியாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. கவன ஈர்ப்பு.

### (i) செஞ்சி வட்டத்தில் பழ ரசத்தில் போதை வஸ்துக்களைக் கலந்து விற்றதாகக் கூறி விவசாயிகளை தொல்லைப் படுத்தல்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 இன் கீழ், "செஞ்சி வட்டத்தில் பழரசக் கடைகள் கணக் இல்லாமல் லைசன்சு வழங்கியதால் விற்கக் கூடியவர்கள் பழரசத்தில் மது சம்பந்தமான போதை வஸ்துக்களைக் கலந்து விற்பதாகக் கூறி காவல் துறையினர் விவசாயப் பெருங்குடி மக்களை அடிக்கடி தொல்லை கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் ஏழை விவசாயிகளுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கிய முமான காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனித் திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 4 (L) 2 உரிம வகைகளும், 3 (L 3) உரிம வகைகளும் செயலில் உள்ளன. L 2 உரிமங்கள் என்பது சாராயம், அபின், மயக்கம் தரும் பிற மருந்துகள் கொண்ட மருந்துத் தயாரிப்புகள், ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் குறித்து வழங்கப்படுபவை யாகும். L 3 உரிமம் ஆயுர்வேத மருத்துவர்கள் மருந்து தயா ரிக்கும் காரியத்திற்காக—வாணிப காரியத்திற்காக அல்ல—வழங்கப்படுவ தாகும். 4. (L 2) உரிம வகைகளின் 2 உரிம வகைகள் ஆயுர்வேத மருந்து தயாரிப்புகளுக்காக வழங்கப்படுபவையாகும். ஒன்று அபின், கஞ்சா கலந்த ஆயுர்வேத மருந்து தயாரிப்பு குறித்ததாகும் மற்றொன்று ஹோமியோபதி மருந்து தயாரிப்பு குறித்ததாகும். செஞ்சி. வட்டத்தில் L 2 அல்லது L 3 உரிமம் எதுவும் செயலில் இல்லை. 1955-ம் ஆண்டு மருந்து, ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் (ஆயத்தீர் வைகள்) சட்டத்தின் கீழும் 1956-ம் ஆண்டு விதிகளின் கீழும் இந்த உரிமங்கள் மாவட்ட வருவாய் அதிகாரியினால் வழங்கப்படுகின்றன. இந்த உரிமங்கள் இப்போது இரண்டாண்டுகளுக்கு மேலாகச் செயலில் இருந்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் 1,200 பேர் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு : 1965—41 ; 1966—60 ; 1967—69 ; 1968—6. செஞ்சி வட்டத்தில் தற்போது 9 ஹோமியோபதி மருத்துவர்கள் உள்ளனர். இந்த வட்டத்தில் அண்மை ஆண்டுகளில் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துகொண்ட வர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு: 1965—1 ; 1966—4 ; 1967—4.

இம் மாவட்டத்தில் மருந்து ஒப்பனைப் பொருள் வணிகர் எண் 30 பேருக் குச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மை ஆண்டுகளில் மேற்படி உரிமங்கள் வழங்கப்பெற்றுள்ளவர்களின் எண் ணிக்கை விவரம் வருமாறு:



1965—6 ; 1966—2 ; 1967—2 ; 1968—1. இந்த உரிமங்க ளில் ஒன்றுகூட செஞ்சி வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்காக வழங்கப்பட வில்லை.

செஞ்சி காவல் துறை வட்டத்திலுள்ள 5 நிலையங்களில் கண்டுபிடிக்கப் பட்ட மது விலக்குக் குற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1965 | 1966 | 1967 |
|---|---|---|---|
| செஞ்சி காவல் நிலையம் .. | 117 | 175 | 169 |
| வளத்தி காவல் நிலையம் .. | 72 | 105 | 101 |
| அவலூர்பேட்டை காவல் நிலையம் | 166 | 214 | 164 |
| கஞ்சனூர் காவல் நிலையம் .. | 84 | 103 | 116 |
| அனந்தபுரம் காவல் நிலையம் | 88 | 99 | 81 |

இந்த மொத்த மதுவிலக்குக் குற்ற வழக்குகளில் செஞ்சி காவல் துறை வட்டத்தில் குடிமயக்கத்தில் இருந்ததாக 1965-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை தொடரப்பட்ட வழக்குகள் கீழே கொடுக்கப்பட் டுள்ளன.

| | 1965 தலைப்பு 19 | 1966 தலைப்பு 19 | 1967 தலைப்பு 19 |
|---|---|---|---|
| செஞ்சி காவல் நிலையம் .. | 49 | 85 | 55 |
| வளத்தி காவல் நிலையம் .. | 33 | 59 | 65 |
| அவலூர்பேட்டை காவல் நிலையம் | 99 | 96 | 58 |
| கஞ்சனூர் காவல் நிலையம் .. | 43 | 49 | 34 |
| அனந்தபுரம் காவல் நிலையம் .. | 21 | 35 | 23 |
| மொத்தம் .. | 245 | 324 | 235 |

செஞ்சி காவல் துறை வட்டத்தில் 1967-ம் ஆண்டில் குடிமயக்க வழக்கு களின் எண்ணிக்கை 1965-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 10 குறைவாகவும், 1966-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 89 குறைவாகவும் இருக்கிறது. மதுவிலக்குக் குற்றங்களின் எண் ணிக்கையும் 1966-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 1967-ம் ஆண்டில் குறைவாகவே உள்ளது.

எனவே, மதுவிலக்குக் குற்ற வழக்குகள் அதிகரிக்கவில்லை என்பது தெளிவு. இப்போதுள்ள மது உரிமங்கள் கடந்த இரண்டாண்டுக் கால மாகவே செயலில் இருந்து வருகின்றன. எனவே, பல்வேறு மருந்துப் பொருள்களைச் சாராயமும் மயக்கம் தரும் வேறு பொருளும் சேர்த்துத் தயாரிப்பதற்காக உரிமம் அளிப்பது அதிகரித்திருப்பதாகக் கூறுவதற் கில்லை.

எனவே, மதுவிலக்குக் குற்ற விவரங்களைப் பார்க்கும்போது அரிஷ்டங் களையும் ஆசவங்களையும் அருந்துகிற பாமரக் குடியானவர்களுக்குக் காவலர் தொல்லை கொடுத்து வருவதாகக் கூறுவதற்கில்லை.

திண்டிவனம் எம். எல். ஏ. 24—4—1967-ல் மாநிலக் காவல் துறைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தை நான் இங்கு குறிப்பிடலாம். செஞ்சி காவல் நிலைய வரம்புகளுக்குள் அமைந்துள்ள திருவம்பட்டு, ஜயங்கொண்டாம், ஜம்போதி குறிஞ்சிப்பை முதலான கிராமங்களில் பனை மரம், தென்னை மரம் ஆகியவற்றிலிருந்து கள்ளத்தனமாகக் கள் இறக்கப்படுவது அதிகரித்துள்ளதாகவும், உள்ளூர் துறை நடவடிக்கை

எடுத்து இக் கள்ளப் பழக்கத்தை அறவே ஒழிப்பதில் அக்கறை காட்டவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதன்மேல் காவல் துறைக் கண்காணிப்பாளர் அப்பகுதியில் 2—5—1967 தேதியன்று திடீர் சோதனையிட்டார். இதன் காரணமாக 14 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (a) (d) (e) (k) பிரிவுகளின் கீழ் 70/67 முதல் 85/67 வரையுள்ள எண்களில் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. முன்னர் நடவடிக்கை எடுக்கத் தவறிய காவல்துறை அதிகாரிகள் இந்தத் திடீர் சோதனைக்குப் பிறகு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பணியில் நாட்டமின்றி இருந்ததற்காக அவர்கள்மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டது. எம். எல். ஏ. கடிதத்தின்மீது எடுத்த நடவடிக்கைகளின் பலனாக, இப் பகுதியில் மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, செஞ்சிப் பகுதியில் ஏதுமறியாத பாமரக் குடியானவர்களுக்குக் காவலர் தொல்லை கொடுத்து வருவதாகவும், அரிஷ்டங்களையும், ஆசவங்களையும் விற்பனை செய்யும் கடைகளுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமங்கள் கொடுத்ததன் பலனாகவே இது ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படும் கூற்றிற்கு ஆதாரமே இல்லை.

**(ii) இராமநாதபுரம் நகராட்சி குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படாமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான காரியமொன்றை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. டி. தங்கப்பன் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.

**திரு. டி. தங்கப்பன் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட பொதுமுக்கியமும் அவசரமும் வாய்ந்த காரியத்தைப்பற்றிய விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்: இராமநாதபுரம் நகராட்சி குடிதண்ணீர் திட்டம் சோதனைகள் முடிவு பெற்று நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறதால் மிக அவசரமாகத் தேவைப்படுகின்ற நிலையில் அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகராட்சிக்கும் வழியிலுள்ள கீழ்க்கண்ட 8 ஊராட்சி மன்றங்களுக்கும் நீர்வழங்கு திட்டம் ஒன்றை நிறைவேற்ற 1966 நவம்பரில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நீர்வழங்கு திட்டத்தை நிறைவேற்ற ரூ. 37·41 இலட்சமும், அதைப் பேணிவர ஆண்டொன்றுக்கு ரூ. 27,500-ம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(1) பொட்டிசெட்டிக்குடி.
(2, கருத்தநேந்தல்.
(3) தேவேந்திர நல்லூர்.
(4) மாவிலங்கை.
(5) கீழ்க்கோட்டை.
(6) தீயனூர்.
(7) எட்டிவயல்.
(8) அச்சுதன் வயல்.

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, இராமநாதபுரம் நகர மக்கள் தொகை 26,915. இராமநாதபுரம் நகராட்சியைப் பொறுத்த வரையில், நாளொன்றுக்கு ஒருவருக்கு 15 காலன் நீர் என்ற விதிப்படி



1981-ம் ஆண்டில் 36,000 மக்கள் தொகைக்கும் 1996-ல் 45,000 என்ற இறுதியான மக்கள் தொகைக்கும் தேவையான நீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் தயாரிக்கப்பட்டது. வழியிலுள்ள 8 கிராமங்களைப் பொறுத்தவரையில், 8,000 என்ற இறுதியான மக்கள் தொகைக்கு நாளொன்றுக்கு ஒருவருக்கு ஐந்து காலன் என்ற வீதத்தில் நீர்வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

வைகையாற்றின் ஊற்று நீரைப் பயன்படுத்துவதே இச்செயற் குறிப்பின் நோக்கமாகும். நீர்வடிகட்டும் பணிகள் (Filtration works) இராமநாதபுரத்தின் மேற்கில் உள்ள பொட்டிச்சேட்டிக்குடி கிராமத்திற்கு அருகில் அமைக்கப்படும். வைகை ஆற்றின் படுகையில் 400 அடி நீளத்திற்கு ஊடுவழி ஒன்றை அமைத்து ஊற்று நீரை வெளிக் கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிக் கொணரப்பட்ட நீரை 15 அங்குலம் விட்டமுள்ள 90,850 அடி நீளமுள்ள சிமிட்டி கான்கிரீட் குழாய்கள் மூலம் இராமநாதபுரம் நகரில் கட்டப்படவிருக்கிற குடிநீர்க்கான நீர்த் தேக்கத்திற்குக் கொண்டு செல்லப்படும். நகருக்குள் சுமார் 15 மைல் நீளத்திற்கு பகிர்மானப் பெருங்குழாய்கள் போடப்படும்.

தலைமையிட வேலைகள் குறித்த 1-ம் நிலை வேலைகளைச் சேர்ந்த 1-ம் பகுதிக்கு 1967-ல் ரூ. 11,200 மதிப்பீட்டிற்கும், நீர் ஏற்றுப் பெருங்குழாய்கள் குறித்த 11-ம் நிலை வேலைகளுக்காக ரூ. 23·37 இலட்சமும் மதிப்பீட்டிற்கும் தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரப் பொறி இயல்-நகராட்சிப் பணிகள்) தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கினர். தலைமை இடப்பணிகளுக்குத் தேவையான 2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1-ம் நிலை வேலைகளின் 1-ம் பகுதிக்காக 1967 முற்பகுதியில் ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பும்படி விளம்பரம் செய்தபோது எவரிடமிருந்தும் ஒப்பந்தப் புள்ளிகள் வரவில்லை. எனவே, துறையின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கென அவ் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. எட்டு அடி விட்டமுள்ள புதை சாக்கடைக்கான திறப்புக் கிணறு ஒன்றைக் (man hole) கட்டும் வேலை முடிந்துவிட்டது. அதை மூடுவதற்கான அடைப்பு இன்னும் போடப்படவில்லை. கோடை மாதங்களில் ஏற்புத் திறனைச் சோதித்து அறிந்த பிறகு அந்த அடைப்பு போடப்படும். குழாய்களையும் ஏனைய சாதனங்களையும் தேவையான அளவில் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிற்சாலையிலிருந்து இராமநாதபுரம் நகரத்திற்கு 15 அங்குல சிமிட்டி கான்கிரீட் குழாய்களைப் போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. குழாய்கள் விரைவில் போடப்படும். நீர் பகிர்மானக் குழாய்கள் போடும் திட்டம், குடி நீர்க்கான நீர்த்தேக்கம் ஆகியவைக் குறித்த விரிவான மதிப்பீட்டை மதுரையில் உள்ள (பொதுச் சுகாதாரப் பொறி இயல்) மேற்பார்வை பொறியாளர் தயாரித்து வருகிறார். நடப்பாண்டின் (1967–68) செலவிற்சென, இராமநாதபுரம் நகராட்சிக்கு ரூ. 1 லட்சம் கடன் வழங்க 1968 ஜனவரித் திங்களில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. விசை ஏற்றப் பெருங்குழாய் அமைப்பிடத்திற்குத் தேவையான நிலத்தைக் கையகப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இத் திட்டம் மனநிறைவு அளிக்கும் வகையில் நிறைவேறி வருகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

## 3. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 12—காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 12-ஆம் எண்ணுள்ள காவல் துறை நிதிக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.

**மாண்மிபுகு திரு. சி. என். அண்ணாதுரை :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,87,89,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, காவல் துறை சீரமைப்புப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, காவல் துறையைத் திருத்தி ஜனநாயக முறையில் அமைப்பது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**Thiru K. VINAYAKAM :** Sir, to discuss the general policy and the failure of the police to maintain Law and Order in the State wherever there were disturbances—

I move the following cut motion :—

'That the allotment of Rs. 12,87,89,700 under Demand No. 12—Police be reduced by Rs. 100 ".

**திரு. எம். சுரேந்திரன் :** ஐயா, பொதுமக்களிடம் போலீசாரின் உறவு முறையில் மாற்றம் ஏற்படுத்த வகைசெய்வதுபற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** ஐயா, தொழிலாளர் விவசாயிகள் உரிமைப் போராட்டங்களின்போது போலீசார் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** ஐயா, காவல் துறையினர் மாதம் இத்தனை வழக்குகள் போட வேண்டும் என்ற முறைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஐயா, போலீஸ் எண்ணிக்கையை உயர்த்து வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** போலீஸ்காரர்களின் சம்பளத்தை உயர்த்துவது, வீட்டுவசதி செய்துகொடுப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,87,89,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, அவை முன்னாலே காவல் துறை பற்றிய ஆய்வுரை* உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதால் நான் துவக்கத்தில் எந்த உரையும் ஆற்றுவதாக இல்லை. மு.ப. 10-30

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த அவை முன்னாலே வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டுக் காவல் துறை பற்றிய ஆய்வுரையில் 6-வது பக்கத்திலே "11. குடியானவர் நிலைமை" என்ற பகுதியில் தஞ்சை மாவட்டத்திலே பூந்தாழங்குடியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொருத்து வழக்குத் தொடரப்பட்டு விசாரணை யில் இருக்கக்கூடிய நேரத்தில், "தஞ்சை மாவட்டத்தில் பூந்தாழங் குடி கிராமத்தில் 1967 அக்டோபர் திங்கள் 5-ம் தேதி அன்று படைக்கலன் தாங்கிய குடியானவர்கள் மிராசுதாரர்களைத் தாக்கினர். இதன் விளை வாகக் காவல் துறையினர் சுடவேண்டி வந்தது. ஒருவர் இறந்து விட்டார், மற்றொருவர் காயமுற்றார்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சப்-ஜுடிஸ். குடியானவர்கள் தாக்கினார்களா அல்லது மிராசுதார்கள் தாக்கினார்களா என்பது விசாரணைக்குப் பிறகு தெரிய வேண்டிய ஒன்று. அப்படி இருக்கும்போது இந்தச் சர்க்காருடைய கொள்கைக்கே வேட்டு வைக்கும் வகையில் இந்த வாசகம் இருக்கிறது. ஆகவே, இந்த ஆய்வுரை யையே நான் நிராகரிக்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என் பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதி விசாரணையில் இருக்கும் எதைப் பற்றியும் குறிப்பிடக் கூடாது என்று விதி 67 (1)-ல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** "அந்தக் குடியானவர் களில் சில பேர் மிராசுதாரர்களைத் தாக்கினார்கள்" என்று போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. "தாக்கினார்கள்" என்ற ஃபாக்டை வைத்துக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வழக்குமன்றத்தில் இருக்கிற விஷயத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அதிலே, "தாக்கினார்கள்" என்று அசர்டிவ் ஆக இருக்கிறது. தாக்கியதாக ரிப்போர்ட் இருக்கிறது என்றால் ஆட்சேபணையில்லை. அசர்டிவ் ஆக ஒரு ஸ்டேட்மென்ட் இருக்கிறது. அது இனிமேல்தான் நிரூபிக்கப்பட வேண்டிய விஷயம். அப்படி இருக்கும் போது கனம் முதலமைச்சர் அவர்கள் அந்த வாசகத்தை அருள்கூர்ந்து எடுப்பதற்கு முன் வரவேண்டும்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** வழக்குப் பதிவு செய்யப் பட்டிருப்பது "விவசாயிகளிலே குறிப்பிட்ட சிலர் மிராசுதாரர்களைத் தாக்கினார்கள்" என்று சார்ஜஸ் ஆகப் பதிவு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைத் தான் குறிப்பிட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நீங்களே அசர்டிவ் ஆக "தாக்கினார் கள்" என்று கூறுகிறீர்களே.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** "காவல் துறையினர் சுட வேண்டி வந்தது" என்ற வாக்கியத்திற்கு முன்னால், "இதன் விளைவாகக் காவல் துறையினர் சுட வேண்டி வந்தது, ஒருவர் இறந்தார், மற்றொருவர் காயமுற்றார்" என்று கூறப்பட்டிருக்கிறது. இது "ஸ்டேட் மென்ட் ஆஃப் ஃபாக்ட்".

---

* 122-128-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** ஸ்டேட்மெண்ட் ஆப் ஃபாக்ட் என்றால், அது ஃசீப் மினிஸ்டருடைய ஸ்டேட்மெண்ட் ஆப் ஃபாக்ட்டா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** சர்க்கார் ஸ்டேட்மெண்ட் ஆப் ஃபாக்ட், அதிகாரிகளுடைய ஸ்டேட்மெண்ட் ஆப் ஃபாக்ட் என்று தனியாக இருக்காது.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** இது ஸ்டேட்மெண்ட் ஆப் பாக்டா இல்லையா என்பதைக் கோர்ட்டில் முடிவு செய்ய வேண்டும். அதற்கிடையில் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்துவிட்டால் அது தீர்மானத்திற்கு வந்துவிட்டதாகி விடாதா என்று தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொஞ்சம் பொறுமையாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதில் முடிவு சொல்வதாக இருக்கிறது. குடியானவர்கள் தாக்கினார்கள் என்று குற்றச் சாட்டுக் குறிப்பில் இருக்கிறது. அது நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிக்கப்பட்ட பிறகுதான் தீர்ப்பாகும்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் இவ்வளவு எழுச்சியோடு இருக்கிறார்கள் என்பதால் "குடியானவர்கள் மிராசுதாரர்களைத் தாக்கியதாக வழக்கு ஒன்று இருக்கிறது" என்று மாற்றிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பகுதியை "குடியானவர்கள் மிராசுதாரர்களைத் தாக்கியதாக வழக்கு ஒன்று இருக்கிறது" என்று மாற்றிக் கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும் இந்தச் சம்பவத்தைப் பற்றி விவாதத்தின் போது குறிப்பிட முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆறாவது பக்கத்தில் 11-வது பிரிவில் "..............வழக்கு ஒன்று இருக்கிறது" என்று சொல்வதில் தவறு இல்லை. அந்த முறையில்.... ........தாக்கியதாக வழக்கு ஒன்று இருக்கிறது" என்று திருத்திக் கொள்ளப்படும். ஆனால் இந்த நிகழ்ச்சியைப் பற்றி "ரெஃபர்" கூடப் பண்ணக் கூடாது. குறிப்பிடக் கூடக் கூடாது. கருத்தைத் குறிப்பிடக் கூடாது என்பது மட்டுமல்ல, "must not give his opinions or refer to any matter.........." என்று விதி 67 (1)-ல் இருக்கிறது. உறுப்பினர்கள் எல்லோரும் இதை மனத்தில் வைத்துக்கொண்டு குறிப்பிட்டுப் பேசாமல் விட்டுவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. பரலசுப்பிரமணியன் :** வழக்கைப்பற்றிக் குறிப்பிடக் கூடாது என்பதுதான் தலைவர் அவர்களுடைய............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 67-வது விதிப்படி, நீதிவிசாரணையில் இருக்கும்போது, அந்த நிகழ்ச்சியைப்பற்றிப் பேசக்கூடாது என்று இருக் இருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், இதே மாமன்றத்தில், ஸெனித் லாம்ப் கேஸ் பற்றி மாண்புமிகு ரெவின்யூ துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது நான் "ஸெனித் லாம்ப் வழக்கு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது, அதைப்பற்றிப் பேசக் கூடாது" என்று கூறியபோது, முதலமைச்சர் அவர்கள், "வழக்கைப்பற்றிக் குறிப்பிடலாம், வழக்கிலுள்ள மெரிட்ஸ் பற்றிக் குறிப்பிடக் கூடாது" என்று கூறினார்கள். ஆகவே, இந்த வழக்கைப் பற்றியும் சபையிலே கூறலாம். மெரிட்ஸ் பற்றிக் கூறாமல் வழக்கைப் பற்றிக் கூறலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிகளை நன்றாகப் படித்துப் பாருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி 83-வது விதியைப் பாருங்கள். இப்போது பேரவையின் முன்னால் எந்த அலுவல் இருக்கிறதோ அதைப் பற்றித்தான் ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவர முடியும். முன்னால் நடந்தது பற்றிச சொல்லக் கூடாது. (திரு. டி. மார்டின் : அதை எடுத்துக்காட்டாகக் கூறினேன்.) எடுத்துக்காட்டாகக் கூட முன்னாலே நடந்தது என்று பேசக் கூடாது என்று விதி 83 (1)-ல் இருக்கிறது.



பேரவையில் என்ன அலுவல் நடந்து கொண்டிருக்கிறதோ அதைப்பற்றி ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டுமே தவிர, முன்னாலே நடந்த காரியங்களைப்பற்றிக் குறிப்பிடக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வழக்கைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. இப்படி துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதைப் பற்றிக் குறிப்பிடுவதிலே என்ன தவறு இருக்கிறது ? எல்லாவற்றுக்கும் ஜூடிஷியரியில் இருக்கிறது என்று சொல்லிவிட்டால் ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்து விட வேண்டியது தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்ப்பு அளித்து முடிந்த பிறகு பேசலாமே.

**திரு பி.ஜி. கருத்திருமன் :** ஜட்ஜ்மெண்ட் வந்து எப்போது பேசுவது ? வழக்கின் மெரிட்ஸ் பற்றிப் பேசவில்லை. துப்பாக்கிச் சூடு நடந்ததைப் பற்றிப் பேசுவதற்குக் கூட உரிமையில்லையா ? முன்னால் நடந்ததைப் பற்றிக் குறிப்பிடக்கூடாது என்றால் எப்படிப் பேசுவது ? மேற்கோள் காட்டித்தான் சபையிலே பேச முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கு நீங்கள் நல்ல அறிவுரை சொல்கிறீர்கள். நான் விதிப்படி நடந்தாக வேண்டும்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** நீதிமன்றங்களில் முந்திய தீர்ப்புகளை மேற்கோள் காட்டித்தான் கேஸ்கள் நடத்தப்படுகின்றன. ஆகவே, சபா நாயகர் அவர்களின் தீர்ப்பை எடுத்துக் கூறுவதில் எந்தவிதத் தவறும் இல்லை. இது கூடாது அது கூடாது என்றால் எங்கள் உரிமைதான் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிகளில் எப்படியிருக்கிறதோ அது தான் உரிமை.

A member should not refer to a matter on which a judicial decision is pending.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** சப் ஜூடிஸாக இருக்கும் காரியத்தில் ஒரு கருத்தை எடுத்துச் சொல்வது அந்த விசாரணையின் போக்கை பாதித்துவிடும் என்ற கோட்பாடால் அப்படிப்பட்டதொரு நிலை இருக்கிறது. ஆகவே, விசாரணையைப் பாதிக்காத வகையில் சம்பவத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுவதில் தவறு இல்லை. அது பாதிக்கத் தக்க வகையில் அமைந்தால் தவறு. ஆனால் அதுபற்றிய விவரங்களைப் பற்றிக் கூறுவது சரியல்ல என்று சொன்னால் அது கோட்பாடு ரீதியாக சரியாகயிருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்போது எது பாதிக்கிறது, எது பாதிப்பதில்லை என்ற கேள்வி வருகிறது. ஒருவர் பாதிக்கும் என்று சொல்வார், இன்னொருவர் பாதிக்காது என்று சொல்வார்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பேசுகிறபோது பாதிக்கப்படுகிற வகையில் பேசினால் தாங்கள் தலையிட்டு அதைத் தடுக்கலாம். அப்போது நாங்கள் அடிபணிந்து அமர்ந்து விடுவோம்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** விதிகளின்படி நாம் நடந்து கொள்ளவேண்டும் என்பது நிச்சயமாக ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டியதுதான் என்றாலும், உறுப்பினர்கள் அந்தச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அதன் மூலமாக சர்க்காரின் போக்கை விளக்குவதற்குப் பயன்படுத்தினால், அதுவும் வழக்கிற்குள் தொடர்பு இல்லாத முறையில் பேசினால் விதிகளுக்கிடையில் அந்த உரிமை வழங்கப்படுவது தேவை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வழக்குக்கு தொடர்பு இல்லாதபடி இருக்கிறதா என்பதை அந்தச் சமயத்தில் முடிவு செய்கிறேன். இப்போது திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேசலாம்.

*திரு. எ. சிதம்பரநாத நாடார் : இந்த போலீஸ் மானியத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை இந்தச் சபையில் பதிவு செய்யலாம் என்று ஆசைப்படுகிறேன். இன்றைய ஐ.ஜி. திரு. ஆர். எம். மகாதேவன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கூடியவரையில் பெயர்களைச் சொல்லாமல் பேசுங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** பெயரைச் சொன்னால் என்ன தப்பு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயரைச் சொல்லக் கூடாது என விதியிருக்கிறது.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** ஸ்ரீமான் ஆதித்தனை ஆதித்தன் என்று தானே கூப்பிட வேண்டும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்லக்கூடாது. பேரவைத் தலைவர் என்று சொல்ல வேண்டும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** பெயரைச் சொல்வதில் தப்பில்லை என்பது என் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிகாரிகளைப் பற்றி குறிப்பிடும் போது பெயர்களைச் சொல்ல வேண்டாம் என்று பலமுறை நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். பெயரைச் சொல்லி என்ன ஆகவேண்டும் ?

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** எனக்குத் தரப்பட்டிருக்கும் நேரமோ சுருக்கமாகயிருக்கிறது. அதற்கிடையில் நீங்கள் குறுக்கே விழுந்து பாய்ந்தால் என் நிலை பரிதாபகரமாக ஆகிவிடுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெயரைச் சொல்லி ஒரு அதிகாரியை அழைக்க வேண்டாம் என்று தலைவர் அவர்கள் தீர்ப்பு கூறியிருக்கும்போது ஆதித்தனை ஆதித்தன் என்றுதானே அழைக்க வேண்டும் என்று உறுப்பினர் கூறுவது உள்ளபடியே இந்த சபையின் மரபை பாதிப்பதாகும். அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வது முறையானதாகவும், சபையின் மரபைக் காப்பாற்றுவதுமாக இருக்கும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** இந்த நாட்டில் எவ்வளவோ ஆதித்தன்கள் இருக்கிறார்கள். என் மகன் ஆதித்தன் என்று ஒருவன் இருக்கிறான். அவனை, மக்கா ஆதித்தா என்று கூப்பிடாமல், என்ன செய்வது ? இப்படியெல்லாம் மந்திரிமார்கள் குறுக்கே விழுவது பரிதாபகரமானதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசுங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** நான் பேசட்டுமா ? இன்றுள்ள ஐ.ஜி. பதவிக்கு வருவதற்கு முன்னால் இந்த நாட்டில் சில அசம்பாவிதங்கள் நடந்து கொண்டிருந்தன. இவர் வந்த பிறகு அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடக்காது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனக்கு அவரைப் பத்து ஆண்டுகளாக நன்றாகத் தெரியும். அவர் நல்லவர், நேர்மை உள்ளவர், ஒழுங்கானவர், எல்லோராலும் வரவேற்கத் தக்கவர். சென்ற காலத்தில் காங்கிரஸ் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது திரு. கருணாநிதி அவர்கள் எதிர் கட்சியில் இருந்தார்கள். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** You are an Advocate விதியை வாசிக்கிறேன்.

It shall not refer to the conduct or character of a person except, in his official or public capacity.

ஆகவே நல்லவர் அல்லது கெட்டவர் என்று சொல்ல வேண்டாம்.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்கள் கட்சி அங்கத்தினர் சார்பாக, அவர்கள் சபாநாயகர் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டிருந்தால், அங்கத்தினர் சார்பாக நான் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நல்லவர் அல்லது கெட்டவர் என்று சொல்ல வேண்டாம். பெயரைக் குறிப்பிடாமல் சொல்லுங்கள். Official or public capacity-ஐக் குறிப்பிட்டு சொல்லுங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** ஸ்ரீமான் கருணாநிதி அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, காங்கிரஸ் மந்திரிமார்களின் பின்னால் போலீஸார் செல்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது ஒரு நாள் சட்டசபையில் அவர்கள் ஆற்றிய ஒரு உரையில் போலீஸ்காரர்கள் மந்திரிமார்கள் பின்னாலே போகிறார்களே, இந்த அநியாயம் எதற்காக நடக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் இன்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஸ்ரீமான் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரு போலீஸ் பார்ட்டி .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயரைச் சொல்ல வேண்டாம்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** பெயரைச் சொல்லாமல் அந்த அங்கத்தினரை எப்படிக் குறிப்பிடுவது ?

**ஓர் உறுப்பினர் :** பரங்கிமலைத் தொகுதி உறுப்பினர் என்று சொல்லலாம்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** எனக்கு அவர்கள் தொகுதி பெயர் தெரியாது. பரங்கிமலைத் தொகுதி உறுப்பினர் ஸ்ரீமான் எம்.ஜி.ஆர். . .

**MR. SPEAKER:** Under Rule 67, a member, while speaking, must not make a personal charge against another member of this House. You can go on talking, subject to this rule.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அவரைத் தாக்கவும் இல்லை, உயர்த்தவும் இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதனால்தான் நான் குறுக்கிடவில்லை.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அவருக்கு எதற்குப் போலீஸ் படை? அண்மையில் தஞ்சையில் அவர் ஒரு படம் எடுக்கப் போனார். அங்குள்ள எஸ்.பி. அவருக்குக் காவல். இதுதான் இன்றைய போலீஸ் ஆட்சி. இந்த செகரட்டேரியட்டில் .. .. கேளுங்கள் சார் .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் கண் அந்தப் பக்கமிருந்தாலும், என்னுடைய காது உங்கள் பக்கம்தான் இருக்கிறது.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** உங்களுக்கு நன்றாகக் காது கேட்கும் என்று எனக்குத் தெரியும். இந்த செகரட்டேரியட்டில் ஒரு போலீஸ்காரனைப் பிடித்து நாலைந்து பேர்கள் அடித்துவிட்டார்கள். அடித்து, அவர் பெல்ட்டை பிடித்திழுத்து, அவர் தொப்பியைக் கழற்றி கொல்லு கொல்லு என்று கொன்று விட்டார்கள். கேட்க ஆள் இல்லை. பின், அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் தலையிட்டு தெரியாமல் செய்துவிட்டார்கள், மாப்புக் கேளுங்கள் என்று சொன்னார்கள். இப்படியிருந்தால் போலீஸார் எப்படி ஒழுங்காக நடப்பார்கள் ? இதைத்தான் சொல்ல ஆரம்பித்தேன். நீங்கள் பதவிக்கு வந்து ஒரு வருஷமாகிறது. நீங்கள் வந்த பிறகு நாட்டில் என்ன நடக்கிறது என்றால் போலீஸ் நிர்வாகத்தில் எம்.எல்.ஏ. தலையீடு, மந்திரிமார்கள் தலையீடு. இது சர்வசாதாரணமாக இருக்கிறது. ஒரு உதாரணம் சொல்கிறேன். உங்கள் உத்தரவோடு படிக்கிறேன். ஆனால் அதிகாரத்திற்கு வந்த பிறகு எங்கள் கட்சியிலுள்ள அங்கத்தினர்களோ, வட்டச் செயலாளர்களோ போலீஸ் நிர்வாகத்தில் தலையிடவில்லை

என்று அமைச்சர் சொன்னதாக ஒருநாள் பத்திரிகையிலே வந்திருக்கிறது. திரு. எம். சி. பாலன், பி.எ., பி.எல்., அவர்கள் ஒரு அதிகாரிக்கு கடிதம் எழுதியிருக்கிறார், 10-9-1967-இலே. அதில் "அன்புள்ள இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு, வணக்கம், இக்கடிதம் கொண்டு வரும் .. ..

MR. SPEAKER : If what you say contains a personal charge against a member of this House, I am bound to protect him against that personal charge under rule 67.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நான் படித்து விடுகிறேன், அதற்கு அனுமதி தரக் கூடாதா ? அந்தக் கடிதத்தில் " இக் கடிதம் கொண்டு வரும் . . .

திரு. இராம. அரங்கண்ணல் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினரவர்கள் ஏதோ ஒரு கடிதத்தை இங்கே கொண்டு வந்து, சட்ட மன்ற உறுப்பினரொருவர் எழுதியதாகச் சொல்லி அவர்கள் அந்தக் கடிதத்தைப் படிக்கிறார்கள். அவ்வாறு படிப்பதற்கு முன்னதாகத் தங்களுடைய பார்வைக்கு அது வந்ததா ? அல்லது தங்களிடம் அனுமதி பெற்றிருக்கிறார்களா என்ற விவரம் தெரியவில்லை. எங்களுக்குப் புரியாத விஷயத்தைப் பற்றி, தவறான அபிப்பிராயத்தைக் கொள்ளும் வகையில் அந்தக் கடிதத்தைப் படிப்பது நல்லதா, உகந்ததா என்பதற்குத் தங்களது ஆணையை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் ஏதாவது கடிதத்தை வாசிப்பதாயிருந்தால் பேரவை தொடங்குவதற்கு முன்னால், என்னிடம் காட்டி அது சரியானதுதானா என்று நான் பார்த்துக் கொள்ள வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : அவ்வாறு முன்னாலேயே அனுமதி பெறாததற்கு மன்னித்து விட்டு இப்பொழுது இதை வாசிக்க அனுமதி தாருங்கள். படித்துவிட்டு அதைத் தங்களிடம் கொடுக்கிறேன். அக்கடிதத்தில் " . . . அங்கே அவர் வரும் காரியத்தைச் செய்து கொடுக்க அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன் . . .

திரு. செஞ்சி வெ. முனுசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்பு தந்த பிறகும் தொடர்ந்து அந்தக் கடிதத்தைப் படிக்கலாமா ? படித்துவிட்டுத் தங்கள் பார்வைக்குக் கொண்டுவருவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை தொடங்குவதற்கு முன்னாலேயே காட்டியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள், இந்த முறை மன்னித்து விடுங்கள், கடிதத்தை வாசித்துவிட்டு பிறகு தருகிறேன் என்று சொன்னார்கள். அதன்படி வாசித்துவிட்டார்கள். மன்னிப்பு என்று சொன்ன பிறகு பேரவை பெருந்தன்மையோடு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, நான் சொல்வதன் நோக்கமே, அதில் உள்ளது உண்மையா, இல்லையா என்று ஆராய்ந்து, உறுப்பினர் எழுதியிருப்பதாகச் சொல்வதால் அதை உறுப்பினர் எழுதினாரா, இல்லையா என்று தெரிந்து அதன் பிறகு அனுமதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதற்குத் தங்கள் ஆணையைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது சரி, ஏதாவது கடிதங்கள் அல்லது வேறு ' பிரைவேட் டாகுமெண்டுகள் ' இருக்குமானால் பேரவைத் தலைவரிடம் முன்கூட்டியே காட்டி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். அது சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு பேரவைத் தலைவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் இந்த முறை உறுப்பினர் தாம் செய்தது தவறு என்று கூறி மன்னிப்பு செய்துவிடுங்கள்





என்று கூறிய பிறகு பேரவையிலுள்ள நாம் பெருந்தன்மையோடு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் வாசித்து விட்டார்கள். இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நீங்களெல்லாம் எதிர்க்கட்சியிலேயிருந்த பொழுதெல்லாம் இப்படித்தான் இருந்தீர்கள். ஏதோ சிதம்பரநாத நாடார் செய்துவிட்டார் என்பதற்காக அவருடைய தலையைத் துண்டித்து விடவேண்டுமென்று உங்கள் மனத்தில் நினைத்துக்கொள்ள வேண்டாம். நாம் எந்தக் கட்சியிலேயிருந்தாலும் ஒரே மனமாக, நல்ல முறையாக இருக்க வேண்டும். இன்று ஸ்ரீமான் அண்ணாதுரை. . .

திரு. ந. தருமலிங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : எதற்கு, ஸ்ரீமான் அண்ணாதுரை என்று சொன்னதற்கா ? நல்ல முறை இது! சப்பையை சப்பை என்று தான் சொல்ல வேண்டும். நல்லதை நல்லது என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரவர்கள் பேசும்பொழுது ஒலிபெருக்கியை மூடிக்கொள்ளாமல் பேச வேண்டும்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நன்றி. டி.எம்.கே. கட்சி ஆட்சியிலே வந்தபிறகு நிர்வாகத்திலே தலையிடாத இடமே கிடையாது. இதற்காகத் தான் நான் அதைக் கூறினேன். அவர்கள் தலையிடுவது சர்வசாதாரணம். *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிப் புத்தகத்தை எடுத்துப் பாருங்கள்.

In the Chapter ' General Rules of Procedure ' Rule 67 says : A member, while speaking, must not make a personal charge against a member.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நான் யாரையும் சார்ஜ் சொல்லவில்லை. நாகர்கோயில் தொகுதி எம். எல்.எ., திரு. எம். சி. பாலன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வாறு விதியிருப்பதற்குக் காரணம், நீங்கள் ஒருவரைப் பற்றிச் சொல்ல, அவர் இன்னொருவரைப்பற்றிச் சொல்ல, இப்படியே விரிவாகப் போய்விடுமென்பதற்காகத்தான்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : அப்படி யென்றால் வாயை அடக்கிக் கொண்டு வீட்டிற்குப் போக வேண்டியதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிப்படி, உறுப்பினர்களைப் பற்றி தனிப்பட்ட குற்றச்சாட்டு செய்யக் கூடாது.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நான் யாரையும் பர்சனல் சார்ஜ் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை அப்படிச் செய்திருந்தால், நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடச் சொல்லுகிறேன்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : பொதுவாக கெஜட்டெட் ஆபீசர்கள் உத்தியோகம் பார்ப்பதில், அந்த ஊரிலேயே விவாகம் செய்திருந்தாலோ அல்லது வேறு ஏதாவது தொடர்பு இருந்தாலோ அந்த ஊரில் உத்தியோகத்தில் வைக்கக் கூடாது என்று இருக்கிறது. இந்த டி.எஸ்.பி. ஸ்ரீனிவாசரமணன் என்பவர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரைச் சொல்லக்கூடாது.

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது

[1968 மார்ச் 20

திரு. எ. சிதம்பரநாத நாடார் : வாயிலே வருகிறதே. அதனால் எனக்கு மாத்திரம் "எக்ஸெம்ப்ஷன்" கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிதம்பரநாத நாடார் அவர்களை நான் மிக நன்றாக அறிவேன். அவர்களுக்கு "எக்ஸெம்ப்ஷன்" கொடுக்க எனக்கு விருப்பம் இருந்தாலும் விதியிலே இடமில்லையே.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : நாம் சொந்தக்காரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொந்தம் பாராட்டிப் பேரவையிலே பேசக்கூடாது. எனக்குச் சொந்தக்காரர்களும் ஒன்றுதான், சொந்தமல்லாதவர்களும் ஒன்றுதான்.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : மீனாட்சிபுரம் டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்டின் பக்கத்தில் நாயுடு சாப்பாட்டு விடுதி வைத்திருக்கிறார். அந்த வீட்டிலே இந்த ஸ்ரீனிவாச ரமணன் பெண்ணை விவாகம் செய்து இருக்கின்றார். கல்யாணத்தில் பி.டப்ளியூ.டி. அமைச்சரவர்களும் வந்திருந்தார்கள். இப்படி அந்த ஊரிலேயே பெண்ணைக் கட்டி தொடர்பு கொண்டுள்ள ஆளை அங்கே வைத்தால் உங்கள் ஆட்சியைப் பற்றி என்ன நினைப்பார்கள். இதை நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இதை உங்கள் நன்மைக்காகத்தான் கூறுகிறேன். இந்த சீனிவாச ரமணனின் இளைய தம்பி கோவிந்தன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸரா ?

திரு. எ. சிதம்பரநாத நாடார் : என்னை மாதிரி, உங்களை மாதிரி தனி ஆள். இன்னொரு தம்பி திருநெல்வேலி பார்ஸ்டல் ஸ்கூலில் ஜெயில் சூப்பரின்டெண்ட். இவர் பல ஆட்களிடம் சென்று, எங்கள் அண்ணன் டி.எஸ்.பி., இன்னொரு அண்ணன் பார்ஸ்டல் ஸ்கூலில் இருக்கிறார், எனவே உங்களுக்கு காண்டிராக்ட் பார்த்துத் தருகிறேன் என்று சொல்கிறார். இதைப்பற்றி ஐ.ஜி. ஆஃப் போலீஸுக்கும், ஐ.ஜி. ஆஃப் பிரிஸன்ஸுக்கும் புகார்கள் அனுப்பியும் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

அண்மையிலே நம் மெட்ராஸ் ஸிட்டிக்குள்ளேயே எம். ஜி. மாணிக்கம் என்பவரை. . .

திரு. இராம. அரங்கண்ணல் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். தமிழக சட்ட மன்றம் ஒழுங்கான முறையில் மிகவும் பொறுப்போடு நடக்கின்ற சட்ட மன்றம். இங்கே வந்து தனிப்பட்டவர்கள்மேல் சாட்டப்படுகின்ற குற்றங்களைப் பற்றி விவாதிக்க முடியாத நிலையிலே விதிகள் இருக்கின்றன. அந்த நிலையிலே வெளியிலே இருக்கிறவர்கள் பெயரை இழுத்து இழுத்து சொல்லுவதென்பது கூடாது என்ற மரபு இருக்கிறது. அதைப் பற்றி தங்கள் தீர்ப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே இருக்கிறவர்களைப் பற்றி குறிப்பிடக் கூடாது என்று பரவலாக ஒரு எண்ணம் இருக்கிறது. ஆனால் அப்படி ஒரு விதி இல்லை.

You should not refer to the conduct or character of a person except in his official or public capacity என்றுதான் சொல்லியிருக்கிறது. ஆனால் விதி 156(5) (2) படி—In a cut motion you should not make any imputation or defamatory statemnt against anybody.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : இந்த அவை முன்னால் கேஸை வைத்துக் கொள்ளக் கூடாதா ?

MR. SPEAKER : This House has no authority to try charges against individuals.



1968 மார்ச் 20]

THIRU A. CHIDAMBARANATHA NADAR : I am going to present this.

MR. SPEAKER : That should be handed over to the Hon. Minister concerned in his office and not to the whole House. If you want to do any such thing, you must do it by way of a petition to the House.

திரு எ. சிதம்பரநாத நாடார் : ஒரு ஆபீசரைப் பற்றிக் குறை சொல்லுகிற நேரத்தில் அசெம்பிளியில் சொல்லாமல் வேறு எங்கு சொல்வது ?

MR. SPEAKER : If you want to refer to the character of a person, you must do it only in his official or public capacity.

THIRU A. CHIDAMBARANATHA NADAR : I am referring only in has official capacity.

MR. SPEAKER : Please abide by the rules.

THIRU A. CHIDAMBARANATHA NADAR : I am always bowing before you in the House.

M. G. Manickam, 3, E.M.K.N. Road, Guindy, Madras-32. (Phone No. 80196).

என்பவரை இதே ஸ்ரீ கோவிந்தன் எங்கள் அண்ணா ஸ்ரீ முத்து வெங்கடாச்சலம் ஜெயில் சூப்பிரண்டாக இருக்கிறார். ஆகவே, தங்களுக்குச் சௌகரியமாக காண்டிராக்ட் பிடித்துத் தருகிறேன் என்று ஏமாற்றி இருக்கிறார். இதை விசாரிக்கவில்லை. இரண்டு சகோதரர்களை சர்க்கார் உத்தியோகத்திலே வைத்திருப்பதனாலே நாட்டை எந்த அளவுக்குக் குட்டிச்சுவராக்குகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய போலீஸ் டிபார்ட்மெண்ட் சீரான முறையிலே இயங்குகிறதா ? என் மாதிரி உள்ளவர்கள் இதைச் சொல்லாமல் இருந்தால் தவறாக இருக்கும். சொல்லாமல் இருப்பது பாவமாகும். அது முதலமைச்சர் அவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பாகம். அந்தப் பகுதியை நீங்கள் நல்ல முறையிலே ஆலோசித்துப் பார்த்தால் தெரியும். அதற்குத்தான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். தவறு இருக்கிறது என்று, உங்கள் மீது குறை சொல்லவில்லை, சபைமீது குறை சொல்லவில்லை, முதலமைச்சரைக் குறை சொல்லவில்லை.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் என்றுமே சமாதானம் நிலவும் என்று சொன்னார்கள். எங்கள் கட்சி விவசாயிகள் கட்சியாகும், தொழிலாளர் கட்சியாகும் என்று சொன்னார்கள். வந்த உடனே சுட்டுவிட்டார்கள். பூந்தாழங்குடி சூடு, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த முதல் சூடு. அதிலே கேஸ் இருக்கிறது. அந்தக் கேஸைப் பற்றிச் சொல்லக் கூடாது. சொன்னால் நீங்கள் ஆர்டர் போடுவீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேஸ் இருக்கிறதா ?

திரு. எ. சிதம்பரநாத நாடார் : கூலி உயர்வு கேட்டவனுக்குச் சூடு. இனி ஒரு உத்தியோகம் வாங்கித் தா என்றால் அதற்கு சூடு போடுவார்கள். என் மகனுக்கு ஒரு உத்தியோகம் வேண்டுமென்று பி.டப்ளியூ.டி. மினிஸ்டரைக் கேட்டாலும் சூடு நடக்கும். மேலும் திருவொற்றியூரில் விம்கோ பாக்டரியில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு சுடமாட்டேன், சுடமாட்டேன், சுடமாட்டேன் என்று சொல்லி சுட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அந்தச் சகோதரர் பாவம். நமது முதலமைச்சர் அவர்களுக்கு இரக்கம் இருப்பது தெரிந்த விஷயம். உங்களுக்கே கட்சியின் கோலங்கள் தெரியும். நீங்கள் கட்சியை மறந்துவிடுகின்றீர்கள். இன்னல் வரும்போது சுட்டுக் கொல்லுகிறோம் என்று சொல்

[திரு. எ. சிதம்பரநாத நாடார்] [1968 மார்ச் 20

கின்றீர்கள். இந்த மினிஸ்ட்ரி பாதுகாப்பு அளிக்க வேண்டாமா ? பாது காப்பு அளிக்கின்ற முறையிலே ஆட்சி நடக்கவில்லை என்பதுதான் என்னு டைய தாழ்மையான கருத்து.

இந்த மார்ச் மாதம் 1-ம் தேதி நீலகிரி மாவட்டத்திலே அரவன்காடு தொழிற்சாலையிலே மூன்று பேரைச் சுட்டுகொன்றிருக்கிறார்கள். இதிலே விசாரணை நடப்பதாகக் கேள்விப்பட்டேன். அது எந்த அளவிலே இருக் கிறது என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு போலீஸ் டிபார்ட்மென்ட் இருக்கிறது. என்னை அடித்தால் யார் கேட்கிறார்கள், சார் ? என்னை அடித்துவிட்டால் யார் கேட்க வருகிறார்கள் சார் ? அந்த அளவுக்கு போலீஸ் நிலை நீடிக்குமானால் . . . . மனுநீதிச் சோழன் மகன் கன்றின்மீது தேரை ஏற்றிக் கொன்றுவிட்டான், ஆகவே, மனுநீதிச் சோழன் மகனை அதே தேரை ஏற்றிக்கொன்றது உலகு அறிந்த உண்மை.

(மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாரை) உங்களுக்குத் தானா தெரியாது. இதில் பாண்டித்யம் பெற்றவர் அல்லவா நீங்கள் ? நீங்கள் பெயரைச் சொல்லுங்கள், நான் திரும்பச் சொல்லுகிறேன். (குறுக்கீடு) அந்த மனுநீதிச் சோழன் பிறந்த நாட்டிலே நானும் பிறந்திருக்கிறேன். ஐயா, முதலமைச்சர் அவர்களும் பிறந்திருக்கிறார்கள். அந்த நாட்டிலே இந்த அநியாயம் நடக்கிறது என்று சொன்னால், நாட்டிலே உள்ள மக்கள் உங்களை நல்லவர்கள் என்று சொல்வார்களா ? இந்த அரசு கொடுத்த வாக்குறுதியைப் பற்றி நான் சொல்லவில்லை. இந்த அரசைப் பற்றிச் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. ஐயா, இதுவரையில் காங்கிரஸ் நடந்து கொண்டதே, அதைப்பற்றி வேண்டுமானாலும் (குறுக்கீடு) . . . . . அதைப் பற்றிப் பேசவில்லை. ஆகவே, நாட்டிலே நீதியும் நியாயமும் ஒழுங்காக நடக்கிறதா ? இன்றைக்கு எங்களுடைய மனைவிமாரோடு நான் ரோடிலே நடக்க முடியாது. இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே, ஃபோர்ட் போலீஸ் ஸ்டேஷனிலே வாலிபப் பெண்ணை இழுத்து, அவமானப் படுத்தியது உலகு அறிந்த உண்மை. கொஞ்ச நாட்களுக்கு முன்னால் நடந்தது. இந்த அநியாயத்தை யாரிடம் முறையிடுவது ? (மாண்புமிகு அரிசன நல, செய்தி அமைச்சர் அவர்களைப் பார்த்து) உங்களை மாதிரி ஒரு பெண்ணைத் தான் . . . . . நீங்கள் சிரிக்கிறீர்களே ?

(பல உறுப்பினர்கள் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார் இந்த மன்றத்தில் அரசைப் பற்றியோ, அரசு உறுப்பினர்களைப் பற்றியோ, அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்களையோ குற்றம் சாட்டுவதற்கு மெம்பர் களுக்கு பரிபூரணமாக உரிமை உண்டு. ஆனால், அப்படிக் குற்றம் சாட்டு கிற அளவிலே ஸ்பெஸிபிக்காகவோ, அக்குரஸிக்காகவோ பொறுப்போடு வேண்டும். இல்லாவிட்டால் பிரிவிலெஜ் கமிட்டிக்குப் போக வேண்டும் ; அவர்களுடைய குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதற்காகத் தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டுமென்பதற் காகவும் அவர்களுக்கு மக்களாலே அளிக்கப்பட்டிருக்கிற கட்டளைகளை நல்ல வகையிலே நிறைவேற்ற வேண்டுமென்பதற்கு வழிவகை செய்ய வேண்டு மென்பதற்காகவும் வழிவகை அளிக்கின்ற முறையிலே அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கா கவும் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் நீங்கள் (மாண்புமிகு பேரவைத் தலைவர்) கடமைப்பட்டிருக்கிறீர்கள். இந்த அவையைச் செயல்கள் முன்னாலே இப்படி தவறு செய்வது ஒழுங்கான முறையாகுமா என்பதை நான் கேட்டு, இப்பொழுது கூட அவர்கள் என்ன குறை சொன்னார்கள் என்பதையும் கேட்டு தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன் னொன்றையும் தாங்கள் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். இப்பொழுது ஒரு மெம்பர் பெயரைக் குறிப்பிட்டு, அவர் போலீஸிலே இண்டர்பியர் பண்ணினார்கள் என்று சொன்னார்கள்.

**MR. SPEAKER :** A member while speaking must not make a personal charge against a member.



1968 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** என்னுடைய பேச்சை முடித்து விடுகிறேன். ஒழுங்குப் பிரச்சினைக்கு மூன்று முறைகள் இருக்கின்றன. அதிகாரிகளுக்குக் கடிதாசி எழுதுகிற முறை, குறைகளை எழுதுகிற முறை, அமைச்சரிடத்திலே சொல்லுகிற முறை, ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு அமைச்சர்கள் அதிகாரிகளிடத்திலே தலையிடலாமா என்று சொன்னால், இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா உறுப்பினர்களுமே அந்தக் குற்றச் சாட்டைச் செய்தவர்கள் ஆவார்கள். ஆகவே, நமக்குப் பேசுவதற்கு ஒரு நியதி இருக்கிறது. இதிலே நீங்கள் நிரம்பக் கண்டிப்பாகவும் கவனமாக வும் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கண்டிப்பாக இருக்க கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால், திரு. சிதம்பரநாத நாடார் மேல் இன் னொரு மெம்பர் குற்றச்சாட்டு கொண்டுவந்தால் அதையும் தடுத்து நிறுத்தக் கடமைப்பட்டவன் நான். எனவே, அவர்கள் பெர்சனல் சார்ஜ் செய்ததை நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுத்துவிட நான் கட்டளையிட இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் இந்த மன்றத்தின் மரபுகளை தெரியாத வர் அல்ல. அவர் ஏற்கனவே, ஒரு அமைச்சராயிருந்து பணியாற்றியவர். அதல்லாமல், இந்த மன்றத்தில் 1952, 1957, 1962 வரையிலும் சட்ட மன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். எனவே, இந்தச் சபையின் நடவடிக்கைகளையும் நடைமுறைகளையும் நடந்துகொள்ள வேண்டிய முறை களையும் முற்றிலும் அறிந்தவர். பிறகு, அறிந்தவர் வேண்டுமென்றே தான் இப்படி * * * பேசிக் கொண்டிருக்கிறார். அவர் சொல்லியது சிரிப்பை உண்டாக்குகிற காரணத்தால் சிரித்தேனே தவிர அவர் பெண்ணைப் பற்றிக் குறிப்பிட்டதைக் கேட்டு அல்ல.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்து என்பது போல் இவர்கள் பேசுகிறார்கள். ஒரு பெண்ணை அவமதித்ததைச் சொல்லிக்கொண்டிருந்தபொழுதே அமைச்சர் அவர்கள் கூட சிரிக்கிறீர்களே என்று சொல்வது தவறா ? அதற்கு தங்கள் தீர்ப்பை எதிர் பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் * * * என்று சொன்னதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடப் போகிறேன்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அதை நீங்கள் எடுத்துவிடப்போகிறேன் என்று சொன்னால் பத்திரிகையிலே வராதா ? நடவடிக்கைக் குறிப்பிலே வராதா ? (குறுக்கீடு).

ஒரு பொறுப்புள்ள அமைச்சர் இந்த அவையிலே இப்படி பேசினால் என்ன நியாயம் இருக்கிறது ? பொறுப்பிலுள்ள அமைச்சர், பதவியி லுள்ள அமைச்சர் ஒரு மெம்பரைப் பார்த்து அப்படிச் சொன்னால் என்ன நியாயம் ? என்ன நீதி ? என்ன ஒழுங்கு ? என்று சத்தம் போட்டு கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கொஞ்சம் பொறுமையோடு இருந்தால்தான் புரிந்துகொள்ள முடியும். அந்தச் சொல்லை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடப் போகிறேன் என்று சொன்னேன். தங்களு டைய உரிமைகளையும் நான் காக்கக் கடமைப்பட்டிருக்கிற காரணத்தினால் இந்தச் சொல் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தச் சபையினுடைய ஒழுங்கு முறைகளைப் பற்றி தாங்கள் முன்னதாக அறிவித்தும், தெரிவித்தும் இருக்கிறீர்கள். அதோடு கூட இந்தச் சபையிலே சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டும், அங்கத் தினர்கள் வேண்டுமென்றே . . . . . .

** பேரவைத் தலைவரின் ஆணைப்படி அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால், பேரவையின் நடவடிக்கைகளில், ஏதாவது தவறாகத் தோன்றினால் நீங்கள் அதைப் பற்றி சொல்லலாம். பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். நீங்கள் ஏதாவது அதைப்பற்றி சொல்லவேண்டியிருந்தால் சொல்லுங்கள். புதிய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம். என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லுங்கள் ?

**திரு. கே. பி. எஸ். மணி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே பேசுகிற அங்கத்தினர்கள் இதுவரையில் முறை தெரியாதவர்களாக . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்பது அல்ல. பேசப்பட்டதில் என்ன தவறு என்று சொல்லுங்கள், அதற்கு நான் தீர்ப்பு சொல்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஆரம்பத்திலிருந்தே இப்படி நடந்துகொண்டிருக்கிறது. இது இந்தச் சபையின் ஒழுங்குமுறையையும், கவுரத்தையும் பாதிக்கிறது. எனவே, இப்படிச் செய்துகொண்டிருப்பது ஒழுங்குமுறைதானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடைசியில் நான் தீர்ப்புச் சொல்லப் போகிறேன். உறுப்பினர் திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் இன்னும் ஐந்து நிமிடங்கள் பேசலாம். ஏற்கனவே 20, 23 நிமிடங்கள் ஆகிவிட்டன. கருத்துக்களைத் தொடர்ந்து பேசிக்கொண்டேபோனால், கொஞ்ச நேரத்தில் எவ்வளவோ சொல்லிவிட முடியும்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** நாம் எல்லோரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்களைப் பார்த்து பேசாமல், என்னைப் பார்த்து பேசுங்கள். அப்படியானால்நான் கோபம் வராது, பொறுமையோடு பேச முடியும். கருத்தைப் பேசிக்கொண்டே போங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** எனக்குக் கோபம் கிடையாது * * * என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி கவலையில்லை. என்ன சொன்னாலும் கவலைப்படவில்லை. அந்த அளவுக்கு அசெம்பிளி இருக்கிறது...Owe unto this country என்று தான் நினைத்துக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப அந்தப் பாணியிலேயே சொல்கிறீர்களே ? அடுத்தபடியாக கருத்தைச் சொல்லிக்கொண்டு போங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** மனிதனுக்கு வேதனை வராதா ? இந்தச் சபையில் ஒரு மெம்பரைப் பார்த்து கேவலமாகச் சொல்லுவது நல்லதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொன்னது பத்திரிகையிலும் வராது, நடவடிக்கைக் குறிப்பிலிருந்தும் எடுக்கப்படும் என்றுதான் சொல்லிவிட்டேனே ?

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** வந்தாலும் கவலைப்படவில்லை. அது பத்திரிகையில் வரத்தான் வேண்டும். வந்தாலும் கவலைப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கருத்தைப் பற்றி பேசுங்கள்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** விருதுநகர் தொகுதியில் ஆமத்தூர் போலீஸ் நிலையத்தில் சங்கரலிங்கபுரத்தைச் சார்ந்த ஒரு அரிஜன பிரமுகரை லாக்கப்பில் வைத்து அடித்துக் கொன்றதாகப் புகார். போஸ்ட் மார்டம் செய்த டாக்டர் கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று ரிப்போர்ட்

*** பேரவைத் தலைவர் ஆணைப்படி அகற்றப்பட்டது





கொடுத்தபிறகும், எந்தவிதமான விசாரணையும் நடக்கவில்லை. என்போன்ற எதிர்க்கட்சி நண்பர்கள் இதைப்பற்றிச் சொல்லாமல் இருந்தால், இது வெளியிலேயே வராது. அதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன்.

மாஜி அரிஜன காங்கிரஸ் எம். எல். ஏ. திரு. சங்கிலி அவர்கள் ஒரு ஊரில் கோவிலுக்குப் பூஜைக்குப் போனார். இப்பொழுது தான் ஜாதி, மதம் கிடையாது. யார் வேண்டுமானாலும் கோவிலுக்குப் போகலாம். கோவிலைத் திறந்துவிட்டாகிவிட்டது. கோவிலுக்குப் போகக்கூடாது என்று அவரை அரெஸ்டு பண்ணி, வழக்கு தொடரப்பட்டு, கோர்ட்டில் பிறகு அவர் விடுதலையானார். இந்த அளவுக்கு இந்த ஆட்சியில் நீதி நடக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக, துலுக்கப்பட்டியில்—நம்முடைய முதல் மந்திரி அவர்களுக்குத் தெரியும், நான் பெயரைச் சொல்லவில்லை—ஒருவர் சிமெண்டுத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி புகுந்து அடாத செயல் செய்து அக்காரணத்தினால் போலீஸாரால் அரெஸ்ட் செய்யப்பட்டு, அதாவது இங்குள்ள ஒரு அங்கத்தினர் அப்படிச் செய்தும் அவர் பேரிலுள்ள கேஸ .......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே அங்கத்தினர்பற்றி நீங்கள் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்ல முடியாது.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அப்படியென்றால், சரி. கடைசியில் அந்தக் கேஸ் பின்வலிக்கச் செய்யப்பட்டது. இது உங்கள் அந்தஸ்துக்குக் குறைவு என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த சர்க்காருடைய அந்தஸ்துக்கு மிகவும் குறைவு. முதல் அமைச்சர் அவர்கள் நீதி உள்ளவர், நியாயம் உள்ளவர், மனச்சாட்சி உள்ளவர், அவர்களுக்குத் தெரியும். இதைச் சரியான முறையில் விசாரணை செய்து பார்த்தால், ஒருபாடு உண்மை தெரியவரும். இந்த நீதி மன்றத்தின் தலைவரும், இந்த மன்றத்திலுள்ள முதல் அமைச்சரும், இந்த மன்றத்திலுள்ள சிதம்பரநாத நாடாரும் ஏதாவது ஒரு குற்றம் செய்தால், அந்தக் குற்றத்தை வெளியிலே சொல்லலாம். இங்கேயும் சொல்லலாம். முனிசிபல் மைதானத்திலும் சொல்லலாம். காஞ்சிபுரத்திலும் சொல்லலாம். இந்த அநியாயம் இந்த ஆட்சியில நடக்கிறது. கேட்பதற்கு ஆள் இல்லை. நாட்டிலுள்ள மக்கள் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையிலே ஏன் இந்த மாதிரி குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பதற்குக் காரணம் இருக்கிறது. இந்த அவையிலே சொன்னால் உங்கள் மேலே உரிமைப் பிரச்சினை எடுக்க முடியாது. வழக்கு தொடர முடியாது. பேச்சு உரிமை இருக்கிறது, பேரவைக்கு வெளியிலே சொல்லலாம. வெளியிலே சொன்னால், பாதிக்கப்பட்டவர்கள் உங்கள் மீது வழக்கு போடலாம். இந்த அவையில் பேச்சு உரிமை இருக்கிற காரணத்தினால், ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் பற்றி தனித்த முறையில் தாக்கிப் பேசக்கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறது.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அவர்கள் இந்த அவையில் எதிர்க்கட்சியினராக இருந்தபொழுது இப்படித்தான் பேசினார்கள். இன்னும் எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். ஒரு காலத்தில 15 பேர்கள் இருந்தார்கள். ஒரு காலத்தில் 50 பேர்கள் இருந்தார்கள். அப்பொழுது திரு. ராஜரத்தினம் என்ற ஒரு ஐ. ஜி. இருந்தார். அப்பொழுது இங்கிருந்த உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் அவரைப் பற்றி என்னவெல்லாம் பேசினார் என்பது எல்லோருக்கும் தெரியும். யாரும் அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லை. கருணாநிதி அவர்களும் கண்ணை மூடிக்கொண்டிருந்தார். இப்பொழுது சிதம்பரநாத நாடார் பேசும் பொழுது 'பிடி கழுத்தை" என்கிறார். அது நடந்தது 1958-ம் வருடத்தில் என்று நினைக்கிறேன். இப்பொழுது நான் பேசினால் 'கழுத்தைப் பிடி" என்கிறார்கள். அந்த மனிதன் புத்தி பிடித்து உத்தியோகத்தைப் போட்டுவிட்டு ஓடி விட்டார். இந்த அளவிலே இப்பொழுது ஆட்சி நடக்கிறது சுருக்கமாக ஒரு வார்த்தையிலே சொல்கிறேன். சுருங்கக் கூறின், இந்த டி. எம். கே. ஆட்சியில

[திரு. எ. சிதம்பரநாத நாடார்] [1968 மார்ச்

நீதியில்லை, நியாயமில்லை, உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பில்லை, தொழில் இல்லை, உண்பதற்கு உணவில்லை, உடுப்பதற்கு ஆடை இல்லை என்று சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேசிய பேச்சில், விதி 67, உள்விதி 2 **A member while speaking must not (ii) make a personal change against a member** என்பதற்குப் புறம்பாக பேசப்பட்டவைகளெல்லாம் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்படும். அதோடு பத்திரிகைக்காரர் களுக்கு நான் சொல்லிக்கொள்வது, எதெது நடவடிக்கை குறிப்புகளி லிருந்து நீக்கப்படுகிறதோ, அது பத்திரிகைகளில் வரக்கூடாது என்று நான் நினைவுபடுத்திக்கொள்கிறேன். அதே போல, அவர்களை * * * என்று அமைச்சர் சொன்ன சொல்லும், நடவடிக்கை குறிப்புகளிலிருந்து நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்குவதற்குத தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. பொதுவாக அவர் இப்படிப் பேசியதெல்லாம் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்படும் என்று சொல்வதை விட, எந்தெந்தப் பகுதி நடவடிக்கைக் குறிப்பு களிலிருந்து நீக்கப்படும் என்று சொல்வது முறையாக இருக்கும்.

THIRU PALANIVEL RAJAN : Mr. Speaker, Sir, I rise to support the Demand moved by the Hon. Chief Minister. Before proceeding with my speech, I must refer to the allegation made by the hon. Member, Thiru Chidambaranatha Nadar with reference to the incident in the Amathur Police Station. The House would be pleased to know that two Sub-Inspectors were charge-sheeted in connection with that incident and they were tried before a court of law and acquitted. So, I do not think that the hon. Member is entitled to refer to that incident especially when the matter has been decided by a court of law. This is for the information of the Hon. Speaker.

Now, I wish to congratulate the officers and men of the Madras Police Services for giving all their loyalty and enthusiasm to the new administration. You know, Sir that the most sensitive department of the Government to function according to the changing political fortunes is the Police Department and, by and large, the Police have acquitted themselves very well and have served their new masters admirably over the past year and for this state of affairs our Hon. Ministers headed by the Hon. Chief Minister must be congratulated. Sir, over a period of 20 years many of our Hon. Ministers have had unhappy associations with the Police Department. I can quote a number of specific cases of ill-treatment given to some of our present Ministers when they were sitting opposite. Now I will refer to one such instance. Our Hon. Minister for Public Works was transported in the year 1965 from Madras to Tirunelveli by a Police lorry— a distance of 400 miles— and this is a matter which any civilised Government should be ashamed of. But the Chief Minister and the other Ministers have followed the highest tradition of administration in this State. I am proud to say that there has not been a single incident in which this new Government has thought it fit to take action against any official for misdemanour in the previous administration. My submission is that the Chief Minister by his magnanimity, moderation and

** பேரவைத் தலைவர் ஆணைப்படி.



1968 மார்ச் 20] [Thiru Palanivel Rajan]

tolerance has created an everlasting impression on the people of this State and even our opponents like Mr. Chidambaranathan Nadar hasten to admit it. But I wish to point out that this magnanimity has been exploited by a section of the Congress Party who have mistaken this magnanimity for weakness. This section of the Congress Party is not led by veteran Congressmen, but it is led by persons who have been recent converts from the D.M.K. Party. Probably they are frustrated that they have deserted the right party at the wrong time. Any way they have been periodically, systematically and day in and day out indulging in acts of provocation and lawlessness. I refer to the incident which took place a week back in which Professor Anbazhagan, Member of Parliament and Leader of the D.M.K. Group in Parliament, was dastardly attacked in the Egmore Railway Station by a group of Congressmen.

THIRU P. G. KARUTHIRUMAN : I object to that. How can he say that he was attacked by Congressmen ?

THIRU PALANIVEL RAJAN : *I would substantiate the* charge.

THIRU K. VINAYAKAM : If you are going to substantiate, you are doing some disservice to the court.

MR. SPEAKER : If there is a case or a possiblity of a case, you should not refer to it.

THIRU PALNIVEL RAJAN : I do not know whether there is a case. What I know is that there was a large crowd of persons assembled at the Egmore Station to receive one Mr. Nedumaran and this crowd was specifically invited to come to Egmore Station by a Congress Daily.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் பற்றி நானும் பேசயிருக்கிறேன். அப்பொழுதே ஜில்லா காங்கிரஸ் கமிட்டி விவரமாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள், பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வில்லை என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது உங்கள் விளக்கம் தானே.

THIRU PALANIVEL RAJAN : I only wish to point out that some Congressmen have been arrested in this connection. That I can say.

MR. SPEAKER : If some persons have been arrested, there is a possibility of the case coming up.

THIRU PALANIVEL RAJAN : I can *mention the fact that* they have been arrested.

THIRU T. MARTIN : I rise on a point of order, Sir. with regard to the incident which my learned Friend refers to, I remember certain persons were arrested and, in the words of the Hon Speaker, there is a possibility of the case being taken up. Is it advisable to refer to it in this Assembly now, as it will be prejudicial to the case which will be coming up ?

Mr. SPEAKER : I think it is the same point of order which the leader of your party has raised. Is it a different or the same point of order ?

Thiru T. MARTIN : I want the Hon. Speaker's ruling regarding that so that it will be helpful to the subsequent speakers on this Demand and they could follow the ruling.

Mr. SPEAKER : I gave the ruling in a summary form. I gave it in a very extended form the other day. The law of *Lis pendens* with regard to land and property is different. But with regard to conduct of the Assembly, it is different. The moment there is a possibility of a case coming up in due course later on you should not mention about it. *Lis pendens* starts from the date of filing of the case, but Rule 67 is similar to the law relating to contempt and operates from the date when the possibility is apparent.

Thiru PALANIVEL RAJAN : I only say that some persons have been arrested.

Anyway, what I wish to point out is that the Union Deputy Minister was the subject of a stone throw in Coimbatore. Our Hon. Chief Minister came with an emphatic statement condemning the stone throw in the strongest manner possible. But unfortunately no political leader of the Opposition has come out with a statement condemning the dastardly attack on a Member of Parliament and the Leader of the D.M.K. group in Parliament. My submission is that this tall cry that there is no law and order, that thre has been a breach of law and ord r is purely manipulation. There is absolutely nothing to warrant that accusation. My submission is that persons who have known the Chief Minister intimately will admit that he abhors anything violent and that he is very magnanimous. Some persons are deliberately indulging in acts of lawlessness and this must be put down by the Government with a firm hand.

Then I refer to the scurrilous filth published in a number of weeklies. Week by week the filth is becoming worse. I have no objection if the Ministers are attacked from a political angle. But the personality of the Chief Minister and the Minister for Public Works is attacked week after week with contemptible vulgarity and this filth is getting into the papers. I would request the Chief Minister for once to cast aside his magnanimity and take stringent action in the interests of the State. If students read these vulgar journals, they will have a very poor opinion of the political atmosphere in this State. As the person responsible for the administration in this State, the Chief Minister must cast aside his magnanimity and take severe action against this class of persons.

Next I would refer to the problem of student unrest. Many persons have spoken about it. My opinion is that it is not a State problem, not even a national problem but an international problem.



We see in the newspapers students dictating terms to governments all over the world. We see this in Egypt, in Japan, in Indonesia. The situation in Madras State is that for once the students are right in their demand and this Government support the students in their demand that they must get justice on the language issue. We are in a very dangerous situation. This Government is expected to maintain law and order and at the same time upheld the rights of students who are seeking justice against discrimination on the language issue. If I were asked to name a single biggest achievement of the D.M.K. Ministry in its one year of administration, I would definitely say that it is the very able handling of the student situation by the Chief Minister. Many members of the Opposition have accused the police of being inactive in this matter. My submission is that it is this masterly inactivity, this calculated inactivity, which has averted a tragedy. When the police took action in 1965, we had about one dozen deaths according to official version. But I know personally that more than twenty persons lost their lives in Gudalur. If the Chief Minister had ordered the police to be active and to take measures, surely a tragedy would have taken place. I must congratulate the Hon. Chief Minister on his able handling of the situation.

As far as the labour field goes, the Hon. Chief Minister has come out with the emphatic statement reiterating the policy of the Government, viz., this Government are always pro-labour. But when we are running an administration, we have to do it under the Constitution and we have certain constitutional obligations to fulfill. As the Hon. Chief Minister and Hon. Minister for Labour are aware it is most insulting and humiliating to be told by the courts that we must give protection to so and so, as if we do not do it. So, I submit that the labour friends in the labour field must understand our difficulty and must not indulge in anything which would put this Government as doing anything illegal in the eyes of law. So, my submission is that as far as the law and order situation goes, there is absolutely no justification to say that there is deterioration in thelaw andorder situation and instances given by the Congress Party are really unnecessary. Three months after this Government took over the administration of this State, the Congress Party had passed a resolution that there was lack of law and order and gave instances in support of that resolution. One such instance is that the name board from the former Chief Minister's house was missing. I really do not think that it is worthy of mention. The Hon. the Leader of the Opposition some months ago, while speaking on the law and order situation referred to an incident in the Tirunelveli district and if that is the criterion for lack of law and order, then the Central Government must resign because recently a Supreme Court Judge was attacked in the court itself by a citizen. So, my submission is that the only criterion on which one can judge whether there is lack of law and order is whether the administration has failed in its discharge of duties and whether the military has been called to assist the Government in the maintenance of law and order. There was such a situation in the year 1965 when the Congress Government was in power and

மு. ப. 11-30

[Thiru Palanivel Rajan] [1968 மார்ச் 20

when the Army was called in to tackle a situation—which the Police could not tackle—in a number of places like Madurai and Pollachi. So, there is no justification to say that there has been any lack of law and order but on the contrary there has been very able handling of the Department by the Hon. Chief Minister and this has paid this Government rich dividends.

Before concluding, I would like to make one point. I reliably understand—but I am not sure—that a number of officers in the Madras Police have been kept down because they are alleged to have D.M.K. sympathy and also some adverse comments have been made in their personal files. If this happens to be true, the Hon. Chief Minister, while not taking any action against those officers who are allegedly pro-Congress, must show justice to the officers who have been condemned by the previous regime for their political sympathy. If there is any such instance, the Hon. Chief Minister must take steps to set it right and see that justice is done. I support this Demand.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 24 மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எஞ்சியிருக்கும் நேரத்தைப் பங்கீடு செய்து பார்த்ததில், உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உரையாற்றுவதற்கு ஐந்து நிமிட நேரம் கிடைக்கிறது. எனவே, அந்தக் கால வரையறைக்குள் பேசுமாறு நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது திரு. ராமசாமி நாயுடு அவர்கள் பேசலாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஐந்து நிமிடங்களில் பேசிவிடவேண்டும் என்றால், ரொம்பக் கேலிக்கூத்தாக இருக்கும் என்று நினைக்கிறேன். தயவு செய்து, மத்தியானத்திற்குமேல் இரண்டு மணி நேரம் சபையை நடத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போகப் போகப் பார்க்கலாம். தேவைப்பட்டால் மாலையில் கூட நடத்தலாம். இப்பொழுது திரு. ராமசாமி நாயுடு அவர்கள் பேசட்டும்.

***திரு. எஸ். ராமசாமி நாயுடு :** இன்று காவல் துறை சம்பந்தமாக வைத்திருக்கும் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். நிமிஷம் ஐந்தானபடியால் அதிகம் பேசுவதற்கு நேரம் இல்லை. ஏதோ சில சொல்லவேண்டும் என்று எண்ணுகிறேன்.

காவல் துறை கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கப்படுவதை நான் மிகவும் வரவேற்கிறேன். 4 மைல் 5 மைல்களுக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் அமைத்து அங்கே ஒரு காவல் நிலையம் வைப்பது மிகமிக நல்லது. ஏனென்றால், கிராமப்புறங்களில்தான் அதிகமான களவு, சல்லியம் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் அங்கே காவல் நிலையம் ஏற்பட இருப்பதைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். இதில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். காவல் துறை இருக்கும் இடங்களிலும் அந்தத் துறைக்கு உட்பட்ட பெரிய பெரிய ஊர்களிலும் போலீஸ்காரர்களைக் குடியிருக்கும்படி செய்வது மிக நல்லது. குற்றங்களைத் தடுக்கவேண்டும், அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்றால் ஸ்தலத்திலேயே போலீஸ்காரர் இருந்தால்தான் முடியும். எல்லாம் நடந்த பின்னர் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து போலீஸார் ஓடிவருவதை விட அந்தந்த இடத்தில் ஒரு போலீஸ்காரர் இருந்தால்தான் அந்த ஊரில் எவன் சாதாரணமாகப் தப்பு செய்கிறவனோ அவனைக் கண்காணிக்கவும் திடீர் என்று கிளர்ச்சி ஏற்பட்டால் அதைத் தடுக்கவும் அது விஷயமாக போலீஸாருக்கு தகவல் கொடுக்கவும் அந்தப் போலீஸாரால் முடியும். ஆகவே, கிராமப்புறங்களில் இன்றைக்கு இருக்கும்



1968 மார்ச் 20] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

காவல் நிலையத்துக்கு உட்பட்டு எந்தெந்த பெரிய ஊர்கள் இருக்கின்றனவோ, அத்தனை ஊர்களிலும் ஒவ்வொரு ஊருக்கும் போலீஸ்காரர்களை நியமித்தால் குழப்பங்களைத் தடுக்க மிகவும் உபயோகமாக இருக்கும். இது அவசியமாகச் செய்யவேண்டும். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஆட்களை அதிகமாக்கி கிராமப்புறங்களில் அவர்களைத் தங்கும்படி செய்தால்தான் உண்மையாக போலீஸார் தாங்கள் செய்யவேண்டிய வேலையான குற்றத்தடுப்பு வேலையைச் செய்யமுடியும். எங்கெங்கே கலவரங்கள் ஏற்பட்டாலும் உடனடியாக அதை அடக்க முடியும்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கிராமப்புறங்களில் இருக்கும் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி இல்லை. அங்கு ஏதாவது நடந்தால் அவர்கள் அங்கிருந்து சைக்கிளிலோ நடந்தோ தலைமைக் காவல் கூடத்திற்கு சென்று அங்கிருந்து உதவி கிடைக்க நேரமாகி விடுகிறது. ஆகவே, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு தொலைபேசி வசதி கட்டாயமாக செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

கிராமப்புறங்களில் ஏற்படுத்தி இருக்கும் காவல் நிலையங்களுக்கு முதலிடம் கொடுத்து போலீஸ்காரர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் குடி இருக்க வீடு கொடுக்கவேண்டுமென்பது என் வேண்டுகோள். அதையும் அவசியம் செய்து கொடுக்கவேண்டும்.

போலீஸார் சில சமயங்களில் துப்பாக்கியால சுடவேண்டிய அவசியம் ஏற்படுவதைப்பற்றி ஒரு வார்த்தை நான் சொல்ல விரும்புகிறேன். போலீஸார் துப்பாக்கியால் சுடவேண்டிய அவசியம் ஏற்பட்டால் சுடலாம் என்ற நியதியைக் கொடுத்துவிட்டு அப்படி எந்தக் கட்டத்தில் அவர்கள் சுடலாம் என்பது ஒரு நிர்ணயமாக இல்லாத காரணத்தால்—நிர்ணயம் செய்யவும் முடியாது—போலீஸார் சுட்ட பின்னர் சில சமயங்களில் போலீஸாரின் மேலேயே சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நீதி விசாரணைக்கும் ஏற்பாடு செய்வார்கள். போலீஸ் சுட்டது சரியா, தப்பா என்பதை முதலிலேயே போலீஸ் இலாகா மூலமாகவோ அல்லது ரெவின்யூ இலாகா மூலமாகவோ விசாரணை செய்து தெரிந்து கொண்டதற்கு அப்பால் நீதி விசாரணை நடத்தினால்தான் நன்றாக இருக்கும். இங்கு திடீரென்று கலவரங்கள் நடந்து போலீஸாரைத் தாக்கிய சில சம்பவங்கள் காணப்பட்டிருக்கின்றன. அவர்கள் கல்லடி வாங்கும் போதும் கண்ணாடி அடி வாங்கும்போதும் சும்மா இருக்கவேண்டும் என்றும் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வராது என்றும் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. ஆகவே, சில சமயங்களில் அவர்கள் தங்களையே காப்பாற்றிக் கொள்வதற்காக சுடவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதற்காக உடனடியாக நீதி விசாரணை என்று சொல்லி விடக்கூடாது. விசாரிக்காமலே நீதி விசாரணை என்று கூறி நீதி விசாரணை ஏற்படுத்தி விட்டால் நாட்டில் அராஜகம்தான் அதிகமாகிவிடும். எந்தப் போலீஸாராக இருந்தாலும் சரி அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் உயிர் இருப்பதால் அவர்கள் உயிரை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வார்கள். சாதாரண சட்டத்திலே ஒருவன் தன்னைக் கொல்லவந்தால் அவனைக்கொல்லலாம் என்ற நியதி இருப்பதால் போலீஸாருக்கும் அந்த நியதியை நாம் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். குற்றங்கள் நடந்த பின் நடவடிக்கை எடுக்கும் முறை இருப்பதால்தான் போலீஸாருக்கும் இப்போது நிறைய வேலை இருக்கிறது. குற்றங்கள் நடைபெறாமல் முன்கூட்டியே எச்சரிக்கையாக அதைத் தவிர்க்கக்கூடிய முறையில் போலீஸாரை ஊரூராக ஏற்பாடு செய்யவேண்டும்.

சில பெரிய உத்தியோகஸ்தர்கள் சில தவறுகளைச் செய்துவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் ஒரு சூபரின்டெண்டண்ட் இருந்தார். அவர் சின்ன காரியத்தைச் செய்தார். அது சாதாரணமாக எல்லோருடைய மனத்திலும் பரவக்கூடிய காரியம் என்ற முறையிலே நான் முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஓர் ஊரில் ஒரு பஞ்சாயத்து ஆபீஸருக்கும் ஒரு ஹெட் கான்ஸ்டபிளுக்கும் தகராறு நடந்தது. தகராறு நடந்ததன் பேரில் இரண்டு பேரும் கை கலந்தார்கள். அது சம்பந்தமாக கேஸ் விசாரணைக்கு வந்தது. அங்கிருந்த சப்-கலெக்டர்

அந்தக் கேஸை விசாரித்தார். விசாரித்ததில் சாட்சியமாக போடப்பட்டிருந்தவர்களில் இரண்டு மூன்று பேர் போலீஸாருக்கு அனுகூலமாக சாட்சி சொன்னார்கள். ஒருவர் மட்டும் போலீஸாருக்கு சாதகமாகச் சொல்லாமல் விரோதமாக சாட்சி சொன்னார். விரோதமாக சாட்சி சொன்னவரை சாதாரணமாக விட்டுவிடவேண்டும் அல்லது ஏதாவது நியாயமான முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அப்படி இல்லாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இருந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு அந்த ஊரில் ஒரு சின்ன தகராறு ஏற்பட்டது. அந்த நபருக்கும் இன்னொருவருக்கும் ஏற்பட்ட குடும்பத் தகராறிலே அந்த சின்ன கேஸ் போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யப்பட்டது. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட அந்தக் கேஸ் குறித்து விசாரித்த சப்-இன்ஸ்பெக்டர் என்ன சில்லறை விஷயமாக சண்டையிடுகிறீர்களே, சமாதானமாகப் போங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அப்பால் இது அந்த சூபரிண்டெண்டுக்குத் தெரிந்து அவர்கள் உடனே ஃபோன் செய்து அந்த நபரை உடனே அரஸ்ட் செய்து தன்னிடத்தில் கொண்டு வந்து ஆஜர் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். விடுதலை செய்யப்பட்ட அந்த நபர் எங்கோ போய் மறைந்து கொண்டார். அவர் எனக்குப் பக்கத்து ஊர்க்காரர். மேலும் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர் என்னிடம் வந்திருப்பார் என்று என்னை கண்காணித்து வந்தார்கள். அப்படி கண்காணித்து வந்தாலும் பரவாய் இல்லை, நான் சென்ற இடத்திற்கு எல்லாம் வந்துகொண்டிருந்தார்கள். அப்போது நான் காங்கிரஸில் இருந்தவன். ஈ.வி.கே. சம்பத் அவர்கள் வந்திருந்தார்கள். அவருடன் நான் பிரசாரத்திற்காகச் சென்றிருந்தபோது கூட எனக்குப் பின்னாலேயே போலீஸை அனுப்பி வைத்தார்கள். நான் மதுரைக்குச் சென்றிருந்தபோதும் அனுப்பி வைத்தார்கள். அதுமட்டுமல்ல, அப்பால் அந்த நபருக்குச் சொந்தக்காரர்கள் 3 பேர்கள் சினிமா பார்த்துவிட்டு வந்தார்கள், சிவகாசியில் அவர்களைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனில் நிறுத்தி வைத்து, "சூபரிண்டெண்டண்ட் விசாரிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள், இருங்கள்" என்று சொல்லி மறுநாள் சாயங்காலம் வரை நிறுத்தி வைத்துவிட்டு, பிறகு சூபரிண்டெண்ட் வந்து ஒன்றும் செய்யாமல் அவர்கள் மூன்று பேர்களையும் வாடகை கார் வைத்து ஏற்றி சாத்தூரில் ஒருவர், பச்சைகக்காரப்பட்டியில் ஒருவர், விருதுநகரில் ஒருவர் என்று விட்டுவிட்டு மூன்று பேர்கள் பேரிலும் கேஸ் போடுங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். அப்படிச் சொல்லியனுப்பிய நேரத்தில் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ்ப்பட்ட சாத்தூர் ஸ்டேஷனில் அந்த யையனுக்கு ஏதோ வாசனையான பொருளை வாயில் ஊற்றி ஒரு சார்ஜ் ஷீட் போட்டுவிட்டார். நான் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த இந்த அக்கிரமத்தை மேலதிகாரிகளிடத்தில் சொன்னபோது, அந்த மூவரையும் விடுதலை செய்து கேஸ் ஒன்றும் இல்லாமல் செய்துவிட்டார்கள். இந்தமாதிரியான மனப்பான்மை போலீஸ்காரர்களுக்கு இருந்தால் அநீதிதான் நடக்கும். இது நியாயமா, அநியாயமா என்பதை அவர்கள் பார்ப்பதில்லை. இது உண்மையா, வாஸ்தவமா, பொய்யா என்றுகூட ஆராய்ந்து பார்ப்பதில்லை. தனக்குச் சாட்சி சொல்லவில்லையென்ற காரணத்திற்காக இப்படிச் செய்வது எந்தவகையில் நியாயம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான்தான் அந்த நபரை காரிலே வைத்திருக்கிறேன் என்று நினைத்து என் பின்னால் டாக்சி எடுத்துக்கொண்டு வந்தார்கள். தவிர என் சொந்தக்காரர்கள் வீட்டில் எல்லாம் போய் தேடினார்கள். அந்த சூப்பரிண்டெண்ட் அவர்கள் தேர்தல் நேரத்திலே எனக்கு விரோதமாக வாக்களிக்க வேண்டுமென்று தன்னுடைய கீழ்ச் சிப்பந்திகளுக்குச் சொல்லிவந்தார். ஒருவேளை அவர் காங்கிரஸ் சர்க்காரின் ஊழியர் என்ற காரணத்தில் அப்படிச் செய்திருந்தாலும் அது பொருத்தமற்ற செய்கையாகத்தான் படுகிறது. இப்படிப்பட்ட மனப்பான்மையுள்ளவர்கள் போலீஸ் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். போலீஸ்காரர்களுடைய மனப்பான்மை மாறியிருக்கிறதா, அல்லது பழைய மாதிரியேதான் இன்னும் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஒருவேளை ஆட்சியில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறார்களா என்பதைப் புரிந்துக்கொள்வது அவசியம். இதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



போலீஸ் துறையிலே இன்றைக்கு நாய்ப்படை ஒன்று இருக்கிறது. இது மிக நல்ல விதத்திலே பணியாற்றி வருகிறது. ஆனால் சிலவிடங்களில் இந்த நாய்ப் படையின் வேலை பொருத்தமுடையதாக இல்லை. ஒருவன் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த இடத்திற்கு யார் போனாலும், ஒருவேளை நானே போய் அந்தப் பிணத்தைத் தொட்டுவிட்டு வந்தாலும், நாய் இந்த வாசனையை வைத்துக்கொண்டு என்னையும் பிடித்துக்கொள்ளும். உண்மையான கொலையாளி யார் என்று அறிய வாய்ப்பில்லை, சில சமயங்களில் எது உண்மை, எது பொய் என்று அறிய முடிவதில்லை. ஓர் ஊரில் கொலையோ, குற்றமோ நடந்திருந்தால் அந்த நாய் வரும் வரைக்கும் அந்தப் பொருளை யாரும் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது எல்லா இடங்களிலும் பொருந்தி வருமா என்பதைப் பார்க்க வேண்டும். சில சமயங்களில் தப்பான ஆட்களையே இந்த நாய் கெளவிப் பிடிக்கிறது. வெறும் ரத்தவாடையை, வாசனையை வைத்துத்தான் இது குற்றவாளியை மோப்ப சக்தியால் பிடித்துக் தருகிறது. சில சமயங்களில் உண்மைக் குற்றவாளி தப்பிவிடுகிறான். சாதாரணமான நபர்கள் பிடிபட்டு தாங்கள் இழைக்காத குற்றத்திற்காக தண்டனை அடைகிறார்கள். இதுபற்றி நல்ல முறையில் ஆராய்ந்து சில விதிமுறைகளை ஏற்படுத்தினால், இந்த நாய்ப் படை நல்ல முறையில் உதவி செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டங்களிலே பெரிய உத்யோகஸ்தர்கள், மற்றும் சிலர் போலீஸ் படையை பக்கத்தில் வைத்துக்கொண்டு வருவதால் எந்தவிதமான பந்தோபஸ்தும் இல்லை. சில ராஜ்யங்களில் பெரிய பெரிய சம்பவங்கள் எல்லாம் நடந்தபோது, அவற்றை எல்லாம் இந்த போலீசாரால் தடுக்க முடிந்ததா ? அமைச்சர்களின் பின்னாலோ, சர்க்கார் உத்யோகஸ்தர்களின் பின்னாலோ போலீஸ் வந்து கொண்டு இருப்பதால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அமைச்சர்கள் போகும்போது பின்னால் ஒரு பர்லாங் தூரத்தில் போலீஸ் வந்தால் என்ன செய்ய முடியும்? ஆகவே அமைச்சர்கள், மற்றவர்கள் பின்னால் போலீஸ் வருவதைத் தடுக்க வேண்டும். சென்ற ஆட்சியில் யாராவது வந்தால் பத்து பதினைந்து கெஜத்திற்கு போலீஸ்காரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். ஆபத்துக்கு உதவுவதுதான் போலீஸ்காரர்களின் வேலை. போலீஸ்காரர்களை இப்படி வழியில் நிறுத்தி வைப்பதால், சர்க்காருக்குத்தான் செலவு அதிகம். இதனால் ஏதாவது பிரயோஜனம் உண்டா என்பதைப் பார்க்க வேண்டும். உயிரையும் உடைமையும் காப்பாற்றுவதற்காக போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். உடைமையை வேண்டுமானால் திருடப்பட்ட பிறகு, கண்டு பிடித்து திரும்பக்கைப்பற்றலாம். ஆனால் உயிரைக்காப்பாற்றுவதற்கு போலீஸ்காரர்கள் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் பரவலாக பயிர் வைக்கிறார்கள். புன்செய் நிலங்களிலே பத்துவிதமான பயிர்கள் செய்திருக்கிறார்கள் என்றால், ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு நபர் போய் காவல் காக்க முடியாது. அப்படிச் செய்ய வேண்டுமானால் நூறு, இருநூறு பேர்கள் தேவையாக இருக்கும். ஆகவேதான், ஒவ்வொரு கிராமத்திலும் தலையாரி என்று ஒருவரை நியமித்து காவல் காக்க வைத்திருக்கிறார்கள். இப்போது இந்த தலையாரியினுடைய வேலை ஊர் காப்பது அல்ல. கிராமக்கர்ணம், கிராம முன்சீப் இவர்களுக்கு காவல் காத்துக்கொண்டு இருக்கிறான். விவசாயப் பொருள்களைக்காப்பாற்ற ஒரு தலையாரி தேவை என்பதுபோல ஒவ்வொரு கிராமத்திலும் கொலை, குற்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுக்க ஒவ்வொரு போலீஸ்காரரும் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும்.

தற்போது போலீஸ்காரர்கள் எல்லாம் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள். முன்பு போல் அதிகார தோரணையுடன் "டேய்", "வா" "போ" என்று சொல்லாமல் மிகவும் மரியாதையாக நடந்து கொள்கிறார்கள். இதற்காக போலீஸ்துறையினரை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். குற்றங்கள் நடந்த பின்னாலே நீதி விசாரணை செய்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு கொலை நடந்த நேரத்தில் அதை நேரில் பார்த்தவர்கள் பத்து பேர்கள் இருந்தாலும் யாரும் விசாரணை சமயத்தில்

சாட்சி சொல்ல முன் வருவதில்லை. "நமக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு" "நமக்கு ஏன் இந்த வம்பு? என்று இருந்து விடுகிறார்கள். சாட்சி சொன்னால் பின்னால் தொல்லைகள் ஏற்படும் என்று பயப்படுகிறார்கள். ஆகவே "உண்மையாக சாட்சி சொல்பவர்களுக்கு பின்னால் எந்தவிதமான தொல்லைகளும் ஏற்படாது, எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டான்" என்று போலீஸ் தரப்பிலிருந்து உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில சமயங்களில் கொலை நடக்கும்போது, பார்க்காதவர்களைச் சாட்சி போட்டு, நீதி விசாரணை வரும் சமயத்தில் சாட்சிகள் எடுபடாமல் கேஸ்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. குற்றவாளி விடுதலை செய்யப்படுகிறான். "இந்தப் போக்கிரிகளுடைய தொல்லை நமக்கேன்?" என்று கொலையை நேரில் பார்த்தவர்கள் ஒதுங்கி விடுகிறார்கள். எனவே தான்,விசாரணை செய்யும்போது உண்மையான குற்றவாளியை கண்டு பிடிக்காமல் போவதற்கும் வழி ஏற்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் எந்நேரமும் போலீஸ் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்பதற்காகவே ஒவ்வொரு போலீஸ்காரரையும் அந்தக் கிராமத்திலேயே குடியிருக்கச் செய்ய வேண்டும். கிராம மக்களுடைய மனப்பான்மை மாறவேண்டுமானால், "போக்கிரிகளிடமிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்கு போலீஸ் தயாராக இருக்கிறது" என்ற நிலையை முதலில் உருவாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையில் வேலை செய்யும் ஊழியர்களின் வீட்டுப்பெண்களுக்கு ஏதாவது ஒரு கைத்தொழிலை ஏற்படுத்தித்தர வேண்டும். இப்போது சில முக்கியமான நகரங்களில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, பாய் முடைதல், கூடைமுடைதல் போன்ற சிறு தொழில்களில் வேலை கொடுத்து வருகிறார்கள் என்று அறிகிறேன். மதுரை, கமுதி, போன்ற பெரிய இடங்களிலும் உள்ள காவல்துறை ஊழியரின் வீட்டுப்பெண்கள் தங்கள் சமையல் நேரம் போக பாக்கி நேரங்களில் செய்வதற்கேற்ற சிறு தொழில்களைக் கொடுத்து உதவி அவர்களுக்கு, சிறு வருவாயைத் தேடித்தரவேண்டும். தீப்பெட்டித் தொழில் ஒரு சிறந்த தொழில். வீட்டுப்பெண்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் இதைச் செய்து வருவாயைத் தேடிக்கொள்ளலாம். தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இது பெரிதும் உதவிகரமாக இருக்கும். பாய்முடைதல், கூடைமுடைதல் போன்ற தொழில்களைக் காட்டிலும் தீப்பெட்டித் தொழிலினால் வருவாயும்,சிறிது அதிகமாகக் கிடைக்கும். அல்லது சர்க்கார் தீப்பெட்டிச் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, இந்தப் பெண் களுக்கு வேலை வாய்ப்புத்தரலாம். சர்க்கார் நடத்த முடியாத இடங்களில் தனிப்பட்டார் நடத்தும் தீப்பெட்டித் தொழிற்சாலையின அதிபரோடு கலந்து பேசி, காவல்துறை பெண்களுக்கு சில வேலைகளை ஒதுக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ்துறைக்கு ஆள் எடுப்பதிலே சாதாரணமாக, ஆள் சரியாக இருக்கிறாரா, உடல்கட்டு சரியாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்கிறார்களே தவிர, படிப்பு இருக்கிறதா என்று பார்ப்பதில்லை. காவல்துறைக்கு ஆள் எடுக்கும்போதே நன்றாகப்படித்தவர்களாகப் பார்த்து எடுக்க வேண்டும். 7-வது 8-வது வகுப்பு வரையில் படித்து இருந்தால் போலீஸ் வேலைக்கு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ரைட்டராகி, பின் சப்-இன்ஸ்பெக்டர்களாகி, பதவி உயர்வு பெற வழி ஏற்படும். இப்போது பத்தாவது வரையில் படித்தவர்கள் அநேகம்பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பத்தாவது வகுப்பு வரையில் படித்தவர்களை காவல்துறைக்கு எடுப்பது என்று ஒரு திட்டம் வைத்துக்கொண்டால், இந்தத்துறை மிகவும் நல்லமுறையிலே பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நன்றாகப்படித்தவர்களைப் போலீஸ் படையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று போலீஸ் படையில் சப்-இன்ஸ்பெக்டர் ராங்குக்கு மேல் உள்ளவர்களுக்காவது- சப்-இன்ஸ்பெக்டர்களையும் சேர்த்து சட்டக்கல்வி ஓராண்டாவது தனிப்பட்டமுறையில் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அது போலவே தனிப்பட்டமுறையில் துப்புத் துலக்குவது சம்பந்தமான





அறிவை நல்லமுறையில் புகட்டவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு செய்தால்தான் நல்லமுறையில் பிரயோசனப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்கள் இயக்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தித்திணிப்பின் காரணத்தினால் அவர்களிடையே கிளர்ச்சி நடந்தது என்று சொன்னார்கள். கடவுள் செயலால் சென்றமுறை நடந்தது போன்று இல்லாமல் இம்முறை கிளர்ச்சி நல்ல முறையில் தணிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் அவர்களிடையே ஒரு தவறான கருத்து வளர்ந்து வருகிறது. என்னுடைய சகா பழனிவேல்ராஜன் சொன்னது போல மாணவர்கள் பலவிடங்களில் கிளர்ச்சி செய்கிறார்கள், இது உலகக் கிளர்ச்சியாக இருக்கிறது. அதில் ஓர் உண்மை பொதிந்திருக்கிறது. சரித்திரம் படிக்கிறார்கள் இல்லையா? பத்து மாணவர்கள் ரேடியோ நிலையத்தை பிடித்துக்கொள்வது, அமைச்சர்களிடத்தில் உட்கார்வது, ஆட்சியைப் பிடித்துக்கொண்டு அதிகாரம் செய்வது- இப்படி நடப்பதைத் தெரிந்துகொண்டு இங்குள்ள மாணவர்களும் தாங்கள் நினைத்தால் சர்க்காரையே மாற்றி விடமுடியும் என்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் நேர்மையானமுறையில் தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ள கிளர்ச்சி செய்வதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் சர்க்காரையே மாற்றிவிடலாம், சர்க்காரின் கொள்கைப்போக்கை மாற்றிவிடலாம் என்று கருதிச் செயல்படுவதாக இருந்தால் அதை அனுமதிக்க முடியாது, அப்படி எண்ணுவதும் முறையற்றது என்பதை அவர்கள் மனதில் படும்படியாக இந்த அரசு நல்லமுறையில் உணர்த்தியாக வேண்டும். இத்தகைய தீய கருத்து அவர்கள் நெஞ்சில் இழையோடுவதற்கே விடக்கூடாது.

இன்றைக்கு போலீசாருக்கும், பொது மக்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது. போலீசாரைக்கண்டால் துஷ்டர்கள் அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை இன்னும் ஸ்திரப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீசாருடைய வேலை நகரங்களில் மட்டும் இல்லாமல் கிராமத்தில் அதிகமாக இருக்கிறது. கிராமத்தில் உள்ளவர்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றித்தர வேண்டியது போலீசாரின் கடமையாகும். இன்றைக்கு ஒருவன் வேல் கம்பை எடுத்துக்கொண்டு தெருவில் வந்தால் அவனைத்தட்டிக் கேட்பதற்கு எங்களுக்கு நெஞ்சுரம் இல்லை. என்ன செய்துவிடுவானோ என்கிற பயம் ஏற்பட்டு விட்டது. ஊரில் உள்ள நாட்டாண்மைக்காரர்கள் பத்து இருபது வருடங்களுக்கு முன்னால் என்றால் அந்த துஷ்டனைத் கட்டி வைத்து அடிப்பார்கள். தலையாரி இப்படிப்பட்டவர்களிடம் இருந்து கிராம மக்களை காப்பாற்றி வந்தான். இப்போது அப்படி இல்லை. நாட்டாண்மைக்காரர்களுக்கு அதிகாரம் இல்லையோ, மனது இல்லையோ- எப்படியோ கோழைகளாகி விட்டார்கள். ஆகவே துஷ்டர்களை அடக்க போலீசாரால் தான் முடியும் என்கிற நிலைமை வந்து விட்டதனால் அவர்கள் பொறுப்பு அதிகமாகி விட்டது. ஆகவே இந்த நேரத்தில் கிராம மக்களின் உடைமைகளையும் உயிரையும் காப்பாற்றிக்கொடுக்க வேண்டியது போலீசாரின் கடமை என்பதைச் சுட்டிக்காட்டி முதல் அமைச்சர் அவர்களையும், காவல் துறையினரையும் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சுருக்கமாகவும் அவசரமாகவும் பேசி முடித்து விடுகிறேன்.

முதலில் இந்த போலீஸ் இலாக்கா ஊழியர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள். முதலாவதாக காவல்துறையில் பணியாற்றுகிற ஷார்ட்ஹேண்டு ரிப்போர்ட்டர்களுக்கு-சட்டப்பேரவைத்துறை ரிப்போட்டர்கள், ஹைகோர்ட் ரிப்போர்ட்டர்கள் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது. இது பற்றி ஐ. ஜி. அவர்கள் 1966-லேயே சர்க்காருக்குப் பரிந்துரை அனுப்பியிருப்பதாகக் கேள்வி. அதை ஏற்று அவர்களுடைய சம்பளவிகிதத்தை இங்குள்ளவர்களுக்குக் கொடுப்பதுபோல கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து பேட்டா 1¼ ரூபாய் மற்ற இடங்களில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகவும், இங்கு வருகிறவர்களுக்கு 10½ அணா கொடுக்கப்படுவதாகவும் தெரிகிறது.

அருள்கூர்ந்து இவர்களுடைய பேட்டாவை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ரிசர்வ் போலீசில் இருப்பவர்களுக்கு 24 மணி நேர ட்டியூடி என்று இருப்பதாகத் தெரிகிறது. அதைக் கவனித்து எப்படியாவது அவர்களுடைய வேலை நேரத்தைக் குறைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஃபையர் சர்வீசில் உள்ளவர்களுக்கு மற்ற காவல்துறையில் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. ஃபையர் சர்வீசில் உள்ளவர்களுடைய சம்பளத்தையும் மற்றவர்களுக்கு நேராக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்று இருக்கக்கூடிய அரசியல் கொள்கை ரீதியான விஷயத்தைப்பற்றி பேச ஆரம்பிக்கிற போது ஒன்று சொல்ல விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு போய் விட்டது என்று ஒரு சிலர் கூப்பாடு போடுகிறார்கள். இது அரசியல் ரீதியான கூப்பாடு தான். கேரளாவில் 1957-ல் புது மந்திரி சபை பதவிக்கு வந்து ஒருவாரத்திற்குள்ளேயே சட்டம், ஒழுங்கு போய் விட்டது என்று ஸ்ரீமன்நாராயணன் கிளப்பிவிட்டார். அந்த மரபில் இருந்து இன்னும் அந்தக் கட்சிக்காரர்கள் மாறிவிட்டதாகத் தெரியவில்லை. இப்படி சட்டம் ஒழுங்கு போய்விட்டது என்கிற கூப்பாடு எல்லாம் காங்கிரஸ் அல்லாத ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்கிற கெட்ட நோக்கம்—அரசியல் நோக்கம் கொண்டது தான். இதை நாம் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் இதைப்பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் நேற்று இங்கே முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை—அவர்கள் எப்படித் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையே பார்த்து வருகிறார்கள். எப்படியோ எதை சொன்னாலும் அதை அந்தச் சுரண்டும் கும்பல் திரித்தே சொல்லி வருகிறார்கள். குறிப்பாக நேற்று வெளியான "மெயில்", "இந்து" பத்திரிகைகள்—முதல் அமைச்சர் சொன்னதை எப்படிப் பிரசுரித்திருக்கின்றன? தோழமைக்கட்சிகளிடையே பிளவை உண்டுபண்ண முயற்சித்திருக்கிறது என்று பார்த்தால் தெரியும். இதைப் பற்றிக் கூட என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன்.

முன்னால் வெள்ளைக்காரன் காலத்தில் பாரதியார் பாடினார் :

துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்

என்பதாக எல்லாம் பாடினார். இந்த நிலைமை கடந்த 20 ஆண்டுக் காலங்களில் மாற்றப்படவில்லை. இப்போது அந்த நிலை மாற ஆரம்பித்திருக்கிறது. அந்த நிலை மாற வேண்டுமென்றே தான் உண்மையான ஜனநாயக விருப்பம் கொண்டவர்கள் விரும்புகிறார்கள். மக்களும் அதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். முன்னைப்போல போலீசார் எதைச் செய்தாலும் மக்கள் கைகட்டிக் கொண்டிருப்பதில்லை. ஒரு மாணவனைத் தவறாக அடித்துவிட்டால் கொதித்தெழுந்து தட்டிக் கேட்கும் தைரியம் வந்திருக்கிறது. ஒரு தொழிலாளி தாக்கப்பட்டால் தட்டிக் கேட்கும் துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஜனநாயக உணர்ச்சி நாட்டில் வளர்ந்து வருவது நாம் அனைவரும் வரவேற்கத்தக்கது. நம் அனைவருக்கும் அதில் பங்கு இருக்கிறது. காங்கிரஸ்காரர்களுக்கும் பங்கு இருக்கிறது. அடித்து அடித்து இந்த உணர்ச்சியை ஊட்டினார்கள். சிதம்பரநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) என்னை யாரும் குறிக்கிட வேண்டாம். வேண்டுமென்றால் பாயின்ட் ஆப் ஆர்டர் தலைவரிடம் எழுப்புங்கள். சேலம் சிறையில் 20 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பற்றி ஒரு காங்கிரஸ் தலைவராவது ஒரு வார்த்தைகூட அனுதாபம் தெரிவிக்காதவர்கள்—நானும் 25 வருஷகாலமாக அரசியல் வாழ்வில் பார்த்து வருகிறேன்—இன்றைக்கு துப்பாக்கிச் சூடுகள் பற்றிப் பேசும் போது எனக்கே பயமாக—கவலையாக இருக்கிறது. உழைப்பாளர்கள் பக்கத்தில் இருந்து கண்ணீர் வடிப்பதைப் போலப் பேசுகிறார்கள்.





இப்பேர்பட்ட போலி நண்பர்களிடம் இருந்து அவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் பேசும்போது கண்கலங்குவது போலக்கூடத் தோன்றியது. கண்கலக்கம் உண்மையானால் தொழிலாளிகள் பால் ஏற்பட்ட கண்கலக்கம் அல்ல. தேர்தலிலே கிடைத்த தோல்வியின் பால் ஏற்பட்ட கண்கலக்கமாகவே இருக்கும். உழைப்பாளிகள்பால் ஏற்பட்ட பரிவினால் கண்கலங்குவதாக நானா ஒப்புக் கொள்ளவில்லை. அதற்குமேல் நான் அதை அதிகம் விளக்க விரும்பவில்லை.

புதிய உணர்வுகள், எண்ணங்கள் வளர்ந்து இருக்கிற இந்தக் காலத் நண்பகல் 12-00
திலே தொழிலாளியும் பாட்டாளியும், குடியானவனும் அந்த உணர்ச்சிகளுக்கேற்றவாறு பணியாற்றுகின்ற காலத்திலே அப்படிப் பணியாற்றவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்ற காலத்திலே எல்லாம் வளர்ச்சியடைய வேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்ற காலத்திலே வளரவேண்டு மென்று நினைக்கின்ற காலத்திலே நாமும் பங்கு செலுத்தி வளர்ந்திருக்கும். இந்தக் காலத்திலே அதற்குத் தகுந்தவாறு காவல் துறையினர் பணியாற்ற வேண்டும்* வேகமான மாறுதல் வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறினால் தவறாகக் கருதப்பட மாட்டாது என்று நினைக்கிறேன்.

எனக்குப பல தகவல்கள் வந்திருக்கின்றன. கேசவன் என்பவர் சேலம் மாவட்டம் இளம்பள்ளி என்ற ஊரிலே "என்னுடைய மனைவியை குறிப்பிட்ட போலீஸ்காரர்—நம்பர் எல்லாம் சொல்லியிருக்கிறார், அட்டாக் செய்துவிட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார், அந்தத் தகவல் வந்திருக்கிறது. இதைப்பற்றி அவர் மதிப்பிற்குரிய திரு சொக்கலிங்கத்திடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். ஐ. ஜி. அவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள். நேரிலும் கொடுத்திருக்கிறார். துர்பாக்கியமாக அந்த போலீஸ்காரரின் பெயர் என்னுடைய பெயர் ஆக இருக்கிறது. இதைப் பற்றிக் கவனிக்கவேண்டும்.

கண்ணம்மாள் என்ற பெண் "கோயம்புத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் என்னுடைய கணவர் இறந்துவிட்டார்" என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

கன்னியாகுமரியில் டிரான்ஸ்போர்ட்காரர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் தொடர்ந்து விரோதம் நடந்துகொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

அடுத்தபடியாக, கழகத்தாரும் சேர்ந்து கொடுத்த புகாரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கம்பம் புதுப்பட்டியில் தி.மு.க. ஊழியர்களையும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும் சப்-இன்ஸ்பெக்டர் தாக்கியதால் அந்த ஊரே கொதித் தெழுந்து இருப்பது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு இராஜாங்கம் அவர்களுக்குக் கூடத் தெரியும். இன்னும் அது "பெண்டிங்" ஆக இருக்கிறது. "டீப்லி இம்பெடட் வைஸ்" என்று சொல்வார்களே அது தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அந்த குணம் இன்னும் அடிப்படையில் மாறவில்லை என்பதைக் கவலையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடிப்படையில் இன்னும் மாறுதல் ஏற்படவில்லை. அதை மாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணம் இருக்கிறது என்பதில் ஐயப்பாடு இல்லை. நமக்கு ஒரு அளவுகோலும் வேறு ஒரு ராஜ்யத்திற்கு ஒரு அளவுகோலும் வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இந்த அமைச்சரவை வந்த பிறகும் அது மாறவில்லை. மற்ற இடங்களிலும் அப்படித்தான் மாறாத நிலைமை இருக்கிறது. என்னுடைய சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். கேரளாவைப்பற்றி எனக்குத் தெரியும். மூணாறு தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். ஆகவே அரசு வந்து அமைச்சு மாறிவிட்ட போதிலும் அந்தப் போக்கில் மாறுதல் இல்லை. அடக்குமுறைகளைக் கையாள்கிறார்கள், முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறார்கள், இது தான் திரும்பத் திரும்ப நடந்து வருகிற உண்மையாக இருக்கிறது. அவர்கள் சொல்வதை அரசு கேட்டுக்கொள்ளக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது. துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் இரண்டு மூன்று நடந்திருக்கின்றன. பூந்தாழங்குடியில் நடந்திருக்கிறது, "விம்கோ"வில் நடந்திருக்கிறது, அரவங்காட்டில் நடந்திருக்கிறது. நான்கு பேர்கள் உயிரிழந்தார்கள், 140 பேர்

கள் காயம் பட்டிருக்கிறார்கள் என்று தகவல் இருக்கிறது. இவற்றிலே அரவங்காட்டில் நடந்ததைப் பற்றி மாத்திரம் நல்ல வேளையாக முதலமைச்சர் அவர்கள் அதை நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பியிருக்கிறார்கள். எதற்காக நீதி விசாரணைக்கு அனுப்பப்படுகிறது என்றால் நீதிபதிகள் எல்லோரும் சரியாகத் தீர்ப்புக் கொடுத்து விடுவார்கள், அனைத்தையும் சரியாகச் செய்து விடலாம் என்று அல்ல; நீதி மன்ற விசாரணைக்கு அனுப்புவது என்று இருந்தால் அதன் பயத்தால் காவல் துறையினர் சரியாக நடப்பார்கள். அப்படியில்லாமல் இருக்குமானால் சென்ற போக்கிலேயே தான் அவர்கள் செல்வார்கள், போன போக்கிலேயேதான் போகும். ஆகவே ஒவ்வொரு தடவையும் அடிதடி அல்லது துப்பாக்கிச் சூடு ஏற்படுமானால் ஒவ்வொரு தடவையும் நீதி விசாரணைக்கு அனுப்புவது நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரவங்காடு போலீஸ் ஸ்டேஷனில் ஒருவரை அடித்ததின் விளைவாகத் தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அதற்கு மேல் நான் போகவில்லை. பூந்தாழங்குடியில் நடந்த தானாலும் சரி, கிம்கோவில் நடந்த தானாலும் சரி, நடந்த துப்பாக்கிச்சூடு, அதற்கு வேண்டிய அவசியமில்லை என்பது தான் என்னுடைய அழுத்தமான கருத்து. இருந்தாலும் இவை ஏற்படுகின்றன என்றால் இவை ஒரு பழக்கத்திலே ஒரு போக்கிலே இருந்துகொண்டிருப்பதால் இப்படி ஏற்படுகின்றன. அதைத் திருத்த வேண்டுமென்றால் கடுமையான முயற்சி இருந்துகொண்டேயிருக்க வேண்டும் என்பதை நான் வினய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். "வெப்பன் ஆப் டொர்" என்ற பாதையை ஏற்படுத்துவதற்கு ஒரு கருவியாகக் காவல் துறையினர் இருப்பது கூடாது. வழக்குகள் போடுவது, 20 நாட்கள், 30 நாட்கள், மூன்று மாதங்கள் நான்கு மாதங்கள் என்று "கண்டிஷன் பெயில்" என்று வேறு ஊரில் வைப்பது இருக்கிறது. விவசாயக் கூலிக்காரன் சேரியிலே தான் இருப்பான். அவனை மன்னார்குடியிலே இருக்க வேண்டும், இவ்வளவு காலம் இருக்க வேண்டுமென்று சொல்வதால் அவனிடம் இருக்கின்ற தைரியத்தை ஆண்மையை துணிச்சலை முறிக்க முயற்சியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) பெரிய ஆட்கள் அப்படிச் செய்யலாம். ஜி. கிருஷ்ணன் செய்தார், அவரை கண்டிஷண்டு பெயிலில் போட்டு உதகமண்டலத்திற்கு அனுப்பலாம். ஆனால், கூலிக்காரனை அப்படி யெல்லாம் செய்தால் அவன் என்ன செய்ய முடியும்? ஜாமீன் வழக்குகள் தொடுத்து ஏதோ நான்கு ஐந்து ஊர்களுக்கு இழுத்தடித்தால் அவன் சரியாகிவிடுவான் என்பது போலீசாருடைய கொள்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொள்கைகள் இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இருபது இருபத்தைந்து வருஷங்களுக்கு மேல் சர்வீஸ் செய்த காவல் துறையினர் அவர்களாக விரும்பினால் கிராஜுட்டி கொடுத்து ஓய்வு கொடுத்தனுப்புவது நலமாக இருக்கும். பழைய கூட்டம் போனால், புதிய ரத்தம் வந்தால் ஜனநாயக வாடை வர வர அவர்கள் அதிகமாக வந்துகொண்டிருந்தால் தான் நல்லது. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்குப் பென்ஷனைக் கொடுப்பதைக் காட்டிலும் கிராஜுவட்டி கொடுத்து விட்டால் அவர்கள் போவதற்குத் தயாராக இருப்பார்கள். 1950–51 இல் ஒரு உத்தரவு இருந்தது. இருபது வருஷம் சர்வீஸ் ஆனவர்களுக்கு பேரேடு இல்லை என்று இருந்தது. ஏனென்றால் அப்பொழுது அவர்கள் 45 வயதிற்கு வந்துவிடுகிறார்கள் அவர்களால் முடியாது என்பதால் அப்படியிருந்தது என்று நினைக்கிறேன். இப்பொழுது மாறியிருக்கிறது, எப்பொழுது மாறியது என்று தெரியவில்லை. ஆகவே ஓய்விற்குப் பக்கத்தில் வருபவர்களை எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதால் 20 வருஷம் சர்வீஸ் ஆனவர்களுக்குப் பேரேடுக்கு போக வேண்டிய தேவையில்லை என்று ஆக்க வேண்டும்.

மதுவிலக்குப் பற்றிக் கடைசியாகக் குறிப்பிட விரும்புகிறேன். உலகத்திலே எந்த நாட்டிலுமே இது வெற்றி பெறவில்லை. அது கிழக்காக இருந்தாலும் சரி, மேற்காக இருந்தாலும் சரி, சட்ட ரீதியாக வெற்றி பெறவில்லை, இந்த நாட்டிலும் மதுவிலக்கு வெற்றிபெறவில்லை. இந்த நாடு மகரிஷிகள் வாழ்ந்த் நாடு கங்கை காவேரி பாயும் நாடு அது நிறைவேறும் என்று நினைத்தால் அது தப்பு. இங்கேயும் அது வெற்றி





பெறவில்லை. நான் எல்லா சிறைச்சாலைகளிலும் இருந்து இருக்கிறேன். மதுரை முதல் சென்னை வரை பார்வையாளனாக இல்லை—கைதியாக இருந்திருக்கிறேன். அங்கே இருந்தவர்களைப் பார்த்தால் திருட்டுக் குற்றம் மற்றக் குற்றங்களைச் செய்தவர்களைக் காட்டிலும் சாராயக் கேஸ்களில் பிடிபட்டவர்கள் தான் பல மடங்கு அதிகமாக இருக்கிறார்கள். உண்மையா இல்லையா என்பது வேறு. அது வழக்கமாக இருக்கிறது. போலீஸார் தங்களிடமுள்ள அதிகாரத்தைத் துர்விநியோகம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது என்பதைக் கட்டாயமாகச் சொல்கிறேன். இதை உள் தகவல் என்று சொல்லலாம். ஆனாலும் சொல்ல முடியாது. வெளியே வந்த தகவல் தான். கட்டாயமாக சாராய பாட்டில்கள் போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கின்றன. அதை வைத்துக் கொண்டு அப்பாவிகளை யெல்லாம் குற்றவாளிகளாகச் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. நாமாக இது நடக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. இந்த ஆட்சியின் நல்ல பெயருக்கு இது நல்ல தல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். இந்தப் புதிய காலத்தில் புதிய உணர்வுகள், உணர்ச்சிகள், எண்ணங்கள் ஏற்படுகின்றன. இதை அங்கீகரிக்கக்கூடிய முறையிலே கூட்டம் கூடும் உரிமை, சங்கம் சேரும் உரிமை, கிளர்ச்சி செய்யும் உரிமை இப்படிப்பட்ட உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடாது. சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. அரசியலமைப்பிலே அவை பாதுகாக்கப்பட வேண்டியவை தான். ஆனால் காவல் துறையினரின் போக்கு உடைமையாளர் வர்க்கத்திற்குச் சாதகமாகவும் உழைக்கும் வர்க்கத்திற்கு விரோதமாகவும் இருக்கிறது. எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைத்தான் இருக்கிறது. இந்த நிலையை நாம் மாற்றவில்லை. கேரளாவிலும் இந்த நிலைமை மாறவில்லை, இங்கும் மாறவில்லை. அது இருக்கிறது என்பதை மனத்தில் கொண்டால் தன்னிச்சைப்படி செயல்படாமல் தடுக்க ஒரு கவலை இருக்கும். முதலமைச்சர் அவர்கள் இதை கவனிக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த எண்ணத்தோடு அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்காவது துப்பாக்கிச்சூடு ஏற்பட்டால் நீதி விசாரணை நடத்த வேண்டும். அதன் போக்கு அப்படித் தான் இருக்கும் என்று கணக்கிட்டு தன்னிச்சையாக நடக்காமல் அதைக் கட்டுப்படுத்தி எந்த வகையில் நடக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த வகையிலே நடத்துவதற்கு முயற்சி செய்ய முடியும். அந்த வகையிலே செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள காவல் துறை மானியத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் இங்கே இரண்டு முக்கியமான விஷயங்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, இந்த மாநிலத்திலே சட்டம் அமைதி ஓராண்டுக் காலமாக நிலைபெறவில்லை என்று கூறுகின்ற கருத்தைப் பற்றியும், இரண்டாவதாக மதுவிலக்கைப் பற்றியும் கூற விரும்புகிறேன்.

இன்று ஆட்சியிலே இருப்பவர்கள் வந்து ஓராண்டுக்கு மேலாகிறது. இந்த ஓராண்டுக் காலத்தில் எல்லாம் சரியாக இருக்கிறது, எங்குமே அமைதி நிலவுகிறது. சமாதானம் நிலவுகிறது என்று நானும் சொல்ல மாட்டேன், முதலமைச்சர் அவர்களும் சொல்ல மாட்டார்கள். ஆனால், ஓராண்டுக் காலத்தை கடந்த 20 ஆண்டுக் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஓராண்டுக் காலத்தில் நாட்டின் அமைதியானது நியாயமான ஒரு சர்க்காரால் எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட முடியுமோ, ஒரு திறமையான சர்க்காரால் எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட வேண்டுமோ அந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டு வருகிறது என்பதில் சிறிதும் ஐயப்பாடு இல்லை. அதற்கு அடிப்படைக் காரணம், முன்பு இருந்த ஆட்சியினரை விட இப்போது ஆட்சியை நடத்துகிறவர்கள் சாதாரண பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பது தான். முன்பு, மக்களோடு நெருங்கிய தொடர்பற்ற

தொடர்பை இழந்த, தொடர்பிலே அக்கறையற்ற கட்சி ஆட்சியில் இருந்ததால் அந்தக் குறைபாடு அவர்களுக்கு அடிக்கடி ஏற்பட்டு வந்தது. இரண்டாவதாக, இப்போதுள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், தொழிற்சங்க இயக்கத் தலைவர்கள், பலவேறு நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு கூட்டணி அமைத்து, அந்தக் கூட்டணியைக் காப்பாற்றுவதிலே அக்கறை காட்டக் கூடியவர்கள். அவர்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்று, தங்களுடைய நட்பையும் கொடுத்து முடிந்த வரை கூட்டணியைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்வதன் காரணமாக, இந்த அளவுக்கு நாட்டில் அமைதி நிலவி வருகிறது. கூட்டணித் தோழமையை மேலும் மேலும் உறுதியாகக் காப்பாற்றிக் கொண்டு, அதன் மூலம் நாட்டில் அமைதி நிலவுவதற்கு ஆட்சியிலிருப்போர் முயல வேண்டும்.

1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது நாடு முழுவதும் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களை நாம் அறிவோம். இராணுவமே தருவிக்கப்பட்டது. அப்போது முதலமைச்சராக இருந்தவருடைய ஆயுள் நீடிக்குமாறு கோயில்களில் பிரார்த்தனை செய்யும்படியாக ஆளும் கட்சி தீர்மானம் போட்டது நினைவில் இருக்கிறது. "அவாளுக்கு இவாள்" பரவாயில்லை, நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். முன்பு இராமநாதபுரத்தில்—முதுகளத்தூர் பகுதியில் நடந்த ஒரு மாபெரும் கலகத்தைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. இந்தியா முழுவதும் அதைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. நடுநிலைமை உள்ளத்தோடு, தமிழ்நாட்டில் தமிழரிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்று நானும் தலையிட்டு, நீதிபதியை நியமித்து, அந்தக் கலவரம் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று கோரியபோது, இறுதிவரை உறுதியாக நீதிபதி விசாரணை மறுக்கப்பட்டது. அதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, இப்போது இருக்கும் ஆட்சியாளர்கள் முன் நிலைமையை மாற்றுவதற்காக எடுத்துக் கொண்டு வருகிற முயற்சியும், சட்டமும் ஒழுங்கும் காப்பாற்றப் புடுவதற்காக எடுத்துக் கொள்ளுகின்ற நல்ல முயற்சியும் எஞ்சியிருக்கும் ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்படுமானால், ஐந்து ஆண்டுகள் கழித்து மக்களை அணுகுகிறபோது வரவேற்கத் தக்க ஆட்சி என்ற நிலை ஏற்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளை மறந்துவிடவில்லை. அவை தவிர்க்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்ற இடம், பின்னணி ஆகியவற்றை நினைவில் வைத்துப் பார்த்து விமர்சிக்க வேண்டும். தி.மு.க. ஆட்சியிலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன என்று பார்த்தால் அது குற்றமாகத் தான் தோன்றும். ஆனால், அவ்வாறு கூறுவது பாமரத் தன்மை வாய்ந்தது. அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட அரசியல் தெளிவுள்ளவர்கள் அந்த முடிவுக்கு வந்துவிடக் கூடாது. தேசபக்தி நிறைந்த நெஞ்சத்தோடு, நாட்டு மக்கள் நலனில் நாட்டம் கொண்டவர்கள் அப்படிப்பட்ட முடிவுக்கு வரக்கூடாது. ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நீலகிரியை அடுத்தாற் போலுள்ள அரவங்காடு என்ற பகுதியில் நடந்திருக்கிறது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அடிப்படை ஆதாரம் போலீஸ் மீது மக்களுக்கு எழுந்த ஐயப்பாடு தான். போலீஸ் காவல் நிலையத்திற்கு ஒருவர் கொண்டு செல்லப் பட்டால் அவர் அபாயகரமான நிலைமைக்கு உள்ளாவார்கள் என்று 20 ஆண்டுகாலமாக நின்று நிலைத்து விட்டுள்ள அவநம்பிக்கையின் எதிரொலி தான் அந்த நிகழ்ச்சி. போலீசார் ஒருவரைக் கொண்டு போனால், ஏதாவது செய்து விடுவார்கள் என்ற அவநம்பிக்கையின் விளைவாகத் தான் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு வருத்தம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், மக்களிடமிருந்து கோரிக்கை வருவதற்கு முன்னாலேயே நீதி விசாரணைக்கும் ஏற்பாடு செய்து விட்டார்கள்.





எஞ்சியுள்ள இரண்டு இடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களைப் பொருத்தவரை, அச்சம்பவங்களை விவரமாகக் கூறும் வகையில் அதிலே ஞானமோ, தெளிவோ எனக்குக் கிடையாது. ஆனால், இந்த இரண்டின் தன்மையும் வேறுபட்டவை. ஒன்று உழவர் பிரச்சினை, இன்னொன்று தொழிலாளர் பிரச்சினை. உழவர் பிரச்சினையிலும், தொழிலாளர் பிரச்சினையிலும், இப்போதுள்ள அமைதியின்மை, உள்ளூர இருந்து வருகிற வர்க்க ரீதியான பகை உணர்ச்சி நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தில் ஊறிக் கிடக்கிறது. அமைச்சரவை மாறிவிட்டால் இந்த நிலைமைகள் எல்லாம் மாறிவிடும் என்று நினைக்கும் அளவுக்கு அரசியல் ஞானம் அற்றவர்களல்ல, நாம். தொழிலாளர் பிரச்சினை, உழவர்கள் பிரச்சினை, ஆகியவற்றைப் பொருத்தவரை பொருளாதார அடிப்படையில் அணுகி, சரியான அடித்தளங்களை அமைத்து பொருளாதார ஏற்றத் தாழ்வை நீக்குவதில் வெற்றி கண்டாலொழிய, மீண்டும் மீண்டும் பூந்தாழங்குடிகளும், திருவொற்றியூர்களும் ஏற்படாத நிலையை உருவாக்க முடியாது. இந்த இரண்டு இடங்களைப் பொருத்தவரை கூட, தொழிற்சங்க இயக்கத் தலைவர்களோடு இன்றுள்ள ஆட்சியாளர்கள் நெருங்கித் தொடர்பு கொண்டு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசினரால் முடிந்தது. கடந்த 20 ஆண்டுகாலமாக நாம் போற்றும் காந்தியடிகள் கற்றுக்கொடுத்த அடிப்படையில் ஏற்கெனவே இருந்த ஆட்சியினர் நல்ல அடித்தளத்தை அமைத்திருந்தால், அதனைத் தொடர்ந்து செல்ல இந்த ஆட்சிக்கு வாய்ப்புக் கிடைத்திருக்க முடியும். இந்த மூன்று துப்பாக்கிப் பிரயோகங்களுமே தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். இனிமேலாவது துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் வழிவகை காணவேண்டும்.

மாணவர்கள் கிளர்ச்சியைப் பார்க்கிறோம். அது திடீரென்று 1967-ல தோன்றியதல்ல; விட்ட குறை, தொட்ட குறை. 1965-ல துவக்கி வைக்கப்பட்டு இன்று பாராளுமன்றத்தில் ஆட்சி மொழித் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக அராஜகங்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "என் பெண்டு பொல்லாதது, உங்கள் பிள்ளையை அடக்கி வையுங்கள்" என்று. டில்லி ஆட்சி தன் மனம் போன போக்கில் எதையாவது செய்து கொண்டிருக்கும். இந்தி மொழியைத் திணித்துக் கொண்டிருக்கும். "ஜாக்கிரதை, உங்கள் பிள்ளைகளை அடக்கி வையுங்கள், மாணவர்கள் கிளர்ச்சியை அடக்கி வையுங்கள்" என்று கூறுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். எனக்கு முன் பேசிய மாண்புமிகு திரு. பழனிவேல் ராசன் அவர்கள் இந்தோனேஷியாவிலும் பிற நாடுகளிலும் மாணவர்கள் கிளர்ச்சி இருப்பதாகச் சொன்னார்கள்.

இந்தோனேஷியா போன்ற பிற நாடுகளில் என்ன நடந்தாலும் சரி; நம்முடைய தமிழ்நாட்டைப் பொருத்தவரை, இது தமிழ்நாடு என்ற நிலையோடு மாணவர்கள் செயல்படவேண்டும்.

நன்றுற்ற ஞான்றுந் தவறுலன் டவரவா
பண்பறிந் தாறருக் கடை

என்றார் வள்ளுவர்.

நம்முடைய மாணவர்கள், நாம் தமிழ்நாட்டார்; வள்ளுவர் பிறந்த நாட்டார்; காந்தி பிறந்த நாட்டார் என்ற அடிப்படையில், பின்னணியில், கிளர்ச்சிகளை அமைத்துக்கொள்ளவேண்டும். மாணவர்கள் மொழிப் பிரச்சினையில் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். ஆனால், கிளர்ச்சிகளை மேற்கொள்ளக்கூடாது. கிளர்ச்சிகளை மற்றக் கட்சிகளிடமும், தலைவர்களிடமும் விட்டுவிட வேண்டும்.

இந்திப் படங்களை எதிர்த்து மறியல் செய்கிறார்கள். அதைக் குற்றம் என்று கூறமாட்டேன். ஆனால் அதிலே ஒரு சிறு குறை கலந்திருக்கிறது என்று உறுதியாகக் கூறுவேன். ஆங்கில ஆட்சிக்கு எதிராக அன்று ஆங்கில மொழியை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். இப்போது ஆங்கிலத்தை ஆதரிப்பவர்கள் கூட அன்று ஆங்கிலத்தை எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். அந்த வகையில்தான் தேசியக்கல்லூரிகளும், ஆதாரக் கல்வித் திட்டங்களும் ஆங்கிலக் கல்வி முறைக்கு எதிராகத் தயாரிக்கப்

பட்டன. அந்தக் காலத்தில் கூட ஆங்கிலப் படம் காட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை. ஆங்கிலப் படங்கள் காட்டப்பட்ட கொட்டகைகள் பகிஷ்கரிக்கப்படவில்லை. அந்த வகையில் இன்றும் இந்திப் படங்கள் காட்டுவதைத் தடுக்கவேண்டிய அவசியம் இல்லை. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முதல்வரும் ஒன்றுபட்டு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதனால் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே வளர்ந்து வருகிற ஒரு பூசலானது எதிர் காலத்தில் எங்கு போய் முடியுமோ என்று என்னைப் போன்று நடு நிலைமையில் இருப்பவர்கள் கவலைப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. விரைவில் இதைத் தவிர்க்க ஆளும் கட்சித் தலைவர்களும், எதிர்க் கட்சித் தலைவர்களும் சந்தித்துப் பேசி முடிவுக்கு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரு கட்சிகளுக்கும் இடையே கெடுபிடிப் போராட்டம் நடந்து அது நாட்டின் அமைதியைக் குலைப்பதாகிவிடக் கூடாது என்பதிலே எல்லோருக்கும் அக்கறை உண்டு. சில பத்திரிகைகளிலே எழுதப்பட்டு வருவதையும், மேடைகளிலே பேசப்பட்டு வருவதையும் இங்கே எடுத்துச் சொல்லுவது முறையாகாது என்று கருதுகிறேன். "கலகம் செய்தாலும் ஆட்சியைக் கவிழ்ப்போம்" என்று பத்திரிகைகளில் எழுதியும், மேடைகளில் பேசியும் வருகிறார்கள். இங்கு எனக்குக் காந்தியடிகள் தான் நினைவுக்கு வருகிறார்கள்.

சுதந்திரப் போராட்டம் நடந்துகொண்டிருந்த காலத்தில், பலாத்காரத்தால், அராஜகத்தால் ஆட்சியைக் கவிழ்த்து சுதந்திரம் பெற காங்கிரஸ் விரும்பினால், அதைக் கடைப்பிடிக்க நான் தயாராயில்லை, அன்பு வழியில், அற வழியில் பெற ஆயிரம் ஆண்டுகளானாலும் அது வரை பொறுத்திருக்க நான் தயாராயிருக்கிறேன் என்று கூறினார் காந்தி அடிகள். ஆகவே, காந்தி வழி வந்துள்ள காங்கிரஸ் நண்பர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், ஆட்சியை மாற்ற முயல்வது அல்லது ஆட்சியை மீண்டும் எடுக்க முயல்வது என்பது ஜனநாயகத்தில் பிழை அல்ல. அதே நேரத்தில் முற்றிலும் அன்னியனான ஆங்கிலேயன் ஆட்சியில் இருந்து விடுபெறக் கடைப்பிடித்த அறவழிக்கு மாறுபட்ட வழியில் நம்மவர் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்வது சரியல்ல. அறவழியில் நின்று ஆயிரம் ஆண்டுகளானாலும் சரி; அறவழியிலேதான் சுதந்திரம் பெற வேண்டுமென்று சொன்ன காந்தி அடிகளின் வழி வந்தவர்கள் "கலகத்தைக் கைக்கொண்டாவது ஆட்சியை மாற்றிவிடுவோம்" என்று பெரியவர்கள் அல்ல, சிறியவர்கள்—பேசுவது நாட்டில் சிறிய அளவிற்காவது குழப்பத்தை ஏற்படுத்தி பெரியவர்களையும் இழுக்கும் அபாயம் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். மாணவர்கள் கிளர்ச்சியில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சுமுகமான பேச்சு வார்த்தை நடத்தி இந்த மொழிப் பிரச்னைக்கு நல்லதொரு முடிவு காண வேண்டும். மதிப்பிற்குரிய காமராஜர் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் சந்தித்துவிட்ட அறிக்கையும், ராஜாஜி அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் சந்தித்து விட்ட அறிக்கையும் வரவேற்கத்தக்கன, அவற்றை வரவேற்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு என் கவனத்திற்கு வருகிறது. மதுவிலக்கு என்று எடுக்கிறபோது அதில் எவ்வளவு கஷ்டங்கள் உண்டோ, எவ்வளவு நஷ்டங்கள் உண்டோ அவற்றிற்கு இரையான ஒரு வட்டாரத்தில் இருந்து வந்தவன் என்ற உணர்வை நான் மறந்து விடுவதற்கில்லை. இந்த மதுவிலக்குச் சட்டம், ஏதோ பார்லிமெண்டரி முறையில் திடீரென்று வந்ததல்ல. அரை நூற்றாண்டுப் போராட்டத்தின் எதிரொலியாக, கள்ளுக் கடைகளில் தொண்டர்கள் பலர் உள்ளே அடைத்து வைத்து, அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு, பலர் பலவிதத் தியாகங்கள் புரிந்து அப்படிப் பட்டதொரு பெரும் தியாகத்தின் பின்னணியாகத்தான் இந்த மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் தோற்றுப் போய்விட்டது என்று கூறுவதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ஆந்திரவில், மைசூரில், கேரளாவில் இச் சட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. புதுவையில்



அது துவங்கவேயில்லை. நம் மாநிலத்தைக் கள்ளுக் கடைகளும், சாராயக் கடைகளும் "கரோ" முற்றுகை போட்டிருக்கிறது. இந்நிலையில் தமிழக முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் இருந்தும் கூட காந்திஜி அவர்கள் தோற்றுவித்த கொள்கையைத் தொடர்ந்து அமுல் படுத்துவேன் என்று ஆட்டம் அசைவு இல்லாது, ஆட்டம் அசைவு கொண்ட பாரம்பரியத்தினருக்கு ஒரு பாடம் போதிக்கும் வகையில்—நம் நாட்டின் பண்பை எதிரொலிக்கும் வகையில் பணியாற்றி வருகிறார்கள். குடிப்பது குற்றம் என்று சொல்லியிருக்கிறார்கள். திருவள்ளுவர், பிறர்மனை நயவாமை, புலால் உண்ணாமை இவை அறத்துப் பாலில் தனிப்பட்டவர்களுக்கு உள்ள உபதேசம் என்று வைத்தார். ஆனால், "கள் உண்ணாமையை" அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசின்பால் உள்ள பொறுப்பாக வைத்துக்கூறியிருக்கிறார் திருவள்ளுவர். இப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் கூறியுள்ளதை இன்று இந்த அரசு அமுல்படுத்துவதை நான் வரவேற்கிறேன் வாழ்த்துகிறேன். இந்த மதுவிலக்குச் சட்டம் 1948-ல் முழுமையாக அமுலுக்கு வந்தது. 1948-க்கு முன்னே பத்து ஆண்டுகளிலும் 1948-க்குப் பின்னே பத்து ஆண்டுகளிலும் இந்த நாட்டில் பஸ் போக்குவரத்து எந்த அளவிற்கு பயன்படுத்தப்பட்டது; 1948-க்கு முன்னே பத்தாண்டுகளிலும் பின்னே பத்தாண்டுகளிலும் எந்த அளவிற்கு திரைப்படத் தொழில் கிராமங்களை அணுகியது; 1948-க்கு முன்னே பத்து ஆண்டுகளிலும் பின்னே பத்து ஆண்டுகளிலும் ஹோட்டல்கள் எந்த அளவில் கிராமங்களை அணுகின; 1948-க்கு முன்னே பத்து ஆண்டுகளிலும் பின்னே பத்து ஆண்டுகளிலும் கிராமங்களில் எந்த அளவிற்கு பொதுக் கூட்டங்கள் கூடின; எந்த அளவிற்கு அந்த மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது—என்பதையெல்லாம் ஆய்ந்து தெளிந்து ஒரு அறிக்கை தயாரித்தால், இந்த மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெற்றிருக்கிறது, சமுதாயத்தில் ஒரு சீர்திருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர முடியும்.

மதுவிலக்கை அமல்படுத்துவதில் அல்லது அதை போலீஸ் கையில் ஒப்படைத்திருப்பதில் ஒழுங்கு இல்லை என்ற கருத்து நிலவி வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகமாகிவிட்டது என்று கூறப்படுகிறது. மனோபாவ தத்துவப்படி எது இரகசியமாக நடக்கிறதோ அதற்கு அதிகப்படியான விளம்பரம் கிடைப்பது இயற்கை. கள்ளச் சாராயம் காய்ச்சுதல் இரகசியமாக நடப்பதால் அதற்கு விளம்பரம் அதிகமாகிறது. மதுவிலக்குச் சட்டத்தினால் ஏழைகள் உண்ணக் கூடிய கள், சாராயம் இவற்றின் உற்பத்தி தவிர்க்கப்பட்டு விட்டது. அதே நேரத்தில் அயல் நாட்டு மது வகைகளான ஒயின், விஸ்கி போன்ற, உயர்தரக் கல்வி கற்றவர்கள்—சாமான்ய தமிழ் படித்தவர்கள் அல்ல—பட்டதாரிகள், பணக்காரர்கள், பெரிய முதலாளிகள் போன்றவர்கள் உபயோகிக்கக்கூடிய பானம் இறக்குமதி நடந்து கொண்டிருக்கிறது. இவைகளைக் குடிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. சமீபத்தில் சிலர் வார்னிஷ் குடித்து இறந்து போனது நினைவில் இருக்கும். நான் அப்போது ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த போது ஒரு டாக்டர் ஒரு அம்மாளைச் சுட்டிக் காட்டி, "அவர்களுக்குக் கொஞ்சம் அறிவுரை சொல்லிவிட்டுப் போங்கள், பெண்களும் குடிக்கிறார்களே", என்றார்கள். நான் அந்த நோயாளியை அணுகி "தாய்க் குலத்தில் வந்த நீங்கள் ஏன் இதற்கு இரையானீர்கள்?" என்று கேட்டேன். அவர்கள் கண்ணீரோடு சொன்னார்கள், சத்தியமாகச் சொல்கிறேன் இங்கு—"நான் என்ன செய்வது, பிணியால் உடம்பு கெட்டு விட்டது, சிறிது குடித்தால் சரியாகிவிடும் என்று குடிக்கலாம் என்றால், அது கிடைப்பதில்லை, பணக்காரர்களுக்குத் தான் கிடைக்கிறது. ஆகவே, நான் இந்த விஷத்தைக் குடிக்க வேண்டி வந்தது" என்றார்.

ஆக, கல்வி அறிவில்லாத, பழக்க வழக்கங்களுக்கு எளிதில் அடிமையாகும் இவர்கள்தான் இப்படிப்பட்டவைகளைக் குடிக்கிறார்கள். உயர் நிலையில் வாழ்பவர்கள் லைசென்ஸ் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் லைசென்ஸ் என்று சொல்கிறார்கள். சட்டம் சொல்கிற வயதிற்கு மேலேயுள்ளவர்களுக்கும் பெர்மிட் இருக்கிறது. நோயாளிகளுக்குக் கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது.

ஆனால் நோயே இல்லாதவர்கள் இதைக் குடித்துவிட்டு நோய் வருவதைப் பார்க்கிறோம். இது இல்லாமல் இறந்துவிடக் கூடாது என்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இதைக் குடித்துவிட்டு நோய்வாய்ப்பட்டு இறப்பதைப் பார்க்கிறோம். ஆகவே நூற்றுக்கு நூறு விதிவிலக்கே இல்லாத முறையில் இந்த பெர்மிட் முறையை ரத்து செய்ய வேண்டும். அந்த விதத்தில் இதில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். "பணக்காரர்கள்தானே குடிக்கிறார்கள், அவர்கள் குடித்துக் கெட்டால் என்ன" என்று கூறலாம். ஏழை பணக்காரர் என்பதல்ல பிரச்னை. சட்டத்தின் முன்னர் எல்லோரும் சமம். அந்நாடு உயர்நிலையில் இருப்பவர்களுக்குத்தான் இந்த பெர்மிட் கிடைக்கிறது. கேட்டால் ஏழைக்கும் கொடுக்கப்படும் என்று சொல்வார்கள். ஆனால் அவர்களால் அதை வாங்க முடியுமா? ஆக யாருக்குமே இந்த சேவை அனுமதி வேண்டாம். அதை ரத்து செய்ய வேண்டுமென்பது என் பிரார்த்தனை. மதுவிலக்கை எந்த மாநிலத்தில் தவிர்த்தாலும் இந்த மாநிலத்தில் அதைத் தவிர்க்க வேண்டியதில்லை. மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொண்டு அகில இந்திய காங்கிரஸ் அதற்காக என்று ஒரு கமிட்டி போட்டபோது அப்போது தமிழகத்தின் தலைவரான ராஜாஜி அவர்கள் அதன் தலைவராக இருந்தார்கள். ஆங்கிலத்தில் "ப்ரொஹிபிஷன்", தமிழில் "விமோசனம்" என்ற பெயரால் மாத ஏடுகள் நடத்தியவர் ராஜாஜி. முதன்முதலாக ராஜாஜி அவர்கள்தான் 1938-ல் இம் மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மாநில அளவில் பூரண மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் இருப்பதும் இந்த மாநிலத்தில்தான். ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே உள்ள உறவு நல்ல முறையில் இல்லை என்றாலும், மதுவிலக்குச் சட்டம் மாறாது என்ற உத்தரவாதத்தை எதிர்க்கட்சி கொடுத்துள்ள மாநிலமும் இதுதான்.

போலீசை நம்பி இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவது என்ற நிலை இருக்கிறது. சமுதாயத்திலுள்ள ஒழுக்கக் கேடுகள், சீர்கேடுகள் இவற்றைக் கண்காணிக்க போலீஸ் இருக்கிறது. இந்த மதுவிலக்குச் சட்டத்தை ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கம் என்று கூற வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் சமுதாயத்தில் உள்ள ஊழல்களைப் போக்குவதற்கான இயக்கத்தில் நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகிறார்கள். விதவா விவாகம், கலப்பு மணம் போன்ற சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்கள். ஆகவே போலீஸாருக்கும் கெட்ட பெயர் இல்லாமல், மக்களுக்கும் நன்மை கிடைக்கிற அளவிற்கு இதை ஒரு சமுதாயப் பிரச்னையாக எடுத்துக்கொள்ள வேண்டும். மக்களிடம் இதன் நன்மைகள் பற்றி எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்ய வேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. பணப் புழக்கம் அதிகமாக இருந்த காலத்தில் இது அமலில் இருந்து வந்திருக்கிறது. பணப்புழக்கம் அதிகமாக இல்லாத காலத்தில் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று பார்க்க வேண்டும். திட்டங்கள் தோற்றுவிட்டு குடிசை வாழ் ஏழை மக்கள் பஞ்சத்தில் இருந்திருப்பார்கள். இன்றைய தினம் மதுவிலக்கை எடுத்தால் என்ன ஆகும் என்பதை நினைக்க நெஞ்சம் நடுங்குகிறது. அப்படித் தவறை ஒரு முறை செய்து விட்டால்
பி. 12-30 மீண்டும் பின்வாங்க முடியாத அபாயம் ஏற்பட்டுவிடும். ஆகவே மது விலக்கைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த முதலமைச்சர் வந்த பிறகு நல்ல சம்பிரதாயங்கள், நல்ல அடித்தளங்கள், நல்ல நடைமுறைகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த அமைப்பில் இன்னமும் சில தவறுகள் ஏற்பட்டிருந்தாலும் கூட முடிவிலே வெற்றியைக் கொடுக்கும். இராமநாதபுரத்தில் பள்ளர்–மறவர் போராட்டங்கள், தமிழ்நாட்டிலே பிராமணர், பிராமணர் அல்லாதார் பூசல்கள், இந்துக்கள் மீது முஸ்லீம்கள் பைப்பாடு ஆகிய இந்த நிலைகளெல்லாம் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் எவ்வளவு மாறி வந்திருக்கிறது. இந்த நிலைமைகளைப் பார்க்கும்பொழுது இந்தச் சூழ்நிலைகள் மேலும் வளர வேண்டுமென்று வாழ்த்தி முடிக்கிறேன்.





திரு. எம். கண்ணப்பன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் போலீஸ் மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

பொதுவாக, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் இங்கே எடுத்துரைத்தபடி மற்ற காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருக்கும் மாநிலங்களிலே காந்தியாரின் கொள்கைகளை மாசுபடுத்தும் அளவுக்கு மதுவிலக்கைத் தளர்த்தி கள்ளுக்கடைகளைத் திறக்கும் நேரத்தில் தமிழகத்திலே மதுவிலக்கை மேலும் தீவிரப்படுத்தி எந்தெந்த வகைகளிலே அமல்படுத்த முடியுமோ அந்த வகைகளிலே நமது அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதேபோல மதுவிலக்கு இந்த மாநிலத்திலே மேலும் சிறப்புற இருப்பதற்கு மக்களின் உள்ளங்களை எந்த வகையில் திருத்த வேண்டுமென்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். மக்களின் உள்ளங்களைத் திருத்தும், அதே நேரத்தில் இப்பொழுதிருக்கும் சட்டத்தையும் மேலும் கடுமையாகத் திருத்த வேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

இப்பொழுது மதுவைக் குடிப்பவர்களாக இருந்தாலும் அல்லது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனை ஒருபக்கம் இருந்தாலும், அதற்கான அபராதத் தொகையை அறிவிக்கும் நேரத்தில் அபராதத்தொகையைக் கட்டிவிட்டு மேலும் அவர்கள் அந்தச் செயலிலே ஈடுபடும் நிலைமையைப் பார்க்கிறோம். அந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த, சட்டத்தை மீறுபவர்கள் கண்டிப்பாகத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று செய்து அபராதத் தொகை செலுத்துவதை ரத்து செய்தால் அதிகப்படியான பலனைக் காண முடியும். அந்த வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம் நாட்டிலே சட்டத்தையும், நிலைமைகளையும் சீர்திருத்தம் செய்து அமைதியைக் காத்து வருபவர்கள் போலீஸ்காரர்கள். அதேபோல் ஆங்காங்கு ஏற்படுகின்ற தீ விபத்துக்களைத் தடுத்து நிறுத்தி மக்கள் உடைமைகளைப் பாதுகாத்து வருபவர்கள் தீயணைப்புப் படையினர். இவர்களுக்கிருக்கும் சில குறைபாடுகளை நீக்குவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். போலீஸாருக்கு என்னென்ன தகுதிகள் இருக்கின்றனவோ அதே தகுதிகள் தீயணைப்புப் படையினருக்கும் இருக்கின்றன. போலீஸ்காரர்களுக்கு இருக்கின்ற அளவுக்கு அடிப்படைச் சம்பளங்கள் தீயணைப்புப் படையிலிருப்பவர்களுக்கு இப்பொழுது தரப்படுவதில்லை. சென்ற இரண்டாண்டுகளுக்கு முன்பு, 1966–67-ல் மானியகோரிக்கைக்குப் பதிலளிக்கும் நேரத்தில் அப்பொழுதிருந்த அமைச்சர்கள் இங்கே போலீஸாருக்கு உள்ளதைப்போல தீயணைப்பு படையினருக்கும் சம்பளங்களெல்லாம் நிச்சயமாக அதிகப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குறிப்பின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களின் அடிப்படைச் சம்பளங்கள், வீட்டுவாடகை அலவன்ஸ்கள், படிகள் ஆகியவற்றை, போலீஸாருக்குச் சம்பளம் எந்த அளவுக்கு இருக்கிறதோ, போலீஸ் அதிகாரிகளுக்கு எவ்வளவு சம்பளம் இருக்கிறதோ அதேபோல இந்தத் தீயணைப்புப் பிரிவுகளிலே பணியாற்றுபவர்களுக்கும் தீயணைப்புப்படையில் பணிபுரியும் அதிகாரிகள் அத்தனைபேருக்கும் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கு பேசும் நேரத்தில் நாட்டிலே சட்டமும், அமைதியும் இந்த ஆட்சியில் பாதுகாக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் கடந்த மாதம் நடந்த சில சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த மாதம் 6, 7, 8 தேதிகளில் கோவை மாவட்டத்திலே தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்கள். 6-ஆம் தேதி பொள்ளாச்சி

யில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கோபிசெட்டிப்பாளையம், திருப்பூர் ஆகிய ஊர்களில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடந்த பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு அவர் பேசினார். அந்த நேரம், மாணவர்களால் இந்திப் போராட்டம் தமிழகத்திலே துவக்கப்பட்டு, மாணவர்கள் கொதித்தெழுந்த நேரம் அவர்களின் கொள்கைகளைச் செயலாக்கும் முறையில் இந்தத் தமிழகத்திலே இந்தி மொழி புகக்கூடாது, புக அனுமதிக்க மாட்டோம் என்று நம்முடைய தமிழக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றி இந்தி ஒழிக்கப்பட்ட நேரம். அந்த நேரத்தில் அவர்கள் அந்த மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அந்த நேரத்தில் தமிழக அரசாங்கமே இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை, தீர்மானம் போட்டிருக்கிறார்கள் என்ற நிறைவோடு பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை துவங்கிக்கொண்டிருந்த நேரம் அந்த நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு அங்கு பேசும் நேரத்தில், மாணவர்கள் சரிவரப்படிப்பது கிடையாது, காப்பியடிக்கிறார்கள், அவர்கள் ஆசிரியரைப் பின் தொடர்ந்து மார்க்குகள் போட்டுக்கொண்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். இதனால் வேதனையடைந்த மாணவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரைக் கண்டிக்கும் வகையில் போராட்டத்தைத் துவங்கினார்கள். திருப்பூரில் அவர் பேசும் நேரத்தில் அவ்வாறு பேச எனக்கு பேச்சுரிமை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே கறுப்புக் கொடி காட்டுவது என்று தீர்மானித்து அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினார்கள். அதே 6-2-1968 அன்று பொள்ளாச்சியிலும் பொதுக் கூட்டம். அதில் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவரவர்களும் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் நேரத்தில் 20 மாணவர்கள் ரோடு ஓரமாக நின்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைக் கண்டித்துப் பேசியதற்காகக் கறுப்புக்கொடி காட்டினார்கள். அந்தப் பேச்சைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோஷங்களைப் போட்டுக் கொண்டு கறுப்புக்கொடி காட்டினார்கள். அவ்வாறு கறுப்புக்கொடி காட்டிய நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்களும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. மகாலிங்கம் அவர்களும் காரிலே வந்திறங்கினார்கள். காரிலே வந்திறங்கி மேடைக்குச் சென்று மேடையிலே உட்கார்ந்தவுடனே திரு. மகாலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அவ்வாறு வரவேற்புரை நிகழ்த்தும் நேரத்தில் மாணவர்களைக் கண்டித்து அவர்களின் போக்கு காலித்தனமானது என்று பேசிய காரணத்தால் அமைதியாகவிருந்த மாணவர்கள் மீண்டும் கொதித்தெழுந்து திரு. மகாலிங்கம் பேசிய பேச்சைத் திரும்பப் பெற வேண்டுமென்று சொன்னார்கள். அவ்வாறு கோஷம் போட்ட நேரத்தில் ஆத்திரமடைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மகாலிங்கம் அவர்கள் கூட்டத்திலேயிருந்த போலீஸ் அதிகாரிகளைக் கூப்பிட்டு, இவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கிறீர்களா, அல்லது நானே நடவடிக்கை எடுக்க வேண்டுமா? என்று கேட்டார்கள்? அதற்கு போலீஸ் அதிகாரிகள், "அவர்கள் கறுப்புக்கொடி காட்ட உரிமையிருக்கிறது, அவர்கள் காட்டுகின்றார்கள், அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க நாங்கள் எதுவும் செய்ய முடியாது, இருந்தாலும் கூட்டத்திலே அமைதியைக் காக்க நாங்கள் முயற்சிக்கிறோம்" என்று கூறி கறுப்புக்கொடி காட்டிக் கொண்டிருந்த மாணவர்களை ஓரமாக அழைத்து, அவர்கள் அமைதியாகக் கறுப்புக்கொடி காட்டும் நிலைமையை ஏற்படுத்தினார்கள். அப்படியிருந்தும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய ஆட்களை—எ.பி.டி. நிறுவனத்தில் வேலை செய்யக்கூடிய ஆட்களை, சக்தி மில்லில் வேலை பார்க்கக்கூடிய ஆட்களை—ஆறு பேரை அழைத்து அந்த மாணவர்களை அடிக்கச் சொல்லியிருக்கிறார். ஆறுபேர்களும் வந்து மாணவர்களைத்தாக்கி நான்கு பேரை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். மீண்டும் போலீஸார் தலையிட்டு, அங்கேயிருந்த பொதுமக்கள் தலையிட்டு அவர்களைக் காப்பாற்றி பொள்ளாச்சி மருத்துவமனையில் சேர்த்தார்கள். பொள்ளாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் இரண்டு பேருக்குச் சரியான இரத்தக்காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை





படுத்து இரண்டு பேருக்கு மருந்து போடப்பட்டு அவர்கள் வீட்டிற்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டு, தங்களுடைய ஆட்களை ஒலிபெருக்கியிலேயே பெயர் சொல்லிக் கூப்பிட்டு அடிக்கச் சொல்லும் அளவிற்குப் பொள்ளாச்சியில் அராஜகச்செயல் நடைபெற்றது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தங்களைப்பற்றி இருக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அடி என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் இருந்தவரையில் அவ்வாறு இல்லை என்பதைத்தான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

திரு. எம். கண்ணப்பன் : எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னதாகக் கூறவில்லை. திரு. மகாலிங்கம் அவர்கள் கூறியதாகவும், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும்தான் கூறினேன். அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதைக் குறிப்பிடத்தான் சொன்னேன்.

ஆகவே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மாணவர்கள் காப்பியடிக்கிறார்கள், ஆசிரியர்கள் பின்னால் சென்று மார்க் போட்டுக்கொள்ளுகிறார்கள் என்று மாணவர்கள் மீண்டும் கொதித்தெழக்கூடிய வகையில் பேசியிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பேச்சுகள் பேசுவது எல்லாம் நாட்டிலே அமைதியையும் சட்டத்தையும் சீர்குலைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு சிலபேர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்கின்ற நிலைமையை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பித்த நேரத்தில் தமிழகச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்மூலம் திருப்தி அடைந்து விட்டனர். திருப்தி அடைந்த அந்த மாணவர்களை மீண்டும் ஏதாவது காரணங்கள் சொல்லி, அவர்களைக் கிளர்ச்சியில் ஈடுபடச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஏதேதோ தவறான எண்ணங்களை மேடையிலே சொல்லுகிற நேரத்தில், மீண்டும் அப்படிப்பட்ட நிலைமைகளை மாணவர்கள் இங்கே உண்டாக்குகிறார்கள். இதே நிலைமைதான் கோவை நகரிலும் நடைபெற்றுள்ளது. அங்கே மத்திய அமைச்சருக்குக கல்லடிபட்டு, அதன் காரணமாகத் தலையிலே காயம் ஏற்பட்டது. இதனால் சட்டம், அமைதி குலைந்துவிட்டது என்று சொன்னார்கள். அங்கே அமைச்சருக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறவகையில் இம்மியும் மாறாமல் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அங்கே ஒரு டி.ஐ.ஜி. அவர்கள் அமைச்சரைக் காரிலே அழைத்துச் சென்றார்கள். மாவட்ட கலெக்டர் பக்கத்திலே அமர்ந்து, சுற்றிலும் போலீஸ் படை சூழ அவரை அழைத்துக் கொண்டு சென்றார்கள். இப்படிப்பட்ட பாதுகாப்புக் கொடுக்கிற நேரத்தில் சட்டம், அமைதி சீர்குலைநதுவிட்டதாகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்கள் கூறி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படக்கூடிய நேரத்தில், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தும், அவருக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. இந்த நிலையிலே தான் சென்ற 1966-ம் ஆண்டு உடுமலைப்பேட்டைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். இன்றைய தினம் அமைச்சராக இருக்கிற திரு. சாதிக் பாட்சா அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. நாராயணன் அவர்களும் அவரோடுகூடச் சென்றார்கள். அந்த நேரத்தில் அவர்களைக் கொல்லுவதற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அன்றையதினம் சதித் திட்டம் போட்டார்கள். ஆனால் சுற்றியிருந்த நண்பர்கள், உடன் சென்ற நாங்களெல்லாம் அவர்களை அன்றைய தியம் காப்பாற்றினோம். உயிரிழப்பு ஏற்பட இருந்ததை அன்றைய தினம் தவிர்க்கக் கூடிய நிலையில், அவர்களைக் காப்பாற்றக்கூடிய நிலையில் கழகத் தோழர்கள்

[திரு. எம். கண்ணப்பன்] [1968 மார்ச் 20

இருந்தார்களே தவிர, வேறு யார் காப்பாற்றினுர்கள் ? உடுமலைப்பேட்டையிலேயே அவர்களைத் தீர்த்துவிடவேண்டுமென்று திட்டம் போடப்பட்டது. ஆனுல் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களால் தான் காப்பாற்ற முடிந்ததேதவிர, போலீஸார் காப்பாற்றுவதற்கு முன் வரவில்லை. அதற்குக் காரணம் முன்னுலேயிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அன்றையதினம் அந்த அளவில் நடந்துகொண்டிருக்கிறுர்கள். கட்சி பேதத்தை மனதிலேகொண்டு இம்மாதிரியான செயல்களில் அவர்கள் ஈடுபட்டார்கள். ஆனுல், இன்றைய தினம் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அது எந்தக் கட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் அல்லது வேறு கட்சி இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேதான், சட்டம் அமைதியைப் பாதுகாக்கின்ற வகையிலேதான் முயற்சி செய்துகொண்டு வருகிறது—நடந்துகொண்டு வருகிறது.

இந்தப் போலீஸ் மானியத்திலே பேசுகின்ற நேரத்தில், அந்த இலாகாவிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் குறைகளையும் கவனிக்க வேண்டும். நீண்ட நாட்களாக அவர்கள் கேட்டு வருகின்ற கோரிக்கை தங்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்பது. அவர்களுக்கு அடிப்படை சம்பளத்தை உயர்த்தித் தருகின்ற வகையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு, தீ அணைப்புப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குப் போதுமான வீட்டு வசதி கிடையாது. எப்படிப் போலீஸாருக்கு வீட்டு வசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறதோ, காலனிகள் கொடுத்திருக்கிறதோ அதேமாதிரி இந்த தீ அணைப்புப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கும் காலனிகள் ஏற்படுத்தி வீட்டு வசதி செய்துகொடுக்கவேண்டும். நம்முடைய மாநிலத்திலே அரக்கோணம் நகரத்திலேதான் இப்படிப்பட்ட காலனி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதேபோன்று எல்லா இடங்களிலும் இவர்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

கிராமப்புற போலீஸாருக்கு அவசிய செய்திகளைப் பெறுவதற்கோ, தருவதற்கோ, விரைந்து கிராமப் புறங்களுக்குச் செல்வதற்கோ, போதுமான வசதிகள் கிடையாது. ஆகவே, ஒவ்வொரு போலீஸ் நிலயத்திற்கும் தொலைபேசி வசதி நாம் செய்துகொடுக்கவேண்டும். இங்கே இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர்களுக்குக் கார் ஜீப் வசதி செய்துகொடுக்க முடியாவிட்டாலும் ஒரு மோட்டார் பைக் கொடுப்பார்களாகுல் அவர்கள் விரைந்து சென்று கிராமப் பகுதிகளிலே குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்தமானியத்தை வரவேற்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய போலீஸ் மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களையும் சுருக்கமாகச் சொல்வதற்கு விரும்புகிறேன். மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பாகப் போலீஸ் படையினர் இருக்க வேண்டுமென்பது கொள்கையாக வகுக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் பரவலாக ஏற்படுகின்ற அமைதியின்மையைப் பார்த்தால் மக்களுடைய உயிருக்கும் மக்களுடைய சொத்துக்களுக்கும் பாதுகாப்பு இல்லையென்பது தெரிய வருகிறது. இன்றையதினம் பெரிய நிலப் பிரபுக்களும், முதலாளிகளும் பொதுக் காவலாளிகளுக்கு இடைஞ்சல் கொடுத்துக்கொண்டிருக்கிறுர்கள். இது தொடர்ச்சியாகவே வந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு பழக்கமான பயிற்சி பெற்றதின் காரணமாகத்தான் இந்த நிலை நீடித்துக்கொண்டுவருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று சொன்னுல் இன்றையதினம் ஜனநாயக ரீதியிலே இந்தப் போலீஸ் இலாகாவிலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தியாவிலே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வரக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பழைய பழக்கங்களையும், வெள்ளைக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட பிழைகளையும் இதே பிழையையும் தவறையும் காங்கிரஸ் அரசாங்கத்தினர் அமுலுக்குக் கொண்டு வந்ததனுலேயும், இதேநிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டுபோன



1968 மார்ச் 20] [திரு. ஆ. கு. சுப்பையா]

தனுலேயும் தான் இன்று பல ஒழுங்கீனமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்
டிருக்கிறது. ஆகவே, புதிய அரசாங்கம் புதிய முறையிலே
போலீஸார்கள் நடந்து கொள்ளும் முறையிலே நிலைமைகளை மாற்ற
வேண்டும். மக்களோடு மக்களாக பழகுவதற்கு வேண்டிய
நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டுமென்பதைக் கொள்கை
யாக வகுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
நான் சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

அடுத்து, சாதாரணப் போலீஸ்காரர்களுக்குத் துப்பாக்கிக் கொடுக்கக்
கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.
துப்பாக்கி வைத்திருப்பவர்களெல்லாம் எப்படி உபயோகப்படுத்வதுது
என்பதைத் தெரியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் துப்பாக்கி
வைத்திருப்பார்களானுல் எப்படி அதை உபயோகிப்பது என்பது
தெரியாத நிலையில் இம் மாதிரித் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்க
வேண்டிய ஒரு நிலைமையும் ஏற்படுகிறது. அந்த முறையிலே
தான் இன்றைக்கு இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மூன்று
துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன. இதற்கு முன்னுலே
நடக்கவில்லையா என்று சொன்னுல் நிறைய நடந்திருக்கின்றன.
நிறையப் பேர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறுர்கள்.
தொடர்ந்து இம் மாதிரி ஒரு நிலை நமது நாட்டிலே நடந்து
கொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்குக் கெட்டபெயரை ஏற்படுத்த
வேண்டுமென்பதற்காகச் சதி உருவாக்கி, முதலாளிகளும் நிலப்
பிரபுக்களும் தங்களுக்குச் சாதகமாகச் போலீஸைப் பயன்படுத்திக் கொண்டு
இன்றைக்கு சுடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதன் காரணமாக
தாழங்குப்பம், பூந்தாளங்குடி, அரவங்காடுபோன்ற இடங்களிலே
துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவேண்டிய ஒரு துர்பாக்கியமான
நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இரண்டாவதாக, இன்றையதினம் கிராமப்புறங்களிலே இருக்கக்
கூடிய போலீஸார்கள் சாதாரண அரிசனங்களுடைய வீடுகளைப்
பிரிப்பதற்கோ, அல்லது வீடுகளைச் சூறையாடுவதற்கோ, அங்கே
இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்கள் முயற்சி செய்கின்ற நேரத்தில்
அந்த நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்துகொண்டிருக்
கிறுர்கள். அவர்களுடைய உதவியோடு தொழிலாளர்களுடைய
வீடுகளையும் அவர்களுடைய சொத்துக்களையும் சூறையாடக்கூடிய
நிலைமை இனிமேல் நீடிக்கக்கூடாது. ஆகவே, அரசாங்கம் அதைக் கொள்கை
யாக வகுத்துக் கொண்டு, விவசாயிகள், தொழிலாளர்களுடைய
விஷயங்களில் போலீஸ் தலையிடக்கூடாது என்ற கொள்கையைப்
பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸாருக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க
வேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு கூட சிபாரிசு செய்திருக்
கிறது. இதை முன்னுலேயே சிபாரிசு செய்திருக்கிறுர்கள்.
குறைந்தபட்சம் ரூ. 85 லிருந்து சம்பளம் கொடுக்கக்கூடிய வகையில்
அவர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சிபாரிசு
செய்திருக்கிறது. அதையும் அரசாங்கம் பரிசிலனையில் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கள்ளக் கடத்தல் என்று சொல்லுகிறபொழுது,
மிக ஆச்சரியமாகவும், வியப்பாகவும், இருக்கக்கூடிய நிலைமை
தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது என்று சொல்ல முடியும்.
கொள்ளிடத்திலே ஆரம்பித்து, கோடிக் கரையை மையமாக
வைத்து, இராமேஸ்வரம் வரையிலும் தொடர்ச்சியாகவே கள்ளக்
கடத்தல் நடந்து கொண்டிருக்கிறது. இந்த 20 வருஷ காலத்திலே
அவர்கள் இதை பெரிய தொழிலாகக் கொண்டிருக்கிறுர்கள்.
அவர்களிடம் விரிவான வசதிகள் எல்லாம் இருக்கின்றன.
துப்பாக்கிகள் எல்லாம் வைத்திருக்கிறுர்கள். ஆகவே, இவர்களைத்
தடுப்பதற்கு அதிகாரிகளால் கூட முடியாது. தனித் தர்பாரே

நடத்துகிறார்கள். ஒரு ஆட்சி நடத்துகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த முறையிலே அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் தான் நாளுக்கு நாள் கள்ளக் கடத்தல் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது. கிராம்பு மூட்டை, பாக்கு மூட்டை, ஷேவிங்ஸ் பிளேட்ஸ், இதையெல்லாம் அவர்கள் கடத்துகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி தடுக்க முடியும் ? இவை யெல்லாம் சமூகத்திற்கு விரோதமான செயல், நாட்டிற்கு விரோதமான செயல் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கள்ளக் கடத்திலில் முக்கியமாக இருக்கக் கூடிய புள்ளிகள் யாரும் பிடிபடுவதே கிடையாது. கார் ஓட்டுபவர்களைப் பிடித்துக் கொள்கிறார்கள் அல்லது காரை எடுத்துக் கொள்கிறார்கள். இம் மாதிரி நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. கள்ளக் கடத்தலில் பிரதானமாக இருக்கக் கூடியவர்களை, சூத்திரதாரி யாக இருக்கக்கூடியவர்களைத் தயவு செய்து கண்டுபிடிப்பதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுப்பதன் மூலம்தான் இம்மாதிரியான சமூக விரோதிகளை, தேச விரோதிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மதுவிலக்கைப் பற்றிப் பல நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். மதுவிலக்குத் தோற்றுப் போயிருக்கிறதா அல்லது அது நல்ல முறையில் அமல் படுத்தப்படுகிறதா என்பதைப் பரிசிலனை செய்வதற்கு இந்த அரசு ஒரு கமிட்டியை நியமித்துப் பரிசிலனை செய்யச் சொல்ல வேண்டும். அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை அரசாங்கத் திற்குச் சமர்ப்பித்த பிறகு அதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த நிலையை மதுவிலக்குச் சம்பந்தமாக இந்த அரசு மேற் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு ஏ. கோ. பால கிருஷ்ணன் உரையாற்றுவார், ஐந்து நிமிடம்.

***திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மற்ற மானியங்களைக் காட்டிலும் இந்த மானியத்தின் மீது கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும், இந்த மானியத்தின் மீது அதிகம் பேர்கள் பேச வேண்டும் என்று விரும்பியும்கூட, தலைவர் அவர்கள் முதலில் அறிவித்திருக்கிறார்கள், நான் அதைப்பற்றித் தொடவில்லை. இருந்தாலும், யார் யார் எந்த மானியத்தில் பேசவேண்டுமோ, எந்தெந்த நல்ல கருத்துக்களை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமோ அவர்களையெல்லாம் அனுமதித்திருந்தால், அதிலும் குறிப்பாக அவர்களுக்குச் சாவகாசம் கொடுத்திருந்தால், நலமாக இருக்கும். இந்த மானியக் கோரிக்கையின் கடைசிப் பாராவில் அண்ணா அவர்கள் சொல்லியிருப்பது

"காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல்லுறவை மேம்படுத்தவும், காவல் துறையினர் தங்கள் கடமைகளை இன்னும் செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்கும் உதவியாக இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆன்ற கருத்துக்களை எடுத்தியம்பினால் அவற்றை அரசு வரவேற்கும்."

என்று தன்னுடைய ஆய்வுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கிணங்க எனது அபிப்பிராயத்தை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்ற இலாக்காக்கள் அத்தனையும் வருமானமுள்ள இலாக்காக்கள், ஆனால், போலீஸ் இலாகா வருமானம் இல்லாத ஒரு இலாகா, அதே சமயத்தில் அது தான் வருகிற வருமானத்தை பாதுகாக்கிற இலாகா என்பதை யாரும் மறந்து விடக்கூடாது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் இப்படி வரு





மானத்தைப் பாதுகாக்கக்கூடிய இலாக்காவிலுள்ளவர்கள் நல்லவர்களாக வாழவேண்டும், மக்கள் மத்தியில் நல்லவர்களாகக் காட்சி அளிக்கவேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆனால் அதற்கு வாய்ப்பு, வசதி இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. ஓரளவுக்கு இப்பொழுது கிராக்கிபடியை ஒரு சிறிய தொகை அவர்களுக்குக் கூடுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். ஆனால், நீண்ட நெடுங்காலமாக நாம் சொல்லிகொண்டு வருவது என்னவென்றால், அரசாங்கத்தில் பணியாற்று கின்ற சிப்பந்திகளுக்கு குறைந்தது 100 ரூபாய் சம்பளமாவது இருந்தால் தான், அவர்கள் வாழ்க்கையை நாணயமாக நடத்த முடியும். நல்ல முறையில் நடத்த முடியும் என்று அத்தனை பேர்களும் கருதுகிறார்கள். இவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 60, 65-லிருந்து ரூ. 80 வரை கடைசியில் போகக் கூடிய அளவுக்கு இருக்கிறது. அவ்வளவு குறைவாக சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பவர்கள் நாணயமாக இருந்தாலும் கூட, நம்புவதில்லை. ரூ. 60 சம்பளம் வாங்கிக்கொண்டு, நடைமுறையில் ரூ. 200 300 சம்பளம் வாங்குபவர்கள்போல வாழ்க்கை நடத்துகிறார்களே என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை தான் உருவாகிறது. சொந்தச் சொத்தில் வருவதை இத்துடன் வைத்துக்கொண்டு சாப்பிட்டாலும்கூட, நாணயமாக வாழ்க்கை நடத்தினாலும்கூட, பார்ப்பவர்களுக்கு வாங்குற சம்பளம் குறைவாக இருக்கிறதே, வாழ்க்கை ஆடம்பரமாக இருக்கிறதே, எப்படி அம்மாதிரி வாழ்க்கை நடத்த முடியும், லஞ்சம் வாங்கித்தான் இருப்பார் கள் என்ற கெட்ட அபிப்பிராயம் தான் தோன்றுகிறது. அதைப் போக்கு வதற்கு,த் தயவுசெய்து அத்தனை பேர்களுக்கும் அடிப்படைச் சம்பளம் ரூ. 100-க்குக் குறையாமல் கொடுத்து வாழ வகை செய்ய வேண்டும். ஐ.ஜி. அவர்கள் ஏதோ பரிந்துரை செய்திருப்பதாக மற்றவர்கள் சொன்னார் கள். அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக, அண்ணா அவர்களின் ஆட்சியிலே அவர் களுடைய குறைகளை நீக்க வேண்டும் என்பது தான் என்னுடைய தாழ்மை யான அபிப்பிராயம்.

அதே மாதிரி இப்பொழுது தினப்படி ரூ. 1·25 கொடுக்கப்படுகிறது. நான் உத்தியோகம் பார்த்த பொழுது 1950 என்று நினைக்கிறேன், அந்த ஆண்டிலே இருந்துவந்தது, இப்பொழுதும், 18 ஆண்டு காலத்திற்குப் பிறகும், அப்படியே தான் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் விலைவாசி யில், சங்கடமான சூழ்நிலையில் ஒரு வேளைச் சாப்பாட்டிற்குக் கூட அந்தத் தொகை போதாது. அதைக் கொஞ்சம் உயர்த்தித் தந்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அவர்கள் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, பல கால போராட்டத்திற்குப் பிறகு கடைசியில். ஆனால் அந்த ஆஃப் டியூடி சரியாகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்த்தால், கொடுக்கப்படவில்லை. அவசரக் காலத்தில் ஆஃப் டியூடியில் அவர்கள் வேலைக்கு அழைக்கப்பட்டால் அவர்களுக்கு ஒரு ரூபாய் ரெம்யூ ணரேஷன் கொடுக்கிறார்கள். தயவு செய்து முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பரிசிலனை செய்து பார்த்து, ஆஃப் டியூடியில் வேலை வாங்கினால் அவர்களுக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கணக்குப் பார்த்து, ரூ. 2 அல்லது சம்பள விகிதம் எப்படி வருகிறதோ அந்த அளவுக்காவது கொடுத்து அவர்களுக்கு உற்சாகமூட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகளெல்லாம்க் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறைந்தபட்சம் முக்கால் பங்கு தீர்ந்து விட்டது என்ற கணக்கு அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர் கள் வாடகை வீடுகளில் அவர்கள் குடியிருக்கும்பொழுது சில தவறுகள் நடக்கின்றன. ஒரு போலீஸ் அதிகாரி ஒரு தனி நபர் வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தால், அந்த வீட்டு சொந்தக்காரர் வார்த்தையை அவர் காது கொடுத்து கேட்க வேண்டிய நிலைமைச் தான் வரும். அம்மாதிரி சூழ்நிலை யில் சில தவறுகள் ஏற்படலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே, தயவு செய்து, போலீஸ் அதிகாரிகள் குறைந்த பட்சம் எஸ். ஐ. அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளாவது தனி நபர் வீடுகளில் குடியிருக்கக் கூடாது. அவர்களுக்கு அவசியம் அரசாங்க வீடுகள்

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [1968 மார்ச் 20

தான் இருக்க வேண்டும் என்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படி யிருந்தால், நாணயமாகவும், நல்லவர்களாகவும், மற்றவர்கள் அவர்களிடத்தில் தவறான முறையில் அணுகாத படி அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்ற ஒரு அபிப்பிராயத்தை, ஒரு நிலைமையை உருவாக்க முடியும் என்ற நல்லெண்ணத்தில் நான் இதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது போலீஸ் லைன்களில் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனி மீட்டர் கிடையாது. பொதுவாக ஒரு மீட்டர் வைத்து, வீட்டுக்கு ரூ. 10 என்ற அளவில், ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கு இன்னும் அதிகமாகவும் சம்பளத்தில் மின்சாரக் கட்டணமாக பிடித்துக்கொள்கிறார்கள். நீங்கள் சம்பளத்தில் வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளுங்கள். ஆனால், ரூ. 2-க்கு எண்ணெய் வாங்கினால் மாதம் பூராவுக்கும் எரிக்க முடியும், ராத்திரி பூராவும் எரிக்க முடியும், அடுப்புப் பற்றவைத்துக்கொள்வதற்குகூடச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால், ரூ. 10 இதற்காக சம்பளத்தில் பிடித்தாலும் கூட இரவு பத்து மணிக்கு மேல் மின்சாரத்தை பயன்படுத்தக்கூடாது என்ற நிலைமையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் அவர்கள் எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அளவுக்கு, அவர்களுக்குத் தனியாக மீட்டர் வைத்துக் கொடுத்து, எவ்வளவு அவர்கள் மின்சாரம் செலவழித்துக்கொள்கிறார்களோ அதற்கு மீட்டர்படி கட்டணம் வசூலித்தால் நலமாக இருக்கும் என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நான் சொல்வதெல்லாம் அபிப்பிராயம் தான், வேறு ஒன்றுமில்லை, சபாநாயகர் அவர்களே,

குறிப்பாக, 1959-இலோ, அல்லது 1960-இலோ—1959 என்று நினைக்கிறேன். போலீஸ் நூற்றாண்டு விழா நடத்தியது. அந்த நூற்றாண்டு விழாவில் இரண்டு கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஒரு கட்டுரையில் என்ன குறிப்பிடப்பட்டது என்றால், மாவட்டத் தலைநகரங்களிலே போலீஸ்காரர் பிள்ளைகளுக்குத் தனியாக ஒரு உணவு விடுதி நிறுவி, அந்த விடுதியில் அவர்களை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். கூடுமானவரையில் சம்பளத்தில் ஓரளவுக்குப் பிடித்துக் கொண்டால் கூட பாதகம் இல்லை என்ற அளவுக்கு அபிப்பிராயம் சொல்லப்பட்டது. இன்னொரு கட்டுரையில் சொல்லப்பட்ட இன்னொரு அபிப்பிராயம் என்னவென்றால், ஒரு ஊருக்கு ஒரு போலீஸ்காரராவது இருக்க வேண்டும் அந்தந்த ஊரிலேயே குடி இருக்க வேண்டும் என்று அபிப்பிராயம் சொல்லப்பட்டது. இரண்டு கட்டுரைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுகள் கொடுக்கப்பட்டிருந்தும், இதுவரையில் அந்த அபிப்பிராயங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. இதைச் சொல்லுவதற்கு முக்கியமான காரணம், உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய பிள்ளைகள் ஹெட்குவார்டர்ஸில் இருந்துவிட்டால் அவர்களுக்குப் படிப்பதற்கு சௌகரியமாக இருக்கும், அதிகாரிகள் மாற்றப்படுவதால், அவர்களுடைய பிள்ளைகளின் படிப்பு வசதி கெட்டுப்போகாது. அவர்களுடைய பிள்ளைகளுக்கு அம்மாதிரி வசதி ஏற்படுத்துக் கொடுத்துவிட்டால், தகப்பனை ஒரு ஊரிலிருந்து, இன்னொரு ஊருக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் மாற்றுங்கள், தினத்திற்கு ஒரு தரம் கூட மாற்றுங்கள், மணிக்கு மணி வேண்டுமானாலும் மாற்றுங்கள், அவர்களுடைய பிள்ளைகளின் படிப்பு அதனால் பாதிக்கப்படக் கூடாது. ஆகவே, அந்த நோக்கத்தில் நான் நான் இதைச் சொல்கிறேன்.

பிற் கல .00 அதனால்தான் 1959-ல் பரிசு கொடுத்தார்களோ, அதற்குக் க ணமாக இருந்த கோரிக்கையின் படி, எல்லாத் தலைநகரங்களில் போலீஸ்காரர்கள் பிள்ளைகளுக்கு தனி உணவு விடுதிகளை ஏற்படுத்த வேண்டும், அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருப்பதால், அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1968 மார்ச் 20] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர்களில் ஆரம்பித்த அங்கத்தினர் அவர்கள் பெரியவர்கள், வயதானவர்கள், அனுபவம் உள்ளவர்கள், அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் ஆரம்பமே குழப்பமாகப் போய்விட்டது. சட்டமில்லை, ஒழுங்கில்லை, நிர்வாகம் சரியில்லை என்றெல்லாம் ஆரம்பித்து, ஆரம்பத்திலேயே குழப்பத்தை உண்டாக்கினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் பேசியதில் பெரும் பகுதி அப்புறப்படுத்தியாகிவிட்டது. அதைப்பற்றிப் பேசவேண்டிய தேவையில்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான சமாசாரம் பற்றிக் குறிப்பிட வேண்டும். அது அண்ணா காதுக்கும் வருகிறதோ என்னவோ தெரியவில்லை. பொள்ளாச்சியில் நடந்த சம்பவம் பற்றி ஒன்றைச் சொன்னார்கள் என்றார்கள், எதிர்க் கட்சித் தலைவர் இல்லை என்றார்கள். எது சரியோ நமக்கென்ன தெரியும் ? ஆனாலும், பழைய காலத்தில் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பிவந்தார்கள். அதை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். எதைப் பேசினார்கள் என்று சொல்வது அவர்களுடைய கடமை. சுருக்கெழுத்தாளர்கள் இருந்தால் எது பேசினாலும், யாரும் தப்ப முடியாது. (குறுக்கீடு). எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் ஆளும் கட்சியானாலும், வேறு கட்சியானாலும் பொதுக் கூட்டத்திலே பேசுகிறவர்களுக்குச் சுருக்கெழுத்தாளர்கள் போட வேண்டும். ஒலி பெருக்கி பர்மிஷன் கொடுத்தால்தான் கூட்டம் போடலாம் என்று இருப்பதுபோல, மைக் பெர்மிஷன் இவையெல்லாம் கொடுக்கும் நேரத்திலேயே, இதையும் சொல்லிவிட்டால், ஒரு வாரத்திற்கு முன்பே, அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்துச் சுருக்கெழுத்தாளர்களை வரவழைத்து விடுவார்கள்.

பொதுவாகச் சில குறைகள்பற்றிச் சொல்லுகிறார்கள். நாட்டிலே பிறந்த அவ்வளவு பேர்களும் ஒரே மாதிரி இருப்பார்களா ? கையிலுள்ள விரல்கள் ஐந்தும் ஒரே மாதிரியாகவா இருக்கின்றன ? சில உயரமாக இருக்கின்றன சில குட்டையாக இருக்கின்றன. மனிதனுடைய மனப்பான்மையிலும் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகவே, ஏற்படும் தவறுகளுக்கெல்லாம், சர்க்கார்தான் பொறுப்பு என்கிற எண்ணம் சரியில்லை. இவையெல்லாம் கொஞ்சம் உடனடியாகப் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று அண்ணா உத்தரவு போட்டால், அரசாங்கம் நல்ல முறையில் நடப்பதற்கும், மற்றவர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, சென்ற ஓராண்டுக் காலத்தில் முதல் அமைச்சர் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்ற பிறகு, போலீஸ்காரர்களுடைய நடத்தையில், மனப்பான்மையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்பது தான் இப்பொழுது இருக்கும் மிகப் பெரிய கேள்வி. திட்டவட்டமாகச் சொல்லமுடியும், மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று. இருந்தாலும்கூட, இன்னும் நிறைய அபிவிருத்திக்கு இடம் இருக்கிறதா என்றால், நிச்சயமாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். பொதுவாகச் சொல்லும்போது, சென்ற ஒரு ஆண்டுச் சம்பவங்களைப் பார்க்கும்போது, சட்டம், அமைதி, துப்பாக்கிச் சூடு ஏற்பட்டிருக்கிறதையெல்லாம் பார்க்கும்போது, ஒரே ஒரு வார்த்தைதான் சொல்ல முடியும். முன்பெல்லாம் இருந்ததை விட, இப்பொழுது போலீஸ் துறை அபிவிருத்தி அடைந்திருக்கிறது, கூட்டாகச் செயல்படும்போது. அதே நேரத்திலே தனியாகச் செயல்படுவதைப்பற்றிச் சொல்லும்போது, முன்போலவே தான் இருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், 'Collectively they have improved, individually they have not improved என்பதைத் தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதல் அமைச்சர் இந்தத் துறைக்குப் பொ பேற்றபிறகு, பொதுவான கிளர்ச்சிகள், மாணவர் கிளர்ச்சி போன்றவற்றில் போலீஸார் எப்படி எப்படி நடக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் தாக்கீது பிறப்பித்திருந்த காரணத்தால், மிகப்பெரிய கலவரமோ கொந்தளிப்போ வராமல் தவிர்க்கப்பட்டிருக்கிறது. நான் நினைக்கிறேன் பல கோளாறுகளும் வராமல் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று. அதற்காக நாம்

பெருமை கொள்ளலாம். அவையெல்லாம் முதல் அமைச்சருடைய கட்டளைகளாலும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்பாலும் நடந்திருக்கின்றன. ஆனாலும், தனிப்பட்ட போலீஸ்காரர்களுடைய போக்குத் திருந்தியிருக்கிறதா என்றால், இல்லை. முன்புபோலத்தான் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். திருந்தவே இல்லை. அங்கே கற்பழித்தார்கள், இங்கே இதைச் செய்தார்கள், அங்கே சப்-இன்ஸ்பெக்டர் சுட்டார் என்றெல்லாம் வருகிறது. நடந்த மூன்று துப்பாக்கிப் பிரயோகங்களையும் எடுத்துப் பார்த்தால், முன் நடவடிக்கைகள் எடுக்காததால் எடுக்கத் தவறிவிட்டதால், அந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். ஒரு இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது என்றால், அதற்கு அங்கே இருக்க வேண்டிய நிலைமை, "இன்ஸெண்டியாரிசம்", தீ வைத்தல், பெருங்கலவரம், மிகப் பெரிய அளவில் உயிர்களுக்கு ஆபத்து, மிகப்பெரிய அளவில் உடமைகளுக்கு ஆபத்து, இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் தான் துப்பாக்கிப் பிரயோகம் நடக்க வேண்டும். அருமைக் காங்கிரஸ் நண்பர்களுக்கு ஒன்று சொல்லலாம். சென்ற 20 வருஷக் காலத்தில், 3,000 துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன. 5,000 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். 3,000 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன. 5,000 உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால், சென்ற 20 வருஷக் காலத்தில் நடந்த ஆட்சி எந்த எந்தக் காலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்க வேண்டும் என்று எந்தவிதமான விதி முறைகளும் திட்டவட்டமாக ஏற்படுத்தவில்லை. அதன் காரணமாகத், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்துவிட்டன. இப்பொழுது இருக்கும் அரசு மாணவர்கள் கொந்தளிப்பைப் பொருத்த வரையில், எந்தத் தீவிரமான நிலையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று உத்தரவுகள் போட்டுவிட்டதன் காரணமாக, நிலைமைகள் கட்டுக்கடங்கி இருந்தன. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் தனிப்பட்ட போலீஸ்காரர்கள் நடத்தையைப் பார்த்தால், நான் பெரிய அதிகாரிகளைப்பற்றிச் சொல்வதாக யாரும் தயவுசெய்து நினைக்க வேண்டாம், அவர்கள் நிச்சயமாக மிகவும் நல்ல முறையில் நடக்கிறார்கள், மற்றவர்களை மரியாதையுடன் நடத்துகிறார்கள். உடனுக்குடன் உத்தரவுகள் போட்டு, பொது மக்களுக்குச் சேவை செய்கிறார்கள். உதாரணமாக, உலகத் தமிழ் மாநாடு நடந்தபோதும், இண்டஸ்ட்ரியல் ஃபேர் நடந்த போதும், போக்குவரத்துக்கள் விஷயத்திலும், காணமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதிலும், மிக நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அதேபோல கும்பகோணத்திலும் நடந்து கொண்டிருக்கிறார்கள். நான் கூடச் சென்ற மாதத்திற்குமுன் ஒரு பையன் காணமல் போனபோது, போலீஸ் கமிஷனருக்குத் தெரிவித்து, மிகச் சிறிய துப்பை வைத்துக் கொண்டு, ஒரே நாளிலே கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போன்ற சமூக சேவைகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனாலும் கூட, கீழே இருக்கும், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டபிள்கள் போன்றவர்கள், அவர்களிலும் புதிதாக வந்தவர்கள், வயதானவர்கள்பற்றி அப்படிச் சொல்ல முடியாது. கெட்ட காரியங்களில், சமூகத்திற்கு தீங்கு இழைக்கும் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். போன வருடம்கூட பவானியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள், விசாரணை நடத்தவில்லை என்பது பற்றி, எதிர்க் கட்சித் தலைவர்கூட குறிப்பிட்டார்கள். இவர்களெல்லாம் வேலூர் காலேஜில் ட்ரெயினிங் பெற்றுப்புதிதாக வருகிறவர்கள். அதிலிருந்து என்ன புலப்படுகிறது என்றால், பயிற்சி கொடுக்கும் முறையில் கோளாறு இருக்கிறது. 20 வருஷக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி இதைச் சரி செய்ய எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவர்களுக்கு எப்படி மனிதாபிமானம் வளர வேண்டும், சமூகத்தில் மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதுபோன்ற அடிப்படையில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் அவர்கள் உறுதியாகவும் இருக்க வேண்டும், உறுதியாக இருப்பதுதான் முக்கியம். அவர்களுடைய உறுதி குலைய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவர்களுக்கு மனிதாபிமானம், யுக்தானுஸார அதிகாரத்தை உபயோகிப்பது போன்றவற்றில் நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஆகவே, முதல் அமைச்சரும், காவல் துறையினரும் அந்த வகையில் திருத்தியமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





சில விஷயங்களைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனிலேயே, விதி முறைகளுக்கு மாறாக நடைபெறுகின்றன. ஏதாவது ஒரு சம்பவம்பற்றி ரிபோர்ட் வருகிறது என்றால், அங்கேயே சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரிக்க வேண்டுமேயல்லாது, போலீஸ் ஸ்டேஷனிலேயே விசாரிப்பது கிரிமினல் ப்ரொஸீஜர் கோடுக்கு விரோதமானது. இன்றைக்குக் குற்ற விசாரணை போலீஸ் ஸ்டேஷனில் நடைபெறுவது தடைசெய்யப்படவேண்டும். அங்கேயே நடப்பதால்தான் தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சாதகமாகச் செய்கிறார்கள் என்ற புகாரும் வருகிறது. அதை நிறுத்திவிட்டால் அந்த வகையில் புகார் வராது.

அடுத்தபடியாக, ஒரே ஒரு விஷயத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன். சமீபத்திலே பத்திரிகைகளில் அதிகமாக அடிபடும் பெயர் கச்சத் தீவு. இது தமிழ் நாட்டுக்குத்தான் சொந்தம். இன்னும் மோகினித்தீவு என்னும் தீவும் தமிழ் நாட்டுக்குச் சொந்தம். இன்னும் தஞ்சாவூருக்கருகில் சில தீவுகள் இப்படி இருக்கின்றன. இவை எல்லாம் தமிழ் நாட்டுக்குச் சொந்தம். ராணுவ ரீதியில், தேசத்தின் பாதுகாப்பு ரீதியில் இவை எல்லாம் மிக முக்கியமானவை. கச்சத் தீவைப்பற்றி முன்னிருந்த சர்க்கார் அவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. முன்னமேயே நாம் அங்கே நம்முடைய ஒரு போலீஸ் அவுட்-போஸ்ட் ஸ்டேஷனையாவது வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்தமாதிரித் தகராறுகள் எல்லாம் ஏற்படாது.

போலீஸ்காரர்களின் சம்பளத்தைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துப் பேசினார்கள். மனிதன், மனிதனாக, வாழ்வதற்கு, வாழக்கூடிய அளவிற்குச் சம்பளத்தைப் போட்டுக்கொடுக்க வேண்டும். இன்னொன்று: ஒரு ஸ்டேஷனில், 6, 8 அல்லது பத்து வருடங்கள் இருந்தபோதிலும் போலீஸ்காரர்கள் மாற்றப்படாமல் ஒரே இடத்திலேயே வைத்திருக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஜில்லாவில் இருக்கக்கூடியபோலீஸ்காரர்களை வேறு ஜில்லாக்களுக்கு மாற்றுவது இல்லை. ஜில்லா விட்டு ஜில்லா மாற்றினால்தான் நன்றாக இந்தத் துறை சிறந்து விளங்கும். பொதுவாக, சென்னிமலையிலிருந்து பெருந்துறைக்குக்கூட போலீஸ்காரர்களை மாற்றுவதில்லை. போலீஸ்காரர்கள் ஒரே இடத்தில் இருப்பதால் லஞ்சம்போன்ற ஊழல்கள் ஏற்படுவதற்கு வழி ஏற்படுகிறது. கட்டாயமாக ஒவ்வொரு போலீஸ்காரரையும் மூன்று வருடத்திற்குமேல் ஒரே இடத்தில் வைத்துக் கொள்ளாமல், மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் புதிய இடத்தில் கொஞ்சம் பயத்துடன் நடந்து கொள்வார்கள். போலீஸ்காரர்களை ரொம்ப தூரமான இடத்திற்குக்கூட மாற்ற வேண்டும். முக்கியமாக நாம் போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை மாற்றியமைக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்குப் புதிய பயிற்சி அளிக்க வேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மாதிரிமேலும் நடைபெறாமல் இருக்கத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் மிக விளக்கமாகவும், தெளிவாகவும் பேசியிருக்கிறார்கள். பொதுவாக அடித்தளத்தில் இருக்கும் சுமார் 50 போலீஸ்காரர்கள், ஐந்தாறு சப்-இன்ஸ்பெக்டர்கள் தவறுகள் செய்வதால் அந்தத் துறை முழுவதற்குமே கெட்ட பெயர் ஏற்படுகிறது. தவறு செய்கிறவர்கள் எங்குமே இருக்கிறார்கள். அடித்தளத்தில் இருப்பவர்களில் ஒரிருவர் தவறு செய்தால் அதை மேலதிகாரிகளிடத்தில் எடுத்துச்சொல்லி, அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், நியாயம் கிடைக்கவில்லை யென்றால், பின்னர் அமைச்சர் போன்றவர்களிடத்தில் எடுத்துக்கூறி, அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இந்த மன்றத்திலே எடுத்துப் பேசலாம் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருசில பேர்கள் செய்யக்கூடிய குறைகளினால் பெரிய கலவரங்கள் தோன்றுகின்ற சூழ்நிலைகளை நாம் பார்க்கிறோம். நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். போலீஸ்காரர்களின் சம்பளத்

தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர் கூறினார். போலீஸ்காரர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டித் தரவில்லையென்றால், நம்முடைய அமைச்சர்களுக்கும் இதே தலைவலிதான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ்காரர்கள் தங்களுடைய குறைந்த சம்பளத்தில் வீட்டில் ஏழு, எட்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு எப்படி ஜீவனம் நடத்த முடியும்? ஆகவேதான் இயற்கையாக ஏற்படும் சூழ்நிலைகளினால் தெருவில் இருக்கும் கறிகாய்க் கடைக்காரரிடமும், லஞ்சம் பெறுகிறான். ரோடில் சைக்கிளில் லைட் இல்லாமல் போனால் பிடிக்கிறான், லஞ்சம் கொடுத்தால் வாங்கிக்கொண்டு விட்டு விடுகிறான். ஆகவே, குடும்பச் சூழ்நிலைகளையொட்டியே அவன் லஞ்சம் வாங்க முற்படுகிறான்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு போலீஸ்காரருக்கும் மாதத்திற்கு இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்று டார்ஜெட் ஃபிக்ஸ் செய்து விடுகிறார்கள். இதன் காரணமாக போலீஸ்காரர்கள், "குதிரைக்கு முன்னே கடிவாளம் போட்ட மாதிரி" யார், யார் தெருவில் காய்கறி கடை வைத்திக்கிறார்கள், யார் முக்காடு போட்டுச் செல்கிறார்கள், யார் சைக்கிளில் டபிள்ஸ் செல்கிறார்கள் என்று இவர்களையெல்லாம் கேஸ் எழுதிக் கொள்கிறார்கள். தங்களுக்குப் பிடிக்காதவர்களாக இருந்தால், அவர்களையும் கேஸில் எழுதிக் கொள்கிறார்கள். மேலும் செக்யூரிடி கேஸ், முக்காடு கேஸ் எல்லாம் எழுதுகிறார்கள். தங்களுக்குப் பிடிக்காதவர்களைப் பிடித்துக் கொண்டு போய் அவன் வாயில் எதையாவது ஊற்றி, சாராய வாசனை வருகிறது என்று சொல்லி கேஸ் எழுதிவிடுகிறார்கள். இவைகள் எல்லாம் பழைய வெள்ளைக்காரன் காலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறைகள். இவைகளை நாம் அப்படியே பின்பற்றி வருகிறோம். ஆகவே, போலீஸ் துறையிலுள்ள விதி முறைகளை நாம் மாற்றியாக வேண்டும். வெள்ளைக்காரன் காலத்திலிருந்த சட்டங்களை எல்லாம் பரிசீலித்து, புதிய விதி முறைகளை ஏற்படுத்த ஒரு கமிஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொகள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வீட்டுக்காரன் சொல்படிதான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். மேலும் போலீஸ்காரர்களுடைய பிள்ளைகள் காலேஜ் படிப்பு படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதோடு கூட, "ஃப்ரி மெடிகல் ரிலீப்" அவர்களுடைய குடும்பங்களுக்குக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் போலீஸ்காரர்களையும் இ.எஸ்.ஐ. திட்டத்தில் சேர்த்து, அவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கும் வைத்திய சிகிச்சை அளிக்க வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும். மேலும் போலீஸ்காரர்களுக்குத் தரப்படும் பயணப்படி, ஓவர் டைம் சம்பளம் இவைகள் மிகவும் குறைவு. இவைகளையும் நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மொகலூர் என்ற கிராமத்தில் ஒரு பெரிய மனிதர் இருந்தார். அவருக்கு வேண்டிய ஒரு பெண்மணி வீட்டில் ஏதோ களவு போய்விட்டது என்று சொல்லி, போலீஸுக்குச் சொல்லியனுப்பி, சேத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த அதிகாரிகள், ஊரில் சந்தேகப்பட்ட எல்லோரையும் ஸ்டேஷனுக்கு வரவழைத்தார்கள். இந்தக் களவில் உண்மையாக ஈடுபடாதவர்களையும் வரவழைத்தார்கள். ஸ்டேஷனில், சேற்றில் இருக்கும் பிள்ளைப்பூச்சியை எடுத்து ஒவ்வொருவர் தொப்புளிலும் விட்டுப் பார்த்தார்கள். யார் குற்றவாளி என்பதைக் கண்டறிய இதுவா வழி? இம்மாதிரியான காரியங்களைச் செய்த போலீஸ் அதிகாரிகளை உடனே வேலையிலிருந்து நீக்க வேண்டும். அப்போதுதான் பொதுமக்கள் எல்லோருக்கும் ஒரு ஆறுதல் கிடைக்கும்.

நான் நகரசபைத் தலைவராக இருந்தபோது ஒரு கேஸை போலீஸில் கொடுத்தேன். அதாவது ஊரில் ஒரு பெரிய மனிதர். அவர் வீடு கட்டுவதற்கு பிளான் சாங்ஷன் வாங்காமல் அன்-ஆதரைஸ்டு முறையில் வீடு கட்டிவிட்டார். அதைச் சர்வே செய்வதற்காக சர்வே இன்ஸ்பெக்டர் வீட்டுக்குள்ளே போய் பார்த்தார். அந்தப் பெரிய மனிதருக்குக் கோபம் வந்து





பிளான் சாங்ஷன் ஆனபிறகுதான் வீடு
விட்டது. சட்டப்படி பார்த்தால் ... வீடு கட்டிவிட்டார்.
கட்ட வேண்டும். அந்த மனிதர் தன் செல்வாக்கினால் ... அவரை அடிக்க
சர்வே இன்ஸ்பெக்டர் ஒரு நாள் ரோடிலே வரும்போது ... நான் நகரசபைத்
அந்தப் பெரிய மனிதர் வந்தார். இதைக் கேள்விப்பட்டு ... அங்கிருந்த
தலைவன் என்ற முறையில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ... அவர் ஜி.டி. என்ட்ரி
சப்-இன்ஸ்பெக்டரிடம் ஒரு கேஸ் கொடுத்தேன். ... வராது, இவர்மேல்
போட்டுவிட்டு, இந்தக் கேஸ் எந்த ஆக்டின்கீழும் ... டி.எஸ்.பி.க்கும்
நடவடிக்கை எடுக்க வழியில்லை என்று சொன்னார். ... "சிட்டி
இதுபற்றி எடுத்துச் சொன்னேன். அவரும் வழியில்லை என்றார். ... எவ்வித
போலீஸ் ஆக்ட் 75-ல்" கொண்டுவரலாம் என்று சொல்லியும், ... முறையில்
நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டமன்றப் பிரதிநிதி என்ற ... போலீஸ்
கேஸ்களைக் கொடுத்தால் எடுத்துக்கொள்ளலாம். இதுபற்றியும் ... என்று
துறை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் ...
கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே,
இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது
ஒருசில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கிறேன். இன்று நாட்டில்
அமைதியைக் காப்பதற்கும், மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதற்குமான
வழியில் காவல்துறை இலாக்காவினர் பணிபுரிந்து வருகிறார்கள். இன்று
இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறபோதுதான் இருபது ஆண்டுகாலமாக
ஆட்சிப்பொறுப்பில் இருந்து விலகியுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு அங்க
லாய்ப்பு ஏற்பட்டு வருகிறது. அவர்கள் ஆட்சி மாறியவுடன் நாட்டில்
இன்னது ஏற்படலாம் என்பதுபற்றி தவறான ஒரு கருத்தை
வைத்திருந்தார்கள். காரணம் போலீஸ் இலாக்காவை வைத்து
க்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களையும்
தொண்டர்களையும், அடக்குமுறைகாரணமாகப் பல தொந்தரவுகளுக்கு
உள்ளாக்கியிருக்கிறார்கள். ஆகவே திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி ஏற்பட்டவுடன், காவல் துறையினர் அவர்களுடன் ஒத்துழைக்க-
மாட்டார்கள். அதன் காரணமாக நாட்டில் அமைதி குலையும்,
அங்கங்கே குழப்பங்கள் ஏற்படும், இதை வைத்து ஆட்சியைக்
கவிழ்த்து விடலாம் என்று எண்ணி இருந்தார்கள். அறிஞர்
அண்ணா அவர்கள் பொறுப்பை ஏற்ற பிற்பாடு அவர்கள் கொண்ட
கொள்கையின் அடிப்படையில், நல்ல முறையில் போலீஸ
நிர்வாகத்தினர் ஒத்துழைத்து வருகிறார்கள். இந்த நாட்டில்
அமைதி நிலவ நல்ல முறையில் பணியாற்றி வருகிற காரணத்
தினால், எதிர்க் கட்சியினர் ஏமாற்றம் அடைந்துவிட்டார்கள் என்று
தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதன் காரணமாகத்தான் 20 வருட கால
அனுபவம் பெற்றவர்கள் நல்ல பல யோசனைகளைச் சொல்லாமல்
மனதில் இருக்கக்கூடிய உணர்ச்சிகளை இங்கே கொட்டித் தீர்த்திருக்
கிறார்கள்.

அடுத்து, போலீஸ் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால்
ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நகரங்களைப்
பொறுத்தவரையில் போலீஸ் அமைப்பு நல்ல முறையில்
இயங்கிவருகிறது. நகரப் பகுதியைச் சுற்றியிருக்கக்கூடிய
இடங்களில்தான் கொஞ்சம் கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள்.
உதாரணமாக, ஒரு சர்கிள் இன்ஸ்பெக்டர் 20 மைல் சுற்றளவுக்குச்
சென்று தன் பணிகளை ஆற்றவேண்டியிருக்கிறது. போக்கு
வரத்து வசதி அவர்களுக்கு இல்லாத காரணத்தினால், சரியான
முறையில் பணியைச் செய்யமுடியவில்லை. ஆகவே கிராமப்
பகுதிகளுக்கு சென்று நல்ல முறையில் பணியாற்ற சர்க்கிள் இன்ஸ்
பெக்டர்களுக்கு உடனடியாக ஜீப் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று சாராயம் சம்பந்தமாகப் போலீசார் பல
கேஸ்கள் போடுகிறார்கள். பிடிக்கப்படுகிற லாகிரி வஸ்துக்கள்
சென்னைக்கே பரிசோதனைக்குக்கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது.

இதை எடுத்துக்கொண்டு ஒரு போலீஸ்காரர் சென்னை வர பாட்டா 1¼ ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதன்காரணமாகப் பல இடங்களில் சென்னைக்கு வருவது என்றால் போலீஸ்காரர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆகவே இப்படி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனில் இருந்தும் சென்னைக்கு வருவதற்குப் பதிலாக மொத்தமாக மாவட்ட அளவில் ஒருவர் வர ஏற்பாடு செய்து, அவருக்கும் அதிக அளவில் பாட்டா கொடுக்க ஏற்பாடு செய்தால் வசதியாகப் போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் போலீஸ்காரர்கள் தவறு செய்துவிட்டதாக சப்-இன்ஸ்பெக்டர் நடவடிக்கை எடுத்தால், அதுபற்றிப் போலீஸ் இலாக்காவில் உள்ள மேல் அதிகாரிகளே விசாரிக்கிறார்கள். போலீஸ்காரர் செய்தது தவறா, சப்-இன்ஸ்பெக்டர் செய்தது தவறா என்று விசாரித்து நியாயம் வழங்குவதற்குப் பதிலாக, சப்-இன்ஸ்பெக்டர் .செய்த காரியத்தையே ஆதரித்துவிட்டுப் போகிறார்கள். இதன் காரணமாகப் பல போலீஸ்காரர்களின் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. ஆகவே, இதுபோன்ற நிலையில் புகார் வந்தால், வேறு இலாக்காவைச் சேர்ந்தவர் விசாரணை நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் விளாத்திக்குளத்தை எடுத்துக்கொண்டால், அங்கே உள்ள காவல் நிலையம் 12 மைல் அளவுக்குப் பணியாற்ற வேண்டியிருக்கிறது. இப்படி மிகப் பரந்த அளவுக்கு போலீஸ் ஸ்டேஷன் ஒன்றாக இருக்கக்கூடிய இடத்தில், அவர்கள் வேலைப் பளுவைக் குறைக்க—விளாத்திக்குளம் பகுதியில் 2 போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்துவது—மிக நன்றாக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல காரியங்களை இந்த இலாக்காச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திருவும், தெளிவும் பெற்ற முதல் அமைச்சர் அவர்களால் கோரப் பட்டிருக்கும் மானியத்தை ஒட்டிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டின் பாதுகாப்புக்கு அரணாக உள்ள ராணுவத்தை " First line of defence " என்றால் போலீஸ் துறையை 'Second line of defence' என்று சொல்வார்கள். அப்படியென்றால் போலீஸ் துறை மிக இன்றியமையாத துறை ஆகும். இதற்குச் சான்றாக 1965 நவம்பர் 7-ஆம் தேதி முதல் நாகாலாந்தில் பாதுகாப்புப் பணியைப் போலீஸ் படையினர் செய்து வருகிறார்கள். நேபாவுக்கு அனுப்பப்பட்ட மலபார் சிறப்புக் காவல் படையினர் 1964, ஜூலை முதல் அங்கே சிறப்பாக அமைதியைக் காத்து வருகிறார்கள். மவுண்ட் அபு பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்ற 5 ஐ. பி. எஸ். காரர்களை மீண்டும் நம்முடைய மாநிலத்திற்கே திருப்பி வழங்குமாறு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுள்ளார்கள். இங்கேயே பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிற எம். ஏ., பி.ஏ.. படித்தவர்கள் எல்லாம் பதவி உயர்வு இல்லாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே வெளியில் இருந்து வருகிறவர்களுக்கு 50 சத விழுக்காடு உயர்வும், இங்கேயே உள்ளவர்களுக்கு 50 விழுக்காடு உயர்வும் கொடுப்பது ஓரளவுக்குச் சிறப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1967, ஏப்ரல் மாதத்தில் இருந்து " Forensic Science and Criminology " படிப்பில் எம்.ஏ., வகுப்பைத் தோற்றுவித்திருப்பது அதுவும் இரண்டாண்டுப் படிப்பை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் எட்டு பேர்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள். அதற்காகத் தமிழக அரசைப் பாராட்டவேண்டும்.





அடுத்து காங்கிரஸ்காரர்களால் ஒழிக ஒழிக என்று கூச்சலிடப்பட்டு அவமதிக்கப்பட்ட உயர்தர போலீஸ் அதிகாரி இன்றைக்கு அவர்களுடைய கட்சியினர் ஆளுகின்ற மத்திய அரசுக்கே வா வா என்று அழைக்கப்படுகிறார் என்றால் அந்த அதிகாரியினுடைய திறமையை அகில இந்தியா உணர்ந்திருக்கிறது. சிறந்த பதவியை பெருமையோடு அளித்திருக்கிறார்கள்.

அடுத்து, மலபார் போலீஸ் என்று இருக்கிற பெயரை மாற்ற வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்களிடம் கோரியிருக்கிறார்கள். தமிழக எஸ்டிமேட் கமிட்டியிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அதன் பெயரையும் மெட்ராஸ் போலீஸ் என்று மாற்றவேண்டும். அதற்கான பரிசீலனையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தில் மிகச் சிறந்த துப்புத் துலக்கும் பணியைச் செய்பவர்கள் ஸ்காட்லாண்டு யார்டு போலீஸ் துறையினர். அதற்கு அடுத்தபடியாக தமிழக போலீஸ்காரர்களின் திறமையைத் தான் உலகமெங்கும் பாராட்டுகிறார்கள். நம்முடைய துப்பறியும் பிரிவில் சயிண்டிபிக் லாப்பரேட்டரி தோற்றுவிக்கப்படவேண்டுமென்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசைப் பாராட்டு கிறேன். காவல் படையினருக்கு 80 சதவிகித விழுக்காடாவது வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்ற இவ்வரசின் நோக்கத்தையும் பாராட்டுகிறேன்.

எதிர்க் கட்சியினர் சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது, அராஜகம் நிலவுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இவ்வரசு எவ்வளவு பொறுப்புடன் செயலாற்றி வருகிறது என்பதை மத்திய அரசின் அமைச்சர்களே பாராட்டுகிறார்கள். குறிப்பாக இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது தமிழக முதலமைச்சர் அவர்கள் "tactfully managed" என்று மத்திய மந்திரி திரு. சவான் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அடுத்து நாய்ப் படையையும் நல்ல முறையில் விஸ்தரிக்கவேண்டும். சுதந்திராக் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டது போன்று தவறு வராமலும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாய்ஸ் க்ளப் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்காகவும் இவ்வரசைப் பாராட்டுகிறேன். 1967–68-ல் துப்பாக்கிச் சூடு நடந்தது. அதிகமானவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். தமிழகத்தில் இருப்பவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி எல்லோரையும் ஒரு சேரப் பார்க்கும் இந்த அரசுதான் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நஷ்டஈடு [illegible] அளிக்க [illegible] முன்வந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு [illegible] நபரின் [illegible] உயிரும் விலை மதிக்க வொண்ணாதது என்பதுதான் முதலமைச்சர் அவர்களின் கருத்தாகும். அந்த வகையில்தான் முதலமைச்சரவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

1964-இல் கள்ளக்கடத்தல் தடுப்பு—கண்காணிப்புச் சாத்து—விஜிலன்ஸ் செல் மூலம் 3,142 குற்றங்களைத் துப்புக் துலக்கியிருக்கிறார் பி.ப. 1-30
கள். அவற்றில் 414 குற்றங்கள் பதுக்கல் சம்பந்தப்பட்டவை, மற்ற 2,726 குற்றங்கள் கள்ளக்கடத்தல் சம்பந்தப்பட்டவை.

தீயணைப்புப் படை சம்பந்தப்பட்டவரை 1967-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் தேதி முதல் தனிப்பட்ட இயக்குநர் ஒருவரை போட்டு அது நல்ல முறையில் இயங்கி வருகிறது. 55 ஃபையர் சர்வீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. சென்னையில் 12-ம் மற்ற இடங்களில் [illegible] 43-ம் [illegible] இருக்கின்றன. [illegible] ஜெயங்கொண்டம் பகுதியைச் சுற்றியுள்ள [illegible] 40 [illegible] மைல் சுற்றளவில் எந்த வீடு எரிந்தாலும் வீடு எரிந்தபிறகு அந்த சாம்பலை அணைக்கக்கூடிய முறையில்தான்

பரிதாபமான நிலைமை இருக்கிறது. அங்கேயும் ஒரு ஃபைர் சர்வீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்தவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளு கிறேன்.

நான் ஒரு மேல்நாட்டுப் பத்திரிக்கையைப் பார்த்தேன், அதிலே காரை விரைவாக ஓட்டிச் செல்வதைத் தடுப்பதற்காக ஒரு பழமொழி சொல்லப்பட்டிருந்தது.

"Better be late
Than be 'late'"

என்று இருந்தது. விரைவாக ஓட்டிச் சென்று விபத்துக்குள்ளாகி காலங்கடந்தவர் என்ற நிலைக்கு வராமல் மெதுவாக ஓட்டி விபத்துக்குள் ளாகாமல் ஓட்டவேண்டும் என்று கூறப்படுகிறது. அதை போலீஸ் கமிஷனர் அவர்கள் இங்கே பொறித்தால்கூட நல்ல முறையில் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறி,

"நல்லவை செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்பதற்கேற்றவாறு நல்லவை செய்ததைப் பற்றி பாராட்டாவிட்டாலும் கூட கெட்டவை செய்யாமல் இருப்பதற்கு முயற்சிக்கவேண்டும் காங்கிரஸ்காரர்கள் என்று கூறிக்கொண்டு, இந்த போலீஸ் மானியத் யத்தை அறிஞர் அண்ணா அவர்கள் காவல் துறையின் நன்மைக்காகக் கொண்டுவந்திருக்கிறார்கள் அதை நான் இதயசுத்தியோடு பாராட்டுகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. ராமச்சந்திர துரை : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இங்கு நடைபெறுகின்ற காவல் துறை மானியத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையையொட்டிச் சில கருத்துக்களைக் கூறுவதற்குக் கடமைப் பட்டு இருக்கிறேன். இந்த ஆய்வுரையிலே முதன்முதலிலே கொடுக்கப்பட்டிருக்கிற வாசகம், "தமிழ்நாட்டு காவல் துறை நாட்டி லேயே மிகச் சிறந்த நிறுவனம் என்ற நற்பெயரைத் தொடர்ந்து காத்து வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அது ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தது 1966 வரை. 1966 தாண்டி 1967-லே இந்த ஒரு ஆண்டுக் காலத்திலே நாட்டிலே நடை பெற்ற நிகழ்ச்சிகளைக் காணுகின்ற நேரத்திலே அது பாராட்டுக்குரிய நிலையில் இருக்கிறதா அல்லது வருத்தத்திற்கு உரிய நிலையில் இருக்கிறதா என்பதை ஒரு சில ஆதாரங்களுடன் குறிப்பிட விரும்பு கிறேன். இந்த ஒரு ஆண்டுக் காலத்தில் நடந்தது பற்றி கூறுவது வழக்கைப்பற்றியதாக இருந்தாலும் கூட வழக்கின் உள்ளே சென்று எதையும் குறிப்பிடாமல் அதைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். தேனியில் இளைஞர் காங்கிரஸ்காரர்கள் கைவிலங்கிட்டு கொண்டுபோகப்பட்டனர். திருவல்லிக்கேணியில் உள்ள அயோத்தியா குப்பத்தில் காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார் கள், சுதந்திர தின ஊர்வலத்தில் காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். மதுரையிலே கண்ணதாசன், ஜெயகாந்தன், நெடுமாறன் ஆகியோர் காரில் சென்றபோது தாக்க முயற்சி நடை பெற்றிருக்கிறது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கி றார்கள். மதிப்பிற்குரிய அன்பழகனைத் தாக்கியதாக காங்கிரஸ் காரர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். டி. ஜி. கிருஷ்ண மூர்த்தி தாக்கப்பட்டிருக்கிறார், ஜெயராஜ் வெட்டப்பட்டிருக்கிறார், தாழங் குப்பம் ராஜேந்திரன் கொலைசெய்யப்பட்டு இருக்கிறார். தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், இந்தியத் துணை அமைச்சராக இருக்கின்ற திரு. கே. எஸ். ராமசாமி அவர்களும் சென்றபொழுது அவர்களைக் கல்லால் தாக்கியிருக்கிறார்கள். இன்னும் கடலூரிலே கறுப்புக்கொடி காட்டியதற்காக் இரண்டு





பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லிலே செம்பட்டியிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அமைச்சுதான் மாறியிருக்கிறதே தவிர இயந்திரம் அப்படியே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த நாட்டிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காகக் காங்கிரஸ்காரர்கள் தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்களே தவிர மற்றக் கட்சியினர் கைது செய்யப்பட்டிருப்பதாக நிரூபிக்க முடியாது. ஒரு கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒரு கூட்டத்திலே பேசுகின்ற நேரத்திலே காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நேரத்திலே கதர்ச் சட்டைக்காரர்களைக் கண்டு காக்கிச் சட்டைக்காரர்கள் பயந்தார்கள் அவர்களுக்குப் பணிந்தார்கள், இன்று எங்களுடைய காங்கிரஸ்காரர்களின் முதுகெலும்பை முறிக்கச் சொல்வோம் என்று சொல்லியிருக்கிறார் கள், சட்டம் தடுக்கிறது அவருடைய பெயரைச் சொல்வதற்கு. அப்படி ஒரு முக்கியஸ்தர்கள் பேசுவதன் காரணமாக நாங்கள் நிர்வாகத்தைச் சந்தேகப்படக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. தீ விபத்துக்கள் பற்றி சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது அந்தக் கூட்டம் நடந்த நேரத்திலே மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையிலே பேசுகின்ற நேரத்திலே பொதுமக்களால் பேசிக்கொள்ளப்படுகிறது, காங்கிரஸ்காரர்கள் தான் தீ வைத்ததாக என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அவர்கள் இதைப் பேசினார்கள் என்று எண்ணுகின்ற நேரத்திலே உண்மையிலே வேதனையடையக்கூடிய அளவிலேதான் இருக்கிறோம். அவர்கள் பேசியதற்குப் பிறகுதான் அன்றிருந்த ஐ. ஜி. அவர்கள் காங்கிரஸ் காரர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அறிக்கை வெளி யிட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அப்படி கூறியதற்குப் பிறகுதான் ஐ.ஜி. அவர்கள் அப்படி வெளியிட்டதில் காரணமாக அரசுக்குப் போலீஸ் உடந்தையாக இருக்கக்கூடிய அளவு இருப்பதாக கருதப்படுகிறது. பொதுமக்கள் பேசினார்கள் என்பதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள் என்பதற்கா வருந்துகிறேன். நானும் பொதுமக்கள் பேசுகின்ற நேரத்திலே சென்றிருக்கிறேன். ஆனால் அம்மாதிரியான வார்த்தைகள் என் காதில் விழவில்லை, என்னுடைய காதில் விழுந்தவையெல்லா தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் குடிசைகளுக்காக 80 ரூபா கொடுக்கப்போகிறார்கள், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு வீடு கட் கொடுக்கப்போகிறார்கள் என்பதால் திராவிட முன்னேற்றக் கழகத்தின சொல்லித்தான் தீ வைத்ததாகப் பேசிக் கொள்கிறார்கள். இன்னு மக்கள் பேசியதை நான் இங்கே கூற வேண்டுமானால் அசிங்கமு ஆபாசமும் ஆக இருக்கும். அம்மாதிரி வார்த்தைகளைக் குறிப்பி வதற்கு இங்கே நான் விரும்பவில்லை. கருப்புக் கொடி காட்டுவதற் உரிமை இருக்கிறது, என்று முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவ இங்கு பேசினார்கள். கருப்புக் கொடி கடலூரிலே மதிப்பிற்குரி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் பொதுப் பணி துறை அமைச்சர் அவர்களும் அங்கே சென்ற நேரத்தி கருப்புக்கொடி காட்டினார்கள் என்பதற்காக இரண்டு காங்கிர காரர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பத்திரிக்கையிலே பார்த்தே கருப்புக் கொடி காட்டுவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கருப்புக் கொடி காட்டியதற்கு கைது செய்யப்பட்டார்களா என்பதற்குத் தகவல் தெரியாது. செம் பட்டிலே கருப்புக் கொடி காட்டினார்கள், அந்த அளவோடு நிறுத் கொண்டார்கள். கடலூரிலே கருப்புக் கொடி காட்டியவர்க நீண்ட கம்புகளோடு தாக்குவதற்கு ஓடி வந்தார்கள், பெரிய பெ தட்டிகளைத் தூக்கிப் போட்டார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அதே நேரத்தில் மதுரை கண்ணதாசன் அவர்களும் ஜெயகாந்தன் அவர்களும் நெடுமார அவர்களும் காரிலே வருகிறபோது அரிவாள் கம்பு ஈட்டியே கற்களை எறிந்துகொண்டு ஒரு முக்கியஸ்தர் வந்ததாகப் பத்திரிக் யிலே பார்த்தோம். அம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக் நேரத்தில்..................................................

[1968 மார்ச் 20

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதே பத்திரிக்கையிலேதான் இரண்டுவிதமான செய்திகள் வந்திருக்கின்றன. ஒரு முக்கியஸ்தர் முன்னால் இருந்துகொண்டு செய்தார். அதுவரை நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு ஒரு முக்கியஸ்தர் பின்னால் இருந்தார் என்று போடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** முன்னாலே இருந்தாலும், பின்னாலே இருந்தாலும் என் அவரைக் கைது செய்யவில்லை என்பதுதான் கேள்வி. அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தவறான போக்கில் போகிறார் என்பது நமக்குத் தெரிகிற நேரத்தில் என் இரு சாராரையும் கைது செய்யக்கூடாது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காங்கிரஸ் பத்திரிக்கையிலே யார் யாருடைய பெயர் வருகிறதோ அவர்களையெல்லாம் கைது செய்ய வேண்டுமென்பது உறுப்பினர் அவர்களுடைய விருப்பமா ? காங்கிரஸ் பத்திரிக்கைகளில் யார் யார் பெயர் வருகிறதோ அவர்களையெல்லாம் கைது செய்வது என்றால், அதைப் போல் திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிக்கைகளில், நடைபெற்ற கலவரங்களைப் பொறுத்து யார் யாருடைய பெயர் அதிலே குறிப்பிடப்படுகிறதோ அவர்களையெல்லாம் கைது செய்வது என்ற முறை ஏற்பட்டால் அதுவும் நியாயமானதுதான் என்பதை உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்களா ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நான் கூறுவது அமைச்சர் அவர்கள் கூறுவது போல் அல்ல. நாட்டிலே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடக்கின்ற காலத்தில், பெரிய புரட்சிகள் நடக்கின்ற காலத்தில், மொழிப் பிரச்சினையின்போது ஏற்பட்ட கலவரங்களினால் மத்திய அரசினுடைய பொருள்கள் சேதம் அடைந்த நேரத்தில்......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் மதுரையிலிருந்து வேறு பல ஊர்களுக்குப் போய்விடுகிறார்கள். மதுரையில் நின்று நான் சொன்னதற்குப் பதில் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** மதுரையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி நவசக்தி பத்திரிக்கையில் மட்டுமல்லாது மற்ற பல பத்திரிக்கைகளிலும் வந்தது. கழக ஏடுகளில் காங்கிரஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டி வந்தது. காங்கிரஸ் பத்திரிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் குறை கூறி வந்தது. எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, இரு சாராரையும் கைது செய்திருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதிலேதான், போலீஸ் துறை எந்த முறையிலே வேலை செய்கிறது என்பதை அறியாமல் பேசுகிறார். பத்திரிக்கைச் செய்திகளை வைத்துக் கொண்டோ, அரசியல் கட்சிக்காரர்கள் கூறுவதை வைத்துக் கொண்டோ போலீஸ்காரர்கள் யாரையும் கைது செய்ய மாட்டார்கள். அவர்கள் விசாரணை நடத்தி, அவர்களுக்கு நியாயம், தேவை என்று பட்டால்தான் கைது செய்வார்கள். அரசியல் கட்சி மாச்சரியங்கள் வளர்ந்திருக்கிற நாட்டில் ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களைப் பற்றியும் மற்றக் கட்சிப் பத்திரிக்கையில் எழுத ஆரம்பித்தால், அதன் பேரில் கைது செய்வது என்று ஆரம்பித்தால் நம்மில் பல பேர் அங்கேதான் இருப்பார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** வெளியிலே மக்கள் போலீசார் ஒரு சார்பாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று பேசிக் கொள்ளுகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் எப்படி சென்ற பட்ஜட் கூட்டத்தில் " பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள் ......" என்று கூறினார்களோ அதே போன்று இதைப் பற்றியும் பொது மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அதைத்தான் இந்தச் சபையிலே கூறுகிறேன்.



1968 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொதுமக்கள் நம்மை விடக் கொஞ்சம் விவரம் தெரிந்து கூடப் பேசுகிறார்கள். மதுரை சம்பவத்தைப் பொறுத்து காங்கிரஸ்காரர்கள்தான் கைது செய்யப்படுகிறார்கள். மற்றக் கட்சிக்காரர்கள் கைது செய்யப்படவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இரண்டு சார்புடையவர்கள் பேரிலும் வழக்கு இருக்கிறது, இரண்டு சார்புடையவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நன்றி. சட்டமன்ற உறுப்பினர் திரு ஜெயராஜ் அவர்கள் சென்ற போலீஸ் மானியத்தின்போது இங்கு பேசுகின்ற நேரத்தில், தன்னைக் கொலை செய்யப் போவதாகக் கடிதங்கள் வந்திருப்பதாகவும், தனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அவ்வாறு இல்லை. தன்னைக் கொலை செய்யப்போவதாகக் கடிதங்கள் வந்தன என்று பேசியதாகக் கூறுகிறார்கள். அப்படி நடவடிக்கைக் குறிப்பில் இல்லையென்பதைத் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நடவடிக்கைக் குறிப்பில் இல்லையென்றால் அதை விட்டுவிடுகிறேன்.

காவல் துறையினருக்குப் பல சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். ஒரே ஒரு குறிப்பை மாத்திரம் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ்காரர்களுடைய வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்காக மாதத்திற்கு ஐந்து ரூபாயிலிருந்து ஏழு ரூபாய் வரை வாங்குவதாகவும், 6 மணியிலிருந்து 9 மணி வரைதான் விளக்குகளைப் போட வேண்டுமென்றும், ரேடியோ வைத்திருந்தால், 20 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை கட்ட வேண்டியிருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். அவர்களுக்காக தனி மீட்டர் வைத்து........

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நிறையப் பொதுமக்கள் பேசிக்கொள்வதைக் கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டுப் பேசுகிறார். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் முழுத் தகவல்களைச் சேகரித்துக் கொண்டு பேசினால் சரியாக இருக்கும். வேறு ஒரு உறுப்பினரும் போலீஸ்காரர்களுக்கு மின்சாரக் கட்டணம் 10 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரை போடப்படுவதாகச் சொன்னார்கள். அது தவறு. போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு 10 யூனிட் வரையிலும், ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு 12 யூனிட் வரையிலும் இலவசமாக, கட்டணம் இல்லாமல் உபயோகித்துக் கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதிலும், டிசம்பர், மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களில் 15 யூனிட் வரை அவர்கள் இலவசமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு போலீஸ்காரர் வீட்டுக்கும் தனித் தனி மீட்டர் வைத்தால் அதிகமாகச் செலவாகும் என்பதால் பல வீடுகளுக்கு ஒன்றாகச் சேர்த்து மீட்டர் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் 9 மணிக்கு விளக்குகளை நிறுத்தி விடுவதில்லை. இரவு 10 மணி வரை விளக்குகளைப் போட்டுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சபாநாயகர் அவர்களே, மற்றொரு குறை காவல் துறையினர் மத்தியில் பேசப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி படித்த........

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத்திலே உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான குறிப்பைக் கூறி அது தவறானது என்பதற்கு விளக்கம் கொடுத்த பிறகு அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லுவது முறை. அதை விட்டு அவர்கள் மதுரையில் இருந்து தஞ்சைக்குப் போகிறார். தஞ்சையிலிருந்து சென்னைக்குப் போகிறார். சென்னையிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகிறார். அந்த மரபு அவ்வளவு நன்றாக இருக்காது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** மக்கள் எல்லா இடத்திலும் பேசுகிறார்கள். தஞ்சையிலும் பேசுகிறார்கள், சென்னையிலும் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தாங்கள் கூறியது சரியல்ல என்ற நிலையில் விளக்கம் கொடுத்த பிறகு, அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லுவதாலே, உங்கள் கட்சிக்கு விரோதமாகப் பேசியதாகக் கண்டிப்பார்களோ என்ற ஐயப்பாடு வேண்டாம். அந்த நிலையைப் பற்றி விளக்கும்போது, விளக்கத்திற்கு நன்றி என்று சாதாரணமாகச் சொல்லலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அமைச்சர் அவர்கள் எந்தப் பள்ளியில் படித்து வந்தார்களோ அதே போன்று மிகவும் எளிய மக்களோடு கலந்து பழகித்தான் காங்கிரஸ் கட்சிக்கு வந்தவன. புதிதாக இந்தச் சட்ட சபைக்கு வந்திருப்பதால் ஒரு சில சட்ட திட்டங்கள் தெரியாதிருக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர்களைப் போலவே, நானும் பரோடா மகாராஜாவும் ஒன்றாகப் படிக்கவில்லை. நானும் தங்களைப் போன்றவர்களோடு சேர்ந்துகொண்டுதான் படித்தேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** முதலமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுகின்ற நேரத்தில் புதுக்கோட்டை மகாராஜா காங்கிரஸ் கட்சி. கந்தர்வகோட்டை ஜமீன்தார் காங்கிரஸ் கட்சி என்று பேசியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் திரும்பிப் பார்த்தாரானால் அங்கே என்னுடைய உறவினரான ஜமீன்தார் இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய புதுக்கோட்டை மகாராஜா குடும்பத்தினரும், கந்தர்வகோட்டை ஜமீன்தார் குடும்பத்தினரும் இவ்வளவு எளிய நிலைக்கு வந்திருப்பது நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. எங்கள் கட்சியிலுள்ளவர் பெயரே பாலைவனம் . (சிரிப்பு).

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த சில கான்ஸ்டபிள்கள் 10, 15 ஆண்டுகள் செர்வீஸில் இருப்பவர்கள் இருந்தும் எஸ்.எஸ்.எல்.சி. படிக்காதவர்கள் சாதாரண கான்ஸ்டபிள்கள்கூட ஆர்டர்லியாகப் புரமோஷன் கொடுக்கப்படுகிற நிலையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்குப் புரமோஷன் கிடைக்காமல் இருக்கிறது என்ற புகார் இருக்கிறது. அந்த மாதிரி குறைகள் எல்லாம் காவல் துறையில் இல்லாத படி செய்து, இந்த நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நல்ல முறையில் காப்பாற்றப்படுவதற்கு அரசாங்கம் நல்ல வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, இந்தப் போலீஸ் துறை மானியத்தின்மீது நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில வார்த்தைகள் சொல்லக் கருதுகிறேன். மற்றத் துறைகளைப் போல் போலீஸ் துறையை எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், மற்றத் துறையினருக்கு இங்க் பாட்டில்ஸ், காகிதம் இவைதான் இருக்கின்றன. ஆனால், போலீஸ் துறையினருக்கு துப்பாக்கிகள், குண்டுகள், விலங்குகள், கம்புகள், இப்படிப் பல சாதனங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த சாதனங்களை எல்லாம் கையாளுகின்றவர்களும், கையாள வேண்டிய நேரம் எது, எப்படி என்பது பற்றி தீர்மானிக்க வேண்டியவர்களும் அவர்களாகவே இருக்கிறார்கள். இந்தச் சாதனங்களை அவர்கள் கையாள்வது என்பது பழைய காலத்திலிருந்தே ஒரு சம்பிரதாய முறையில் வளர்ந்திருக்கிறது. பழைய காலத்தில் போலீஸ் துறை எப்படி இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். வெள்ளைக்காரன் அரசு இருந்த காலத்தில் அதற்கு ஆதரவாக மக்களின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதற்காகப் போலீஸ் துறையைப் பயன்படுத்தி வந்தார்கள். அதேபோல் காங்கிரஸ் ஆட்சி காலத்திலும், அவர்களின் அரசுக்குப் பாதுகாப்பாக மற்றக் கட்சிகள் மீது வழக்குகள் போடுவதற்கும் அவர்களைத் துன்புறுத்துவதற்கும் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு வந்தனர். ஆனால், இந்த



அரசு அப்படித்தான் இருக்குமா என்று ஆராயும்போது இந்த அரசு கொண்டிருக்கிற சமுதாயத்தைப் பற்றிய கருத்து முன்னுக்கு வருகிறது. கடந்த இரு அரசுகளும் கொண்டிருந்த கருத்துக்களுக்கும் இந்த அரசு கொண்டிருக்கிற கருத்துக்கும் வேறுபாடு இருக்கிறதென்று கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு வேறுபாடு இருப்பதால், அந்தச் சாதனங்களை எல்லாம் அவர்கள் பயன்படுத்தியது போல் பயன்படுத்தாமல் வேறு மாதிரியில் பயன்படுத்துவதற்கான பயிற்சியையும், பழக்கத்தையும் சம்பிரதாயங்களையும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

போலீஸ் ஸ்டேஷன் என்றால் அது மனிதன் செல்வதற்குத் தகாத இடம், பயங்கரமானதொரு இடம் அடி, குத்து கொடுக்கிற இடம், தண்டனை அளிக்கக்கூடிய இடம் என்ற உணர்வுதான் பெரும்பாலான மக்களிடையே இருந்து வருகிறது. அப்படிப்பட்டதொரு உணர்வை மாற்றுவதற்கு முற்படாவிட்டால், இந்த அரசு கொண்டிருக்கிற சமுதாய நீதி பற்றிய சித்தாந்தம் இருக்கிறதே அந்த சித்தாந்தத்திற்குப் பொருந்தாமல் போய்விடும். ஆகவே, பொதுமக்களிடம் போலீசுக்கு உள்ள உறவு முறைகளில் பெரிய மாற்றத்தைச் செய்ய வேண்டியது அவசியம். அப்படி மாற்றம் செய்வதற்கான முயற்சியில் இந்த அரசு இந்த ஓராண்டு அரசாட்சியில் முயன்றிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அப்படி முயன்றிருக்கிறது என்று சொன்னாலும் அரசாட்சி செய்கிறவர்கள் நிர்ணயிக்கிற நிர்ணயிப்பை நடத்தி வைக்கிறவர்கள் அவர்கள். அவர்கள் பழக்கங்களில் இதுவரை வேறுபாடு இருப்பதால் அதில் ஏற்படுகிற முரண்பாடுகள் பல சந்தர்ப்பங்களில் வெளியாகின்றன. எது நடக்கக்கூடாது என்று அரசு கருதுகிறதோ அது நடக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அபபடி ஏற்படுவதற்குக் காரணம் அவர்களின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் இவைகள் தான். அவற்றையெல்லாம் மாற்றியமைக்கக் கூடிய பங்கு அல்லது பொறுப்பு மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகளின் கைகளில்தான் இருக்கிறது. கீழ்நிலையில் உள்ள சாதாரண கான்ஸ்டபிள் சாதாரண மனிதரைப் போல்தான் இருக்கிறார்களே தவிர, அவர்களின் அதிகாரங்கள், அந்தஸ்து, மற்றவர்களிடம் காட்ட வேண்டிய மரியாதை இவைகளில் எல்லாம் இவர்கள் மிகக் குறைந்த அளவில் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு இதுவரை இருந்து வந்த பழக்க வழக்கங்கள்தான்.

சாதாரண ஒரு விவசாயி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு புகார் கொடுக்க வேண்டுமென்றால், தைரியமாக அங்கு சென்று புகார் கொடுக்கக் கூடிய மார்க்கமில்லாத நிலையில் இருக்கிறா. சபாநாயகர் அவர்கள் விளக்குப் போட்டுவிட்டார்கள். ஆகவே, எனக்கு இனி கொள்கையைப் பற்றிச் சொல்ல வாய்ப்பில்லை. நான் சொல்வது போலீஸ் துறையினரிடம் உள்ள சாதனங்களைப் பதுக்கல்காரர்கள், கள்ள மார்க்கட்காரர்கள், கள்ளக் கடத்தல் செய்கிறவர்கள் மீது பயன்படுத்த வேண்டும். ஆங்காங்கு நடக்கிற கிளர்ச்சிகள், ஆரவாரம், மக்கள் தங்கள் உரிமைகளை வெளிப்படுத்துகிற காரியங்கள் மீது அந்த சாதனங்கள் பயன்படுத்தக்கூடாது. அப்படிப் பயன்படுத்துவதன் மூலம், சாதாரண மக்களை அடக்குவதன் மூலம் நல்லதொரு ஜனநாயகத்தை, நல்லதொரு பண்பாட்டை வளர்க்க வழியில்லாமல் போய்விடுகிறது. நாம் செலவு செய்கிற பணம் நல்ல குணங்கள் வளருவதற்கான முறையில் பயன்படவேண்டும். அந்த முறையில் அதைச் செலவு செய்ய வேண்டும்.

வெகு நாட்களாகப் பழக்கப்பட்டு வந்த குறை இனிமேல் ஏற்படாதிருக்க இனி எடுக்கிற கான்ஸ்டேபிள்ஸ் குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி.யாவது படித்தவர்களாக எடுக்க வேண்டும். மற்ற நாடுகளில் உள்ள போலீசார் பற்றிச் சொல்லும்போது அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள், மக்களின் உதவியாளர்களாக இருக்கிறார்கள், மக்களுக்கு வழி காட்டுபவர்களாக இருக்கிறார்கள், மக்களின் துன்பங்களை தீர்ப்பவர்களாக இருக்கிறார்கள் என்றெல்லாம் கேள்விப்படுகிறோம். அப்படிக் கேள்விப்படுகிற நேரத்தில் அவர்கள் படிப்பு என்ன, அவர்கள் அந்தஸ்து என்ன, அவர்கள் வருமானம் என்ன என்பதையும் எடுத்துப் பார்த்தால் இங்குள்ளவர்கள் ஒன்றுமில்லாதவர்களாக இருக்கிறார்கள். படிப்பானாலும் சரி,

சம்பளமானாலும் சரி, குணமானாலும் சரி, மிகக் குறைந்த அளவில்தான் இவர்களிடம் இருக்கிறது. அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியுமோ அதைத்தான் நாம் எதிர்பார்க்க முடியும். ஆகவே அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எல்லோரும் சொல்லுவதைப் போல் நானும் சொல்லவில்லை. அவர்கள் அவர்களது கடமையைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதோடு அவர்கள் நன்கு வாழ வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்டதொரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தால்தான் அவர்கள் இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த நாம் தகுதி பெற்றவர்களாகிறோம். அதில்லாமல் அவர்கள வாழ்வு எப்படியிருந்தால் என்ன, அவர்கள் கஷ்டங்கள் எப்படியிருந்தால் என்ன, அவர்கள் வீடு எப்படியிருந்தால் என்ன என்று நினைத்து நீங்கள் எங்கள் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுவது நம் பொறுப்பை நாம் நிறைவேற்றியவர்களாக ஆக மாட்டோம்.

அடுத்தபடியாக, இந்தப் புரமோஷன் அளிக்கும் விதத்தில் பல அநீதிகள் நடப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆங்காங்குள்ள அதிகாரிகளைத் திருப்திப்படுத்தி, அவர்களை சந்தோஷப்படுத்தி, அவர்களை மகிழ்ச்சியடையச் செய்வதுதான புரமோஷனுக்குத் தகுதியே தவிர, திறமை, புத்திசாலித்தனம், பண்பாடு, இவைகள் சரியான தகுதி அல்ல என்ற புகார்கள் பல இடங்களில் வந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்கள் இல்லாமல் சரியான முறையில் பிரமோஷன் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வீடுகள் இருக்கின்றன. அது ஒரு சிறிய அறையாக இருக்கிறது. அந்த வீட்டில் ஆறு, ஏழு குழந்தைகள் உள்ள போலீஸ்காரர்கள் வாழ்கிறார்கள். மக்கள், மனைவி, அவர் எல்லோரும் ஒரே ரூமில் தங்கியிருந்து குடும்பத்தை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இம்மாதிரியான நிலை இல்லாமல் வசதியான வீடுகள் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

அவர்கள் எந்த நேரத்திலும் வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எந்தநேரத்திலும வேலை செய்ய வேண்டுமென்று சொன்னாலும் அவர்களுக்கு வேலை செய்யும் நேரம், நியாயமான வேலை நேரம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்படி நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குமேல் அவர்கள் வேலை செய்ய வேண்டிய அவசியம் இருந்தால் அதற்கு அனுசரணையாக ஒரு வெகுமதி அல்லது அதிகப் பலன் பெறும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்கள் உற்சாகமாக வேலை செய்ய வழி பிறக்கும்.

போலீஸ் வழக்குகள் போடுவதிலும், பல மாற்றங்கள் செய்யவேண்டி இருக்கிறது. சாதாரண ஒரு விவசாயி ஒரு நகரத்திற்குச் செல்கிறான். போக வேண்டிய இடத்திற்கு வழி தெரியாமல் ரோடு அல்லது கடைகளின் ஓரத்தில் படுத்துக்கொண்டிருந்தால் அவர்கள் பேரில் சந்தேகப்பட்டு வழக்குப் போட்டு ஜெயிலில் தள்ளிவிடுகிறார்கள். பிறகு அவர்கள் உறவினர்கள் வந்துதான் விடுதலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். ஆகவே, பார்ப்பவர்கள் மீது இப்படிப்பட்ட சந்தேகக் கேஸ்கள் போடுவது இன்றைய நிலைக்குப் பொருந்தாது. செக்ஷன் 107 இருக்கிறது, அதன்படி ஒரு ஊரில் ஒரு தகராறு அல்லது சண்டை ஏற்பட்டால், எல்லோரையும் சேர்த்துக் கோர்ட்டுக்குக் பி.ப. 2-00 கொண்டுபோகிறார்கள். குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நியாயம்தான். ஆனால், குற்றம் செய்தவர்களையும், குற்றம் செய்யாதவர்களையும் எல்லோரையும் கோர்ட்டுக் கொண்டுபோய் நிறுத்தித் துன்பப்படுத்துவது சரியானதல்ல. அது நியாயமல்ல. இன்றைய நிலையில் அப்படிச் செய்வது சரியல்ல.

அதே போன்று ஒருவர் பேரிலே சந்தேகப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்தால், அவ்வாறு கொண்டு வந்தவுடனே குற்றவாளி என்ற தீர்மானத்தின் பேரிலே அங்குள்ள நடவடிக்கைகள் இருக்கின்றன. கோர்ட்டிலே கொண்டு சென்று குற்றவாளி என்று தீர்மானிக்கும் வரையில், அவரைக் குற்றவாளி என்ற பாவனையில நடததாமல, சாதாரண பிரஜை, [illegible] என்ற முறையில் நடத்தக்கூடிய நடைமுறைகள் இருக்கவேண்டும். ஒருவனைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுவந்து வைத்துவிட்டால், அவனுக்குச் சாப்பாடு போடுவது, டிஃபன் அளிப்பது போன்ற இதெல்லாம் ஸ்டேஷன் பொறுப்பாக இருக்க வேண்டும். ஏனென்றால், அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியிலே சென்று தம்முடைய ஆகாரத்தைச் செய்துகொள்ள முடியாது. அப்படியிருக்கும்பொழுது, அவன் குற்றம் செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும், அவனைப் பட்டினியாகப் போடக் கூடாது. சந்தேகத்தின் பேரிலே எடுத்துக்கொள்ளும் ஒருவனை கோர்ட்டிலே நிறுத்தித் தண்டிக்கும் வரையில் அவன் மரியாதைக்குரியவன், சாதாரணப் பிரஜைகளுக்கு உள்ள உரிமை உண்டு என்னும்படியான நிலைமையை வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது.





அடுத்தபடியாக, மதுவிலக்கு விஷயமாக என்னுடைய வார்த்தைகளைச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். மதுவிலக்கு இன்று வெற்றி பெற்றிருக்கிறதா அல்லது தோற்றிருக்கிறதா என்பது பிரச்னை அல்ல. அதனால் நமக்கு ஏற்படக்கூடிய பொறுப்புகள்தான் பிரதானமாகக் கருத வேண்டிய விஷயம். மதுபான டானிக் என்று பல கடைகளில் வைத்திருக்கிறார்கள். அந்த டானிக்குகளை வாங்கிக் குடித்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார்கள். டாக்டர்களும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அது டானிக்தான் என்று சொன்னால் ஒப்புக்கொள்வதில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் காந்திஜி கொண்டுவந்த கொள்கையை மற்றவர்கள் கைவிரித்தும் நாம் செய்கிறோம் என்ற பெருமையை விட்டு இதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும், அரசாங்கம் நடதத வேண்டிய பொறுப்புக்களையும் மனத்தில் எண்ணி அந்தப் பிரச்னையை ஆராய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வசதியில்லை. அங்கு ஜீப் அளிக்கவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. போலீஸ்காரர்களும் சரி, எஸ்.ஐ.-களும் சரி பரவலாக, உடனடியாகச் சென்று வருவதற்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து தர வேண்டும். மேற்கொண்டு பேசுவதற்கு வசதி இல்லாததால் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். ஆர். கண்ணன் :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். போலீஸ் துறை முக்கியமான துறை. மற்ற மற்றத் துறைகளை விட நாட்டினுடைய பொறுப்பு மிக்க துறையாகக் கருதவேண்டியது போலீஸ் துறை என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய அந்தத் துறையிலிருப்பவர்களுக்கு என்ன நன்மைகளைச் சென்ற இருபது ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சி செய்திருக்கிறது என்றால் நிச்சயமாக சிறப்பாக எதுவும் இல்லை. இலஞ்சம் வாங்கிப் பிழைக்க வேண்டுமென்ற நிலைமையில் கடைத்தர சிப்பந்திகளாக இருப்பவர்களின் நிலைமையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் செம்மையாகச் சேவை செய்ய அவர்களது ஊதியங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டு காலமாக இந்த நாடு அடிமைப்பட்டிருந்தது, அதற்குப்பிறகு காங்கிரஸ் கட்சி ஆட்சி ஏற்பட்டது. அந்தக் கட்சியானது ஆட்சியும், கட்சியும் வேறு என்ற முறையில் அல்லாமல் அவர்களைத் தன்னுடைய கட்சியின் சொந்த வேலைக்காரர்களைப் போலவும், மற்ற எல்லாத் துறையினர்களையும் அப்படியே கருதினார்கள். இதனால் போலீஸ் துறையினர் தங்கள் கட்சியின் சொந்த வேலைக்காரர்கள் மாதிரியான நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் இன்று காங்கிரஸ்காரர்கள், தாங்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் அன்று ஆடியவர்கள் இன்று சட்டப்படி நடக்கிறார்களே என்று வயிறு எரிகிறார்கள். நமக்கெல்லாம் தெரியும்—ஜனநாயகத்தில் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வருவது சகஜம். ஆனால், அதிகாரிகள் நிர்வாகத் துறையைப் பொறுப்பேற்று நடத்துபவர்கள். அவர்கள் சட்டத்தைப் பார்க்க வேண்டியவர்களே தவிர, ஆளைப் பார்க்க வேண்டியதில்லை. அவர்கள் சட்டத்தின் அடிப்படையில் வேலை செய்தால் நாம் பாராட்ட வண்டும். இவ்வாறு சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கக் கூடிய

நிலையிலே இருப்பவர்களை நாம் பாராட்டுவதோடு அவர்களுக்கு ஆதரவு தர வேண்டும். சர்க்கார் மேலும் நல்ல வசதிகளை அவர்களுக்குச் செய்து தர வேண்டும்.

அவர்கள் தொழிலைப் பற்றி நமக்குத் தெரியும். ரௌடிகளோடு போராடி, உயிரைப் பணயம் வைத்துப் பார்க்க வேண்டிய உத்தியோகம் அவர்களுடையது. அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பையும், போதிய சம்பளத்தையும் தர வேண்டியது எந்த ஆட்சியாயிருந்தாலும் அதன் தலையாய கடமையாக இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்பொழுது காங்கிரஸ்காரர்களெல்லாம் போலீஸ்காரர்களைப் பற்றியெல்லாம் மிகவும் குறைவாகப் பேசுகிறார்கள். அது நாமெல்லாம் வருந்தக்கூடிய விஷயம். கட்சிப் பிரச்சாரம் என்பதற்காக நம்முடைய தன்மையை இழந்து பேச வேண்டுமா? அவ்வாறு நிலைமையிருந்தால் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது உருப்படாது, அதற்கு நல்ல ஆதரவு கிடைக்காத நிலைமை ஏற்படும்.

தண்டையார்பேட்டையிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்பொழுது அவர், முன்னாள் போலீஸ் ஐ.ஜி.யை பேடி என்று குறிப்பிட்டுப் பேசினார். உத்தியோகஸ்தர்கள்மீது தவறு இருந்தால் அதிகாரிகளிடம் புகார் செய்யலாமே தவிர ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவது முறையாகாது. ஜனநாயகத்தில் பேச்சுரிமையிருக்கிறது என்றால் அது சட்டத்திற்கு உட்பட்ட நிலையில் இருக்க வேண்டும். இன்றைய ஆட்சியிலேயுள்ளவர்கள் பெருந்தன்மையாக இருந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் மன்னித்து வரலாம். அதை வைத்துக்கொண்டு, மக்களிடத்திலே தனக்கு பெரிய செல்வாக்கு இருக்கிறது என்ற முறையில் தவறாகவே போய்க் கொண்டிருந்தால் அதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அவ்வாறு முடிவு கட்டவில்லையென்றால் அவர்களால் இந்த நாட்டிலே அராஜக நிலைமை ஏற்பட்டுவிடும். தவறாக ஒருவர் பேசினார் என்று சொன்னால் அதை எடுத்துக் காட்டி அப்பொழுதைக்கப்பொழுதே திருத்த முயற்சி செய்ய வேண்டும். மேலும் போலீஸ் ரிப்போர்ட்டர்கள் எல்லாக் கட்சிக் கூட்டங்களுக்கும் செல்ல வேண்டும். எதிர்க்கட்சிக் கூட்டமாக இருந்தாலும் சரி, ஆளுங் கட்சிக் கூட்டமாக இருந்தாலும் சரி ஒவ்வொரு கூட்டத்திற்கும் செல்ல வேண்டும். ஆளுங் கட்சியிலே இருப்பவர்களும் முறை தவறிப் பேசக் கூடும். அதேபோல் எதிர்க் கட்சியிலிருப்பவர்களும் நல்ல கருத்துக்களைச் சொல்லக் கூடும். அவ்வாறு நல்ல கருத்துக்களைச் சொல்லும்பொழுது அவைகளை நாட்டுக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும்.

அடுத்து, சாதாரணமாக ஏழைகள் டீக்கடைகள் வைத்திருக்கிறார்கள். அதற்கு போலீஸ் லைசென்ஸ் என்று ஒன்று வாங்க வேண்டுமென்றிருக்கிறது. இதற்கான கட்டணம் இரண்டு ரூபாய்தான் என்றாலும் இதை வாங்குவதற்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இவ்வாறு சென்ற இருபது வருஷ ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது. அந்தப் போலீஸ் லைசென்ஸில் இருக்கக்கூடிய கண்டிஷன்களைப் பார்த்தால் நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கிறது. எந்த அதிகாரிகளும் அதைப் பார்க்கவில்லையோ என்னவோ தெரியவில்லை. அத்தகைய பாரங்களில் பல தேவையில்லாத விஷயங்கள் நிறைய இருக்கின்றன. டீக்கடைக்களுக்கு போலீஸ் லைசென்ஸ் அவசியமில்லை. டீக்கடைகளுக்கு அவசியமென்றால் மற்ற மற்ற கடைகளுக்கெல்லாம் அவசியமில்லையா? போலீஸ் கண்காணிப்பு சோடாக் கடைகளுக்கு, மளிகைக் கடைகளுக்குத் தேவையில்லையா? என்பதை யோசிக்க வேண்டும். ஏதோ முன்பு பிரிட்டிஷார் காலத்திலே லாட்ஜ்களில் தவறுகள் ஏற்படுகிறது என்பதற்காக அதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே இது கொண்டுவரப்பட்டது. அதையே இப்பொழுதும் வழிமுறைப்படுத்தி வருகிறார்கள். இப்பொழுது டீக்கடைகளுக்கு போலீஸ் லைசென்ஸ் தேவையில்லை என்று கொண்டுவந்தால் பல ஏழைகள் பாராட்டுவார்கள்.





மற்றப்படி இந்த சந்தேகக் கேஸ்கள் போன்றவற்றைப் போடுவதை விட்டுவிட்டால் எவ்வளவோ வேலை போலீஸுக்குக் குறையும். போலீஸார் தம்மைக் கண்டு மக்கள் பயப்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள். மக்கள் நம்முடைய ஆட்சியிலேயுள்ளவர்கள்தானே, நம்மவர்கள்தானே என்று அவர்களைத் துச்சமாக நினைக்கிறார்கள். இப்படி இரு சாராரும் நினைக்காத வகையில் போலீஸ்காரர்கள் மக்கள் தங்களைக் கண்டு பயப்பட வேண்டுமென்று நினைக்காமலும், அதே நேரத்தில் மக்கள் போலீஸ்காரர்கள் தங்களது நலனுக்காகத்தான் இருக்கிறார்கள், அவர்களுக்கு மரியாதை காட்ட வேண்டும் என்று நினைக்கும்படியும் நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும். குறிப்பாகச் சென்னை நகரத்திலே சட்டத்தை மீறக்கூடியவர்களில் 100-க்கு 90 பேர் ஏழைமக்களாகவும், நடுத்தர மக்களாகவும்தான் இருப்பர், பெரும்பாலும் பணக்காரர்களும், கல்வியறிவுள்ளவர்களும், அதிகமாக இருக்கமாட்டார்கள். அந்த ஏழை, நடுத்தர மக்கள்தான் சட்டத்தை மீறக்கூடிய பல நிலைமைகள் இருக்கின்றன.

மதுவிலக்கில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அதன் உயர்வை யாரும் தவறாகக் கருத முடியாது. ஆனால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. நூற்றுக்கு எண்பது பேர் மதுவிலக்குச் சட்டத்தின் அடிப்படையில் காய்ச்சியவர்கள் என்றோ, அல்லது குடித்தவர்கள் என்றோ தான் கேஸ் போடப்பட்டவர்களாக இருக்கும் நிலைமையிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் காங்கிரஸ் கட்சியே முன்வந்து மதுவிலக்கை எடுக்கச் சொல்லிப் பிரச்சாரம் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு மனம் கூசுகிறது. இவர்கள் எடுப்பார்கள், அப்பொழுது நாம் அதை வைத்துக்கொண்டு பிரச்சாரம் செய்யலாம் என்று பார்க்கிறார்கள். அப்படி நாங்களாக எடுக்கும் நேரத்தில் அதை வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள், "அவர்கள் வந்தாலேதான் இந்த நாடே கெட்டுவிட்டது, நாங்கள் இத்தனை காலம் சமாளித்து வந்ததை அவர்கள் வந்ததும் எடுத்துவிட்டார்கள்" என்று சொல்லி, தவறான பிரச்சாரத்தைச் செய்வார்கள்.

ஆனால், அவர்கள் காலத்திலே, மதுவிலக்கை அவர்கள்தான் குட்டிச்சுவர் ஆக்கினார்கள். அந்தத் தவறுகள் இன்றும் தொடர்ந்து வருகின்றன. அதை என்ன பண்ணப்போகிறதோ இந்த அரசு. அதை எடுத்தாலும் கஷ்டம், தொடர்ந்து நடத்தினாலும் நட்டம் என்பதைக் கூறி இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. எஸ். ஆதிமூலம்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த மானியத்தில் முக்கியமாக இந்த இலாகாவை பாராட்டிப் பேச வேண்டியது இருக்கிறது. ஏனென்றால், இந்தியாவிலுள்ள போலீஸ் இலாகாவிலேயே சென்னை இராஜ்யத்துப் போலீஸுக்கு எப்பொழுதுமே ஒரு நல்ல பெயர் உண்டு. அதோடு, இந்த மாதம் நடந்த கும்பகோணம் மகாமகத்தில் ஏராளமான கூட்டத்தை அற்புதமாக சமாளித்து ஜனங்களுக்கு உதவியாக இருந்தார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அந்த முறையில் என்னுடைய வாழ்த்துக்களை இந்த போலீஸ் இலாகாவுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இப்பொழுது அடிக்கடி லா அண்டு ஆர்டர் இல்லை இல்லையென்று பேசப்படுகிறது. லா அண்டு ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்பதை இவ்வளவு சீக்கிரமாக எப்படி ஒரு கணக்கு எடுக்கமுடியும்? மந்திரிசபை வந்த ஒரு மாதத்திற்குள்ளேயே பஜனையை ஆரம்பித்து விட்டார்கள் (சிரிப்பு). "பஜ கோவிந்தோம் பாடு" என்று ஆரம்பித்து விட்டார்கள். இதை நான் வாஸ்தவத்திலேயே ஒரு வேதனையோடு சொல்லுகிறேன். போலீசார் 20 ஆண்டு காலமாக உங்களுக்கு (காங்கிரஸாருக்கு) சேவை செய்யவில்லையா? அவர்களை ஏன் இந்த "பொலிட்டிக்கல் கான்ட்ரோவர்ஸீ" என்ற திரைக்குள் இழுக்கிறீர்கள்? எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் சொல்கிறபடி நடக்கிறார்கள். ஏன், இன்னும் ஒரு 10 வருஷம் பொறுத்து மீண்டும் ஒரு தடவை வருகிறேன் என்று வந்தீர்களானால் அவர்கள் உங்களுக்கும் உதவியாக இருக்கப் போகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வேலையை நீங்கள் கடினமாக்க வேண்டாம். அவர்கள் காங்கிரஸ் நிர்வாகத்தின் கீழும் ஓரளவு நல்ல முறையிலேதான் நடந்து வந்திருக்கிறார்கள். சில இடத்திலே இன்றைக்கு சுடு (shoot) என்றுதான் சொல்வார்கள். அது எந்த இடத்திலேயும்

நடந்துகொண்டுதான் இருக்கிறது. 3 வருஷங்களுக்கு முன்பு பாராளு
மன்றத்திலே ஒரு பி.எஸ்.பி. மெம்பர் ஒரு கேள்வி கேட்டார். எவ்வளவு
பேர் இதுவரை சுடப்பட்டு இறந்திருக்கிறார்கள் என்று கேட்டார். அதற்கு
ஹோம் மினிஸ்ட்டர் அவர்கள் 9 ஆயிரத்து சொச்சம் என்று கணக்கெடுத்
துச் சொன்னார்கள். பம்பாயை மகாராஷ்டிராவாக ஆக்கிவிடு என்ற
நிகழ்ச்சி நடந்தபோது ஒரே நாளில் காங்கிரஸ் துப்பாக்கி அங்கே 100
பேரை சுட்டுவிடவில்லையா ? இதிலே எவ்வளவு தூரம் இன்றைக்கு வெறிச்
செயலிருந்தாலும் இந்திய சர்க்கார் உங்கள் கையில்தானே இருக்கிறது.
ஆகவே, லா அண்டு ஆர்டர் போய்விட்டது என்று இங்கே நீங்கள் எண்ணி,
மனப்பிராந்தி கொண்டு குழப்பிக்கொள்ள வேண்டாம். போலீஸ் இலாகா
வினுடைய வேலைக்கு நீங்கள் தயவுசெய்து எதாவ்து களங்கம் கற்பித்து
அவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல், அவர்கள் நல்ல முறையில் இயங்கும்
படியாகச் செய்ய வேண்டுமென்று ஒரு பெரிய கட்சிக்காரர்கள் என்ற முறை
யில் காங்கிரஸ்காரர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அத
னாலே, இப்படி எல்லோரும் பேசிக்கொண்டிருந்தால் போலீஸ் இலாகா
விலே இருக்கிற பெரிய அதிகாரிகளுக்கு happy ஆக இருக்க முடியாது.
அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதே கஷ்டமாக இருக்கும்.

எப்பொழுதுமே போலீஸ் இலாகாவுக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது.
எங்கு விவசாயத் துன்பங்கள் வருமோ, மேற்கொண்டு லேபர் துன்பங்கள்
வருமோ என்ற நிலை அவர்களுக்கு இருக்கிறது. அங்கங்கே பாக்டரி
களிலே வேலையில்லா முறையிலே, காரோ (குறுக்கீடு) கெரோ என்று
புதிதாக் ஒன்று வந்திருக்கிறது. கெரோ, பந்த் இவைகள் எல்லாம்
வந்தால் நாம் எப்படி வேலைகளை திறமையாகச் செய்யப் போகிறோம் என்ற
நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். மேற்கொண்டு கஷ்டம் கொடுத்துக்
கொண்டு வந்தால், அவர்களுக்கு இந்த மாதிரி வந்தால், உத்தியோகஸ்தர்
கள் ஃப்ரீயாகவும், சுயேச்சையாகவும் இயங்க முடியாது. இயங்க முடிய
வில்லையென்று அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,
அவர்களுக்கு மேலும் கஷ்டத்தை உண்டு பண்ண வேண்டாமென்று
இந்தியாவிலே இருக்கிற பெரிய கட்சிக்காரர்களாகிய காங்கிரஸ் நண்பர்களை
மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்பொழுது பொதுவாக இன்னொரு நல்ல சூழ்நிலையை
இந்த சந்தர்ப்பத்தில் நான் ஜெனரலாகப் பேச விரும்புகிறேன். பெரிய
மனிதன் மாதிரி யோசனை சொல்வதாக நீங்கள் நினைத்துக் கொள்ள
வேண்டாம். பொதுவாக, அவர்கள் (காங்கிரஸ்காரர்கள்) சொன்னதில்
10 சதவீதம் உண்மை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு,
நமது முதன்மந்திரி அவர்கள் ஒரு சர்க்குலர் எல்லா இலாகாக்களுக்கும்
அனுப்பினால்கூட நல்லது என்றே நினைக்கிறேன். எனக்குக் கூடத் தெரி
யும், திருநெல்வேலி ஜில்லாவிலே இரண்டொரு சம்பவங்கள் நடந்தன.
புதிதாக வந்ததினாலே, அனுபவக் குறைவினாலே சில பேர்கள் ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ஹோதாவிலே தலையிட ஆரம்பிப்பார்கள்.
அவர்களுக்கு இலாகாவிலே உள்ளவர்களும் கொஞ்சம் சலுகை காண்பிப்
பார்கள். அதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. ஆகவே, நாளடை
வில் ஆஃபீஸர்கள், எல்லா இலாகாக்களிலும் உள்ளவர்கள், தாராள
மாகவும், சுயேச்சையாகவும் இயங்குவதற்கு வழி இருக்க வேண்டும்.
இராஜாஜி அவர்கள், அந்தக் காலத்தில் பதவிக்கு வந்தவுடன் அதிகாரிகள்
எல்லாம் சுயேச்சையாக, நேர்மையாக இயங்குங்கள் ; சட்டசபை மெம்பர்
கள், மற்றவர்கள், எங்கள் கட்சிக்காரர்கள் அவர்களுக்காக வளையாதீர்கள்
என்று சொன்னார்கள். அதனாலேதான் அவரைக் கூட போய்விடும்படி
ஆக்கிவிட்டார்கள். (சிரிப்பு). அதனாலே அதைப்பற்றி நமது சீப் மினிஸ்டர்
பொருட்படுத்தப் போவதில்லையென்று எனக்குத் தெரியும். அவர் ஒரு
வருஷத்திலே எப்படி சலிப்பு அடைந்துவிட்டார் என்பது எனக்குத் தெரி
யும். ஆகையால், "எங்கள் கட்சிக்காரர்களோ, மற்றவர்களோ வந்து
எதாவது வேண்டுமென்றால், எதாவது செய்ய வேண்டுமென்றால், அதற்கு
நீங்கள் பயப்பட வேண்டாம் ; நல்லவிதமாக உங்கள் கடமையைச் செய்யுங்
கள்" என்று ஒரு சர்க்குலர் போட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.
அதை பரிசீலனை பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மேற்கொண்டு போலீஸ் இலாகாவில் சில்லறை விஷயங்கள் இரண்டு
மூன்று சொல்லி முடித்து விடுகிறேன். (மாண்புமிகு பேரவைத் தலைவ
ரைப் பார்த்து) நான் பேசி முடித்து விடுகிறேன். அதற்குள்ளாகவே
(விளக்கு போட்டு) பயம் ஏற்படுத்தாதீர்கள். இந்த சப்-இன்ஸ்பெக்டர்
களுக்கு முன்னாலேயுள்ள காங்கிரஸ் சர்க்கார் டைரக்ட் ரெக்ரூட்மெண்ட்
என்று சொல்லி பி.ஏ. படித்தவர்கள், மற்றும் அதிகமாக படித்தவர்
களுக்கு ஒரு சலுகை கொடுத்திருக்கிறார்கள். அந்த கோட்டா ஜாஸ்தி
என்றே நினைக்கிறேன். ஏனென்றால், டிபார்ட்மெண்டிலே, அடித்தளத்
திலேயிருந்து, அனுபவமிக்க வேலை செய்து வருகின்றவர்களுக்கு இதனால்
ப்ரமோஷன் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஆகவே,
பி.ஏ. படித்தவர்கள் என்று சொன்னவுடன், அவர்கள் செலக்ஷன் ஆன
வுடனே, டிரெயினிங்குக்குப் போய் வந்தவுடனே சப்-இன்ஸ்பெக்டர் வேலை
என்று வருவதா ? அர்த்தம் இல்லை. ஆகவே, அவர்களுக்கு விகிதா
சாரப்படி டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் என்று கொடுக்கக் கூடாது; கொடுப்போ
மானால் டிபார்ட்மெண்டிலே அனுபவமிக்கவர்களுக்கு ப்ரமோஷன் வாய்ப்
பில்லாமல் போய்விடுகிறது. அதோடு, வேலையும் நன்றாக இருக்காது.
இன்றைக்குப் பார்க்கிறேன், பி.ஏ. படித்து, சப்-இன்ஸ்பெக்டராக வந்தவர்
பஸாரிலே போகும்போது ஆட்களை அடித்துவிட்டுப் போகிறார். சும்மாதான்
அடிக்கிறார். அப்பொழுதுதான் வேலை திறமையாகச் செய்கிறார் என்று
தன்னை நினைத்துக் கொள்ளுவார்களாம். அவர்கள் எல்லாம் டிபார்ட்
மெண்டிலே அனுபவம் போதாதவர்கள் என்பதுதான் இதற்குக் காரணம்.
ஆகையினாலே, படித்தவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்று சொல்ல
வில்லை. பர்ஸண்டேஜ் ஜாஸ்தி இருக்கக்கூடாது என்று சொல்லுகிறேன்.
இதை கவனமாக முதலமைச்சர் யோசிக்க வேண்டும். அதே மாதிரிதான்
ஐ.பி.எஸ். அவர்களையும் டைரக்ட் ரெக்ரூட் செய்து, அவர்களை 4 வருடத்திற்
குள் எஸ். பி. ஆக்குகிறார்கள். இதனாலே, இலாகாவிலே வேலை செய்
கின்ற இன்ஸ்பெக்டர்ஸ் போன்ற பலவேறு வேலை செய்கின்றவர்களுக்கு
ப்ரமோஷன் கிடைக்கின்ற வாய்ப்பு கெடுகின்றது. ஆகவே, அந்த விஷயங்
களைக் கொஞ்சம் பரந்த நோக்கத்தோடு கவனித்து, டிபார்ட்மெண்டிலே,
உண்மையாக, திறமையாக, வேலை செய்கின்றவர்களுக்கு ப்ரமோஷனுக்கு
அதிக வாய்ப்பு இருக்க வேண்டும். அதைக் கவனிக்கும்படி கேட்டுக்
கொள்கிறேன்.

மேற்கொண்டு கிராமப் புறங்களில் போலீஸ் ஸ்டேஷன்களில் எல்லாம்
மற்ற நாடுகளில் எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. இங்கெல்லாம்
வசதி ரொம்பவும் குறைவு. எவ்வளவோ இனங்களுக்கு நாம் செலவு
செய்து கொண்டிருக்கிறோம். சர்க்கார் செலவு செய்வதில் வீண் விரயங்கள்
எவ்வளவோ இருக்கின்றன. கூடுமான வரையில் எல்லா போலீஸ்
ஸ்டேஷன்களிலும் போன் வசதிகள் ஏற்பட வேண்டும்.

கிராமங்களிலே போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதிகள் செய்யப்படவில்லை.
பட்டணத்தில் 80 சத விகிதம் பேர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்
பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். கிராமங்களிலுள்ள போலீஸ்காரர்
களுக்கு வீட்டு வசதியே இல்லை. ஆகவே, போலீஸ்காரர்கள் சம்பளத்தைக்
கூட கூடுதலாக எதிர்பார்க்கவில்லை. வீட்டு வசதிகளைத்தான் அதிகமாக
எதிர்பார்க்கிறார்கள். முன் காலத்தைவிட இப்பொழுது வீடுகள் கிடைப்
பது கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ்
ரூ. 7, 8 கொடுக்கப்படுகிறது. ஆனால் மாதம் ரூ. 20 கொடுத்தால் கூட
வீடு கிடைப்பதில்லை. போலீஸ் இலாக்காவில் முக்கியமாகச் செய்ய வேண்டிய
ஜோலி என்னவென்றால், போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி செய்து
கொடுக்க வேண்டும். டவுனில் கூட ஓரளவுக்கு வீட்டு வசதி இருக்கிறது.
20 சத விகிதத்தினருக்குத் தான் வீடு வசதி இல்லை என்று நினைக்
கிறேன். கிராமங்களில் 100-க்கு 70 பேர்கள் வீடுகள் கிடைக்காமல் கஷ்ட
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் கணிசமான தொகை இப்பொழுது
உள்ள பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இதைக்
கவனத்தில் கொண்டு, வருகிற ரிவைஸ்டு பட்ஜெட்டில் அதற்குக் கணிசமான
தொகை ஒதுக்கி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச்

செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை ஸிடி காம்பென்ஸேடரி அல வன்ஸும் டி.ஏ. உயர்வும் சாப்பிட்டு விட்டது என்று தெரிகிறது. ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு எப்படியாவது ஒரு வழி கண்டு பிடித்து, வேண்டிய வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடிக்கு, முக்காடு போட்டுக் கொண்டு திரிகிறவர்களைப் பிடித்து உள்ளே போடுவது பற்றி எல்லோரும் சொல்லி விட்டார்கள். செக்ஷன் 64-ஏ என்னவோ தெரியவில்லை. (குறுக்கீடு) செக்ஷனைப்பற்றி நான் ஏன் கவலைப்பட்டுக் கொள்ள வேண்டும் ? 100 வருஷங்களாக உள்ள போலீஸ் ஆக்டில் உள்ளது அது. (குறுக்கீடு) மராமத்து இலாக்கா அமைச்சர் அவர்கள் 75-வது செக்ஷன் என்று சொல்கிறார்கள். செக்ஷனைப்பற்றி எனக்கு கவலையில்லை. (குறுக்கீடு) அதை வக்கீலுக்கு விட்டுவிட வேண்டும். (திரு விநாயகத்தைச் சுட்டிக்காட்டி) இவர்களுக்கும் தெரியவில்லை. (சிரிப்பு.)

THIRU K. VINAYAKAM : Sir, on a point of personal explanation. I wanted to mislead him.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஏதாவது தவறாகச் சொல்லியிருந்தால் கனம் உறுப்பினர் அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதெல்லாம் பழைய போலீஸ் ஆக்டில் உள்ள சமாசாரம். பெரிய பட்டணங்களில் அந்தமாதிரிச் சட்டங்கள் இல்லாமல் போனாலும், குற்றங்கள் அதிகரித்துவிடும். இருந்தபோதிலும், எவ்வளவு தூரம் இந்த செக்ஷனை மினிமைஸ் (minimise) பண்ணி அமல் நடத்த முடியுமோ, அதுமாதிரி குறைந்த பட்சமான அளவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அதை முக்கியமாக முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கொண்டு இந்த போலீஸ் இலாகாவைப்பற்றி, சென்னை ராஜ்யத்திலுள்ள போலீஸ் இலாகாவைப்பற்றி, அதுவும் இந்த ஒரு வருஷ அரசாட்சியினுடைய நிலைமைகளைப்பற்றி நான் முதலில் வாழ்த்துக்கள் சொல்லிக் கொண்ட போதிலும், ஒரு சில சில்லரைக் தப்புகள் ஆங்காங்கு நடந்து கொண்டுதான் இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில்—நான் இதை மாத்திரம் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.—ஆலங்குளம் போலீஸ் ஸ்டேஷன் லிமிட்டில் 7, 8 மாதங்களுக்கு முன்பு ஒரு எஸ்.ஐ. ஒரு எச்.ஸி. இவர்களிடம் முன்கூட்டியே தகவல் சொல்லி விட்டு, ஒரு ஏழையினுடைய, ஜோஸப் நவமணி என்பவருடைய 70, 80 ஆடுகளை ஒரு ஆடு ரூ. 70, 80 பெறும், தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். கொள்ளை அடித்துக்கொண்டு) போய்விட்டார்கள். ரூ. 1,000 வைத்து எஸ்.ஐ.யிடம் தரு (through எச். ஸி. ஏற்பாடு செய்து, முதல் நாளே சொல்லி வைத்து, ஆட்டை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். முதல் நாள் ஈவினிங் வரையிலே ஆபீஸர்ஸ் ஆப்ஸெண்டு. கேட்டால், கோர்ட்டுக்குப் போனோம், அங்கே போனோம். இங்கே போனோம் என்று சொல்லி விட்டார்கள். உள்ளே பார்ட்டி வந்து சொன்னபொழுது வெள்ளாடு என்று சொன்ன போதிலும், செம்மறி ஆடு என்று சொன்னதாக எழுதிக் கொண்டார்கள். ஏனென்றால் கேஸில் கன்ப்யூஷன் செய்து ப்ரூஃப் இல்லாமல் போய்விடும். அது என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது அல்ல. தென்காசி தாலுக்கா ஆலங்குளம் . தொகுதியைச் சேர்ந்தது. 4, 5 மாதங்களுக்கு முன்பு தகவல் தெரிந்தது. பேபர் வந்தது, ஜெனரலாக "பார்வேடெட்" என்று போட்டு அனுப்பினேன். இன்னும் அதன் பேரில் உருப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு ஏழையின் ரூ. 4,500, 5,000 பொறுமான ஆடுகள் கொள்ளை போய்விட்டன. அந்த எஸ்.ஐ. தவறு செய்தவர், டிபார்ட்மென்டில் என்ன முறையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. 7, 8 மாதங்களுக்கு முன்னால் நடந்த விஷயம் இது. ஆகவே, இதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பொதுவாக நான் இந்த இலாகாவைப்பற்றி என்னுடைய சந்தோஷமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில் கேட்டுக் கொண்டதுபோல, இந்த இலாக்கா நல்ல முறையில் இயங்குவதற்கு காங்கிரஸ் நண்பர்கள் ரொம்பவும் கன்ஸ்ட்ரக்டிவ் மனப்பான்மையுடன் தங்களுடைய யோசனைகளைக் சொல்லும்படியாகக் கேட்டுக்கொண்டு, நிறுத்திக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, generally speaking, on this Demand we have no quarrel with the Deparment concerned. My entire quarrel is with the Party that is in power. I would substantiate my charges and simply I am not going to say this and then get out of the mess. To start with, an essential thing is that that a policeman should be above suspicion. Now I am reminded of the speeches which I made on the floor of this House about a year ago and at that time I paid glowing tributes to the officers concerned. But during this lapse of one year, am I to conclude that the officers have become bad and that the officers have become corrupt ? By any stretch of imagination that could not have happened but what is exactly wrong with the situation today. My quarrel with the Party that is in power is that the law and order situation is out of their control. That is my quarrel with the Government. How did it happen ? If yesterday the officers were perfectly acting in consonance with the instructions that were laid down by the Government, how did that the situation got out of their control ? I hope the Hon. Chief Minister will appreciate the sentiments which I am expressing on the floor of the House with good intentions. It is not as if I am trying to throw this Government out ? It is impossible to do it. Also, it is not as my Congress Party is interested in ousting this Government and trying to step into their shoes. All these things are beyond our scope. So it is only with good intentions that I am levelling all these charges against the Party in power. Opinion has been gaining ground in the minds of the comman man that so long as the Congress Party was in power, the policemen were stringent and when the D.M.K. has come into power, there is no law and order. There is also a feeling that we need not respect any law, we need not respect 'any rule and we can do whatever we want because there is Anna's' rule.

"அண்ணு ஆட்சி நடக்கிறது. ஆதலிஞலே எதையும் செய்யலாம்"

That is the temperment and that is the outlook which the common man has developed. Is that in your own interest or is that in the interest of the people ? Is this the way how the Party in power expects opinion to develop. That is not a good sign for any Party in power. To quote a few instances, even an ordinary rickshaw puller taking two or three passengers in his own rickshaw, is not afraid of the constable that is coming forward to-book him for an offence committed by him. He immediately retorts, 'Don't you know, who is ruling us ? He is our man and he is in power. So, do not interefere with me.' (Laughter). You may laugh for the sake of laughing but that is the reaction of the common people. Take the instance of any quarrel or affray or some kind of disturbance in the bazaar. There the policeman is a helpless spectator.

He certainly watches the situation. He knows he has got power and he can control the situation and put things in right order but what are the instructions given to him by the Government. This is the quarrel I have with the Government......

THE HON. THIRU, C. N. ANNADURAI : I have not so far interfered with my Hon. Friend's speech because he was telling tales about what he had gathered round the City. But now he is entering upon a dangerous ground and he is talking about the instructions being issued by the Government. Can he substantiate it ?

THIRU K. VINAYAKAM : Mr. Speaker Sir, for every charge one levels, it is not possible to substantiate with documentary evidence. I have information and you should not doubt my honesty. I am interested in your Government and I want you to rule. That is why I am telling this.

பிற் பகல் 2-30 THE HON. THIRU C. N. ANNADURAI : I am not doubting your sincerety. But I doubt very much your ability to go to the root of the matter.

THIRU K. VINAYAKAM : The Chief Minister can explain away like this. But that does not mean that he has gained a ground or a point against me.

The impression has gained ground that the party in power has given some instructions to the department concerned that, " when things go out of your control, you just watch."

THE HON THIRU C. N. ANNADURAI : As a responsible member of the Legislature he ought to have said : I am hearing such things. 'Has the Government issued any instructions ? ' I would have replied ' No such instructions have been issued'.

THIRU K. VINAYAKAM : That type of questions and answers form part of the interpellation hour. This is a general debate. It is open to the Chief Minister to say : ' I have not instructed ' That is the impression I have gained, which my colleagues have gained. We are at liberty to hold this opinion unless you repudiate it by concrete instances.

THE HON. THIRU C. N. ANNADURAI : I never question your right to get certain impressions and that is why I did not interrupt. But the moment you said that certain intsructions had been issued by the Government to the police that they should keep aloof whenever there is assault, etc. I interrupted and asked whether you can substantiate that statement. The only answer that the hon. Member can give is : " You are not going to gain any point by interrupting." If your intention is to gain many points, I give you that luxury.

THIRU K. VINAYAKAM : I do not for one moment doubt the sincerety of the Chief Minister. If the Chief Minister has not instructed, let it go to the Press that the Chief Minister has not instructed anything in the wrong way. From tomorrow you see the



reaction of the department. If anything goes out of control, police will take action. I have some experience of the people in the department concerned. What can the poor police officers do ? They are poor spectators of the situation. As a result of this debate if the police people get a clear impression that nothing has been clandestinely given or passed on to them, they will react properly. Tomorrow they may change.

THE HON. THIRU C. N. ANNADURAI : Any prudent citizen will be able to draw his own conclusion from the one word which you have used " impression ".

THIRU K. VINAYAKAM : The Chief Minister knows as much English as I know and he knows the implication of the words. I am careful enough to get out of the stand which I have taken and I have moderated it.

The Chief Minister has been saying in season and out of season that he stands by the Prohibition policy. I am a lawyer attending criminal courts and handling criminal cases. What is the position obtaining in the City of Madras to-day ? Prohibition offences have not been properly detected. There used to be days when there were three hundred to four hundred cases for manufacture or transport of illicit liquor or for drunkenness. They are all absent and we do not get such cases in criminal courts. What exactly is the reason, Mr. Speaker ? Does it mean that no offences are committed ? Does it mean that people have been drinking in the Congress regime and they are not drinking in the present Chief Minister's regime, that people have been manufacturing illicit liquor in the Congress regime and they do not do it now ? Is the Chief Minister going to believe all these funny stories ? People have been indulging in drink. Jolly well things are going on in the old way. Instructions have been given to the department concerned not to book the offenders.

THE HON. THIRU C. N. ANNADURAI : Again I have to rise and object to the word ' Instructions '. No instructions have been issued. I can very sympathetically consider the plight of Advocates who are not getting cases. But on that account let him not talk of instructions from the Government which do not exist.

THIRU K. VINAYAKAM : Whether I make money at the bar or not is my job. After all, this is not going to be the end. The Chief Minister can talk, I can reply and he can retort. Are we genuinely interested in the Prohibition policy ? Are we honest to ourselves ? That is all my question. There can be no two opinions on the point that Prohibition offences are committed. Offences are going on, but they are not detected. Why ? Because of the impression that things can be carried on and nobody is going to charge them.

THE HON. THIRU C. N. ANNADURAI : If the hon. Member is posted with facts about illicit distillation or drunkenness and if he has not passed on that information, he is actually committing the crime of abetment.

THIRU K. VINAYAKAM: The Chief Minister is not a complete lawyer; he is only a half-lawyer. I do not expect him to know the entire implications of law. An offence may be committed, but it is not the duty of the common man to go and report to the Government.

THE HON. THIRU C. N. ANNADURAI: It is the duty of any sincere and honest citizen to pass on information to the Government if he knows that an offence has been committed by anybody, unless he is committed to that person or is a friend of him.

THIRU K. VINAYAKAM: I would clarify. Only for grave offences like murder, rape and highway robbery, one will have to report, that too in the interests of the country. It is not incumbent upon any one to do it.

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not want to interrupt my friend by saying that he is conversant with murder, rape, dacoity and other things. My Friend himself has said that offences like illicit distillation are definitely there. Things are going on jolly well he has used a very happy wording. I do not know how he derives that happiness. But law stipulates, sincerety demands and duties of citizenship warrant that, when an honest citizen is posted with facts about any offence, grave, medium or minor, it is his duty to pass on that information to the Government and my Friend has not yet done it.

THIRU K. VINAYAKAM: Our Chief Minister forgets for one moment that I am in the Opposition. It is not the lookout of the Opposition to get and furnish all information so that you may rule well. We are interested in the Government committing mistakes and thus digging their own grave.

THE HON. THIRU C. N. ANNADURAI: Don't be talking about digging the grave. We have dug a very deep grave for you.

It is not a matter for the Opposition or for the Government side.

The duty of any sincere citizen is and the law also stipulates that, whenever one is posted with facts about certain offences, he should pass on the information to the Government. But by withholding this information, he is damaging the society as a whole.

THIRU K. VINAYAKAM: Let us not now wrangle over these things, because I have got more points.

Offences are being committed and nobody can question it. On the pavements we can find people walking about in a drunken mood. If police do not take action, it is not my job to call every second policeman and ask "Why don't you arrest?". If he arrests, a nasty situation will develop. To avoid all these things it is not in my own interest to do all these things.

What about the quick and ready action which a policeman will have to take whenever a situation goes out of order? I am very glad that when some disturbance was created to Mr. Anbazhagan, M.P., some people who were responsible for the disturbance were arrested. To that extent it is all right. But when a similar situation developed in Coimbatore, which has been much talked about, what was the action taken by the police people? No action was taken.





THE HON. THIRU C. N. ANNADURAI: There you are wrong. Cases have been registered and investigation is proceeding. The Hon. Member might have asked me what kind of action has been taken. Cases have been registered and investigation is proceeding.

THIRU K. VINAYAKAM: Thank you very much. That is the way how the Government will have to act.

There are some industrial disputes and some labour unrest. I have been told that the police people are just watching the situation and when police protection was wanted by the workers or management of Wimco Company or Metal Box Company.

THE HON. THIRU C. N. ANNADURAI: What can I say when a series of half-truths are told. It was only yesterday after receiving complaint, four persons of the Metal Box Company were arrested and cases have been registered.

THIRU K. VINAYAKAM: My allegation is still right. That has been done after a lapse of three months.

THE HON. THIRU C. N. ANNADURAI: After a lapse of 24 hours, not even 24 hours.

THIRU K. VINAYAKAM: Sir, Now I would quote the great leader in whom the Government have so much confidence, Thiru Rajaji, who one stated that the Government had failed in giving police protection to places where there was a breach of law and order........

DR. H. V. HANDE: Sir, on a point of order. Rajaji has never stated that this Government have failed to give police protection. I want the hon. Member to prove it and I do not like the hon. Member, Thiru Vinayakam, to quote Rajaji for this. Is he prepared to quote Rajaji with regard to the language policy? Let him stand on his own legs.

MR. SPEAKER: The point of order must relate to the procedure of the House.

DR. H. V. HANDE; He never said so.

MR. SPEAKER: The hon. Member can express his opinion when he gets the next opportunity to speak. Now it cannot be a point of order.

DR. H. V. HANDE: It is a point of order. He has given an incorrect information.

MR. SPEAKER: The Hon. Member can talk any incorrect thing. Where is it said that he must talk only correct things?

THIRU K. VINAYAKAM: Sir, I am very grateful to the Chair for coming to my protection. Sir, it is not an incorrect statement. I still hold that it is a correct statement. I wish that my hon. Friend refers to that pertiment article published in the 'Swarajya'. Now I would leave that matter at that stage.

Sir, our quarrel with the Government is that the life of the Congressman is at jeopardy. Wherever our friends address meetings or convene conference or take out processions I find pelting of stones from different corners. What exactly is the reason for it? Who exactly was responsible for the pelting of stones and he may be a person belonging to some party or may be the party in power. But when the police protection is wanted, the police will have to come to the aid of the party which has asked for it. Now to quote Dr. Johnson, "Morality of action depends upon the motive with which one acts". What is the action taken by the police when people indulge in this kind of stone-throwing and when the affected party has asked for police protection. If they stand as helpless spectators, what exactly does it mean? Does it mean that there is a Government......

THE HON. THIRU C. N. ANNADURAI: My hon. Friend's confidence is that he is standing on strong grounds. Can he give any instance where he has sought police protection and it was refused?

THIRU K. VINAYAKAM: In the case of Coimbatore, you are on very, very weak grounds. Of course, the police were there to give adequate police protection to all persons there including our Tamil Nad Congress President, Thiru Subramaniam. But what has happended there and what is the ability of the Police Department? Our Police is supposed to be the next best in the world. London Police is supposed to be best police in the world. Such being the case, there were also series of fires in the City of Madras. Under our very nose for one month there were fires in slums and does the Hon Chief Minister believe that the police could not check them? What as exactly happened? For one month they could not check them. Afterwards an officer has been appointed and that officer is still compiling his report.

THE HON. THIRU C. N. ANNADURAI: My hon. Friend will know that of all cases, cases of arson are very difficult to deal with as we have to get material evidences which are burnt along with the offence and that is why the Police had to go deep into the matter and investigate it. Three cases—I do not exactly remember the number of cases were filed and if I remember aright, there was one sentence and there was also an appeal. But the Police are very keen on that.

As for the querry, what has become of the report, because there is an appeal, the report cannot be released.

THIRU K. VINAYAKAM: My quarrel with the Department is this. 36 people were charge-sheeted and they were all remanded and kept in the prison for sometime. Then only two cases have been taken to the courts. The other 34 persons have been exonerated........



THE HON. THIRU C. N. ANNADURAI: The Police has to keep the real culprit and send out the innocent men.

THIRU K. VINAYAKAM: That is how things are explained away but that is not a fact. 34 people who were alleged to have taken part in that offence were not dealt with properly and they were let off due to their political affiliations with the Party in power. That is my information. But in the case of only two innocent persons, cases have been proceeded with. My quarrel is that if the police people were given a free hand to check any offence, without any influence from the Government side, they could have done their best under the circumstances and that is my point.

THE HON. THIRU C. N. ANNADURAI: Again the hon. Member is imputing motives to the Government. He began the sentence with 'If the police had been given a free hand' The police had been given a free hand and this Government did not interfere at any stage. Since the hon. Member has gone too far into that matter, I am forced to say that a very responsible Congress leader of Madras tried to interfere at the stage of investigation.

THIRU A. BALASUBRAMANYAN: Mr. Speaker, Sir, the matter being so important, the House is certainly interested to know the name of that eminent Congressman.

THE HON. THIRU C. N. ANNADURAI: The name is not important. The thing done is so below average that I do not want to connect it with the name because of the eminence he occupies in the politics of the State.

THIRU K. VINAYAKAM: When things of this kind happen, when Congress people are taken to the court, a lawyer who belongs to our party takes up the vakalath for them and argues on behalf of them. On the top of it a case has been launched against him with a view to terrorising him not to take up such cases. Is this the way the Government should act? I am asking a straight question to the Chief Minister.

THE HON. THIRU C. N. ANNADURAI: I should not dishonour my Friend by refusing to give an answer when he says that he is putting a straight question. He is sitting straight opposite to me but the question is not straight. In all these things there is a difference in saying that the Government interferes or some official interferes. If he means that the Government have interfered, I flatly repudiate it.

THIRU K. VINAYAKAM: I look at the question in the person of the Chief Minister because he holds the police portfolio. He is a responsible person to answer us on the floor of this House. I am not going to run to the Inspector-General of Police or the Commissioner of Police or whoever the officer may be and ask whether it is a fact that they are indulging in all these things.

THIRU A. BALASUBRAMANYAN: The hon. Member says that the Chief Minister is a responsible person. It appears as though the other Ministers are not so responsible. The implication is very plain. I think the matter has to be gone into.

THIRU K. VINAYAKAM: Far from this kind of funny opinions, I have respect for everybody. Why only the other Ministers? What about the hon. Members of the House? Are they not honourable people?

An impression is gaining ground in the country that the partymen belonging to the party in power are daily interfering with the police administration and goading and persuading innocent police officers to arrest and bring this man to the court or to the police station, give him some trouble and do something so that he may not actively participate in Congress activities. That kind of feeling will have to be removed. With these words I reiterate my cut motion.

***ஹாஜி. ம. மு. பீர் முகம்மது:** பேரவைத் தலைவர்களே, காவல்துறை மானியத்தின் மீது இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சார்பில் ஆதரித்துப் பேச என்னை அனுமதித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சந்துமுனையில் நின்று சிந்து பாடுகின்ற சாதாரண காங்கிரஸ்காரரில் இருந்து மெத்தப் படித்த மேதாவிகள் எல்லாம் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் ஏற்கனவே காங்கிரசார் ஆட்சியில் இருந்ததைவிட இப்போதுதான் சட்டமும் ஒழுங்கும் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை நான் என் கட்சியின் சார்பில் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய தேசீய மைனுரிடி மக்கள் என்ற காரணத்திஞல் சட்டத்தை எங்கள் சமயத்திற்கும், சமூகத்திற்கும் விரோதமாக எந்த எந்தத் துறையில் பயன்படுத்தலாமோ அந்த அந்தத் துறையில் பயன்படுத்தி நாங்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். உண்மையில் அவற்றை விவரமாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்திஞல் எங்களுக்கு வேதனை தரக்கூடிய ஒன்றை மட்டும் எடுத்துக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் கடந்த தேர்தலிலே வெற்றி பெறவேண்டும் என்பதற்காக வயது முதிர்ந்து தளர்ந்து இறந்துபோன ஒருவருடைய பிணத்தை எடுத்து வந்து பொய் வழக்குப் போட்டு, தென்னுற்காடு மாவட்டம் லாலாபேட்டையைச் சேர்ந்த பல முஸ்லீம் தோழர்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து துன்புறுத்தி, தேர்தலிலே தங்களுக்குச் சாதகமாக இருந்தால் விட்டு விடுவதாக மிரட்டியுள்ளனர். இதுபோல தொடர்ந்து பலவிதமான இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் நாங்கள் ஆளாகி வந்திருக்கிறோம். அவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்கிறபோது இந்த ஓராண்டு காலம்தான் இந்த மைனுரிடி மக்கள் தங்கள் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து இன்றி பாதுகாப்பாக அமைதியோடு வாழ்கின்ற சூழ்நிலை இந்த நாட்டில் அதுவும் இந்த மாநிலத்தில் மட்டும் தான் இருந்தது என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற நிலையில் இன்றும் கூட லாலாபேட்டையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி விவரமாக இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் பேரவையின் மரபைக் காக்க வேண்டுமென்ற நிலையில் தாங்கள் எனக்குக் குறிப்பிட்டுள்ள காலத்தில் விரித்து விளக்க முடியாதவனாக இருக்கிறேன். தேர்தல் நேரத்திலே இங்கிருந்து தேர்தல்





நிதிக்குப் பணம் திரட்ட ஒரு அமைச்சர் அவர்கள் சென்ற நேரத்திலே லாலாப்பேட்டையில் உள்ள ஊராட்சி மன்ற காங்கிரஸ் தலைவர் அந்தப் பகுதி முஸ்லிம் பெருமக்கள் அனைவரும் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று விடுத்த அழைப்பிற்கிணங்க அந்தப் பகுதி முஸ்லிம் பெருமக்கள் யாரும் வந்து கலந்து கொள்ளவில்லை என்ற காரணத்திஞல் அங்கே உள்ள மைனுரிடி சமூகத்தினருக்கு எதிராக பயங்கரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. தீ வைத்தல், கொள்ளை அடித்தல் இவற்றேடு கூட கொலை செய்கின்ற நிலைக்குக் கூட நிலைமை போய்விட்டது. (மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன: இங்கிருந்து சென்ற அமைச்சர் என்ருர், எந்த அமைச்சர்? இப்போதுள்ள அமைச்சரவையைப் பற்றிக் குறிப்பிடுகிருரா?) இப்போதுள்ள அமைச்சரவையில் யாரையும் பற்றிச் சொல்லவில்லை. நான் தேர்தல் நேரத்தில் என்று குறிப்பிட்டதே பழைய அமைச்சரவையைச் சேர்ந்த ஒருவர் என்பதை உணர்த்துவதற்காகத்தான். அதே ஊராட்சி மன்றத் தலைவர் மாஜியான பின்னரும் இப்போது தொடர்ந்து பல சங்கடங்களை ஏற்படுத்தி வருகிருர். இப்போதுள்ள நிலையைப் பற்றி அறிஞர் அண்ணு அவர்களிடத்திலும் எடுத்துச் சொல்லி அவர்களும் அக்கறையோடு இருக்கிருர்கள். கலைஞர் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மன்னுர்குடியில் இருக்கிற காவல்துறை அதிகாரியும் (சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) அந்த ஊராட்சித் தலைவருக்கு அனுசரணையாக இருப்பதுதான்வே தனைக்குரிய விஷயம். அதன் காரணமாக இன்றைக்கு நான கேட்டுக் கொள்வது என்னவென்ருல் அந்தக் காவல்துறை அதிகாரியை உடனடியாக அந்த இடத்தை விட்டு மாற்றிவிட்டு, வேறு ஒரு துணிச்சலுடைய இளைஞரைப் பார்த்து அங்கே போட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு நிலையைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ரிக்ஷா ஓட்டிகளில் இருந்து நடுத்தர மக்கள் வரையிலும் சட்ட அமைதியை, ஒழுங்கை மீறக் கூடாது. நம்முடைய அரசு ஆட்சியில் இருக்கிறது என்கிற நல்லுணர்ச்சி நாட்டு மக்களுக்கு மத்தியில் பரவலாக இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் இரவில் நான் ஒரு ரிக்ஷாவில் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. நடுவழியில் விளக்கு அணைந்துவிட்டது. உடனே ரிக்ஷாவை நிறுத்தி பக்கத்தில் இருந்த ஒரு கடைக்குச் சென்று விளக்கை ஏற்றிக்கொண்டே அந்த ரிக்ஷாக்காரர் வந்தார். "அண்ணுவின் ஆட்சி நடைபெறுகிறது. தவருக காரியம் எதையும் செய்யக் கூடாது. அதஞல் விளக்கை ஏற்றிக் கொண்டு வந்துவிட்டேன்" என்று சொல்லிய அவரது உள்ளத்துத் தூய்மையை நான் கண்டேன். இத்தகைய கடமை உணர்ச்சி சாதாரணத் தொழிலாளி உள்ளத்திலும் கூட இந்த ஆட்சி உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அன்று. இன்னொரு உண்மையையும் கூறுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். என் தொகுதியில் எனக்கு எதிராக வேலை செய்த ஒருவரை சாராயம் குடித்ததாகப் போலீசார் பிடித்துக் கொண்டு போய் அடைத்திருக்கிருர்கள் என்ற செய்தி எனக்கு வந்தது. எனக்கு எதிராக வேலை செய்தவர் என்ருலும் கூட அந்த இளைஞரின் தந்தை படுகிற வேதனையைப் பார்க்க முடியாமல் உண்மை என்ன என்று தெரிந்து கொள்வதற்காக காவல் நிலையத்திற்குச் சென்றேன். அந்த இளைஞரை அழைத்து உண்மை என்ன என்று கேட்டேன். அவர் நான் குடிக்கவில்லை என்று சொல்லவில்லை. குடித்தது கள்ளச் சாராயம் அல்ல, கடையில் விற்பனை ஆகும் பழ ரசத்தில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து குடித்தேன். அதஞல் போதையேறி உளறினேன். பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள் என்று சொன்ஞர். நான் குடிக்கவில்லை என்று சொல்லாமல் கள்ளச் சாராயம் குடிக்கவில்லை என்ருர. இந்த மது ரசங்கள், பழ ரசங்கள், அரிஷ்டங்கள் என்ற பெயரால் பற்பல சிறிய குக்கிராமங்களில் கூட விற்கப்படுகிறது. அரிஷ்டங்கள் கடையை முந்திய அரசில் இருந்தவர்களே திறந்து வைத்தார்கள் என்ருலும் இந்த அரசு அவற்றை விட்டு வைக்காமல் அதை மூடுவதற்கு ஏற்பாடு செய்து இளைஞர்களுக்கு மத்தியில் பழரசம் என்ற பெயரில் குடிப் பழக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[ஹாஜி ம. மு. பீர்முகம்மது] [1968 மார்ச் 20

இரப்போர்களையெல்லாம் விடுதியில் கொண்டுபோய் அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதின்மூலம் அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புக்கள் தரும் பிச்சைக்காரர்களுடைய பிரச்னையைச் சமாளித்து பரிகாரம் காண காவல் துறை மானியத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதை அறிகிறேன். அதை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்திலே பயங்கரமான தொழுநோய் உள்ளவர்கள் அங்கஹீனம் ஆனவர்கள் இவர்கள் எல்லாம் இன்னும் பல இடங்களில் பிச்சையெடுக்ககூடிய நிலை இருக்கிறது. குழந்தைகள் பெற்றெடுக்காத சிறுமிகள்கூட வாடகைக்குக் குழந்தைகளை வாங்கி வந்து பேருந்து நிலையங்களிலும் இரயில் நிலையங்களிலும் பிச்சையெடுக்கின்ற நிலை ஒரு கலையாக இருக்கிறது. வாடகைக்குக் குழந்தைகளை வாங்கிக் கொண்டு ஏழைத் தாய்மார்கள் எல்லாம் சிறுமிகள் எல்லாம் பிச்சையெடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இதை இந்தக் காவல் துறையில் மூலம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பாரும் ஏற்பாரும் பார்ப்பாரும் இன்றி கல்வியின்றி-வாழ்கை வசதியின்றி துன்புறுகின்ற ஏழைச் சிறுவர்கள், தாயும் தந்தையுமின்றி அனாதையாக வாழ்கின்ற சிறுவர்கள், தெருப் பொறுக்கிகளாக உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தீயவர்கள் தங்களுக்குக் கருவியாகப் பயன்படுத்திக்கொள்வதால் அச்சிறுவர்களின் உள்ளங்களிலேயே தீயவற்றை விதைத்துவிடுகிறார்கள். தாய்தந்தையற்ற அவர்களை அனாதை இல்லங்களில் சேர்ப்பதன் மூலம் குற்றங்களைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் பணியாற்றுகின்ற போலீஸ்காரர்கள் சைக்கிளில் ஏழு எட்டு மைல்கள் சென்று குடிப்பவர்களையும்-திருடுபவர்களையும் பிடிக்கிறார்கள், அப்படி அவர்கள் பிடிக்கச் செல்கின்ற நிலையில் அவர்கள் ஏழு எட்டு மைல்கள் ஈருருளி வண்டியில் மிதித்துச் சென்றதன் காரணமாக பலவீனம் ஏற்பட்டுவிடுவதால், குடிக்கின்றவர்களையும் திருடர்களையும் பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதற்குப் பரிகாரமாக அவர்களுக்கு மோட்டார் சைக்கிளோ அல்லது ஒரு சென்டருக்கு ஒரு பிக் அப் வானோ கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரக்கமற்ற அரக்கன் என்று இலக்கியத்தில் கம்பன் கூறிய காரணத்தினாலே அரக்கனிடத்திலும் இரக்க உணர்ச்சி இருக்கின்றது என்பதை நீதி தேவன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி விளக்கி நீதி தேவனுக்கு மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் நாடக இலக்கியத்தின் மூலம் புதுமையை ஏற்படுத்தித் தந்த அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் காவல் துறை நிர்வாகத்தில் எப்படி கடுமையான உள்ளத்தோடு செயல்படுபவார்கள் என்று சிலர் அச்சப்பட்டார்கள் துப்பாக்கி இருக்கிறது. எதற்காக? சுடுவதற்கு அல்லவா? விடுதலை வேண்டும், விடுதலை வேண்டும் என்று சிறையில் கம்யூனிஸ்டு தலைவர்கள் கேட்டார்கள். சிறையில் இருந்து மட்டிலும் அல்ல உடலிலிருந்தும் உயிருக்கு விடுதலை தந்திருக்கிறோம் என்று விளக்கம் கொடுக்கக்கூடிய நிலை இருந்தது. இப்பொழுது இந்த அரசிலே சட்டம், ஒழுங்கு அமைதி இவை சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன. மைனாரிடி மக்களுக்கும் அவர்களுடைய உயிரும் உடைமையும் பாதுகாக்கப்படுகின்ற காரணத்தால் அவர்கள் அமைதியோடு வாழ்கிறார்கள். அப்படி வாழ்வதற்கு வாய்ப்பையும் வசதியையும் செய்து கொடுக்கின்ற இந்த காவல் துறையை இந்த அமைச்சரவையை நான் பாராட்டி மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையிலே திரு. கே. விநாயகம் அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்றும் இல்லாது இன்று உணவுக்கும்



1968 மார்ச் 20] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சொல்வார்களே அதைப்போல் நிலையிலே காவல் துறை மானியத்திலே சபாநாயகர் அவர்கள் சட்டசபை அங்கத்தினர்கள் அனைவரையும் கட்டிப் போட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது.....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்னும் சாப்பிடவில்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சாப்பாட்டுக்கு எங்கே விட்டீர்கள் ? இந்த நிலையிலே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பேச்சுக்களிலே ஆளும் கட்சியாக இருந்தாலும் சரியே எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரியே, எந்த விதமான மாறுதலும் கிடையாது, பழைய கதையாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் காங்கிரஸ்காரர்களை திட்டாமல் இருந்தால் ஜீரணம் ஆகாது. மக்கள் உங்கள்பக்கம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் வரலாம் குறைகளைத் தீர்க்கலாம். 1967-ஆம் ஆண்டு வரைக்கும் எதிர்க்கட்சியாக, இப்போழுது ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் இருந்தார்கள், அப்பொழுது இந்த போலீஸ் மானியத்தைப்பற்றி அவர்கள் என்ன என்னவெல்லாம் பேசினார்கள், அந்தப் பேச்சுக்களை எண்ணிப்பார்த்தால் கற்பனைக்குக்கூட எட்டமுடியாத நிலையில் இருக்கிறது. எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் பொறுப்புடன் பேசவேண்டும், அதிகமாகப் பேசினால் அதை நிரூபிக்ககூடிய பொறுப்பும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன், எதிர்க்கட்சியாக நீங்கள் இருந்தபொழுது பேசியதிலே பத்தில் ஒரு பங்கைக்கூட பேசுவதற்குத் தகுதியும் திறமையும் இல்லை. (ஆரவாரம்) கைதட்டுகிறீர்கள் என்றால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று அர்த்தம். கடந்த 15, 20 வருஷ காலமாக காவல் துறையினரும் நம்முடன் இருக்கக்கூடிய நண்பர்கள்தான் என்ற நிலையிலே உள்ளவர்கள். அந்தத் துறையிலே என்னுடன் படித்தவர்கள்கூட இருக்கிறார்கள், உறவினர்களும் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே முன்பு பதில் அளித்தபோது கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது என்று. சமுதாயம் சரியாக இருந்தால்தான் அவர்கள் பணியாற்றுவதற்கு நலமாக இருக்கும். அந்தப் பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. காவல் துறையினர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் இருந்தார்கள், மக்களுடைய தீர்ப்புப்பெற்றிருக்கிற உங்கள் ஆட்சியிலேயும் இருக்கிறார்கள். போலீஸ் துறை மட்டுமல்ல, வேறு எந்தத் துறையாக இருந்தாலும் அரசாங்கத்திற்கு விசுவாசம் உள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதை நான் வற்புறுத்துகிறேன். ஆனால் அரசாங்கத்திற்குத்தான் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவேண்டுமே தவிர கட்சிக்கு விசுவாசமாக இருக்கக்கூடாது. ஆளுங்கட்சியில் இருக்கிறவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பழைய காலத்திலே அரசாங்கமும் கட்சியும் சேர்ந்துதான் அதைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறார்கள். அது நிச்சயமாக இல்லை. என்னுடைய 10, 15 வருஷ வாழ்க்கையில் அப்படி ஒருமுறைகூட தலையிட்டது இல்லை. ஆளுங்கட்சியாக இருந்தபொழுது எந்தவிதமான சிபாரிசுக்கும் நான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சொல்லவில்லை. சிலர் செல்வதெல்லாம் சிபாரிசு செய்யவில்லை என்பதான புகார்தான். கடிதம் கொடுக்கவில்லை என்ற புகார்தான். ஆகவே நான் எதற்கும் போகவில்லை என்று சொல்லவில்லை. நிர்வாகக் காரியங்களுக்குச் சென்றிருப்பேனே தவிர கட்சியின் நலன்களுக்காகப் போகவில்லை......................

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒருவர் சொன்னால் போதுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஊர் எல்லாமா சேர்ந்து சொல்வார்கள் ? முதலமைச்சர் அவர்கள்தான் சொல்ல முடியும் தம்பிகளுக்கும் சொல்ல முடியுமா ? உங்களுக்குப் பயந்துகொண்டு சிரமங்கள் ஏற்படு

மென்று ஆஸ்பத்திரியிலே போய் இருந்துகொண்டிருக்கிறார்கள். எங்களிடம் அப்படிக் கொஞ்சப் பேர்கள் இருக்கிறார்கள், ஆனால் உங்களிடம் அப்படி அதிகப் பேர்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது அசெம்பிளியில் நான் சொல்லவில்லை, வெளியேதான சொல்ல வேண்டும், அப்படி இங்கே சொன்னால் சபாநாயகர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஏதாவது சொல்வார்கள்.

இப்போது இருக்கும்படியான சூழ்நிலை என்ன ? சட்டம் அமைதி இல்லை யென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். என் அவ்வாறு சொல்லுகிறார்கள் ? மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். நானே வெளியே போகப் பயமாக இருக்கிறது. எவ்வளவோ மிரட்டல் கடிதங்கள் வருகின்றன. ஏற்கனவே சட்டசபையில் படித்துக் காட்டியிருக்கிறேன். இன்னும் ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதற்காக நான் பயப்படப்போவதில்லை. எனக்கு எந்த முடிவு வந்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டால் முதலமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று தெரியும். அப்படியில்லையென்றாலும் பொதுமக்களே எனக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்கள். தரம் கெட்ட பேச்சுக்கள் மேடைகளிலே பேசப்படுகின்றன என்பது உண்மைதான். எல்லாக் கட்சி அரசியல் மேடைகளும் மிகவும் கீழ்த்தரமாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளத் தயார். எந்தக் கட்சி அதிகமாகக் கீழ்த்தரமாகப் பேசும் பரம்பரையைச் சார்ந்துத் என்பது தெரியும். நீங்கள் கொஞ்சம் ஆரம்பித்தீர்கள், மற்றவர்களும் தொடர்ந்து விடுகிறார்கள். பொறுப்புடன் சொல்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் ஒன்றை எடுத்துக் காண்பித்தார்கள். பேசியது முழுக்க உண்மைதான், மறுக்கவில்லை. பேசும்போதே பொதுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். பேசியதைச் சுருக்கெழுத்தாளர்கள் நல்ல முறையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினேன். நான் பேசினேன் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயார். எதற்காக நான் பயப்பட வேண்டும் ? சில சமயங்களில் அமைச்சர்கள் எப்படிப் பேசுகிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களைப்பற்றி இப்படியெல்லாம் பேசினார்கள் என்று என்னிடம் வந்து சொல்கிறார்கள். சொல்வதைப் பூரணமாக அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. சில பத்திரிகைகளில் பேச்சைத் தவறான முறையில் போடுவதை எடுத்துக் கொண்டு போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பேசுகின்ற அமைச்சர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ? தமிழகத்திலே ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால் இந்தக் காரியத்திலே எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் வேண்டும். நடக்கின்ற சில சம்பவங்களைப் பார்க்கின்றபோது மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எந்த இடத்தில் பார்த்தாலும் அமைதியான நிலை இல்லை. நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அது பற்றி முதலமைச்சர் அவர்களுக்கும் மனு வந்திருக்கலாம், தகவல் வந்திருக்கலாம்.

அதைப் பற்றிய தகவலை அவர்களுடைய கட்சி எம். பி. யே. என்னிடம் கொடுத்தார், கிருஷ்ணகிரி தாலூகாவில், ஊத்தங்கரை சப்-தாலூகாவில், நாராணப்பள்ளி என்ற கிராமத்தில் சுமார் 15, 20 நாட்களுக்கு முன்பு, 23 குடும்பங்களின் வீடுகளில் பட்டப் பகலில் கொள்ளையடித்தார்கள். நகைகள், மற்றும் சாமான்களை எல்லாம் எடுத்துச் சென்றதன் மூலம் 10,000 ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரை அந்தச் சொத்து திரும்பவும் கைப்பற்றப்படவில்லை. போலீஸ் எந்த விதமான நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளவில்லை. அங்கிருக்கும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்கிறார் ? அங்கே





31

சட்டம் அமைதி குலைந்திருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று அவர்கள் சொன்னார்கள். இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகும். அது பற்றிய விண்ணப்பத்தை அவர்களும் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நானும் முதலமைச்சர் அவர்களிடம் நேரிலே கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய தேனி தொகுதி அங்கத்தினர் அவர்கள் பேசும்போது ரயில்வே ஸ்டேஷனில் மதிப்பிற்குரிய அன்பழகன் தாக்கப்பட்டதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். பொதுக் கூட்டத்திலும் வருத்தம் தெரிவித்திருக்கிறேன். இது மாதிரியான செயல்களில் காங்கிரஸ் கட்சியினர் ஈடுபட்டிருப்பாரகளேயானால் அது தவறான போக்கு என்று கண்டித்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இது எங்கள் கட்சிக்கு உடன்பாடானது அல்ல. எங்கள் தலைவரே அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். மதிப்பிற்குரிய தேனி தொகுதி அங்கத்தினர் குடும்பத்தை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் உயர்ந்த படிப்பாளி. அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை அந்த முறையிலே சொல்லியிருக்க வேண்டாம். அங்கே என்ன நடந்தது என்பதை எனக்குத் தெரிந்த அளவிலே கூற விரும்புகிறேன். திரு. நெடுமாறனை வரவேற்க சில பேர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். நான் காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டு, மணிவர்மா என்னிடம் கூறியதைக் கூறுகிறேன். மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் போகும்போது அவருடைய கார் ஒருவர் மேல் இலேசாக இடித்ததாகக் கூறினார்கள். உடனே, அங்கே கூடியிருந்த கூட்டம் சூழ்ந்திருக்கிறது. தவறான செய்கை நடந்த உடனே அதைத் தடுத்து நிறுத்தி அவ்வாறெல்லாம் நடக்கக் கூடாது என்று சொல்லியதாகச் செய்தி வந்திருக்கிறது. திரு. அன்பழகன் அவர்கள் வருவார்கள் என்று ஏதோ திட்டம் போட்டு இந்தக் காரியம் செய்யப்படவில்லை. உணர்ச்சி வேகத்தில் நடந்த [illegible] அடுத்த நாள், ஆங்காங்கு தூங்கிக் கொண்டிருந்த ஆட்கள் எல்லாம் [illegible] செய்யப்பட்டார்கள். நடவடிக்கை எடுத்துக் கொண்டது பற்றிச் சந்தோஷம்தான். இதுபோன்ற நடவடிக்கைகள் எங்கள் [illegible] பொறுத்து இருந்த [illegible] உடன் எடுத்துக் கொள்ளப்படுகிறதா ?

6144

பொள்ளாச்சியில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே கறுப்புக் கொடி காட்டினார்கள். "முன்னாலே [illegible] போய்க் காட்டுங்கள்" என்று போலீசார் சொன்னதை நான் [illegible]டேன். நாங்கள் மேடைக்குப் போனோம். கூட்டத்தில் கறுப்புக் கொடியைப் பறக்க விட்டார்கள். யார் அதைச் செய்தது [illegible] கலப்பு நடந்திருக்கிறது. நான் மேடை மீது [illegible] கொண்டே இருந்தேன். விஷயம் ஒருவாறாக முடிந்து விட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, திரு. பூவராகன் பேசிய பிறகு, நான் பேசிய பிறகு இரண்டு லாரி கல்லை ஏற்றிக் கொண்டு வந்து நிறுத்திகள். கற்கள் வீசப்பட்டன. போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டே இருந்தார்கள் ஐம்பது பேருக்கு மேல் காயம் ஏற்பட்டது. போலீஸ்காரர்கள் அதைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கலாம். கோவையில் நடந்த சம்பவத்தில் திரு. கே. எஸ். ராமசாமி அவர்கள் தாக்கப்பட்டார்கள். போலீஸார் தவறான கணக்குப் போட்டதன் காரணமாகத்தான் அவர் அடிபடும் நிலை ஏற்பட்டது. அமைச்சர் அவர்கள் ஒரு பக்கத்தில் கலெக்டர் அவர்களும், இன்னொரு பக்கத்தில் உயர்தர போலீஸ் அதிகாரியும் உட்கார்ந்து இருந்தாலும் தவறான கணக்குப் போட்டதன் காரணமாகத்தான் அந்தச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் உயர்தர அதிகாரிகள் இதை எதிர்பார்த்திருக்க வேண்டும். மூன்று மணிக்கு சி. எஸ். அவர்களும் உயர்தர அதிகாரியும் சந்தித்தார்கள். குழப்பம் ஏற்படும் நிலைமை இருக்குமானால் கூட்டத்திற்குக் கொடுத்த பர்மிஷனைக் கான்சல் செய்து

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 20

விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் கூட்டத்தை நடத்த முடியும் என்ற வகையில் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள். மாணவர்களைப் பற்றி திரு. சுப்பிரமணியம் அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் சொன்னது பற்றி விளக்கத்தை உடனே கொடுத்திருக்கிறார்கள்.

சில பத்திரிக்கைகள் இருக்கின்றன. காங்கிரசையும் மாணவர்களையும் மூட்டி விடுவது. சுப்பிரமணியத்திற்கு கறுப்புக் கொடி காட்டினார்கள். கற்கள் எறியப்பட்டன, திண்டுக்கல்லிற்கு அவர் வரப்போகிறார், விடாதீர்கள் என்றெல்லாம் எழுதுகிறார்கள். அவர்கள் திருநெல்வேலிக்குப் போகிறார், ஜாக்கிரதை. இவ்வளவு பேர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள், இவ்வளவு கற்கள் எறியப்பட்டன என்று எழுதுகிறார்கள். சட்டம் அமைதி இல்லை யென்றால் சுபீட்சம் இருக்க முடியாது. எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் காரியங்கள் செய்திருந்தால் இந்தக் காரியங்களை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம்.

சட்டம், அமைதி என்று சொன்னால் முதல் அமைச்சர் அவர்கள் வழக்கம்போல் பதில் சொல்வார்கள். போட்ட உத்தரவால் 150 பேர்கள் இறந்துபோனார்கள். சென்ற தேர்தலின்போது இவர்கள் பல படங்கள் எழுதி வைக்கவில்லையா? பலவிடங்களில் எழுதி வைக்கவில்லையா? கூலி கேட்ட அத்தான் குண்டடிபட்டு செத்தான் என்று எழுதி வைக்கவில்லையா? எந்த அத்தான் கூலி கேட்டான், எங்கு குண்டடி பட்டு செத்தான்? நாலாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை கொலை செய்த காங்கிரஸுக்கா வோட்டு என்று எழுதி வைக்கவில்லையா? காமராஜரின் படத்தைப் போட்டு, உண்மைக்கு மாறான விஷயங்களை எழுதி வைக்கவில்லையா? கொட்டை கொட்டையாக எழுதி வைக்கவில்லையா? நாங்கள் எழுதி வைத்தால் போலீஸ் விடமாட்டேன் என்கிறார்கள். ஜனநாயகத்தில் அப்படி எழுதி வைக்கக்கூட எங்களுக்கு உரிமை இல்லையா?

அரவங்காடில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, இவ்வளவு பேர்கள் சுடப்பட்டார்கள் என்று எழுதியிருந்த அட்டைகளை போலீஸ் எடுத்து விட்டிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் காங்கிரஸ் தவறு செய்தார்கள், தவறு செய்தார்கள் என்று கூறுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் கைது செய்யப்படுகிறார்கள். குழப்பம் என்று சொன்னால் அதில் எல்லாக் கட்சிக் காரர்களும் இருக்கத்தானே வேண்டும்? கரக்ட்டாக காங்கிரஸ்காரர்கள் தான் குழப்பத்தைச் செய்திருக்கிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் அல்ல நாங்கள். 1965-ல் பட்டப் பகலில் திருப்பூரில் இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் கொளுத்தப்பட்டார்கள். அது கூட காங்கிரஸ்காரர்கள் செய்ததா? நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்த சமயத்தில் நடந்தது அது. "இந்து" வில் ஸ்ட்ரைக் நடந்தபோது கண்ணாடி ஜன்னல்கள் உடைந்தன, இப்போது அப்படி ஒன்றும் உடையவில்லை என்று சொன்னார்கள். அன்று நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்ததால் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்தன, இன்று நாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பதால் கண்ணாடி ஜன்னல்கள் உடையவில்லை. பட்டப்பகலில் சப இன்ஸ்பெக்டர்கள் கொளுத்தப்பட்டது குறித்து நீதி மன்றத்தில் தீர்ப்பு கொடுத்தவுடன் கொலைசெய்தவர்களைக் கூட விடுதலை செய்தீர்களே, அதற்கு நீங்களும் துணை நின்றதால் அல்லது அனுதாபம் உள்ளதால் அல்லவா அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள்? யாராயிருந்தாலும் தவறு செய்தால் தண்டிக்க வேண்டும். அவர்களை விடுதலை செய்ததால் என்ன தப்பு வேண்டுமானாலும் செய்யலாம், நம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று மக்கள் கருதுகிறார்கள். கொலை செய்து வண்டியில் ஏற்றியவர்களையே விட்டுவிட்டார்கள், ஆகவே எதையும் செய்யலாம் என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது.

வார்னிஷ் குடித்து பலர் செத்தார்கள். அப்போது சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இது காங்கிரஸ்காரர்கள் காலத்தில் போடப்பட்ட உத்தரவு என்று, அவர்கள் சொன்ன பிறகு நான் கெஸட்டில் படித்துப் பார்த்தேன். ஆகஸ்டு 9-ம் தேதி கெஸட்டில் வந்தது,



1968 மார்ச் 20] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

'Sanction of certain process for manufacture of ordinary denatured spirit....'.

Fort St. George, July 27, 1967.

'Under sub-rule (2) of rule 2 of the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, the Governor of Madras sanctions the following process for the manufacture of ordinary denatured spirit at the Nellikuppam Distillery by Messrs. E.I.D. Parry, Limited, Madras, temporarily for a period of six months commencing on the 4th July 1967, or till the distillers replenish their stock of approved pyridine, whichever is earlier, namely :—

"The use of 1·5 litres of light caoutchoucine to the exclusion of pyridine bases for every 98·5 litres of spirit".

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே இந்தக் காரியத்தை வெளியில் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும், கெஸட்டில் உள்ளதை எடுத்துச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. கெஸட்டில் வந்தது, ஏற்கனவே, போட்ட உத்தரவை ஆண்டு தோறும், மாதா மாதம் ரென்யூவல் செய்து கொள்கிறார்கள். ரென்யூவல் செய்யும் அதிகாரம் அதிகாரிகளுக்கு உண்டு, அமைச்சர்களுக்கு இல்லை. போர்ட் ஆஃப் ரெவின்யூவால் செய்யப்பட்டது.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** கெஸட்டில் போட்ட பூர்ண பொறுப்பு அமைச்சர்களுக்கு உண்டு.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த உத்தரவு இந்த அரசாங்கம் வந்த பிறகு போடப்பட்டது என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். இது நாங்கள போட்ட உத்தரவல்ல. ஏற்கனவே உள்ள உத்தரவை அவ்வப்போது ரென்யூவல் செய்வது. ரென்யூவல் செய்தது இதில் வந்திருக்கிறது. அதை அதிகாரிகள் செய்து கொள்ளலாம் என்று சொன்னார்கள், அதிகாரிகள் செய்தால் என்ன, அது அரசு செய்ததாகத்தான் ஆகும் என்றார்கள். நான் கேட்கிறேன். இந்த உத்தரவில் என்ன தவறு?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கெட்டோகினில் எலுமிச்சம்பழம் போட்டு செய்தார்கள். அதனால் இரு நூறு பேர்கள் மரணம் அடைந்தார்கள். பொது மக்களிடம் சரியாக....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மறுபடியும் விவரம் தெரியாமல் பேசுகிறார்கள், எந்தப் பொருளைச் சேர்த்திருப்பதால் மரணம் நேர்ந்ததாகக் கருதுகிறார்களோ, அது விஞ்ஞான முறைப்படி ஏற்கனவே ஆராயப்பட்டு அது விஷசத்து உள்ளதல்ல என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்குத் தெரிந்த கெமிஸ்டிடம் கேட்டதற்கு கெட்டோகின் விஷம் உள்ளதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். கிண்டியில் இருந்தும், அவர்கள் தயாரித்ததைப் பார்த்துவிட்டு, அது விஷம் உள்ளது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உங்களுக்குத் தெரிந்த கெமிஸ்ட் கெமிஸ்ட்ரி படித்தவரா? அந்த கெமிஸ்ட் அல்லது கெமிஸ்ட்ரி படித்தவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால் இருவர்களும் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். கெட்டோகின்

[திரு சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 20

என்ற பொருள் விஷம் உள்ளதல்ல என்று சர்க்கார் ஆராய்ச்சிக்குப் பிறகு முடிவு கட்டப்பட்டது. அது நாங்கள் வந்த பிறகல்ல. ஏற்கனவே முடிவு கட்டப்பட்டு அதன் அடிப்படையில் முந்திய அரசால் அந்த உத்தரவு போடப்பட்டது. இந்த அரசு வந்த பிறகு ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது வருடத்திற்கு ஒரு தடவை ரென்யூவல் செய்யப்படுகிற முறையில் ரென்யூவல் செய்யப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 200 பேர்கள் மாண்டதற்குக் காரணம் என்னவென்று கண்டு பிடித்தார்களா ? வார்னிஷ் குடிப்பதை ஏன் தடுக்கவில்லை ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** இதுவரையில் திரு. கருத்திருமன் அவர்கள் கட்சி அரசியலில் பேசிக்கொண்டு வந்தார்கள். ஆகவே அதிகத் தவறு இல்லாமல் இருந்தது. இப்போது அவர்கள் விவரங்கள் தெரியாத விஷயத்திற்கு வருகிறார்கள். 200 பேர்கள் மாண்டிருக்கிறார்கள். வார்னிஷ் குடித்ததால் அதை ஏன் தடுக்கவில்லை என்று கேட்கிறார். அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் யார் யார் வார்னிஷ் சாப்பிடுகிறார்கள் என்று பார்த்து இதைச் சாப்பிடாதீர்கள், செத்து விடுவீர்கள் என்று சொல்ல வேண்டுமென்று கருதுகிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் ? அப்படி எந்தச் சர்க்காரும் செய்ய முடியாது. ஆடி 18-ல் இதுமாதிரிக் குடிப்பது பழக்கம் என்பதால் வார்னிஷ் குடித்து விட்டார்கள் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குடித்தது சரி ஆடி 18 கொண்டாட வேண்டுமென்ற முறையில் என்று சொல்லவில்லை. அதைக் கண்டிக்கத்தக்க முறையில் அந்நேரத்தில் நான் குறிப்பிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதைப் பார்த்தால் குடிப்பது போல் வார்னிஷை தயாரிக்க வேண்டுமென்று சிபார்சு செய்வதுபோல் தெரிகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆடி 18-ல் குடித்தது உண்மை என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸாருக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லாமல், அவர்களிடம் பயமில்லாமல் யார் வேண்டுமானாலும் எந்தத் தவறை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சூழ்நிலை உண்டாகியிருக்கிறது என்ற குற்றச் சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதற்கும், போலீஸுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ? எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு இன்னொரு தகவலைத் தர விரும்புகிறேன். போன மாதமோ, இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயோ வேறு ஒரு மாநிலத்திலும் வார்னீஷ் குடித்துவிட்டு 90 பேர் என்று கருதுகிறேன்—ஒரு நாளில் இறந்திருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த மாநிலத்திலே இறந்திருக்கிறார்கள் என்று கூறி தப்பித்துக்கொள்ள முடியாது. அங்கேயிருந்தாலும் தவறு என்று தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தவறு, அல்லவா என்பதற்காகச் சொல்லவில்லை. அவருடைய தத்துவம் எனக்குப் புரிகிறது. எந்தத் தவறு எங்கு நடந்தாலும் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதுதான் அவர்கள் வாதம். அப்படித்தான் இருக்க முடியும். நான், இது இங்கே மட்டும் நடந்தது அல்ல, வார்னீஷ் காய்ச்சிக் குடிப்பதிலே சில தவறுகள் ஏற்பட்டு சாவு வருகிறது என்பதற்காக 90 பேர் செத்திருக்கிறார்கள் என்று சொன்னேன்.



1968 மார்ச் 20]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய வேண்டுகோளெல்லாம் இது மாதிரியான காரியங்களுக்கெல்லாம் ஏற்கனவே என்னுடைய கட்சி அங்கத்தினர் சொன்னதைப் போல் திட்டவட்டமாக அறிவிப்பு செய்துவிட வேண்டும். இப்பொழுதிருக்கும்படியான நிலையில் புகார்கள் சொல்லாமல் இருக்க முடியாது. மாவட்டங்களிலே கட்சியிலிருப்பவர்களை யெல்லாம் கண்டால் போலீஸ் பயந்து கொண்டிருக்கிறது. மாவட்டத் தலைவர்கள் சூப்பிரண்டெண்ட் ஆஃப் போலீஸிடம் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள், தங்களுடைய செல்வாக்கை அவர்களிடம் பயன்படுத்தி, தங்கள் காரியத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். தாலுக்கா லெவலில் வட்டங்களில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக எந்தயிடத்திலே தவறு நடந்தாலும், காங்கிரஸ்காரர்களால் விண்ணப்பம் கொடுக்கப்பட்டால் நிச்சயமாகக் கவனிக்கப்படுவதில்லை என்று எனக்கு ஏராளமாகப் புகார்கள் வந்திருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள் கூறும் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தாலும் கூட உடனடியாக விசாரிப்பது கிடையாது. வேறு கட்சிக்காரர்கள் கொடுத்தால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை உடனடியாக எடுத்துக் கொண்டு செய்வதற்குத் தவறுவதில்லை. ஆகவே, நீதி, நேர்மை நன்றாக நடக்க வேண்டுமென்றால் அதற்கு இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள், போலீஸ் அதிகாரிகள் நீதிபதிகளைப் போல நடக்க வேண்டும், கட்சிக்கு அப்பாற்பட்டு நடக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்களும் போலீஸ் விழாவில் சீராக நடைபெற வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டார்கள். ஈ.வெ.ரா. பெரியார் அவர்களும்—தந்தை அவர்களும்—கூறியிருக்கிறார். சி. சுப்பிரமணியம் அவர்களே பொதுக்கூட்டத்தில் பேச முடியாத நிலைமை ஏற்பட்டால் பாக்கியிருப்பவர்களின் நிலைமை எப்படியிருக்கும் என்று. காங்கிரஸ்காரர்கள் சொன்னால் குற்றச்சாட்டு கூறுகிறார்களோ என்று சொல்வீர்கள். ஆனால் மாநிலத்தின் தலைவர் மேதகு கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போலீஸ் விழாவில். இராஜாஜி அவர்கள்—உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர் தான் சொல்லியிருக்கிறார். ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதற்காகச் சொல்லுகிறார்கள் என்றால் ஆட்சி நன்றாயிருக்க வேண்டும், சட்டம் , அமைதி ஒழுங்காக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் வேண்டுகோளெல்லாம், இப்பொழுது முதலமைச்சரவர்கள் திட்ட வட்டமாக சொல்லிவிடவேண்டும். அவர்கள் நிதானமானவர்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எதற்கு நிதானம் வேண்டுமென்று தயவு செய்து பார்க்க வேண்டும். இந்தக் காவல் துறையில் நிதானமாக இருந்துவிட்டால் அப்புறம் விஷயம் தவறாகப் போய்விடும். தீர்மானத்தை எடுப்பதிலே நிதானமாக இருக்கலாம். ஆனால் காவல்துறையிலே நிதானமாகயிருந்தால் அது பேராபத்தில் போய் முடியும். இப்பொழுதுள்ள நிலை போலீஸ் என்றால் பாதுகாப்புக் கிடைக்கும், புகார் செய்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற அத்திலே போய்க் கொண்டிருக்கிறது. அந்த அத்து போய், துச்சமாக நினைக்கக்கூடிய நிலை வந்தால், ஒரு கட்சிக்குத்தான் அது என்று எண்ணும்படியான நிலை வந்தால் அது விபரீதத்திலே கொண்டுபோய் விடும் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே என்னுடைய கட்சியின் சார்பாக திரு. விநயகம் அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, தமிழகத்தில் எப்பொழுதும் சீரும் சிறப்போடும் உயர்வாகயிருந்தது காவல்துறை என்பதை மறக்க முடியாது, அவர்கள் நல்ல முறையிலே பணியாற்றிக் கொண்டு வந்தார்கள், அப்படி வந்தவர்களை நீங்கள் கட்டுப்படுத்தி உங்கள் வலைக்குள்ளே போட்டு நடக்க முடியாத முடமாக வைத்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்டி வெட்டுத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

[1968 மார்ச் 20

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, போலீஸ் துறைபற்றிய இந்த மானியத்தின் பேரில் பேசியிருக்கின்ற உறுப்பினர்கள், போலீஸ் துறை சரியான முறையிலே சமூகத்திற்கு பயன் அளிக்கும் வகையில் எப்படியெல்லம் பணியாற்ற வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக் கூறிய பல கருத்துக்களை நான் அக்கறையோடு கவனித்தேன். போலீஸ்காரர்கள் மிகக் குறைந்த ஊதியத்திலே பிணைக்கப்பட்டிருப்பதாலே அவர்களின் தரம் உயருவதற்குத் தயக்கம் இருக்கிறது என்பதைக் கூறிய உறுப்பினருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களுக்குக் குடியிருப்பு மனைகள் சரியான அளவிலே கட்டித்தரப்படவில்லை, அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தரப்படவில்லை, அவைகளையெல்லாம் விரைவாகச் செய்து தர வேண்டுமென்று கூறிய யோசனையை நான் நன்றியறிதலோடு வரவேற்றுக் கொள்ளுகின்றேன். காவல் துறையில் சேருபவர்கள் குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. யாவது படித்தவர்களாக வரவேண்டுமென்று ஒரு உறுப்பினர் கருத்து தெரிவித்தார்கள். அதுவும் வரவேற்கக்கூடிய சிறந்த யோசனையாகும். ஆனால் இந்த யோசனைகளை நிறைவேற்றக்கூடிய நேரத்தில், போலீஸ்துறைக்கு நாம் செலவழிக்க வேண்டிய பணம் இப்பொழுது செலவழிக்கப்படுவதைப்போல சில மடங்குகள் அதிகமாகச் செலவழிக்க வேண்டிவருமென்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஏனென்றால் அவ்வளவு அக்கறையோடு எடுத்துச் சொன்ன யோசனைகளான, காவல்துறை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பது, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் காரியம், இன்னும் அதிலே படித்தவர்களாகப் பார்த்து சேர்ப்பது என்றால் படித்தவர்களுக்குக் காவல்துறையில் ஈடுபடத்தக்க அளவிற்குத் நல்ல தூண்டுதல் ஏற்பட வேண்டுமானால் அதற்குத் தகுந்த அளவு ஊதியத்தை அளிப்பது என்ற யோசனைகளை நாம் நிறைவேற்றத் துவங்கும்பொழுது போலீஸ் மானியத்தின் தொகை வளரும். அப்படி வளரும்பொழுது, இந்த அரசு வந்தபிறகு போலீஸுக்கு அதிகமாகச் செலவழிக்கிறார்கள் என்று நீங்கள் குறை சொல்லுவீர்களோ என்ற அச்சத்தோடு இருந்தேன். அந்த அச்சத்தை நீக்கியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிதிநிலை சரிப்பட்டவுடன் நீங்கள் சொன்ன யோசனைகளை மனத்திற்கொண்டு காவல்துறை மேலும் செம்மைப்பட ஊதியத்தை உயர்த்தி வீட்டு வசதி செய்து தருவோம். அப்படி அதற்காகச் செலவழிக்க நேரிடும்பொழுது இன்றையத்தினம் பேசிய பேச்சுகளை நினைவிற்கொண்டு, உறுப்பினர்கள் அது நியாயம்தான் என்று வரவேற்க வேண்டுமென்று முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் பொதுவாக எந்த அமைச்சரவையும் மற்ற துறைகளில் அதிகப்படியான பணம் செலவழிக்கும்பொழுது மிகுந்த உரிமையோடும், பாசத்தோடும் இந்தத் துறையிலே முன்னாலிருந்ததைவிட 6 கோடி அதிகமாகச் செலவழிக்க இருக்கிறோம் என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ள முடியும். ஆனால் போலீஸ் துறைக்கு முன்னாலுள்ளதைவிட இந்த ஆண்டு நாங்கள் 6 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழிக்கப் போகிறோம் என்று எந்த அமைச்சரவையும் சொல்லிக் கொள்வதற்குக் கொஞ்சம் கூச்சப்பட முடியும். அந்த கூச்சத்தை நீக்கும் வகையில் நீங்கள் போலீஸ் துறையில் இவ்வளவு அக்கறை காட்டி அவர்களுக்கு ஊதிய உயர்வு தரப்படுவது பற்றியும், மற்றும் பேட்டா, அலவன்ஸ் பற்றியும், வீட்டு மனை வசதி செய்து தரவேண்டும் என்பது பற்றியும் கூறியதை, குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் மிக உருக்கத்தோடு சொன்னதை மறந்துவிட மாட்டேன். மறந்து விடக்கூடிய அளவிற்கு அவர்கள் அதை சாதாரணப் பேச்சாகப் பேசவில்லை, மிகுந்த அக்கறையோடு பேசியிருக்கிறார்கள். நிதிநிலை செம்மைப்பட்டவுடன் அதைக் கவனிப்பேன் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.



1968 மார்ச் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட மிக முக்கியமான கருத்து போலீஸ் துறையிலே உள்ளவர்கள் திறமைசாலிகள் என்பது. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலேயுள்ளவர்களைப்போல் மற்ற இடங்களிலே இருப்பதில்லை என்று கூடச் சொல்லலாம் என்று ஒரு உறுப்பினரும், இன்னொரு உறுப்பினர் உலகத்திலேயே இரண்டாவது தரம் நம்முடையது, இலண்டனில் உள்ளது முதல் தரம், இது இரண்டாம் தரம் என்றும் சொன்னார்கள். போலீஸ்துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் என்ற முறையில், என்னுடைய துறையின் கீழ் இருக்கும் போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் மிகுந்த திறமைசாலிகள் என்று எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் பாராட்டியது என்னுடைய மனத்திற்கு வெப்ப நேரத்தில் வெட்டிவேர் விசிறி கொண்டு விசிறியது போலிருந்தது. அந்தத் திறமை அதிகப்பட நீங்கள் சொன்ன யோசனைகள் உண்மையில் வரவேற்கத் தக்கவை. ஆனால் இவ்வளவும் சொல்லிவிட்டு, நீங்களல்லவா கெடுக்கிறீர்கள் என்று நீங்களே சொன்னீர்கள். இதைப்பற்றி இன்னும் சில விநாடிகளில் விளக்கம் அளிக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், எந்தக்கட்சி எப்படி ஆட்சிக்கு வந்தாலும் போலீஸாரின் மனப்பான்மை மாறவில்லை என்பதைச் சொன்னார். அவர்களுடைய மனப்பான்மை மாறவில்லை என்று சோஷலிஸ்டு கட்சி உறுப்பினரும் சொன்னார். இரண்டுக்கும் சேர்த்து சொல்லக் கூடியது, சமூகத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல் தான் போலீஸ் துறையும் இருக்கும். வேறு எந்தத் துறையும் இருக்கும் என்பதுதான். சமூகத்தில் கிடைக்கக்கூடிய திறமைகளிலே ஒரு பகுதி தான் போலீஸ் துறைக்குக் கிடைக்கும். சமூகத்தின் உயர்வுக்குத் தகுந்தபடிதான் போலீஸ் துறையின் உயர்வும் இருக்க முடியும். ஆகையால் சமூகத்தில் நாம் சட்டத்திற்கும், சமாதானத்திற்கும், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை எந்த அளவிற்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

எதிர்க்கட்சித் துணைத்தலைவரவர்கள் சொன்னார்கள், ஏராளமான மது காய்ச்சுபவர்களை எனக்குத் தெரியும், குடித்து விட்டு ஆடுபவர்களை நானே மாலைவேளைகளில் பார்க்கிறேன், ஆனால் அந்த விவரத்தை நான் தர மாட்டேன், நீங்கள் அதைப்பார்த்து கண்டுபிடியுங்கள் முடிந்தால், இல்லையென்றால் எப்படியோ கெட்டுப் போங்கள் என்றார்கள். இதைத்தான் நான் சொல்லுகிறேன். சட்டத்தையும், சமாதானத்தையும் காப்பதிலும், ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் உள்ள பொறுப்பு போலீஸுக்கு மட்டும் அல்ல. "போலீஸுக்கு மட்டும் அல்ல" என்று நான் சொல்வதற்குக் காரணம் மக்கள் தொகையோடு போலீஸ்காரர்கள் எண்ணிக்கையை விகிதாசார முறைப்படி பார்த்தால் எவ்வளவு இருப்பார்கள்? எப்படி அவர்களால் மட்டும் ஒழுங்கை நிலைநாட்டி விடமுடியும்? ஆகையால் தான் ஒழுங்கை நிலைநாட்டுவதில் எந்த எந்த உறுப்பினர்களுக்குத் தங்களுடைய கடமையை நிறைவேற்றினோம் என்ற திருப்தி இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் சமூகத்தினுடைய கடமையைச் செய்ததாக ஆகும். அப்படிச் செய்யப்பட வேண்டுமென்று சொல்கிறபொழுது 'you dig your own grave' என்று எதிர்க் கட்சிக் கொறடா அவர்கள் சொன்னார்கள். (திரு. சே. விநாயகம் : சர்ச்சில் சொல்லியிருக்கிறார்கள்). (குறுக்கீடு) இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் அவர் படித்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அதிலிருந்து இவ்வளவு தவறான விஷயத்தை எடுத்துக்கொண்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதிலே எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன (குறுக்கீடு) ஆங்கிலத்திலே ஒன்று சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னேன் என்று சொல்கிறார்கள். ஆகையினாலே மேற்கொண்டு அதைப் பற்றி சொல்லவில்லை. ஆனால் குற்றங்கள் நடக்கப் போவது தெரிந்தால் அதை சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியது ஜனநாயகத்திலே மிக முக்கியமான கடமை. அதுவும் 20 வருஷம் ஆளும் கட்சியாக இருந்திருக்கிற காங்கிரஸ் கட்சியில் இருக்கிறவர்களுக்கு அது நீங்காத கடமையாகும். இது வரையில் செய்யவில்லை என்றாலும் இனிமேல் அப்படி தகவல் கிடைக்குமானால் அந்தத் தகவலை உடனுக்குடன் எனக்குத்

தரவேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் தகவல் தரப்பட்டு, இலாகாவினிடத்திலே அது கொடுக்கப்பட்டால் நிச்சயமாக அந்தக் குற்றங்கள் எல்லாம் களையப்படுவதற்கு வழிவகை ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்படுமென்று நான் கருதுகிறேன்.

இப்பொழுது ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இந்த ஒரு வருஷத்திலே மட்டும் அல்ல; நம்முடைய நண்பர் ஆதிமூலம் அவர்களும் மற்றவர்களும் சொன்னபடி நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த முதல் மாதத்திலேயே சட்டம் கெட்டுவிட்டது; ஒழுங்கு கெட்டு விட்டது, போலீஸ்காரர்கள் கெட்டு விட்டார்கள், போலீஸ்காரர்களை நீங்கள் கெடுத்து விட்டீர்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி எடுத்துச் சொல்ல ஆரம்பித்திருக்கிறது இப்பொழுது ஒரு வருஷத்திலே சொல்லுவதிலே ஆச்சரியம் இல்லை.; ஒரு மாதத்திலேயே அவர்கள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை தூய இதயத்தோடு நான் திரும்பத் திரும்ப மறுக்கிறேன், போலீஸ்காரர்களுக்கு இந்த அவையின் மூலமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். குற்றவாளிகள் உங்கள் கண் முன்னாலே தெரிந்தால், அவர்கள் செய்த குற்றம்தான் உங்கள் கண் முன்னாலே தெரிய வேண்டுமே தவிர, அவர்கள் போட்டிருக்கிற சட்டையைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்று நான் இன்றைய தினம் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தக் கட்டத்திலே, அந்த இடத்திலே குற்றம் செய்தவரை சொல்லச் சொல்லி, வெளியிலே எந்தக் கட்சி அந்த நேரத்தில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கிறதோ அந்தக் கட்சிக்குத்தான் விளைவார்கள் என்று எடுத்துச் சொல்வது வாதமாக இருக்கிறது. அந்த முறைப்படி யாராவது குற்றம் செய்தவர்கள் "நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது திராவிட முன்னேற்றக்கழக ஆதரவாளர்கள்" என்று சொல்வார்களானால் அதற்காக போலீஸ் அதிகாரிகள் பயந்து கொண்டோ, கோட்பாடு கொண்டோ அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுக்காமல் விடமாட்டார்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஆனால் குற்றம் செய்பவர்கள் யாராவது பிடிபடுகின்றபொழுது, பிடிபட்டவர்கள் எல்லாம் காங்கிரஸ் காரர்கள், தப்பித்துக்கொண்டவர்கள் எல்லாம் கழகத் தோழர்கள் என்ற ஒரு தவறான வாதத்தினையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டாமென்று எதிர்க்கட்சித் தோழர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குத் தெரியும், 1965-66-ல் சென்னை நகரத்தில், நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் தொகுதியாக இப்பொழுது இருக்கிறது, அந்த இடத்தில் ஒரு மன்றம் இருந்தது. அதற்கு எம். ஜி. ஆர். மன்றம் என்று பெயர். அவர்கள் ஆண்டு விழாக்களெல்லாம் கூட நடத்தினார்கள். அந்த ஆண்டு விழாக்களிலே கூட அவர்கள் தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் கூட அறிவித்துக்கொண்டார்கள். அவர்கள் செய்கின்ற சில தவறான காரியங்கள் அந்த வட்டாரத்து போலீஸுக்கு தெரிந்து அவர்கள் பேரிலே கண் வைக்க ஆரம்பித்த உடனே, அதுவும் எம். ஜி. ஆர். மன்றம் என்று தெரிந்ததும் இன்னும் அதிகமாக கண்காணிப்பார்கள் என்று எண்ணியதால் எம். ஜி. ஆர். மன்றம் என்று இருந்ததை எடுத்துவிட்டு, தேசிய மன்றம் என்று போட்டுக்கொண்டார்கள். தேசிய மன்றம் என்று போட்டுக் கொண்டு, கொடியை மாற்றி, காங்கிரஸ் கொடியாக மாற்றிக் கொண்டு அதற்கு பிறகு அவர்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். "அண்ணா, எங்களை சந்தேகிக்காதீர்கள், நாங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றத்தைச் சேர்ந்தவர்கள்தான், கொடியை மாற்றி, பெயரை மாற்றியதினாலே கொஞ்சம் போலீஸ் தொந்தரவு இல்லாமல் இருக்கிறது" என்று கூட சொன்னார்கள். யார் என்று நம்முடைய கருத்திருமன் அவர்கள் அறிந்துகொள்ள விரும்புவார்களானால், தனியாகக் கேட்டால் நான் சொல்வேன். அது மட்டும் அல்ல, இப்பொழுது உள்ளவர்கள் பட்டியலை என்னிடத்திலே ஒரு ½ மணி நேரம் சரி பார்ப்பதற்குக் கொடுப்பார்களானால் யார் யார், எந்த எந்த நேரத்தில், எதெதற்காக வந்தார்கள் என்பது மட்டும் அல்ல, இன்னும் எவ்வளவு நாட்கள்





உங்களோடு இருப்பார்கள் என்ற ஜாதகத்தையும் நான் சொல்ல முடியும். (ஆரவாரம்) ஆகையினாலே போலீஸ் துறையிலே உள்ளவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும், குற்றங்கள் நேரிடுவதைத் தடுப்பதற்கும் இருக்கிறார்களே தவிர, கட்சிக் கொள்கைக்கும் அவர்களுக்கும் நிச்சயமாக சம்பந்தம் இல்லை. அந்த சம்பந்தம் ஏற்படுவதற்கு இந்த அரசு ஒரு போதும் அனுமதி அளிக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் போலீஸ் துறையிலே உள்ளவர்களுக்கு இருக்கிற ஒரு சங்கடத்தையும் நாம் உணரவேண்டும். 100 வருஷ காலம், 80 வருஷ காலம் காங்கிரஸ் ஆங்கிலேயர் வர்க்கத்தை எதிர்த்து விடுதலைக் கிளர்ச்சி நடத்திய காலத்தில் வெள்ளைக்காரர்களுக்குத் துணையாகப் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்ற பேச்சு பலமாக பேசப்பட்டது. "போலீஸ் காரர்கள" என்றுகூட அப்பொழுது காங்கிரஸ் மேடையில் பேசப்படுவதில்லை. செந்தலைப்பூச்சி என்று சொல்வார்கள். செந்தலைப்பூச்சி என்று சொன்னாலே உடனே கரகோஷம் கிடைக்கும். அந்த நேரத்திலே நம்முடைய கருத்திருமன் அவர்களும் நானும் கல்லூரியிலே படித்துக் கொண்டிருப்போம்; நம்முடைய விநாயகம் எல்லாம் கல்லூரியிலே படித்துக் கொண்டிருப்பார். ஆனால், அப்பொழுதிருந்த மேடைப் பேச்சு, "போலீஸ்காரர்கள் என்றால் செந்தலைப்பூச்சிகள்; அந்த செந்தலைப்பூச்சிகளை எங்களுக்கு சுயராஜ்யம் கிடைத்ததும் எங்களை காலடியில் போட்டு நசுக்குவோம்" என்பது தான் அப்பொழுது காங்கிரஸினுடைய பேச்சாக இருந்தது ஒரு 60 வருஷம் போலீஸ்காரர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி வந்தது. 20 வருஷ அவர்கள் ஆட்சியில் போலீஸ் காரர்கள் காங்கிரஸ் கட்சிக்கு உடந்தையாக இருந்து வந்தார்கள் என்று பேசினார்கள். அதையும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இப்பொழுது இவர்கள் எங்களுடைய மேற்பார்வையின்கீழ் ஒரு வருஷமாக இருக்கிறார்கள். இப்பொழுது அவர்களைப் பார்த்து, "இவர்கள் முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள்" என்று நீங்கள் பேசுகிறீர்கள். அவர்கள் உள்ளூர சிரிக்கிறார்கள். இவர்களுக்குக் கொஞ்சம் கூட விவரம் தெரியவில்லையே; இவர்கள் எந்த எந்த நேரத்திலேயோ, யார் யார் பக்கத்திலேயோ சேர்கிறார்களே என்று சொல்கிறார்களே, இவ்வளவு தானா இவர்களுக்கு விவரம் தெரியும் என்று உள்ளூர சிரிக்கிறார்கள். அவர்கள் எந்தப் பக்கமும் இருப்பவர்கள் அல்ல, அவர்கள் அரசின் பக்கம் இருப்பவர்கள்.

அரசுக்கு என்று சில அடிப்படை இலக்கணங்கள் உண்டு. அந்த அரசினுடைய அடிப்படை, சட்டம் இருக்க வேண்டும், ஒழுங்கு இருக்க வேண்டும், சமாதானம் இருக்க வேண்டும், என்பது. சட்டம், ஒழுங்கு சமாதானம் கெட்டுபோய்விட்டதா என்பதைக் கண்டுபிடிப்பது மிக நேர்த்தியான கலை. இங்குமங்கும் நடக்கிற அடிதடிகள் மாலை நேரங்களிலிலே மேடைகளிலிருந்து கேட்கிற தடித்த குரலிலுள்ள பேச்சுகள், அல்லது எங்கோ ஒரு இடத்திலே ஒரு சிறு களவு ஏற்பட்டுவிட்டது, என்ற இவைகளை வைத்துக்கொண்டு சட்டம் கெட்டுவிட்டது, சமாதானம் கெட்டுவிட்டது, ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை. அப்படிப்பட்ட எண்ணத்திலே தான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், சட்டம் கெட்டுவிட்டது, சமாதானம் கெட்டுவிட்டது, என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கதை சொல்கிறேன். இதே இயல்புப்படி ஒரு போலீஸ் காரர் இருந்தார். அவர் ஒரு வீதி வழியாக இரவு 10 மணிக்குப் போகிறபொழுது ஒரு வீட்டில் ஒதுங்கினார். உள்ளே இருந்து சத்தம் கேட்டது, "வெட்டு கழுத்தை". ஆஹா, பெரிய கொலை உள்ளே நடக்கிறது, "வெட்டு கழுத்தை" என்று சொன்னால், என்ன பார்க்கலாம் என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறான். உள்ளேயிருந்து, "கையை வெட்டு, காலை வெட்டு," என்று சொல்கிறான். உடனே, இங்கே ஏதோ கொலை நடக்கப் போகிறது என்று போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் நிறைய ஆட்களை கூட்டிக்கொண்டு, அதிகாரிகளை கூட்டிக்கொண்டு இரண்டு லாரிகள் மூலமாக வந்து, "கழுத்தை வெட்டு" பிறகு, "காலை வெட்டு", பிறகு, "கையை வெட்டு" என்று சொல்கிறான் என்று சொல்லி, உள்ளே போய் பார்த்தால், புதிதாக கொண்டு வந்த

துணியை சட்டைக்காக வெட்டிக் கொண்டிருக்கிறார்கள், கழுத்துக்கு இவ்வளவு, கைக்கு இவ்வளவு, காலுக்கு இவ்வளவு என்று. அந்த போலீஸ்காரருடைய இயல்பைப் போல திரு. கருத்திருமனுடைய இயல்பு (சிரிப்பு) இருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

" ஆகா, தெரியுமா, எங்களுடைய ஆட்கள் போய் போலீஸ் ஸ்டேஷனிலே மனு கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் ; ஆகையினால் சட்டம் இல்லை, சமாதானம் இல்லை, எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள், கேள்வி இல்லையா, கோட்பாடு இல்லையா," என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வராத காலத்தில், உங்களுடைய ஆட்சி இருந்தபொழுது—ஆனால் உங்களால் என்று சொல்லவில்லை—உங்களுடைய ஆட்சி இருந்தபொழுது—

உடையார்பாளையம் வேலாயுதம்,
நெல்லிக்குப்பம் மஜீத்,
கோவை ஆரோக்யசாமி,
தூத்துக்குடி கே. வி. கே. சாமி,
தூத்துக்குடி தாளமுத்து,
மயிலாடி மாரியப்பன்,
ஆலந்தூர் சின்னான்,
வடசென்னை பாண்டியன்,
ஆலங்குடி சிதம்பரம்,

ஆகியோர்கள்—எனக்கு நினைவுக்கு வந்திருக்கிற அளவுக்குச் சொல்லியிருக்கிறேன்—படுகொலை செய்யப்பட்டார்கள். எந்தத் துப்புகளும் துலக்கப்படவில்லை. உடனே சட்டம் கெட்டுவிட்டது, சமாதானம் கெட்டுவிட்டது என்ற புகாரை நாங்கள் சொல்லவில்லை. இவர்களெல்லாம் ரத்தம் சிந்தியவர்கள். அதற்கு காங்கிரஸ் பத்திரிகைகளும், காங்கிரஸில் பேச்சில் பேசிக் கொண்டவர்களும் அவர் செத்ததற்கு இது காரணமாக இருக்கலாம், இவர் செத்ததற்கு அது காரணமாக இருக்கலாம் என்று சொன்னார்களே தவிர, இவைகளுக்கெல்லாம் வழக்குப்போடப்பட்டு, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள் என்ற நிலைமை இல்லை. தூத்துக்குடி சாமி வழக்கில் மட்டும் ஓரிருவர் சிக்கினார்கள். நான் இதைச் சொல்வதற்கு காரணம், படு கொலைகள் நடப்பது சில இடங்களில், கொள்ளை நடப்பது சில நேரத்தில், கற்பு அழித்தல் நடப்பது சில நேரத்தில், அடிதடிகள் நடப்பது, எல்லாம் இந்தப் பாவிகள் ஆட்சிக்கு வந்த பிறகு தான் புதிதாக நடக்கின்றனவா ? மகாத்மா காந்தி அவர்களையே சுட்டார்கள், உங்களுடைய ஆட்சியில். நீங்கள் வைத்திருந்த போலீஸ் துறையினர் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உடனே போலீஸ் துறையே லாயக்கில்லை என்றோ, போலீஸ் துறையை நிர்வகிக்க லாயக்கு அந்தக் கட்சிக்கு இல்லை என்றோ நாடு தீர்ப்பளித்துவிடவில்லை. எல்லாவற்றையும் மீறி, எவ்வளவோ பாதுகாப்பு கொடுத்திருந்தும் அது நேர்ந்துவிட்டது என்றுதான் பெருந்தன்மையாக நாட்டிலே சொல்லப்பட்டதே தவிர, உங்களைப் போல, இது நேரிட்டவுடனே வார்னிஷ் குடித்து செத்ததற்குக் கூட என் தலையிலே பழியைப் போடுகிறீர்களே, அதைப்போல செய்யவில்லை. " வார்னிஷ் குடித்து செத்ததற்கு நீங்கள் அல்லவா பதில் சொல்லவேண்டும் " என்று கேட்கிறீர்களே ? நான் பிறகு சொல்ல வேண்டும். 10 வருட காங்கிரஸ் ஆட்சியில், 20 வருட காங்கிரஸ் ஆட்சியில் என்னென்ன கேடுகள் நடந்தன என்பதையெல்லாம் பட்டியலாகச் சொல்லி, உங்கள் ஆட்சியில் இவைகளெல்லாம் நடந்தன என்றால், அதுதான் போலீஸ்காரர்களை திறமையற்றவர்களாக ஆக்குகிற ஒரு காரியமாகும். உடனே அவர்கள் என்ன சொல்வார்கள், போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் என்ன சொல்வார்கள். " ஒரு கட்சி போய் இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரப்போகிறது. ஒரு கட்சி போலீஸை திட்டும், இன்னொரு கட்சி நம்மை ஆதரிக்கும். நாம் நம்முடைய இஷ்டப்படி போகலாம் " என்ற நிலைக்குத்





தான் செல்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஆதாரமற்ற குற்றங்களை எடுத்துச் சொல்வதினால் பலனில்லை என்பதனை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து, இந்த ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்கிற எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற மன உளைச்சல், நெருக்கடிகள் இவைகளையெல்லாம் சிறிது அளவாவது அனுதாபத்தோடு கவனத்தில் கொள்ளவேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தப் பொறுப்பிலே அமர்ந்து காரியங்களை நடத்தத் தொடங்கிய காலத்தில் பல்வேறு வகையான இடுக்கண்கள், பல சமயங்களில் ஏற்பட்டன. அவர்களே கூட குறிப்பிட்டார்கள். தீப்பிடித்து எறிந்ததே, கண்டுபிடிக்கமுடியவில்லையே என்று கேட்டார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அந்த அளவுக்கு பல இடங்களில் தீப்பற்றிக் கொண்டது. அதற்குப் பிறகு பலர் வார்னிஷ் குடித்து செத்தார்கள். அதற்குப் பிறகு பல்வேறு வகையான கலவரங்கள், கலகங்கள் நடைபெற்றன. அதற்குப் பிறகு மொழிக் கிளர்ச்சி ஏராளமான அளவுக்கு வெடித்துக் கிளம்பியது. அத்துடன், அதோடு தொடர்பாக பல்வேறு வகையான அசம்பாவிதங்கள் கோவையிலும் பொள்ளாச்சியிலும் மற்ற இடங்களிலும், நடைபெற்றன. அவைகளெல்லாம் நடந்தபிறகு, கடைசியில் எழும்பூரில் அன்பழகன் அவர்கள்—நம்முடைய நண்பர்கள் " அவர் தாக்கப்பட்டார்" என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்வதற்கு கூச்சப்பட்டார்கள் என்று கருதுகிறேன்—" ஸம் டிஸ்டர்பன்ஸ் " என்று சொன்னார்கள். (குறுக்கீடு) தெரியாதா ? அப்படி இருந்தாலும் இருக்கும். திரு. அன்பழகனோடு ஐந்து வருடங்கள் கூடவே உட்கார்ந்திருந்தார் உறுப்பினர் அவர்கள். அப்படி இருந்தால் தெரிந்திருக்க முடியாது தான். உண்மையிலேயே அது " ஸம் டிஸ்டர்பன்ஸ் " என்ற அளவிலேயே போகட்டும். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடையிலே நாங்கள் பணியாற்றவேண்டிய நிலையில் இருந்தோம். இந்த நேரத்திலும் கூடுமானவரையிலும் போலீஸ் துறையினர் மிகுந்த கடமை உணர்ச்சியோடு, அதிகமான அளவுக்கு சேதாரங்கள் ஏற்படாத முறையிலும் அரசாங்கத்தோடு ஒத்துழைத்திருக்கிறார்கள், சட்டத்தையும், சமாதானத்தையும் காத்திருக்கிறார்கள் என்ற முறையிலே அந்தத் துறையினருக்கு உள்ளபடியே என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள், " இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துவிட்டீர்கள் " என்று. அப்படி யாரும் ஒரு இன்ஸ்ட்ரக்ஷனும் கொடுக்கவில்லை. நான் அப்படி ஒன்றும் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கவும் இல்லை, அப்படிக் கொடுக்கும் பழக்கமும் எனக்கு இல்லை. அப்படியே கொடுத்தாலும், யூகமுள்ள காவல் துறை அதிகாரிகள் ''எழுதிக் கொடுங்கள்'' என்று தான் கேட்பார்கள். அவர்கள் விவரங்கள் தெரியாதவர்கள் அல்ல. வாய் மூலம் ஒன்றை சொல்லிவிட்டால், விநாயகம் அவர்களை " பிடி " என்று சொல்லிவிட்டால், உடனே பிடித்துவிட மாட்டார்கள். எழுதிக்கொடுங்கள் என்று கேட்பார்கள். "விநாயகம் அவர்கள் இன்னென்ன குற்றங்கள் செய்ததாகச் சொல்லப்படுகிறது, அவரைப் பிடி" என்று எழுதித் தருவதை, அவர்கள் ஒரு தடவை படித்துப்பார்த்து, ஆதாரம் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்துத் தான் விநாயகத்தைத் தொடுவார்கள். இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்த உடனேயே, விநாயகத்தைப் பிடி என்றால், உடனேயே பிடித்துவிடமாட்டார்கள். ஏதோ நாடகம் ஆடினதாகச் சொன்னார்கள். முகம்மது துக்லக் ராஜ்யம் என்று சொன்னார்கள். அதிலே கூட அந்தக் காட்சி இருக்காது என்று நினைக்கிறேன். ஆகவே, அப்படியெல்லாம் அவர்கள் மனதைப்போட்டுக் குழப்பிக்கொள்ளத் தேவையில்லை.

இடையிலே இதை விளக்கி விடுவது நல்லது என்பதற்காக இதை எடுத்து வரச் சொன்னேன். வார்னிஷ் உத்தரவு ஏற்கனவே போடப்பட்ட உத்தரவு தான். அது திருப்பி ரென்யூ பண்ணப்பட்டது. "கெடோ இன் " என்ற அந்த வஸ்து விஷம் உள்ளது அல்ல என்பதும் இதில்

இருக்கிறது. இதைப் படித்து இந்த அவைக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். இதை அவர்களே படித்துப் பார்க்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ்காரர்கள் பேரில் வீணை வழக்குகள் போடப்படுகின்றன என்ற ஒரு புகார் சொல்லப்பட்டது. நம்முடைய விவசாயத்துறை அமைச்சர் அவர்களை நீங்கள் ஒரு வருடமாக பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இவர் கடலூரில் ஒரு கடையில் கொள்ளை அடித்ததாக உங்கள் ஆட்சியில் வழக்கு போடப்பட்டு, ஒரு வருடம் நடந்தது. கொள்ளை அடிப்பவர்களெல்லாம் இப்படி இருப்பார்கள் என்றால்—(குறுக்கீடு) பூ விற்கிற கடையில் கொள்ளை அடித்தார்கள் என்று அவர்கள் பேரில் வழக்குபோடப்பட்டு ஒரு வருஷம் நடந்தது. கீழ்க்கோர்ட்டில் தள்ளப்பட்டு விட்டது. ஒரு வருடகாலம் அந்த வழக்கு நடந்து கொண்டிருந்தபோது, வீட்டிலிருந்து புறப்படுகிறபோது, வீட்டிலே அவரைக் கேட்பார்கள். "நீங்கள் எதற்காக இந்தக் கட்சியி லெல்லாம் சேர்ந்திருக்கிறீர்கள். உங்கள் பேரில் கொள்ளை அடித்ததாக வழக்கு போடப்படுகிறதே ?" என்று கேட்பார்கள். என்ன கொள்ளை அடித் தார்கள் என்றால், பூக்கடையிலே உள்ள கல்லாப் பெட்டி. யிலிருந்து பணத்தை கொள்ளை அடித்ததாக வழக்குப் போடப்பட்டது. நம்முடைய நண்பர் அவர்கள சொல்வார்கள், அது சர்க்காரே போட்டது என்று. நான் சர்க்கார் போட்டதா, காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டார்களா என்ற விவரத்திற்குப் போகவில்லை. அவர்கள் பேரில் வழக்கு போடப்பட்டது....

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** போலீஸ் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில் இந்த கொள்ளை வழக்கைப் பற்றி போடப்பட்டு இருக் கிறது. திரு. கருத்திருமன் அவர்கள் கூட, இதை ஒருமுறை காமராஜ் அவர்கள் பார்த்தால், இதை எல்லாம் தள்ளிவிடுவார்கள் என்று சிபார்சு பண்ணினார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதே மாதிரி எங்கள் தலைவர் காம ராஜரைப்பற்றி, திரு. சுப்பிரமணியம் பற்றியெல்லாம் கூட போலீசில் முன் னாலே ஏதேதோ ரிப்போர்ட் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** யார் யாரைப்பற்றி புகார் வந்திருக்கிறது என்பதல்ல கேள்வி. அவர்கள் பேரில் வழக்கு போடப் பட்டு நடத்தப்பட்டது. ஒரு உறுப்பினர் பேசுகிறபோது சொன்னார். காங் கிரஸ்காரர்கள் கையில் விலங்கு போடப்பட்டது என்று சொன்னார்கள். நம்முடைய கோவிந்தசாமி அவர்கள் கையிலே விலங்கு போடப்பட்டது. காலையிலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்— அவர்கள் முன்னால் போலீஸ் கான்ஸ்டேபிளாக வேலை பார்த்து வந்தார்— அவருக்கு கையில் விலங்கு போடப்பட்டது. (குறுக்கீடு) சபாநாயகராக இருப்பதால் அவரைப்பற்றி சொல்வதற்கு இல்லை. ஆனால் அவர்களுக்குக்கூட அந்த ஆபரணம் கிடைத்தது. மேலவையிலே உறுப்பினராக உள்ள மதுரை முத்து அவர்களும் கைவிலங்கு பூட்டப்பட்டு மதுரை வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டார். இவைகளெல்லாம் காங்கிரஸ் அரசாண்ட காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள். இவைகளையெல்லாம் நாங்கள் இது வரையில் சொல்லாமல் இருந்தோம். நீங்கள் இவைகளை மிகப்பெரியதாக
பிற எடுத்துக்கொண்டு இப்பொழுது பேசியதால்தான், இவைகளை யெல்லாம்
பகல் நாங்கள் சொல்கிறோமே தவிர, இவைகளைச் சொல்வதின் மூலம் போலீஸ்
-00 துறையினருக்கோ, அல்லது அதன் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த அரசுக்கோ களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. விலங்கு பூட்டப்பட்ட நேரத்தில் எங்களில் யாரும் அதற்காக வருத்தப்பட்டுக் கொண்ட தில்லை. எனக்கு நன்றாக நினைவுக்கு வருகிறது. முதன்முதல் என்னைக் கைது செய்து அழைத்துக்கொண்டுபோனபோது இடுப்பில் இருந்த அரணாக் கயிரையும் எடுத்து விட்டார்கள்-அதைக்கொண்டு தூக்குப்போட்டுக் கொண்டால் என்ன செய்வது என்று. மேல் துண்டையும் பறித்துக் கொண்டார்கள். இந்தச் சிலமுறைகள் கையாளப்படுகின்றன என் றால், நம்மைப் போன்றவர்கள் சில வருஷங்களுக்கு ஒரு முறைதான்



அவர்களிடத்தில் சிக்குகிறார்கள். அவர்களுக்கு அது அன்றாடப் பழக்கமாக இருக்கிறது. அவர்கள் அன்றாடம் பழகும் முறைகள் சட்டம், சமாதானம், ஒழுங்கு இவற்றைக் காக்க பயன்படுகிறது என்று காட்டிவிடுவதற்காக அவர் களுக்கு சான்றுகள் சொல்லவில்லை. மற்ற இடங்களில் சொன்னதைச் சொன்னால் குறிப்பிடக்கூடாது என்கிறார்கள். மற்ற இடங்களில் நடந்தது எதற்கு, இங்கேயே நடக்கவேண்டும் என்கிறார்கள். விவாதத்திற்காகச் சொல்லவில்லை, எவ்வளவு திறமையான அரசு இருந்தாலும், அதையும் மீறி, இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும், நடந்து கொண்டிருக்கின்றன. ஆகையினால், அவைகளைக் காட்டிக்கொண்டு, எங்களிடத்தில் திறமையில்லை, இவர்களால் சட்டம், சமாதானம் காப்பாற்ற முடியவில்லை என்றெல்லாம் சொல்வது, வீட்டிலே குழந்தைகள் ஜன்னலைப்பிடித்து ஆட்டிவிட்டு, பூகம்பம் ஏற்பட்டு விட்டது என்று மிரளும் தன்மைக்கு ஒப்பானது.

இந்த சந்தர்ப்பத்தில் சில சம்பவங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அஸ்ஸாம், கௌஹாத்தியில நடநதது. அக்டோபர் 7-ம் தேதி,

'Assam Minister, Ramesh Barua, had to take shelter for 3 hours in a police station of his home town, Dibrugarh, because a menacing crowd came to demonstrate against him and stones were thrown on the escorts who came with him and later 144 was promulgated.'

அஸ்ஸாமை குறிப்பிட்டது, அது காங்கிரஸ் மாநிலம் என்பதாலே. திறமை இருக்கிற இடத்திலேயும் சில நேரங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன ; சட்டம், சமாதானம் கெட்டு விடுகிறது.

அதே போல அக்டோபர் 7-ம் தேதி, ஸ்ரீநகரில்,

'One person was killed by police firing and many were injured' . . .

எதற்காக என்பதுதான் வேடிக்கை,

'because the supporters of two football teams came to a clash and it had developed into a street fight. Curfew was imposed.'

பம்பாயில் அக்டோபர் 13-ம் தேதி,

'Fire was opened—there were eight rounds—on a rioting crowd and the fire had to be opened due to alleged molestation of women. யாரோ "ஆகா, இந்த ஆட்சியில் பெண்களுக்குக்கூட பாதுகாப்பு இல்லையே" என்றெல்லாம் கேட்டார்கள்.

அக்டோபர் 15-ம் தேதி கல்கத்தாவில்,

'Seven killed and 44 injured—Clash between two groups during Durga festival in the town of Bhatgara.'

அக்டோபர் 15-ம் தேதியில் இன்னும் சிதமார்உறியில்,

'9 injured—3 houses set on fire—144 issued due to clash between two groups who went to participate in the Durga procession—Two killed when police opened fire '.

இன்னும் பம்பாயிலேயே மறுபடியும்,

'Three members of a family and a maid-servant murdered—An old man of 60 years, his wife aged 45 years and his grandson aged 8 years—There was an attempt to set fire to his house so that no evidence can be gathered '.

ராஜகோட்டில், நவம்பர் 24-ம் தேதியன்று,

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 20

'Police opened fire on the Rajkot village mob—one was killed.'

புது டெல்லியில்—நம்முடைய நண்பர்களெல்லாம் இந்த ஆட்சியில் என்னென்னமோ அக்கிரமங்கள் நடக்கின்றன என்றார்கள். நடக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்று கருதுகிறேன். உள்ளபடியே பல அக்ரமங்கள் நடந்திருக்கின்றன. எந்த இடத்தில் நடந்தாலும் இப்படிப் பட்டவைகள் கண்டிக்கத்தக்கவை—நடந்த செயலைப்பற்றி வந்துள்ள செய்தியாவது—

**'Trunkless head of a girl was found in the drain along Jawaharlal Nehru Marg.—A 7 years old girl went to witness a monk y's dance—Somebody waylaid her and did this dastardly deed.**

இவை **ஜனவரி** 13-ம் தேதி நடந்தவை.

பங்களூரில் பிப்ரவரி 4-ம் தேதி நடந்தது—

'Two persons were killed due to the police opening fire because a mob went to attack the police station'.

கல்கத்தாவில் பிப்ரவரி 27-ம் தேதி நடந்தது—

'Three people were killed due to the police firing in a Tea estate in Jalpaiguri when the police went there for investigation of theft'.

மறுபடியும் புது டெல்லியில் நடந்தது.—

'Satish Chandra—27 years old—was done to death when he went to catch hold of two people who wanted to steal a car'.

விசாகப்பட்டணத்தில், மார்ச் 5-ம் தேதி நடந்தது—

'Two Girijans—tribal people—were killed due to police firing.'

திருவனந்தபுரத்தில் மார்ச் 12-ம் தேதி, இரண்டு மாணவர் க்ரூப்புகளுக்கிடையே கலவரம் ஏற்பட்டு, ஐந்து பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவற்றையெல்லாம் படித்து, இன்னமும் பிற்பகல் உணவை அருவருப்பாகும்படிச் செய்ய விரும்பவில்லை. ஆகையினால் இந்த சம்பவங்களெல்லாம் நடந்துவிட்டதால், சட்டம் கெட்டுவிட்டது, சமாதானம் கெட்டுவிட்டது என்று சொல்வதில் பொருள் இல்லை. எவ்வளவு திறமையாகப் பாதுகாத்தாலும், கயவர்கள் சில காரியங்களைச் செய்ய முடிகிறது. இப்படிப் பட்டவர்களை ஒடுக்குவது என்ற பிரச்னையில், போலீஸ் துறை தன்னுடைய சுபாவத்தைப் பயன்படுத்தினால் ஒழிய, அது இயலாத காரியம். இதில் ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். முக்கியமாக, இன்றையதினம் எதிர்க் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சி, போலீஸ் துறையைப் பற்றி சில பேச்சாளர்கள் எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். நாங்கள் என்னெமோ பேசினோம் என்றார்கள். மேசை மீது பரப்பத் தயார், ஒரு இடத்திலாகிலும் போலீஸ் அதிகாரிகளையோ, போலீஸ் துறையையோ, கேவலமாக நாங்கள் பேசியதில்லை, சட்டசபையானாலும் சரி, அல்லது வெளியிலானாலும் சரி. ஆனால், ஒரு வருஷம் எதிர்க் கட்சியாக இருப்பதற்குள்ளாக, அதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. உங்களை நீங்கள் சகித்துக்கொள்ள முடியவில்லையென்றாலும், ஆத்திரப்பட்டு, உயர்தர போலீஸ் அதிகாரிகளை, அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நேரிடையாகப் பார்த்த பிறகும், "இவனுக்கெல்லாம் காக்கி சட்டை எதற்கு? புடவை கட்டிக்கொள்ளச் சொல்லு" என்று பேசியது குறிப்பெடுக்கப்பட்டு, எனக்கு அனுப்பப்பட்டது. நண்பர் இவைகள் மீதெல்லாம் என்ன செய்தீர்கள் என்கிறார்கள். ஒவ்வொரு குறிப்பின் மீதும், **'May be ignored, May be ignored'** என்று எழுதிக் கையெழுத்திட்டிருக்கிறேன். எனக்குத் தெரியும் இவர்களிலே சிலர், தங்கள் பேரில் வழக்குப் போடப்பட்டால், தாங்கள் மிகப் பெரிய காரியத்தைச் செய்ததாகக் காட்டி, கட்சிக்குள்ளே, செல்வாக்குத்



1968 மார்ச் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

தேடிக்கொள்வார்கள் என்பது. (சிரிப்பு). காங்கிரஸ் கட்சியில் அப்படி சிலர் முயற்சி செய்கிறார்கள். அது எனக்குத் தெரியும். இப்பொழுதே இப்படிப்பட்டவர்கள் 6-வது, 8-வது வரிசைக்கு வந்திருக்கிறார்கள். வால் போஸ்டரைப் பார்த்துச் சொல்கிறேன் (பலத்த சிரிப்பு). இவர்கள் மீது பல வழக்குகள் வருவதன் மூலம் இன்னும் கொஞ்சம் முந்திக்கொண்டுவிடலாம் என்று பார்ப்பார்கள். அப்பொழுது, நம் விநாயகம், கருத்திருமன் இவர்களுக்கு காங்கிரஸில் இந்தச் செல்வாக்கு கூட இருக்காதே என்கிற ஆசையால்தான் **'May be ignored, May be ignored'** என்று போட்டிருக்கிறேன்.

'பயப்பட வேண்டாம், உங்கள் ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம்' என்று சொன்னார்கள். உண்மையிலேயே காங்கிரஸ் கட்சியிலிருந்துகொண்டு, எங்களுக்கு இந்தப் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருப்பதற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும், விநாயகம் போல பலமானவர்கள் எதிரில் இருக்கிறார்கள் என்கிற நம்பிக்கையோடு இந்த ஆட்சியை நடத்த முடியும். இல்லையென்று, அப்படி ஆட்சி கவிழ்க்கப்படுகிறது என்றாலும், நட்டம் எங்களுக்கு இல்லை; அதை அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன்.

போலீஸ்காரர்கள் எதையும் செய்ய முடியவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள். உலகத் தமிழ் மகாநாட்டிற்கு லட்சக் கணக்கான மக்கள் வந்தார்கள். ஒரு வண்டி இன்னொரு வண்டியோடு மோதிக்கொண்டது என்ற அளவு இல்லை; ஒருவர் இன்னொருவரைத் தாக்கினார் என்ற புகார் இல்லை. லட்சக்கணக்கான பெண்கள் வந்தார்கள். ஆடவர்களும் வந்தார்கள். எந்த அளவிற்கு ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டார்கள் என்று பல இடங்களில் பேசப்படுகின்றதோ, அப்படிப் பட்ட புகார் இங்கே இல்லை. உலகத் தமிழர் மகாநாட்டிற்கு லட்சக்கணக்கான மக்கள் வந்தார்கள், நம்முடைய போலீஸ் துறையினால் நன்கு நடத்தப்பட்டார்கள் என்று ஒரு வார்த்தையாவது பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். மகாமகத்தைப் பற்றிப் பாராட்டினார்கள் திரு. ஆதிமூலம். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், போலீஸ் துறையில் பலர் தன்னோடு படித்தவர்கள் இருக்கிறார்கள், போலீஸ் துறையில் பெரிய அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்றார்கள். அவரிடத்தில் பாராட்டை எதிர்பார்த்தேன். ஆனால் அவர் கூடச் சொல்லவில்லை.

**திரு. கே. விநாயகம் :** இன்டர்நேஷனல் கான்ஃபிரன்ஸிலே ஒரு கார் திருடு போய்விட்டதே ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உலகத் தமிழர் மாநாட்டிற்குப் பிறகு நடைபெற்ற உலகத் தொழில் கண்காட்சிக்கு பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்தவர்கள், போலீஸ் துறை மிகவும் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது என்று பாராட்டினார்கள். ஒரு கார் திருடு போய்விட்டதாக நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் கூறினார்கள். நண்பர் திரு. கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும். நாங்கள் டெல்லியில் இருந்த போது, ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பெரிய மனிதரின் வீட்டுப் பிள்ளையின் கண்ணில் எந்த மோட்டார் கார் சிக்கினாலும் விடமாட்டானாம். அந்த மோட்டாரை எடுத்துக்கொண்டு போய்விடுவானாம். பின்பு இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பிறகுதான் அந்தக் கார் கிடைக்குமாம். அது பெரிய இடத்து விஷயம்.

**திரு. கே. விநாயகம் :** அது அவனுடைய பொழுதுபோக்காக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது அவனுக்குப் பொழுதுபோக்காக இருக்கும். ஆனால் காரைப் பறிகொடுத்தவனுக்கல்லவா கஷ்டம் தெரியும் (சிரிப்பு). காரைப் பறிகொடுத்தவனுக்குப் பொழுது போக்காக இருக்காது (மீண்டும் சிரிப்பு). இப்படி லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த நேரத்தில் போலீஸ் துறை மிகவும் நல்ல முறையில் பணியாற்றியது என்பதை எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் ஒப்புக்கொள்வார்கள். தங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் வகையில் ஏதாவது ஒரு வார்த்தை பேசினார்களா ? திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் மகா

மகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே போலீஸ் துறை மிகவும் நல்ல முறையில் பணியாற்றியது. நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அந்த வாதம் அலகாபாத் கோர்ட்டிலே கிளாஸ் ஃபோர்லே இப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்று மேற்கோள் காட்டுவதைப் போல, திரு ராஜாஜி அவர்களை மேற்கோள் காட்டிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. திரு. ராஜாஜி அவர்களை மேற்கோள் காட்டிப் பேசுவதில் நான் பெரிய மகிழ்ச்சி அடைகிறேன். "சட்டம், சமாதானம் இவற்றைப் பற்றி திரு. ராஜாஜி அவர்கள் இப்படிச் சொன்னார்கள் " என்று சொன்னார்கள். அதை நீங்கள் சொன்னால் கூட கேட்கத் தயாராக இருக்கிறோம். proper police protection should be given. இல்லையென்று சொல்வது ஒன்று, கொடுங்கள் என்று சொல்வது மற்றொன்று. உங்களைப் போன்றவர்கள் திரு. ராஜாஜி அவர்களிடத்தில் போய்ச் சொல்லியிருப்பீர்கள். அதனால்தான் நல்ல போலீஸ் பாதுகாப்பு கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட தந்தை பெரியார் அவர்கள் போலீஸ் இலாகாவைப் பற்றி இப்படிச் சொன்னார்கள் என்று குறிப்பிட்டார். பெரியார் அவர்களுக்கு எப்படி திடீர் திடீர் என்று 'திடீர் பிள்ளைகள்' தோன்றுகிறார்களோ (சிரிப்பு) பெரியார் அவர்களுடைய அறிக்கையில் திரு. சுப்பிரமணியத்திற்கே இந்தக் கதியா ? என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் அதே பெரியார் அவர்கள் 1965-ல் என்னுடைய கார் தாக்கப்பட்டபொழுது, அதுவும் உங்களுடைய காங்கிரஸ் ஆட்சியில் நடந்தபொழுது ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார். அதை நீங்கள் பார்த்தீர்களா ? அதன்மேல் நடவடிக்கை எடுத்தீர்களா ? தந்தை என்ற முறையில் அவர் உங்கள் பக்கமும் இருப்பார், எங்கள் பக்கமும் இருப்பார். ஆகவே, மேற்கோள் காட்டப்படும்பொழுது, பின்னாலே ஆதாரம் இல்லையென்று தெரியவந்தால், மேற்கோள் தரப்படுகின்ற இடம் எவ்வளவு மேலானதாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் போலீஸ் துறை நெருக்கடியில் இருப்பதற்கு அரசியல்வாதிகளாகிய நாம்தான் காரணம் என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எதற்காக நாம் என்று சொல்கிறேன் என்றால், சட்டம், சமாதானம், அமைதி இவைகள் எல்லாம் கெடாமல் பாதுகாக்கப்படவேண்டுமென்றால் நம்முடைய பேச்சும், போக்கும், எழுத்தும் நல்லமுறையிலே அமையவேண்டும். கறுப்புக் கொடியைப் பற்றிச் சொன்னார்கள். கறுப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை. அதிலும் எங்களுக்குக் காட்டப்படுவதை, சற்று உற்றுப் பார்த்தால்தான் கறுப்புக் கொடி என்று தெரியும். ஏனென்றால், எங்கள் கொடியிலேயே பாதி கறுப்பு. கறுப்புக்கொடி காட்டுவது குற்றமல்ல. ஆனால் கறுப்புக் கொடி காட்டுவதற்காக எடுத்துக் கொண்டு வருகிற கம்புகளுக்கு ஒரு அளவு இருக்க வேண்டாமா ? கறுப்புக் கொடி காட்டுவது தங்களுடைய அருவருப்பைத் தெரிவிக்கத்தான். கறுப்புக் கொடிகளைக் காட்டி, தங்களுடைய கண்டனங்களைத் தெரிவிப்பது நீண்ட நாட்களாக இருந்து வரும் முறை. அப்படி கறுப்புக் கொடி காட்டுவதற்கு ஒரு முழ நீளமுள்ள கம்பு போதாதா. நண்பர் திரு. கருணாநிதியும் விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமியும் கடலூருக்குச் சென்றிருந்த சமயத்தில் கறுப்புக் கொடி காட்ட எடுத்துக்கொண்டு வந்த கம்புகள் எவ்வளவு நீளம் உள்ளவை என்பதை நான் இங்கே சொல்லத் தேவையில்லை, நீங்களே உங்கள் ஆட்களிடம் விசாரித்துப் பாருங்கள். நீங்கள் கறுப்புக் கொடி காட்டும் உங்கள் தோழர்களுக்கு விவரங்களை எடுத்துச் சொன்னீர்களா ? நீங்கள் சொல்ல வேண்டும். நாங்கள் கறுப்புக் கொடி காட்டிய நேரத்தில், நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால், யார், யார் கறுப்புக் கொடி காட்டுகிறார்கள் என்ற விவரங்கள் அடங்கிய பட்டியலைத் தரவேண்டுமென்று முதலிலே கேட்பேன். நாங்கள் கறுப்புக் கொடிகள் எல்லாம் எந்தெந்த வகையில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிப்போம். அதற்குப் பிறகுதான் கறுப்புக் கொடி காட்டுவதற்குத் தொண்டர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இங்கு வந்தபோது, அவருக்குக் கறுப்புக் கொடி காட்டிய நேரத்தில், தாறுமாறாகப் பத்திரிகையில் படம் போட்டு எழுதியிருந்த ஒருவரை—அப்பொழுது





எங்கள் கட்சியில் இருந்தவரை—அழைத்து, அச்சிட்டு வெளியே அனுப்பவிருந்த 'அவ்வளவு பத்திரிகைகளையும் அனுப்பக் கூடாது. முதலில் அட்டைப் படத்தை எடுத்துவிட்டு, வேறு படத்தைப் போட வேண்டும். இல்லாவிடில் இந்தப் பத்திரிகைகள் அனைத்தையும் அழித்துவிட வேண்டும்' என்று கழகத்தின் செயலாளர் என்ற முறையில் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டேன். அந்த அட்டைப் படத்தில் 'நேருவினுடைய முகம் சுட்டெரித்த கத்தரிக்காய் போல' இருந்ததை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டேன். அவர்கள் எல்லாம் இப்போது உங்கள் பக்கம் இருக்கிறார்கள். காங்கிரஸ் மேடைகளில் மிகவும் தாறுமாறான முறையில் பேசப்படுகின்றன. நான் ஒளிவு மறைவில்லாமல் காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன். அதைத் தடுக்கின்ற வலிவு உங்களுக்கு இருக்கிறதா? (குறுக்கீடு) நீங்கள் அதைப் பேசவில்லை. பல வருடங்களாக நாம் பழகியிருக்கிறோம்.

'கலியாண வீட்டில் சந்தனத்தை எடுத்துக் கொஞ்சம் கழுத்திலே தடவிக் கொள்வதைப் போல, 'நாம் சில சமயங்களில் வேடிக்கையாக சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்கிறோம். ஆனால் மேடைகளில் பேசுபவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். என்னுடைய கழகக் கூட்டத்தில் " காங்கிரஸ்காரர்கள் கல் போட்டால், நாங்கள் திருப்பிக் கல் போடுவோம் " என்று கூறிய—இன்று மேலவை உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளருமான—திரு. என். வி. நடராசன் அவர்களை ஒரு லட்சம் பேர் கூடியிருந்த கூட்டத்தில் " மன்னிப்புக் கேட்டால்தான் நான் கூட்டத்தில் மேடையில் உட்கார்ந்திருப்பேன், இல்லாவிடில் எழுந்து போய் விடுவேன் " என்று கூறி, மன்னிப்புக்கேட்கச் செய்தேன். ஒருநாள், கடந்துவிட்ட ஒரு வருஷத்தில் உங்களால் அதைச் சொல்ல முடிகிறதா ? அவர்களும் போய்விட்டால் இதுவும் நடக்காதே என்ற அச்சத்தால் அப்படிக் கேட்க மாட்டீர்கள் (ஆரவாரம்). சரி, போகட்டும். எங்களைப்பற்றி மேடைகளில் திட்டிப் பேசுவதை விட்டு விடுங்கள். அவர்கள் எங்களைப் பற்றித் திட்டியதைவிட நூறு மடங்குக்கு அதிகமாக எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். என்னைப்பற்றிக்கூட ஒரு பாட்டு போட்டார்கள். " அண்ணா நாற்பது " என்று பாட்டுகூட போட்டார்கள். வேறு கட்சியில் சேர்ந்துகொண்டு என்னை யாராவது தூற்றுகிறபோதுதான், அவரால் கிடைத்த வரவு செலவுகளை நான் பார்த்துக் கொள்வேன். அப்படிப் பார்க்கின்றபோது, அவர்களால் எங்களுக்கு வரவு கலந்து அதிகமாகிறதே தவிர, செலவு ஒன்றும் இல்லை. ஆகவே, எங்களைத் தூற்றுவதை விட்டு விடுங்கள். மிக நெருக்கடியாகவுள்ள சமயங்களிலும் போலீஸ் துறை சரியான முறையில் பணியாற்றி வருகிறது. மிகக் கேவலமான பேச்சுக்கள் பேசப்படாமல் நீங்கள் தடுக்கவேண்டும். அதுதான் நீங்கள் இருபதாண்டுக் காலம் அரசாண்டதற்கு ஓர் அடையாளமாக இருக்கும். வேறு எந்த அடையாளங்களையும்விட இந்த ஒரு அடையாளத்தை வைத்துக்கொண்டால் போதும், நீங்கள் மறுபடியும் அரசாளக் கூடியவர்கள், அதிலே உங்களுக்குத்தான் சந்தேகம் இருக்கிறதே தவிர வேறு யாருக்கும் சந்தேகம் இல்லை. போன தடவைகூட 100-க்கு 42 சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கிறீர்கள். மக்கள் உங்களை அனாதைகளாக விட்டுவிடவில்லை. (ஆரவாரம்.) (திரு. கே. விநாயகம் குறுக்கீடு). அனாதை என்று நான் சொல்லும்போது நண்பர் திரு. கே. விநாயகம் " நான் அனாதை " இல்லை என்கிறார். நீங்கள் ஒழுங்கான முறையில் கட்சியை நடத்தினால் 42 சதவிகிதம் என்பது 52 என்று மாறுவது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. அதற்கு நீங்கள் இரண்டு முறைகளைக் கைக்கொள்ளவேண்டும். ஒன்று, கட்சிக்கு ஏற்றவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மற்றொன்று தகாதவர்களை விலக்கவேண்டும். ஒன்றுக்கு துணிவும் வலிவும் இருக்க வேண்டும். மற்றொன்றுக்கு திறமை வேண்டும். தகாதவர்களை விலக்குவதற்கு நல்ல மனவலிவும் துணிவும் இருக்கவேண்டும். ஏற்றவர்கள் யார் என்று ஆராய்ந்து பார்த்துச் சேர்த்துக்கொள்வதற்கு நல்ல திறமை வேண்டும். விரைவிலே அது வரும் என்று கருதுகிறேன். இருந்தது போய்விட்டதே என்ற ஆத்திரத்தில் நீங்கள் பேசுகிறீர்கள். மறுபடியும் நீங்கள் ஆட்சிக்கு வரலாம். அதுதான் ஜனநாயக அம்சம். நீங்கள் வர வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சி

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 மார்ச் 20

நடத்துமானால் உண்மையான ஜனநாயகம் ஆகாது. மாறி மாறி கட்சிகள் ஆட்சிக்கு வரவேண்டும். அப்போதுதான் ஒரு கட்சியின் ஆட்சிக்கும், இன்னொரு கட்சியின் ஆட்சிக்கும் ஒப்புவமை பார்க்க முடியும். அதுதான் ஜனநாயகத் தத்துவம். அதற்கேற்ற முறையில் நீங்கள் இருக்கவேண்டுமானால் முதலில் போலீஸ் துறையினரைப் பற்றிக் கேவலமாகப் பேசப்படுகிற பிரச்சாரத்தைக் குறைக்கச் சொல்லுங்கள். அப்படிப் பேசப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள்.

மற்ற நீங்கள் சொன்ன நல்ல யோசனைகளை எல்லாம்—போலீஸ்துறையினருக்கு பலவகையான வசதிகள், சலுகைகள் எல்லாம் அளிப்பதுபற்றி நிதிநிலை சீர்திருந்துகிறபோது உரிய நேரத்தில், உரியவகையில் கவனிக்கப்படும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையை முழு அளவில் ஆதரிக்கவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் விவாதம் முடிவுற்றது. இப்பொழுது நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்படும். பேரவையின் அனுமதியுடன் எல்லா வெட்டுத் தீர்மானங்களும் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படுகின்றன என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, if the Hon. Chief Minister is going to give an assurance to this House that this kind of disturbance will be looked into and proper action will be taken by the police officers on the spot, I do not mind withdrawing my cut motion.

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member needs the luxury of the word 'assurance', but an 'assurance' is not necessary. Proper action has always been taken by the officers on the spot.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். வெட்டுத் தீர்மானம் கொடுப்பதன் நோக்கமே சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்வதற்குத்தான். அதுவும் அந்தக் காலத்தில் இருந்து இந்தக்காலம் வரையில் குப்பனில் இருந்து பக்கிரி வரை துன்பத்தை அனுபவிக்கின்ற மக்கள் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். என்னுடைய கட்சிக்கு நான் ஒருவனே இருப்பதனால் என்னைப் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வாக்கெடுப்பு நடைபெறுகிறபோது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. ஆகவே இப்போது திரு. கே. பி. எஸ். மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானத்தை பேரவையின் வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

அவைமுன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,87,89,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது,



1968 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும். பி.ப. 4–24

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

108. Notification issued with G.O.P. No. 2221, Revenue, dated the 23rd December 1967, exempting from liability to tax on the sales of pictures of Gandhiji, by the Tamilnad Gandhi Smarak Nidhi, Madurai. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act I of* 1959).]

109. Notification issued with G.O. Ms. No. 2003, Revenue, dated the 16th November 1967, appointing Thiru M. S. Shanmuganathan as a member of the Area Committee for West Thanjavur at Kumbakonam. [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959)].

110. Notification issued with G.O. Ms. No. 1090, Revenue, dated the 14th June 1967, effecting a ryotwari settlement to certain inam estates situated in Chingleput district under the provision of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963)].

### B. Reports, notifications and Other Papers.

*63. Review on Labour in Madras State 1967–68 (English and Tamil).

*64. Policy Note on Labour placed on the Table of the House on 11th July 1967. (Tamil).

†65 A Review on Madras Police 1967–68 (English and Tamil).

---

* Despatched to Members on 18th March 1968.

† Despatched to Members on 19th March 1968.

# இணைப்பு I.

[13-ம் பக்கத்திலுள்ள 261-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

1957-ம் ஆண்டு முதல் 1966-ம் ஆண்டு வரை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட விரயத்தையும் அளிக்கப்பட்ட நிவாரணத்தையும் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| ஆண்டு. | பாதிக்கப்பட்ட பரப்பளவு சதுர மைல். | பாதிக்கப்பட்ட கிராமங்களின எண்ணிக்கை. | பாதிக்கப்பட்ட மக்கள் தொகை. | உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை. | சேதமான வீடுகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. | இழந்த கால் நடைகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | ரூ. | | ரூ. |
| 1957–58 .. .. | 81·6 | 122 | 13,375 | 3 | 3,294 | 57,270 | .. | .. |
| 1958–59 .. .. | .. | .. | .. | .. | 8 | 430 | .. | .. |
| 1959–60 .. .. | 200·00 | 343 | 50,000 | 1 | 16,048 | 2,04,370 | .. | .. |
| 1960–61 .. .. | 398·40 | 575 | 105,739 | 11 | 28,555 | 12,54,367 | 232 | 13,330 |
| 1961–62 .. .. | 4,315·36 | 501 | 239,620 | 6 | 22,104 | 15,79,000 | .. | 50 |
| 1962–63 .. .. | 0·93 | 1 | 88 | .. | 22 | 200 | 1 | .. |
| 1963–64 .. .. | 568·00 | 827 | 149,970 | 5 | 16,552 | 9,07,798 | 5 | 3,000 |
| 1964–65 .. .. | 1,613·00 | 760 | 684,635 | 383 | 57,615 | 45,13,008 | 51,382 | 14,130 |
| 1965–66 .. .. | 311·44 | 139 | 38,943 | 10 | 7,632 | 5,23,550 | 22 | 5,015 |

| ஆண்டு. | சேதமடைந்த விளைநிலப் பரப்பளவு. | மதிப்பீட்டுத் தொகை. | பொதுப்பணித் துறைக்கும் மற்ற துறைகளுக்கும ஏற்பட்ட விரயம். | உதவி ஒதுக்கப்பட்டது. ரொக்க மானியம். | உடை மானியம். | வழங்கப்பட்ட உணவிற்கான செலவு. | வழங்கப்பட்ட கடன் தொகை. | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| | ஏ. செ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| 1957–58 .. .. | 269.06 | 50,000·00 | 90,000 | 80,111 | 500·00 | .. | .. | †† |
| 1958–59 .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | |
| 1959–60 .. .. | 83·00 | 84,565·00 | 2,50,000 | 2,48,847 | 100·00 | 6,277·67 | .. | |
| 1960–61 .. .. | 84,481·30 | 9,94,715·70 | 1,50,000 | 3,99,634 | 19,703·16 | 19,595·97 | .. | |
| 1961–62 .. .. | 20,957·10 | 21,41,000·00 | 13,0 .900 | 6,06,634 | 0,432 00 | 1,24.796·00 | 50,712 | |
| 1962–63 .. .. | .. | .. | 18.000 | 155 | .. | .. | .. | |
| 1963–64 .. .. | 20,816·01 | 61,36,000·00 | 95.73,000 | 2,68,805 | 150·00 | 1.901·00 | 1.23,300 | |
| 1964–65 .. .. | 2,24,285·00 | 5,00,000·00 | 44,17,045 | 13,83,935 | .. | 51,023·00 | 55,72,000 | |
| 1965–66 .. .. | 80,011·63 | 12,01,400·00 | 1,386 | 90,833 | 5,518·60 | 5,295·51 | .. | |

†† சென்னை மாநகராட்சி யாலும் நிவாரணக் குழுவினாலும் இலவச உணவு வழங்கப்பட்டது.



## APPENDIX

Statement showing the loss sustained on account of floods during the years from 1957–66 and the relief granted.

| Year. | Area affected in square miles | Number of villages affected. | Population affected. | Number of lives lost. | Number of houses damaged. | Estimated value. | Number of cattle lost. | Estimated value. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | RS. | | RS. |
| 1957–58 .. .. | 81·6 | 122 | 13,375 | 3 | 3,294 | 57,270 | .. | .. |
| 1958–59 .. .. | .. | .. | .. | .. | 8 | 430 | .. | .. |
| 1959–60 .. .. | 200·00 | 343 | 50,000 | 1 | 16,048 | 2,04,370 | .. | .. |
| 1960–61 .. .. | 398·40 | 576 | 105,739 | 11 | 28,555 | 12,54,367 | 233 | 13,330 |
| 1961–62 .. .. | 4,315·36 | 501 | 239,620 | 6 | 22,104 | 15,79,000 | 1 | 50 |
| 1962–63 .. .. | 0·93 | 1 | 88 | .. | 22 | 200 | .. | .. |
| 1963–64 .. .. | 568·00 | 827 | 149,970 | 5 | 16,552 | 9,07,798 | 5 | 3,000 |
| 1964–65 .. .. | 1,613·00 | 760 | 684,635 | 383 | 57,015 | 45,13,008 | 51,382 | 14,130 |
| 1965–66 .. .. | 311·44 | 139 | 38,943 | 10 | 7,632 | 5,23,550 | 22 | 5,015 |

| Year. | Extent of cultivable land damaged. | Estimated value. | Loss to P.W.D. and other utilities value. | Relief sanctioned. Cash grant. | Clothing grant. | Cost of food supply. | Loans granted. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| | a. c. | RS. | RS. | RS. | RS. | RS. | RS | |
| 1957–58 .. .. | 269·06 | 50,000·00 | 90,000 | 80,111 | 500·00 | .. | .. | †† |
| 1958–59 .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | |
| 1959–60 .. .. | 83 00 | 84,565·00 | 2,50,000 | 2,48,847 | 100·00 | 6,277·67 | .. | |
| 1960–61 .. .. | 84,481·30 | 9,94,715·70 | 1,50,000 | 3,99,604 | 19,703·16 | 19,595·97 | .. | |
| 1961–62 .. .. | 20,957·10 | 21,41,000·00 | 13.01 900 | 6,06,634 | 10,432·00 | 1.24,796·00 | 50,712 | |
| 1962–63 .. .. | .. | .. | 18,000 | 155 | .. | .. | .. | |
| 1963–64 .. .. | 20,816·01 | 61,36,000·00 | 95,73,000 | 2,68,805 | 150 00 | 1,901 00 | 1,23,300 | |
| 1964–65 .. .. | 2,24,285·00 | 5,00,000·00 | 44,17,045 | 13,83,935 | .. | 51,923,00 | 55,72,000 | |
| 1965–66 .. .. | 80,011·63 | 12,01,460·00 | 1,386 | 90,833 | 5,518·60 | 5,295·51 | .. | |

†† Free feeding was taken by the Corporation of Madras and the Relief Committee.

## இணைப்பு II.

[ 29ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டுக் காவல் துறை

**1967–68-ம் ஆண்டிற்கான ஆய்வுரை.**

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு வன்மையும் திறமையும் வாய்ந்ததொரு காவல்துறை இன்றியமையாததாகும். தமிழ்நாட்டுக் காவல்துறை நாட்டிலேயே மிகச் சிறந்த நிறுவனம் என்ற நற்பெயரைத் தொடர்ந்து காத்து வருகிறது.

**2. படைக்கலம் தாங்கிய காவற்படை.**—படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவல்படையின் II-ம் பிரிவு 1965 நவம்பர் திங்கள் 7-ம் தேதி முதல் நாகலாந்தில் தொடர்ந்து இந்திய அரசுப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவல் படையின் III-ம் பிரிவு கலைக்கப்பட்டு, 1967 எப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் மத்திய ரிசர்வ் காவல்படையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மலபார் சிறப்புக் காவல்படையின் III-வது பிரிவு 1964 ஜூலை திங்கள் 16-ம் தேதி முதல் தொடர்ந்து நேபாவில் இந்திய அரசுப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இந்திய அரசு தெரிவித்த அமைப்பு முறைக்கிணங்க இப் பிரிவுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

**3. காவல்துறையில் உள்ள அரிசனங்கள் பழங்குடி மக்களின் சத விகிதம்.**—1967 டிசம்பர் திங்கள் 31-ம் தேதி நிலவரப்படி காவல் துறையில் பணியாற்றிவரும் அரிசனங்கள், பழங்குடி மக்களின் சத விகிதம் பின் வருமாறு :—

| | மொத்தம் | அரிசனங்கள் பழங்குடி மக்கள் எண்ணிக்கை. | சதவிகிதம். |
|---|---|---|---|
| அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் .. | 260 | 20 | 7·7 |
| அரசிதழ் பதிவு பெருத அதிகாரிகள்— | | | |
| (அ) கடைநிலை ஊழியர் தவிர ஏனையோர். | 40,796 | 5,926 | 14·5 |
| (இ) கடைநிலை ஊழியர் .. .. | 337 | 89 | 26·4 |

1967–68-ல் திரட்டப்பட்ட ஊர்க்காப்பாளர்கள்—

| | | |
|---|---|---|
| 1. | சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 1,009 |
| 2. | சேர்த்துக் கொள்ளப்பட்ட அரிசனங்கள் பழங்குடி மக்களின் மொத்த எண்ணிக்கை. | 226 |
| 3. | சத விகிதம் .. .. .. .. .. .. | 22·4 |

பின்தங்கிய வகுப்பினர்கள்—

| | | |
|---|---|---|
| 1. | சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 1,009 |
| 2. | சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்தங்கிய வகுப்பினர்களின் எண்ணிக்கை. | 369 |
| 3. | சத விகிதம் .. .. .. .. .. .. | 36·5 |

**4. பயிற்சியும்-திரட்டலும்**—காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் இருவரும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் நால்வரும் அவர்களின் நடைமுறைப் பயிற்சி முடிந்த பின்னர், உட்கோட்டங்களுக்கு ஆய்வாண்டில் அனுப்பப் பெற்றனர். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் ஒருவரும் நேரே வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவரும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவித் தளவாய் இருவரும் வேலூர் காவலர்ப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.





ஆபூவில் உள்ள தேசியக் காவல் கழகத்தில் தற்போது பயிற்சி பெற்று வரும் இந்தியக் காவல் பணி அதிகாரிகள் ஐவரை 1967-ம் ஆண்டில் இம் மாநிலத்திலுள்ள இந்தியக் காவல் பணிக்கென ஒதுக்கித் தருமாறு மாநில அரசாங்கம் மத்திய அரசினை வேண்டியுள்ளது.

காவல்துறையில் காவலர்களாகச் சேருவதற்குத் தகுதி வாய்ந்த வேட்பாளர்களின் எண்ணிக்கைக் குறைவால் வேறு வகையில் தகுதி படைத்த ஒரு சிலருக்குக் குறிப்பிட்ட குறைந்த அளவு உடல் தகுதி இல்லாதிருப்பினும் அதனின்றும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

1966-ம் ஆண்டில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இரண்டாவது தொகுதியினராகிய 60 துணை மேற்பார்வையாளர்கள் 1967 மார்ச்சில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 1967 மார்ச்சு திங்கள் 29-ம் தேதி முதல் வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர். காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக்காகச் சேர்ந்த 60 துணை மேற்பார்வையாளர்களில், 3 பேர்பின்னர் தங்களது பதவியிலிருந்து விலகிக்கொண்டனர். வேலூரில் உள்ள காவலர்பயிற்சிக் கல்லூரியில் 57 துணை மேற்பார்வையாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டில் ரிசர்வ் உதவி மேற்பார்வையாளர்கள் எவரும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**கல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் உள்ள துப்பு துலக்கும் மத்தியம் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி.**—கல்கத்தாவிலுள்ள துப்புத் துலக்கும் மத்தியப் பயிற்சிப் பள்ளியில் விஞ்ஞானக் கருவிகளைப்பயன்படுத்தித் துப்புத் துலக்குவதிலும், புலனாய்வில் மேம்பட்ட முறைகளிலும் 14 வாரங்கள் பயிற்சி பெறுவதற்காக இந்த ஆண்டில் 6 துணைமேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு அனுப்பப் பெற்றனர். ஹைதராபாத்திலுள்ள துப்புத் துலக்கும் மத்தியப் பயிற்சிப் பள்ளிக்கு 5 துணை மேற்பார்வையாளர்கள் அனுப்பப்பெற்றனர்.

**குற்றவியல் மருந்துவம்**—மருத்துவப் பிரிவின்கீழ் குற்றவியலிலும், குற்றவியல் மருத்துவத்திலும் டிப்ளொமா படிப்பிற்குரிய எட்டாவது பயிற்சித் தொகுதி 1967 நவம்பரில் தொடங்கியது. காவல்துறையில் ஏழு அதிகாரிகள் இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 1967–68 கல்வியாண்டில் சுமார் 150 நாட்களுக்கு தங்கள் அலுவல்களோடு மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரையில் இந்தப் படிப்பில் பயிற்சியும் பெறுவர்.

குற்றவியலிலும் குற்றவியல் மருத்துவத்திலும் எம்.ஏ. பட்டப் படிப்பின் மூன்றுவது பாடமுறை 1967 எப்ரல் முதல் தொடங்கப்பட்டது. எட்டு மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் இவ்வகுப்புகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**5. குற்றம்**—சிறப்புச் சட்டங்களின் கீழும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் தொல்லை உண்டாக்குவது பற்றி இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பில் கண்டுள்ள பிரிவுகளின் கீழும் நிகழ்ந்த சிறு குற்றங்கள் நீங்கலாக, 1966-ம் ஆண்டில் நீதி மன்ற வரம்பிற்குட்பட்ட வழக்குகள் 56,836 ஆக இருந்ததற்கு மாறாக 1967-ம் ஆண்டில் 54,331 ஆக இருந்தன. வழக்குகளின் எண்ணிக்கையில் 2,505 குறைந்துள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றமும், குற்றவாளிகளின் மீது திறமையான கண்காணிப்பும் சட்டத்தின் தடைக்காவற் பிரிவுகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதும், திருட்டுச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்பவர்களை விடாமுயற்சியுடன் பிடிப்பதும் இதற்கான காரணங்கள் எனக் கூறலாம்.

**துப்புத் துலக்குதல்.**—1966-ம் ஆண்டில் துப்பு துலக்கப்பட்ட நீதி முறைக் குற்றங்கள் 61·1 சத விகிதமாகும் 1967-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 60·2 சதவிகிதமாகும்,

1966-ம் ஆண்டில் துப்புத்துலக்கப்பட்ட கடுங்குற்றங்கள் 67·1 சதவிகிதமாகும். 1967-ல் அவை 66·5 சத விகிதமாகும்.

மதுவிலக்கு.—இந்த ஆண்டில் துப்புத்துலக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,59,347 ஆகும். இந்த எண்ணிக்கை 1966-ல் 160,029 ஆக இருந்தது. துப்புத்துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் 682 அல்லது 0 4 சத விகிதம் குறைந்துள்ளது. மாவட்டத்திலும் சரகத்திலும் இயங்குகின்ற காவல் தொகுதியினர் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சப்படும் இடங்களில் அடர்ந்து தங்கள் நாட்டத்தைச் செலுத்தினர். இந்த ஆண்டில் மதுவிலக்குச் சட்டம் சிந்தை குளிரும் வகையில் செயல்படுத்தப்பட்டது.

**6. மாவட்டக் குற்றப் புள்ளி விவரக் கழகம்.**—குற்றம், குற்றவாளிகள் பற்றிய விவரங்களைத் திரட்டுவது, அவற்றைப் பற்றிய தகவல் தருவது, குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவரிடம் துப்புத்துலக்குபவர்கள் எங்ஙனம் கையாளல் வேண்டும் என்று ஆலோசனை கூறுவது போன்ற பணிகளை மாவட்டக் குற்றப் புள்ளி விவரக் கழகம் இனிதே நிறைவேற்றி வந்தது. விரல் ரேகை அடிச்சுவடு பற்றி அறிவதில் பயிற்சி பெற்ற தலைமைக் காவலர்களும், விஞ்ஞான உதவியாளர்களும் வழக்குகளைத் துப்புத்துலக்குவதில் உதவியாயிருந்தனர். விரல் ரேகை (கண்டுபிடிப்பு) கழகத்தினைச் சேர்ந்த திறமைசாலிகள் முக்கியமான வழக்குகளில் விரல் ரேகை குறித்து துப்புத்துலக்குவதற்காகக் குற்றம் நிகழ்ந்த இடங்களைச் சென்று பார்வையிட்டனர். இந்த ஆண்டு 274 நிகழ்வுகளில் குற்றவாளிகள் விட்டுச்சென்ற விரல்ரேகை அடையாளங்களிலிருந்தும் அடிச்சுவடுகளிலிருந்தும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். இதுபோன்று 1966-ல் 211 நிகழ்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டனர். 1967-ம் ஆண்டில் திருநெல்வேலியில் தொடங்கப்பட்ட தனித்தனி விரல்ரேகை அடையாளப் பிரிவும் இத்துறை ஆற்றிய பல நல்ல செயல்களில் பெரும்பங்கு வகித்தது. குற்றப் புலனாய்வுத் துறையில் குற்றவியல் பிரிவுடன் இணைந்துள்ள குற்றம் செய்யும் முறைகளையும் அவற்றைக் கண்டுபிடிக்கும் வழிகளையும் கற்பிக்கும் மாநிலக் கழகம் மாவட்டங்களிலுள்ள துப்பறியும் கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, இணக்கமாகப் பணி புரிந்தது.

**7. நாய்ப்படைப் பகுதி.**—தமிழ் நாட்டில், தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரண்டு துப்பறியும் நாய்ப்படைகள் பணியாற்றி வருகின்றன. கோயம்புத்தூரில் துப்பறியும் நாய்ப்படை ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. மாநகர நாய்ப்படையில் நாய்கள் பயிற்சி பெற்றுவருகின்றன.

**8. இரப்போர் இல்லம்.**—பிச்சை எடுப்பதைத் தடை செய்யும் 1945-ம் ஆண்டுச் சட்டம் இம் மாநிலம் எங்ஙனும் 1966, மே 1-ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போதுள்ள பிச்சைக்காரர் விடுதிகள் எண்ணியாங்கு செயலாற்றி வருகின்றன.

**9. சிறுவர் மன்றம்.**—மாவட்டங்கள் எல்லாவற்றிலும் சென்னை மாநகரிலும் சிறுவர் மன்றங்கள் நல்ல வகையில் செயலாற்றி வருகின்றன. சென்னை மாநகரம் கோடம்பாக்கத்தில், புதிய சிறுவர் மன்றம் ஒன்றினை ஏற்படுத்தக் கட்டளையிடப்பட்டுள்ளது.

**10. வகுப்புப் பூசல்கள் நிலைமை.**—பெரிய கலவரங்களாகக் கருதமுடியாத சில சிறு வகுப்புப் பூசல்கள் இந்த ஆண்டில் நிகழ்ந்தன.

**11. குடியானவர் நிலைமை.**—இந்த ஆண்டில், குடியானவர்கள் முக்கியமாகத் தங்கள் கூலியை அதிகரிக்க வேண்டும் என்று கோரினர். இந்தக் கோரிக்கைக்கு இணங்க இயலாத நிலக்கிழார்கள் பயிரிடுவது, அறுவடை செய்வது முதலிய வேலைகளுக்கு அன்றாடத் தொழிலாளர்களை நியமித்துக் கொண்டனர். இதனால் ஆத்திரங்கொண்ட குடியானவர்கள் மிராசுதார்களையும் தற்காலிகத் தொழிலாளர்களையும் அச்சுறுத்தி வந்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தாழங்குடி கிராமத்தில் 1967 அக்டோபர் திங்கள் 5-ம் தேதி அன்று படைக்கலன் தாங்கிய குடியானவர்கள் மிராசுதார்களைத் தாக்கியதாக வழக்கு ஒன்று இருக்கிறது. இதன் விளைவாகக் காவல் துறையினர் சுட வேண்டி வந்தது. ஒருவர் இறந்துவிட்டார் ; மற்றொருவர் காயமுற்றார்.





**12. தொழிலாளர் நிலைமை.**—இந்த ஆண்டு தனியார் தொழிற்சாலைகளில் தொழிலாளர் கிளர்ச்சிகள் பல நடந்தன. இதன் விளைவாகக் கதவடைப்புகள் ஏற்பட்டன. தொழில் நிறுவனங்கள் தாற்காலிகமாக மூடப்பட்டன. தீபாவளிப் பண்டிகைக்கு முன்னர், பணியாளர்களுக்கு பூரிப்பூதியம் வழங்குவதில் தகராறுகள் ஏற்பட்டன. இந்த ஆண்டில் ஆயுள் காப்புறுதிக் கழகப் பணியாளர்கள் தங்கள் அலுவலகங்களில் கணக்குப் பொறிகளை அமைப்பதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வந்தனர்.

ரெயில்வே பணியாளர்கள், தங்களின் பல்வேறு குறைகளை அதிகாரிகளின் நாட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக ஆர்ப்பாட்டங்களிலும், "எதிர்ப்பு வாரம்", "கோரிக்கை வாரம்" நடத்துவதிலும் ஈடுபட்டனர்.

**13. மாணவர் கிளர்ச்சி.**—நாடாளுமன்றம் நிறைவேற்றிய ஆட்சி மொழி (திருத்த) மசோதா போன்ற சில சிக்கல்களின் மீது மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர் ; வகுப்புகளுக்கும் செல்லாதிருந்தனர். இம் மசோதாவும் அதனோடு இணைந்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதனால் மாணவர்கள் சீற்றங்கொண்டனர். 1967 டிசம்பரில் மாணவர்கள் கிளர்ந்தெழுந்து கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினர். கொடும்பாவிகள் கொளுத்தினர். பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த இந்திப் பெயர்ப் பலகைகளை அகற்றினர், அழித்தனர். அவற்றிலிருந்து இந்தி பெயர்களை அழித்தனர். இந்தி திரைப்படங்கள் காட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தி எதிர்ப்புக் கோஷங்களை அல்லது அத்தகைய கோஷங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை ஓடும் ரயில்களிலும் பேருந்துகளிலும் கார்களிலும் எழுதுவதற்காகவோ அல்லது அவற்றின் மீது ஒட்டுவதற்காகவோ அவற்றை நிறுத்தினர். தேர்வுகளில் தவறிய மாணவர்களை நிறுத்தி வைத்தல், அரசாங்கத் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பும் தேர்வில் மாணவர்களை நிறுத்தி வைத்தல், கல்லூரி விடுதிகளில் அதிக வசதிகளைச் செய்து தருமாறு கேட்டல் போன்றவைகளுக்காகவும் மாணவர்கள் கிளர்ச்சிகள் செய்து வகுப்புகளுக்குச் செல்லாமல் இருந்துவிட்டனர். அத்தகைய மாணவர்களில் பெரும்பாலோர் உள்ளூர்க் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள். கல்லூரி அதிகாரிகளே அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர். சில மாணவர்களைப் பொறுத்தமட்டில் பெற்றோர்களின் உதவியுடன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் மாணவர் சமுதாயத்தைச் சேர்ந்த பலர் 1967 ஜனவரி 25-ம் நாள் "நினைவு நாளாக"க் கடைப் பிடித்தனர்.

**14. காவலர் துப்பாக்கிச் சுடல்.**—இந்த ஆண்டில் ஐந்து தடவை காவலர் சுட நேர்ந்தது.

**15. கண்ணீர்ப் புகை.**—(i) சென்னை மாநகரில் உள்ள ராயப்பேட்டை போக்குவரத்து வளைவில் கூட்டம் ஒன்றைக் கலைப்பதற்காக, 1967 ஜனவரி மாதம் 12-ம் தேதியில் 20·15 மணிக்கு கண்ணீர்ப் புகை பயன்படுத்தப்பட்டது. ஒரு நடிகர் மற்றொரு நடிகரைச் சுட்டதன் காரணமாக அரசாங்க ராயப்பேட்டை மருத்துவ மனையைச் சுற்றியும், பீட்டர்ஸ் சாலையின் இருமருங்கும், ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தின் திறந்த வெளியிலும் பெரிய கூட்டம் ஒன்று கூடிவிட்டது.

(ii) 1967 ஜூலை மாதம் 5-ம் தேதியில் கட்டுக்கடங்காத கூட்டம் ஒன்றைக் கலைப்பதற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணைக்கட்டில் கண்ணீர்ப் புகை பயன்படுத்தப்பட்டது.

**16. காவல்துறை வானொலி.**—தமிழ்நாட்டுக் காவல்துறை வானொலி அமைப்பில் 16 நிலையங்களும், 19 இயங்கும் நிலையங்களும் உள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் கம்பியில்லாத் தந்தி மூலம் சென்னை மாநகருடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கம்பியில்லாத் தந்தி

நிலையங்களைத் தவிர, உட்கோட்டத் தலைமையிடங்களை கம்பியில்லாத் தந்தி மூலம் இணைப்பதற்காக நிலையான 42 வானொலி நிலையங்களை நிறுவவும் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதில் 31 நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன.

17. **காவல் படையினருக்கு வீட்டு வசதி.**—காவல் படையினரின் திறனையும், ஒழுங்குணர்வையும் வளர்க்கும் வகையில், அப்படையினருக்கு அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று 1956-ல் தொடங்கப்பட்டது. காவல் படையினரில் குறைந்தது 80 சதவிகிதத்தினருக்காவது அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

இந்த ஆய்வுரை ஆண்டில், காவல்துறையின் வட்ட மேற்பார்வையாளர்கள் இருவர், உதவி மேற்பார்வையாளர் ஒருவர், 47 தலைமைக் காவலர்கள், 141 காவலர்கள் ஆகியோருக்கான உறைவிடங்கள் கட்டப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

18. **காவலர் நலத் திட்டங்கள்.**—காவலர் ஒவ்வொருவரின் குடும்ப வருமானத்தைப் பெருக்கும்பொருட்டு முந்திய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் தொடர்ந்து செவ்வனே நிறைவேறி வருகின்றன. சிறு குடிசைத் தொழில்கள், மகளிர் மன்றங்கள், பாற்பண்ணைகள் முதலியவை சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் காவலர் பிரிவுகளில் செயல்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் காவலர் குடும்பத்தினருக்குப் பொழுதுபோக்கு வசதிகளையும் கல்வி வசதிகளையும் அளிப்பதுடன், அவர்களது கலைத் திறனை வளர்ப்பதற்கும் அவர்கட்கு வாய்ப்பளிக்கின்றன.

19. **தமிழ்நாட்டுக் காவலர் அறநிதி.**—இந்த அறநிதியின் நிதி வசதியைப் பெருக்குவதற்காக, அதன் உறுப்பினர்கள் தாமாகவே செலுத்தும் தொகைக்கு நிகரான தொகையை, பேரளவு 50,000 ரூபாய்க்கு உட்பட்டு, ஆண்டுதோறும் மானியமாக வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 1967-ம் ஆண்டிற்கு அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய மானியம் ரூ. 50,000 ஆகும். இது 1967 மார்ச் திங்களிலும் டிசம்பர் திங்களிலும் பெறப்பட்டது.

இந்த நிதியின் உறுப்பினர்களுக்குரிய பல்வேறு வகையான வசதித் திட்டங்களுக்காகவும், இடர் உதவி குறித்தும் 1967 ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1967 டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் இந்நிதியிலிருந்து ரூ. 1,60,646·16 செலவிடப்பட்டுள்ளது.

20. **ஊர்க்காவல் படை.**—ஊர்க்காவல் படை 1963-லிருந்து செயல்படத் தொடங்கியது. 1967 டிசம்பர் மாதம் 31-ம் தேதி உள்ள வண்ணம் இப்படையில் சென்னை மாநகரிலே 3,778 பேரும், வெளியூர்களில் 7,560 பேரும், ஆக 11,338 பேர் சேர்ந்து தொண்டாற்றி வந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதிலும் இரவு ரோந்து, போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆகிய வழக்கமான பணிகளில் காவல் துறையினருக்கு, ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து உதவி செய்தனர். 1967 ஜனவரியில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின்போதும், 1967 ஜூலையில் குடிசைப் பகுதிகளில் இதற்கு முன் என்றுங்காணாவகையில் நிகழ்ந்த தீ விபத்துக்களின் போதும், அவர்கள் சிறந்த தொண்டாற்றினர். 1966 அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கிய மாநில மக்கள் பாதுகாப்புப் பயிற்சி நிறுவனம் 1967 ஏப்ரல் மாதம் 20-ம் தேதியில் கலைத்து விடப்பட்டது. சென்னை மக்கள் பாதுகாப்பு இயக்குநர் பதவியும், ஊர்க்காவல் படை நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய சில பதவிகளும் 1967 ஏப்ரல் மாதம் 20-ம் தேதியில் ரத்து செய்யப்பட்டன. ஊர்க்காவல் படையினை நிர்வகிப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் சென்னை மாநகரில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவரும், ரிசர்வ் உதவி மேற்பார்வையாளர்கள் இருவரும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ரிசர்வ் மேற்பார்வையாளர் ஒருவருமாக குறைந்த அளவு பணியாளர்களே தற்போது பணியாற்றி வருகின்றனர்.



21 **கள்ளக் கடத்தல் தடுப்பு-கண்காணிப்புச் சாத்து.** (vigilance cell).—கண்காணிப்புச் சாத்து 1964 அக்டோபரில் நிறுவப்பட்டது. பல்வேறு உணவுத் தானியங்கள் குறித்த கட்டுப்பாட்டு ஆணைகளையும், இன்றியமையாத உணவுப் பொருள்களான நெல், அரிசி, சர்க்கரை, கோதுமை முதலியவற்றின் விலைகள் ஏறுமல் பார்த்துக் கொள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் ஏனைய ஒழுங்குமுறை ஏற்பாடுகளையும் செயல்படுத்துவது உணவு வழங்கல் கண்காணிப்புப் பிரிவின் முக்கிய பணியாகும். மேலும், இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக்கு வழங்குவதை உறுதிப்படுத்துவதில் உணவு வழங்கல் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கும் இந்தப் பிரிவு உதவி புரியும்.

1967-ம் ஆண்டில் இப்பிரிவு 3,142 குற்றங்களைத் துப்புத் துலக்கியது. அவற்றில் 416 குற்றங்கள் பதுக்கல் சம்பந்தபட்டவை; எஞ்சிய 2,726 குற்றங்கள் கள்ளக் கடத்தல் சம்பந்தப்பட்டவை.

22. **தீயணைப்புப் படை.**—இதுகாறும் சென்னை காவல் துறைத் தலைவரின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும் முழுவதுமாக இருந்து வந்த தீயணைப்புப் படைப் பிரிவு, காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, 1967 அக்டோபர் மாதம் 4-ம் தேதியிலிருந்து தனிப்பட்ட இயக்குநர் ஒருவரின் மேற்பார்வையில் தனித்துறையாகத் திகழ்கின்றது.

இம்மாநிலத்தில் இப்போது 55 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றில் 12 நிலையங்கள் சென்னை மாநகரிலும், 43 நிலையங்கள் வெளியூர் நகரங்களிலும் அமைந்துள்ளன. சென்னை மாநகரில் மேலும் மூன்று நிலையங்களை நிறுவுவதற்கு ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை மாநகரில் நிறுவுவதற்கான இடங்கள் கிட்டியதும், அவை நிறுவப்படும். திண்டிவனம், தருமபுரி, பெரம்பலூர் ஆகிய மூன்று இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக மூன்று புதிய தீயணைப்பு நிலையங்களை நிறுவ ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று தீயணைப்பு நிலையங்களையும் நிறுவுவதற்காகத் தீயணைப்புப் படை இயக்குநர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். நமது மாநிலத்தின் நகர்ப்பகுதிகளில் ஏற்படும் தொழிற்சாலைத் தீ விபத்து, வீடுகளில் ஏற்படும் தீ விபத்து, ஏனைய தீ விபத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீயணைப்புப் படை நிலையங்கள் வருங்காலத்தில் எந்தெந்த இடங்களில் நிறுவப்படவேண்டுமென்பதற்கு இந்த அரசாங்கம் "முறை வைப்புப் பட்டியல்" ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலின்படி இன்னும் 30 நகரங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவவேண்டும்.

1967-ம் ஆண்டில் 4,304 தடவைகளில் தீயணைப்புப் படை உதவிக்கு அழைக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்ட 3,801 நிகழ்ச்சிகளில் 37 தீ விபத்து நிகழ்ச்சிகள் கடுமையானவை. இவற்றில் ஒவ்வொன்றிலும் உயிரிழப்பும், 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட உடைமை இழப்பும் ஏற்பட்டன. தீ விபத்து அழிவிலிருந்து ஏறக்குறைய 327·6 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் காப்பாற்றப்பட்டன.

1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முற்பகுதி சென்னை மாநகரத்திலுள்ள தீயணைப்புப் படைப் பிரிவுக்குச் சோதனைக் காலமாகும். அப்போது குறுகிய 14 நாட் கால அளவில், தென் சென்னையில் உள்ள குடிசைப் பகுதிகளில் 107 தீ விபத்துக்களை அந்தப்படை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இந்தத் தீ விபத்துக்களினுல் ரூ. 5·85 லட்சம் பெறுமானமுள்ள சொத்து சேதமடைந்தது. இவ்விபத்துக்களால் 3 பேர் உயிரிழந்தனர்.

குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மக்களுக்கு நீர் வழங்கித் துணை புரிவதற்காக தீயணைப்புப் படை வண்டிகள் அனுப்பப்பட்டன. இவ்வாண்டில் 424 அபாய அழைப்புக்களுக்கு இணங்கிச் சென்று பணியாற்றியுள்ளனர். கிராமப் பகுதியில் வாழும் மக்களுக்கு தீ விபத்தைத் தடுப்பதில் உள்ள பொறுப்பினை உணர்த்தும்பொருட்டும், தீ விபத்து ஏற்பட்ட தொடக்க நிலையில் அந்த இடத்திற்கு தீயணைப்புப் படை வரும்வரை தீயை அணைக்கும் வகையை அவர்களுக்கு விளக்கவும், கிராமங்களில் தீ

விபத்துக்களால் ஏற்படும் தீமைகளைக் குறைக்கவும், கிராமத் தீ விபத்துக் கண்காணிப்பு-தீயணைப்புப் படை ஒன்று உள்ளூர் காவல் துறை அதிகாரிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. 78 தீ விபத்துக்களின்போது தீயணைப்பதில் தீயணைப்புப் படையினருக்கு இந்தப் படை உதவியாயிருந்தது.

23. **காவல் படையினர் மாநாடு.**—தமிழ்நாடு அரசாங்கக் காவல்துறை அதிகாரிகளின் 9-வது மாநாடு மாண்புமிகு முதல் அமைச்சர் தலைமையில் 1967 ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியில் நடைபெற்றது. இது போன்ற மாநாடுகள் முந்திய ஆண்டுகளில் உதகமண்டலத்தில் நடைபெறுவது வழக்கம். தமிழ்நாட்டின் நடுவே அமைந்துள்ள திருச்சிராப்பள்ளியில் இந்த ஆய்வு ஆண்டில் காவல் படையினர் மாநாடு நடைபெற்றது. துறைக்குத் தொடர்பாயுள்ள பொருள்கள் குறித்தும், பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. விவாதங்கள் பயனளிப்பவையாக இருந்தன.

24. **காவலரின் ஒழுங்குணர்வு.**—நான்காவது பொதுத் தேர்தல்கள், வேலைநிறுத்தங்கள், மாணவர் கிளர்ச்சிகள், வகுப்புவாதக் கிளர்ச்சிகள் ஆகியவை குறித்த பணிகளில் காவலர்கள் ஆழ ஈடுபட்டிருந்தபோதிலும், குற்றங்கள் கட்டு மீறுமலிருந்தன. சட்டமும் ஒழுங்கும் சரிவரக் காக்கப்பட்டன. காவல் படையினரின் ஒழுங்கும், கட்டுப்பாடான மன உறுதியும் எப்போதும்போல் உயர்ந்த நிலையில் இருந்தன.

25. காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல் லுறவை மேம்படுத்தவும், காவல் துறையினர் தங்கள் கடமைகளை இன்னும் செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்குய உதவியாக இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆன்ற கருத்துக்களை எடுத்தியம்பினுல் அவற்றை அரசு வரவேற்கும்.

வெளியீடு—21—10—1968]
Issued—21—10—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1968 மார்ச் 21
Thursday, 21st March 1968

தொகுதி XII—எண். 2
Volume XII—No. 2

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

# தமிழக சட்டப் பேரவை.

**வியாழக்கிழமை, 1968 மார்ச் 21.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினு எண்கள் 266, 267, 268, 269 தள்ளிவைக்கப்படுகின்றன.

### மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றம்

*270 வினு—**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழக அரசுக்கு வேண்டுகோள் என்ற தலைப்பிட்டு மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றம் என்ற அமைப்பிலிருந்து 16-7-1967-ம் தேதியில் அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) முறையீடு ஒன்றும் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநயகம் :** அப்பீல் டு தி கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ் என்ற பெயரிலே கொடுக்கவில்லையென்றாலும், தமிழ் ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து வேறு எந்தப் பெயராலும் தலைப்பு கொடுத்து அம்மாதிரி ஒரு அறிக்கை வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அவர்களுடைய வேண்டுகோள்கள் என்னென்ன ? என்னென்ன பரிகாரம் எடுப்பதற்கு அரசு முயற்சித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விடையிலே அப்படி முறையீடு வரவில்லை என்று குறிப்பிட்டேன். அந்த சங்கத்திலிருந்து எதுவும் வராத காரணத்தால்தான் அந்த விடை தரப் படுகிறது. அப்படி ஏதாவது இருக்குமானல் அதை அனுப்பி வைப்பார்களானல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ந. தருமலிங்கம் :** தமிழ் ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் அமைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் தமிழ் மொழிக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் முதல் நிலை தமிழ் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்களுக்கு சில தகுதிகளும் தன்மைகளும் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அதற்குரியவர்கள்தான் ஆசிரியர்களாக இருந்தாலும் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறர்கள். முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக இருந்தாலும், கணித இயல் ஆசிரியர்களாக இருந்தாலும், ஆங்கில ஆசிரியர்களாக இருந்தாலும் உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் படிக்கின்றவர்களுக்கு புலவர் பட்டம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சென்னை பல்கலைக்கழகத்திலே நான்கு ஆண்டுகள் தமிழ் படித்தும்கூட வித்துவான் என்று வடசொல்லிலேதான் பட்டம் கொடுக்கிறார்கள். இனிமேலாவது இங்கே புலவர் என்ற பட்டம் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது இனி பரிசீலிக்கப்படும்.

## தொழில் நுட்பப்பயிற்சி நிறுவன ஆசிரியர்கள்

*271 வினா—**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழக அரசு நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளிகளில் பணியாற்றும் எல்.எம்.இ. பட்டம் பெற்றவர்களுக்கும், **certificate holder**களுக்கும் சம்பள விகிதத்தில் ஏதாவது வித்தியாசம் உண்டா ?

(இ) பி.எஸ்.ஸி. படித்து விட்டு இப்பள்ளிகளில் கணித ஆசிரியர்களாக பணி புரிபவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஒரே வகையைச் சேர்ந்த பதவிகளில் இருப்பவர்களில், சான்றிதழ் வைத்துள்ளவர்களுக்கும், எல்.எம்.இ டிப்ளொமோ பெற்றுள்ளவர்களுக்கும் சம்பள விகிதத்தில் எவ்விதமான வேறுபாடும் இல்லை.

(இ) பி.எஸ்.ஸி. பட்டம் பெற்று, கணித ஆசிரியராக இருப்பவர்களின் சம்பள விகிதம் ரூபாய் 125—5—175—102—25 ஆகும்.

**திரு சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, பி.எஸ்ஸி. படித்து விட்டு கணித ஆசிரியர்களாக, தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் சரி, மற்ற உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி வருகிறார்களே, அதுபோல பி.ஈ. பாஸ் செய்துவிட்டு வருகிறவர்களை கணித ஆசிரியர்களாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கணிதம் படித்தவர்களுக்கு பி.எஸ்ஸி. பட்டம் தரப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** கணித ஆசிரியர்கள் என்று அவர்களை எடுத்துக்கொண்டு, கணித ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பி.எஸ்ஸி. படித்தவர்கள் கணித ஆசிரியர்களாக இருக்கலாம். அவர்களுக்கு கணித ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற சம்பளம் கொடுக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Whereas the duration of the L.M.E. course is spread over three years and that of the Survey course is spread over one year, is there any disparity in the scales of pay if they are employed by the Government of Madras? I am not concerned with the Government of India. The Hon. Minister in his answer has stated that there is no disparity in the scales of pay when they are employed by the Government of India. I want to know whether there is any disparity when they are employed by the Government of Madras ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்களுடைய பட்டப்படிப்பு விவரமும், மற்றைய விவரங்களும் குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in view of the prevailing unemployment among the B.Es. will the Government allow the B.E. graduates to sit for the B.SC. (Pass) examination so that they can qualify themselves and get appointments as teachers ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பி.ஈ. படித்தவர்கள் பி.எஸ்ஸியையும் படிக்க விரும்பினால் அதைப் பற்றி கவனிக்கலாம்.

## PALAR WATER.

*272 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the steps taken by the Government to ensure more water-supply in Palar river from the Mysore State, the source of the river, and

(b) whether the Government will press for a just and reasonable river code to settle disputes ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) தமிழகமும் மைசூர் மாநிலமும் 1892-ல் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, பாலாறு இரு மாநிலங்களினாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உடன்படிக்கையின்படி தமிழகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய புதிய அணைக்கட்டு எதையும் மைசூர் மாநில எல்லைக்குள் கட்டக்கூடாது. தமிழகத்திற்கு முறைப்படி சேர வேண்டிய தண்ணீர் குறைந்து விடுகிறது என்று கருதுவதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை.

(இ)-(அ) பகுதிக்கான விடையின் காரணமாக, இவ்வினாக்கள் எழவில்லை.

**திரு. கே. விநாயகம் :** சென்னை மாநிலத்திற்கும், மைசூர் மாநிலத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் இந்த ஆண்டு முடிகிறது. இந்த ஆண்டு முடிந்த பிறகு தாராளமாக ஓடிவருகிற வெள்ளத்தைத் தடுக்காமல் நமக்கு கொடுப்பதற்கு மைசூர் மாநிலம் தயாராய் இருக்கிறதா? பாலாறு அவ்வளவு அதிகமாகத் தண்ணீர் இருக்கிற ஆறு. அப்போதே அதிகமாக வெள்ளம் வந்திருக்க வேண்டுமே, அது தடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ? பழைய மாதிரி வெள்ளம் வருவதற்கு இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து முயற்சி எடுத்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1892-ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம். அதற்கு மீறி எந்தக் காரியத்திலேயும் மைசூர் அரசு ஈடுபடவில்லை. இது 50 ஆண்டுகள் ஒப்பந்தமாகும்.

**திரு. நா. கிருட்டிணன் :** நெடுநாட்களாக மணல் ஆறாக இருக்கிற பாலாற்றினை நீர் ஆறாக மாற்றுகின்ற வகையிலே காவேரிப் படுகையில் நில அடிமட்ட நீர் வளத்தை அறிய ஆராய்ச்சியை நடத்தியதைப்போல் பாலாற்றுப் படுகையிலும் நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதே ஊற்று தலைக்கால், ஊற்று வாய்க்கால் வழியின் மூலம் தண்ணீர் பெறுவதற்கு முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. அதன் மூலம் தண்ணீர் பெறப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பாலாறுபற்றி நீண்ட நாட்களுக்கு முன்னால் ஒரு உடன்பாடு இருந்தபோதிலும் இப்போது ஒரு உடன்பாட்டை நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி கொறடா அவர்களைக்கொண்டு அந்த மாநிலத்திலே இருப்பவர்களோடு பேசி, தண்ணீர் கொண்டுவரக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது இரண்டு அரசுகளும் சேர்ந்து செய்யக்கூடிய விஷயம். உறுப்பினர் தனியாகச் செய்யமுடியாது. அவர்களுடைய பெயர் விநாயகம் என்பதால் முதல் முதல் பிள்ளையார் குட்டு குட்டிக்கொண்டு ஆரம்பிக்கலாம் என்று அப்படிக் கருதினால் அது சரியாக இருக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பாலாற்றில் முன்னால் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. இப்போது என் மாற்றிவிட்டார்கள் என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்கான விவரங்கள் இல்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** ஒப்பந்தம் என்றாலே இரண்டு பேருக்கும் பாகுபாடு இல்லாமல் இருக்கவேண்டும். ஆனால் இந்த ஒப்பந்தத்திலே பாகுபாடு இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது நமக்குப் பாதகமான ஒப்பந்தம் அல்ல. இரண்டு அரசுகளும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம்தான். இப்போது எ.ஈ. பதவியில் உள்ள பொறியியல் நிபுணர் ஒருவர் மைசூர் மாநிலத்தில் கிருஷ்ணராஜசாகர் என்ற இடத்தில் இதற்காகப் பணியாற்றிக் கொண்டுவருகிறார்கள். நமக்கு இடையூறான காரியத்தை மைசூர் மாநிலம் செய்வதில்லை.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, பாலாற்றுத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளுவதைப்பற்றி இரு மாநிலங்களுக்கும் இடையே உடன்படிக்கை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பாலாற்றுத் தண்ணீரை பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளுவது சம்பந்தமாக பாலாற்றுப் படுகை விதிகள் (பாலார் பேஸின் ரூல்ஸ்) என்று ஏற்படுத்தியிருக்கிறார்களே, அதையாகிலும் மாற்றியமைப்பது குறித்து இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** பாலாற்றின் அடிநீர்வாய்ப்புகள் குறித்து ஆய்ந்து கண்டறிந்த பின்னர்தான் அந்த விதிகளை ரத்து செய்வதுபற்றி அரசு ஆலோசிக்க முடியும். இப்பொழுது எதையெதைத் தளர்த்தலாம் என்று அரசுக்கு பொறியாளர் மூலமாகச் சில பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் ஊற்றுத்தலையிலிருந்து (ஸ்ப்ரிங் ஹெட்) 400 மீட்டருக்கு அப்பால்தான் பம்ப் செட் வைக்கலாம் என்று இருந்தது, 200 மீட்டர் என்று தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது. ஊற்று வாய்க்காலுக்கு (ஸ்ப்ரிங் சானல்) 200 மீட்டருக்கு அப்பால்தான் பம்ப் செட் வைக்கலாம் என்று இருந்தது, இப்பொழுது 100 மீட்டர் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. முன்பு சிலவிடங்களில் 2 முதல் 2·5 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள்தான் வைக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது 5 குதிரை வேகமுள்ள இயந்திரம் வைக்கலாம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்குத்தான் இப்பொழுது நிலைமைக்குத் தகுந்த மாதிரி மாற்றங்கள் செய்யப்படுகின்றனவே தவிர, நீக்கிவிடுவதற்கான சூழ்நிலை இப்பொழுது இல்லை.

**திரு. கே. விநாயகம் :** பாலாறு வெறும் மணல் ஆறாக இருக்கிறதே, இதிலே வெள்ளம் வந்திருக்கவேண்டும் அல்லவா ? அப்படியிருந்தால், வெள்ளத்தைத் தடுப்பதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் மைசூர் அரசாங்கத்தோடு செய்துகொண்ட அந்த ஒப்பந்தத்தில் என்ன என்ன விதிகள் இருக்கின்றன ? வாட் ஆர் தி கண்டிஷன்ஸ் ? இந்த விதிகளின் காரணமாக இந்தத் தண்ணீர் வருவது தடுக்கப்பட்டதா ? அப்படியென்றால், ஒப்பந்தம் முடிந்த பிறகாவது, அவர்கள் இதையெல்லாம் தளர்த்திவிட்டு, இயற்கையாகவே வரவேண்டிய வெள்ளத்தைத் தடுக்காமல் விடுவதற்கு, அவர்களை இதுமாதிரி தூண்டுவதற்கு இந்த சர்க்கார் முயற்சிக்குமா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விதிகளை விவரமாகச் சொல்வது உசிதம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இந்த மன்றத்தில் நான் முன்பு எதிர்தரப்பில் இருந்தபோது, இப்படிப்பட்ட கேள்விக்கு இந்த பதில்தான் பல முறை தரப்பட்டது. ஆகவே, ஆளுங்கட்சியில் இருந்த திரு. விநாயகம் அவர்கள் அதை உணர்ந்திருக்கவேண்டும். நாங்கள் அப்பொழுது எதிர்கட்சியில் இருந்த காரணத்தால், நாங்கள் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொண்டோம். ஆளுங்கட்சியில் முன்பு இருந்த காரணத்தால், அவர்கள் ஏற்கனவே தெளிவு பெற்றிருக்க வேண்டும். ஆதலால், மறுபடியும் அதைக் கேட்பது முறை அல்ல.

தண்ணீரை அவர்கள் நமக்கு விடாமல் இருக்கிறார்கள் என்ற பிரச்சினை வந்தால் அதுபற்றி நாம் யோசிக்கவேண்டுமே தவிர, இப்பொழுது மைசூருக்கும் நமக்கும் எந்தவிதமான தகராறும் இன்றி, உடன்படிக்கையின்படி எல்லாக் காரியங்களும் நடந்து வருகின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்பொழுது அவர்கள் தண்ணீர் விடாததனால்தான் பாலாற்றில் தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் தண்ணீர் 75 சதவீதம் வீணாகக் கடலில் போய் விழுவதாகத் தெரிகிறது. அதை சித்தூர் ஜில்லாவின் வழியாகப் பெரிய கால்வாய் வெட்டி, பாலாறு உற்பத்தியாகக்கூடிய நந்தி துர்க்கா என்னும் இடத்தில் கொண்டுவந்து சேர்த்தால், நம் மாநிலத்திற்கும், மைசூர் மாநிலத்திற்கும் பயன்படுமே, அந்த அடிப்படையில் கவனம் செலுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது மூன்று மாநில அரசுகளும் கூடிப்பேசித் தீர்க்க வேண்டிய விஷயம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தென் மாவட்டங்களில் உள்ள கிருஷ்ணா, கோதாவரி, பாலாறு, காவிரி, மற்றும் இங்கே உற்பத்தியாகிக் கேரள மாநிலத்திற்குப் போகும் ஆறுகள் ஆகியவைகளிலுள்ள தண்ணீரை மேலும் எப்படி எப்படி தென் மாநிலங்களுக்கிடையே பங்கிட்டுக்கொள்வது என்பதுபற்றிப் புனராலோசனை செய்வதற்கு இந்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்துவார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினாவுக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், அமைச்சர் அவர்கள் விரும்பினால், விடை அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தொடக்க வினாவுக்கு இது தொடர்புடைய வினா அல்ல. ஆனாலும், இது நான்கு மாநில அரசுகள் கூடிப் பேசவேண்டிய விஷயம். அதிலே இந்திய சர்க்காரைப் பொறுத்த வரையில், ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது என்றுகூடச் சொல்வதற்கில்லை.

**திரு. எம் அப்துல் கபூர் சாகிப் :** தலைவர் அவர்களே, ஒப்பந்தத்தை மைசூர் மாநிலம் மீறி, அங்கே அணைக்கட்டு போடுவதால்தான் நமது மாநிலத்திற்குத் தண்ணீர் வருவதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபோல், மைசூர் பகுதியில் பாலாற்றுத் தண்ணீரை, தமிழகத்திற்குப் பாதகமாக, அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்ற முறையில் 1955-ஆம் ஆண்டில் சில முறையீடுகள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டன. அது குறித்து, அப்பொழுதிருந்த அரசு, மத்திய நீர் மின்சாரக் குழு (செண்ட்ரல் வாட்டர் பவர் கமிஷன்) என்கிற குழுவில் விவாதிப்பதற்காக, இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைத்தார்கள். அதில் உடன்படிக்கையை மீறிய நடவடிக்கைகள் எதையும் மைசூர் மாநிலம் மேற்கொள்ளவில்லை என்று அப்போதே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதில், அனாவசியமாக, மைசூர்

சூழ்நிலையை
அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே ஒரு குழப்பமான கேட்டுக்
உருவாக்கும் அளவுக்கு கேள்விகளை எழுப்பவேண்டாம் என்று
கொள்ளுகிறேன்.

## சென்னை நகருக்குக் குடிதண்ணீர்

* 273 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
டாக்டர் எச். வி. ஹாண்டே :
திரு. கே. விநாயகம் :
திரு. எஸ். இராமச்சந்திரன் :
திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :
} மாண்புமிகு பொதுப்

விடையளிப்
பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு
பாரா—

சென்னை நகரத்தில் குடி தண்ணீர் நெருக்கடியைப் போக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னை மாநகரில் குடிநீர்த் ஏற்பாடுகளும்
தேவையை நிறைவேற்றும்பொருட்டுச் சில குறுகிய கால
நீண்டகால ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன—

**குறுகிய கால ஏற்பாடுகள்—**

(1) பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து புழலேரிக்கு நீர் வரும் வழியில் தடுத்து
40 கோடி கன அடி அளவிற்குத் தண்ணீர் விரயமாவதைத் ஒன்றை
அதனைச் சேமிக்கும் பொருட்டு, திறந்த காரைப்பூச்சுக் கால்வாய்
பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து புழலேரிக்கு வெட்டுதல்.

(2) இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும் 55 கோடி கன அடி நீரைக் குடிநீராகப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு, புழலேரி, சோழவரம ஏரி ஆகியவற்றின் ஆயக்கட்டு நிலங்களைக் கையகப்படுத்துதல்.

(3) கூடுதலாக 68 கோடி கன அடி அளவுள்ள நீரைச் சேமிக்கும் வகையில் புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் முழு ஏரி மட்டத்தை உயர்த்துதல்.

(1), (2) இனங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இனம் (3) குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

**நீண்ட கால ஏற்பாடுகள்—**

(1) வீராணம் ஏரியிலிருந்து விசையேற்றத்தின் மூலம் இறைத்து, ஒரு நாளைக்கு 4 கோடி காலன் நீரை அனுப்புவதன் மூலம் சென்னை மாநகரின் குடிநீர் வசதியைப் பெருக்கும் பணித் திட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணித் திட்டம், 1967, அக்டோபர் திங்கள் 30-ம் தேதி தொடங்கப்பட்டது. இப்பணித் திட்டத்தை, ஐந்தாண்டுத் திட்டத்தின் பணித் திட்டமாகக் கருதும்படி இந்திய அரசின் இசைவைப் பெறுவதற்காகக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

பின்வரும் பணித் திட்டங்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றன—

(1) கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு நீர் கொண்டு வருதல்.

(2) சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நில அடிமட்ட நீர் வளங்களைப் பற்றி ஆய்வு செய்து இயன்ற மட்டும் அந்த நீரைப் பயன் படுத்திக் கொள்ளுதல்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதுபோன்ற, சென்னை நகருக்குக் குடிநீர் தருவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கின்ற இந்த நல்ல நேரத்தில், காவிரித் தண்ணீரைக் கொண்டு ஏற்கனவே விவ சாயம் செய்துகொண்டு வருகிறவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படும் என்று காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்து வருகிறார்களே, அது இந்த அரசுக்குத் தெரியுமா ? அது எந்த அளவுக்கு உண்மை என்பதை விளக்க முடியுமா ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினருக்கே தெரியும், அதி லே எந்தவிதமான உண்மையும் இல்லை என்று.

**Dr. H. V. HANDE :** Sir, the Minister stated in his reply that the Government were awaiting the Central Government's sanction to incorporate this scheme into the Five-Year Plan. Will the Minister tell us exactly whether the whole work will wait till the sanction is received, whether the work has already commenced and if commenced, what the stage is, how many years the Government think it will take to complete the scheme, if the centre does not give the sanction, whether the State Government themselves will execute it, and what the expenditure involved is ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதில் மத்திய சர்க்காரிடத்தில் நாம் அனுமதி கேட்டிருப்பது பணத்திற்கு அல்ல. அவர்கள் அனுமதி மறுத்தால்தான் மத்திய அரசு செய்வதா, மாநில அரசு செய்வதா என்ற கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, மாநில அரசே செய்துகொள்ளலாமா என்ற அந்த இடத்திற்கு நாம் வரவேண்டும். ஆகவே, இது பணத்தைப் பொறுத்ததல்ல. மாநில அரசு ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட எந்தத் திட்டமானாலும், அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறு வது என்பது மரபாக இருந்து வருகிற காரணத்தால், அந்த ஒப்புதலைப் பெறுவதற்காகத்தான் இப்பொழுது மத்திய அரசினிடத்திலே நாம் கோரி யிருக்கிறோம். அந்த ஒப்புதல் வரத் தாமதப்படுவதால், அதற்கிடையில் சில வேலைகள்—வரைபடம் போடுவது போன்ற வேலைகள்—இங்கே நடை பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

**திரு. கே. விநாயகம் :** சார், நீண்டகால திட்ட அடிப்படையில், வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இது அமலுக்கு வருவதற்கு எத்தனை ஆண்டுக்காலம் பிடிக்கும் ? சென்னையில் தண்ணீர் கொடுப்பதற்கு எந்தத் தேதியை வைத்திருக்கிறார்கள் ? அதற்குள், சைதாப்பேட்டையில் ஒரு பொம்மையை வைத்து, "காவேரித் தாய்" என்று பெயர் கொடுத்து, அந்த அம்மாள் கையில் ஒரு குடத்தைக் கொடுத்து, தண்ணீர் கொடுப்பதற்காக அங்கு ஒரு நிகழ்ச்சி நடந்ததே, அது பாமர மக்களை ஏமாற்றுகிற நிகழ்ச்சி ஆகாதா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** பாமர மக்களை ஏமாற்ற நாங்கள் காங்கிரஸ்காரர்களிடத்தில் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை. பாமர மக்க ளுக்கு பயன்தரத்தக்க அளவுக்கு அவர்களுக்காகக் காவிரித் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான், எப்படியும் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துவிட்டால், அக்கறை யோடு இந்தக் காரியங்களில் இந்த அரசு விரிவாக ஈடுபடமுடியும் என்று, தூண்டுதல் உணர்வை ஏற்படுத்துவதற்காக அந்த விழா நடைபெற்றிருக் கிறது. நண்பர் அவர்கள் கேட்டார்கள், எத்தனை ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேறும் என்று. இது முன்பு போல், "நிறைவேறும்", "நிறைவேறும்" என்று ஆண்டுக்காண்டு தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கக் கூடிய தன்மையில் அல்ல. ஐந்து ஆண்டுகளுக்குள் இது நிறைவேற முடியும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வீராணம் ஏரி யிலிருந்து சென்னை நகருக்குக் குடி நீர் கொண்டுவருகின்ற திட்டத்தில் வழியிலே இருக்கின்ற வறண்ட பகுதிகள், காடாம்புலியூர் பிர்க்கா, போன்ற கிராமப் பகுதிகள், மற்றும் சிற்றூர் பேரூர் போன்ற உள்ளாட்சி களுக்கும் தண்ணீர் கிடைக்குமானால் போடப்படுகின்ற முதலீட்டுத் தொகை யைப் பகிர்ந்துகொள்ள அவர்கள் முன்வருவதற்கு இருக்கிறார்கள். அதை உத்தேசித்து மொத்தம் ஆகும் முதலீட்டுத் தொகையைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், மற்ற ஊர்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்ற வகை யில் அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு கருணாநிதி :** செலவைப் பகிர்ந்து கொள்வது என்பது லாபகரமானதுதான். வழியில் இருக்கிற இடங்களுக்கும் கொடுக்கின்ற அளவில் தண்ணீர் போதுமானதாக இருக்குமா அந்த அளவுக்கு வீராணத்திலிருந்து தண்ணீர் பெறமுடியுமா என்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் நாளுக்கு நாள் மக்களுடைய தொகை பெருகி வருவதால் குடிநீர்த் திட்டம் மிக அவசியமாகக் கவனிக்கப்படவேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருப்பதன் காரணமாக காவிரித் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதோடு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தாலும் கூட மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக அந்தத் தண்ணீர் போதும் என்று சொல்வதற்கு இடம் இருக்கிறதா? கடல் நீரை குடிநீராகச் சுத்தப்படுத்தி மக்களுக்கு அளிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது போடப்படுகின்ற திட்டம் விரைவிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஜேடர்பாளையத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு வீராணத் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது விரைவிலே முடிவுறும். அது முடிவுற்றதும் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் கொண்டுவந்து கொடுக்கின்ற அளவு போதுமான அளவுக்கு இருக்குமா என்பதை மறுப்பதற்கு இல்லை. கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப் பொறுத்தவரையில் அந்த அரசிடமிருந்து நம்பிக்கையுடன் சில தகவல்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அடுத்த கட்டத்தில் அதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** சென்னை நகரத்தில் குடிநீர் பற்றுக்குறை இருப்பதற்குக் காரணம் தொழிற்சாலைகளுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்படுவதால்தான். ஆகவே நாம் நிறைவேற்ற இருக்கின்ற குடி தண்ணீர் திட்டத்திற்கு தொழிற்சாலைகளிலிருந்து சிறப்புக் கட்டணம் என்ற முறையில் அதிகமாகப் பணம் வசூலிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தொழிற்சாலைகளிலிருந்து வழங்கு கட்டணம் என்ற முறையிலே வசூலிப்பதாக இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த ஜேடர்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதாக இருந்த திட்டம் ஒத்திப்போடப்பட்டிருக்கிறதா அல்லது அறவே நிறுத்தப்பட்டு விட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அறவே நிறுத்தப்பட்டு விட்டதாகத்தான் அர்த்தம். காரணம் அது அதிகச் செலவை ஏற்படுத்தக்கூடியதாகவும் அதை நிறைவேற்றுவதற்கு அதிக ஆண்டுக் காலம் ஆகும் என்பதாகவும் இருக்கிறது. 42 கோடி ரூபாய் அதற்குச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு 8, 9 ஆண்டுக் காலம் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு வருகின்ற போது வழியிலே உள்ள 2,500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படி கையகப்படுத்துகின்ற வேளையில் நிலவுடைமையாளர்கள் அதற்காக நீதிமன்றத்திற்குச் செல்வார்கள். அதற்கு 20 ஆண்டுக் காலம் பிடிக்கும். ஆகவே தான் ஜேடர்பாளையத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது கூட அல்ல, அறவே நிறுத்தப்பட்டுவிட்டது.

**ஹாஜி ம. மு. பீர் முகம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீராணம் ஏரியிலிருந்து நீர் கொண்டு வரப்படுகின்ற திட்டம் இருக்கின்ற காரணத்தினாலே அந்த ஏரியை ஆழப்படுத்துகின்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதால் அதை அதற்காக ஆழப்படுத்துகின்ற அவசியம் இல்லை. ஆனால் சில வகையான செம்மைப்படுத்துகின்ற வேலைகளைச் செய்வதற்குத் திட்டம் இருக்கிறது. வீராணம் ஏரி காவிரியிலிருந்து வருகின்ற தண்ணீரைத் தேக்கிக் கொடுக்கின்ற பாத்திரமாகத்தான் பயன்படுகிறதே தவிர வேறு அல்ல.



**திரு. எஸ். முருகையன் :** இப்பொழுது ஒரு நபருக்கு, ஒரு நாளைக்கு எவ்வளவு காலன் தண்ணீர் கொடுக்கப்படுகிறது ? வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு எவ்வளவு காலன் தண்ணீர் கிடைக்கும் ? அது போதுமா ? சென்னை நகர மக்களுக்கு மேற்கொண்டு தண்ணீர் கிடைக்கச் செய்ய என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு $17\frac{1}{2}$ காலன் தண்ணீர் கிடைக்கிறது. வீராணத் திட்டம் நிறைவேறியதற்குப் பிறகு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 40 லிருந்து 45 காலன் வரை தண்ணீர் கிடைக்கும்.

**திரு. நா. காசிராமன் :** சென்னைக்குக் குடிநீர் பற்றுக்குறையைப் போக்குவதற்காக வீராணம் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறார்கள். அது நல்ல திட்டம்தான். அதே சமயத்தில் குடிநீர் அல்லாத மற்ற உபயோகங்களுக்குத் தேவைப்படுகின்ற தண்ணீரைத் தனியாகக் கொடுப்பதற்கு கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் கொடுக்கப்படுவதைப் போன்று கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது இந்த வேலை முடிந்த பிறகு அந்த வேலைகளைப் பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** சென்னை குடிநீர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் கூறிய திட்டம் புதிய அரசு போட்ட திட்டமா அல்லது பழைய அரசு போட்ட திட்டமா ? முதலிலே பழைய அரசு போட்ட திட்டத்தைப் புதிய அரசு கொண்டுவருகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஜேடர்பாளையத் திட்டம், வீராணத் திட்டம் இரண்டு திட்டங்களும் நீண்ட நாட்களாக ஆராய்ச்சியில் இருக்கின்றன. அவர்கள் முடிவுக்கு வராமல் இருந்தார்கள். இந்த அரசு பதவியேற்ற பிறகு வீராணத் திட்டம்தான் என்ற முடிவுக்கு வந்து இருக்கிறது.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்குக் குடிநீர் காவிரியிலிருந்து கொண்டு வருவதால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படும், அங்கே உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பேசப்படுகிறதே அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தஞ்சைக்கு மேலே இருக்கின்ற தண்ணீரை எடுப்பதால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படாது. வீராணத்திற்கும் தஞ்சைக்கும் சம்பந்தம் இல்லை. அது ஒரு தவறான பிரச்சாரம்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், குடிநீர்ப் பிரச்னை சென்னைக்கு மட்டுமல்ல மற்ற நகரங்களிலும் இருக்கிறதே. ஆகவே இதைத் தீர்ப்பதற்கு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு அதற்குள் இந்தப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய கொள்கையை இந்த அரசு கடைப்பிடிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆங்காங்குள்ள குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பற்றி பொது நல அமைச்சர் அவர்கள் கவனித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வினயகம் அவர்கள், அவர்கள் பெயரிலுள்ள முதல் இரண்டு எழுத்துக்கள் காட்டுகின்றபடி "வினா" கேட்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** I understand its implication. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தொகுதியாகிய கோடம்பாக்கம், கிண்டி, சைதாப்பேட்டை இங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இப்பொழுது இல்லை. அதைப் போக்குவதற்காக 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் காத்துக்கொண்டு இருக்காமல் அங்கேயே அண்டர்கிரவுண்ட் வாட்டர் எடுத்து அதை டாப் செய்து பாதுகாக்கப்பட்ட புரடக்டட் வாட்டராக பொது மக்களுக்குக் கொடுப்பது அவர்களுடைய நலனுக்காகவாவது செய்ய லாமே. அப்படிச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எனக்கு இந்த விஷயத்தில் சுயநலமில்லை. இருந்தாலும் எனனுடைய தொகுதி குடிநீர் பெறுகின்ற இந்த முயற்சியில், இந்தக் கேள்வி மாநகராட்சியை ஊக்குவித்து அதற் கான ஏற்பாடுகளைச் செய்து அதன்மூலம் என்னுடைய தொகுதி பயனடையு மானால் நான் பெரு மகிழ்ச்சியடைவேன்.

## நெசவுத் தொழிலாளர்களுக்கு நியாய விலைக் கடை

* 274 வினா—**திரு சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

500 நெசவுத் தொழிலாளர்கள் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நியாய விலைக் கடையைத் திறந்து அதன் மூலம் மலிவான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்க அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

நெசவுத் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதிகளிலும் இந்தக் குடும்பக் கார்டு அமலில் இருந்து வருகிறது. நெசவுத் தொழிலாளர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே மட்டும் தனியாகக் கொடுப்பது சாத்தியக் கூறான தல்ல.

**திரு. சி. கோவிந்தராசன் :** கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் நசித்துள்ள இந்த நிலைமையில் நெசவுத் தொழிலாளர்களுக்கு வருவாய் கிடையாது. இதனால் லட்சக் கணக்கான கைத்தறிக் குடும்பங்கள் ஜீவனத்திற்கே கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். எப்படி சென்னை, கோவை போன்ற நகரங்களில் மானியங் கொடுத்து படி அரிசி கொடுப்பதற்கு உதவி செய்கிறார்களோ அதைப் போலவே கைத்தறி நெசவாளர்களுக்கு மானியங்கள் கொடுத்தாவது குறைந்த விலைகளில் உணவுப் பொருட்கள் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குடும்பக் கார்டு முறை தமிழ் நாட்டில் ஏறக்குறைய $1\frac{1}{4}$ கோடி மக்களுக்கு அமலில் இருந்து வருகிறது. வியாபாரிகளிடத்திலேயே, கொள்ளை லாபம் அடிக்கிறவர்களிடத்திலேயே உணவு தானியப் பொறுப்பை விட்டுவிடாமல் குறிப்பிட்ட அளவிலே நியாயமான விலையிலே கொடுக்க வேண்டுமென்று கருதித்தான் அப்படிக் கொடுக்கப்பட்டு வருகிறது. நெசவாளர் பகுதிகள், மீனவர் பகுதிகள் இப்படிப்பட்ட பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. நெசவுத் தொழிலா ளர்கள் என்று அவர்கள் சொல்கிற பிரச்னைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இது ஒரு பரந்த பிரச்னை. அந்த அந்த மாவட்ட கலெக்டர்கள் எங்கெங்கெல்லாம் தேவையாக இருக்கிறதோ அதைப்பற்றி சிவில் சப்ளை கமிஷனருக்குப் பரிந்துரை அனுப்புவார்கள். அந்த நிலைமைக்குத் தகுந்தபடி அவ்வப்பொழுது இது செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய தென் ஆற்காடு மாவட்டம் மிகவும் நல்ல மாவட்டம், பெருமைப் படத்தக்க நிலையில் இருக்கிறது உபரி மாவட்டமாக. அங்கே ரேஷன் முறை இல்லாமல் மற்ற மாவட்டங்களுக்கு அது உதவி செய் கின்ற வள்ளல் தன்மையோடு இருக்கிற மாவட்டம் என்பதால் அந்த மாவட்டத்திற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, அதிக விளைச்சல் ஏற்பட்ட போதிலும் கைத்தறி நெசவாளர்களுக்கு உணவு கிடைக் காமல் அவர்கள் கஷ்டப்படுவது நாம் தினசரி காண்கின்ற காட்சி. எங்கள் தொகுதியில் பொட்டல்புதூர், ரவணசமுத்திரம் போன்ற இடங்களில் முஸ்லிம் கைத்தறி நெசவாளர்களும் செங்குந்தர் நெசவாளர்களும் உணவு தானியம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். கைத்தறி நெச வாளர்கள் வசிக்கும் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் வைத்தால் அவர்களின் கஷ்டங்கள் சிறிதளவு நீங்கும். அப்படி நியாய விலைக் கடைகள் அமைக்க அரசாங்கம் முன்வருமா ? முற்பகல் 9-30

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கைத்தறி நெசவாளர்கள் இதில் முதன்மையாகக் கருதப்படுகிறார்கள், அவர்கள் விவசாயம் செய்வது இல்லை என்ற காரணத்தால். இப்போது லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் இந்தப் பெரிய அனுகூலத்தைப் பெற்று வருகிறார்கள். ஆனால் தீட்சிதர் அவர்கள் குறிப்பிட்ட திருநெல்வேலி மாவட்டத்தில்தான் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல பற்றாக்குறை கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விநியோகத்தின் பெரும் பலன் பெறும் மாவட்டம் திருநெல்வேலி. சமீபத்தில் 300 கிராமங் களுக்கு நியாய விலைக் கடைகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த இடங்களின் தேவையை ஒட்டி வருகிற பரிந்துரை மீது முடிவுகள் எடுக்கப் படுகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட சில ஊர்களில் வசிக்கிறார்கள். அந்த ஊர் களுக்கு எல்லாம் சேர்த்து குடும்பக் கார்டு கொடுக்க வேண்டிய நிலை ஏற்படாமல் நெசவாளர்கள எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், எத்தனை குடும்பங்கள் இருக்கின்றன என்ற கணக்கு எடுத்து குடும்பக் கார்டுகள் கொடுக்க முன்வந்தால் சிரமம் இல்லை. எல்லா மாவட்டத்திலும் நெச வாளிகள் குடும்பங்களுக்கு மட்டும் தனியாக, பிரத்யேகமாக கணக்கு எடுத்து அவர்களுக்குக் குடும்பக் கார்டு கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது சாத்தியக் கூறானதல்ல, நல்லதும் அல்ல. நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நியாய உணர்வு இருந்தபோதிலும் மற்றவர்களுக்குத் தவிர்க்கப்பட வேண் டும் என்பது பாரபட்சம் காட்டுவது போலாகும். கனம் உறுப்பினரின் தொகுதியாகிய சின்னாளம்பட்டியில் வசிக்கும் நெசவாளிகள் ஏறக்குறைய பத்தாயிரத்துக்கும் மேல் இருக்கிறார்கள். அந்த ஊரில் கூட நெசவாளி களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு மற்றவர்களை விட்டுவிடலாம் என்பதை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்கிறாரா ?

**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் திறப்பதில் அரசுக்கு என்னென்ன சிரமங்கள் இருக் கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவருடைய வினா — "நெசவாளத் தொழிலாளர்களுக்கு நியாயவிலைக் கடைகள் திறப்பதில் என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன ?"—என எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நெசவாளத் தொழிலாளர் களுக்குக் கொடுப்பதில் சிரமம் என்பதில்லை. சில கொள்கைகளை அரசாங்கம் கொண்டிருக்கிறது. குடும்பக் கார்டு முறையில் $1\frac{1}{4}$ கோடி பேருக்கு கொடுத்து வருகிறோம். முழு அளவுக்கு அதனைக் கொடுக்கிறார்கள் என்பது அல்ல. வெளிச் சந்தைகளுக்கு விட்டால் அதிகம் விலை ஏற்பட்டு ரொம்ப சிரமப்படுகிறார்கள். ஆகவே, கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும் என்று, ஓரளவு குறிப்பிட்ட அளவில் நியாயமான விலையில் தானியம் கிடைக்க வேண்டும் என்பதால் இந்த குடும்பக்கார்டு முறை ஏற்படுத்தப் பட்டது. இதில் நெசவாளிகளும், மீனவர்களும், வரட்சியான பிரதேசங் களில் உள்ளவர்களும் மிகப் பெரிய பலன் அடைகிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், மிகவும் பற்றுக்குறையாக உள்ள சில தாலுக்காக்கள் இருக்கின்றன. உப தாலுக்காக்களும் இருக்கின்றன. வெளிச் சந்தைகளில் அதிகமாக அரிசி கிடைக்காத இடமாகவுள்ள சாத்தான்குளம் சப்தாலுக்கா, திருச்செந்தூர் தாலுக்கா இவ்விடங்களில், அங்குள்ள மக்களும் மற்ற பனைமரத் தொழிலாளர்களும் வெளியில் அதிக விலைக்கு அரிசி வாங்குகின்ற நிலை இருப்பதால் இந்த தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற ரேஷனை மேலும் அதிகரித்துக் கொடுக்கும் முறையை அரசு ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் கேட்கிற வினவை நெசவுத் தொழிலாளர் பற்றி கேட்பதாகக் கருதி அமைச்சரவர்கள் விடையளிக்கவும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர்கள் கூறியதுபற்றி எனக்கு ஒரு சந்தோஷம். சாத்தான்குளத்தில் கொடுக்கப்படவில்லை என்று ரொம்ப நாளாக முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது, எங்களுக்குக் கிடைக்கிறது, தி.மு.க. உறுப்பினர் தொகுதிகளில் கிடைக்கவில்லை, எனக்கு எவ்வளவு செல்வாக்கு பார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உணவுத் துறை, அவர்களுடைய தொகுதிக்குக் கொடுத்திருப்பதற்காக சந்தோஷப்படுகிறேன். இப்போது அவர்கள் குறிப்பிட்ட திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராதாபுரம் மிகவும் வரட்சியாக இருக்கிறது . . .

**திரு. டி. மார்டின் :** சாத்தான்குளம் சப்தாலுக்கா என்று நான் குறிப்பிட்டேன். அமைச்சரவர்கள் ராதாபுரம் என்று சொன்னதால் அதை விளக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எவ்வளவோ முறை சொல்லியாகிவிட்டது. உறுப்பினரவர்களின் வினவிற்கு அமைச்சரவர்கள் விடை அளிக்கலாம், அளிக்காமலும் இருக்கலாம். ராதாபுரம் பற்றி கேட்கும்போது சாத்தான்குளம் பற்றிக்கூட விடை அளிக்கலாம். எனவே அமைச்சர்கள் தெரியாமல் சொல்கிறார்கள் என்று நினைக்கவே கூடாது. தெரிந்து தான் சொல்கிறார்கள் என்று கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த விதமான பாரபட்சமும் கிடையாது. எந்தெந்த இடங்களுக்கு என்னென்ன தேவையோ, அதையனுசரித்து கலெக்டர்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து ஸிவில் சப்ளை கமிஷனர் முடிவு எடுக்கிறார்கள். இவைகள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்த அரசின் வெற்றிகரமான உணவு உற்பத்தி கொள்கையால் ஒரு படி அரிசி ரூ. 1·05, ரூ. 1·10 என்று விற்கிற பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளை நீக்குவதற்கு வேண்டிய உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பல இடங்களில் நியாய விலைக் கடைகள் இல்லை யென்பதை அங்கத்தினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** நெசவாளிகள் வசிக்கும் பல கிராமங்களில் இன்னமும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அங்கு அவற்றைத் திறக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோவில்பட்டி மாவட்டத்தைப் பொருத்த வரையில் இந்தப் புதிய அரசாங்கம் வந்ததற்குப் பிறகு பல கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

**(திரு. வினயகம் அவர்கள் எழுந்தார்கள்.)**



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களின் பெயரில் முதல் இரண்டு எழுத்துக்கள் "வின" என்று இருப்பதற்கு தகுந்தபடி வினவைக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I will abide by the ruling of the Chair. I will put only a short question.

Whereas the Government has got a set code for opennig of fair price shops, whereas I understand the Government's difficulty of paucity of rice and whereas I understand also that weaving centres are spread over in patches all over the State, considering at least their difficulty and the trouble they are now in, why should not the Government think of the possibility of opening fair price shops in those areas and thus go to their succour ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நெசவுத் தொழிலாளர்களுக்கு நியாய விலைக் கடைகள் திறக்கப்படுவது இல்லை என்பது போல உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அது உண்மையானது அல்ல. பெரும்பாலான நெசவுத் தொழிலாளர்கள் இதன் கீழ் வருகிறார்கள். 1¼ கோடி பேர்களுக்கு குடும்பக் கார்டு முறை அமலில் இருக்கிறது. சிற்சில இடங்களில் தவிர்க்கப்பட்டிருக்கலாம். நிலைமைக்கு தகுந்தபடி நடைபெற்று வருகிறது. நம் கையிருப்பு, தானிய கொள்முதல் அளவு, அங்குள்ள விலைவாசி ஏற்றம், பற்றுக்குறைத் தன்மை இவைகள் எல்லாம் கணக்கெடுக்கப்பட்டு முழு அதிகாரமும் கலெக்டருக்கு அளிக்கப்படுகிறது. அவர்கள் அவ்வப்போது ஒவ்வொரு வாரமும் அந்த நிலைமையைப் பரிசீலனை செய்து அரசாங்கத்துக்கு அனுப்புகிறார்கள். அவைகள் மீது முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 7 வினக்கள் இருப்பதால் இத்துடன் இவ் வினவிற்கான துணை வினக்களை முடித்துக் கொள்கிறேன். அடுத்த வின 275.

## RICE FOR KERALA STATE.

*275 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a quantity of 5,000 tons of rice has been sent to Kerala State during the month of August 1967 in response to the appeal of the Prime Minister ; and

(*b*) if so, whether the Government of India have supplied wheat in return ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) அரிசிக்குப் பதிலாக இந்திய அரசு 5,000 டன் கோதுமைப் பொருள்களை நமக்கு வழங்கியுள்ளது.

THIRU K. VINAYAKAM : May I know whether the Government of India supplies us wheat only when we supply rice to other States, or as a general rule they have got a standard of distribution of wheat whenever we need it for our consumption ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நாம் கேரளாவிற்கு அரிசி அனுப்புவதற்கும் கோதுமைப் பொருள்கள் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்படுவதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் நம்முடைய நெருக்கடியை உத்தேசித்து அவர்களிடமிருந்து சில அனுகூலங்களைப் பெற வேண்டு மென்ற முறையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களை 5,000 டன் அரிசி கேரளாவிற்கு அனுப்ப வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்

கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 5,000 டன் கொடுக்கிறோம். ஆனாலும், "எங்களுக்கும் சிரமமாக இருக்கிறது, அதற்கு ஈடாக கோதுமைப் பொருளாவது கொடுங்கள்" என்று கேட்டதன் காரணமாக அது உபரியாகப் பெற்ற ஒன்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேரள மாநிலத்திற்கு அரிசி கொடுப்பதைப் பற்றி மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் பாராட்டி எழுதிய கடிதத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" Dear Mr. Annadurai,

I am extremely grateful for your help. You have come to my rescue whenever I have any great difficulty in rice supply to Kerala"

என்று பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, I want to add to what the Minister for Food has stated. Even with regard to those 5,000 tonnes of wheat that the Government of India are allotting to us, it is being progressively reduced.

திரு. கரு. சீமைச்சாமி : பிரதம மந்திரி வேண்டுகோளுக் கிணங்க 5,000 டன் அரிசியைக் கேரளாவிற்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதைக் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபம் இல்லை. கேரளாவில் உபரியாக இருக்கும் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கேட்டுப் பெறுவதற்கு பேச்சு வார்த்தை தள்ளிக்கொண்டே வருகிறது. அதற்குப் பிரதம மந்திரி அவர்களிடம் சொல்லி, வீணாகப் போகும் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கேட்டுப் பெற வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரிசி கொடுத்துத் தண்ணீர் வாங்குவது பேரத்தின் கீழ் வரும். இந்த அரசு பேரம் செய்யத் தயாராக இல்லை.

Thiru R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether there has been any talk between the Government of Kerala and the Government of Madras regarding the transport of foodgrains across the Stat borders and if the answer is in the affirmative, will the Hon. Minister give details about it ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, I want a clarification of the question from the hon. Memeber. May I know, what he means by 'foodgrains' ?

Thiru R. PONNAPPA NADAR : Rice, wheat and other products.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : There is no such negotiation.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்குக் கொடுத்து வந்த கோதுமையின் அளவு படிப்படியாகக் குறைந்து வருகிறது என்று சொன்னார்கள். இதற்குக் காரணம் இந்த வருஷம் மிகக் குறைவாக மழை இருந்த போதிலும் நம்முடைய மாநிலத்தில் விளைச்சல் அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பதாலா ? பல பகுதிகளில் பஞ்ச நிலைமை இருந்தும் கூட அதை இந்த அரசாங்கம் எடுத்துச் சொல்லவில்லையா ? இதற்கு வேறு காரணம் என்ன ?



மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய மாநிலத்தில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலை வருவதற்கு முன்னாலேயே கோதுமை தரும் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலத்திற்குக் கோதுமை முன்பு கொடுக்கப்பட்டு வந்ததில் மூன்றில் ஒரு பங்கு தான் இப்பொழுது தரப்படுகிறது. 1966-ல் $1\frac{1}{2}$ லட்சம் டன் அளவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது தற்போது 50,000 டன் அளவு தான் கொடுக்கப்படுகிறது. இந்த மாநிலத்தில் உள்ள ஃப்ளவர் மில்களுக்கு 35 சதவீதம் கொடுத்து வந்தது கூட கடந்த இரண்டு வார காலமாக 25 சத வீதந்தான் கொடுக்கப்படுகிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் படிப் படியாக வெட்டு நடைபெற்று வருகிறது.

திரு. நா. காசிராமன் : கேரளாவுக்கு, அங்கு பற்றாக்குறையாக இருப்பதால் கொடுப்பதில் தவறு இல்லை. அதே சமயத்தில் தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு முழு மூச்சுடன் கொள்முதல் ஊக்கத்தோடு செய்யப்படுகிறதோ அந்த அளவுக்கு கேரளாவில் புரொக்யூர்மெண்ட் நடைபெற்று அதன் பிறகு பற்றாக்குறை ஏற்பட்டு அதை ஈடு செய்யக் கொடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இன்னொரு அரசின் நடவடிக்கை குறித்து இந்த மன்றத்தில் விவாதிப்பது சரியாக இருக்காது.

Thiru K. VINAYAKAM : Sir, arising out of the answer given by the Hon. Chief Minister, if the Centre is progressively reducing the supply of wheat that is needed for our State, what is the exact quantity of wheat which we need in our State and what are the causes which they are saying for this reduction and also what steps have the Government taken to press upon the Centre to get the supply of wheat at the standard rate ?

The Hon. Thiru C. N. ANNADURAI : One such measure of bringing pressure on the Government on this matter is raising questions here and getting answers and that is why I intervened. They have not assigned any reason for the reduction. As regards figures wanted by the hon. Member, the Minister for Food has already supplied it. Only one-third of what was supplied is now being given and as for the amount of consumption need, the hon. Member can draw the conclusion. We should have received 1,50,000 tonnes and that is the minimum that we need but it has been progressively reduced.

Dr. H. V. HANDE : Will the Hon. Minister tell us the quantity of rice that we are normally expected to give to Kerala annually ? Also in view of the fact that we are getting reduced quantity of wheat, will this Government at least press the Centre that in lieu of the rice that we are giving to Kerala, they should stepup the quantity of rice that we get from the Andhra Pradesh through the Food Corporation or direct negotiations so that that overall quantity of foodgrains is not reduced ?

The Hon. Thiru C. N. ANNADURAI : All these points have been brought to the notice of the Central Government.

### உரங்கள் வாங்கக் கடனுதவி

* 276 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு உரத்திற்காகக் கடன் கொடுக்கப்படுகிறதா ? ஆம் எனில் எவ்வளவு வரை ?

[1968 மார்ச் 21

(இ) அது பணமாகக் கொடுக்கப்படுகிறதா ? அல்லது உர மூட்டைகளை வாங்கிக் கொள்ள உத்திரவு பிறப்பிக்கப்படுகிறதா ?

(உ) யாரிடம் வாங்கிக் கொள்ளும்படி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) எருவிடும் முனைப்புத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு அரசு கடன் வழங்குகிறது. இக் கடன் அளவு ஏக்கருக்கு 35 ரூபாயிலிருந்து 510 ரூபாய் வரை உள்ளது. புகையிலை, மிளகாய், வேர்க்கடலை, பருத்தி, தென்னை முதலியன உட்பட பல்வேறு பயிர்களுக்குக் கடன் வழங்குவதும் இத் திட்டத்தில் அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஒவ்வொரு உழவருக்கும் சொந்தப் பிணையத்தின் மீது அதிக அளவுக் கடன் ரூ. 500 முதல் ரூ. 1,500 வரையிலும், மேற்கொண்ட பிணையங்கள் மீது அதிக அளவுக் கடன் ரூ. 750 முதல் ரூ. 1,750 வரையிலும் வழங்கப்படுகிறது.

(இ) கடன்கள் அனுமதிச் சீட்டுகள் வடிவில் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகளைக் கடன் பெறுவோர் அவருக்கு விருப்பமான ரசாயன உரம் வாங்கிக் கொள்வதற்கு அதிகாரம் பெற்ற எந்த வியாபாரியிடமும் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். கடன் ரொக்கமாக அளிக்கப்படுவதில்லை.

(உ) அதிகாரம் பெற்ற வியாபாரி எவரிடமிருந்தும், அதாவது ரசாயன உரம் அல்லது தரமான கலவை உரங்கள் விற்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளிலிருந்து அல்லது தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து உழவர்கள் உரத்தை வாங்கிக் கொள்ளலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விவசாயிகளுக்கு உரம் கண்டிப்பாக வாங்க வேண்டு மென்பதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. உரம் வாங்குவதற்குப் பணம் ஏழை விவசாயிகளிடம் இல்லை என்ற காரணத்தால் கடன் கொடுக்கப்படுகிறது. அப்படியானால் கடன் வாங்கினால்தான் உரம் கிடைக்கிறது என்பதற்காக வேண்டிய வசதி படைத்தவர்கள் முந்திக் கொண்டு அந்த உரங்களை வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வசதி இல்லாத விவசாயிகளுக்கு மட்டும் அந்த உரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாயிகளில் யார் யாருக்கு உரம் தேவையாக இருக்கிறதோ அவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கடன் வழங்க வேண்டுமென்ற காரணத்தால் கடன் வழங்குவதில்லை. உரத்தை வசதி படைத்தவர்களுக்குக் கொடுக்கக் கூடாது, ஏழைகளுக்கு மட்டும்தான் கொடுக்க வேண்டுமென்றால் ஏழைகளிடம் அதிகமான நிலம் இல்லை. வசதி படைத்தவர்களிடம்தான் அதிகமான நிலம் இருக்கிறது. அதிக நிலத்தில் சாகுபடி செய்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கும் போது யார் உரம் தேவை என்று கேட்டாலும் கொடுக்கப்படுகிறதே தவிர, அனாவசியமாகக் கொடுப்பதில்லை.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி:** இந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் உரக் கடனுக்காக அனுமதிச் சீட்டு வழங்குகிறார்கள். ரூ. 500 என்று குறிப்பிட்டு அதை கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்துச்செல்கிற நேரத்தில் அவர்கள் மூட்டைகளைக்கணக்கிட்டு ரூ. 460 என்று வந்தால் மீதி 40 ரூபாயை மீண்டும் யூனியன் கமிஷனரிடம் சென்று வாங்கவேண்டும் என்ற சங்கடம் இருக்கிறது. அதைப் போக்கும் வகையில் உரம் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மூட்டைகள் வழங்கிய பிறகு மீதமுள்ள தொகையையும் கூட்டுறவு சங்கமே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது மூட்டைகள் கணக்கில் கடன் தர ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தொகை அளவில்தான் கொடுக்கப்படுகிறது. மூட்டை அளவில் கொடுக்கப்படுவதில்லை. அப்படி ஏதாவது சங்கடங்கள் இருந்தால் அதைத் தெரிவித்தால் கூடுதலாக தங்கள் பர்ஸனல் ஷ்யூரிட்டி மீது கூடுதல் கடன் வசதி பெற வாய்ப்பிருக்கிறது.



1968 மார்ச் 21]

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** இப்போது உரத்திற்காக கொடுக்கப்படுகிற கடன் விவசாயிகளுக்கு விவசாய நேரத்தில் கிடைக்காமல் தாமதமாகக் கிடைப்பதாகவும், அந்தக் கிடங்குகளிலிருந்து கிடைக்கும் உரங்கள் கட்டிப்பட்டு இருப்பதாகவும் புகார்கள் வருகின்றன. அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தஞ்சை மாவட்டத்தில் இருந்து இத்தகைய புகார்கள் வருகிறது என்று கூறுவது அரசாங்கத்தைக் குறை கூறவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்கிறார்களே தவிர தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எந்த விவசாயியும் உரத்தட்டுப்பாடு இருக்கிறது. காலம் கடந்து வழங்கப்படுகிறது என்று சொல்வதில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கூடுதல் உரம் போதுமான அளவிற்கு தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலிருந்து இந்த மாதிரி குறைகள் வருவது என்பது உறுப்பினர் அவர்கள் மூலம் இப்போதுதான் தெரிகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** இந்தக் கடனைத் திரும்ப வசூலிக்கும்போது பணமாகவே வசூலிக்கிற முறை இப்போது இருக்கிறது. விளைபொருள்கள் வந்தவுடன் வியாபாரிகள் நெருக்கடி ஒரு பக்கம் அரசாங்கத்தின் நெருக்கடி ஒரு பக்கம் இருக்கிறது. இதனால் விவசாயிகள் தங்கள் புன்செய் விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய ஒரு நெருக்கடி இருக்கிறது. ஆகவே கடனுக்குப் பதிலாக விளைபொருள்களை விலைக்கு வாங்கும் முறையை அரசு அமுல் நடத்துமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது உரம் வாங்குவதற்குக் கடன் கொடுப்பது பற்றிய கேள்வி. உறுப்பினர் அவர்கள் விளைபொருள்களை அரசாங்கம் வாங்கும் விஷயமாகக் கேள்வி கேட்கிறார்கள். இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது.

**திரு. எஸ். முருகையன் :** 1968–69-ம் ஆண்டு மத்திய அரசிலிருந்து எவ்வளவு உரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? 1966–67-ல் மத்திய அரசிலிருந்து எவ்வளவு உரம் கொடுக்கப்பட்டது ? இதற்கும் அதற்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1966–67-ல் இந்த ராஜ்ய அரசு கேட்ட உரத்திற்கு பாதி அளவுதான் கொடுத்தார்கள். அதில் 15,000 டன் குறைவாகவே கொடுத்தார்கள். 1967–68-ல் 1,63,000 டன் நைட்ரஜன் கேட்டோம். மத்திய அரசு 1,04,000 டன் கொடுப்பதாக வாக்குறுதி அளித்து இதுவரை 84,000 டன் வழங்கியிருக்கிறார்கள். மீதி வர வேண்டியது இந்த மாத இறுதிக்குள் 20,000 டன் வரும். 1968–69-க்கு 2,40,000 நமக்குத் தேவைப்படுகிறது.

**திரு. இல. பலராமன் :** விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன் பயிர் விளைச்சலின் பேரில் மூன்று மாதத் தவணைகளில் அரசாங்கம் கடனாக வழங்குகிறது. இதை ஒரு ஆண்டு நீடிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? மத்திய சர்க்கார் ஸ்டேட் பாங்கு மூலம் கடன் வழங்கலாம் என்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா? அதை விஸ்தரிக்க மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** குறுகிய கால அளவில் கடனைத் திருப்பிக் கொடுத்தால்தான் மீண்டும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்ய வாய்ப்பிருக்கிறது. இதில் திருப்பிக் கொடுக்க காலதாமதம் ஏற்பட்டால் விவசாயிகளுக்குக் கூடுதல் வசதி செய்வது குறையும்.

**புலவர் க. முருகையன் :** சென்ற ஆண்டு தஞ்சையில் உரத் தட்டுப்பாடு இல்லாமல் காலத்தில் தரப்பட்டது. அதேபோல் வரப்போகிற ஆண்டிலும் கவனத்தோடு தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அடுத்த ஆண்டு வேண்டிய உரம், அமோக விளைச்சலைப் பொறுத்து இப்போதே ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது. உரத் தட்டுப்பாடு நிச்சயமாக தஞ்சை மாவட்டத்தில் வராது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதிகமாக நெல் வைத்திருக்கிறவர்களுக்கும் உரம் கொடுக்க வேண்டும், குறைவாக வைத்திருக்கக் கூடியவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அதில் ஆட்சேபணையில்லை. அதிகம் வசதி படைத்தவர்கள் பல பேர்கள். உரத்தை வாங்கி வைத்துக் கொண்டு, யார் பேரில் வாங்குகிறார்களோ அவர்கள் நிலத்தில் சாகுபடி செய்யாத நிலையிருக்கிறது. அவர்கள் கள்ள மார்கெட்டில் விற்கக் கூடிய நிலை இருப்பதால் சிறிய விவசாயிகள் கள்ள மார்க்கெட்டில் வாங்கும் நிலை இருக்கிறது. ஆகவே உரம் வாங்கக் கூடியவர்கள் அந்த நிலத்தில் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னால் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவிற்கு நிலைமையில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரசாயன உரம் ஒரு சில வசதி படைத்தவர்களுக்கு மட்டும் தான் ஏற்கனவே கொடுத்துக் கொண்டிருந்தது. மத்திய தர விவசாயிகளுக்கும், அடித்தளத்தில் உள்ள ஏழை விவசாயிகளுக்கும் கிடைக்காத ஒரு நிலை இருந்தது. அதைத் தவிர்க்க கார்ட் முறையைக் கொண்டு வந்து எல்லோருக்கும் உரம் கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் சிலயிடங்களில் தவறுகள் ஏற்பட்டால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். பலர் உரத்தை வாங்கி தங்கள் சுய நலத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி பணக்காரர்கள் வசதி அடையாதபடி தவிர்க்க வழி இருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை** அவர்கள் எழுந்தார்கள்.

**Mr. SPEAKER :** There shall be no imputation in a question. புகார் என்று சொல்லாமல் வினாவைப் போடுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்வியைத் தவறாகப் புரிந்து கொண்டு பதில் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்லக் கூடாது...... உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு அமைச்சர்கள் விடை அளிக்காமலும் இருக்கலாம். வேறு விதமாகவும் விடை அளிக்கலாம், ஒன்றைக் கேட்டு வேறு பதிலைக் கொடுக்கவும் உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் வினாக்களைத் தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு, அறிந்து கொண்டுதான் விடை அளிக்கிறார்கள் என்றுதான் நீங்கள் கொள்ள வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** உரங்கள் கட்டிபட்டு இருப்பதாகச் சொன்னேனே தவிர உரத் தட்டுப்பாடு இருப்பதாக கூறவில்லை. இன்று காலையில் வந்த ஒரு விவசாயிகூட அந்தப் புகாரைச் சொன்னார். அரசாங்கத்தின் மீது குறை கூற வேண்டுமென்ற கருத்தில் நான் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புகார் என்ற வார்த்தையை விட்டுவிட்டு, உரங்களில் கட்டி விழுந்திருப்பது பற்றி அமைச்சரவர்கள் விடை அளியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியைப் புரிந்து கொண்டுதான் நான் பதில் கூறினேன். உரம் கட்டியாக இருக்கிறதா என்று கேட்டார்கள். அந்தமாதிரியான புகார்கள் அங்கத்தினரிடமிருந்துதான் வருகிறது என்றேன். உரத் தட்டுப்பாடு இல்லை என்றும் சொன்னேன். தட்டுப்பாடு என்பதற்கும், கட்டியாக இருக்கிறது என்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொண்டுதான்





பதில் அளித்தேன். அவர் புரிந்து கொள்ளாமல் கேள்வி கேட்பதற்காக நான் வருந்துகிறேன். அவர்கள் நான் புரிந்து கொள்ளாமல் சொல்வதாகச் சொல்வது தவறு. அந்தமாதிரி உரங்கள் எங்கும் கட்டியாகி விடவில்லை.

**Thiru K. VINAYAKAM :** On a point of order, Mr. Speaker Sir. The rules are very clear. The Ministers are supposed to know our questions. They can answer, they can avoid, they can evade, *mazhuppal* also they can do. But they cannot insult the Members by saying that we have not understood. We are bound by some rules. When we cannot insult the Ministers, how are they in order in insulting us that we do not understand, that we are deaf, that we are short of hearing ? They cannot insult us. Beyond a reasonable limit, they cannot do this kind of thing.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை நான் புரிந்து கொள்ளாமல் பதில் சொன்னதாகச் சொன்னதற்காகச் சொன்னேன். எந்த அங்கத்தினரையும் புண்படுத்தும்படி பதில் சொல்கிறவன் அல்ல நான் என்பதை திரு விநாயகம் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள்தான் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு தரப்பிலும் குற்றச்சாட்டு வேண்டியதில்லை என்பது என் கருத்து.

**சென்னை பெரிய மருத்துவ மனையில் செவிலியர்கள்.**

* 277 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை விகிதாசாரப்படி Staff Nurses நியமிக்கப்பட்டுள்ளனரா ?

(இ) இல்லை எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) and (இ). தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி அரசாங்க மருத்துவ மனைகளில் செவிலியர்கள் (Staff Nurses) அங்கீகரிக்கப்பட்ட படுக்கைகளின் விகிதாசாரப்படியே நியமிக்கப்படுகிறார்கள். மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை விகிதாசாரப்படி நியமிக்கப்படுவதில்லை. 1,266 படுக்கைகளைக் கொண்ட சென்னை அரசினர் பெரிய மருத்துவமனை 83 செவிலியர்கள் மட்டுமே பெறத் தகுதியுடையது. எனினும் தற்போது அங்கு வேலை செய்யக்கூடிய செவிலியர்களின் எண்ணிக்கை 169 ஆகும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, நோயாளிகள் அதிகமாகயிருப்பதாலும், இருக்கின்ற செவிலியர்கள் குறைவாகயிருப்பதாலும், இருக்கின்ற நோயாளிகளைக் கவனிப்பதற்கு முடியவில்லை. ஆகவே மு.ப 10-00 இப்பொழுதிருக்கின்ற எண்ணிக்கையை விட இன்னும் அதிகமாக அவர்களை நியமிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அத்தகைய உத்தேசம் தற்பொழுது இல்லை.

**Dr. H. V. HANDE :** Sir, with regard to the Staff Nurses, are the Government aware of the fact that many of these Staff Nurses when they join the training course, have a particular age and after

four years training they become over-aged. So they are not getting an opportunity to serve elsewhere because of over-age. Also, there is a contract with the Government and because of this contract they are not able to get private employment. This unfortunate situation is there for the last so many years and so, will this Goverment re-examine the matter and see that conditions of their entry into service and contract are liberalised.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I want notice.

**திரு சி. கோவிந்தராசன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரிய மருத்துவ மனைகளில் வேலை செய்யக்கூடிய திருமணமான ஆண் நர்ஸ்களுக்கு "ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ்" கொடுக்கும்பொழுது, அதே மாதிரி திருமணமான பெண் நர்ஸ்களுக்கு "ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ்" கொடுக்கப்படாமல் இருப்பது அரசினருக்குத் தெரியுமா? அந்தப் பாகுபாட்டைப் போக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், தற்சமயம் ஸ்டாஃப் நர்ஸ் கோர்ஸ் பாஸ் செய்தவர்களில் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்தத் தகவல் தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவரவர்களே, நர்ஸ் கோர்ஸ் பாஸ் செய்த தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், பிற்பட்ட வகுப்பினரும் நீண்ட நாட்களாக வேலையில்லாமல் குடும்பங்களை நடத்தக் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுத்து, லீவ் வேகன்ஸிகளில் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஊ. துரைசாமி :** தலைவரவர்களே, சென்னை மருத்துவ மனையில் 83 செவிலியர்கள் போடுவதற்குப் பதிலாக 169 பேரைப் போட்டிருப்பதாக அமைச்சர்வர்கள் தெரிவித்தார்கள். அதே போன்று கோவை மருத்துவ மனையிலும் அந்த அளவிற்கு எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினரவர்கள் தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவரவர்களே, இப்பொழுது நர்ஸ் வேலைப் பயிற்சிகளுக்குப் பெண்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் சில குறிப்பிட்ட பகுதிகளில் பணியாற்றுவதற்கு ஆண் நர்ஸ்களும் தேவைப் படுவதால் இனிமேலாவது நர்ஸ் வேலைப் பயிற்சிக்கு ஆண்களைச் சேர்த்துக் கொள்வது குறித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தேவையில்லை என்று எற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பெண் செவிலியர்கள் சிறப்பாகப் பணி புரிகிறார்கள் என்று கருதப்படுகிறது. தற்பொழுது ஆண்களைச் சேர்க்கும் உத்தேசமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அரசாங்கச் சட்டப்படி 10 படுக்கைகளுக்கு ஒரு நர்ஸ் என்னும் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. ஆனால் 100 படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகளில் 500 நோயாளிகள் இருக்கிறார்கள் அத்தனை பேர்களையும் கவனிப்பதற்கு மருந்து கிடையாது, ஆஸ்பத்திரியின்



அளவு கிடையாது என்னும் நிலையிருக்கிறது. தனியார் ஆஸ்பத்திரிகளில் போதுமான வசதியிருப்பதால்தான், இங்கே போதுமான வசதியில்லாத காரணத்தால்தான் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு நல்ல பெயர் கிடைக்கும் நிலையிருக்கிறது. அதை மாற்றியமைக்கக்கூடிய அளவிற்கு 5 பெட்களுக்கு ஒரு நர்ஸ் என்று அமைக்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தனியாகக் கேள்வி ஒன்றை விளக்கமாகப் போட்டால் மிகத் தெளிவாகப் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மருந்தைப்பற்றியெல்லாம் கேட்டது மூல விடைக்கு ஒட்டுறவில்லாதது. அடுத்து, தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**தேனியிலுள்ள காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம்**

*266 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரிய குளத்திலிருந்து மாவட்ட துணைப் போலீஸ் அதிகாரி (Deputy Snperintendent of Police) அலுவலகத்தைத் தேர்தலுக்கு முன்னால் தேனிக்கு மாற்றியதற்கான காரணங்கள் யாவை?

(இ) மீண்டும் பெரியகுளத்திற்கே அவ்வலுவலகத்தை மாற்றும் உத்தேசம் எதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) காவல்துறை துணைக் கண்காணிப்பாளரின் (Deputy Superintendent of Police) தலைமை அலுவலகம் நிர்வாக வசதியை முன்னிட்டு பெரியகுளத்திலிருந்து தேனிக்கு மாற்றப்பட்டது.

(இ) இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, தேனி தொகுதியில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி வெற்றி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு அவ்வாறு மாற்றப்பட்டதாகப் பொதுமக்கள் கொண்டிருக்கும் கருத்தை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்பொழுது உறுப்பினரவர்கள் சொல்வதிலிருந்து அப்படி ஒரு கருத்து இருப்பதை நான் அறிகிறேன்.

DR. H. V. HANDE: Will the Hon. Chief Minister tell us the exact date on which this transfer was effected and the exact reasons for the transfer and whether it was done with a political motive or due to administrative difficulties ?

THE HON. THIRU C. N. ANNADURAI: The Hon. Member knows that even if there are political motives, it could not be explained and it would be more patent when I tell the date. It took place on 14th July 1966.

*Fire accident in Sivashanmugapuram.*

*267 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) the extent of damages caused due to the fire accident in Sivashanmugapuram, Teynampet, Madras, on 1st July 1967; and

(b) the reasons for the fire accident ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) 135 குடிசைகள் எரிந்துவிட்டன. கிட்டத்தட்ட 1,500 பேர் வீடிழந்தனர், இதனால் ஏற்பட்ட சொத்து இழப்பு ரூ. 32,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) சென்னை மாநகரத் தீ விபத்துக்கள் குறித்து நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலர் இது குறித்து புலனாய்வு செய்து ஒரு அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார்.

**Dr. H. V. HANDE**: Sir, what is the area of that particular place in Sivashanmugapuram where this fire accident took place and whether this Ministry contemplate to rehabilitate these people in that area by building some houses if that area belongs to that particular cheri and not to a private person ? Also, will the Government immediately build temporary sheds to rehabilitate these people ?

**The Hon. Thiru C. N. ANNADURAI**: The question of rehabilitating them or building new hutments for them is under the active consideration of the Government. We are thinking whether to build these houses at the same place or to select some other site an build multi-storeyed buildings as tenements.

**Thiru T. MARTIN**: Sir, may I request the Hon. Chief Minister to place that report on the table of the House if it is not relating to any matter which is considered to be *sub judice*.

**The Hon. Thiru C. N. ANNADURAI**: The question of the hon. Member consists of two parts. The latter part answers the first.

**திரு. பெ. சீனிவாசன்** : சார், சிவஷண்முகபுரத்தில் நேர்ந்த தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அவர்களிலே பலர் திராவிட முன்னேற்றக் கழகப் பற்றுள்ளவர்களாக இருக்கலாம்; பலர் காங்கிரஸ் பற்றுள்ளவர்களாக இருக்கலாம்; ஆனால் எல்லோரும் ஏழைகள்.

**திரு. வ. ஜார்ஜ்** : அவைத் தலைவரவர்களே, அந்த அறிக்கையில் தீ விபத்துக்களுக்கான காரணங்கள் என்ன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இது சர்க்கார் சொல்ல வேண்டாமென்று விரும்புவதைச் சொல்லும்படியாகத் தூண்டுவது. இதற்கு நான் சுலபத்தில் பலியாவது இல்லை.

**திரு. கே. சகாதேவக் கண்டர்** : மதிப்பிற்குரிய சபாநாயகரவர்களே, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 135 குடிசைவாழ் மக்களுக்கு அரசாங்கம் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டு விட்டதா ? அவர்களுக்கு அரசாங்கமே வீடு கட்டிக் கொடுக்க முன்வருமா ? ஆமெனில் எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அதற்காக நியமிக்கப் பட்டிருக்கின்ற தனி அலுவலர்கள் இப்பொழுது எந்த முறையில் கட்டுவது, எந்த இடத்திலே கட்டுவது என்பதைப் பற்றித் தீவிரமாகச் செயல்பட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த வேலை துவங்கும்.



**Thiru K. VINAYAKAM**: May I know whether the land on which Sivashanmugapuram stands belongs to the Government or the Corporation or a private person ? Is the Minister aware of the fact that the slum dwellers, having been used to live in hutments are not in favour of multi-storeyed buildings and multi-storeyed building with an investment of a large capital will not be properly utilised, will the Government think of the possibility of constructing hutments and drop the idea of multi-storeyed tenements ?

**The Hon. Thiru C. N. ANNADURAI**: The question is of a general nature. In a city like Madras where there is paucity of land, we will have necessarily to go up. As for the fact that they are not willing to live in multi-storeyed tenements, my hon. Friend can go to Teynampet and find out that many multi-storeyed tenements are occupied. As for the fact whether the land on which Sivashanmugapuram stands belongs to the Corporation or a private individual or the Government, that is not the point under consideration. The only point under consideration is whether separate houses can be built and whether there is land available for that. On the understanding that it will be better to fix up multi-storeyed buildings because of paucity of land, the Government have already selected a place and work will be started soon.

### தாற்காலிகத் துணைக் கலெக்டர்கள்.

*268 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1964 முதல் 1967 வரையில் தாற்காலிகமாக உள்ள டெப்டி கலெக்டர்கள் எத்தனை பேர் பதவி இறக்கம் செய்யப்பட்டார்கள் ? அதற்கான காரணம் யாது ?

(இ) தாற்காலிகமாக வேலை செய்த டெப்டி கலெக்டர்களை நிரந்தரமாக்குவதற்குப் பதிலாக வேறு புதிய நபர்கள் நிரந்தரமாக நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்பது உண்மையா ?

(உ) இதற்கான காரண மென்ன ?

(எ) அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிர்வாகச் செலவைச் சிக்கனப்படுத்துவதற்காக 36 துணைக் கலெக்டர் பதவிகள் 1967 மார்ச்—ஏப்ரலில் நீக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, 36 தாற்காலிகத் துணைக் கலெக்டர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய பதவி இறக்கம் எதுவும் 1964–1966 ஆண்டுகளில் செய்யப்படவில்லை.

(இ) and (உ), (எ) அவ்வப்போது முறையாகவும் தாற்காலிகமாகவும் நியமிப்பதற்காக, துணைக் கலெக்டர்கள் பட்டியல் தனியே தயாரிக்கப் படுகிறது. முறையான பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளோர், தாற்காலிகப் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளவர்களைவிடப் பிந்திய ஆண்டுகளில் அவ்வாறு சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுடைய பணியே முதலில் முறைப்படுத்தப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், நல்ல அனுபவம், அதாவது எக்ஸ்பீரியன்ஸ் உடைய அதிகாரிகள் இந்த டெபுடி கலெக்டர் பதவியிலே நியமிக்கப்பட்டு, அதற்குப் பிறகு மீண்டும் தாசில்தாராக அனுப்பப் பட்டிருக்கிறார்கள். என்றாலும், மீண்டும் அப்படி டெபுடி கலெக்டர்கள் தேவை என்கின்ற நிலைமை ஏற்படும்பொழுது படித்துவிட்டு நேரடியாக வரக்கூடியவர்களை அந்த டெபுடி கலெக்டர்களாக நியமிப்பதற்குப் பதிலாக

இந்த அனுபவம் உடைய, ஏற்கெனவே வேலை செய்த அவர்களையே ஏற்றுக்கொள்ள உத்தேசம் உண்டா? அல்லது படித்துவிட்டு வரக்கூடிய புதிய நபர்களை எடுப்பதாக உத்தேசமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** டெபுடி கலெக்டர்கள் பட்டியல் ஒரு முறைப்படி சர்க்காரால் தயாரிக்கப்படுகிறது. அது சர்க்காரிடத்திலேயுள்ள இரகசியமான தஸ்தாவேஜுகளிலே ஒன்று. ஆகையால், அது சம்பந்தமான விளக்கங்களை அளிக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, முன்பெல்லாம் மாவட்ட வளர்ச்சிக் குழுவுக்காக ஒரு தனி உதவியாளர் இருந்து அதை கவனித்து வந்தார். இப்பொழுது இரண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுக்களுக்கு ஒரு தனி உதவியாளர் இருப்பதனால் அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சிக் குழுவுக்கும் ஒரு தனி உதவியாளரை நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சிக்கன நடவடிக்கையின் பேரிலே சில அதிகாரிகளுடைய பதவி குறைக்கப்பட்டிருக்கிறது. அப்படி குறைக்கப்படுகிறபொழுது அதனாலே வேலை பாதிக்கப்படுவதாக கனம் உறுப்பினர் அவர்கள் கருதுவதைப்போல, சர்க்கார் கருதுவதற்கு ஆதாரங்கள் இருக்குமானால் நிலைமை மறு பரிசீலனை செய்யப்படும்.

DR. H. V. HANDE: While we are grateful to the Chief Minister for giving us the assurance that first preference will be, given to the 36 temporary Deputy Collectors who have been reverted will he be able to tell us how many of these reverted Deputy Collectors were taken back during the last one year 1967-68?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not have the figures at present.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டு டெபுட்டி கலெக்டர்களுடைய லிஸ்டை அரசாங்கம் ஃபைனலைஸ் (Finalise) பண்ணிவிட்டதா? அப்படி ஃபைனலைஸ் (Finalise) ஆகவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் ஏற்கெனவே சொன்னபடி டெபுட்டி கலெக்டர் பட்டியல் தயாரிக்கப்படுவது சர்க்கார் தனியாக கவனித்து செய்கின்ற காரியம். அதனுடைய விவரங்களை வெளியிடுவது நல்லதல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த 36 துணைக் கலெக்டர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு புதிதாக நேரடியாக எத்தனை பேர் அந்த வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்கான விவரம் இல்லை.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் பதவி இறக்கம் செய்யப்படுவதனால் உற்சாகம் குன்றிப் போகிறார்கள் என்று அரசு உணருகிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பதவி உயர்வு ஏற்படாததால் கூட பலர் உற்சாகம் குன்றுவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால், தனி நபருடைய உற்சாகத்திற்கு சர்க்கார் சில காரியங்களை மேற்கொள்ளுவதற்கில்லை.



**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நீண்ட நாட்களாகவே சேவை செய்தவர் பட்டியல் இரகசியமாக இருக்கிறது; அதை சொல்ல முடியாதென்று சொன்னார்கள். ஆனால், ஓய்வு பெறக்கூடிய காலத்தில் வயிறெரிந்து போகாமல் இருக்க அவர்களுக்கு இறுதிக் காலத்திலாவது அந்த டெபுட்டி கலெக்டர் பதவியை மீண்டும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் இதை கவனத்தில் வைத்துக்கொண்டு, பல அதிகாரிகள் வயிறு எரியும்படியாக இனி பேசாமல் இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும்.

THIRU K. VINAYAKAM: What were the compelling or reasonable reasons for reverting the Deputy Collectors under reference and after the Government have taken a stand under the circumstances, why should they go back on that stand?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நான் அளித்த பதிலில் வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிர்வாகச் செலவைச் சிக்கனப்படுத்துவதற்காக இது செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதுதான் பிரின்சிபிள். அதுதான் முக்கியமான காரணம்.

### லஞ்ச ஊழல் வழக்குகள்.

* 269 வினா—திரு கரு. சீமைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டில் எத்தனை கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் மீதும் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் மீதும் லஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது?

(இ) அதன் காரணமாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) ஒவ்வொரு பிரிவிலும் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**

| | அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்கள் | அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்கள். |
|---|---|---|
| (அ) 1966-ம் ஆண்டில் லஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை. | 8 | 79 |
| (இ) தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை. | 6 | 66 |
| (உ) தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | ஒருவருமில்லை | 8 |

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த லஞ்ச ஊழல் வழக்குப் பதிவு செய்யப்பட்டவுடனே அந்த அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஆனால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஒரு வருஷமாகியும் கூட முடிவு காண முடியாத நிலையிலே இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வழக்குகளை தீர்ப்பதற்கு 2, 3 மாதங்கள் என்று காலவரை கொடுத்து, அதற்குள் முடிப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு உள்ளதைப் போலவே எனக்கும் கூட அதிலே மனக்குறை உண்டு. கூடுமான வரையில் அந்த விசாரணையை விரைவு படுத்த வேண்டுமென்று சொல்வதோடு, காலதாமதம் ஆவதையும் தவிர்க்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டு வருகிறேன்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இந்த லஞ்சம் பொதுவாக சமூகத்திலும், அதிகாரிகளிடமும் பரவலாக இருப்பதைத் தடுக்க இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று தெரியவில்லை. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதற்கு ஏதாகிலும் செயற்குறிப்பு அரசினிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தடுப்பு முறையைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். தடுப்பு முறைகளுடைய வெற்றி சர்க்காரிடத்தில் மட்டும் அல்ல, சமூகம் முழுவதிற்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, லஞ்ச ஊழல் பரவுவதற்குக் காரணம் சிவப்பு நாடா முறைதான் என்ற ஒரு கருத்து இருக்கிறது. எனவே, சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இங்கே உள்ள பல கட்டுகளில் சிவப்பாக உள்ளவை எல்லாம் பழுப்பாக ஆகிக்கொண்டு வருகின்றன.

DR. H. V. HANDE : Will the Chief Minister tell us the norms observed by the Government whenever a case of curruption is brought or a charge of corruption is made ? As soon as a charge is made, is there any standard procedure to be followed and if there is, will the Chief Minister tell us what the standard procedure is so that we may know how much time it normally takes ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would like to have a separate question on that to give a detailed answer. But to give a general answer, I will say that whenever a complaint is received, discretionary enquiries are made and, when a *prima facie* case is established, it is sent to some tribunal.

In reply to the question by the other hon. Member, I say that, when the Tribunal is not expediting matters, the Government urge that they should be expedited.

**திரு. டி. மார்டின் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் 8 கெஜட்டெட் பதவி வகிப்பவர்களின்மீதும், 79 கெஜட் பதிவு இல்லாத ஊழியர்கள் மீதும் வழக்கு நடப்பதாகச் சொன்னார்கள். இந்த டிரிப்யூனல் நடத்தக்கூடிய விசாரணையை பொது மக்கள் வந்து பார்க்கக்கூடிய அளவுக்கு ஒரு பப்ளிக் என்கொயரியாக நடத்துவது என்ற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படிப்பட்ட உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. அப்படிப்பட்ட விருப்பம் கனம் உறுப்பினருக்குக் கூட ஏற்படாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சங்க காலத்தில் ஒற்றர் முறை சிறப்பாக இருந்த காரணத்தினால்தான் லஞ்சம் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அந்த ஒற்றர் முறையை சிறப்பாக்க புதிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சங்க காலத்தில் தப்பு சாட்சியம் சொல்லக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தான் வள்ளுவர் கூட தப்பு சாட்சியம் சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள் என்று கருதுகிறேன்.





**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டவர்களுடைய பெயர் பட்டியல் தரலாமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்த விவரம் என்னிடம் இல்லை. அந்தப் பெயர் பட்டியலை அறிந்துகொள்வதினாலே தனி ஆதாயம் எதுவும் சமூகத்திற்கு ஏற்படாது.

**திரு ஆலடி. அருணா :** லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு, அதன் மூலம் தண்டிக்கப்பட்டவர்கள் எவ்வளவு லஞ்சம் வாங்கினார்களோ, எவ்வளவு லஞ்சம் வாங்கினார்கள் என்று நிரூபிக்கப்பட்டதோ அந்தத் தொகையை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கும், அவர்களுடைய சொத்தை பறிமுதல் செய்வதற்குமான அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்காக சட்டம் இயற்றுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சில சந்தர்ப்பங்களில் அந்தப் பணத்தை திருப்பிச் செலுத்துகின்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள். திருப்பிச் செலுத்தியிருந்தும்கூட, அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

**திரு. கே. என். குமாரசாமி :** லஞ்சக் குற்றம் பெருகுவதற்குக் காரணம் சமுதாயத்தில். இருக்கிற வருவாய் வித்தியாசம் தான். அதைத் தடுத்து சமமான நிலை கொண்டுவருவதன் மூலம் இந்த லஞ்சம் ஒழிக்கப்படும் என்பதை அரசு உணருகிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்காகத்தான் கனம் உறுப்பினர் அவர்களுடைய கட்சி வேலை செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப் படுவதை நான் உணர்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், இந்த ஊழலை உடனுக்குடன் போக்கக்கூடிய அளவுக்கு ந வடிக்கை எடுக்காத காரணத்தினால், கெஜட்டெட் அதிகாரிகள் என்று சொல்லக்கூடியவர்களின் ஊழலை அப்படி நாள் கடத்திக்கொண்டு போய், பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியில் அது வருகிற நேரத்தில், அவர் தப்பித்தவறி ஒருவேளை 'காலமாகிவிட்டார் என்ற நிலை ஏற்பட்டால், அப்பொழுது காலமாகிவிட்டார், வஜா செய்யப்படுகிறது என்கின்ற அளவுக்கு வருகிறதே நிலைமை, ஆகவே, எந்த ஊழலாக இருந்தாலும் சரி, ஒரு வருட காலத்திற்குள்ளாக அதை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்குச் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதின் முன்பகுதியில் எனக்கு அனுபவம் இல்லை. ஏனென்றால் நான் வந்தே ஒரு வருடம்தான் ஆகிறது. மற்ற பகுதி, அதாவது அதை விரைவு படுத்தவேண்டும் என்ற பகுதியை நான் முழுக்க ஒப்புக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஒரு அதிகாரி மேல் ஏதாவது லஞ்சப் புகார் இருக்குமானால், அந்தப் புகார் அதே அதிகாரியின் கைக்கு விசாரணைக்கு வருகிறது. அப்படிப்பட்ட புகார்களை விசாரிக்க வேறு ஒரு அமைப்பு அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர்கள் சொல்லுவது முழுவதும் சரியல்ல.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** உதாரணமாக ஒரு எஸ். ஐ. மேல் இப்படிப்பட்ட புகார் அனுப்பினால் யார் மீது அந்த புகார் கூறப்பட்டதோ அதே எஸ்.ஐ-க்கு அந்த பேப்பர் வந்து, யாரால் புகார் கூறப்பட்டதோ அவரையே அந்த மனுவின் பின்புறத்தில் நான் எழுதியது தவறு என்று எழுதி வாங்கி மேலிடத்துக்கு அனுப்பிவிடுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட புகாரை விசாரிப்பதற்கு வேறு ஒரு தனி அமைப்பு வேண்டும் என்று நான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது சாதாரணப் புகார்களைப் பற்றியது. அதை அவர்களுக்கே அனுப்பி அவர்களுடைய பதிலை பெற்றுக்கொள்வது, அத்தோடு விசாரணை முடிவடைந்து விடுகிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் கருதத் தேவையில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whenever an officer is suspected of some corruption charge, the Vigilance organisation is set upon to track them. But what is the *modus operandi* which the Government have got to keep the Vigilance organisation above suspicion.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, at some end or some place, we should place implicit confidence?

**திரு. இரா. நாராயணன் :** கெஜடெட் பதவி இல்லாத ரூ. 200-க்கும் குறைந்த சம்பளம் வாங்குகிற ஊழியர்களை இன்ஸ்பெக்டர் அவர்கள் பதிவு செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது பரிந்துரை இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பப்பட்டதா ? எந்த அரசாங்கம் அனுப்பப்பட்டது ? அல்லது இந்த அரசாங்கம் அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த அரசாங்கம் அனுப்பப்பட்டது என்று கேட்கிறார், ஏதாவது அரசாங்கம் அனுப்பப்பட்டிருந்தால், பதில் சொல்லலாம். எந்த அரசாங்கமாவது எங்கேயாவது அனுப்பப்பட்டதா?

(விடை இல்லை)

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த லஞ்ச ஒழிப்பு கிரைம் பிராஞ்ச் ஸி.ஐ.டி. போலீஸ் இலாகாவில் இணைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது லஞ்சப் பிரிவுக்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா, அல்லது பழைய நிலைமையே தான் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படிப்பட்ட ஒப்பிட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் வரவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** லஞ்ச ஊழல் எந்த மட்டத்தில் ஏற்பட்டாலும், விளைவுகள் மோசமாகும். இருந்தாலும், கெஜடெட் ஆபிஸர்களின் மேல் ஏற்படுகிற புகார்கள்தான் சமூகத்தில் ரொம்ப விளைவை உண்டாக்குகிறது. விஜிலன்ஸ் கமிட்டி அவர்களை அணுகுவதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி, இம்மாதிரி லஞ்சப் புகார்களைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் கெஜடெட் பணியாளர்களைப் பற்றிய புகார்களை விசாரிப்பதில் தயக்கம் இருப்பதாகச் சொன்னதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட கெஜடெட் பதவி பெற்ற அதிகாரிகளின் பேரிலும் முறையாக விசாரணைகள் நடைபெற்று நடவடிக்கைகள் கூட எடுத்துக்கொண்டதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (i) மதுரை மாவட்டத்தில் கைத்தறித் துணிகள் தேக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப்பேரவை விதி எண் 42-ன் கீழ், கீழ்காணும் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டி ஓர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்:—





" மதுரை மாவட்டத்தில் தயாரான ரூ. 1 கோடி மதிப்புள்ள கைத்தறி வேட்டிகளும், கைத்தறி சேலைகளும் ஏற்றுமதியாகாமல் தேங்கி சுமார் 10 ஆயிரம் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை. "

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட இந்தி மொழிக் கிளர்ச்சியின் காரணமாக தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி வேஷ்டிகளையும் கைத்தறி சேலைகளையும் வட பகுதி மாநிலங்களிலுள்ளவர்கள் வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அதனால் அவைகள் தேங்கி, நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் உதவித் தொகையை வட நாட்டினர்கள் கொடுக்கவும் மறுக்கிறார்கள். இதன் காரணமாக, தமிழகம் பூராவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் பூராவிலுமுள்ள நெசவாளர்கள் பற்றிய பிரச்னை இது. இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்குட்பட்ட பிரச்னை என்று சொல்வதற்கில்லை. ஆகவே, இந்த அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தத் கைத்தறி துணிகளைப் பொறுத்தவரையில், தேக்கம் ஏற்பட்டது திடீரென்று புதியதாக இப்பொழுது மட்டும் ஏற்பட்டிருக்கிற ஒன்று அல்ல, ஆண்டுதோறும் ஏற்பட்டு வருகிற ஒன்றுதான். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமோ அவைகளை முறைப்படி இந்த ஆண்டும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 2½ அல்லது 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. அதற்காகத்தான் சமீபத்தில்கூட கைத்தறிக் கண்காட்சி, கைத்தறி வார விழாக்களெல்லாம் கொண்டாடப்பட்டன. மேலும், இவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, அல்லது வேறு வகையிலே எப்படிச் செலவழிப்பது என்பது பற்றியெல்லாம் கைத்தறி இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்கள். இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட அன்றாட நடவடிக்கையாக இருப்பதினாலும், இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிப்பதின் மூலம் ஒரு முடிவு காண்கிற நிலை ஏற்படாது என்பதாலும், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாலும், இதைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 41-ன் கீழ் அறிவிக்கை கொடுத்திருந்தால், ஒரு வினா கேட்கலாம். இத்தீர்மானத்தை விதி 42-ன் கீழே கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் வினா கேட்கவில்லை. நான் முன்னால் கூறியதுபோல, பல ஆயிரக்கணக்கான நெசவாளர்களுடைய பிரச்னை இதில் அடங்கியிருப்பதால், அரசு ஒரு தனி அதிகாரியையோ அல்லது தூதுக் குழுவையோ பிற மாநிலங்களுக்கு அனுப்பி உடனே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகைகள் காண வேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணையை நான் வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### (ii) மதுரையிலிருந்து சென்னைக்கு விமான மூலம் மல்லிகைப்பூ அனுப்ப இயலாமை.

**திரு. கரு. சீமைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ், இன்றைய அலுவலை ஒத்தி வைத்து, கீழ்க்கண்ட உடனடி முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக அறிவிக்கை கொடுத்துள்ளேன்:—

" மதுரையிலிருந்து சென்னைக்கு தினந்தோறும் 1,000 கிலோ வரை மு. ப. 10-30 ம கைப்பூ விமானம் மூலம் அனுப்பப்படுகிறது. அடுத்த மாதம் 15-ம் தே விருந்து இந்த விமான சர்வீஸ் இரவு நேரத்தில் மட்டும் செயல்பட இருப்பதால், மல்லிகைப்பூ அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டு மதுரை வட்டாரத்தில் மல்லிகைப்பூ தோட்டங்களை நடத்தி வருகிற நூற்றுக் கணக்கான குடும்பங்களின் பிழைப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது."

தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து ஒவ்வொரு நாளும், காலையிலே, 11-40 -க்கு புறப்பட்டு, சென்னைக்கு 1-40-க்கு வருகிறது விமானம்; அதில் மல்லிகைப்பூ அனுப்பப்படுகிறது. அதன் பிறகு அது பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் அனுப்பப்படுகிறது. இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன் ஏப்ரல் 15-ம் தேதி முதல் இரவு 8¼ மணிக்குத்தான் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மல்லிகைப்பூ உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வரை 25 மைல் தூரத்திற்கு மல்லிகைப்பூ விவசாயம் நடைபெறுகிறது. இதிலே விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் நஷ்டம் ஏற்படும் நிலைமைகள் இருப்பதால், நம்முடைய அரசு ஏர் லைன்ஸ் நிறுவனத்தாரைக் கண்டு பேசி, இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்றும், அது பற்றி விவாதிக்க அவையை ஒற்றிவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்து நம் அரசின் கீழ் இருக்கும் அலுவல் அல்ல. இதுபற்றி, அவர்களுக்கு முறைப்படி தெரிவித்து, கஷ்டங்கள் ஏற்படாமல் மாற்றம் செய்யலாமா என்று பார்க்க வேண்டியது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகும் என்பதால், அது ஒற்றிவைப்புத் தீர்மானமாக வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

### 3. கவன ஈர்ப்பு.

### (i) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரி வட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக நஞ்சை, புஞ்சை பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டிருப்பதால், அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இன்றியும், உண்ண உணவுப் பொருள்கள் கிடைக்காமலும் அவதிப்படுகிறார்கள்."

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் உள்ள பயிர்கள் கருகிப்போக அதன் விளைவாக அப்பகுதி மக்கள் வேலையின்றி, உணவின்றி அல்லல் படுகின்றனரென நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முழுதும் பொய்த்துவிட்டது. எனவே, இப்பகுதியிலுள்ள குடியானவர்கள் சீர்கேடான பருவ நிலைகளின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். புன்செய்ப் பயிர்கள் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் நன்செய்ப் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டிருப்பதாலும், இப்பகுதிவாழ் மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடுற்றுள்ளது. அங்குள்ள உழவர்கள் தாங்கள் பயிரிட்ட சிறுதானியங்களையும் பயிர் வகைகளையும் தங்கள் சொந்த உபயோகத்திற்கே பெரிதும் பயன்படுத்திக் கொள்வர். எனவே





விற்பனை செய்யத்தக்க வகையில் உபரி தானியம் எதுவும் மிஞ்சாது. குடியானவர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, இத்துணை வட்டப் பகுதியில் நன்செய் நிலங்களுக்கு இந்த பசலி யாண்டில் நிலத்தீர்வைத் தவணை மாதங்களாகிய 1968 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்காகச் செலுத்தப்படத்தக்க நிலவரி வசூலை (செஸ் வரிக் கூடுதல் தீர்வை நீங்கலாக) கலெக்டர் 1968 மே திங்கள் வரை ஏற்கனவே ஒத்திப்போட்டுள்ளார். புன்செய் எனப் பதிவு செய்யப் பட்ட எல்லா நிலங்களுக்கும் அடிப்படைத் தீர்வை செலுத்துவதினின்றும் அரசாங்கம் விலக்களித்துள்ளதால், புன்செய்த் தீர்வை தள்ளுபடி குறித்த வினாவுக்கு இடமில்லை. நன்செய் நிலங்கள் மீதான நிலவரி வசூலை 1968-ம் ஆண்டிற்குப் பின்பும் ஒத்திப்போடுவது குறித்தும் தற்போது செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைக் குறித்த நடப்பு நிலுவைகளை வசூலிப்பதில், " Go slow policy " என்று, " நிதானக் கொள்கை " யைக் கடைப்பிடிப்பது குறித்தும் செயற் குறிப்புகளை அனுப்புவதாகக் கலெக்டர் உறுதியளித்துள்ளார். அவை எதிர்பார்க்கப்படுகின்றன.

ரூ. 5,03,000 செலவு மதிப்பீட்டில் சிறு பாசனப் பணிகள், சாலைகள் போடுதல், குடிநீர்க் கிணறுகளையும் பாசனக் கிணறுகளையும் ஆழப் படுத்துதல் போன்ற பஞ்சத் துயர் தணிப்புப் பணிகளை வள்ளியூர், இராதாபுரம், வட்டாரங்களில் தொடங்குவதென கலெக்டர் திட்டமிட்டுள்ளார்.

இத் துணை வட்டத்திலுள்ள மூன்று பேரூராட்சி மன்றங்களிலும் 43 கிராம ஊராட்சி மன்றங்களில் 17 ஊராட்சி மன்றங்களிலும் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கப்படுகிறது.

இத் துணை வட்டத்திலுள்ள மொத்த மக்கள் தொகை, 1,71,282 ஆகும். இதில், 1,03,492 பேருக்குக் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கப்படுகின்றது. இத் துணை வட்டத்திலுள்ள மற்றும் 27 கிராமங்களில் குடும்ப உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை மூலம் அரிசி வழங்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. அந்த 27 கிராமங்களும், அணைக்கரை, அப்புவிலை, மகாதேவன்குளம், வடக்கன்குளம், காவல்கிணர், வேப்பிலங்குளம், சௌந்தரபாண்டியபுரம், உடயத்தூர், டங்கர்குளம், அடங்கர்குளம், அலங்கிணர்-திருமலபுரம், அச்சம்பாடு, கோவங்குளம், கும்பிகுளம், சமுகரேங்கபுரம், கஸ்தூரிரங்கபுரம், இருக்கந்துரை, செட்டிகுளம், லேவிஞ்சிபுரம், கருங்குளம், பாலவூர், சிதம்பரபுரம்-ஜேகப்புரம், அவரைக்குளம், தெற்கு வள்ளியூர், கண்ணநல்லூர், ஆனைக்குளம், கோட்டைக்காரன் குளம், இனும் பரமேஸ்வரபுரம்.

வசூல் ஒத்திப் போடப்படும் நில வருவாய் தோராயமாக ரூ. 4,05,500 இருக்கும் என மதிப்பிட்டு இருக்கிறது. கடன் நிலுவை வசூலைப் பொறுத்தவரையில், அவற்றை மெதுவாக வசூலிக்க வேண்டும் எனக் கலெக்டர், வருவாய்த்துறை வாரியத்தின் மூலம் பரிவுரை அனுப்பியிருக்கிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கடன் பணங்களைக் கிட்டிகட்டி வசூல் செய்கிறார்கள். தள்ளிப்போடுவதற்கு கண்டிப்பான உத்தரவைப் போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கனவேயே குறிப்பிட்டேன். இந்த மாதம் வசூலிக்க வேண்டியது மே மாதத்திற்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொன்னேன், Go slow policy பின்பற்றப்படுகிறது என்று.

### (ii) பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக் குறைப்பு.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"பொறியியல் கல்லூரிகளில் அடுத்த நடப்பு ஆண்டிலிருந்து மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் மூன்றில் ஒரு பங்கு குறைத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளதால் மாணவர் சமுதாயத்தினிடையேயும், பொதுமக்களிடையேயும் ஏற்பட்டுள்ள நிலை."

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மையக் கல்வி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கட்கு எழுதிய 22–2–1968 தேதியுள்ள கடிதத்தில், பொறியியல் பட்டதாரிகளும் பொறியியல் டிப்ளோமா பெற்றவர்களும் வேலை வாய்ப்புப் பெற முடியாத இன்றைய நிலைமையை முதல் அமைச்சர் அவர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவந்து பொறியியல் கல்லூரிகளில் பட்டப் பாட முறைகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையை 1968–69 முதல் குறைத்துவிடலாம் என்கிற கருத்தினைத் தெரிவித்துள்ளார். மைய அரசின் ஆய்வுப்படி, இந்தியா முழுவதிலும் பொறியியல் பட்டப்பாட முறைகளில் சேர்க்கப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை 26,000 ஆகும். 1968–69 முதல் அந்த எண்ணிக்கையை ஏறக்குறைய 15,000 அல்லது 16,000 ஆகக் குறைக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப் படும் மாணவர்களின் எண்ணிக்கையை 30 சத விகிதம் குறைக்கா விட்டாலும், ஓரளவு குறைப்பது பற்றி முனைந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. பி.எஸ்.ஸி. மேற்படிப்பு மாணவர்கட்கான மூன்றாண்டு பி.ஈ. பட்டப்பாட முறையை ரத்து செய்யக் கருதப்பட்டுள்ளது. இதனால் பி.ஈ. வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையில் 260 இடங்கள் குறையும். அரசாங்கப் பொறியியல் கல்லூரிகளிலும் தனியார்ப் பொறியியல் கல்லூரிகளிலும் 5 ஆண்டு பி.ஈ. பாட முறையில் தற்போது சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்குரிய 1,400 இடங்களில் ஏறக் குறைய 200 இடங்களைக் குறைத்து விடலாமென ஆலோசிக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையம், குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பவியல் நிலையம், கிண்டியிலுள்ள அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல், தொழில்நுட்பவியல் துறைகள், திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி போன்ற தமிழ் நாட்டிலுள்ள பிற நிறுவனங்களும் தாங்கள் சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை ஓரளவு குறைக்கும்படி அவைகட்கு வேண்டுகோள் விடுக்கப்படும்.

பொறியாளர்களிடையே வேலையின்மை நிலவுவது சிக்கல் மிகுந்த வொன்றாகும். இப்போது எந்த நடவடிக்கை எடுப்பினும், அதன் விளைவுகள் ஐந்தாண்டுகட்குப் பின்னர்தான் தெரியவரும். அப்போது நாட்டின் பொருளாதார நிலை தற்போதுள்ளதைப் போல் அவ்வளவு இடர்பாடு மிகுந்ததாய் இருக்காது. எனவே, இது குறித்து விழிப்புடன் செயல்படுவது நல்லது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, பிற மாநிலங்களில் உள்ளதைப் போல் நிலைமை அவ்வளவு கவலை தரத்தக்கதாயில்லை. கல்லூரிகளிலிருந்து வருகிற பொறியாளர்கள் பயனுள்ள வகையில் வேலைக்கமர்த்தப் படுவதற்கான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுக்கொரு வீடு, ஊருக்கொரு ரோடு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க தொழில் வளர்ச்சி என்று கூறப்படும் இந்த நிலையில், இப்பொழுது தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதால், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற முடியாததால் நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது என்பதனால், பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைக் குறைக்க வேண்டாம் என்று இந்திய அரசுக்கு, நம் தமிழக அரசு எடுத்துக் கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசு, நாட்டில் மொத்தமுள்ள 26,000 இடங்களில் ஒரு 30 சத விகிதம் குறைக்க முடியுமா என்று கேட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இங்கே உள்ள சூழ் நிலை, அவ்வளவு பர்செண்டேஜ் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான். ஆனாலும், 260 இடங்கள் மூன்று ஆண்டுப் படிப்பு, பி.எஸ்.ஸி.-களுக்கு என்று இருப்பதை, இஞ்ஜினியிரிங் படிப்பின் முழுத் தன்மையைப் பெறமுடியாத நிலை இருப்பதால், அதை எடுத்துவிடலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வேறு ஒரு கருத்தும் இருக்கிறது. பி.எஸ்.ஸி. படித்தவர்களுக்கு மூன்று ஆண்டு பட்டப் படிப்பு இருக்க வேண்டும் என்றால், அது போதாது, ஆகவே, அதை நான்கு ஆண்டுகளாக ஆக்க வேண்டும் என்றும் ஒரு கருத்துச் சொல்லப்படுகிறது. அப்பொழுது, பி.எஸ்.ஸி. மூன்று ஆண்டு, எஞ்ஜினியிரிங் நான்கு ஆண்டு ஆக ஏழு ஆண்டு படிக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. அதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நான் குறிப்பிட்டேன், இடர்ப்பாடுகள் ஏற் படாத வகையில் 200 இடங்களைக் குறைக்கலாம் என்று. அப்படித் திட்டமிடுவதற்குக் காரணம், தேவைக்கு அதிகமாகவே சேர்த்திருக்கிறோம். இட நெருக்கடி இருக்கும் காரணத்தால், அப்படிப்பட்ட இடத்தில் 200 இடங்களைக் குறைக்கலாம், அவர்கள் கூறும் வகையில் 30 சத விகிதம் குறைக்கும் அளவிற்கு செய்ய வேண்டாம், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அப்பொழுது எந்த அளவில் நிலைமைகள் வரும் என்று பார்த்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் அரசு எண்ணியிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், தலைவர் அவர்களே, தாங்கள் இடக்கூடிய கட்டளைக்குக் கட்டுப்பட்டவன், கட்டுப்படக்கூடியவன், கட்டுப்பட வேண்டியவன். எனக்கு ஏற்படக்கூடிய குறைகளைப்பற்றி எடுத்துச்சொல்லவில்லையென்று சொன்னாலும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன், இதே கைத்தறித் துணியை மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் இருந்ததால், துணிகள் தேக்கமடைந்து அதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையையொட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானமும், இந்த மாநிலத்திலே எடுக்கக்கூடிய சினிமாப் படங்களை மற்ற மாநிலங்களிலே காட்ட அனுமதிக்கப்படாததால் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானமும் கொடுத்தேன். அவை அனுமதிக்கப்படவில்லை. தயவு செய்து எங்களுக்கும், சுறு சுறுப்பான நேரத்திலே, எங்களுடைய உற்சாகத்தைக் குறைக்காமல் இயங்கவைக்கக்கூடிய அளவிலே எங்களுடைய தீர்மானங்களை அனுமதிப்பது மிகவும் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, எங்களுடைய தீர்மானங்களையும் தயவுசெய்து, அருள்கூர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்களுடைய ஒற்றிவைப்புத் தீர் மானத்தின் வசனத்திற்கும், இன்றைக்குப் பேரவையில் அனுமதிக்கப் பட்ட தீர்மானத்திற்கும் வசனத்திற்கும் உள்ள வேறுபாட்டை நீங்களே கூர்ந்து கவனித்திருந்தால் அறிந்து கொள்ள முடியும். இன்றைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் மற்ற மாநிலங்களைப்பற்றிக் குறிப் பிடாமல் இருந்தது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதற்கும், இதற்கும் வித்தியாசமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிச்சயம் ஒரு வார்த்தை வேறு விதமாக இருந்தது. ஒரு வார்த்தை வேற்றுமையினால் கருத்து வேற் றுமை ஏற்படக்கூடும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அப்படியிருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நீங்களே திருத்தினாலும் சரியே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்துவதற்கு வாய்ப்பிருந்தால் செய்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** வசனத்தில் ஏதாவது கோளாறு இருந்தால் உங்கள் அறையிலேயே திருத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "வசனம்" என்பதை "வாசகம்" என்று மாற்றிக்கொண்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "வசனத்திலே" என்பதை "வாசகத்திலே" என்று மாற்றிக்கொள்ளலாம். இங்கு "வசனம்" என்பது "வாசகத்தை"த்தான் குறிக்கிறது.

### 4. நடைமுறைக் கேள்வி.

### முதலமைச்சரின் அமெரிக்க சுற்றுப்பயணம்

THIRU K. VINAYAKAM : Sir, I wish to raise a point of order. I reliably understand that the Government of the United States of America have invited our Hon. Chief Minister to visit their country. I believe I am correct. The Chief Minister has given the consent that he is willing to go to that country. Recently he was not well. I believe that he is fully recovered now. May God bless him. Is he in a fit condition to go ? I want him to go. I understand that he wants to go to Japan also. We wish him *bon voyage* and a happy return. My question is what is to happen to his portfolios ? Who is going to look after them? Is he going to distribute them among his Colleagues or is he going to appoint Ministers or Deputy Ministers? Who are the lucky members who are going to walk into his cabinet ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால் நடைமுறைக்கேள்வி. அது நடைமுறையை ஒட்டியதாக இருக்க வேண்டும். எனவே, இப்படியும் கேட்கலாம், கேட்டது சரி. ஆனால் அதற்கு விடையளிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

THE HON. THIRU C. N. ANNADURAI : Appropriate arrangements will be made.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கை எண் 34—அச்சுத் துறை, முதலிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு மணி நேரம். அடுத்து கூட்டுறவுத் துறை நிதிக் கோரிக்கை. இதற்கு 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கான கோரிக்கையின் மீது விவாதம் ஒரு வேளை மாலையில் நடத்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விரும்பினாலும் அப்படிச் செய்யலாம். இப்பொழுது முதலில் எழுதுபொருள்—அச்சுத்துறை நிதிக் கோரிக்கையை மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து, அரிசனநல-செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

### 5. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத் துறை.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 34 எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,50,52,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move: " That the allotment of Rs. 2,50,52,800 under Demand No. 34—Stationery and Printing—be reduced by Rs. 100. "





THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss policy I move the Cut Motion standing in my name, namely :—

" That the allotment of Rs. 2,50,52,800 under Demand No. 34—Stationery and Printing—be reduced by Rs. 100. "

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகத்தில் நடைபெறும் ஒழுங்கீனங்களைத் தடுக்க முயற்சி எடுக்காத போக்கைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 34—"எழுதுபொருள்—அச்சுத்துறை" என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,50,52,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, எல்லா பள்ளிப் பாடப் புத்தகங்களும் அரசாங்க அச்சுத் துறை மூலமேதான் பிரசுரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள—

"கோரிக்கை எண் 34—"எழுதுபொருள்-அச்சுத்துறை" என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,50,52,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கையையும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர்களுடைய வாதங்களையெல்லாம் கேட்ட பிறகு நான் இறுதியிலேயே எல்லாவற்றையும் கூற விரும்புகிறேன். நான் முன்னுரையாகச் சொல்ல வேண்டிய †உரையும் அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறேன். இதைத் தவிர ஆய்வுரை ‡ ஒன்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். இந்த ஆய்வுரை இத் துறையின் நடவடிக்கைகளை, குறிப்பாக 1967–68-ம் ஆண்டிற்கான பணிகளை விளக்கிக் கூறுகிறது.

எனினும், பொதுவான சில கொள்கைக் கூறுகளையும், இந்த ஆண்டிலேயே எய்தியுள்ள சாதனைகளையும் சுருக்கமாகக் கூறுவதற்குப் பேரவையின் அனுமதியை வேண்டுகின்றேன். அரசாங்கமே பாடப் புத்தகங்களை வெளியிடுவதாலும், இம் மாநில அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக அரியணையில் தமிழ் அமர்ந்துள்ளதன் காரணமாகவும் அரசாங்க அச்சுப் பணிகள் பல்கிப் பெருகியுள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். 1959 சனவரித் திங்களில் அரசாங்க அச்சகத்தில் இரண்டாவது வேலைமுறை ஏற்பாடு செயலுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அதிகரித்த பணியினை அச்சகத்தால் செய்துமுடிக்க இயலவில்லை. அதிகரித்த பணியினைச் செய்து முடிப்பதற்காகவும், அச்சகப் பணியினைப் பரவலாக்குவதற்காகவும், திருச்சிராப்பள்ளி, சேலம், விருதாச்சலம் ஆகிய இடங்களில் வட்டார அச்சகங்களை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. கூடுதல் இயந்திரங்களை வாங்கியமையால், மத்திய அச்சகத்திலும், கிளை அச்சகங்களிலும் செய்த பணியளவு சீராகப் பெருகி வருகிறது. இந்த ஆய்வாண்டிலும் இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1966–67-ம் ஆண்டில் 36 கோடி பேருந்து பயணச் சீட்டுகளும் 70·45 லட்சம் பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் 67·50 லட்சம் பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்குப் பணிக் குறிப்பு பெறப்பட்டுள்ளது.

---

†200–271-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
‡ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் அச்சிடப்பட்ட உரை.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1968 மார்ச் 21

இந்த ஆய்வாண்டில் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. முறைவேலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பன்ரொட்டியும், தேநீரும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. ஈய நச்சுக் காற்றினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் பல்விட்டமின் மாத்திரைகளும், கால் லிட்டர் பாலும் வழங்கப்படுகின்றன. உலோகத்தை உருக்கும் பிரிவுகளிலும், தொடர்பான ஏனைய பிரிவுகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் காப்பு முகமூடிகளும், கெட்டித் தோல் காலணிகளும் வழங்கப்படுகின்றன. பன்னெடுங் காலமாகவே அரசாங்க அச்சகத் தொழிலாளர்கள் குடும்ப ஓய்வூதிய விதிகளை, ஓய்வூதிய நலனுடன் தங்களுக்கும் நீட்டிக்க வேண்டுமெனக் கேட்டு வந்துள்ளனர். அவர்களது நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். இந்த நன்மைகளை கடந்த ஒரு தேதியிலிருந்தே, அதாவது 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்கொண்டே கொடுக்கும்படி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. பொதுவாக, இந்த நன்மைகளையும், குறிப்பாக குடும்ப ஓய்வூதிய நலனையும் அச்சகத் தொழிலாளர்கள் மனமகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

எழுது பொருள் துறை, 1966–67-ம் ஆண்டில் ரூ. 106·15 லட்சம் மதிப்புள்ள பொருள்களை வழங்கியுள்ளது.

சென்றாண்டு வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் கூறியவற்றையொட்டி, அரசாங்க அச்சகம் செயல்படும் வகையினை ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்க குழு ஒன்று அமைக்கப்படுமென, மன்றப் பேரவைமுன் நான் கொடுத்த உறுதி மொழியையும், ஈண்டுக் குறிப்பிட விழைகிறேன். வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் ஒருவரடங்கிய, தனிக் குழு ஒன்று நிறுவப்பட்டு, அந்த உறுப்பினர் தமது முதலறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளார். அந்த அறிக்கை இப்போது அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அரசாங்க அச்சகம் இயங்குவதன் பல கூறுகள் குறித்தும், அதன் நிர்வாகம் குறித்தும் மேலும் பல அறிக்கைகளை அனுப்புவதற்காக வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் உறுதி கூறியுள்ளார். அந்த அறிக்கைகள் கிடைத்தவுடன், அவற்றிலுள்ள பரிவுரைகளை அரசாங்கம் முழு அளவில் ஆராய்ந்து பார்த்து, அரசாங்க அச்சகம் மேலும் திறம்பட இயங்குவதற்கான வழிவகைகளையும், அரசாங்க அச்சகம் செயல்படுவதில் காணப்படுகிற இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளையும் அரசாங்கம் உருவாக்கும்.

எழுது-பொருள்-அச்சுத் துறை, அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் அன்றாடப் பணியுடன் தொடர்புள்ள இன்றியமையா நிறுவனமாகும். இத் துறையிலுள்ள தொழிலாளர்களின் மனப்பூர்வமான நீடித்த ஒத்துழைப்புடன், திறமையான; மனநிறைவு அளிக்கவல்ல பணியினை இத் துறை தொடர்ந்து நிறைவேற்றுமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இம் மானியக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு மன்றப் பேரவையை வேண்டுகின்றேன்.

***திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகமானது நல்ல முறையில் இந்த நாட்டிலே இருந்தால்தான் அரசாங்கமும் நல்ல முறையிலே இயங்க முடியும். அதில் வேலைசெய்யும் ஊழியர்கள் பண்பாட்டுடனும், கட்டுப்பாட்டுடனும் இருந்து வேலை செய்தால்தான் அரசாங்கத்திலிருந்து வெளிவரக்கூடிய வெளியீடுகள் மிகவும் சீக்கிரத்திலும் சுலபத்திலும் கிடைக்கக்கூடியதாக இருக்கும். நாங்கள் எல்லாம் சட்டசபை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டு பேசிய பேச்சுக்கள், சட்டசபை நிகழ்ச்சிகளின் வெளியீடுகள் ஓராண்டாகியும் இன்னும் பிரிண்ட் ஆகவில்லை. வருஷம் ஒன்றாகியும் எங்களுக்கு சட்டசபை நிகழ்ச்சிகளின் காபி கிடைக்கவில்லை. இவைகள் சுலபமாக சீக்கிரத்தில் கிடைத்



1968 மார்ச் 21] [திரு. வை. சுவாமிநாதன்]

தால்தான் நாங்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். மேலும் இந்த சட்டசபை நிகழ்ச்சிகளின் புத்தகங்கள் அங்கத்தினர்களுக்கு மட்டுமே அனுப்பப்படுகின்றன. இந்தப் புத்தகங்களை பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பி வைத்தால், பஞ்சாயத்து யூனியன் இன்பர்மேஷன் சென்டரில் வைத்து, பொதுமக்கள் படித்து, சட்டசபை நிகழ்ச்சிகளைக் கண்டறிய வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் சட்டசபை அன்றாட நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இனிமேல் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சட்டசபை நிகழ்ச்சிகளின் பிரதிகளை கட்டாயம் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது புத்தகங்களையெல்லாம் அரசாங்கமே வெளியிட்டு வருகிறது. இப்பொழுது 7-வது வகுப்பு வரையிலுள்ள புத்தகங்களைத்தான் அரசாங்கம் வெளியிடுகிறது. 1-வது வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு வரையிலுள்ள புத்தகங்களை அரசாங்கமே வெளியிட்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் புத்தகங்கள் சரியான காலத்தில் எல்லா இடங்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். சில இடங்களில் பள்ளிக்கூடம் திறந்து ஜூன், ஜூலை மாதம் ஆனாலும் புத்தகங்கள் சரியான முறையில் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் முன்பாகவே ஏப்ரல் 30-ம் தேதிக்குள் எந்தெந்தப் புத்தகங்களைப் பிரிண்ட் செய்யவேண்டுமோ, அவைகளை பிரிண்ட் செய்து வைத்துக்கொண்டால், பள்ளிக்கூடம் திறந்ததும் எல்லா இடங்களுக்கும் அனுப்பிவைக்க சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமல்லாமல், எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும், ஆங்காங்கே உள்ள கடைகளுக்கும் சரியான நேரத்தில் புத்தகங்களை அனுப்பிவைத்தால் மாணவர்கள் பள்ளிக்கூடம் திறந்தவுடனே வாங்கிக்கொள்ள சௌகரியமாக இருக்கும். அரசாங்கம் இதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள அச்சகங்களை எடுத்துக்கொண்டால், பலவிதமான முன்னேற்றங்களைக் காண்கிறோம். சமீபத்தில் நடந்த உலகப் பொருட் காட்சிசாலையில் ருஷ்யா போன்ற நாட்டுக் கூடத்தில் அச்சகங்களுக்கான நவீன இயந்திரங்களை எல்லாம் பார்த்தோம். அவற்றை எல்லாம் இந்த அச்சகங்களுக்கு அரசு பயன் படுத்திக்கொள்ள முன்வந்தால் வேலை நன்றாகவும், சீக்கிரத்திலும் முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவைப்படுகிற ஃபாரங்களை அரசாங்க அச்சகத்திலும், ஹோா அண்டு கோவிலும் அச்சடித்து அனுப்புகிறார்கள். ஹோா அண்டு கோவில் இருந்து சரியான சமயத்தில் இந்த பாரங்கள் கிடைப்பதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஹோா அண்டு கோ, மொனோபொலியாக இருக்கிறது. இதை அரசாங்கமே எடுத்துக்கொண்டு விடவேண்டும். இல்லையென்றாலும் அங்கே அச்சடிக்கக்கூடிய படிவங்களை எல்லாம் கூட அரசாங்க அச்சகத்திலேயே அடித்து காலாகாலத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அச்சகங்கள் எல்லாம் சென்னை நகரத்திலேயே குவிந்து கிடக்கின்றன. இதைப் பரவலாக ஜில்லா வாரியாக ஏற்படுத்த வகை செய்தால் அந்த அந்த மாவட்டங்களிலுள்ள பஞ்சாயத்துகளுக்குத் தேவையான பாரங்களை அங்கங்கே அச்சடித்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன்பு கடன் பாரங்கள் அரசாங்க அச்சகத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டன. பாரங்கள் இல்லை என்கிற காரணத்தினால், இப்போது அவரவர்களே அச்சடித்துக் கொள்கிறார்கள். ஆகவே அரசாங்கம் உடனடியாகத்தங்களது அச்சகத்திலேயே நிறைய கடன் பாரங்கள் அடித்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கெஜட் வெளியாகிறது. இதில் இருக்கக்கூடிய எழுத்துக்கள் மிகச் சிறியதாக இருக்கின்றன. அதையும் பரிசீலனை செய்து கொஞ்சம் பெரிய டைப்பாகப்போட்டு அச்சடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துறையில் இன்றைக்கு நாலாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் திருப்தியோடு சரியான முறையில் வேலை செய்தால் தான் காரியங்கள் சீக்கிரத்தில் நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இந்த ஊழியர்களுக்கு வீட்டு வசதி, கல்வி வசதி, வைத்திய வசதி போன்று நிறைய சலுகைகளை அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் சமீபத்தில் நமது மதிப்பிற்குரிய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் சரியாக இல்லையே என்று எங்கள் கட்சியின் சார்பில் எடுத்துச் சொன்னதற்கு அவை அச்சுப் பிழைகள் என்றார். 4 கோடி என்பதை 4 லட்சம் என்று அச்சடித்தால் அதனால் ஏற்படுகிற விளைவுகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆகவே ப்ரூப்களை சரியான முறையில் பார்ப்பதற்கும் வழிவகைகள் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசாங்க அச்சகம் நல்ல முறையில் செயல்படுவதற்கு நவீன கருவிகளைப் பயன்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும். மேலும் இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் சரியான டைப்ரைட்டர்கள் இல்லை. பழைய ஜில்லா போர்டு காலத்தில் இருந்தவை தான் இருக்கின்றன. ஆகவே அச்சகத்துறை மூலம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நல்ல டைப்ரைட்டர்கள் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, சென்ற தடவை இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்த அவையில் விவாதம் நடந்த போது எல்லாத் தரப்பையும் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த நிர்வாகத்தில் உள்ள சீர்கேடுகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அதில் உள்ள பலவிதமான குறைபாடுகளையும் களைவதற்கு முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்கள் உயர்திரு கெய்வாரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து விசாரணை நடத்த முன்வந்திருப்பது நல்லது. ஆனாலும் கூட இந்த விஷயத்தை இந்த அவையில் எழுப்பியவர்கள் நிர்வாக சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட ஒரு காரியமாக மட்டும் இதைப் பார்க்கவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல்கள், வந்திருக்கக்கூடிய புகார்கள் அதையும் தாண்டிச் செல்லக் கூடியவை. லஞ்ச ஊழல் அதிகம் இருக்கிறது என்கிற புகார் இந்த அவையிலேயே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய ஒவ்வொரு சிறு தொழிலுக்கும் கூட, பைண்டர்கள், கம்பாஸிடர்கள் என்று இப்படி எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு வேலைக்கும் இவ்வளவு என்று வகுக்கப்பட்டு, அந்தப் பணம் கொடுக்கப்பட்டால் தான் போடுவது என்ற நிலை இருந்து வருகிறது. இப்படித் தவறான முறையில் சம்பாத்யம் நடைபெற்று வருவதை கண்டிப்பாகத் தடுத்தாக வேண்டும். அதன் காரணத்தினால் தான் இப்போதுள்ள நிர்வாக அதிகாரியை அந்த இடத்தை விட்டு எடுத்துவிட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். நிரந்தரமாக எடுக்கப்படாவிட்டாலும், விசாரணை முடிகிற வரையில் அவர் அங்கு இருக்கக்கூடாது என்கிற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. துர்பாக்கிய வசமாக இப்போது அப்படிப்பட்ட விசாரணை நடைபெறவில்லை. அதன் காரணமாகத் தான் மதிப்பிற்குரிய திரு. கெய்வார் அவர்கள் என்னை அழைத்தபோது நான் சில விவரங்களை மட்டும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு இந்த என்னுடைய ஆட்சேபணையையும் தெரிவித்து வந்தேன். ஆகவே அதைப் பற்றியும் இப்போது அமைச்சர் அவர்களுக்கு நினைவு படுத்தினேன்: ஏனென்றால் இதுபோன்ற விஷயங்களில் அரசு கடுமையாகவும், கராராகவும் நடந்துகொண்டால் தான் நிர்வாகச் சீர் அமைப்பு என்பது ஏற்பட முடியும். அந்த இடத்தில் இப்போது அந்த அளவு உயர்தரமான நிலை இல்லை. ஆகவே துணிச்சலோடு, உள்ளே ஊடுருவிப் பார்க்கக்கூடிய விசாரணை கண்டிப்பாகத் தேவை என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.





அடுத்து ஒன்றிரண்டு இதர விஷயங்கள்—இப்போது அங்கே ஒரு தொழிற்சங்கம் இருக்கிறது. அது அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று நினைக்கிறேன். அவர்கள் சமீபத்தில் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்தார்கள். ஆனால் ஓர் ஆள் கூட வேலைநிறுத்தம் செய்யவில்லை. அதற்கு தொழிலாளர்களின் மத்தியில் ஆதரவு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்குள்ள சங்கம் அவ்வளவுதான் தொழிலாளர்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. இருந்தும் அது அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மெஜாரிடியான தொழிலாளர்களைக் கொண்டு வேறு ஒரு சங்கமும்—இந்த அவையில் அந்தத் தரப்பில் இருக்கக்கூடிய திரு. எம். ஆர். கண்ணன், திரு. முனு ஆதி, திரு. வீராசாமி, திரு. இராமச்சந்திரன், இன்னும் என்னைச் சேர்த்து எங்களை வழிகாட்டக் கூடியவர்களாக வைத்துச் செயல்படுகிறது. இந்த ஆட்சி வந்து ஓராண்டு ஆகியும் இன்னும் இந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. இந்த விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆகவே இந்த நேரத்தில் இந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. காரணம் அதுபற்றி மேல்மட்டத்தில் அமைச்சர்களுடனேயே பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அது வெற்றி பெறும் என்கிற நம்பிக்கை பரிபூரணமாக எனக்கு உண்டு. முக்கியமாக இரவு நேர ஷிப்ட் பார்ப்பவர்களுக்கு அதிக அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்பது. இது நியாயமான கோரிக்கை. நம்முடைய நிதி நிலைமைக்கேற்ப எவ்வளவு அதிகமாக உடனடியாகக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். மேலும் ஏ.டி.ஸி.எ. என்பது அவர்கள் நீண்ட நாளாக அனுபவித்து வந்தது, அதுவும் பென்ஷனுக்குக் கூட அமைந்தது. இடைக்காலத்தில் அதை நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அது கொடுக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கை. நீண்ட நாளாக பெற்று வந்த ஒன்றை அவர்கள் கோருவதில் தவறு இல்லை. அது விடுபடுவது சரியாக இருக்காது. எந்தத் தொழிற்சங்கமும் அதை ஒப்புக்கொள்ளத் துணியாது. இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் இங்கே விவரிக்கத் தேவையில்லை. நிச்சயமாக அமைச்சர் அவர்களோடு நடந்துவரும் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடிந்து உழைப்பாளியின் மன அமைதியையும் உள்ளப் பூர்வமான ஒத்துழைப்பையும் பெற்று இந்த இலாகா முன்னைக்காட்டிலும் சிறப்பாகச் செயல்படும் என்று நம்புகிறேன். முடிக்கும்பொழுது ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் குறிப்பிட்டதுபோல் ஊடுறவு விசாரணை நிச்சயம் நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் இத்துடன் அமர்கிறேன்.

**திரு. முனு ஆதி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை முழுக்க முழுக்க ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அச்சக எழுதுபொருள் இலாகாவானது நம்முடைய அரசுக்கு முக்கியக் கேந்திரமான ஒன்றாகும். அதிலே ஏறக்குறைய ஆயிரக்கணக்கான துறைகளுக்கான நம்முடைய அரசின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் தேவைகளுக்குமான முக்கியமான ஃபாரங்களையும் தயாரிக்கின்ற ஒன்றாகவும் கெஜட் ஆர்டர்களையெல்லாம் மக்களுக்குத் தெரிவிக்கிற ஒரு நல்ல முக்கியமான இலாகாவாகவும் மாவட்ட ஆட்சித் துறை மாநில ஆட்சித் துறை இவற்றிலே தேவைப்படுகின்ற பாரங்களையும் மற்றவற்றையும் அச்சடித்துக் கொடுக்கின்ற ஒரு இலாகாவாகவும் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான இலாகா ஆகும். அதற்காக இதிலே இரண்டு கோடி ரூபாய் மானியத்தை அளிப்பதற்காக நிற்கிறோம்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் தொழிலாளர்களைப்பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர்களிடையே ஒரு சுமுகமான ஒற்றுமையான நிலையை உருவாக்க வேண்டியதற்குப் பதில் பிரிவு மனப்

பான்மை அவர்களிடையே ஏற்பட்டிருப்பது கண்டு மிகவும் வேதனைப் படுகிறோம். அவர்களைச் சுமுகப்படுத்தி ஐக்கியப்படுத்த இந்த இலாகா அமைச்சர் அவர்கள் பொறுமையாக சொல்வதைக் காதால் கேட்டு படிப் படியாகவும், ஆனால் உறுதியாகவும் நிரந்தரமான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துகிற வகையில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

எதிரிலே உட்கார்ந்திருக்கிற திரு. பூவராகன் அவர்கள் நடத்திய இந்த இலாகா 10, 15 ஆண்டுகளாக தவறான வழிகளில் சென்று கொண்டிருந்திருக்கிறது. இப்பொழுது அதற்காக நாங்கள் வேதனைப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. தொழிலாளர்களிடையே இருந்த ஒற்றுமை குலைக்கப்பட்டு நிர்வாகிகள் தொழிலாளர்களுக்குள் மோதல் உண்டாக்குகின்ற நிலைமையை உண்டாக்கினார்கள். வேலை நிறுத்தம் என்று சொல்லக் கூடிய தன்மையிலே வேலை நிறுத்தம் செய்யலாம், அதற்கு ஆட்கள் இருக்கிறதோ இல்லையோ அது வேறு, வேலைக்குப் போகாமல் இருந்தால் பரவாயில்லை. அவர்கள் சாதனங்களை அச்சகத்திலிருந்து வெளியே கொண்டு போகிற நிலைமையை இங்கு எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். சில பல தொழிலாளர்கள் அப்படி இருக்கிறார்கள். ஆனால் 100-க்கு 80 தொழிலாளர்கள் ஒருமைப்பட்டு நடத்தக்கூடிய சங்கத்திற்குத்தான் அங்கீகாரம் தரப்படாமல் இருக்கிறது. அந்த சங்கத்திற்கு அங்கீகாரம் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்ட நுணுக்கங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், லேபர் கமிஷனர் அவர்களை ஆராயச் சொல்லியிருக்கிறார்கள், இதை நல்ல முறையிலே செய்யலாம் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வேலை நிறுத்தம் என்று சொல்லி வாசல்படியிலேயே ரௌடிகளைப்போல் நின்றுகொண்டிருக்கிறார்கள். கையிலே கம்புகளை வைத்துக்கொண்டு மீறியும் யாராவது டிபார்ட்மெண்டுக்குள் வந்து வேலை செய்தால் கையை வெட்டிவிடுவேன் என்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை நீண்ட காலமாக வளர்க்கப்பட்டிருக்கிற நிலைமையாக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் தொழிலாளர்களைப் பிரித்து வைக்கின்ற மனப்பான்மையை ஏற்படுத்தி அங்கே ரௌடிஸத்தை வளர்த்துவிட்ட காரணத்தால் இப்பொழுது அதைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தவிர்க்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறது. அமைச்சர் அவர்களைக் கேட்டோம், அந்தத் தொழிற் சங்கம் நியாயமான கொள்கையுடன் இருக்கிறதா என்பதையெல்லாம் சட்டப்பூர்வமாக ஆராய்ந்து லேபர் கமிஷனர் டைரக்டர் இவர்களையெல்லாம் அழைத்துவைத்து இந்த சங்கம் வலிவுள்ள சங்கமா அதை அங்கீகரிக்கலாமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மூன்று நான்கு சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு திசைதிருப்பி கொண்டிருக்கிறார்களே தவிர, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். திரு. பால்சுப்ரமணியன் அவர்கள் சொன்னார்கள். அந்த பரிதாபகரமான நிலைமையை அமைச்சர் அவர்கள் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு நிலைமையை அமைச்சர் அவர்கள் உடனடியாக மாற்ற முடியாது. போன காலத்தில் அப்படி அந்த நிலைமையை வளர்த்து விட்டார்கள். அந்த வேதனைகளை நாம் அனுபவிக்கிறோம்.

அமைச்சர் அவர்கள் திரு. செய்வார் தலைமையில் இதற்கு ஒரு குழு அமைத்து இந்த இலாகாவைப்பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறார்கள், இது சாலச் சிறந்தது என்றாலும் அந்த இலாகாவில் நடந்து கொண்டிருக்கின்ற ஊழல்களைக் கவனிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்கிறார்கள். சில ஏஜெண்ட்டுகள் நியமித்து இருக்கிறோம். அந்த ஏஜெண்டுகளைவிட்டு வெளியிலே இருக்கிறவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பழக்கம் இருக்கிறது, இதை நான் சொல்வது குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல, இவற்றைக் களைய வேண்டும்



என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்த இலாகாவில் உள்ள நிர்வாகிகள் டைரக்டர் முறையாகக் கவனிக்கவில்லையென்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

வெளியிடங்களிலே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயந்திரங்களை வரவழைத்திருக்கிறோம், பொருத்துகின்ற வேலைகள் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஆர்டர் வருகிறது என்றால் அதை 15 நாட்களுக்கு வெளியே காட்டுவதில்லை, 16-வது நாள் ஆர்டரை இன்னும் 15 நாட்களுக்குள் செய்ய முடியாது என்று சொல்லி வெளியிலே ஆர்டர் கொடுக்கக்கூடிய நிலைமையெல்லாம் இருக்கிறது. இவையெல்லாம் நீண்ட காலமாக இருந்து வருகிற வியாதி, இதிலே தொக்கியிருக்கிற மர்மத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் ஊறவைத்து விட்டுப்போன மோசமான நிலைமைகளை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 16-வது நாளில் வேண்டுமெனப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தொழிலாளர்களுக்குள்ள கோரிக்கைகள், அரசாங்க நடவடிக்கைகளைத் தடை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. கவர்னர் அவர்கள் இங்கே படிக்கின்ற புத்தகத்தை வராமல் தடுக்கவேண்டும் என்று திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள நம்முடைய தொழிலாளர்கள் ஒன்றுகூடி அந்த சதித் திட்டத்தைக் கலைத்து இருக்கிறார்கள்.

ஒரே இலாகாவில் ஒரே டைரக்டர் பல ஆண்டுகளாக முன்னால் ஆட்சியிலிருந்து அப்படியே இருந்து வருவதால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் வளர்ந்து விட்டன. அவற்றைக் களையவும் அகற்றவும் முடியாமல் இருப்பதால்தான் இப்பொழுதும் அப்படியே நடந்துகொண்டிருக்கிறது. பொது மக்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு இன்னுமா அப்படி வைத்திருக்கிறது என்றுதான் சொல்கிறார்களே தவிர, நீண்ட காலமாக இருந்ததை உடனே போக்க முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை. இங்கே இருக்கிற அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த நிலைமையைச் சீர்திருத்தியாக வேண்டும். இல்லையென்றால் தொழிலாளர்களுக்குள்ளே மோதல் இருக்கும். வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டு உள்ளே இருக்கிற ரீம் பேப்பரை வெளியே சுவர்களில் ஒட்டியிருக்கிறார்கள், யாருடைய தைரியத்தில் இப்படிச் செய்ய முடியும்? வேலை நிறுத்தம் என்றால் கையெழுத்துப் போட்டுவிட்டு வெளியே வரலாம், மாதம் முடிந்தவுடன் சம்பளம் வாங்கலாம். தொழிலாளர்களுக்குள்ளே பிளவு ஏற்பட்டிருக்கிறது, நிர்வாகஸ்தர்களாலே பிளவுபடுத்தப்பட்டிருக்கிறது. சில பேர் தூண்டி விடுகிறார்கள்.

எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் என்ன என்னமோ பேசினார்கள். அங்கே திரு. காமராஜ் திரு.பக்தவத்சலம் போன்றவர்களுடைய, படத்தைஇலாகாவினுடைய மெட்டீரியல்ஸை வைத்து 1,500 ரூபாய் செலவழித்து படங்களைத் திறந்து வைத்து ஆடம்பரமாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை அங்கே திறப்பதற்கு அந்தத் தொழிலாளர்கள் 4 அணா 8 அணா என்று காசு போட்டு ஒரு படத்தைத் திறக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் திறக்கக்கூடாது திறந்தால் ரகளை ஏற்படும் என்று சொன்னார்கள். அவர்கள் 1,500 ரூபாய் செலவழித்து படங்களை மாட்டினார்கள். அது தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் எங்களுடைய அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தைத் திறக்கவேண்டுமென்று சொன்னபொழுது என்னையே பயமுறுத்துகிறார்கள். அதன் பிறகு அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு அண்ணா அவர்களுடைய படத்தைத் திறக்கச் செய்தோம். இந்தத் தைரியம் அந்தத் தொழிலாளர்களுக்குத் தானாக வந்துவிடாது.

அவர்களுக்குப் பின்னாலே யாரோ இருந்து தூண்டுகிற சக்தி இருக்கின்ற காரணத்தால்தான் தைரியமாகச் செய்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களிடையே பிளவை உண்டாக்குகின்றவர்கள் அங்குள்ள நிர்வாகிகள்தான். அந்த நிர்வாகத்தைச் சீரமைத்துவிட்டால் அந்த இலாகா சிறந்த முறையிலே பணியாற்ற முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு உடல் நலக் குறைவு என்பது தெரியும். நீங்கள் கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள்.

**திரு. முனு ஆதி :** அடுத்து, அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்ற முறையில் அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது அவர்களால் முடிந்த அளவுக்கு சில கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தர ஒப்புக் கொண்டார்கள். தொழிலாளர்களைத் தண்டிக்கும் வகையில், எந்த ஒரு தொழிலாளியையும் திடீர் திடீரென்று விருதாசலத்திற்குப் போ, சேலத்திற்குப் போ, திருச்சிக்குப் போ என்று சொல்லக் கூடிய அளவுக்கு நண்பர் பூவராகன் அவர்கள் செய்து வைத்தார்கள். தொழிலாளி தவறு செய்தால் பனிஷ்மெண்ட் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் தொழிலாளர்களைப் பயமுறுத்தும் வகையில் குடும்பத்தோடு இன்னொரு ஊருக்குப் போகச் சொல்லுவது அவர்களுக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது. அதை உடனடியாக நிவர்த்திக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கான உத்தரவைப் போட்டார்கள். எல்.பி.ஆர். சிஸ்டத்தை விரிவுபடுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தொழிலாளர்களுக்கு ஏ, பி, சி, என்று மூன்று பிரிவாக ஒதுக்கப்படும் வீடுகளுக்கு வாடகை முறையே, ரூ. 20, 24, 30 என்று வைத்திருக்கிறார்கள். அதை ரூ. 15, 18, 20 என்று போட்டால் நலமாக இருக்கும். அதைப் பற்றிப் பல முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஓவர் டைம் அலவன்சை விருத்தாசலத்திலுள்ள தொழிலாளர்களுக்கும் எக்ஸ்டெண்ட் செய்ய வேண்டுமென்று அந்தத் தொழிலாளர்களும் நேரடியாக வந்து அமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். 20-11-1967ல் நடந்த தேர்தல் வேலை சம்பந்தமாக ஏறத்தாழ 20 கண்டிஞ்ஜன்சி மஸ்தூர்களை வேலைக்கு அமர்த்தினார்கள். ஏழெட்டு மாதம் கழித்து அவர்கள் வேலை இழந்து விட்டார்கள். வேலை இல்லையென்றால் அவர்களை நிறுத்தி விடுவதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அடுத்து வேலைக்கு ஆட்களை எடுத்துக் கொள்ளும்பொது முதல் சலுகை ஏற்கெனவே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பதுதான் நியாயம். நம்முடைய அரசு ஏழை மக்களின் அரசு, தொழிலாளர்களின் அரசு என்ற வகையில் அவர்களுக்கு முதற்.சலுகை கொடுக்க வேண்டும்.

சட்டம் என்ற முறையில் சொல்லவில்லை. சம்பிரதாயத்தை ஒட்டிச் சொல்லுகிறேன். அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ரிடையர் ஆகும்போது அவர்கள் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு வேலை கொடுப்பதில் முதற் சலுகையை கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நைட் அலவன்ஸ் எட்டணா கொடுக்கிறார்கள். ஒரு பன் 25 பைசா, ஒரு டீ 15 பைசா, தீர்ந்து விடுகிறது. அதை ஒரு ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் ஏழெட்டு வருடம் சர்விஸ் செய்திருந்தும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. குறைந்தபட்சம் இரண்டு வருடம் ஆனவர்களையாவது நிரந்தரமாக்க வேண்டும். ஏழெட்டு வருஷங்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிற நிலையை மாற்றி அவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சம்பளத் திட்டம் குறைவாக இருப்பதை மாற்றியமைக்க வேண்டும்.

எந்த தொழிற்சங்கத்தை அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் விரும்புகிறார்களோ, ஆதரிக்கிறார்களோ அந்தச் சங்கத்தை மட்டுந்தான் அங்கீகரிக்க வேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தில் நாலைந்து பேர்கள் தான் இருக்கிறார்கள். அந்த





நாலைந்து பேரும் எப்படிப்பட்டவர்கள் என்றால், "நான் தான் ராஜா" என்று கூறிக்கொண்டு கையிலே கம்பும் கத்தியும் வைத்துக்கொண்டு சுற்றிக் கொண்டிருப்பவர்கள். காலை 11 மணிக்குக் கையெழுத்தை போட்டு விட்டு வெளியே சுற்றிக் கொண்டிருந்து விட்டு மாதம் பிறந்த உடன் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அராஜகச் செயல் முன்பிருந்தவர்களால் வளர்க்கப்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். எந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பதற்கு சீக்ரெட் பாலட் முறை வைத்து, லேபர் கமிஷனர், லேபர் ஆபீசர் எல்லோரும் முன்னிருந்து ரகசிய வாக்கெடுப்பு நடத்தி எந்தச் சங்கத்தை மெஜாரிடி தொழிலாளர்கள் ஆதரிக்கிறார்களோ அதை அங்கீகரிக்கும் முறையை கொண்டுவர வேண்டும்.

இன்று தொழிலாளர்களிடையே முன்பிருந்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட அச்சத்தைப் போக்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் மற்ற குறைகளையெல்லாம் படிப்படியாக அமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, நேரடியாகச் சந்தித்துத் தீர்த்துக் கொள்வதற்கான வழி இருக்கின்ற காரணத்தால் அதிலே நம்முடைய அரசு கவனம் செலுத்தி அந்த அச்சத்தினைத் தொழிலாளர் மத்தியிலிருந்து நீக்குவதன் மூலம் அரசாங்க அச்சகம் சிறந்த முறையில் செயல்பட முடியும் என்பதைக் கூறி, மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நாகசுந்தரம் அவர்கள் என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபடி 3 நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து ஒன்று அல்லது இரண்டு நிமிஷங்கள் மட்டும் பேச விரும்புகிறேன். திருச்சி பிராந்திய அச்சகத்தில் மேலாளர், தொழிலாளர் உறவு நல்ல அளவில் இருந்து கொண்டிருக்கிறது. சுமுகமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே ஒரே ஒரு தொழிற்சங்கந்தான் இருக்கிறது. ஆனால் கூட அங்கிருந்து சில பிரச்சினைகள், நிரந்தரமாக்குதல், இன்கிரிமெண்ட் சாங்ஷன் செய்தல் ஆகியவற்றுக்காக சென்னைக்கு அனுப்பும்போது காலதாமதம் ஏற்படுகிறது என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள் திரு. முனு ஆதி அவர்கள் கூறியது போல் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு நிரந்தரமாக்கப்பட்டால்தான் அவர்கள் நிம்மதியாக, திருப்தியாக வேலை செய்ய ஏதுவாக இருக்கும்.

பிராந்திய அச்சகங்களில் ஓவர்டைம் தருவதில்லை என்ற குறை நீண்டகாலமாக இருந்து வருகிறது. சென்னையில் மட்டும் தருகிறார்கள், திருச்சிக்குத் தருவதில்லை. புதுக்கோட்டையில் கூடத் தருகிறார்கள். திருச்சியில் வேலை அதிகமாக இருந்தால் புதுக்கோட்டைக்கு அனுப்புகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஓவர் டைம் அலவன்ஸ் கொடுத்தாலும் அவர்கள் அந்த அளவுக்கு வேலை செய்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை. அதற்குத் தகுந்தபடி டர்ன் ஓவர் காட்டுகிறார்கள்.

புதிதாக ஆட்களை எடுக்கும்போது வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலே ஆட்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். நல்ல தொழிலாளர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்வதில்லை. பெரிய தனியார் அச்சகத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் கூட அரசாங்க அச்சகத்தில் வேலைக்கு வரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தை ஆட்களை அனுப்பும்படி கேட்கும்போது அங்கே யாரும் பதிவு செய்யாத நிலையில் சென்னையிலுள்ள அச்சகத் தொழிலாளர்களை திருச்சிக்கு அனுப்புகிறார்கள். சென்னையிலே இருந்த அந்தத் தொழிலாளர்கள் திருச்சியிலே போய் இருக்க வேண்டுமென்றால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மேலாளரைப் பார்த்து "சென்னைக்குப்

போகிறேன், என்னை மாற்ற வேண்டும்" என்று மகஜர் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை இல்லாமல் அங்கே உள்ளவர்களையே, நேரடியாகத் தேர்வு வைத்து, குழு அமைத்து மனு கொடுப்பவர்களைத் தேர்ந்தெடுத்தால் அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்களே அங்கே வேலை பார்க்க முடியும். இதை அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்வீப்பர் போன்றவர்கள் நல்ல முறையில் தொழில் கற்றுக் கொள்ளுகிறார்கள். பைண்டிங், கம்போஸிங் ஆகியவற்றில் திறமையுள்ள அவர்களுக்கும் தேர்வு வைத்து, அந்தத் தேர்வில் நல்ல முறையில் வெற்றி பெற்றால் அவர்களையும் அங்கே தொழிலாளர்களாகச் சேர்த்துக்கொள்ள வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE : Mr. Speaker, Sir, at the very outset I must congratulate the Hon. Minister for Harijan Welfare for one small thing. Last year when this Demand was going to come up before this House, there were a number of complaints from many friends of mine who were working in the Stationery Department and they knew that I would speak on this Demand. That was the situation last year but this year strangely nobody has approached me for raising any complaint in this House and I am very frank about it. So, I have to thank the Hon. Minister for it. This means that obviously due to the excellant efforts of the Hon. Minister for Harijan Welfare, problems have been solved to a very considerable extent and that is the inevitable conclusion that I have to come to. However, I know from very reliable sources that there are still a number of grievances and I am quite sure that these grievances will be looked into and disposed of by the Hon. Minister. Now, I would refer to some salient points.

Firstly, for any person who draws less than Rs. 200 it is impossible to lead a normal like after his transfer. When he is transferred he has to maintain two establishments, one establishment here and another establishment at the place of transfer. It is impossible by any stretch of imagination, for him to maintain these two establishments with Rs. 200. Even a person drawing Rs. 300 cannot maintain two establishments. So, I want this Ministry to come to a categorical decision that no person who has an income of less than Rs. 200 is transferred to distant places like Vriddhachalam and Tiruchirappalli.

Now I come to the next point. There are certain facilities like bun and tea which are given to the workers in this Department. It is stated in the speech of the Hon. Minister—

'Bun and tea are continued to be supplied to the workers working in shifts. In addition, multi-vitamin tablets and a quarter litre of milk are supplied to the employees exposed to hazards of lead fumes... '

This is actually something like a consolation prize. Of course a consolation prize is better than no prize at all. Still we must find out from the scientific people, what exactly is the method by which we can prevent these workers from getting occupational diseases or



occupational hazards like 'Sittacosis'. It is a major hazard which afflicts the workers working in metal melting and allied sections on account of lead fumes. Even textile workers suffer from such diseases because the cotton dust enters into their lungs. So these things cannot be avoided. But these diseases cannot normally be prevented by such measures like the supply of multi-vitamin tablets and a quarter litre of milk to these workers. So, I would request the Hon. Minister for Harijan Welfare to call some medical experts on the spot and find out what exactly is the problem of these people working under these hazards and how it should be solved and also what are the preventive measures to be taken.

Then I come to the next point. It is stated in the speech of the Hon. Minister that a One-Man Committee consisting of a Board Member was appointed and the Member has submitted his first report. A serious attempt has been made by the Hon. Minister to carry out the assurance given by her on the floor of the House last year. Now we look forward to some useful, practical and constructive suggestions from that particular report.

Now I come to the Demand. The Hon. Minister has moved the Demand forRs. 2,50,52,800. With regard to the Stationery and Printing Department, there is a provision of only about 1 crore of rupees. But there is still a gap of about Rs. 1½ crores. Let us presume that half a crore rupees is utilised for certain works which are not normally given to any private parties. Still we want to know what has happened to Rs. 106 lakhs or about Rs. 1 crore. I think that this does not include the value of the books which were sold and their value is less than half a crore of rupees. My presumption is that the sum of Rs. 106 lakhs includes the total amount of books, etc., like Gazette produced and distributed freely without expecting any monetary return. There is a lacuna and there is a gap of Rs. 1½ crores and I request the Hon. Minister to clarify the position.

Then with regard to the non-availability of books in the Government book depots, the distribution system of the saleable books must be stepped up. A number of complaints have been received from the public regarding the Government Book Depot at Mount Road. Next to the Government depot is Messrs. Higginbothams. If you just walk in there, you will be invited with smiling face by a person who would take you round the book-stall and you can have any book you want. But on the contrary in the Government Book Depot, you do not get such kind of reception and also you do not get the required books immediately. Sometimes some books are not available. I would request the Hon. Minister to apply her mind to this matter seriously so that the name of the ruling party is not impaired. In this connection I want to point out that a few books which may cost less than a rupee or a few rupees are in different parts of the building housing the Depot. Unless there is a good Public Relations Officer or some other officer to receive the public as soon as they enter the depot, the public will be irritated and they

will be inclined to leave the depot without purchasing any books. A sort of good word is enough and it does not cost anything to the Government. This is all I wanted to say in regard to this matter.

Finally, in the Review of the working of the Stationery and Printing Department during the year 1967–68, with regard to the Madras Government Press it is stated—

'It has now developed into the biggest single unit in the East, with about 4,000 employees.'

I am glad about it but the most important thing that I want the Hon. Members of this House and the Government to ponder over is with regard to the employees working in private companies or private publishing houses. There are also employees working in certain quasi-Governmental agencies in the Madras City who are neither classified as industrial workers nor Government employees and they do not get bonus or good wage. This is the unfortunate situation and I request the Hon. Minister to look into this matter and see that these employees get all the protection and facilities that the
மு.ப. 11-30 Government employees get. If they do not get those facilities, they are entitled to all the advantages that the industrial concerns offer to their workers. I want the Minister to address herself to this particular problem and solve it.

"The relationship between the employees and the management continued to be cordial throughout." I object to the inclusion of such sentence. When a similar sentence was there in a paper relating to the Electricity Department placed on the table, I objected to it. It invites trouble and makes us criticize. Such sentences could be avoided. Though an attempt has been made to solve the problem of labour and this Government has met with a measure of success in solving it, let us put that sentence in the next year's note after completely solving it. After hearing my distinguished Friend Mr. Munu Adi's speech, I find that there are a number of things to be set right there. I am quite sure that the energetic way in which the Minister has approached the problem will see a solution to this unfortunate labour relationship in that Department. With my good wishes that the Minister will succeed in plugging the loopholes and in seeing that the employees are kept in a satisfied condition, I wind up.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது ஓரிரு முக்கியமான காரியங்களைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன்.

முதன்முதலில், இந்த இலாகாவானது நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று ஆய்வறிக்கையில் இருப்பதைப் பார்த்தேன். குறிப்பாக நமது சட்டசபை நடவடிக்கைகள் காலாகாலங்களில் சட்டசபை உறுப்பினர்களுக்கு கிடைக்கவில்லை என்பதை அமைச்சரவர்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். கழிந்த ஜூலையில் நடந்த பட்ஜெட் கூட்டத்தின் ரிபோர்ட்கள் இதுகாறும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. அதை உடனடியாக விநியோகிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொரு விஷயம், இந்த சட்டசபையில் இருக்கிற உறுப்பினர்கள் யார் யார் என்று தெரிந்துகொள்வதற்காக சாதாரணமாக "ஹூ இஸ் ஹூ" என்ற புத்தகத்தை வெளியிடுவது வழக்கம். ஓர் ஆண்டு ஆகியும் இந்தப் புத்தகம் வெளியிடப்படவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சட்டசபையில் இருக்கிற உறுப்பினர்களை நேரில் தெரிந்து கொள்வதற்கு சில வேளை வாய்ப்பு இல்லாமல் இருக்கும், ஆதலால், இந்தப் புத்தகம் துரிதமாக அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொரு விஷயத்தை அடுத்தபடியாகக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டசபை உறுப்பினர்களுக்கென்று கெஜட் விநியோகம் செய்து தரப்படுகிறது. இந்த கெஜட் எல்லாம் தாள்தாளாக இருக்கிறதால் இதில் பல கஷ்டங்களும் சங்கடங்களும் இருக்கின்றன. ஆகவே, இதை தைத்துக்கொடுக்க முடியுமா என்பதை இந்த இலாகா பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சிறிய விஷயமாக இருந்தாலும் அமைச்சரவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான சங்கடம் மாணவர்களிடையே இருக்கிறது. அது புத்தகங்களைப் பொறுத்தது. பாட புத்தகங்களை பொருத்தவரையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக இந்த ஆய்வுரையில் நாம் பார்க்கிறோம். 70 லட்சம் புத்தகங்கள் என்று நினைக்கிறேன், 1966–67-ல் அச்சிடப்பட்டதாக அந்த ஆய்வுரையில் ஒரு பக்கத்திலே பார்க்கிறோம். அவைகளை துரிதமாக காலாகாலங்களில் மாணவர்களுக்கு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். தனியார்கள் துறை மூலம் கொடுக்கவேண்டுமா, ஏஜெண்ட்கள் மூலம் கொடுக்கவேண்டுமா, இந்த இலாகா மூலமாக கொடுக்கவேண்டுமா என்பதைபற்றியெல்லாம் விரிவாக அந்தந்த கல்வி வட்டங்களில் இருக்கும் கல்வி அதிகாரிகளோடு கலந்து உடனுக்குடன் பாடபுத்தகங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஜூனில் பள்ளிக்கூடங்கள் திறந்தால் ஜூலை அல்லது ஆகஸ்டில் கூட புத்தகங்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. பல பகுதிகளில் பெரும்பாலும் கிராமப்பகுதிகளில் இப்படிப்பட்ட பல பள்ளிக்கூடங்கள் இருப்பதால் புத்தகங்கள் விரைவில் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவிலிருந்து நமது சட்டங்களை எல்லாம் தொகுத்து 4 புத்தகங்களாக வெளியிட்டார்கள். அந்தப் புத்தகங்களை வெளியிட்ட பிற்பாடு ஏற்பட்டிருக்கும் சட்ட புத்தகங்களை தொகுத்து வால்யூமாக செய்யாத காரணத்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் நாம் வெளியிடுகின்ற சட்டங்களையும் அதோடு சேர்ந்த நோடிபிகேஷன்கள், திருத்தங்கள் போன்றவைகளை உடனுக்குடன் அச்சிட்டு நமது அரசாங்கத்திலிருந்து அவர்களுடைய இலாகா மூலமாக விநியோகம் செய்வதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த டிபார்ட்மெண்டிலிருந்து மாநிலங்களின் சட்டங்கள், சட்ட திருத்தங்கள் இவைகள் எல்லாம் கிடைப்பதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மவுண்ட் ரோடில் இருக்கும் கிளைக்குச் சென்றால் அங்கும் இல்லையென்று சொல்கிறார்கள். ஏஜெண்டுகளிடம் கேட்டாலும் அந்தப் புத்தகங்கள் கிடைப்பதில்லை. எந்தெந்த புத்தகங்கள் இன்று அச்சிடாமல் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அச்சிட்டு விநியோகம் செய்வதற்கு வேண்டிய துரித நறவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், ஸ்வீடனில் இருந்து நமக்கு கிஃப்ட் ஆக பேப்பர் கிடைத்திருக்கிறது. இது பொதுக்கணக்கு ஆய்வுக்குழுவில் கொண்டுவரப்பட்ட விஷயம் இந்த கிஃப்ட்பேப்பர் சரியான முறையில் பராமரிக்கப்

படவில்லை என்றும் ஒருசில பேப்பர்கள் கெட்டுப்போவதாகவும், அது காலாகாலங்களில் புத்தகமாக அச்சிட்டு வெளியிடாமல் இருந்த காரணத்தால் பல குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அங்கு பேசப்படுகிறது. ஆதலால் இந்தமாதிரியான காரியங்களை எல்லாம் உடனுக்குடன் கவனித்து இந்தமாதிரி கஷ்டங்கள் ஏற்படாத முறையில் கிஃப்ட் பேப்பர்கள் வந்தால் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை தொகுதியில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு குறை இருக்கிறது, அவர்கள் ஓவர்டைம் காம்பன்சேஷன் அலவன்ஸ் தங்களுக்கு கொடுக்கவில்லை என்று புகார்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு உடனடியாக அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'ஒன் மேன் கமிட்டி' நிறுவப்பட்டு அதனுடைய முதல் அறிக்கையானது அரசாங்கத்தின் கையில் வந்திருப்பதாக ஆய்வுரையில் கூறப்பட்டிருககிறது. இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற பரிந்துரைகளின்மீது துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானஷலேசேஷன் செய்ய வேண்டுமா என்பதைக் குறித்தும் வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், பைண்டிங் செக்ஷன்ஸ் அச்சகத்தில் இருக்கின்றன. அதில் பெண்களுக்கும் அங்கஹீனர்களுக்கும் அதிகமான வேலைவாய்ப்பு தேடிக்கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

ஒன்பது பிரிவுகள் இந்த இலாகாவின் அச்சகத்தில் இருக்கின்றன என்று அறிக்கையில் பார்த்தேன். இந்தப் பிரிவுகளை இன்னும் விரிவுபடுத்தி எந்தெந்த பகுதிகளுக்குத் தேவையாக இருக்கிறதோ அந்தந்தப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது சிறந்ததாக இருக்கும். 1967 பொதுத் தேர்தலுக்கு இந்த அச்சகம் நல்ல முறையில் பணி புரிந்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நல்ல காரியங்கள் செய்வதில் தொழிலாளர்களும் இந்த நிறுவனத்தில் இருக்கும் அதிகாரிகளும் நல்ல முறையில் ஒத்துழைத்து, இந்த நிறுவனம் சிறந்த முறையில் இயங்குவதற்கு இந்த இலாகா நல்ல முறையில் பாடுபடும் என்று நம்பிக்கையுடன் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த அவைத்தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு கோ. பூவராகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் மானியக்கோரிக்கை மீது எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையையொட்டிச் சில கருத்துக்கள் சொல்லலாமென்று கருதுகிறேன்.

இந்த அச்சகத் துறை மானியத்தின் மீது, ஆளும் கட்சியின் சார்பாக உறுப்பினர் ஒருவர் பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அந்த அளவுக்கு ஏற்கனவே இருந்த அரசாங்கம் இதை விட்டுப் போய்விட்டது என்று சொன்னார்கள். அவர்களுக்கு இருக்கிற ஆத்திரம் எல்லாம் அவர்கள் ஒரு நான்கு பேர்களை சேர்த்து வைத்துக்கொண்டு , அதற்கு யூனியனுக்கு அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை. அதற்கு யாரோ குறுக்கே நிற்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் அவர்கள் பேசினார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இங்கே ஊழல் உள்ளது, அங்கே அது சரியில்லை என்று மொத்தமாக அவர்கள் சொன்னார்களே தவிர, இன்னின்ன இடங்களில்



இன்னின்ன ஊழல் நடக்கிறது, இன்னின்ன ஊழல் ஏற்கனவே இருந்தது, அதைக் களைவதற்கு இப்படி முயற்சி செய்தால், இப்படி திட்டம் வகுத்தால் அதைச் செய்ய முடியும் என்று தொழிற்சங்கத்தை நடத்துகிறவர்கள், தொழிற்சங்கத்தை நடத்தவேண்டுமென்று விரும்புகிறவர்கள், சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. அதற்கு மாறாக முன்னால் இருந்த அமைச்சர்கள் இதையெல்லாம் கெடுத்து விட்டுப்போய்விட்டார், அவர் கெடுத்ததையெல்லாம் இப்போதுள்ள அமைச்சர் சரிசெய்துகொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். எதைக் கெடுத்து விட்டுப் போய்விட்டார்கள் என்று சொன்னால் நான் பதில் சொல்லமுடியும். மொத்தமாகச் சொன்னார்கள். நான் இப்போது பேசுகிற பேச்சில் குறிப்பிட விரும்புகிறேன்.

அது பழம்பெரும் அச்சகம். அது ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட அச்சகம். அந்த அச்சகத்தை வட்டாரவாரியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் கிளை அச்சகத்தை ஏற்பாடு செய்து அந்தப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கும் , மற்றும் இரண்டு, மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க வேலைகளை அந்த அச்சகங்களில் அச்சிட்டுக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கிருப்பவர்களை மாற்றுவதற்காகத்தான் அந்த ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்று கூறப்பட்டது. புதிதாக ஒரு கிளை அச்சகத்தை ஆரம்பித்தால் அதற்குப் பயிற்சிபெற்ற ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். முதலாவதாக அங்கு போவதற்கு யார் யார் விருப்பம் தெரிவிக்கிறார்களோ அவர்களுடைய விருப்பத்தையறிந்து அவர்கள் நியமிக்கப்பட்டு ஸ்பெஷல் அலவன்ஸும் கூட அவர்களுக்குக் கொடுத்தார்கள். முன்பு அவ்வாறு கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் அப்படித்தான் இருக்கும் என்று கருதுகிறேன். மூன்றிலே இரண்டு பங்கு பழையவர்களுக்கும், மூன்றிலே ஒரு பங்கு புதியவர்களுக்கும் பயிற்சி கொடுத்தும் அந்தக் கிளை அச்சகத்தைச் செம்மையாக நடத்த வேண்டுமென்பது முன்பிருந்த அரசாங்கத்தின் நோக்கம். எனவே கெடுத்துவிட்டதாகச் சொல்ல முடியாது. வேண்டுமென்றே மாற்றிக் கொண்டிருந்தார்கள், முன்னாலே, என்று சொன்னார்கள் வேண்டுமென்றே மாற்றிவிட்டார்கள் என்று சொல்வார்கள். தொழிற் சங்கத்தலைவர்கள் அதை ஒரு கோரிக்கையாக வைத்து வாதாடுவது சம்பிரதாயம், வழக்கம். அந்தப் பிரச்சினைக்கு போவதற்கு நான் விரும்பவில்லை. நடைமுறை இதுதான். கிளை அச்சகங்கள் திருச்சியிலும், விருத்தாசலத்திலும், சேலத்திலும் ஆக மூன்று கிளை அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மவுண்ட் ரோட்டிலே பாடபுத்தகங்களுக்கு என்று ஒரு அச்சகம் தோற்றுவிக்கப்பட்டது. அதில் பெண்களுக்குத் தனிப்பகுதி வைத்திருந்தோம். தலைமையச்சகத்திலே அவர்களுக்கு என்னென்ன சிரமங்கள் இருந்தன என்பதைத் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களை விசாரித்துப் பார்த்தால் சொல்வார்கள். அப்படிப்பட்ட சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்றுதான் மவுண்ட் ரோட்டிலே அச்சகத்தை ஏற்படுத்தி பெண்கள் வேலை செய்வதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். பாடப்புத்தகங்களை தனியாக ஒரு அச்சகத்திலே குறித்த காலத்தில் அச்சடித்து மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் திரு. முனு ஆதி அவர்கள், அதில் சிரமங்கள் இருக்கின்றன, கஷ்டங்கள் இருக்கின்றன, முன்னாலிருந்த அரசாங்கம் தவறாகச் செய்துவிட்டது, ஆட்களை மாற்றுவதற்காக இந்த ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இவ்வாறு இருக்கிறது என்று தெரிந்தால் அந்த இலாகாவிலுள்ளவர்களைக் கூட்டிப் பேசி இவ்வாறு செய்தது தவறு, தொழிலாளர்களுக்கு ஒத்தாசை காட்டும் அறிவில் மத்திய அச்சகத்திற்கே எல்லாவற்றையும் மாற்றிவிடுவது என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்து

இப்பொழுது உத்தரவு போட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. அவ்வாறு முன்பு இருந்த ஏற்பாட்டை எடுத்ததாக இதில் காணப்படவில்லை. ஆனால் சட்டமன்ற பொறுப்பிலிருக்கக்கூடிய ஓர் உறுப்பினர் "ரௌடித்தனம்" நடக்கிறது என்று குறிப்பிட்டார். தொழிலாளர் பற்றி அவ்வாறு சொன்னது என்னைப் பொறுத்த வரையில் சரியாக அமையாது என்று கருதுகிறேன். அப்படியிருந்தால் அந்தக் குறிப்பை . . .

திரு. முனு ஆதி : சார், பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிற உறுப்பினர் உட்கார்ந்தாலொழிய நீங்கள் குறுக்கிட முடியாது.

திரு. கோ. பூவராகன் : தொழிற்சங்கத்திலிருப்பவர்கள் தொழிலாளர்களுக்கு சலுகைகள் வேண்டும், அவைகளைப் பெற்றுத் தர வேண்டுமென்று சொன்னால் அதை உரியவர்களிடத்திலே சொல்லி முறையாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இன்னொரு தொழிலாளரைத் தாக்குவது, வேறுவிதமாகச் செய்வது, அப்படி நடக்கிறார்கள், இப்படி நடக்கிறார்கள் என்று கூறுவதெல்லாம் பொருத்தமாக இருக்காது. குறைகள் நடக்கிறது என்றால் இம்மாதிரித் தகவல்களை அமைச்சருக்கு எழுதினால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும் பரவலாக பேசவேண்டாம் என்று அமைச்சர்கள் கூறினார்களே, அதுபோல எத்தனை குறைபாடுகள் இந்த அமைச்சரிடத்தில் கொடுக்கப்பட்டன, அவைகளின் மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை அமைச்சரவர்கள் பதில் உரையிலே சொல்லுவார்கள்.

பெரிய அமைப்புகளை நடத்தும்பொழுது அதுவும், அரசாங்கமே நடத்தும்பொழுது, அதில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக்கொள்ளும் பொழுது அதிலுள்ள எல்லாத் தொழிலாளர்களும் ஒரேமாதிரியாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதிலே பல சங்கடங்கள், சீர்கேடுகள் நடந்திருந்து அவைகளைத் திருத்தியமைத்திருக்கிறோம். இது, நான்கைந்து ஆண்டுகளாக நடந்த நடவடிக்கைகளை உற்றுப்பார்த்தால் நன்றாகத் தெரியும். அந்த இலாக்கா காரியதரிசி, டைரக்டரெல்லாம் இருக்கிறார்கள். அவர்களைக் கூட்டிப் பேசுங்கள். அவ்வாறு கூட்டிப் பேசி அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டால் நலமாகயிருக்கும். அந்த இலாக்கா காரியதரிசி, டைரக்டர் ஆகியவர்கள் இதைச் செவ்வையாகச் செய்வதற்கு முன்பு பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதில் அவ்வளவு சிரமங்கள் இருந்தன. இரண்டு ஷிப்டுகள் மத்திய அச்சகத்திலேயிருந்தன. ஒரு ஷிப்ட் சரியாக நடக்கும், இரண்டாவது ஷிப்ட் சரியாக நடப்பதில்லை, ஊழல் நடக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் பொறுப்பேற்றவுடன் இரண்டு ஷிப்டுகளையும் பார்த்து வேலை நடப்பதைப் பற்றிக் கணக்கெடுத்தேன். அவ்வாறு கணக்கெடுக்கும்பொழுது மின்சாரக் கணக்கைப் பார்த்தால் இரண்டு ஷிப்டுகளுக்கும் வித்தியாசமிருந்தது. மின்சாரம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. "டர்ன் ஓவரை அதிகப்படுத்த வேண்டுமென்று தோன்றியது. அதற்குக்கூட ஒரு கமிட்டி போட்டு பரிசீலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மூவாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒரே இடத்தில் வேலைகளைச் செய்வதைவிட பரவலாகப் பல இடங்களில் சீராக இருந்தால் நல்ல முறையில் நடக்கும் என்று நினைத்து, அவ்வாறு செம்மைப்படுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இயந்திரங்கள் மிகமிகப் பழமையாயிருந்தன. அவைகளை ஆண்டுக்காண்டு புதுப்பிக்க வேண்டுமென்று அந்த ஐந்தாண்டுக் காலத்திலே செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இயந்திரங்களைப் புதுப்பிக்க வேண்டும், பழமையான இயந்திரங்கள் சரிவர வேலை செய்வதில்லை, அதனால் தொழிலாளர்களுக்கு உற்சாகம் குறைந்துவிடுகிறது என்பதற்காக காரியதரிசி அவர்களையும், டைரக்டர் அவர்களையும்





கலந்துகொண்டு, ஒவ்வொரு ஆண்டும் இயந்திரங்களை மாற்ற வேண்டுமென்று ஏற்பாடு செய்து, அவ்வாறு மாற்றப்பட்டிருப்பதைப் பார்க்க வேண்டும். இயந்திரங்களைப் பொறுத்தவரையில் என்ன சங்கடங்கள் என்றால் "ஃபாரின் எக்ஸ்சேஞ்சுகள்" கிடைக்காத நிலை. மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி குறித்த அளவிலே கொஞ்சம் "ஃபாரின் எக்சேஞ்ச்" கேட்டுப்பெற்றிருந்தோம். அந்த இயந்திரங்கள் வந்து சேர்ந்திருக்கின்றனவா, அவற்றின் மூலம் வேலை தொடங்கப்பட்டிருக்கிறதா, எவ்வாறு நடக்கிறது என்று பார்க்க வேண்டும். அப்படியில்லையென்றால், ஆண்டு தோறும் ஒதுக்கியது மாதிரி நல்ல முறையிலே செய்து புதிய இயந்திரங்களைப் போட்டு நல்லபடியாக வேலைகள் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம்முடைய அரசாங்க அச்சகத்திலே கொடுத்திருக்கிற வேலைகளைப் பார்க்க வேண்டும். மிகப் பொறுப்பான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாடப்புத்தகங்கள் மட்டுமல்ல, தேர்தல் நடந்தால் வாக்குச் சீட்டுகள் அச்சடிப்பதும் அங்கேதான், அரசாங்க நடவடிக்கைக் குறிப்புகள் தயாரித்துக் கொடுப்பதும் அங்கேதான். இப்படிப் பல நல்ல வேலைகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பொறுப்பான வேலைகளை அங்கு செய்கிறார்கள். ஓரிருவர் தவறு செய்தால் அதற்காக அச்சகம் முழுவதும் தவறாக நடக்கிறது என்று தப்புக் கணக்குப் போடக்கூடாது. அவ்வாறு சொன்னால் அந்த இலாக்காவிலுள்ளவர்களுக்கு உற்சாகம் குறைந்துவிடும்.

என்னைப் பொறுத்தவரையிலே, எதிர்கட்சியிலேயிருந்து குற்றம் சொல்லுவார்கள், இப்பொழுது ஆளுங்கட்சியிலிருந்தும் குற்றம் சொன்னார்கள். அவ்வாறு குற்றங்களைச் சொன்னவர்கள் அந்தக் கஷ்டங்களை எப்படிச் செம்மைப்படுத்தி சரியாகச் செய்ய முடியும் என்ற யோசனைகளைச் சொல்ல முன்வராமல் வெறும் குற்றச்சாட்டுகளையே அடுக்கிக்கொண்டு போனார்கள். என்னைப் பொறுத்தவரையில் குற்றத்தையும் சொல்லுவேன், அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் யோசனைகளையும் சொல்லுவேன். என்னுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் அது தெரியும். வெறும் குற்றங்களை மட்டும் சொல்லிவிட்டுப் போகும் பழக்கம் என்னிடத்தில் கிடையாது. முன்னலிருந்த அமைச்சர்கள் இப்படிச் செய்துவிட்டு போய்விட்டார்கள், பாழ்படுத்திவிட்டுப் போய் விட்டார்கள், கெடுத்துவிட்டுப் போய்விட்டார்கள், எட்டாண்டு காலமாக, பத்தாண்டு காலமாகச் செய்துவிட்டுப் போனதை இரண்டொரு ஆண்டுகளில் சரி செய்ய முடியவில்லை என்று இப்படி மொத்தமாகக் குற்றம் சாட்டி விட்டுப் போவது இவ்வளவு பொருத்தமாக இராது. தொழிற்சங்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், தொழிற்சங்கத் தலைவராக வர எண்ணிக்கொண்டிருப்பவர்கள், அதற்கு முயற்சி எடுப்பவர்கள் இப்படிப் போகக்கூடாது. அதுவும் சட்டமன்றத்தில் பொறுப்பு வகிப்பவர் இந்த வழிகளிலே செல்வார்கள் என்றால் அது நல்ல முறையில் அமையாது.

இதற்கு ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. கெய்வார் அவர்கள் இதை ஆராய்ந்து எவ்வாறு நல்ல முறையிலே இந்த அமைப்பு சீராக இருக்க வேண்டுமென்பதற்கு யோசனைகள் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த அறிக்கையை இந்த அவை முன் வைத்து விவாதித்து உறுப்பினர்களின் கருத்தையும் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஒருவர் எடுக்கும் முடிவே முடிவு என்று இருந்துவிட வேண்டியதில்லை. இந்த மன்றத்தின் முன் வைத்து விவாதித்தால் உறுப்பினர்களின் பல நல்ல யோசனைகள், நல்ல கருத்துக்கள் கிடைக்கும். அதை வைத்து அச்சகம் நல்ல முறையிலே செம்மையாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நன்றாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, இந்த அச்சகத் துறையிலே பல கிளை அச்சகங்கள் இருக்கின்றன. மூன்று அச்சகம், இரண்டு அச்சகம் என்றிருக்கின்றதை ஒன்றாக இணைத்து தனி டெபுடி டைரக்டர், டைரக்டர் பொறுப்பிலோ அல்லது ஜாயின்ட் டைரக்டர் பொறுப்பிலோ வைத்து விரிவுபடுத்த முயற்சி எடுக்க வேண்டும். இதனால் ஏற்கனவே இருந்த நிலையில் தவறு இருக்

கிறது என்பது பொருள் அல்ல. இருக்கின்றதை அந்தந்த வட்டாரத்திலே விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். தென் பிராந்தியங்களுக்குப் பயன்படும் வகையில் திண்டுக்கலில் ஒரு அச்சகம் அமைப்பது என்று முன்பிருந்த அரசாங்கம் முடிவு செய்தது. தென் மாவட்டங்களைக் கவனிப்பதற்கான இந்த முடிவைச் செய்தார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிளை அச்சகத்தைத் திறக்கலாம். இவ்வாறு செய்வதால் ஒரேயிடத்தில் குவிந்திருக்கும் வேலைப்பளு குறைந்து வேலை இலகுவாகவும், மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கு வேலை செய்ய சந்தர்ப்பம் கொடுக்கவும் வாய்ப்பாக இருக்கும். அந்த முறையில் ஆவன செய்ய முயற்சியெடுக்க வேண்டும்.

இன்றையதினம் இருக்கிற இந்த மத்திய அச்சகத்தைக் கூட இன்னும் விரிவு படுத்த வேண்டும். அதை வேறு இடத்திற்கு தனிப்பட்ட முறையிலே மாற்றுவதற்கு முடியுமா என்று பார்க்க வேண்டும். இடங்கள் கூட ஏற்பாடு செய்து, அதற்காக பணம் கூட ஒதுக்கி ஏற்பாடு ஆகியிருந்தது. அதற்காக ஏன் முயற்சிகள் எடுக்கப்படவில்லை. எது எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி கவனிக்க வேண்டும். அப்படி ஒன்று கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். கஷ்டங்கள் இருக்கலாம், நிதி ஒதுக்குவதிலே சிரமங்கள் இருக்கலாம். இந்தத் துறைக்கு 2 கோடி ரூபாய்க்கு மேலே கேட்டிருக்கிறார்கள். இதற்குச் செலவு செய்திருக்கிற பணம் நல்ல காரியங்களுக்காகத் தான் செலவு செய்யப்படுகிறது. அனாவசியக் காரியங்களுக்கு, தண்டக் காரியங்களுக்கு செய்திருக்கிறார்கள் என்று சொல்வது முறையல்ல. இதற்குச் செலவு செய்வதை நடைமுறை நல்ல காரியங்களுக்கு என்று தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்—எடுத்துக் கொள்ள வேண்டும். அதிக வேலைவாய்ப்புகள் அளிக்க வேண்டும்.

வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் வரக்கூடிய முறையிலே புதிய அச்சகங்களை தோற்றுவிக்க வேண்டும். அச்சகங்கள் வாடகைக் கட்டிடங்களிலிருந்தால் அதை புதிய இடங்களுக்குப் புதிய கட்டிடங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிளை அச்சகத்திற்கும் ரூ. 80,000 தான் செலவாகும். அங்கங்கே இருக்கிற இடங்களை நம்முடைய காரியதரிசி அவர்களும் டைரக்டர் அவர்களும் கூடப் பார்த்திருக்கிறார்கள். சேலத்திலே கூட டிரான்ஸ்போர்ட் ஆபீஸிலே, அதற்குப் பக்கத்திலே ஒரு இடத்தைப் பார்த்தார்கள். அந்த இடத்தை வாங்குவதற்கு அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களோடு பேசியிருக்கிறார்கள். அந்த இடத்திலே ரூ. 80,000 செலவு செய்து கட்ட முயற்சி எடுக்கலாம், கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஆண்டுதோறும் ஒன்று கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே போல, விருத்தாசலத்திலே ஒரு கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அங்கே இருக்கிற செராமிக் பாக்டரிக்குக் பக்கத்திலே 4 ஏக்கரை தொழில் துறை இலாகாவோடு பேசி வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் அந்த இடத்தைக் கொடுப்பதற்கு முன் வந்தார்கள். அதைப்பற்றி பேசி முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம், இல்லையென்றால் அங்கு இரண்டு மூன்று பெரிய யூனிட்டுகள் இருக்கின்றன. பயன்படுத்தப்படாமலேயே அவை இருக்கின்றன என்று கருதுகிறேன். அந்த யூனிட்டு இடங்களைப் பயன்படுத்த முடியுமா என்று பார்த்து, பயன்படுத்த முடியுமென்றால் அந்தத் துறை காரியதரிசி அவர்களோடு பேசி, அந்த இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அதே போல, திருச்சியிலுள்ள அச்சகம் நம்முடைய அரசாங்க தொழிற்பேட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மாற்றப்பட்டதோடு அந்த இடத்திலே இன்னும் இடம் இருக்கும் என்று சொன்னால் அந்த அச்சகத்திற்கு ஒரு இடத்தைப் பெற்று அதை இன்னும் விரிவு படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி விரிவு படுத்துவதின் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும். வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.



பெண்களைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் கட்சி உப தலைவர் அவர்கள் சொன்னார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டும். பெண்களுக்கு வேலை வாய்ப்பு தர ஆண்டுதோறும் ஒரு முறை வைத்துக் கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் 50 பேர், அல்லது 60 பேரை இந்த அச்சகத் தொழிலிலே ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு முயற்சிகள் நடக்கின்றதா. எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், எந்த அளவுக்கு அதிகமாகச் செய்திருக்கிறார்கள் என்று இதிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இதை அமைச்சரவர்கள் பதிலளிக்கும்போது கூறுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இந்த தொழிற்சங்கத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே இருந்த தொழிற்சங்கத்திற்கு அனுமதி கொடுக்கவில்லையென்றெல்லாம் குறைப்பட்டுக்கொண்டார்கள். அவர்களே கூட அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். ஒரு தொழிற்சங்கத்திற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்றால் இத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. தொழிற்சங்கத்திற்கு அனுமதி அமைச்சர் அவர்களால் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு தொழிற் கமிஷனரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது போக வேண்டும். இது அமைச்சராலே அனுமதி வழங்கப்படுவதில்லை. அங்கே அவர்கள் பார்த்து கொடுக்க வேண்டும். ஏற்கனவே ஒரு தொழிற்சங்கம் இருந்தால் இன்னொரு தொழிற்சங்கம் வைப்பதில்லையென்று அவர்களே நியதி வைத்திருக்கிறார்கள். புதிய சங்கம் வைப்பதிலேயும் ஒன்றுமில்லை. அந்தச் சங்கம் வைப்பதற்கு இடையிலே யாரோ இடையூறாக இருக்கிறார்கள். யார் யார் இடைஞ்சலாக இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் அப்படி சொல்லுகிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். இதை அரசியல் நிறுவனங்கள் கெடுக்கப்பார்க்கின்றனவா? இதில் பொறுப்புள்ளவர்களை யார் நியமிக்கிறார்கள்? யார் யார் இருந்துகொண்டிருக்கிறார்கள்? சாதாரணமாக அரசாங்கத் தொழிலைப்போல இதிலேயும் கவனம் செலுத்தாமல் இருந்துவிடக் கூடாது. இதிலும் நல்ல முறையிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். இருக்கிற தொழிற்சங்கத்திலே நாங்கள் இடையூறுகள் செய்து விட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். தொழிற்சங்கங்களிலே நாங்கள் பிளவு ஏற்படுத்தி விட்டோம் என்றும் சொன்னார்கள். தொழிற்சங்கங்களை அவர்களே தனிப்பட்ட முறையில் வைக்கிறார்கள். தொழிற்சங்கத்தை மந்திரிகளாகப் போய் ஏற்படுத்தி வைப்பதில்லை. தொழிற் சங்கத்தை நடத்துகிறவர்கள் கிளர்ச்சிகள் நடத்துகிறார்கள். அச்சகத் தொழிலாளர்களிடத்திலே மோதல் ஏற்படுத்தி, ஒரு பிளவு ஏற்படுத்தி அவர்களைப் பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். அது பொருத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக்கொடுக்க வேண்டும். கஷ்டங்கள் இருந்தால் போக்க வேண்டும். சிரமங்கள் இருந்தால் போக்க வேண்டும், துன்பங்கள் இருந்தால் போக்க வேண்டும். அவர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும். என்னைப் பொறுத்த அளவிலே நான் இந்த நோக்கத்துடன் தான் பணியாற்றி வந்திருக்கிறேன் என்று சொல்வேன்.

அது மட்டும் அல்ல, அங்கு இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டும். அங்கு எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விட்டன என்று சொல்ல முடியாது. பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விட்டால் எதுவும் தேவையில்லை. இந்த சட்டமன்றம் தேவையில்லை. தமிழகத்திலே இருக்கிற அத்தனை பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டால் இந்த சட்டமன்றம் அவசியமில்லை. இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவசியம் இல்லை; அமைச்சர்கள் அவசியம் இல்லை; அதிகாரிகள் அவசியம் இல்லை. ஒரு பிரச்சினை தீர்ந்தால் இன்னொரு பிரச்சினை புதிதாக வரும். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது. வளருகின்ற சமுதாயத்திலே இது இயற்கையாகவே இருந்துகொண்டிருக்கும். நான் இருந்தபொழுது தொழிலாளர்கள் சில வசதிகளைக் கேட்டார்கள். நான் செய்து கொடுத்

தேன். அங்கே பள்ளிக்கூடம் கேட்டார்கள். பள்ளிக்கூடம் கட்டிக்கொடுக்கப்பட்டது. எல்லோருக்கும் வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்லவில்லை. இப்பொழுதும் எல்லாம் முடிந்து விட்டது என்று சொல்ல முடியாது. மூவாயிரம் பேருக்குமேல் இருக்கிற இடத்தில் 300 பேருக்கு வீடு கொடுத்தால் மற்றபேர், எங்களுக்கு ஏன் வீடு கொடுக்கவில்லை என்னும் அளவிலே தான் பிரச்சினைகள் இருக்கும். திரு நாகசுந்தரம் அவர்கள் கூட புதுக்கோட்டை அச்சகத்திற்கு ஏன் அலவன்ஸ் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அது முன்னாலேயிருந்த பிரச்சினை. அது கொடுக்க வேண்டியதுதான். அது சம்பந்தமாக நிதி இலாகாவுக்கும் இந்த இலாகாவுக்கும் தொடர்ந்து நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆவல். இப்பொழுது இருக்கிற அமைச்சர் அவர்கள் அதைக் கொடுத்தால் மிக நலமாக இருக்கும்.

பொதுவாக, இந்த அச்சுத் தொழிலைப் பொறுத்த வரையிலே இன்னும் ஸ்டேஷனரி விநியோகமும் சேர்ந்து இந்த மானியக் கோரிக்கையிலே வந்திருக்கிறது. பரவலாக அதிலே குறைகள் சொல்லப்பட்டன. எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூடச் சொன்னார்கள்—உபதலைவர் அவர்கள் என்று கருதுகிறேன்.—இந்த சட்டமன்ற நடவடிக்கைகள் எல்லாம் நீண்ட நாளாகியும் அச்சிட்டுக் கொடுக்கப்படவில்லையென்று சொன்னார்கள். இந்த புத்தகங்கள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். முன்பு நான் இருந்தபொழுது, எப்பொழுது அச்சிடுவதற்குத் தேவையானவைகள் அனுப்பப்படுகின்றன; கம்போசிங் வேலை எத்தனை நாட்கள் நடக்கிறது, பிரிண்டிங் எத்தனை நாட்கள் நடக்கிறது, வேலை முடிந்து டெஸ்பாச் எப்பொழுது செய்யப்படுகிறது என்ற ஒவ்வொரு விவரத்தையும் அந்த புத்தகத்தின் பின் பக்கத்திலே போட்டால், எந்த இலாகாவிலே தவறு நடந்திருக்கிறது, யார் இதற்குக் காரணம் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும் என்று நான் சொல்லியிருந்தேன். அந்த முறையைக் கடைப்பிடித்தால் நல்லது. எந்த எந்த இலாகாவிலிருந்து அவர்களுக்கு எப்பொழுது போகின்றது? இந்த இலாகாவிலே எத்தனை நாட்கள் வைத்திருக்கிறார்கள்? திரும்பவும் அந்த இலாகாவிலே எத்தனை நாட்கள் வைத்திருக்கிறார்கள்; அதன் பிறகு இந்த இலாகாவுக்கு எப்பொழுது அனுப்பப்பட்டது என்று முறையாக கணக்கெடுத்தால் இந்த இலாகாவிற்கு தனிப்பட்ட பழி வராது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டேஷனரி அனுப்பும்போது கூடுமான வரையிலே, அரசாங்க முத்திரையைப் போட வேண்டும். இப்பொழுது பென்சிலிலே கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ் என்று போடுகிறார்கள். நம்முடைய அரசாங்க முத்திரைகள் இருக்க வேண்டுமென்பது நியதி. இப்பொழுது அதைக் கடைபிடித்து வருகிறார்களா என்பது தெரியவில்லை. இன்னும், இதர பொருள்கள் அத்தனையிலும் நமது அரசாங்க முத்திரைகள் இருக்க வேண்டும். அப்படி முத்திரை இருந்தால் பரவலாக வேறு ஒருவரால் அதைக் கையாள முடியாத அளவுக்கு ஒரு சந்தர்ப்பம் உண்டாகும்.

இங்கிருந்து ஸ்டேஷனரிகளை மாவட்டங்களுக்கு அனுப்புகிறோம். அதில் கொஞ்சம் காலதாமதம் ஆகின்றது. அந்த காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டு எவ்வளவு தேவை, இந்த ஆண்டு எவ்வளவு தேவை என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்குப் பிரகாரம் போய்ச் சேருகின்றதா என்று பார்க்க வேண்டும். தாலுகாவிலே இருக்கின்ற கணக்குப்பிள்ளை, மணியக்காரர்கள் இவர்களுக்கு எல்லாம் பாரங்கள், எழுது பொருள்கள், இதர பொருள்கள் அத்தனையும் காலாகாலத்தில் கிடைக்காமல் இருப்பதை நாம் பார்க்கின்றோம். அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். அதற்கென்று ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் சரியாக இயங்குகிறாரா என்று பார்க்க வேண்டும். அவர் சுறுசுறுப்பாக இயங்குகிறாரா என்று பார்க்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.



இந்த சட்டமன்ற நடவடிக்கைகள் உரிய காலத்திலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். இங்கே கூட, நம்முடைய செக்ரட்டேரியட்டிலே ஒரு அச்சகம் வைக்க வேண்டுமென்று முன்பு சொல்லப்பட்டது. அதை நிறுவுவதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கலாம். ஹைகோர்ட்டிலே கூட ஒரு அச்சகம் இருக்கிறது. அதைப்போல இங்கே செக்ரட்டேரியட்டிலே ஒரு அச்சகம் அமைத்தால், செக்ரேட்டிரியட்டிற்குத் தேவையானவைகள், நமது நடவடிக்கைகளையெல்லாம் இங்கேயே அச்சடித்துக்கொள்ளலாம். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு இடம் பார்த்து ஏற்பாடு செய்யலாம். ஆனால், இங்கேயே இடம் போதவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், இங்கேயே, பக்கத்திலே ஏதாவது ஒரு இடம் பார்க்க வேண்டும். இங்கே பக்கத்திலே மிலிட்டரிக்கு ஒரு இடம் வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தை அவர்களிடம் பேசி—காலியாகத் தான் இருக்கிறது என்று கருதுகிறேன்—அந்த இடத்தை அவர்கள் முறையாக, ஒழுங்காக, அதிகமாக பயன்படுத்துகிறார்களா என்று அறிந்து அவர்கள் பயன்படுத்தவில்லையென்று சொன்னால், அதைக் கேட்க முடியுமா என்று பார்த்து, அந்த இடத்தை நாம் வாங்கி, அச்சகத்தை அமைக்க முடியுமானால் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அப்படியில்லை என்று சொன்னாலும், தனிப்பட்ட முறையிலே தனிக் ந. ப.
கவனம் செலுத்தி, துரிதமாக நடவடிக்கை எடுத்து, குறைந்த பட்சம் 12 00
மூன்று மாதங்கள், நான்கு மாதங்களுக்காவது கிடைக்கும்படிச் செய்தால் தான் பயனுள்ளதாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டும். அது மாதிரி தான் மற்ற அறிக்கைகள், ஸ்டேட்மெண்டுகள் முதலியவைகளெல்லாம் உரிய காலத்தில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். ஓராண்டுக்குப் பிறகு வந்து, அதனால் பயன் இல்லாத நிலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இவைகளெல்லாம் உரிய காலத்தில் வருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இலாகாவின் அதிகாரங்களுக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்து, இப்படி, இவ்வாறு செய்ய வேண்டும் என்று சொல்லிவிட வேண்டும். முன்பு, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இந்த இலாகாவில் இருக்கிற சூப்பரின்டெண்டெண்டு, காரியதரிசி, டைரக்டர் இவர்களெல்லாம் ஒன்றாக இருந்து, இந்த நடவடிக்கைகளெல்லாம் எவ்வாறு நடைபெறுகின்றன, சீராக நடைபெறுகின்றனவா என்று அடிக்கடி கவனித்து வந்தார்கள். அந்த முறை இப்பொழுதும் பின்பற்றப்பட்டு வருகிறதா என்பது தெரியவில்லை. அப்படி பின்பற்றப்படவில்லை என்றால், அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும். என்ன கஷ்டம், என்ன சங்கடம் என்பதைப் பார்த்து, அதை நிவர்த்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும்.

குறைகளைப் பற்றி சொன்னார்கள். குறைகளைச் சொல்லிக் கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நான் முன்பு தனிப்பட்ட முறையில் தொழிலாளர்களைச் சந்தித்த பொழுது கூட சொல்லியிருக்கிறேன். இரண்டு பெட்டிகள் இருக்க வேண்டும். ஒரு பெட்டியில் அவர்களுக்கு ஏதாவது குறைகள் இருந்தால் அந்தக் குறைகளை எழுதிப் போடுவதற்கு சந்தர்ப்பம் இருக்க வேண்டும். கையெழுத்து கூட போடாமல் எழுதலாம். இன்னென்ன குறைகள் இந்த இலாகாவில் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் குறைகளெல்லாம் தீர்க்கப்பட வேண்டும். என்று அவர்கள் அந்தப் பெட்டியில் எழுதிப் போடலாம். இன்னொரு பெட்டி வைத்து அதில் இந்த இலாகாவை சீரமைப்பதற்கு வேண்டிய நல்ல யோசனைகளை தொழிலாளர்கள் எழுதிப் போடலாம். தொழிலாளர்கள் நேரடியாகச் சொல்ல முடியாத நிலை ஏற்படலாம். அதற்காகத் தான் எழுதி பெட்டியில் போட்டு விட்டால் நலமாக இருக்கும். நல்ல யோசனைகள் சொல்வதற்கு பணம் கூட கொடுக்கலாம். இந்த அமைப்பை இப்படி திருத்தி அமைத்தால் சிக்கனமாக இருக்கும். மேலும் பலனுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் யோசனை சொல்லக்கூடும். அப்படி நல்ல யோசனை சொல்லுபவர்களுக்கு பணம் கொடுக்கலாம் என்ற ஒரு முறையும் வைக்கப்பட வேண்டும். நல்ல யோசனையாக இருந்தால் அதைப் பின்பற்ற வேண்டும். முன்பு இந்த முறை பின்பற்றப்பட்டது.

குறைகள் வந்தால், மேல் மட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளும் அமைச்சரும் விவாதம் செய்து, அந்தக் குறைகளைக களைவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் தானே, நல்ல யோசனைகளை சொல்ல மாட்டார்கள் என்று நாம் இருந்துவிட முடியாது. திரு. முனு ஆதி நிர்வாகிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர்களிடமிருந்து குறைகளைக் கேட்டால், அதிகாரிகள் அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். அதைச் செய்ய வேண்டும், செய்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மவுண்டு ரோடிலுள்ள அரசாங்க புத்தக விற்பனை நிலையத்தில் போதுமான இடமில்லை, போதுமான புத்தகங்கள் இல்லை என்று சொல்லப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட புத்தகங்கள் அரசாங்க விற்பனை நிலையத்தில் கிடைக்கவில்லை, சரியான தகவல் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். எந்த புஸ்தகத்தை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள், எதைக் கேட்கிறார்கள் என்று ஒரு குறிப்பேடு வைத்துக் கொண்டால் நல்லது. வெளியிடங்களிலிருந்து புத்தகங்கள் தேவைப்படுகின்றன என்று கேட்கிறார்கள். நேரிடையாகவும் கேட்கிறார்கள். அவர்களுடைய பெயர்களை எழுதி வைத்துக் கொண்டு, எந்தப் புத்தகங்களை அதிகமாகக் கேட்கிறார்கள் என்று பார்த்து, ஏதாவது ஒரு கிளை அச்சகத்திற்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து, புத்தகங்கள் அச்சில் இல்லை என்று சொல்லாமல், அவைகளை அச்சிட்டு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அதற்கென்றே ஒரு கிளை அச்சகத்தை அமைத்துக் கொண்டாலும் நலமாக இருக்கும். சட்டப் புத்தகங்கள், மற்றும் சில நடவடிக்கைக் குறிப்புகள் இவைகளை யெல்லாம் புத்தகங்களாக வெளியிடுவதற்கு அரசாங்கம்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட புத்தகங்கள் அரசாங்கத்தினிடமிருந்துதான் கிடைக்கப்பெற வேண்டும். புத்தகம் அச்சில் இல்லை என்று சொல்லி, புத்தகம் கிடைக்க முடியாத நிலை இருந்தால், அது பொருத்தமாக இருக்காது. ஆகவே, என்னென்ன புத்தகங்கள் தேவை என்பதற்கு குறிப்பேடு வைத்துக் கொண்டு, ஒரு கிளை அச்சகத்தையும் அதற்குப் பொறுப்பாக வைத்துக் கொண்டு, தேவையான புத்தகங்கள் அரசாங்க புத்தக விற்பனை நிலையத்தில் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும்.

மவுண்டுரோடிலுள்ள விற்பனை நிலையம் கொஞ்சம் உள்ளே தள்ளி இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பார்வையாக முன்னே வைத்து, அரசாங்கப் புத்தகங்கள் அங்கே கிடைக்கிறது, விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிகிற அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முன்னால் உள்ளே போவதற்குக் கூட சங்கடமாக இருந்தது. அங்கிருந்து இனனொரு இலாகாவை வேறு ஒரு இடத்திற்கு மாற்ற நான் இருக்கும்பொழுது ஏற்பாடு செய்தேன். பிறகு அந்த இடத்தை அச்சகத்திற்கு பெற்றோம். இன்னும் கூட சில இடங்கள் உள்ளே இருக்கின்றன. வேறு சில அலுவலகங்களையும் மாற்றுவதற்கு முயற்சி நடந்துகொண்டிருந்தது. இப்பொழுது அது எந்த நிலைமையில் இருக்கிறது அந்த இலாக்காக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு விட்டனவா என்பது தெரியவில்லை. நல்ல முறையில் அதை விரிவுபடுத்த வேண்டும். விரிவு படுத்தி, நல்ல வளர்ச்சி ஏற்பட வேண்டும். இந்த இலாகாவில் பணியாற்றுகின்ற அதிகாரிகளும், தொழிலாளிகளும் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். தொழிலாளிகளுடைய பிரச்னைகளை அதிகாரிகள் கேட்கிறார்கள். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் பணியாற்றுகிறார்கள். காரியதரிசி, டைரக்டர் ஆகியோர் முன்னால் எந்த அளவுக்கு நல்ல முறையில் பணியாற்றி வந்தார்களோ, அதே போன்றுதான் இப்பொழுதும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இலாகா செம்மையாக நடைபெற வேண்டும், இந்த இலாகா விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று ஒரு திட்டத்தைப் பற்றி பேசி விவாதித்து அதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியதை நல்ல முறையில் நடத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் பேரில் ஒரு தனிப்பட்ட முறையில் ஏதாவது வருத்தம் இருக்குமானால், அதற்காக மொத்தமாக அந்த இலாகாவையே குறை



கூறக்கூடாது. ஏதேதோ கேட்டோம். செய்யவில்லை என்பதற்காக, இலாகாவில் பணியாற்றுகிறவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள், தொழிலாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் பேரில் பழிபோடுவது என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்காது. வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, கெய்வார் அவர்களுடைய ரிபோர்ட்டின் பேரில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறும் யோசனைகளைக் கேட்டு, நல்ல முறையிலே எப்படி அச்சகத்தை செம்மையாக நடத்தலாம் என்ற யோசனைகளையும் கேட்டு, நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா கிளை அச்சகங்களுக்கும் கட்டிடம் கட்டுவதற்கும், நல்ல முறையில் அதிக வேலை வாய்ப்பு தேடிக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி எடுக்க வேண்டும் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஆன் எ பாயிண்ட்டு ஆப் ஆர்டர், ஒரு அங்கத்தினர் பேசுகிறபொழுது "ரௌடிகள்" என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். ஆனால், விதி 235-இன்படி—

'Undignified or gross irregular words should be expunged.'

என்று இருப்பதால், அதையும், அதைச் சேர்ந்த பகுதியையும் சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. முனு ஆதி அவர்களுடைய பேச்சிலிருந்து அதை நீக்கிவிட வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்களா ? திரு. பூவராகன் கூட அப்படிக் கேட்கவில்லையே ?

(திரு. முனு ஆதி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தன்னிலை விளக்கமா ? சொல்லுங்கள்.

**திரு. முனு ஆதி :** கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதற்கு நான் விளக்கம் சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சில் எழுந்த சந்தேகத்தை நிவர்த்திக்க விரும்புகிறேன்.

நான் தொழிலாளர்களை "ரௌடிகள்" என்று சொல்லவில்லை. தொழிற் சங்கத்திலுள்ளவர்கள் சிலர், 4, 5 பேர்கள் புகுந்து தொழிற்சாலைக்குள்ளேயே அடிதடிகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அதற்கு அங்கிருக்கிற டைரக்டர் பொறுப்பாளி ஆகிறார். நடைமுறையை சரியாகச் செய்யவில்லை என்பதைப் பற்றி சொன்னேனே தவிர, தொழிலாளர்களைப் பற்றி சொல்லவில்லை. அடுத்து சொன்னார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவரே டைரக்டரை எடுத்துவிடச் சொன்னாரே என்றார்கள். நான் சீரமைப்புபற்றித்தான் சொன்னேன். அவர் அமைச்சராக இருந்த காலத்தில், அந்த டைரக்டர் இருந்த காலத்தில், நிர்வாகத்தில் அமைச்சர் இருந்த காலத்திலிருந்தே உள்ள ஊழல்களைக் களைவதற்கு விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று சொன்னேன். இந்த ஆட்சி வந்த காலத்தில் அம்மாதிரி குழு வேண்டுமென்று சொன்னேன். நிர்வாகத்திலிருந்த டைரக்டரை மட்டும் தான் சொன்னேனே தவிர, அமைப்பைப்பற்றி ஒன்றுமே நான் சொல்லவில்லை.

* **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, எழுதுபொருள் அச்சுத்துறையின் பணியினை மேலும் செவ்வையாக நடத்துவதற்காக இந்த மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பித்து, அதற்குத் தகுந்த கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சில நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்தக் கோரிக்கையின்மீது பேச எழுந்த போது கனம் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இருந்த உள்ளக் கிளர்ச்சி இந்த ஆண்டு அவர்கள் பேச

எழுந்த பொழுது இல்லை என்பது உறுப்பினர்கள் கூறிய வாசகங்களிலிருந்து தெரியவருகிறது. இந்த ஆண்டு அந்த அளவுக்கு இதிலே தவறுகள் இல்லாமலும், பலரும் பாராட்டத்தக்க வகையிலும், பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டு வந்திருக்கின்றன என்பதை அவர்கள் கூறிப் பாராட்டியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே சொல்லப்பட்ட அந்த குற்றச்சாட்டுகளையெல்லாம் தகுந்த முறையில் கூடுமானவரையிலும் பரிசிலனை செய்யவேண்டுமென்றுதான் நான் கடந்த முறை இந்த மாமன்றத்தில், "விசாரணைக் குழு அமைக்கிறேன்" என்று ஒத்துக்கொண்டேன். இந்த வகையில்தான், வருவாய் வாரியத்தின் முதல் உறுப்பினரான பெருமதிப்பிற்குரிய திரு. கெய்வார் அவர்களை நியமித்து, அவர்கள் குற்றங்குறைகள் அத்தனையையும் ஊடுருவி, தகுந்த முறையில் ஆராய்ந்து, அலசிப் பார்த்து, குறைகளை நீக்க சரியான வகையில் செயல்படத்தக்க வகையில் முதலில் ஒரு அறிக்கையைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். இந்த மாமன்றத்திலே யார் யார் அந்தத் துறையிலே நடைபெறும் ஊழல்களுக்கும், மற்றவைகளுக்கும் பொறுப்பேற்று குற்றச்சாட்டுக்கள் சொன்னார்களோ அவர்களை நேரில் வரவழைத்து, குற்றங்களெல்லாம் விசாரிக்கப்படவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த மாமன்றத்திலே குறை கூறிய உறுப்பினர்களை வரவழைத்து, அவர்கள் மூலமாக ஆராய்ந்து பார்த்து, கனம் கெய்வார் முதன் முதலாக ஒரு அறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே, அது மேலும் பல பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, யோசிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அவர்களும் குற்றங்களைப் பூரணமாக ஆராய்ந்து முடிவு எடுக்கவில்லை. பிறகுதான் அந்த அறிக்கையின் முழு விவரத்தையும் நான் கொடுக்க இருக்கிறேன். தொடர்ந்து இந்த ஆண்டு அப்பேற்பட்ட குற்றச்சாட்டுகள் அதிகம் எழவில்லை ; அதனால் ஒன்று அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கிறது என்கிற நம்பிக்கை இருக்கவேண்டும். அதனால் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த நம்பிக்கை இருப்பதால் அப்படி எழவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட கடந்த ஆண்டு எடுத்துச் சொன்னது போல குற்றச்சாட்டுகள் இப்பொழுது இருக்கவில்லை என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டார்கள். குறைகளையும் தவறுகளையும் களைய இந்த அரசு பெரு முயற்சி எடுக்கிறது என்பதற்கு இதை விட வேறு நற்சான்று எதுவும் இருக்கமுடியாது என்று நம்புகிறேன். அந்த வகையில் தான், மீண்டும் வருகின்ற ஆண்டினை எப்படி நடத்துவது என்ற வகையில் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறைகள் இருப்பதில்லை என்று வலியுறுத்திச் சொல்ல விரும்பவில்லை. குறைகளை, எந்த மாதிரியான குறைகள் என்று ஆய்ந்து பார்க்கவேண்டும்.

ஆரம்பத்திலிருந்தே சொன்னார்கள், சட்டசபைப் புத்தகங்கள் உரிய காலத்தில் தரப்படுவதில்லை, இன்னமும் தரவில்லை என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அது ஏன் தரப்படவில்லை என்பதற்காக என்னென்ன விளக்கங்களை நான் சொல்லவேண்டுமோ அவற்றில் குறைந்தது ஐந்து சத விகிதத்தையாவது மாண்புமிகு திரு. பூவராகன் அவர்கள் பதில் தரும் வகையில் கூறிவிட்டார். ஒரு வீட்டில் வாழ்க்கைப்பட வந்தவர்களில் மூத்தவள் தனக்கு என்னென்ன அனுபவங்கள் ஏற்பட்டனவோ அவற்றை இரண்டாவது வரும் மருமகளுக்குச் சொல்வது போல, முன்னால் இதே பொறுப்பிலிருந்த திரு. பூவராகன் அவர்கள் பேச்சில், நான் இப்படி இப்படிச் செய்யவேண்டும், இன்னின்னது செய்ய வேண்டும், இங்கிங்கே தடங்கல்கள் இருக்கின்றன என்றெல்லாம் எனக்கு எடுத்துச் சொல்வது போல, அவர்களுடைய பேச்சு இருந்தது. ஆனாலும், முன்னால் இருந்தவர், அவர் செய்திருக்கலாம் ; ஏன் செய்யவில்லை என்றுதான் திருப்பிக் கேட்கத் தோன்றுகிறது. பல தடைகளுக்கு பதில் சொன்னார்கள். சட்டசபை நடவடிக்கைகள் குறிப்புகள் நேரிடையாகப் பல இலாகாக்களுக்கும் சென்ற பிறகு தான் அச்சகம் செல்கிறது. ஒவ்வொரு இலாகாவிலும் தேங்குகிறது. அதற்கு அந்த அந்த இலாகா பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டது, ஏன் இன்னமும் வந்து சேரவில்லை என்கின்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் பின்னால் தாமதம் ஏற்படாது. இந்த விளக்கத்தை கனம் பூவராகன் அவர்களே இந்த மன்றத்திலே எனக்கு மட்டும் சொல்லவில்லை ; உறுப்பினர்கள் அனைவர் முன்னிலையிலும் சொன்னார்கள். அவரது கட்சியைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் இந்த விளக்கத்தைத் தந்திருக்கலாம். முன்னதாகவே, உறுப்பினர்கள் கலந்து உரையாடாத காரணத்தால், ஒருவருக்கொருவர் இப்படிப்பட்ட முரண்பாடான கருத்துக்களைப் பேசுவதாக நினைக்கிறேன். இனியும் இப்படி நிகழாது என்று நம்புகிறேன்.



அதே வகையில், பல இடங்களில் தாமதங்கள் வருகின்றன. டிபார்ட்மெண்டல் மான்யுவல்கள், மனுக்கள் முதலியவைகள் உரிய காலத்தில் வரவில்லை, அச்சகத்தில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்ற பரவலான குற்றத்தைச் சொன்னார்கள். இந்த அச்சகம் மற்ற இலாக்காக்களின் ஆர்டர்களை அச்சடித்துக்கொடுக்கிறது. யாருக்கு எந்த இடத்தில் அழைப்புத்தாள்களைக் கொடுக்கவேண்டும் என்பது, திருமண வீட்டார் கவனிக்க வேண்டிய வேலையே தவிர பத்திரிகை அச்சிட்டுக் கொடுப்பவர்கள் பணியல்ல. ஒரு கல்யாணம் என்றால், ஏன் இவ்வளவு தாமதம் என்று அழைப்பு வராததற்கு அச்சகத்தில் போய், வரவில்லை, வரவில்லை என்று கேட்பதில் பொருள் இல்லை என்பது போல்தான் இங்கே கேள்விகள் அமைந்திருக்கின்றன. உரிய காலத்தில் இன்னின்ன தகவல்களை அச்சடியுங்கள் என்று கொடுத்தால், அவர்கள், அச்சடித்துக் கொடுப்பார்கள். கொடுத்தால்தான் அச்சடித்துக் கொடுக்கப்படும். பல இலாகாக்களிலும் தாமதம் ஆகின்றன. தாமதத்திற்குக் காரணம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஒவ்வொரு சட்டமும், பல பிரிவுகளும் உள்ளடக்கி, அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன. ஐந்தாண்டுக்கு ஒரு முறை மாற்றங்கள் செய்யவோ, திருத்தங்கள் செய்யவோ, அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து, பல பிரிவுகள் திருத்தப்பட்டு, ஐந்தாண்டுக்கு ஒரு முறை வரவேண்டும் என்று இருக்கிறது. அப்படித் திருத்தப்பட்ட பிறகு, அச்சகத்தில் உரிய காலத்தில் கொடுத்து அச்சகத்தார் அவ்வாறு அச்சடிக்கவில்லை யென்றால், கேட்கலாம். எந்த எந்த பாரம்கள், எந்த எந்த ரசீதுகள், எந்த எந்த இலாகாக்களில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறதோ, அந்த அந்த இலாகாவினர் உரிய ஆர்டர்களைக் கொடுக்கவில்லை என்பதால்தான் தாமதம் ஆகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். ஜில்லாவாரியாக, இப்பொழுது பிராந்திய வாரியாக இருக்கும் அச்சகங்கள் போல் இருக்க வேண்டும் என்றார்கள். இப்பொழுது திருச்சியில், விருத்தாசலத்தில், சேலத்தில் புதுக்கோட்டையில் இருக்கின்றன. அதே போல எல்லா மாவட்டங்களிலும் வரவேண்டும் என்று உறுப்பினர் திரு. சுவாமிநாதன் கேட்டுக்கொண்டார்கள். அப்படி எல்லா மாவட்டங்களிலும் வைக்கவேண்டும் என்றால், அதற்கு பணம் தேவை. இன்றைக்கு இருக்கிற நிதி நிலை முறைப்படி, அவ்வளவு பண ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில் அரசாங்கம் இருப்பதால் உறுப்பினர் கூறியபடி செய்வதற்கில்லை. உறுப்பினர் குறிப்பிட்டார்கள். திருநெல்வேலி, மதுரையில் இப்படி அமைக்க செயல் குறிப்பு இருக்கிறது என்று. இருக்கலாம். இப்பொழுது எடுத்திருக்கிற அச்சகங்களைச் சரியான முறையில், தவறுகள் இல்லாமல் செய்வதற்கே முடியாமல், எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. மேலும் பணம் ஒதுக்கக்கூடிய நிலை ஏற்பட்டால், ஜில்லாவாரியாக அச்சகங்கள் துவக்க, அப்படிப்பட்ட கருத்தை பரிசீலனைக்கு எடுக்கலாம்.

எழுத்துக்கள் சிறியவையாக இருக்கின்றன, அச்சுப் பிழைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். சிறிய எழுத்துக்களைப் பெரிய எழுத்துக்களாகக் கொடுக்கலாம். ஆனால், அதிகப்படியான பேப்பர் தேவைப்படும். அப்படிப் பெரிய எழுத்துக்கள் போட்டால், பேப்பர் அதிகமாகி, விலையும் அதிகமாகும். அதை உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டால், எழுத்துக்களைப் பெரிதாக்கலாம். அச்சுப் பிழைக்கு வருந்துகிறேன். இனி ஒழுங்காகக் கொடுக்க, பிழையின்றிக் கொடுக்க உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த ஆண்டு இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, விசாரணை வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, வாரிய உறுப்பினர் திரு. கெய்வார் அவர்களை இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்து, அந்த வகையில் ஒழுங்காக விசாரணை அமைத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ஊழல்கள் மலிந்து விட்டன. லஞ்சங்கள் அதிகரித்துவிட்டன என்றார்கள். ஊழல்கள் பற்றி திரு. கெய்வார் விசாரணை செய்யவில்லை என்று உறுப்பினர் சொல்கிறார்கள், மன்றத்திலே. சரியான முறையில் என்னென்ன குற்றச்சாட்டுகள் கடந்த ஆண்டு சொல்லப்பட்டனவோ, அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அப்படிச் சொன்ன உறுப்பினர்களை அழைத்து, எந்த எந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்களோ, அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும், அதன் மீது தக்க ஆய்வு நடத்த வேண்டும் என்றுதான் நியமித்தோம். உறுப்பினர் மீண்டும் ஊழல்கள் இருக்கின்றன, லஞ்சம் நடைபெறுகிறது என்று சொல்லுகிறார்கள். என்னென்ன ஊழல்கள், எங்கே லஞ்சம் நடைபெறுகிறது, யார் யார் கொடுத்தார்கள், யார் யாருக்குக் கொடுத்தார்கள், வாங்கியவர்கள் யார், என்றெல்லாம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, திரு. கெய்வாரிடத்தில் கூறியிருக்கலாம். ஊழல்கள் பற்றிக் கூறியிருப்பதாக கனம் கெய்வார் அவர்கள் எனக்குக் கொடுத்த அறிக்கையில் காணப்படவில்லை. பொதுவாக அவர் கொடுத்திருப்பது இரண்டு. அதிகாரிகள் தங்கள் விருப்பம்போல் ஊழியர்களுக்கு விடுமுறைகள் தந்து விடுகிறார்கள். என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேரை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் மாற்றப்படவில்லை, பிறகு மாற்றப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது என்றும் கூறியிருக்கிறார். மேலும் சில கருத்துக்களைப் பெறும் வகையில் சிலர் பரிசுகளைப் பெற்றதாகவும், அது எப்படி முறையற்றது என்பதையும் அவர் விசாரித்திருக்கிறார்.

மற்றும் இயந்திரங்கள் எல்லாம் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று சொல்லப்பட்டதையும் விசாரித்திருக்கிறார். இது போன்ற நான்கைந்து குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் லஞ்சக் குற்றச்சாட்டுகள் அல்ல, ஊழல் குற்றச்சாட்டுகள் அல்ல. மேலும் செப்புக் கம்பிகள் எல்லாம் திருடு போகின்றன என்ற குற்றச்சாட்டுகள் சொன்னதன் காரணமாகத்தான், இவைகள் எல்லாம் நடைபெறக் கூடாது என்பதற்காக விசாரணைக்கு அனுப்பி வைத்தேன். விசாரிக்க சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுது இந்த ஊழலைப் பற்றி அங்கே சொல்லவில்லை. கனம் கெய்வாரிடத்தில் சொல்லப்பட்டதெல்லாம் சில தவறுகள். அந்தத் தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை தரப்பட்டிருக்கிறது. இந்தத் தவறுகள் எல்லாம் விசாரிக்கப்படும்பொழுது சொல்ல வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, "கடந்த ஓராண்டுக்கு முன்னே நான் சொன்னேன். அங்கே லஞ்சம் இருக்கிறது, ஊழல் இருக்கிறது" என்றால், விசாரணைக்கு ஒதுக்கி வைத்த காலத்தையும் நேரத்தையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்பதுதான் பொருள். சர்க்கார் மீது எந்தவிதமான தவறும் இல்லாத அளவுக்கு விசாரணை உரிய காலத்தில் நடைபெற்றிருக்கிறது.

(திரு. எ. பாலசுப்பிரமணியன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் உட்கார்ந்தால் தாங்கள் கேட்கலாம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, நான், திரு. கெய்வார் அவர்களிடத்தில் கேட்டபோது, "லஞ்சம் என்ற அம்சம், பற்றி விசாரிக்க என்னிடத்தில் ரெபரென்ஸ் இல்லையே" என்று கூறினார். "கொடுத்ததைத்தான் நான் செய்ய முடியும். நீங்கள் இப்படித்தெரிவித்ததாக அரசாங்கத்திற்கு நான் தெரிவிக்கிறேன்" என்று கூறினார். தன்னிலை விளக்கம் என்ற முறையில் இதைக் கூறுகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு, சந்தர்ப்பம் கிடைத்த பிறகு சொல்லியிருக்கலாம். எனவே அப்போது அவைகளைச் சொல்லவில்லை, பரவாயில்லை. இன்றைக்குப் பல சங்கங்கள் மைனாரிட்டிகளாக இருக்கின்றன. அதனால் பல தவறுதல்கள் ஏற்படுகின்றன. சங்கத்தை நடத்துகின்ற ஒரு சிலர் ஒழுக்கமானவர்களாக இல்லை. அந்த சங்கம் இங்கே நடைபெறுவது சரியல்ல என்று உறுப்பினர் திரு. முனு ஆதி அவர்கள் சொல்லியிருக்கிறார். ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கத்தின் சார்பில் வேலை நிறுத்தம் செய்வதாக அரசாங்கத்திற்கு தாக்கீது தரப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை விசாரிக்க லேபர் கமிஷனர் பணிக்கப்பட்டிருக்கிறார். அவரும் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார். பரிசீலனை இன்னும் முடியாததால், அறிக்கை இன்னும் தரப்படவில்லை. சங்கம் ஒழுங்காக நடைபெறுகிறதா, உரியவர்கள் ஒழுக்கமானவர்களாக இருக்கிறார்களா என்பதை அவர்தான் பரிசீலனை செய்ய வேண்டும். சங்கம் முறைப்படி நடைபெறவில்லையென்று அவர் தன்னுடைய அறிக்கையில் சுட்டிக் காட்டினால், அதன்மீது தக்க நடவடிக்கைகளை எடுக்க அவருக்கேகூட உரிமை உண்டு. பல கோரிக்கைகளை இங்கேகூட உறுப்பினர்கள் அவை முன் வைத்திருக்கிறார்கள். எல்லா கோரிக்கைகளையும் பரிசீலனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. குறிப்பாக நிதி இலாகாவில் கேட்டிருக்கின்ற அதிகப்படியான நிதி தர வேண்டுமென்ற இனங்களையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. இதற்குப் பிறகுதான் ஒவ்வொரு சங்கத்தின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு, முறையானதாக இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, மவுண்ட் ரோடு அச்சகத்தில் உள்ள தவறுகளைப் பற்றிச் சொன்னார்கள். புத்தகங்கள் எல்லாம் வெளியே போய்விடுகின்றன என்று எடுத்துக் கூறினார்கள். அப்படிப்பட்ட தவறுதல்கள், குறைபாடுகள் இருந்தால் திருத்திக்கொள்வோம். மீண்டும் அம்மாதிரி நடைபெறாமல் இருக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வேன். இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட குறைகள் எல்லாம் நடைபெறவில்லையென்பதை திரு. கெய்வார் அறிக்கையிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். ஆதார பூர்வமற்ற குறைகளைச் சொல்லக் கூடாது. ஆதார பூர்வமான குறைகளைச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வேன்.

அடுத்தபடியாக, அரசாங்க அச்சகத்தில் வேலை கொடுக்காமல் தனியார் துறையில் இருக்கும் அச்சகங்களுக்கு வேலை கொடுக்கிறார்கள் என்ற புகார் எழுப்பப்பட்டது. அரசாங்க அச்சகத்தில் ஓவர் டைமாகக்கூட நாலு ஆயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கப்படுகிறது. அப்படியும் செய்ய முடியாத அளவுக்கு வேலை இருக்கும்போது, தனியார் அச்சகங்களுக்குத் தருகிறோம். சர்க்கார் அச்சகத்தில்தான் எல்லா வேலைகளும் நடைபெற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு அதற்கான வழி வகைகளைப் பரிசீலனை செய்து வருகிறோம். மேல்நாடுகளிலிருந்து அதிகப்படியான இயந்திரங்கள் வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். யுனெஸ்கோ ஸ்தாபனம் சுமார் 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களைத் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. கூடுமான வரையில் அரசாங்க அச்சு வேலைகள் பூராவையும் தனியார் துறையில் தராமல் சர்க்கார் அச்சகத்திலேயே செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். யுனெஸ்கோ ஸ்தாபனம் தன் வாக்குப்படி இயந்திரங்களைக் கொடுத்தால் எந்த விதமான வேலையும் தனியார் துறைக்குப் போகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கு இருக்கின்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கத்தார் செய்கின்ற தவறுகளையெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நாலு ஆயிரம் பேரை உள்ளடக்கிய மைய அச்சுக்கூடம் பல தவறுதல்களைச் செய்வதாக உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவைகள் பரிசீலனைக்குட்பட்டு, நிரூபணம் ஆனால் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயங்காது. மேலும், சில தொழிலாளர்கள் டோகன் போட்டுவிட்டு,

வெளியே போய் தங்கள் சொந்தக் காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு வந்துவிடுகிறார்கள், பிறகு மணி எழாகிவிட்டது, ஓவர் டைம் வேண்டும் என்று சொல்லி, ஓவர் டைம் வாங்குவது போன்ற தவறுதல்கள் நடைபெறுகின்றன என்பன போன்ற குற்றச்சாட்டுகள் கடந்த ஓராண்டு காலமாக வற்புறுத்தப்பட்டு வந்தது எல்லோருக்கும் தெரியும். நானும் பலமுறை திடீர் விஜயம் செய்து பார்த்திருக்கிறேன். திரு. கெய்வார் அவர்களும் திடீர் விஜயம் செய்து பார்த்திருக்கிறார். நாங்கள் சென்ற போதெல்லாம் இம்மாதிரியான தவறுகள் தென்படவில்லை. இதுபோன்ற தவறுதல்கள் எல்லாம் நடக்கக் கூடாது என்பதற்காக நான் ஒரு புதிய ஆணை பிறப்பிக்க இருக்கிறேன். அதாவது எப்ரல் 1-ம் தேதியிலிருந்து காலை 6, அல்லது 10 நிமிஷம் அவகாசம் கொடுத்து 6-10 மணிக்கு ஊழியர்கள் உள்ளே சென்ற பிறகு நுழைவாயில் கதவை இழுத்துப் பூட்டிவிட வேண்டும். அப்போது தொழிலாளர்கள் டோகன் போட்டுவிட்டு வெளியே வர முடியாது. அடுத்து, தொழிலாளர்கள் பத்து மணிக்கு வெளியே போக வேண்டும். அரை மணி நேரம் ஓய்வு. பிறகு பத்தரை மணிக்கு உள்ளே வந்ததும் கதவைச் சாத்திவிட வேண்டும். இந்த முறை இருக்குமானல் டோகன் போட்டுவிட்டு வெளியே போய் சொந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நீக்க முடியும். மேலும், தொழிலாளர்களுக்குத் தேவைப்படக் கூடிய சோடா, கலர், வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட், போன்றவைகளை உள்ளேயே காண்டீனுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய கடை வைக்க அனுமதியளித்து, கிடைக்கும்படிச் செய்யலாம். தொழிலாளர்களுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் அச்சக காம்பவுண்டிற்குள்ளேயே கிடைக்க வழி வகைகள் செய்யப்படும். இந்த ஏற்பாட்டை எப்ரல் 1-ம் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவந்து, குறிப்பிட்ட நேரங்களுக்குப் பிறகு கதவை இழுத்து மூடிவிட வேண்டும் என்ற புதிய ஆணை நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகும் இப்பேர்ப்பட்ட குறைகள் நடைபெறுகின்றனவா என்பதை கனம் உறுப்பினர்கள் கூர்ந்து கவனித்துச் சொல்வார்கள் என்றே நம்புகிறேன்.

மேலும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்
பி.ப. லாம் தனியாகக் கவனிப்பதாக இருக்கிறேன். ஆனால் ஒன்றிரண்டுக்கு
12-30 இங்கே பதில் சொல்ல விரும்புகிறேன். வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது தற்காலிகத் தொழிலாளர்களுக்கு ப்ரையாரிடி காட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதையும் அரசு கவனித்துக்கொண்டு வருகிறது. மாநில அரசாங்க ஊழியர்ளாக இருந்து ஓய்வு பெற்றவர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை தரப்பட வேண்டுமென்று பல தொழிற்சங்கங்களும் வற்புறுத்தி வருகின்றன. இன்றைக்கு அரசுத் துறையில் வேலைக்கு ஆள் எடுப்பது நேரிடையாக நடைபெறவில்லை. எம்ப்ளாய்மெண்டு ஸ்தாபனத்தின் மூலமே ஆட்கள் கோரப்படுகிறார்கள். இன்ன இன்ன வேலைக்கு எங்களுக்கு இவ்வளவு ஆட்கள் தேவை என்று நாம் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். வேலை வேண்டுமென்று அவர்களிடம் பதிவு செய்துகொண்டிருப்பவர்களில்—வேலைக்குத் தகுந்தவாறு, தகுதியைப் பார்த்து அவர்கள் அனுப்புகிறார்கள். அவர்கள் நமக்குக் கொடுக்கிற பட்டியலில் இருந்து தான் நாம் ஆட்களை பொறுக்கிக்கொள்கிறோம். அவர்கள் அனுப்பும் பட்டியலில் ஓய்வு பெற்ற ஊழியர்களின் பிள்ளைகள் பெயர் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் தருவதற்கு ஏதாவது வழி வகைகளைச் செய்ய முடியுமே தவிர, ஓய்வு பெற்றவர்களுடைய பிள்ளைகளை நேரிடையாக நியமிப்பதற்கு அரசாங்கத் தரப்பில் ஒப்புக்கொள்வதற்கில்லை. ஆகவே, எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ் அனுப்புகிற பட்டியலில் ஓய்வு பெற்ற ஊழியர்களின் பிள்ளைகள் பெயர்கள் இருந்தால், ஆட்களைத் தேர்ந்தெடுக்கிற அதிகாரியினிடத்தில் சொல்லி அவர்களுக்கு முதற் சலுகை கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்ய முடியும். அதைச் செய்து தர நான் ஒத்துக்கொள்கிறேன்.

அடுத்து, அனைவரும், எல்.பி.ஆர். கொடுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டியிருக்கிறார்கள். அது நீண்டகாலமாக இருந்த வேண்டுகோள் ஆகும். கனம் பூவராகன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், " நாங்கள் இருந்தபோது என்ன செய்யவில்லை ?" என்று கேட்டார்கள். அவர்கள்





இருந்தபோதுதான் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. அவர் அதை நிறைவேற்றவில்லை. எங்களுடைய கட்சி ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள்ளாகவே—ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே 1960-ஆம் ஆண்டில் இருந்தே—ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து இந்தக் குடும்ப ஓய்வு ஊதியத்தைத் தர வேண்டுமென்று இந்த அரசு வகை செய்திருக்கிறது. இது தொழிலாளர் பெரு மக்களுக்கு எவ்வளவோ நன்மை அளிக்கும் என்பதை முன்னாள் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள்.

இரண்டாவதாக, இன்றைக்குப் பெரிய தலைவலியாக இருப்பது ஓ.டி.ஸி.ஏ. (ஓவர் டைம் காம்பென்ஸேடரி அலவன்ஸ்). இதைப் பற்றி நானும் விசாரித்துப் பார்த்தேன். மற்ற இலாகாவிலுள்ள எந்தத் தொழிலாளருக்கும் காம்பன்சேடரி அலவன்ஸ் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அச்சகத்தில் புதிய ஷிப்டை ஏற்படுத்தியபோது பழைய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது. அதுவும் அவர்கள் காலத்திலேயே நிறுத்தப்பட்டது. ஒரு தொழிலாளி எட்டு மணிக்கு மேல் வேலை செய்தால் அதிகமான நேரம் வேலை செய்திருப்பதற்கு ஓவர் டைம் கொடுக்க வேண்டியது தான். எட்டு மணிக்கு மேல் அவர்கள் எத்தனை மணி அதிகமாக வேலை செய்திருக்கிறார்களோ அதற்கு மணி அடிப்படையில் பார்த்து அவர்களுக்கு அலவன்சு கொடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு அதிகமாக வேலை செய்யாமலேயே தங்களுக்கு ஓவர் டைம் கொடுக்க வேண்டும் என்று சொல்வது நியயாயமில்லை. குறிப்பாக பல அங்கத்தினர்கள்—திருச்சி திரு. நாகசுந்தரம் போன்றவர்கள் எல்லோரும் திருச்சியில் இருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஓவர் டைம் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். குறிப்பாக நிறைய வேலைகள் இருக்கின்றன, வெளியாரிடம் கொடுப்பதற்குப் பதிலாக, அரசாங்க அச்சகத்திலேயே அச்சிட வேண்டுமென்றால் இரண்டாவது ஷிப்டை ஏற்படுத்தலாம் என்பதாக 1959-ஆம் ஆண்டிலே தீர்மானிக்கப்பட்டு—இரண்டாவது ஷிப்ட் நடைபெறுவதற்காக 1,500 தொழிலாளர்களை நியமித்தார்கள். "அப்படி புதிதாக 1,500 பேர்களை நியமித்த காரணத்தினால் எங்களுக்கு வேலை பாதிக்கப்படுகிறது, ஓவர் டைம் என்று கிடைத்து வந்தது இனி கிடைக்காமல் போய்விடப்போகிறது" என்று முன்பே இருந்த தொழிலாளர்கள் ஆட்சேபணை எழுப்பியபோது தான் முன்னே இருந்த அரசு, "உங்களுக்கு காம்பென்சேடரி அலவன்சு கொடுத்துவிடுகிறோம், உங்களுக்குக் கிடைத்துவந்த ஊதியம் பாதிக்கப்படாது" என்பதாகச் சொல்லி, இந்த காம்பென்சேடரி அலவன்சு என்பதைக் கொண்டுவந்தார்கள். இதுதான் அவர்கள் செய்த தவறாகும். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்று ஒரு தொழிலாளிக்கு 30 ரூபாய் காம்பென்சேடரி அலவன்சு என்று கொடுத்தார்கள். அதுவே அவர்களுக்குப் பெருந் தலைவலியாக—பத்தாண்டு சர்வீசுக்கு ஏற்ற வகையில் அதைக் கணக்கிட்டு சம்பளத்தில் சேர்த்துக் கொடுப்பதில் தொந்தரவாகப் போய் விட்டது. அதை உணர்ந்து அவர்கள் காலத்திலேயே அதை நிறுத்தி விட்டார்கள். கொடுத்ததை நிறுத்திவிட்டார்களே, அதைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இப்போது இருக்கிறது. இது எங்களுக்கும் ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் —இதைக் கொடுக்க வேண்டாம் என்று தங்கள் ஆட்சிக் காலததிலேயே இதை நிறுத்திவிட்டவர்கள், இப்போது தொழிலாளர்களுக்கு காம்பன்சேடரி அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்று பேசுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் அதிகமாக வேலை செய்கிற சந்தர்ப்பங்களில் எவ்வளவு மணி நேரம் அப்படி வேலை செய்தார்களோ அதற்கு ஏற்ற வகையில் ஓவர் டைம் கொடுக்கப்படும். ஓவர் டைம் பார்த்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, காம்பென்சேடரி அலவன்சு என்று கொடுக்க வேண்டுமென்று சொல்வது முறையல்ல, என்று உறுப்பினர்களுககுச் சொல்லிக்கொளள விரும்புகிறேன.

அடுத்து, தற்காலிகமாக இருப்பவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது ஒரு வேண்டுகோள். அது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக கேள்வி நேரத்திலேயே சொன்னேன், மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து ஒருவர் வேலையில் இருப்பா

ராஞல் அவர் எந்த வேலேக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அந்த வேலேயில் முழு தேர்ச்சி பெற்று தன்னுடைய திறமையைக் காட்டிஞல், அந்தப் பதவிக்கு அவர் நிரந்தரமாக்கப்படுவார். அந்தப் பதவிக்கு உரிய வேலேயைச் செய்வதில் முழு தேர்ச்சி பெறவில்லே என்ருல், மேலும், இரண்டாண்டு தவணே கொடுத்து, பிறகு நிரந்தரம் செய்யப்படுகிற முறைதான் கையாளப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட தேர்வு பெருத காரணத்திஞல், சிலர் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கலாம். இருந்தாலும், அவர்களேப் பற்றி அரசு கண்காணித்துக்கொண்டு வருகிறது. நிரந்தரமாக்குவது பற்றி உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சம்பள உயர்வு கேட்கப்படுகிறது. சம்பளம் பே கமிஷஞல் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த ஒரு இலாகாவில் உள்ளவர்களுக்கு நாம் உயர்வு கொடுத்துவிட்டால, அதைப் போல மற்ற இலாகாவில் உள்ளவர்களும் சம்பள உயர்வு கேட்பார்கள். ஆகவேதான் சம்பளம் நிர்ணயம் செய்யப்படுவதை அரசு பே கமிஷனிடம் விட்டுவிட்டது. ஆகவே, சம்பள உயர்வைப் பற்றி நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லே. அந்த வகையான குறையை பே கமிஷனில்தான் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, இப்போது இருக்கின்ற தொழிற்சங்கம் முறையாக நடைபெறவில்லே, ஆகவே அங்கு இருக்கக்கூடிய தொழிற்சங்கங்களே எல்லாம் ஒன்ருக இணைத்து நல்ல முறையில் செயல்படத் தக்க வகையில் ஒரு தொழிற்சங்கமாக ஆக்க வேண்டும் என்று சொன்ஞர்கள். தொழிற்சங்கத்தைப் பொறுத்த வரையில் ஒன்ரு, இரண்டா, மூன்ரு என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலித்து முடிவு எடுப்பது அரசினுடைய வேலே அல்ல. அங்கே வேலே செய்யக்கூடிய பணியாளர்கள் தான் அதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். ஆயினும், இருக்கக்கூடிய தொழிற்சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகிறதா, யார், யார் இருக்கிருர்கள், எப்படி நடக்கிருர்கள், முறையற்ற வகையில் நடவாமல் இருக்கிறதா என்பதை எல்லாம் கண்காணித்துக் கொள்ள லேபர் கமிஷனர் இருக்கிருர். இப்போதுள்ள தொழிற்சங்கம் முறையற்றது என்று அவர் கருதுவாராஞல், அவர் அதை மாற்றி அமைக்கவும் உரிமை இருக்கிறது. ‘ சீக்கிரட் ’ வோட்டு மூலமோ, ‘ ஓபன் பாலட் ’ மூலமோ அதைச் செய்யலாம். அது அவருடைய பணி. ஆகவே இப்போதுள்ள சங்கம் முறையாகப் பயன்படவில்லே என்று சொன்ஞல், அவர்தான் அந்தச் சங்கத்திற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, முறையாகப் பரிசீலனே செய்து, ‘ ரகசிய பாலட் ’ அல்லது ‘ ஓபன் பாலட் ’ மூலம் புதிய சங்கத்தை அமைக்கலாம். அவர் அப்படிச் செய்யாமலும் விட்டுவிடலாம். ஆகவே அதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பவில்லே.

அடுத்து, இப்போது புதிய அரசு பதவியேற்ற பிறகு நம்முடைய மற்ற மாவட்ட பிராந்திய அச்சகங்களுக்கு மாற்றப்பட்டிருந்த தொழிலாளர்கள் சென்னேக்கே திரும்பி வந்துவிட்டார்கள். ஆகவே இனி வெளியே அனுப்பப்பட்டுவிட்டார்கள், அதஞல் இரண்டு குடும்பம் வைக்க வேண்டிய தொந்திரவு இருக்கிறது என்கிற புகார்களுக்கு இடம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட 200 ரூபாய் சம்பளத்திற்குக் குறைவாக வாங்கக்கூடிய தொழிலாளர்களே மாற்றக் கூடாது என்ருர்கள். அந்தப் பிரச்னேக்கே இனி இடம் இல்லே. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர்களே அந்த அந்த மாவட்ட பிராந்திய அச்சகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். இங்கிருந்து அனுப்பப்பட்டவர்களே இங்கேயே திரும்பவும் திருப்பிப் பெற்றுக்கொண்டாகி விட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தொழிலாளர்களே நல்ல முறையில் பரிசோதனே செய்து, அவர்களுடைய நோய்க்குத் தக்க மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும் என்று சொன்ஞர்கள். அது நடைபெறுகிறது. அவர்களுக்கு வைடமின் மாத்திரைகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. மெடிகல் கிராண்டு வைத்து கவனித்துக்கொள்ளப்படுகிருர்கள். அதை வேண்டுமாஞலும் மருத்துவத் துறையினருக்கு அனுப்பி அதற்கு வேண்டிய தகுந்த முறைகளே ஆய்வு செய்து வேண்டிய நல்ல பொருள்களே, சத்துள்ள



போஷாக்குள்ள மருந்துகளேக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். ஓரளவுக்கு மாத்திரைகள், பால் கொடுக்கப்பட்டு வருகிறது. பால், மாத்திரைகள் இவற்றைத் தவிர இரவு நேரத்தில் வேலே செய்தால் ‘நைட் அலவன்ஸ-ம்’ 50 காசு என்ற வீதத்தில் தரப்படுகிறது. அதுவும் போதாது, அதிகப்படியாகத் தரவேண்டுமென்று கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. மற்றத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ‘ நைட் அலவன்சு ’ எவ்வளவு கொடுக்கிருர்களோ அதைப் பரிசீலனே செய்து இவர்களுக்கும் அப்படிக் கொடுப்பதற்கு நிதி இலாகா ஒத்துக்கொள்ளுமாஞல் இந்த இலாகா அதைக் கொடுப்பதற்கு ஆட்சேபணே இல்லே, தர முடியும் என்று நம்புகிறேன்.

டெக்ஸ்ட் புத்தகங்களுக்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தரப்படுகிறது என்று சொன்ஞர்கள். ஒன்றரை கோடி ரூபாய் டெக்ஸ்ட் புத்தகங்களுக்காகக் கொடுக்கப்படுவது அல்ல; எழுதுபொருள் சாமான்கள் வாங்குவதற்காகத்தான் அந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. அவர்கள் அதை மீண்டும் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் துணேத் தலேவர் அவர்கள், சட்டசபை நடவடிக்கைக் குறிப்புக்களேக் கொடுக்கவில்லேயென்றும், ‘ Who is Who ’இன்னும் வரவில்லேயென்றும் சொன்ஞர்கள். ‘ Who is Who ’ தயாரிக்கப் புகைப் படங்கள் வந்துசேரவில்லே, வாழ்க்கைக் குறிப்புகள் வந்துசேரவில்லே. இவையெல்லாம் வந்த பிறகு ‘ Who is Who ’ அச்சிட்டுக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசிதழ் தாள்கள் தனித்தனியாகக் கொடுக்கப்படாமல் தைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். அப்படித் தைத்துக் கொடுத்தால் அதிகப்படி செலவாகும். எல்லாத் தாள்களும் எல்லோருக்கும் அனுப்பக்கூடியவை அல்ல. சிலருக்குச் சில தாள்கள்தான் தேவைப்படுகின்றன. அவற்றை அனுப்புகிறேம். சிலருக்கு சில தாள்கள் என்று அனுப்ப வேண்டியிருப்பதால் அதைத் தைத்துவிட்டால் பிறகு தனித்தனியாக அனுப்ப முடியாது. ஆகவேதான் தாள்கள் தனித்தனியாக அனுப்பப்படுகின்றன.

இன்னும் தாமதத்தைப் பற்றிச் சொன்ஞர்கள். இந்த இலாகாவில் தாமதம் ஏற்படுவது அல்ல. ஒவ்வொரு இலாகாவிலிருந்தும் வேண்டிய பாரங்கள், ரசீதுகள் எவ்வளவு வேண்டுமென்று அவர்கள் கேட்கிருர்கள். அதைப் பொறுத்துத்தான் அச்சடித்துக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கேட்கும்பொழுது ஏற்படுகின்ற தாமதத்தைப் தடுப்பதற்கு திரு. பூவராகன் அவர்கள் சொன்ன மாதிரி தேதிகளே குறித்து வைத்துக்கொண்டு அதன்படி செய்யலாம்.

ஸ்வீடன் கிஃப்ட் பேப்பர் பற்றிச் சொன்ஞர்கள். டெக்ஸ்ட் புத்தகங்களுக்குத்தான் அதைப் பயன்படுத்திக்கொள்கிருர்கள். அதிலே எந்த விதமான தவறும் ஏற்படவில்லே. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே இது பரிசீலனே செய்யப்பட்டிருக்கிறது, தவறுகள் ஏற்படவில்லேயென்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவ்வப்பொழுது வருகிற பேப்பர்களே அவ்வப்பொழுது பயன்படுத்திக்கொள்ளுகிறேம். ஆறு மாதங்களாக எந்த விதமான கிஃப்ட் பேப்பரும் வரவில்லே.

இறுதியாக தொழிலாளர்கள் தங்கள் குறைபாடுகளேச் சொல்வதற்கு ஒரு தனிப் பெட்டியும், யோசனேகளேச் சொல்வதற்கு ஒரு தனிப் பெட்டியும் தொழிலாளர்களுக்கு என்று வைத்தால் அவர்கள் குறைகளே மாத்திரம் சொல்ல மாட்டார்கள், நல்ல யோசனேகளேயும் சொல்வார்கள் என்று திரு. பூவராகன் அவர்கள் சொன்ஞர்கள். பெட்டி வைப்பதன் மூலம் தான் அவர்கள் தங்களுடைய குறைகளேயும், யோசனேகளேயும் சொல்வார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் குறைக்கு ஏற்கணவே குறை

யில்லை, குறைபாடுகளுக்கும் குறை கிடையாது, யோசனைகளும் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே அதற்காகத் தனிப் பெட்டிகள் வைக்கவேண்டிய தில்லை. அப்படி வைத்தால் அவதூறான குற்றச்சாட்டுகள் ஒருவர்மேல் ஒருவர் சாட்டுவதற்குத்தான் பயன்படுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவர்கள் குறைகளைச் சொல்வதற்குச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தச் சங்கங்கள் முறையான சங்கங்களாக இருக்க வேண்டும். அதைத் தவிர, இம்மன்றத்திலே அங்கத்தினர்களும் எடுத்துச் சொல்லலாம். ஆகவே பெட்டி வைப்பது சரியாக நடைமுறைக்கு வரும் என்று நம்பவில்லை.

எடுத்துச் சொல்லப்பட்ட மற்றக் குறைகளையெல்லாம் அரசு தகுந்த முறையில் பரிசீலனை செய்யும். இந்த ஆண்டு புதிய மாற்றங்களையெல்லாம் அச்சகத்திலே செய்திருக்கிறோம். ' பேமலி பென்ஷன் ' கொடுப்பது மட்டும் அல்லாமல், மவுண்ட் ரோடிலே உள்ள இடத்தில் அவர்களுக்காக ஒரு சிற்றுண்டிசாலை ஏற்படுத்தியிருக்கிறோம். அதிகப்படியான அளவில் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மகத்தான காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

நமது அச்சகம் பல துறைகளுக்கெல்லாம் பணிகள் செய்து தருகிறது. அவர்கள் அந்த அந்தப் பில்களுக்குப் பணத்தைத் திருப்பித் தருவது கிடையாது. பல தொகைகள் இதனால் நிலுவையாக இருந்து வந்தது. இப்பொழுது ஒரு புதிய உத்தரவு போடப்பட்டிருக்கிறது. வேலை செய்து முடித்த பிறகு அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பிவிட்டு, பிறகு அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற முறை முன்பு இருந்தது. இப்பொழுது ஒவ்வொரு இலாக்காவும் கொடுக்கிற ஆர்டர்களுக்குரிய பணத்தை முதலிலேயே கொடுத்துவிடவேண்டும். இப்படிக் கொடுத்தால் தான் அவர்களுக்கு வேலை செய்யப்படும் என்று முறை வகுத்தாகிவிட்டது. ஆர்டர்கள் பிளேஸ் பண்ணும்பொழுது என்ன என்ன வெளியீடுகள் எவ்வளவு தரவேண்டும் என்பதையெல்லாம் சொல்லும்பொழுது பணத் தையும் முதலிலேயே கட்ட வேண்டும், அதற்கு பிறகுதான் வேலை செய்து கொடுக்கப்படுமே தவிர, செய்துவிட்ட பிறகு ' பில் ' அனுப்புவதில்லை. இதனால் நிலுவைகள் இருக்காது. அதில் தாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிச் செய்திருக்கிறோம். இதை கனம் உறுப்பினர் கள் எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நினைக்கிறேன். பணம் இப் பொழுது ஒழுங்காக வந்து சேர்ந்துவிடும். சிறந்த வகையிலே பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்திலே தான் இந்த துணிச்சலான காரியத்தை செய்திருக்கிறோம்.

இறுதியாக, இந்த 1,500 ரூபாய் செலவில் தொழிலாளர்கள் தலைவர்கள் படத்தை அச்சகத்தில் வைத்தார்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த முறையில் இலாகாவில் பணத்தைச் செலவழித்துத் தலைவர்கள் படம் அங்கு அமைக்கப்படவில்லை. பைண்டிங் பிரிவில் இருப் பவர்கள் பணத்தைச் செலவு செய்துதான் படம் வைத்திருக் கிறார்கள். அரசாங்கப் பணம் பயன்படுத்தப்படவில்லை யென்பதைச் சொல்லிக்கொண்டு கனம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தனது மானியத்திற்காகக் காத்திருக்கிறார்கள், நேரம் அதிகமாகிறது, எனவே கனம் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இந்த விளக்கத்தை நல்ல முறையிலே பரிசீலனை செய்து தாங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர் மானங்களையெல்லாம் திரும்பப்பெற்று இந்தக் கோரிக்கையை முழுமன தோடு ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

***திரு. கோ. பூவராகன்** : கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற போது ' சஜஷன்ஸ் அன்டு டிபால்ட்ஸ் ' என்பதுபற்றித் தனித்தனி பெட்டி கள் வைக்கவேண்டுமென்று சொன்னதற்கு, ' பெட்டிகள் வைக்காமலே புகார்கள் எவ்வளவோ வருகின்றன ' என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலே நடத்துகிற தொழிற்சாலையிலே இப்படிப்பட்ட பெட்டிகள் வைத்திருக்கிறார்கள், அந்த முறை நல்லமுறையிலே நடந்து வருகிறது. டி.வி.எஸ்.-இல் அங்கே உள்ள தொழிலாளர்கள் யோசனைகளையும் குறை களையும் சொல்வதற்காக இப்படிப்பட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது,



அவர்கள் இவற்றையெல்லாம் ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எடுத்துப் பார்த்து பரிசீலனை செய்கிறார்கள். அந்த முறையில் தான் வைக்கவேண்டுமென்று சொன்னேன்.

அடுத்து நான் ஏதோ தலைவலியைக் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன் என்று சொன்னார்கள். ஓ.டி.சி.ஏ., சி.ஏ. அலவன்ஸ்கள் கொடுக்கப் பட்டிருக்கின்ற முறைபற்றி சொன்னார்கள். தொழிற்சங்கத்தை நடத்துகிற வர்களுக்கு, திரு. பாலசுப்பிரமணியம் போன்றவர்களுக்குத் தெரியும்.அதிக நேரம் வேலை செய்தால் ஓ.டி.சி.ஏ. கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது, அதுபோலத்தான் சில சமயங்களில் சி.ஏ. கொடுக்கவேண்டுமென்று இருக் கிறது. இவையெல்லாம் நிதி இலாகாவைக் கேட்டுக்கொண்டு அவர்கள் பரிசீலனை செய்தபிறகுதான் வழங்கப்பட்டன. ஓவர்டைம் செய்யவில்லை, காம்பன்சேட்டரி அலவன்ஸ் வேண்டாம் என்று சொன்னால் நிறுத்தி விடுகிறார்கள். இதில் நான் ஏதோ தலைவலியைக் கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றி நிதிஇலாகா காரியதரிசி மற்றும் இலாகா காரியதரிசி, மற்றும் அதிகாரிகளுடன் கலந்து பேசினால் அந்தத் தலைவலி போவதற்கு வாய்ப்பு இருக்கும். அடுத்து ஒன்று சொன்னார்கள். அவர்கள் இருந்திருக்கிறார்களே, அப்போதே இவற்றையெல்லாம் செய்திருக்க லாமே என்றெல்லாம் சொன்னார்கள். முன்பே செய்திருக்கிறோம். அப்படிச் செய்ததின் தொடர்ச்சி, யோசனையின் தொடர்ச்சிதான் நான் இப்பொழுது சொல்வது. என்னென்ன காரியங்களைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்திருக்கிறேன். தொடர்ந்து பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற் பதற்கான திட்டமும் இருந்தது. இப்பொழுது அவைகளைக் கூறுகிறேன். அவ்வாறு கூறும்போது " முன்பே ஏன் அவற்றைச் செய்யவில்லை ? " என்று கேட்பது சரியல்ல.

இன்னொன்றையும் சொன்னார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதற்கும் நான் கூறியதற்கும் முரண்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். குறித்த காலத்தில் ஏன் வரவில்லை என்பதற்கு நானும் விளக்கம் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்த விளக்கத்திற்குப் பதில் சொல்லாமல் ஒத்துப் பேசிக்கொண்டு கூறியிருக்கலாமே, முரண்பாடு இருக்கிறதே ' என்று கவனத்தை வேறு பக்கம் திருப்புவது தனிப்பட்ட முறையில் அமைச்சர் அவர்களுக்குப் பொருந்தாது என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : ஓவர்டைம் அல வன்ஸ், காம்பன்சேடரி அலவன்ஸ் பற்றிச் சொன்னார்கள், அதைக் கொடுக்கவும் செய்யலாம், நிறுத்தவும் செய்யலாம். கொடுத்தவர்கள் நிறுத்தியிருக்கிறார்கள். ஏன் கொடுத்தார்கள், ஏன் நிறுத்தினார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்பார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவர்கள் என்ன காரணத்திற் காகக் கொடுத்து வந்ததை நிறுத்திவிட்டார்களோ, அதே காரணத்தை ஏற்றுக் கொண்டுதான் இந்த அரசாங்கம் மறுபடியும் கொடுககாமல் இருக்கிறது. நமது அரசாங்கத்தில் இந்த அச்சுத்துறைத் தொழிலாளர் களுக்கு மட்டுமே இந்தச் சலுகை தரப்பட்டு மறுபடியும் திரும்பப் பெறப் பட்டிருக்கிறது. இதை இவர்களுக்குக் கொடுப்பதன் காரணமாக மற்றத் தொழிலாளர்களுக்கும் ஆசைகள் ஏற்படுகின்றன. அதைக் காரணமாகக் கொண்டுதான் நிறுத்தியிருக்கிறார்கள். அதே காரணத்தால்தான் நாங்களும் அதை மறுபடியும் கொடுக்கவேண்டாமென்று முடிவு செய்திருக் கிறோம்.

உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்கள் நடவடிக்கைகள்கிடைப்பதிலே காலதாமதமாகிறது, விரைவாக நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். திரு. பூவராகன் அவர்கள், " பல இலாக்காகளிலே ஆங்காங்கே தடைகள் ஏற்படுகின்றன, சரியான முறையில் உரிய காலத்தில் ஆர்டர்கள் அனுப்பப்படுவதில்லை எனவே தாமதம் ஏற்படுகிறது " என்று சொன்னார்கள். அந்தக் காரணத்தை அவர்கள் கட்சி உறுப்பினருக்குச் சொல்லியிருக்கலாமே,

[திருமதி சத்தியவாணிமுத்து] [1968 மார்ச் 21

தாமதம் என் ஏற்படுகிறது என்பதைப் பற்றி அனுபவம் பெற்ற அவர்கள் சொல்லியிருக்கலாமே என்ற முறையில்தான் கூறினேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

குறைகள் பற்றி எடுத்துக் கூறவும், யோசனைகளைக் கூறவும் பெட்டி வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். குறைகளைப் பற்றிச் சொல்ல வாய்ப்பு இல்லையென்று சொன்னால் பெட்டி வைக்க வேண்டியதுதான். டி.வி.எஸ். நிறுவனத்தில் பெட்டி வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது மக்கள் சர்க்கார். யார் வேண்டுமென்றாலும் சுலபமாக ஆட்சியினரை அணுகுவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. எல்லோருக்கும் நேரில் வந்து சொல்ல வேண்டுமென்ற ஆசை இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது, வசதி இருக்கிறது. ஆனால் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் நேரடியாக முதலாளிகளை அணுக முடியாது. அங்கே பெட்டி வைக்கப்பட்டிருந்தாலும் கூட குறைந்த எண்ணிக்கையுள்ள விண்ணப்பங்கள்தான் வரும். இங்கே குறைகளை அமைச்சரிடம் எடுத்துக் கூற வாய்ப்பு இருக்கிறது. தொழிலாளர் தொழிற்சங்கம் இருக்கிறது. ஆகவே, பெட்டி வைத்து அதன் மூலம் குறைகளைக் கேட்க வேண்டுமென்ற நிலை இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் பெட்டி வைக்கின்ற காரியத்தைச் செய்து விட்டு வந்திருக்கலாமே, அதை அவர்கள் ஏன் செய்யவில்லை என்பதைப் பற்றி அறிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** அச்சகத்தில் பெட்டி வைக்க வேண்டுமென்று குறிப்பு இருந்தது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெட்டி வைக்க வேண்டுமென்ற குறிப்பு இருந்ததாகச் சொல்லுகிறார்கள். பெட்டி வைப்பது என்பது செய்கிற காரியத்திலேயே மிக எளிதாகச் செய்யக்கூடிய காரியம். அதை ஏன் அவர்கள் செய்யாமல் விட்டு விட்டார்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பெட்டி வைப்பதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள். அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காததால் வைக்கவில்லை.

**திரு. கோ. பூவராகன் :** பெட்டி வைத்தால் குறைகளைக் கூறினாலும் சஜ்ஜெஷன்ஸ் வந்தாலும் பார்த்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெட்டி வைக்காமல் வந்ததற்கு நேரம் இல்லாததால் வைக்காமல் வந்து விட்டார்கள் என்று கருதவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வைப்பதற்குள்ளே நீங்கள் வந்து விட்டீர்களே என்று கூறிய வாதத்தையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவர்களுக்கே தெரியும். அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள். "Opening the Pandora's Box" என்ற பழமொழி தெரியும். அதனால்தான் பெட்டி வைக்கவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** பல இடங்களில் அந்த முறையில் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் வைத்திருக்கிறார்கள். நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். தனியார் துறையில் பெட்டி வைத்து நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். அச்சுத் தொழில் நிறுவனத்திலும் அத்தகைய முறை கொண்டு வரப்பட வேண்டுமென்ற நோக்கம், முயற்சி இருந்தது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதன் அவசியத்தைத் தாங்கள் உணர்ந்ததற்கும் வெளியே வந்ததற்கும் இடையே பல மாதங்கள் இருந்திருக்கும். சாதாரண பெட்டி வைக்கும் காரியத்தை, சரி என்று தெரிந்த பின் ஏன் வைக்கவில்லை என்பதுதான் எனக்கு ஏற்பட்ட ஐயப்பாடு.



1968 மார்ச் 21]

**திரு. கோ. பூவராகன் :** இருந்தது என்று சொல்லுகிறேன். தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கை மீதும், வெட்டுத் தீர்மானங்கள் மீதும் வாக்கெடுப்பு நடைபெறும்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அந்தத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அவைமுன் உள்ள கேள்வி :—

" கோரிக்கை எண் 34—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,50,52,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும். "

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 19—கூட்டுறவு

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

" கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,10,11,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

**Thiru K. VINAYAKAM :** Sir, to discuss the general policy and effecting some changes in the working of the Act, I move—

" That the allotment of Rs. 3,10,11,200 under Demand No. 19 —Co-operation be reduced by Rs. 100. "

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனங்களில் நடைபெற்றுவரும் நிதி ஒழுங்கீனங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கத் தனிப் பிரிவு ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 19— கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,10,11,200-ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, கிராமக் கடன் சொசைட்டிகளில் நடந்துவரும் ஒழுங்கீனங்களை சீர்திருத்தம் செய்ய வகை செய்யவேண்டியதைப் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 19— கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,10,11,200-ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்களும் திரு. கரு. சீமைச்சாமி அவர்களும் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

**திரு சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர் குடும்பங்களை வாழ்விக்கும் பொருட்டு கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாக்க தமிழகத்தில் தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளை சிங்கப்பூர், மலேயா இந்தோனேஷியா போன்ற நாடுகளோடு அரசாங்கம் தொடர்பு கொண்டு ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்து கூற—

" கோரிக்கை எண் 19—' கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,10, I1,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டு தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத்துறை உ. அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, நம்முடைய சமுதாயத்தினுடைய மாற்றத்திற்குச் சிறந்த முறையில் நடைபெறவேண்டுமென்பதைப் பற்றி எல்லாத் தரப்பினரும் அக்கறையோடு பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தத் துறையிலே சில பேருடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது என்ற கொள்கையை எல்லாத் தரப்பினரும் வற்புறுத்தி வருகிறார்கள். ஏற்கனவே, மத்திய ஆட்சியிலிருந்து அந்தத் துறைக்குக் கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது. இப்போது அந்தத் துறையை மத்திய ஆட்சியில் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற கருத்தைக் கூறி நம்முடைய மாகாணம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டில் இருந்து விவசாயத் துறையில், கிணற்றுக்கும், பம்ப் செட் போன்றவற்றுக்குக் கொடுக்கக்கூடிய கடன்கள் அத்தனையும் கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் கொடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. அதற்காக எடுக்கப்பட்ட ஒரு சில முறைகளைப் பற்றி முதலில் கூற வேண்டுமென்று நினைக்கிறேன்.

இந்த முறை புகுத்தப்படுகிற காரணத்தால் விவசாயிகளுக்குக் கஷ்டம் வரலாம் என்ற எண்ணம் ஏற்படும். அதற்காக அரசாங்கத்தின் சார்பில் சென்ற ஆண்டு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டதோ, கூட்டுறவுத் துறையின் மூலமாக எவ்வளவு கொடுக்கப்பட்டதோ, அந்த இரண்டு தொகைக்கும் மேலாக சில கோடி ரூபாய் அதிகமான அளவுக்கு விவசாயத் துறைக்கு, கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கின்ற திட்டத்தை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே கொடுக்கும்போது நடைமுறையில் பல சிக்கல்கள் வரும், கஷ்டம் வரும் என்ற கருத்து சொல்லப்பட்டு அதற்கான முயற்சிகளையெல்லாம் அரசாங்கம் இப்போது எடுத்துக் கொண்டு வருகிறது. முதல் முயற்சியாக, வில்லங்க சர்டிபிகேட் வாங்குவதில், கடன் மனு தயார் செய்வதில் கஷ்டங்கள் இருக்கின்றன. அதை மாற்றுவதற்குப் பிற மாநிலங்களிலே சட்டம் செய்து இருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் போல் நில அடைமான வங்கி சட்டத்திற்கு புதிய சட்டத்தைக்கொண்டு வருவதன் மூலம், பாங்கு கடன்களுக்கு எந்த அளவுக்கு உறுதி இருக்கிறதோ (செக்யூரிடி) அந்த முறையில் கூட்டுறவுத் துறையில் கொடுக்கப்படக் கூடிய கடன்களுக்கும் இருக்க வேண்டுமென்ற முறையில் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இப்போது அரசாங்கம் கடன் வழங்கும்போது ஆங்காங்குள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்களைப் பயன்படுத்தலாம், கூட்டுறவுத் துறை நில அடைமான வங்கிகள் மூலம் கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறதென்று சொல்லலாம். ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஆங்காங்குள்ள ஈ.ஓ. (வி.) யும், ரெவின்யூ துறையிலிருந்து ஒரு அதிகாரியும் தனியாக நியமிக்கப்பட்டு அந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் எப்போதும் போல் இந்த மனுக்களை எல்லாம் விவசாயிகளிடமிருந்து வாங்கி அவர்களே இவைகளை எல்லாம் தயார் செய்து முடிவு செய்து அதற்குப் பின்னால் ஆங்காங்குள்ள நில அடைமான வங்கிக்கோ அல்லது ப்ரைமரி வங்கிக்கோ அனுப்பவேண்டுமென்ற புதிய முறையைக் கொண்டு வரலாம் என்று முடிவு செய்திருக்கிறது. இவற்றையெல்லாம் சரி பார்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக கூட்டுறவுத் துறையில் இருந்து ஒரு டெப்டி ரெஜிஸ்ட்ரார்

* 141–158-ம் பக்கங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆய்வுரை இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



ரெவின்யூ துறையிலிருந்து ஒரு டெப்டி கலெக்டர் அளவில் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டுமென்ற கருத்தும் பரிசீலனையில் இருக்கிறது. இந்த முறையைக் கொண்டு வந்தால் விவசாயிகளுக்கு கஷ்டம் இல்லாமல் இந்த மனுக்களை அனுப்பி கடன் பெற வாய்ப்பிருக்கும். கூட்டுறவு சங்கங்களில். அவர்கள் உறுப்பினர்களாகச் சேரவேண்டுமே, அதற்கு ஆங்காங்கு தலைமை வகிப்பவர்கள் அனுமதி இருந்தால்தானே அது முடியும், அதனால் விவசாயிகள் எல்லோரும் கடன் பெற முடியாத வாய்ப்பிருக்கிறதே என்ற குறை சொல்லலாம். வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் எந்த மனு கொடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறதோ அத்தனை பேர்களையும் ஆங்காங்குள்ள நில அடைமான வங்கிகளில் கட்டாயமாக, உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டையும் அரசாங்கம் செய்திருக்கிறது. நடைமுறையில் ஒரு சிக்கல் ஏற்படலாம். நிலத்தின் மதிப்பை கணக்கிடுவதும், வில்லங்க சான்றிதழ்கள் வாங்குவதிலும் கஷ்டங்கள் இருக்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதையும் மாற்றுவதற்கு, நிலத்தின் மதிப்பை சரி செய்ய பதிவுத்துறையில், ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில், அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் அந்த வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்துவிட்டால் அந்த அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக அதற்குள்ள மார்க்கெட் வால்யுவை எடுத்துக்கொண்டு கடன் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கும். வில்லங்க சர்ட்டிபிகேட்கள் கூட இப்போது அவர்கள் சென்று உதவிப் பணியாளர்கள் அலுவலகத்தில் வாங்குவதற்குப் பதிலாக அதிகாரிகளே அந்த அலுவலகத்திற்குச் சென்று அவர்கள் வில்லங்க சர்ட்டிபிகேட்டுகளைத் தயார் செய்து அதற்கு அனுமதி பெறும் வாய்ப்பு இருப்பதோடு, வில்லங்க சர்ட்டிபிகேட்டுகளுக்கு எந்த விதமான கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை என்ற வாய்ப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. இதனால் கடன் கொடுப்பதற்கும் கடன் மனுக்கள் செய்வதற்கும் கஷ்டம் இல்லாததொரு சூழ்நிலை ஏற்படலாம் என்று நினைக்கிறேன்.

வட்டியைப் பொறுத்த வரையில் அதைக் குறைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ரிசர்வ் வங்கி கொஞ்சம் குறைத்திருப்பதால் ஏற்கனவே ஒரு விவசாயி 8·4 சதவீதம் வட்டி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது நாம் அதை 7·8 சதவீதமாகக் குறைக்கலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். அரசாங்க மூலம் கடன் வாங்கினால் பங்குத் தொகை கட்டவேண்டாம், கூட்டுறவு சங்கத்தில் பங்குத் தொகை கட்டவேண்டிவரும் என்ற எண்ணம் ஏற்படலாம். அதை மாற்றி 5 சதவீத பங்குத் தொகை என்பதை 2 சதவீதமாகக் குறைத்து கடன் பெறுகிறவர்களுக்கு வசதி செய்யலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். இதை ரிசர்வ் பாங்க் ஆட்சேபிக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ரிசர்வ் பாங்கிடமும், மத்திய அரசினிடமும் வற்புறுத்தி விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. கிணற்று கடனுக்கு அரசாங்கம் மூலம் கொடுத்தால் சப்சிடி உண்டு. கூட்டுறவுத் துறைக்கும் மானியம் வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. 1967 அக்டோபர் மாதம் உத்தரவு பிறப்பித்து கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிணற்றுக்குக் கொடுக்கப்படுகிற கடனுக்கும் இந்த மானியம் உண்டு என்பதையும் அறிவித்திருக்கிறோம்.

கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களில், சொந்தக்காரர்களாக இல்லாமல், குத்தகை தாரர்களாக நிலத்தைப் பயிரிடுகிறவர்களுக்கும் கடன் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்கள். டெனன்ட் கம் கல்டிவேட்டர் என்ற நிலைமையிருந்தாலும் அவர்களுக்கும் கடன் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு டெனன்ட் கம் கல்டிவேட்டர்ஸுக்கு

பி.ப. 1–00 1½ கோடி ரூபாய் வரை கொடுத்திருக்கிறோம். 37,32,000 பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். இன்னும் அதிகமாகக் கொடுக்க முயற்சி செய்து வருகிறோம். முன்னுரையாக இவற்றைமட்டும் தெரிவித்துக் கொண்டு உறுப்பினர்களை நல்ல பல ஆலோசனைகளைத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு ரா. கனகசபை : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை இப்போது ஒரு இக்கட்டான கட்டத்தில் இருக்கிறது. காரணம், விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லாக் கடன்களும் கூட்டுறவுத் துறை மூலம் கொடுக்க வேண்டும். அதுவும் இந்த அரசாங்கம் வந்த பிறகு தக்காவிக் கடன் முதற்கொண்டு கூட்டுறவுத் துறை மூலமாகவே கொடுக்கப்படவேண்டுமென்று உத்தரவு பிறப்பி திருப்பதை வரவேற்கிற சமயத்தில் ஒரு பெரிய பொறுப்பு கூட்டுறவு இயக்கங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை பரிசீலனை செய்ய இந்த அரசாங்கம் ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறது, இப்போது. அந்தக் கமிட்டியை நிறுவியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதற்கு முதல் காரணம், நல்ல தகுதியானவர்களைக் கொண்டு கட்சி சார்ப்பற்றவர்களைக் கொண்டு, இத்துறையில் அரிய யோசனை சொல்பவர்களைக் கொண்டு அக்கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது. ஒரு முக்கிய பிரச்சினை, இப்போது ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் கொடுத்தாலும் அப்பணம் காலாகாலத்தில் கிராமச் சங்கங்களுக்கு போய் சேருவதற்கு முடியவில்லை என்பதுதான் என் கருத்து. அதற்குக் காரணம் என்னவென்று ஆராயும்போது, மேல் மட்டத்தில் கமிட்டி நிறுவி அல்லது அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்து என்ன செய்தாலும் கிராமங்களுக்கு போகும்போது அங்கு பல காரணங்களால் அவர்களுக்கு கடன்கள் கொடுக்க முடிவதில்லை. முக்கியமாக கிராமங்களில் தவணைக் கடன் பாக்கி அதிகமாக இருக்கிறது. அதனால் அங்குள்ள சங்கங்கள் திரும்பக் கடன் பெற தகுதியில்லாத நிலை ஏற்படுகிறது. அந்தத் தவணைக் கடன் பாக்கி ஏன் ஏற்படுகிறது என்றால், திட்டக் குழுவினால் ஒரு கமிட்டி போட்டு விசாரித்தபோது எந்தக் காரியத்திற்காக கடன் கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரியத்திற்காக அது உபயோகப்படுத்தப்படவில்லை என்று ஒரு கணக்கெடுத்து, ஷார்ட் டேர்ம் க்ரெடிட் 23 சதவீதம் மிடில் டேர்ம் க்ரெடிட் 35 சதவீதம் என்று " மிஸ்யூட்டிலேசேஷன் ஆஃப் க்ரெடிட் " என்று ஒரு ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சர்வே செய்ததைவிட இது அதிகமாகத்தான் இருக்கும். குறைவாக இருக்கமுடியாது. அதனால் அவர்கள் திரும்ப கடன் பெறுவதற்கு தகுதியில்லாத நிலை ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் பேசும் போது நீண்ட காலக் கடன் பற்றிச் சொன்னார்கள். ப்ளாக் டெவலப்மெண்டில் உள்ள ஈ. ஓ. (வீ) யையும் மற்றவர்களையும் கொண்டு சீக்கிரம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். என்ன செய்தாலும் கிராமங்களில் உள்ளவர்கள் ஒரு ப்ராப்பர்டி ஸ்டேட்மெண்ட் வாங்கவேண்டுமென்றால் கணக்குப் பிள்ளையிடம் இருந்து வாங்கி திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிற முறை இருக்கும்போது—அதில்லாமல் எப்படி கடன் கொடுப்பது என்றும் தெரியவில்லை—பல சிக்கல்கள் ஏற்பட்டு ப்ராப்பர்டி ஸ்டேட்மெண்டை எளிதில் வாங்கி வர முடியவில்லை. அத்தகைய குறை பாடுகள் நீக்கப்படவேண்டும். அப்படியிருந்தால்தான் விவசாயிகள் சீக்கிரம் கடன் பெற்று உற்பத்தியைப் பெருக்க முடியும். பொது வாக இப்போது கடன் கொடுப்பது என்றால் சொத்துப் பொறுப்பு, என்ன பயிரிடுகிறார்கள் என்று பொதுவாக கணக்கிடுகிறார்களே தவிர இந்த முறையைச் சற்று மாற்றவேண்டும். எப்படி மாற்றுவது என்றால் அவர்கள் உற்பத்திக்காக எவ்வளவு உபயோகப்படுத்துகிறார் கள், அவர்களுக்கு என்ன திறமை இருக்கிறது என்று பார்த்துக் கொடுத்தால் அப்பணம் திரும்பிவருவதில் கஷ்டம் இருக்காது.





உற்பத்திக்காகச் செலவிடுபவர்கள் உற்பத்தியைப் பெருக்கி தாமாகவே திரும்ப பணத்தைக் கட்டி விடுவார்கள். அப்படிக் கட்டினால் திரும்ப சுலபமாக கடன் பெற முடியும். ஆகவே இந்த முறையை சிறிது மாற்றியமைக்கவேண்டும்.

பொதுவாக எல்லோரும் இந்த சட்டசபையிலும் வெளியிலும் சொல்லுவது, கூட்டுறவுச் சங்கங்களில் பணக்காரர்கள்தான் பணம் வாங்கிச் செல்வார்கள், சாதாரண மக்களுக்குக் கிடைப்பதில்லை என்ற புகார்தான். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் என்னுடைய அனுபவத்திலே பார்த்திருக்கிறேன்.- புதிய முறையிலே அதிகமாக எரு வாங்கிப் போட்டு பயிரிட வேண்டுமென்றால் வசதியுள்ளவர்கள்தான் முதலில் ஆரம்பிக்கிறார்கள், பிறகுதான் மற்றவர்கள் அதைத் தொடர்ந்து செய்ய ஏதுவாக இருக்கிறது. எனவே பணக்காரர்கள்தான் செய்கிறார்கள் என்று பீதியடையத் தேவையில்லை. அவைகள் ஆதாரமற்ற சாதாரணமான புகார்கள். இந்தப் புகார்கள் இருக்கின்றனவே என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. வசதி யுள்ளவர்கள் செய்வதைப் பார்த்து மற்றவர்களுக்கும் அதேமாதிரி முன்னேற்றகரமான முறையிலே பயிரிடுகிறார்கள். அதிலிருந்து அவர்களும் கடன் தேவைக்கு வருகிறார்கள்.

அது மட்டுமல்ல, கூட்டுறவு பாங்குகள், சங்கங்கள் எல்லாம் கமிட்டியின் பரிசீலனைக்கு வரும்பொழுது வெறும் பாங்காக மட்டும் நடக்கக்கூடாது " சர்வீஸ் இன்ஸ்டிட்யூஷன் "—ஆக இருக்க வேண்டும். விவாசாயிகளுக்குப் பணம் கொடுப்பது என்று மட்டு மல்லாமல் அவர்களுக்குத் தேவையை உண்டாக்க என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய வேண்டும். மத்திய பாங்குகள் இராஜ்ய பாங்குகள் முதலியவை அந்த வகையிலே விவசாயப் பெருமக்களிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்குக் கடன் தேவையை அதிகப்படுத்த என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டும்.

பொதுவாக இப்பொழுது ஒன்று பேசப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறையில் நிறைய ஊழல் இருக்கிறது, கையாடல் இருக்கிறது என்ற புகார்கள் சட்டசபையிலும், வெளியேலேயும் பேசப்படுகிறது. இதை இல்லை என்று சொல்லத் தயாராயில்லை. ஆனால் பத்தாண்டு காலமாக அதிலே சேர்ந்திருக்கிற அங்கத்தினர் களின் எண்ணிக்கை பத்து மடங்காகப் பெருகி இருக்கிறது. அதே போல் லேவாதேவியும் பத்து மடங்காகப் பெருகியிருக்கிறது. இப்படிப் பரவலாகப் போகும்போது சிலயிடங்களில் சில தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அவ்வாறு தவறுகள் நடக்கும் இடத்தில் அதிகமான கண்டிப்பு அவசியம் தேவை. ஆனால் அந்த மாதிரி நடக்கிறதா என்று பார்த்தால் கண்டிப்பாக நடப்பதே இல்லை. அதிலேயுள்ள நிர்வாகஸ்தர்களைப் பொறுத்து நடவடிக்கை நடக்கிறது.

உதாரணமாக தலைமைச் செயலகத்திலே ஒரு சங்கம் இருக்கிறது. அதில் பெரிய மோசடி ஒன்று தற்பொழுது நடந்திருக்கிறது. ஆனால் அதில் அரசாங்க அலுவலர்கள் அதிகமாக ஈடுபட்டிருப்பதால் அதெல்லாம் வெளியிலே வருவதில்லை. அதேபோல் தென்னாற் காடு மாவட்டத்தில் கடலூரில் மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் சொஸைட்டியிலே உள்ள ஒரு காரியதரிசி தபபு சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். சர்க்காரை ஏமாற்ற தப்பு சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். இதனால் ஏகப்பட்ட நஷ்டம். பாங்கு கூட ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து, அது திரும்பி வருமா வராதா என்ற நிலையிருக்கிறது. இருந்தாலும் அரசாங்க ஊழியர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்ற சங்கங்களிலே நடக்கின்ற ஊழல்கள் சாதாரணமாக வெளியிலே வருவதில்லை, அவைகளின் மீது

சரியான நடவடிக்கை எடுக்க வில்லை. மத்திய பாங்குகள் நடவடிக்கை எடுக்க ஹைக்கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். பலயிடங்களில் இதுபோல் நடக்கிறது. ஆனால் " வெகேட் " செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. ஸ்டே வாங்கி பேப்பரிலே தூங்குகிறது. ஆகவே, நடவடிக்கை எடுத்து தப்பு நடக்கும் இடங்களிலே கண்டிக்க வேண்டு மென்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாகக் கூட்டுறவுத் துறையிலே ஊழல் இருக்கிறது என்று பேசிக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு பேசக்கூடிய அந்த ஊழலைக் களைவதற்கு இலாக்கா அலுவலர்கள் சிரத்தையெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, ஆடிட் சரியாக நடந்தால் தப்பு அதிகமாக நடக்காது. அதுபற்றி இந்த அரசாங்கத்திற்கு ஒரு யோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். கமிட்டியிடத்திலும் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இப்பொழுது அனுபவமில்லாதவர்கள்தான் ஆடிட் செய்துகொண்டு வருகிறார்கள். இலாக்காவிலே கோவாப்பரேட்டிவ் சட்டத்தை மட்டும் படித்துவிட்டு ஆடிட் செய்ய வருகிறார்கள். ஆனால் இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் ஆடிட் செய்ய வேண்டுமென்றால் கோவாப்பரேட்டிவ் ஆக்ட் தெரிந்திருக்க வேண்டும், இன்கம்டாக்ஸ் ஆக்ட் தெரிந்திருக்க வேண்டும், போனஸ் ஆக்ட் தெரிந்திருக்கவேண்டும், பேங்கிங் கம்பெனிஸ் ஆக்ட் தெரிந்திருக்க வேண்டும். போனஸ் மூன்று வருஷமாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. போனஸ் ஆக்ட் தெரிந்திருந்தால்தான் போனஸ் கொடுக்குமாறு ஆடிட்டர்கள் யோசனை சொல்ல முடியும். நான் சொல்லவருவது என்னவென்றால் ஆடிட் இலாக்காவைத் தனியாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரித்து தனியாக அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பயிற்சியளித்து குறைந்தது 3 மாதங்களுக்கு, 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு சங்கத்தையும் ஆடிட் செய்து ஆடிட் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாட்டை செய்தால் ஊழலும் தவறுகளும் குறையும். தப்பு செய்தார்கள் என்று தெரிந்தால் அவர்களை நல்லமுறையில் திருத்தி நடக்கச் செய்ய முடியும். இப்பொழுது பொதுவாக ஆடிட் இரண்டு வருஷம், ஒன்றரை வருஷம், மூன்று வருஷம் என்று கழித்து வருகிறது. அதற்குப் பிறகு தப்பைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பதற்குள் காலாவதி ஆகிவிடுகிறது. அதற்குள் அங்கத்தினர்கள் விலகிக்கொண்டு போகிறார்கள். ஆகவே ஆடிட்டை உரிய காலத்தில் நல்ல முறையில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இன்னொரு பெரிய பிரச்சினை இருக்கிறது. கூட்டுறவுக் கல்விப் பயிற்சி சாலைகள் ஏழு இருக்கின்றன. அதில் படித்து விட்டு வந்தவர்களுக்கு வேலை கிடைக்காமல் ஒரே கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், இனிமேல், இப்பொழுது எங்கு பார்த்தாலும் என்ஜினீயரிங் கல்லூரி இருப்பதுபோல் அல்லாமல், சங்கங்கள் எவ்வளவு, அதற்கு எவ்வளவு பேர் தேவை என்பதை ஆராய்ந்து அந்தப் பயிற்சிச் சாலைகளைக் குறைக்க வேண்டுமா அல்லது ஏழு ஸ்தாபனங்களையும் பலவிதமாகப் பிரித்து பேங்குகளுக்குத் தனிப்பயிற்சி சாலை, " கம்ஸ்யூமர்ஸ் மூவ்மெண்ட் " க்கு தனிப்பயிற்சி சாலை என்று தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமா என்று ஆராய்ந்து அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு கமிட்டி இப்பொழுது அமைத்து எங்கு பார்த்தாலும் கேள்வித்தாள்கள் அனுப்பப்படுகிறது. அது சட்ட மன்றத்திற்கும் வரும் என்று நினைக்கிறேன். ஒரு குறை என்னவென்றால் எப்பொழுது பார்த்தாலும் இருக்கிறவர்களே இருந்து கொண்டிருக்கிறார்களே, மாறவே மாட்டேனென்று சொல்லுகிறார்களே என்ற சாதாரணமான குறையிருந்து கொண்டேயிருக்கிறது.





நான் பொதுவாகச் சொல்லுகிறேன், கொஞ்ச நாளாக நான் இருக்கிறேன் என்பதற்காகச் சொல்லவில்லை, இன்றைய தினம் வேண்டுமானாலும் விட்டுவிட்டுப் போகத் தயாராயிருக்கிறேன். ஒரு ஸ்தாபனத்தை நடத்துபவர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். அப்படி அனுபவம் வாய்ந்தவர்கள் இருந்து நடத்தினால்தான் நல்ல முறையிலே அதை நடத்த முடியும். ஆண்டுக்கு ஒரு முறை, மூன்றாண்டுக்கு ஒரு முறை என்று மாறிக்கொண்டே வந்தால் பர்மனென்ட் சர்வீஸிலுள்ளவர்கள்தான் நடத்திக்கொண்டிருப்பார்களே தவிர உத்தியோகப் பற்றற்றவர்களுக்கு அங்கே வேலையே இருக்காது. எனவே அந்த எண்ணம் சரியானதுஅல்ல. அந்த எண்ணம் இருந்தாலும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பரவலாகப் பலரும் சேர்ந்து, கட்சி சார்பற்ற முறையில் அதில் நம்பிக்கையுடையவர்கள் போன்ற பலரும் சேர்ந்து நடத்த வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே அதன் தலையீடே கிடையாது. ஆனால் சொல்லுகிறேன், அரசாங்க அலுவலர்கள் சம்பந்தப்பட்டவர்கள்தான் அன்றாடம் தொந்தரவு கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். சங்கம் தவறாக நடக்க இதுவும் ஒரு முக்கியமான காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கமிட்டியில் துரிதமாக வேலை நடந்து வருகிறது. அநேகமாக அடுத்த கூட்டத்தொடரிலே நல்லமுறையிலே சங்கங்களைத் திருத்தியமைக்கச் சட்டம் வருமென்று எதிர்பார்க்கிறேன். இந்த மாதிரி கமிட்டியமைத்ததற்காக கனம் அமைச்சரவர்களைப் பாராட்டி இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறையில் இன்றிருக்கும் மிகப் பெரிய பலவீனம் அதிலே நடைபெறும் ஊழல்களை உடனடியாக அரசாங்கம் நீக்க முடியாமல் அல்லல் படுவதாகும். குறிப்பாக கூட்டுறவு பண்டகசாலைகளில், ஏராளமான பண்டகசாலைகளில் பல ஊழல்கள் ஏற்பட்டு நிரூபிக்கப்பட்டு அவர்களெல்லாம் சட்டத்தின் பெயரால், சட்டத்திலே இருக்கிற சில குறைபாடுகளின் பயனால் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக எங்கள் வட்டாரத்திலிருக்கிற சாத்தூர் விற்பனைப் பண்டகசாலைகளில் ஏராளமான ஊழல்கள் நடந்து கூட்டுறவு அதிகாரிகளால் நிரூபிக்கப்பட்டு அந்தக் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாகத்தைக் கலைத்து ஒரு அதிகாரியை நியமித்தது. அந்த ஊழல்களை நடத்தியவர் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்டே ஆர்டர் வாங்கி, திரும்பவும் அந்த சங்கத்தை அவரே நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த வழக்குக்கு அந்த சங்கத்தின் பணத்தையே செலவழிக்கிறார். இன்றைக்கு அந்த சங்கத்தின் கணக்கைப் பார்த்தால், அந்த சங்கத்தின் சொத்து முழுவதையும் கணக்கிட்டால், அதிலே இருக்கிற மூலதனங்கள் பத்திலே ஒரு பங்கு கூட தேறாது போல் இருக்கிறது. இவ்வாறு அங்கு ஊழல்களை ஏற்படுத்துபவர் மேல் நடவடிக்கை எடுக்க ஏற்கனவே இருந்த அரசாங்கம் தயங்கியதன் காரணமாகத்தான் இன்று அந்த ஊழல்கள் மலிந்துள்ளன. ஊழல்களை உற்பத்தி செய்த தலைவரை ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இன்று இருக்கிறது. இதை உதாரணத்திற்குச் சொன்னேன். இது மாதிரி ஏராளமான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. நாடு முழுவதும் இப்படிப்பட்ட ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை

யெல்லாம் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு ஆர்வம் இருந்து பெரு முயற்சி எடுத்துக் கொண்டாலும் இன்றைக்கு இருக்கிற சட்டத்தின் பலவீனம் அவர்களுடைய முயற்சிகளைத் தோற்றுப் போகச் செய்கிறது. எனவே, இந்த சட்டத்தை உரிய முறையிலே திருத்தி, எப்படி பஞ்சாயத்துக்களுக்கு ஒரு காலவரையறையை வைத்து 6 மாதத்திற்குள் அல்லது ஒரு வருடத்திற்குள் ஊழலை விசாரித்து முடிவு செய்யவேண்டுமென்று சொல்கிறோமோ அந்த நிலையை இதற்கும் கொண்டு வரவேண்டும். ஊழல் குற்றச் சாட்டை அதிகாரிகள் சொல்லி, அதில் தலையிட்டு ஊழலுக்குக் காரணம் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டால் அதற்குப் பின்னாலே அந்தப் பழைய தலைவரே உள்ளே வருவதற்கு அனுமதி இருக்கிறது. அதற்குக் காரணம் இன்று உள்ள சட்டம்தான். ஆகவே, இதைப் போக்குவதற்கு சட்டத்தை எவ்வளவு தூரம் திருத்த முடியுமோ அவ்வளவு தூரம் திருத்தவேண்டும். இல்லாவிட்டால் கூட்டுறவு சங்கமே நசிக்கப்பட்டுவிடுமென்று நான் மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் சாத்தூர் கூட்டுறவு சங்கத்தில் இன்றையதினம் ஊழலுக்கு மேல் ஊழல் நடந்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் என்ன பாடுபட்டாலும் அதைத் தடுக்கும் அதிகாரம் அதற்கு இல்லை. எனவே, இந்த திருத்தத்தை முதற்படியாக அரசாங்கம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் சொஸைட்டிகளை அரசாங்கம் துவக்கி வைத்திருக்கிறது. விற்பனைத் துறையில் ஏறத்தாழ 20 ஆண்டு காலமாக இரட்டைப் பலன்களை அவைகள் அளித்து வந்தன. ஆனால், அதை சாதாரண விவசாயிகள் அனுபவிக்கமுடியவில்லை. அந்த மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே பெரிதும் அவசியம் இருக்கும் அங்கிருக்கிற மார்க்கெட்டிங் சொஸைட்டியின் மூலமாக எங்களுக்குப் பலன் ஏற்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னாலே ரூ. 4 இலட்சம் ஊழல் ஏற்பட்டதின் காரணமாக அந்த மார்க்கெட்டிங் சொஸைட்டி சரியாக செயல்படவில்லை. எங்களுடைய மாவட்டத்திலே புஞ்செய்ப் பயிர்கள் விளைகின்றன. விளைந்தும் மீண்டும் அதை விற்கமுடியவில்லை. அதற்கேற்ற விலை கிடைக்கவில்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் மிளகாய் வற்றல் ஒரு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் விற்றது. திடீரென்று 120 ரூபாய் அளவுக்கு தாழ்ந்தது. விலைவாசி குறைய வேண்டுமென்பதுதான் நமது கொள்கையாக இருந்தாலும், விவசாயி உற்பத்தி செய்து விற்கின்ற பொருளின் விலைதான் இந்தமாதிரி குறைகிறதே தவிர, விவசாயி வாங்குகின்ற எலெக்ட்ரிக் மோட்டாரின் விலையோ, அவன் வாங்குகின்ற உரத்தின் விலையோ, அவன் கல்விக்காகச் செய்கின்ற செலவோ உயர்ந்திருக்கிறதே தவிர, இந்த வகையிலே குறையவில்லை. இப்பொழுது கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன கொடுத்து உதவுகிறது. அந்தக் கடனைத் திரும்பிச் செலுத்துவதற்கு வேறு வழியேயில்லாமல், அந்தக் கடன் சுமை தாங்க முடியாமல், வியாபாரி கேட்ட விலைக்குக் கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, விவசாயி வியாபாரிக்குக் கொடுக்கின்ற பொழுது குறைகின்ற விலை வியாபாரியின் கைக்கு மாறியவுடன் திடீரென்று எப்படி ஏறி விடுகின்றது என்பது யாருக்குமே புரியாத புதிராக இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், மிகப் பிரம்மாண்டமாக இந்தப் புஞ்சை பயிர்களை விலைக்கு வாங்கி, கடனுக்குப் பதிலாக அந்தப் பொருள்களை வாங்கி, விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சியான பகுதி அது. அந்த வறட்சியானப் பகுதியில் இன்றைக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. விவசாயத் துறையிலே இன்



றைக்குக் கொடுக்கப்படுகின்ற உதவி, பெரும்பாலும் மிகப் பெரிய உதவியாக இல்லாமல் ஏதோ தற்காலிக உதவியாகப் பயன்படுகிறதே தவிர, அவர்கள் என்ன கருத்தோடு கொடுத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. கடன் வாங்குகிற பொழுது 3/4 பங்கு விவசாயிகள் உரம் வாங்குவதற்காக என்று வாங்கி, வீட்டிலே தேவைப்படுகிற அன்றாடப் பொருள்களுக்குச் செலவழிக்கவேண்டிய, பயன்படுத்தவேண்டிய வறுமைச் சூழ்நிலையிலே இருக்கிறார்கள். உரத்தை வாங்கி, புஞ்சை நிலங்களிலே போட்டாலும் கூட, ஒரு அச்சமான நிலைதான் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிக்குப் பெயர் போனது. கடன் வாங்கி உரத்தை வாங்குகிறார்களே தவிர, அப்படி உரம் விநியோகிக்கப்படுகிறதே தவிர, அதற்குரிய பலன் கிட்டவில்லை.

அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அங்கே ஒரு ஏழை விவசாயி 30 கஜம், 35 கஜம் ஆழக் கிணறு வெட்டினால் கூட தண்ணீர் வருவதில்லை. கிணறு வெட்டுவதற்காக அவன் கூட்டுறவு சங்கத்திடமிருந்து கடன் வாங்குகிறான். அப்படி வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையிலே அவதிப்படுகிறான். எனவே, கூட்டுறவுத் துறையும் விவசாயத் துறையும் ஒன்று சேர்ந்து, இணைந்து உணவுத் துறையும் ஒன்று சேர்ந்து இணைந்து அவர்களுக்குக் கிணறுகளை அதிக அளவில் வெட்டிக்கொடுப்பதோடு அந்தக் கடன் உதவியும் அதிக அளவு செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஊழல்களைப் போக்கி, அந்த விதத்தில் சட்டத்தை விரைவில் திருத்தி ஏற்கனவே இருந்த, இருக்கிற அவல சூழ்நிலையைப் போக்க வேண்டும். இன்றைக்கு இந்தக் கூட்டுறவு கம்யூனிஸத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் ஒரு பாலமாக அமைய வேண்டுமென்றுதான் பலரும் எதிர் பார்க்கிறார்கள். ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும் கடந்த 20 ஆண்டு காலமாக கூட்டுறவுத் துறை, விவசாயிகளுக்குக் கிட்டாதவகையில், தொழிலாளிகளுக்குக் கிட்டாதவகையில், அந்தக் கூட்டுறவுச் சாதனத்தை, கூட்டுறவுத் துறையை முதலாளிகளுக்கு அமைந்த ஒரு ஆயுதமாக மாற்றி விட்டார்கள். சாதாரண கூட்டுறவுப் பண்டகசாலையைக் கூட, அந்த உள்ளூரிலே இருக்கிற காங்கிரஸ் பிரமுகர்கள் அவர்களுக்கு இருக்கிற பல்வேறு தொழில்களோடு, கூட்டுறவுத் துறையையும் ஏற்று—புகுந்து—அவர்கள் ஊழல்களையும் மறைக்கக்கூடிய நல்ல வழியாக அதைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். அது யாருக்குப் பயன்பட வேண்டுமோ அந்த நடுத்தர வர்க்கத்தாருக்கு இன்னும் முழுக்க முழுக்கப் பயன்படக் கூடிய நிலைக்கு வரவில்லை.

இந்தக் கூட்டுறவுத் துறை நல்லமுறையிலே பணியாற்றி வெற்றிபெற, அந்த இயக்கம் ஏழைகளுக்குப் பயன்பட, எளிதாக கிட்டக்கூடிய வகையில் வாய்ப்புகள் ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் பாடுபடவேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களை சொல்ல வந்திருக்கிறேன். கூட்டுறவு ஸ்தாபனம் இந்த நாட்டிலே ஆரம்பித்து சற்றேறக்குறைய 63 ஆண்டுகள் ஆகியும் இந்தப் புதிய ஆட்சி வந்த பிறகு ஓராண்டு காலத்தில் இத்தகைய கூட்டுறவு ஸ்தாபனங்கள் கிராமப் புறங்களிலே மக்களுக்கு ஓரளவு பயன்படக்கூடிய அளவு பயன்படுகிறது என்பதை இப்பொழுது தான் மக்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம், இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்ற திட்டத்தை சென்ற 20 ஆண்டுகளாக அவர்கள் கடைப்பிடித்தும் சற்றேறக்குறைய 160 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்குக் கடன்தொகை தேவை என்று கணக்கிட்டபோதிலும் இந்தத் தொகையில் இதுகாறும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 20 சத

[திரு. சி. கிருஷ்ணமூர்த்தி] [1968 மார்ச் 21

விகிதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், புதிய அரசு, புதிய சர்க்கார் வந்தபிறகு இந்த ஆண்டு இந்தக் கூட்டுறவின் மூலம் சற்றேறக்குறைய 80 கோடி ரூபாய், அதாவது 50 சத விகிதம் அளவு விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்ற திட்டத்தை இங்கே இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்திலே கொண்டு வந்திருக்கிறோம். அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். அதைப்போல் கூட்டுறவிலே விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்றபொழுது வட்டி அதிகமாக இருக்கிறது என்ற ஒரு புகாரும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அதிகமாகப் பங்குத்தொகை கொடுக்கவேண்டுமென்ற புகாரும் இருந்ததை இந்தப் புதிய சர்க்கார் கவனித்து, வட்டி வீதத்தைக் குறைத்தும், பங்குத் தொகையைக் குறைத்தும் இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய நல்ல அபிவிருத்திகளையெல்லாம், புதிய திட்டங்களையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1966–67-ல் 283·60 இலட்சம் ரூபாய்தான் கூட்டுறவு ஸ்தாபனத்தின்மூலம் விவசாயிகளுக்கு வழங்கினார்கள். ஆனால், 1967–68-ல் 360·42 இலட்சம் ரூபாய், அதாவது 1968 ஜனவரி மாதம் 31-ந்தேதி வரையில் அதிகமாக 77 இலட்சம் ரூபாயை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறது. இப்படி நல்ல பல காரியங்களைப் புதிய சர்க்கார் கூட்டுறவு மூலம் செய்யக்கூடிய நேரத்தில் அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள், நல்ல முறையிலே பணியாற்றுவதற்கான நல்ல பணிகளையும் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய எதிர்க் கட்சியிலேயிருக்கிற கூட்டுறவு ஸ்தாபனத்திலே தொடர்பு கொண்டவர்கள் கூடக் கூட்டுறவு ஸ்தாபனம் சரியாக நடைபெறவில்லை ; ஆங்காங்கு மோசடிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, கூட்டுறவு ஸ்தாபனம் ஏதோ ஒரு தனிப்பட்டவருடைய சொத்து, ஒரு குடும்பத்தினுடைய சொத்து, ஒரு பரம்பரையினுடைய சொத்து என்ற அளவில்தான் 20 ஆண்டுக் காலமாக இருந்துகொண்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும்சரி, மத்திய வங்கியாக இருந்தாலும்சரி, இதிலே இருக்கிற ஸ்தாபனங்களுடைய கணக்கை எடுத்துப் பார்ப்போமானால், பரம்பரை பரம்பரையாக ஒரே கூட்டத்தவர்கள், ஒரே குடும்பத்தவர்கள் தங்கள் சொத்தாகக் கருதி, அந்த வங்கிகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.

எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர் மத்திய வங்கித் தலைவராகப் பணியாற்றுகிறவரும் சொன்னார்கள். மத்திய வங்கியிலிருந்து கடன் வசதி மக்களுக்குக் கொடுக்கின்ற நேரத்தில், ரிசர்வ் வங்கியிலிருந்து பணத்தை வாங்கிக்கொடுக்கின்ற நேரத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். பல கஷ்டங்கள் இல்லை. பல ஊழல்கள் இருக்கின்றன. ரிசர்வ் வங்கியிலிருந்து கொடுக்கிற அந்தப் பணத்தை, மத்திய வங்கி இங்கு விவசாயிகளுக்குக் கொடுக்கிற நேரத்தில், மத்திய வங்கி நிர்வாகத்தைப் பார்ப்போமானால், சற்றேறக்குறைய 20 ஆண்டுக் கால நிர்வாகத்தைப் பார்த்தோமானால், அதைக் கூட முறையாக மத்திய வங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க முடியவில்லை . . . . .

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை இப்பொழுது ஒற்றி வைக்கப்படுகிறது. இன்று மாலை 3 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

(பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பப்பட்டது)

இடைவேலைக்குப் பின்—பிற்பகல் 3·00

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் பேரவை பிற்பகல் 3–00 மணியளவில் மீண்டும் கூடிற்று.



1968 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி தன் உரையைத் தொடர்ந்து ஆற்றுவார்கள்.

* **திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள் தொடர்ந்து கடந்த இருபது ஆண்டுக் காலமாக குறிப்பிட்ட ஒரு குடும்பத்தினரிடையே இருந்துகொண்டு வருகின்றன. அதே நேரத்திலே இத்தகைய ஸ்தாபனங்களுடைய நிர்வாகம், திறமை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே இருக்கிறது என்பது நன்றாகத் தெரிந்த உண்மையாகும். ஆகையினால், புதிய சர்க்கார் நமது கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் மக்களுக்கு எல்லாத் தேவைகளையும் செய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு நல்ல பல காரியங்களைச் செய்துவரும் இந்த நேரத்தில், இத்தகைய கூட்டுறவு ஸ்தாபனங்களில், ஒரு குடும்பத்தாரிடையே இருக்கும் ஸ்தாபனங்களை, மக்கள் ஸ்தாபனங்களாக மாற்றுவதற்கான நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். எல்லாத் துறையினரும் இத்தகைய கூட்டுறவு ஸ்தாபனங்களில் உறுப்பினராக இருக்கும் அத்தகைய சட்ட திட்டங்களை வருகின்ற இந்தக் குழு ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு எடுத்தால், மக்களுக்குப் பயன்படும் அளவில் அமையும் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவு ஸ்தாபனங்களிலே பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகிற ஊழல்களை, ஆங்காங்கே பொதுமக்களிடத்திலிருந்து வாங்கிய பணங்களை விரயம் செய்தவர்களைத் தண்டிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புதிய சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்கும்போதுகூட, இந்த ஸ்தாபனங்களில், கூட்டுறவு இயக்கத்தில், போதிய சிப்பந்திகள் வசதிகள் இல்லாத காரணத்தாலோ என்னவோ, எல்லா நடவடிக்கைகளும் தாமதமாகவே நடைபெறுகின்றன. என்னுடைய தொகுதியில், தஞ்சை மாவட்டத்தில், பிராசிக்யூஷன் டீ.எஸ்.ஆர். என்கிறவர் குடந்தையில் இருக்கிறார். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தவிதமான பிராசிக்யூஷன் நடவடிக்கைகளிலும், நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்டத்திற்கு ஒரு டீ. எஸ். ஆர். இருக்கிறார் என்றால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, வெட்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன்; வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன், இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் மோசமான ஸ்தாபனங்கள் எங்கள் பகுதியில்தான் இருக்கின்றன—லிக்விடேஷன், பிராசிக்யூஷன், மிஸப்ரோப்ரியேஷன் இப்படி ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் ஏற்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு ஸ்டோரா, மிஸப்ரோப்ரியேஷன். அக்ரிகல்சுரல் சொஸைடியா, பிராசிக்யூஷன், அர்பன் பாங்கா, லிக்விடேஷன் இந்த அளவில் அங்கே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் எடுக்கப்ட டக்கூடிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்தால், நம்முடைய சர்க்காருடைய பணமும் விரைவில் வரக்கூடும், அதே நேரத்திலே மக்களுக்கும் தவறு செய்கிறவர்களை புதிய சர்க்கார் கண்டு பிடித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற கருத்து பரவி, மற்றவர்களும் தவறு செய்யாமல் இருப்பதற்கு அது ஊக்கமளிக்கும் வகையில் அமையும். பிராசிக்யூஷன் தரப்பில் டீ. எஸ். ஆர். என்று மாவட்டத்திற்கு ஒருவரைப் போடுவதைவிட, பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை மோசம் செய்தவர்களைக் கண்டுபிடிக்கக் கூடிய அதிகாரியை ஒரு டெபுடி ரிஜிஸ்ட்ரார் ஆகப் போடலாமா என்பதைச் சர்க்கார் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, ஒரு ஜில்லாவிற்கு ஒரு டீ.எஸ்.ஆர். (பிராசிக்யூஷன்) என்று இருப்பதை இந்த ஒரு தொகுதிக்காவது, அல்லது இப்படிப்பட்ட வழக்குகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளுக்காவது பிராசிக்யூஷன் தரப்பில் மேல் அதிகாரியை உடனடியாக நியமிக்கச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல துரிதமான நிர்வாகத் திறன் பெற்றிருக்கும் அமைச்சர் அவர்களைப் பெற்றிருக்கிறோம் இந்தச் சர்க்கார் நல்ல அதிகாரிகளைப் பெற்றிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுடைய சட்டத்தை நாம் நல்ல முறையில் திருத்தி, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்ய வேண்டும். பத்து ரூபாய் திருடிய ஏழை எளியவரை உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகிறார்கள். ஆனால் பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் என்று கூட்டுறவிலே மோசடி செய்கிறவர்களிடத்திலே நடவடிக்கை எடுக்க கொஞ்சம் காலதாமதமாகிறது. அதற்கான சட்ட திட்டங்கள் இடம் கொடுக்கவில்லையென்றால், அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களிலே இருப்பவர்களின்மேல் நடவடிக்கை எடுக்க, குழுவிலே இடம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், முடிந்தால் இத்தகைய கூட்டுறவுச் சங்ககளில் எங்கெங்கு மோசடி நடைபெற்றிருக்கிறதோ அவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு தனி டிபார்ட்மெண்டையோ, ஒரு தனி அமைப்பையோ ஏற்படுத்தினால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மத்திய வங்கியிலிருந்து ஆங்காங்கு கிராமத்திலுள்ள கிராம நாணயச் சங்கங்களுக்குத் தரப்படுவது தவணை கடந்த கடனாக இருக்கின்ற காரணத்தினால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். தவணை கடந்த கடன்களாக இருப்பதற்குக் காரணம் என்ன ? பணம் படைத்தவர்களிடத்தில்தான் பாக்கியிருக்கும். பணக்காரர்களிடத்தில்தான் அதிகத் தொகை பாக்கியிருக்கும். இல்லாவிட்டால் பினாமி டிரான்சாக்ஷன் இருக்கும். ஏழை எளியவர்கள், விவசாயிகள், நடுத்தர வகுப்பினர்கள் இவர்களிடத்தில், 100, 200 என்று விவசாயத்திற்கு வாங்கியவர்களிடத்தில் மிகக் குறைவான தொகைதான் பாக்கியிருக்கும். குறிப்பிட்ட நான்கைந்து பேர்கள், அதிகத் தொகையை பாக்கியாக வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தால் கிராமச் சங்கங்கள் மீண்டும் மத்திய வங்கியிலிருந்து பணம் வாங்கிச் செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது.

ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு சூப்பர்வைசிங் யூனியன் என்ற வேலையில்லாத ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. இதன் மூலமாகத்தான் மத்திய வங்கிக்கு டைரக்டர்கள் போகிறார்கள். மத்திய வங்கியில் டைரக்டராவதற்கு சூப்பர்வைசிங் யூனியன் தாலூகா அளவிலே இருக்கிறது. வேறு எந்த வேலையும் அதற்கு இல்லை. சூப்பர்வைசிங் யூனியன் தேவையா, அது வைத்திருக்கப்பட வேண்டுமா என்பதையும் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

இப்பொழுது ஆங்காங்கு இருக்கின்ற கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியனிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியனிலே இருப்பதால், பஞ்சாயத்து யூனியனுடைய வேலைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒருசில நேரங்களில்தான் கூட்டுறவு வேலை பார்க்கிறார்கள். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கும் கூட்டுறவு, விஸ்தரிப்பு அதிகாரிகளை பஞ்சாயத்து யூனியன் தொடர்பிலிருந்து எடுத்து ரிஜிஸ்ட்ராரிடம் ஒப்படைத்தால் அவர்கள் முழு நேரமும் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கவும், துரிதமாக வேலை நடைபெறவும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய உருவில் சட்ட திட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு ஸ்தாபனம் இப்போதிருக்கின்ற நிலைமையிலிருந்து மாறி, மக்களுடைய ஸ்தாபனமாக மாற ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. செ. கந்தசாமி கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் உணவு உற்பத்திச் செலவிற்காகக் குடியானவர்





கட்குத் தேவையான கடன் தொகையில் ஒரு பகுதியைத்தான் கூட்டுறவுத் துறை விவசாய நாணயச் சங்கத்தின் வாயிலாக வழங்குகிறது என்றும், இந்தத் துறைக்கு இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்குவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 'பயிர்க் கடன்' என்ற ஆண்டு கடன் திட்டம் காவிரிபோன்ற வற்றாத ஜீவநதி பாயும் தஞ்சாவூர் மாவட்டம் போன்ற பகுதிகளுக்குத்தான் பொருத்தமானது. பிற்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்ட கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தாராபுரம் வட்டமும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூர் வட்டமும் ஆகிய இடங்களில் மானாவாரி புன்செய்கள் 99 சதவீதமுள்ள இடங்களுக்கு இந்தத் திட்டம் பொருத்தமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, இப்பகுதியில் கொடுக்கும் பயிர்க் கடன் குறைந்தது ஓராண்டுக் காலத்திற்குக் குறைந்ததாக இருக்கக்கூடாது. மேலும், இப் பகுதியில் வழங்கும் பயிர்க் கடனில் ஒரு பகுதிக்கு உரம், பூச்சி மருந்து கொடுக்கும் விதியைத் தளர்த்த வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு விவசாயிக்கு 15 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் கொடுக்கலாம் என்று இருப்பதை மூன்றில் ஒருபகுதியான 5,000 ரூபாயைக் குறுகிய காலக் கடனாகவும், அதாவது ஓராண்டுக் கடனாகவும், மற்றோர் பகுதியை மத்தியக் காலக் கடனாகவும், அதாவது மூன்றாண்டுக் காலக் கடனாகவும், மற்றப் பகுதியை நீண்ட காலக் கடனாகவும் அதாவது ஐந்து வருஷத் தவணைகளில் திருப்பித் தருவதற்கும் வகைசெய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு கூட்டுறவு நாணயச் சங்கத்தின் குறைந்தது 3 இலட்சம் ரூபாய் அளவில் வரவு செலவு நடைபெற்றால்தான் நஷ்டம் இல்லாமல் இருக்கும். மூலனூர் பகுதியில் என் தலைமையில் இயங்கும் அரிக்காரன்வலசு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் ஆண்டுக் கடன் திட்டம் நடைமுறைக்கு வருமுன் 3 இலட்சம் வரை கொடுக்கல் வாங்கல் நடைபெற்று வந்தது. அது இப் போது ஒரு இலட்சம் ரூபாயாகக் குறைந்துவிட்டது என்பதைச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கத்திற்கு உர விநியோக அனுமதி அளித்து, அதன் வாயிலாக ஓரளவு விவசாயிகளுக்குக் காலா காலத்தில் உரம் கிடைக்க வகைசெய்யவேண்டும். மேலும் தங்கக் கட்டுப்பாடு சட்டம் வருவதற்குமுன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நகைகளின் பேரில் கடன் வழங்க அனுமதி இருந்ததைப்போலவே மீண்டும் அனுமதி அளித்தால், கிராமப் புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கும் தவணைக் காலங்களில் கடன் கட்ட முடியாத விவசாயிகளுக்கும் மிக்க அனுகூலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், நபர் ஜாமீன் மேல் நிலமில்லாதவர்களுக்கும் குறைந்தது ரூபாய் 100-லிருந்து 200 ரூபாய்வரைக்கும் கிடைக்க வகை செய்ய வேண்டும். குறிப்பாக, விவசாயிகளுக்கு உணவு உற்பத்திக்கு வேண்டி, கடன் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையில் நல்ல திட்டத்தை வகுத்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, ரிசர்வ் பாங்கியிலிருந்து மத்திய வங்கி பெறும் வட்டி விகிதத்திலிருந்து ஒருசத விகிதம்தான் அதிகப்படியான வட்டிக்கு கிராம சங்கங்களுக்கும் கொடுக்க வேண்டும். டிபாசிட் தொகை 5 சத விகிதத்துக்கு மேல் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக கூட்டுறவு நில அடமான வங்கிகள் விவசாய அபிவிருத்திக்கு அதாவது பூமி மராமத்து, கிணறு வெட்டுதல், டிராக்டர் வாங்குதல் போன்ற வகைகளுக்கு 20 வருஷத் தவணையில் கடன் வழங்கசெய்திருக்கும் ஏற்பாட்டைப் போலவே, வறண்ட பிற்போக்கான பகுதியாகிய கரூர் வட்டம்,

தாரை வட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு முன்கடன் தீர்ப்பதற்குக் கூட்டுறவு நில அடமான வங்கி வாயிலாக வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த ஆண்டு கூட்டுறவுத் துறைக்கு வசூலாக வேண்டிய கடன்களை ஒற்றி வைகக வேண்டும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியம் மிகவும் முக்கியமானது. "கூட்டுறவு என்றால் நாட்டுறவு" என்று சொல்லப்படுகிறது. ஆனால், எனனால் இன்றைக்குளள நிலைமையில் இதை எற்றுக்கொள்ள முடியவில்லை. "கூட்டுறவு எனறால் கூட்டுக் கொள்ளை உயர்வு, தனி நபர்களுடைய வீட்டு உயர்வு" எனறு சொல்லலாம். இந்த நிலைமை இந்தச் சர்க்கார் வந்ததற்குப்பிறகு ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லவில்லை. கடந்த இருபது வருஷக் காலமாக ஆயிரக் கணக்கில் மாத்திரமல்ல, பல லட்சக்கணக்கான ரூபாய் கொள்ளை அடிக்கப்படக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உடனுக்குடனே கடுமையான நடவடிக்கை எடுககமுடியாத அளவிற்கு, வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்ற தன்மையிலே சட்டம் இருக்கிறது. சென்ற தடவை இருந்த ஆட்சியும் அதற்குப் பாதுகாப்பாக இருந்து வந்தது என்று சொல்லலாம். அநத அளவிற்கு மிக மோசமாக இருந்தது எனற காரணத்தால்தான் அதைச் சொல்ல வேண்டுமென்று சொல்லுகிறேன்.

(திரு. வி. எஸ். கோவிந்தராசன் தலைமை)

கூட்டுறவு நாம் எண்ணிய அளவிற்கு, மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு ஏற்படாததன் காரணம், இன்றைக்கு மிகப் பெரிய பணக்காரர்களும், நிலப்பிரபுக்களும், லேவாதேவிககாரர்களும், வியாபாரிகளும் அதில் தலைமைதாங்கி நடத்தக்கூடிய அளவில் இருப்பதே காரணம். அவர்கள் விடாப்பிடியாக இருந்துகொண்டு வருகிற காரணத்தால், மிகப் பெரிய அளவிற்கு ஊழல் ஏறபடுகிறது என்பது மட்டுமல்ல, சாதாரண ஏழை மக்களுககுப் பயன்பட முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால் தான் இப்போது உயர்திரு கே. சந்தானம் அவர்கள் தலைமையில் நானும் கமிட்டி அமைத்திருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் கூறலாம். வெறும் பட்டதாரிகளைமட்டும்தான் அதில் போட்டிருக்கிறார்கள். உண்மையாக நாணயச் சங்கங்களில், கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களை அதில் போடவேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்களைக்கூட அதில் போடவேண்டும். நல்ல முறையில் அவை செயல்படவேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர்களை அதில் போட வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு இயக்கத்தையே செம்மைப்படுத்த முடியும் என்பது என்னுடைய தாழ்மையான யோசனை. இதுபோன்ற ஒரு நிலைமை இந்தியாவில் மட்டும் தான் இருக்கிறது என்று தெரிய வருகிறது. மற்ற நாடுகளில் இவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரண மக்கள், நடுத்தர மககள் எல்லாம் அதில் இருப்பதன் மூலம் தான் நல்ல முறையில் நடக்கும் என்று சொல்லலாம். அது மாத்திரம் அல்ல. ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்கு எனபது எந்த முறையில் நடக்கிறது என்று பார்த்தால் தெரியும், 500 ரூபாய் யார் ஷேர் போட்டிருக்கிறாரோ அவர் தான் தேர்தலுக்கே நிற்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்ற விஷயங்களை எல்லாம் திட்டவட்டமாகத் திருத்தி அமைத்தாக வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டப்படி பார்ப்போமேயானால் வருடத்திற்கு ஒரு முறை ஆடிட் நடந்தாகவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இதில்கூட ஏழைகளுக்கு ஒரு மாதிரி, பணக்காரர்களுக்கு ஒரு மாதிரி—கீழே இருக்கிற நாணயச் சங்கங்களுக்கு மாத்திரம் வருடா வருடம் ஆடிட் நடந்தாக வேண்டும். மாவட்ட ரீதியில் இருக்கக்கூடிய, மாநில அளவில் இருக்கக்கூடியவற்றிற்கு 3 வருடத்திற்கு ஒரு வருடம்கூட ஆடிட் ஆகாமல் இருக்கிறது. இது போன்ற ஆடிட் ஆகவில்லை என்றால் நிலைமை என்ன? ஒரு



இலட்சத்தில் ஒரு சைபரை அழித்துவிட்டால் பத்தாயிரமாகிறது, பத்தாயிரத்தில் ஒரு சைபரைச் சேர்த்துவிட்டால் ஒரு இலட்சம் ஆகிறது. இப்படி அழித்துத் திருத்தி பெரிய அளவுக்கு மோசடி செய்வதற்கு உதவியாக நிலைமை இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாதது அல்ல. ஆகவே அதைக்கூட மாற்றி 'Continuous audit and internal audit என்பதாக தொடர்ச்சியான தணிக்கை முறையையும், ஆண்டுக்கு ஒரு முறையான ஆடிட் முறையையும் ஏற்படுத்தினால் தான் அப்போதைக்கப்போது ஆடிட்டர்கள் வருவார்களே என்ற அச்சத்திலாவது கணக்குகளை ஒழுங்காக வைத்திருப்பார்கள். இப்படிச் செய்வதனால் பல பேர்களுக்கு வேலை கிடைக்கும். இலட்சக்கணக்கில் ஒரு ஆள் ஏப்பம் விட்டுச் செல்வதற்கு வழியின்றி, இப்படிச் செய்வதனால் பலர் வேலை பெறுவார்கள், ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவற்கு இது உதவியாகக் கூட இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒவ்வொரு ஊரிலும் பான் ப்ரோக்கர் ஷாப் இருக்கிறது. இனி அவற்றுக்கு சர்க்கார் லைசென்சே கொடுக்கக்கூடாது. கூட்டுறவு அடமான வங்கிக் கடை என்ற பெயரால் ஆங்காங்கே ஏற்படுத்திவிட்டால் ஏழை எளிய மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்றைக்கு ஒரு ஏழை, பான் ப்ரோக்கர் ஷாப்புக்குப் போய் தன் சிறிய நகையை வைத்தாலும்கூட கணக்கில் ஒரு பைசா, இரண்டு பைசா என்றுதான் எழுதப்படுகிறது. ஆனால், அவர்கள் வாங்குகிற வட்டி விகிதம் தெரியாதது அல்ல. 6 மாதத்தில் நகையையே ஏப்பம் விடுகிற சூழ்நிலைகளையும் பார்க்கிறோம். ஆகவே கூட்டுறவு வங்கிக் கடைகளை நாம் அமைத்தாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று, பஸ், லாரி, டாக்ஸி போன்றவைகளின் அடமான கூட்டுறவு பாங்கையும் நாம் ஆரம்பித்தாகவேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். மைசூர் ஸ்டேட்டில் அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது. பலர் நன்மை அடைந்து வருகிறார்கள். நமது மாநிலத்திலும் அதுபோல அதையும் ஆரம்பித்தால் மிகப் பெரிய உதவியாக இருக்கும் என்பது என் ஆலோசனை.

இன்றைக்குச் சட்டத் திட்டங்கள் லிமிடெட் சொஸைடிகளுக்கு ஆங்கிலத்தில் இருக்கிறது. நாணயச் சங்கங்களுக்கும் தமிழில் இருந்து வருகிறது. இனி எந்த சொஸைடியாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் எல்லாம் தமிழிலேயே இருக்கும்படியாகச் செய்வது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலே இருந்து போகக்கூடிய உத்தரவுகள் அனைத்தும் கீழே இருக்கிற சொஸைடிகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்படுவது கிடையாது. இனி எந்த உத்தரவாக இருந்தாலும் உடனுக்குடன் கீழே அனுப்பப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தியாகவேண்டும்.

கூட்டுறவு இலாக்காவிலே நாணயமாக வேலை செய்கின்றவர்கள் இருக்கிறார்கள். நாணயம் இல்லாமல் வேலை செய்கின்றவர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் சிப்பந்தி ஒரு தவறு செய்தாரா இல்லையா என்பதை முதலில் டிபார்ட்மெண்டல் என்க்வைரி நடந்த பிறகு, தவறு செய்தார் என்பதற்கு ஆதாரம் இருக்குமானால் போலீஸ் அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை டிபார்ட்மெண்டல் என்க்வைரி இல்லாமலேயே போலீஸ் துறையினர் தலையிட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்கின்ற நிலைமை இருக்கிறது. இது மோசமான போக்கு. இது போன்று இருக்கக்கூடாது. முதலில் இலாக்கா அதிகாரிகள் மூலமாகவே விசாரணை நடத்தப்படவேண்டும். அதற்குப் பிறகே காவல் துறையினரிடத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று கூட்டுறவு இலாக்கா மூலமாக நடக்கக்கூடிய சர்க்கரைத் தொழிற்சாலை, நூல் தொழிற்சாலை, பத்திரிகைகள் இங்கெல்லாம் போனஸ் கொடுக்கப்படுவதில்லை, டிவிடெண்ட் கொடுக்கப்படுவது கிடையாது. பல தீர்ப்புகள் வந்திருந்தும் அவற்றை அவர்கள் அமுல்படுத்துவது கிடையாது. இதையெல்லாம் கவனித்துத் தயவுசெய்து அந்தத் அந்தத் தீர்ப்புக்களை அமல் நடத்தவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சட்டம் என்பது மாத்திரம் அல்ல. அதற்கு ரூல்ஸ் என்று இருந்தாலும், பை லா என்று இருக்கிறது. அது இடத்திற்கு இடம் வித்தியாசமாக இருக்கிறது. சங்கத்திற்குச் சங்கம் வித்தியாசம். அதனால் பல இடையூறுகள் வருகின்றன. அவை எல்லாச் சங்கங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பது என் விருப்பம். காரணம் சிம்சன் கூட்டுறவுப் பண்டகசாலையை எடுத்துக்கொண்டால், அதில் அங்கத்தினராகச் சேருவதற்குத் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருந் தால்தான் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்கிற அளவுக்கு இருக்கிறது. அதனால் எவ்வளவு பெரிய இடையூறுகள் ஏற்பட்டன. அதன்மூலம் ஏற்பட்ட மோதல்களில் இருந்தே அது தெரியவரும். இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. இவர்கள் போட்ட உத்தரவைக்கூட அவர்கள் மதிக்கவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். திரு. குருமூர்த்தி அவர்கள் முதல் அமைச்சர் அண்ணா அவர்களையே எதிர்த்து நின்றார்கள் தேர்தலிலே என்கிற காரணத்தினால் நடவடிக்கை எடுக்கப் பயப்படுகிறார்களா என்று தெரிய வில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுவரை அங்கத்தினர் சரியாகச் சொல்லி வந்தார்கள். அவருக்கு விவரம் தெரிந்தே பேசுகிறார்கள். ஆனாலும் அதைத் தவறாகச் சொல்லக்கூடாது. நமது சர்க்கார் அதிகாரி கள் நோட்டீஸ் கொடுத்தார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் உயர் நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கி விட்டார்கள். அதையும் உடைத்து விட்டோம். இப்போது அப்பீல் வாங்கி யிருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால் எந்தக் கட்சியாக, யாராக இருந்தாலும் பயப்படாமல் உறுதியாக நின்று நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்து, கூட்டுறவு நெசவுத் தொழிலாளர்களுக்கு மத்திய சர்க்கார் உதவி செய்யவில்லை என்றாலும், கூட்டுறவு நூற்பாலையில் தயாரிக்கப் படுகிற நூலையாவது குறைந்த விலைக்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கூட்டுறவு நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள கடன் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அவர்கள் தொழிலே ஸ்தம்பித்திருக்கிற நேரத்தில், கடன் தொகையைக் கொடு என்று கேட்டு, வீட்டை ஏலத்திற்குக் கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கிறது. தயவுசெய்து அதை வேண்டாம் என்று சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை நிர்வாகிகளை முழுநேர ஊழியர்களாகப் போடவேண்டும். பல தொழில்களைச் செய்துகொண்டு இப்படி அப்படித் தலையைக் காட்டிவிட்டுச் சென்று பல ஊழல்கள் ஏற்படுகின்ற அளவுக்கு நிலைமை போவதைத் தடுத்தாக வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு சம்பள உயர்வு கிடையாது, போனஸ் கிடையாது. நினைத்தபோது வீட்டுக்கு அனுப்புகிற நிலை இருக்கிறது. ஒன்று சர்க்கார் சிப்பந்திகளைப்போல இருக்கவேண்டும் அல்லது தனியார் தொழில் சிப்பந்திகளைப்போல இருக்கவேண்டும். இரண்டும்கெட்டான் தன்மையில் இருக்கிறார்கள். கூட்டுறவு பயிற்சி பெறா தவர்களை நீக்கிவிட்டு, பயிற்சி பெற்றவர்களையே வேலைக்கு வைத்துக்



கொள்ளவேண்டுமென்று புது உத்தரவு போய் இருப்பதாகக் கேள்விப் படுகிறேன். பயிற்சி பெறாவிட்டாலும் 3 வருஷத்திற்குமேல் தொடர்ந்து பணியாற்றி வருகிறவர்களை அப்படியே வைத்துக்கொள்வது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு நல்ல முறையில் கூட்டுறவுத்துறை மூலம் பணியாற்ற வேண்டும். விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயி பயிர்வைக்க எப்போது கடன் கேட்கிறானோ அப்போது உடனடியாகக் கொடுக்க வழிவேண்டும். அதை நல்ல முறை யிலே இயங்கச் செய்யவேண்டுமானால், கோஆப்ரேட்டிவ்-கம்-மார்க்கெட் டிங்-கம்-வேர்ஹவுஸிங் இந்த மூன்றும் ஒன்றாக இணைந்து இருப்பதன் மூலம் நல்லபடி செயல்படுத்தமுடியும். இல்லையென்றால் லேவாதேவிக் காரனிடத்தில் சரக்கைக் கொண்டுபோய் போட்டு கன்றாபின்றாவென்று அவன் கமிஷன் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு தொல்லை கொடுக் கிறான். ஆகவே, இந்த மூன்றும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அப்படித்தான் மஹாராஷ்டிரத்தில் இருக்கிறது, ஹைதராபாத்தில் ஒரு பகுதியில் இருக்கிறது. அப்படியில்லை என்று அமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். நான் நேற்று முந்தின நாள் இதைப்பற்றிக் கேட்டபோது நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

பிற் பகல் 3-00

நம்முடைய ராஜ்யத்தில் 8 ஜில்லாக்களில் 8 கமிட்டிகளும், 85 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் இருக்கின்றன. மற்ற ராஜ்யங்களிலே எல்லாம் நூற்றுக் கணக்கிலே இவை இருக்கின்றன. அவர்கள் சயின்டிபிக் முறையில், விஞ்ஞான ரீதியாக, கோடவுன்கள் கட்டி முன் பணம் கொடுத்து செயல்படுத்தக்கூடிய நிலைமை இருப்பதால், அதையே நாமும் கடைப்பிடிக்கவேண்டும். நம்முடைய மாநிலத்தில் 7 பொருள் கள்தான் இருக்கின்றன. மற்ற மாநிலங்களில் 67 பொருள்கள் ஆடு, மாடு உட்பட இன்றைக்கு மார்க்கெட்டிங் சொஸைடியிலே அதோடு தொடர்புகொண்டு மூன்றும் ஒருங்கிணைந்து இருப்பதாலே நல்ல முறை யில் விவசாயிகள் அணுக முடிகிறது. விற்பனை நல்ல முறையில் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய முறையிலே அந்த முறையிலே மூன்றையும் ஒன்று படுத்தி நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே மதுரை, செங்கற்பட்டு போன்ற மாவட்டங் களிலே மார்க்கெட்டிங் கமிட்டியே இடையாது . . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆரம்பிக்க இருக்கிறோம் . .

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இருக்கிறீர்கள். விவசாய மந்திரிக் கும் கூட்டுறவு மந்திரிக்கும் லடாய். அப்படி என்றால் இரண்டு பேர்களுக்கும் சண்டையில்லை. கோஆப்பரேட்டிவ் நாங்கள்தான் நடத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள்., அக்ரிகல்சர் நாங்கள்தான் நடத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதிலேதான் தகராறு வந்திருக்கிறது. இது அமைச்சர்கள் மூலமாக வந்ததா அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாக வந்ததா என்பது வேறு விஷயம். ஆகவே இவற்றையெல்லாம் நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நுங்கம்பாக்கத்திலே கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் என்று 1958-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதிலே மெம்பர்களைச் சேர்த்தார்கள். பணம் சேர்ந் தது. அதற்குப் பிறகு பல பேர்களுக்கு வீடு கிடைக்கவில்லை என்று காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து இரண்டாவது போர்டு ஒன்று ஆரம்பித்தார்கள், அதிலே 18 பேர்கள் சேர்ந்தார்கள், அதற் கப்புறம் மூன்றாவது போர்டு ஒன்று ஆரம்பித்தார்கள். அங்கே இன்றைக்கு நிலைமை என்னவென்று பார்த்தால் புருஷன் மேலே ஒரு வீடு. பெண்சாதி மேலே ஒரு வீடு, பிள்ளை மேலே ஒரு வீடு,

மகள் மேலே ஒரு வீடு இப்படிப் பல பிளாட்கள் வாங்கி வீடுகளைக் கட்டி வாடகை வாங்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால் இந்தப் பிரச்னைகளால் தவறுகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துக் கடுமையான நடவடிக்கை எடுத்தாகவேண்டும். அந்த ஆட்சியிலே அது நடந்திருந்தாலும் நடவடிக்கை இப்பொழுது எடுத்தாகவேண்டும். சட்டம் என்ன சொல்கிறது என்றால் எந்த ஜில்லாவாக இருந்தாலும் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடுதான் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அதற்குமேலே இருக்கக் கூடாது என்று இருக்கிறது. நீங்கள் சட்டப் பிரகாரம் தாராளமாக நடவடிக்கை எடுக்கலாம்.

திண்டுக்கல்லில் கூட்டுறவு ஸ்டோர் பயங்கரமான நிலையில் இருக்கிறது. எம்.எல்.ஏ-வாக இருந்த ஒருவர் தலைமையில் அது இருந்தது. அதிலே இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஊழல்கள் நடந்திருக்கின்றன. இதுமாதிரி ஒன்றல்ல, இரண்டல்ல. வட ஆற்க்காடு மாவட்டத்திலே சென்ட்ரல் பாங்கை சூப்பர்சீட் பண்ணினீர்கள், அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். அந்த போர்டு மெம்பர்கள் சிலர் ரெஸிக்னேஷன் கொடுத்தார்கள். 1954-ம் ஆண்டிலிருந்து அங்கே இருக்கிற அந்த மார்க்கெட்டிங் சொஸைடி ஆடிட் செய்யப்படவில்லை. அதன் பொருள் என்ன? சமீபத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டு இரண்டு இலட்சம் ரூபாய்க்குப் பணம் மட்டுமல்ல, சரக்கும் இல்லை இன்னும் என்ன என்னமோ இல்லையென்று சொல்லுகிறார்கள். 1965–66-ல் சர்க்கரை கிடைக்கவில்லை, அரிசி கிடைக்கவில்லை, எண்ணெய் கிடைக்கவில்லை, சிமெண்ட் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை, இதனாலே கள்ள மார்க்கெட்டிலே கொள்ளை அடிக்கக்கூடிய காலமாக அது இருந்தது. அந்த நிலைமை 1964–65, 1966-லே இருந்தது என்று சொல்லலாம். தேர்தலுக்கு முன்னாலே அரிசி கிடைக்காமல் கியூவில் ராத்திரியும் பகலும் ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்திலேயெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை, என்ன வந்தாலும் பார்த்துவிடலாம் ஒரு கை. அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இந்தச் சர்க்காருடைய பெயரும் கெட்டுப்போகும். இல்லையென்று சொன்னால் என்ன ஆகும் என்பது உங்களுக்கே தெரியும். 1964 முதல் 1966 வரை அடித்த கொள்ளை தம்பி பெயரிலே, பிள்ளை பெயரிலே சொந்தக்காரர்கள் பெயரிலே செய்து பெரிய மனிதர்கள் எல்லாம் அவர்களிடத்திலே பல ஸ்தாபனங்கள் இப்பொழுதும் அவர்களுடைய பிடியில் இருக்கின்றன. இதை நீடித்து இருக்க விடுவோமானால் விளைவுகள், எந்த மாதிரியான சட்டத்தைப் கொண்டு வந்தாலும் அதைக் கொஞ்சம்கூட அசைக்க முடியாத அளவுக்குத்தான் இருக்கும். ஆகவே, ஊழல் ஏற்படுகிறது என்று சொன்னால் ஆறு மாதங்களுக்குள் விசாரணை செய்து தண்டனை கொடுத்தாகவேண்டும். 1952–53-ல் குடியாத்தத்தில் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர் ஒன்று இருந்தது. அதில் நான்கு பேர்கள்............

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** நான்கு என்று சொல்லிவிட்டு மூன்று விரல்களைத் தான் காட்டுகிறீர்கள் !

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதிலே ஒருவர் காலி ! தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிட்டார், அதனால்தான் மூன்று என்று காண்பித்தேன். அதைப் பற்றி 15 வருஷமாக விசாரணை, விசாரணை என்று தான் இருக்கிறது. 20 வருஷக் காலமாக கொள்ளை அடிக்கக்கூடிய தன்மையிலே இருப்பதை மாற்றிச் சட்டத்தை நல்ல முறையில் கொண்டு வருவதற்கு முயற்சியெடுத்துத் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படு





கிறேன். குறிப்பாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் முன்னாலே எப்படியிருந்தாலும் இன்றைய தினம் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு கூட்டுறவுத் துறையிலே சில நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாகவும் சிறப்பாகவும் கொள்முதலைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே 495 கோடி ரூபாய் அளவுக்குக் கொள்முதலைச் செய்திருக்கிறோம். அதேபோல் கோயம்புத்தூர் மாவட்டத்தை எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் அங்கே இருக்கிற நிலங்களைச் சீர்திருத்துவதற்காக பரம்பிகுளம்–ஆளியாறு திட்டங்களிலே 4677 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 222 லட்ச ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக 17,300 ஏக்கர் நிலம் சீர்திருத்துவதற்கான கடனை இந்த அரசு கூட்டுறவுத் துறையின்மூலம் கொடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதேபோல் கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்குகின்ற கடன்களில் டிராக்டர்கள், மினவைசைகள் வாங்குவதற்காக வழங்குகின்ற கடன்களில் எங்காவது சிக்கல்கள் இருக்குமோ என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலே சொல்கிற நேரத்தில் விவசாயிகளுக்குச் சாதகமான சில நிலைமைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக 8·4 என்று இருந்த வட்டி வீதத்தை 7·10 ஆக ஆக்கியதோடு அல்லாமல் ஷேர் காபிடல் பங்குத்தொகை கட்டவேண்டுமென்று சொல்கிற நேரத்தில் 2 சதவீதமாகக் குறைத்தும், வில்லங்கம் போன்ற பிரச்சனைகளிலே நல்ல முறை ஏற்படுத்தியதன் காரணமாக நில அடமான பாங்கு கடன் வழங்க வேண்டுமானால் ஆண்டுக்கணக்காக ஆகும் என்ற நிலைமையை மாற்றி இப்படிப்பட்ட சில சலுகைகளைச்செய்து தருவதற்காக இந்த அரசைப் பாராட்டுவதற்கு உண்மையிலேயே நான் கடமைபட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை கடந்த ஆண்டு புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால வரம்பை நீட்டிக் கொடுத்ததற்காக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பதிவாளர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை இன்றையதினம் அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. சிக்கல்கள் ஏற்பட்டதற்குக் காரணம் முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 20 ஆண்டு காலமாக அது தனிப்பட்ட மனிதனுடைய உடைமையாக ஆக்கப்பட்டதுதான். அதனால் ஏழை விவசாயிகளும், நடுத்தர வகுப்பினரும் அந்தப் பலனை அடைய முடியாத நிலைமை இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்ற புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாலும், ஒன்றிரண்டைத் தவிர எந்தப் பகுதியைப் பார்த்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் இருக்கும் நிலைமையைத்தான் பார்க்கிறோம். ஊழல்கள் இருக்கிற காரணத்தால் அங்கிருக்கும் விவசாயிகளுக்குப் போதிய கடன்கள் காலத்தில் கிடைக்க வசதிகள் இல்லை, அதற்கு, கூட்டுறவுச் சட்டங்கள் எந்த அடிப்படையில் இருந்தாலும் தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்ளி விரும்புகிறேன் இன்றைச தினம் இருக்கின்ற எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் உடனடியாக சூப்பர்சீட் செய்வதன் மூலம் சாதாரண விவசாயிகளுக்கு நல்ல பல காரியங்களைச் செய்யமுடியுமென்ற எனது கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் இந்த அரசு பொறுப்பேற்றபிறகு விவசாயிகளுக்கு ஏற்கெனவே இருந்த மாக்சிமம் பாரோயிங் பவரை ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து, நெல் சாகுபடி செய்பவர்களுக்கு ரூ. 15,000 என்றும், கரும்பு சாகுபடி செய்பவர்களுக்கு ரூ. 20,000 என்றும் உயர்த்தியிருக்கிறார்கள். இது விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள்

கோரிக்கை. அதை நிறைவேற்றி வைக்கும் வகையில் மாக்சிமம் பாரோயிங் பவரை அதிகப்படுத்தியிருப்பதற்காக விவசாயிகள் உண்மையிலேயே வரவேற்பார்கள், பாராட்டுவார்கள்.

மற்றொரு சிக்கல், குறிப்பாக கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் உரிய கடனை, உரிய காலத்தில பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கு முன்னாலே சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகள் கடனைக் கொடுத்து வந்தார்கள். ரிசர்வ் பாங்கு சட்டத்திற்கு இணங்க, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கடன் கொடுக்கப்பட வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்ட பிறகு எந்த ஒரு சங்கத்தை எடுத்துக் கொண்டாலும் சென்டிரல் பாங்கியில் தவணை பாக்கி இருக்கும் நிலையில் போதுமான அளவுக்குத் தேவையான நேரத்தில் கடன் கிடைக்காத காரணத்தால் கரும்பு உற்பத்தி செய்வதில் ஊக்கம் குறைகிறது. சர்க்கரை ஆலைகளின் மூலமாக கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்றால் ரிசர்வ் பாங்க் தடை இருக்கிறது. தனிப்பட்ட பாங்குகளிடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றாலும் சர்க்கார் கியரண்டி இருந்தால்தான் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்தி செய்வதற்கு போதிய காலத்தில், போதிய கடனைக் கொடுப்பதற்கு விதிகளைத் தளர்த்தி சரிவரக் கொடுப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காரணத் ரணததால்தான் மதுராந்தகம் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

நாணயமாக ஒருவர் தன்னுடைய கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டாலும, ஓரிருவர் சரிவரத்திருப்பிச் செலுத்தாத நிலை இருக்குமானால் மத்திய பாங்க்குக்குக் கடன் பாக்கி இருக்குமானால் நாணயமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியவரும் மறுபடி கடன்பெற முடியாத நிலை இருக்கிறது. அந்த முறையில் மீண்டும் கடன்பெறும் அளவுக்கு வழிமுறையைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சங்கடம் நாட்டிலே பரவலாக இருக்கிறது. முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஒரு சங்கத் தலைவர் ஏழை எளிய விவசாய மக்களுடைய பேரிலே பினாமியாகக் கடனைப் பெற்று எடுத்துக்கொண்டு விடுபடுகிறார்கள். கிராமப் பகுதியிலே கையெழுத்துப் போடத் தெரிந்தவர்கள் மிகக் குறைந்த வாகத்தான் இருப்பார்கள். பெரும்பாலும் கைநாட்டு வைக்கிறவர்களாகத் தான் இருப்பார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையின் காரணமாக நடவடிக்கை எடுக்கும் போது, அந்தச் சங்கத் தலைவர் "நான் வாங்கியது ஆயிரம் ரூபாய்தான், மற்றது இந்தக் கிராமத்து மக்கள் வாங்கியிருக்கிறார்கள்" என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படும்போது உண்மையில் விவசாயிகள் அந்தப் பணத்தை வாங்கவில்லை என்றாலுங்கூட, சட்டப்படி அவர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி ஏழை எளிய விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமை இன்று நாட்டிலுள்ள எல்லாச் சங்கங்களிலும் இருக்கிற காரணத்தால்தான் நான என்னுடைய தனிப்பட்ட கருத்தாக, இந்தச் சங்கங்களையெல்லாம் சூப்பர்சீட் செய்துவிட்டுப் புதிதாக ஒரு தேர்தலை நடத்தி அங்கிருக்கும் ஏழை விவசாயிகளுக்கு நில அடமான வங்கிகள்மூலம் கொடுக்கப்படுகிற சலுகைகள் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நில அடைமான பாங்குகள்மூலம் கடன் பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகும் என்ற நிலைமை இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஓரளவு மாறியிருக்கிறது. இன்று ஏழை எளிய விவசாய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய அரசாங்கம் நல்ல வழிமுறைகளைக் கொண்ட புதிய சட்டத்தை



உருவாக்கித் தருவதன்மூலம் அவர்கள் நன்மை பெற வழி செய்ய வேண்டு மென்று கூறி, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவு மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கிராமப் பகுதிகளில் இருக்கும்படியான கூட்டுறவுச் சங்கங்களில் பெரும் பகுதி வேறு எந்தவிதமான சேவையையும் செய்யவில்லை என்றாலும் கூட, அதிகமான கடனை வழங்குவதில் முழுப் பங்கை ஏற்று நடத்தி வருகிறது. நகரக் கூட்டுறவு ஸ்டோர்களும் ஓரளவு பலன் அளித்து வருகிறது.

ஒருசில இடங்களிலுள்ள கூட்டுறவு நில அடமான பாங்குகள் சென்ற காலத்தில், அதிகமான கடன் பளுவில் மூங்கிக் கஷ்டத்தில் இருந்த விவசாயிகளை மீட்பதற்குக் கடன் கொடுத்து உதவி செய்திருக்கிறது. இருந்தாலும் கூட கடன்கள் கிடைப்பதிலே இருக்கக்கூடிய சிரமங்களையும், காலதாமதத்தைப்பற்றியும், நமது அரசு மாற்றங்களைக் கொண்டுவரவேண்டுமென்ற என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்காலத்திலே விவசாயிகளுக்குச் சர்க்கார்மூலம் கொடுக்கக்கூடிய கடன்கள் எல்லாம், கிணறு வெட்டக் கடன், பம்ப் செட் கடன், டிராக்டர்கள் வாங்கக் கடன் ஆகிய அத்தனைக்கும் இனிமேல் கூட்டுறவு நில அடமான பாங்கு மூலமாகத்தான் கொடுக்கவேண்டுமென்று நம்முடைய அரசு சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையில் கொடுக்கக் கூடிய காலத்தில், இப்போதுள்ள நம்முடைய கூட்டுறவுத் துறையால் வழங்கப்படுகிற கடன் குறிக்கோள் நிறைவேறவில்லை என்பதைப் புள்ளி விவரங்களோடு தெரிவிக்க விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கோள் 80 கோடி என்று சொல்லப்படுகிறது. 1966–67-ம் ஆண்டு குறிக்கோள் 50 கோடி ரூபாய் குறுகிய காலக் கடன் கொடுககப்பட வேண்டுமென்பது. ஆனால் கொடுத்த அளவு 1966–67-ல் ரூ. 31 கோடி 41 இலட்சந்தான். 1967–68-ல் குறிக்கோள் அளவு 58 கோடி, கொடுத்தது 27 கோடி, 92 இலட்சம். கடன் கொடுக்கப்படாதற்குக் காரணம் கடன் பெறக் கூடியவர்கள் இல்லை என்று நினைக்க முடியாது. இப்போது கடன் பெறுவதில் உள்ள நிபந்தனைகள் அதிகமாக இருப்பதால் கடன் வாங்குவது குறைவாக இருக்கிறது. கிராம சொஸைட்டிகளில் வாங்கக்கூடிய கடன்களுக்கு டெப்பாஸிட் தொகை அதிகரித்திருப்பதும் ஒரு காரணம். வட்டி விகிதத்தைக் கூட்டியிருப்பது மற்றொரு காரணம். பங்குத் தொகைகளையும் உயர்த்தியிருக்கிறார்கள். எனக்குமுன் பேசிய உறுப்பினர்கள் கூறியதுபோல் பெரும்பகுதி மக்கள் தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தியிருந்தாலும், ஒரு சிலர் செலுத்தாததால் கடனைத் திரும்ப செலுத்தியவர்கள் கூட திரும்பக் கடன் பெற முடியாத நிலை இருக்கிறது. ஒரு சங்கத்தின் நிர்வாகஸ்தர், அதன் தலைவர், அல்லது அதன் செயலாளர்— எல்லா இடங்களிலும் இப்படி இருக்கிறது என்று நான் சொல்லவில்லை—பினாமி லோன்கள் போட்டு, பல பேர்களின் பெயர்களில் லோன்கள் போட்டு அவற்றைப் பெற்று அவற்றைத் திருப்பிக் கட்டாததால்—இப்படிப் பல ஊழல்கள் நடப்பதால்—பலர் கட்டியிருந்தும்கூட திரும்ப அந்தச் சங்கங்களுக்குக் கடன் கிடைக்காததொரு நிலை இருக்கிறது. ஒரு சிலர் கடன்களைத் திரும்பக் கொடுக்காததால், பலர் கடனைத் திரும்பக்கொடுத்தும்கூட விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன்பெற்று விவசாய வேலைகளை, விவசாய அபிவிருத்தி வேலைகளை கவனிக்க முடியாமல் இருக்கிறார்கள். அதற்காக இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி சில மாறுதல்களைச் செய்யும் என்று நினைக்கிறேன்.

புதிதாக நில அடமான பாங்குகள்மூலம் புதிதாகப் பல கடன்கள் கொடுக்கப்போகிறோம். நில அடமான பாங்குகளில் இருந்து கடன்கள் வாங்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்காரிலிருந்து ஒரு கடன்

வாங்கவேண்டுமென்றால், தாசில்தாரிடமிருந்து ஒரு சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, வில்லங்கசர்டிபிகேட்ஸ் 12 ஆண்டுகளுக்கு வாங்கிக் கொடுத்தால், இவ்வளவு பெறுமானமுள்ள சொத்து இருக்கிறது என்று கணக்குக் கொடுத்தால் சர்க்காரிலிருந்து லேசாக கடன் பெறமுடிகிறது. ஆனால் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 5,000 ரூபாய் கடன்பெற ஒரு மனுப் போட்டால் அவர்கள் போடக்கூடிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் மிக அதிகமான கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த நிலம் நமக்கு எப்படிச் சொந்தம் என்பதை ரிக்கார்ட் பூர்வமாக நிரூபிக்க வேண்டும். பன்னிரெண்டு ஆண்டுகளுக்குள்ள வில்லங்க சர்டிபிகேட்கள் போதாது. நீங்கள் யாரிடத்திலிருந்து வாங்கினீர்கள், அவர்களுக்கு அது எப்படி சொந்தம், அவர்கள் குழந்தைகளில் எத்தனை பேர்கள் பெண்கள், அவர்களுக்கு அதில் பாத்தியதை இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறார்கள். அவற்றையெல்லாம் பூர்த்தி செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே சர்க்கார் நிபந்தனைகள் இருப்பதுபோல் அதையும் செய்யவேண்டும். பன்னிரெண்டு ஆண்டு வில்லங்க சர்ட்டிபிகேட்கள், நிலத்தின் மதிப்பு என்ன என்பதைப் பார்த்து அந்த அந்தப் பஞ்சாயத்து அல்லது அந்தந்தக் கிராமத்தில் நடைமுறையில் இருக்கும் விலையை அனுசரித்துக் கடன்கள் விரைவில் கிடைக்க வழிசெய்யவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் எவ்வளவு கடன் கொடுக்கவேண்டுமென்று நாம் டார்ஜெட் போட்டாலும் அது நிறைவேறாது. ஆகவே நில அடமான பாங்குகளில் இருந்து கடன்கள் கொடுக்கும் விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும்.

அதோடு, சர்க்கார் கடனை வசூல் செய்வதில் எப்படி முதல் உரிமை இருக்கிறதோ அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொடுக்கப்படும் கடன்களை வசூலிப்பதில் சர்க்கார் கடனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது உரிமை இருக்க வேண்டும். இப்போது மூன்றாம் மனிதர் கடன் கொடுத்து வசூலிப்பதுபோல்தான் கூட்டுறவுச் சங்கங்களும் வசூலிக்க வேண்டியிருக்கின்றன. முன்னால் யாரிடமாவது வில்லங்கங்கள் இருந்தால் அதுபோகத்தான் மீதி கிடைக்கிற நிலை இப்போதிருக்கிறது. ஆகவே சர்க்கார் கடன் வசூலிப்பதற்கு முதல் உரிமை வழங்கப்படுவதுபோல், அதற்கு அடுத்த உரிமை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பெற்றுள்ள கடன்களை வசூலிப்பதற்கு கொடுக்கவேண்டும். அப்போதுதான் கூட்டுறவு சங்கங்கள் தாங்கள் கொடுக்கக்கூடிய கடன்களை எளிதில் வசூலிக்க முடியும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்டோர்கள், கட்டுப்பாடு பொருள்கள் எல்லாம் தனியார் கடைகளில் கிடைப்பதை விட கூட்டுறவு சங்கங்களில் ஓரளவு எல்லோருக்கும் கிடைக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் பலயிடங்களில் நஷ்டத்திலும் நல்லமுறையில் நடக்காமல் இருப்பதற்கும் காரணம், தனியார் துறையில் அதாவது தனியார் கடைகளில் பல சரக்குகள் வரி இல்லாமல் விற்கப்படும் நிலையிருப்பதுதான். தனிப்பட்ட ஒருவர், ஒரு மூட்டை பொருளை 200 ரூபாய்க்கு வாங்கி விற்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் வரி ஒன்றும் கொடுக்காது, விற்பனை வரியும் விதிக்காது விற்றுவிடுவதால் நான்கு ரூபாய் குறைத்துக் கொடுக்க முடிகிறது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்களை விற்பனைசெய்யும்போது வாங்குபவரிடத்திலும் வரி செலுத்தி, அதை விற்கும்போது விற்பனை வரியும் விதிக்க வேண்டியிருப்பதால் நான்கு ரூபாய் அதிகமாகிவிடுகிறது. இவர்கள் கணக்குகளை எழுதிவைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே நான்கு ரூபாய் குறைவாக இருக்கிறது என்று தனிப்பட்ட வியாபாரிகளிடம் சென்று வாங்குகிறார்கள். ஆகவே கூட்டுறவு ஸ்டோர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதோடு கூட, அவர்களுக்கு 10,000 ரூபாய்வரை வருமான வரி இல்லை என்றும் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் கூட்டுறவு ஸ்டோர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும்.

அடுத்தபடியாக, வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு இருந்தாலும், அவை திறமையாகச் செயல்படவில்லை. காரணம் அதிலுள்ளவிதிகள், ப்ளான் போட்டு அனுப்புவதில் உள்ள காலதாமதம் இவையே. ஆகவே கிராமங்களில் வீடு கட்ட வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.



அடுத்தபடியாக, லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டீஸ் ஆரம்பிக்கவேண்டுமென்று சென்ற காலத்தில் ஒரு விதியை ஏற்படுத்தினார்கள். அவை ஆங்காங்கே பெயருக்கு ஆரம்பிக்கப்பட்டு இயங்காமல் அப்படியே நின்றுவிட்டன. காரணம் ஆங்காங்குள்ள காண்ட்ராக்டர்கள் தங்களுக்கு காண்ட்ராக்ட் கிடைக்காது போய்விடுமே என்று பெயருக்கு அவற்றை ஆரம்பித்து அவை செயல்படாமல் நின்று விட்டன. நான் சொல்வது, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு சங்கம் அமைத்து, பஞ்சாயத்து யூனியன் வேலைகளை எல்லாம் இந்த லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகளே செய்யவேண்டும் என்ற நிபந்தனை போடப்பட வேண்டும். அப்படிச் செய்து அந்த சொஸைட்டிகளை ஊக்குவிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவுப் பண்ணைகள். கூட்டுறவுப் பண்ணைகள் பலவிடங்களில் ஆரம்பிக்கப்பட்டும் அவை சரியானபடி இயங்கவில்லை. கூட்டுறவுப் பண்ணை ஆரம்பிக்கக்கூடிய காலத்தில் சென்ற கால அரசு ஒன்றை அறிவித்தது. இவ்வளவு மானியம், இவ்வளவு கடன் கொடுக்கப்படும் என்று அறிவித்தவுடனே, நியாயமாக கூட்டுறவுப் பண்ணை ஆரம்பித்து அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்கள் அதை அமைக்காது சர்க்காரிலிருந்து மானியம் கிடைக்கிறது, கடன் கிடைக்கிறது என்பதற்காக சிலர் அம்மாதிரிப் பண்ணைகளை ஆரம்பித்து கிடைப்பதை பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்று ஆரம்பித்ததினால்தான் அம்மாதிரிப் போய் விட்டது. ஆகவே, தரிசு நிலங்கள் உள்ள இடங்களை நியாயமாக பாடுபடக்கூடிய மக்களிடம் கொடுத்து, விவசாயிகள் குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து அவற்றிற்கு விசேஷ சலுகைகளை அளித்து கூட்டுறவுப் பண்ணைகள் சிறந்த முறையில் பணியாற்றும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாயிகளை கூட்டாகச் சேர்த்து சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். சிறிய விவசாயிகளினால் ட்ராக்டர் வாங்க முடியாது. ஆனால் பழையமுறையில் இனி நாம் விவசாயம் செய்ய முடியாது. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டால்தான் நாம் அபிவிருத்தி அடைய முடியும். ஆகவே அந்த முறையில் விவசாயிகள் சேர்ந்து கூட்டுறவு பண்ணைகள் ஆரம்பித்து அவர்களுக்கு ட்ராக்டர் வசதி போன்ற வசதிகளை அளிக்கவும் விசேஷ சலுகைகள் அளிக்கவும் தற்போதுள்ள ஷரத்துக்களை மாற்ற வேண்டும். அப்படிப்பட்ட சங்கங்கள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அடுத்து, நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள். இன்று அதில் இருப்பவர்கள் கடன் பெறுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்கள் கடன் பெற செல்லும்போது, ஆஸ்தி கணக்கிடும்போது அவர்கள் வேறு மில்களில் அல்லது வேறு தொழில்களில் மூலதனம் போட்டிருந்தாலும் அதை கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடம் இருந்தாலும் அதற்கு 60,000 ரூபாய் கூட மதிப்பு போடுவதில்லை. இப்படிப்பட்ட நிலையிருப்பதால் அதிலுள்ளவர்கள் கடன் பெறுவதில் கஷ்டங்கள் பல இருக்கின்றன. அதனால் பல கூட்டுறவு சங்கங்கள் படுத்துவிட்டன. அந்த நிபந்தனைகளை மாற்ற வேண்டும்.

கடைசியாக சூப்பர் மார்க்கெட்ஸ். அவை இப்போது எல்லா நகரங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அங்கு சென்றால் சரியானபடி வருபவர்களைக் கவனிக்க ஆட்கள் இல்லை. தனிப்பட்டவர் கடைக்குச் சென்றால் தங்கள் வியாபாரம் பெருகவேண்டுமென்று விசேஷமாகக் கவனிப்பார்கள். அதேபோல் இங்கும் அக்கறை செலுத்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. சொ. கோவிந்தராசன் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நமது கூட்டுறவு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசும் வாய்ப்பு கொடுத்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

காங்கிரஸ்காரர் வரவேற்றுப் பேசிய மானியங்களில் இதுதான் முதல் மானியம் என்று எண்ணுகிறேன். இந்த மானியத்தைப்பற்றிப் பேசும்பொழுது அவர்கள் குறிப்பிட்டார்கள், பணக்காரர்கள் லாபம் அடைகிறார்கள் என்பது உண்மை, அந்த ஒத்துக் கொள்ளுகிறோம், ஊழல்கள் பல நடந்திருக்கின்றன, ஒத்துக் கொள்ளுகிறோம், சங்க நிர்வாகத்தில் பணியாற்றுபவர்கள் தொடர்ந்து இருக்கிறார்கள், ஒத்துக் கொள்ளுகிறோம் என்ற முறையில் அத்தனையையும் ஒத்துக்கொண்டு இப்பொழுது போடப்பட்டிருக்கும் கமிட்டியை மட்டும் வரவேற்றுப் பேசினார்கள். அதை எண்ணும்பொழுது, கூட்டுறவு இதுவரையில் எங்கள் கையில் இருந்தது, நீங்கள் வந்து இனி மேல்தான் அதைத் திருத்த வேண்டிய நிலை இருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டு இந்த அவையை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. முன்பு நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு வார விழா என்று ஒரு விழா நடப்பது உண்டு. ஒவ்வொரு சங்கமும் கூட்டுறவு வார விழா நடத்தும்பொழுது குறிப்பிட்டவர்களை அழைப்பார்கள். அவர்கள் மட்டும் அதற்குச் செல்வார்கள். அவர்கள் சென்று அந்த கட்டடத்திற்குள்ளே உட்கார்ந்தவுடன் அங்கு சிறு விருந்து ஒன்று நடக்கும். அது முடிந்தவுடன், இதுதான் கூட்டுறவு வாரவிழா, கையெழுத்துப் போட்டுவிட்டு எல்லோரும் போய் வாருங்கள் என்று சொல்லிவிடுவார்கள். அதைப் பார்த்துவிட்டு, "என்ன ஐயா, இதுதானா கூட்டுறவு வாரவிழா" என்று தற்செயலாகப் போன நான் கேட்கக்கூடிய நிலையில்தான் அது நடந்தது.

அதேபோன்று தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் ஒரு விழாவைக் கொண்டாடும். அதற்கும் அழைப்பு அனுப்பும் வழக்கம் உண்டு. அந்த நிகழ்ச்சிக்கு எனக்கு அழைப்பு வந்து, அந்த அழைப்பில் 3 மணிக்கு கூட்டம் கூடுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. நான் சரியாக 3 மணிக்கு புதுக் கட்டிடத்தில் காலடி எடுத்து வைத்தேன். அப்பொழுது எல்லோரும் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து நான், "என்ன ஐயா, 3 மணிக்கு என்று போட்டிருக்கிறதே, அதற்குள் முடிந்துவிட்டதா" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "எல்லாம் தயாராக வைத்திருந்தார்கள். போனதும் சாப்பிட்டோம், இப்பொழுது வெளியே போய்க் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். மிக்க வேதனையோடு அவர்களைக் கேட்டேன், "இங்கு யாரும் பேசவில்லையா, கோரிக்கையைக் கூட எடுத்து வைக்க யூனியனில் இடமில்லையா ?" என்று கேட்டு மிக்க வருத்தத்தோடு திரும்பினேன். "இதற்காகத்தானா பணம் செலவழித்துக் கொண்டு மதுரையிலிருந்து வர வேண்டும், இந்த காபி சாப்பிடுவதற்காகவா அங்கிருந்து வர வேண்டும், இதை அங்கேயே சாப்பிட்டுக் கொள்ளலாமே" என்று வருத்தப்பட்டு திரும்பினேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக சென்ற ஆண்டுகளில் நடந்து வந்திருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது அரசு வந்தபிறகு, கூட்டுறவில் நடைபெற்றிருக்கின்ற கையாடல்கள், கூட்டுறவு பண்டகசாலைகளில் விற்காமல் தேங்கியிருக்கக்கூடிய சாமான்கள், கணக்குகளில் ஏற்பட்ட சில ஊழல்கள் பற்றி கண்டு பிடித்து தற்சமயம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு சிலர் தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இந்த அளவிற்கு இப்போழுது இந்தத் துறையில் விறுவிறுப்பு ஏற்பட்டிருப்பது கண்டு மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் இந்தத் துறையைக் கண்டால் பயப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.



மதுரை மாவட்டத்தில் மதுரை வட்டத்திலுள்ள மதுரை மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் கலைக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு அங்கிருக்கக்கூடிய உரப்படி விநியோகத்தை தாலுக்கா மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மொத்த விற்பனையை மதுரை சூப்பர் மார்க்கெட்டிற்கு மாற்ற வேண்டும். இப்பொழுது கொஞ்சம் பங்குத் தொகை வசூல் செய்யப்பட்டு மேலும் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. மேலும் அதிகப் பங்குத் தொகை வசூல் செய்ய முடியுமென்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, இதை சூப்பர் மார்க்கெட்டிற்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அலங்காநல்லூர் பக்கத்தில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது ஓடிவிடும், அப்பொழுது ஓடிவிடும், தேர்தல் நேரத்தில் ஓடிவிடும் என்று முன்பிருந்த தலைவர் வாக்குறுதி கொடுத்தார். அதற்குப் போட்ட எஸ்டிமேட் ஒன்று, இப்பொழுது செலவழிக்கப்பட்டிருப்பது ஒன்றரை கோடி. இப்பொழுதுதான் அது ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் ஊழல்கள் பல கண்டுபிடிக்கப்பட்டு பெரிய அறிக்கையொன்றைத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அதன்மீது யாதொரு நடவடிக்கையும் சென்ற சர்க்கார் எடுக்கவில்லை. அதைத் திரும்பவும் மறுபரிசீலனை செய்து சென்ற குழுவினரின் தலைவர்களின் மீது நடவடிக்கை எடுத்து பணத்தை வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதுரை நகரிலுள்ள கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் காங்கிரஸ்காரர்கள் நிர்வாகிகளாக உள்ள சங்கங்கள் அதிகாரிகளுடன் ஒத்துழைக்காமல் அரசு ஆணைக்கு புறம்பாக நடக்கவும், அதற்கு ஆதரவாக ஒரு சட்டக்குழு என்ற பெயரில் ஒரு அமைப்பை அமைத்து கைத்தறியின் வளர்ச்சிக்கு பங்கம் விளைவிக்கிறார்கள். அதற்குத் தகுந்தபடி சட்டக்குழுவை மாற்றியமைக்கும்படி மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதுரையிலுள்ள ஹோட்டல்காரர்கள் பண்டங்களின் விலையைத் தம் மிச்சைபோல ஏற்றி வருகிறார்கள். இதைத் தடுக்க மதுரையிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு கூட்டுறவு நுகர்வோர் சங்கம் அமைத்து, பிளாக் மார்க்கெட்டைத் தடுத்து, அத்தியாவசியமான பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்கவும், தின்பண்டங்களை இதிலே குறைந்த விலையிலே கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு இலாக்கா ஊழியர்கள் கூட்டுறவு சங்கங்களில் அயல் பணியின் நிமித்தம் பணி செய்யும்போது அவர்களின் கடின உழைப்பைக் கருதி முன்பு அளித்த அயல் பணிப் படி அதாவது "ஃபாரின் சர்வீஸ் அலவன்ஸ்" 25 சத விகிதத்தை சங்கங்களின் நிதியிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு உப பதிவாளர்களுக்கும், துணைப் பதிவாளர்களுக்கும் இடையில் தாசில்தார் நிலையில் ஒரு புதிய பதவியை உருவாக்கி, பதவி உயர்வுக்கு வழிவகை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அகில இந்திய கூட்டுறவு இலாகா சீரமைப்பு கமிட்டியின் பரிந்துரைக்கு இணங்க சி.எஸ்.ஆர்.களின் சம்பள விகிதத்தை 375—25—800 என்ற வீதத்தில் மாற்றியமைக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு அலுவலர்களின் சங்க பிரதிநிதிகளில் ஒருவரையோ அல்லது இருவரையோ தற்போது அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு கமிட்டியில் சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். அவ்வாறு செய்து அந்தப் பிரதிநிதிகளுக்குத் தக்க இடமளிக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்,

சென்னை மாநில மத்திய கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தேங்கியிருந்த ரூ. 28 லட்சம் பெறுமான பழைய சரக்குகள், தற்சமயம் ஆரம்பிக்கப்பட்ட சேலம் சூப்பர் மார்க்கெட்டுக்கு மாற்றப்பட்டிருப்பதின் நோக்கத்தை மறுபரிசீலனை செய்ய தனிக்கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதில் நடந்துள்ள ஊழல்களுக்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதுரை மாவட்ட கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சீனி, கோதுமைப் பண்டங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவுத்துறையில் நல்ல முன்னேற்றங்களைச் செய்ய முடியுமென்ற நம்பிக்கையோடு அதில் விறுவிறுப்போடு வேலை பார்த்து கூட்டுறவு முறையில் நல்ல முன்னேற்றத்தை உண்டாக்கித்தரவிருக்கும் அமைச்சரவர்களையும், பதிவாளரையும் பாராட்டி விடைபெறுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய சபைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவியக்கம் சம்பந்தமாக என்னுடைய இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி முடிக்கிறேன். புதிய சர்க்கார் வந்த பிறகு இந்தத் துறையில் புதியதொரு விறுவிறுப்பு ஏற்பட்டிருப்பதை நான் காண்கிறேன். இந்தக் கூட்டுறவியக்கத்தை நல்லமுறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டிய முயற்சியை அரசு மேற்கொண்டால் இன்றைக்கு சமூகத்திலே வளர்ந்து வரும் சமத்துவ எண்ணம், அதைச் செயல்பூர்வமாக ஆக்குவதற்கு மிக்க வசதியாக இருக்கும். வளர்ந்து வரும் நாடுகளில் நம்மைப் போல ஜனத்தொகையில் ஏராளமாகவும், வளர்கின்ற வாய்ப்புகள் குறைவாகவும் உள்ள நாடுகளில் இதுபோன்ற கூட்டுறவுகளை எல்லாத்துறைகளிலும் பயன்படுத்துவதன் மூலமாக அவர்கள் பூரணமான பலனை எய்திவருகிறார்கள். அதை உதாரணமாகக் கொண்டு இந்த நமது மாநிலத்தைப்பொறுத்தவரையில் நமது கூட்டுறவியக்கத்தை இன்னும் சிறப்பாக வலுப்படுத்த முயற்சியெடுக்க வேண்டும். இப்பொழுதிருக்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறேன். உதாரணமாக அமைச்சரவர்கள் முதலிலே முன்னுரையாகச் சொல்லும்பொழுது குத்தகையாளர்கள் விவசாயிகள் அடிப்படையிலும் கடன் வசதி கொடுக்க இருக்கிறோம் என்றார்கள். இதுவரையிலே நீண்ட நெடுங்காலமாகக் கூட்டுறவியக்கத்தில் நிலபுலன் உள்ளவர்கள் பரிபூரணமாக நிரம்பியிருந்தார்கள்.

இன்றைக்கு இந்த அளவிலே மாறுதல் ஏற்படுத்தி வருவது மனப்பூர்வமாக பாராட்டுக்குரியதாகும். ஆனாலும் இன்னும் இந்த இயக்கத்தை வேகமாக சீர்திருத்தியாக வேண்டும். இன்றைக்கு இந்த இயக்கம் ஏகபோகமாக ஒரு சிலருடைய கையிலே இருக்கிற காரணத்தாலே பெருவாரியான மக்களுக்கு அவநம்பிக்கையும் அருவருப்பும் இருக்கிறது. அந்த அவநம்பிக்கையும் அருவருப்பும் தீர்ந்தால்தான் எல்லோரும் இதிலே பங்கேற்றுக்கொண்டு, இந்த நாட்டையும், இந்த மாநிலத்தையும் உயர்த்துவதற்கு அதைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். அதை வேகமாகவும் விரைவாகவும் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் தான் கிராமத்திலே ஒரு சிறந்த புரட்சியை உண்டுபண்ண முடியும் என்பதிலே கொஞ்சமும் சந்தேகம் கிடையாது.

எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் இந்த கூட்டுறவு இயக்கம் ஒரு சிலருடைய ஏகபோகமாகவும், விருந்து பீடமாகவும்தான் இருந்ததே தவிர, தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன் உள்ள இயக்கமாக இருக்கவில்லையென்று சொன்னார்கள். இதையெல்லாம் மாற்றுவதற்கு திரு. சந்தானம் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. கமிட்டி என்று சொன்னாலே அது தள்ளிப்போடுவதற்கான முயற்சி என்ற நிலையிலே முன்பெல்லாம் கமிட்டி இருந்தது. அந்த முறையிலே இந்த கமிட்டி இருக்கக்கூடாது. இந்த கமிட்டியானது விரைவான நடவடிக்கை எடுத்து, விசாரணை செய்து இதைப்பற்றி ஒரு



முடிவுக்கு வரவேண்டும். முடிவு வந்ததற்குப் பின்னால் எவ்வளவு வேகமாக அந்தக் காரியத்தைச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக இது செய்யப்படுமென்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இருந்தபோதிலும் அந்தக் கமிட்டியினுடைய வேலையைத் துரிதப்படுத்தி எவ்வளவு வேகமாக அமுலுக்குக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல இன்னொன்றையும் நாம் பார்க்க வேண்டும். முன்பு ஆளும் கட்சியாக காங்கிரஸ் இருந்தபொழுது அவர்களுடைய ஆதிக்கமே இந்தக் கூட்டுறவு சங்கங்களில் பரவலாக இருந்தது. இன்றைக்கும் பரவலாக அவர்கள்தான் இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் இதே முறையை இப்பொழுது வந்துள்ள புதிய அரசாங்கமும் மேற்கொள்ளக்கூடாது. ஏதோ, அவர்கள் இருந்தபொழுது அவர்கள் இருந்தார்கள். இப்பொழுது வேறு கட்சி வந்திருக்கிறது. ஆகவே, நாம் மேற்கொள்ள வேண்டுமென்ற ஒரு மனோபாவம் இருக்கக்கூடாது. இதற்குப் பதிலாக, பாமர மக்கள் அதில் புகுகின்ற அளவுக்கு தங்கள் கட்சிக் கொள்கையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் தங்கள் கட்சிக்கொள்கை அதில் புகாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தாற்போல், இப்பொழுது கிராமங்களிலே இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகளுக்கு ஒருவகையான கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. முன்பிருந்த முறைப்படி தச்சர்கள், கொல்லர்கள், மண்பாண்டம் செய்பவர்கள் இவர்களுக்கு எல்லாம் அதே கூட்டுறவு சங்கங்களிலே கடன் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது இப்பொழுது இல்லை என்று நான் அறிகிறேன். அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால் இவர்களெல்லாம் விவசாயிகளோடு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், கிராமங்களிலே கடன் பெறுவது என்று சொன்னால் மிகக் கடினம் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வளர்ந்து வருகிற பொருளாதாரத்தின காரணமாக கடன் கொடுப்பதே பெரும் தொல்லையாக இருந்தது. ஆகவே, அவர்களுக்கும் நாம் செய்யக்கூடிய அளவுக்குக் காரியங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மிக அதிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவைகளினுடைய கணக்குகளை எல்லாம் எடுத்துப் பார்ப்போமானால் அதனுடைய வளர்ச்சி உற்சாகம் அளிக்கக்கூடியதாக இல்லை. அதற்குக் காரணம் அங்கங்கே இருக்கிற அரசியல் சூழ்நிலைகள், அங்கங்கே இருக்கக்கூடிய போட்டி மனப்பான்மைகள் இவைகளெல்லாம் சேர்ந்துதான் அவைகளினுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். என் ஜில்லாவைப் பொறுத்தவரை அமராவதி சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. 4 ஆண்டுகாலம் அது நல்ல முறையிலே நடத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே அதை நடத்தியவர்களுக்குள்ளே ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக விசேஷ அதிகாரி ஒருவர் கையிலே அது ஒப்படைக்கப்பட்டது. விசேஷ அதிகாரி பொறுப்பேற்று நடத்திய பின்னால் 50 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கு காண்பித்தார்கள். நான் கேட்டுக்கொள்வது சாதாரண அதிகாரியைப் போட்டு, அவர் கீழே சாதாரண உத்தியோகஸ்தர்களைப் போட்டு அவர்களுக்கு ஆலோசனை சொல்ல அவர்களின் கீழே விவசாயிகள், மற்றும் பங்குதாரர்கள் இவர்களையெல்லாம் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுப் போட்டு, அந்த சர்க்கரை ஆலையை நடத்தவேண்டும். சர்க்கரை ஆலைகளிலே ஏற்பட்டிருக்கிற தொல்லைகளைப் பற்றி எனக்கும் தெரியும். காரணம், சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கொடுப்பதைவிட, அதை வெல்லமாக அடித்தால் விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கிறது. இதன் காரணமாக, விவசாயிகள் கரும்பை அதிகமாக சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுப்பது கிடையாது. கவர்ச்சிகரமான முறையிலே நடத்துவதற்குச் சந்தர்ப்பம்

இருக்குமானால் நிச்சயமாக இலாபம் வராவிட்டால்கூட, நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ள முடியும். ஆகவே, கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக அமராவதி சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் புதிய நோக்கத்தோடு.காரியங்களைச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இத்துடன் என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையைப் பற்றி விவாதிக்கும் போது அதனுடைய நோக்கங்களைப் பற்றி நினைவிற்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். ஆங்கிலத்தில் சொன்னால் "Each for all; all for each" என்ற கொள்கையின் அடிப்படையில் எல்லோரும் உயரிய முறையிலே சேர்ந்து செய்யக்கூடிய ஒரு முக்கியமான இயக்கம் இது. தனக்குத் தானே உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம் என்ற மூன்று நோக்கங்களையும் கொண்டது இந்த இயக்கம். அது மட்டும் அல்ல, ஏழை எளியவர்களுக்காகவே, குறிப்பாக கிராமப்புறத்திலே வாழக்கூடிய விவசாயிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு இயக்கம் இது. மூலதனத்தைப்போட முடியாத அந்த விவசாயிகள் தங்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக பரஸ்பரம் உதவிக் கொள்ளுவதன் மூலமாகவும் அரசினரின் உதவியின் மூலமாகவும் சில காரியங்களைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்தாபனம் இது. அந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் எந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலே ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் அது இயங்குகிறதா என்று பார்த்தால் அப்படியில்லையென்று எனக்கு முன்பு பேசிய அனைவரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும்போது கூறினார்கள். ஏழை விவசாயிகளுக்கும் பாமரமக்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்தாபனம். மூலதனத்தைப் போட முடியாதவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்தாபனம். இன்றைக்குப் பெரிய ஆதிக்கக்காரர்கள் கையில் சிக்கிக்கொண்டிருப்பதையும் அதன் காரணமாக அவர்களுக்குத் தேவையானதை அடைகின்ற ஒரு கருவியாக மாறி இருப்பதையும் நாம் பார்க்க முடிகிறது. எனவே, இப்படிப்பட்ட சிக்கல்களைக் களைந்து, அவைகளைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நம்முடைய அரசு சட்டத்தினுடைய அடிப்படையிலேயாவது அல்லது சட்டத்தை தீவிரமாக அமுலாக்கக்கூடிய முறையிலாவது எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு ஆதிக்கக்காரர்கள் இதில் வருவதன் காரணமாகத்தான் பல குறிப்பிட்ட இடங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில கூட்டுறவு சங்கங்களில் இருக்கக் கூடிய சில நிலைமைகளை இந்த மாமன்றத்தின் முன்னால் கொண்டுவர வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஏனென்று சொன்னால் அவைகளில் ஊழல்கள் கண்டு பிடிக்கப்பட்டு பல மாதங்கள் ஆன பிறகும் கூட அது தீர்க்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எங்கள் தொகுதியில் ஒரு பால் சொஸைட்டி இருக்கிறது. குயிலாபாளையம் பால் சொஸைட்டி என்று பெயர். அந்த பால் சொஸைட்டியின் மூலம் பல பேர் பணம் கடன் பெறுவது உண்டு. அப்படிப்பட்ட கடன் மற்றவர்களுடைய பொய்க் கையெழுத்தைப் போட்டு, அவர்களின் பெயரால்அச்சங்கத்தின் தலைவர் பணம் வாங்கியுள்ளதாக புகார். கிட்டத்தட்ட 24,000 ரூபாய்க்கு மேல் அந்த பால் சொஸைட்டியில் 24 பெயர்களின்பேரில் பணம் வாங்கப்பட்டிருக்கிறது. அது பற்றி விசாரிக்க வேண்டுமென்று அந்த 24,000 ரூபாய்களைப் பெற்றதற்காக அந்த 24 பேர்களுக்கு நோட்டீஸ் போகும்போது—அவர்கள் அரசாங்கத்திற்கு புகார் மனு அனுப்பினார்கள். அந்த சொஸைட்டியினுடைய தலைவர் பல்வேறு சொஸைட்டிகளுக்குத் தலைவராக இருக்கக்கூடியவர். நீண்ட நெடுங்காலமாகவே கிட்டத்தட்ட ஒரு 10 ஆண்டு காலமாக பல்வேறு சொஸைட்டிகளுக்குத் தலைவராக இருக்கக் கூடியவர். அந்தப் பக்கத்திலே இருக்கக் கூடிய ஒரு கிரெடிட் சொஸைட்டியின் தலைவர். கடலூர் கோவாப்பரேடிவ் பில்டிங் சொஸைட்டியின் தலைவர். இப்படி பல சொஸைட்டிகளுக்குத் தலைவராக இருக்கக்கூடியவர். இந்தக் காரணத்தினால் கடந்த காலத்தில்



அவர் தவறுகளைச் செய்யும்போது எப்படியெல்லாம் அந்தத் தவறுகளை மறைக்க முடியுமோ அந்த முறையில் மறைப்பதற்கும், அதைக் கண்டு பிடிக்காமல் இருப்பதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டதோ, அந்த முயற்சியை இந்த அரசு வந்த பிறகும் செய்துகொண்டிருக்கிறார். "என் பேரில் எப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள் பார்க்கிறேன், எந்த சர்க்காராக இருந்தாலும் என்னை அசைக்க முடியாது. அதில் நான் பழக்கப்பட்டவன், அந்த வித்தையில் நான் கைதேர்ந்தவன்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர் பேசிக்கொண்டிருக்கிறார். இந்தப் பிரச்சினை அரசுக்கு வந்து, அந்த மில்க் சொஸைட்டியின் ஊழல்கள் போலீஸால் கண்டுபிடிக்கப்பட்டு அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே, மில்க் கமிஷனர் அவர்கள் தலையிட்டு, இது மில்க் சொஸைட்டி, ஆகவே இதைத் தொடர்ந்து நடத்த வேண்டாமென்று கூறியிருக்கிறார்கள். உடனே நான் இதைப் பற்றி மில்க் கமிஷனரைச் சந்தித்துப்பேசினேன். இந்தக் கூட்டுறவு சங்கத்தில், இதனால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் நானும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினோம். அதற்குப் பிறகு ஐ.ஜி.யை சந்தித்து நான் அதுபற்றிப் பேசினேன். இவைகளுக்குப் பிறகும்கூட இன்றைக்கும் அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் இதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு ஸ்தம்பித்து இருக்கிறது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கடலூரில் இருக்கக்கூடிய பில்டிங் சொஸைட்டி பல்வேறு பெயர்களில், அதாவது வில்வராயநகர், சுப்பராய நகர், சூசை நகர் என்றெல்லாம் இடங்களை வாங்கி, அந்த இடத்திற்கு மராமத்து செய்வது, பழுது பார்ப்பது, ரோடுகள் போடுவது போன்ற வேலைகளுக்கு, அந்த இடத்தை வாங்கின விலையைவிட அதிகமாக லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்திருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$ லட்சம் வரையில் கணக்குக் காட்டமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த பில்டிங் சொஸைட்டியின் தலைவராக உள்ள அதே நபர்தான் இதுமாதிரி மில்க் சொஸைட்டிகளிலும், கிரெடிட் சொஸைட்டிகளிலும் இப்படிப்பட்ட ஊழல்களைச் செய்கிறார். இதனால் கோவாபரேடிவ் இயக்கத்தின் பேரிலேயே அந்தப் பகுதி மக்கள் நம்பிக்கையை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த சொஸைட்டிகளிலெல்லாம் லட்சக்கணக்கான பணம் கையாடப்பட்டிருக்கிறது. மிஸ்அப்ரோப்பிரியேஷன் செய்யப்பட்டிருக்கிறது. பொய்க் கையெழுத்து போடப்பட்டிருக்கிறது. ஃபோர்ஜெரி நடந்திருக்கிறது. இவைகளெல்லாம் பற்றி விசாரணை நடத்தப்பட்டு தக்க தண்டனை வழங்கப்படாமல் இருக்கிற காரணத்தினால், இந்த இயக்கத்திலேயே மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. என்ன காரணத்தினாலோ குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படவில்லை. நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், எப்படிப்பட்ட செல்வாக்குள்ள நபராக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சொஸைட்டிகள் முழுவதுமே மூடப்படக் கூடிய மோசமான சூழ்நிலை ஏற்படும். அவர்களால் மேலும் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் கையாடல் செய்யப்படும் அபாயம் நேரிடும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தோழர் குறிப்பிட்டதுபோல, கோவாபரேடிவ் சொஸைட்டிகளில் ஊழல்கள் நடந்தால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்காவிட்டால், கோவாபரேடிவ் இயக்கமே நாட்டில் வளர முடியாது, நசித்துப்போய்விடும். அது மட்டுமல்ல, அதனால் பல மோசமான விளைவுகளும் ஏற்படும்.

இதில் இன்னொருவிதமான சில வேலைகளும் நடக்கின்றன. கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கில் (ஸவுத் ஆர்காட் டிஸ்ட்ரிக்ட்) ஏற்கனவே தலைவராக இருந்தவர், செல்வாக்கு வாய்ந்தவர், காங்கிரஸ் தலைவராகக் கூட மாநில மட்டத்தில் அறிமுகமானவர். துரதிருஷ்டவசமாக அவர் இப்பொழுது இல்லை, அவர் பல நபர்களிடம் கையெழுத்து வாங்கி—அவர் பொய் கையெழுத்துப் போடவில்லை—அத்தனை பேர்களிடமும் கையெழுத்து வாங்கி ரூ. ஆறு லட்சத்திற்கு மேலாக கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கிலிருந்து கடன் பெறப்பட்டது. திடீரென்று அவர் இறந்துவிட்டார். இப்

பொழுது ரூ. ஆறு லட்சத்திற்கும் கையெழுத்துப் போட்ட நபர்கள்—ரூ. 60,000, 50,0000, 30,00 என்று இப்படி கையெழுத்துப் போட்ட அத்தனை பேர்களும் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு விதம். இதற்கெல்லாம் பரிகாரம் என்ன? ஆடிட் ஒரு பரிகாரம் என்று கூறப்படுகிறது. இந்த ஆடிட்டைப் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அந்த டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய ஆடிட்டரே ஃப்ரிக்வெண்டு ஆடிட் செய்வதற்குப் பதிலாக மாநில ஆடிட்டர்-ஜெனரலின் கீழே இருக்கக்கூடிய ஆடிட்டர்கள் பல்வேறு இலாகாக்கள் பூராவையும், அதிலும் குறிப்பாக கோவாபரேடிவ் இலாகாவை ஆடிட் செய்தால்தான் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு இலாகாவில் இருக்கிறவர்களே அந்த இலாகாவை ஆடிட் செய்தால், அதில் சில சிரமங்கள் ஏற்படலாமே என்று சந்தேகப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பக்கம் கோவாபரேடிவ் மில்க் சொஸைடி, இன்னொரு பக்கம் பிஷர்மென் சொஸைடி, இன்னொரு பக்கம் ஹவுஸ் பில்டிங் சொஸைடி, இப்படி இருக்கிற சொஸைடிகளெல்லாம் இன்றைக்கு மாநில கூட்டுறவு ரிஜிஸ்ட்ராரின் கீழ் இருக்கிறதா, அவரால் கண்காணிக்க முடிகிறதா என்று சொன்னால், அதில் பல சிரமங்கள் இருக்கின்றன. நிலைமை எப்படி இருக்கிறது என்றால், மில்க் சொஸைடியில் ஏதாவது தகராறு என்றால், அது மில்க் கமிஷனருக்கு வருகிறது. பில்டிங் சொஸைடியில் ஏதாவது இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால், ஹவுஸிங் போர்டு சேர்மேன் அதைக் கவனிக்க வேண்டும். பிஷர்மென் கோவாபரேடிவ் சொஸைடியாக இருந்தால், அதை டைரக்டர் ஆஃப் பிஷரிஸ் கண்காணிக்க வேண்டும். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் சொஸைடியாக இருந்தால், இண்டஸ்ட்ரீஸ் டைரக்டர் அதைக் கவனிக்க வேண்டும். கைத்தறி சொஸைட்டியில் சிக்கல்கள் ஏற்பட்டால் அதைக் கைத்தறி இலாகா டைரக்டர் கவனிக்க வேண்டும். இம்மாதிரி பல்வேறு சொஸைடிகளை அந்தந்த இலாகாவை நிர்வகிப்பவர்கள் கவனிக்கிற காரணத்தினால், கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் இந்த சொஸைடிகளைக் கண்காணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி இருக்கலாமா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இப்படிப் பல்வேறு இலாகாவைச் சேர்ந்த பல்வேறு சொஸைடிகளையும் கண்காணிக்க, ஒவ்வொரு இலாகாவைச் சேர்ந்த சொஸைட்டிகளுக்கும் ஒரு ஜாயிண்டு ரிஜிஸ்ட்ரார் மாநில கூட்டுறவு இலாகாவிலிருந்தே போட்டால் நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த இலாகாவில் காலதாமதம் ஏற்படக்கூடிய பல காரியங்களும் இருக்கின்றன. ஸ்கூட்டர்ஸ் அண்டு அலைட் வெஹிகில்ஸ் கோவாபரேடிவ் சொஸைடி ஒன்று ஆரம்பிக்க 1967-ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதி அப்ளிகேஷன் வந்தது. இன்றுவரை அதை ரிஜிஸ்டர் பண்ண ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏதாவது அப்ளிகேஷனில் தவறு இருக்குமானால், வேறு விதமான டிபெக்ட்ஸ் இருந்தால், அப்ளிகேஷனைத் திருப்பி அனுப்பி, அதை ரெக்டிபை பண்ண வேண்டும் என்று அரசாங்க டெப்யூடி ரிஜிஸ்ட்ராரோ அல்லது மாகாண ரிஜிஸ்ட்ராரரோ கூறியிருக்கலாம். அதுவும் இல்லாமல் காலதாமதம் ஏற்படக்கூடிய அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது.

இன்னொன்று, தொழிற்சாலைகளிலுள்ள கான்டீன்ஸ் கோவாபரேடிவ் பேஸிஸில் நடத்தப்படுகின்றன. இதெல்லாவற்றையும் விட, ஒரு முக்கியமான விஷயம், நெய்வேலியில் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் ஒன்று நடக்கிறது. அந்த ஸ்டோர்ஸ் இன்று மூடப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த ஸ்டோர்ஸ் மூடப்படுமேயானால், அதிலே வேலை செய்யக்கூடிய 200, 300 தொழிலாளிகளுக்கு வேலை போகும் என்பது மட்டுமல்ல. நெய்வேலி நகரத்தில் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 60,000, ஒரு லட்சம் மக்கள் சாமான்களை நியாயமான விலைக்கு வாங்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இந்த ஸ்டோர்ஸை டெப்யூடி ரிஜிஸ்ட்ரார் அவர்களும், திருச்சி ஜாயிண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களும் பார்வையிட்டு, பல்வேறுவிதமான டிபெக்ட்ஸ் சுட்டிக் காட்டப்பட்டன. இன்னும் கூட அந்த கோவாப



ரேடிவ் இயக்கத்தை நடத்தக்கூடியவர்கள் அந்த டிபெக்ட்ஸை மாற்றிக் கொள்ளவில்லை. அது பொதுத் துறையிலே நடத்தக்கூடிய ஒரு ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்திலுள்ள நிர்வாகிகளும், இந்த ஸ்டோர்ஸில் சேர்ந்திருக்கிறார்கள். நெய்வேலி கார்ப்பரேஷன் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருந்துகொண்டிருந்தும், இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஸ்டோர்ஸ் நடைபெற்று, அது மூடப்படக்கூடிய நிலையில் இருந்து வருகிறது. அந்த ஸ்டோர்ஸ் மூடப்பட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் எந்த சாமானை எந்த இடத்தில் வாங்குவது என்று புரியாமல், சாமான்களை நியாயமான விலைக்கு வாங்க முடியாத ஒரு மோசமான நிலை ஏற்படும்.

அதே மாதிரி எண்ணூரில் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியில் கோவாபரேடிவ் காண்டீன் நடக்கிறது. அந்தக் கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் அதிலே இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையின் ஜெனரல் மானேஜர் அதன் தலைவர். லேபர் ஆபீஸர் அதனுடைய செகரடரி. அப்படியிருந்தும், அது சரியான முறையில் நடத்தப்பட முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரிதான் கவர்ன்மெண்டு பிரஸில் ஒரு காண்டீன் நடைபெறுகிறது. அதிலுள்ள அதிகாரிகளும் அந்தக் காண்டீனில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அந்தக் காண்டீனைப் பார்வையிட்டு, டிபெக்ட்ஸை பாயிண்டு அவுட் செய்த பிறகும் கூட, அது சரியான முறையில் நடக்காத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கெல்லாம் பரிகாரம் காணவேண்டுமென்று சொன்னால், உடனுக்குடன் இந்த இயக்கத்தில் ஏற்படும் ஊழல்களை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். லட்சக் கணக்கான ரூபாய் புழங்கக்கூடிய இடத்தில் மிகவும் பிரதானமாக இருக்கக்கூடிய இந்த இலாகாவில் பணம், சாமான்கள், லட்சக் கணக்கில் கையாளப்படுகிற இந்த இயக்கத்தில் ஏற்படக்கூடிய ஊழல்களை அரசாங்கம் நிச்சயம் உடனுக்குடன் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், மோசமான விளைவுகளை அது உண்டுபண்ணும். அரசாங்கத்தின் மீதே தவறான கருத்து ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமைகள் வரும். இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். தைரியமாகப் பணம் கையாடல் செய்யப்பட்டு சொஸைடிகள் மூடப்படக்கூடிய சூழ்நிலைதான் உருவாகிறது. இதையெல்லாம் கவனித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் மேலே சொன்னபடி, குறிப்பாக இந்த மில்க் சொஸைடி விஷயத்தில் ஏன் இந்தத் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களே நேரிடையாகத் தலையிட்டு விசாரித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, என்னுடைய கட்சி சார்பாக கூட்டுறவு மானியத்தின் மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். கூட்டுறவு இயக்கம் நம் மாநிலத்தில் மாத்திரம் அல்ல, இந்தியா தேசம் பூராவும் கூட்டுறவு மூலமாகவே எல்லாத் தொழில்களும் நடைபெற வேண்டும் என்ற ஒரு பொதுக் கொள்கையே நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கையாக அமைந்த ஒரு பொதுவான திட்டம். அமைச்சர் அவர்கள் துவக்க உரையிலே குறிப்பிட்டார்கள். கூட்டுறவு இயக்கத்தில் எந்த அரசியல் கட்சிக்கும் இடமில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அதை வரவேற்கிறேன். எந்த ஒரு பொது ஸ்தாபனமும் கட்சி பாகுபாடின்றி பொது நோக்கோடு நடந்தால்தான் அந்தத் திட்டம் நல்லமுறையில் எல்லோருக்கும் பலன் அளிக்கக்கூடிய திட்டமாக இருக்கும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. கூட்டுறவு இயக்கம் நம்முடைய மாநிலத்தில் சிறந்த முறையிலே வளர்ந்திருக்கிறது என்பதிலே கொஞ்சம்கூட ஐயப்பாடு இருக்க முடியாது. ஏனென்றால், கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 50, 60 ஆண்டுகள் ஆகின்றது. இந்த 50, 60 ஆண்டு காலத்தில் இந்த இயக்கம் நன்றாக மக்களிடையே பரவலாக, குறிப்பாக கிராம மக்களிடையே, விவசாய மக்களிடையே 10, 16 ஆண்டுகளுக்குள்

ளாக அதிகமாகப் பரவியிருக்கிறது என்பதிலே கொஞ்சம்கூட ஐயப்பாடு இருக்க முடியாது. என்னுடைய ஹரூர் தாலுகாவிலே 1954-ல் தாலுகா அளவிலே ரூ. 7 லட்சத்திற்கு லேவாதேவி செய்துகொண்டிருந்த ஒரு யூனியன் இன்றைக்கு ரூ. 85 லட்சத்திற்கு லேவாதேவி செய்யக்கூடிய அளவுக்கு, விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக்கூடிய அளவுக்கு வளர்ந் திருக்கிறது என்றால், இந்த மாநில கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில்
பி.ப. 4-30 வளர்ந்திருக்கிறது என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. ஆனால், நடைமுறையிலே, அப்படி வளர்ந்திருக்கக்கூடிய சங்கத்தில் விவசாயிகள் 100-க்கு 100 அங்கத்தினர்களாக இருக்கவேண்டும் என்று கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம். அப்படி அந்த அந்தப் பகுதி மக்கள், குடும்பத்தோடு கூட்டுறவு நாணய சங்கத்தில் அங்கத் தினர்களாக இருக்க வேண்டும் என்கிற தீவிர திட்டம் இருந்தும், இன்றைக்கு 80 அல்லது 85 சத விகித மக்கள்தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரு விவரம் என்னிடத்தில் இருக் கிறது. ஆனால் அப்படி 85 சத வீதம் பேர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தும், அதிலிருந்து கடன் பெறக்கூடியவர்கள் அதில் 30 சத வீதம் தான். அவர்களால்தான் பலனை அடைய முடிகிறது என்கிற ஒரு விவர மும் என்னிடம் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு விவசாயிகள் முழுக்க முழுக்க பூராவும் கூட்டுறவு இயக்கத்தினுடைய நன்மைகள் சரிவர அடைய வில்லை என்பதும் தெரிகிறது. கூட்டுறவு இயக்கத்தால் விவசாயிகள் எல்லோரும் பலனடைய வேண்டும் என்றால், கிராமந்தோறும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கும் முறையில் இரண்டு. மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கூட்டுறவு நாணயச்சங்கம் என்று இருக்கிறது. அது போதாது. ஒவ்வொரு பஞ்சா யத்துக்கும் ஒன்று என்று அமைத்தால்தான், எல்லோருக்கும் கடன் தரக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இன்றைக்குக் கடன் வழங்கும் முறையில் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன், என்ற மூன்று வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. அதிலே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பயிருக்கு, என்ன பயிர் சாகுபடி செய்கிறானோ அந்தப் பயிரின் பேரில், ஏக்கருக்கு இவ்வளவு விகிதாசாரம் என்ற முறை யில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அப்படி இருக்கும் திட்டத்தில் ஒரு விவசாயி கடன் பெற வேண்டுமென்றால், ஒரு ஏக்கருக்கு மணிலா, நெல் என்று பயிர்களைச் சாகுபடி செய்கிறான் என்றால், விகிதாசார முறையில் ஒரு ஏக்கருக்கு இவ்வளவுதான் என்று இருக்கிறது. அதிலே உரமும் சேர்த்து வாங்க வேண்டும் என்றும் திட்டம் இருக்கிறது. சில இடங்களில் அப்படிக் கடன் வாங்க வேண்டும் என்றால், மத்திய சங்கத்தின் கிளையில்தான் வாங்க வேண்டியிருக்கும். அந்தக் கிளைச் சங்கத்தில் கடன் வாங்க 20, 30 மைல் தூரம் போய் கடன் பெற வேண்டியிருக்கிறது. கடனைப் பட்டுவாடா எடுக்கும்போது, கூடவே உரத்தையும் பெற வேண்டிய நிலை இருக்கிறது. அந்த உரத்தை எடுத் தால்தான் கடன் தொகையைப் பெற முடியும். ஐந்து ஏக்கருக்கு ஒருவன் கடன் மனுப் போடுகிறான் என்றால், விகிதாசாரப்படி உரத்தையும் எடுக்க வேண்டிய திட்டம் அமுலில் இருக்கிறது. அப்படி உரம் கொடுக்கும் திட்டத் தில் சங்கம் ஒன்றுக்கு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாகவும், ஒரு சில கூட்டுறவு நாணயச் சங்கம் மூலமாகவும், வழங்கப்படுகிறது. 20, 30 மைல் வந்த பிறகு, கடன் தொகை பெற வருகிறவர்களுக்கு மறுபடியும் நாண யச் சங்கத்திற்கு உரத்தைக் கொண்டுபோகும் பொறுப்பில் இருக்கிறார்கள்.

அதோடு கிராம நாணயச் சங்கத்தில் கடன்கள் பெறுவதிலும் சிரமங்கள் இருக்கின்றன. விவசாயக் கடன் பெற ஒரு சங்கத்தில் 500 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அதிலே 300 பேர்கள் ஏற்கனவே கடன் வாங்கி யிருப்பார்கள். அவர்களில் 150 பேர்கள் கடனைத் திரும்பக் கட்டியிருப் பார்கள். மற்ற அங்கத்தினர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருந்தால், தவணைக் கடன் பாக்கியாக இருந்தால், மேலும் அந்தச் சங்கம் கடன் மனுத் தயாரித்து அனுப்பத் தகுதியில்லாத நிலை இருக்கிறது. ஆகவே, கடனைத்





திருப்பிச் செலுத்திய அங்கத்தினர்கள் 15 நாளுக்குள்ளே பெறலாம் என்ற ஒரு முறை இயக்கத்தில் இருக்கிறது. ஆகவே, ஒரு சங்க அங்கத் தினர்கள் கடன் திருப்பிச் செலுத்தினால், மறுபடியும் பெற கால கெடுவு 15 நாளாக இருக்க வேண்டும். அந்த வகையில் கடன் பெற வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சரவர்களும், மாநில கூட்டுறவுப் பதிவாளர் அவர் களும் சில மாற்றங்களைச் செய்து கூட்டுறவுத் துறையிலே நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நோக்கம் கொண்டிருப்பதை முழுதாக நான் வரவேற்கிறேன். அமைச்சர் குறிப்பிட்டார்கள், விவசாயி களுக்கு எலெக்ட்ரிக் மோட்டார், ஆயில் என்ஜின், நீண்டகாலக் கடன் இவற்றை வட்டார அளவில் விஸ்தரிப்பு அதிகாரிகள் மூலம் அளிக்க புதிய ஏற்பாடு பற்றிச் சொன்னதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். அதோடு, விவசாயிகளுக்கு சாகுபடிக் கடன்களை மத்திய பாங்கியிலிருந்து அவர்களுடைய அலுவலர்களை வைத்து, தாலுகா அளவில் யூனியனோடு இணைத்துக் கடனை வழங்குகிறார்கள். இதை நன்கு அமைச்சர் விளக்கு வார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் புதிய முறை பற்றிக் குறிப்பிட் டார்கள். நடைமுறைத் திட்டத்தையும் இணைத்துவிடுவதுதான் சிறந்ததாக இருக்கும் என்கிற அபிப்பிராயத்தையும் தெரிவிக்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்திலே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பண்டங் களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தச் சங்கத் திலே, அவர்களுக்கு முழுப் பலனும் கிடைக்கிறதா என்றால், நிச்சயமாக நல்ல பயன் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலே மார்க்கெடிங் என்கிற வியாபாரம் செய்யப்படு கிறதேயொழிய, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய நல்ல சூழ் நிலையை அவர்கள் அங்கே ஏற்படுத்தவில்லை. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை விற்பனைச் சங்கத்திலே வைத்து, பின்னால் நல்ல விலைக்கு விற்று அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை ஆகவே, அந்த விவசாயிகளுக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த வகையிலே இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே முயற்சிகள் செய்ய முனைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நாணய பாங்கிகளில் தங்கள் உற்பத்திப் பொருள்களை ஈடாக வைத்துக் கடன் பெறுவதற்கும் வாய்ப்பாக, அந்தச் சங்கங்களுக்கு கோட வுன் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அப்படி வைத்து வாங்கி, பின்னால் நல்ல விலைக்கு விற்கவும் அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இப்பொழுது இருக்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே கோட வுன் வசதியைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் வீடு கட்டும் சங்கங்களும் இயங்குகின்றன. எங் கள் பகுதி ஹரூரில் 1956-ல் அப்படி ஒரு வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தினோம். அதிலே 85 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். பதினாலு பேர்கள்தான் கடன் பெற்று வீடு கட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கடன் மனுக்கள் அனுப்பியதில் அப்பொழுது 1960–61 என்று நினைக் கிறேன், அன்றைய நிலையில், பாகிஸ்தான் படையெடுப்பு, சைனா ஆக்கி மிப்பு போன்ற அவசர கால நிலைமைகள் ஏற்பட்டதால், பண வசதி போத வில்லை என்று, தாற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம் என்றும், கடன் மனுக்களைப் பிறகு திருப்பி அனுப்பலாம் என்றும் சொல்லி திருப்பி விட்டார்கள். எங்கள் பகுதித் துணைப் பதிவாளர், தான் அறிவிப்புக் கொடுக்கும் வரையில் மனுக்களை அனுப்பாதீர்கள் என்று சொல்லிவிட்டார். தற்போது அந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன். ஏறக்குறைய இன்னும் 30, 35 வீடுகள் கட்டாமல் இன்றும் பாக்கி இருக் கிறது. ஆகவே, அந்த வீடு கட்டும் சங்கத்திற்குக் கிராண்டு அதிகமாகக்

கொடுத்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்றும், பூர்த்தியாகாமல் இருக்கும் வீடுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் உதவிகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரூர் தாலூகாவில் கூட்டுறவுப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரிசாமி குறிப்பிட்டது போல, மானியம் கொடுக்கிறோம்- மின்சாரம் கொடுக்கிறோம், மோட்டார் கொடுக்கிறோம். கிணறு கொடுக்கிறோம், ஆயில் என்ஜின் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லி, அங்கத்தினர்களைச் சேர்த்து அங்கத்தினர்களும் நல்ல முறையில் இருக்கும்போது, அது மேற்பார்வையாளருடைய கோளாறோ என்னவோ. ஒன்றுமே இல்லாமல், நடைபெறாமல், 'டார்மெண்ட்' ஆக, நடைபெற முடியாமல், லிக்விடேஷனில் வந்து நிற்கிறது.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளையெல்லாம் நல்ல முறையில் திருத்தி நல்ல முறையில் பாதுகாக்கக்கூடிய சூப்பர்வைசர்களை நியமித்து, நல்ல முறையில் இயக்குவதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கூட்டுறவு இயக்கம் இந்த மாநிலத்திலே, கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நெசவாலைகள் போன்ற துறைகளில் எவ்வளவோ வளர்ந்திருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம், 'கூட்டுறவு இயக்கம் என்றால் ஊழல், ஊழல்' என்று பேசிக்கொண்டு வந்தார்கள். ஏதோ ஒரு சிலவிடங்களில் சிறிய குற்றங்குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளை எல்லாம் ஒரு கட்சிக்குத்தான் ஏகபோக உரிமை என்று சொல்ல முடியாது. கூட்டுறவு நிர்வாகத்தை இயக்கக்கூடியவர்களிடத்தில் தவறுஇருக்கலாம், குற்றங்குறைகள் இருக்கலாம் அவைகள் நாளாவட்டத்தில் போக்கடிக்கப்படலாம். ஆனால் பொறுப்புக்கு வந்த பிறகும் ஊழல், ஊழல் என்று பேசாமல் பொறுப்பு உணர்ந்து பேசவேண்டும். நாளைக்கு வேண்டுமானால் நீங்கள் இதையே திருப்பிப் பேசலாம். ஆகவே, கூட்டுறவு நல்ல முறையில் இயங்க நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும். இந்த அமைச்சரவை நல்ல முறையில் ஊக்கத்தோடு நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள் மார்ச் மாதம் முதல் வாரத்தில் மாநில கூட்டுறவாளர்களைக் கூட்டுவித்து அவர்களுடைய ஆலோசனைகளை கூட்டுறவுப் பதிவாளரும், அமைச்சர் அவர்களும் கேட்டிருந்தார்கள். பலவிதமான கருத்துக்கள் எடுத்துக்கூறப்பட்டன. நல்ல சிறந்த வரவேற்கக் கூடிய கருத்துக்களும் இருந்தன. மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் நல்ல நிர்வாகத் திறமை பெற்றவர். விவசாயிகளுக்குக் கடன் அளிக்கும் ஒரு நல்ல திட்டத்தை எடுத்துச்சொன்னார்கள். இத்திட்டம் விவசாயிகளுக்குச் சிறந்த திட்டமாகும். ஊழல் என்ற புகார்கள் மறைய இந்த மாதிரியான நல்ல திட்டங்களை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆ. கருப்பையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு மானியத்தின்மீது என்னென்ன திருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன என்பதை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்ததையெல்லாம் முதன் முதலில் அமைச்சர் அவர்கள் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். நாங்கள் அவர் கூறிய கருத்தை வரவேற்கிறோம். இரண்டாயிரம் ரூபாய் வரைதான் விவசாயிகள் கடன் வாங்க முடியும் என்ற சூழ்நிலையை மாற்றி, இன்று பதினைந்தாயிரம் ரூபாய் வரையில் வாங்கலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தியதற்கு இந்த அமைச்சரவைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தற்பொழுது சிறு சிறு சங்கங்களாக இருந்த எல்லா சங்கங்களையும் பக்கத்து ஊர்களில் இருக்கும் பெரிய சங்கத்தோடு இணைத்திருப்பதைக் கண்டு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். இப்பொழுதுள்ள சிறிய சிறிய சங்கங்களையெல்லாம் பக்கத்திலிருக்கும் பெரிய சங்கத்தோடு இணைத்திருப்பதன் காரணமாக விவசாய மக்கள் வசதி அடைவார்களா, வசதி பெற முடியுமா என்று சந்தேகத்திற்குரியதான நிலைமை இருக்கிறது. இப்பொழுது இணைத்திருக்கும் பெரிய சங்கங்களின் பத்து, இருபது ஆண்டுக் காலத்தின் சரித்திரத்தைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தால் அந்தச் சங்கங்கள் எல்லாம் எந்த முறையில் நடந்திருந்தன என்ற வரலாறு நன்கு தெரியவரும். இப்படி இணைப்பதன் காரணமாக பெரும்பாலான மக்கள் பயன் அடைவார்களா? பெரும்பாலான சங்கங்கள் இணைந்து கொள்ளாமல் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கின்றன, சில சங்கங்கள் தீர்மானம் போட்டு இணையவில்லை. சில சங்கங்கள் தீர்மானம் கூடப் போடவில்லை. சங்கத்திற்குத் தலைவராக வரக்கூடியவர்கள் பெரிய பண முதலைகளாகத்தான் இருக்க முடியும். அவரிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? சாதாரண கிராமச் சங்கங்கள் அமைத்து, கிராம மக்களின் மத்தியில் கிராமிய மொழியில் பேசி, 'உனக்கு இவ்வளவு பணம் வேண்டுமா? இவ்வளவுதான் இருக்கிறது, நீ இவ்வளவு எடுத்துக்கொள், அவன் இவ்வளவு எடுத்துக்கொள்ளட்டும்' என்று பணத்தைப் பட்டுவாடா செய்யும்போது எல்லோரும் நன்மை அடைய வழி பிறக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, சிறு சிறு சங்கங்களால் கிடைக்கக்கூடிய நன்மைகளை எதிர்காலத்தில் அடைய முடியாது என்ற காரணத்தால்தான் பெரிய சங்கத்தோடு இணைய மறுக்கிறார்கள். இப்போது பெரிய சங்கங்களாக இருக்கின்ற இடங்களில் வருவதற்கு முன்பு சில தில்லுமுல்லுகள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. நாம் அதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. பணம் கட்டுவதற்கு விவசாயிகளிடத்தில் போய், 'உன்னுடைய பணத்தைக் கட்டவில்லையென்றால் மாட்டை ஜப்தி செய்ய உத்தரவு வந்திருக்கிறது' என்று மிரட்டுவார்கள். 'இரண்டு மாத தவணை கேட்டால் சர்க்கார் ஏற்றுக் கொள்ளாது. யாரிடமாவது பணத்தை வாங்கிக் கட்டிவிடு, என்பார்கள். 'நீங்களே பார்த்துக் கட்டிவிடுங்கள்' என்று விவசாயிகள் திரும்பிக் கூறும்போது, 'உனக்காக நான கட்டுகிறேன். பத்து சதவிகிதம் வட்டி கொடுப்பதாக இருந்தால் கட்டத் தயார்' என்பார்கள். சர்க்காருடைய கடனாக இருக்கிறதே, ஏதாவது பெரிய தொல்லைகள் உண்டாகும் என்று விவசாயிகள் பயந்துகொண்டு அந்த உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்கி சங்கத்தின் கடனை அடைக்கின்றான். கடன் கொடுப்பவன் விவசாயிகளின் வீட்டிற்குப் போய் எனக்கு மாடு தேவையாக இருக்கிறது, விற்றுவிடுகிறாயா என்று கேட்கும்போது விவசாயி கடன் அடைந்தால் போதும் என்று நினைத்து மாட்டை விற்கத் தயாராக இருக்கிறான். அந்தச் சமயத்தில் கடன் கொடுப்பவர், 'என்னுடைய கடன் பாக்கி 200 ரூபாய். கடன் பாக்கி போக இந்தா மீதி 50 ரூபாய்' என்று கொடுத்துவிட்டு மாட்டைப் பிடித்துக்கொண்டு போய்விடுவார். இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படக்கூடிய நிலையில் பெரிய சங்கத்தோடு இவைகளை இணைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருபதாண்டு சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்தப் பெரிய சங்கத்தின் நிலைமை நன்கு தெரியவரும். கிராமச் சங்கங்கள் இருப்பதால் சர்க்காருக்கு எந்தவிதமான செலவும் கிடையாது. அங்கே கிளார்க், குமாஸ்தா கிடையாது. வருஷத்திற்கு ஒரு தடவை ஆடிட்டர் வருகிறார். விவசாயிகளே அந்தச் சங்கங்களை நடத்தி வருகிறார்கள். ஆகவே, மீண்டும் பழைய முறையிலே கிராமச் சங்கங்கள் இயங்கி ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய நிலைமை உண்டாக வேண்டுமென்று இந்த அரசை மிகப் பணிவுடன் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு:** தலைவர் அவர்களே கூட்டுறவுத் துறை மானியத்தைப்பற்றிப் பேசும் முன்னால் கூட்டுறவுத் துறையை நிர்வகித்துவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத்துறை

இயக்குநர் அவர்களும் இந்த வருஷத்தில் புதிதாகச் செய்ய முன்வந்திருக்கும் காரியங்களைச் சிலாகித்துப் பேச ஆசைப்படுகிறேன். கிராமச் சங்கங்களில் இதற்கு முன்னால் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கக்கூடியதாக இருந்ததை லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுக்கக்கூடிய நிலைமையை புதிய திட்டத்தின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரை கிராமச் சங்கம் என்பது ஒரு வட்டிக்கடைபோல நிகழ்ந்து வந்தது. ஒரு வருஷத்திற்குச் கடன் வாங்குவது, அந்த வருஷக் கடைசியில் அதைக் கொடுக்க முடியவில்லை என்றால் பக்கத்தில் வாங்கி அதைக் கொடுத்துவிட்டு திரும்பவும் 15 நாளில் கடன் வாங்கி, முன்பு வாங்கியவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது என்கிற முறை இருந்தது. ஆனால் இன்றைக்கு விவசாயி யாராக இருந்தாலும் எல்லாப் பயிர்களுக்கும் பயிர்க்கடன் திட்டத்தின் மூலம் கடன் கொடுக்கப்படுவதை வரவேற்கிறேன். இத்தகைய பயிர்க்கடன் மத்தியக்காலக் கடன், நீண்டகாலக் கடன் ஆகியவற்றை அளிக்க அரசு முன்வந்திருப்பது உண்மையில் விவசாய மக்களுடைய வாழ்க்கையில் நல்ல பயனை அளிக்கும். அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கக்கூடிய நல்ல முறைகளை இந்த நிர்வாகத்திலே புகுத்தியுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கூட்டுறவுத்துறையைப்பற்றிப் பேசும்போது கூட்டுறவுத் துறையின் அடிப்படைக் கொள்கை என்ன என்பதைச் சிந்தித்து பார்த்துப் பேசுவது முறையாகும். ஒரு கிராமத்தில் வசிக்கக் கூடிய மக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டுள்ள மக்கள் ஒவ்வொருவரின் நாணயத்தைப் பற்றியும் நன்கு தெரிந்துகொண்டுள்ள மக்கள் ஒன்றுகூடி தங்களுக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுவது என்கிற முறை மிக வரவேற்கத்தக்கதாகும். பொதுவாக கடந்த இருபது வருடங்களாக அந்தச் சங்கங்களில் ஊழல்கள் மலிந்து விட்டன என்று பேசக்கூடியவர்கள் ஒன்றை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த இருபது வருட காலமாக கொலை செய்ததற்காக, கொள்ளை அடித்ததற்காகத் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், அவர்களது போட்டோக்களையும் சேர்த்து வைத்துப் பார்ப்பார்களேயானால் நம் நாட்டில் உள்ளவர்கள் அத்தனை பேர்களுமே கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், இனி எப்படி நாம் வாழப் போகிறோம் என்கிற அச்சம் கொண்டவர்களாக ஆகிவிடுகிறார்கள். அது போல எங்கோ ஒன்றிரண்டு சங்கங்களில் நடந்திருக்கக்கூடிய ஊழல்களை வைத்து பரவலாக ஒரேயடியாக அவை ஊழல் மலிந்து கிடக்கின்றன என்று பேசுவது இந்த இயக்கம் சமுதாயத்திற்கு அளித்திருக்கக்கூடிய நன்மைகளை எல்லாம் ஒரு சேர வைத்துப் பார்ப்பவர்களுக்குப் பொருந்தாது. நெல் என்றால் உமி உண்டு. நீர் என்றால் நுரையுண்டு. பூ என்றால் இதழுண்டு. பிழையின்றி இருப்பவர்கள கடவுள் தவிர மனிதர் இல்லை என்று சொல்லிவிட்டுப்போனார்கள். நம் நாட்டில் உள்ளவர்கள் பெரும்பாலும் ஏழைமக்கள். எப்படியாவது பணத்தைச் சம்பாதித்துவிட வேண்டும் என்ற முறையில் சிலர் சிலவிடங்களில் தவறுகளைச் செய்துவிடுகிறார்கள். பணக்காரர்கள்தான் தவறு செய்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக பணக்காரர்களின் கையில் தான் இந்த இயக்கம் இருக்கிறது என்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளக்கூடிய காரியம் அல்ல என்று சொல்வேன். இன்று ஐக்கிய நாணயச் சங்கங்களின் நிர்வாகிகளாகப் பலர் மாறி மாறி வரக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. கூட்டுறவு மேற்பார்வை யூனியன்களுக்கும் அப்படித்தான் வருகிறார்கள். மத்திய பாங்கிலும் அப்படித்தான் நடந்து வருகிறது. நான் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்த காலத்தில் இருந்து பார்த்து வருகிறேன். நாணயச் சங்கங்களுக்குக் காங்கிரஸ்காரர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது சரியல்ல. நான் காங்கிரசில் இருந்தவன். காங்கிரசைவிட்டு விலகிய பிறகும்



நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் யார் உண்மையில் மக்களுக்காகத் தொண்டாற்றுகிறார்களோ அவர்களையே மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருப்பவர்கள் அத்தனைபேர்களுமே ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. கட்சி அடிப்படையில் இந்த கூட்டுறவு இயக்கத்தை அணுகுவதே மிகவும் தவறானது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். சுயநலமற்ற முறையில் பணியாற்ற வேண்டும் என்கிற அடிப்படை கொள்கை நிலைநாட்டப்படவேண்டும்.

குறிப்பாக, இன்றைக்கு கிராமங்களில் தனித்தனியாக இயங்கக் கூடிய சங்கங்களை எல்லாம் ஒருங்கிணைத்து வயபிள் யூனிட்டாக ஆக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். நான் நிச்சயமாக ஒன்று சொல்வேன். இப்படி வயபிள் யூனிட்டாக ஆக்குவதைவிட வொர்கபிள் யூனிட்டாக ஆக்கவேண்டும். காரணம் இன்றைக்கு நம் நாடு இருக்கும் நிலைமையில் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் சரியான முறையில் ஒத்துழைப்பு இருப்பதில்லை. கிராமச் சண்டை சமூகச் சண்டை எல்லாம் இருக்கின்ற நிலையில் பலதரப்பட்ட கிராமங்களையும், பலதரப்பட்ட சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து வயபிள் யூனிட் என்று ஏற்படுத்துவது சரியானமுறையில் செயல்படுத்துவதற்கில்லை. ஆகவே, வொர்க்கபிள் யூனிட்டாகச் செய்யவேண்டுமென்று வற்றுபுறுத்துகிறேன். காரணம் இன்றைக்கு சாகுபடி செய்கிற எல்லாப் பயிர்களுக்கும் கடன் கொடுக்கக்கூடிய பயிர்த் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். இன்று ரிசர்வ் பாங்கும் வட்டியைக் குறைத்துக்கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இந்த ஆதாயம் நடுவில் போய்விடாதபடி மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்றால் வொர்க்கபிள் யூனிட்டாகச் செய்யவேண்டும். இதற்குக் காரணமே இன்றைக்கு ஒரு சமூகத்திற்கும் இன்னொரு சமூகத்திற்கும் சண்டை இருக்கிறது. அரிசனங்களைக் கொண்டுபோய் பல கிராமங்களுக்கும் சேர்ந்த யூனிட்டில் இணைக்கிற நிலை ஏற்படுகிறபோது பல கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே வொர்க்கபிள் யூனிட்டாகவே வைக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சங்கங்களை மேற்பார்வை செய்கிற நிலை இன்று யூனியனில் இருக்கிறது. யூனியனை எடுத்துவிட்டு யூனியன்களுக்குப் பதிலாக அந்த அந்தத் தாலுக்காவில் இருக்கிற மார்க்கெட்டிங் சொசைட்டிகளை ஆக்கிவிடலாம் என்கிற யோசனை இருந்து கொண்டிருக்கிறது. நான் மிகமிகத் தாழ்மையாக தெரிவித்துக்கொள்கிறேன். இது தேவை இல்லை. அந்தத் தொழில் வேறு. இந்தத் தொழில் வேறு. விவசாய உற்பத்திப் பொருள்களை அவர்கள் ஒழுங்கான முறையில் மார்க்கெட் செய்து கொடுத்தாலே போதும். அதனால் இவர்களிடையே ஏற்படுகிற தொடர்பைக் கொண்டு இப்படி செய்துவிடலாம் என்கிற எண்ணம் சரியல்ல. யூனியன்களிடமே இருக்கட்டும் வேண்டுமானால் யூனியன்களின் எண்ணிக்கையைக் குறைத்து இன்னும் 20 சங்கங்கள், 30 சங்கங்களுக்கு ஒரு மேற்பார்வை யூனியன் என்று ஏற்படுத்திவிடலாம். இது நல்லமுறையில் செயல்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பணக்காரர்கள் கையில் இந்தச் சங்கங்கள் சிக்கிக் கொண்டு சீரழிந்துவிட்டன என்று சொன்னார்கள். அது சரியல்ல. கோவில்பட்டியில் ஒரு பருத்தி சேல்ஸ் சொஸைட்டி இருக்கிறது. அந்த சொஸைட்டியில் ஏழைகள்தான் இருக்கிறார்கள். அந்த சொஸைட்டியின் தலைவராகவும் ஓர் ஏழை விவசாயிதான் இருக்கிறார். நான் சில சங்கங்களின் தலைவராக இருக்கிறேன். நான் ஒரு ஏழை சம்சாரி. பணக்காரன் இல்லை. 1919-ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கூட்டுறவு

இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருக்கிற காரணத்திஞல்தான் மக்கள் என்னைத் தேர்ந்தெடுக்கிருர்கள். சங்கத்தின் தலைவராக இருந்தால், நல்ல முறையில் செயல்பட்டால் அவர்கள் நில அடைமான பாங்குக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புகிருர்கள் அங்கிருந்து யூனியனுக்குத் தேர்ந்தெடுக்கிருர்கள். அங்கே தலைவனைத் தேர்ந்தெடுக்கிற நிலைமை இருக்கிறது. இங்கே கட்சி நிலை இல்லை. யார் மக்களுக்கு தொண்டாற்றுகிருரோ அவர் தேர்ந்தெடுக்கப்படுகிருர். நல்ல முறையில் செயல்படுகிறவர்களை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கிருர்கள். ஆகவே யாருடைய ஆதிக்கமோ இருப்பதாகச் சொல்வது தவறு. ஊரிலுள்ள மக்கள் நல்ல நாணயம் உள்ள பணக்காரர்களை எதற்கும் நம்புவது வழக்கம். அதஞல் பணக்காரர்கள் ஆதிக்கியம் செய்கிருர்கள் என்பது சரியல்ல. எங்கோ ஒரு பணக்காரர்
பி. ப. 5.00 இருந்தால் அவரை நம்புவது கிராமத்திலே உள்ள பழக்கம் எங்கோ ஒரு வியாபாரி இருந்தால் அவனை நம்புவது கிராமத்தார்களுடைய பழக்கம். அவர்களிடத்திலே சகல வரவு-செலவு கணக்குகளையும் சொல்லி அவன் சொற்படி கேட்டு நடக்கின்ற காலம் ஒரு காலம். அவற்றை எடுத்துக்கொண்டு இங்கே சொல்வது சரியல்ல.

ஐக்கிய இயக்கங்களிலே ஊழல்கள் அகற்றப்படுவதற்கு என்ன வழி என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பாங்கிலே சூப்பர்வைஸர்கள், சீனியர் இன்ஸ்பெக்டர்கள், பஞ்சாயத்துப் பிரதேசங்களின் சி. எஸ். ஆர். கள் இவர்களை வைத்து அவ்வப்போது தணிக்கை செய்து குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்தி செய்ய வேண்டும். எங்கோ ஒருவன் நான்கு பெயர்களிலே கடன்வாங்கிஞன் என்ருல் அது சூப்பர்வைஸர்கள், இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. கடன் வாங்கியவன் கெட்டுப்போய்விடக்கூடிய நிலையில்தான் ஐயோ, கடன் வாங்கி மோசம் போய்விட்டானே என்று சொல்வார்கள். அப்படியில்லாமல் அப்படிக் கடன் வாங்காமல் செய்வதுதான் நல்லது.

புதுமாதிரியான நிலையிலே தாங்கள் கைப்பற்றிய நிலத்தின் மேலும் பயரின் மேலும் கடன் கொடுக்கப் போகிருேம் என்ற நிலை இருக்கிறது. மனித வாழ்க்கையில் அத்தனையும் ஐக்கிய இயக்கத்தின் வாயிலாகவே நடக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருக்கின்றன. சென்னையிலே மற்ற இடங்களிலே இருக்கிற கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தவிர மற்ற பண்டகசாலைகள் சரியாக நடக்கவில்லை. அவர்கள் ரொக்கமாகக் கொடுத்துச் சரக்குகளை வாங்கமுடியவில்லை. ஆகவே அவர்களுக்கு இத்தனை ரூபாய்க்கு மாதத்திற்கு சரக்குகள் கொடுக்கிருேம் என்று சொல்லி கொடுத்துச் செய்தால்தான் கூட்டுறவு ஸ்டோர்கள் நல்ல முறையில் நடக்கும்.

கூட்டுறவு ஸ்டோர்கள் என்று சொல்கிறபோது சூபர் மார்க்கெட்டைப்பற்றியும் மார்க்கெட்டிங் சொஸைட்டியைப்பற்றியும் சொல்ல விரும்புகிறேன். நகரங்களிலே சூப்பர் மார்க்கெட்டுகள் இருக்கின்றன. இருந்தாலும் பல பொருள்களை அவர்கள் வாங்கி அடக்க விலைக்கு ஏமாற்ருமல் கொடுக்கிருர்களே தவிர சொற்ப விலைக்குப் பொருள்களை வாங்கி அங்கத்தினர்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு உதவியாக அவை இல்லை.

மார்க்கெட்டிங் சொஸைட்டிகளைப் பொறுத்தவரையில் நானும் ஒரு மார்க்கெட்டிங் சொஸைட்டியின் தலைவராக இருக்கிறேன். மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் அங்கத்தினர்களுடைய மகசூல்களை விற்றுக்கொடுப்பதற்கு சக்தியற்றவையாக இருக்கின்றன. சில பிரதேசங்களில் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விவ்சாயினிடத்தில் ஒரு கிலோ தானியம் ஒரு கிலோ பருத்தி ஒரு கிலோ வத்தல் இருந்தால் வியாபாரிகள்





அவனிடம் நேரடியாக வாங்கிக்கொள்கிருர்கள். சில பிரதேசங்களில் பத்துப் படி கடலையைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு மார்க்கெட்டிங் சொஸைட்டியில் வைத்து டெண்டர் வரும் வரும் என்று காத்திருந்து பிறகு விற்கமுடியாத நிலைமை கூட ஏற்படுகிறது. அந்த வழக்கம் என்னுடைய பிரதேசத்தில் இல்லை. கோயம்புத்தூரில் புளியம்பட்டியிலே சந்தைக்குக் கொண்டுபோய் பருத்தியை விற்றுவருகிருர்கள். ரெகுலேட்டட் மார்க்கெட்டிலே சரக்கை வாங்குவதற்கு இல்லையென்ருல் அந்தச் சரக்குமேலே பணம் கொடுப்போர் இல்லை. அப்படிப்பட்ட அவல நிலைமை இருப்பதற்குக் காரணம் ஐக்கிய இயக்கத்தின் கோட்பாடுகள் நல்ல முறையில் நிறைவேற்றப்படாமல் இருப்பதுதான். மக்களுக்குச் சாதகம் செய்யவேண்டும் சீக்கிரமாக பொருள்களை விற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏதாவது ஒரு பிரதேசத்தில் ஒரு கார்னர் செய்து அந்த ஊரிலே வேறு யாரும் வராமல் அந்த ஊரிலே உள்ள விளையும் பொருள்களையெல்லாம் விற்றுக்கொடுக்க வேண்டும். எல்லாப் பொருள்களையும் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் விற்கமுடியாது. என்னுடைய ஊரிலே 2 இலட்சம் வாழைகள் இருககின்றன. அவற்றை விற்காவிட்டால் பழுத்து விடுகின்றன. அதேமாதிரி சீனிக் கிழங்கு இருக்கிறது, சேனைக் கிழங்கு இருக்கிறது. வத்தல் இருக்கிறது. வத்தலை எடுத்துக்கொண்டால் சென்ற வருஷம் 500 ரூபாய்க்கு விற்றபொழுது விற்காமல் இந்த வருஷம் நல்ல விலை வரும் அதிகமாக விற்கும் என்று, வைத்து கடைசியாக 150 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலைமையில் அவன் அந்த சங்கத்தைத்தான் பழித்துக்கொண்டு போவானே தவிர தன்னுடைய தலைவிதியைப் பழித்துக்கொள்ள மாட்டான். அங்கே கொண்டுபோய் போட்டோம் போய்விட்டது என்றுதான் சங்கத்தை பழித்துக்கொண்டு போவான். மார்க்கெட்டிங் சொசைட்டியிலே விற்பதற்கு தீவிரமான நடவடிக்கை எடுத்து எங்கு எங்கு சாத்தியமோ அங்கேதான் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர எல்லா இடங்களிலும் அப்படிச் செய்துவிட முடியும் என்று நினைப்பது சரியல்ல. தேனியிலே சந்தை நடக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான வண்டிகள் சரக்கை ஏற்றிக்கொண்டு வருகின்றன. ஆஞல் இராமநாதபுரத்திலே ஒரு இடத்திலே கூட அப்படிப் பார்க்கமுடியாது. அது வியாபாரத்தினுடைய தன்மை. ஐக்கிய இயக்கத்தின் மூலம் வியாபாரம் எங்கு எங்கு எந்த விலைபொருட்களுக்கு இருக்கிறதோ அங்கேமட்டும் விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இண்டக்ரேட்டட் கிரெடிட் கொள்கையை வைத்து எல்லாப் பொருள்களையும் மார்க்கெட்டிங் சொசைட்டியின் மூலம் விற்றுவிடலாம் என்று நினைப்பது தவருக முடிந்துவிடுகிறது. அதை மாற்றிக்கொள்ள வேண்டும். ஐக்கிய இயக்க முறையிலே நாம் மாறுதல்கள் காண்கிருேம். வையபிள் யூனிட்ஸ் என்று சொல்லி மல்டி பர்ப்பஸ் சொஸைட்டிகளிலே கியாரண்டீட் லயபிலிட்டி கொண்டு வரப்போகிருேம். இப்படிப்பட்ட வரையறைகள் முன்ஞல் இல்லை. அதிலேயும் அப்படிப்பட்ட தவறுகள் இருக்கும். அதிகமாக 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிஞல் அந்த பங்குத் தொகை அளவுக்கு சங்கத்திலே நஷ்டத்திற்கும் ஜவாப்தாரியாக வேண்டி நேரும். ஒன்று ஐக்கிய இயக்கத்தின் அடிப்படையிலே சங்கங்கள் இயங்கவேண்டும் அல்லது இன்றைக்கு மாறிக்கொண்டு வருகின்ற சூழ்நிலையின் அடிப்படையில் பாங்கிங் முறையிலே மாற்றியமைக்கவேண்டும். அப்படியில்லாமல் இரண்டும் கெட்டான் நிலையிலே கொள்கையை வைத்துக் கொண்டு செய்தால் நல்ல கொள்கையும் போய்விடும், பாங்கிங் முறையும் சரியாக நடைபெருது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்

ஒரு கமிஷன் வைத்து ரிப்போர்ட்டு தயாரிக்கிற நேரத்திலே இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள், இங்கே உறுப்பினர் திரு கனகசபை அவர்கள் இருக்கிறார்கள், இன்னும் பல உறுப்பினர்கள் ஐக்கிய இயக்கத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள அவர்களையும் வைத்துக்கொண்டு நல்ல ரிபோர்ட்டாக தயாரித்து நினைத்து நினைத்து மாற்றாமல் ஒரே முறையில் நன்றாக மாற்றியமைக்கவேண்டும். ஒருவனே நீண்டகாலமாக இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். நான் நினைத்தேன் வரமுடியவில்லை என்று இருக்கக்கூடியவர்கள் தான் பொறாமைப்பட்டுச் சொல்வார்கள். மத்திய பாங்கின் தலைவராக இருப்பவரை வருஷா வருஷம் மாற்றிக்கொண்டே வந்தால் கடைசியில் அந்த சங்கத்தின் நிலையென்ன, பங்கு நிலைமை என்ன என்று இவைபற்றியெல்லாம் ஒன்றும் புரியாதவராகத்தான் அவர்இருப்பார். காரியதரிசி சொல்கிற இடங்களில் கையெழுத்துபோடக்கூடிய பொம்மையாக தான் அவர் இருப்பார். ஏதோ காரியதரிசி நடத்துவதாகத்தான் அது இருக்குமே தவிர மக்களுடைய பிரதிநிதி நடத்தக்கூடியதாக அது இருக்காது புதிது புதிதாக ஆட்கள் வரவேண்டும் வந்து சேரவேண்டும் என்பது நன்மை என்றாலும்கூட நீண்ட காலம் ஒருவர் இருக்கக் கூடாது என்பதற்கான திருத்தங்களைக் கொண்டுவரக்கூடாது 100 வருஷங்கள் இருந்தாலும் ஒருவன் சாகத்தான் போகிறான். மக்களுடைய நன்மதிப்பு எவ்வளவுக் கெவ்வளவு அவனுக்கு இருக்கிறதோ அதுவரை அவன்தான் இருக்கவேண்டும். இந்த ஐக்கிய இயக்கத்தின் முறையிலே சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டும்.

இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை அங்கத்தினர்கள் மாற்றிக்கொண்டே வரப்படுகிறார்கள். நம்முடைய ஜனங்களுடைய கொள்கை என்னவென்றால் ஒருவர் நல்லபடியாக இருந்தால் அவரை என் மாற்றவேண்டும் திரும்பியும் அவர்களே இருந்து வரட்டும் என்று சொல்வார்கள். பாங்கிலே எலெக்ஷன் வரும்பொழுது நல்லவராக ஒருவர் இருந்தால் அவரைத்தான் வரச்சொல்வார்கள், வேறு நாமினேஷன் யாரும் போடுவது இல்லை. நல்லபடியாக நடந்தால் யாருக்கும் அந்த இடத்தை அளிப்பார்கள், தப்பாக நடக்கிற நேரத்திலேதான் மாற்றியமைக்கிறார்கள்.

ஆடிட் நல்ல முறையில் நடந்தால் எந்த சங்கத்திலேயும் தப்பு நடக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆடிட் செய்வதில் பிரத்தியேகமானவர்கள் ஆடிட் செய்வதால்தான் நன்றாக இருக்கும் பாங்கிங் முறையைப் படித்தவர்கள் ஆடிட் செய்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள், அது ஓரளவுக்கு உண்மை. ஐக்கிய இயக்கத்தின் கொள்கையை ஒப்புக்கொண்டு அந்த ஐக்கிய மனப்பான்மை உள்ளவர்களாக இருந்தால் அந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் ஆடிட்டர்களாக இருந்தால் நல்லது, அப்படிப்பட்டவர்களை நியமிப்பதுதான் நல்லது. ஐக்கிய இயக்கத்தில் இருப்பவர்கள் அதிகம் இருப்பதற்காக வரவில்லை சேவை செய்வதற்காகத்தான் வருகிறார்கள். சேவை செய்வதற்காக வரும் யாருக்கும் ஐக்கிய இயக்கம் இடம் கொடுக்கும் என்பதிலே சந்தேகப்படவேண்டாம். ஆகவே திருத்தங்களையெல்லாம் நல்ல முறையிலே ஆராய்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள் இவர்கள் எல்லாம் நல்ல முறையிலே முடிவும்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் கடந்த காலத்தை விட நல்லமுறையில் தற்போது வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வோம். ஆனால் இன்னும் இது மேலான முறையிலே, வெகுதூரம் முன்னேற வேண்டுமென்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். கூட்டுறவின் மூலமாக விவசாயிகளுக்கான தேவைகள், மற்றும் கடன் உதவிகள் அனைத்தையும் செய்யவேண்டுமென்று அரசு முடிவு செய்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதுவரையிலும் கூட்டுறவு இயக்கத்திலே குறிப்பாக கிராமப்புற சங்கங்களில் பங்கு கொண்டவர்கள்





எல்லாம் அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கிறார்கள் என்ற உணர்வில் தான் வந்து சேர்ந்திருக்கிறார்களே தவிர, கூட்டுறவு இயக்கத்தின் அவசியத்தை நமக்கு நாமே உதவி செய்துகொள்ள வேண்டுமென்ற அந்த எண்ணத்தைக் கொண்டு வந்து சேரவில்லை. நாளாவட்டத்தில் அந்த எண்ணத்தை உணர்ந்து, கூட்டுறவு இயக்கம் தங்களுடைய இயக்கம் என்ற எண்ணம் பரவி வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இப்படி வளர்ந்து வரக்கூடிய நிலையிலே, கிராமங்களிலே எல்லாப் பொறுப்பையும், கடன் வழங்கும் பொறுப்பையும் கொடுக்கிறபோது அங்கு அரசியல் காரணமாகவோ, சொந்த விருப்பு வெறுப்பு காரணமாகவோ, எந்த விதமான போட்டா போட்டிகளோ, சேர விரும்புகிறவர்களைத் தவிர்க்கும் முறையோ இருக்கக்கூடாது. பல கருத்தை உடையவர்கள் இருக்கலாம். ஒருவருக்கொருவர் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் இருக்க வேண்டும், வாய்ப்பு இருக்கவேண்டும். இம்மாதிரி நிலைமையைக் கூட்டுறவு இயக்கத்தில் கொண்டுவரவில்லையென்றால், கிராமங்களில் இருக்கும் ஒரு சிலர் போட்டா போட்டியினால் பாதிக்கப்படக்கூடும். அந்த நிலைமையைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்போது கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கிணறு வெட்டக் கடன் வசதி, பம்ப் செட் வைக்கக் கடன் வசதி போன்ற பல கடன் வசதிகளும் நில அடமான பாங்குகள் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அனுபவத்தில் பார்க்கிறபோது, நில அடமான பாங்கிலிருந்து கடன் வாங்க விரும்புகிறவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாத காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. தற்போது ஒரு மாத காலத்தில் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். மகிழ்ச்சிக்குரிய செய்தி. எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் காலத்தோடு கொடுக்க வழி செய்யவேண்டும். கிராமச் சங்கங்களை எடுத்துக்கொண்டால் விவசாயிகளிடத்தில் இருந்து கடன் மனுக்களை வாங்கி பரிசீலனை செய்து மத்திய வங்கிக்கு அனுப்ப வேண்டும். பிறகு அங்கு இருந்து சாங்ஷன் ஆகி பணம் வாங்குவதற்கு நீண்ட காலதாமதமாகிறது. கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் இருந்ததை விட இன்றைக்கு குறுகிய காலத்தில் கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும் கூட, நடவு நடபணம் வேண்டுமென்று கோரினால் நிச்சயமாக அந்தப் பணம் அந்தக் காலத்திற்குள் கிடைப்பதில்லை. ஆகவே, இருக்கின்ற முறையை இன்னும் மாற்றியமைக்கவேண்டும்.

தற்போது வயபிள் யூனிட்டாக பெய்டு செக்ரடரியைப் போட்டு ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். அது வரவேற்கக்கூடியதுதான். வயபிள் யூனிட்டாக பாங்கிங் சிஸ்டத்தில் ஆரம்பித்தால் கிராம கூட்டுறவு பாங்கு அல்லது அக்ரிகல்சரல் பாங்கு என்று பெயர் வைக்கவேண்டும். பாங்கிங் முறையில் ஆரம்பிக்க விவசாயிகள் விவசாயம் செய்யும் ஒவ்வொரு பகுதியையும் கணக்கில் கொண்டு ஃபார்ம் பிளான் தயார் செய்கிறார்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் எவ்வளவு நிலம் இருக்கிறது, எவ்வளவு விவசாயத்திற்குத் தேவைப்படும், ரீ-பேயிங் கெபாசிட்டி என்ன என்பதையெல்லாம் கணக்கில் கொண்டு கடன் வரம்பு சாங்ஷன் செய்யவேண்டும். தொடர் அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டால் 12 ஆண்டுகளுக்குப் பாண்ட் எழுதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை. என்றைக்கு வேண்டுமானாலும் பணம் தேவை என்று செக் எழுதிக் கொடுத்தால் பணம் கொடுக்கவேண்டும். என்றைக்கு அவனுக்குப் பணம் கிடைத்தாலும் உடனே திருப்பிக் கட்டவேண்டும். ஆனால் இந்தச் சங்கங்களிலே ஓவர் ட்யூ விழுவதற்குக் காரணம் பணம் இருக்கும்போது கட்டிய பிறகு மறுபடியும் பணம் தேவையென்று கோருகின்றபோது காலதாமதமாகிறது என்பதுதான். ஆகவே, எந்தச் சந்தர்ப்பத்தில் பணம் தேவையோ அந்தச் சந்தர்ப்பத்தில் பணம் கொடுக்க வழி வகை செய்யவேண்டும்.

கிராமப்புறங்களில் பாங்குகளில் பணம் போடும் பழக்கம் குறைவு. பெரும் பணம் வைத்திருப்பவர்கள் பாங்குகளில் போட்டாலும் குறைந்த தொகை வைத்திருப்பவர்கள் பாங்குகளில் பணத்தைப் போடும் பழக்கம் கிடையாது. தங்கள் கையில் இருக்கும் பணத்தைப் பாங்குகளில் போட வேண்டுமென்ற எண்ணம் கிராம விவசாயிகளுக்கு ஏற்படுமானால் அங்கே விவசாயிகள் போடுகின்ற பணத்தைக் கொண்டே தேவைப்படுகின்ற விவசாயிகளுக்கு உதவிகள் செய்ய வாய்ப்பு ஏற்படும். அந்த முறையில் கூட்டுறவு பாங்குகள் செயல்படுமானால் அந்தக் கிராம விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். தற்போது நகையின் பேரில் கடன் கொடுப்பது கிடையாது. நகை ஈட்டின் பேரில் கடன் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும்.

கிராமங்களில் தீவிர விவசாயத் திட்டம் செயல்படும் பகுதிகளில் 15,000 ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தீவிர விவசாயத் திட்டம் அமலில்இல்லாத பகுதிகளில் கூட அந்த அளவுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். மார்க்கெட்டிங் சொசைடிகள் இப்போது நல்ல முறையில் இயங்குகின்றன. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மார்க்கெட்டிங் சொசைடி எங்கே இருக்கிறது என்பதே தெரியாது. தற்போது விவசாயிகளிடத்திலிருந்து நேரடியாகத் தானியங்களை வாங்குவது, வேறு இடங்களுக்கு அனுப்புவது போன்ற காரியங்களைத் துரிதமாகச் செய்து வருகிறது. மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கும் இடத்தில் தானியங்களை விற்க வரும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை இல்லையென்றால் அவர்கள் வீடு செல்லும்போது பண வசதி இல்லாத நிலைதான் இருக்கும். சரக்கை வைத்துக்கொண்டு கடன்கள் வழங்குவதற்கு வாய்ப்பு இருந்தால் மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையில் இயங்க வாய்ப்பாக இருக்கும். நகரப் புறங்களில் வீடு கட்டிக் கொடுப்பதைப்போல் கிராமப் புறங்களிலும் வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். தண்ணீர்ப் பற்றாக்குறையினால் கடைமடைப் பகுதிகளில் சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில் பெற்றிருக்கிற கடன்களையெல்லாம் இந்த வருஷமே திருப்பிச் செலுத்துவது என்பது இயலாத காரியம். ஆகவே, பாதிக்கப்பட்ட இடங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் கடன் வசூல் செய்வதை ஒரு வருஷத்திற்கு ஒத்திவைத்துச் சலுகை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் காண்ட்ராக்ட் சொசைடியை ரிஜிஸ்டர் பண்ணவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பட்டுக்கோட்டை பகுதியில் செங்கப்படுத்தான்காடு என்ற கிராமத்தில் பல மாதங்கள் ஆகியும் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. அரிசன நல இலாகா மூலம் கொடுக்கப்படுகிற கடன் உதவியானது அரிசனங்களாக இருந்தால்தான் கொடுக்கப்படும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படாது என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆகவே, பிற்பட்ட வகுப்பினர் முன் வந்தால் ஹரிஜன நல நிதியிலிருந்தோ அல்லது கூட்டுறவு சங்கங்களிலிருந்தாவது அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். இந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு அந்த சொசைட்டி ரெஜிஸ்டர் செய்யப்படாமல் இருக்கக்கூடாது. அப்படி முன் வருகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும்.

அடுத்து, மேற்பார்வை யூனியன். இந்த கூட்டுறவு சூப்பர்வைசரி யூனியன்ஸ் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. அவை என்ன வேலை செய்கின்றன என்பது எனக்குப் புரியவில்லை. அப்ளிகேஷன்ஸ் கொண்டு போய் கொடுத்து வருகிறார்கள். கையெழுத்து போட்டு அதை திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். அங்கு வேறு ஒன்றும் நடைபெறவில்லை. கிராமங்களில் உள்ள நிதிகளை எல்லாம் சேமிக்கவும், விவசாயிகளுக்கு காலத்தோடு கடன் கொடுக்கவும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும்





மத்திய பாங்கின் ஒரு கிளை இருக்கவேண்டும். அது சூப்பர்வைசிங் யூனியன் வேலையை கவனித்துக் கொள்ளலாம் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசக் கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி. இதுவரையில் பலரும் இந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வழங்கும் திட்டங்கள் பற்றியும், வேறு பலவற்றைப் பற்றியும் தெளிவாகவும், விளக்கமாகவும் பேசிவிட்டார்கள். நான் சுருக்கமாகச் சொன்னால், இந்த ஊழல்கள் அத்தனையையும் நிறுத்தவேண்டுமென்றால் எப்படி போலீஸுக்குத் தெரியாமல் சாராயம் காய்ச்சுபவர்கள் இருக்க மாட்டார்களோ அதே போல் இந்த அதிகாரிகள் மட்டும் நிச்சயமாக நல்ல முறையில் நடந்து கொள்வார்களேயானால் இந்த ஊழல்கள் வராது. ஊழல்களை அனுமதிப்பவர்களுக்கும் நல்ல தண்டனை கொடுக்க தக்க ஏற்பாடு செய்தால் இந்த ஊழல்கள் நிச்சயமாக நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

விழுந்த பிள்ளைக்கு அறிவாள்மணையே ஆதரவு என்பதுபோல் விவசாயிகள் 2,000 ரூபாய் கடன் வாங்கச் செல்லும்போது விதைக்கு இவ்வளவு, பூச்சி மருந்துக்கு இவ்வளவு, உரத்திற்கு இவ்வளவு, சிறு சேமிப்புக்கு இவ்வளவு என்று எல்லாவற்றிற்கும் உள்ளதை சேர்த்துக் கழித்து 900 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இப்படி ரூ. 900 வாங்கிக் கொண்டு திருப்பிக் கொடுக்கும்போது செலுத்தவேண்டியது ரூ. 2,000. இந்த முறை நிச்சயமாக மாறவேண்டும். ஆகவே கடன் வாங்க விவசாயிகள் செல்லும்போது இப்படி வேண்டாத விதைகள், வேண்டாத மருந்துகள், வேண்டாத உரங்கள் இவை கொடுக்கப்படாமல் அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவுப் பண்ணைகள் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் இந்தக் கூட்டுறவுப் பண்ணைகள் அநேகமாக நம் நாட்டில் எங்குமே ஒழுங்காக நடைபெறாத ஒன்று. சென்ற காலத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த திரு. மன்றாடியார் அவர்கள் கோவையில் ஒரு கூட்டுறவுப் பண்ணையைப் பற்றிப் பேசினார்கள். காளப்பநாய்க்கன் பாளையம் கூட்டுறவுப் பண்ணைதான் நம் மாநிலத்தில் இரண்டாவது உன்னதமான நிலையில் உள்ள பண்ணை என்று சொன்னார்கள். அதைப் பற்றி நான் சொல்லிவிட்டால் மற்றப் பண்ணைகள் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அப்பண்ணை இன்று சுடுகாடு போல் காட்சியளிக்கிறது. அங்குள்ள ரிக்கார்ட்களைக் கூட சுட்டாகி விட்டது. அதன் மீது சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதேபோல் கோவையில் உள்ள கூட்டுப் பண்ணைகளைப் பற்றி எடுத்துச் சொன்னால் சகிக்க முடியாது. அங்குள்ள விதைப் பண்ணைகள் பற்றிச் சொல்லவேண்டுமானால், சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. அரசாங்க விதைப் பண்ணைகளானாலும் சரி அல்லது கூட்டுறவு விதைப் பண்ணைகள் ஆனாலும் சரி ஊழல்கள் மலிந்து, நாட்டின் பொதுச் சொத்தை நாசம் செய்கிற முறையில்தான் அவை இருக்கின்றன. சூரத்கார் பண்ணையை எடுத்துக்கொண்டால் கோடிக்கணக்கில் செலவு செய்து, இலவசமான இயந்திரங்கள் வந்தும் கூட அது லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இத் துறையில் நம் முதல் அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிற குடுமியான்மலை விதைப் பண்ணைத் திட்டத்தையும் ஒரு கண்ணோடு பார்க்கவேண்டும். ஒரு விதைப் பண்ணையும் இதுவரை வெற்றியடைந்ததே கிடையாது, இனி வெற்றி அடைவதும் கஷ்டம்.

அடுத்தபடியாக, சர்க்கரை ஆலைகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அநேகமாக லாபத்தில் நடப்பது மிகக் குறைவு. தனியார் துறையில் நடப்பது அநேகமாக

லாபத்தில்தான் நடக்கின்றன. இதற்கு பல காரணங்கள் உண்டு. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் போட்டிருக்கிற பங்குத் தொகையை அங்குள்ள விவசாயிகளிட மிருந்து, பங்குதாரர்களிடமிருந்து பெற்று அதை அவர்களுக்கு விட்டு விட்டால் அந்த ஆலை நன்கு நடக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன். அவர்களும் அதை விரும்புகிறார்கள். அப்படிச் செய்தால் மக்களுக்கு குறைந்த விலையில் சர்க்கரையும் கிடைக்கும், குடியானவர்களுக்கு கரும்பிற்கு நல்ல விலையும் கிடைக்கும், ஆலையும் நன்றாக நடக்கும். இதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். கரும்புக்கு டன்னுக்கு ரூ. 125 கொடுக்கவேண்டும். அதைத் தாராளமாகக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் $1\frac{3}{4}$ ரூபாய்க்கு சர்க்கரை எல்லோருக்கும், எப்போதும், தாராளமாக, நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை நான் ஆதாரத்தோடு மெய்ப்பிக்கத் தயாராயிருக்கிறேன். இப்போது குறைந்த விலை கொடுப்பதால் போதிய அளவு கரும்பு கிடைக்காது, மாதத்திற்கு ஒன்றேகால் லட்சம் ரூபாய் செலவு செய்து வருடத்திற்கு ஒன்றிரண்டு மாதங்கள் நடத்தினால் நஷ்டம் வரத்தான் செய்யும். ஆகவே நான் சொல்வது, டன்னுக்கு 125 ரூபாய் கொடுத்தால் குடியானவர்கள் கரும்பை சந்தோஷத்தோடு கொடுப்பார்கள் , ஆண்டு முழுவதும் ஆலையும் நடக்கும், $1\frac{3}{4}$ ரூபாய்க்கு சர்க்கரை ஏராளமாக எப்போதும் கண்ட்ரோல் இல்லாமல் கொடுக்கவும் முடியும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு நெல் ஆலையில் ட்ரையர்ஸ், ராட்சஸ இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குவியல் முறையில் பலவிடங்களில் இருந்து ஒரு இடத்திற்கு நெல்லைக் கொண்டு போவதில் ஒரு இடத்தில் ஒரு தவறு நடந்துவிட்டதென்றால் அதை எல்லோரும் அனுபவிக்கவேண்டியிருக்கிறது. முன்பு நடந்ததைச் சொல்கிறேன். காய வைக்க அவ்வளவு பேர்களும் நெல்லை கூட்டுறவு ஆலைக்குக் கொண்டு சென்றார்கள். அதை காய வைக்க முடியாமல் அவ்வளவும் நாசமாகி, முளைத்துப் போய் இப்போதுதான் திருந்தும் நிலையில் இருக்கிறது. இதற்கு நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன். தஞ்சையில் ஒரு ஆலைக்கு மட்டும் இந்த காய வைக்கும் இயந்திரத்திற்காக 38 லட்சம் ரூபாய் செலவாகியிருப்பதாகச் சொல்கிறார்கள். சிறிய இயந்திரங்களை வைத்துக்கொண்டு குறைந்த செலவில் காய வைக்கும் முறையை நான் சொல்ல முடியும். நாஷனல் ஸீட் கார்ப்பரேஷன் என்ற அரசாங்க ஸ்தாபனத்தில் வீரிய விதைகள் காய வைக்க சின்னச்சின்ன யூனிட்கள் 20,000, 25,000 ரூபாய்க்கு தரப்படுகிறது என்று சொல்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் செலவில் நான் செய்து நிரூபித்துக் காட்டியிருக்கிறேன். இப்போதும் நான் டெமான்ஸ்ட்ரேட் செய்து காட்ட முடியும். நானே அப்படி ஒன்றைச் செய்து வைத்திருக்கிறேன். ஆங்காங்கு சிறிய சிறிய யூனிட்களாக வைத்திருந்தால் டிரான்ஸ்போர்ட் செலவு கூட மிச்சப்படுகிறது. ரெயில்வே நிலையங்களில் கிடங்குகள் கட்டுவதில் 36 இடங்களில் 1,260 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் கோடிக் கணக்கில் ரூபாயை கிடங்குகள் கட்ட செலவு செய்தால் இந்த ஏற்பாட்டை நம் நாட்டில் நிரந்தரமாக நடத்துவது என்பதுதான் முடிவா ? அப்படி ஒரு முடிவு இருந்தால் விளைவு குறைந்து, குறைந்து விளைந்துள்ள நெல்லும் நாசமாவதற்குள்ள வாய்ப்பு வளரும். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் முதலில் விளைகிற நெல் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு மில்கள் இருக்கின்றன. இவை கொஞ்சமும் ஆலோசிக்கப்படாமல் ஏற்படுத்தப்பட்டவை. ஏற்கெனவே உள்ள மில்களுக்கு பஞ்சு இல்லை, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, நூல் செலவு இல்லை என்ற காலத்தில் புதிதாக ஆலைகள் ஆரம்பிப்பது, அதுவும் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிப்பது என்றால் அது நஷ்டத்தில் ஓடும் நிலைதான் இருக்கும். ஒரு சில ஆலைகள் லாபகரமாக ஓடலாம். அவை ஆரம்ப காலத்தில் இருப்பதால் அதிகத் தேய்மானம் இருக்காது. சம்பளமும் மிக மிகக் குறைவு. மற்றவர்கள் கொடுக்கிற



சம்பளம் கொடுப்பதில்லை. இதனால்தான் லாபகரமாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் நிச்சயமாக அவற்றில் லாபம் இல்லை. லாபமில்லை என்பது மட்டுமல்ல, அந்தக் கூட்டுறவு ஆலைகளால் சாதாரண ஆலைகள் கூட நஷ்டம் அடைகின்றன. அவர்கள் பொறுப்பில்லாமல் பஞ்சுக்கு தோன்றிய விலையை கொடுப்பதால் நல்ல ஆலைகளில் எல்லாம் நியாயமான விலைக்கு வாங்கமுடியாமல் திணறுகிறார்கள். இதனால் அவைகளும் நஷ்டத்தில ஓடுகின்றன என்று தெரிவித்துக்கொண்டு கொடுத்த நேரத்தைக் கடக்காமல் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** வணக்கத்திற்குரிய மாற்றுத் தலைவ ரவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக் கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கு முகத்தான் இரண்டொரு வார்த்தைகள் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்பு கிறேன். மாலை 5-30

கூட்டுறவு நாட்டுயர்வு என்று 1904-ல் பெரியவர் திரு. ரெய்ஃப்பிஸன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் பிற்காலத்திலே தமிழகத்திலே பரவத் தொடங்கியது. ஆதியிலே, ஆரம்பத்திலே திரு. ஆதி நாராயண செட்டியார், திரு. இராமலிங்கம் செட்டியார், திரு. ராமதாஸ் பந்துலு போன்றவர்களால் திறம்பட செயலாக்கப்பட்டு வந்த அந்த இயக்கம் பிற்காலத்திலே வளர்ந்து வரும்பொழுது தன்னலமில்லாது ஆற்ற வேண்டிய இந்தக் காரியத்தில் சுயநலமுடையவர்களும், பேராசை பிடித்தவர்களும் வந்த காரணத்தால் அது சீர்கெட்டு ஊழல்கள் பல ஏற்பட்டன. அதற்குத் தணிக்கைகள் நடைபெறுகின்றன. அதில் பல குற்றங்கள் காட்டப்படுகின்றன. இண்டரிம் ஆடிட் நடந்து அதிலும் பல குறைபாடுகள காண்பிக்கப்படுகின்றன. ஆனால் இந்தக் குற்றங்குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால்தான் இன்று அதில் குற்றங்கள் மலிந்து, சீர்கெட்டு, பல மிஸ்ஸப்புரோபிரியேஷன்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

கூட்டுறவு இயக்கம் இருப்பதன் காரணமாகத்தான் தற்பொழுது நம்முடைய தமிழக கிராமங்களிலிருந்து சேம நிதி சேர்க்க முடிகிறது. சேம நிதியின் குறிக்கோளாக 35 கோடியிருந்தது. அதில் 32 கோடி 82 இலட்சம் சேர்ந்திருக்கிறது என்றால் அது கூட்டுறவியக்கத்தின் நன்மைகளில் ஒன்றாகும். அதேபோல் கிராம மக்களிடமிருந்து 18 கோடி 86 லட்சம் பங்குத் தொகை சேர்த்திருக்கிறார்கள். கூட்டுறவியக்கம் இல்லையென்றால் இவ்வளவும் நமக்குக் கிடைத்திருக்காது.

நம்முடைய அரசில் சென்ற ஆண்டு குறுகியகால கடனுக்கு 58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும், 27 கோடியே 92 இலட்சம்தான் டிசம்பர் 31-ஆம் தேதிவரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறுகிய காலக்கடன்கள் அதிகமாக வழங்கப்பட்டால்தான் கிராம மக்களுக்கு உதவியாகயிருக்கும்.

நீண்ட காலக்கடன் 1967–68-ன் குறிக்கோளாக 3 கோடியே 19 இலட்சம் இருந்தாலும் 2 கோடியே 19 இலட்சம்தான் கடன் வழங்கியிருக்கிறார்கள். அதன்படி 30 கோடியே 8 இலட்சம் குறுகியக் காலக் கடன்களும், 1 கோடியே 31 இலட்சம் நீண்ட காலக் கடன்களும் வழங்கப்படாமல் 31—12—1967 வரையில் நிலுவையிலிருக்கிறது. அவைகளை வழங்கி கிராம மக்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராம மக்களுக்கு உதவக்கூடிய ஒரே ஒரு பாங்க் இந்த கூட்டுறவு பாங்க்தான். அதுதான் கிராம மக்களுக்கு விடி வெள்ளி. நகரத்து மக்களுக்கு வேண்டுமானால் வீதிக்கு ஒரு பாங்க் இருக்கிறது. எத்தனையோ பாங்க்கள் இருக்கின்றன, நினைத்தால் போய் கடன் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் கிராமத்திலேயிருக்கிற மக்களுக்கு கூட்டுறவியக்கம்தான் அவ

களுக்கு வழங்கக்கூடியது. கூட்டுறவியக்கத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன என்றால் அந்த ஊழல்களுக்குக் காரணம் நம்முடைய மதிப்பிற்குரிய கூட்டுறவு ரிஜிஸ்டரார் அவர்கள்தான். கூட்டுறவுத்துறையிலிருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்தான் இவ்வளவு ஊழல்களுக்கும் காரணம் என்று மீண்டும் கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அவர்களிடத்திலே தணிக்கை அறிக்கைகள் இருக்கின்றன. அந்த தணிக்கை அறிக்கைகளில் குறைகள் காணப்படுகின்றன. ஆண்டுதோறும் மத்திய காலத் தணிக்கையும் நடைபெறுகிறது. அதிலும் குறைகள் கண்டுபிடிக்கப் படுகின்றன. கூட்டுறவுத்துறையிலே இருப்பவர்கள் கைதேர்ந்தவர்கள், இரண்டு சர்க்கார் பரீட்சைகள் பாஸ் செய்திருக்கிறார்கள். கூட்டுறவியக்கத்திலே இருக்கின்ற அதிகாரிகளோ, மற்றவர்களோ மக்களுக்கு நண்பனாக, தோழனாக, வழிகாட்டியாக இருக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய நிலையிலிருக்க வேண்டும். அதைச் செய்யாததால்தான் ஊழல்கள் மலிந்திருக்கின்றன. இனி போகப்போகச் சரியாகிவிடும். நாம்கூட அவர்களை மட்டும் சொல்லக்கூடாது. இருபதாண்டு காலமாக ஆண்டுவந்த அரசியல் கட்சியினர் அவர்களை அந்த நிலைக்கு ஆட்டிப்படைத்திருக்கிறார்கள். அவர்களைப் பம்பரம் போல ஆட வைத்திருக்கிறார்கள். ஆனால் நமது சர்க்கார் இதைப்போன்ற துறைகளிலே அதிகமாகக் கவனம் செலுத்தி ஈடுபடும் காரணத்தால் இனி நேர்மையான கூட்டுறவியக்கமாக வளரும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்று கூறி முடித்துக்கொள்ளுகின்றேன். கூட்டுறவு மத்திய நில அடைமான பாங்கில் ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிறார்கள். அவர்களுக்கு சிபாரிசு செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தில் $1\frac{1}{2}$ பர்சன்ட் கமிஷனாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. 100-க்கு $1\frac{1}{2}$ என்றால், 1000-க்கு 15, பத்தாயிரத்திற்கு 20 வருஷங்களுக்கு 3,000 ரூபாயை கூட்டுறவு அடைமான பாங்க் சிபாரிசு செய்கின்ற காரணத்திற்காக கமிஷனாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். முதலாவதாக அடுத்த ஆண்டிலிருந்தாவது அந்த சதவிகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு மத்திய நில அடைமான பாங்கு நில அபிவிருத்திக்கு மட்டும்தான் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. நிலம் வைத்திருப்பவன் முன் கடன்களைத் தீர்ப்பதற்கு யாது காரணத்தாலோ முடியாமல் போய் விடுகிறது. அந்த முன் கடன்களைத் தீர்ப்பதற்கு கடன் வழங்கினாலல்லவோ அவன் மனம் நிம்மதியடைவான், விவசாயத்தில் உற்சாகத்தோடு ஈடுபடுவான். அவ்வாறு அவனுடைய முன் கடன்களைத் தீர்ப்பதற்கு கடன் வழங்காவிட்டால், இந்த நில அபிவிருத்திக்காக வாங்கும் கடனைக் கொண்டு உழவுக்கோ, எருவிற்கோ; அல்லது மற்ற விவசாயச்செலவுகளுக்கோ பயன்படுத்தாமல் முன் கடன்களுக்காகக் கொடுத்துவிடுவான். அதனால் விவசாயத்தைப் பெருக்க முடியாமல் போய்விடும். அவ்வாறு செய்வதால் வாங்கிய கடனை வாங்கிய வேலைக்கு உபயோகப்படுத்தாமல் தப்பு வழியிலே செலவழித்துவிட்டான் என்ற கெட்ட பெயரை அவன் கிராமத்திலே எடுக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, முன் கடன்களைத் தீர்ப்பதற்காக நில அடைமான பாங்கிலோ, கிராமக் கூட்டுறவு பாங்கிலோ தொகை கொடுக்கத்தான் வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு நிம்மதியேற்படும்.

கிராமக் கூட்டுறவு சங்கங்களிலே குறுகிய காலக் கடன்களுக்கு முதலில் 3 வருஷங்கள் என்றிருந்து, பிறகு 5 வருஷங்கள் என்றிருந்து, கடைசியாக 20 வருஷங்கள் என்று கொடுத்திருக்கிறார்கள். சில காலங்களில் இயற்கையால் வானம் பொய்த்து மழை பெய்யத் தவறிவிட்ட நேரத்தில், பூச்சியடித்துப் பயிர்கள் கெட்டுவிட்ட நேரத்தில், காற்றடித்து வெள்ளாமையில்லாமல் பயிர்கள் சாவியாகிவிடுகின்ற நேரத்தில் அவனுக்கு தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்



கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நம்முடைய அவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

DR. H. V. HANDE : Mr. Chairman, Sir, I wish to briefly point out a few things which passed my mind. So far as this Demand is concerned, while I congratulate the Government for appointing a High Power Committee consisting of distinguished men in the public life to go into the loopholes in the co-operative movement and the allegations, complaints, etc. made against the Co-operative Department, I have to give expression to a small misgiving. With regard to the High Power Committee,I want to point out that a few members of that Committee are also actively connected with the co-operative movement and that is my main apprehension. Unless we make it look that the members of this Committee have absolutely no vested interest or any interest in the co-operative movement except objective interest, there is a risk of misgivings being created in the minds of the public. In this connection, I would like to point out what has recently happened. A Judge of the High Court had to try a particular case but he refused to take it up on the ground that he was an income-tax assessee and the person involved in the case had connection with the Income-Tax Department. In the same manner we must look at the composition of this Committee. There are certain presidents of co-operative institutions who were indicted by the officials of the Co-operative Department. There have been some complaints verbal or written—against certain presidents of co-operative institutions but unfortunately we find that some of these presidents also find a place in this Committee. So, I request this Government to reconsider this matter and dispel the fears that are in the minds of a large number of persons with regard to this Committee.

Sir, I will touch a few points briefly. There is a hereditary system of board of directors. My distinguished friend Mr. Ramaswami Naidu said that this should not affect the decision of the Government. But I have a small misgiving in this regard. It is true that persons of Mr.Ramaswami Naidu's type may be very good like MahatmaGandhi. But there are quite a number of persons who exploit the co-operative movement for their personal ends. It has to be looked at objectively and not subjectively. That is my submission to this House. The only right royal solution is the bringing in of a Bill prohibiting directorship to persons who are holding office for more than two terms or whatever number of terms that the Ministry or the High Power Committee may decide. The Chief Minister promised to bring forward a Bill one year ago. I am quite sure that this legislation will be brought forward as early as possible without waiting for the recommendations of the Committee.

There is the Goerge Town Co-operative Bank, Limited, No. 8512 in Krishnappa Naicken Agraharam street,George Town, just adjacent to my constituency. The annual general body meeting of the Bank was held on 22nd October 1967, which was attended by nearly

[Dr. H. V. Hande] [1968 மார்ச் 21

three hundred members. The Deputy Registrar of Co-operative Societies (Credit) and the Secretary of the Madras District Co-operative Central Bank also were present at the meeting on invitation to witness the proceedings. When the President read as usual the Auditor's Certificate and wanted to adopt the accounts, a point of order was raised that the summary of the audit memorandum should also be read at the meeting for the benefit of the members' information as provided for in Chapter VII Rule 54 (8) on page 99 of the Madras Co-operative Societies Rules. The value of this memorandum to the members from their point of view is that it shall contain schedules with full particulars as provided in rule 54 (5) of the said rules. Since the memorandum, in accordance with the laws, is to contain such defects and irregularities as have beenbrought out by the Auditor, this was not read at the meeting. Rule 54 (8) says : " The summary of the audit memorandum shall also be read out at the general body meeting of the society ". In spite of the repeated request the answer was that the Registrar had no time and as the audit was done hurriedly there was no memorandum submitted giving the other details covered under Rule 54 (5) read with sub-sections (I),(II), (III), (IV) and (V). Both the Deputy Registrar of Co-operative Societies and the Secretary of the Madras District Co-operative Bank were silent witnesses to the President's negative answers. It may be mentioned here that the general body of members has this only opportunity of knowing the defects and irregularities of the Bank and it is incumbent on the part of the President to have read the audit summary.

I will make a few suggestions briefly with a view to improving co-operative institutions and making them work successfully.

*Legislative.*—Suitable amendments to the Co-operative Societies Act to restrict what may be called the " monopoly of non-official power " are necessary. In other words, no person should be elected to a co-operative institution as an office-bearer for a third consecutive term. By introducing this restriction, opportunity is provided for fresh young blood and experienced persons to enter the field and give the benefit of their service for the betterment of the co-operative institution. After the excellent speech of my distinguished colleague Mr. Ramaswami Naidu, I feel that provision may be made for avoiding a sudden change from old blood to young blood wherever it is absolutely necessary.

*Administrative.*—Dedicated, sincere, deserving young men with interest and initiative should be appointed to hold key positions.

The Auditing section, which now functions under the department, should as far as practicable be detached from it and if possible audit be entrusted to a separate body which would have representatives from non-official and official quarters of the movement, Reserve Bank of India, Accountant-General, Legislature and Parliament.

Corrupt officers should be dealt with very severely.



1968 மார்ச் 21] [Dr. H. V. Hande]

Auditing work should be undertaken immediately after the close of the co-operative year. Audit takes place after one or two years and there is delay. This delay makes a number of members wonder what exactly is happening under their very nose. There should be test audits and regular surprise visits.

*Auditing work.*—This suggestion is made because some co-operative institutions are so inefficiently conducted that annual reports and accounts for the two years 1964–65 and 1965–66 are considered in the fag end of the year 1967. This inordinate delay is most unwholesome, especially as the accounts of the institutions run to several crores of rupees. The attention of the Government is invited to this serious matter.

The rules must be amended in such a manner that the general body meeting must be conducted and presided over by an officer not below the rank of a Deputy Secretary from the Secretariat level other than the Co-operative Department or an officer from the Reserve Bank of India inasmuch as they have an overall control over the co-operative institutions. This suggestion is made because at the general body meeting, the most important document, the audit summary, is not being read for the benefit of the members. Only if the audit summary is read, the members will have a proper idea of what is happening. By insisting upon a Deputy Secretary from the Secretariat level or an official from the Reserve Bank of India presiding over the annual general body meeting, such flagrant violations cannot take place.

Promotions should take place according to seniority. But efficiency and record of service should also be taken into consideration in making promotions.

These very sacred institutions founded by very great men are unfortunately in disrepute today. The entire State is looking to this Ministry to see that the Augean Stable is cleaned and that the department is made as quickly as possible completely bereft of the defects which are being pointed out since a number of years.

My request once again is that I want this Government to consider the reconstitution of the Committee. If there are on it members against whom there are complaints, how can anyone go and make the complaint? The Chairman will be sitting and by his side the members will be sitting. I am not casting aspersions against anybody. Another suggestion is that the Government need not even reconstitute the Committee. If any one wants to level charges against any member of the Committee, let the Chairman call him separately and grant an interview. Let the Government take action after the charges are established and not on mere hearsay. I want the Government to consider all the aspects that I have briefly placed before this House. Thank you Sir.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த காலம் தாழ்ந்த வேளையிலே நீண்ட அறிக்கையாக நான் இங்கு கூறவேண்டுமென்று நினைக்காமல் ஓரிரு முக்கியமான கருத்

யங்கள் பற்றி என்னுடைய சிற்றறிவுக்கு எட்டியதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதல் முதலிலே இந்த ஆய்வுரையைப் படித்துப் பார்த்தேன். நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் ரிசர்வ் பாங்கியிலிருந்து பாங்க் ரேட்டைக் குறைத்ததன் காரணமாக, நமக்கு வாங்கக்கூடிய ரேட்டையும் குறைத்ததாக இங்கு கூறினார்கள். அது மட்டற்ற மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது. முன்பு 8·4 என்று இருந்தது 7·8 என்று இப்பொழுது குறைக்கப் பெற்றிருக்கிறது. இது ஏழை மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என்றே கருதுகிறேன். ஆனால், இன்னொரு ஆலோசனையையும் அன்னாருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். இந்தக் காலம் தாழ்ந்த கடன்களுக்கெல்லாம் "பீனல் இன்டரஸ்ட்" போடுவது வழக்கம். இந்த பீனல் இன்டரஸ்டை இப்பொழுது இருக்கிற விகிதாசாரப்படி எவ்வளவு அதிகமாக குறைக்க வேண்டுமோ, அவ்வளவு அதிகமாகக் குறைக்க முடியுமா என்பதைப்பற்றி சற்று சிந்திக்கவேண்டும். ஏதோ வட்டிக் கடையில் வட்டிக்கு வட்டி என்ற முறையிலே வசூலிப்பதைப் போல இல்லாமல் இதையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இந்த விஷயத்தைப் பற்றி ஆராய்கின்றபொழுது, இதை "டெர்ம்ஸ் ஆப் ரெஃபரென்ஸாக" விட்டாலும் சிறப்பாக இருக்கும் என்றே கருதுகிறேன். கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையிலே முன்பிருந்த அசராங்கம் ஏதோ முதலாளிகளுக்கு உடந்தையாக இருந்தது என்ற பல குற்றச்சாட்டுக்களையும் உறுப்பினர்கள் கூறினார்கள். அது உண்மையா, இல்லையா, அதற்கு ஆதாரம் உண்டா என்ற சர்ச்சைக்குரிய விஷயத்திலே நான் செல்லவேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனால், முன்பிருந்த கூட்டுறவு அமைப்பும் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த கூட்டுறவு சட்டத்தின் அடிப்படையிலே முதலிலே நடந்தது. அதற்கு பின்னால் இந்த சட்டத்தை திருத்தி மைக்க வேண்டுமென்று ஆய்வு செய்து காங்கிரஸ் அதிகாரத்திலிருந்தபொழுது சட்டத்தை மாற்றினார்கள். அன்று எதிர்க் கட்சியாக இருந்தவர்கள் இன்று ஆளும் கட்சியாக இருக்கிறார்கள். அவர்கள் பல அரிய கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். அன்றிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக அந்த சட்டம் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டது. அந்த சட்டத்தின் பேரில் இன்று பலரும் அதிகாரத்திலே இருக்கிறோம்.

அவர்கள் பேரில் குற்றம் இருக்கிறது, ஏதோ பரம்பரை சொத்தாக வைத்திருக்கிறார்கள் என்று எள்ளி நகையாடுவது அவ்வளவு பொருந்தாது. அது சிறந்த பண்பு அல்ல என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் கூட்டுறவு இயக்கத்தில் பல ஆண்டு காலமாக தொடர்பு உடையவன் என்ற முறையில் கூறுகிறேன். எங்களைப் போன்று கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மீது ஏதாவது குற்றச்சாட்டுகள் இருந்தால், எந்த விசாரணைக்கும், நீதி விசாரணைக்கு வேண்டுமானாலும் உட்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். மக்கள் விசாரணை என்று சொன்னார்கள், அதற்கும் தயாராக இருக்கிறோம் என்பதை பணிவாக இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நல்ல இயக்கத்தை, அதில் இருக்கிற ஒரு சிலர் செய்கின்ற தப்புகளின் காரணமாக அந்த இயக்கமே கோளாறு பிடித்தது என்று சொல்வது சரியல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேல் நாடுகளில் பார்க்கும்பொழுது, நார்வே போன்ற தேசங்களில் இந்த இயக்கமானது எவ்வளவு சிறப்பாகவும், நேர்மையாகவும் செயல்படுகிறது என்பதை நான் கூறவேண்டிய தேவையில்லை. அந்த விவரங்களுக்கெல்லாம் நான் இப்பொழுது போகவேண்டாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு இது ஒரு முக்கியமான இயக்கமாக இருக்கிறது. கடன் உதவி அத்தனையும் விவசாயிகளுக்கு கூட்டுறவு அடிப்படையில் கொடுக்கிறார்களா என்று பார்த்தால், 50 பர்சன்ட் கொடுக்கப்பட்டு வருவதாக இந்த ஆய்வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. இன்னும் எஞ்சி இருக்கிற 50 பர்சன்ட் பெறுவதில் விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால், இன்று ருக்கக்கூடிய பாங்கிங் அடிப்படையில்,



விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதில் கமர்ஷியல் பாங்குகள் கூட ஈடுபடப் போவதாக நாம் எல்லோரும் அறிகிறோம். இம்மாதிரியான அமைப்புகள் ஏற்படுகிறபொழுது, நம்முடைய தேசத்தில், ஊரில் இருக்கிற பெரும் வட்டிக் கடைக்காரர்களின் தொல்லையில் சிக்காமல், கூட்டுறவு இயக்கத்தில் ஜனங்களுக்கு அதிகமான நம்பிக்கை ஏற்படுவதற்கு நல்ல சான்றுகள் இருக்கின்றன என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, செண்ட்ரல் லாண்டு மார்ட்கேஜ் பாங்கு மூலமாக, லாங் டேர்ம் கிரெடிட் ரூ. 3·79 கோடி 1966–67-ல் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இதில் ரூ. 2 கோடி அரசு கொடுப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அம்மாதிரி செண்ட்ரல் லாண்டு மார்ட்கேஜ் பாங்கு மூலமாக இருக்கிற அதன் பிரைமரீஸ் மூலமாக கடன் கொடுப்பதற்கு மிகவும் வாய்ப்பு இருக்கிறது. இந்த பிரைமரீஸ் இப்பொழுது ரூ. 3,000-க்கு மத்திய பாங்கு சாங்ஷன் இல்லாமல் கடன் கொடுப்பதற்கு முடியும் என்ற ஒன்று இருக்கிறது. அந்த அளவை கூட்ட முடியுமா, ரூ. 5,000 என்றோ, ரூ. 7,000 என்றோ கூட்ட முடியுமா என்பதை இந்த இலாகாவினர் பரிசீலனை செய்யவேண்டும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், அதிலே இருக்கிற காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். ஏதோ என்கம்ஃபரென்ஸ் சர்டிபிகேட் வரவில்லை என்றோ, சட்ட நிபுணர்களின் ஆய்வுரை வரவில்லை என்றோ காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஃபுல் பினான்ஸ் ஸ்கீம் 274 பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் நடத்தப்படுகிறது. ஃபுல் பினான்ஸ் ஸ்கீமில் குற்றங் குறைகள் இல்லாமல் இருக்கிறதா என்றால் அப்படியில்லை. ஒருவர் கடன் பெறவேண்டுமென்றால், இன்று இருக்கக்கூடிய சட்டப்படி, அதாவது 'The surety's liability is co-extensive with that of the principal debtor' என்று காண்டிராக்ட் ஆக்டில் இருக்கிறது. ஜாமீன் நின்றவர்களிடமிருந்தும் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். சிலருக்கு ஜாமின் கொடுப்பதற்குக் கூட ஆள் இல்லாத முறையிலே இருக்கவேண்டிய நிலைமையும் இருக்கிறது. உண்மையாகவே, சரியான முறையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைக்கவேண்டுமென்றால், இந்தக்கூட்டுறவு இயக்கத்திலுள்ள இந்த விதியை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, 11,000 சொசைட்டிகளாக இருப்பதை, 4,800 சொசைடிகளாக குறைக்கவேண்டும், ரூ. 2 லட்சம் அதற்கு வரவு செலவு இருந்தால் தான் அது வையபிள் யூனிட்டாக இருக்க முடியும் என்று ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கிறது. ரூ. 2 லட்சம் என்று இருப்பதை, ஒரு லட்சம் என்று குறைக்க வழிவகை செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆராய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனக்கு முன்பு பேசிய திரு. ராமசாமி நாயுடு அவர்கள் இதுபற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். அதைப்பற்றி நான் மறுமுறையும் சர்ச்சைக்கு வரவில்லை. இருக்கக்கூடிய சூழ்நிலையில், ஊர் இருக்கக் கூடிய தன்மையில், சிறு சிறு சொஸைடியாக செயலாற்றினால்தான், இது இயங்குவதற்கு சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இதையுட் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன் என்றெல்லா கடன் பெறுவதற்கு பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதெல்லாம் காலாகாலங்களில் ஏழை விவசாயிகளுக்கு, அவசியமான சந்தர்ப்பங்

களில் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படவேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையில் 89·8 குடும்பங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று ஆய்வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. குடும்பம் என்ற முறையில்தான் இது அமைந்திருக்கிறது. இன்னும் இந்த இயக்கத்தில் அதிகமான ஆட்களை சேர்ப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படவேண்டும். தனிப்பட்டவர்கள் குடும்ப சொத்தாக இந்த சொசைட்டிகள் இயங்காமல் இருப்பதற்கு, பங்குதாரர்களாகச் சேர்ப்பதற்கு எந்தவிதமான தங்கு தடைகளும் இல்லை, யார் வேண்டுமானாலும் பங்குதாரராக சேருவதற்கு உரிமை இருக்கிறது என்று சட்டம் இருப்பதில் இருக்கிற கோளாறுகளையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியதுதான், இல்லை என்று சொல்லவில்லை. இன்று இருக்கிற முறையில் பல கஷ்டங்களெல்லாம் இந்தச் சட்டத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு சொஸைடிக்கும் ஒரு முறையிலே "பை-லாஸ்" இருக்கிறது. அரசாங்கமே, அந்த இலாகாவே டைப்டு பை-லாஸ் கொடுத்தாலும், அதை நல்ல முறையிலே செயலாற்ற முடியாத தன்மையிலே பல சொசைட்டிகள் இருக்கின்றன. இந்த இயக்கத்தில் கூறப்படுகிற இன்னொரு குறை என்னவென்றால், 'பிஞமி லோன்ஸ்' வாங்கிவிடுகிறார்கள். அதிலும் குறிப்பாக, அவர்கள் கணக்கு வைக்கிறபொழுது வவுசர்கள் வைக்கவேண்டுமென்ற வழக்கம் இருக்கிறது. அந்த வவுசர்கள் நிஜமான வவுசர்களா என்பதுபற்றி ஆராய்வதற்கு, ஆடிட் செய்பவர்களுக்கு தன்மை இல்லாத முறை இருக்கிறது. அந்த வவுசர்கள் உண்மையான வவுசர்களா என்று "ப்ரோப்" செய்வதற்கு, அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த ஆடிட்டை அந்த இலாகாவிலிருந்து எடுத்துவிட்டு, அக்கவுண்டெண்ட் ஜெனரல் பொறுப்பில் இயங்கும் ஒரு பிரிவின் கீழே ஆடிட்டை நடத்தினால் சாலச் சிறந்ததாக இருக்கும். அப்படிச் செய்தால் ஊழல் போன்றவைகளையெல்லாம் தவிர்ப்பதற்கு வழிவகைகள் காண்பதற்கு சிறப்பாக இருக்கும்.

இன்னொரு விஷயம், ஆர்பிட்ரேஷன் ப்ரொஸீடிங்ஸ் இப்பொழுது நடத்துகிறார்கள். இது காலாகாலத்தில் சரியாக நடக்கவேண்டும். அதற்கு வேண்டிய அதிகாரங்கள் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிராருக்கு வழங்கப்படவேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிறுவனங்களிலே டிஃபால்டராக இருப்பவர்களையே டைரக்டர்களாக எடுத்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஆம்பூர் ஷுகர் மில்லில் இருக்கிற ஏதோ ஒரு டைரக்டர் வேறு ஒரு நிறுவனத்தில் டிஃபால்டராக இருக்கிறவர். அவரைப்பற்றி புகார் இருந்தபோதிலும், அவர் இன்னும் டைரக்டராக இருந்துகொண்டிருக்கிறார். அது உண்மையானால் அதைப் பற்றி வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வளர்ந்துவருகிற விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் கன்ஸ்யூமர் கோவாபரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்துவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் சாதாரண அத்தியாவசியமான பண்டங்களை விநியோகிப்பது சிறப்பாக இருக்கும். இதில் சில இடங்களில் ஊழல் மலிந்தவர்கள் ஒருவேளை இருக்கலாம். இதில் நல்ல நபர்களை அமர்த்தினால், இதன் மூலம் பண்டங்களை விநியோகம் செய்வதற்கு மிக சிறப்பாக இருக்கும். 1967–68-ல் இதற்காக ரூ. 24·50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே செலவானது ரூ. 6·98 லட்சம் என்று இருக்கிறது. அதிலே சிறப்பு அங்காடி கூட உட்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். 1½ லட்சம் ஜனத்தொகை உள்ள எல்லா இடங்களிலும் கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொசைட்டிகள் அமைக்கப்படுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக, இன்னொரு விஷயம், மார்க்கெடிங் சொசைடிகளைப் பற்றி சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். மார்க்கெடிங் சொஸைடிகள் பல ஜில்லாக்களில் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, தஞ்சாவூர் ஜில்லாவில் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவில் ஒரு மார்கெடிங் சொஸைடி இருக்கிறது. நெல் கொள்முதல் செய்வதற்கு அவர்கள் போதிய பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கடன் உதவியை கூட்டுறவு மூலம் காலாகாலத்தில் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும், குறிப்பாக, அரிசி விநியோகம் செய்யும் மார்க்கெடிங் சொஸைடி மிகவும் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறது. பெரிய ஆலைகள் தஞ்சாவூரில் நிறுவப்பட்டிருப்பதுபோல், நெல் அதிகமாக விளையும் மாவட்டங்களில், பகுதிகளில், இந்த மாதிரி மில்களை, கூட்டுறவு முறையில் நிறுவி, மக்களுக்கு தரமான அரிசியை விநியோகம் செய்வதற்கு மார்க்கெடிங் சொஸைடிகள் ஏற்படுத்தினால், சிறப்பான முறையில் பணியாற்றுவார்கள் என்று கருதுகிறேன். இம்மாதிரி பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இந்த காரியங்களையெல்லாம் நல்லமுறையில் சிந்தித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், 9 சத விகிதம் தான் டிவிடெண்டு கொடுக்கவேண்டும், சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, கூட்டுறவு நூற்பு ஆலையாக இருந்தாலும் சரி, அதற்கு மேலாக கொடுக்கக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. கூட்டுறவு ஆலைகள் பலவும் சரியான முறையில் லாபம் வரக்கூடிய அளவில் இயங்கவில்லை. உடனே அந்த ஸ்தாபனங்கள் கெட்டுவிட்டன, அதைத் தனியார் கையில் கொடுத்துவிடவேண்டும் என்று பறைசாற்றுவதற்கு நான் வரவில்லை. பொதுவாக ஜனங்களுக்கு நன்மை பயக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, 9 சத விகிதம் என்று இருப்பதை, அதிகமாக கூட்டிக் கொடுக்கலாமா, அல்லது டிபென்சர்களுக்கு அதிகமாக வட்டி கொடுப்பதற்கு வழிவகைசெய்யலாமா என்று பரிசீலனை செய்து பார்த்தால், நசிந்திருக்கிற பல ஸ்தாபனங்களும் நல்ல முறையில் இயங்குவதற்கு, பொருள் தேடுவதற்கு சிறப்பான காரியமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 6-00

பொதுவாக, வரவிருக்கின்ற கமிட்டியின் ரிப்போர்ட்டை இந்த மன்றத்திலே வைத்து, இங்கே உள்ள நண்பர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ரிப்போர்ட் உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட்டு, சட்டத்தையும் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; தப்பு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதை, காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்பதை மறுபடியும் தெரிவித்துக்கொண்டு, அப்படிப்பட்டவர்களுக்குத் தண்டனை கொடுக்கத் தக்க முயற்சிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவு நேரம் கொடுத்ததற்காக மகிழ்ச்சி உடையவனாக இருக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தை ஆதரித்தும், இந்தத் துறை சிறப்பாக நடைபெற வேண்டும் என்றும், நல்ல பல கருத்துக்களைக் கொடுத்த கனம் அங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, சமுதாயத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படுவதற்காக, கூட்டுறவுத் துறை பயன்பட வேண்டும் என்ற கருத்தை எல்லோரும் எடுத்துச் சொல்லும்போது, ஒரே ஒரு குரல் மட்டும், சுதந்திராக் கட்சி அங்கத்தினரிடமிருந்து, இந்தத் துறை உபயோகமில்லை, இதை ஆரம்பிக்காதீர்கள், அதை ஆரம்பிக்காதீர்கள் என்று சொல்லும்போது, நல்ல வேளையாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் துணைக்கு வந்து இந்தத் துறையில் நல்ல சீர்திருத்தங்களை காண வேண்டும் என்ற கருத்துக்களைச் சொன்னார்கள். நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று ஆலோசனைகளைக் கொடுப்பதும், அவற்றைப் பின்பற்றச் சொல்வதும் ஒன்று. இந்தத் துறையே வேண

டாம் என்று சொல்வது வேறொன்று. நான் தெரிந்துகொண்ட மட்டில், எல்லாம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றும், புதிய புதிய முயற்சிகளை சர்க்கார் எடுக்க வேண்டும் என்றும், எடுததிருக்கும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன் என்றும், கருத்துக்களைக் குறிப்பிட்டது, அரசாங்கதில் இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு, ஆர்வத்தோடு பணியாற்ற உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டுச் சொல்வது சில குறைகளைபபற்றி. அப்படிப்பட்ட குறைகளை இந்தத் துறையினர் ஆழ்ந்து பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்கிற உறுதியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகளைப் பற்றியும், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றியும் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றியும் பேசப்பட்டது. அவற்றையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று கூற விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் நடப்பவற்றை திரு. கெய்வார் அவர்களை அதற்காக எல்லா ஆலைகளுக்கும் சென்று பரிசீலனை செய்து, நல்ல முறையில் நடக்க ஏற்பாடு செய்வதற்காக அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் துறை விவசாயிகளுக்கு மிகுந்த பயனைத் தரவேண்டும் என்றும், பல வகைகளிலும் உயர்ந்து கூட்டுறவு இயக்கம் வளர வேண்டும் என்றும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வேலூர் பழம் பதனிடும் நிலையத்தைத் தொடங்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அரிசி ஆலைகள் வேண்டாம் என்ற கருத்துச் சொல்லப்பட்டது. நம் நாட்டின் நிலையில், அரிசி ஆலைகள் தேவை என்பதையும், விரைவாக அரிசியைக் கொடுக்க அவை தேவை என்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக நமக்கு 112 லட்ச ரூபாய் கடன் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. எட்டிலிருந்து 13 ஆலைகள் வரை நாம் தொடங்கலாம் என்றும் இருக்கிறது. ட்ரான்ஸ்போர்ட் செலவு வரும் என்று சொன்னார்கள். அப்படி வராத அளவுக்கு எந்த எந்தப் பகுதியில் அதிகமாக நெல் உற்பத்தியாகி, ப்ரொக்யூர்மெண்ட் செய்து, அரிசியாக்கி மற்ற நகரங்களுக்கு அனுப்ப எங்கே எங்கே வாய்ப்பு இருக்கிறதோ, அந்த இடங்களில் அமைக்கலாம் என்றுதான் நினைக்கப்படுகிறது. உணவு கார்ப்பரேஷன், தஞ்சை மாவட்டத்தில் அவர்களாக நான்கு ஆலைகளை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய இருக்கிறது. அரிசிப் பிரச்சினையைத் தீர்க்க இவை நல்ல முறையில் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். திருவாரூரில் நடக்கும் ஆலையைப் பார்த்தால், அங்கத்தினர்களுக்குத் தெரியும் அதன் உபயோகத்தின் அளவு. கொஞ்சங்கூட அரிசி பழுதுபடாத அளவிற்கு, வரக்கூடிய அரிசியை நல்ல முறையில் சேகரித்துக் கொடுக்கும் அளவில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட அரிசி பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்றால், அதிகப் பலன் கிடைக்கும். நானே சென்று நேரில் பார்த்தேன்.

கூட்டுறவுத் துறை ஏற்றுமதியிலும், ஈடுபட்டது. 250 டன் வெங்காயம் அனுப்பியிருக்கிறது. அதிலும் பெருத்த லாபம் சம்பாதித்து இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வெங்காயத்தைப் பதனிடும் தொழிற்சாலையை அமைக்கவும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

கிடங்குகள் கட்டுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். இவர்கள் வேண்டாம் என்கிறார்கள். நூறு கிடங்குகள் கட்டத் திட்டமிட்டு, 5 லட்சம் கடனும் 5 லட்சம் மானியமும் பெற்று, 1961-லிருந்து ரூ. 8,62,100 செலவாகி, இப்பொழுது அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பயன்படும் என்று நம்புகிறேன்.

உரம் வினியோகம் பொறுத்த வரையில், கூட்டுறவுத் துறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பல இடங்களில் தவறுகள் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். தவறுகள் கண்டிக்கப்பட வேண்டும் என்பது நியாயம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். 1968-69-ல் கலப்பு உரம் 14,400 டன் கூட்டுறவுத் துறை மூலம் வினியோகம் செய்ய ஏற்பாடு





செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, கடன் அளவை அதிகப்படுத்தினால், மக்களுக்கு நன்மை பயக்கும் என்று, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தனி நபர் கடனை ரூ. 15,000-க்கு உயர்த்தியிருக்கிறது. அது தவிர, ஜாமீனில் கடன் கொடுக்கப்படுகிறது. ஜாமீனை வேண்டாம் என்றார்கள். அது சரியாகாது. ஆகவே, தனி நபர் கடனோடு, சொத்து ஜாமீனுக்கும் இடம் கொடுக்கிறோம். சர்க்கரை ஆலைகளிலே அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. தனி நபர் கடன் ரூ. 20,000 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இவற்றைச் சர்க்கரை ஆலை மூலமாகவே கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. நல்ல கோரிக்கை. நியாயமான கோரிக்கை. ஆனாலும் ரிசர்வ் வங்கி எதிர்ப்புகள் இருக்கின்றன. நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தி, ஆலைகளின் மூலம் கொடுத்தால், ஆலைக்குக் கரும்பு பெற வசதியாக இருக்கும் என்ற வகையில் வற்புறுத்தியிருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை எப்படி அமைய வேண்டும், புதிய மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று பல அங்கத்தினர்களும் தெரிவித்தார்கள். நல்ல கருத்துக்கள், உடனடியாகச் செயல்படுத்தாமல், ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி, நிபுணர்கள் குழு அமைத்து, இந்தக் கருத்துக்களை ஆராய்ந்து அவர்கள் கருத்துக்கள் தெரிவித்ததற்குப் பின்னால் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

கமிட்டியைப் பற்றிச் சொல்லப்பட்டது. என்ன சொன்னார்கள் என்று புரியவில்லை. கமிட்டியில் இருப்பவர்கள் பலதரப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் அனுபவம் உள்ளவர்கள், மக்கள் பிரதிநிதிகள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள், இந்த இரண்டு பேர்களைப் பற்றி எந்தவிதமான புகாரும் இல்லை. புகார் ஏதாவது இருந்து தெரிவித்தால், பரிசீலித்து, தவறு இருக்குமானால், தவறு செய்திருக்கிறவர்களை நீக்குவோம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். வேறு ஏதோ எண்ணத்தை வைத்துச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். புகாருக்காக வைத்த கமிட்டியல்ல. அவர்களுக்கே தெரிந்திருக்கும். இயக்கத்தில் மாறுதல்கள் பற்றி சிந்திக்கக்கூடிய கமிட்டி. தனிப்பட்ட சங்கம், பாங்கு பற்றி புகார் விசாரிக்கக்கூடியதாக இருந்தால், அங்கம் வகிக்கக் கூடாது என்பது நியாயம், என்பதற்கு உறுதி கூறுகிறேன். அப்படிப்பட்ட தவறுகள் அரசாங்கத்தின்கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் கண்டிப்பாக கவனிக்கப்படும்.

இந்த நிர்வாகத்தில் நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டது. நல்ல கருத்து, ஏற்றுக் கொள்கிறேன். காலதாமதத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நிர்வாக ஊழல்களைக் களைய, தடுக்க முழு முயற்சிகள் எடுக்கிறோம். அதிலே மக்கள் பிரதிநிதிகளும், அலுவலர்களும் இருக்கிறார்கள். இரண்டு பற்றியும் கனம் அங்கத்தினர் சொன்னார். இரண்டு பேர்களிலே, அரசாங்க அதிகாரிகள் சில இடங்களில் அதிகமாகத் தலையிடுகிறார்கள். ஆகவே, குறைகள் ஏராளமாக உண்டாகின்றன என்றார்கள். உண்மையாக இருக்கலாம். மக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலும் காரணம் என்றார்கள். அதுவும் உண்மையாக இருக்கலாம். என்னைப் பொறுத்த வரையில், இரண்டு பேரும் இணைந்து செயல்படும் இடங்களில்தான் அதிகம் ஊழல்கள் நடைபெறுகின்றன. விதி முறைகளை, நடைமுறைகளை மாற்றினால் குறைகளைக் குறைக்க வாய்ப்பு இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அதைப்பற்றியும் கமிட்டி பரிசீலிக்க வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

நீதி மன்றங்களுக்குச் சென்றால், குறிப்பாக் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றால் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்பட்டது. அதுவும் உண்மையான கருத்து. ஜனநாயகத்தில் அந்த உரிமையைத் தவிர்க்க முடியாது. மறுக்க முடியாது. நீதிமன்றத்திலே வழக்காடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை நாம் தடுப்பதற்கில்லை. ஆனாலும் அரசாங்கத்தின் தரப்பிலே, உயர்நீதி மன்றத்தில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அவற்றையெல்லாம் நாம் செய்துதான் வருகிறோம்.

தொடர்ந்து செய்வோம் என்ற உறுதியை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சங்கத்தின் மேலோ, ஓர் அமைப்பின் மேலோ என் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கேட்டால்கூட, அதன்மேலும் நீதி மன்றத்திலே ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். அதன் காரணமாக பல சங்கடங்கள் நிர்வாகத்திலே ஏற்படத்தான் செய்கின்றன. இதைப் பற்றி நாம் உயர்நீதி மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறோம். காலங் கடத்துவதைத் தடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதையும் இங்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, ஒரு நல்ல கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. கணக்கை ஆய்வு செய்கிற முறை—அதாவது ஆடிட் செய்கிற முறையைப் பற்றிச் சொன்னார்கள். அது நியாயமான கருத்து. இப்போதுள்ள ஆடிட் முறையை எப்படி மாற்றி யமைக்க வேண்டுமென்பதுதான் பிரச்சினை. ஆடிட் விங் தன்னிச்சையாக இந்த இலாகாவிலிருந்து பிரிந்து நின்று செயல்பட வேண்டுமா? அல்லது அந்த இலாகாவிலேயே ஆடிட் விங்கை அதிகப்படுத்தி, அதிக அதிகாரிகளை, உதவி செய்கின்ற நிலையில் சேர்த்து இதிலேயுள்ள காலதாமதத்தைத் தவிர்க்கலாமா என்பது ஆகும். இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் இதைப் பற்றி யோசித்து முதன் முதலாக இந்த ஆடிட் விங்கை விரிவுபடுத்தலாம் என்ற ஒரு செயற்குறிப்பு அரசாங்கத்தின் முன்னால் இருக்கிறது. அதைப் பற்றியும் நாம் இன்றைக்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். சீக்கிரம் அதைப் பற்றிய முடிவுகள் தெரிவிக்கப்படும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயக்கத்திலே உள்ள அதிகாரிகள் எல்லாம் இந்தப் புதிய அரசாங்கம் பதவி ஏற்றவுடன் கொஞ்சம் விறுவிறுப்பாக, கொஞ்சம் பரபரப்பாக செயல்படுகிறார்கள் என்று பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அது உண்மையான கருத்துத்தான். எல்லாத் தரப்பிலிருந்தும் அதைப் பற்றிப் பாராட்டிச் சொல்லப்பட்டது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நம்முடைய அதிகாரிகள் எல்லாம் இருபது வருஷ பழக்கத்திலே இருந்த காரணத்தால் புதிய முறையிலே செயல்படுவதற்குக் கொஞ்சம் கஷ்டம் இருக்கும். கொஞ்சம் தயக்கம் ஏற்படத்தான் செய்யும். இருந்தும் இந்த ஓராண்டு காலத்திற்குள் எவ்வளவோ விறுவிறுப்பாகப் பணியாற்றினார்கள் என்பதை அங்கத்தினர்கள் குறிப்பிட்டுப் பாராட்டியது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. நானும் இந்த அதிகாரிகளையெல்லாம் பாராட்டி, தொடர்ந்து விறுவிறுப்பாக, யாருக்கும் அஞ்சாமல், இந்தக் கட்சி, அந்தக் கட்சி, இந்தக் கொள்கை அந்தக் கொள்கை என்று பாராமல், தவறு செய்பவர்களைக் கண்டிப்பாகத் தண்டித்து நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே ஒரு முக்கியமான கருத்து, சில பேருடைய ஆதிக்கம் இருக்கலாமா என்பதாகும். இது நீண்ட நாட்களாகவே விவாதிக்கப்பட்டு வரும் கருத்து. இது பற்றியும் சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. எங்களுடைய கட்சியைப் பொறுத்த மட்டில் தனி ஆதிக்கம் இருக்கக் கூடாது என்ற முடிவைத்தான் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதற்கு மத்திய ஆட்சி கொஞ்சம் தடையாக இருந்து வந்தது. ஆனால், நல்ல வேளையாக இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய ஆட்சி அமைச்சரவையிடம் எடுத்துச் சொல்லி, இந்தக் கருத்துக்கு ஆதரவைப் பெற்றுவிட்டார்கள். மத்திய அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இது பற்றி நல்ல முறையில் கடிதம் எழுதியிருக்கிறார். 'தனிப்பட்டவருடைய ஆதிக்கத்தை—வெஸ்டட் இன்ட்ரஸ்ட்டை—போக்கித்தான் தீரவேண்டும். அதற்குத் தமிழக அரசு முழு முயற்சியாக செயல்பட்டு, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்' என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், இதிலே திரு. ராமசாமி நாயுடு அவர்கள் சொன்ன ஒரு கருத்தும் கவனிக்கப்பட வேண்டிய கருத்து. அனுபவஸ்தர்கள் மக்களுக்குத் தொண்டு செய்வதற்கு வாய்ப்பில்லாமல் செய்துவிடக் கூடாது என்று சொன்னார்கள்.



ஆனால் அந்த அனுபவம் வேறு வழிகளில் செல்வதற்கும், தொடர்ந்து வாய்ப்பு அளித்துவிடக் கூடாது. அதுதான் நம்முடைய எண்ணம். தவறான காரியங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்பட்டால், அட்ஜஸ்ட்மென்ட் எட்டளவில் செய்துவிடுவார்கள். அது நடக்கிறதோ, இல்லையோ, கணக்குகளைச் சரிக்கட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. அந்த வாய்ப்பை எப்படித் தடுக்கலாம் என்பதுதான் இப்போதுள்ள கருத்தாகும். இதைப் பற்றி இப்போது அமைக்கப்பட்டுள்ள குழு நல்ல முறையிலே ஆராய்ந்து வழிவகை செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. 'இன்டரிம் ரிப்போர்ட்' என்ற முறையில் இந்தத் தேர்தல் சட்டத்தை மட்டும் அரசாங்கம் கொண்டுவருவதற்கு உதவியாக சீக்கிரத்தில் இது பற்றி குழு தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம், நம்முடைய நாட்டிலே உள்ள ஏழை மக்களும் கூட்டுறவுத் துறையில் பங்கு ஏற்கும்படிச் செய்ய வேண்டும். பணக்காரர்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் நாம் அதிகம் விவாதிக்க வேண்டாம். அது எல்லோருக்கும் தெரியும். ஆயினும் எல்லோருக்கும் சம வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நல்ல கருத்தைத்தான் அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. அதைச் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை இந்தக் குழு எடுக்கும் என்றும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கடன் பாக்கி—'ஓவர் டியூ' இருந்தால் கடன் கொடுக்கக் கூடாது என்ற ஒரு நிலைமை இருக்கிறது. இவர்களுக்கும் தனிப்பட்ட நபர் ஜாமீன் கொடுத்தால் கொடுக்கலாம் என்ற ஒரு நியாயமான கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி அதை ஒத்துக்கொள்ள மறுக்கிறது. அதற்கு நம்முடைய அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின், இன்னொரு முறையில், ஒரு சங்கத்திலே 50 சத வீதம் கடன் பாக்கியிருந்தால்கூட, அந்தச் சங்கத்திற்குக் கடன் கொடுக்கலாம் என்ற முறையை வற்புறுத்திப் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இப்படி கடன் திருப்பிக் கொடுக்காதவர்களுக்குக்கூட கடன் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் நாம் ரிசர்வ் வங்கியிடம் வற்புறுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடன் தொகை இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நியாயமான கோரிக்கை. இன்றைக்கு விவசாயிகளுக்கு நான்காவது திட்ட காலத்திற்குள் ரூ. 160 கோடிக்குத் தேவை ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதில் பாதிதான் கொடுக்க முடியும் என்ற புள்ளி விவரமும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கூட்டுறவுத் துறை இன்னும் நல்ல முறையில் செயல்பட்டால் இன்னும் அதிக வசதி பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்தச் சங்கத்திலே கடன் கொடுப்பதிலே தவறுகள், கடனைத் திருப்பித் தருவதிலே தவறுகள், இதற்கு இடையிலே செய்யக் கூடிய தவறுகள் எல்லாவற்றையும் பற்றி அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதை எப்படி மாற்றுவது என்பதிலே அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. அந்த வகையில் பற்று வரவு செலவு (பாஸ் புக் சிஸ்டம்) முறையைப் புகுத்தலாம் என்று இன்றைக்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் தேவைப்படக்கூடிய கடனை முதலிலே நிர்மாணித்து, அந்த விவசாயிக்குக் கொடுக்கக்கூடிய உயர்ந்த அளவு கடன் தொகையை அந்த ஆண்டு ஆரம்பத்திற்கு முன்னரே அந்த பாஸ் புத்தகத்திலே குறித்துவிட்டு, அவர் கையிலே அந்தப் பாஸ் புக்கைக் கொடுத்துவிட்டால் அவர், அந்த ஆண்டு முழுவதும் எந்த நேரத்தில் எவ்வளவு கடன் தேவைப்படுகிறதோ, அதை அவருக்கு என்று குறிக்கப்பட்டுள்ள எல்லைக்குட்பட்டு, உரம் வாங்குவதற்கு, விதை வாங்குவதற்கு, மாடு வாங்குவதற்கு என்று அவருக்குத் தேவைப்படுகிறபோது பல தவணைகளில் யாருடைய தயவையும் எதிர்பார்க்காது, குறிப்பாக சங்கத்தினுடைய தலைவரையோ, சூப்பர்வைசரையோ எதிர்பார்க்காமல், அவர்

கடனைப் பெறக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்திவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இந்த முறையை முதன் முதலாக, பரீட்சார்த்தமாக விவசாய வங்கிகளிலும், 'ஏ' பிரிவில் உள்ள வயபிள் யூனிட்லேயும் புகுத்தலாம் என்று இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வயபிள் யூனிட்களாக ஆக்குவதற்குப் பதில் வொர்க்கபிள் யூனிட்களாக ஆக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. ராமசாமி நாயுடு அவர்களும், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். கிராம சண்டை—சச்சரவு, ஜாதி சச்சரவுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தச் சூழ்நிலையில் வயபிள் யூனிட் சரியாக வேலை செய்ய முடியாது என்றார்கள். அது ஒரு வகையில் உண்மையாக இருக்கலாம். ஆயினும், வயபிள் யூனிட்களாக ஆக்கப்பட்டால், அதன்மூலம் மக்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்குமென்று பார்க்க வேண்டும். நிச்சயமாகத் தீமையை விட நன்மை அதிகமாக இருக்கிறது. இதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். குறிப்பாக், ஏராளமான கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சங்கங்கள் தனித்தனியாக இருந்து நடக்க முடியாத நிலையில் டிபங்ட் சொஸைட்டிகளாக மாறிவிடாமல் தடுப்பதற்கும் வயபிள் யூனிட் ஆக்குவது உபயோகமாக இருக்கும். அதோடு மக்கள் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல், அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் மூலமாகவும் அதிகாரிகளைப் போட்டு, கண்காணித்துக்கொள்வதற்கு இந்த வயபிள் யூனிட்லே வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நாம் காண்கிறோம். ஆகவேதான், வயபிள் யூனிட் ஆக்குவதை கொஞ்சம் கொஞ்சமாக, பரீட்சார்த்தமாக, செய்துவருகிறோம். அதில் நிச்சயம் வெற்றி ஏற்பட்டுத்தான் வருகிறது. என்பதைப் பார்க்கிறோம். இதற்கு எதிர்ப்பும் இருக்கிறது என்பது உண்மை. எதிர்ப்பு இருப்பதெல்லாம் 'நாங்கள் இதற்குத் தலைவராக இருக்க வேண்டும். எங்களுக்குத் தனி உரிமை இருக்க வேண்டும்' என்ற அடிப்படையில்தான் இருக்கிறது. இது மக்களுடைய உள்ளங்களைப் பொறுத்த காரியம். ஆகவேதான் இதிலே மிக விரைவாகவும் செல்லாமல், மிக மெதுவாகவும் செல்லாமல் யாருக்கும் இதிலே பாதகம் ஏற்படாமல் செய்து வருகிறோம். குறிப்பாக யாருக்காவது, எங்காவது பாதகம் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டினால் நிச்சயம் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் வழிவகுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே தயக்கம் காட்டலாமா, தைரியம் வேண்டாமா என்று இடதுசாரிக் கட்சி கனம் உறுப்பினர் சொன்னார். நாங்கள் என்ன என்ன காரியத்தை தைரியத்தோடு செய்துவருகிறோம், அதன் விளைவுகள் என்ன என்ன என்பதை அவர்கள் பார்த்து வருகிறார்கள். இன்னும் நாங்கள் எடுக்கிற காரியங்களை விரைவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். நல்ல விருப்பம். நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்தவுடனே என்னிடம் ஒருவர் வந்தார். இப்படி இப்படி எல்லாம் நீங்கள் செய்ய வேண்டும் என்று சொன்னார். இந்த அரசாங்கம் தவறு நடப்பதை ஒருபோதும் அனுமதிக்காது என்று சொன்னேன். மறுநாளே தற்கொலை செய்துகொண்டுவிட்டார் என்று பத்திரிகையில் பார்த்தேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் விரைவாகச் செயல்பட வேண்டும், தவறு செய்பவர்களை விடக் கூடாது என்ற அளவில் வற்புறுத்தி வருகிறோம். இதிலுள்ள காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகத்தான் போலீஸ் இலாகாவில் இதற்கென்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி அந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால், சட்டத்திலுள்ள சிக்கல்கள், ஜனநாயகத்திலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் நிச்சயம் காலதாமதத்திற்கு வழி செய்யும். அதற்கிடையில்தான் வேகமாகப் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பயிர்க் கடன் திட்டம் இருக்கிறது. ஆண்டுக் கடன் திட்டம் வேண்டும் என்றார்கள். முதலில் ஆண்டுக் கடன் திட்டம்தான் இருந்தது. அது சரியான முறையில் செயல்படவில்லை என்றுதான் இப்போது பயிர்க்



கடன் திட்டம் வந்தது. எந்தப் பயிர் வைப்பதாக இருந்தாலும், அந்தப் பயிர் அடிப்படையில் கடன் கொடுத்து, அந்தப் பயிர் விளைந்து அறுவடை செய்கிற போது அந்தக் கடனைத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்கிற உளப்பாங்குடன் இந்தப் பயிர்க் கடன் திட்டத்தை அமுல் நடத்துகிறோம். இது நல்ல பலனைக் கொடுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சங்கங்களின் நடைமுறைகளைப்பற்றி விசாரணை செய்வதற்காகப் போடப்பட்டுள்ள இந்தக் கமிட்டியில் கடன் பெறுகிறவர்களும் அங்கம் பெற்றிருக்கவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களும், இந்தத் துறைக்கு அப்பாற்பட்ட நிபுணர்களும் இதில் இருக்கிறார்கள். இவர்கள் எல்லா விவசாயிகளையும் சந்தித்து குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்கும் வகையில் நல்ல முறையில் விசாரணை செய்யும். அப்போது இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வங்கிகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற கருத்தை கனம் அங்கத்தினர் சொன்னார்கள். அது நியாயமான கருத்தாகும். இந்த அரசு பதவி ஏற்றவுடன் அதை முதற்காரியமாகப் பரிசீலித்து வங்கியில் ஈடுபட்டிருக்கக்கூடிய பணியாளர்களுக்குச் சட்டத்தின் வரம்புக்கு உட்பட்டு எப்படிப் பாதுகாப்பு அளிப்பது என்பது பரிசீலிக்கப்படுகிறது. அதற்கான செயற்குறிப்பும் இருக்கிறது. அதைப் பற்றி ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக நான் தெரிவித்துக்கொள்வது எல்லாம் நிச்சயமாக இந்தத் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய அத்தனை பேர்களும் உளப்பூர்வமாக கூட்டுறவு இயக்கத் தத்துவத்தை ஏற்று சுயநலம் இல்லாத முறையில் இந்த நாட்டுக்கு, சமுதாயத்திற்குத் தொண்டாற்ற முன்வருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி வந்தாலே இப்போதுள்ள பல குறைகளைப் போக்கிவிடலாம் என்று கருதுகிறேன். இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதில் இந்தக் கட்சி அந்தக் கட்சி என்கிற கட்சி நிலைமையையே நாம் எல்லோரும் சேர்ந்து போக்கியாக வேண்டும். எல்லோரும் சேர்ந்து கட்சித் தன்மையை மாற்ற முயற்சி எடுத்துக்கொண்டால் நிச்சயமாக சமுதாயத்தில் இந்தத் துறை நல்ல வளர்ச்சியை அடைய முடியும். உண்மையில் இந்தத் துறை நல்ல மாற்றத்தைக் கண்டு வளர்ச்சியை அடையவேண்டும் என்கிற முறையில் நல்ல பல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இன்னமும் நன்கு வளரவேண்டிய துறையாதலால் இந்த மானியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) :** வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் இல்லாததால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

இப்போது அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 19 — கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,10,11,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் இந்தப் பேரவை கூடும்.

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

பிற் பகல் 6–27

### 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*111. Notification issued with G.O. Ms. No. 2254, Revenue, dated the 29th December 1967, exempting from show tax to all the cinema shows conducted by the Madras State Electricity Board in its project areas. [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act,* 1939 (*Madras Act X of* 1939)]

### B. Reports, notifications and other papers.

†66. Review of the Progress made in the Co-operative Development Schemes 1967-68 (English and Tamil).

†67. Review of the working of the Stationery and Printing Department during 1967–68 (English and Tamil).

68. Speech by Hon. Dr. Satyavanimuthu, Minister for Harijan Welfare and Information, while moving Demand 34—Stationery and Printing for the year 1968–69 (English and Tamil).

* Laid on the Table of the House on 20th March 1968.
† Despatched to Members on 20th March 1968.



## இணைப்பு I.

[36-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

### எழுது பொருள்—அச்சுத்துறை.

### 1967–68-ல் இத்துறையின் பணியினைக் குறித்த ஆய்வுரை.

1. **அமைப்பு.**—எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் அரசாங்க எழுது பொருள் அலுவலகத்திற்கும் அரசாங்க அச்சகத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார். நிர்வாகப் பிரிவில் அச்சகத் துணை இயக்குநரும், தொழில் நுட்பப் பிரிவில் பணி மேலாளரும் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகின்றனர். துறையின் நிறுவன விளக்கப்படம் ஒன்று இதன் முடிவில் இணைக்கப்பட்டுள்ளது.

**அச்சகப் பிரிவு.**

2. **அச்சகப் பிரிவு.**—சென்னையிலுள்ள அரசாங்க அச்சகம் 1831-ம் ஆண்டில் ஒரு சில பழைய அச்சுக்களுடனும், 10 தொழிலாளர்களுடனும் தொடங்கப்பட்டது. தற்போது கீழ் நாடுகளிலேயே மிகப் பெரிய அச்சக நிறுவனமாக இது வளர்ந்துள்ளது. இதில் இப்போது ஏறக்குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

1967-68-ம் ஆண்டில் அரசாங்க அச்சகம் பல துறைகளிலும் விரிந்த அளவில் பணியாற்றியது. அரசாங்கமே வெளியிடும் பாடப் புத்தகங்களை அச்சிடுவதை முன்னிட்டுப் பணியளவு அதிகரித்தது மட்டுமன்றி, 1967 பிப்ரவரியில் நடந்த பொதுத் தேர்தல் பற்றிய மாபெரும் பணியையும் அரசாங்க அச்சகம் மேற்கொண்டு முடித்தது. அரசாங்க அச்சகத்திலே தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தொடர்ந்து நல்ல உறவு முறை நீடித்துவருகிறது.

எழுதுபொருள்-அச்சுத்துறையின் அச்சகப் பிரிவிலே கடந்த மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பலன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**முதலீடு செய்துள்ள மூலதனம்.**

புள்ளி விவர அறிக்கை I.

| ஆண்டு. (1) | தொடக்க இருப்பு. (2) | ஆண்டில் சேர்க்கை. (3) | இறுதி இருப்பு. (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1964-65 .. .. | 36,17,623 | 5,80,975 | 39,41,086 |
| 1965-66 .. .. | 39,41,086 | 3,25,651 | 39,71,620 |
| 1966-67 .. .. | 39,71,620 | 11,07,743 | 48,78,581 |

புள்ளி விவர அறிக்கை II.

| ஆண்டு. | மொத்த வருவாய். (5) | மொத்தச் செலவு. (6) | தேய்மான சேம நிதிக்கு வழங்கிய தொகை. (7) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1964-65 .. .. | 46,95,844 | 1,09,30,280 | 2,46,509 |
| 1965-66 .. .. | 50,45,801 | 1,48,57,074 | 2,52,374 |
| 1966-67 .. .. | 55,29,639 | 1,45,15,326 | 2,50,528 |

குறிப்பு.—வணிகமுறையில் இயங்காத அரசாங்கத் துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், இத் துறையில் வருவாயைவிட செலவு மிகுந்துள்ளது.

மொத்தச் செலவு விவரம் வருமாறு :—

| ஆண்டு. | நடைமுறைச் செலவு (ஆதாயம் தரும் துறைகள்— அச்சுக் கோப்புப் பிரிவு, இயந்திரப் பிரிவு, பைண்டிங் பிரிவு.) | ஏனைய இனங்கள் (ஆதாயம் தராதவையும் பணி இயல்பானவையும், இயந்திரப் பிரிவு, அச்சு வார்ப்புப் பிரிவு, படிவங்கள் அனுப்புதல், பொதுவாக அனுப்பும் வேலையைக் கவனிக்கும் பிரிவு முதலியவை.) | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1964-65 .. .. .. | 81,99,152 | 27,31,128 | 1,09,30,280 |
| 1965-66 .. .. .. | 1,07,71,949 | 40,85,125 | 1,48,57,074 |
| 1966-67 .. .. .. | 1,08,86,494 | 36,28,832 | 1,45,15,326 |

கடந்த மூன்றுண்டுகளில் இம்மாநில அரசாங்கத் துறைகளுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் செய்து கொடுத்த பணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1964-65 | 1965-66 | 1966-67 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. இலவசமாக அச்சிட்டுப் பெறுவதற்கு உரிமையுள்ள அதிகாரிகள். | 74,90,012·96 | 99,11,466·84 | 10,238,725·73 |
| 2. தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற்ற உரிமையுள்ள (மத்திய அரசு அதிகாரிகள்— | | | |
| (i) ஆயத்துறை .. | .. | .. | .. |
| (ii) நிறுவன வரி நீங்கலான வருமான வரி .. .. | .. | .. | .. |
| (iii) தணிக்கை .. | 1,62,397·28 | 1,11,913·32 | 80,220·54 |
| (iv) எழுது பொருள் அச்சகப்பணி. | 443·99 | 637·25 | 6,926·94 |
| (v) அறிவியல் பணிகள் | 37·32 | 24,984·57 | .. |
| 3. இந்திய அஞ்சல்-தந்தித் துறை. | .. | .. | .. |
| 4. தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற உரிமையுள்ள அதிகாரிகள்— | | | |
| (i) தனியார் நிறுவனங்கள். | 1,38,244·42 | 2,41,352·62 | 2,10,280·19 |
| (ii) வாணிக நிறுவனங்களும், துறைகளும். | 4,07,878·85 | 4,82,317·51 | 3,50,192·53 |
| (iii) உள்ளாட்சி மன்றங்களுக்காகச் செய்த தேர்தல் பணி. | 137·10 | 139·03 | 138·07 |
| மொத்தம் .. | 81,99,151·92 | 1,07,72,811·14 | 1,08,86,494·00 |



**3. அச்சகத் தேய்மானச் சேமநிதியின் இருப்பு**—அச்சகம் இடரின்றித் திறம்பட இயங்கும் நோக்கத்துடன், அச்சகத்தைச் சேர்ந்த இயந்திர தளவாடங்களையும், மேசை, நாற்காலி போன்ற பொருள்களையும் புதுப்பிப்பதற்காகவும், புதிதாக வாங்குவதற்காகவும் தேய்மானச் சேம நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அச்சகத்திலுள்ள இயந்திர தளவாடங்கள் மற்றும் மேசை, நாற்காலி போன்ற பொருள்களுக்கு ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் உள்ள மதிப்பின்படிக் கணக்கிடப்படுகிற தேய் மான தொகை (ஆண்டில் புதிதாக வாங்கப்படும் பொருள்கள், இயந்திரங்கள் இதில் அடங்கா) குறைந்து வரும் மதிப்பின் அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தில் ஆண்டுதோறும் இந்த நிதிக்குச் செலுத்தப்படும்.

இருப்புப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட பயன்படுத்த இயலாத அச்சுப்பொறி, கருவிகள், மேசை, நாற்காலி போன்ற பொருள் களின் புத்தக மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியில் இந்த நிதியிலிருந்த தொகை. | 11,31,147 |
| 1967-68-ம் ஆண்டில் சேர்க்கப்படுமென்று மதிப் பிட்டுள்ள தொகை. | 6,688 |
| 1967-68-ல் செலவிடப்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ள தொகை. | 27,800 |
| 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் தேதியில் எதிர்பார்க்கப்படும் மிச்சத் தொகை. | 11,10,035 |

**4. வாங்கப்பட்ட இயந்திரங்களும் கருவிகளும்**—1967-68-ம் ஆண்டில் (1967 டிசம்பர் வரை) கீழ்க்கண்ட இயந்திரங்களும் கருவிகளும் வாங்கப்பட்டன. அவற்றின் மதிப்பு அவைகளுக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ளது :—

| வாங்கப்பட்ட கருவிகளின் விவரங்கள். | | மதிப்பு. |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 1. லித்தோடக்ஸ் சுற்றும் இயந்திரம். | 1 | 21,854·55 |
| 2. லித்தோடக்ஸ் அச்சிடும் கீழ் பிரேம் .. .. | 1 | |
| 3. லித்தோடக்ஸ் அச்சிடும் ஆர்க் விளக்கு | 1 | |
| 4. லித்தோடக்ஸ் கலேப் பொறி .. .. .. | 1 | |
| 5. ஜெர்மன் ஆப்டோன் செவ்வக பிளாக்கு முறை, கண்ணுடிப் பலகை 12″ × 15″ 50 கோடுகள் | 1 | 3,584·00 |
| 6. ஆம்புலன்ஸ் வண்டி—பெட்போர்டு வண்டி அடித்தளத்தின் மீது சென்னை சிம்ஸன் கம்பெனி மேல் பகுதி கட்டியது. | | 13,236·75 |
| மொத்தம் .. .. | | 38,675·30 |

**5. அந்நியச் செலாவணி**—ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, பயன் படுத்தப் பட்ட, எஞ்சியுள்ள அந்நியச் செலாவணி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்பளிப்பு வழங்கியது. | பயன் படுத்தியது. | எஞ்சி இருப்பது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1965-66 .. .. .. | 1,71,473 | 21,473 | 1,50,000 |
| 1966-67 .. .. .. | 13,455 | 12,279 | 1,176 |
| 1967-68 .. .. .. | 95,714 | 95,714 | .. |

[1968 மார்ச் 21

இயந்திரங்களையும், இயந்திர உதிரிப் பகுதிகளையும் இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணி வழங்கப்பட்டவுடன், இறக்குமதி, ஏற்றுமதி இணைக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து இறக்குமதி உரிமம் பெற்று, இவற்றைத் தருவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வியந்திரங்கள் இன்னும் வந்து சேரவில்லை.

6. **கட்டிடங்கள்**—சென்னையிலுள்ள மைய அச்சகத்தில் ரூ. 3·75 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதில் மின்சார வசதிகளும், சுகாதார வசதிகளும் இன்னும் செய்யப்பட வேண்டும். சென்னை மலைச்சாலையிலுள்ள அரசாங்கத்தின் கிளை அச்சகத்தில் இருந்த வேறு சில துறைகள் அந்த இடத்தைக் காலி செய்தவுடன் அரசாங்கக் கிளை அச்சகமே அந்த இடத்தையும் பயன்படுத்திக் கொண்டது.

புதுக்கோட்டையிலுள்ள அரசாங்க கிளை அச்சகத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி ஏற்படுத்திக்கொடுக்க நிலம் ஒதுக்கிக் கொடுப்பதற்கான செயற் குறிப்புகள் அரசாங்கத்திடம் வந்துள்ளன.

7. அரசாங்க அச்சகத்தில் கீழ்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன :—

(1) மைய அச்சகம், தங்கசாலைக் கட்டிடம், சென்னை-1.
(2) அரசாங்க வெளியீடுகள் விற்பனை நிலையம், மலைச்சாலை, சென்னை-2.
(3) உயர் நீதி மன்றக் கிளை அச்சகம், சென்னை-1.
(4) மைய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம் சென்னை-3.
(5) கிளை அச்சகம், புதுக்கோட்டை.
(6) வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.
(7) வட்டார அச்சகம், சேலம்.
(8) வட்டார அச்சகம், விருத்தாசலம்.
(9) பாட புத்தகக் கிளை அச்சகம், மலைச்சாலை, சென்னை-2.

தனித்தனியே ஒவ்வொரு அச்சகத்திலும் செய்யப்பட்டுவரும் வேலைகளின் விவரம் வருமாறு :—

(i) **மைய அச்சகம்**.—மைய அச்சகத்தில் 2,600 தொழில்நுட்பப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

வாராந்திர அரசிதழ்கள், திங்கள் வெளியீடுகள், படிவங்கள், பதிவேடுகள், முதலானவற்றை வழக்கம்போல் அச்சிடுவதுடன், பல சிறப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) பொதுக்கணக்கு ஆய்வுக்குழு அறிக்கை.
(2) சென்னைத் துறைமுக பொறுப்புக்கழகக்கையேடு.
(3) பொது விற்பனை வரிச்சட்டப் படிவங்கள்.
(4) சென்னைக் கல்வித்துறைப் பத்திரிகைகள்.
(5) மதிப்பீடு-கோரிக்கை குழுவின் அறிக்கை.
(6) புத்தகப்பட்டியல்.
(7) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவின் வேலை.
(8) ஆய்வுக் குழு அறிக்கைகள்.
(9) திருச்சிராப்பள்ளி மாவட்ட சீரணித் துவக்க விழா (அழைப்பிதழ்களும், ஏனைய பணிகளும்).



1968 மார்ச் 21]

(10) வருமான வரிச்சட்டமும், விதிகளும்.
(11) உலகத் தமிழ் மாநாடு (அழைப்பிதழும், தொடர்புள்ள படிவங்களும்).

இந்த அச்சகம் முழு அளவிற்குச் செயல்பட்டு வருகிறது. என்றாலும், சில பணிகளை அவற்றின் அவசரத்தைக் கருதி உள்ளூரில் தனிப்பட்ட அச்சகங்களிலே அச்சிடவேண்டி வந்தது.

கடந்த மூன்றாண்டுகளில் அரசாங்க அச்சகத்தில் நடந்த வேலைகளின் மதிப்பும், தனிப்பட்ட அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளின் மதிப்பும், அவற்றின் சத வீதமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | | வேலையின் மொத்த மதிப்பு, | அரசாங்க அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | தனியார் அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | மொத்த மதிப்பில் சதவீதம் — அரசாங்க அச்சகம். | மொத்த மதிப்பில் சதவீதம் — தனியார் அச்சகம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. | ரூ. | ரூ. | | |
| 1964–65 | .. | .. | 79,45,674 | 74,90,013 | 4,55,661 | 94·27 | 5·73 |
| 1965–66 | .. | .. | 1,06,37,869 | 99,11,467 | 7,26,402 | 93·17 | 6·83 |
| 1966–67 | .. | .. | 1,22,54,832 | 1,02,38,736 | 20,16,096 | 83·55 | 16·45 |

குறிப்பு—1966–67–ம் ஆண்டில் தனியார் அச்சகங்களில் செய்த வேலையின் மதிப்பு அந்த அச்சகங்களில் பொதுத் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியல் அச்சிட்டதன் காரணமாக உயர்ந்துள்ளது.

செய்யப்பட்ட பல்வேறு அச்சுப் பணிகளில் பயணச் சீட்டுகள் அச்சிடும் பணியும், அரசாங்கமே வெளியிடும் பாடப் புத்தகங்களை அச்சிடும் பணியும் மிகவும் உயர்ந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்.. அச்சிடப்பட்ட அரசாங்கப் பாடப்புத்தகங்கள் பற்றிய விவரங்கள் தனியே தரப்பட்டுள்ளன. இவை "பாடப் புத்தகக் கிளை அச்சகம்" என்னும் தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் அச்சிட்டு வழங்கிய பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | | | | | | அச்சிடப்பட்ட பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|---|---|
| 1964–65 | .. | .. | .. | .. | .. | .. | 3,481·76 |
| 1965–66 | .. | .. | .. | .. | .. | .. | 3,861·82 |
| 1966–67 | .. | .. | .. | .. | .. | .. | 3,596·62 |

(ii) **அரசாங்க வெளியீட்டு நிலையம், மலைச்சாலை, சென்னை-2.**—சென்னை, மலைச்சாலையிலுள்ள அரசாங்க வெளியீடுகள் நிலையத்தில், தமிழ்நாடு அரசாங்க வெளியீடுகளும் இந்திய அரசு வெளியீடுகளும், இருப்பு சேர்க்கப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு நேரில் விற்பதைத் தவிர, பண அஞ்சல் மூலம் அல்லது கருவூலச் செலுத்து சீட்டு மூலம் பணம் செலுத்துபவர்களுக்கும் இந்த வெளியீடுகள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுகின்றன. மேலும், சென்னை நகரிலும் வெளியூர்களிலும் அதிகாரம் பெற்ற "முகவர்கள்" வாயிலாகவும் இப் புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம 31-ம் தேதியில் இத்தகைய "முகவர்கள்" 45 பேர் இருந்தனர். 1967–68-ம் ஆண்டில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை மொத்தம் ரூ. 1,68,091·12-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(iii) உயர்நீதி மன்றத்திலுள்ள கிளை அச்சகம்**—உயர்நீதி மன்ற விளாகத்தில் கிளை அச்சகம் ஒன்று அமைந்துள்ளது. நீதி மன்றத்துக்கு அன்றாடம் வேண்டிய வழக்குப் பட்டியல்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. இதைத் தவிர, அவசரமாகத் தேவைப் படும் சில படிவங்களும் இங்கு அச்சிடப்படுகின்றன. இதில் 79 பேர் பணியாற்றுகின்றனர்.

கீழ் நீதிமன்றங்களிலிருந்து ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட வழக்கு விவரங்கள், குற்றவியல் வழக்கு விவரங்கள், இந்தியச் சட்ட அறிக்கைகள் போன்ற ஏனைய அச்சுப் பணிகளையும் மேற் கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் இக்கிளை அச்சகத்தை விரிவு படுத்துவதற்காக, இதற்கு உயர்நீதி மன்றம் இடம் அளித்துள் ளது. மின்சார வசதிகளையும் சுகாதார வசதிகளையும் இங்கு ஏற்படுத்து வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**(iv) சென்னை மையச் சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம்**—மையச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு வேலையளிக்கும் நோக்கத் துடன், இந்தக் கிளை அச்சகம் நிறுவப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 150 கைதிகள் பணியாற்றுகின்றனர். மைய அச்சகத்திலிருந்து அனுப்பப்பட்ட மேற்பார்வைப் பணியாளர்கள் இக்கைதிகளின் பணியை மேற்பார்வையிடுகின்றனர். தரப்படுத்திய படிவங்களை அச்சிடும் வேலை மிகப் பெரிய அளவினதாகும். எனவே, கைதிகளுக்கு முழு நேர வேலை கொடுப்பதற்கு ஏற்ற படிவங்கள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. அரசாங்க அச்சகத்தின் 35 தொழில் நுட்பப் பணியாளர் இங்கு பணியாற்று கின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளில் இக்கிளை அச்சகத்தில் ஆன செலவு, செய்த வேலை மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன : —

| ஆண்டு. | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1964–65 .. .. .. .. | 2,79,029 | 2,10,393 |
| 1965–66 .. .. .. .. | 2,78,666 | 2,16,465 |
| 1966–67 .. .. .. .. | 2,78,848 | 2,16,108 |

குறிப்பு—செலவுப்புள்ளி விவரங்கள் மொத்த செலவினங்களை குறிக் கின்றன. வணிகமுறையில் இயங்காத அரசாங்கத் துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், இத் துறையில் செய்த வேலை யின்மதிப்பைவிட செலவு மிகுந்துள்ளது.

**(v) கிளை அச்சகம், புதுக்கோட்டை.**—பணி உதவி மேலாளர் ஒருவரின் உடனடி மேற்பார்வையின் கீழ் இக்கிளை அச்சகம் செயல்படுகிறது. இந்த அச்சகத்தில் 187 பேர் பணியாற்றுகின்றனர். இதில் இரண்டு முறை மாற்று வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இந்த ஆண்டில் கீழ்க்கண்ட வேலை இனங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) அரசிதழ் சிறப்பு வெளியீடுகள் 962 உட்பட, எல்லா மாவட்டங் களுக்குமான மாவட்ட அரசிதழ்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப் பட்டன.

(2) இளநிலை, முது நிலை ஆசிரியர்களுக்கான டி.எஸ்.எல்.சி. பாடப் புத்தகம் தமிழில் அச்சிடப்பட்டது.



(3) தரப்படுத்தப்படாத பிற படிவங்கள், உயர் நீதி மன்றப் படிவங்கள், தமிழ்நாடு கணக்கு விதிக்கோவை, தமிழ் நாடு நிதி விதிக் கோவை, ஓய்வூதிய தொகுதிப் படிவங்கள் ஆகியவை அச்சிடப்பட்டன. பங்கீட்டுப்பட்டியலின்படி படிவங்களை அனுப்பிவைக்கும் பணியும் நடத்தப் பட்டது.

(4) மதுரை வடக்கு நகர்ப்புறம், இராமநாதபுரம், திருச்சிராப் பள்ளி, திருச்சிராப்பள்ளி இரயில்வே காவற்றுறை, தஞ்சாவூர் மாவட்டங் களுக்குச் சம்பந்தப்பட்ட மாவட்டத் தகவல் நிலையப்பணி.

(5) 17 கல்லூரிகளுக்கான நாட்குறிப்பேடுகள்.

(6) திருவல்லிக்கேணி வாக்காளர் தொகுதியின் வாக்காளர் பட்டியல் (1,363 பக்கங்கள் கொண்டது).

(7) செயலகத்துறைகளின் வாராந்தர குறிப்பீடுகள், கல்வி, பொது சுகாதாரத்துறை, பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறி யாளர் ஆண்டுக் குறிப்பீடுகள்.

(8) தமிழில் வாழ்க்கை வழிகாட்டி நூல்—வேலை வாய்ப்பு —பயிற்சி இயக்குநர் அலுவலகத்திற்குச் சம்பந்தப்பட்ட 21 வெளியீடுகள்.

மேற்கண்டவற்றைத் தவிர, அச்சகத்தில் செய்யப்படும் பல பொருள் களும் தயாரிக்கப்பட்டன.

கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு, செய்த வேலையின் மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1964–65 .. .. .. .. | 3,41,063 | 3,13,056 |
| 1965–66 . .. .. .. | 4,77,639 | 4,40,507 |
| 1966–67 .. .. .. .. | 4,88,318 | 4,49,252 |

குறிப்பு—செலவுப்புள்ளி விவரங்கள் மொத்த செலவைக் குறிப்பவை யாகும். வணிகமுறையில் இயங்காத அரசாங்கத் துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், செய்த வேலையின் மதிப்பைவிட செலவு மிகுந்துள்ளது.

**(vi) வட்டார அச்சகம்; திருச்சிராப்பள்ளி**—இந்த வட்டார அச்சகம் பணி உதவி மேலாளர் ஒருவரின் நேரிடையான மேற்பார்வையில் உள்ளது. இதில் 119 பேர் பணியாற்றுகின்றனர். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மாவட்டத் தகவல் நிலையப் பணிகள், திருச்சிராப்பள்ளி இரயில்வே காவற் றுறை பணிகள் ஆகியவற்றையும், அச்சக சி.எப். தொகுதியின்தரமான அச்சுப் பணிகளையும் இந்த அச்சகம் செய்து கொடுத்தது. பணியாளர் விளையாட்டுப் போட்டி சங்கமொன்று செயலாற்றி வருகிறது. இது தொழி லாளர்கள் தாமாகவே முன் வந்தளிக்கும் சந்தாத் தொகையுடனும், எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் அளிக்கிற நிதி உதவியுடனும் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டில் இந்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டத்தின் கீழ் பிரிவு நிலை வகுப்புகள் (Unit Level Classes) இரண்டு தொகுதிகளில் நடத்தப்பட்டன. மூன்றாவது தொகுதி வகுப்பு இப்போது நடைபெற்று வருகிறது. பல்வேறு தொழிற்சாலைகளுக்குச் சென்று நேரில் காண்பது தவிர, பணிப்பயிற்சி தொழிலாளர் பலர்

1967-ம் ஆண்டில் சேலத்திற்கும், கோயம்புத்தூருக்கும், கல்விப் பயணம் மேற்கொண்டனர். இந்த ஆண்டில் ஆன செலவும், செய்த வேலையின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | செலவு. (2) | செய்த வேலையின் மதிப்பு. (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ |
| 1965–66 .. .. .. .. | 2,91,205 | 2,34,432 |
| 1966–67 .. .. .. .. | 2,61,854 | 2,09,483 |

குறிப்பு—செலவுப் புள்ளி விவரங்கள் மொத்த செலவைக் குறிப்பவை யாகும். வணிக முறையில் இயங்காத அரசாங்கத்துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், செய்த வேலையின் மதிப்பைவிட செலவு மிகுந்துள்ளது.

(vii) **வட்டார அச்சகம், சேலம்.**—இக்கிளை அச்சகம் பணி உதவி மேலாளர் ஒருவரின் நேரடி மேற்பார்வையில் உள்ளது. பொதுப் படிவங்கள், உயர்நீதி மன்றப் படிவங்கள் தரப்படுத்தப்பட்ட வேறு சில படிவங்கள் ஆகியவற்றை இந்த அச்சகம் அச்சிட்டு வருகிறது.

1966–67-ம் ஆண்டில் ஆன செலவும், செய்த வேலையின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1966–67 .. .. .. .. | 1,99,910 | 1,59,928 |

குறிப்பு—செலவுப் புள்ளி விவரங்கள் மொத்தச் செலவைக் குறிப்பவை யாகும். வணிக முறையில் இயங்காத அரசாங்கத்துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், செய்த வேலையின் மதிப்பை விட செலவு மிகுந்துள்ளது.

(viii) **வட்டார அச்சகம், விருத்தாசலம்.**—இந்த அச்சகம் பணி உதவி மேலாளரின் நேரடி மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில் 193 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த அச்சகத்தில் இப்போது பணியாற்றிவரும் பெரும்பாலான தொழிலாளர்கள் பர்மாவி லிருந்து தாயகம் திரும்பியவர்களாவர்.

இவ்வாண்டில் இந்த அச்சகம் வருவாய்த்துறைக்கு சம்பந்தப்பட்ட தரபடிவங்களையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் அன்றுட, வாராந்தர, திங்கள் குற்றத்தாள்களையும் அச்சிட்டுக் கொடுத்தது.

இந்த அச்சகம் குறைந்த வசதிகளுடன் வாடகைக் கட்டிடம் ஒன்றில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இதற்கெனக் கட்டிடம் கட்டு வதற்காக நிலம் ஒதுக்குவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இந்த ஆண்டில் ஆன செலவும், செய்த வேலையின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1966–67 .. .. .. .. | 1,94,757 | 1,55,805 |



குறிப்பு—செலவுப் புள்ளி விவரங்கள் மொத்தச் செலவைக் குறிப்பவை யாகும். வணிக முறையில் இயங்காத அரசாங்கத்துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், செய்த வேலையின் மதிப்பைவிட செலவு மிகுந்துள்ளது.

(ix) **பாடப் புத்தக கிளை அச்சகம், மலேச்சாலை சென்னை.**—இந்த அச்சகம் 401 தொழிலாளர்களுடன் இரண்டு முறை மாற்று வேலை களில் பணி உதவி மேலாளர் ஒருவரின் மேற்பார்வையில் இயங்கிவருகிறது.

அரசாங்கமே வெளியிடும் பாடப் புத்தகங்களைப் பொறுத்த வரை, 1-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை தமிழ் பாடப் புத்தகங்களும், 4-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் மொத்தம் 70·45 இலட்சம் அச்சிடப்பட்டன. இது தவிர, தரப்படுத்தப் பட்ட படிவங்கள், நகராட்சிப் படிவங்கள், கூட்டுறவுத் தணிக்கைப் படிவங்கள், ஊராட்சி நாளேடுகள் ஆகிய மிக முக்கியத்துவம் வாய்ந்த வெளியீடுகளும் அச்சிடப்பட்டன.

1968–69-ம் ஆண்டில் 67·50 இலட்சம் பாடப்புத்தகங்கள் அச்சிட்டுக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இத்துடன் கூட, இலவசமாக வழங்கப்படுவதற்கான புத்தகப் பிரதிகளின் பட்டியலும் இன்னும் வரவேண்டியுள்ளது. 1968–69-ல் ஆண்டில் 8-ம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தை அச்சிடும் புதுப் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அச்சகத்தின் பணியாளர்களுக்குச் சிற்றுண்டிச்சாலை வசதி ஏற்படுத்துவதற்காக, இங்குள்ள கார் கொட்டகை ஒன்று சிற்றுண்டிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இச்சிற்றுண்டிச் சாலை விரைவில் தொடங்கப்படும்.

கடந்த மூன்றுண்டுகளில் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | புத்தகங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). |
|---|---|
| | ரூ. |
| 1964–65 .. .. .. .. | 54·50 |
| 1965–66 .. .. .. .. | 73·27 (புதுச்சேரி அரசாங்கத்திற்கு அச்சிட்டுக் கொடுத்த 46,000 புத்தகங்களும் இதிலடங்கும்.) |
| 1966–67 .. .. .. .. | 70·45 |

8. **தொழிலாளர் வசதிகளும் நலன்களும்**—அரசாங்க அச்சகத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு குடும்ப ஓய்வூதிய விதிகளின் நலன்களை 1960 ஜூலை 1-ம் தேதி முதற்கொண்டு நீட்டித்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றுகும். உலோக உருக்குப் பிரிவுகளிலும், ஏனைய தொடர்பான துணைப் பிரிவுகளிலும், வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நச்சுப் புகையினின்றும் பாதுகாப்பளிக்க, பாதுகாப்பு முகமூடிகளும், காலணி களும் வழங்குவதற்கு முனைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வானொலி மன்றம் ஒன்று மைய அச்சகத்தில் 23 உறுப்பினருடன் நிறுவப்பட்டுள்ளது. 1967 செப்டம்பரில் நிறுவப்பட்ட இந்த மன்றத்தில் பல்வேறு தொழில் நுட்பப் பிரிவுகளிலிருந்தும் உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த உறுப்பினர்கள் தொழிலாளர் நல அதிகாரி யின் அறையில் ஒவ்வொரு திங்களிலும் ஈற்றயல் வெள்ளிக்கிழமையன்று ஒன்றுகூடி தொழிலாளர் நிகழ்ச்சியை கேட்டுக்களிக்கின்றனர். இந்த நிகழ்ச்சி முடிவுற்ற பின்னர் தொழிலாளர்கள் அதைத் தங்களுக்குள் விவாதிக்கின்றனர். அவர்கள் கூறும் கருத்துக்கள் அனைத்திந்திய வானொலி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

(i) **மருத்துவ வசதிகள்**—தொழிலாளரின் மருத்துவத் தேவையை கவனிப்பதற்கு, சென்னை மைய அச்சகத்தில் தனிப்பட்ட மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது. இது முழுநேர மருத்துவ அதிகாரி ஒருவரின் பொறுப்பிலுள்ளது. அவசியமானால், அண்மையிலுள்ள மருத்துவ மனைக்கு நோயாளிகளை அழைத்துச் செல்வதற்கு இந்த மருந்தகத்தில ஆம்புலன்ஸ் வண்டி வசதி செய்யப்பட்டுள்ளது.

(ii) **குழந்தைகள் காப்பகம்**—இந்த மருந்தகத்துடன் குழந்தைகள் காப்பகம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள அரசாங்க அச்சகத்தில் பணி செய்யும் பெண் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லவே இந்தக்காப்பகம் நிறுவப்பட்டுள்ளது. இரண்டு பெண் பணியாளர்களின் கவனிப்பில் இக்காப்பகம் நன்முறையில் செயல்படுகிறது.

(iii) **சிற்றுண்டிச் சாலையும் கூட்டுறவு வங்கியும்**—கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலையும், கூட்டுறவு வங்கியும் பணியாளர் நலனுக்காகத் தொடர்ந்து இயங்கிவருகின்றன.

(iv) **தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை**—கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவுத் துறையின் முதுநிலை மேற்பார்வையாளர் ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மளிகை சாமான்களும், ஒப்பனைப் பொருள்களும் இங்கு சேமித்து வைக்கப்பட்டு, ஓரளவு குறைந்த விலைக்கு விற்கப் படுகின்றன. மிதி வண்டி டயர்கள், டியூப்கள், குழந்தை உணவுகள், ஹார்லிக்ஸ் போன்ற பிற இனங்களும் கிடைக்கும்போது விற்கப்படுகின்றன.

(v) **காமராஜ் நகர் குடியிருப்பில் பள்ளிக்கூடம்**—காமராஜ் நகர் குடியிருப்பில், சென்னை மாநகராட்சி நடத்தும் தொடக்கப்பள்ளியில் இட வசதி போதுமானதாக இல்லை. எனவே, கூடுதல் கூடாரங்களை அமைக்கும் செயற்குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

9. **பாதுகாப்பு ஏற்பாடுகள்**—1964-ல் அமைக்கப்பட்ட பாதுகாப்புக் குழு, விபத்துகளைத் தடுக்கும் வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருகிறது. விபத்துகளைத் தடுப்பதற்குரிய கருத்துரைகள் வழங்குவதற்கென கருத்துரை சாத்து ஒன்று (cell) செயல்பட்டு வருகிறது.

10. **பொது**—(i) சென்னையிலுள்ள அரசாங்க அச்சகத்திலும், அதன் கிளைகளிலும் உள்ள இயந்திரங்கள், மேசை, நாற்காலிகள், அச்சுகள், அச்சுப் பொருள்கள் ஆகியவற்றின் இருப்பு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சரி பார்க்கப்படுகிறது. இவ்வாறு சரி பார்க்கும் பணி 1965-ம் ஆண்டில் நடைபெற்றது.

(ii) ஏனைய பொருள்களின் இருப்பு ஆண்டுதோறும் இருப்பு சரி பார்க்கும் அதிகாரியால் சரிபார்க்கப்படுகிறது.

(iii) தற்போது தொழிலாளர் நல அதிகாரிகள் இருவர் உள்ளனர். இவர்களில் ஒருவர் அரசிதழ் பதிவு பெற்றவர். மற்றொருவர் அவ்வாறு பதிவு பெறாதவர். இவர்கள் இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனைக் கவனித்துக் கொள்கின்றனர்.

(iv) 1967-68-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணியாளர் விவரம் :—

| பதவிப் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| உலோகத்தில் சிற்பம் செதுக்குவோர் (100—5—150) | 1 |
| பெண் பைண்டர்கள் (70—2—100) .. | 60 |

ரூ. 70—2—100 சம்பளத்தில் இயந்திரங்களைக் கவனித்துக் கொள்ளும் இளநிலைப் பதவிகள் 146 ரூ. 80—3—110 என்ற சம்பள வீதத்தில் முதுநிலைப் பதவிகளாக தரம் உயர்த்தப்பட்டன.



(v) அரிசன நல அமைச்சர் 1967-ம் ஆண்டு சூலை மாதம் 13-ம் தேதியில் சட்டப் பேரவையில் அளித்த உறுதிமொழிக்கேற்ப, அரசாங்க அதிகாரி ஒருவர் மட்டும் கொண்ட தனிக்குழு ஒன்றினை 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசாங்கம் நிறுவியுள்ளது. இந்த அதிகாரி அரசாங்க அச்சகமும், எழுது பொருள் பிரிவும் செயல்படும் வகையினை ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்த்து, செய்து முடிக்கும் பணி யளவை மேம்படுத்துவதற்கும் நடை முறையை எளிதாக்குவதற்கும் உரிய வழிவகைகளை எடுத்துக் கூறுவார். இந்தக் குழு தனது முன்னறிக்கையை தற்பொழுது அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளது.

(vi) கீழ்க்கண்ட செயற்குறிப்புகளும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன—

(1) புதுக்கோட்டை அரசாங்கக் கிளை அச்சகத்திலும், திருச்சிராப் பள்ளி, விருத்தாசலம், சேலம் ஆகிய இடங்களிலுள்ள வட்டார அச்சகங் களிலும், அச்சு கோக்கும் பிரிவிலும், இயந்திரப் பிரிவிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாலும், பல்விட்டமின் மாத்திரைகளும் வழங்குதல்.

(2) லைனோ துறையிலுள்ள தொழிலாளர்களுக்குப் பாலும், பல்விட்டமின் மாத்திரைகளும் வழங்குதல்.

## எழுதுபொருள் பிரிவு.

11. **எழுது பொருள்-அச்சகத் துறையை சேர்ந்த எழுது பொருள் பிரிவு**—எழுதுபொருள்கள், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை வழங்குவதற்கான மத்தியப் பிரிவாகும். அரசாங்கத் தலைமைச் செயலகத்துறைகளிலும், சென்னை மாநகரிலுள்ள தலைமை அலுவலகங்களிலும் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களுக் குரிய உடைகளையும் இந்தப் பிரிவே வழங்குகின்றது. சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள மருத்துவ மனைகளில் பணி புரியும் குற்றேவலர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங் களில் செயல்படும் டபேதார்களுக்கும், கடை நிலை ஊழியர்களுக்கும் உடைகள் வழங்கும் பணியையும் இந்தப் பிரிவே கவனித்துக் கொள்கிறது. மலைப் பகுதிகளிலும், பிற குளிர்ப் பகுதிகளிலும் பணியாற்றும் அரசாங்கக் கடை நிலை ஊழியர்களுக்குக் குளிர் பாதுகாப்பு ஆடைகளை இந்தப் பிரிவு வழங்குகிறது. அரசாங்க அலுவலகங்கள் அனைத்திற்கும் எழுது பொருள்கள் இலவசமாகவே அனுப்பப்படுகின்றன. அரசாங்க வணிகத் துறைகள் தொகை செலுத்துவதன் மேல் அவைகளுக்கும் எழுது பொருள்கள் அனுப்பப்படுகின்றன. அல்லது பொருள்கள் வழங்கியபின் எழுது பொருள் துறையிலிருந்து கையெழுத்திட்டு அனுப்பப் பட்ட பில்கள் வருவதன்மேல், சென்னையிலுள்ள அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் கணக்கைச் சரிக்கட்டுகிறார். மத்திய அரசைச் சேர்ந்த சில அலுவலகங்களுக்கும், ஓரளவு அரசாங்க ஆளுகையின் கீழுள்ள அலுவ லகங்களுக்கும் தொகை பெற்றுக் கொண்டு எழுது பொருள்கள் அனுப்பப் படுகின்றன. இந்த விற்பனைகள் அனைத்திலும், தட்டெழுத்து இயந்திரங் கள், படியெடுக்கும் இயந்திரங்கள் இவை குறித்து 5 சத வீதம் துறைச் செலவாகவும், ஏனைய எழுது பொருள் குறித்து 21 சத வீதம் துறைச் செலவாகவும் வசூலிக்கப்படுகின்றன.

எழுது பொருள்களை வாங்குதவற்குரிய செலவு எழுது பொருள் பிரிவினருக்கு ஏற்படும் பெரிய செலவினங்களில் ஒன்றாகும். இந்தச் செலவினத்தின் பெரும் பகுதி இந்தியாவில் உற்பத்தியாகும் எழுது பொருள்களின் விலையாகும். காகிதம், அட்டைகள், தட்டெழுத்து இயந்திரங்கள், நகலெடுக்கும் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதிலும் பெரும் பகுதி செலவு ஏற்படுகின்றது.

12. **செலவு வசூலிக்கப்படத்தக்க துறைகளுக்கு பொருள்கள் வழங்குதல்**—எழுது பொருள்களையும், படிவங்களையும் வழங்கியதற்காக எழுது பொருள்-அச்சுத்துறைக்கு செலவு வசூலிக்கப்படத்தக்க துறைகளிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை உயர்ந்துக்கொண்டே வருவது அரசாங் கத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த அளவில் உள்ள

நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்கு நடைமுறை ஒன்றை உருவாக்க வேண்டுமென்பதும் அரசாங்கத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு நிலுவைகளை வசூலிப்பதற்குப் புதிய நடைமுறை ஒன்றை ஏற்படுத்த எண்ணியுள்ளது. இதன்படி, செலவு வசூலிக்கப்படத்தக்க துறைகள் கேட்கும் எழுது பொருள்கள், படிவங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவினை, எழுது பொருள்-அச்சுத்துறை அந்தந்தத் துறைகளிடமிருந்து தேவைப் பட்டியல்கள் வரப்பெறுவதன்மேல் எழுது பொருள்கள் கிடைப்பதற்கேற்ப, செலவுத் தொகைகளைக் கணக்கிட்டு பட்டியலனுப்பிய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கும். அந்தந்தத் துறைகள் அச் செலவுத் தொகையினை எழுது பொருள், அச்சகத்துறைக்கு முன்னதாகவே செலுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தொகை செலுத்தப் பட்டது என்ற தகவல் கிடைப்பதன் மேல் எழுது-பொருள் அச்சுத் துறை, இப்பொருள்களை அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பிவைக்கும்.

**13. உடைகள் தைப்பதற்குரிய நடைமுறையில் மாறுதல்**—எழுது பொருள் அச்சுத்துறை உடைகளைத் தைத்துத் தருவதற்கு வேறான நடைமுறை ஒன்றைப் பின்பற்றி வந்தது. இதன்படி உடைகளைத் தைத்துத் தரும் பணி ஒப்புதல் பெற்ற ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப் பட்டு வந்தது. இந்த ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப் பட்டவுடன், ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். இந்த நடைமுறை 1967 சூலை முதல் மாற்றப்பட்டுள்ளது. இப்புதிய நடைமுறையின் கீழ் உடை தைக்கும் பணியை எழுது-பொருள் அச்சுத்துறை இயக்குநர் தொழில் வணிக இயக்குநர் மூலமாகத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைப்பார். தைப்பதற்கு வேண்டிய துணி வகைகளையும், அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுப்பார்.

14. எழுது பொருள் பிரிவு ஆற்றியுள்ள பெருமளவுப் பணியினைக் கொண்டே இதன் திறனை மதிப்பிட முடியும். கடந்த மூன்றாண்டுகளில் இதன் அதிகரித்த வேலைகளையும், இதன் மூலம் வழங்கப்பட்ட பொருள்களையும் பற்றி கீழ்க்கண்ட புள்ளி விவர அறிக்கையிலிருந்து ஒருவாறு அறிந்துகொள்ளலாம் :—

| ஆண்டு. | வாங்கும் எழுது பொருளின் மதிப்பு. | எழுதுபொருள் களுக்காகதேவைப் பட்டியில் அனுப்பும் அதிகாரிகளின் எண்ணிக்கை. | வழங்கிய எழுது பொருளின் மதிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1964–65 .. .. | 1,13,07,503 | 2,054 | 1,00,07,824 |
| 1965–66 .. .. | 92,30,858 | 2,225 | 1,09,53,111 |
| 1966–67 .. .. | 1,02,89,886 | 2,260 | 1,06,15,466 |

| ஆண்டு. | வழங்கிய தட்டெழுத்து இயந்திரங்கள் நகலெடுக்கும் இயந்திரங்கள், படி எடுக்கும் இயந்திரங்கள். | | | | |
|---|---|---|---|---|---|
| | தட்டெழுத்து இயந்திரம்—ஆங்கிலம். | தட்டெழுத்து இயந்திரம்—தமிழ். | படி எடுக்கும் இயந்திரம்—கையால் இயக்குவது. | படி எடுக்கும் இயந்திரம்—விசையால் இயக்குவது. | படியெடுக்கும் இயந்திரம். (Cyclostyle machine.) |
| | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1964–65 .. | 535 | 133 | 72 | 20 | 12 |
| 1965–66 .. | 703 | 183 | 73 | 9 | 7 |
| 1966–67 .. | 566 | 147 | 101 | 2 | 28 |



## இணைப்பு II.

[........-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க].

**1967–68-ல் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் –ஆய்வுரை**

இம்மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் 1967–68-ம் ஆண்டில் மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது.

2. வேளாண்மைக் கடன் வசதி, கூட்டுறவு விற்பனை, கூட்டுறவுப் பண்ணை பயன் கொள்வோர் கூட்டுறவு சங்கங்கள், பல்வகை கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்ப் பயிற்சி முதலியவை "கூட்டுறவு" என்பதன் கீழ் வரும் பெருந் திட்டங்களாகும். இத்திட்டங்கள் குறித்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்தச் செலவு, நான்காவது திட்ட நிதி ஒதுக்கம், 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் எய்திய முன்னேற்றம் ஆகிய விவரங்களைக் கீழ்க்கண்ட புள்ளி விவர அறிக்கையில் காணலாம் :—

| திட்டத்தின் பெயர் | மூன்றாவது திட்டக் காலத்தில் மொத்தச் செலவு. | நான்காவது திட்டநிதி ஒதுக்கம். | 1966–67-ம் ஆண்டின் செலவு. | 1967–68 நிதி ஒதுக்கம். | 1967-டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை ஆன செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| கூட்டுறவு கடன் வசதி விற்பனை கூட்டுறவுப் பண்ணை பயிற்சியும், கல்வியும், சர்க்கரை ஆலை, பயன்கொள்வோர் பண்டகசாலைகள், பல்வகைத் திட்டங்கள். | 508·39 | 946·11 | 75·64 | 72·77 | 31·30 |

### I. வேளாண்மைக் கடன் வசதி.

3. வேளாண்மை உற்பத்தித் திட்டங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான பணியாற்றி வருகின்றன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியில் பெரும் பகுதியைக் கூட்டுறவுச் சங்கங்களே வழங்கி வருகின்றன ; அவர்களுடைய விளைபொருள்களை விற்பனை செய்வதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நான்காவது திட்ட இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் வகையில் ரூ. 80 கோடி கடன் வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வேளாண்மையில் ஈடுபட்டோரின் மொத்தத் தேவையில் 50 சதவீதமாகும்.

4. திட்ட வேலைகளை நிறைவேற்றுவதில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கொடுத்துள்ள நிதி உதவியை கீழ்க்கண்ட புள்ளி விவர அறிக்கையில் காணலாம் :—

| தொடர் எண்ணும், இனங்களும். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட குறிக்கோள் அளவு. | 1966–67 குறிக்கோள் அளவு. | 1966–67 சாதனை. | 1967–68 குறிக்கோள் அளவு. | 1967–68 சாதனை (1967 டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. கூட்டுறவு சங்கங்களின் கீழ் வந்துள்ள | கிராமங்கள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வந்துள்ளன. | | | | | |

| தொடர் எண்ணும், இனங்களும். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட குறிக்கோள் அளவு. | 1966–67 குறிக்கோள் அளவு. | 1966–67 சாதனை. | 1967–68 குறிக்கோள் அளவு. | 1967–68 சாதனை (1967 டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| இராமங்களின் சத வீதம். | | | | | | |
| 2. உறுப்பினர்கள் (குடும்பங்கள்) சதவீதம். | 88 | .. | .. | 89·8 | .. | 89·8 |
| 3. ஆண்டுதோறும் வழங்கிய கடன் தொகை (ரூ. கோடிக் கணக்கில்)— | | | | | | |
| (அ) குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள். | 47·00 | 80·00 | 50·00 | 31·41 | 58·00 | 27·92 |
| (ஆ) நீண்ட காலக் கடன் | 3·00 | 5·00 | 3·00 | 2·73 | 3·50 | 2·19 |
| 4. மேற்கொண்டு நிறுவப் படவிருக்கும் இராமச் சங்கங்களின் எண்ணிக்கை. | 936 | .. | .. | .. | .. | .. |
| 4. (அ) ஏற்கெனவே உள்ள சங்கங்களை மாற்றியமைத்து நிறுவப்படும் தனித் தியங்கக்கூடிய சங்கங்கள் எண்ணிக்கை. | .. | .. | 300 | 81 | 300 | 100 |
| 5. கூட்டுறவு மத்திய வங்கிகள் நிறுவ விருக்கும் கிளைகளின் எண்ணிக்கை. | .. | 100 | 20 | 41 | 20 | 10 |
| 6. இராமக் கடன் சங்கங் களிலும் நிதி உதவும் வங்கிகளிலும் பங்கு மூலதனம் (அரசாங்க பங்கு மூலதனம் நீங்கலாக) (ரூ. கோடிக் கணக்கில்). | 16·22 | 27·72 | 17·12 | 18·26 | 18·65 | 18·86 |
| 7. இராமச் சங்கங்களிலும் நிதி உதவும் வங்கி களிலும் உள்ள வைப் பீட்டுத் தொகை (ரூ. கோடிக்கணக்கில்). | 29·75 | 51·25 | 33·00 | 32·00 | 35·25 | 32 82 |



5. நிதி உதவும் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்காகவும், அவற்றின் கடன் வாங்கும் சக்தியைப் பெருக்கும் பொருட்டும், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசாங்கம் ஆண்டுதோறும் தொகை வழங்கி வருகிறது. 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை இந்த அரசாங்கம் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் பங்கு மூலதனத்திற்கு ரூ. 126 லட்சமும், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 174 லட்சமும், தமிழ்நாடு மத்திய நில அடமான வங்கியின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 45 லட்சமும், ஆரம்பக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 108 லட்சமும் வழங்கியுள்ளது

6. இம் மாநிலத்திலே முழு நிதி உதவித் திட்டம் 274 வட்டாரங்களிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முன்னேற்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| முழு நிதி உதவித் திட்டம் செயலுக்குகொண்டு வரப்பட்ட ஆண்டு. | இத்திட்டம் செயல்படும் வட்டாரங்களின் எண்ணிக்கை. | வழங்கிய கடன் தொகை. இத்திட்டம் வருவதற்கு முன். | இத்திட்டம் வந்த பின். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. இலட்சத்தில்). | |
| மூன்றுவது திட்டத் தொடக்கத்தில் .. | 46 | 178·06 | 426·33 |
| மூன்றுவது திட்ட இறுதியில் .. .. | 274 | 787·54 | 2,567·00 |
| 1966–67-ம் ஆண்டு இறுதியில் .. | 274 | 787·54 | 2,408 00 |

வசதியற்றவர்களுக்குக் கடன் வழங்குவதனால் ஏற்படக்கூடிய இழப்புகளைச் சரிக்கட்டுவதற்காக முழு நிதி உதவித் திட்டம் செயலிலுள்ள பகுதிகளில் இருக்கும் சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. அச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்கள் நடுத்தரக் காலக் கடன்கள் இவற்றில் 10 சத வீதம் வரை மேற்சொன்னபடி. இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. தனிப்பட்ட நேர்வுகளில் ஏற்படுகிற இழப்பில் மூன்றில் இரு பங்கினை அரசாங்கமும் எஞ்சியுள்ள ஒரு பங்கினை மாநிலக் கூட்டுறவு வங்கியும், மத்திய வங்கிகளும், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அது உட்பட்டதாகும். முந்திய ஆண்டுக் கடன்களுக்கு மேற்பட்டு வழங்கப்படும் கூடுதல் கடன்களுக்காக ஆரம்பச் சங்கங்களைப் பொறுத்த வரையில் கூடுதல்கடன்களில் 3 சத வீதப்படியும், மத்திய வங்கிகளைப் பொறுத்தவரையில் 1 சத வீதப்படியும் மானியம் கணக்கிடப் பட்டு, மீளாக் கடன் சிறப்புச் சேமநிதிக்கு (Special Bad Debt Reserves) அரசாங்கம் வழங்குகிறது. குடியானவர்களில் எல்லாப் பிரிவினருக்கும், குறிப்பாக வசதியற்ற நிலையிலுள்ளவர்களுக்குக் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் கடன் வழங்குவதை ஊக்குவிப்பதற்காகவே இவ்வாறு மானியம் வழங்கப்படுகிறது. மத்தியப் கூட்டுறவு வங்கிகள், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு அரசாங்கம் இதுவரை ரூ. 94·99 லட்சம் வழங்கியுள்ளது.

7. மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் 36 சமுதாய நிலை வளர்ச்சி வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1,045 இராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 4·43 லட்சம் உறுப்பினர் உள்ளனர். இம் மாவட்டத்தில் இந்தத் திட்டம் நெல் விளைவிப்பது குறித்து முதற்கண் கொண்டுவரப்பட்டது. இத் திட்டம் இப்போது ஏனைய பயிர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

8. கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் வாங்கக் கூடிய கடனில் மேல் வரம்பு இம் மாநிலம் எங்கணும் ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளின் பதிவு பெற்ற கரும்பு உற்பத்தி உறுப்பினரைப்

பொறுத்த வரையில் இந்த மேல் வரம்பு ரூ. 20,000 ஆகும். இந்த வரம்புகளுக்கு உட்பட்டு, பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோரைப் பொறுத்த வரையில் ரூ. 15 ஆயிரம் வரையிலும், மற்றவர்களைப பொறுத்த வரையில் ரூ. 10 ஆயிரம் வரையிலும், ஆள் பிணையத்தின் மீது கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கடன் பெற உரிமையுள்ளவர்களாவர். உறுப்பினர்களின் நிகர சொத்து மதிப்பில் எட்டில் ஒரு பங்கு வரை சங்கங்கள் கடன் வாங்கலாமென்றிருந்த மேல் வரம்பு இப்போது ஐந்தில் ஒரு பங்கு வரை வாங்கலாம் என உயர்த்தப்பட்டுள்ளது.

9. மேம்பட்ட முறைகளை முனைந்து மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக் கும் நோக்குடன், புகையிலை, வாழை, வேர்க்கடலை, தென்னை, பருத்தி முதலிய வணிக பயிர்களுக்கு பல முமுர உற்பத்தி திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியையும் ஏனைய வேளாண்மை உற்பத்தித் தேவைப் பொருள்களையும் வழங்குவதே முமுர வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாகும்.

10. வேளாண்மைப் பகுதி முனைப்புத் திட்டம் வேளாண்மை முனைப்பு மாவட்டத் திட்டத்திலிருந்து சிறிது மாறுபட்ட திட்டமாகும். குறிப்பிட்ட பகுதியில் நெல், சிறு தானியங்கள், பருப்பு வகைகள், இவற்றின் உற்பத்தி யைக் கணிசமான அளவு உயர்த்துவதற்கான இந்தத் திட்டம் செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களிலே நிறைவேற்றப் பட்டு வருகிறது. இம் மாவட்டங்களில் செயல் படும் கூட்டுறவுச் சங்கங்கள் குடியானவர்களுக்குக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், கடன் வசதிகளையும், ஏனைய வேளாண்மை உற்பத்தித் தேவைப் பொருள்களையும் வழங்கி வருகின்றன.

11. வேளாண்மை உற்பத்தியை அதிக அளவிற்குப் பெருக்கும் நோக்கத் துடன் ஆடுதுறை 27 (நெல்), கோயம்புத்தூர் 25 (நெல்), CSH 1 (சோ ளம்), HB 1 (கம்பு) முதலான மிகு பயன் தரும் தானியங்களை இம் மாநிலத்தில் பயிரிடுவதற்கான வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை குறிப்பிட்டுள்ள அளவை யொட்டிக் கடன் வசதியை யும், ஏனைய வேளாண்மை உற்பத்தித் தேவைப் பொருள்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன. 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் வேளாண்மை முனைப்பு மாவட்டத் திட்டம் வேளாண்மை பகுதி முனைப்புத் திட்டம், மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக்கடன் வசதி விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| வேலைத் திட்டத்தின் பெயர். | வழங்கிய குறுகிய காலக் கடன் தொகை. | |
|---|---|---|
| | 1966–67-ல். | 1967–68-ல் (1968 ஜனவரி 31-ந் தேதி வரை). |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| (1) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மை முனைப்பு மாவட்டத் திட்டத்தின் கீழும் மிக பயன் தரும் தானிய ரக திட்டத்தின் கீழுமுள்ள பகுதிகளில். | 283·60 | 360·42 |
| (2) கோயம்புத்தூர், செங்கற்பட்டு, திருநெல் வேலி, மதுரை மாவட்டங்களிலே மிகு பயன் தரும் தானிய ரக திட்டம் உட்பட வேளாண்மைப் பகுதி முனைப்புத் திட்டம் செயலிலுள்ள பகுதிகளில். | 904·52 | 933·44 |
| (3) மிகுப் பயன் தரும் தானிய ரகத் திட்டம் செயலிலுள்ள ஏனைய பகுதிகள். | 1,751·44 | 1,534·75 |



12. பயிர்க் கடன் வசதி என்கிற ஆண்டுக் கடன் வசதித் திட்டம், வேளாண்மைப் பகுதி முனைப்புத் திட்டம் செயலிலுள்ள மாவட்டங்களிலும் சர்க்கரை ஆலைப் பகுதியிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங் களில் வேளாண்மை வங்கிகளின்கீழ் வருகிற பகுதிகளில் இது நிறைவேற்றப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மேல் உரிய காலத்தில் கடன் வசதி வழங்கப்படும். இந்த திட்டத்தின்படிக் குடியானவருக்கு அந்த ஆண்டில் பல் வேறு பயிர்களை விளைவிப்பதற்காக அவருக்குத் தேவைப்படும் தொகை யையொட்டி அவருக்கு வழங்கலாகும் கடனின் மேல் வரம்பு வரையறுக் கப்படுகிறது. இந்த மேல் வரம்பு பதிவான கரும்பு பயிரிடுவோருக்கு ரூ. 20 ஆயிரமும் மற்றவர்களுக்கு ரூ. 15 ஆயிரமும் ஆகும்.

13. பொருளாதார வகையில் தனித்துச் செயல்பட முடியாத நிதி வசதியற்ற சங்கங்களை இறுதி செய்து அவற்றை நிதி வசதி உள்ளவையாக மாற்ற வகை செய்யும் வேலைத் திட்டம் ஒன்று இம் மாநிலத்தில் நிறை வேற்றப்பட்டு வருகிறது. நிதி வளம் பெற்று ஒரு சங்கம் செம்மையாகச் செயல்பட வேண்டுமானால் அது ஆண்டொன்றுக்கு ரூ. 2 லட்சம் கடன் வழங்கும் நிலையிலிருக்க வேண்டும். இது சங்கம் செயல்படும் பகுதியில் உள்ள மண்ணின் தன்மை, விளைவிக்கப்படும் பயிர்கள் பயிர் விளைவிககப் படும் பரப்பளவு ஆகியவற்றைப் பொறுத்ததாகும். பொருளாதார வசதி யற்ற சங்கங்களை நீக்கி விட்டு, நிதி வசதி வகையில் தனித்தியங்கக்கூடிய சங்கங்களை நிறுவும் பணி முடிவுற்றதும் இம் மாநிலத்தில் இத்தகைய கடன் சங்கங்கள் 4,800 இருக்கும். இத் திட்டம் செயல்படுவதற்கு முன்னர் இத் தகைய சங்கங்கள், 11 ஆயிரம் இருந்தன. 150 கடன் சங்கங்களுடன் இணைந் துள்ள 507 துணைச் சங்கங்களை மூடியதன் மூலம் அந்தக் கடன் சங்கங்கள் செம்மையான முறையில் செயலாற்றக் கூடிய சங்கங்களாக மாற்றப்பட்டன. 1966–67-ல் மேற்கொண்டும் 81 சங்கங்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டுள் ளன. 1967–68-ல் இத்தகைய 300 சங்கங்களை உருவாக்குவது என்பது குறிக்கோள் அளவாயிருக்க, இதுவரை 100 சங்கங்கள் அவ்வாறு உருவாக் கப்பட்டுள்ளன.

14. கிராம மக்கள் சேமித்து வைத்துள்ள தொகைகளைத் திரட்டுவதற் காக, கிராமப் பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இம் மாநிலத்தில் நான்காவது திட்ட காலத்தில் 16 மத்திய வங்கிகள் 100 கிளைகள் ஏற் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 41 கிளைகள் 1966–67-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. 1967–68-ம் ஆண்டில் 20 கிளைகள் தொடங்குவ தெனத்திட்ட மிட்டிருக்க இதுவரை 10 கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளைக்கும் மூன்றுண்டு வரை ரூ. 10 ஆயிரம் அரசாங்க நிதி உதவி யளித்து வருகிறது. மத்திய வங்கிகள் இக் கிளைகளை வைத்து வருவதற் காகவே இவ்வாறு ஆண்டுதோறும் படிப்படியாகக் குறையும் நிதி உதவி யளிக்கப்படுகிறது.

15. தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியும் அத்துடன் இணைந்துள்ள 105 ஆரம்பச் சங்கங்களும் இம் மாநிலத்திலுள்ள குடியான வர்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கி வருகின்றன. 1966–67-ம் ஆண்டில் இந்த வங்கிகள், மொத்தம் ரூ. 3·79 கோடி கடன் வழங்கி யுள்ளன. பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின் கீழ் நிலமீட்பு நிதி உதவித் திட்டத்தின்படிக் கொடுக்கப்படுகிற கடனும் இதிலடங்கும். நடப்பாண்டாகிய 1967–68-ல் இயல்பான திட்டத்தின் கீழ் இந்த வங்கிகள் நீண்ட காலக் கடனாக ரூ. 2·19 கோடி வழங்கியுள்ளன. பரம்பிக்குளம்— ஆளியாறு திட்டத்தின் கீழ், நிலப் பண்பாடு சிறப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 28·62 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. முதலில் குறிப்பிட்டுள்ள தொகை யில் 80 சத வீதத் தொகை நில மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டது. நில அடைமான ஆரம்ப வங்கிகள் கடன் வழங்குவதில் உள்ள தாமதத்தைக் குறைக்கும் பொருட்டு மத்திய நில அடைமான வங்கிகளை முன்னதாக எழுதிக்கேட்காமல் ரூ. 3 ஆயிரம் வரையில் கடன் வழங்க அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

16. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், பல்லடம் ஆகிய வட்டங்களில் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தினுல் பயனடையவிருக்கும் நிலங்களைப் பண்படுத்துவதற்கான சிறப்புத் திட்டத்தின் கீழ், கடன்கள் விரைவில் வழங்கப்படுவதற்கு வசதியாக இருக்கும் வகையில் தமிழகக் கூட்டுறவு மத்திய நிலஅடைமான வங்கி மேற்படி திட்டப் பகுதியில் கிளை அலுவலகம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பொள்ளாச்சியிலும் உடுமலைப் பேட்டையிலும் உள்ள நில அடைமான ஆரம்ப வங்கிகளிடம் ரூ. 350 லட்சம் கடன் வேண்டி இதுவரை 6,784 கடன் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த வங்கிகள் இதுவரை 4,677 விண்ணப்பதார்களுக்கு கடன்கள் வழங்கியுள்ளன. இவ்வரையில் ரூ. 222 லட்சம் கடன் வழங்கப்பட்டது. இதுவரை 17,(30 ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டுள்ளன. இவ்வேலைத் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கத் தேவைப்படும் நிதிகளை மத்திய நில அடைமான வங்கி சிறப்பு வளர்ச்சிக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலம் திரட்டுகின்றது. இதற்கு அரசும வேளாண்மை மறு கடனுதவிக் கழகமும் முறையே 1 : 3 என்னும் விகிதத்தில் தொகை வழங்குகின்றன. மத்திய நில அடைமான வங்கி 1967–68-ம் ஆண்டுக் காலத்தில் இதுவரை ரூ. 80 இலட்சம் மதிப்புள்ள சிறப்பு வளர்ச்சிக கடன் பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

17. பெருமளவில் நிறுவனங்கள் மூலமாகக் கடனுதவி யளிக்கும் முறைக்கு ஊக்கமளிக்கவே அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. இதன்படி, தமிழக கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி, சாதாரணமாக ரூ. 4 கோடிக்கு கடன் பத்திரங்களை வெளியிடுவதற்குப் பதிலாக நடப்பு ஆண்டில் (1967–68) ரூ. 5·25 கோடிக்கு கடன் பத்திரங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இந்தக் கடன் பத்திரங்களில் கணிசமான அளவில் முதலீடு செய்வதற்கு மத்திய மாநில அரசாங்கங்கள் முன் வந்துள்ளன. மத்திய நில அடைமான வங்கி இதுவரை நடப்பு ஆண்டில் ரூ. 400 இலட்சம் மதிப்புள்ள சாதாரண வகைக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிட்டுள்ளது. இதில் ரூ. 132·73 இலட்சம் மதிப்புள்ள ஆவணங்களை அரசாங்கம் வாங்கியுள்ளது. இந்த 400 இலட்சம் ரூபாய்த் தொகையில் நில அடைமான வங்கிகள் சிறு பாசனப் பணிகளுக்கு மட்டும் சுமார் 158 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய நில அடைமான வங்கி எஞ்சிய ரூ. 125 இலட்சம் மதிப்புள்ள கடன் பத்திரங்களை 1968 மார்ச் திங்களுக்கு முன்பு வெளியிடும் என்று எதிர்பார்க்கிறோம். இதில் கணிசமான பகுதி மேலும் பல சிறு பாசனப்பணிகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.

18. கடனுதவியளிக்கும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவியை இயன்ற வரை முற்றிலும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைக் கருதி அடுத்த ஆண்டிலிருந்து கிணறுகளைத் தோண்டுதல் விசை ஏற்றங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான கடன்களையும் நில அடைமான வங்கிகள் மூலமாகவே வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கை உரையில் தெரிவித்துள்ளார். 1968–69-ல் மத்திய நில அடைமான வங்கியின் கடன் பத்திரங்களில் அரசாங்கம் ரூ. 2 கோடி முதலீடு செய்யும். மத்திய நில அடைமானவங்கி அடுத்த ஆண்டில் கடன் பத்திரங்களை வெளியிட்டு ஏறத்தாழ 8·7 கோடி ரூபாய் திரட்டும் என்றும், சிறு பாசனத்திட்டங்களுக்காக குறைந்தது ரூ. 6·7 கோடியாவது பயன்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

19. தமிழகக் கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி கடன் வழங்கும் தனது பணிகளுக்காக (சாதாரணக் கடன் பத்திரத் திட்டத்தின் கீழும் சிறப்புக் கடன் பத்திரத் திட்டத்தின் கீழும்) கடன் பத்திரங்களின் மூலமாகத் திரட்டுகின்ற கடன்களுக்குப் பெருமளவாக ரூ. 30 கோடி வரை அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது. இந்த உத்தரவாதத்தை ரூ. 45 கோடியாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

20. **வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறும் வேலைத் திட்டங்கள்.**—குறிப்பிட்ட சில வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்கு வேளாண்மை மறு கடனுதவிக் கழகம் மறு கடன் வசதிகளை





அளித்துள்ளது. வேளாண்மை மறு கடனுதவிக் கழகம் மறு கடன் வசதிகளை எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வழங்குகிறதெனில் ஒவ்வொரு சிறப்பு வேலைத் திட்டத்தின் பொருட்டும் தமிழகக் கூட்டுறவ மத்திய நில அடைமான வங்கி சிறப்புக் கடன் பத்திரங்களின் மூலம் நிதி திரட்ட வேண்டும், மற்றும் வேளாண்மை மறு கடனுதவிக் கழகமும் மாநில அரசும் முறையே சிறு பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரை 90 : 10 என்னும் விகிதத்திலும் ஏனைய திட்டங்களைப் பொறுத்தவரை 75:25 என்னும் விகிதத்திலும் இந்தக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யும் என்பதாகும். தமிழகக் கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியின் மூலமாக வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்திடமிருந்தும் மாநில அரசாங்கத்திடமிருந்தும் மறு கடன் வசதியைப் பெற்று செயல் படுத்தப்பட்டு வருவனவும், செயல்படுத்த எண்ணியுள்ளனவுமாகிய வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்தின் ஒப்புதலைப் பெற்ற சிறப்பு வேலைத் திட்டங்களைக் கீழ்க்காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

| வேலைத் திட்டத்தின் பெயர். | வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்திற்கு (சிறப்பு வளர்ச்சிக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யும் வகையில்) வழங்கப் பொறுப் பேற்ற தொகை. | மாநில அரசாங்கத்திற்கு சிறப்பு வளர்ச்சித் திட்டக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலமாக வழங்க பொறுப் பெற்ற தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1 பரம்பிக்குளம் ஆளியாறு திட்டப் பகுதியில் உள்ள நிலங்களைப் பண்படுத்துவதற்கு நிதி உதவி அளிப்பதற்கான வேலைத் திட்டம். | 337·50 | 112·50 |
| 2 கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மரங்கள் வளர்ப்போருக்கு நிதி உதவி அளிப்பதற்கான வேலைத் திட்டம். | 18·00 | 6·00 |
| 3 நீலகிரி மாவட்டத்தில் சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கு நிதி உதவியளிக்கும் வேலைத் திட்டம். | 37·50 | 12·50 |
| 4 புதுக்கோட்டை — திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கிணறுதோண்டும் வேலைத் திட்டங்கள். | 83·25 | 9·25 |
| 5 கோயம்புத்தூர் மாவட்டத்தின் தொண்டாமுத்தூரில் கிணறு தோண்டுவதற்கான வேலைத் திட்டம். | 151·20 | 16·80 |
| 6 தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னைத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்காகக் கடன் வழங்குவதற்கான வேலைத் திட்டம். | 23·625 | 7·875 |
| 7 சென்னை — செங்கற்பட்டு மாவட்டங்களில் மீன்வள மேம்பாட்டிற்கான வேலைத் திட்டம். | 18·00 | 6.35 |

மேலே குறிப்பிட்ட எழு வேலைத் திட்டங்களுடன் மொத்தம் 570 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இம் மாநிலத்தின் பல் வேறு இடங்களில் கிணறுகளைத் தோண்டுதல், விசை ஏற்றங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான ஐந்து வேலைத் திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் குறித்து இறுதியாக முடிவெடுக்கப்பட்டவுடன் வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்தின் ஒப்புதலைப் பெறுவதற்காக அவை அனுப்பி வைக்கப்படும். இக்கழகம் தமிழகக் கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியின் சிறப்புக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலமாக மேற்படி வேலைத் திட்டங்களுக்காகும் செலவில் 90 சதவீதத்தை ஈடுகட்டும்.

## II கூட்டுறவு விற்பனை.

21. கூட்டுறவு விற்பனைத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

### (அ) நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்டத்தில் செலவு. | நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம். | 1966–67-ல் செலவு | 1967–68-ல் நிதி ஒதுக்கம். | 1967–68-ல் செலவு (31–12–67 வரை) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கூட்டுறவு விற்பனை (கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அரசின் உதவி). | 168·45 | 523·84 | 34·09 | 33·68 | 26·13 |

### (ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்.

| இனங்கள். | மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் நிலைமை. | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966-67-ல் சாதனைகள். | 1967–68-ல் இலக்கு. | 1967–68-ல் சாதனைகள் (31–12–67 வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் எண்ணிக்கை. | 126 (ஆரம்ப கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒருதலைமை கூட்டுறவு விற்பனைச் சங்கம்). | 130 | இலக்கு இல்லை. | இலக்கு இல்லை. | இலக்கு இல்லை. | .. |
| கட்டிய கிடங்குகள் .. | 442 | 1,472 | 2,674 | 60 | 100 | 57 |



| இனங்கள். | மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் நிலைமை. | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966–67-ல் சாதனைகள். | 1967–68-ல் இலக்கு. | 1967–68-ல் சாதனைகள் (31–12–67 வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| எத்தனை லாரிகள் வாங்க நிதி உதவி வழங்கப்பட்டது. | 10 | 27 | .. | 4 | 20 | 17 |
| கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு அரசு வழங்கிய தொகை (ரூ. லட்சத்தில்). | 28·96 | .. | 108·25 | 20·36 | 12·00 | 10·00 |
| நிர்வாகப் பணியாளர்களுக்கு வகை செய்யப்பட்ட கூட்டுறவு விற்பனை சங்கங்களின் எண்ணிக்கை. | 80 | 112 | .. | .. | .. | .. |
| விற்பனை செய்த விளை பொருள்களின் மதிப்பு (ரூ. கோடியில்). | 4·94 | 19·19 | 30·00 | 17·86 | 20·00 | 18·04 |
| நிறுவப்பட்ட சர்க்கரை ஆலைகள் | 4 | 6 | 3 | 1 | .. | .. |
| சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்கு அரசு வழங்கிய தொகை (ரூ. லட்சத்தில்). | 75·00 | 145·00 | 100·00 | 22·50 | 20·00 | 0·43 |

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது விற்பனை வசதி மேம்பாட்டுக்காக ஒரு வேலைத் திட்டம் வகுக்கப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் சர்க்கரை ஆலைகள் உட்பட கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்படும் விளை பொருளின் மதிப்புக்கென 20 கோடி ரூபாய் என்ற இலக்கு நிச்சயிக்கப்பட்டது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்த பண்டங்களின் மதிப்பு 19·19 கோடி ரூபாயாக இருந்தது. (1967–68-ம் ஆண்டில் 31–12–1967 வரையில்) கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்த விளை பொருள்களின் மதிப்பு ரூ. 18·04 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு முழுவதற்கும் நிச்சயிக்கப்பட்ட இலக்கு 20 கோடி ரூபாயாகும்.

22. வேளாண்மை விற்பனையில் பெருமளவு முன்னேற்றத்தை எய்தும் பொருட்டு, பண்டங்களை வேலை முறைக்குட்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டுக் கழகம், திருநெல்வேலி மாவட்ட வழங்கல்-விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அரசாங்க உதவியுடன் பெரிய அளவில் அரிசி ஆலைகள் நிறுவியுள்ளன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டுக் கழகம், ரூ. 38 லட்சம் செலவில் உலரவைக்கும் இயந்திரங்கள், கொதிகலன்

இயந்திரங்கள் முதலியவற்றுடன் நவீன அரிசி ஆலை ஒன்றை நிறுவி யுள்ளது. ஒரு மணி நேரத்தில் அது 4 டன் நெல் அரைக்கும் திறன் கொண்டுள்ளது. இந்த ஆலை நாள் முழுவதும் செயல்பட்டால் ஓர் ஆண்டில் 30 ஆயிரம் டன் நெல் அரைக்கமுடியும். புதுடில்லி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுக் கழகத்தின் முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் ஒரு மணிக்கு 2 டன் நெல் அரைக்கும் திறனுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் ரூ. 111 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 13 நவீன அரிசி ஆலை கள் நிறுவப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இக்கூட்டுக் கழகம் ரூ. 83·25 லட்சம் தொகையை இதுவரை அளித்துள்ளது. இந்த அரிசி ஆலைகள் எங்கு அமைப்பதென்பது விரைவில் தீர்மானிக்கப்படும்.

23. 1965–66-ல் 35 லட்ச ரூபாய் செலவில் ஒவ்வொன்றிலும் 500 டன் கொள் அளவு இருக்கும் வகையில் 36 ரயில் நிலையக் கிடங்குகள் கட்டுவதற்கும் 100 டன் கொள் அளவு கொண்ட 61 சில்லரைக் கிடங்குகள் கட்டுவதற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. முமமுரத் திட்டப் பகுதித் திட்டம், மாவட்ட வேளாண்மை முமமுரத் திட்டம் ஆகிய பகுதி களில் இந்தக் கிடங்குகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கிடங்குகள் கட்டும் சாதாரணத் திட்டத்தின்கீழ் மூன்றாவது திட்டக் கால இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் 1,472 கிடங்குகளை நிறுவியுள்ளது. 1966–67-ல் அவைகள் 60 கிடங்குகளைக் கட்டின. நடப்பு ஆண்டில் 100 கிடங்கு கள் கட்ட இலக்கிடப்பட்டிருக்க 57 கிடங்குகள் ஏற்கெனவே கட்டிமுடிக்கப் பட்டுள்ளன. மேலும் 43 கிடங்குகள் பல நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

### III. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.

24. இம்மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் 7 சர்க்கரை ஆலைகள் உள்ளன. வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூரிலும் சேலம் மாவட்டம் மோகனூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்திலும் தென் ஆர்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியிலும் உள்ள சர்க்கரை ஆலைகள் இந்த ஆண்டில் கரும்பைச் சாறுக்கிச் சர்க்கரை செய்யும் பணியைத் தொடர்ந்து செய்கின்றன. ரூ. 167·50 லட்சம் அளவிற்கு இந்தச் சர்க்கரை ஆலைகளில் அரசாங்கம் பங்கு மூலதனம் போட்டுள்ளது. இந்தச் சர்க்கரை ஆலைகளில் ஆடிய கரும்பின் அளவும் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| சர்க்கரை ஆலைகளின் பெயர். | 1966–67 ஆலை ஆடிய கரும்பின் அளவு. | 1966–67 உற்பத்தி செய்த சர்க்கரை அளவு. | 1967–68 ஆலை ஆடிய கரும்பின் அளவு. | 31–12–1967 வரையில் உற்பத்தி செய்த சர்க்கரை அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (லட்சம் டன்களில்.) | | | |
| 1 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1·23 | 0·12 | 0·42 | 0·04 |
| 2 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1·14 | 0·11 | 0·17 | 0·02 |
| 3 அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 0·58 | 0·05 | .. | .. |
| 4 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 0·91 | 0·09 | 0·15 | 0·02 |
| 5 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 0·22 | 0·02 | 0·11 | 0·01 |
| 6 தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அலங்கநல்லூர், மதுரை மாவட்டம். | 0·04 | 0·002 | .. | .. |
| 7 தர்மபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | உருவாகும் நிலையில் உள்ளது. | | | |



25. வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கம் பழங்களை டப்பிகளில் அடைக்கும் தொழிற்பிரிவு ஒன்றை நிறுவத் திட்ட மிட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் ரூ. 8·511 லட்சம் நிதி உதவி வழங்கி யுள்ளது. இத் தொழிற்பிரிவைத் தொடங்குவதற்காக ரூ. 11·35 லட்சம் செலவாகுமென முதற்கண் மதிப்பிடப்பட்டது. இச் செலவுமதிப்பீடு இப் போது ரூ. 20 லட்சமாக அதிகரித்துள்ளது. இச் சங்கம் கூடுதலான நிதி உதவி வேண்டி அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொண்டுள்ளது.

### IV. கூட்டுறவுப் பண்ணை

26. கூட்டுறவுப் பண்ணை குறித்த நிதி இலக்குகளும் திட்ட இலக்கு களும், சாதனைகளும் பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

(அ) நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்டச் செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 செலவு. | 1967–68 நிதி ஒதுக்கம். | 1967–68 செலவு (31–12–67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| கூட்டுறவுப் பண்ணை (அரசாங்க உதவி) | 37·79 | 10·00 | 1·20 | .. | .. |

(ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்.

| இனம். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966–67 சாதனை. | 1967–68 இலக்கு. | 1967–68 சாதனை (31–12–67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அமைக்கப்படவிருக்கிற சங்கங்களின் எண்ணிக்கை— | | | | | |
| 1 முன்னோடித் திட்டப் பகுதிகளில் கூட்டுப் பண்ணை கூட்டுறவுச் சங்கங்கள். | 76 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | | |

### IV. கூட்டுறவு பண்ணை—தொடர்ச்சி.

#### (ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்—தொடர்ச்சி.

| இனம். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966-67 சாதனை. | 1967-68 இலக்கு. | 1967-68 சாதனை (31-12-67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2 முன்னோடித் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் கூட்டுப் பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள். | 31 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | | |
| 3 இணைப்பு பண்ணைச் சங்கங்கள். | 2 | | | | |
| 4 குத்தகைக்காரர் பண்ணைச் சங்கங்கள். | 100 | 20 | .. | .. | .. |
| 5 அரிசனங்களுக்காக கூட்டுறவு நிலக்குடியேற்றுக் கூட்டுறவுச் சங்கங்கள். | 57 | .. | .. | .. | .. |
| 6 கிராமதானச் சங்கங்களும் பூதானச் சங்கங்களும். | 27 | .. | .. | .. | .. |

27. தற்போதுள்ள சங்கங்களை ஒருங்கிணைத்து அவை திறம்படச் செயல்பட வகை செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. சங்கங்கள் வேண்டுமென்று மக்கள் விரும்பிக் கேட்டும் பகுதிகளிலும், சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் உள்ள பகுதிகளிலும் மட்டுமே புதிய சங்கங்கள் தொடங்கப்படும்.

### V. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்

28. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் குறித்த நிதி இலக்குகளும், திட்ட இலக்குகளும் சாதனைகளும் பற்றிய விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

#### (அ) நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்டக் காலத்தில் சாதனை. | நான்காவது திட்ட மொத்த ஒதுக்கம். | 1966-67 சாதனை. | 1967-68 ஒதுக்கம். | 1967-68 சாதனை (31-12-67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும். | 34·42 | 39·13 | 5·485 | 4·22 | 1·44 |



### V. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்—தொடர்ச்சி.

#### (ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்.

| இனங்கள். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966-67 சாதனை. | 1967-68 இலக்கு. | 1967-68 சாதனை (31-12-67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கூட்டுறவு நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட இருப்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குரிய நிறுவனங்களின் எண்ணிக்கை. | 7 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | | |
| மேற்படி நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை. | 4,024 | 5,000 | 1,354 | 1,120 | 1,420 |
| கூட்டுறவுத் துறையில் வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குரிய நிறுவனங்களின் எண்ணிக்கை. | 1 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | | |
| பயிற்சி பெற்ற உறுப்பினர்கள், உறுப்பினராக இருப்பவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை. | 162,326 | 160,000 | 6,000 | 1967-68-ல் இத் திட்டம் கைவிடப்பட்டது. | |
| கூட்டுறவுச் சங்கங்களில் சம்பளம் பெறும் அல்லது கௌரவச் செயலாளர்களின் அல்லது நிர்வாகிகளின் எண்ணிக்கை. | 2,328 | 8,000 | 1,479 | 1967-68-ல் இத் திட்டம் கைவிடப்பட்டது. | |

29. கூட்டுறவுக் கல்விப் பயிற்சியின்கீழ் வரும் வேலைத் திட்டங்களை சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் செயல்படுத்துகிறது.

[1968 மார்ச் 21

## VI. பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

30. பயன்கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி இலக்குகள், திட்ட இலக்குகள், சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### (அ) நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்டக் காலச் செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 செலவு. | 1967–68 நிதி ஒதுக்கம். | 1967–68 செலவு (31–12–67 வரை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| பயன்கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள். | 16·47 | 6·30 | 39·73 | 24·50* | 6·98 |

### (ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்.

| இனங்கள். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 சாதனை. | 1967–68 நிதி ஒதுக்கம். | 1967–68 சாதனை (31–12–67 வரை.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அரசு பங்கு மூலதனம் செலுத்தும் பண்டக சாலைகளின் எண்ணிக்கை (மொத்த விற்பனை ஆரம்ப சங்கங்கள்). | 133 | 4 | 4 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | |
| கீழ்க்கண்டவற்றுக்காக உதவி வழங்கப்படும் பண்டகசாலைகளின் எண்ணிக்கை— | | | | | |
| (அ) எண்ணெய் ஆடும் எந்திர செக்குகள் நிறுவுதல். | 17 | .. | .. | .. | .. |
| (ஆ) காப்பிக்கொட்டை அரைக்கும் எந்திரங்கள் நிறுவுதல். | 45 | .. | .. | .. | .. |
| (இ) கிடங்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல். | 15 | .. | .. | .. | .. |
| (ஈ) பண்டங்கள் வீடுதோறும் வழங்குவதற்கான வண்டிகளை வாங்குதல். | 49 | .. | .. | .. | .. |

*இந்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை.



1968 மார்ச் 21]

## VI. பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்—தொடர்ச்சி.

| இனங்கள். | மூன்றாவது திட்ட இறுதியில் நிலைமை. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 சாதனை. | 1967–68 நிதி ஒதுக்கம். | 1967–68 சாதனை (31–12–67 வரை.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (உ) நிர்வாக உதவி அளிக்கப்பட்ட பண்டகசாலைகளின் எண்ணிக்கை. | 240 | 20 | .. | 17 | 17 |
| (ஊ) நிறுவப்பட்ட பல பொருள் அங்காடிகளின் எண்ணிக்கை. | .. | 6 | 5 | 7 | .. |

31. விலைவாசிகள் உயராமல் தடுக்கவும் பொது மக்களுக்கு முக்கியமான பொருள்கள் நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்காகவும் மொத்த வணிகப் பண்டகசாலைகளையும் ஆரம்பப் பண்டகசாலைகளையும் நிறுவுவது குறித்த திட்டம் 50,000-மும் அதற்குமேற்பட்ட மக்கள் தொகையும் கொண்ட நகரங்களிலும், மாநகரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 29 மொத்த வியாபாரப் பண்டசாலைகளும், 669 ஆரம்பப் பண்டகசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களில் பங்கு முதலீடு செய்வதன் மூலமும் மூலதன முதலீடு செய்வதன் மூலமும் இழு வண்டிகள் வாங்குதல், கிடங்குகள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மூலமும் அரசாங்கம் இப் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி வழங்குகின்றது. மேலும் இம் மாநிலத்தில் 1,100 ஆரம்பப் பண்டகசாலைகளும், மொத்த வியாபாரப் பண்டகசாலைகளைச் சேர்ந்த 452 சில்லறை விற்பனை நிலையங்களும் இம் மாநிலத்திலுள்ளன.

32. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட நகரங்களிலும் மாநகர்களிலும் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1966–67-ல் மேற்கொள்ளப்பட்டது. விலைவாசி உயராமல் தடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ் 1966–67-ல் ஏற்படுத்த திட்டமிடப்பட்ட 6 அங்காடிகளில் 5 அங்காடிகள் தொடங்கப்பட்டன. தென் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 1966–67-ல் ஒரு அங்காடி தொடங்கப்பட்டது. நடப்பாண்டில் வட சென்னையில் பல பொருள் அங்காடி ஒன்று நிறுவப்படும். இது ஆறுவது அங்காடி ஆகும். ஏற்கெனவே 1966–67-ல் தொடங்கப்பட்டுள்ள அங்காடிகள் அவை தொடங்கப்பட்ட தேதியிலிருந்து 1967 மார்ச்சு 31-ம் தேதி வரையில் ரூ. 98 லட்சம் மதிப்புள்ள இன்றியமையாப் பொருள்களை பொதுமக்களுக்கு விற்றன. இவை 1967 ஏப்ரல் 1-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரை ரூ. 2·57 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்றன. பல பொருள் அங்காடிகளுக்கு அரசாங்கம் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்கியது :—

| | ரூபாய் லட்சத்தில். |
|---|---|
| பங்கு மூலதனம் .. .. .. .. .. .. | 19·00 |
| மேசை, நாற்காலி போன்ற பொருள்கள்— | |
| கடன் .. .. .. .. .. .. .. | 10·27 |
| உதவித் தொகை .. .. .. .. .. | 3·43 |
| நிர்வாக உதவித் தொகை .. .. .. .. | 0·60 |

33. 1967-68-ல் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1·50 லட்சம் முதற்கொண்டு 2·00 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்களிலும், மாநகர்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலூர், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, நாகர்கோயில் ஆகிய இடங்களில் பல பொருள் அங்காடிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் வேலூரில் உள்ள அங்காடி 1968 பிப்ரவரி 11-ம் தேதி முதற்கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

34. இம் மாநிலத்திலுள்ள மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இன்றியமையாப் பொருள்கள் அனைத்தையும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறுவதற்கு உதவி செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு பயன்கொள்வோர் கூட்டுறவுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இக் கழகத்திற்கு அரசாங்கம் பங்கு மூலதனம் குறித்து ரூ. 2 லட்சமும், நிர்வாக உதவித் தொகையாக ரூ. 0·50 லட்சமும் நிதி உதவி வழங்கியது.

35. பயன்கொள்வோர் மகளிர் பண்டகசாலைகள் 15 சென்னை மாநகரில் செயல்படுகின்றன. மாவட்டங்களில் 11 பண்டகசாலைகள் செயல்பட்டுவருகின்றன. இவற்றைத்தவிர, அரசாங்க ஊழியர்களின் நன்மைக்காக சென்னை மாநகரிலும், மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இம் மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்காகவும் மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்காகவும்கூட பண்டகசாலைகள் உள்ளன.

36. பயன்கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தவிர கிராமப் பகுதிகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குவதற்கான 5,000 கிராமக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

## VII. சமுதாயத்தில் பின்னடைந்துள்ள வகுப்பினர்களுக்கு உதவும் பல்வகைச் சங்கங்கள்

37. தொழில் தேர்ச்சி பெற்றுள்ள தொழிலாளிகள், தொழில் தேர்ச்சி பெறாத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளிகள், முடி திருத்துவோர் போன்ற சமுதாயத்தில் பின்னடைந்துள்ள மக்களுக்கு உதவும் நோக்கத்துடன் அவர்களுக்காகவென்றே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சங்கங்களின் வளர்ச்சி குறித்த விவர அறிக்கை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது :—

(அ) நிதி இலக்குகளும் சாதனைகளும்.

| சங்கங்களின் வகை. | மூன்றாவது திட்டச் செலவு. | நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம். | 1966-67 செலவு. | 1967-68 நிதி ஒதுக்கம். | 31-12-1967 வரையில் செலவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| பல்வகைச் சங்கங்கள் (சங்கங்களுக்கு அரசாங்கத்தின் உதவி). | 13·17 | 70·92 | 2·97 | நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. | |



(ஆ) திட்ட இலக்குகளும் சாதனைகளும்.

| பல்வகைச் சங்கங்கள். | மூன்றாவது திட்டச் சாதனை. | நான்காவது திட்ட இலக்கு. | 1966-67 சாதனை. | 1967-68 இலக்கு. | சாதனை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 அமைக்கப்படவிருக்கும் மாவட்டத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களின் எண்ணிக்கை. | 1 | 5 | 1 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | |
| 2 அமைக்கப்படவிருக்கும் சலவைத் தொழிலாளர் சங்கங்களின் எண்ணிக்கை. | 12 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | | |
| 3 வாடகை காரோட்டிகளின் நலனுக்காக அமைக்கப்படவிருக்கும் சங்கங்களின் எண்ணிக்கை. | 1 | 1 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | | |
| 4 அமைக்கப்படவிருக்கும் முடி திருத்துவோர் சங்கங்களின் எண்ணிக்கை. | 13 | 4 | 4 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | |
| 5 அமைக்கப்படவிருக்கும் உப்பளத் தொழிலாளர் சங்கங்களின் எண்ணிக்கை. | 12 | 5 | 1 | இலக்கு முடிவு செய்யப்படவில்லை. | |

38. சமுதாயத்தில் பின்தங்கியுள்ளோர் நலனுக்காக இம் மாநிலத்தில் 96 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கும் கருவிகள் வாங்குவதற்காக அவற்றின் தொழில் மூலதனத்திற்கும் சேம நிதிக்கும் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

39. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சங்கம் என்ற வீதத்தில் 12 சலவைத் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பங்கு மூலதனம் குறித்தும் சலவைப் பெட்டி, மேசை, சலவைச் சோடா போன்றவற்றை வாங்கவும் இச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது. இச் சங்கங்களுடன் இணைந்தாற்போல் இரண்டு சலவைச் சாலைகள் செயல்படுகின்றன.

## VIII. வீட்டு அடைமானச் சங்கங்கள்

40. இம் மாநிலத்தில் 45 ஆரம்ப வீட்டு அடைமானச் சங்கங்களும், வீட்டு அடைமான மத்திய சங்கமொன்றும் செயல்பட்டு வருகின்றன. 1966-67-ம் ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 99·98 லட்சம் அளவிற்கு கடன் வழங்கின. 1967-68-ம் ஆண்டில் 1967 டிசம்பர் 31-ம் தேதி வரையில் இவை ரூ. 60·80 லட்சம் அளவுக்கு கடன் வழங்கின. தமிழ்நாடு வீட்டு அடைமான மத்தியக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் குறித்து அரசாங்கம் ரூ. 2 லட்சம் வழங்கியுள்ளது. வீட்டு அடைமான மத்தியச் சங்கத்தில் முதலீடு செய்துள்ள தவணை வைப்புத் தொகையை ரூ. 50 லட்சம் வரையில் திருப்பிச் செலுத்தவும், ஆயுள் ஈட்டுறுதிப் பொறுப்பாண்மைக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களை ரூ. 2 கோடி வரையில் திருப்பிச் செலுத்தவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

## IX. கொள்முதல் பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு

41. கொள்முதல் பணிகளில் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கு கொள்கின்றன. ஆனால், இவை குறித்து திட்டவட்டமான இலக்கு எதுவும் முடிவு செய்யப்படவில்லை. ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை மனநிறைவு தரும் வகையில் இருந்து அவை எல்லா வசதிகளையும் பெற்றிருந்தால் நெல் கொள்முதல் வேலையில் அவை அரசாங்கத்தின் முகவர்களாக நியமிக்கப்படுகின்றன. பிற நேர்வுகளில் மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கங்கள் அரசாங்க முகவர்களாக நியமிக்கப்படுகின்றன. இச்சங்கங்கள் கொள்முதல் வேலைக்காக ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்களது துணை முகவர்களாக நியமிக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம் பெரிய அளவில் கொள்முதல் வேலையை மேற்கொள்கின்றது. 15 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும், 565 கிராமப் பிரிவுகளும் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1967-ம் ஆண்டில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் 1·10 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தது. இந்த நெல்லின் மதிப்பு ரூ. 4·95 கோடியாகும். இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட குறுவை நெல்லின் அளவு 95,102 டன் ஆகும்.

வெளியீடு—21—10—1968]
Issued—21—10—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1968 மார்ச் 22

Friday, 22nd March 1963

தொகுதி XII—எண். 3

Volume XII—No. 3

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

# தமிழக சட்டப் பேரவை

**வெள்ளிக்கிழமை, 1968 மார்ச் 22.**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்,* **திரு. சி. பா. ஆதித்தனார்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண்கள்* **278, 279, 280 281** *தள்ளிவைக்கப்படுகின்றன.*

*Applications for bus permits*

* 282 Q.—Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that applications for the grant of bus permits are pending before the Regional Transport Authorities in the State ; and

(*b*) if so, the total number of applications pending in each district for mufussil buses and town buses, separately ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) *சட்டப் பேரவை முன் விவர அறிக்கை*[a] *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.*

**திரு. என். எஸ். வி. சித்தன் :** *பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் இருந்து திருநெல்வேலி மாவட்டத்தைப்பற்றி குறிப்பு எதுவும் இல்லை என்று தெரிகிறது. அங்கேயிருந்து மனுக்கள் வரவில்லையா ? அல்லது எந்த மனுவும் இல்லாமல் தீர்க்கப்பட்டுவிட்டனவா ?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *மனுக்கள் வராமல் இல்லை. வந்த மனுக்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டுவிட்டன.*

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** *தலைவர் அவர்களே, இப்போது பஸ் ரூட்டுகளுக்கு பெண்டிங்காக இருக்கும் நிலையைப் போக்குவதற்கு பஸ் அதிபர்களிடத்திலே ரூட்டுகளைப பெறுவதற்கான போட்டிகளை ஏற்படுத்துவதன்மூலம் பஸ் ரூட்டுகளை எல்லாம் ஏலத்தில் விட்டால் அதன் மூலம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் என்பதால் அந்த முறையைக் கொண்டுவர உத்தேசம் உண்டா?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அப்படி ஒரு எண்ணமும் ஆசையும் உண்டு. ஆனால் சட்டம் இடம் தராது. மத்திய அரசின் சார்பாகத்தான் இந்தச் சட்டம் வந்தாக வேண்டும்.*

**திரு. வி. கே. கோதண்டராமன் :** *பஸ் ரூட்டுகளுக்காக வந்த மனுக்களை உடனுக்குடனே பரிசீலனை செய்து அவற்றிற்கான தீர்வு காணக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமை இல்லையா? அதனால் இன்றைக்கு போக்குவரத்திற்கு மக்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள் என்று தெரியுமா? துரிதமாக அவற்றை பரிசீலனை செய்வதற்கு உத்தேசம் உண்டா?*

---

a 3[illegible]4-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 22

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி சங்கடங்கள் இருக்கின்றன என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் உணருவதுபோலவே இந்த அரசும் உணருகிறது. ஆனால் இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிற 290 வழித்தடங்களும் இப்போது நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் அல்லது ஒத்திவைக்கப்பட்டிருப்பதற்குக் காரணத்தை புரிந்துகொண்டோமானால் நாம் அசிரத்தையாக இல்லை என்பது தெரியும். நீதிமன்றத்தினால் தடை செய்யப்பட்டவை 137, வட்டாரப்போக்குவரத்து அதிகாரிகளின் ஆலோசனையில் உள்ளது 106, (57) (3) பிரிவின்கீழ் வெளியிடப்பட்டவை 16, ஏனைய வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் ஒப்புதல் இன்னும் கிடைக்காதவை 12, நாட்டுடமைக் கொள்கை 10, கோட்டப்பொறியாளரின் அறிக்கை கிடைக்காதவை 3, புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டியவை 3, மாநில போக்குவரத்து அதிகாரியால் முடிவு செய்யப்படாமல் உள்ளவை 1, 57 (2) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது 1, மோட்டார் வண்டி ஆய்வாளரின் அறிக்கை கிடைக்காதது 1 என்ற அளவிலே 290 இருக்கின்றன. இதிலே 137 நீதிமன்றத்தாலே தடை செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** சில ரூட்டுகள் சில கம்பெனிகளின் மொனாபலியாக இருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்கு புதிதாக ரூட்டுகள் வேண்டுமென்று கேட்டால் சுலபத்தில் கிடைக்கக்கூடிய விதத்தில அரசு உத்திரவிடுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்கான விதிமுறை இன்று பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, புதிய அரசு பொறுப்பு ஏற்றபிறகு குறைந்த எண்ணிக்கையுடைய பஸ்கள் வைத்திருப்பவர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கவேண்டுமென்று உத்திரவிடுவதற்கு செயற்குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உத்திரவு போடமுடியாது, ஏற்கனவே உள்ள நிலைமைகளை வைத்துக்கொண்டு அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஆர். டி. ஏ.க்கள் தீர்மானம் செய்யவேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை பஸ் ரூட்டுகளைப் பொறுத்த வழக்குகள் எத்தனை ஹைகோர்ட்டில் இருக்கின்றன ? அந்த மனுக்கள் போட்டவர்களுக்கு வேறு மாற்று ரூட்டுகள் செங்கல்பட்டிலே கொடுத்தால் அவர்கள் எல்லாம் வாபஸ் செய்து கொள்வார்கள். எனவே இதைப்பற்றி அரசு ஏதாவது யோசித்ததா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செங்கல்பட்டு மாவட்டத்தில் நீதிமன்றத்திற்குச் சென்றவை 7 வழித்தடங்கள் ஆகும். பஸ் ரூட்டுகள் கொடுத்து பேரம் பேச இந்த அரசு தயாராய் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பஸ்கள் தேசீயமயமாக்கப்பட்ட பிறகு அந்த பஸ் சொந்தக்காரர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்காலிக வழித் தடங்கள் எத்தனை வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏறத்தாழ 50 மாற்று வழித்தடங்கள் ஆர். டி. ஏ. அவர்களால் கொடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, the number of applications from Dharmapuri district is very small comparatively. It is a border district and moreover it is a hilly district. There is huge traffic which is increasing every day. Will the Hon. the Minister for Works be pleased to give a liberal consideration to Dharmapuri district in the matter of giving permits for buses ?



1968 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலே நாம் தாராளமாக இருப்பதுபற்றி எந்தவிதமான மரபும் இல்லை. ஆனால் தர்மபுரி மாவட்டத்திலே 11 வழித்தடங்களில் 8 வழித்தடங்கள் நீதிமன்ற ஆய்விலே உள்ளன. இதிலே அரசு தாராளமாக இருப்பது மாத்திரம் அல்ல, அங்கங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களும் 10 சத விகிதம் பஸ்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டுமென்று அக்கறையோடிருக்கிறார்கள். பஸ் அதிபர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது. தர்மபுரியைப் பொறுத்தவரையில் 11 வழித்தடங்களில் 8 வழித்தடங்கள் நீதிமன்ற ஆய்விலே உள்ளன.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, ஒருவர் பஸ் ரூட் கேட்பதற்கு அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய தொகை முன்னால் குறைவாக இருந்தது, தற்போது உயர்த்தியிருக்கிறார்கள். அதை மேலும் உயர்த்துவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் உயர்த்துவதுபற்றி பிறகு யோசிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் 1—1—68-ம் தேதியில் கோவையில் 235 பஸ்களும், ஈரோட்டில் 417 பஸ்களும், நகர பஸ்களில் 168-ம் 44-ம் இருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தப்பட்ட வழித்தடங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏற்கனவே இந்தக் காலத்திலே 67-ம் ஆண்டு நகர பஸ்கள் எவ்வளவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது? வெளிஊர்களுக்கு செல்லக்கூடிய பஸ்கள் எவ்வளவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்குத் தனி கேள்வி போட்டால் இதைப்பற்றி அறிவிக்கலாம்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள பஸ் ரூட்டுகள் அனைத்தையும் தேசியமயமாக்கவேண்டுமென்ற திட்டம் இருக்க, தனியார் துறையிலிருந்து வந்த விண்ணப்பத்தைப் பரிசீலிக்கக் காரணம்என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி ஒரு மனு இருக்கலாம். அந்த மனு பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். பூபதி :** நகர மன்றங்கள் எந்த அளவிற்கு நகரங்களில் நடத்த பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் ? இனியாவது கேட்டால் அனுமதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நகரமன்றங்களுடைய இலாப நஷ்டக் கணக்கைப் பார்த்தபிறகு நகரமன்றங்கள் பஸ்ரூட்டுகளை எடுத்து நடத்துவதற்கு அவ்வளவு முன்வருவார்களா என்பதை அறிய வியப்பு அடைகிறேன்.

**THIRU T. MARTIN :** May I request the Hon. Minister to state whether there is any proposal pending before this Government for appointing Sub-Judges as Regional Transport Authorities to dispose of applications for bus permits in view of the fact that Collectors are now being overburdened with administrative work ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த விஷயத்தில் பழைய அரசாங்கத்தின் கொள்கையை கடைப்பிடிப்பதாக இந்த அரசு இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** செங்கற்பட்டு மாவட்டத்தில், நாம் தேசியமாக்கியபிறகு, சில வழித்தடங்களைத் தனியார்களுக்குக் கொடுத்தோமே, அவை இப்பொழுது தற்காலிகமாக ஒரு மாதத்திற்குத்தான் கொடுக்கப்பட்டி

ருக்கின்றன, அவையெல்லாம் எப்ரல் முதல் தேதிக்குக் காலாவதியாகின்றன. அதை நிரந்தரமாக்கி கொடுக்க ஏதாவது குறிப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படிக் கொடுக்கும் நேரத்தில், பஸ் முதலாளிகளில் சிறிய பஸ் முதலாளிகளும், பெரிய பஸ் முதலாளிகளும் இருப்பதால், அவர்களுடைய கோரிக்கைகளை விசாரிக்கும்போது, சிறிய ஆபரேட்டர்களுக்கு முதல் ப்ரஃபரன்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியின் நோக்கத்தை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுதாபத்தோடு கவனிப்பார் என்று எண்ணுகின்றேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** 1959-ஆம் ஆண்டில், மதுரை நகர ஜனத்தொகைப் பெருக்கத்திற்கேற்றவாறு, நகர பஸ்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டு, இப்பொழுது உள்ளதைவிட இரண்டு மடங்கு பஸ்கள் விடவேண்டும் என்று அன்றைக்கே ஒரு ரிப்போர்ட் அளிக்கப்பட்டதே, அதை காங்கிரஸ் சர்க்கார்தான் நிறைவேற்றவில்லையென்றாலும் இன்றைக்கிருக்கும் சர்க்காராவது நிறைவேற்றியுள்ளதா? அல்லது இனிமேலாவது நிறைவேற்ற உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுரை நகரத்தில் இன்னும் அதிகமான பஸ்கள் விடப்படவேண்டும் என்று ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரி மதுரை நகரத்திற்கென்று ஓர் அறிக்கையை பழைய அரசாங்கம் இருக்கும்போது தந்தது உண்மை. அதைத் தொடர்ந்து, 12 ரூட்களை மதுரை நகரத்தில் புதிதாகத் திறக்கலாம் என்று போர்டு மெம்பரும் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தார். ஆனால், பழைய அரசாங்கம் அதைக் கவனிக்காமல் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை இப்பொழுது நான் சொல்ல முடியும். கடந்த வாரம்தான், அந்த 12 ரூட்களுக்கு பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** இந்தப் புதிய வழித்தடங்களுக்கு அனுமதி கொடுக்கும்போது, தகப்பன், பிள்ளை, மனைவி என்று இப்படி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல பேர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். அப்படி அவர்களுக்கு அனுமதி கொடுக்கும்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தானா என்று பரிசீலனை செய்து பார்த்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவராக இல்லாமல் தனிப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு அனுமதி கொடுக்க அரசு தீவிர முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்றையதினம் அஸ்ஸாம் மாநிலத்திலே கூட அப்படிப்பட்ட தவறுதல் நடைபெறுவதாகவும், அது உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு ஏற்ற தண்டனை வழங்குவதாகவும் கூட, அஸ்ஸாம் மாநில அமைச்சர் பேசிக்கொண்டிருந்தபோது என்னிடம் குறிப்பிட்டார். அதைப்போல் இங்கு இப்பொழுது செய்யாவிட்டாலும், கூடுமானவரையில் மாவட்டத்தினுடைய ஆட்சித்தலைவர்கள் அவைகளை எல்லாம் கவனித்து, அதைத் தவிர்த்துக் கொண்டு வருகிறார்கள் என்று அறிகின்றேன்.

## குடியாத்தம் வட்டத்திலுள்ள மோர்தானா அணை

* 283 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் மோர்தானாடாம் கட்டும் விஷயமாக மீண்டும் நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) அங்கத்தினரின் இவ்வாலோசனை அரசினரின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதேபோன்று, வடாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மாநிலத்தில் எங்கெல்லாம் சிறிய சிறிய அணைகளைக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் கட்டுவதன் மூலமாக, எதிர்காலத்தில் விவசாய அபிவிருத்தியும் உணவு உற்பத்திப் பெருக்கமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்குமே, அந்த முறையில் சிறிய சிறிய அணைகளை கட்டக்கூடிய சாத்தியம் உள்ள எல்லா இடங்களிலும் கட்டுவதற்கு தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினரைப் போலவே அரசுக்கும் அந்த ஆசை இருக்கிறது. ஆனால், பாத்திரத்திலேதான் பண்டம் குறைவாக இருக்கிறது.

## *Bridges*

*284 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the shaky condition of the bridge in the Nagercoil-Manavalakurichi road near Kannakurichi ;

(*b*) whether the Government have received memoranda from the public of Kannakurichi about the deplorable condition of this bridge ; and

(*c*) if so, when the work of reconstruction will be started ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) கண்ணக்குறிச்சி அருகில் நாகர்கோயில்-ராஜக்கமங்கலம் கொளச்சல் சாலையில் 7/6 மைலில் உள்ள கட்டுமான அமைப்பு ஒரு மதகாகும். அது பாலமன்று. அது நன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) மழைக்காலத்தில் இதன் கரையிலுள்ள அணுகுவழிகள் அரிக்கப்பட்டன ; பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி தல வட்டாரப் பொறியாளருக்கு முறையீடுகள் வந்துள்ளன.

(உ) மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டும் தழைச் செடிகள் வளர்ப்பதன் மூலமும் அணுகுவழிகள் தற்போதைக்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. ரூ. 4,700 மதிப்பீட்டுச் செலவில் தகுந்த தடுப்புச் சுவரும் பற்றுச் சுவரும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதகைப் புதுப்பிப்பதற்கு உடனடியான தேவை இல்லை.

**திரு. ஏ. முனியாண்டி :** பேரணையிலே கட்டப்பட்ட பாலம் போக்குவரத்துக்கு வசதியற்றதாக இருப்பதால், அதை போக்குவரத்துக்கு வசதியாகக் கட்ட அரசுக்கு யோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தொடக்கக் கேள்வி கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தது.

* 285 வினா.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆரணி தாலூக்காவில் குன்னத்தூர் to அய்யம்பாளையம் நெடுஞ்சாலையில் கீழ்நகர் அருகாமையில் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. இல. பலராமன்: ஆரணி தாலூக்காவில், கீழ்நகர் அருகாமையில் நாக நதியில் தண்ணீர் வரும்போது 15—20 மைல் தூரம் சுற்றிவர வேண்டி இருப்பதால், இதை அரசாங்கம் பரிசீலித்து, நாக நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதுகுறித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்கு மாநில நெடுஞ்சாலைகள் என்கிற தலைப்பின் கீழ், 6,30,000 ரூபாய் செலவிடவேண்டும் என்ற திட்டம் இடப்பட்டிருக்கிறது. ஆனால், அது செலவிடப்படுவதற்கு நிதி நிலைமை இன்று அரசாங்கத்திடம் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 23 கோடி ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது. அதிலேகூட இந்தத் திட்டம் இப்பொழுது வருவதற்கில்லை. போகப் போகத்தான் இதுபற்றி யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

## திருநெல்வேலி மாவட்டத்தில் பனை வெல்லத்தின் விலை.

*286 வினா.—திரு. அ. லெ. சுப்பிரமணியம்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கருப்புக்கட்டியின் விலை திடீர் திடீரென உயருவது (Fluctuation) அரசினரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) இனிப்பு வகையான சீனி, வெல்லம், கருப்புக்கட்டி ஆகிய மூன்றில் சீனி, வெல்லம் முதலியவற்றிற்கு விலைக் கட்டுப்பாடு இருப்பதும் கருப்புக்கட்டிக்கு ஒருவிதமான கட்டுப்பாடும் இல்லாததும்தான் கருப்புக் கட்டி விலை ஏற்றத்துக்கு காரணம் என்று அரசு கருதுகிறதா ?

(உ) ஆம் எனில், கருப்புக்கட்டியையும் விலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வகையில் அதற்கான ஆணையினைப் பிறப்பிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 10—12—1967 அளவில் திருநெல்வேலி மாவட்டத்தில் பனை வெல்லத்தின் விலை திடீரென அதிகரித்தது. இதைத் தவிர, பனைவெல்ல விலையில் அடிக்கடி ஏற்றத் தாழ்வு எதும் ஏற்படவில்லை.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம்: திருநெல்வேலி மாவட்டத்தில் பனைவெல்லத்தின் விலை திடீரென்று ஏறக் காரணம், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கவில்லை என்பதா ? அல்லது, இப்பொழுது சர்க்கரை அதிகமாகக் கிடைத்து விலையும் அதிகமாக இருப்பதால், அதே நிலையில்தான் இன்னும் பனை வெல்லத்தின் விலை இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மை தானா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முதல் காரணம் உண்மை அல்ல. இரண்டாவது காரணமும் உண்மை அல்ல. குறிப்பிட்ட 10—12—1967 வாக்கில், திருநெல்வேலி மாவட்டத்தில் பனைவெல்லத் தினுடைய விலை உயர்ந்தது. 8—12—1967 அன்று அங்கிருந்த விலையை விட திடீரென்று உயர்ந்தது. அதற்குக் காரணம், டிசம்பர் மாதம் அங்கே ஆஃப் ஸீஸன் ஆகும். அந்த நேரத்தில் வழக்கமாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்துதான் பனைவெல்லத்தை அவர்கள் பெறுவது வழக்கம் அந்த சமயத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மரங்கள்



அதிகமாக பனஞ்சாறு கட்டாத காரணத்தால், அங்கிருந்து வரவேண்டிய பனைவெல்லம் சரியாக வராதது ஒரு காரணம். அங்கிருந்து வராதது மட்டுமல்லாமல், மத்திய அரசு சர்க்கரையை டீ-கண்ட்ரோல் செய்த காரணத்தால் சர்க்கரையினுடைய விலை உயர்ந்தது. சர்க்கரை விலை அதிகமாக இருப்பதால், பல்க் கன்ஸ்யூமர்ஸ் திடீரென்று பனைவெல்லத்திற்குத் தாவினார்கள். அப்படியும் ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆக, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வழக்கமாக வரவேண்டிய பனைவெல்லம் வரவில்லை. உள்ளூரிலும் அதிகமாகக் கிராக்கி ஏற்பட்டுவிட்டது. ஆகவே, ஸப்ளையும் சுருங்கிவிட்டது. அதேவேளையில் தேவையும் அதிகரித்ததால், பதுக்கல் காரர்கள் அதிகமாகப் பணம் சம்பாதிக்கவேண்டும் என்று திடீரென்று பதுக்கல் வேலைகள் பரபரப்பாக நடைபெற்றன.

8—12—1967 அன்று இருந்த விலையைவிட இரண்டு நாள் கழித்து, அதாவது 10—12—1967 அன்று பனைவெல்லத்தின் விலை எவ்வளவு அதிகரித்தது என்பதைக் குறித்த விவரத்தை இங்கே சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

| (1) | யூனிட். (2) | 8—12—1967 அன்றைய விலை. (3) | 10—12—1967 அன்றைய விலை. (4) |
|---|---|---|---|
| மொத்த வகை— | கிலோ. | ரூ. பை. | ரூ. பை. |
| உடன்குடி .. .. .. | 10 | 22·00 | 32·00 |
| லோகல் .. .. .. | 10 | 21·00 | 31·00 |
| மலையாளம் .. .. .. | 10 | 18·00 | 26·00 |
| காங்கயம் .. .. .. | (எந்த விதமான வியாபாரமும் நடைபெறவில்லை.) | | |
| சில்லரை— | | | |
| உடன்குடி .. .. .. | 1 | 2·40 | 3·50 |
| லோகல் .. .. .. | 1 | 2·30 | 3·30 |
| மலையாளம் .. .. .. | 1 | 2·00 | 3·00 |
| காங்கயம் .. .. .. | (எந்த விதமான வியாபாரமும் நடைபெறவில்லை.) | | |

இப்படி இரண்டு தினங்களில் விலை உயர்வு ஏற்பட்டதை அனுசரித்து திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் மிகச் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். திருநெல்வேலி மாவட்ட பனைவெல்ல உற்பத்தியாளர் சங்கங்களின் பெடரேஷனில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து உடனே தொடர்புகொண்டு ரூ. 1,92,000 பெறுமானமுள்ள பனைவெல்லத்தை கோயம்பத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து வரவழைக்கச் செய்து, பெடரேஷனின் மொத்த, சில்லரை டெப்போக்களின் மூலமாக உடனே விநியோகம் செய்ததன் விளைவாக விலை சரிய ஆரம்பித்து, இன்று விலை 8—12—1967 அன்று இருந்த விலையைவிடக் குறைவாக ஆகியிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும். இப்பொழுது அங்கே உற்பத்தி தொடங்கிவிட்டது. 10—12—1967 அன்று இருந்த பனை வெல்ல விலைக்கும், 22—2—1968 அன்று இருந்த விலைக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பார்த்தால், அது மிகப் பெரிய அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அதனுடைய விவரம் பின்வருமாறு :—

| வகை. | 10—12—1967 அன்று நிலவிய விலை. | 22—2—1968 அன்று நிலவிய விலை. |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| மொத்தம் (10 கிலோ) | | |
| உடன்குடி .. .. .. .. .. | 32·00 | 22·00 |

[1968 மார்ச் 22

| வகை. | 10-12-1967 அன்று நிலவிய விலை. ரூ. பை. | 22-2-1968 அன்று நிலவிய விலை. ரூ. பை. |
|---|---|---|
| மொத்தம் (10 கிலோ). | | |
| லோகல் .. .. .. .. .. | 31·00 | 15·00 |
| மலையாளம் .. .. .. .. .. | 26·00 | 15·00 |
| காங்கயம் .. .. .. .. .. | (வியாபாரம் இல்லை) | 14·50 |

இதேமாதிரியாக ரீடெய்ல் விலையும் பெருமளவுக்கு 8—12—1967 அன்று இருந்ததைவிட இப்பொழுது மிகவும் குறைந்திருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்கவேண்டிய அவசியம் இருப்பதாக அரசு கருதவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், பதநீர் இப்பொழுது கேரளாவிறகு கொண்டுசெல்லுகின்ற காரணத்தால்தான் கருப்புக்கட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுவதால் பதநீரை கேரளாவிற்குக் கொண்டுசெல்லக் கூடாது என்று தடை விதிப்பதற்கு இந்த அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் மதுவிலக்குச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு ஆறு மாதத்திலே வருகின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு ஒரு ஆண்டு வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே கருப்புக் கட்டி விலையில் ஏற்றத்தாழ்வுகள் நிறைய இருக்கிற காரணத்தினாலேயே பனை வெல்லம் கிடைக்கிற நேரத்திலேயும் அல்லது கிடைக்காத நேரத்திலேயும் கருப்புக்கட்டி விலையை நிர்ணயம் செய்து அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு நன்மை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பனை வெல்லத்தின் மூலமாக கருப்புக்கட்டிக்குப் பதிலாக சர்க்கரை தட்டுப்பாட்டை நீக்குவதற்காக பெரும் அளவிலே ஒரு திட்டத்தைத் தயார் செய்து மற்ற சர்க்கரைகளைப்போலவே பனைவெல்லச் சர்க்கரையைப் பெரும் அளவிலே உற்பத்தி செய்யலாமா என்பதைப் பற்றி தீவிரமாக யோசிக்கப்பட்டு வருகிறது. சிறிய சிறிய குடிசைத் தொழில்களின் மூலம் பனைவெல்ல சர்க்கரை இப்பொழுது செய்கிறார்கள். சர்க்கரை தட்டுப்பாட்டையும் நெருக்கடியையும் சமாளிக்கிற ஒரு திட்டமாக இந்த பனை வெல்லத்திலிருந்து நவீன சர்க்கரையை உற்பத்தியாக்குவதற்கு ஒரு திட்டத்தைத் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறோம். அது பற்றி வெகு விரைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு நா. சௌந்தரபாண்டியன் :** கருப்புக்கட்டியின் உற்பத்தி பெருகுமானால் சர்க்கரையினுடைய விலை குறையும். அதன் காரணமாக கருப்புக் கட்டி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர அரசு திட்டம் தீட்டுமா ?

(விடை இல்லை.)

**திரு. பெ. மலைச்சாமி :** மத்திய அரசு ஒப்புதல் அளிக்காத காரணத்தால் தான் வெல்லம் கொண்டுபோக தடை செய்யும் சட்டத்தை உயர் நீதி மன்றம் ரத்து செய்துவிட்டது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நிலைமை அப்படியல்ல. வெளி மாநிலங்களுக்கு எஸன்ஷயல் கமாடிட்டீஸ் ஆக்ட் விதிப்படி எந்த உணவுப் பொருள் ஆகட்டும் கொண்டுபோவதைத் தடுக்க தடை விதிக்கவோ



1968 மார்ச் 22]

சிராக்கவோ இந்த அரசு சட்டம் போட வேண்டுமென்றால் மத்திய அரசு கன்கரன்ஸ் கொடுக்கவேண்டுமென்பது முறையாக இருக்கிறது. ஒன்பது மாதங்களாக விலைவாசி உயர்வதைப் பார்த்து இந்த அரசு மத்திய அரசிடம் மிகவும் உருக்கமாகக் கேட்டது. பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் மத்திய அரசு கன்கரன்ஸ் கொடுக்கும் என்ற நம்பிக்கையிலே உத்திரவை இந்த அரசு போட்டது. அது வழக்குமன்றத்திற்குப் போனது. தடை உத்தரவு அமலில் இருந்த நேரத்திலே பெருமளவுக்கு விலையிலே வீழ்ச்சி இருந்தது. உயர்நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பு தவறான தீர்ப்பு அல்ல. கன்கரன்ஸ் இல்லாமல் ஒரு சட்டம் செல்லுபடியாகாது என்பது உண்மை தான். மத்திய அரசு கொடுக்காது காலதாமதமாக செய்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்தவும் மீண்டும் உடனடியாக அவர்கள் இதற்கு கன்கரன்ஸ் கொடுக்கவேண்டும் என்பதற்காகவும்தான் நாம் ஏற்பாடு செய்கிறோம். அவர்களிடத்திலே கன்கரன்ஸ் கொடுக்கவேண்டுமென்று மீண்டும் எடுத்துச்சொல்லப்பட்டு வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** (இ)-க்கு இல்லை என்று பதில் அளித்தார்கள். சீனி, வெல்லம் இரண்டிற்கும் விலைக் கட்டுப்பாடு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சீனிக்கு மட்டிலும்தானே கட்டுப்பாடு உள்ளது. வெல்லத்திற்கும் கட்டுப்பாடு உள்ளதா ? அப்படியானால் அது எப்பொழுது வந்தது என்ற விவரம் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது அரசு சொல்வதல்ல, கேள்வியிலே இருக்கிற ரூபம். வெல்லத்திற்குக் கட்டுப்பாடு என்று சொன்னால் வெளி மாநிலங்களுக்கு எடுத்துக்கொண்டு போகக்கூடாது, குறிப்பிட்ட அளவுக்கு மேலே மாவட்டத்திற்கு மாவட்டம் எடுத்துக் கொண்டு போகக்கூடாது என்று இருக்கிற இப்படிப்பட்ட முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர் கருத்தாகக்கொண்டு இந்தக் கேள்வியை வடித்து இருக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas palmyrah trees are considered to be a poor man's luxury and whereas these trees can grow even in a famine area without the aid of a man or even God or even rainfall and in view of the fact that there is indiscriminate cutting of these trees in some districts, will this Government come forward to prohibit the indiscriminate destruction of these trees and also launch upon a programme of growing more palmyrah trees ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏராளமாக அதை வெட்டுகிறார்கள் என்பதற்கான தகவலும் இல்லை. அவற்றை வளர்ப்பது என்பதும் இரண்டு தலைமுறைகளுக்குப் போடவேண்டிய பெரும் திட்டம். எத்தனையோ தலைமுறைகளுக்குப் பிறகு போடவேண்டிய திட்டத்தையும் இப்பொழுது கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகாவில் ஏராளமாக சர்க்காருக்குச் சொந்தமான பனை மரங்கள் இருக்கின்றன. அந்தப் பனை மரங்களையெல்லாம் நேரடியாக ஓப்பன் ஆக்ஷனில் கொடுக்காதபடி லீஸ் முறையிலே தொழிலாளர்களுக்குக் கொடுத்து அந்தத் தொழிலாளர்களுடைய நலனையும் குறிப்பாக உற்பத்தியையும் கவனத்தில் கொண்டு ஏற்பாடு செய்வதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதிலே உள்ள நிலைமைகளை ஆராய்ந்து அதன்படி பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பனை வெல்ல உற்பத்திக்கு தனியாக கவனம் செலுத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

[1968 மார்ச் 22

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். கரும்புச் சாற்றிலேயிருந்துதான் சர்க்கரை எடுக்கப்படுகிறது. நான் சொல்வது பழுப்புச் சர்க்கரையல்ல. பனை வெல்லத்திலிருந்து கண்டசாரி சர்க்கரையைப்போல் நல்ல சர்க்கரை தயாரிக்க முடியும். அதை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். தென்னை மரத்திலிருந்து சர்க்கரை செய்வதற்கான வாய்ப்புகள் சில மாவட்டங்களிலே இருக்கின்றன. மேல் நாடுகளிலே எல்லாம் கரும்பிலே இருந்து சர்க்கரை செய்வதில்லை. பீட்ரூட்டிலிருந்துதான் சர்க்கரை செய்கிறார்கள். இத்தாலி நாட்டிலே சில சர்க்கரை ஆலைகளுக்கு நான் போனேன். அங்கே கரும்பு கிடையாது, பீட்ரூட்டிலிருந்துதான் சர்க்கரை கிடைக்கிறது. இயற்கையின் வரப்பிரசாதமாக இருக்கக் கூடிய பனையைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல பனை வெல்லத்திற்குப் பதிலாக பனையின் பதநீரிலிருந்து நேராகச் சர்க்கரையை உற்பத்தி செய்து விட்டால் பனைவெல்லம் செய்கின்ற குடிசைத் தொழில்கள் பாதிக்கப் படும், அதிலே உள்ள உணவுச் சத்துக்களை விரும்பிச் சாப்பிடுகிறவர் களுக்கும் பாதகம் வராதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது பனை வெல்லத்திற்கு மட்டுமுள்ள பிரத்தியேகமான சிக்கல் அல்ல. எல்லாத் தொழில் களுக்கும்—கைத்தொழிலுக்கும் ஆலைத் தொழிலுக்கும் போட்டி இருக்கிறது, ஒரு துறையிலே குடிசைத் தொழிலுக்கும் மற்ற தொழில்களுக்கும் போட்டி இருக்கிறது—உள்ள இடையூறுதான். பழமைக்கும் புதுமைக்கும் உள்ள போராட்டத்தின் விளைவு இது. இதை காலம்தான் தீர்க்கமுடியும்.

மு.ப. 9-30 **திரு. ஆலடி அருணா :** கைத்தொழில் அடிப்படையில் பதநீரில் தயாரிக்கப்படும் சர்க்கரையில் சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதால் அதை வாங்குகிற அளவுக்கு மக்கள் முன்வரவில்லை. ஆகவே, அதுபற்றி ஆராய்ச்சி செய்து அந்த சுண்ணாம்பு வாடை இல்லாத அளவுக்கு கைத்தொழில் அடிப்படையில் சர்க்கரை தயாரிப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற அளவுக்கு இதுபற்றி எனக்கு அவ்வளவு பரிச்சயம் இல்லை. அவர்களுக்கு இந்தத் துறையில் இருக்கிற அந்த ஞானம் நமக்கு பயன்படுமானால் அதை அரசாங்கம் நல்ல அளவில் வரவேற்கும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, நமது அரசு வெல்லம், வெல்லத்தூளுக்கு வரி விதித்ததை ஒரு சில வியாபாரிகள் நமது அரசை ஏமாற்றும்விதத்தில் பம்பாய்க்கு தொலைபேசி மூலம் விலையை நிர்ணயம் செய்துகொண்டு பட்டியல் போடாமல் பம்பாய்க்கு விற்று முதலாய் அனுப்புகிறார்கள், இதனால் நமது அரசுக்கு வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். ஆகவே, இதைக் கண்காணிக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதைக் கண்காணிப்பதற்காக —இவ்வளவு தாறுமாறுகள் நடக்கின்றன என்பதற்காக மராட்டிய மாநிலத்திற்கு, பம்பாய்க்கு நம் அதிகாரிகள் அனுப்பப்பட்டு இதுபற்றி தீவிரமாக சோதனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. இரத்தினசபாபதி :** தலைவர் அவர்களே, இந்த பதநீர் இறக்கும் தொழில் பயங்கரமான தொழில். தொழில் செய்யும் நேரத்தில் மரத்தில் இருந்து கீழே விழுந்து இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்தின ருக்கு உதவித் தொகை கொடுக்கும் யோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது மனிதாபிமானம் பற்றிய [illegible] இந்த அரசு மனிதாபிமானமிக்க அரசு என்பதை தமிழகமும் இந்த மன்றமும் அறியும்.



1968 மார்ச் 22]

**திரு. தி. பொன்னுமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் தட்டுப்பாடு, வெல்லத்தட்டுப்பாடு ஏராளமாக இருக்கின்ற இந்தக்காலத்தில் கோவை மாவட்டத்தில் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்குவது போல் இந்த மாநிலம் பூராவும் தென்னைமரங்களில் இருந்து பதநீர் இறக்கி வெல்லம் காய்ச்சினால் சர்க்கரை தட்டுப்பாடு தீர்வதுடன் ஆயிரக் கணக்கான மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் ஏதுவாக இருக்குமல்லவா ? ஆகவே, அப்படி நடவடிக்கை எடுக்க இந்த சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் முன்னமேயே அதைத் தான் சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் இருந்துகூட இந்த மாதிரியாகச் செய்யவேண்டும் என்று ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அதன் சாத்தியக்கூறுகளை இந்த அரசு ரொம்பத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, இந்த அரசுக்கு வரப்பிரசாதமாகவும் தென் மாவட்டங்களுக்கு பஞ்சப்பயிராகவும் விளங்கு கின்ற இந்த பனை மரங்கள் அண்மையில் செங்கல் சூளைக்காக அதிகமான அளவில் வெட்டப்படுகின்றன. இதனால் அவற்றின் எண்ணிக்கை குறைந்து விடுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே, பனை மரங்களை வெட்டக்கூடாது என்று உடனடியாக தடை உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவ்வளவு பயங்கரமான ஒரு நிலை வந்ததென்பது கிடையாது. ஆனால் இவைகளைத் தடுப்பதற்கான நிலைமைகளை அரசு ஆராயும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** பதநீர் இறக்கும் தொழிலாளர் களுக்கு லைசன்ஸ் விதிக்கப்படுகிறது. இதை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா ? மேற்கொண்டு இந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு ஏதாவது திட்டம் தீட்ட அரசாங்கத்துக்கு ஏதாவது முயற்சி உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, ஆராய்ச்சி செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக பனைமரங்கள் செங்கல் சூளைக்காக வெட்டப்படுகின்றன. இந்த மரங்கள் வெளியிடங் களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பிரஷ்கள் செய்து இங்கு வருகின்றன. ஆகவே, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பிரஷ் தொழிற்சாலை ஏற்படுத்த யோசனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பனை மரத்தின் பயன்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இவ்வளவு அக்கறை ஏற்பட்டதற்காக நான் நன்றி செலுத்துகிறேன். இது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை களுக்கு பெரிதும் ஆக்கம் ஊட்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பனைவெல்லம் உற்பத்தி பெருகினால்தான் விலைவாசி நிரந்தரமாகக் குறையும். ஆகவே, காடு களிலும் காடுகளைச் சேர்ந்த பகுதிகளிலும் பனைமரங்களை வளர்ப்பதற்கு ஏதேனும் சர்க்கார் நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் முன்னமேயே சொன் னேன், அது ஒரு நீண்டகால—லாங் டர்ம் என்று சொல்கிறோமே— திட்டமாகும். நீண்டகாலத்திற்காக போடவேண்டிய திட்டங்களை இந்த அரசாங்கம் தட்டிக்கழித்துவிட முடியாது. அதை கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** தற்போது சர்க்கரை ஆலைகளுக்காக ஏராளமான நஞ்சை நிலங்களை கரும்பு விளைச்சலுக்கு மாற்றும் நிலை நம் நாட்டில் ஏற்பட்டு வருவது எல்லோரும் அறிந்த விஷயம். டனெயி

லிருந்து வெல்லம், சர்க்கரை தாராளமாக உற்பத்தி செய்யமுடியும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் நஞ்சை நிலங்களை கரும்பு சாகுபடிக்கு கொடுக்க வேண்டியது இல்லை. பனைமரங்கள் வரப்பிலேயே நன்கு வளரும். ஆகவே, நம் நாட்டில் இனிமேல் நஞ்சை நிலங்களைக் காப்பாற்றும் விதத்தில், உணவு உற்பத்திக்காக நஞ்சை நிலங்கள் தேவையாக இருப்பதால் அவற்றைக் காப்பாற்ற பனைமரங்களை அதிகமாக வளர்த்து போஷிக்க அரசு முன்வருமா ?

(விடை இல்லை.)

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மரம் ஏறி கள் இறக்கும் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் காங்கிரஸ் ஆட்சியில் பாதிக்கப்பட்டார்கள். ஆகையினால்தான் இப்போது பனை வெல்லம்காய்ச்சுவது, பதநீர்இறக்குவது என்று இந்தமாதிரி தொழில்கள் கொடுத்து இருந்தும் அவர்களது வாழ்க்கைநிலை உயரக்கூடிய நிலையில் இல்லை. இந்த சர்க்கார் மனிதாபிமானம் உள்ள சர்க்கார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, பழையபடி அவர்களுக்கு அந்த மரம் ஏறும் வேலையைக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, whereas this 'padaneer' is considered to be a very nutritious food, and whereas on former occasions a neera parlour used to be opened very near the precincts of the Assembly, will the Government take steps to open a parlour near the Assembly for distribution of neera to the members who often become dull because of the dull proceedings of the House ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: If the hon. Member is so interested, we can consider his proposal.

### சலவைத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள்.

287 வினா—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் சர்க்கார் அனுமதித்துள்ள சகலவிதமான சலுகைகளும், கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) அவ்வாறு சலுகைகள் கொடுக்கப்படாமல் இருந்தால், கிறிஸ்து மதத்தைத் தழுவும் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் அச்சலுகைகளை அமுல் நடத்த சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இந்து சமயத்தைச் சார்ந்த முடி திருத்தும் தொழிலாளர், சலவைத் தொழிலாளர்களுக்கு இணையாக கிறித்துவ சமயத்தைச் சார்ந்த முடிதிருத்தும் தொழிலாளரும், சலவைத் தொழிலாளரும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்படுகின்றனர். இந்து சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் ஹரிஜன நலத் துறையின் உதவித்தொகை, கல்வி நிலையங்களில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கி வைத்தல், அரசுப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுங்கால் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இடங்களை ஒதுக்குதல் போன்ற ஏனையச் சலுகைகள் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.



(இ) இந்து சமயத்தைச் சார்ந்த முடி திருத்தும் தொழிலாளர், சலவைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை இச்சமயத்திலிருந்து கிறித்துவ சமயத்திற்கு மாறியவர்களுக்கும் வழங்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, மேற்கண்ட ஊழியர்கள் மனைக் கட்டுக்காக விண்ணப்பம் செய்துள்ளார்களா ? குறிப்பாக ஊட்டி, கூனூர் போன்ற பிரதேசங்களிலும், கோவைப் பிரதேசங்களிலும் மனைக்கட்டுக்காக அமைச்சரவர்களிடத்தில் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்களா ? அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கல்விச் சலுகை தான் அவர்களுக்கு தரப்படுவதாகச் சொன்னேன். வேறு பொருளாதார ஏற்றம் வரத்தக்க சலுகைகள் அவர்களுக்கு இதுவரையிலும் தரப்பட்டு வரவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஏழைகளும் பணக்காரர்களும் இருக்கிறார்கள். முற்போக்கு சமூகத்திலும் பிற்பட்ட சமூகத்தினரைப்போல் எளியவர்களும் பணக்காரர்களும் இருக்கிறார்கள். முற்போக்கு சமூகத்தில் இருப்பவர்கள் அதிகாரபூர்வமாக ஏழை என்பதை அரசாங்க அதிகாரிகள் மூலம் சர்டிஃபை செய்தால் அரசாங்கம் அவர்களுக்கும் பிற்போக்கு சமூகத்தினருக்குக் கொடுக்கும் சலுகைகள் போல இந்த முற்போக்கு சமூக ஏழைகளுக்கும் சலுகைகள் கொடுக்க முற்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பொருளாதார அடிப்படையில் இன்றைக்கு கல்விக்கு மாத்திரம் உபகாரச்சம்பளம் தரும் போது ஆண்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்று வருமான எல்லையை நிர்ணயித்திருக்கிறார்கள். எனவே, கல்விச் சலுகைகளுக்கு மாத்திரம் தான் அந்த வரம்புக்கு உட்பட்டவர்களுக்கு சலுகைகள் தரப்படுகின்றன. மேலும் அதிகமாக பணம் படைத்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு தரப்படுவது இல்லை. மேலும் வாங்குகிற மார்க்குகளைப் பொருத்தும் அவர்களுக்கு சலுகைகள் தரப்படுகின்றன. எனவே, தகுதி, பொருளாதார ஏற்றம் இவற்றை மனதில் வைத்து அவர்களுக்கு சலுகைகள் தரப்படுகின்றன. இதில் ஏழையாக இருந்தால் தரப்படுகிறார்கள். பணக்காரராக இருந்தால் தரப்படவில்லை.

**திரு. எஸ். முருகையன் :** சலவைத் தொழிலாளர்களுக்கும் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் கடனாகக் கொடுத்திருந்த தொகையை தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்ததா ? அதன்படி தள்ளுபடி செய்யப்பட்டதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் அந்தத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட கோரிக்கை ஒன்றும் வரவில்லை. என்றாலும் கடந்த முறை நடைபெற்ற மேல் அவையில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நிலுவைப் பணம் ஏதாவது இருந்து அதை தரவேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துவார்களானால் அவைகளை திரும்பப் பெற்றுக்கொள்கிறோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். எனவே கடன் தொகை வசூலிக்கப்படமாட்டாது. உதவிப்பணம் யார் யாருக்கு தரப்பட்டிருக்கிறது, எவ்வளவு கடன் தரவேண்டும் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** முன்பு இந்து அரிசனங்களாக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறி மறுபடியும் இந்து மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கு, தகப்பனார் பெயர் கிறிஸ்தவப் பெயராக இருக்கிற காரணத்தால் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அரிசனங்களில் ஒரு தலைமுறையில் தகப்பன் இந்துவாகவும், பிள்ளைகள் கிறிஸ்துவர்களாகவும் இருந்தால் அவர்களுக்கு இந்துக்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அத்தனையும் கொடுக்கப்படுகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மீண்டும் இந்து மதத்திற்கு வந்து விட்டால் அந்தச் சலுகைகள் கொடுப்பது எப்படி என்பது பற்றிய தகவல் இல்லை. அப்படி இருக்குமானால் எப்படிக் கொடுப்பது என்பது பற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. என். ராஜாங்கம் :** ஒரு முறை இந்துக்களாக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கோ வேறு மதத்திற்கோ மாறி மறுபடியும் இந்மதத்திற்கு வர சில சடங்குகள் இருக்கின்றன. அப்படி இந்துக்களாக மாறிவிட்டோம் என்று அத்தாட்சி கொடுப்பவர்களுக்கு இந்த சலுகைகள் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மதம் மாறிச்சென்ற அரிசனங்கள் நிலை உயராமல் பழைய நிலையிலேயே இருந்தால், மாநில சர்க்கார் விரும்புகிற சலுகைகளைத் தரலாம் என்பதற்கு மத்திய அரசின் ஒப்பளிப்பு இருக்கிறது. அப்படிப் பார்த்து மதம் மாறிய பிறகும் அவர்களுடைய நிலை உயரவில்லையென்றால் அவர்களுக்கும் கல்விச் சலுகை கொடுக்கப்படுகிறது. மாநில சர்க்கார் விரும்புகிற அளவுக்குச் சலுகைகளைத் தரலாம் என்ற நிலை இருக்கிறது.

**திரு. வ. ஜார்ஜ் :** அமைச்சர் அவர்கள் பதிலில் அரிசன கிறிஸ்தவர்களுக்கு மற்றச் சலுகைகளை விஸ்தரிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு எதுவும் இல்லையென்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் கிறிஸ்தவ அரிசனங்களுக்கும் எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. இதுவரை அதைச் செய்யவில்லையென்றாலும் இனியாகிலும் அது பற்றிப் புனராலோசனை செய்து தேர்தல் அறிக்கையில் கூறியிருப்பதை நிறைவேற்றுவதற்கு முன் வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்போது கிறிஸ்தவ அரிசன மக்களுக்கும் கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள் தரப்பட்டு வருகின்றன. கல்விச் சலுகை மாத்திரமல்ல, பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்தால் அவர்களுக்கு வீட்டு மானியம், கிணறு வெட்டப் பணம், மாடு வாங்கப் பணம் ஆகியவையும் தரப்படுகின்றன. இந்தச் சலுகைகளை எல்லாம் தற்போது மாநில சர்க்கார் கொடுக்கிறது. மத்திய சர்க்கார் கொடுக்கிற பணத்திலிருந்து இந்தச் சலுகைகளைச் செய்வதற்காக மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் வற்புறுத்தி வருகிறது.

**திரு. நா. சோமசுந்தரம் :** தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்தில் இருந்தாலும், இந்துக்களாக இருந்தாலும் சமுதாயத்தில் ஒரே விதமான மரியாதைதான் தரப்படுகிறது. பொருளாதார நிலையைப் பார்த்தாலும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, என்ன காரணத்தினால் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களுக்குச் சலுகைகள் தரப்படாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள் ? இனிமேலாவது அவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் உறுப்பினர் அவர்கள் சலுகைகள் தரப்படவில்லை என்று கூறுவது தவறு. பழங்குடி மக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களாக இருந்தாலும் அவர்களுடைய இழிநிலை நீக்கப்படவில்லை, பொருளாதார நிலை உயரவில்லை என்ற காரணத்தால் இந்த அரசு அவர்களுக்குச் சலுகைகளைக் கொடுத்து வருகிறது. ஆனால் மத்திய சர்க்கார் கொடுக்கிற உதவி அவர்களுக்குக் கிடையாது. அதையும் கிடைக்கச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. நம்முடைய மாநில சர்க்காரைப் பொறுத்தவரை எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கும் கொடுத்து வருகிறோம். மதம் மாறிய பின்தங்கிய சமூகத்தினருக்கு இந்தச் சலுகைகள் கிடையாது.



**திரு. எம். எஸ். மணி :** சலவைத் தொழிலாளர்களுக்கும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் அவர்கள் தொழில் நடத்துவதற்காக இனமாகக் கொடுத்து வருகிற அந்தக் கருவிகள் அனுபவம் இல்லாதவர்களால் வாங்கிக் கொடுக்கப்படுவதால் சரியான முறையில் பயன்படவில்லை. ஆகவே, மாவட்டவாரியாக அனுபவம் உள்ளவர்களைக் கொண்டு அந்தக் கருவிகள் வாங்கிக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்தக் கருத்து பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆலோசனைக் குழுவில் எடுத்துச் சொல்லப்பட்டது. இயக்குநர் அவர்கள் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். நல்ல கருவிகளை, விரும்புகிற கருவிகளைத் தர வேண்டுமென்று உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அடுத்துக் கொடுக்க இருக்கும் கருவிகள் அப்படிப்பட்ட நல்ல கருவிகளாக இருக்கும்.

**திரு. ஏ. முனியாண்டி :** பொதுவாக இந்தக் கருவிகளையெல்லாம் கொடுக்கிற காண்டிராக்டர்கள் சென்ற காலத்தில் நியமிக்கப்பட்டவர்களாதலால் அவர்கள் சரியான முறையில் கொடுப்பதில்லை. துணி தேய்ப்பதற்காகக் கொடுக்கப்படுகிற மேஜைகள் 30 ரூபாய் கூடப் பெறாத நிலையில் 50 ரூபாய் விலை போட்டுக் கொடுக்கிறார்கள். ஆகவே, பழைய அந்த காண்டிராக்டர்களைப் எடுத்துவிட்டு புதியவர்களை நியமிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சலவைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் பெட்டி, மேஜை ஆகியவை தரமானதாக இல்லையென்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் 30 ரூபாய்க்கு வாங்கி 50 ரூபாய்க்குத் தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இல்லை. அப்படி இருக்குமானால் தகவல் தருவார்களானால் விசாரிக்கலாம், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். தரமான பொருள்களாகக் கொடுப்பதற்கு இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. நா. காசிராமன் :** பல பெரிய நகரங்களில் சலவைத் தொழிலாளர்களுக்கு தொழிலைச் சரிவர நடத்த "டோபி கானாக்கள்" இல்லை. நல்ல முறையில் அதைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 288 தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

### *Receptionists in City Hospitals*

* 289 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether the Government propose to appoint Receptionists in various hospitals in the City of Madras ;

(*b*) if so, the functions to be assigned to them ; and

(*c*) whether "ability to speak Hindi" is one of the essential qualifications prescribed for the post ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம். நாளடைவில் நியமிக்கப்படுவர்.

(இ) மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

(உ) இப் பதவி குறித்த தனி விதிகள் முடிவு செய்யப்படவில்லை. "இந்தி பேசும் திறன்" இப்பதவிக்குரிய அவசியமான தகுதிகளுள் ஒன்றாக இருக்காது.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the fact that the Receptionists appointed in such kind of hospitals will have to meet all sorts of patients who speak different languages, will the Government, in spite of their language policy, appoint only such of those Receptionists who know multi-languages including Hindi ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It is a good suggestion but excluding Hindi it would be considered.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது போன்ற இடங்களுக்கு ஆண்களும் வருகிறார்கள், பெண்களும் வருகிறார்கள். ஆகவே, இது போன்று நியமிக்கப்படும்போது ஆண்கள், பெண்கள் இரண்டு பேரையும் நியமிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்கள் ஆலோசனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கோவைத்தூர் கோதண்டம் :** இந்த வரவேற்பாளர்களை நியமிக்க வேண்டுமென்ற விதியில் இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டுமென்று ஏற்கனவே உத்திரவு இருந்ததா ? அல்லது இந்த அரசு வந்த பிறகு அதை மாற்றியமைத்ததா ? இப்போது ஏற்படுத்தப்படுகிற வரவேற்பாளர்களையும் ஏற்கனவே இருக்கிற சோஷியல் வொர்க்கர்ஸையும் இந்த இருசாராரும் ஒன்றாக இணைக்கப்படுவார்களா அல்லது அவர்கள் தனித்தனியாக செயல்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தி மொழி தேவை என்ற உத்தரவு ஜீ. ஓ. 211-ல் 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி பிறப்பிக்கப்பட்டது. சோஷியல் வொர்க்கர்ஸுக்கும், இந்த வரவேற்பாளர்களுக்கும் தனிப்பட்ட வேலைகள் உண்டு. இவர்கள் தனியாக வேலை செய்வார்கள்.

**திரு. சி. கோவிந்தராசன் :** இந்த வரவேற்பாளர்களை அமைப்பதோடுகூட, பெரிய மருத்துவ மனைகளில் எந்தெந்தப் பகுதி எந்தெந்த இடத்தில் இருக்கிறது என்று கண்டுபிடிக்க வெளியூர்களில் இருந்து வருகிற நோயாளிகளுக்குக் கஷ்டமாக இருப்பதால் வெளியூர்களிலிருந்து வருகிற வியாதியஸ்தர்களுக்கும், மற்றவர்களுக்கும் வழி காட்டக்கூடிய "கைட்ஸ்"-ஐ போதுமான அளவு ஏற்பாடு செய்ய அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுதான் இந்த ரிசப்ஷனிஸ்ட்ஸ் வேலை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்த வரவேற்பாளர்களுக்கு என்னென்ன யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும் ? இவர்கள் ஹெல்த் விஸிட்டர்ஸ் கோர்ஸ் மாதிரி ஏதாவது பயிற்சி பெறவேண்டுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தேவையான க்வாலிபிக்கேஷன், Bachelor Degree, ability to read and write English and Tamil. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சில வாரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வேலையில் நியமிக்கப்படுவார்கள்.

DR. H. V. HANDE: What is the difficulty for the Government to cancel this order and pass a new order ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Government have already cancelled that order. Now we are re-examining.

**திரு. டி. மார்டின் :** சென்னைக்கு தெலுங்கு பேசுகிறவர்கள், மலையாளம் பேசுகிறவர்கள், உருது பேசுகிறவர்கள் ஏராளமாக வருகிறார்கள். இவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்கிற நேரத்தில் அவர்கள் பாஷையில் பேசக்கூடிய ரிஸப்ஷனிஸ்ட்ஸ் அமைக்கும் நோக்கமுண்டா ?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றியெல்லாம் பரிசீலித்து வருகிறோம்.

THIRU K. VINAYAKAM: Does the Government agree with me that diseases do not know any language barriers and if people who are affected by these diseases who know only Hindi come to the hospital, what is the way out to such patients if the receptionist does not know Hindi ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதுவரை பல நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இது ரிஸப்ஷனிஸ்ட்ஸ் நியமிப்பது சம்பந்தமான கேள்வி. ஏற்கெனவே, எப்படி நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு வந்தார்களோ அதேபோல் தொடர்ந்து செயல்பட்டு வருவார்கள்.

**திரு என். சங்கரய்யா :** இந்த வரவேற்பாளர்கள் சென்னை நகரில் உள்ள ஆஸ்பத்திரிகளில் மட்டும் நியமிக்கப்படவிருக்கிறார்களா ? அல்லது மதுரை போன்ற இடங்களில் உள்ள பெரிய மருத்துவ மனைகள் எல்லாவற்றிலும் இத்தகைய வசதியைச் செய்து கொடுக்க வரவேற்பாளர்களை நியமிக்கும் யோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போதிருக்கிற செயற்குறிப்பில் முதலில் சென்னையில் பரீட்சார்த்தமாக நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று கருதப்படுகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** உறுப்பினர் அவர்கள் இந்திபற்றி கூறினார்கள். ஒருவேளை இந்தி பேசுவதால் அதிகமான வியாதிகள் வருவதாக இருக்குமோ ?

(விடை இல்லை.)

### மாவட்ட கலெக்டர்கள்.

*278 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ் நாட்டில் உள்ள மாவட்ட கலெக்டர்களின் பதவியின் பெயர்களை மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எந்த பெயரை வைக்க அரசாங்கம் உத்தேசித்து உள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம்.

(இ) இது இப்போது அரசின் ஆய்வில் உள்ளது.

DR. H. V. HANDE: In certain other States District Collectors are designated as Deputy Commissioners. Will the Government examine the whole scheme? It takes a long time to redress the grievances of the people. The Deputy Collectors deal with the files then they come to the Collector's table, the Secretary's table, the Minister's table and the Chief Minister's table and goes back to the Collector's table. In view of the fact that it takes a long time to dispose of files, will the Government consider the appointment of Deputy Commissioners and Commissioners for two or three districts and see that most of the files are disposed of at a lower level so that the Ministry may be spared some trouble and allowed time to devote to policy-making ? Will the Chief Minister consider this ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question is about the change of designation of District Collectors, whether the present name 'Collector' should be retained or a more significant and appropriate name should be given. The consequential information that the hon. Member wants is how best to avoid delaysd admin inistration. That will be dealt with when questions specifically on that point are raised.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** இந்தப் பெயர்களை மாற்றுவதற்கு ஏதாவது குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ? அந்தக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதற்கு எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை. கலெக்டர்கள் மகாநாடு திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நேரத்தில் இப்படி ஒரு கருத்தை நான் வெளியிட்டு கலெக்டர்களை அவர்களுடைய யோசனைகள் ஏதாவது இருக்குமானால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அப்படி விரிவான யோசனை எதுவும் என்னிடம் இதுவரையில் தரப்படவில்லை. கனம் உறுப்பினர்கள் இது பற்றி தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புவார்களானால் நான் மிக்க மகிழ்ச்சியோடு அதை வரவேற்பேன்.

**திரு. இல. பலராமன் :** மாவட்ட கலெக்டர்களுக்கு ஆங்கிலேயன் காலத்தில் வரி வசூலிப்பவர் என்ற நிலையில் அவர்களுக்கு அந்தப் பெயரைச் சூட்டினார்கள். நாம் இப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் என்று தான் அழைக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற பெயரை நீடிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது, இதுசம்பந்தமாக எடுத்துச் சொல்லக்கூடிய பல கருத்துக்களில் ஒன்று.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ரெவின்யூ டாக்ஸ் கலெக்ஷன் செய்து கொண்டிருந்தால்தான் பில் கலெக்டர்கள் என்று என்னென்னவோ இருந்தன. ஒட்டுமொத்தமாக இவர்களுக்கு கலெக்டர் என்ற பெயர் வழங்கப்பட்டு வந்தது. இப்போது ரெவின்யூ டாக்ஸை எல்லாம் வசூலிக்க டி.ஆர்.ஓ. என்று தனியாக ஒதுக்கப்பட்டிருப்பதால் இந்தப் பெயரை அவசியம் மாற்றியாக வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே எல்லா அதிகாரங்களையும் கண்ட்ரோல் செய்யக்கூடிய அளவிற்கு அந்த மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற பெயர்தான் ரொம்பப் பொருத்தமாக இருக்கும் என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதையேதான் நான் வேறு வார்த்தைகளால் அந்த மாநாட்டில் பேசினேன்.

THIRU K. VINAYAKAM : Whereas it would be interesting to go to the origin of the word from the days of the British rule, when these officers were meant only for collecting land revenue and they were called 'Collectors', is the Chief Minister aware of the fact that the term in other States is Commissioners or Administrators and will he think of the possibility of adopting these nomenclatures in our State also ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I add this suggestion also to the other suggestions that I have received.

**திரு. ஆலடி அருணா :** ஆட்சித் தலைவர் என்று அழைக்கப்படுவது—கோன்—ஸாவரினிட்டி உரிமை இருப்பது போல் தெரிகிறது. ஆகவே மாவட்ட நிர்வாகி அல்லது டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேட்டர் என்று அழைக்கப்படுவது பொருத்தமாகயிருக்கும். இதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?



**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்படியும் ஒரு கருத்து இருக்கக்கூடும் என்று முன்னே, ஆட்சித் தலைவர் என்ற பெயர் இருக்கலாம் என்று ஒரு உறுப்பினர் சொன்னபோது இதுவும் ஒரு வகையான கருத்து என்று சொன்னேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Does this Government have faith in changing established and familiar names of the posts of officers ?

THE HON. THIRU C. N. ANNADURAI: We have changed many established names and therefore there is no harm in changing an established name due to change in circumstances, change in interpretation and change in various other respects also.

**திரு. டி. மார்டின் :** மாவட்ட ஆட்சித் துறை நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்பதற்கான முயற்சிகள் எடுப்பதில் நாட்டம் அதிகமாகச் செலுத்த வேண்டிய நேரத்தில் இந்த பெயர் மாற்றத்தில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெயர் மாற்றத்தில கவனம் செலுத்துவதால் மற்றவற்றில் கவனம் செலுத்துவதற்கு நேரம் இருக்காது என்பது உறுப்பினர் எண்ணம், நேரம் இருக்கிறது என்பதால் தான் இதைப் பற்றியும் கவனிக்கிறோம்.

**திரு. என். ராஜாங்கம் :** தலைவரவர்களே, கலெக்ஷன் செய்வதால் மு.ப. 10-00
கலெக்டர் என்ற பெயர் வந்தது என்று சில வாதங்கள் எழுகின்றன. அவர் ரெவின்யூ கலெக்ஷன் செய்வதால் கலெக்டர் என்று சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். பூமியிலிருந்து வரும் விளைபொருள்களுக்காக வசூல் செய்வதால் அவ்வாறு சொல்லியிருப்பார்கள். ஒருவேளை பூமியிலிருந்துதான் உலகமே பிறந்ததாகையால் எல்லா வசூலையும் கலெக்டிவ் செய்ய கலெக்டர் என்று இருக்கலாமா? அப்படித்தான் அந்தப் பெயர் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே அப்படியே இருக்கலாம் என்று கருதுகிறேன். இதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினரின் கருத்தை ஏற்றுக்கொள்வதாகயிருந்தால் கலெக்டர் என்பதற்கும், கலெக்டிவ் என்பதற்கும் ஒரே பொருள்தான் என்று ஒப்புக் கொள்ளவேண்டும். அதற்குத் தயக்கமாக இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, instead of hearing the suggestions of the various Members, the Hon. Chief Minister is giving a very evasive reply. What is the conclusion which the Government derive or what is the decision which the Government have taken as far as naming of this officer is concerned.

THE HON. THIRU C. N. ANNADURAI : As an intelligent Member of this House, he ought to have drawn the conclusion already, that I have not yet come to a decision or conclusion.

*279 Q.—THIRU S. RAMACHANDRAN :
THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) whether the Government have issued any special instructions to District Collectors to allot a particular day in a week for hearing public grievances ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அனுப்பப்படும் புகார்களையும் முறையீடுகளையும் வழக்கம்போல் முடிவு செய்வது தவிர, பொது மக்களின் புகார்களையும், முறையீடுகளையும் பெற்றுக் கொள்வதற்காக வாரத்தில் ஒரு நாள் தனியே ஒதுக்கி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் (கலெக்டர்கள்), கோட்ட வருவாய் அதிகாரிகளுக்கும் 1964-ம் ஆண்டில் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**திரு எஸ். இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்படி வாரத்திற்கு ஒரு நாள் மாவட்ட கலெக்டர் அவர்களை நேரில் சந்திப்பதற்கு வாய்ப்பு கொடுத்தது உண்மையிலேயே நல்லது தான். அந்த விண்ணப்பங்களைப் பெற்று ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் பதில் கொடுத்தால் நன்றாயிருக்குமாதலால் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதற்காக அரசு தனியாக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொண்டிருக்கிறதா என்ற தகவல் இல்லை என்றாலும் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் கலெக்டர்கள் அதற்காக இப்பொழுது தீவிரமாக சில முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால் செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அவர்கள்இப்பொழுது புதிய முறையைப் புகுத்தி பரீட்சை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கிருந்தாவது, சிற்றூர்களிலிருந்தாகிலும் மனுக்கள் வந்தால் வந்தவுடனேயே அந்த மனு வந்தது என்று அவர்களுக்கு மனுவைப் பெற்றுக் கொண்டதற்கான ஒரு சான்றிதழும், இந்த மனு மூன்று மாதங்களுக்குள் கவனிக்கப்படும் என்ற உறுதிப்பாடும் தெரிவிக்கப்படுகிறது. மூன்று மாதங்களுக்குள் அந்த மனுவிலே செய்யப்படக்கூடுமானால் செய்யப்படமுடியுமென்று தெரிவிக்கும், இல்லையென்றால் இந்தக் காரணத்தினால் இயலவில்லை என்று தெரிவிக்க வேண்டுமென்று அந்த முறையைக் கொண்டு பரீட்சை பார்த்துக்கொண்டு வருகிறார்கள். வடார்க்காடு மாவட்டக் கலெக்டர் ஒரு பகுதிக்கு ஒரு நாள் குறிப்பிட்டுச் சென்று அந்தப் பகுதியிலே வந்திருக்கும் மனுக்களையெல்லாம் பார்த்து, அங்குள்ளவர்களையெல்லாம் அழைத்து, மனுக் கொடுத்தவர்களையும் அழைத்து நேரிலேயே பேசி உடனடியாக எவைகளைச் செய்ய முடியுமோ அவைகளைச் செய்து தீவிரம் காட்டி வருகிறார்கள். மற்ற மாவட்டக் கலெக்டர்களும் இதைப் போன்ற பல முறைகளை இன்று மேற்கொண்டு பரீட்சை பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, as far as the Chingleprt district is concerned, Monday has been set apart for hearing public grienvaces. Whereas the example set up by the Collector of Chingleput is worthy of emulation by other Collectors in the State and whereas in spite of the endorsement of the Collector that a petition would have to see the light of the day within three months, no follow-up action is taken and no record is maintained in the Collectors Office that such and such a petitoon was given by such and sush a person and such and such endorsement was made. So, will instructions be issued by the Government with regard to the follow-up action to the authorities concerned. Now, it is the petitioner who will have to run after his petition. So, will the Government issue suitable instructions to the lower officials concerned in all the districts so that the grievances of the people may be genuinley redressed ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I will pursue this useful suggestion.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் கலெக்டரவர்கள் இந்த மாதிரி பொது மக்களைச் சந்தித்து விண்ணப்பங்களை வாங்குவதற்கு திங்கட்கிழமையை





நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான திங்கட்கிழமைகளில் அவர்கள் இருப்பதில்லை. வெளியூர் சென்று விடுகிறார்கள். பி.ஏக்கள் தான் இருக்கிறார்கள். விண்ணப்பம் கொடுக்கும் மக்களுக்கு கலெக்டரைப் பார்த்துக் கொடுத்தோம் என்ற திருப்தியிருப்பதில்லை. இதைப் போக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திங்கட்கிழமையன்று வேறு ஏதாவது முக்கியமான வேலைகளிருந்து அவர்கள் சென்றிருந்தால் அதைத் தவிர்க்க முடியாது. கலெக்டருக்கு மட்டும்தான் அந்த அனுபவம் என்பது அல்ல. நான் கூட ஒவ்வொரு புதன்கிழமையும் அதிகாரிகளைச் சந்திப்பது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் பல புதன்கிழமைகளில் என்னால் சந்திக்க முடியாது. விருப்பம் இல்லாததால் அல்ல, வேறு வேலைகள் குறுக்கிடுவதால்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் சந்திப்புக்களை ஏற்படுத்துவார்கள். வட்டத் தலைநகரங்களிலும் மக்களைச் சந்திக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்பொழுதெல்லாம் கலெக்டர்கள் தலை நகரத்தில் மட்டும் இருப்பதில்லை. மாவட்டம் முழுவதும் தேவைப்படும் நேரத்தில் சென்று வருகிறார்கள்.

**திரு ரா. ராமச்சந்திர துரை :** தலைவரவர்களே, ஒரு மாதம் பூராவும் சுற்றினாலும் ஒரு மாவட்டத்தைச் சுற்ற முடியாது. எனவே மக்களுடைய குறைகளைக் கேட்க ஒரு தனி அதிகாரியை நியமித்து அந்தக் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதற்கு அப்படி ஒரு அதிகாரியை நியமிப்பதற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது வசதியாக இருக்கும் என்று கனம் உறுப்பினரவர்கள் அந்த யோசனையைச் சொல்லுகிறார்கள். அது தாமதத்திற்கு வழி வைத்துவிடுமோ என்ற பயமும் எனக்கிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அவசியமான காரியங்கள் "ஏற்படுமானால் ஏதோ ஒரு வாரம், இரண்டு வாரம் தவறலாம். ஆனால் பல வாரங்கள் அப்படி கலெக்டர்கள் அங்கே இருக்க முடிவதில்லை. அமைச்சர்களைவிட அதிகப்படியாகச் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். ஆகவே அவர்கள் இல்லாத நேரத்தில் டி. ஆர். ஓ.வோ, பி.ஏ. வோ தான் இருக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. வாரத்திற்கு ஒரு முறை இல்லை என்று சொன்னாலும் 15 தினங்களுக்கு ஒரு முறையாவது எல்லா அதிகாரிகளும் புடை சூழ அங்கேயிருந்து மக்களுடைய பிரச்சினைகளைத் தீர விசாரிக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் சொன்னபடி சில திங்கட்கிழமைகளில் பார்க்க முடியாவிட்டாலும் ஒரு மாதத்திற்கு இரண்டு முறையாவது பார்க்க வேண்டுமென்று சொல்லும் யோசனை வரவேற்கத்தக்கது. கலெக்டர்கள் அந்த யோசனையை மேற்கொள்ள நானும் கேட்டுக் கொள்ளுவேன். ஆனால் அவர்கள் இல்லாத நேரத்தில் வேறு அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லக் கூடாதா என்றால் சொல்லலாம். ஆனால் பெரும்பாலும் வருகின்றவர்களெல்லாம் கலெக்டரை நேரிலே பார்த்துச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு வருவதாலே மற்ற அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போவதற்கு கொஞ்சம் தயக்கப்படுகிறார்கள்.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Chief Minister to state whether this Government would issue instructions to the District Collectors at least to meet teachers and students once in a month to hear their grievances if any ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I do not think every month there will be grievances for teachers and students and that would be a very bad state of affairs.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் சென்று மாவட்டத் தலைநகரங்களிலே சென்று கலெக்டரைப் பேட்டி காண்பதிலே அனுபவ ரீதியாக சிரமங்கள் இருப்பதால் ஒரு ஆண்டுக்கு ஒருநாளாவது ஒவ்வொரு தொகுதி தலைநகரத்திற்கும் கலெக்டர்கள் சென்று அந்தத் தொகுதிக்குள்ள ஆர்.டி.ஓ., தாசில்தார், இன்ஜினியர் இன்னும் மற்ற அதிகாரிகளோடு அங்கேயிருக்கும் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு ஆராயும் ஆலோசனையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆண்டுக்கு ஒரு தடவை அப்படிப்பட்ட குறைகளை விசாரிக்கும் நாளாக வைக்க வேண்டுமென்று கனம் உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். நான் கம்போடியாவிற்குச் சென்ற நேரத்தில் ஒன்று பார்த்தேன். கம்போடியா அரசர் அப்படி ஒரு நாளைக் குறிப்பிட்டுள்ளார். அன்று எல்லா மக்களும் வந்திருந்து அமைச்சர்கள் உட்பட யார் மீது குறையிருந்தாலும் எடுத்துச்சொல்லலாம் என்று வைத்திருக்கிறார்கள். இதை நான் கேள்விப்பட்டு இதைப்பற்றி கம்போடியாவிலுள்ள ஒருவரிடம் பேசுகின்றபொழுது அவரே திருப்திப்படவில்லை என்று தெரிய வந்தது. ஏனென்றால் கம்போடியா அரசர் மீது புகார் இருந்தால் யாரிடத்தில் சொல்லுவது என்று கேட்டார்.

Dr. H. V. HANDE : Sir, from the number of supplementary questions that have been put, I am quite sure that there is a great amount of dissatisfaction with the disposal of files in the District officers. So, will this Government give-clear-cut instructions that the work of the D.R.O. and the Collector should be separated. Now what actually happens is that many of the files which the D.R.O. has to see come bak to the Collector. This can be avoided if their work is separated and the files intended for the D.R.O. can come straight to the Secretariat. Of course, there is a certain amount of separation but still will the Government re-examine the matter and see that their work is completely separated so that there is no overlapping.

The Hon. Thiru C. N. ANNADURAI : I said that it was a useful suggestion, but forgot to add that all these suggestions can be placed before this House when we discuss ' District Administration '.

**திரு. இ. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, டி.டி.சி. மீட்டிங்கில் ஒவ்வொரு தொகுதியாக ஏற்பாடு செய்து பேசி முடிந்த பிறகு, ½ மணி பொது மக்களுக்கு அதிகாரிகளைப் பேட்டி அளிக்கச் செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித்தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

(விடையில்லை.)

Thiru K. VINAYAKAM : Arising out of the answer given by the Hon. Chief Minister, legislators as well as members of the public find it difficult to meet the Ministers and represent matters during office hours. More often the legislators, one such being mine. indulge in gatecrashing into the residence of the Ministers even disturbing their privacy and presenting petitions. Will the Ministers set apart particular hours of a particular day and make it a point to receive them in the Secretariat irrespective of whether there is work or no work ?

The Hon. Thiru C. N. ANNADURAI : I will consider that as a suggestion. Meanwhile I request the hon. Member in the interests of the gate not to gatecrash.





*280 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன், திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

அண்மையில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாநில நிர்வாகத்தைப் பற்றிய பல பொருட்கள் பொதுவாக விவாதிக்கப்பட்டன. முடிவுகள் உடனடியாக அங்கு எடுக்கப்படவில்லை. தேவைப்படும்பொழுது, மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு இணங்க அரசு முடிவு எடுக்கும்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் எந்த எந்த அமைச்சர்கள் கலந்துகொண்டார்கள்? அந்த மாநாட்டில் பெரிய ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் தனிக் கலெக்டர்கள் போடுவதைப்பற்றி தீர்மானிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தீர்மானிக்கப்படவில்லை, விவாதிக்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதிலே கொள்முதல் செய்வதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும், ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டி அதன் மீது முடிவு எடுப்பதை பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும் கூட பத்திரிகையிலே பார்த்தேன். அந்தக் கொள்முதல் எப்படி செய்யவேண்டுமென்ற அடிப்படையிலேயும், இந்த ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றுவதைப் பற்றியும் ஏதாவது முடிவு செய்யப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இத்தகைய கேள்விகள் எல்லாம் எழுவதற்குக் காரணம் இருக்கிறது. கலெக்டர்கள் மாநாடு என்று பெயரிட்டிருப்பதாலே, வழக்கமாக அரசியல் கட்சிகள் மாநாடு நடத்துகிற பொழுது, இறுதியிலே சில குறிப்பிட்ட தீர்மானங்களை நிறைவேற்றி அதற்குப் பிறகு அவர்கள் செயல்படுவார்கள் ; அதைப்போல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலே இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. Conference என்பதற்கு to confer என்ற பொருளிலே தான் இந்த Conference இருந்தது. ஒருவருக்கொருவர் கலந்து உரையாடுவதும், பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதும் தான் இந்த மாநாட்டினுடைய அடிப்படை நோக்கமாகும். அந்த முறையில் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கொள்முதல்பற்றிய பிரச்சினை கூட விவாதிக்கப்பட்டது.

**திரு. கே. சகாதேவக்கவுண்டர் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களைப்பற்றி விவாதித்ததாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படி விவாதித்த பொழுது வட ஆர்க்காடு மாவட்டத்தையும் ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கலெக்டர்கள் மாநாட்டிலே விவாதிப்பதற்கு ஏற்ற பெரிய மாவட்டங்களிலே ஒன்றுதான வட ஆர்க்காடு மாவட்டம். வட ஆர்க்காடு மாவட்டம் மட்டும் அல்ல, எல்லா மாவட்டங்களையும் பற்றி அங்கே விவாதிக்கப்பட்டது.

**Thiru K. VINAYAKAM : Apart from just conferring, was any regular agenda drawn up was any discussion carried on on the items in the agenda, what were the conclusions arrived at, what were the decisions taken, was the law and order situation discussed, was**

[1968 மார்ச் 22

the rupee-a-measure scheme discussed and what was the conclusion arrived at ? Is the Government going to implement those decisions or is the conference just an annual *tamasha* ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The seriousness of the question was marred by the last word. He could have avoided it.

THIRU K. VINAYAKAM : I am sorry.

THE HON. THIRU C. N. ANNADURAI : Because he has used that word, I can also say that the question itself is a *tamasha*. As for the query, I can say that all these problems were discussed. As for the conclusions arrived at, provisional conclusions were arrived at and they are subject to revision, rectification and finalisation

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் கொள்முதல் பற்றி விவாதிக்கப்பட்டதாக வந்ததால், அங்கு ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கும் "லெவி நோட்டீஸ்" தரப்படுகின்றது என்று கலெக்டர்களுக்குப் புகார் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டதா ? புகார் வந்தது என்றால், அதைப் பற்றி பரிசீலிக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படிப்பட்ட புகார்கள் என்னிடத்திலே வந்திருப்பதாலே, கலெக்டர்கள் மாநாட்டிலே நானே அதைப்பற்றி கேட்டேன். பல மாவட்டக் கலெக்டர்கள் அப்படி நாங்கள் வற்புறுத்தி யாரிடத்திலேயும் வாங்கவில்லையென்று தான் சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இது மாதிரி மாவட்ட கலெக்டர்களுடைய இந்த மாநாட்டிலே தீர்மானிக்கப்பட்டவைகளைப்பற்றியும், விவாதிக்கப்பட்டவைகள் பற்றியும் சட்டசபை முன்னாலே குறிப்புகள் வைக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அத்தகைய உத்தேசம் எனக்கு இப்பொழுது இல்லை.

### அரசுப் பணியாளர்கள் ஊதியம்

*281 வினா—**திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 அக்டோபர் மாதம் தமிழ்நாடு அரசு அறிவித்தபடி அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய உயர்வால் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவு எவ்வளவு ?

(இ) இந்த ஊதிய உயர்வால் பயனடைவோர் எத்தனை பேர் ?

(உ) பயன் அடையாதோர் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாநில அரசாங்கப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள்—ஆகியோரின் அகவிலைப்படியினை உயர்த்தி 1967 அக்டோபரில் அரசாங்கம் ஆணை வெளியிட்டது. மேலும் மாதச்சம்பளம் ரூ. 500-க்கு மேல் போகாத அரசாங்கப் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் செயலுக்குக் கொண்டு வந்தது. அகவிலைப்படி வீதத்தினை உயர்த்தியதால் ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு சுமார் 7 கோடி ரூபாயாகும். நகர ஈட்டுப்படித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்குச் சுமார் 65 லட்சம் ரூபாய் செலவாகும்.



1968 மார்ச் 22]

மேற்கூறியவற்றினால் பயன்பெறுவோர், பயன்பெறாதவர்கள் ஆகியோர்களுடைய தோராயமான எண்ணிக்கை பின்வருமாறு :—

| | அகவிலைப்படி. | நகராட்டுப்படி. |
|---|---|---|
| பயன்பெறுவோர் .. .. | 418,800 | 45,500 |
| பயன்பெறாதவர் .. .. | 2,725 | 900 |

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்த இந்த ஊதிய உயர்வை அவர்களுக்குக் கையிலே பணமாகக் கொடுக்காமல், பிராவிடண்ட் பண்டிலே சேர்த்திருப்பதால் அரசு ஊழியர்கள் மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளார்கள். வரவினம் செலவைச் சரிக்கட்ட வேண்டுமென்ற முறையிலே கொடுக்கின்ற இந்த ஊதிய உயர்வை, வருங்காலத்தில் கொடுக்கும்பொழுது பணமாகக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஊதிய உயர்வைக் கையிலே பணமாகக் கொடுக்காமல் பிராவிடண்ட் பண்டிலே சேர்த்திருப்பதால் பணியாளர்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார்கள். இதனாலே அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான தகவல் என்னிடத்திலே இல்லை. ஒரு சமயம் அவரோடு தொடர்புகொண்ட சில பணியாளர்களுக்கு அதிருப்தி இருக்கலாம். அப்படி இல்லையென்றாலும் அத்தகைய அதிருப்தி ஏற்படுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Whereas the intention of the Government in granting increase in Dearness Allowance is to help the employees on account of the general rise in the cost of living and whereas the Government has decided to add the increase to the provident fund account, is the Government aware that not all Government employees enjoy the benefit of provident fund and what is to happen to such of those who do not have provident fund account ? Is the Government going to pay them separately ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not have at present any such details.

**திரு. சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பணியாளர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்தும்பொழுது, அவர்கள் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டு வாடகையையும் உயர்த்திவிடுகிறார்கள். ஆகவே, அரசின் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு தந்தும், அந்த உயர்வின் மூலம் பலன் ஏற்படாத சூழ்நிலை, இக்கட்டான நிலைமை இருப்பதினால், அரசின் நிதி நிலைக்கு ஏற்ப திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மூலம் சிக்கனமாக அரசின் பணியாளர்களின் குடும்பங்களுக்கு காலனி அமைப்பதற்கான திட்டத்தை இந்த அரசு பரிசீலிக்குமா என்று பணிவுடன் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் கட்டிக்கொடுக்கிற வீட்டைப்பற்றி நானும் கேள்விப்பட்டு, அவர்களோடு பேசினேன். எனக்குக் கூட அப்படிப்பட்ட வீடுகள் தேவை என்று சொன்னேன். இன்னும் ஒரு வருஷத்திற்குப் பிறகு அதுபற்றி யோசிக்கப்படும் என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகிற இந்த பஞ்சப்படி உயர்வு பணத்தை மத்திய அரசினிடமிருந்து பெறுவதற்கு ஏதாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டதா ? அப்படியானால் மத்திய அரசு அளித்த பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மத்திய அரசினிடத்தில் அதைப்பற்றி பல முறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பல முறை நமக்குச் சொல்லிவிட்டார்கள். ஆனால், நிதிக் கமிஷன் வருகிற நேரத்தில் இந்தப் பிரச்னை ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது எனபதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### மதுரை ராஜா மில்ஸ் கதவடைப்பு

**திரு. என். சங்கரய்யா :** தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் பின்வரும் அவசரப் பொது முக்கியத்துவமுள்ளதொரு பொருள் பற்றி விவாதிக்க, சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டும் என கோருவதற்கு இதன் மூலம் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"மதுரை நகரில் உள்ள ராஜா மில்ஸ், கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருப்பதினால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள்."

தலைவர் அவர்களே, இதுபற்றி ஒரு சில வார்த்தைகள மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மில்ஸ் ஏற்கெனவே நடந்து வந்து, நீண்ட காலமாக ஏராளமாக லாபம் சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது மில்களில் துணித் தேக்கம், நூல் தேக்கம் இருப்பதால் இந்த மில மூடப்பட்டது என்பது இல்லை. தொழிலாளர்களுக்கு ஊதியத்தைக் குறைத்து, அவர்கள் ஊதியத்தை மிகவும் குறைவாக வாங்கிக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கும்படி நிர்ப்பந்திப்பதற்காக நீண்ட காலமாக மில்லை மூடியிருக்கிறார்கள். அதனால் மதுரை நகரத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. ஆகவே, சம்பந்தப்பட்ட இலாகா மூலம் மேற்படி மில்லின் உரிமையாளர்களையும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும் கூப்பிட்டு வைத்துப் பேசுவதன் மூலம் இந்த மில்லைத் திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மில்லைத் திறந்த பின்னர், இரண்டு தரப்பினரும் கூடிப்பேசி இந்த மில்லை நடத்துவதற்கு வழியிருக்கிற காரணத்தினால், இந்த மில மூடியிருப்பதனால் ஏற்கெனவே இந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பெருகியிருப்பதினால், இந்தக் காரியத்தில் அரசு உடனே கவனம் செலுத்தவேண்டும் எனபதற்காக தொழிலாளர்களின் சார்பாக இந்தப் பிரச்சனையை விவாதிப்பதற்கு பேரவையின் இதர அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் அந்த மில் மூடப்படுவதற்கு காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, எந்த வகையில் அதை நீக்கலாம் என்பதுபற்றி அந்தத் துறை அதிகாரிகள் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான காரணத்தை கண்டறிந்து, அதை நீக்குவதற்கு சிலபல நேரம் காலத் தாழ்வு ஏற்படுகிறது. உடனுக்குடன் இருக்கும் நிலைமையை ஆராய்ந்து மில்களை திறப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். கடன் வசதி கொடுப்பது, பாங்குகள் மூலம் உத்தரவாதம் கொடுப்பது போன்ற முயற்சியில் ஈடுபட்டு, சம்பந்தப்பட்டவர்களை கலந்து ஆலோசித்து, மூடப்பட்ட மில்களை திறப்பதற்கான முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை இந்த விவாதித்து



முடிவு காணவேண்டிய நிலை இல்லை. ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குள்ளும் இது வராது. அதிகாரிகள் இதில் தக்க கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. கவன ஈர்ப்பு

### நெல்லை மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவமழையின்மையும் குடும்பக் கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கலும்

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** 1967–68-ம் வருடம் மழை பொய்த்துப் போய் நடப்பு பிசான நெல் மகசூலும், சங்கரன்கோவில் தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் பெரும்பகுதிகளில் தேய்வு ஏற்பட்டு, விவசாய மக்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாயிருப்பதால் அவர்களுக்கு குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற தானியங்களை விநியோகம் செய்யவேண்டும் என்பதுபற்றிய அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** 1967–68-ம் ஆண்டு பருவ மழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு அறியும். அதிலும் நாங்குநேரி வட்டத்தில் இராதாபுரம் துணைவட்டத்திலுள்ள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அரசு அறியும். பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரிசி போன்ற உணவு தானியங்களை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சங்கரன்கோவில் வட்டத்தில் 39 கிராமங்களுக்கும், தென்காசி வட்டத்தில் 46 கிராமங்களுக்கும், இராதாபுரம் துணை வட்டத்தில் 28 கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. செங்கோட்டை வட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் ஏற்கெனவே குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. பருவமழை பொய்த்த எல்லா கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. என். குமாரசாமி அவர்கள் 41-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவர்கள் இங்கே இருப்பதில் இல்லாத காரணத்தினால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப் படுகிறது.

## 4. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 20—தொழில்கள்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,93,09,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்"

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3 93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1968 மார்ச் 22

THIRU N. KASIRAMAN : Sir, to discuss about the measures to be taken to maintain peace and calm in the Industrial Sectors—I move the following cut motion :—

That the allotment of Rs. 3,93,09,100 under Demand No. 20—Industries be reduced by Rs. 100.'

**திரு. ஆ. கு. சுப்பையா :** கிராமப்புறங்களில் சிறு தொழில்கள் தொழில் பேட்டைகள் அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3,93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** "தமிழகத்தில் டிராக்டர் தொழிற்சாலை அமைக்கவேண்டு மென்பதை வலியுறுத்த—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3,93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** "கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 6 ரூபாய்க்கு ஒரு டன் விற்க வேண்டிய மொலாஸஸ் 400 ரூபாய்க்கு விற்பனை செய்யும் போக்கைப் பற்றி" விவாதிக்க—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3,93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 40 — தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,29,85,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கரு. சீமைச்சாமி :** இராமநாதபுரம் கிழக்குப் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பும் சலுகையும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட—

"கோரிக்கை எண் 40 — தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,29,85,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி :** நெருக்கடியிலுள்ள பஞ்சாலைகள், இன்ஜினிரிங் தொழில்களின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 40 — தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,29,85,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1968 மார்ச் 22]

THIRU N. KASIRAMAN : Sir, to discuss about the absence of Industrial developments during last year—I move the following cut motion :—

' That the allotment of Rs. 8,29,85,600 under Demand No. 40—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு கோரிக்கைகளும்; அவைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இரு மானியக் கோரிக்கைகள் பற்றிய ஆய்வுரைகளும்[a] இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முழு விவரக் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்த நிலைமைகளைப் பற்றியும், இப்பொழுது இருக்கிற நிலைமைகளைப் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும், திட்பமாகவும் அவைகளில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இனி நிலைமை எப்படி யிருந்தால் நல்லது, எப்படி தொழில் வளர்ச்சியைப் பெற முடியும் என்பதற்கு அவை உறுப்பினர்கள் தருகிற சீரிய கருத்துக்கள், எதிர்காலத்தில் நல்ல பல முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கின்ற வகையில் அவர்களுடைய கருத்துகள் பயன் படும் என்ற அடிப்படையில், சீரிய கருத்துக்களை வழங்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு, விவசாயத் துறையிலே அதிகம் நாட்டம்கொண்டு இருந்தது என்ற காரணத்தால், தொழில் துறையில் தொழில் முன்னேற்றத்திலே, தொழில் வளர்ச்சியில் அதிகமான வாய்ப்புகள் ஏற்படாமல், தொழில் பொறுத்த வரை மற்ற மாநிலங்களைவிட பின் தங்கிய நிலையில் இருந்தது. ஆனால், சென்ற 10, 15 ஆண்டுகளில் தொழில் அமைச்சர்களாக இருந்தவர்களும், முன்பு இருந்த அரசும், சீரிய முயற்சிகள் பல எடுத்ததன் காரணமாக தமிழ் நாடு சமீபத்திலே, இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தைப் பெறும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. வெகு காலமாக கடை நிலையில் இருந்த தமிழ்நாடு இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தை தொழில் வளர்ச்சியில் பெற்றிருக்கிறது என்றால், முன்பு இருந்த அரசும், தொழில் அமைச்சர்களும் சரி, தமிழ்நாட்டில் உள்ள தொழில் அதிபர்களும் சரி தொழிலாளர்களும் சரி நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காக பெரு முயற்சிகள் செய்து வந்திருக்கிறார்கள், என்பது நன்றாக விளங்குகிறது. தொழிலில ஈடுபட்டவர்களும், தொழிலாளர்களும் மற்ற மாநிலங்களை விட, தங்களுடைய திறமையிலும், ஊக்கத்திலும் மற்றவர்களுக்குக் குறைந்தவர்கள் இல்லை, நல்ல விதத்தில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால், நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடு படுவார்கள் என்பதை இப்பொழுது நிரூபித்து விட்டார்கள். தமிழ்நாடு, Detroit of India என்று சொல்லப்படலாம் என்ற அளவிற்கு, மோட்டார் கார்களையும், மோட்டார் சாமான்களையும் உற்பத்தி செய்யும் அளவிற்கு மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு முன்னேறி இருக்கிறது. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்கள் பலவும், பல பல தொழிற்சாலைகளும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காராலும், பல பெரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இண்டக்ரெல் கோச் பாக்டரி போன்ற பெரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் ஹை ப்ரெஷர் பாய்லர், திருச்சியில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதே மாதிரி தமிழ் நாட்டில் பல கோடிக் கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்து பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். முற். பகல் 10-30

ஆனால், துரதிர்ஷ்ட வசமாக தமிழ் நாட்டில் கனிவளம், மற்ற மாநிலங்களில் போல அதிகமாக இல்லாததால், பெரும் பெரும் தொழில்கள் ஏற்படுவதற்கு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் சமீபத்திலே அருப்புக் கோட்டை பகுதியில், கனிவளம் நிறைய இருப்பதாக கண்டு பிடித்திருக்கிறார்கள், அம்மாதிரியான இடங்களில் நல்ல விதத்தில்

[a] 385-477-ம் பக்கங்களில் II, III இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன

தொழிற் சாலைகள் ஏற்படுத்த வேண்டும். அருப்புக் கோட்டைப் பக்கத்தில் லைம்ஸ்டோன் கிடைப்பதாகவும், கள்ளக்குறிச்சிப் பகுதியில், ஈயம், செம்பு, மாமண்டூர் பகுதியில் துத்தநாகப் படிவங்களும் கிடைக்கின்றன என்று குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. நல்ல முயற்சி எடுத்து, தொழிற் சாலைகள் ஏற்படுத்தினால், மின்சாரத்திற்கு முக்கியத்துவம் வந்திருக்கும் காரணத்தால், செம்பு உலோகத்திற்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி செமண்டுத் தொழிற்சாலைகளை அதி விரைவில் ஏற்படுத்தினால் நாட்டின் முன்னேற்றம் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போலத்தான், பல்லடம், பொள்ளாச்சி உளுந்தூர் பேட்டைப் பகுதிகளில், ஜிப்ஸம், லைம்ஸ்டோன் இவைகள் கிடைப்பதாக இருப்பதால், அங்கே யெல்லாம் செமண்ட் தொழிற்சாலைகள் ஏற்படுத்தினால், நலமாக இருக்கும். இப்பொழுது சிமெண்டுக்கு நல்ல தேவையிருக்கிறது. காரணம் என்னவென்றால், கட்டடம் கட்டவும், அணைக்கட்டுகள் கட்டவும், செமண்டுக்கு ஏற்பட்டிருக்கும் கிராக்கி, அதிகமாக இருப்பதால், லைம்ஸ்டோன் கிடைக்கும் பகுதிகளில் தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். செமண்டு கிடைப்பதோடு அல்லாமல், தமிழ் நாட்டில் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் ஏற்படும்.

தொழில் துறைக்கும் கனிவளத்திற்கும் 1967–68-ல் 700 லட்சம் ஒதுக்கப்பட்டதாக இருந்தது. அந்த ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 609 லட்சம் என்று குறைத்து, இப்பொழுது 1968–69-ல் 570 லட்சம் என்று படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. விலைவாசிகள் ஏறியிருக்கும் இந்த நேரத்தில், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஊதியமும், பஞ்சப்படியும் அதிகமாகி, விலைவாசிகள் ஏறியிருக்கிறபோது, இந்த இனத்திற்கு, தொழிலுக்கும் தொழில் துறைக்கும் கனி வளத்துறைக்கும் அதிகப்படுத்த வேண்டியிருக்க, வருஷாவருஷம் குறைத்துக்கொண்டு வந்தால்,—— தொழில் துறையும் கனி வள வேலைகளும் பாதிக்கப்படும். அதையில்லை, இந்த நிரப்பப் பணம் ஒதுக்கீடு செய்து நல்ல வகையில் நாம் முன்னேற வாய்ப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நாட்டில் முன்னேற்றம் வரும். Large and Medium Industries and Village and Small-Scale Industries என்ற இனத்திற்கு, 574 லட்சம் ஒதுக்கப்பட்டதாக இருந்தது. பின்பு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 486 லட்சமாகக் குறைக்கப்பட்டு, இப்பொழுது 1968–69-ல் 456 லட்சம் ரூபாய்க்கு குறைத்திருக்கிறது. ஏதோ தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல, அதிகமாக ஆக்கப்படாமல், குறைக்கப்பட்டிருக்கிறது. தொழில் துறையில் முதலீடு செய்வதைக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொல்லாமல் சொல்வது போல இருக்கிறது. அது நல்லதல்ல.

தொழில் முதலீடு பற்றி பல இடங்களில் அரசாங்க ரிப்போர்ட்டுகளைப் படிக்கப் போது, பல இடங்களில் மெஷினரிகளை வாங்கிப் போட்டு, அந்த யெந்திரங்கள் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 3½ லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள யெந்திரங்கள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட யெந்திரங்களை வரவழைக்க அதிகாரிகள் யார். எந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள், இந்த யெந்திரங்களை வரவழைத்தால், அவற்றிற்கு வேலை கொடுக்க முடியுமா, கொண்டுபோய் வைத்திருக்கும் இடங்களில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவா, அதற்கான தொழில்கள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், யெந்திரங்களை வாங்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு செயல்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட யெந்திரங்கள் வேண்டப்படாத இடத்தில் இருப்பதால், வேண்டிய இடத்தில் இல்லாமல், இருப்பதோடு அல்லாமல், பணமும் முடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் இருந்தால் உபயோகப்படலாமோ அந்த இடங்களுக்கு இந்த யெந்திரங்கள் கொடுக்கப் படாததால், வேலைச் சுணக்கமும் ஏற்பட்டிருக்கிறது. எந்த எந்த இடங்களுக்கு இவற்றை அனுப்பினால் அவை நல்ல விதத்தில் பயன்படுமோ அப்படிச் செய்ய வழிவகைகளைக் காண பரிசீலனை செய்ய





வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இனிமேலாவது இந்த மாதிரி ஏற்படாமல் தடுக்கவும் வழிவகைகளைச் செய்யவேண்டும். இந்த இயந்திரங்களை வாங்குவதற்கு முன்னால், இந்த ஏரியாவில் இன்னின்ன வேலைகள் இருக்கின்றன, இந்த அளவிறகு இவை வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்தத பின்னால்தான் இனிமேல் இப்படிப்பட்ட இயந்திரங்களை வாங்கவேண்டும் என்றும் சொலல விரும்புகிறேன்.

அதிகமாக தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும் என்றால், அதிகமாக தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படும். தொழில் துறையிலும் தமிழ்நாடு முன்னேறவேண்டும். கட்டாயம் முன்னேறும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

தொழில்துறையில் ஈடுபடும்போது அமைதி இருக்கவேண்டும். தொழில் துறையில் அமைதி இல்லாவிட்டால், பொதுவாக யாருக்கும் ஒரு தயக்கம் ஏற்படும். புதிதாகத் தொழில்களில் ஈடுபடவும், ஏற்கெனவே ஈடுபட்டிருப்பவர்கள் தங்கள் தொழில்களை விஸ்தரிக்கவும் தயக்கம் காட்டுவார்கள். ஆகவே, அந்த இடத்தில் அமைதி இருந்தால்தான் தொழில் வளர்ச்சி இருக்க முடியும்; முன்னேற்றமும் இருக்கமுடியும். இந்த நேரத்தில் தொழில் அமைதி இருக்கவேண்டும் எனறு சொல்லும்போது, அதைக் கெடுக்க யார் காரணமாக இருந்தாலும், அரசாங்கம் நன்கு ஆராய்ந்து தொழில் அமைதி கெடாத வண்ணம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அந்த விஷயத்தை நன்கு பரிசீலித்து, தொழில் அதிபர்களோடும், தொழிலாளர்களோடும், தொழிலாளர் பிரதிநிதிகளோடும் கலந்தாலோசித்து, இந்த மாதிரியான சூழ்நிலைகளை உடனுக்குடன் கவனித்து, ஏதாவது கேடுபாடுகள் வந்தால் அவற்றை முளையிலேயே களைந்து எறிந்தால்தான் தொழில் அதிபர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் இருக்கும்.

சமீபத்திலே பேப்பர்களிலே பார்த்தோம். காரணம் வேறு விதமானாலும், மொழிப் பிரச்னைதான் காரணமாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக, தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்ட படங்களை வட நாட்டிலே, சினிமா தியேட்டர்களிலே காட்டத் தடை சொன்னார்கள். அதன் காரணமாக நம் தொழில் அதிபர்கள், தங்கள் ஸ்டுடியோக்களை வேறு மாநிலங்களுக்கு மாற்றிக்கொள்ளப்போவதாக யோசனை வந்திருப்பதாகப் பார்த்தோம். இம்மாதிரி நிலைகளில் அரசாங்கம் தலையிட்டு, அந்த ஸ்டுடியோக்கள் தமிழ் நாட்டிலேயே தொடர்ந்து இருக்கும் வண்ணம் செய்ய வேண்டும். அவை நம் மாநிலத்தை விட்டுப் போனால், அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. நம் மாநில தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அப்படிப் பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அந்த சம்பந்தப்பட்ட தொழிலதிபர்களைச் சந்தித்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்கள் இங்கேயே இருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல சமீபத்திலே, 10, 15 நாட்களுக்கு முன் என்று நினைக்கிறேன். பேப்பரிலே பார்த்தேன். கைத்தறித் துணிகள் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் முடங்கிக் கிடக்கின்றன. அதனால், அதில் ஈடுபட்டிருக்கும் கைத்தறியாளர்கள் குடும்பங்கள் வேலையிலலாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இங்கேயிருந்து வட நாட்டிற்குச் சென்று கொண்டு இருந்த கைத்தறித் துணிகளை அங்கே வாங்குவதறகுத் தயக்கம் காட்டுகிறார்கள். அதற்குக் காரணம் இந்த மொழிக் கொள்கை தான், மொழி வித்தியாசந்தான் என்று சொல்லப்படுகிறது. ஏதோ பிள்ளையார் பிடிக்கப் போய் ஏதாகவோ முடிந்தது என்று சொல்வது போல, இன்றைக்கு கைத்தறி பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால், படிப்படியாக தமிழ்நாடு தொழில்களையும், மாணவர்களையும் பாதிக்கக்கூடிய அளவிற்கு மொழிச் சிக்கல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை அதிகமாக வளர விடக்கூடாது. நேரிடையாக மொழிப் பிரச்சினைக்கும் தொழிலுக்கும் சம்மந்தம் இல்லை, என்றாலும், எந்த அளவிற்குப்

பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். லட்சக்கணக்கான— தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசினர் தகுந்த முறையில் கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தானாகச் சரியாகிவிடும் என்றால், தொழிலைப் பாதித்து, அதை அழிக்கக் கூடிய அளவிற்கு வந்து விடும், சரியான நிலை உண்டாகாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சிறிய கைத்தொழில்கள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே அதிகமான பேர் விவசாயத்திலே ஈடு பட்டிருக்கிறார்கள். விவசாயம் நடைபெறும் காலம் 6 மாதம் அல்லது 7 மாதம்தான் நடைபெறும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மட்டும் உள்ளவர்கள் 7 மாதம் 8 மாதம் தான் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மற்ற நாட்களில் விவசாயிகளுக்கு வேலை இல்லாமல் வீட்டில் சும்மா இருக்கிறார்கள். சும்மா இருப்பது அவர்களுக்கும் நல்லதில்லை. நாட்டுக் கும் நல்லதில்லை. 'An idle brain is a devil's workshop' என்று சொல்லுவார்கள். மனத்தைக் கண்ட வழிகளில் செலுத்துவதை விட சிறிய கைத்தொழில்களில் செலுத்தினால் அதனால் பெரிதும் நன்மை ஏற்படும். ஆகவே, சிறிய சிறிய கைத்தொழில்களைத் தாலூகாவாரியாகவும் மேஜர் பஞ்சாயத்து யூனியன் வாரியாகவும் ஏற்படுத்திக் கொடுத்தால், வேலையில்லாத நாட்களில் அப்பகுதி மக்கள் அத்தொழில்களிலே ஈடுபட்டு தங்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். வீட்டில் சும்மா பொழுது போக்க விவசாயிகளையும் மற்றவர்களையும் விட்டு விடக்கூடாது. பயனுள்ள வகையில் நாட்டுக்குத் தொண்டாற்றியவர்களாக இருக்க ஆங்காங்கே சிறிய கைத்தொழில்களை அதிகமாக ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

நாம் தொழில்களுக்காக 1967–68-ல் பட்ஜெட்டில் 126 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம். அது 1967–68-ல் ரிவைஸ்டு பட்ஜெட்டாக 123 லட்சம் ரூபாய் அளவிற்குக் குறைந்தது. 1968–69-ல் அது 114 லட்சம் ரூபாயாகக் குறைந்து விட்டது. சிறு கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்படும் தொகை இவ்வாறு வருஷத்திற்கு வருஷம் 3 லட்சம், 9 லட்சம் என்று குறைந்து விட்டால் எப்படி கைத்தொழில்களை நாம் ஊக்கப்படுத்த முடியும்? இது கவலைப்படக்கூடிய நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

தமிழ்நாடு பூராவிலும், சென்ற காலத்தில் தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடைய முயற்சியினால் இண்டஸ்ரியல் எஸ்டேட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. கும்பகோணத்தில் கூட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்றை ஏற்படுத்துவதற்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆரம்ப வேலைகள் துவங்கப்பட்டு, கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன. ஏதோ "மயன்" கட்டுவது போல, கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அனுமார் வால்போல நாட்கள் நீண்டுகொண்டே போகின்றன. நானும் அந்தக் கட்டிடங்களைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்.

(திரு. பெ. மலைச்சாமி தலைமை)

கட்டிட வேலைகள் மிகவும் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கின்றன. கட்டிட வேலைகள் சீக்கிரமாக முடிக்கப்பட்டு வெகு சீக்கிரத்தில் ஆரம்பமானால் நல்லது. அப்போதுதான் அரசாங்கம் செய்த முதலீடு செய்திருக்கும் பணத்திற்கு வருவாய் கிடைக்கும். அதே சமயத்தில் அங்குள்ள மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதைத் கூறிக் கொள்கிறேன்.

அரசாங்கம் பல கைத்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நடத்தி வருகிறது. பயிற்சிப் பள்ளிகளை நடத்துவதில் இன்னும் நாம் அதிக ஆர்வத்தைக் காட்ட வேண்டும். இன்னும் அதிகமான மாணவர்களைச் சேர்த்து, சிறிய சிறிய தொழில்களில் பயிற்சியளித்து தொழில் வளத்தைப் பெருக்குவது மிகவும் இன்றியமையாததாகும். பெரிய இன்ஜினியரிங், டெக்னீஷியன் போன்ற தொழில்கள் நமது நாட்டிற்குச் சாத்தியப்படாத நிலை இருக்கிறது. ஆகவே, ஃபிட்டர் மெக்கானிக், வெல்டர், கிரைண்டர், கார்ப்பெண்டர் போன்ற சிறிய தொழில்களில் அன்றாடம் உபயோகப்படக் கூடிய தொழில்களில் பயிற்சியளித்தால், தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்வார்கள். மேலும் பயிற்சியளிக்கும் தொழில் பள்ளிகள் அரசாங்கத்தில் ஏற்பட வேண்டும். கும்பகோணம் நகரசபையிலிருந்த ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ் அண்டு கிராப்ட்ஸ் என்ற பள்ளியை அரசாங்கத்திலே எடுத்துக்கொண்டார்கள். அந்தப் பள்ளி அன்று எப்படி இருந்ததோ, அதே நிலையில்தான் இன்றும் இருந்து வருகிறது. சென்ற தடவை இருந்த சர்க்கார் 1 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருந்தது. நூற்றுக்கு நூறு பங்கு அந்தத் தொகை செலவிடப்படாமல் இருக்கிறது. கட்டிடம் கட்டுவதற்காக வேண்டிய நிலங்கள் 5 ஏக்கர் அளவில், தன்னுடைய சொந்த நிலத்தைக் கொடுக்க நகரசபை ஒத்துக்கொண்டிருக்கிறது. கட்டிடம் கட்டி, ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் கிராப்ட்ஸ் பள்ளியை இம்ப்ரூவ் செய்ய இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கம் இதில் கொஞ்சம் அக்கறை காட்டி, இந்தப் பள்ளியை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக, சினிமாத் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சினிமாப் படம் எடுக்கும் தொழில் ஒரு லாபகரமான தொழிலாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் பத்து பதினைந்து நாட்களுக்கு முன் இண்டியன் எக்ஸ்பிரஸ் என்று நினைக்கிறேன். பேப்பரிலே வருமான வரி பாக்கியாக இருக்கும் சில சினிமாக் கலைஞர்களுடைய பெயர்கள் வந்திருந்ததைப் பார்த்தேன். பேப்பரில் ஒவ்வொருவரின் பெயருக்கு எதிரில் வருமான வரி பாக்கி இவ்வளவு லட்சம் ரூபாய் என்று போட்டிருந்தது. "வருமான வரி கட்டியது போக, பாக்கியே இவ்வளவு லட்சம் ரூபாய் என்றால் அவர்களுடைய மொத்த வருமான வரி எவ்வளவு இருக்கும்? அவர்களுடைய மொத்த வருமானம் எவ்வளவு இருக்கும்? நடிகர்களுடைய வருமானமே இவ்வளவு என்றிருந்தால், அந்தப் படத்தை எடுக்கக்கூடிய முதலாளிக்கு எவ்வளவு ரூபாய் லாபம் வரும்?" என்று கணக்குப் போட்டுத் தெரிந்துகொண்டேன். ஆகவே, சினிமாத் தொழிலை தேசிய மயமாக்கினால் அதன் மூலமாக நல்ல வருமானம் கிடைக்குமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

இன்னும் நமது நாட்டிலுள்ள கனி வளங்களை ஆராய்ந்து தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். நெய்வேலி நிலக்கரியையும், சேலம் இரும்பையும் கொண்டு பெரிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்று கட்சி வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரும் சொல்லுகிறார்கள். சேலம் இரும்பாலைத் திட்டம் முந்தைய அரசாங்கத்தாராலேயே எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கான நில ஆர்ஜிதம் 1964-ம் ஆண்டிலேயே செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் கட்சி ஆதரவு கொடுக்கத் தயார் என்று கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 8 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் 8 நிமிடங்களுக்குள்ளாகவே தங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். அடுத்து திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் பேசுவார்கள்.

**திரு. இரெ. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லக்கொள்வதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். "நம்முடைய தமிழ் நாட்டில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாக தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது" என்று காங்கிரஸ் தரப்பிலே பேசப்பட்டது. அதே நேரத்தில் தமிழ்நாட்டினுடைய குறிப்பிட்ட வருவாயை வைத்துக்கொண்டு தமிழர்கள் எந்தெந்த அளவில் தொழில் துறையில் முன்னேற்றம் அடைவதற்கு வழிவகை செய்கிறோமோ அந்த அளவுககுத் தான் வளம் பெருகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

[திரு. இரெ. இளம்வழுதி] [1968 மார்ச் 22

மத்திய சர்க்கார், மாநில அரசுகளுக்குக் கொடுக்கும் உதவியையும், அகில இந்திய ரீதியில் தொழிற்சாலையை நிறுவுவதற்கும், முன்னேற்றம் காண்பதற்கும் என்னென்ன திட்டங்களைப் போட்டு வருகிறார்கள் என்பதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய அளவில் இருக்கிறோம்.

மத்திய சர்க்கார் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகப் போட்டுள்ள மூலதனம் 357 கோடி ரூபாய். 15 ஆண்டுகளாக 357 கோடி ரூபாய் மூலதனம் போட்டு அவர்கள் ஸ்தாபித்த பெரிய தொழிற்சாலைகள் நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன், இண்டக்ரல் கோச் பாக்டரி, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், ஹெவி பிரஷர் பாய்லர் பிளாண்ட், ஆர்ட்னென்ஸ் பாக்டரி, சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பாக்டரி போன்றவைதான். இன்னும் பல பல சிறு தொழில்களுக்கும் சேர்த்துத்தான் 357 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் அதே மத்திய சர்க்கார் உருக்காலை நிறுவுவதற்காக துர்க்காபூர், பிலாய் ரூர்கேலா ஆகிய மூன்று இடங்களில் மட்டும் 914 கோடி ரூபாய் மூலதனம் செலவழித்திருக்கிறது. கடந்த ஓராண்டிலே மட்டும் மூன்று இடங்களிலும் உள்ள உருக்காலைகளிலும் சேர்ந்து நஷ்டம் 73 கோடி ரூபாய் வந்திருக்கிறது. மூன்று ஆலைகளுக்கு 914 கோடி ரூபாய் செலவழிக்கும் அதே நேரத்தில் மத்திய சர்க்கார், தமிழ்நாடு பூராவிற்கும் 15 ஆண்டுக் காலத்தில் இதுவரை தொழில் துறையில் போட்டுள்ள மூலதனம் 357 கோடி ரூபாய் என்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மையாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நிச்சயமாக உணர்ந்துகொள்ளலாம்.

அதுமட்டுமல்ல. பொக்காரோவையும் சேர்த்தால் ஆயிரக் கணக்கானகோடி ரூபாய்களை வடக்கேயுள்ள உருக்காலைகளில் போட்டு மத்திய சர்க்கார் செயல்பட்டு வருகிறது. அதேநேரத்தில் நம்முடைய தமிழக அரசு தமிழ்நாடு சட்டமன்றத்தில் எல்லாக் கட்சியினரின் ஆதரவோடும் நிறைவேற்றிய சேலம் உருக்காலைத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை மத்திய அரசு இதுவரை கவனத்திற்கு எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிறது. நமது தமிழக அரசும் இதுபற்றி சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் வற்புறுத்தி வருகிறது. எப்படியும் இதை நிறைவேற்றித்தர தமிழக அரசு முன்வந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சேலத்தில் உருக்காலை ஏற்படுத்தப் பட்டால் தமிழகத்தில் தொழில்வளம் பெருகும் சேலம் உருக்காலைத் திட்டமும் நெய்வேலி நிலகரித் திட்டமும் இணைந்தால், கடலூர் துறைமுகத்தின் மூலம் வெளிநாட்டு வர்த்தகம் பெருகுவதற்கான நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் தான் எப்படியும் சேலம் இரும்பாலைத் திட்டத்தை நிறைவேற்றித்தர இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும், சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. மத்திய சர்க்காரிலே ஆளும் கட்சியாக இருப்பது காங்கிரஸ் கட்சி. அந்தக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே இருக்கிறார்கள். இங்கே சட்டமன்றத்திற்குள்ளே பேசி பயன் இல்லை. சேலம் உருக்காலைத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றித்தர வேண்டும் என்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போட்டு இங்குள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் அதை டெல்லிக்கு எடுத்துச் சென்று அங்குள்ள காங்கிரஸ் தலைவர்களுடன் பேசி இந்தத் திட்டத்தை மத்திய அரசு எடுத்துச் செயல்படுத்துவதறகான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் சட்டமன்றத்திற்குள் பேசுகிறார்களே தவிர வெளியில் சென்றால் அவர்களுடைய பேச்சு வேறு மாதிரியாகவே போய்விடுகிறது. எனவேதான் இந்தத் திட்டத்தைப் பேச்சளவில் நிறுத்திவிடாமல் உண்மையாகவே செயல்படுத்துவதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் இப்படியொரு தீர்மானத்தைப் போட்டு டெல்லிக்கு எடுத்துச்சென்றார்கள் என்றால் அங்கே இருக்கக்கூடிய அவர்களது நண்பர்களும் இதை வலியுறுத்தும்படி செய்யலாம்.



168 மார்ச் 22] [திரு. இரெ. இளம்வழுதி]

அதுமட்டும் அல்ல. கடந்த 6 மாதகாலமாக தமிழ்நாடு அரசாங்கத்தைப் ற்றி ஒருவிதமாகப் பேசப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தொழில் துறைல் மந்தம் ஏற்பட்டிருப்பதாகவும், புதுத் தொழில்கள் எதுவும் வளரல்லை, புதிய தொழிற்சாலை ஏற்படவில்லை, திராவிட முன்னேற்றக் கழகம் ட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இத்துறையில் அக்கறை டுத்துக்கொள்ளவில்லை என்று பேசப்படுகிறது. இதில் உள்ள உண்மையை ராய்ந்து பார்க்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிக க்கியமான தொழில் விவசாயத் தொழில். பத்துப் பதினைந்து ஆண்டு ாலமாகவே நமது தமிழ்நாட்டில் பஞ்சமும், பட்டினியும் பலவிடங்களில் லைவிரித்தாடியது. தமிழ்நாட்டு நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்லே உணவுப்பொருள் கிடைக்காமல் மக்கள் கடைகடையாகச் சென்று வதிப்பட்ட நிலையைப் பார்த்தோம். இந்த அவல நிலையை மாற்றுவதற்காகத்தான் இந்த அரசு ஓராண்டுகாலமாக விவசாயத் துறைக்கு முதலிடம் கொடுத்து உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த செயல்பட்டு வந்திருக்கிறதே தவிர தொழில்களை எல்லாம் முடக்குவதற்காக அல்ல.

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் மழைவளம், மண்வளம், கனிவளம் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ள நமது அரசு செயல்பட வேண்டும்.

அடுத்து, தொழில்கள் நல்ல முறையில் முன்னேற்றம் அடைவதற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவில் சிறந்த பொருளாதார நிபுணர்கள், பேராசிரியர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர்களை இடம் பெறச் செய்து அவர்களிடத்தில் திட்டவட்டமான அறிக்கையைக் கேட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையில் செயல்பட நம் அரசு முன்வந்தால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

மேலும் என்னுடைய தொகுதியான கடலூரில் இந்த ஆண்டு ஒரு தொழிற்பேட்டை நிறுவப்பட இருக்கிறது என்பதை அமைச்சர் கொடுத்துள்ள அறிக்கையில் பார்த்தேன். கடலூரில் தொழிற்பேட்டை நிறுவப்படுவது மிகமிக முக்கியமாகும். மாவட்டத்தின் தலைநகராகிய அந்த நகரம் இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் காணவில்லை. அங்கே தொழிலும் இல்லை, தொழிற்சாலையும் இல்லை. ஆகவே, அங்கே தொழிற்பேட்டை நிறுவுவதை நான் வரவேற்கிறேன். நமது தொழில் அமைச்சர் அவர்கள் கூட கடலூருக்கு வந்து அந்த தொழிற்பேட்டையை எந்த இ த்தில் ஏற்படுத்தலாம் என்பதை பார்த்தார்கள். கடலூர் புது நகருக்கும், கடலூர் முது நகருக்கும் இடையேயுள்ள நெடுஞ்சாலைப் பகுதியில், அந்த நெடுஞ்சாலைக்கு இரு மருங்கும் அந்த தொழிற்பேட்டை அமைக்கப்படுமானால் மிகவும் நல்ல முறையில் இணக்கமாகச் செயல்படும் என்று கருதுகிறேன். போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷனும் அருகில் இருக்கிறது. ஆகவே இந்த இடத்தில் அது நல்ல முறையில் செயல்படும் என்று சொல்லி கடலூரில் இந்தத் தொழிற்பேட்டையை இரண்டு நகரங்களுக்கும் இடையில் உள்ள நெடுஞ்சாலைப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழில்மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சி கடந்த ஓர் ஆண்டில் நல்ல முறையில் ஏற்பட்டிருக்கிறது. இயங்க முடியாத நிலையில் இருந்த நூற்பாலைகளுக்கு சற்றேறக்குறைய ஒரு கோடியே பத்து லட்சம் கொடுத்து அவற்றை இயங்க வைத்திருப்பதில் இருந்து, இந்தப் புதிய தமிழக அரசு தொழில் துறையிலும், தொழிலாளர்களின் நலனிலும் எந்த அளவுக்கு அக்கறையோடு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். வேறு எந்த மாநிலத்திலும் இந்தமாதிரியான நிலையைக் காணமுடியாது. அதற்காக இந்த அரசைப் பாராட்ட வேண்டும்.

[திரு. ஏ. எம். ராஜா] [1968 மார்ச் 22

அதே நேரத்தில் இந்த மாமன்றத்தில் ஒரு முக்கியமான காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாகவே தமிழகம் மத்திய அரசினரால் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனக்கு முன்பாகப் பேசிய உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்களும் குறிப்பிட்டார்கள். அதுபோல தமிழகத்தில் கடந்த 15 ஆண்டுகளில் தொழில்துறையில் மத்திய அரசு போட்டுள்ள மூலதனம் 357 கோடிதான். ஆனால் அதே நேரத்தில் வடக்கே இருக்கிற மாநிலங்களில் எவ்வளவோ ஆயிரம் கோடிகளைக் கொட்டியிருக்கிறார்கள். அதன்மூலம் அங்கே தொழில்வளம் ஏற்பட்டதா, லாபம் ஏற்பட்டதா என்பதை இப்போது நாம் கவனிக்க வேண்டியதில்லை. அது அவர்களுடைய பிரச்சினை. உண்மை என்னவென்றால் மத்திய அரசு எப்போதுமே தமிழகத்தை ஓரவஞ்சனையுடன்தான் நடத்தி வந்திருக்கிறது. அதற்கு ஓர் உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன்.

1964-இல் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தது காங்கிரஸ் கட்சிதான். மத்தியிலும் காங்கிரஸ்கட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. இருந்தும் அந்த நேரத்திலேயே தமிழகம் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டவிரும்புகிறேன்.

நாஷனல் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை மத்திய அரசு ஏற்படுத்தி நடத்தி வருகிறது. மத்திய அரசுக்குத் தேவையான பண்டங்களை அது ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சிறுசிறு தொழில்சாலைகளில் இருந்து வாங்கி வருகிறது. அது எந்த அளவுக்கு தமிழ்நாட்டுப் பண்டங்களை வாங்கியிருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

மு. ப. 11–00 The State-wise distribution of contracts secured during the month under review since 1st April 1963 is given below :—

| *State.* | *Value of contracts for February 1964.* | *Total value of contracts from April 1963 to February 1964.* |
|---|---|---|
| | RS. | RS. |
| West Bengal .. .. | 73,31,042·00 | 6,54,22,259·93 |
| Uttar Pradesh .. .. | 93,66,821·18 | 6,27,91,661·31 |
| Punjab .. .. .. | 1,02,31,016·37 | 9,55,97,655·23 |
| Delhi .. .. .. | 38,96,296·90 | 3,99,74,967·74 |
| Maharashtra .. .. | 5,58,761·60 | 4,14,96,663·21 |
| Madras .. .. .. | 1,24,520·00 | 53,58,913·00 |

தமிழகத்தில் பிப்ரவரி மாதத்திலே 1 லட்சத்து 24 ஆயிரத்து 520 ரூபாய் என்றளவிலும் 1963–64-ல் 53 லட்சத்து 58 ஆயிரத்து 913 ரூபாய் என்ற அளவிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறுபாடுகள் உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இங்கே சில இலட்சங்கள் வடக்கே பல கோடிகள். ஏன் இந்த வேறுபாடு. மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் காங்கிரஸால் ஆளப்பட்ட பொழுதே தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தென்னகம் எப்பொழுதுமே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. வடக்கே வளமாக்குகிறார்கள், தெற்கே உள்ளவர்கள் தேய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் எங்களைக் குறை சொல்கிறார்கள். நீங்கள் ஆண்ட காலத்திலே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள்தான் இவை. இதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள் தமிழகம் என்றும் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்பதை.

சேலம் உருக்காலை பற்றி பல ஆண்டு காலமாகப் போராடி வருகிறோம். திரு. சுப்பிரமணியம் அவர்கள் 1957-லே எப்படியும் வந்தே தீரும் என்று கூறினார்கள். இன்றுவரை வரவில்லை. காரணம் என்ன ? இதையும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1968 மார்ச் 22] [திரு. ஏ. எம். ராஜா]

சேதுகால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களிலே எக்ஸ்போர்ட் ஓரியண்டட் இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்தமுடியும். அதன்மூலம் 120 கோடி ரூபாய் வரை அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்குமென்று நேஷனல் கவுன்சில் ஆப் எக்கனமிக்ஸ் அண்டு ரிஸர்ச் என்ற குழு கூறியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இன்னும் அதை நிறைவேற்றவில்லை, இன்னும் அதை நிறைவேற்றுவதற்கு மனம் இருப்பதாகவும் தெரியவில்லை, அதற்கு முயற்சி எடுப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே தமிழகத்தில் இப்படி ஏற்றுமதிக்கான பொருள்களை தயார்செய்யும் தொழிற்சாலையை உடனடியாக நிறுவ மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தமிழக அரசே நிறுவவேண்டுமென்று அவசியமில்லை. தமிழகத்திலிருந்து பல கோடி ரூபாய்கள் வரியாக மத்திய அரசுக்குச் செல்கிறது. வளமான வருமானங்கள் வருகின்ற துறைகள் அனைத்தையும் மத்திய அரசே வைத்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசிடம் வற்புறுத்தி ஏற்றுமதிக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைத் திட்டத்தை தமிழகத்திலே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

***திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, எட்டு நிமிஷத்தில் பேசுவது என்பது அசாத்தியம். ஆகவே கொஞ்சம் அவகாசம் அதிகமாக அளிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பைலைக் கொளுத்துவதிலே நிபுணராக இருக்கிற அதிகாரி இந்த இலாகாவிலே இருப்பதாக அறிகிறேன். மாஜி முதலமைச்சர் அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த அதிகாரி ஒருவர் இருப்பதாக அறிகிறேன்.

கிண்டியிலே இருக்கக்கூடிய அயர்ன் அண்ட் ஸ்டீல் ஸ்டோரில் 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இரும்புச் சாமான்கள் காணமல் போய்விட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றி ஒரு ஊடுருவு விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே நடந்த உலகக் கண்காட்சியில் தமிழகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்டாலில் பெயிண்ட் ஏற்பாட்டுக்காக 9 டெண்டர்கள் கொடுக்கப்பட்டன என்றும், குறைந்த டெண்டர் 55 ஆயிரத்திற்கும் மிக உயர்ந்த டெண்டர் 59 ஆயிரத்திற்கும் இருந்தது என்றாலும் அவையனைத்தையும் புறக்கணித்துவிட்டு 84 ஆயிரம் ரூபாய்க்கு வேறு யாருக்கோ கொடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது, இதை விசாரிக்க வேண்டும், ஆரம்பத்திலேயே போக்கக் கூடிய முறையில் கிள்ளியெறியவேண்டும், வளரவிடக் கூடாது.

தொழில் வளர்ச்சிகளைப் பற்றிக் கூறும்பொழுது நாட்டிலே தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. உலக முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் இந்த மந்தம் ஏற்பட்டிருக்கிறது. டெல்லியில் நடக்கும் **UNCTAD** மாநாட்டிலே நடப்பது என்ன ? ஓநாய்களையெல்லாம் ஆட்டுக்குட்டிகள் அழைத்து, எங்களை வளர்த்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற கூத்துதான் நடக்கிறது. பெரிய முதலாளித்துவ நாடுகள், பின்தங்கிய நாடுகளை வளரவிடமாட்டார்கள். அந்தப் பெரிய நாடுகளே நெருக்கடியில் இருக்கின்றன. பவுண்டை எடுத்துக் கொண்டால் நெருக்கடி, டாலரை எடுத்துக் கொண்டால் நெருக்கடி, இப்படிப்பட்ட நெருக்கடியைத்தான் நாம் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒருவரையொருவர் விழுங்கும் வேலையில் இருக்கக்கூடிய பெரிய திமிங்கலங்கள் அவை. நம்முடைய நாட்டிலுள்ள முதலாளிகள் அவர்களை நம்பி வளரலாம் என்று நினைக்கின்றனர். தொழில் வளர்ச்சி இந்தப் பாதையில் கட்டாயமாகக் கிடையாது. மேன்மேலும் வேதனைகளைத் தான் வளர்த்துக்கொள்கிற நிலையிலே கஷ்டங்கள் அதிகரித்து அதன்மூலம் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து இருக்கத்தான் இருக்கும். ஏற்றுமதிச் சந்தையிலே நம்மை அடித்து அடித்து அவர்கள் விரட்டி வருகிறார்கள். டெவலபிங் டிகேட் என்று சொல்லக்கூடிய பத்து ஆண்டுகளில் மேன்மேலும் வளர்ச்சி குறைந்து கொண்டுதான் வருகிறது. பெயர் என்னவென்று கேட்டால்,"டெவலபிங் டிகேட்" என்று பெயர். நம்முடைய நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யவிடாமல் செய்து அதே சமயம் நம்முடைய நாட்டிற்குள்ளே புகுந்து அவர்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற வேதனையான

நிகழ்ச்சிதான் நடந்துவருகின்றன. இந்த உறவை அறுத்துவிடாமல், அதற்கு இன்னும் இடம் கொடுத்தால் நாம் தொழில் மந்தம் இல்லாத வளர்ச்சிக்குப் போகமுடியாது. நம்முடைய நாட்டு மக்கள்தான் நமக்குச் சந்தை. ஏறத்தாழ 50 கோடி மக்கள் இருக்கிறார்கள், அப்படிப்பட்ட சந்தை இருக்கிறது. இந்த மாநிலத்திலே $3\frac{3}{4}$ கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களை விட்டுவிட்டு இந்தச் சந்தையை விட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்துவிடலாம் என்பது பகற் கனவு. சில சரக்குகள் இருக்கின்றன. அவை போகத்தான் வேண்டும். தொழில் வளர்ச்சி செம்மையாக இருக்கவேண்டுமென்றால் இந்த நாட்டுச் சந்தையை வளர்ப்பது என்பதைப் பொறுத்தது. இதில்தான் நிலச் சீர்திருத்தம் போன்ற விஷயங்கள் வருகின்றன. பாட்டாளியின் கையில் நிலம் இருக்கவேண்டுமென்று சொல்வது இந்த வளர்ச்சிக்காகத் தான். அன்னியச் சுரண்டல், உள்நாட்டுச் சந்தை சுருங்கி வருவது இவற்றை அப்புறப்படுத்தாவிட்டால் தொழில் மந்தம் தொழில் நெருக்கடி நிரந்தரமாக இருக்கும். இவைதான் கஷ்டங்களை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன.

பஞ்சாலை நெருக்கடி என்று பேசப்படுகிறது. அது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் அது மிகைப்படுத்தப்படுகிறது என்று நான் கருதுகிறேன். 1968-ம் வருடம் மார்ச் மாதம் 5-ம் தேதியில் நாடாளுமன்றத்தில் துணை அமைச்சர் அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ரமணி அவர்கள் கேள்வி கேட்டதற்கு எழுத்து மூலமாகப் பதில் அளித்திருக்கிறார்கள். இரண்டு வார ஸ்டாக் தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "தி சிச்சுவேஷன் இஸ் நாட் அலார்மிங்" என்று, அஞ்ச வேண்டிய நிலையில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் அமைச்சர் கூறுவது அப்படியிருக்கிறது. இந்த நேரத்திலே தூக்குப் போட்டுக்கொண்டு சாவோம் என்றும், ஆலைகளை முதல் தேதி முதல் மூடப்போகிறோம் என்றும் இங்கே மிரட்டிக்கொண்டு இருக்கிறார்கள். லாபம் வருவதைக் காட்டாமல், திரட்டி வைத்திருக்கின்ற முதலீடுகளை இதரத் தொழில்களில் போட்டு, டெவலபிங் ஏற்பாடுகளிலே போட்டு பயன்படுத்தாமல் பழைய இயந்திரங்களுக்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களைக் கொண்டுவராமல் மேன்மேலும் லாபத்தையே பெரிதாகக் கருதி லாபத்தையே பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் செய்கின்ற ஒரு நிலைதான் இதற்கெல்லாம் காரணம். அவர்களுடைய கணக்குகளை இந்த அரசு நம்பக் கூடாது. இதிலேயும் ஊடுருவு விசாரணை நடத்தவேண்டும். பெரிய நஷ்டம் வருகிறது என்று அவர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டாம். அப்படிச் சொல்வதை நம்பினால் அவர்கள் அதற்காக இயற்கையாகச் செய்வது தொழிலாளர்களுடைய சம்பளத்தைக் குறைப்பது, பஞ்சப்படியை வெட்டுவது, வேலைப் பளுவை ஏற்றுவது இவைகளைத் தான் செய்வார்கள். இரண்டாவது சம்பள போர்டை ஏமாற்ற முனைகிறார்கள். இந்த முறையில் நூற்பாலை அதிபர்கள் நிலைமைகளைப் பயன்படுத்துக் கொள்கிறார்கள், இதை அனுமதிக்கக்கூடாது.

தனியார் துறையைப் பொறுத்தவரையில் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். என்னிடம் அந்தப் பேப்பர் இன்னும் இருக்கிறது. சேஷசாயி பேப்பர் மில்ஸ் பள்ளிப்பாளையத்தில் இருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன் அந்த முதலாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு அதை "அரசாங்கமே நடத்தட்டும், நாங்கள் நடத்தமுடியவில்லை" என்று சொல்லி கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது தொழிற் சங்கங்கள் எல்லாவற்றையும் கையெழுத்துப் போடச் சொல்லி "நாங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒரு கோடி ரூபாய் அரசுப் பணம் இருக்கிறது. நஷ்டம் நஷ்டம் என்று கணக்கு காட்டப்படுகிறது. உண்மையிலே அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், பிறகு ஏன் திருப்பி நாங்களே எடுத்துக்கொள்கிறோம் என்று எழுதுகிறார்கள் ? இதற்குள்ளே தவறான நடவடிக்கைகள் நடந்திருக்கின்றன என்று எங்களுக்குத் தகவல் இருக்கிறது. இது ஒன்று.

இப்போது இந்தியாவிலேயே எடுத்துக் கொண்டால் ஐந்தாறு சிராமிக் தொழிற்சாலைகள் தான் இருக்கின்றன. அதிலே ஒன்று வடலூர் சிராமிக் இன்சுலேட்டர் தொழிற்சாலை. இதிலே உள்ள விசேஷம் என்னவென்றால்,





சிறப்பு என்னவென்றால், களிமண் பாகங்கள் செய்யப்படுவதோடு ஹார்டுவேர்சும் செய்யப்படுகின்றன. ஐந்து லட்சம் ரூபாயாக இருந்த அவுட்டர்ன் 14 லட்சமாகி 20 லட்சம் அளவுக்கு உயர்த்த திட்டமிடப்பட்டிருக்கிறது. உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படும் என்கிறார்கள். உற்பத்தி அதிகரித்தும் அங்கே நஷ்டம் என்று கணக்குக் காட்டுகிறார்கள். அதிலே, எல்.ஐ.சி. பணம், பினான்ஸ் கார்ப்பரேஷன் பணம், ராஜ்ய சர்க்கார் ஏற்பாடு செய்து கொடுத்த பணம் ஏராளமாக இருக்கிறது. தனியார் துறையில் சிறப்பான நிர்வாகம் என்றும் நஷ்டமே வராது என்பதும் எவ்வளவு பொய்யான வாதம் என்பது, பஞ்சாலைகள், பேப்பர் மில், இந்த சிராமிக் தொழில் ஆகியவையே எடுத்துக் காட்டாகும். சர்க்கார் பணம் போட்டிருக்கும் பேப்பர் மில்லையும், இன்சுலேட்டர் தொழிலையும் சர்க்காரே ஏற்றுக் கொண்டு அங்கு நடக்கும் சூறையாடலைத் தடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பற்றி ஒரு வார்த்தை. வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இயந்திரத்தைச் சிறு தொழில்களில் புகுத்தாதீர்கள். குறிப்பாக, தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதிக்கும் வகையில் இயந்திரத்தைப் புகுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்ப்பது வேதனையான காரியமாகும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஆண்டுதோறும் வேலை இழந்து வரும் நிலையில் தோல் பதனிடும் தொழில் போன்ற சிறு தொழில்களில் இயந்திரத்தைக் கொண்டு வராது தடுப்பதற்கு நம்முடைய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற வேலையில் உள்ள வேலை வாய்ப்பைக் குறைப்பதற்கான வழியைத் திறந்துவிடக்கூடாது.

அரசு நடத்தக்கூடிய தொழில்கள் இருக்கின்றன. சிறு தொழில் கார்ப்பரேஷன் இருக்கிறது. 66 யூனிட்டுகள் இருக்கின்றன. அவற்றில் தொழிலாளர் அமைப்புகள் இருக்கின்றன. அவைகளின் சம்மேளனம் இருக்கிறது. நான் அதன் தலைவர் என்ற முறையில் அமைச்சர் அவர்களிடம் 1967-ம் வருடம் நவம்பர் மாதம் 20-ம் தேதி மெமோரண்டம் கொடுத்திருக்கின்றேன். அதில் கூறியிருக்கும் விஷயங்களைக் கூர்ந்து உன்னிப்பாகக் கவனிக்குமாறு வற்புறுத்துகிறேன். இது லாபம் சம்பாதிக்க ஏற்பட்ட தொழில் அல்ல. வேலை வாய்ப்பு உண்டாக்குவதற்காக ஏற்பட்ட தொழில். அதிலே பத்து கோடி ரூபாய் மூலதனம் இருக்கிறது. 66 யூனிட்டுகளில் ஆறாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலேயே ரொம்பக் குறைந்த சம்பளம் அங்கேதான் கொடுக்கப்படுகிறது. அது அரசுத் துறையில் நடக்கிறது. கச்சாப் பொருள்களை வாங்குவதில் முறைகேடான நடவடிக்கைகள் இருப்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. நிர்வாகிகளில் சிலர் தனிப்பட்ட முறையிலே உறவினர் பெயரிலோ, மற்றப் பெயரிலோ இதே தொழிலை நடத்திக்கொண்டு கச்சாப் பொருள்களைத் திருப்பிவிட்டு தங்களுடைய சொந்தத் தொழிலுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்ற புகார் இருக்கிறது. யூனிட்டுகளுக்கு வரக்கூடிய ஆர்டர்களை எல்லாம் தனியாருக்குத் திருப்பிவிடக் கூடிய ஏற்பாடும் இருக்கிறது. கழிவுப் பொருள்களை விற்பதிலே ஏராளமான மோசடிகள் இருக்கின்றன என்ற தகவல் இருக்கிறது. பல இடங்களிலே தொழிலாளர்கள் எண்ணிக்கைக்கும் நிர்வாகிகள் எண்ணிக்கைக்கும் சம்பந்தம் இல்லாத நிலைமை இருக்கிறது. போதனூரில் 17 பேர் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள், நிர்வாகிகள் 9 பேர். அதிலே லாபம் இல்லையென்றால், உற்பத்தி செய்கின்ற தொழிலாளியின எண்ணிக்கை குறைக்கப்பட்டு தொழிலாளி வேலை இல்லாமல் பாதிக்கப்படுகிறான். நாகர்கோவிலில் தொழிலாளர்கள் 32 பேர், நிர்வாகிகள் 19 பேர். அங்கு ஒரு ஃபோர்மன், ஒரு சூபர்வைசர் போதும். இந்த நிலைமை பல யூனிட்டுகளில் இருக்கிறது. தொழில் லாபமாக நடக்கவில்லை என்றால், அதற்காகத் தொழிலாளியைக் குறைக்கக்கூடிய நிலை ஏற்படக் கூடாது. சிக்கனம் செய்ய வேண்டுமென்றால் அதற்கு இடம் இருக்கிறது. அதை எப்படிச் செய்வது என்று

ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதுபற்றி ஒரு மெமோராண்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமென்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

பெரிய மோசமான காரியங்கள் சாதாரணமாகச் சொல்ல வேண்டாத காரியங்கள் நடக்கின்றன. நாகர்கோயிலில் இரண்டு பெரிய பீரோக்களைத் தூக்கிக் கொண்டு போனதைத் தொழிலாளர்கள் கண்டுபிடித்துக் கொடுத்த காரணத்தால் அந்தத் தொழிற் சங்கத் தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டார்கள். இன்னொரு இடத்தில் பில்டிங் ட்ரெஸ்ஸை எடுத்துக் கொண்டு போனதைக் கண்டு பிடித்த தொழிலாளியும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அலட்சியமாகப் பார்க்கக் கூடாது. பொதுச் சொத்தைச் சூறையாடுகிற காரியம் நடக்கிறது. இதெல்லாம் முன்னாலேயே ஏற்பட்டு நடந்து வருகின்ற ஒன்று என்றாலும் கூட, நாம் வந்து விட்ட பிறகு அந்தப் பழக்கம் மாறும வகையில் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பொதுத்துறையைக் காட்டி தனியார் துறையினர் தங்கள் தவறுகளை மறைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த விஷயங்களை அலட்சியப்படுத்தக்கூடாது. உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பஞ்சாலைகளுக்காக ஐந்து கோடி ரூபாய் கிராண்ட் கொடுத்திருக்கிறார்கள். இன்று பஞ்சாலைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இன்று மத்திய சர்க்கார் ஐந்து கோடி ரூபாயை முதலாளியிடம் கொடுப்பதற்குப் பதிலாக தேங்கியிருக்கும் நூலில் 2½ கோடி ரூபாய் அளவுக்காவது வாங்கிக் கொள்ள முன்வரவேண்டும். மத்திய சர்க்கார் என்றைக்கு முடிப்பது, என்றைக்கு விமோசனம் ஏற்படுவது ? பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். நெசவாளர்கள் திண்டாடுகிறார்கள். தமிழ்நாட்டு சர்க்கார் கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இதிலே, முதலாளிகள் காட்டுகின்ற கணக்கைத் தயவுசெய்து ஒப்புக் கொண்டு விடக்கூடாது என்பதை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்காரோடு, நம்முடைய சர்க்காரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளும், சந்தித்து இதிலே ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். பேசுவதற்கு விவரம் அதிகமாக இருந்தாலும் அதிகமான நேரம் போய்விடும் என்ற காரணத்தால் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக கொள்கிறேன்.

***திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி :** தலைவர் அவர்களே, இந்த தொழில் மானியக் கோரிக்கையின் மீது என் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசியவர்கள் கடந்த காலத்தில் தொழில் வளர்ச்சி நல்ல முறையில் ஏற்பட்டதன் காரணமாகத்தான் நம் தமிழ்நாடு இப்போது தொழில் துறையில் மூன்றாவது ஸ்தானத்தை அடைந்திருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். கடைசியாக பேசிய நண்பர் நம் நாட்டில் இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தில் மத்திய அரசிலிருந்து 357 கோடி ரூபாய் செலவு செய்த பின்னரும் கூட நம் நாட்டில் தொழில் பெருக்கம் இருந்தும் கூட நம் தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகியிருக்கிறது என்பதுதான் என் கருத்து. இதுவரை கையாண்ட கொள்கையின் மூலம் தொழில் துறை முன்னேற்றத்தின் பலன் ஏழை எளியவர்களுக்கு கிடைத்துள்ளதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் துறை வளர்ச்சியின் மூலம் நம் நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு பொருளாதார உயர்வு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்





அப்படி அவர்களுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. அதை ஆராய்ந்து பார்த்து நம் நாட்டில் தொழில் வளர்ச்சியில் என்னென்ன முறைகளைக் கையாண்டால் அதன் பலன் ஏழைகளுக்கு கிடைக்கும் என்பதை ஆராய்ந்து அந்த முறைகளைக் கையாண்டால் சிலாக்கியமாக இருக்கும். முன்பிருந்த அரசாங்கம் தொழில் துறையில் கையாண்ட முறைகள் தவறானவை.

காந்தி அடிகள் 1948-ல் என்று நினைக்கிறேன். நம் நாட்டிலுள்ள கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டுமென்றால் நம் நாட்டில் உற்பத்தியாகும் துணிகள் யாவும் கைததறி மூலம் உற்பத்தியாக வேண்டுமென்று கூறினார்கள். நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், நம் நாட்டில் இருக்கும் மனித சக்தி ஏராளம். - மற்ற நாடுகளுக்கு இல்லாத ஒரு செல்வம் நமக்கு இருப்பது இந்த மனித சக்திதான். மற்ற நாடுகளில் மனித சக்தி குறைவு. ஆகவே அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இயந்திரங்கள் துணை கொண்டு குறைந்த மனித சக்தியில் தொழில் வளத்தைப் பெருக்கி வருகிறார்கள. ஆனால் நம் நாட்டிலே மனித சக்தி ஏராளமாக இருக்கிறது. ஆகவே எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும், தொழில வளர்ச்சியில் நாம் நம் நாட்டில் உள்ள மனித சக்தியைப் பயனபடுத்திக் கொள்ளவேண்டும். அந்த முறையில் தொழில்துறைக் கொள்கைகளை மாற்றிக்கொண்டால் தான் நாம் சுபிட்சம் அடைந்து நம் நாட்டின் சுபிட்சததையும் அதிகமாக்கலாம். இல்லையென்றால் போகப் போக கிராமங்களில் பெருகக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் நிச்சயமாகப் போக்கமுடியாது. அதோடு நான் கூற விரும்புவது, பெரிய பெரிய ஆலைகள் இருக்கக்கூடாது. ஒவ்வொரு வீடும் எப்படி ஒரு கலைக்கூடமாக விளங்க வேண்டுமென்று கூறுகிறோமோ அதேபோல் ஒவ்வொரு வீடும் ஒரு தொழில் கூடமாக ஆக வேண்டும். நம் நாட்டில் 15 கூட்டுறவு ஆலைகளை ஏற்படுததியிருக்கிறோம். இதனால் நாம் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். இன்று ஒரு லட்சத்திற்கு மேல் ஸ்பிண்டில்கள் இருந்தாலும் இதனால் எவ்வளவு தொழிலாளர்கள் லாபம் அடைகிறார்கள ? எவ்வளவு கைத்தறி நெசவாளர்கள் லாபம் அடைகிறார்கள் ? என்று பார்த்தால் நாம் செலவு செய்யும் பணத்தின் அளவிற்கு அதிகப்படியானவர்கள் பயன்படுகிற நிலை இல்லை. நாம் மனித சக்தியை போதுமான அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. ஆகவே நம் நாட்டில் தொழில் துறையைப் பொறுத்தவரை ஒரு பெருக்சத்தைக் காணவேண்டுமென்றால் குடிசைத் தொழில் முறையைக் கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு குடிசையையும் ஒரு தொழில் கூடமாக மாற்றியமைககப்படுகிற முறையைக் கையாள வேண்டும். அம்பர் சர்க்கா கூட ஒவ்வொரு வீட்டையும் ஒரு தொழில் கூடமாக அமைக்கும் முறைதான் பல நூற்பாலைகள் இருப்பதைவிட ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு அம்பர் சர்க்கா வைப்பதால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தொழில் கொடுக்க முடியும். இந்த நாட்டில் இன்றைதினம் உள்ள தொழில் மந்த நிலை காரணமாக தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளை இழக்கும் நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு வீட்டையும் ஒரு தொழில் கூடமாக மாற்றும் விதத்தில் முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, கைத்தறி தொழில்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் அமைச்சர் அவர்கள் கூட கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இனிமேல் கைத்தறித் தொழில விட்டு விட்டு வேறு தொழிலுக்கு மாறிவிட்டால் நல்லது என்று ஒரு கூட்டத்தில் பேசியதாக கேள்விப்பட்டேன். அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது.

இப்போது நம் மாநிலத்தில் 5½ லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. கைத்தறி நெசவாளர்கள் 35 லட்சம் போகள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற ஐயத்திற்கு இப்போதே விடை கூறிவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுபற்றி பத்திரிகைகளில் தவருக வந்தது. அது பற்றிய திருத்தம்பற்றி நான் என் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். நம் நாட்டைப் பொறுத்தவரையில் 75 சத வீதம் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிருர்கள். அதற்கு அடுத்த தொழிலாக இருப்பது கைத்தறித் தொழில். இந்த இரண்டு தொழில்களும் வாழ்க்கையை ஈடுகட்டுகிற அளவிற்கு, வருமானத்தைத் தேடி தருகிற அளவிற்கு இல்லை. மேலும் வேறு வகையில் தொழில் வளர்ச்சி பெறுகிற நாடுகளில்தான், வாழ்க்கைத் தரம் உயருகிறது. அந்த முறையில் பார்த்தால் அமெரிக்காவில் 7 சத வீதம் பேர்கள்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள். மற்றவர்கள் குண்டூசி முதல் அணுகுண்டு தொழிற்சாலை வரையில் ஈடுபட்டிருக்கிருர்கள். அது பொருளாதாரததை வளர்க்கிறது. நாளாவட்டத்தில் இந்த இரண்டு தொழில்களிலும் இருப்பவர்கள் அப்படிப்பட்ட தொழில்களில் ஈர்ப்பதன் மூலம் நம் வாழ்க்கைத்தரம் வளர வழி ஏற்படும் என்ற கொள்கை அடிப்படையில் பொருளாதார நிலையை விளக்கினேனே தவிர இதை விட்டு விட்டு வேறு ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்வேனுனல் அவர்கள் உடனே 'எங்கே தொழில் வைத்திருக்கிருய் ? அதைக் காட்டிவிட்டு இதைச்சொல்' என்று என்னைக் கேட்பார்கள். மற்ற தொழில்களில் ஃபிட்டர் மெக்கானிக் போன்ற தொழில்களில் 3, 4 ரூபாய் தினம் கிடைக்கக் கூடிய நிலை நாளாவட்டத்தில் வர வேண்டுமென்ற தன்மையைத்தான் விளக்கினேன். இவற்றை விட்டு விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அவர்கள் 'எந்த வேலையைப் பார்க்கச் சொல்கிருய், இதை விட்டுவிட்டு?" தினம் ஐந்து ரூபாய் கிடைக்கக்கூடிய வேலையை காட்டு என்று என்னைக்கேட்பார்கள். அதற்கான முயற்சிகள் ஒரு பக்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற கொள்கையைத்தான் விளக்கினேன். இவற்றை விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. வேறு வாய்ப்புகள் ஏற்பட வேண்டுமென்ற அவசியத்தைத்தான் வற்புறுத்தினேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு என் நன்றி. அப்படி அவர்கள் சொல்லியிருந்தால், இவர்களுக்கு வேறு என்ன வேலை வாய்ப்பு தரப்போகிறீர்கள் என்று கேட்பதாக இருந்தேன். அமைச்சர் அவர்களின் விளக்கம் இல்லாதிருந்ததால் அதைக் கேட்டிருப்பேன். 35, 40 இலட்சம் மக்களிடையே அவர்கள் மனதில் தாங்கள் அடுத்த வேலை என்ன செய்யவேண்டும். இந்தத் தொழிலை விட்டுவிட்டுப் போனல் வேறு என்ன வேலை தமிழ்நாட்டில் இருக்கிறது. என்பது பற்றி அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிருர்கள். அமேரிக்காவில் 7 சத வீதம் மக்கள்தான் விவசாயத்தில ஈடுபட்டிருக்கிருர்கள். என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். நாம் நம் நாட்டில் மனித சக்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு தொழில் வளத்தைப் பெருக்க முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டையும் ஒரு தொழில் கூடமாக அமைக்க வேண்டும் 12,000 ஸ்பிண்டில்கள் கொண்ட ஒரு மில்லை விட 12,000 வீடுகளில் ஒரு சிறிய இயந்திரம் அமைத்துக் கொடுத்தால் ஒவ்வொரு வீட்டிலும் தொழில் நடக்க வாய்ப்பிருக்கும். அந்த முறையில் நாம் நம் நாட்டு தொழிலை வளர்த்த அமைக்க வேண்டும்.





Sir, I request that some more time may be given in view of the intervention of the Honourable Minister.

கைத்தறிக்கு நிரந்தரமான பாதுகாப்பு வேண்டும். இடையில் தற்காலிக பாதுகாப்பு வேண்டும். என்னென்ன முறையில் அமைக்கப்பட வேண்டும் ஏன்பதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் சட்ட சபையில் பத்து பன்னிரெண்டு ஆண்டுகளாக பேசப்பட்டுவரும் கொள்கையைத்தான் இப்போது திரும்பவும் கூறுகிறேன். 60-ம் நம்பர் நூலுக்கு கீழே யுள்ளவற்றிற்கு எக்ஸைஸ் வரி இருப்பது கூடாது என்று மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டும் அதை நீக்க முயற்சிக்க வேண்டும். 60-ம் நம்பர் நூலுக் குட்பட்ட சேலைகள், வேட்டிகள், இவற்றைக் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும். இதையும் நம் அரசு மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும். இக்கோரிக்கை பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தக் கோரிக்கைகள் குறித்து அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தம் பதிலில் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடிக்கடி இம்மாதிரியாக மில்கள் மூடப்படுவதன் காரணமாக கைத்தறிக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் போய்விடுகிறது. எனவே, மில்கள் மூடப்பட்டாலும் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாத வகையில், நூல் விலை ஏறினாலும் இறங்கினாலும் அதனால் கைத்தறித் தொழிலுக்கு எவ்வித பாதகமும் இல்லாத முறையில் ஒரு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். கரை போட்ட வேஷ்டிகள் சேலைகள் இவற்றை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும். என்று முன்பே கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. அதைப் பூர்த்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, என்ன முறையை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியும் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கக்கூடிய சர்ப்ளஸ் ஸ்டாக் ஏராளமாக இருப்ப மு. ப. 11-30
தால் கைத்தறித் தொழிலில் மந்த நிலை இருக்கிறது. முன்பு பேசிய உறுப்பினர் குறிப்பிட்டபடி அதை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக விலைக்கு வாங்கி கைத்தறித் தொழிலில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலையை போக்க உடனடியாக பரிகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய கலர் காரண்டியாக இருப்பதற்காக கூட்டுறவுத் துறையில் டையிங் ஃபாக்டரி அமைத்துத் கூட்டுறவுத் துறையில் இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்தால் நல்ல முறையில் தரமான சேலைகள் கிடைக்கும்.

சென்ட்ரல் பேடர்னிங் இன்ஸ்டிடியூஷன் ஏற்படுத்தினல் அதன் மூலமாக கைத்தறித் தொழிலுக்கு நல்ல முறையில் டிசைன்கள் கிடைக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். கைத்தறித் தொழிலைப் பற்றி இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தொழில் மானியத்தின் மீது அதை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1968 மார்ச 22

தொழில் மானியத்தைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிற நாம் இந்த ஆண்டு தமிழகத்தின் மிகச் சிறப்பான அளவில் நடைபெற்ற தொழில் கண்காட்சியைப்பற்றியும் நினைவு கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே முதலீடு செய்திருக்கிற தொழில் அதிபர்களுக்கு ஏதேனும் ஆபத்து வருமோ என்று சில பேர் அஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில் இந்த அரசு தன்னுடைய முழு ஒத்துழைப்போடு சீரிய வகையில் மிகப் பெரிய தொழிற் கண்காட்சியை நடத்தி இந்தியாவில் இருக்கும் மாநிலங்கள் மட்டுமல்ல, உலகத்தில் இருக்கும் மற்ற நாடுகள் எல்லாம் போற்றிப் பாராட்டும் அளவுக்குச் செயலாற்றி இருக்கிறது.

அந்த தொழிற் கண்காட்சியைத் துவக்கி வைக்கும் நேரத்தில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய தொழிற் கொள்கையைப்பற்றி மட்டுமல்லாமல் மற்ற பகுதிகளிலும் எப்படி தொழில் வளர வேண்டும் என்று ஆற்றிய சீரிய உரையைக் குறித்து வெளிநாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகளெல்லாம் போற்றிப் பாராட்டியதை இந்த நேரததில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற தொழில் அமைச்சரவர்களைப்பற்றியும், அவர்களுடைய முழு ஒத்துழைப்பைப்பற்றியும் மிகப் பெரிய தொழில் அதிபர்கள் எல்லாம் தங்கள் வாயார, மனமார வாழ்த்தியதை இந்த நேரத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

மொத்தத்தில், இங்கே தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும். மூலதனம் இன்னும் அதிகமாகப் போடப்படவேண்டும் என்றெல்லாம் காங்கிரஸ் தரப்பிலிருக்கிற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே சில விவரங்களோடு ஒரு கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த இருபதாண்டுக் காலமாக, ஏன், இந்த 21-வது ஆண்டு முடியும் வரையில், தமிழகத்தில் பொதுத்துறையைப் பொறுத்தவரையில், மத்திய அரசு போட்டிருக்கும் முதலீடு 357 கோடி ரூபாய்தான். நாசிக்கில் அவர்கள் அச்சடிக்கிற ரூபாய் நோட்டுகளைப் பார்க்கும்போது ஓராண்டில் அடிக்கிற அந்த நோட்டுகளினுடைய அளவுக்குக்கூட இல்லாமல், சென்ற 21 ஆண்டுக் காலத்தில் 357 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே அவர்கள் தமிழகத்தில் பொதுத் துறையில் முதலீடு செய்திருக்கிறார்கள்.

எனக்கு முன் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. காசிராமன் சொன்னார்கள். மிகப் பெரிய இரயில் பெட்டித் தொழிற்சாலை இல்லையா? என்றார்கள். அந்த விவரங்களைக்கூட எடுத்துப் பார்த்தால், நெய்வேலி நிலக்கரித் திட்டம் மிகப் பெரிய திட்டம். அதற்கு 166 கோடி ரூபாய்தான் முதலீடு போட்டிருக்கிறார்கள். பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலைக்குப் போட்டிருக்கக்கூடிய முதலீடு 21 கோடி ரூபாய். நந்தம்பாக்கத்தில் இருக்கும் தொழிற்சாலைக்கு 4 கோடி ரூபாய். இந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலைக்கு 10 கோடி ரூபாய். திருவெறும்பூரில் இருக்கும் கொதிகலன் தொழிற்சாலைக்கு 23 கோடி ரூபாய். அதேபோல், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை எண்ணூரில் இருக்கிறது. அதற்கு 44 கோடி ரூபாய். சென்னை உரத் தொழிற்சாலைக்கு 55 கோடி ரூபாய். இப்படி மொத்தத்தில் எடுத்துப் பார்த்தால், 357 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு தமிழக மாநிலத்தில் முதலீடு செய்த தொழில்களுக்குத் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்திருக்கிறது.

ஆனால், அண்மையில் நாம் பார்த்தோம். பொக்காரோவில், இந்திய முதலமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சென்று திறந்த தொழிற்சாலைக்கு மட்டும் ஏறக்குறைய 600 கோடி ரூபாய், 700 கோடி



1968 மார்ச 22] [திரு. கா. வேழவேந்தன்]

ரூபாய் அளவுக்கு ஒரே நேரத்தில் முதலீடு போட்டு, மிகப் பெரிய தொழிலை அமைப்பதற்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தந்து மத்திய அரசு அங்கே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால், அதே நேரத்தில், நாம் திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிற சேலம் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், இன்னும் ஒழுங்கான பதில் வந்தபாடில்லை. அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்று சொல்லுவார்கள். ஆனால், அடித்துக்கொண்டே இருக்கிறோமே தவிர, மத்திய அரசு நகரவே மறுத்துக்கொண்டிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டிருந்தும், ஏன் இங்கே தமிழக அரசு ஒதுக்கியதில் 140 இலட்சம் குறைந்துவிட்டது? ஏன் அங்கே 1¾ இலட்சம் குறைந்துவிட்டது என்று எங்களைப் பார்த்துக் கணக்குக் கேட்கிறவர்கள், "ஏன் மூலதனம் அதிகமாகப் போட மத்திய அரசு மறுக்கிறது?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்க மறுக்கிறார்கள் என்பது புரியவில்லை. இதிலெல்லாம் கட்சி வேற்றுமை தேவையில்லை, நாமனைவரும் இணைந்து நின்று போராடுவோம் என்று முதல் வரவு செலவுத் திட்டத்தில், ஆற்றிய, அறிஞர் அண்ணா அவர்களுடைய உரையை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழகத்தில்-சேலத்தில் , தமிழ்த் தாய் தன்னுடைய மடியில் இரும்புக் கனிச் செல்வத்தை வைத்துக்கொண்டு, காத்திருக்கிறாள். எடுத்துக்கொள்ளமாட்டோமா? என்றும் ஏங்கிக் கொண்டிருக்கிறாள். ஆனால், எடுப்பதற்குக் கொஞ்சங்கூட நாதி இல்லாமல், கையகப் படுத்தப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இன்றையதினம் வெறுமனே நின்று கொண்டிருக்கிறது. திட்டங்களெல்லாம் அப்படியே போட்ட வண்ணத்தில் இருக்கின்றன. நமக்கு வேண்டிய வழி விட்டபாடில்லை. இதை நினைக்கும்போதுதான் உண்மையிலேயே எந்த வார்த்தைகளால், அந்த அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லாத காங்கிரஸ் நண்பர்களைப்பற்றி, எடுத்துச் சொல்வது என்று தெரியவில்லை.

மொத்தமாக, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மூலதனங்கள் போடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளைக் குறித்து எடுத்துக் கொண்டால், போதிய அளவு சீரிய முன்னேற்றம் இல்லை. நெய்வேலி நிலக்கரித் திட்ட தொழிற்சாலையை எடுத்துக் கொண்டாலும்; அங்கே 1969-இலேதான் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்றும், அதற்குரிய இயந்திரங்கள் இன்னும் வந்தபாடில்லை என்றும் சொல்லுகிறார்கள். ஆனால், நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைக்கே கூட, இன்னும் புதிய இயந்திரங்கள் வரவழைக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதே மாதிரி, மற்ற மற்ற தொழில்களைப் பொறுத்தும் இன்னும், வேலைகள் அதிகம் நடைபெறாமல் இருக்கின்றன. அவையெல்லாம் செய்யப்படுமானால், தமிழ்நாட்டில் திண்டாடுகிற இலட்சக்கணக்கான வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சாதாரணமாக, பல குஞ்சுகளை அடித்தாலும் சட்டி நிறையாது என்று சொல்லுவார்கள். தமிழ்நாட்டில் தமிழக அரசாங்கம் இதுவரையில் 220 கோடி, 250 கோடி ரூபாய் அளவுக்கு வரவு செலவுத் திட்டம் வெளியிடுகிறதென்றால், இதில் எத்தனை தொழிற்சாலைகளைத் திறந்து, எந்த அளவுக்குத் தொழில் வாய்ப்புகளையோ, மற்றவைகளையோ கொடுக்க முடியும்? ஆனால், கோடிக்கணக்கான ரூபாய் நோட்டுகளை அச்சடித்திருக்கும் மத்திய அரசு மனம் வைத்தால்தான், இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நிறுவ முடியும் என்று நான் மறுபடியும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இதற்கு முந்திய அரசாங்கம் செய்த தவறின் காரணமாக, தமிழ்நாட்டில் ஏராளமான நூற்பு ஆலைகளை நிறுவப்பட்டு, இன்றைக்கு நூலை வாங்குகிற அகமதாபாத், பம்பாய் போன்ற

மாநிலங்கள், எங்களுக்குத் தேவை இல்லை" என்று சொல்லிவிட்ட காரணத்தால், ஏராளமான நூல்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால், பல தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய நிலை ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இங்கே பரவலாக நெசவாலைகள் (வீவிங் சென்டர்ஸ்) திறக்க வழிவகை செய்தாக வேண்டும்.

கைத்தறிபற்றி நான் *சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, இதற்கு முன்னால் இருந்த தொழிலமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் மேல்நாடுகளுக்குச் சென்று, எப்படியெல்லாம் தமிழ்நாட்டினுடைய கைத்தறித் துணிகளை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்த நல்ல மார்க்கெட்டுகளை உருவாக்குவது என்ற விவரத்தைக் கொண்டுவந்து மத்திய அரசுக்கு சமர்ப்பித்திருப்பதாக அறிகிறோம். ஆனால், அதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசு எடுத்ததா என்றால், இல்லை.

1965-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் ஏறக்குறைய 600 இலட்சம் ரூபாய் பெறுமானத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்றைக்கு என்ன நிலை? 6 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள்தான் ஏற்றுமதி செய்ய முடிந்திருக்கிறது. ஆக, 594 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் ஏற்றுமதி குறைந்துவிட்டிருக்கின்றன. இது யாரால்? ஏன் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது? கைத்தறி நெசவாளிகள் கண்ணீர் விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையை உருவாக்கியது யார்? டில்லி அரசா? தமிழ்நாட்டு அரசா? இதைத் தயவுசெய்து சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இதை நமது தொழிலமைச்சர் அவர்களிடத்தில் சொன்ன நேரத்தில், என்னுடைய பகுதியில் இருக்கும் நெசவாளர் பெருமக்களின் பிரதிநிதிகளையும் கைத்தறி இயக்குநரையும் அழைத்து, ஏறக்குறைய அரை நாள் இதற்கென்று ஒதுக்கி, எப்படி அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது என்பதைப்பற்றிச் சிந்தித்து, ஓர் அறிக்கையைத் தயாரிக்கச் சொன்னார்கள். அதற்காக நமது தொழிலமைச்சரவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஆனால் அதை அதிகாரிகள் இன்னும் செயல்படுத்தாமல் இருக்கிறார்கள். அதை விரைவிலே செயல்படுத்தி வேலையிழந்த, வண்ணம் மாறும் கைத்தறித் துணிகளை நெய்யும் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியான கும்மிடிப்பூண்டி ஆந்திர மாநிலத்தின் ஓரத்திலேயிருக்கிறது. அங்கு நெசவாளர்கள் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அப்படி வேலைவாய்ப்பில்லாமலிருக்கும் அந்த நெசவாளர்ப் பெருமக்களுக்காக சாயத் தொழிற்சாலையொன்றை மத்திய சர்க்காரின் உதவியோடு நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

*திரு. நா. சௌந்தரபாண்டியன்: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் தொழில் துறை மானியத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழகம் தொழில் வளர்ச்சியில் எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற நோக்கத்தோடு முன்னாள் தொழிலமைச்சரவர்கள் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை நமக்கு அமைத்துத் தந்திருக்கிறார்கள். அந்த அமைப்பில்தான் இன்றையதினம் தொழில் வளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நமது அரசு ஏற்று நடத்துகின்ற தொழில்





களின் வளர்ச்சி கடந்த ஆண்டு எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலையில் தான் இந்த ஆண்டும் இருக்கிறது என்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அதற்குக் காரணம் அரசு அதில் தக்க கவனம் செலுத்தவில்லை என்பதுதான். எனவே தொழில் வளர்ச்சியில் அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தனியார் துறையிலும் பல நல்ல தொழில்கள் வளர்ச்சியடைந்து வந்தன. ஆனால் கடந்த ஆண்டு நல்லதொரு வளர்ச்சியை அது அடையவில்லை. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தமிழகத் தொழிற்சாலைகளெல்லாம் குறிப்பிட்ட ஒரேயிடத்தில் அமைந்திருப்பதால் மாநிலத்தில் பரவலாகத் தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆகவே தொழில்கள் மாநிலம் பூராவும் பரவலாகப் பரவுவதற்கு இந்த அரசு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில தொழில்கள் இருந்தாலும் கூட அந்தத் தொழில்கள் பரவலாகப் பின்தங்கிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்று ஆராயும் பொழுது அவைகள் பின்தங்கிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, அதிலும் முக்கியமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரைப் பொறுத்தவரையில் அங்கே சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்புக்கள் இருக்கிறது என்று அரசாங்கக் குறிப்புகள் கூறுகின்றன. முன்பிருந்த அரசாங்கம் பொதுத் துறையில் எடுத்து நடத்த ஏற்பாடு செய்திருந்தது. பிறகு தனியார் ஒருவருக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டு அவர் அதை ஏற்று நடத்தவில்லை. எனவே, அதைப் பொதுத் துறையில் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அல்லது கூட்டுறவுத் துறையில் ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இலங்கையிலிருந்து பெருவாரியான அகதிகள் இங்கே வரவிருக்கிறார்கள். குறிப்பாக ராதாபுரம் பகுதிகளைப் பொறுத்த வரையில் அதிகமான அகதிகள் வரவிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். இராதாபுரம் பின்தங்கிய பிரதேசம். அந்த அடிப்படையில் அரசு அங்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதாலும் தொழில் வளர்ச்சியில் ஆர்வமுள்ள பலர் திசையன்விளையில் இருப்பதாலும், அங்கு ஒரு தொழிற்பேட்டை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது, கதர்த் துணிகளுக்கு நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. கதர்த் துறையில் பல லட்சம் பேர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்குத் திட்டம் தீட்ட வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும் நிலையில் இதை ஏன் குறைத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

கிராமத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்திய அரசின் மானியத்துடனும், கடனுடனும், நமது மாநிலத்தில் மூன்று இடங்களில் அதாவது ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நாங்குனேரி ஆகிய மூன்று இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கைக் கணக்குப்படி இந்திய அரசு 1964–65-ல் 3·83 இலட்சமும் 1965–66-ல் 10 இலட்சமும், 1966–67-ல் 11 இலட்சமும், 1967–68-ல், 11·70 இலட்சமும் கடனாகக் கொடுத்திருக்கிறது. ஆனால் இங்கே அவைகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருப்பது, 1965–66-ல் 6 இலட்ச ரூபாயும்,

1966–67–ல் 5,38,700 ரூபாயும் ஆகும். ஆனால் 1967–68–ம் ஆண்டிற்கு 1,82,000 ரூபாய் மட்டும் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. மத்திய சர்க்கார் வழங்கும் கடன் தொகை ஒரே மாதிரியாக இருந்தும், இவ்வாறு கடன் கொடுக்க என்ன காரணம் என்று தெரியவில்லை. எனவே இதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த மூன்று பகுதிகளிலும் மத்திய சர்க்கார் தனியாக ஒரு திட்டம் தீட்டி தொழில் நல்ல முறையிலே அபிவிருத்தி அடைய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நம் மாநில அரசுக்கு நிதி ஒதுக்கி வைத்தது. ஆனால் மாநில அரசாங்கம் அதில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. இப்படிப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்கள் தொழில்துறையில் உயர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மத்திய சர்க்கார் கடனாகவும், மானியமாகவும் பல லட்ச ரூபாய் வழங்கியிருக்கிறது. இதற்குத் திட்டவட்டமாக நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த, 2, 3 வருஷங்களாக இப்பகுதிகளில் நடைபெற்று வந்த பல பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று சொல்லப்படவில்லை. குறிப்பாகப பெண்களுக்குப் பல பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகள் இன்று மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. தொடர்ந்து அந்தப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்குக் காரணம் என்னவென்றால், பயிற்சிப் பள்ளிகள் நிறுவ கட்டடங்கள் கட்டப்பட்டு அந்தக் கட்டிடங்கள் பயனற்ற நிலையில் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தொழில் வளர்ச்சியானது நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், வருமானத்தை அதிகமாக்கவும் இருக்கிற காரியமாக இருப்பதால், இந்த அடிப்படையில் கடந்த ஆண்டு எத்தனை பேர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள், எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது, இதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன, தொழில் வளர்ச்சியிலே என்ன கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் இவைகளுக்கு விவரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

***திரு. கி. ஜெயராமன் :** தலைவரவர்களே, இங்கு கொண்டுவந்துள்ள தொழில்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த ஓராண்டுக் காலத்தில் புதிய தமிழக அரசானது எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. முன்னேற்றத்தைக் கண்டிருந்தது என்று சொல்லும் நேரத்தில் உணவு உற்பத்தித் துறையில் அல்லது போக்கு வரத்துத் துறையில் அல்லது சிறு பாசன வசதிகளை அதிகப்படுத்துவதில் மற்றும் கல்வித் துறை உட்பட ஓராண்டிலே மக்கள் தெளிவாக அபிவிருத்தியைக் கண்டுகொள்ள முடியும். ஆனால், தொழில் துறையிலே அவ்வளவு சீக்கிரமாக, ஓராண்டிலேயே நல்ல முறையில் நடத்தி பெரிய வெற்றியைக் காண முடியாது. வேறு ஒரு காரணமும் கூட. அதாவது உலக முழுவதும் ஏற்பட்டிருக்கிற மந்த நிலை. இந்த மந்த நிலையிலும் கூட கடந்த ஆண்டிலே நம் தமிழக அரசு தன்னாலியன்ற அளவுக்கு அபிவிருத்தியைச் செய்துதான் இருக்கிறது. கடந்த மானியக் கோரிக்கையின் மீது பேசும் நேரத்தில், இங்கு திராவிட முன்னேற்றக் கழகம் அரசின் பொறுப்பை ஏற்ற பிறகு தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டுவிட்டது, அதற்கு தைரியமில்லை, அஞ்சி ஓடுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. மானியக் கோரிக்கைக்குப் பதில் சொல்லும் முறையில் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், கடந்த காலத்தில் கூட, காங்கிரஸ் அரசு கூட தனியார் துறைக்குத்தான் அதிகமான வசதிகள் செய்துகொண்டிருந்தது. மாநில அரசு அதிக அளவில் ஈடுபடாமல் இருந்தது என்ற விவரங்களை எடுத்துக் காட்டினார்கள். அதே போல் வெளி மாநிலங்களில், ஆந்திரா, மைசூர்,





மாநிலங்களில் தொழில் நிறுவனங்களுக்கு லைசென்ஸ் கொடுத்து தனியார் அதில் ஈடுபட எத்தனை பேர் முன்வந்தார்கள் என்பதையும், நம்முடைய மாநிலத்தில் தொழில் துறையைப் பொறுத்தவரையில் தனியார்கள் தங்கள் தொழிலை நடத்த வேகமாக முன் வந்திருக்கிறார்கள் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் என்ற விளக்கத்தையும் எடுத்துக் காட்டினார்கள். அந்த அடிப்படையிலே இருக்கும்பொழுது இங்கே சொல்லுகிறார்கள், இங்கேயிருப்பவர்கள் வெளி மாநிலத்திற்கு ஓடுகிறார்கள், இங்கே ஆபத்திருக்கிறது, சட்டமும், அமைதியும் பாதுகாக்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதற்கு மாறாக, அண்மையிலே மேற்கு வங்கத்திலிருந்த ஒரு கம்பெனி தங்களுடைய அலுவலகங்களை இங்கே மாற்றிக் கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். இங்கே வருவதற்கு அவ்வாறு அவர்கள் விரும்புகிறார்கள். இந்த பிப்ரவரி மாதத்தில் 11 கம்பெனிகள் முதலீடு செய்யும் வகையில் வந்து செய்துகொண்டிருக்கின்றன. கடந்த ஒரு மாதத்திலே முதலீடு செய்த தொகையைப் பார்த்தால், சென்ற மாதத்தில் 40 இலட்சமாக இருந்தது இந்த மாதக் கடைசியிலே அதாவது பிப்ரவரி மாதக் கடைசியிலே 52 இலட்சமாக முதலீடு செய்யும் நிலைமையை நாம் பார்க்கிறோம். கிட்டத்தட்ட அதிகமாக 10 இலட்சம் வரை ஆகியிருக்கிறது. இங்கு பயமிருக்கிறது, ஆபத்திருக்கிறது என்று இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தில் மேலும், மேலும் இங்கே தொழில் முதலீடு அதிகமாகும் நிலையைப் பார்க்கிறோம். இத்தனையையும் பார்த்த பிறகு, இங்கு தொழிற்சாலைகளுக்கு அதிக முதலீடு செய்ய வேண்டும், அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இப்பொழுது தற்காலிகமாக மத்திய அரசு மேற்கொண்ட ஏற்பாட்டைப் பாராட்ட வேண்டும். இதிலே, குறிப்பாக, மெட்ராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், போன்ற தொழிற்சாலைகளையெல்லாம் இங்கே ஆரம்பிப்பதற்காக அவர்களை நாம் பாராட்ட வேண்டும். ஆனால் அவர்கள் முக்கியமாக எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் சொன்னதுபோல, பல காலம் நாம் எடுத்துக் கூறியும், மற்ற வசதிகள் இல்லை, நிதி வசதி இல்லையென்று கூறி தட்டிக் கழிக்கிற அதே நேரத்தில் பொக்காரோவுக்கு அதிகமான, கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்குகிற அதே நேரத்தில் சேலம் உருக்காலையை அவர்கள் ஏற்படுத்த முன்வராதது குறித்து இதற்குக் காரணம் நிதி நிலை அல்ல; அரசியலும் காரணம் என்று நான் மெத்த வருத்தத்தோடு இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாடு செல்லுகின்ற நேரத்தில், ஜப்பானுக்குச் செல்லுகின்ற நேரத்திலே, இந்தத் தொழிலைப் பற்றி அதிகமான அளவுக்கு உணர்ந்திருக்கிற காரணத்தாலே, அதற்கான முறைகளை அவர்கள் மேற்கொள்ளுவார்கள் என்று என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், அங்கே செல்லுகின்ற பொழுது, அவர் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இங்கே கூட, கடந்த காலத்தில், எரியாத வீடுகளைக் கட்டுகிற நேரத்தில் செங்கற்கள் கிடைக்கவில்லை; செங்கற்களுக்கு அதிகம் செலவாகிறது என்று சொன்னார்கள். அங்கே, ஜப்பானில், குப்பை கூளங்களிலிருந்து செங்கற்கள் தயாரிக்கிற முறையை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதையும் அவர்கள் ஆராய்ந்து வருவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து, இங்கே தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கேற்ற நிலையில்லையென்று காங்கிரஸ்காரர்கள் பிரச்சாரம் செய்வது இட்டுக்கட்டிச் செய்கின்ற பிரச்சாரம்தான். இதை உண்மையில் பார்க்கப்போனால், நார்மன் கிப்பிங் என்பவர் இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கின்ற தொழில் நிலைமையைப் பற்றி ஆராய்கின்றபொழுது. வங்காளத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் பெரும் முதலீடு செய்யலாம்—குறிப்பாக, தமிழ்நாட்டில் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை கொடுக்கிற நேரத்தில் அவர் மத்திய அரசைத்தான் மற்றொரு முறையும் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள். இங்கே இந்தியத் துணைக்கண்டத்திலே சென்ட்ரல் எக்ஸைஸ் என்று சொல்லுகின்ற மத்திய ஆயத் தீர்வை அதிகமாக இருப்பதன் காரணமாக, தொழில் அபிவிருத்தி அடைய முடியவில்லை. அதைக் குறைப்பதன் காரணமாக, அபிவிருத்தி அடைய முடியும் என்ற முறையில் அவர்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கைத்தறியைப்பற்றி எனக்கு முன்னல் பேசியவாகள எல்லாம், கலர் போட்ட சேலையையும், கரை போட்ட வேஷ்டியையும் கைத்தறிக்குத்தான் ஒதுக்க வேண்டும் மற்ற மில்காரர்களுக்கோ அல்லது பவா லூமுக்கோ அதை ஒதுக்கக் கூடாது என்று சொன்னார்கள். நமது அரசு பொறுப் பேற்ற பிறகு, அதிலும் குறிப்பாக, நமது தொழிலமைச்சர் அவர்கள் மத்திய தொழிலமைச்சர் அவர்களோடு பேசிய பிறகு கடந்த 1967-ம் வருஷம் அவர்கள் அதை ஒத்துக்கொண்டு டெக்ஸ்டைல் கமிஷனர் ஆபீஸிலே ஒரு உத்தரவு போட்டார்கள். அதன் மூலமாக, கலர் போட்ட சேலையையும், கரை போட்ட வேஷ்டியையும் மில்களோ, அல்லது பவர் லூமோ தயாரிக்கக் கூடாது; அதைக் கைத்தறியில்தான் தயாரிக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவு நிச்சயமாக அமலுக்கு வரு கின்றதா என்று பார்க்கின்ற பொறுப்பு மாநில அரசிடம் இல்லை. காரணம் அது சென்ட்ரல் எக்ஸைஸ் என்று சொல்லுகிற மத்திய ஆயத்தின் கீழ் உள்ளது. மத்திய ஆயம் மத்திய அரசினுடையது. ஆகவே, இதிலே மாநில அரசு மிகக் கவனம் செலுத்த வேண்டும். வழக்கமாக அவர்கள் ஒதுக்குவதைப்போல் இதையும் ஒதுக்குகிறார்கள். இதில் நமது அரசு கவனம் செலுத்தி, அதை அமலுக்குக் கொண்டுவருமானால், அது கைத் தறித் தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டுள்ள 20 இலட்சம் தொழிலாளர்களுக்கு ஒரு அதிர்ஷ்ட மாகக் கூட இருக்கும். அந்த முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே, இந்த அரசு நிச்சயமாக தலையிட்டுப் பாதுகாக்கும் என்று சொல்லி இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.

*THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Chairman, Sir, I rise to support the Demands placed before the House by the Hon. Minister for Industries. Since the time at my disposal is very short and at the same time very procious, I will confine my speech to certain problems relating to my constituency. I represent the Hosur taluk of the Dharmapuri district. Though it has got a fine climate, rich soil and agricultu rists who know the art of agriculture, unfortunately it has been neglected for the last so many years. The only industry that has been encouraged by the Government of Madras in Hosur is the sericulture industry. Perhaps due to loss of Kollegal and other sericulture areas to Mysore, they were compelled to establish at least one industry. Sericulture experts there say that Hosur Farm is an ideal farm not only for our State but also for the entire country. But unfortunately it has been neglected. It is stated in the brochure that financial assistance to the tune of Rs. 93,000 is proposed to be given during 1967–68 by way of loan and subsidy to sericulturists for sinking of wells and construction of rearing sheds. This is a hilly area. It requires at least five thousand rupees for sinking a well. In Talavadi firka, which has got similar physical conditions, the cultivators are given five thousand rupees and fifty per cent subsidy. A sum of two thousand rupees for Hosur Taluk, which has got similar physical conditions, is not adequate. I request the Hon. Minister for Industries and the Hon. Minister for Agriculture to bestow their kind attention on this and enhance the amount.

Coming to the question of the distribution of land, about thirteen thousand acres of waste lands under the control of the Revenue Department has been given for distribution to people who are interested in rising mulberry plantation there. Distribution work



is entrusted to the Revenue Department. Everything is in the hands of the Sub-Collector. But the distribution, as far as I understand, is not properly done. The distribution work should be entrusted not entirely to the Revenue Department, but to a committee consisting of Revenue Department people, sericulture experts and some local people so that the land can be given to suitable personswho are interested in mulberry cultivation and who may take up the work earnestly.

Mulberry cultivation will help agricultirists to a large extent, because it is a part of agriculture. A cultivator who cultivates an acre of mulberry will get about five hundred rupees a year. This will supplement his income from agriculture. Therefore Government should come forward to allot more funds. I am glad that this Government has provided in the budget for 1968–69 a sum of Rs. 2·5 lakhs for sinking wells and the construction of rearing sheds. This shows that the Hon. Minister for Industries has given his attention to this important industry. There can be developed in the Hosur Taluk not only agricultural industries but also forest industries also. Plenty of raw materials both forest and agricultural are available there. Nobody has taken care to study the nature of raw materials available there. Fortunately we are going to have an industrial seminar in the Dharmapuri District very shortly. The Collector and the officers of the Industries Department have taken great efforts to conduct it there and they are collecting materials. I think in that seminar they will be able to come to some conclusions as to the nature of the industries that can be encouraged in Dharmapuri District including the Hosur Taluk. After that is done, I request the Government to give their kind attention and sanction adequate amounts for the development of that backward area industrially.

Sericulture farm has been recently started in Kolatti of Hosur Taluk. The extent of the farm is 867 acres and only 40 acres have been brought under mulberry cultivation. Not only at Kolatti, but so many other places in Hosur Taluk can be brought under mulberry cultivation. The whole area can be considered as a sericulture zone. Another point is that it is very near Mysore. Agriculturists of Hosur Taluk have got some knowledge of mulberry cultivation, they understand the technicalities and can do mulberry cultivation.

In Talavadi Firka cultivators of mulberry are allowed to cultivate about two-fifths of the land with mulberry and the remaining land with other crops. In Hosur Taluk the cultivators are expected to cultivate fifty per cent of land with mulberry.

So, I request the Government to issue the same orders as existing in Talavadi. நண் பகல் 12-00

The next point is with regard to the need for the posting of a senior officer who has got technical knowledge in Sericulture. I hear that the post of a Joint Director is going to be filled up soon and I think for that post, in the interest of the development of Sericulture it would be better and also profitable to appoint a person who knows the subject and who would be able to improve the conditions there.

Another thing that I want to stress is that I searched for books on Sericulture in our Library here but I have not been able to get even a single book. That itself shows that the attention that is needed in this Department has not been given and I hope the authorities will supply books on the subject.

With regard to weavers, in the Housr Taluk, we have got excellent weavers. In places like Bagal r which is noted for textiles, for want of encouragement and for want of other facilities, sometime back many weavers were forced to go to Bangalore. The people who had not been able to carry on business here, after they went to Bangalore got encouragement there and I am proud to say that they have been producing excellent varieties of textiles and are supplying them to other parts of India and also to U.S.A. and other countries. They are now earning lakhs and lakhs of rupees. Suppose these intelligent weavers had been retained here alone, I think our State would have made greater development in that direction. Even now there are a number of families there who are carrying on the weaving industry but they do not have good facilities and financial assistance. So, I would request the Hon. Minister for Industries to make a special study of that area with regard to weaving and encourage those people so that we can stop the migration of weavers to Bangalore or other areas and make them take up the industry here itself and produce better things and thus improve the economic condition of the State. With these words, I resume my seat.

* **புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொழில் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய சில கருத்துக்களை அவைக்கு முன்னால் வைக்க விழைகின்றேன். கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி தென்னகத்துக் குடி என்பதை இலக்கியம் நமக்கு எடுத்துச் சொல்லும். தமிழகத்துக் குடி அன்றைக்கு வாழ்ந்த வரலாற்றையும், இன்று தாழ்ந்து இருக்கக்கூடிய நிலையையும் எண்ணிப் பார்க்கிறபொழுது நாகரீகத்தினுடைய உச்சியிலிருந்து வழுக்கி விழுந்ததைப் போல அமைந்திருக்கிறார்கள். அன்றைக்கு ஆடை கட்டி வாழ்ந்தவர்கள் முதன் முதலாக இந்தத் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் என்று சொன்னால், அதற்கு அடிப்படையாக அமைந்தவர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் என்று சொன்னால், கொஞ்சம்கூட மிகையில்லை என்பதை நிச்சயம் சொல்ல முடியும். அந்தக் கைத்தறித் தொழிலின் நலன் காப்பதற்கு அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அன்றைக்கு அவர்களுக்குத் தெளிவூட்டி, தெம்பூட்டி, வழிகாட்டி, வலியூட்டி, வந்த நிலையையெல்லாம் இந்தத் தமிழகம் என்றைக்கும் மறக்காது. அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்திருக்கும் இந்த அமைச்சரவை இன்றைக்கு அவர்களுக்கு வலியூட்டுவதற்குத் தயங்காது என்பதைக் குறித்து, ஒரு சில நன்மைகளை அவர்களுக்குச் செய்து தர வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

தேசீய நெருக்கடி காரணமாக, அவர்களுக்கென்று வீடு வசதித் திட்டங்களை முன்னால் செய்து கொடுத்தவர்கள் நிறுத்திவிட்டார்கள். தேசிய நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட அந்தத் திட்டங்களை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் வகையில் அவைகளைச் செய்தால் நலன் பயக்கும் என்ற கருத்தை இங்கே வைக்க விழைகின்றேன்.





அடுத்து, சாயப் பொடிகளையும், ரசாயனப் பொருள்களையும் பொறுத்தவரையில், வெளியிலே இருந்து இறக்குமதியை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. தமிழகத்திலேயே, இந்த நாட்டிலேயே அதற்கான மூலப் பொருள்களை வேளாண்மை வகையிலே உற்பத்தி செய்து, அவுரிச் செடி போன்ற செடிகளை உற்பத்தி செய்து, அவற்றின் மூலம் இங்கேயும் சாயத்தையும், மற்றைய ரசாயனப் பொருள்களையும் தயாரிப்பதற்குத் திட்டத்தை உருவாக்கித் தயாரித்தால் நலன் பயப்பதாக அமையும் என்று கருதுகிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு என்று கொடுக்கப்படக்கூடிய கழிவுத் தொகையைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும், அதன் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தனிப்பட்ட நெசவாளர் குடும்பத்தினருக்கு இந்தக் கழிவுத் தொகையால் நன்மை கிடைக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பற்பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, நெசவாளர்களுக்குப் பயன்பட வேண்டும் என்று நாம் திட்டத்தை வகுத்தாலும், நெசவாளர்களிடையே ஒரு தனிப்பட்ட முதலாளிகள் வளரக்கூடிய நிலை இருக்கிறது. தனிப்பட்ட நெசவாளர்களுக்குப் பயன்படாமல், தனிப்பட்டவர்கள் வைத்து நடத்தக்கூடிய நிறுவனங்களுக்கு, தனிப்பட்டவர்களுக்கு மட்டும் பயன்படக்கூடிய நிலை இருக்கிறது. தனிப்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அந்தத் திட்டம் அமைந்தால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக நெசவாளர் குடும்பங்களைத் தனித்தனியே எண்ணிப் பார்த்தால், அந்தக் குடும்பத்தில் எவ்வளவு வயது அடைந்தவர்கள் இருந்தாலும், எவ்வளவு முதிர்ந்தவர்கள் இருந்தாலும், அவர்களும் வேலை செய்தால்தான் வயிறு வளர்க்க முடியும் என்ற இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் வேலை செய்ய இயலாத நிலை ஏற்பட்டுவிட்டால், நோயாலோ, நொடியாலோ பாதிக்கப்பட்டுவிட்டால், இறப்பு எய்தியாக வேண்டும் என்ற நிலையைத் தவிர, அவர்கள் மீண்டும் வாழ முடியாத இக்கட்டான சூழ்நிலை நெசவாளர்கள் குடும்பங்களின் இடையிலே காணப்படுகிறது. எனவே அதனைப் போக்குவதற்கு, எந்த வகையில் இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த வகையில் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட நெசவாளர்களுக்குப் பலன் கிட்டக்கூடிய வகையில் திட்டங்களை உருவாக்கித் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய திருமயம் தொகுதிபற்றிச் சொல்லிக் கொள்கிறேன். அஃது ஓர் ஆற்றிடைக் குறையாக அமைந்திருக்கிறது. ஆற்றிடைக் குறைக்குப் பக்கத்தில் வெள்ளம் செல்லும். இடையே பெரிய திட்டாக அமைந்திருக்கும், வெள்ளத்தினால் அந்தத் திட்டிற்குப் பலன் இராது. அதைப் போல திருமயம் ஓர் ஆற்றிடைக் குறையாக அமைந்துவிட்டது. எனவே இன்றைக்கு வந்திருக்கக்கூடிய இந்த அரசு அதை ஆற்றிடைக் குறையாக ஆக்கிவிடாமல், நல்லதனைச் செய்து தரும் என்று நம்புகிறேன். திருமயம் தொகுதியில் மூன்று பொது வசதி நிலையங்களை, வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்க்கத் தக்க வகையில் மூன்று பொது வசதி நிலையங்களை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஏதாவது ஓர் இடத்தில் திருமயத்திலோ, பொன்னமராவதியிலோ ஒரு தொழில் பேட்டை அமைத்துத் தந்தால் சிறப்பாக இருக்கும் என்பதனையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்தப் பக்கத்தில் இருக்கக்கூடிய காட்டுப் பகுதியில் நிறைய மயில் குழாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. மயில்களுக்கு நல்ல பாதுகாப்பு அளித்து, மயில்களின் தோகைகளை எடுத்து ஏதாவது சிறு தொழில்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்பதை ஆராய்ந்து, அதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு இம்மாதிரி தோகைகளும், மிளகும், இன்னும் பல இயற்கை பொருள்களும் ஏற்றுமதி

செய்த நாடு இந்தத் தமிழகம் என்பதை இலக்கியம் நமக்குச் சொல்கின்ற காரணத்தினால் நான் இங்கே அதனையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொதுவாக, சிறு தொழில்கள், கைத்தறித் தொழில் ஆகியவைகளைப் பார்த்ததற்குப் பின்னாலே நாட்டு வளத்தையும், நலத்தையும், பேணத்தக்க வகையில், பெரும் தொழில் வளர்ச்சி நம்முடைய நாட்டில் தேவை. அந்த வகையில் சேலம் உருக்காலைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பல ஆண்டு காலத்திற்குப் பிறகும் பயன் கிட்டவில்லை. அதற்காக எழுச்சி நாளை இந்த அரசு மேற்கொண்ட நேரத்தில் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய அருமை காங்கிரஸ் நண்பர்கள் அன்றைக்கு ஆதரவு அளிக்கவில்லை. ஆனால், பின்னாலே அவர்கள் எதற்கோ உரிமை நாள் கொண்டாடினார்கள். நாட்டு நலனையும், நாட்டு வளத்தையும் அடிப்படையாகக் கொண்டு போராட எழுச்சி நாள் தேவை என்பதாகக் கருதி, அந்த விழாவைக் கொண்டாடி, அந்த வேதனைக்குரிய நிலைமையை டெல்லிக்குத் தெரியப்படுத்தி, அதன் மூலம் பலன் கிடைக்குமா என்று கருதின காலத்தில், அன்றைக்கு அவர்கள் ஆதரவு தரவில்லை. பின்னாலே எதற்கோ உரிமை நாள் கொண்டாடினார்கள். அவர்களும் இத்தகைய தொழில்களுக்கு ஆக்கம் தர வேண்டும் என்று கேட்டு, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு கோ. பூவராகன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மன்றத்தின் முன்னே வைக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாடு விவசாய அடிப்படையில் அமைந்து இருந்தது என்ற ஒரு நிலை மாறி, ஒரு தொழில் மயமான நிலை, ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், அது ஒன்றும் மிகையாகாது. விவசாயத்தை நம்பி விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் தேடிக் கொடுக்கப்பட்டன; நாட்டின் முன்னேற்றம் எந்த அளவிற்கு அதிகமாகப் படித்தவர்களுக்கும், பயிற்சி பெற்றவர்களுக்கும் வேலை கிடைக்கிறதோ, அதை ஒட்டிப் பார்க்கும்போது, தமிழ் நாட்டில் நிறைய வேலை வாய்ப்புக்கள் இருக்கும் வகையில் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

கடந்த 20 ஆண்டு காலமாக, தமிழ் நாடு நல்ல முறையில் தொழில் வளர்ச்சி கண்டு இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று பார்க்கும்போது, மத்திய சர்க்காரிடமிருந்தும் உரிய பங்கைப் பெற்றிருக்கிறது. மூன்று திட்டங்களிலும் தொழில் அடிப்படையில், நல்ல முறையில் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றாலும், அதற்கென்று ஒரு கவுன்சில் நியமித்தார்கள். அந்த கவுன்சில் இங்கே வந்து பார்த்துவிட்டு, நம்முடைய மாநிலத்தில் எந்த எந்த தொழில்கள் வளர்ச்சிப் பட்டிருக்கின்றன என்றெல்லாம் அவர்களுடைய ரிப்போர்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் என்னென்ன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாக, தொழில்கள் வளர வேண்டும் என்று சொன்னால், நல்ல உறுதியான ஆட்சி, அமைதியான ஆட்சி, திறமையான ஆட்சி நடைபெற வேண்டும்; தொழிலிலே முதலீடு போடுகிறவர்கள் உற்சாகமாக வருகிறார்கள்; தொழிலாளர்கள் அமைதியான முறையில் தொழிலில் ஈடுபட்டு நல்ல முறையிலே பணி புரிய வேண்டும்; பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அதிகமாகக் கிடைக்கக் கூடிய அளவிற்கு இருக்க வேண்டும்; போதுமான மின்சாரம், இடம், தண்ணீர், நிதி வசதி முதலியவை இருக்க வேண்டும் என்றும் குறித்திருக்கிறார்கள். இவை யெல்லாம் போதுமான அளவிற்கு இருந்தும் சில இல்லாதிருந்தும் மூன்று திட்டங்களிலேயும், தொழில் துறையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நன்றாக, எளவிற்கு பெருமைப்படக் கூடிய அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றும் குறித்திருக்கிறார்கள். நான்காவது திட்டத்தில் மேலும் என்னென்ன காரியங்களில் கவனம் செலுத்



தப்பட வேண்டும், அப்படிக் கவனம் காட்டி எந்த முறைகளில் முன்னேறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படவேண்டும், எவ்வளவு முதலீடு போடுவது என்பனவெல்லாம் செய்ய வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்று அந்த அறிக்கையிலே அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, மொத்தமாக நான்காவது திட்டத்திலே நாம் கிட்டத்தட்ட 585 கோடி ரூபாய்க்கு, மேலே தொழில் வளர்ச்சியில் முதலீடு போடலாம் என்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் குறித்திருக்கிறார்கள். முதலீடு போடுவதில நம்முடைய அரசாங்கமும், மத்திய சர்க்காரும், அந்தத் துறையைச் சார்ந்தவர்களும், 226 கோடி ரூபாய்க்கு வழி செய்யக் கூடிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்றும், பாக்கி தனிப்பட்ட முறையில் தொழில் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் ஊக்குவிக்கப்பட்டு, அவர்கள் முதலீடு போட வசதிகள் செய்தால் எவ்வளவு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும், எவ்வளவு தூரம் பயன்படும், என்றெல்லாம் அவர்கள் குறித்திருக்கிறார்கள். அப்படிக் குறித்து இருக்கும்போது எப்படிப்பட்ட தொழில்கள் நம் இராச்சியத்திலே வருவதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்றெல்லாம் கூட அந்த அறிக்கையில் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிக் கொடுத்திருக்கும்போது, அதிலே திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிற கிட்டத்தட்ட 95 தொழில்கள் ஏற்படுத்த முடியும், ஒவ்வொரு வகையிலும் அந்தத் தொழில்கள் முன்னேற்றம் அடையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்றும் குறித்து இருக்கிறார்கள். அதையெல்லாம் கவனத்தில் வைத்து, அதற்குத் தகுந்தவாறு நம்முடைய தொழில் விஸ்தரிப்பு, வளர்ச்சி அதிகமாக இருக்க வேண்டும். அதிலே அதிகமாக அந்த இலாகாவிலே இருக்கிறவர்கள் கவனம் காட்டி, உற்சாகம் எடுத்துக் கொள்ளும் வகையில் காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக அடிக்கடி நம் மன்றத்திலே நாங்கள் பேசுவதற்கெல்லாம், முதல் அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும், பதில் சொல்லுவது, "தொழில் அமைதி கெட்டுவிட்டது என்றால், அது எப்பொழுதும் வழக்கந்தான். தீபாவளி சமயத்தில் அது மாமூல் ஆக ஏற்படும் நிகழ்ச்சி" என்ற போக்கில் சொன்னால், தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு என்ன மனநிலை ஏற்படும் என்று பார்க்க வேண்டும். நாங்கள் சொல்லும் கருத்தெல்லாம், முதலீடு போடுவதற்கு, மேலும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஒரு நல்ல சூழ்நிலை இல்லையே என்கிற கருத்துத்தான். ஆகவே, அப்படிப்பட்டவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போகலாமா என்று எண்ணக் கூடிய அளவில் தொழிலில் முதலீடு போடுகிறவர்களுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அப்படி அவர்கள் எண்ணிக் கொண்டு இருப்பதையும் நாம் பார்க்கிறோம். முன்பெல்லாம் இருந்த நிலைமை என்னவென்றால், வேறு மாநிலங்களில் இருந்து, இங்கே வந்து, இந்த மாநிலத்தில் நல்ல முறையில் தொழில் நடத்தலாம், அரசாங்கத்தார் தங்களோடு நல்ல ஒத்துழைப்புக் காட்டுவார்கள், தொழில் அமைதி இருக்கிறது, போதுமான உற்சாகம் இருக்கிறது என்று இங்கே தொழில் நடத்த வந்தார்கள். ஆனால், அந்த நிலை இன்றைய தினம் மாறுபட்டு இருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். அதற்கான காரணங்களைக் கண்டு பிடிக்க வேண்டும். குறைபாடுகளை நீக்க முயற்சி எடுக்க வேண்டும். நல்ல முறையில் தொழில் வளர்ச்சி ஏற்படத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான், இன்றைய தினம் மற்ற இராச்சியங்களோடு நாம் சரிநிகராக நிற்க முடியும். வெஸ்டு பெங்கால், மகாராஷ்ட்ரா போன்ற இராச்சியங்களோடு நாமும் முன்னேறி இருக்கிறோம் என்றால், ஒருமுறை பதில் சொல்லும்போது சொன்னார்கள், தொன்று தொட்டு வெள்ளைக்காரன் காலத்தில் இந்த மூன்று இராச்சியங்களிலும், ஒன்றோடொன்று போட்டிபோடும் மனப்பான்மையில்தான் இருந்திருக்கிறார்கள். புதிதாக காங்கிரஸ்காரர்கள் வந்து தமிழகத்தை ஒன்றும் வளர்த்துவிடவில்லை என்று முதல் அமைச்சர் சொன்னார்கள். அது பொருத்தமானது ஆகாது. நன்றாகப் படித்தவர்கள் பொருளாதாரத்தை உணர்ந்தவர்கள் மற்ற இராச்சியங்களின் நிலைகளை அறிந்து இருப்பவர்கள், வெள்ளைக்காரன் அரசாங்கம் இருந்த காலத்தில் ஏற்பட்டிருந்த தொழில் வளர்ச்சிக்கும், வெள்ளைக்காரனிடமிருந்து சுதந்தரம் பெற்ற பிறகு காங்

கிரஸ் ஆட்சியில் ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்கும் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடு வளர்ந்திருக்கும் வளர்ச்சி ஒரு பெரிய வளர்ச்சி, நல்ல வளர்ச்சி, நல்ல முறையில வளர்ச்சிகளை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. அறிக்கையில கூட பெருமைப்படக்கூடிய அளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு பொதுத்துறை ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கதாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரைப் பற்றிக் குறிப்பிடும்போது, "இம் மாநிலத்தில் ரூ. 357 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒன்றிலுமே கவனம் செலுத்தப்படவில்லை, முயற்சிகள் எடுக்கப்படவில்லை, முன்னால் இருந்த சர்க்கார் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள், மத்திய சர்க்கார் நம்முடைய தமிழகத்தைப் புறக்கணிக்கிறது, போதுமான அளவிற்கு உதவிகள் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையில் தொழில் துறை அமைச்சர் கூட எது எது செய்ய உதவிகள் கொடுக்க வில்லை என்று விளக்கங்கள் சொல்லவில்லை. மத்திய அரசு உதவி கொடுத்திருக்கிறார்கள், பெருமைப்படுகிறேன் என்றுதான் சொல்கிறார்.

நான்காவது திட்டத்திலே நாம் குறிப்பிட்டிருப்பது, மணலியிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், கல்பாக்கத்தில் அணு மின்சாரம், அரக்கோணத்தில் வார்ப்படத் தொழிற்சாலையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நெய்வேலியிலும், இரண்டாவது திட்டத்தைச் சேர்க்க வேண்டும் என்று கேட்ட திட்டத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை. மூன்றாவது திட்டத்திலே எந்த வகையில் உதவிகள் அளிக்கப்பட்டதோ, அதே போன்று நான்காவது திட்டத்திற்கும் உதவிகள் அளிக்கும் அளவில் செயல்பட்டு, அதே பிரகாரம் நாம் பயன்படுத்திக் கொண்டு, விரைவாக எவ்வளவு சீக்கிரத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஏற்படுத்துவதற்கு, நம்மை நாம் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். நெய்வேலியில் இரண்டாவது திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று 45 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். இந்த அரசாங்கமும் அந்த வகையிலேயே வற்புறுத்தும் என்று நினைக்கிறேன். இன்றைய தினம் ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் அளவிற்குத் தொடர்ந்து தொழில்கள் நடக்க வேண்டும். மொத்தமாக நினைக்கின்ற அளவிற்கு லாபம் இல்லை என்றாலும், வருகின்ற காலத்தில் நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று பார்க்கும் போது, வற்புறுத்தி, நெய்வேலியில் இரண்டாவது திட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுக்க வேண்டும் என்றும், மேலெழுந்தவாரியாக இருந்துவிடக்கூடாது என்றும், நம் இராச்சியத்திற்கு வருங்காலத்தில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும், அதை ஒட்டிய ஏராளமான சிறு தொழில்கள் வளரக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டவர்கள் ஆவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் இரும்பாலையைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி முன்பெல்லாம் பேசப்பட்டது. "முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை. இப்பொழுதாவது காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானம் போடட்டும்; எல்லோரும் சேர்ந்து வற்புறுத்துவோம்" என்று சொன்னார்கள். சேலம் இரும்பாலைக்கு காங்கிரஸ் தீர்மானமே வேண்டாம். ஏனென்றால் அது திட்டத்திலே இருக்கிறது. இப்போது இருக்கிற பிரச்சினையெல்லாம் பணந்தான். எவ்வளவு ரூபாய் போடுவது? யார் போடுவது? யார் ஆரம்பிப்பது போன்ற பிரச்சினைகள்தான். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு ரிபோர்ட்டுகள் கூட தயாராகியிருக்கின்றன என்ற விஷயம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய சட்ட மன்ற நூல்நிலயத்திலேகூட அந்த அறிக்கைப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. இடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டன. இப்பொழுது இருப்பதெல்லாம் பணப் பிரச்சினைதான். பொறுப்பில் இருக்கும் அரசாங்கம் சென்ற



ஆண்டும் இதைப்பற்றிச் சொன்னார்கள், இந்த ஆண்டும் சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு திட்டவட்டமாக வழிவகை காணப்படவில்லை. முக்கியமாக நாம் என்ன எண்ணியிருந்தோம் என்றால், மத்திய அரசாங்கத்திலே 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு வழி வகை செய்யவில்லையென்று சொன்னால், அந்தத் திட்டத்தை மாநில அரசாங்கமே ஏற்று நடத்தும் என்ற நோக்கத்தோடுதான் இருந்தோம். முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இதுபற்றி நன்றாகத் தெரியும். மாநில அரசாங்கம் 100 கோடி ரூபாய் அளவிற்குத்திட்டத்தை எடுத்து நடத்துவது கஷ்டம் என்றாலும், நாம் ஒட்டுமொத்தமாக ஒரே ஆண்டில் அவ்வளவு கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பத்து ஆண்டுகளில் திட்டம் உருவாகிவிடும். பத்தாண்டுகளில் வேலைகள் தொடர்ந்து நடக்கும். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவாகுமோ அதை ஒரு பத்தாண்டுகளில் செலவழித்துக்கொள்ளலாம். அந்நியச் செலாவணி கொடுப்பதற்குக் கூட அண்டை நாடுகள் தயாராக இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி அனுமதியைக் கேட்டுப்பெற முயற்சி எடுக்கவேண்டும்.

முதலாவது நாம் அதை வற்புறுத்திப் பெற வேண்டும். இரண்டாவதாக அந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் எடுத்து நடத்துகின்ற அளவிலே இல்லாமல் நாமே எடுத்து நடத்துகிற அளவில் இருக்க வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காண பட்ஜெட்டிலே தெளிவாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். அதை இப்படியே விட்டுவிடுவது நல்லது அல்லவென்று கூறிக்கொள்கிறேன். சேலம் இரும்பாலைத் திட்டம் நிறைவேறினால் நல்ல வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கின்ற மக்களை ஏமாற்றக் கூடாது. நம்முடைய மாநிலத்திலே பெரிய தொழில்களிலே முதலீடு போட வாய்ப்புக்கள் இல்லை. உண்மைகூட அதுதான். ஆகவே, சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு நம்முடைய முதலீட்டைக் கொஞ்சம் போட்டு இத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலங்குளம் பகுதியில் சிமெண்டுக்கும், அரக்கோணம் வார்ப்படத்தொழிற்சாலைக்கும் கோடிக்கணக்கான ரூபாய் போட்டிருக்கிறோம். சேலம் இரும்பாலை ஒன்றுதான் நம்முடைய மாநிலத்தில் பெரிய திட்டமாக இருப்பதால், இது ஏற்பட வழிவகை காண வேண்டும்.

தமிழ்நாடு அரசாங்கத்திற்கு நீண்ட கடற்கரை இருக்கிறது. சென்னைத் துறைமுகமும் வசதியாக இருப்பதால் நம் நாட்டு உற்பத்திப் பொருள்கள் இங்கிருந்து அண்டை நாடுகளுக்கு அனுப்பினால் நல்ல கிராக்கி ஏற்படும் நிலை இருக்கிறது. வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பொருள்கள் என்னென்ன இருக்கின்றன, எம்முறையில் அவைகளை உருவாக்கி வெளிநாடுகளுக்கு அனுப்பலாம் என்பதில் தொழில் துறையில் இருப்பவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். பொதுத் துறையாளும், தனியார் துறையாளும் நல்ல பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யதக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் இந் நாட்டின் பொருளாதாரத் துறையை மேம்படுத்துவதில் முயற்சி எடுத்துக்கொள்ளலாம். தமிழ்நாடு அரசாங்கமும் தக்க உதவிகளைச் செய்துதர வேண்டும். மேலும் பல சிறு தொழில்களை ஆரம்பிக்க மத்திய சர்க்காரின் அனுமதிக்காகக் காத்திருக்கத் தேவையில்லை.

நண்பர் திரு. பாலசுப்பிரமணியம், தோல் பதனிடும் தொழிலைப்பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தோல் பதனிடும் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. சென்னைத் துறைமுகத்தின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாம் இந்தத் தொழில்களையெல்லாம் சரிவரப் பாதுகாக்காவிட்டால் வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிடுமோ என்று அச்சப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் நாம் கொஞ்சம் அதிகமாக வரியை அதன்மேல் ஏற்றிவிட்டோம். எனவே, இத் தொழில்கள் எல்லாம் வேறு ராஜ்யங்களுக்குப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்படி ஒருவேளை வேறு மாநிலங்களுக்குத்

தொழிற்சாலைகளை மாற்றிக்கொண்டுபோனால், இங்கிருக்கும் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே, அமைச்சர்களும், தொழிலதிபர்களும், ஒன்று கூடிப் பேசி, என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன, அவற்றை எப்படித் தீர்ப்பது என்று ஆராய்ந்து தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம் மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் கனிவளங்கள் இருக்கின்றன. நாம் அவற்றை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்பதை நல்ல முறையில் ஆராய வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கு காரைக்குடிப் பகுதியிலே நிலக்கரி 90-லிருந்து 120 அடி மட்டத்தில் கிடைப்பதாகத் தெரிகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் காட்டுவாக்கம் என்ற இடத்தில் 50 அடியிலிருந்து 60 அடி ஆழத்தில் நிலக்கரி கிடைக்கிறது என்று சொன்னார்கள். (மாண்புமிகு முதலமைச்சர்—குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகமாக இல்லையென்று சொல்கிறார்கள். இந்த இரண்டு இடங்களையும் ஆராய்ந்து பார்த்து சிறிய அளவுக்கு "மைன்" ஏற்படுத்தலாம். இந்தச் சிறிய தொழில்களுக்கு தமிழ்நாடு அரசாங்கமே பொறுப்பு ஏற்றுக் கொள்ளலாம். எந்த அளவுக்கு இதைச் செய்வது, எவ்வளவு முதலீடு போட வேண்டும், எவ்வளவு நாட்களில் இதை எடுக்க முடியும் போன்றவைகளை ஆராய்ந்து நிலக்கரியை எடுத்து, எரிபொருளாகச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். குறைந்த செலவில் ஏற்படுத்தலாம் என்று கணக்குக்கூடக் காட்டியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கள்ளக்குறிச்சிக்கு அருகில் மாமண்டூரில் செம்பு கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜப்பான் நாட்டிலிருந்து வந்த நிபுணர்கள்கூடப் பார்த்தார்கள். அந்தச் செம்பு கனிவளத்தை ஆராய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் அப்படியே விட்டுவிட்டால், தொழில் துறையிலே அதிக கவனம் செலுத்தாதவர்களாக ஆகிவிடுவோம். எனவே, அந்தக் கனிவளத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிமெண்டு உற்பத்திக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் கிடைக்கின்ற இடங்களையெல்லாம் அவர்கள் கொடுத்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். பெரிய தொழிற்சாலை நிறுவ முடியாத நிலைமை இருந்தாலும், குறைந்த தூரமுள்ள பகுதிகளில் கிடைக்கின்றவற்றை இணைத்து, சிறுசிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசாங்கமே முதலீடு போட்டு இந்தத் தொழிற்சாலைகளை நடத்த வேண்டும். சில லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு போடும் தொழிலிலாவது தமிழ்நாடு அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கிறதா என்று பார்த்தால், கவனம் காட்டவில்லையென்றுதான் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஆக, சரியான முறையில் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான
பி.ப. யோசனைகள் சொல்லப்பட்டிருந்தும், அதற்கான பரிட்சார்த்த நிலைமை
12-30 கள் முடிந்திருந்தும் அவற்றில் பணத்தை முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். இதனால் வேலை வாய்ப்பு பெருகுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்கிற நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம்.

அடுத்து விவசாயத்தை ஒட்டிய பல தொழில்கள் இருக்கின்றன. அதாவது பருத்தி ஆலைகள், சர்க்கரை ஆலைகள் எல்லாம் இருக்கின்றன நிதி நிலை அறிக்கையில் பார்த்தேன். புதிதாக 3 சர்க்கரை ஆலைகள் வர இருப்பதாகக் குறித்துள்ளார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. அவை தனியார் துறையில் வர இருக்கின்றனவா, கூட்டுறவுத் துறையில் வர இருக்கின்றனவா, எந்த எந்த இடத்தில் ஏற்படப் போகின்றன. நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். தனியார் துறையில் ஏற்படுத்தினாலும் சரி, கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தினாலும் சரி தென்னாற்காடு மாவட்டத்தில் திருவெண்ணைநல்லூர், திருக்கோவிலூர் தாலூகாவில் ஒரு சர்க்கரை ஆலையை ஏறபடுத்த வேண்டும். எல்லா இடங்களிலும் கரும்பு விளைகிறது என்றாலும் இந்தப் பகுதியில் விளையக்கூடிய கரும்பில் சர்க்கரை





சத்து அதிகமாக இருப்பதாக விவசாய இலாக்காவே கண்டிருக்கிறார்கள். இந்த 3 சர்க்கரை ஆலைகளில் ஒன்றை அங்கே ஏற்படுத்த முடியாவிட்டாலும் நான்காவது சர்க்கரை ஆலையையாவது அந்தப் பகுதியில் ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்வேன்.

இன்னும் கரும்புச் சக்கை இருக்கிறது. அதைக் கொண்டு கார்டுபோர்டு தயாரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிலை ஆரம்பித்தால் கட்டுப்படியாகக் கூடிய அளவுக்கு—லாபகரமாக இருக்கக்கூடிய அளவுக்கு இருக்கும் இப்போது அதிக சர்க்கரை ஆலைகள் இருப்பதனால் சக்கைகள் அதிகமாக இருக்கின்றன. இப்போது கரும்புச் சக்கையை எல்லாம் எறிந்துவிடுகிறார்கள். சிலர் எரிபொருளாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி கார்டுபோர்டு தயாரிக்க இத்துறையினர் ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டும். தனியார் துறையிலேயே கார்டுபோர்டு இண்டஸ்டரி ஆரம்பிக்கக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இல்லை என்றாலும் கூட்டுறவுத் துறையிலோ, அரசாங்கத் துறையிலோ ஆரம்பிக்க வேண்டும்.

அதேபோன்றுதான் இன்றைக்கு ஏராளம் அரிசி மில்கள் வந்துவிட்டன. தவுட்டில் இருந்து எண்ணை எடுக்கலாம். அதிகமான அளவுக்குக் கிடைக்கும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நெல் உற்பத்தியும் அதிகமாயிருக்கிறது. ஆகவே தவுட்டில் இருந்து எண்ணை எடுப்பதற்கும் இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அதுபோலவே பிண்ணாக்கில் இருந்தும் எல்லா எண்ணையும் எடுக்கப்படுவதில்லை. அதில் உள்ள எல்லா எண்ணையும் எடுக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும். (மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அறிக்கை, அறிக்கை என்று சொல்வது டாக்டர் லோகநாதன் அறிக்கைதானே?) ஆம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** டாக்டர் லோகநாதன் அறிக்கையில் தவுட்டில் இருந்து எண்ணை எடுக்கலாம் என்று குறிப்பிட்டிருப்பதை நானும் அறிவேன். 1957–58-இல் நானே இந்த அவையில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். 1957–58-க்குப் பிறகு 1967-வது ஆண்டுவரை ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தது அவர்களுடைய கட்சி. அவர்கள் காலத்தில் ஏன் தவுட்டில் இருந்து எண்ணை எடுக்க முயற்சிக்கப்படவில்லை என்கிற காரணத்தை நான் கேட்கவில்லை. 1957-ல் நான் சொன்னேன். 1968–ல் காங்கிரஸ் உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இந்த நிலையில்தான் இந்தத் தொழில் போக்கு இருந்து வருகிறதென்பது என் நினைவுக்கு வருகிறது.

**திரு. கோ. பூவராகன்:** 1957–ல் நெல் உற்பத்தி இன்றைக்கு இருக்கக்கூடிய அளவில் இல்லை. தற்போது ஒரு போகம் இரண்டுபோகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டு போகம் மூன்று போகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அப்போதிருந்ததைவிட இப்போது பலமடங்கு நெல் உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த விவரம் தவுட்டில் இருந்து எண்ணை எடுக்கக் கூடிய தொழிற்சாலையை இன்னும் எத்தனை வைக்கலாம் என்ற வளர்ச்சியைத்தான் காட்டும். அப்போதிருந்த உற்பத்திக்கு ஒன்றிரண்டு ஆலைகளையாவது வைத்திருக்கலாம். டாக்டர் லோகநாதன் அது தெரிந்துதான் எழுதியிருக்கிறார்.

**திரு. கோ. பூவராகன்:** அவருக்குத் தெரிந்துதான் எழுதியிருக்கிறார். ஒன்றும் தெரியாதவராக இருந்தால் அனுப்பியிருக்கமாட்டார்கள். ஒரு தொழிலை ஆரம்பிப்பது என்றால் அது லாபகரமானதாக இருக்க வேண்டும். இப்போது ஆரம்பிப்பது லாபகரமாக இருக்கும்; நெல் உற்பத்தி அதிகம் பெருகியிருக்கிறது. நிறைய நெல் அரைக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது சொல்லப்பட்டவைகள் எவ்வளவோ இருக்கின்றன. சேலம் இரும்பாலையைப்பற்றிக் கூடச் சொல்லிக்கொண்டே வருகிறோம். இன்னமும் உருவாகவில்லை, எந்தத்

தொழிலையும் ஆரம்பிப்பது என்றால் அதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும், சூழ்நிலை வேண்டும். இப்போது தவுட்டில் இருந்து எண்ணெ எடுக்கக்கூடிய தொழிற்சாலையை ஆரம்பிக்க நிறைய சந்தர்ப்பமும், வாய்ப்பும், இருக்கின்றன. முன்பு இல்லாததைவிட அதிக வசதியான சூழ்நிலை இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இப்படிச் சொல்வது தவறு உடையது என்று சொல்லவில்லை. முன்னாள் அமைச்சராக இருந்த ஒருவர் பொறுப்புணர்ச்சியுடன் பேசுகின்றபோது தவுட்டில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிலை ஆரம்பிக்கலாம் என்று முன்பிருந்தே வற்புறுத்திக் கொண்டு வந்தார்கள். அதற்கு அப்போதெல்லாம் சந்தர்ப்பம் இல்லை. இப்போது சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது என்பதையும் சேர்த்துச் சொல்லியிருப்பார்களேயானால் அவர் வகித்த பொறுப்பான பதவிக்கு உகந்ததாக இருந்து இருக்கும்.

**திரு. கோ. பூவராகன் :** முன்னாலே யார் சொன்னார்கள், எப்போது சொன்னார்கள் என்பதை எல்லாம் சிலரைப் போல குறிப்பெழுதிக்கொண்டு பேசுகிற வழக்கம் இல்லை. இப்போதிருக்கிற நிலைமையில் நாம் என்ன செய்ய வேண்டும் ; எதிலே கவனம் காட்டப்பட வேண்டும் என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மறுபடியும் இன்னொரு தவறைச் செய்கிறார்கள். சிலரைப் போல படித்துப் பார்த்து பேசுகிற வழக்கம் இல்லை என்றார்களே தவிர நல்லவேளையாக எதையும் படிக்கிற வழக்கம் இல்லை என்று சொல்லவில்லை. இனிமேல் அதையும் படிக்குமாறு நட்புணர்ச்சியோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** எனக்கு அவைகளைப் படிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. முன்னாலேயேநான் அப்படிச் சொன்னதாக அவர்கள் சொன்னாலேயே போதும். இந்த ராஜ்யத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவரே தாம் முன்பு அப்படிக் குறிப்பிட்டேன் என்று சொன்னால் அதைப் படிக்காமலேயே ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

ஆகவே இது போன்ற சிறு தொழில்களில் நமக்குக் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருள்களை எந்த எந்த வழிகளில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்ச்சிகளின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள யோசனைகளைச் செயல்படுத்த பணத்தை அதிகமாக ஒதுக்க வேண்டும். தொழில்களை அதிகம் ஏற்படுத்தி வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

அடுத்து, நான் முந்திரித் தொழிலைப் பற்றிச் சொல்லப்போனாலும் முன்போலவே முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். 1957–58-இல் எங்கள் பகுதிகளில் இருந்த அளவுக்கு இப்போது முந்திரிக் காடுகள் இல்லை. அங்கங்கே இருந்த சிறு சிறு காடுகளை எல்லாம் அழித்துவிட்டு முந்திரித் தோப்பு வளர்த்திருக்கிறார்கள். பத்தாயிரம் ஏக்கரா, பதினைந்தாயிரம் ஏக்கரா முந்திரிக் காடுகள் இப்போது நல்ல பலனை அளிக்கின்றன. ஏற்கனவேயே முந்திரிக் கொட்டையில் இருந்து எண்ணெ எடுக்க கேரளாவில் இருப்பதைப் போன்று தமிழ் நாட்டில் பண்ருட்டிப் பகுதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று பரிசீலனை செய்து பார்த்தார்கள். அப்போது போதுமான அளவு முந்திரிக் கொட்டை கிடைக்காது என்ற காரணத்தினால் அதை எடுக்கவில்லை. இப்போது நிறையக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இப்போது அதை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் தொழில்பேட்டைகள் வைத்திருக்கிறார்கள். சில தொழில் பேட்டைகளில் முழு அளவுக்கு கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக வாடகை அதிகம் இருப்பதனால் பலர் வரத் தயங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வாடகையைக் குறைத்





தாவது முழு அளவுக்குக் கட்டிடங்களைப் பயன்படுத்த ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

நம்முடைய ராஜ்யத்திலே கைத்தறித் தொழில் இருக்கிறது. இந்தக் கைத்தறித் தொழில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக இருக்கிறது. ஏராளமான நெசவாளர்கள் இன்றையதினம் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நாம் நூற்பாலைகளை ஏராளமாகக வைத்து இருக்கிறோம். ஆனால் இப்பொழுது ஒரு தேக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆலைகள் எல்லாம் ஒவ்வொன்றாக மூடப்பட்டுக் கொண்டுவருவதைப் பார்க்கிறோம். ஒரு பக்கம் திறப்பதற்கு முயற்சி இருந்தாலும், மற்றொரு பக்கம் மூடிக் கொண்டு வருகிறார்கள். அவற்றைத் திறப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய வேண்டும். பாங்கிலே கியாரண்டி கொடுத்து அவர்களுக்கு உதவிகள் செய்தாலும் அந்த ஆலைகளை நடத்துவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். சில இடங்களில் சில மில்களுக்குப் பாங்குக்காரர்கள் பணம் கொடுப்பதற்கு அச்சப்படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இந்த மந்த நிலையைப் போக்க வேண்டும். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய லட்சக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்புக்களை இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நூற்றுக் கணக்கானவர்கள் இன்றையதினம் வெளியில் புறப்பட்டுவிட்டார்கள். மேலும் இந்த நிலைமை வளர்ந்துவிடுமோ என்று பயந்து ஆங்காங்கு உள்ளவர்கள் கிளம்பிவிட்டார்கள். 1964-லிருந்து 1966 வரையில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகள் இன்றைய தினம் பாதியாகக் குறைந்திருக்கிறது. அதிலே எப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஒன்று நம்முடைய பிளீடிங் மெட்ராஸ், வண்ணம் மாறும் துணி அமெரிக்கா போன்ற நாடுகளுககு அனுப்பப்பட்ட துணி, அதன் தரம் முன் மாதிரியாக இல்லை என்ற குறை சொல்லப்படுகிறது. அடுத்ததாகச் சொல்லும்பொழுது, ஜப்பானிலிருந்து நம்முடைய, துணியைப் போன்ற துணிகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து மார்க்கெட்டைக் குறைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. குறைந்த விலைக்கு அவர்கள் கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட இரண்டு மூன்று குறைகள் சொல்லப்படுவதை நாம் பார்க்கிறோம். இங்கிருந்து ஒரு அதிகாரியை அனுப்பி எதனாலே அப்படி ஏற்பட்டிருக்கிறது என்று கண்டு வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். மற்ற நாடுகளுக்கும் சென்று கைத்தறித் துணியை விற்பனை செய்வதற்கு என்ன ஏற்பாடுகளை செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். தொழில் அமைச்சராக இருக்கிறவர்கள் கைத்தறி விழாவிலே பேசும்போது சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். இனிமேல் இந்தத் தொழிலிலே ஈடுபடுவது நல்லதல்ல, வேறு தொழிலிலே ஈடுபட வேண்டிய நிலைமை வந்துவிட்டது. இந்தத் தொழிலையே நம்பிக் கொண்டிருப்பது பொருத்தமாக இருக்குமா என்று சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். இந்தத் தொழிலையே நம்ப வேண்டாம் என்று சொன்னால் அவர்களுக்கு எல்லாம் வேறு வேலை வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும்......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தொழில் அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்தை வெளியிட்டதாகப் பத்திரிகையிலே பார்த்ததாகத் தெரிவித்தார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை என்று அவர்கள் விளக்கம் கொடுத்திருந்த செய்தியையும் பத்திரிகையிலே படித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** அப்படி அவர்கள் சொல்லவில்லை என்று சொன்னால் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். வேறு தொழில்களுக்குச் செல்ல வேண்டுமென்று அவர்களையெல்லாம் அச்சப்படுத்துகின்ற அளவிலே குறிப்பாக ஒரு பொறுப்பிலே இருக்கிற அமைச்சர் சொல்லக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பே திரு சென்டி சுந்தர பாரதி அவர்கள் இதைப் பற்றி எழுப்பியபோது நான் விளக்கம் தந்திருக்கிறேன். பொருளாதார நிலைமை எப்படி இருக்க வேண்டும்

என்று மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவிலேதான் சொன்னேன். அவர்கள் அந்தத் தொழிலை விட்டுவிட்டுப் போக வேண்டுமென்று சொல்லவில்லை போக வேண்டுமென்று சொன்னால் அவர்கள் என்னைத் தான் கேட்பார்கள் எந்தத் தொழிலுக்குப் போகச் சொல்கிறீர்கள் என்று. ஆகவே, பொருளாதாரம் எப்படி வளர வேண்டுமென்ற வரலாற்று நிலையைத்தான் எடுத்துச் சொன்னேனே தவிர அவர்களை அந்தத் தொழிலை விட்டுப் போக வேண்டுமென்று சொல்லவில்லை.

**திரு. கோ. பூவராகன் :** வரவேற்கிறேன் அதை. வேறு தொழிலுக்குப் போக வேண்டுமென்று சொன்னால் அந்தப் பிரச்னை அவர்களிடத்தில் தான் வரும். இந்தத் தொழிலிலே லட்சக் கணக்கான மக்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய நிலைமையை நாமே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதாக ஆகிவிடும். ஆகவே சங்கடங்கள் இதில் இருந்தால் அவற்றைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். ரிபேட் முறை வைத்திருக்கிறோம். அதனாலே நிரந்தரப் பரிகாரம் கிடைத்து விடும் என்று எண்ணக் கூடாது. மாற்று வழிகளையும் காண வேண்டும். தேங்கியிருக்கிற துணிகளை வெளி மாநிலங்களுக்கு மட்டுமல்ல, மற்ற அண்டை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அண்டை மாநிலங்களுக்குத் துணி இங்கிருந்து செல்ல முடியாத சூழ்நிலை இரண்டு மூன்று மாதங்களாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு என்ன என்னமோ காரணம் சொல்கிறார்கள். எந்தக் காரணம் இருந்தாலும் சரி அதைக் கொண்டு தக்க பரிகாரம் கண்டு துணியை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்து இந்த தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு பிரிண்டிங் மெஷினரி போன்ற தொழில்களிலே சிறு சிறு தொழில்களிலே அதிகமாகக் கவனம் காட்டி அந்தத் தொழில்களை ஊக்குவித்து, நல்ல முறையிலே ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

உணவுத் துறையைச் சேர்ந்த சில பொருள்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் பிஸ்கட், வீட் பிளவர் செய்வதற்கு நம்முடைய ராஜ்யத்திலே தொழில் வசதிகள் அதிகமாக இல்லையென்று காண்கிறோம். அதே போன்று கெமிக்கலைச சேர்ந்த தொழிற்சாலைகள் மிகக் குறைவாக இங்கு இருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதையும் செய்ய வேண்டும் உரத்தைப் பொறுத்த வரையில் கூட நம்முடைய ராஜ்யத்திற்கு சிறிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினாலே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது, அவர்களுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டேன் என்று கருதுகிறேன். தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் நிறைய முதலீடுகள் போட்டு, ஏராளமான வேலை வாய்ப்புத் தேடிக் கொடுப்பதற்கும் அதிகமான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். சிறிய பெரிய தொழில்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள், கச்சாப் பொருள்கள் கிடைக்கின்ற நிலைமைகள் இவற்றையெல்லாம் பார்த்து நல்ல தொழில் வளர்ச்சி தொடர்ந்து இருப்பதற்கான முறையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தொழில் மானியத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தில் இப்பொழுது புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு ஒரு ஆண்டுக் காலமாவதற்குள்ளாக ஏதோ பத்து ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தி எத்தனையோ குறைகளை விட்டு வைத்திருப்பது போல் சில அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆனால், நம்முடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்பாக நாட்டின் தொழில் வளர்ச்சியில் நாட்டம் கொண்டு



இருந்ததையும், கைத்தறி நெசவாளிகளுக்கு உதவுகின்ற முறையில் அந்தத் துணிகளைத் தோளில சுமந்து விற்றதையும் அறிவீர்கள். இந்த நாட்டு மக்களுக்குக் காட்டும் அக்கறையும் அன்பும் தன்மையும் தமிழக அரசுக்கு இல்லாதது வேறு யாருக்கும் இருந்துவிட முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நாட்டிலே நல்ல பல தொழில்களை யெல்லாம் சீரிய முறையில் செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சித்துக் கூடுமான வரையில் முடித்தும் வருகிறார்கள் அதற்காக என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி ஆய்வுரையின் கடைசிப் பக்கத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் படம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. நீலகிரியிலே 9 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சிறு தோட்டக்காரர்களுக்கு அது மிகவும் நல்ல முறையில் உதவுகின்றது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். அங்கே இன்னும் சில பகுதிகளிலே சிறு தோட்டச் சொந்தக்காரர்கள் அப்படிப் பட்ட கூட்டுறவுத் தொழிற்சாலைகளுடன தொடர்புகொள்ள முடியாத நிலை இருப்பதால் இன்னும் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் அதிலே ஆர்வம் காட்ட முன்வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அங்கே இன்னும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதில் அரசு முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு உதவும் முறையில் உரிய காலத்தில் தேயிலைச் செடிகளுக்கு உரம் மற்றும் ஏனைய உதவிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தேயிலைத் தொழில்கள் செழிக்கும் வகையில் அந்தத் தொழில் பெருகும் வகையில் வேண்டிய உதவிகளை மத்திய அரசிற்கும் தேயிலை வாரியத்திற்கும் சிபார்சு செய்ய வேண்டுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவ அரசு முன்வர வேண்டும். தொழிற்பேட்டையை நிறுவுவதால் பல தொழில்கள் வளரவும், வேலை வாய்ப்புக் கிடைக்கவும் வழி ஏற்படும். குன்னூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற் பயிற்சிப் பள்ளியை விஸ்தரிக்க வேண்டும். மகளிர் கூட்டுறவு நிலையங்கள் மூன்று இருப்பதை மேலும் அதிகரிக்க வேண்டும். இந்தத் துறைகளில் எல்லா அதிகாரிகளும் நல்ல முறையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு சுறுசுறுப்பாக பணியாற்றினார்கள். அந்த அதிகாரிகளின் சேவையைப் பாராட்டி, மேலும் நல்ல முறையில் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான பணிகளை அவர்கள் ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். பூபந் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருககக்கூடிய தொழில்கள், தொழில்கள் முன்னேற்றம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மூலம் $12\frac{1}{4}$ கோடி ரூபாய கோரியுள்ளார்கள். அது பற்றிச் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் கை நெசவுத் தொழிலாளர்கள் பல்வேறு இடங்களில் வேலை வாய்ப்புக்கிடைக்காத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். எப்படி 1963-ம் வருஷத்திலே கை நெசவுத் தொழிலாளர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து பட்டினிப் பட்டாள யாத்திரை தொடங்கினார்களோ அந்த நிலை தற்போது உருவாகி வருகிறது. சென்னை சைதாப்பேட்டையில் வேலை செய்கிற ஆறாயிரத்திற்கு மேற்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் கை நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது, மற்றொரு பக்கத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டு காலமாக பஞ்சாலைகளை மூடிக்கொண்டிருக்கிற நிலை வளர்ந்து வருகிறது. குறிப்பாக, பஞ்சாலை முதலாளிகள், நூல் தேக்கம் அதிகமாகிவிட்டது, பஞ்சாலைகளை மூட வேண்டும் என்பதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களுக்கு ஒரு யோசனை கூறுகிறார்கள். உங்கள்

ஓய்வு லீவை எடுத்துக்கொள்ளுங்கள், பணம் கிடைக்கும், நஷ்டம் ஏற்படாது என்று அவர்களுடைய காரியத்தை முடிக்கப் பார்க்கிறார்கள். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் நன்கு சிந்திக்க வேண்டும். உண்மையிலேயே அவர்களுக்குப் பெரிய அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடவில்லை. பஞ்சாலை முதலாளிகள் நஷ்டம் என்று சொன்ன காரணத்தால் அவர்களுடைய பாலன்ஷீட் பலவற்றை நாங்கள் பரிசீலனை செய்து போனஸ் கொடுக்கவேண்டுமென்பதற்காக கோர்ட்டில் தாவா செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம. ஆகவே, இந்த அமைச்சு தனியாக ஒரு ஆடிட்டரை நியமித்து, அவற்றைப் பரிசீலனை செய்வது உதவிகரமாக இருக்கும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இ.ஐ.டி. பாரி கம்பெனியைப் பற்றி 20-ம் தேதி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எச்.வி.ஆர். ஐயங்கார் அவர்கள் சரித்திரம் காணாத அளவுக்கு அதிகமான லாபம் கிடைத்திருக்கிறது என்று கூறுகிறார். ஒரு பக்கத்தில் இந்த நிலை இருக்கும்போது மற்றொரு பக்கத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். பஞ்சாலைகளில் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்வது உண்மையிலேயே எந்த அளவுக்கு உண்மை என்று பரிசீலனை செய்ய வேண்டும். பரிசீலனை செய்து ஏற்பட்டிருக்கும் நோய்க்குத் தக்கபடி மருந்து கொடுக்க வேண்டும்.

மத்திய சர்க்கார் நமக்குப் போதுமான உதவி செய்யவில்லை, செய்வதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். சேலம் உருக்காலையை அமைக்க வேண்டுமென்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும் போது அதற்கு மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அன்றையதினம் சேலம் உருக்காலை நிறுவப்பட வேண்டுமென்று உரிமை தினம் எல்லாம் கொண்டாடினோம். ஆனால் இன்னும் அதற்கு மத்திய சர்க்கார் எந்தவித பதிலையும் கூறவில்லை. அந்த சேலம் உருக்காலைத் தொழில் நம்முடைய நாட்டில் உருவாவதன் மூலமாக உப தொழில்கள் உருவாக முடியும். அதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருக முடியும். ஆகவே, மத்திய சர்க்காரை மேலும், வற்புறுத்தி அந்தத் திட்டத்தை நம்முடைய நாட்டிலே ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக இன்றைக்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற முயற்சிக்கலாம் என்றால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் டாலர் நெருக்கடியும், ஸ்டர்லிங் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் உதவி கிடைக்காது. சோஷலிச நாடுகளை அணுகினால் நல்ல முறையில் உதவி கிடைக்கும். குறிப்பாக, கிழக்கு ஜெர்மனியை அணுகுவதன் மூலம் நாம் பலன் பெற முடியும். நம்முடைய நாட்டில் எப்படி நெய்வேலி நிலக்கரியும், சேலம் இரும்பும் அருகருகே கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறதோ, அதே போன்ற நிலையில் கிழக்கு ஜெர்மனியில் பல்வேறு உருக்காலைகளை வைத்து நடத்தி வருகிறார்கள். அப்படி அவர்களை அணுகுவதற்கு மத்திய சர்க்காரை எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து வற்புறுத்த வேண்டும். அவ்வாறு செய்வதால் மத்திய சர்க்காரும் உறுதுணையாக இருக்கச் செய்ய முடியும். கேரள சர்க்கார் கூட இது போன்று மத்திய சர்க்காரிடம் ஒரு உதவியைக் கோரியபோது மத்திய சர்க்கார் உதவி செய்திருக்கிறார்கள்.

சர்க்கார் நடத்துகிற பல்வேறு சிறு தொழில்களின் நிலைமையைப் பற்றி பேசிய எங்கள் தலைவர் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதிரி தொழில்களில் எல்லாம் எந்த அளவுக்கு அதிகமான அதிகாரிகள் நிறைந்திருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரத்தோடு கூறியிருக்கிறார்கள். கடந்த கால காங்கிரஸ் ஆட்சி அதிகாரிகளை நம்பிய காரணத்தினால்தான் பல்வேறு தொழில்களில் நஷ்டம் ஏற்பட்டது. பல்வேறு தொழில்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் கடனாகவும், மானியமாகவும் கொடுக்கப்பட்டும் அவர்கள் செய்தது என்ன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாரத் சேவக் சமாஜம் கடன் பெற்றது 90 ஆயிரம். கிராண்ட் ஒரு லட்சத்து 23 ஆயிரம் ரூபாய். ஐயாயிரம் ஹோல்டால்கள் செய்வதாகவும், ஒவ்வொன்றும் ரூ. 18.25-க்கு விற்பனை செய்வதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இறுதியாக உற்பத்தி செய்தது 1,872. விற்றது 816,



லை ரூ. 7.25 வீதம். இதிலிருந்தே எந்த அளவுக்குத் தவறான முறையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் தோல்வியடைந்திருக்கின்றன என்பது தெரியும். 1967-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தத் தொழிலை மூடிவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் நடவடிக்கை எடுத்தது. 1967 நவம்பர் மாதம் வரையில் அந்தப் பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. அதிகாரிகளை மட்டுமே நம்பி தொழில்களை நடத்துவதன் மூலமாகத்தான் இந்த நஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, தொழிலாளர்களை நம்பி, தொழிலாளர் கமிட்டிகளை உருவாக்கி அந்த அடிப்படையில் தொழில்களில் ஈடுபட்டால் வருங்காலத்தில் லாபகரமாக நடக்க முடியும் என்பதைக் கூறிக் கொண்டு மூடிய பஞ்சாலைகளைத் திறக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Chairman, Sir, to-day we are discussing the Demand—Industries. According to me, it is the most important Demand probably next to Agriculture. The way this Government are going to function hereafter with regard to increased productivity and employment potential, depends on the satisfactory solution that they are going to find for it and the industrial policy that they are going to formulate. Today it is a fact that we are in the midst of a tremendous recession and nobody can deny it. But we have to examine the causes of this recession. The main causes of recession, according to me, relate to two factors. The first is with regard to the Fourth Five-Year Plan. We have not pumped in as much money as we originally promised for the Fourth Plan. When I say 'We' I mean the Central Government. The Central Government have stated to the people that the total Outlay of the Fourth Plan for both the Public and Private sectors would be about Rs.22,000 crores. that was a conservative amount, but to-day it has come down to nearly Rs. 15,000 crores. Now, Sir, our Party is against pumping in too much of money into the Plan. Our party has got a solution. The solution that we suggest is that the Government should create an incentive among the private enterpreneurs and the shareholders to invest their money for increasing productivity instead of the tax-payers' money being invested for that purpose. Neither this has been done nor the original Outlay of the Fourth Plan of Rs. 22,000 crores has come into operation. Now, what is the position? We have no money to pump into the public sector and we have also no private money to circulate. Now we are in the midst of a recession and what is the role that the State can play, is the only subject matter that is now before the House. As far as our State is concerned we are in doldrums. But we have taken up schemes of quasi-nationalization. For instance, the State Government have taken up schemes of nationalization of transport and subsidizing of rice and so they cannot divert their limited funds to any other State enterprise. Unless they are prepared to tax people it will make the ruling Party unpopular they cannot start any new enterprise. So, the Government are not prepared to tax more and they also do not have funds to be invested in a public enterprise because they have adopted the policy of nationalization. Therefore, the possibility of the State Government directly coming to our rescue in the solution of the staggering unemployment problem both among the educated and the uneducated is rather bleak. What is

[Dr. H. V. Hande] [1968 மார்ச் 22

the only inevitable solution? Exploiting the private sector to the benefit of the masses. How, is the next question? By creating an attractive and healthy industrial climate. Now, we have to address ourselves to this particular question. Have we got good industrial climate? What is the role that each party has got to play in the interest of Tamil Nad, is the only question first and foremost. Let us forget our party politics and let us not try to get a little popularity by shouting that there is no industrial climate and there is no law and order. Now we have to consider what contribution that we have to make. Let us all combine together in the name of Tamil Nad to get out of the rut. We must stop shouting and that is the most important point. Let us strengthen the hands of the Hon. Chief Minister and let us strengthen the hands of the Ruling Party to see that a proper industrial climate is not only maintained but also an impression of industrial climate is created in different parts of the country. Now unfortunately in many States like West Bengal, there is an absence of industrial climate and there are a number of enterpreneurs who are hesitant and who do not know what to do and where to invest. It is here that we should be in a position to point out that we have got a first-class industrial climate and we should also highlight the political stability of our Government with 137 Members of the Ruling Party and with no possibility of crossing the floor. This has got a direct bearing on the problems of lakhs and lakhs of people who are under-employed and unemployed. So, I would request the leaders of all parties including the hon. Leader of the Opposition to come to the help of the Ruling Party and see that such a climate is created.

பி. ப. 1-00 Then I come to the next point. Now there is a sense of despair among the electrical, mechanical and civil engineers. There is no particular solution to the unemployment problem. What is the feeling of the B.E. students.? Recently I put one or two questions in the House and we agree with the fact that unless there is a reduction in the number of seats, we will not be in a position to get jobs for them. Now there is a sense of insecurity among the uneducated persons that they will not get jobs. This is a point that has to be borne in mind.

Then I come to the next point. So far as the expansion programme is concerned, we will not be in a position to expand. If only we make a serious study of the Budget that has been presented to us, we can really understand that in respect of these two Demands, the allotment for this year is less by about half a crore and three-fourth crore of rupees respectively. That means we are spending less to the extent of more than a crore of rupees for development projects. That also shows that we have no funds to invest. But we must find some funds to invest in the interest of the people.

I come to the next point. The only hope for us, therefore seems to be to follow the Punjab way especially with regard to the cottage industry. These cottage industries increase productivity and if there is increased productivity it would add to he prosperity of the State. For instance, if there is a large turnover of industrial projects, a huge amount of sales-tax could be collected. If I remember aright, on account of increased production in the Aluminium Industry in Mettur, one crore of rupees of sales tax has been collected. We need not increase the rate of sales tax but we can get a huge amount of sales tax if there is increased production at all levels. It is possible to concentrate on cottage industries but the Industries Department cannot do much in this field. The only persons who can do it are the small mechanics or persons who have got small machine tools. In this connection, I want to point out that the extension of the Factory Act to the small petty shops and cottage industries will stunt the growth of the industries in our State.



1968 மார்ச் 22] [Dr. H. V. Hande]

Now I come to the next point. In Tamil Nad we have got 31 Industrial Training Institutes. They are financed by the Government of India and the State Government. 60 per cent of the expenditure is met by the Government of India and 40 per cent by the State Government. There are nearly 3,000 employees including L.M.Es. working in these institutions and they do not get a lot of publicity. It is these who train a number of turners and mechanics. They are holding a key position in these institutions and are thus contributing to the industrial growth of our State. They have got a lot of grievances to be redressed and they had also submitted a memorandum to the Hon. Minister for Education and Industries on 4th February 1968 and I request the Hon. Minister to consider it dispassionately and favourably since the 60 per cent of the expenditure is met by the Government of India and only 40 per cent by the State Government. The structure of pay scale of these employees existing in this State is as follows :—

Craft Instructor—Rs. 125—225.

Supervisory Instructor—Rs. 175—375.

Foreman Instructor—Rs. 225—375.

The structure of pay scale recommended and approved by the Government of India is as follows :—

Craft Instructor—Rs. 180—280.

Supervisory Instructor—Rs. 210—380.

Foreman Instructor—Rs. 320—530.

As 60 per cent of the expenditure is met by the Government of India, I request the Hon. Minister to consider their demands for Central pay scales also sympathetically, keeping in view their contributions for the industrial growth of the State.

There are certain complaints against the Department. I request the Hon. Minister to carefully go into the complaints. There is a complaint for instance—I do not know whether any Committee of the Assembly has taken it up—that there is a shortage to the tune of about Rs. 7,29,624·79 in 111 iron and steel items in the Central Stores of the Industries Department at Guindy. These are vague complaints. But I am saying this with some fairly good authority. I request the Hon. Minister for Industries to call for the files and examine it.

Some tenders were called for to paint the Tamil Nad stall in the Industrial Trade Fair. Nine tenders were received. The lowest tender was for Rs. 52,000 and the highest was for Rs. 59,000. But finally the work was given for Rs. 84,000. I request the Hon. Minister for Industries to look into these things and see that all minor points are properly trimmed and the Industries Department conducts itself in a proper manner.

We are very particular in stressing that this is the most important Demand next to Agriculture. I request once again all the Members of the Congress Party to stop shouting that there is no industrial peace, that there is no law and order. By such shouting you are actually bringing discredit to Tamil Nad.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'ஷௌட்டிங்' 'ஷௌட்டிங்' என்று அவர்தான் "ஷௌட்" செய்கிறாரே தவிர நாங்கள் ஒன்றும் செய்யவில்லை.

**Dr. H. V. HANDE :** Even if I shout, it is not heard as much as your whisper is heard. You have got the capacity, you have got the wherewithal and you have got co-operation outside. I am trying to shout a little louder so that my plea may also be heard and some good done to Tamil Nad.

I request the Leader of the Opposition not to say that there is no law and order, that there is no industrial peace. The present position is good. If the present Chief Minister cannot infuse confidence in the minds of the industrialists and other people of Tamil-nad I do not know where we have to look for in the entire country for a Chief Minister who can infuse confidence. There is extra-ordinary political stability in the State such as there never was before and we must cash it for the growth, upward trend and buoyancy of the State.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, சிறு விளக்கம் ஒன்று கூற விரும்புகிறேன். கட்டவாக்கத்தில் நிலக்கரி இடைப்பதைப் பற்றி நாம் ஆராயவில்லை, அதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நம்முடைய திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள். டாக்டர் லோகநாதன் அறிக்கையில் கட்டவாக்கத்தில் நிலக்கரி இடைக்கக்கூடும், இடைக்கலாம் என்றெல்லாம் தெரிவித்ததை அவர் தம்முடைய பேச்சுக்கு ஆதாரமாகக் காட்டினார்கள்.

The Geological Survey of India did detailed drilling about five years. Their investigations indicated that the formations were not generally coal-bearing. The Geological Survey of India therefore gave up further drilling.

ஆகையால் அங்கே இடைக்காது என்று "ஜியலாஜிகல் சர்வே" சொன்ன பிறகும் இந்த அரசு அதில் ஈடுபடவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துவார்கள் என்று கருதவில்லை. "நீங்கள் முன்னாலே சொன்னதைப் படிக்கவில்லை, படிக்கத் தேவையில்லை, நீங்கள் சொன்னால் நம்புகிறோம்" என்று சொன்னார்கள். அவர்கள் படிக்காது விட்டது அது மட்டுமல்ல. டாக்டர் லோகநாதன் அறிக்கைக்குப் பிறகு அவர்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் என்னென்ன முயற்சிகள் எடுத்தது என்பதையும் படிக்கத் தவறி விட்டார்கள் என்பதைத் தான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஜியாலாஜிகல் சர்வே ஆராய்ச்சிக்குப் பிறகு போதுமான அளவு நிலக்கரி இடைக்காது என்று தெளிவுபடுத்தப்பட்டது.





இன்னொன்று தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். திருவாரூரில் ஆரம்பிக்க தனிப்பட்ட கம்பெனிக்காரர்கள் கேட்டிருக்கிறார்கள். அது ஆராயப்பட்டு வருகிறது. ஏற்கெனவே தனியார் துறையிலே அந்த எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை துவக்கப்பட்டு சரியான முறையில் இயங்கவில்லை என்று கூறி சர்க்கார் பங்கெடுத்துக்கொள்ள முடியுமா என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது ஒன்று நிலக்கரி இடைக்காத இடத்தில் நிலக்கரி தேடச் சொன்னார்கள், மற்றொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரியத்தை நடத்த வேண்டுமென்று கேட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** கட்டவாக்கம் என்ற இடத்தில் நிலக்கரி இருப்பதாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஜியாலாஜிகல் சர்வே ஆராய்ச்சி செய்து கரியில்லாத இடமென்று சொன்னால் அப்படிப்பட்ட நிலக்கரியில்லாத இடத்தில் தேட வேண்டுமென்று நான் வற்புறுத்தமாட்டேன். அவ்வாறு வற்புறுத்துவதும் பொருத்தமாக இராது.

அதேபோன்று தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பது என்று சொல்லும்பொழுது அது ஏற்கெனவே நடத்தவில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. போதுமான அளவிலே அதில் கவனம் காட்டவில்லை, போதுமான தவிடு இடைக்கவில்லை. அதை நம்முடைய அரசாங்கம் எடுத்து நடத்தினால் நல்ல முறையிலே இருக்கும் என்று கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

***திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய தொழிலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு காசிராமன் அவர்கள் கடந்த இருபதாண்டு காலமாக ஏற்கெனவேயிருந்த காங்கிரஸ் அரசாங்கம் தொழில்துறையில் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் தமிழ்நாடு இன்றையதினம் முன்னணியில் இருக்கக்கூடிய பகுதியாக மாறியுள்ளது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதியன்று இதே சட்டமன்றத்திலே காங்கிரஸ் உறுப்பினராகயிருந்த டாக்டர் நடராஜன் அவர்கள், "இந்த ஆண்டு நமது தொழில் வளர்ச்சிக்கும், இன்று அகில இந்தியத் தொழில் வளர்ச்சிக்கும் வேற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. நமது தொழில் வளர்ச்சி திட்டத்திட்ட 5 சதம் தான் இருக்கிறது. துல்லியமாகச் சொன்னால், 4·8, 4·9 என்று அட்டவணை ... தான் இருக்கிறது. அகில இந்தியத் தொழில் வளர்ச்சி 9 சதம் ஆகும்." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதே மன்றத்திலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் கூட அகில இந்தியாவிலேயுள்ள தொழில் வளர்ச்சியின் புள்ளிவிவரங்களையும், தமிழகத்திலேயுள்ள தொழில் வளர்ச்சியின் புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் தமிழகம் பின் தங்கிய நிலையிலிருக்கின்றது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதே போல மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் பேசும் நேரத்தில் மத்திய சர்க்கார் இது வரையில் 357 கோடி ரூபாய் தமிழகத்தில் முதலீடு செய்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தத் தமிழகத்தில் 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் அரசாங்கம் 357 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறது. ஆனால் அதே மத்திய சர்க்கார் இன்றைக்கு பிலாயிலும், துர்காபூரிலும், ரூர்கேலாவிலும் செலவழித்திருக்கும் தொகையை ஒப்பிடக்கூடிய நேரத்தில் நம் தமிழகம் இன்று பின் தங்கிய நிலையிலிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக அந்தக் குறிப்புகள் காட்டுகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்று நமது அரசாங்கம் பொறுப்பை ஏற்றவுடன் கோவைப் பகுதியில் பஞ்சாலைகளைத் திறக்கவும், அங்கு பணியாற்றியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் நம்முடைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் இன்றைக்குப் பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய நிலையிலிருக்கிறது. வேலை வாய்ப்பில்லாமல் பாதிக்கப்பட்ட நிலையைப் போக்கக்கூடிய நிலையும் நமது அரசாங்கத்தால் ஏற்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பை யேற்றவுடன் தொழில் துறையில் வேலை வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காக 100 தொழில்களைப் புதிதாக அமைக்க நம்முடைய அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

அதே போன்று எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை உற்பத்தியை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. அரசாங்கம் அதை எவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்த மத்திய சர்க்காருக்குச் சொல்லி விரைவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதே போன்று சென்னை உரத் தொழிற்சாலையில் 1970-ம் ஆண்டு உற்பத்தி துவங்கும் என்று கூறப்படுகிறது. அரசாங்கம் முயற்சி யெடுத்து மிக விரைவில் உற்பத்தியைத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த அறிக்கையில் சிறு தொழில்கள் சம்பந்தமாகக் கோவை மாவட்டம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதிகளில் கூட்டுறவுத் தொழில்களுக்காக 16 லட்சம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. இந்த இரண்டு இடங்களிலும் கட்டிடங்கள் தான் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர வேலை செய்வதாகத் தெரியவில்லை. அந்தக் குறைபாட்டையும் விரைவில் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளுக்கான காரியங்களையும் மிக்க விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்த வரையில் இன்று தமிழகத்தில் பல்வேறு நூற்பாலைகளில் சராசரியாக 12,000 கதிர்கள் இருந்தாலும் அந்த 12,000 கதிர்களும் வேலை செய்யாமல் மிகக் குறைந்த அளவிலேயே கதிர்கள் இயங்கி வருவதாகத் தெரிகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 8,965 கதிர்கள் வேலை செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் 11,538 கதிர்கள் வேலை செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு வேறுபாடுகள் இருக்கக்கூடிய நிலையில்லாமல் பஞ்சாலைகளுக்கெல்லாம் தகுதியான அதிகாரிகளை நியமித்து, ஊக்குவித்து எல்லாக் கதிர்களும் வேலை செய்யக்கூடிய நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அதே போல உடுமலைப் பேட்டையிலே அமராவதி சர்க்கரை ஆலை ஓராண்டு காலத்திற்கு மேலாகவே மூடப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அதிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆலையைத் துவக்கி வேலை நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பொதுவாக, பொதுத் துறையைப் பொறுத்த வரையிலும் அதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அந்த பொதுத்துறை இப்படி இருக்கின்ற நிலையிலே தான் நம்முடைய நாட்டிற்கு சோவியத் நிபுணர் குழு ஒன்று இங்கே வந்தது. அந்த சோவியத் குழு இந்தியா முழுவதும் சென்று பார்த்து, இங்குள்ள பொதுத்துறையைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் காரணமாக, பொதுத் துறையில் என்ன காரணத்தால் தொழில்கள் எல்லாம் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. அதோடு, தொழில் துறை ஏன் இப்படி நடைபெறுகிறது என்பதற்கு அவர்கள் "நல்ல அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்கள் இதில் இல்லை" என்று குறிப்பிட்டார்கள்,





இன்றைக்கு நாம் அதைத் தான் பார்க்கிறோம். சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, கூட்டுறவுப் பஞ்சாலையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தப் பொதுத் துறையாயிருந்தாலும் சரி, இந்தத் துறையில் ஏற்கெனவே அனுபவம் வாய்ந்தவர்கள், திறமை வாய்ந்தவர்கள் இல்லாத காரணத்தினால் தான் இந்த வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் இன்றைக்கு சோவியத் நிபுணர் குழு குறிப்பிட்டிருக்கிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமிக்கிறோம். அந்த அதிகாரிகளுக்கு இந்தத் தொழிலில் ஏற்கெனவே அனுபவம் இருக்குமா? இந்தத் தொழிலில் திறமை இருக்குமா? அவர்களுக்கு இந்தத் தொழிலில் அனுபவமும் திறமையும் இல்லாத காரணத்தினால் தான், அப்படிப்பட்டவர்கள் இந்த மாதிரி நியமிக்கப்படுவதால் இன்றைக்கு இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களுக்குத் தொழில் அனுபவம் வாய்ந்தவர்களை, திறமை வாய்ந்தவர்களை வேலையில் நியமித்தால் இந்தக் குறைபாடுகள் போவதற்கு ஒரு காரணமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதையும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மத்திய அரசிடம் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் வருமான வரி பாக்கி இருக்கிறது. அதே போல ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் மத்திய அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமல் இருக்கிற 96 பேர்களுக்கு, "நீங்கள் பணம் கட்ட வேண்டாமென்று" முறையில் அவர்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் [illegible] அவர்களுக்குத் தான் மேலும் சலுகை அளிக்கிறதே தவிர, இன்று நமது நாட்டிற்கு இன்றியமையாதது என்று கருதப்படுகின்ற சேலம் இரும்பாலை தொழிற்சாலை துவக்குவதற்கு அரசு பல காரணங்களுக்காக [illegible] மறுக்கிறது. அதையும் வலியுறுத்தி வாங்குவதற்கு நமது அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன். இன்றைக்குப் பொதுவாக பஞ்சாலையைப் பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்குப் பஞ்சாலைக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு நெருக்கடியான நிலையைப் பார்த்தால், அந்தத் தொழிலுக்கு ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. அதன் காரணமாகப் பல தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. உடனடியாக அவர்களுக்கு உதவுகின்ற வகையில் ஒரு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும். இன்றைக்கு நாம் பஞ்சுக்கு 2 சத விதம், பஞ்சு நூலுக்கு 2 சத விதம் [illegible] நூலுக்கு 3 சத விதம் என்று வரி விதிக்கிறோம். ஆனால், அண்டை மாநிலத்திலே இன்னும் குறைவாக வரி இருப்பதையும் நாம் அறிகின்றோம்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் 1961-ம் ஆண்டு முதல் 1,000 கே. வி. ஏ-க்கு ரூ. 6 என்று இருந்தது. ஆனால் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதி முதல் 500 கே. வி. ஏ-க்கு ரூ. 8 என்று உயர்ந்திருக்கிறது. நம் மின்சாரத் துறையிலே தனிப்பட்ட வேறு சில வரிகள் காரணமாகவும் இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடி இந்த பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலே ஒரு காரணம் நிர்வாகத்தினுடைய குறைபாடாகவும் இருக்கலாம். இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப் போக்குவதற்கு நாம் இந்தக் கட்டண அளவைக் குறைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் படுகின்ற நெருக்கடியைப் போக்க ஒரு 6 மாத காலத்திற்கு அவர்களுக்குச் சலுகை அளித்து, அதைத் தள்ளி வைத்து அவர்களுக்கு ஒரு வழியைக் கொடுப்போமானால் இந்தத் தொழில் ஓரளவு நசுங்காமலிருக்க வழி ஏற்படும் என்று கருதுகிறேன்.

ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசாங்கம் அதிக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு, துணி, நூல், பனியன் போன்ற பொருள்கள் இங்கு அதிக அளவில் தயாரிக்கப்படுகிறது. அதை உடனடியாக ஏற்றுமதி செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். நம்முடைய திருப்பூர் நகரத்திலே ஏராளமான பனியன்களை வடநாட்டுக் கம்பெனி

கள் வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புகின்ற நிலையில் இருப்பதால், நமமுடைய மாநில அரசே அந்தப் பொருட்களை வற்று இன்னும் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன.

அதே போல, விசைத் தறிகளைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கின்ற நூல்களைக் கொண்டு, மகாராஷ்டிராவில் நெசவு செய்கிறார்கள். அதையும் மாற்றி நாம் இங்கேயே நூற்று அதிக மான வேஷ்டிகளைத் தயாரிக்க அதிகமான விசைத் தறிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவைத் தலைவர் அவர்களே, அவை முன் இருக்கும்படியான இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக் கள் சொல்ல விரும்புகிறேன்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்,
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்".

என்று பாரதியார் அவர்கள் சுதந்திரத்தைப் பெற்றதற்குப் பிறகு நம் நாட்டினுடைய எதிர்காலம் எப்படி இருக்கவேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னார்கள். உழவும் தொழிலும் இரண்டும் சரியாக இயங்கினால் தான் நாட்டிலே பொருளாதார சுபிட்சம் இருக்கும் என்பதை அன்றே அவர் வலியுறுத்திச் சொன்னார். உழவு இருக்கவேண்டும். உழவு சீராக நடைபெற்று உற்பத்தியைப் பெருக்கினால் தான் தொழில் வளம் நன்றாக இருக்கமுடியும். தொழில் வளம் நல்ல முறையில் இருந்து, தொழில் அமைதியாக இருந்தால் தான் நாட்டினுடைய மக்கள் பொருளாதார நிலை உயர முடியும என்பதை வலியுறுத்திச் சொன்னார்கள். அதோடு மட்டும் அல்ல; நாட்டிலே என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று சொன்னார்கள்.

"குடைகள் செய்வோம், உழு படைகள் செய்வோம் ;
கோணிகள் செய்வோம், இரும் பாணிகள் செய்வோம் ;
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம் ;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்."

என்று சொன்னார்கள். அவர் எதிர்பார்த்த—கனவு கண்ட முறையில் சுபிட்சம் பெறுவதற்கு சுதந்திரத்தைப் பெற்றதற்குப் பிறகு ஓரளவு தொழிலில் வளர்ச்சியை செய்து கொண்டு வருகிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. சுதந்திரத்தைப் பெற்றதற்குப் பின்னாலே— இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே முடிந்த அளவுக்கு மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் செய்துகொண்டு தான் வருகிறது. நமது தமிழகத்தைப் பொறுத்த வரையிலும 9-வது மாநிலமாக கைத்தொழிலிலே இருந்தது. நமது கைத்தொழில், 10, 15 வருஷ காலத்திலே, காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில், குறிப்பாக திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் கைத்தொழில் அமைச்சராக இருந்த சமயத்தில் வெகுவாக முன்னேறி இருக்கிறது. அது 2-வது, 3-வது இடத்தைப் பிடிக்ககூடிய அளவுக்கு—அவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. 1956-57-ம் ஆண்டில் 560 மில்லியன் யூனிட் மின்சாரம் தொழிற் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டது. இந்த 1966-67-ம் ஆண்டு 1773 மில்லியன் யூனிட் மின்சாரம் பயன்படுத்தபபட்டுள்ளது. அந்த அளவுக்கு சிரமப்பட்டு காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர் அப்படிச் செய்திருக்கிறார் என்று சொல்லும்போது, தற்சமயம் அவர் பிளானிங் கமிஷன் அங்கத்தினராக இருக்கிறார் ; ஆனால், அவர் தமிழகத்திலே தொழிலமைச்சராக இருந்த சமயத்தில் அரியதொரு சூழ்நிலையை உருவாக்கி பாரதியார் கண்ட கனவினை நிறைவேற்றி இருப்பதற்கு நாம் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. அதை விட்டு விட்டு, குறை சொல்ல வேண்டுமென்றால் எதற்கு வேண்டுமானாலும் குறை சொல்லிக் கொண்டிருக்கலாம். எதற்கு வேண்டுமானாலும் உடனே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மத்திய சர்க்காரை குற்றம் சாட்டும் அவர்களுடைய பாணியிலே தான் பேசிக் கொண்டிருக்





கிறார்களே தவிர, அதையொட்டி எழுந்துள்ள நல்ல நிலைமைகள் பற்றி யாரும் போற்றுவதில்லை. ஆனால் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை எல் லோரும் போற்றுவார்கள்.

திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது, காங்கிரஸ்காரர்கள் முதலாளிகளுக் காக "ஷவுட்டிங், ஷவுட்டிங்" என்று சொன்னார்கள். அவர்கள் வேண்டு மானால் முதலாளிகளுக்காக ஷவுட் பண்ணிக் கொண்டிருக்கலாம். தொழிலாளிகளுக்காகதான் நாங்கள் ஷவுட் பண்ணிக் கொண்டிருக் கிறோம். ஆனால், அவர்கள் முதலாளிகளை வைத்துக்கொண்டு தொழி லாளர்கள் இருக்கக் கூடாது என்னும் நிலையில் ஷவுட் பண்ணுவதோடு அது தான் அவர்கள் கட்சியினுடைய திட்டம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களிடம் இருக்கிற தலைவர் தொழிலாளர்கள் வாழக் கூடாது. முதலாளிகள் வாழ வேண்டும் என்னும் தலைவர். அப்படிப் பட்ட தலைமை அவர்களுக்கு இருக்கிறது. ஆண்டவன் படைப்பில் எல் லோரும் வாழ வேண்டும். ஆகவே, முதலாளிகளும் வாழட்டும் என்ற அவர்கள் கூற்றிலே மிகவும் பொருளிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய இலட்சியம், சுதந்திரப் போராட்டத்தினுடைய நோக்கம் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பது. இந்த நாட்டு மக்கள் அனைவரும் சமத்துவ வாழ்விலே இருக்க வேண்டும என்பது. ஜனநாயக முறையிலே சமத்துவம் கிடைக்க வேண்டுமென்ற இலட்சியத்திலே நாங்கள் ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்வதிலே நாங்கள் வெட்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் ஒரு வருஷத்திலே என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல நாங்கள் வரவில்லை. அவர்கள் முடிந்தவரை செய்து, தொழில்கள் கெடாத வரையில், அமைதியான முறையில் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்பது தான் எங்களுடைய ஆலோசனை என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஆகவே, இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே எப்படி இது முடியும் என்றால், ஒரு கட்சியினாலோ, அல்லது அவர்கள் வைத்திருக்கிற கொள்கையினாலோ மட்டும் அல்ல ; நாட்டினுடைய மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாக் கட்சி களுடைய பிரதிநிதிகளும் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுப்பதன் மூலம் தான் நம் நாட்டிலே நல்ல ஒரு நிலையை ஏற்படுத்த முடியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல இடங்களிலே, உலகத்திலேயிருக்கிற பல பாகங்களைப் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு. அந்த நாடுகளில் எல்லாம் எப்படி முன்னேறினார்கள், எப்படி அவர்கள் பொருளாதார சுபிட்சத்தை உண்டாக் கினார்கள் என்று நாம் கவனிப்போமானால் நமது நாட்டிலே துரதிருஷ்ட வசமாக நல்ல முறையிலே, சரியாக நம்முடைய மக்கள் அமுலாக்கவில்லை யென்று தான் நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

1966-ம் வருடம் செப்டம்பர் மாதம் நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தேன் என்று குறிப்பிட விரும்புகிறேன். அங்கு போனதை நான் பெருமையாகச் சொல்வதாக யாரும் கொள்ள வேண்டாம். அந்த நாட்டிலே எப்படி விவசாயத் தொழிலிலே அவர்கள் முன்னேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். டென்னஸி பள்ளத்தாக்கை சுற்றிவரும்படியான சமயத்தில் அப்பொழுது சொன்னார்கள், அங்கே 1932-ல் டென்னஸி பள்ளத்தாக்கில் ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் 150 டாலர்கள். அப்பொழுது பொருளாதார நெருக்கடி, உலகத்தில் மந்தம் இருந்த சமயம், அப்பொழுது 150 டாலர் ஒரு மனி தனுடைய சராசரி வருமானம், அப்பொழுதிருந்த நாணய விகிதப்படி ஒரு டாலருக்கு ரூ. 2 அல்லது $2\frac{1}{4}$ மதிப்பு. இப்பொழுது

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 22

அங்கே இருக்கும்படியான சராசரி வருமானம் 3,006 டாலர். இப்பொழுது இருக்கிற நாணய விகிதப்படி ரூ. 21,000 ஆக ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் டென்னஸி பள்ளத் தாக்கில் இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? அவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் கொள்கை மட்டும் இதற்கு காரணம் அல்ல. மக்கள் ஒத்துழைக்கிறார்கள். மக்கள் கடினமாக உழைக்கிறார்கள். அவர்களுக்கு மின்சார வசதி முதலிய வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாய மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கடுமையாக உழைத்து உற்பத்தியைப் பெருக்குகிற காரணத்தினால் தான், அவர்களது சராசரி வருமானம் உயர்ந்திருக்கிறது. அங்கு தான் அணு சக்தி கண்டுபிடிக்கப்பட்டது.

நான் இன்னொரு நிலையையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் விண்ட்ராஃப் என்ற ராக்பெல்லர் பாரத்திற்கும் போயிருந்தேன். ஒரு விவசாயப் பண்ணை வைத்திருப்பவரோடு விருந்தாளியாக இருந்த சமயத்தில் நண்பர் ராக் பெல்லர் அவர்களிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் ½ மணி நேரத்திற்கு முன்னால் போய்விட்டேன். ராக்பெல்லர் அவர்கள் ½ மணி நேரத்திற்குள் வந்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். நான் அதுவரையில அந்த பாரத்தைப் பார்த்து கொண்டிருந்தேன். ஒரு பக்கத்தில் ஒரு மாட்டை ஒருவர் தேய்த்துக் கொண்டிருந்தார். ஒரு நண்பரை "இவர் யார்"? என்று கேட்டேன். இவர் தான் ராக்பெல்லர் என்று அந்த நண்பர் கூறினார்கள். ராக்பெல்லர் அவர்களுடைய வரும்படி 3 மிலியன் டாலர். நம்முடைய மத்திய சர்க்கார் வருமானம் ரூ. 2,300 கோடி என்று சொல்லுகிறோம். அந்த அளவுக்கு வருமானம் வரக்கூடிய ராக்பெலலர் அவர்கள் ஒரு மாட்டை தேய்த்துக் கொண்டிருப்பதை நானே கண்ணால் பார்த்தேன். அவர்களுடைய பாரத்தில் எத்தனையோ தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இருந்தும் அவரே மாட்டைத் தேய்த்துக் கொண்டிருந்ததை நான கண்ணால் பார்த்தேன். மனித சக்தி வீண் விரயம் செய்யப்படாமல், நாட்டிலுள்ள எல்லோரும் உழைக்க வேண்டும் என்ற அந்த நிலையிலே அங்கே காரியங்களைச் செய்து கொண்டிருப்பதை நான் கண்ணாலே பார்த்தேன். அது மாதிரி சூழ்நிலை நாட்டில் இருந்தால் தான், எல்லோரும் உழைக்க வேண்டும் என்ற அடிபபடை இருந்தால்தான், தொழில்கள் வளர்ந்து, எல்லா வகையிலும் உற்பத்தி பெருக முடியும். ஆனால், நமது நாட்டில் இருக்கக்கூடிய துர்பாக்கிய நிலைமை என்ன வென்றால், ஒருவர் உழைக்க வேண்டும், 10 பேர் உழைக்காமல் வீட்டில் இருந்து கொண்டு சாப்பிட வேண்டும் என்பதுதான்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாரதியார் சொல்லியிருக்கிறார்கள். நமது நாட்டில் இருக்கக் கூடிய நிலை என்ன வென்றால், ஒருவர் உழைக்க வேண்டும், மற்றவர்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் மனித சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்கிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு சோம்பலாக இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது நாட்டில் விவசாயத்திலும் சரி, தொழிலிலும் சரி, எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்பட முடியாது. நான் வெளி நாடுகளில் 3½ மாதம் சுற்றுப் பிரயாணம் செய்த சமயத்தில் எந்தப் பகுதியிலும் 10 பேர்கள் சேர்ந்தாற்போல் வேலையில்லாமல் இருந்ததை பார்த்ததே கிடையாது. அமெரிக்காவிலும் சரி, வெஸ்டு ஜெர்மனியிலும் சரி, லண்டனிலும் சரி நான் அப்படிப் பார்க்கவே இல்லை. ஆனால், அவர்கள் வாரத்தில் ஒரு முறை பூரணமாக விடுமுறை எடுத்துக் கொள்வார்கள். அந்த



1968 மார்ச் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

விடுமுறையை அனுபவித்தது போக பாக்கி வாரத்தில் 6 நாட்களில் யாரும் வேலை செய்யாமல் இருந்ததை நாம் பார்க்கவே முடியாது. நான்கு பேர்கள் சேர்ந்து வேலையில்லாமல் இருப்பதை நம் தேசத்தைத் தவிர உலகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் நான் பார்த்ததேயில்லை. பார்ப்பதற்கு சந்தர்ப்பமே கிடையாது. (திரு எ. பாலசுப்யுரமணியன். 'Five million people are unemployed in U.S.A.') ரஷ்யாவில் கணக்கிட்டுப் பார்த்தால் இன்னும் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். சைனாவில் பல பேர்கள் வேலையே இல்லாமல் வேறு என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாதவர்களை வைத்துக்கொண்டு ஒரு நாட்டை நாம் கணக்குப் போட முடியாது. வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைத் தான் பார்க்க வேண்டும். ஒரு நாட்டில் 40, 50 கோடி மக்கள் இருப்பார்கள். ஒரு நாட்டில் 10 கோடி மக்கள் இருப்பார்கள். அவர்களுக்கு இருக்கும்படியான திட்டம் வேலை வாய்ப்பு, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் இவைகளைத் தான் பார்க்கவேண்டும். அதுமாதிரி பார்ப்போமானால் வறுமையினால் வேலையில்லாமல் இருப்பவர்கள் அந்த நாட்டில் கிடையாது என்பதை வலியுறுத்தி சொல்லிக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான நிலையில் எந்த மாதிரி திட்டத்தை; எந்த மாதிரி கொள்கையை நாம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும். முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைசசர் அவர்களும் சொல்வார்கள் "நாங்கள் என்ன செய்வோம் நாங்கள் வந்த காலத்தில் ரெஸஷன் ஏற்பட்டுவிட்டது" என்று. இம்மாதிரி 2, 3 காரியங்களை அவர்கள் வழக்கமாகச் சொல்வார்கள். '1966-ம் வருடத்தில் டிவால்யுவேஷன் வந்து விட்டது, நாணய மதிப்புக் குறைப்பு வந்துவிட்டது. அதனால் பிற்போக்கில் போய்விட்டோம், பொருளாதார மந்த நிலை வந்துவிட்டது' என்று சொல்வார்கள். அம்மாதிரி கஷ்டமான நிலையைச் சமாளிப்பதற்காகத் தான் உங்களை ஆட்சியில் உட்கார வைத்திருக்கிறார்கள். ஆகவே இருக்கிற கஷ்டத்தை எடுத்துச் சொல்லிவிட்டு தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரிட்டனில் கூட தான் டிவால்யூவேஷன் செய்தார்கள், நாண மதிப்பைக் குறைத்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் பிரிட்டிஷ் தேசத்தின் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். 92 கோடி பவுனுக்கு வரிகளைப் போட இருக்கிறோம். இன்னும் சில வருஷங்களுக்கு பொருளாதார சிக்கலில் தான் பிரிட்டிஷ் மக்கள் வாழ வேண்டும் என்பதை திட்டவட்டமாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது மாதிரி ஒரு கஷ்டமான நிலையில் வாழ்ந்து தான் தீர வேண்டும். மக்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டு தான் தீரவேண்டும் என்று தேசிய ஒழுக்கததோடு இருக்கிற நிலையை அவர்கள் திட்டவட்டமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள் மக்களுக்கு வேலை வாய்ப்பு இருக்க வேண்டும். மக்கள் கடினமாக உழைக்க வேண்டும். மக்களுக்கு ஊக்கம் கொடுக்கப்பட வேண்டும் பொருளாதார மந்தம் நீக்கப்படவேண்டும். தொழில் மானியம் விவாதிக்கப்படபொழுது தொழிலாளர்கள் நலன்கள் பாதுகாக்கப் படவில்லை என்று சொல்லப்பட்டது. தொழிலாளர்களுடைய நலன்கள் பாதுக்காக்கப்படப வேண்டும். அதே சமயத்தில் வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்காக திட்டங்கள் இருக்க வேண்டும். தொழில்கள் நன்றாக நடைபெற வேண்டும் என்றால், இண்டஸ்டிரியல் கிளைமேட் நன்றாக இருக்க வேண்டும். நிலைமை சரியாக இருக்கவேண்டும் ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னொரு பக்கம் வேலை நிறுத்தங்கள், வேலை நிறுத்தங்கள் ஏற்படுதவற்கான ஆதாரங்கள் இப்படியெல்லாம் நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் திட்டவட்டமாக சொன்னார்கள். அதை நான் பாராட்ட கடைமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 மார்ச் 22

வன்முறைகள் எந்த இடத்தில் ஏற்பட்டாலும் சரி, யார் செய்திருந்தாலும் சரி, அது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒடுக்கப்படும் என்று சொன்னதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கட்சியைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. துரதிருஷ்டவசமாக வன்முறையையே தொழிலாகக் கொண்ட ஒரு கட்சி இந்த நாட்டில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அது இடது சாரி கம்யூனிஸ்டு கட்சி என்று சொன்னால் மிகையாகாது. அவர்களுக்கு நாட்டில் எப்பொழுதும் தொழில் அமைதி இருக்கக் கூடாது, ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டும்....

**திரு. என். சங்கரய்யா :** உறுப்பினர் அவர்கள் வன்முறையையே தொழிலாகக் கொண்டது இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி என்று சொன்னார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி தான் இந்த மாநிலத்தில் வன்முறையை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசினர் தரப்பிலேயே பல முறை சொல்லப் பட்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இம்மாதிரி நேரத்தில் ஒரு கட்சியைப் பற்றிச் சொல்வது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு கட்சி தூண்டிவிடும் அராஜகத்தைப் பற்றிச் சொல்லுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. ஒரு கட்சியினுடைய கொள்கையைப் பற்றிச் சொல்ல உரிமை இருக்கிறது.**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்தைச் சொல்லலாம். ஆனால் வெளிப்படையாக ஒரு அரசியல் கட்சியைப்பற்றிச் சொல்வது அவ்வளவு நல்லது அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு கட்சியின் கொள்கையைப் பற்றி எடுத்துச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. தொழிலாளர் அமைச்சர் அவர்கள் அந்தக் கட்சியைப்பற்றி வெளிப்படையாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எங்களைப் பற்றியும் எத்தனையோ சொல்லுகிறார்கள். நாங்கள் உட்கார்ந்துகொண்டு கேட்டுக் கொண்டு தான் இருந்தோம். என்னுடைய கருத்துக்களை மக்களுக்கு தெரிவிக்க உரிமை இருக்கிறது. தனிப்பட்ட முறையில் நான் அவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் நான் அதை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கிறேன்.

ஒரு கட்சியின் கொள்கையைப் பற்றி, போக்கைப்பற்றி சொல்வதற்கு நிச்சயம் உரிமை இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது இருக்கும்படியான நிலையில் நாங்கள் சட்டவிரோதமாக நடக்கிறோமா, அவர்கள் சட்டவிரோதமாக நடக்கிறார்களா என்று சர்க்கார் பார்த்து அறிவிக்கட்டும். நாங்கள் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்டிருந்தால், எங்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்காருக்குப் பூரண உரிமை இருக்கிறது. அவர்கள் கூட்டணியில் சேர்ந்திருக்கிற ஒரு காரணத்தினால் .. ..

**திரு. என். சங்கரய்யா :** ஆன் எ பாயின்ட்டு ஆப் ஆர்டர், யார் சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும், இடது சாரி கம்யூனிஸ்டுக் கட்சி இந்த மாநிலத்தில் எந்த சட்ட விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது என்பதை தயவு செய்து குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

**பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது



1968 மார்ச் 22]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டவிரோதமாக ஒன்றிரண்டு காரியமா, ஏதேதோ செய்து கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் உங்களோடு கூட்டணி சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் கூட்டணியில் சேர்ந்துவிட்டபடியால், நீங்கள் தூண்டிவிட்டாலும், தப்பித்துக்கொள்ளும்படியான நிலை . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on a point of order. It is an insinuation against the Government.

ஏதோ தவறாகச் செய்த காரியத்தை சர்க்கார் விட்டுவிட்டது, சர்க்காரும் அதற்கு உடந்தையாக இருக்கிறது என்ற தொனி வரும்படி கனம் எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். அது சரியானது அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பெ. மலைச்சாமி) :** கூட்டணியில் இருந்தாலும் கொள்கை வேறுபாடு இருக்கிறது. அரசாங்கம், தவறு செய்தால் எவரையும் கண்டிக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ் கட்சியினர் இந்த முறையிலே ஈடுபட்டிருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உரிமை இருக்கிறது . . .

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பக் கேட்டும் கூட, எங்கள் கட்சி வன்முறையிலே ஈடுபடுகிறது, அதனால்தான் தகராறுகள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். இது அனாவசியமாக சொல்லப்படும் பேச்சு. ஒரு கட்சியைப் பற்றி வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்வதை அனுமதிப்பதானால், பின்னால் பலவிதமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் இருப்பதால், தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பு இருப்பதால், குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லி, வன்முறையில் ஈடுபட்டார்கள் என்றால், அதற்கு அவர்கள் பதில் சொல்லலாம். அதைப்பற்றி விவாதிக்கலாம். இதை யெல்லாம் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்தவர்கள்; நினைவு படுத்துவதற்காகச் சொல்லுகிறேன். பொதுப்படையாக சொன்னால் அது சரியாக இருக்காது என்றும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்டுச் சொன்னால், அதை ஆராயவும் , ஒப்புக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் இருக்கும். அந்த முறையில் விவாதம் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, குறிப்பிட்டு சொல்லாமல், பொதுப்படையாகச் சொல்வதால், எங்கள் கட்சியைப் பற்றி ஜனங்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உண்டாக்க முயற்சிக்கிறார். அதற்கு இந்த மன்றத்தை ஒரு இடமாக உபயோகிக்கிறார் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொதுமக்களுக்கு எங்கள் கட்சியைப் பற்றியும், இவர்கள் கட்சியைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.

**திரு. என். சங்கரய்யா :** 1967 தேர்தலிலே பொதுமக்கள் தான் காட்டினார்களே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்களுக்குச் சந்தர்ப்பம் வரும்போது இவர்களும் சொல்லட்டும். இந்த மாதிரி சட்டத்தை மீறியதாக, காங்கிரஸ்காரர்கள் மீது குற்றம் நிரூபித்தால், அதை ஏற்றுக்

கொள்ளவோ, அல்லது மறுக்கவோ தயாராக இருக்கிறோம். அது அல்ல பிரச்சினை. சட்டம் அமைதி இவற்றைப் பாதுகாக்கும் நிலையில் அரசியல் கட்சிகளின் காரியங்களை சர்க்கார் கவனித்து, திட்டமான ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கும் நிலையில் தொழிலாளர் நிலை பாதிக்கப் பட்டிருக்கிறது. தொழில்களில் முதலீடு செய்யக்கூடிய சூழ்நிலை நன்றாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேனே அல்லாது வேறொன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திருவொற்றியூரில் நடந்தது சட்ட அமைதியைப் பாதுகாக்கும் அளவில் இருந்ததா என்பதை விளக்குவார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்டம், அமைதி, ஒழுங்கு பற்றி பேசும்போது, ஒரு இடத்தில் காங்கிரஸ் பெருந்தலைவர், போலீசாரைச் சுட்டிக்காட்டி, இவர்களைவிட சோளக் கொல்லைப் பொம்மை வைக்கலாம் என்று பேசியதும், ஒரு காரியம் நடந்துவிட்டதென்றால், துப்பாக்கி பிரயோகம் தடியடி நடந்தது என்றால், உடனேயே "ஆகா, அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது" என்று சொல்வது எதைச் சேர்ந்தது என்று விளக்குவார்களா ?

**திரு. என். சங்கரய்யா :** எதிர்க்கட்சித் தலைவர், துப்பாக்கி பிரயோகம் நடந்து கொண்டே இருந்தால் தான் சட்டம் அமைதியிருக்கிறது என்று ஒப்புக்கொள்வார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதிலெல்லாம் என்ன சங்கடம் என்றால், கட்சிகள் இருக்கின்றன, தவறுகள் இருந்தால் எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. போலீஸ்காரர்களைப் பற்றி சோளக் கொல்லைப் பொம்மை என்றால், அது ஒருவர் தன் கருத்தை சொல்லியிருக்கலாம். நான் சொல்லுவது மொத்தத்தில் நிலைமைகள் மோசமாக இருக்கிறது. என்பதுதான். போலீஸ் மானியத்தில் அதையெல்லாம் பற்றிப் பேசியாகிவிட்டது. முதல் அமைச்சரும் பதில் சொல்லியாகிவிட்டது. இதை முன்னமேயே சொல்லியிருந்தால், தெளிவாகப் பதில் சொல்லியிருக்க முடியும். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் நாட்டில் தொழில் நடக்க வேண்டும் என்றால், முன்னால் நடந்த ஆட்சியில் இருந்த அமைதியைவிட இப்பொழுது குறைந்திருக்கிறது. தொழில் மந்தமும் ஏற்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்புகளைக் இழக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நன்றாகச் செயல் பட்டு, சர்க்கார் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். தொழில் அமைதியாக நடக்கும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்த சர்க்காருக்கு பொறுப்பு இருக்கிறது. ஆகவே, அதைச் சொல்லும்போது, குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை, ஒரு விவரத்தை எடுத்துச் சொல்லி, அது தவறா, சரியா, என்று கேட்டால், அவ்வப்பொழுது கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போது கேட்டால், அவகாசம் கொடுத்தால், சொல்லலாம். அவர்களும் கூட, கேள்வி என்று கொடுத்தால், உடனடியாகவா பதில் சொல்லி விடுகிறார்கள் ? எப்பொழுதோ கொடுக்கப் பட்ட கேள்விக்கு ஆறு மாதம் கழித்து பதில் சொல்லுகிறார்கள். அப்படி இருக்கும்போது என்னை உடனடியாகச் சொல் என்றால், எப்படிச் சொல்ல முடியும். நேரம் கொடுத்தால் பார்த்து சொல்லலாம்.

இப்பொழுது இருக்கும் பிரச்சினை தொழிலில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம், மேற்கொண்டு தொழில் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் சர்க்கார் வைத்திருக்கிறார்கள். தொழில்





கொள்கை என்ன, ஏற்கனவே, இருந்ததைவிட இப்பொழுது என்ன அபிவிருத்தி என்றெல்லாம் விளக்க வேண்டும். ஒரு சமயம், முதல் அமைச்சர் சொன்னார்கள், இண்டஸ்ட்ரியல் லைசென்ஸ் எவ்வளவு கிடைத்திருக்கிறது என்ற கேள்விக்கு, ஆந்திராவில் 6, சென்னையில் 3 வந்திருக்கிறது என்று சொன்னார்கள். மூன்று தொழில்கள் மட்டும் ஆரம்பிக்கப்படும் நிலை இருக்கக்கூடாது. நூற்றுக்கணக்கான தொழில்கள் ஆரம்பித்த இடத்தில் இப்பொழுது இரண்டு, மூன்று என்று சொன்னால், அதற்குக் காரணம், முதலீடு போடுகிறவர்கள், தொழில் அமைதி இல்லையென்பதால், தைரியம் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். எத்தனையோ மில்கள் மூடப் பட்டிருக்கின்றன. அவற்றைத் திறக்க என்ன முயற்சிகள் ? முதல் அமைச்சர் மாதத்தில் ஒரு நாள் மூடிவிட்டன என்று சொல்கிறார்கள், அந்த ஒப்பந்தம் மில் திறக்கப்படும் வரையில், உதவியளிக்கிறோம் என்பது. இப்படி ஒரு பக்கத்தில் திறக்கப் படும் சூழ்நிலை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லும்போது, இன்னொரு பக்கத்தில் மூடும் நிலையும் இருக்கிறது. தவிர்க்கத்தக்க நிலைகளைத் தவிர்க்க பொறுப்புள்ள எதிர்க் கட்சி ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கிறோம். மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தி பிரச்சினைகளை தீர்க்க முடியுமா என்று பார்த்து, மத்திய சர்க்காரிடத்தில் உதவிகள் வேண்டுமென்றால், அதைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். ஒரு சூழ்நிலையில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருக்குமானால் அப்படி வேலையில்லாத்திண்டாட்டத்தை வளர விட்டால் நம்முடைய பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதை மிக மிக வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

தொழில் வாய்ப்புக்கள் பற்றிச் சொல்லும்போது, சேலம் இரும்பாலை பற்றிச் சொல்கிறார்கள். இப்பொழுது என்னவோ திராவிட முன்னேற்றக் கழகம் வந்துதான் செய்துவிட்டது என்பதல்ல. ஏற்கனவேயே, காங்கிரஸ் கட்சி சர்க்கார் இருந்தபோது, விண்ணப்பங்களைப் போட்டு, மத்திய சர்க்காரில் எடுத்து நடத்தவில்லையென்றால், தனிப்பட்ட முறையில் மாநில சர்க்காரே எடுத்து நடத்தத் தயாராக இருப்பதாகவும் சொல்லி, ஜப்பானியக் கம்பெனியோடு சேர்ந்து சேலம் உருக்காலையை நடத்தத் தயாராகஇருந்தோம் என்றால், அதனால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் நிலை இருக்க முடியும் என்றுதான் செய்தார்கள். நாங்கள் தான் செய்தோம் என்று இப்பொழுது ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறார்கள். இவர்கள் எதிர்க் கட்சியிலிருந்தபோது, இந்த காங்கிரஸ் கட்சி விண்ணப்பத்தைப் போடவில்லை என்றால், இப்பொழுது ஐந்தாவது உருக்காலையை மாநில சர்க்கார் அனுமதி கேட்டு வற்புறுத்தி, மத்திய சர்க்கார் உதவிகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள் என்றால், அந்த நிலையை கண்டிப்பாக வற்புறுத்தி, தொழிற்சாலையை அமைக்க வேலை வாய்ப்புக்களை தமிழகத்தில் ஏற்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், எஞ்ஜினியர்கள், படித்த மாணவர்கள், வந்திருக்கிறார்கள். ஒரு பெரிய பொருளாதார மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலை வாய்ப்புக்கள் இல்லை. சர்க்காரே எல்லா வேலையையும் கொடுக்க முடியுமா என்றால், முடியாது. போடும் புதுத் திட்டங்களில் கொடுக்க முடியுமானால், கொடுக்கலாம். எதற்கெடுத்தாலும், சர்க்காரே செய்ய முடியாது என்பதை நிச்சயமாக நான் ஆதரிக்கிறேன். ஆனால் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். தொழில் நடத்த வழிவகை செய்ய வேண்டும். கடன் கொடுப்பதன் மூலமாக, வேறு ஏதாவது வழிவகை செய்ய வேண்டும், பட்ஜட் பொது விவாதத்தின் போது சொன்னேன். ஒரு பத்துக் கோடி ரூபாயை ஒதுக்கி, மத்திய சர்க்காரிடமிருந்து பத்துக் கோடி வாங்கி,

"எம்ப்ளாய்மெண்ட் ஆபர்சுனிடீஸ்" உண்டாக்க, வேலைவாய்ப்புக்களை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழில் நிபுணர்களுடைய சக்தி, எஞ்ஜினியர்களுடைய சக்தி வீணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு எஞ்ஜினியர் படித்து வெளிவர, பொது மக்களுடைய பணம் எவ்வளவு செலவாகிறது என்று பார்த்தால், பல லட்ச ரூபாய் செலவாகிறது. கல்லூரிகளை அமைத்து, நிர்வாகம் செய்து, ஆண்டுக்கணக்காகப் படித்து வந்த பிறகு வேலை கொடுக்கவில்லை, வேலை வாய்ப்புக் கொடுக்க சந்தர்ப்பம் இல்லை என்றால், தேசத்தின் சக்தி, முதலீடு செய்த பணம் வெகுவாகப் பாழ்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தை சர்க்கார் பொறுப்புடன் நடத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க ஒரு திட்டத்தைப் போடவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, பொருளாதார மந்த நிலை என்றோ, தொழில் மந்தநிலை என்றோ சொல்லாமல் எல்லோரும் கடினமாக உழைக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும், தொழில் வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். விவசாயிக்கும் தொழிலாளிக்கும் இன்றையதினம் சம்பந்தம் இருக்க வேண்டும். விவசாயத்திலே இருப்பவர்களுக்கு வருவாய் குறைவு. விவசாயத் துறை சீரும் சிறப்புமாக இருந்தால்தான் தொழில் துறை நன்றாக இருக்க முடியும். தொழில் துறை நன்றாக இருந்தால்தான் விவசாயமும் நல்ல பலனைக் கொடுக்கும். ஆகவே, விவசாயமும் தொழிலும் ஒன்றுக்கொன்று இணைந்து வளர்ந்தால்தான் நாட்டுமக்கள் சுபிட்சம் அடைவார்கள். கைத்தறியைப் பற்றியும், சிறு தொழில்கள் பற்றியும் என்னுடைய கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும், திரு கோ. பூவராகன் அவர்களும் பேசிவிட்டார்கள். எங்கள் சார்பில் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது எங்களுடைய கட்சியைச் சுட்டிக்காட்டி, * * * என்று குறிப்பிட்டுப் பேசினார். அந்த வார்த்தைகளை சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி.ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, இடதுசாரி கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய நடவடிக்கைகளில் * * இருக்கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டது. அதுமாதிரியான காரியங்களில் ஈடுபட வேண்டாமென்றுதான் சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், மத்திய சர்க்கார் எங்களைப் பிடித்து பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருந்தார்கள். மத்திய சர்க்காருக்கு தைரியமிருந்தால், நேர்மையிருந்தால், நாணயமிருந்தால் எங்கள்மீது கோர்ட்டிலே வழக்குத் தொடுத்திருக்க வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் * * * என்று நாங்கள் சொல்கிறோம். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா? இம்மாதிரியாகப் பேசும் பேச்சுக்களை எல்லாம் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. உங்களுக்குத்தான் பேசத் தெரியும் என்று நினைக்க வேண்டாம். நாங்களும் பேச முடியும். எங்களுக்குப் பேசத் தெரியாது என்று நினைக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி தேர்தலுக்கு நிற்கக்கூடிய எல்லா கட்சிகளும் தேசபக்தியுள்ள கட்சி என்றுதான் பொருள். * * * என்ற கட்சிகள் எல்லாம் தேர்தலிலே நிற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, * * * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவதுதான் பொருத்தமானது. ஜனநாயகத்திலே இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி உட்பட எல்லாம் சட்ட சம்மதம் பெற்றுள்ள கட்சிதான். இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி தேர்தலுக்கு நிற்க அனுமதிக்கப்பட்டுள்ள கட்சி. ஆகவே, * * * *

**பேரவைத் தலைமையின் ஆணைப்படி அகற்றப்பட்டது.





என்ற வார்த்தை மன்ற நடவடிக்கையில் இடம் பெறக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே * * * நாட்டில் தேசியக் கொடியைக்கூட எரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது * * * *

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அவையின் மரபைக் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். * * * எதிர்காலத்திலே இந்த அவை நடவடிக்கைக் குறிப்புகளைப் படிக்கின்றவர்கள், இம்மாதிரியான முரண்பாடான செயல்கள் ஏற்பட்டதற்கு வருத்தமடைவார்கள். ஆகவே, இந்த இரண்டு பகுதிகளையும் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி): * * * என்று குறிப்பிட்டிருந்தால் அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, எங்களுடைய கட்சிக் கொள்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். "இவர்கள் முதலாளிகள் சார்பாகப் பேசுகிறார்கள்" என்று தெரிவித்தார்கள். அமெரிக்காவில் நடைபெறுகின்ற பல்வேறு வேலைகளையெல்லாம் ஆதரித்துப் பேசினார்கள். நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்வது என்னவென்றால், * * * பர்மிட், லைசென்ஸ், கோட்டா முறைகளை ஒழித்துக் கட்டினால்தான் தேசம் பாதுகாக்கப்படும். பர்மிட், லைசென்ஸ், கோட்டா பெறுவதற்காகத்தான் முதலாளிகள் காங்கிரஸ் பக்கம் இருக்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ளாமல், எங்கள் கட்சியை முதலாளிகள் கட்சி என்று பேசுவது வேதனையாக இருக்கிறது. பர்மிட், லைசென்ஸ், கோட்டா இவைகளை ஒழித்துக்கட்டி விட்டால், முதலாளிகளின் லாபம் குறையும். அது பொதுமக்களுக்குப் பரவலாகக் கிடைக்கும் என்று பாராளுமன்றத்தில் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டதற்குப் பிறகும்கூட நீங்கள் எங்களைப்பற்றிப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. * * * * * (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கை என்னுடைய கையில் இருந்துகொண்டிருக்கிறது. நிதி ஒதுக்க வேண்டுமென்ற நிலையில் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு நேரமும் இல்லை, கையில் பணமும் கிடையாது. (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன்: * * * என்பது பொருத்தமான சொல்லா? இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி): * * * என்ற குறிப்பு இருந்தால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் * * * என்று திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசிய பகுதியையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கை இந்த மன்றத்தின்முன் வைக்கப்பட்டு, அதனபேரிலே மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மிகவும் நல்ல விதத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்ற பாரதியாரின் பாடலை எடுத்துக்கூறி, "இந்த நாட்டிலே உழவுக்கும் தொழிலுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும்" என்று வற்புறுத்திச்

***பேரவைத் தலைமையின் ஆணைப்படி அகற்றப்பட்டது.

சொன்னார்கள். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
என்ற பாடல் அடிகளோடு, "வீணில், குற்றஞ் சுமத்துவோரை நிந்தனை
செய்வோம்" என்றும் சேர்த்துக் கொண்டால் மிகவும் பொருத்தமாக
இருக்கும். (ஆரவாரம்).

இந்த மானியக் கோரிக்கையின் பேரிலே தொழில் துறை கடந்த
ஓராண்டுக்காலத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்து வந்தது
என்பதை நாம் பார்க்க வேண்டும். இதுபற்றிச்சிலர் குற்றம் சுமத்தியிருக்
கிறார்கள். சிலர் குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வேறு
சிலர், நிறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறைபாடுகளைச் சுட்டிக்
காட்டி, நிறைபாடுகளைப் பெற வழிமுறைகள் என்னென்ன என்ற முறை
யிலும் சிலர் பேசியிருக்கிறார்கள். தொழில் துறைகள் ஆக்கம் பெறுகின்ற
வகையில், உருவான ஆலோசனைகளைக் கூறியுள்ள மாண்புமிகு அங்கத்
தினர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
தொழில் துறையில் இம்மாநிலம் வளர வேண்டுமென்ற அக்கறையோடு
பல உதாரணங்களை எடுத்துக்காட்டிப் பேசியிருப்பது, அதுபற்றிப் பல
கருத்துக்களைத் தெரிவித்திருப்பது, எதிர்காலத்திலே தக்க பல நடவடிக்
கைகளை எடுக்க மிகவும் பயன்படுவனவாக, உறுதுணை அளிப்பனவாக
உதவி செய்வனவாக அமையும் என்ற வகையில் அவர்களுக்கு
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையில் பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளையெல்லாம் இம்
மாநிலம் தாண்டி வந்திருக்கிறது. தொழில்துறையைப் பொறுத்தவரை
யில் நம்முடைய மாநிலத் தொழில் வளர்ச்சி பற்றிய விவரங்கள் எல்லாம்
ஆய்வு அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கும்
படியான பல்வேறு இயற்கை இடையூறுகளுக்கிடையேதான், பல்வகையான
இடர்பாடுகளுக்கிடையேதான் நாம் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில்
தொழில் வளத்தைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்
பாக, தொழில்களைப் பெருக்குவதற்குப் போதுமான இயற்கைக் கனி
வளங்கள் ஏராளமாக நம் மாநிலத்தில் கிடைக்கின்ற சூழ்நிலை இல்லை
என்றாலும் இருக்கின்ற கனிவளங்களை நல்லமுறையில் பயன்படுத்திக்
கொள்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்ற முறையில் நாம்
நம்முடைய கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

அதுமட்டும் அல்ல. அகில இந்திய அடிப்படையில் நம்முடைய மாநிலத்
தில் உள்ள மக்கள் தொகையை எடுத்துப் பார்த்தாலும் மற்ற மா
நிலங்களில் இருப்பதைவிட சதுர மைலுக்கு இரண்டு பங்கு அதிகமாக
இருக்கிறார்கள். ஆகவே மற்ற மாநிலங்களில் திட்டம் போடுவதைப்
போல நாம் போட்டுப் பயன் இல்லை. இங்குள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப
அவர்களைப்போல நாம் இரண்டு பங்கு அதிகமான திட்டங்களைப் போட்டால்
தான் அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பும், வசதியும் இங்குள்ள
மக்களுக்குக் கிடைக்கக்கூடும். அப்படியில்லாத காரணத்தினால் அகில
இந்திய அடிப்படையில் மக்கள் தொகை சராசரி சதுரமைலுக்கு இரண்டு
பங்கு அதிகமாக இருப்பதனாலேயே இன்றைக்கு மற்ற மாநிலங்களில்
உள்ளவர்கள் எவ்வளவு வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிறார்களோ அவ்
வளவு இங்குள்ளவர்களால் பெற முடியவில்லை. இருந்தும் நம்முடைய
மாநிலம் ஏதாவது சிறிது தொழில்துறையில் முன்னேற்றம் கண்டிருக்
கிறது என்றால் அதற்குக் காரணம் திறனபெற்ற நல்ல தொழிலாளர்கள்
நமக்குக் கிடைத்திருப்பதும், திறமைபெற்ற என்ஜினியர்கள் நமக்குக்
கிடைத்திருப்பதும் தான் முக்கிய காரணமாகும். இவர்களுடைய ஒத்து
ழைப்பைக் கொண்டே பல்வேறு வகையான இடர்ப்பாடுகளைக் கடந்து இந்த
அளவுக்கு நாம் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம்.

தொழில்துறையைப் பொறுத்தவரையிலும் திடீரென்று ஒரு உத்தரவு
போட்டு இருப்பதை மாற்றிவிட முடியாது. புதிதாக ஒன்றை ஏற்
படுத்திவிட முடியாது. காங்கிரஸ் கட்சி பதவிக்கு வருவதற்கு முன்
வெள்ளையர்கள் ஆண்டார்கள் என்றால் அவர்கள் காலத்தில் போடப்பட்ட
திட்டங்களை அவர்கள் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து நடத்தவும்



புதிதாக திட்டங்களை உருவாக்கவும் வேண்டியிருந்தது. அதுபோலத்தான்
இன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட, நிறைவேறாமல் பாதி
யில் நின்றிருந்த திட்டங்களை நாம் தொடர்ந்து நடத்தவும், முடிக்கவும்
வேண்டியிருக்கிறது, புதிதான திட்டங்களை உருவாக்கவும் வேண்டியிருக்
கிறது. திடீரென்று இந்த ஆட்சி பதவியேற்றவுடனே நடந்து கொண்டிருப்
பவைகளை மூடிவிட முடியாது. பாதியில் நின்றிருக்கக்கூடியவைகளை
அப்படியே விட்டுவிட முடியாது. ஒரே நாளிலோ ஒரே திங்களிலோ புதிதாக
ஒன்றையும் ஏற்படுத்திவிட முடியாது. அதுமட்டுமல்ல, இந்தத் துறை
அகில இந்திய அடிப்படையில் அமைந்திருப்பது. இந்திய அரசு இத்
துறை சம்பந்தமாக எடுக்கிற முடிவுகள், நடவடிக்கைகள் எல்லாம் நம்
மாநிலத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கக்கூடியனவாகவும் இருக்கும்
நம் மாநிலத் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியன வாக
அமையவும் கூடும். காரணம், தொழில் துறையில் தன்னிச்சையாக தனித்து
நின்று 'இயங்க' முடியாத நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. மற்ற
வேறுபல துறைகளை எடுத்துக்கொண்டால்—கல்வி, மருத்துவம் என்றால்
நம்மிச்சையாக நாம் நம் காரியங்களைச் செய்ய முடியும். அவை கொஞ்சம்
சுயேச்சைத் தன்மை கொண்டவை. ஆனால் தொழில் துறை அப்படிப்பட்ட
சுயேச்சைத்தன்மை வாய்ந்த துறை அல்ல. இந்திய அரசு ஏற்றுமதி
இறக்குமதித் துறையில் எடுக்கின்ற முடிவுகள் அனைத்தும் நம் மாநிலத்
தொழில் வளர்ச்சியைத் தாக்கத்தான் செய்யும். நாணய மதிப்புக்
குறைப்பின் அடிப்படையில் ரூபாயின் மதிப்பை இந்திய அரசு குறைத்தார்
கள். அதுவும் ஓரளவுக்கு நம்முடைய மாநில தொழில் வளர்ச்சியைத்
தாக்கத்தான் செய்திருக்கிறது. இன்றைக்கு நம் மாநிலத்தில் ஏற்
பட்டிருக்கின்ற, ஏற்பட இருக்கின்ற தொழில் வளர்ச்சி அனைத்துமே
ஓரளவு அகில இந்திய அடிப்படையில்—ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்
படையில் அமைவனவாகும். நாம் தீட்டிய திட்டத்தைக் குறைப்பதும், வெட்
டுவதும் இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் நமக்கு ஒதுக்கக்
கூடிய தொகையின் அளவாக ஏற்படுகிற ஒன்றே தவிர நம்முடைய ஆற்றலை,
நம்முடையசக்தியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைகிற ஒன்றல்ல.
இந்திய அரசு ஒதுக்குகிற தொகை, நம் மாநிலத்தில் இருக்கிற சூழ்நிலை,
இவற்றுக்கேற்ப இங்கே இருக்கக்கூடியவர்களின் அறிவு ஆற்றலைப்
பயன்படுத்திக்கொண்டு, இங்கு இருப்பவர்களின் ஊக்கத்தையும், ஆக்கத்
தையும் பயன்படுத்திக்கொண்டு எந்த எந்தவகையில் எப்படி எப்படி
எல்லாம் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியுமோ அந்த அந்த
வகையில் கடந்த ஓர் ஆண்டுகாலமாக இந்த அரசு பணியாற்றி வந்
திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய
விருப்பு வெறுப்புக்கேற்ப அமைகிற தன்மை இந்தத் துறையில் இல்லை;
நம்முடைய எண்ணங்கள் விரிவானதாக இருக்கலாம். எல்லாவற்றையும்
எடுத்து முடித்துவிடவேண்டும் என்கிற ஆர்வம் நமக்கு இருக்கலாம்.
முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைவிட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்றால் அதிக திட்டங்களை நாம் நிறை
வேற்றுகிறோம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிட மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அதிக நிதி கிடைத்தது என்றால் முதல்
திட்டத்தில் எடுத்து நிறைவேற்றியதைவிட, இரண்டாவது திட்டத்தில் எடுத்து
நிறைவேற்றியதைவிட அதிகமான திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் எடுத்து நிறைவேற்றலாம். அப்படியே வளர்ந்து வந்திருக்கிற
நிலைக்கேற்ப நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு நிதி உதவி
கிடைத்ததா என்றால் இல்லை. ஆகவே, நம்முடைய திட்ட வளர்ச்சியும்
கீழே இறங்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்னமும் எவ்வளவு
தொகை நான்காவது திட்டத்தில் நமக்குக் கிடைக்கும் என்பது பற்றிய
தெளிவு இல்லை. நமக்குக் கிடைக்கிற நிதி உதவியில் கணிசமான
அளவுக்கு வெட்டு ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் தான் நமக்கு எண்ணம்
இருந்தும், விருப்பம் இருந்தும் வாய்ப்பிருந்தும், கை இருந்தும் அறிவு இருந்
தும் ஆற்றல் இருந்தும் நாம் நினைத்தவற்றிலேயே வெட்டு ஏற்படுத்திக்
கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இந்த மாநிலத்திலே
தொழில்துறையில் வளர்ச்சி ஏற்படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு
மந்தநிலைதான் காரணம் என்று வழக்கமாக எடுத்துச் சொல்லப்படுவதாகச்

10-ஆயிரம் கிலோகிராமாக உற்பத்தி இருந்தது, 1968-ல் ஆறு லட்சத்து 47 ஆயிரத்து ஐம்பத்தொன்று கிலோ கிராம் என்ற அளவுக்கு உற்பத்தி யாகியிருக்கிறது. உற்பத்தி 650 சத விகிதம் அதிகரித்து இருக்கிறது. உற்பத்தி குறைந்து விட்டது, குறைந்துவிட்டது என்று சொல்லுவதற்கு வழியே இல்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டால், 1966-ல் 4,880,304 கிலோ கிராமாக உற்பத்தியானது 1967-லே 6,997,780 கிலோ கிராம் என்ற அளவுக்கு உற்பத்தி உயர்ந்திருக்கிறது. நாற்பத்தெட்டு லட்சத்திலிருந்து 69 லட்சம் என்ற அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. குறைந்து காணப்படவில்லை. நூற்பாலைகளை எடுத்துக்கொண்டால்கூட 1966-லே 3,64,56,259 ரூபாய் அளவுக்கு நூல் உற்பத்தியாகியிருக்கிறது என்றால், 1967-லே 5,56,17,575 ரூபாய்க்கு விலைபோயிருக்கிறது. 52·5 சத வீதம் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிற நிலைதான் இருக்கிறது. 1966-ம் ஆண்டை விட 1967-ம் ஆண்டு அதிகமாக உற்பத்தியாகியிருக்கிற சூழ் நிலைதான் இருக்கிறது.

வேறு பல தொழிற்சாலைகளிலே அங்காங்கு தொழிற் தகராறுகள் ஏற்பட்டதன் காரணமாக தொழில் வளர்ச்சி நடைபெறவில்லை என்று சொன்னார்கள். நாட்டிலே உள்ள அவ்வளவு தொழிற்சாலைகளிலும் வேலை நிறுத்தம் நடக்கவில்லை. சில தொழிற்சாலைகளிலேதான் வேலை நிறுத்தம் நடந்தன. சில தொழிற்சாலைகள்தான் மூடப்பட்ட நிலைமை ஏற்பட்டது. சில தொழிற்சாலைகளிலேதான் வேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்ற நிலைமை ஏற்படுவதாக இருந்தது. ஆகவே அவர்கள் சொல்லும் பொழுது ஏராள மான தொழிற்சாலைகள் என்று அடைமொழி போட்டுச் சொன்னார்கள். மாநிலத்தில் உள்ள அத்தனை தொழிற்சாலைகளையும் கணக்கெடுத்துப் பார்த்தால் மூடப்பட்டிருக்கிற, மூடப்படுகின்ற நிலையில் இருக்கிற தொழிற் சாலைகள் எவ்வளவு என்று பார்த்தால் மிக மிகக் குறைந்த சத வீதம்தான் இருக்குமே தவிர எல்லாத் தொழிற்சாலைகளிலுமே வேலை நிறுத்தங்கள் நடக்கவில்லை, எல்லாத் தொழிற்சாலைகளுமே மூடப்படவில்லை, எல்லா தொழிற்சாலைகளிலுமே தொழில் திபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பகையும் மாச்சரியமும் நடந்துகொண்டிருக்கவில்லை.

டிராக்டர்கள் உற்பத்தியை எடுத்துக்கொண்டால், 1966-ல் 3,400 உற் பத்தியாயிற்று, 1967-ல் 3,819 டிராக்டர்கள் உற்பத்தியாகி சென்ற ஆண்டை விட 419 டிராக்டர்கள் அதிகமாக உற்பத்தியாக்கப்பட்டிருக்கிறது.

உரத்தை எடுத்துக்கொண்டால், 1966-ல் 249,442 டன் உற்பத்தி யாகியது. ஆனால், 1967-ல் 263,251 டன் உற்பத்தியாகி சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 13,809 மெட்ரிக் டன் அதிகமாக உற்பத்தியாகியிருக் கிறது. இவ்வளவு மந்த சூழ்நிலைகளுக்கிடையிலும், வியாபாரத்திற்கான வாகனங்கள், கமர்ஷியல் வெகிகிள்ஸ் எடுத்துக்கொண்டால் 1966-ம் ஆண்டில் 3,615 வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 1967-ம் ஆண்டிலே 4,613 வாகனங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. அதிலேயும் 998 வாக னங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

கார்களை எடுத்துக்கொண்டால், 1966-ல் 1,008 ஆக இருந்த உற்பத்தி 1967-ல் 2,774 ஆகப் பெருகி 1,766 கார்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

ஆட்டோமைபல் டயர்களை எடுத்துக்கொண்டால் 1966-ல் 423,123 டயர்கள் தயாரிக்கப்பட்டு 1967-லே 5,15,199 டயர்கள் உற்பத்தி செய்யப் பட்டு, 92,076 டயர்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

கார் டியூப்களை எடுத்துக்கொண்டால், 1966-லே 22,306 உற்பத்தி செய்யப்பட்டது. 1967ல் 291576 டியூப்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதிக மாக 269,270 உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

என்ஜினியரிங் தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் உருக்கு காஸ் டிங்ஸ் 1966-ம் ஆண்டு 22,039 மெட்ரிக் டன் உற்பத்தி இருந்தது. ஆனால் 1967-ம் ஆண்டிலே 22,903 மெட்ரிக் டன் உற்பத்தி கூடி 864 மெட் ரிக் டன் வரை அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.



டீசல் என்ஜின்களை எடுத்துக்கொண்டால் 1966-ம் ஆண்டில் 8,859 ஆக இருந்த உற்பத்தி 1967-ம் ஆண்டில் 10,771 ஆக உற்பத்தியாகி, உற்பத்தி 1,912 ஆக உயர்ந்திருக்கிறது.

டிரான்ஸ்ஃபார்மர்களை எடுத்துக்கொண்டால், 1966-ல் 946,275 கே.வி.ஏ வாக இருந்தது, 1967-ல் 966,880 கே.வி.ஏ. வாக உயர்ந்து, மொத்தத்தில் 20,605 கே.வி.ஏ. அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

சாதாரண மக்களுக்குப் பயன்படக்கூடிய பொருள்களை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் சைக்கிள்களை எடுத்துக்கொண்டால், 1966-ம் ஆண்டு 276,514 உற்பத்தியானது. 1967-ம் ஆண்டில் 303,300 சைக் கிள்கள் அதிகமாக உற்பத்தியாயின) மொத்தம் 26,786 சைக்கிள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

சைக்கிள் டயர்களை எடுத்துக்கொண்டால், 1966-ம் ஆண்டு 3,946,066 உற்பத்தி செய்யப்பட்டது, 1967-ம் ஆண்டு 5,080,811 உற்பத்தி செய்யப் பட்டதன் காரணத்தால் 1,134,745 அதிகமாக உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்றால், சென்ற ஒரு ஆண்டுக் காலத்தில் தொழில் வளர்ச்சியே ஏற்படவில்லை, உற்பத்தியே பெருகவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டுக்கு இடம் இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான் இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டுகிறேன். பெரிய தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், 1966-ம் ஆண்டிலே 11 தொழிற் சாலைகள் துவக்கப்பட்டன. 1967-ம் ஆண்டிலே 13 தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 1966-ம் ஆண்டை விட தொழிற்சாலைகள் குறையவில்லை. 1966-ம் ஆண்டைவிட 1967-ம் ஆண்டில் இரண்டு தொழிற்சாலைகள் அதிகமாகத் துவக்கப்பட்டிருக்கின்றன. மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லமுடியாத நிலையில் 1966-ல் 11 ஆக இருந்தது 1967-ல் 13 தொழிற்சாலைகளாக உருவாக்கப்பட்டுள்ள நிலைமைதான் இருக்கிறது.

சிறிய தொழில்களை யாருமே ஆரம்பிக்க முன்வரவில்லையென்று சொன்னார்கள். அது உண்மைக்குப் புறம்பானது என்று குறிப்பிட விரும்பு கிறேன். சிறு தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், 1966-ம் ஆண்டி டிலே 10,431 யூனிட்டுகள் பதிவு செய்யப்பட்டன. 1967-ம் ஆண்டிலே 11,929 யூனிட்டுகள் பதிவாகியிருக்கின்றன. ஆகவே, சிறு வகைத் தொழில்களைப் பொருத்த வரை 18 சத விகிதம் அதிகமாக 1967-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

எதற்காக இதையெல்லாம் கூறுகிறேன் என்றால், இவ்வளவு மந்த மான சூழ்நிலையிலும் கூட, அதை மீறிய வகையில் எந்தெந்த வகையிலே இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைக் கூறும் வகை யில்தான் இவற்றையெல்லாம் எடுத்துக் குறிப்பிடுகிறேன். 1967-ம் ஆண் டில் செய்தது இருக்க, இனி என்ன செய்ய இருக்கிறோம் என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக வும், திட்டமாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

பல்வகைச் செயற்கை நூல்களை ( Polyster Fibre ) தயாரிக் கும் தொழிற்சாலை ரூபாய் 10 கோடி முதலீட்டில் உருவாக்குவதற்கான உரிமம் ஒன்று வழங்கப்பட வேண்டுமென்று இந்திய அரசுக்குத் தெரிவிக் கப்பட்டு அது வழங்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த தொழிற்சாலை சீக்கிரத்தில் தமிழகத்தில் ஏற்படுத்தப்படும் நிலை இருக்கிறது. மின் குறைவு கடத்திகள் ( Semi Conductors ), மண்வாரிக் கருவிகள் (earth moving equipment), கரிக் கருப்பு (Carbon black), குழந்தை உணவு (Baby Food) ஆகிய தொழில்களை நிறுவ தொழில் முனைவர்கள் (entrepreneurs) செயற்குறிப்புகளை அனுப்பி வைத்துள்ளார்கள். அவை பல்வேறு கட்டங்களில் ஆய்வில் இருந்து வருகின்றன. அடுத்து வரும் ஆண்டில் இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் உருவாக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 22

இந்தியப் பேரரசினுடைய பொதுத் துறையின்கீழ் அணுக்கருவிகள் (Electronic Instruments) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று பத்து கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகத்தில் ஏற்படுத்தவேண்டுமென்ற குறிப்பு இந்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது உரிய அமைச்சர்களைச் சந்தித்து இதனைத் தமிழகத்திலே நிறுவ வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிவந்திருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுமானால் அதன் மூலம் 3,500 பேருக்கு மேல் வேலை கிடைக்குமென்ற நிலை இருக்கிறது. கனரகத் தகடுகள்—கொதிகலன்கள் (Heavy plates and vessels plant) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. ருமேனியா நாட்டு உடனுழைப்புடன் ரூபாய் 10 கோடி மூலதனத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு உரிமம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை ஏற்படுவதன் மூலம் 2,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இந்தியத் தொலைபேசி தொழிற்சாலையின் இரண்டாவது பிரிவைத் தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனைத் தமிழகத்தில் துவங்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எண்ணூர் பாறை எண்ணெய் தொழிற்சாலையை ஒட்டி பாறை எண்ணெய் இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சி பற்றியும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் துணைப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் குறித்தும் ஆய்வு செய்யும்படி எஞ்சினியரிங் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்கான அறிக்கை அவர்களிடமிருந்து வந்த பிறகு அந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுவதன் மூலம் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். மற்றும் தொழில்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை வருகின்றபோது என்னென்ன வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமோ அவற்றைச் செய்து தருவதிலும் இந்த அரசு தவறவில்லை. கல்பாக்கத்தில் மின் அணு நிலையத்தை அமைப்பதற்காக நிலத்தைக் கையகப்படுத்தும் பணியையும் இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது.

பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்கு (Madras Refineries) நீர் வழங்கும் திட்டத்திற்காக 88 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டி, 1968–69-ல் 36 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலை வரவேண்டும், அதன் மூலம் மாநிலத்திற்குப் பலன் ஏற்பட வேண்டும் என்ற முறையில் இத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. சென்னை உரத் தொழிற்சாலைக்கு (Madras Fertilisers) நீர் வழங்கும் திட்டத்திற்காக ரூ. 188 லட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது

தூத்துக்குடித் திட்டம் இடையிலே நிறுத்திவைக்கப்பட்டாலும், அது மூன்று கட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று கூறிவிட்டு பிறகு வெறும் மீன் பிடி துறையாக மட்டுந்தான் ஆக்கப்படும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட காலத்தில், இந்த அரசு தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அந்த வகையில் உரிய அமைச்சரோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் மற்றவர்களும் பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு அந்தப் பேச்சு வார்த்தையின்போது முன்னாள் தொழிலமைச்சர் திரு வெங்கட்டராமன் அவர்களும் கலந்துகொண்டு அவர்களுடைய கருத்தையும் தெரிவித்த பிறகு, தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு ரூ. 24·40 கோடி ஒதுக்கத் திட்டமிட்டு அந்த முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. எதிர்காலத்திலே சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறுகிற காலத்தில் தென் பகுதி வாணிகம் பெருகவும், பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படவும், அந்தப் பகுதிகளில் உற்பத்திப்பெருக்கம் வேலை வாய்ப்புக்கள் ஏற்படவும் வழிவகைகள் உண்டாகும். இந்த நிலைமைகளைப் பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.



1968 மார்ச் 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சேலம் இரும்பு உருக்காலையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முன்னால் இருந்த அரசு இதைப் பற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் அடிப்படையில் இந்த அரசு அந்தத் தொழிலை நடத்த லைசென்ஸ் தாருங்கள் என்று வற்புறுத்தி திரும்பத் திரும்ப எழுதியும் அதைப் பற்றி எந்த விதமான பதிலும் வராது இருக்கிறது. இந்திய அரசு அதற்கான லைசென்சைத் தரும்படியான நேரத்தில், அந்தத் தொழிற்சாலையைப் பொதுத்துறையில் ஆரம்பிப்பதா அல்லது வேறு எப்படி ஆரம்பிப்பது என்பதைப் பற்றியெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்கள், மற்றவர்கள் எல்லோரையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம். அதற்கு அடிப்படையான லைசென்ஸ் தர இன்னமும் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப ரிமைண்டர் போய்க் கொண்டிருக்கிற நிலை இருக்கிறதே தவிர, அங்கிருந்து பதில் வரக்கூடிய நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசே நேரடியாகத் தொழில்களை ஆரம்பிக்கும் வகையில், அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை, ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஆகியவற்றை ஆரம்பிப்பது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்காக 1967-68-ல் 250 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1968–69-ல் 250 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. துணுக்கு இரும்புத் தொழிற்சாலை (Sponge Iron Plant), இயந்திரக் கருவி துணைப் பகுதிகள் தொழிற்சாலை ( Machine Tools Accessories Plant ) ஆகிய தொழில்களை செர்மனி நாட்டு ஊர்க்கி நிறுவனத்தின் உடனுழைப்பைப் பெற்றுத் துவக்குதற்கான பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. திருமிழிசை செங்கற் சூளை திட்டம் 1968 சனவரியிலிருந்து வேலை செய்யத் தொடங்கியுள்ளது. அது ரூ. 70 லட்சம் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளில் பங்கு மூலதனம் போட 1968–69-ல் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவங்குவதற்கு இந்திய அரசு உரிமம் வழங்க வேண்டுமென்று வரையப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு வட ஆற்காடு மாவட்டத்திலும் ஒன்று கோவை மாவட்டத்திலும் ஆரம்பிக்கலாம் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

தனித் தொழிற்பேட்டைகளை நிறுவ இந்த ஆண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும் (Instrument Industry), மின் அணுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும் (Electronic Industry) 1967–68-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 1968–69-ல் உதகமண்டலத்தில் படச் சுருள் தொழிற்சாலை சார்புள்ள தொழிற்பேட்டையும், கடலூரில் தொழிற்பேட்டையும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

தொழிற்சாலைகள் துவக்கப்படவில்லை என்று கூறியதோடு கூட, ஏற்கனவே துவக்கப்பட்ட தொழிற்சாலைகள் சரிவர நடைபெறவில்லை என்ற கருத்துக்களையும் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது கூட, ஏற்கெனவே, சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் துவக்கப்பட்டவை கூட நஷ்டத்தில் தான் இருந்து கொண்டு வந்திருக்கின்றன. இந்த ஆட்சி வந்த பிறகுதான், திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு அமைக்கப்பட்டவற்றிலேதான் நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறும் நிலை இல்லை. ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட சர்க்கரை ஆலைகளில் லாபத்தில் வேலை செய்பவை மோகனூர், ஆம்பூர் ஆகிய இரண்டைத் தவிர மற்றவை நஷ்டத்தில் தான் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும், மதுராந்தகம், அமராவதி ஆலைகள் பெருத்த நஷ்டத்தில் நடந்து வந்திருக்கின்றன. மற்ற இரண்டு ஆலைகள் சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டன. அதிலே இலாபமா நஷ்டமா என்பதை இனிமேல்தான் பார்க்கவேண்டும். நூற்பாலைகளை எடுத்துக் கொண்டாலும் ஒரே ஒரு நூற்பாலைதான் இலாபம் காணக்கூடியதாக இருக்கிறது, 12-ல் 11 நூற்பாலைகள் நட்டத்தில் தான் தொடர்ந்து வேலை செய்து வந்திருக்கின்றன. இந்த அரசு ஆரம்

பி.ப. 2-30 பிக்கிற ஆலைகள்தான் நட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன என்பது சரியல்ல. அந்த நிலைமையை எப்படிச் சரிப்படுத்தலாம் என்று அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

தொழிலாளர்கள் நிலைபற்றியும் இங்கு எடுத்துத் தெரிவித்தார்கள். தொழிலாளர் அமைச்சர் அவர்கள் தொழிலாளர் மானியக் கோரிக்கையின் போது அந்த சூழ்நிலைகளைப் பற்றியெல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டில் ஏற்பட்ட நிலைமைகள் பற்றியெல்லாம தெளிவாக எடுத்துக் கூறினார்கள். சென்ற ஒரு ஆண்டு ஏற்பட்ட பல்வேறு தொழிற்சாலைகளின் தகராறுகளைத் தீர்ப்பதில், அமைதியான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அப்போது நிறுத்தப்பட்ட அல்லது மூடப்பட்ட அல்லது வேலை நிறுத்தம் செய்யப்பட்ட பல தொழிற்சாலைகள் சம்பந்தமான தொழிலாளர் தலைவர்களை அவ்வப்போது சந்திக்கிற முயற்சியிலும், தொழில் அதிபர்களை சந்திக்கிற முயற்சியிலும் பல தடவைகளில் ஈடுபட்டு தொழிற்சாலைகள் அமைதியாக நடைபெற வேண்டுமென்ற முயற்சியில் அவர்கள் தலையிட்டு பலவற்றைச் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சரான நானும், முதல் அமைச்சர் அவர்களும் அவர்களோடு கலந்து உரையாடும் சூழ்நிலையை ஏற்படுத்தும் முறைகளில் வேலை நிறுத்தம் செய்யப்பட்ட பல தொழிற்சாலைகளில், 'இந்து' போன்ற நிறுவனததிலும் வேறு பல நிறுவனங்கள் காரியத்திலும் முதல் அமைச்சர் அவர்கள் தலையிட்டு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டது. தொழிலாளர் தலைவர்கள் நல்ல ஒத்துழைப்பைத் தந்தார்கள், தொழில் அதிபர்களும் நம் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்கள்.

கோவை மில்களில் தொழிலாளர்கள் தலைவர்களை அழைத்து அவர்களோடு கலந்து உரையாடி அவர்கள் ஒத்துழைப்பைப் பெற்று வர இருந்த வேலை நிறுத்தத்தை தடுப்பதற்கான முயற்சிகளில் முதல் அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு அவர்களோடு பேசி நல்லதொரு முடிவை செய்து வைத்தார்கள். கூடுமான வரையில் பயங்கரமான நிலைக்குப் போகாத அளவிற்கு பாதுகாக்கும் முறையில், இந்த அரசின் அறிவு, ஆற்றல், திறமை, இவற்றிற்கு உட்பட்ட, சட்ட வரம்பிற்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் பகல் இரவு என்று பாராமல் இரவு இரண்டு மணி அல்லது மூன்று மணி அளவிற்குக்கூட அவர்களை அழைத்து முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். கோவை ஆலைகள் பொறுத்து விடியற்காலை மூன்று, நான்கு மணிக்கு பேசி முடிவு எடுக்கும் சூழ் நிலை ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற வர்த்தக சங்க 132-வது ஆண்டு விழாவில் அதன தலைவர் அவர்கள் பேசும்போது, அவர்கள் பேசிய பேச்சில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் .... அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"We paid a call on the Chief Minister, when the Labour situation was discussed. At this meeting, at which we were received with his customary politeness, the Chief Minister promptly suggested the formation of an Industrial Sub-Committee which he recommended should see him once or twice a month to keep him posted regarding developments. Members are aware that this Sub-Committee was formed, and that it called on the Chief Minister to apprise him of the Labour situation. I take this opportunity to acknowledge the sympathy and understanding which the Chief Minister has shown whenever the Industrial Sub-Committee has met him and thanked him for exercising his good offices, to ease some serious Labour-Management disputes."

என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கோவை ஆலைகள் பற்றி பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆலைகளை ஆறு, ஏழு, எட்டு திங்கள்களாக மூடப்பட்டிருந்த நிலையில் தீர்வு காணவேண்டியதற்காக ஆலை அதிபர்களையும் தொழிலாளர் தலைவர்களையும் கூட்டிவைத்து அவர்கள் சீரிய ஆலோசனைகளைக்



கேட்டு இருவரும் கலந்த ஒரு குழு அமைக்கப்பட்டு, டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, தொழிலாளர்களும் தலைவர்களும், அதிபர்களும் தந்த ஒத்துழைப்பு காரணமாக ஏகமனதான சில பல சிபாரிசுகளைச் செய்தார்கள். அந்த சிபாரிசின் அடிப்படையில் சில பல மூடப்பட்ட ஆலைகளையாவது திறக்கவும், வேலை இழந்த சில பல தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கான வாய்ப்பையும் அக்குழுவின் முடிவு ஏற்படுத்தித் தந்தது. தொழிலாளர் தலைவர்களும் ஒத்துழைப்பு தந்தார்கள். அதிபர்களும் ஒத்துழைப்பு தந்தார்கள். இவர்களின் ஒத்துழைப்பினாலும் டாக்டர் லோகநாதன் அவர்கள் பெரு முயற்சி காரணமாகவும் ஒரு கோடி இருபத்தேழு இலட்சம் ரூபாய்க்கு காரண்டி தருகிற முயற்சியை இந்தக் குழுவின் யோசனையின் பேரில் இந்த அரசு ஏற்றுக்கொண்டு சில பல தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. காரண்டி தந்தும் சில தொழிற்சாலைகள் திறக்கப்படாத சூழ்நிலையில் கம்போடியா, ரங்கா ஆலைகள் பற்றி மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்யாத ஆலைகளை ஏற்றுக்கொள்வது, நிர்வாகத்தை மாற்றியமைப்பது என்பதைப் பொறுத்து ஏற்கெனவே சட்டம் இல்லாமல் இருந்தது. 1967-ல் மத்திய அரசு அதற்கான சட்டத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆலைகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

நம் மாநிலத்தில் கிட்டத்தட்ட 160-க்கு மேற்பட்ட நூற்பு நெசவாலைகள் இருக்கின்றன. அவற்றில் 15 அல்லது 16 ஆலைகள் இப்போது மூடிவிடுவோம் என்ற காரணத்தைச் சொல்லி ஏப்ரல் முதல் தேதி என்று சொல்லி, இப்போது ஏப்ரல் 5-ம் தேதி என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு சொல்கிற காரணம் நூல் அதிகமாக தேங்கியிருக்கிறது. அவை, விலைக்குப் போகாத காரணத்தினால் மில்லை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது, பத்து அல்லது பதினைந்து நாட்கள் மில் மூடியிருந்தால் தான் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நடத்த முடியும், இல்லாவிடில் சில இடர்ப்பாடுகள் ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி பாராளுமன்றத்தில் அமைச்சரிடம் சொல்லவேண்டுமென்று திரு பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றவர்களும் சுட்டிக்காட்டினார்கள். 10, 15 நாட்கள் மூடப்படுகிற நிலையை இந்த அரசு விரும்பவில்லை. நிலைமையை தெளிவாக அறிந்துகொள்ள தொழில் அதிபர்களையும், தொழிலாளர் தலைவர்களையும் நாளை இங்கு வரும்படி இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. நாளைக்காலை நானும் முதல் அமைச்சர் அவர்களும் அவர்களோடு கலந்து உரையாட இருக்கிறோம். இருக்கிற நிலைமையைக் கண்டு ஆராய்ந்து தொழிலாளர்கள் தலைவர்களை வைத்துக்கொண்டு, அதிபர்களையும் வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் வர இருக்கிற கேடுபாடுகளைத் தவிர்க்கலாம் என்ற முயற்சியை எடுக்க இருக்கிறோம். அது பற்றி நல்லதொரு முடிவு ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த வகையில் அதைத் தீர்க்கமுடியும்.

கைத்தறிபற்றி இங்கு எடுத்துக் கூறினார்கள். அது பற்றி பல தடவை நான் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். பத்திரிகையில் நான் சொன்னதைத் தவறாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான திருத்தத்தையும் நான் அளித்திருக்கிறேன். மற்ற நாடுகளில் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது அதைப் பற்றி நான் குறிப்பிட்டேனே தவிர இந்த வேலையை விட்டுவிடவேண்டும், வேறு தொழிலுக்குப் போங்கள், இதில் வாய்ப்பு தரமுடியாது என்று நான் சொல்லவில்லை. நம் மாநிலத்தில் கிட்டத்தட்ட 5½ லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. அதை நம்பி 20 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இதை விட அதிகம் வருமானம் தரும் தொழில் ஏற்படுமானால் அதைப் பற்றிக் கொள்ளலாம் என்ற முறையில் பொருளாதார அடிப்படையில் கூறினேன். கோவையைப் பொறுத்தவரையில் நாள் ஒன்றுக்கு 5, 8, 10 ரூபாய் வருவாய் தரக்கூடிய தொழில்களை கைத்தறி நெசவாளர் குடும்பங்களில் பிறந்தவர்கள் கூட பற்றிக்கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது

மற்றவர்களுக்கு, மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாத காரணத்தினால், பற்றிக்கொள்ள தொழில்கள் இல்லாததால் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அதற்கான பாதுகாப்பு அவ்வளவும் தரவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

அடுத்து, தேக்கம் பற்றி கூறப்படுகிறது. தேக்கத்தைக் குறைக்க பல்வேறு முயற்சிகளை அவ்வப்போது எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு கைத்தறித் தேக்கம் அதிகமாக ஏற்பட்டுவிட்டது, அதனால் பலர் வேலை இழப்பு ஏற்படும் அளவிற்கு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்று சொன்னார்கள். இந்த ஆண்டு அந்த விதமான நிலை இருப்பதைத் தவிர்க்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் வருகிறோம். சனவரி 1966-ல் கைத்தறித் துணி தேக்கம் ப்ரைமரி சொஸைட்டிகளில் 202 இலட்சம், ஸ்டேட் சொஸைட்டிகளில் 178 இலட்சம். மொத்தமாக 3 கோடி 80 இலட்சம் ரூபாய் அளவிற்கு தேக்கம் இருந்தது. 1967 சனவரியில் ப்ரைமரி சொஸைட்டியில் 138 இலட்சம், ஸ்டேட் சொஸைட்டியில் 177 இலட்சம் மொத்தம் 3 கோடி 15 லட்சம் ரூபாய் அளவிற்கு தேக்கம் இருந்தது. 1968 சனவரியில் ப்ரைமரி சொஸைட்டியில் 157 இலட்சம், ஸ்டேட் சொஸைட்டியில் 149 இலட்சம், மொத்தம் 3 கோடி 6 இலட்சம் ரூபாய் அளவிற்கு தேக்கம் இருந்தது. ஆக, 1966 சனவரியில் 3 கோடி 80 இலட்சம் ரூபாய் அளவிற்கும், 1967-ல் 3 கோடி 15 இலட்சம் என்ற அளவிற்கும் 1968-ல் 3 கோடி 6 இலட்சம் என்ற அளவிற்கும் தேக்கம் இருந்தது. இப்படிப்பட்ட தேக்கம் இருப்பது சரி, அது நல்லது என்று நான் சொல்ல வரவில்லை. இதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இந்த சூழ்நிலையில் கூட இந்த ஆண்டு நடைபெற்ற கைத்தறி வார விழாவில் விற்பனை செய்யப்பட்ட அளவில் கூட சென்ற ஆண்டு 22½ லட்சம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. இந்த ஆண்டு 27 இலட்சம் ரூபாய் அளவிற்கு கைத்தறித் துணி விற்பனையாகியிருக்கிறது.

மற்றும் ரிபேட் விஷயத்தில் ஹோல்சேல் விற்பனைகளில் 3 காசும், ரீடெயில் விற்பனையில் 5 காசும் தள்ளுபடி தந்து வருகிறார்கள். குறிப்பிட்ட விசேஷக் காலங்களில் 10 காசு என்ற உயர்ந்த விகிதத்தில் ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்களுக்குத் தரலாம் என்று இந்திய அரசு கூறியிருந்தாலும் 52 நாட்களுக்கு தள்ளுபடி செய்து தரப்பட்டது. அவ்வாறு செய்து கைத்தறிக்கு ஊக்கம் கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இவ்வாறு செய்து இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைத் தவிர்க்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

எதிர்காலத்தில் சங்கடங்களைப் போக்க பயன்படும் என்று கருதி, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பங்குத் தொகைகளில் அரசாங்கம் நேரிடையாக பங்கு எடுத்துக்கொள்வதென தற்பொழுது—உத்திரவு பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ரிசர்வ் வங்கி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இதுகாறும் கொடுத்துவந்த நடைமுறை மூலதனத்திற்கு பதிலாக சமீபத்தில் விதித்துள்ள கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட அவதியைத் தவிர்க்கும் பொருட்டு இவ்வுதவியைத் தமிழக அரசு அளிக்க இப்போது தீர்மானித்துள்ளது. மிகவும் அத்தியாவசியமான கச்சாப் பொருளான நூலை உற்பத்தி செய்து நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகிக்கும் கூட்டுறவு நூற்பாலைகளின் பங்குகளின் பிரதம நெசவாளர் சங்கங்கள் முதலீடு செய்துள்ள தொகைகளை தான் அளிக்கும் கடனுக்குத் தகுந்த ஆதாரமாக ரிசர்வ் வங்கி எடுத்துக்கொள்ள பல முறை கூறியும் மறுத்தே வந்திருக்கிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இக்கஷ்டத்திலிருந்து நிவாரணம் அளிக்க தமிழக அரசு அக்கரையுடன் சிந்தித்து, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து போதுமான அளவு ஆதாரம் காட்டி கடன் பெற அரசாங்கமானது அதனுடைய பங்குகளில் நேரிடையாக முதலீடு செய்யவேண்டி ரூ. 4 இலட்சம் தற்போது அளித்திருக்கிறது. வரும் ஆண்டுகளில் இவ்வுதவியை மேலும் அதிகரிக்கும். இது அவர்களது கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு ஓரளவு பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பொதுவாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் தனியாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லாததால் அவைகளையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, சிறு தொழில்களைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. அப்படி மேற்கொள்ளும் வகையில் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. அதிகமான இலாபத்தை எதிர் பார்க்க முடியாத நிலையிருக்கும். இதைச் செம்மைப்படுத்தும் வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகச் சம்பளம் வாங்குபவர்கள் பல இடங்களில் இருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு கூறப்பட்டது. ஆஃபீஸர்கள் போஸ்டுகள் 136 இடங்கள் வேண்டியவர்களாகயிருந்தோம். ஆனால் 103 இடங்கள் மட்டும் நிரப்பப்பட்டு மற்ற இடங்கள் நிரப்பப்பட வேண்டாமென்றும் இருக்கிறவர்களை வைத்துக்கொண்டே சமாளிக்க வேண்டுமென்றும் மற்றைய அதிகாரிகளை நியமிக்க வேண்டாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "நான்-கெஜெட்டெட் டெக்னிகல் ஸ்டாப்"-ல் 596 இடங்களுக்கு சேங்ஷனாகி 486 பேர்கள் தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். செலவினத்தைப் பெருக்க வேண்டாமென்று இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளை இலாபகரமாக ஆக்க வேண்டுமென்று திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். ஒவ்வொன்றாக ஆராய்ந்து இலாபகரமாக இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடித்து அந்தக் குறைபாடுகளை நீக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

கிண்டியிலுள்ள ஸ்டோரில் சுமார் 7 இலட்சத்து சில்லறை ரூபாய்க்கு பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதைக் கூறி அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். இதைப் பற்றி தொழில் துறை இயக்குநர் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து தவறுக்கு யார் காரணமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமைகளுக்கு இந்த அரசு முனையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்ற ஓராண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்திலும், பல இடங்களிலும் தெளிவாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. சமூகத்திற்குப் பரவலாகப் பயன்படும் பொருளாதார வளர்ச்சி.

2. அத்தகைய பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் தொழில் வளர்ச்சி.

3. தமிழகத்தின் பொருளாதார ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பயன்படக்கூடிய புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாவதற்கான வாய்ப்புக் கூறுகளைக் காணல்.

4. தொழில்கள் வளர்வதற்கும் விரிவடைவதற்கும் ஏற்ற சூழ்நிலைகளையும், வசதிகளையும், வாய்ப்புகளையும் மத்திய அரசிடம் பெற்றுத் தருதல்.

5. குறைந்த முதலீட்டில் மிக்க வருவாயைத் தேடிக்கொடுக்கக் கூடிய இன்றியமையாத தொழிற்சாலைகளைப் பொதுத் துறையில் நிறுவ முயலுதல்.

6. தனியார் நாட்டங்கொள்ளாத, ஆனால் சமூகத்திற்கு மிக இன்றியமையாததாகத் தேவைப்படுகிற தொழிற்சாலைகளைப் பொதுத் துறையில் துவக்குவது.

7. பொதுத் துறைக்கு அடுத்தபடியாகக் கூட்டுறவுத் துறையின் மூலம் தொழில் பெருகிட ஆக்கம் தருதல்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 மார்ச் 22

8. பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் துவக்கப்படாத, இன்றியமையாத தொழில்களையும் அவற்றிற்கு இடையூறாக இல்லாத தேவைப்படும் தொழில்களையும், தனியார் துவக்க முன் வந்தால், அவற்றிற்கான இயன்ற ஏற்பாடுகளையும், வசதிகளையும் செய்து தருதல்.

9. ஏற்றுமதிக்கு மிகவாகப் பயன்படும் தொழில்களுக்கு ஊக்கம் அளித்தல்.

10. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கும், வேளாண்மைக்குப் பயன்படும் தொழில்களையும் ஊக்குவித்தல்.

11. தொழிலில் உள்ள மந்த நிலையை நீக்க முயற்சி எடுத்தல்.

12. மந்த நிலை போக தொழில்களுக்குத் தேவைப்படும் இயன்ற எல்லா உதவிகளும் அளித்தல்.

13. இருக்கின்ற தொழில்களை உறுதிப்படுத்தி நிலைபெறச் செய்தல்.

14. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களிடையே நல்லுறவு சூழ்நிலையை உருவாக்கிக் காப்பாற்றி வருதல்.

15. தொழிலாளர்களுக்குரிய உரிமைகளை வழங்கும் கடமைகளை ஆற்றுமாறு தொழிலதிபர்களை வற்புறுத்தலும், நியாயமான உற்பத்திப் பெருக்கத்திற்குரிய கடமைகளைச் செய்யுமாறு தொழிலாளர்களை வற்புறுத்தலும்.

16. உயர்தரத்தோடு கூடிய உற்பத்திப் பெருக்கத்தைக் காணல்.

ஆகிய இந்தத் தன்மைகளின் அடிப்படையில் தொழில் வளர்ச்சியின் பலன்களை வேகமாகக் காண இந்த அரசு இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வர்த்தகச் சங்கக் கூட்டங்களிலும், உலகப் பொருட்காட்சியிலும் இந்தக் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைத் தான் நான் தந்திருக்கிறேன். இந்த அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவாகயிருந்து, உறுதுணையாக இருந்து இந்த மன்றத்திலுள்ளவர்கள் இதற்கு வெட்டுதல் போடவேண்டாமென்று கேட்டுக்கொண்டு இதற்காக ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்கிற தொகையை ஒதுக்கித் தர வேண்டுமென்று உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்தத் தொழில் துறை வளர்வதற்கேற்ற வகைகளில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** இப்பொழுது விவாதம் முடிவுற்றது. 20-ஆம் எண்ணுள்ள நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்படும். முதலில் வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்த உறுப்பினர்கள் அவைகளை வற்புறுத்துகிறார்களா என்று கருத்துத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கரு. சீமைச்சாமி ஆகிய உறுப்பினர்கள் தங்கள் இருப்பிடங்களில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொண்டனவாகக் கருதப்படும்.

திரு செ. பாலசுப்பிரமணியன், திரு. நா. காசிராமன், திரு கொ. இரா. ஞானசம்பந்தன் ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

அவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,93,09,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1968 மார்ச் 22]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** கோரிக்கை எண் 40 — தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

திரு. எம். பூபதி, திரு. நா. காசிராமன் ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

அவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 40 — தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,29,85,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும். பி. ப. 2-50

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Staturory Rules and Orders.

*Nil.*

### B. Reports, Notifications and Other Papers.

*69. The Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 5 of 1968) with annexure.

†70. A Review on Industrial Development in Madras State 1967–68 (English).

†71. A Review of Working of Minor Ports in Madras State 1967–68 (English).

---

* Despatched to Members on 20th March 1968

† Despatched to Members on 21st March 1968.

## இணைப்பு I

[289-ம் பக்கத்தில் 282 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி நிலவரப்படி, வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் முடிவு செய்யப்படாமல் உள்ள, பேருந்துகள் குறித்து வந்த மனுக்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| வட்டாரம். | வெளியூர் வழித்தடங்களுக்கான மனுக்களின் எண்ணிக்கை. | அவை சம்பந்தப்படுகிற வழித் தடங்களின் எண்ணிக்கை. | நகரப் பேருந்து வழித் தடங்களுக்கான மனுக்களின் எண்ணிக்கை. | அவை சம்பந்தப்படுகிற வழித் தடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| செங்கற்பட்டு .. .. .. | 603 | 19 | .. | .. |
| தென் ஆர்க்காடு .. .. | 193 | 6 | .. | .. |
| தஞ்சாவூர் .. .. .. | 245 | 17 | 20 | 3 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 662 | 21 | 83 | 2 |
| மதுரை .. .. .. | 1,268 | 41 | .. | .. |
| ராமநாதபுரம் .. .. | 430 | 24 | .. | .. |
| திருநெல்வேலி .. .. | .. | .. | .. | .. |
| கன்னியாகுமரி .. .. | 1 | 1 | .. | .. |
| நீலகிரி .. .. .. | 61 | 9 | .. | .. |
| கோயம்புத்தூர் .. .. | 235 | 9 | 168 | 19 |
| ஈரோடு .. .. .. | 417 | 14 | 44 | 2 |
| சேலம் .. .. .. | 2,025 | 49 | .. | .. |
| தருமபுரி .. .. .. | 196 | 7 | 83 | 4 |
| வட ஆர்க்காடு .. .. | 905 | 38 | 220 | 5 |
| | 7,241 | 255 | 618 | 35 |



## இணைப்பு II

[317-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழகத்தில் கைத்தறி வளர்ச்சி ஆய்வுரை—1967.

தமிழ் நாட்டிலேயே விரிவான, மிக முக்கியமான குடிசைத் தொழில்களில் ஒன்று கைத்தறித்தொழில். இத் தொழிலினால் 20 லட்சம் மக்கள் பிழைத்து வருகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கடல் கடந்த நாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்த புகழ் நம் தமிழ் நாட்டிற்கு உண்டு. கைத்தறித் தொழிலின் நிலையை ஆராய இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட இரண்டாவது செயற்குழு அனுப்பிய அறிக்கையின்படி 1963-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ம் தேதி அன்று உள்ள நிலவரப்படி தமிழ் நாட்டில் 5·50 லட்சம் தறிகள் இருந்தன. இவற்றில் 2·30 லட்சம் தறிகள் கூட்டுறவுப் பிரிவின் கீழ் செயல்பட்டு வந்தன.

2. (*a*) கைத்தறித் துணி உற்பத்தியைப் பொறுத்த வகையில் இது குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பொறுப்பு புள்ளி விவரத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் பரவலாகச் செயல்பட்டு வரும் தறிகளின் உற்பத்தியைக் கணக்கெடுப்பதென்றால் அதற்காக மிகப் பெரிய அளவில் பணியாளர் தேவைப்படுவர். எனவே, மாவட்டங்களில் ஒரு சில முக்கிய இடங்களில் இங்குமங்குமாகப் புள்ளி விவரங்களை சேகரிக்கும் முறையை இத்துறை மேற்கொண்டு வருகின்றது. ஆயினும், கூட்டுறவுப் பிரிவில் உள்ள தறிகள் குறித்த புள்ளி விவரங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன. உற்பத்தி குறித்த மதிப்பீடுகளைச் சரியாக கணக்கிடுவதற்காக ஆண்டு ஒன்றுக்கு, தறி ஒன்றுக்கான சராசரி உற்பத்தியளவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இச் சராசரி உற்பத்தியளவு 700 கெஜம் எனக் கொள்ளலாம். இக் கணக்கின் அடிப்படையில் இம் மாநிலத்திலுள்ள 5·50 லட்சம் தறிகள் மூலம் 3,850 லட்சம் கெஜம் துணி மொத்தம் உற்பத்தி செய்யப்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இதன் மதிப்பு ரூ. 48 கோடியாகும். கைத்தறி துணி விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதால் பல தறிகள் செயல்படாமல் உள்ளன. இதன் காரணமாகக் கைத்தறித் தொழிலில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக கைத்தறித் துணி உற்பத்தி குறைந்துள்ளது.

(*b*) கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கைத்தறித் தொழிலுக்கு அரசாங்கம் கணிசமான அளவிற்கு உதவி செய்து வருகின்றது. கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தி வருகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் அரசாங்கம் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகச் செலவிடப் பட்டுள்ள தொகைகள் பற்றிய விவரம் வருமாறு :—

| | செலவு. |
|---|---|
| இரண்டாவது திட்டம் .. .. .. | ரூ. 7·12 கோடி. |
| மூன்றாவது திட்டம் .. .. .. | ரூ. 7·50 கோடி. |
| நான்காவது திட்டம் .. .. .. | ரூ.11·92 கோடி. |
| | (திட்டமிடப்பட்ட செலவு.) |

(*c*) 1966–67-ல் ரூ. 183·45 லட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ல் ரூ. 119·85 லட்சம் செலவிடப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. மூன்றாவது திட்டக்காலத்தில் பல்வேறு கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து செய்யப்பட்ட

[1968 மார்ச் 22

செலவு, நான்காவது திட்டத்தில் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள செலவு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, எதிர்பார்க்கப்படும் செலவு, 1967–68-ம் ஆண்டுக்கான திட்ட இலக்குகள், 1968–69-ம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் ஆகிய விவரங்களை இந்த ஆய்வுரையின் I-ம் இணைப்பில் காணலாம். 1968–69-ம் ஆண்டுக்காக மொத்தம் ரூ 114·47 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. **திட்டச் செலவில் சேர்க்கப்படாத செலவினங்கள் :—** கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக திட்டத்தின் கீழ் வராமலும் கணிசமான நிதி உதவிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. 1967–68–ல் திட்டத்தின் கீழ் வராத வேலைத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவி வருமாறு :—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்வதற்காகத் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழிவகை முன் பணமாகவும், தற்காலிக முன்பணமாகவும் அரசாங்கம் அளித்த கடன். | 75 |
| 2. கூட்டுறவுப் பிரிவின்கீழ் வராத கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக கைத்தறி நிதிக் கழகம் வழங்கிய கடன்கள். | 210 |
| 3. கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு கூட்டுறவு நிதி உதவியும் வங்கிகளால் வழங்கப்படும் நடைமுதல் மூலதனக்கடன். | 190 |
| 4. விற்பனை முதலிய காரியங்களுக்காக, தமிழ் நாடு கைத்தறி கூட்டுறவுச் சங்கத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு வங்கி அளிக்கும் தனி முன்பணத் தொகை .. .. .. | 45 |
| மொத்தம் .. | 520 |

4. இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த சுருக்கம் வருமாறு :—

(i) **கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறிகளைக் கொண்டு வருதல் :—** இம்மாநிலத்தில் 1,072 ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2·30 லட்சம் தறிகள் உள்ளன. இம் மாநிலத்தில் மொத்தம் உள்ள தறிகளில் 42 சதவீதம் கூட்டுறவுத் துறைகளின்கீழ் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் தறி ஒன்றுக்கு ரூ. 75 என்ற பேரளவிற்கு உட்பட்டு பங்கு மதிப்பில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. ஏற்கனவே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் தங்களுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்கவும் அதே உயர்வரம்புக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ்ச் செய்த செலவும்



1968 மார்ச் 22]

அடைந்த சாதனைகளும் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தறிகளின் எண்ணிக்கை புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதில் ஏற்பட்ட சாதனை ஆகிய விவரங்களும் வருமாறு :—

அட்டவணை I

| ஆண்டு. | புதிய தறிகளைச் சேர்த்தல். திட்டச் செலவு. | திட்டச் சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. லட்சத்தில்.) | (தறிகளின் எண்ணிக்கை.) |
| 1966–67 .. .. .. | 4·16 | 4,912 |
| 1967–68 .. .. .. (மதிப்பீடு). | 6·00 (ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகளில் முதலீடு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 4 லட்சமும் இதில் அடங்கும்.) | 2,500 |
| 1968–69 (திட்டமிடப்பட்டுள்ளது). | 4·00 | 5,000 |

அட்டவணை II

**கூட்டுறவுப் பிரிவில் செயல்படும் தறிகளின் எண்ணிக்கை.**

| ஆண்டு. | தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. .. .. | 2·31 |
| 1966–67 .. .. .. .. .. | 2·30 |

புதிய தறிகளைப் பதிவு செய்யும் பொருட்டு கணிசமான அளவு நிதி உதவி அளிக்கப்பட்டிருப்பினும் கூட்டுறவுத் துறையிலுள்ள மொத்த தறிகளின் எண்ணிக்கை விகிதாசாரப்படி அதிகரிக்கவில்லை. இதற்கு காரணங்கள் பல. இலவசக் கல்வி, சிறு தொழில் வளர்ச்சி முதலியவற்றிற்கு அரசாங்கம் அளித்துள்ள வசதிகள் காரணமாக நெசவாளர்களின் பிள்ளைகள் கைத்தறித் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களைத் தேர்ந்தெடுக்க இயன்றதையும் இதற்குக் காரணமாகக் கூற வேண்டியுள்ளது. எனவே, எதிர்பார்த்த அளவுக்கு தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நேரடியாகப் பங்கு மூலதன முதலீடு செய்வது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. அவர்களது மூலதனத்தை அதிகரிக்கவும், அவர்களது வாணிபத்தை பெருக்கவும் அவர்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.

(ii) **நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுதல் மூலதனம்.**—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நடைமுதல் மூலதனத்துக்கு வகை செய்வதே

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு முக்கியத் தேவையாகவுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மாநிலக் கைத்தறிச் சங்கத்திற்கும் (தலைமைச் சங்கம்) உற்பத்திக்காகவும் விற்பனைக்காகவும் குறைந்த வட்டி வீதங்களில் இந்திய ரிசர்வ் வங்கி நிதி உதவுகிறது. கூட்டுறவு நிதி வங்கிகளின் மூலமும் இந்த நிதி வழங்கப்படுகிறது. தற்போது 1967–68-ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுதல் மூலதனத்திற்காக ஆண்டொன்றுக்கு 4½ சதவீதம் குறைந்த வட்டி வீதத்தில் (வங்கி வீதத்தை விட இது 1½ சதவீதம் குறைவு) கடன் வசதி அளிக்கப்படுகின்றது. 1967–68-ல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி குறித்து ரூ. 430 லட்சம் வரையில் அரசாங்கம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

நாலரை சத வீதம் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்குவதனால் கூட்டுறவுக் கடன் உதவும் வங்கிகளுக்கு ஏற்படும் நிதி இழப்பை ஈடு செய்யும் வகையில் கடன் மீது 3 சதவீதம் அரசாங்கம் உதவித் தொகையாக வழங்குகின்றது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுதல் மூலதனத்திற்காக மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் தங்கள் நிதிவசதிகளிலிருந்து 4½ சதவீத வட்டியில் நிதி உதவி அளித்துவிட்டு தாங்கள் கொடுத்த கடன் மீது அரசாங்கத்திடமிருந்து 3 சதவீதம் உதவித் தொகை பெற்றுக்கொள்ளுகின்றன. கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்வதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் மாநிலக் கைத்தறிச் சங்கத்திற்கு குறைந்த வட்டி வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் கடன் உதவியை வாங்கி மேற்படி சங்கத்திற்குக் கொடுப்பதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வங்கிக்கு ஒரு சதவீதம் உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

மாநிலத் தலைமைச் சங்கமும், ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன் தொகை, வட்டிச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட உதவித் தொகை ஆகிய விவரங்கள் அடியிற்கண்ட அட்டவணையில் காணலாம்.

## அட்டவணை III

**கூட்டுறவுத் துறையில் கைத்தறித் தொழில்களுக்கு வழங்கப்பட்ட நடைமுதல் மூலதனம்.**

| ஆண்டு. | மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் அனுமதிக்கப்பட்ட கடன் தொகை. | ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் அனுமதிக்கப்பட்ட கடன் தொகை. | மொத்தம். | நடைமுதல் மூலதனம் மீதான வட்டி குறித்த மொத்த உதவித் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூ. லட்சத்தில்.) | | | |
| (1) 1966–67 .. .. .. | 112·00 | 259·00 | 371·00 | 10·50 |
| (2) 1967–68 .. .. .. | 100·00 | 286·05 | 386·05 | 10·62 |



(iii) தொழில் நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்.—கைத்தறித் துணிகள் ஆலைத் துணிகளோடு கடும் போட்டியிட்டு விற்பனை சந்தை தேடிக் கொள்ள வேண்டிய நிலையிலிருப்பதால், உற்பத்தி, [illegible] தொழில் நுணுக்கங்கள் இவற்றை மேம்படுத்துவது பற்றிய திட்டங்களுக்கு அரசு பெரும் முக்கியத்துவத்தை அளிக்கிறது. எனவே சீர்திருந்திய கைத்தறிகள், நெசவுக் கருவிகள், இவற்றிற்கு ஆகும் செலவில் 75 சத வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டங்களை வகுத்துள்ளது. எஞ்சியுள்ள 25 சத வீதம் கடனாக வழங்கப்படுகிறது. பெரிய சிறிய சாயப் பட்டறைகள் நிறுவுதல், துணி சுற்றும் இயந்திரம் (calendering plants) பளபளப்பூட்டும், சுருக்கம் நீக்கும் இயந்திரம் (mercerising and sandforising plants) போன்ற வேலை முறை இயந்திரங்களை நிறுவுதல் குறித்தத் திட்டங்களுக்கும் அரசு நிதி உதவுகிறது.

மாநில கைத்தறிச்சங்கம் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஈரோட்டில் உள்ள தனது தயாரிப்பு வேலை முறை நிலையத்தில் பளபளப்பூட்டும், சுருக்கம் நீக்கும் இயந்திரங்களை நிறுவியுள்ளது. அந்த இயந்திரங்கள் கூடிய விரைவில் செயல்படத் தொடங்கும். இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

## அட்டவணை IV

| ஆண்டு. | திட்டச் செலவு. | பிரிவு. | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) 1966–67 .. .. | 6·03 | (1) நவீனக் கருவிகள். | 22,402 |
| | | (2) சிறிய சாயப் பட்டறைகள். | 2 |
| | | (3) பெரிய சாயப் பட்டறைகள். | 1 |
| | | (4) ஈவாசெட் சுருக்கம் நீக்கும் இயந்திரம். | 1 |
| (2) 1967–68 (மதிப்பீடு) .. | 2·13 | (1) நவீனக் கருவிகள். | 15,000 |
| | | (2) சிறிய சாயப் பட்டறைகள். | 3 |
| | | (3) பெரிய சாயப் பட்டறைகள். | 1 |
| (3) 1968–69 (திட்டமிடப்பட்டது). | 4·00 | (1) நவீனக் கருவிகள். | 15,000 |
| | | (2) சிறிய சாயப் பட்டறைகள். | 3 |

(iv) **உற்பத்தியும் விற்பனையும்:**—கூட்டுறவுத் துறையில் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும், விற்பனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

## அட்டவணை V (அ)

| ஆண்டு. | உற்பத்தி (கோடி கெஜத்தில்.) | விற்பனை (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1966–67 .. .. .. | 8 | 10·50 |
| 1966–67 (எதிர்பார்க்கப்படுவது.) | 8·5 | 11·00 |
| 1968–69 (மதிப்பீடு) .. .. | 9 | 12·00 |

[1968 மார்ச் 22

அட்டவணை V (ஆ).

மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதன் 346 விற்பனைப் பிரிவுகளின் மூலம் விற்ற கைத்தறித் துணிகள்.

| | (ரூபாய் கோடியில். |
|---|---|
| 1. 1966–67-ல் விற்பனை .. .. .. .. .. | 4·10 |
| 2. 1967–68-ல் விற்பனை (மதிப்பீடு) .. .. .. | 4·23 |
| 3. 1968–69-ல் விற்பனை (எதிர்பார்க்கப்படுவது) .. .. | 4·50 |

முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட்டுறவுத் துறையில் சுமார் ரூ. 8 கோடி மதிப்புள்ள 740 லட்சம் கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. கைத்தறித் தொழிலுக்குப் பெருமளவில் நிதி உதவி வழங்கப்பட்டதன் விளைவாக, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியதால், 1963–64-ல் 11·5 கோடி கெஜம் அளவிற்குக் கைத்தறி உற்பத்தி உயர்ந்தது. ஆனால், பருத்தித் துணி ஆலைத் தொழிலில் பொதுவாக மந்த நிலை ஏற்பட்டதாலும், நைலான், டெரிலின் போன்ற செயற்கை நூல் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பி வாங்கியதாலும் கூட்டுறவுத் தொழிலில் கைத்தறித் துணி உற்பத்தி குறைந்துவிட்டது. கைத்தறித் தொழிலுக்கு நடைமுதல் மூலதனம் அளித்து வரும் இந்திய ரிசர்வ் வங்கி அத்தகைய உதவியை வழங்க 1–4–1966 முதல் சில நிபந்தனைகளை விதித்தது. ஒரு தறிக்கு இவ்வளவு தொகை என்ற அடிப்படையில் நடைமுதல் மூலதனம் வழங்கும் முறை உற்பத்தியின் அடிப்படையில் நடைமுதல் மூலதனம் வழங்கும் முறையாக மாறியது. உற்பத்தி குறித்தும், விற்று முதல் தொகைகளை வாணிக இருப்புக்களைச் சரிக்கட்ட ரொக்க வரவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கும் அளவுகோல்கள் நிச்சயிக்கப்பட்டன. சங்கங்களின் தொழில் மூலதன நிதி வசதியின் கீழ் நிலுவைகளுக்கு வகை செய்வதற்கான தொகைகளும் ஒதுக்கப்பட்டன.

மேற்சொன்ன நிபந்தனைகள் காரணமாக, பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் தங்களுக்கென வகை செய்யப்பட்ட கடன் வரம்பின் அளவிற்குக் கடன் கேட்க இயலாமற் போயிற்று. சில சங்கங்கள் முதலில் இருந்த வரம்புகளின் அளவிற்கு மீண்டும் கடன் கேட்க இயலவில்லை. இன்னும் சில சங்கங்கள் அக்கடன்களை மீண்டும் பெற முடிந்தும் கூட அதைச் சரிக்கட்ட இயலாத நிலையில் இருந்தன. இக்காரணங்கள் அனைத்தும் சேர்ந்து கூட்டுறவுத் துறையில் மந்த நிலையை உருவாக்கின. பல கைத்தறிகள் இயங்காமல் போய்விட்டன. கைத்தறி உற்பத்தியும் குறைந்து விட்டது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுதல் மூலதன நிதி உதவி வழங்குதவற்கான நிபந்தனைகளைத் தளர்த்துமாறு இந்திய ரிசர்வ் வங்கியை மாநில அரசாங்கம் வற்புறுத்தி வந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியும் சில நிபந்தனைகளைத் தளர்த்த அனுமதி அளித்துள்ளது. நாட்டின் பொருளாதார நிலை பொதுவாக வளர்ச்சியுற்றாலும், துணி உற்பத்தித் தொழில் மேம்பாடு அடைந்தாலும் கைத்தறித்துறை முன்னேற்றமடைவதற்கு அவை பெரும் உதவியாய் இருக்கும். எனினும், வாணிக முறைகட்குக் கைத்தறித் தொழில் தன்னைச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும். உற்பத்தியைப் பெருமளவுக்கு உயர்த்தும் நிலையில் இருக்க வேண்டும். துணி வாங்குபவர்களை கவரத்தக்க மாதிரிகளை உற்பத்தி செய்வதில் அக்கறை கொள்ள வேண்டும். அப்போதுதான் கைத்தறித் தொழிலாளர்களின் இடர்பாடுகளை நிலையான அடிப்படையில் தீர்க்க இயலும்.



1968 மார்ச் 22]

கைத்தறித் தொழில் மேம்பாடு குறித்து அரசாங்கம் குறிப்பான நாட்டம் செலுத்தி வருகின்றது. தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலும், ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் கைத்தறித் துணி இருப்புகள் பெருமளவுக்குத் தேக்கம் அடைந்துவிடும்போதெல்லாம் கைத்தறி நெசவாளர்களின் இடர்பாடுகளை போக்குவதற்கென அரசாங்கம் தங்களது நிதி வசதிகளிலிருந்து தற்காலிக முன் பணங்களை வழங்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கம் (தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்) தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்ககள் உற்பத்தி செய்த கைத்தறித் துணிகளை முனைந்து வாங்க இயலுவதற்கென அந்தத் தலைமைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1967 அக்டோபரில் தற்காலிக முன் பணமாக ரூ. 50 இலட்சம் அரசாங்கம் வழங்கியது. மேலும் மாநிலக் கைத்தறிச் சங்கம் கைத்தறித் துணிகளை வாங்கி விற்பனை செய்வதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தனது நடைமுதல் மூலதனத்துக்காகப் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கென போதிய பணத்தை ஒதுக்க இயலும் வகையில், அரசாங்கம் 1967 மே திங்களில் ரூ. 25 லட்சம் வழிவகை முன் பணம் ஒன்றை வழங்கியது. நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை அளித்துவர ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுவதற்கான வசதி அதன் மூலம் மாநிலக் கைத்தறிச் சங்கத்திற்குக் கிடைக்கும்.

(v) கழிவுத் தொகை உதவி : நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது விற்பனைகளுக்குக் கழிவுத் தொகைகளை அனுமதித்து கைத்தறித் துணிகளைப் பெரும்பாலோர் வாங்க இயலும்பொருட்டு சில்லறை விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 காசும், மொத்த விற்பனைகளில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசும் உதவித் தொகையை அரசாங்கம் வழங்கி வந்துள்ளது. அனைத்திந்தியக் கைத்தறி வாரம், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போது ஓராண்டில் 15 நாட்களுக்குச் சில்லறை விற்பனைகளின்மேல் ரூபாய் ஒன்றுக்கு 10 காசு என்ற உயர்ந்த வீதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித்தொகை வழங்கப் படுகிறது. கெஜம் ஒன்றுக்கு ரூ. 2·50-க்கு மேற்படாத விலை கொண்ட பருத்திக் கைத்தறித் துணிகள், கலப்புக் கைத்தறித் துணிகள் குறித்து அத்தகைய உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பொதுவாக மந்த நிலை ஏற்பட்டதாலும் பெருமளவுக்கு இருப்புகள் தேக்கமடைந்து விட்டதாலும், பருத்தி, பட்டு, செயற்கைப்பட்டு அல்லது வேறு ஏதேனும் செயற்கை நூலைக்கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதும் மொத்த விற்பனைகள் மீதும் ரூபாய்க்கு 10 காசு வீதம் உயரிய கழிவுத் தொகை உதவிக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. 1967–68ல் மொத்தம் 52 நாட்களுக்கு அந்த வீதத்தில் கழிவுத் தொகை வழங்கப்பட்டது. அனைத்திந்திய கைத்தறி வாரியம் பருத்தித் துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதான கழிவுத் தொகை உதவியை ஓர் ஆண்டில் 15 நாட்களுக்குத்தான் வழங்கலாம் என்று அனுமதித்துள்ளது. மேற்சொன்ன சலுகைகள் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை அதிகமாயிற்று. கழிவுத் தொகை வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அட்டவணை VI

| ஆண்டு. (1) | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1966–67 .. .. .. .. .. .. | 64 |
| 1967–68 (மதிப்பீடு) .. .. .. .. | 64 |
| 1968–69 (திட்டமிடப்பட்டது) .. .. .. | 60 |

[1968 மார்ச் 22

(VI) **விற்பனையும் செய்திப் பரப்புதலும்:**—விற்பனைக் கிடங்குகளையும், விற்பனை நிலையங்களையும் நிறுவவும், மாதிரிகளை வழங்குதல், செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடுதல், காலண்டர்கள் வெளியிடுதல், பொருட்காட்சிகளில் பங்கு கொள்ளுதல் முதலிய பல்வேறு விளம்பர நடவடிக்கைகளுக்காகவும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசாங்கம் நிதி உதவி வழங்குகின்றது. ...ல நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, அச்செலவுக்கு முழு உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கான செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை VII.

| ஆண்டு. (1) | செலவு. (ரூபாய் லட்சத்தில்). (2) |
|---|---|
| 1966–67 .. .. .. .. .. .. | 7·11 |
| 1967–68 (மதிப்பிட்டது) .. .. .. | 7·69 |
| 1968–69 (திட்டமிட்டது) .. .. .. .. | 7·00 |

(vii) **நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:**—சொந்தத்தில் தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக, நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கட்டுள்ளன. பங்கு மூலதனத்திற்காகவும், தறிகளையும், ஏனைய துணைக் கருவிகளையும் வாங்குவதற்காகவும், கொட்டகைகளையும் கட்டுதல், தேவையான பணியாளர்களை நியமித்தல் முதலானவற்றிற்காகவும், இச்சங்கங்களுக்கு உதவியளிக்கப்பட்டது. இச்சங்கங்களின் உறுப்பினர்கள், சங்கப் பொதுக் கொட்டகைகளில் பணியாற்றி ஊதியம் பெறுகின்றனர். மேலும் சங்கங்களுக்கு ஆதாயம் கிடைக்கும் போது, தங்கள் உற்பத்தியின்மீது அவர்கள் பூரிப்பூதியம் பெறுகின்றனர்.

இம்மாநிலத்தில் 27 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் ஆண்டு உற்பத்தி மதிப்பு ரூ. 42 லட்சமாகும். இவற்றிலே சில சங்கங்கள் கண்கவர் படுக்கை விரிப்புகளையும், வண்ணத் துவாலைகளையும், வீடுகளுக்கு அழகூட்டும் துணிகளையும் தயாரிக்கின்றன இவை உடனடியாக விற்பனையாகின்றன. 1966 அல்லது 1967-ம் ஆண்டில் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கமெதுவும் புதிதாகத் தொடங்கப் படவில்லை. இத்திட்டத்தின்கீழ் செய்த செலவு விவரத்தைக் கீழே காணலாம் :—

அட்டவணை VIII.

| ஆண்டு. (1) | செலவு (ரூபாய் லட்சத்தில்). (2) |
|---|---|
| 1966–67 .. .. .. .. .. .. | 0·04 |
| 1967–68 (மதிப்பிட்டது) .. .. .. .. | 0·28 |
| 1968–69 (திட்டமிட்டது) .. .. .. .. | 1·51 |

(viii) **பட்டுத்தொழில்.**—பட்டுத்தறிகள் அதிகமாக உள்ள இடங்களில் பட்டுத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடை முதல் மூலதனத்திற்குப் பெருந் தொகை வேண்டியுள்ளது. எனவே, அவற்றின்பங்கு மூலதனம், நடைமுதல் மூலதனம், நவீன கருவிகளை வாங்குதல், மேசை, நாற்காலி, வாடகை, பணியாளர்களை அமர்த்தல் ஆகியவற்றிற்கு அரசாங்கம் சிறப்பு வகையில் நிதி உதவியளிக்கிறது. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்து வந்த நடைமுதல் மூலதனக் கடனின் மேல்வரம்பு 1966-67-ம் ஆண்டில் ரூ. 500-ல் இருந்து ரூ. 900-மாக உயர்த்தப்பட்டது. நடப்பாண்டிலும் இதே அளவில் கடன் வழங்கப்பட்டது. பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதைபோலவே, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்



1968 மார்ச் 22]

கும் நடைமுதல் மூலதனத்திற்கு நிதி உதவியளிப்பதற்காக இந்த அரசாங்கம் இந்திய ரிசர்வ் வங்கியுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கும் நிதி உதவித் திட்டத்தின் கீழ், பட்டுத் தறிகளையும் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் 20 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றிலே 3,427 தறிகள் இருக்கின்றன. இவை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் சரக்கு மதிப்பு ரூ. 71 லட்சம் ஆகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 75 லட்சமாகும். இத்திட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை IX

| ஆண்டு. (1) | நிதிச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்). | திட்டச் சாதனை. (3) |
|---|---|---|
| 1966–67 .. .. .. | 9·13 | 300 புதிய பட்டுத் தறிகள். |
| 1967–68 (மதிப்பிட்டது .. | 4·29 | 300 ,, |
| 1968–69 (திட்டமிட்டது) .. | 3·38 | 300 ,, |

(ix) **பயிற்சி.**—உற்பத்தி ஊகங்களை மேம்படுத்தவும், கவர்ச்சிமிக்க துணி வகைகளை உருவாக்கவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு, மாநிலக் கைத்தறிச் சங்கத்திலுள்ள பயிற்சி நிலையங்களில் மூன்று திங்கள் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. கணக்கெழுதி வைத்து வருதல், அலுவலக நிர்வாக முறை, கைத்தறித் தொழிலியல், ஆகியவற்றிலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் எய்தியுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அட்டவணை X.

| ஆண்டு. (1) | செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) | திட்டச் சாதனை. (3) | |
|---|---|---|---|
| 1966–67 .. .. | 1·41 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர். | 380 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர். | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர். | 55 |
| 1967–68 (மதிப்பிட்டது) .. | 1·66 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர். | 400 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர். | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர். | 229 |
| 1968–69 (திட்டமிட்டது) .. | 1·70 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர். | 400 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர். | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர். | 200 |

(x) நிர்வாகப் பணியாளர்க்காக ஆகும் செலவிற்கான உதவித் தொகை.—இத் திட்டத்தின் கீழ், நிதிவசதி குறைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நிர்வாகப் பணியாளர் பொருட்டு நிதி உதவியளிக்கப் படுகிறது. இந்த நிதி உதவி படிப்படியாகக் குறையும் வகையில் நான்கு ஆண்டுகளில் அளிக்கப்படுகிறது. முதலாவது ஆண்டில் ஒரு சங்கத்திற்கு அதிக அளவாக ரூ. 1,000 உதவியளிக்கப்படும். இத் திட்டத்தின்கீழ் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அட்டவணை XI.

| ஆண்டு. | செலவு. | பயன்பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1966-67 .. .. .. .. .. | 0·50 | 64 |
| 1967-68 (மதிப்பிட்டது) .. .. .. | 0·50 | 50 |
| 1968-69 (திட்டமிட்டது) .. .. .. | 1·00 | 100 |

(xi) தலைமைச் சங்கங்களின் பங்குகளை அரசாங்கம் வாங்குதல்.—சென்ற ஆண்டு இறுதிவரை மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 18 லட்சம் வரை இந்த அரசாங்கம் முதலீடு செய்தது. கைத்தறி துணிகளை அதிக அளவில் வாங்கி, விற்பனை செய்வதற்கு சங்கத்தின் நடைமுறை மூலதன வசதிகளை அதிகப்படுத்துவதற்காக, நடப்பாண்டில் ரூ. 2·70 லட்சம் வரை இவ்வாறு மேற்கொண்டும் முதலீடு செய்வது குறித்தும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம் செய்த வாணிபத்தின் அளவு II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(xii) தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள்:—(1) நமது மாநிலத்தில் இப்போது 12 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்படுகின்றன. இந்த ஆலைகள் அனைத்தும் ஆய்வாண்டில் தொடர்ந்து செயல்பட்டன. 1967-ம் ஆண்டில் 12 கூட்டுறவு நூற்பாலைகளும் இயங்கியதன் விளைவுகள் III-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களின் அமைப்புத் திறனளவு மொத்தம் 1,64,360 கதிர்களாகும். இவை 1967-ம் ஆண்டில் 20-ம் நம்பர் முதல் 100-ம் நம்பர் வரை 63,97,780 கிலோ பருத்தி நூல் நூற்றன. ரூ. 5·56 கோடி அளவிற்கு விற்பனை செய்தன.

(2) அரசாங்கம் இந்த ஆலைகளின் பங்கு மூலதனத்தில் மொத்தம் ரூ. 160·56 லட்சம் முதலீடு செய்தது மூலமாகவும், இவை கடன் உதவும் நிறுவனங்களிடமிருந்து ரூ. 607 லட்சம் வரை வாங்கிய கடன்திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உறுதியளிப்பதன் மூலமாகவும், அரசாங்கம் இந்த ஆலைகளுக்குக் கணிசமான அளவில் உதவி செய்துள்ளது. பின்னிட்டுத் தொகை செலுத்தும் அடிப்படையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த ரூ. 70·39 லட்சம் மதிப்புள்ள துணி ஆலை இயந்திரங்களுக்கு உரிய தவணைத் தொகைகளை உரிய காலத்தில் கொடுப்பதற்கும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

(3) 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதிவரை இந்திய அரசு நூற்பாலைகள் மீது விதித்த பல தடைகளினால் கூட்டுறவு நூற்பாலைகள் பாதிக்கப்பட்டன. கூடுதல் விடுமுறை விடுவது, முறைமாற்று வேலைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது முதலானவையே இத்தடைகளாகும். ஆயவுக்காலம் அனைத்திலும் நூல் வாணிபம் மந்தமான நிலையில் இருந்ததும், பருத்தி விலை மிக உயர்ந்திருந்ததும், கூட்டுறவு நூற்பாலைகள் நல்ல வகையில் செயல்பட முடியாமல் தடுத்தன.





(4) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையும், நாசரத்திலுள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையும் தங்களது அமைப்புத் திறனளவை 25 ஆயிரம் கதிர்களாக உயர்த்தும் பணியினை மேற்கொண்டுள்ளன. இவ்வாறு விரிவு படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய கட்டிடங்கள் முதலானவை பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த கூடுதல் நூற்பு இயந்திரங்கள் ஆலைக்கு வந்து சேரத் தொடங்கி விட்டன. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையின் விரிவுத்திட்டத்திற்கு நிதி உதவி அளிப்பதற்காக இந்திய அரசின் மறுவாழ்வு அமைச்சகம் ஒப்பளிப்பு வழங்கிய நிதி உதவியிலிருந்து முன்பணமாக ரூ. 10 லட்சம் இந்த ஆண்டு மேற்படி ஆலைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

(5) பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும், தாயகம் திரும்பியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கென்றே திருநெல்வேலி மாவட்டத்தில் நூற்பாலை ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை ஏற்படுத்துவதற்கான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5. கைத்தறி நெசவாளர் நல திட்டங்கள்.—கைத்தறி நெசவாளர்களின் சமூக—பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கும் அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது. தொழிற்கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்தல், உதவித் தொகையுடன் கூடிய சிக்கன நிதி (வருங்கால சேம நிதி) ஏற்படுத்துதல் முதலியவையே மேற்படி திட்ட நடவடிக்கைகள் ஆகும்.

இத்திட்டங்கள் கீழே சுருக்க வகையில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன :—

(i) வீடுவசதி.—நெசவாளர்களுக்குத் தொழில் கூடம் இணைந்த வசதியான வீடுகளை கட்டிக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒரு வீட்டிற்கு அதிக அளவாக ரூ. 3,600 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்படுகின்றது. இதில் ரூ. 2,000 கடனாகவும், ரூ. 1,250 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சிய 350 ரூபாய் அல்லது வீட்டிற்குச் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையில் 10 சதவீதம்—இவ்விரண்டில் எது அதிகமான தொகையோ அத்தொகையை உறுப்பினர்கள் கொடுக்க வேண்டும். இக்கடன் 25 சமமான ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும். வீட்டுவசதி பகுதிகுடியேற்றங்களில் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்துகொடுத்தல், விளக்கு வசதி செய்து கொடுத்தல் போன்ற பொதுவான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 127·65 லட்சம் செலவிட்டு, 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது திட்டத்தின்போது தேசிய நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்ட பின்னர் புதிதாக வீட்டுவசதித் திட்டம் எதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை.

(ii) உதவித்தொகை சிக்கன நிதி (வருங்கால சேமிப்பு நிதி)—திட்டம்:—இத் திட்டத்தின்கீழ் சேமித்து வைக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளும் வகையில் நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், வீடுகட்டுதல் போன்ற பயனுள்ள செயல்களுக்கும், திருமணம் முதலியவை போன்ற அவசியமான சமூக நிகழ்ச்சிகளுக்கும், பிணி, வேலையின்மை போன்ற நெருக்கடிக் காலங்களின் போதும் கடன்களும் முன்பணமும் பெறுவதற்கும் உதவியளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ், நெசவாளர் ஒருவர், தாம் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு வீதம் கொடுக்கிறார். அரசு 4 காசும் சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும் கொடுப்பதால் இந்த நிதிக்கு நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகிறது. இத் திட்டம், 1962-63-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதிக சங்கங்களும் உறுப்பினர்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை—சிக்கன நிதியானது சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு பாங்குகளில் சிக்கன நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொருவருடைய பெயரிலும் 6 சதவீதம்

[1968 மார்ச் 22

வட்டிக்கு முதலீடு செய்யப்படுகிறது. 1966–67 ஆண்டின் முடிவில் பல்வேறு கூட்டுறவு மத்திய பாங்குகளிலும், உதவித்தொகை சிக்கன நிதியானது மொத்தம் 27 லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்துள்ளது.

இத்திட்டத்திற்கு அரசாங்கம் அளிக்கின்ற உதவியின் அளவு கீழே தரப்படுகிறது :—

அட்டவணை XII

| ஆண்டு. | அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூ. லட்சத்தில்) |
| 1966–67 .. .. .. .. .. | 1·80 |
| 1967–68 (மதிப்பிடப்பட்டது) .. .. .. | 1·80 |
| 1968–69 (திட்டமிடப்பட்டுள்ளது) .. .. .. | 2·50 |

**6. ஏனைய திட்டங்கள்.**—பின்வரும் திட்டங்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் வராத நெசவாளர்களின் நலனையும் பொதுவாக கைத்தறித் தொழிலின் நலனையும் நோக்கமாகக் கொண்டவையாகும் :—

**(i) புள்ளி விபரம் திரட்டுதல்.**—இது, இம்மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் கூட்டுறவுத் துறைக்கு வெளியிலும் கைத்தறித் துணிகளின் உற்பத்தி, இருப்பு, விற்பனை ஆகியவைக் குறித்த புள்ளிவிவரங்களை திரட்டுவதற்கான திட்டமேயாகும். மாவட்டங்களின் முக்கிய கைத்தறி உற்பத்தி உள்ளூர் நிலையங்களில் அவ்வப்போது அங்கு மிங்குமாக புள்ளி விவரம் திரட்டும் (Random sampling) முறையை மேற்கொண்டு இத் திட்டம் புள்ளி விவரத்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்கு 1966–67-ல் ரூ. 1·03 லட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ல் ரூ. 1 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-க்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ii) பரிசு அளிப்புத் திட்டம்.**—கைத்தறி துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்கு கூட்டுறவு அமைப்பில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கும் கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களுக்கும் மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் நேரடியான ஊக்கமளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ்வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்கு பரிசளிக்கும் திட்டம் அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 20,000 ரூபாய் அரசாங்கத்தால் செலவிடப்படுகிறது. பரிசுகள் வழங்கப் படுவதற்கான சிறந்த துணிகளை மாவட்டக் கலெக்டர்கள், அரசுப் பணியாளர், அரசுப் பணி சார்பற்றவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவின் உதவியுடன் தேர்ந்தெடுக்கின்றனர்.

**(iii) தமிழ்நாடு கைத்தறி நிதிக் கழகம்.**—முக்கியமாக, கூட்டுறவு அமைப்பிற்கு வெளியேயுள்ள கைத்தறித் தொழிலுக்கும் விசைத் தறித் தொழிலுக்கும் அதன் சார்பான ஏனைய தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் பொருட்டு இக் கழகம் நிறுவப்பட்டுள்ளது. இக் கழகம் ரூ. 50 லட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது. இதில், ரூ. 37·34 லட்சம் கூட்டுறவு அமைப்புக்கு வெளியே உள்ள தறி முதலாளிகளாலும் நெசவாளர்களாலும் கைத்தறித் துணி வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோராலும் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 12·60 லட்சம் ரூபாய் அளவிற்கு மாநில அரசு இக் கழகத்தில் பங்குகளைப் பெற்றுள்ளது. இந்திய ஸ்டேட் பாங்கியிடமிருந்து இக் கழகம் ரூ. 75 லட்சம் கடன்வசதி பெற்றுள்ளது. தொழில் பிரிவுகளையும் பயிற்சிப் பிரிவுகளையும் நிறுவுதல் விரிவுபடுத்துதல், மேம்பாடு செய்தல் அல்லது நவீன முறைப்படுத்தல் மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், பொருள்களை உற்பத்தி செய்தல், தயாரிப்பு முறைக்கு உட்படுத்துதல், பொருள்களைச் சீரமைத்தல், கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்தல் உட்பட விற்பனை செய்தல் போன்ற பணிகளுக்காக இக் கழகம் இதுவரை ரூ. 2·17 கோடி அளவிற்குக் கடன் வழங்கியுள்ளது.



1968 மார்ச் 22]

**7. திட்ட வேலைகளுக்கான நிர்வாகச் செலவு.**—கைத்தறித் திட்ட வேலைகளைச் செயல்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள துறைப் பணியாளர்களுக்கு ஆகும் செலவை ஈடுசெய்ய நிதி உதவியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1966–67-ல் ரூ. 5·46 லட்சம் செலவாகியது. 1967–68-ல் ரூ. 3·61 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-ம் ஆண்டிற்கு ரூ. 4·65 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**8. கைத்தறித் தொழிலுக்கு மூலப்பொருள்கள் வழங்குதல்.**—**(i) பருத்தி நூல்.**—சந்தையில் எல்லா எண் பருத்தி நூல்களும் கிடைக்கின்றன. நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான நூல்களைப் பெறுவதில் எவ்விதத் தொல்லையும் இல்லை. கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவப்பட்டிருப்பதனால் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள் தரமான நூல்களை நியாய விலைகளில் பெறுவதற்கு உதவியாக உள்ளது.

**(ii) செயற்கைப் பட்டு நூல்.**—மாநிலக் துணிக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் பரிந்துரையின்படி, மேற்கு ஜெர்மனியிலிருந்தும் செக்கோஸ்லாவியிலிருந்தும் பெருமளவில் செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்து மாநிலங்களிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு மாநில வாணிகக் கழகத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இம் மாநிலத்திற்கு, 1·85 லட்சம் கிலோ எடையுள்ள செயற்கைப் பட்டு நூல் ஒதுக்கப் பட்டது. அது இம்மாநிலத்திலுள்ள கைத்தறி, விசைத் தறி நெசவாளர்ச் சங்கங்களுக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கைத்தறித் துறை இயக்குநரால் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நூல்களை பெரும்பான்மையோர் பெற்றுக்கொள்ளவே இல்லை. மேற்படி நூலுக்கு மாநில வாணிகக் கழகத்தினால் குறிப்பிடப்பட்ட விற்பனை விலை அசாதாரணமானது என இதற்குக் காரணம் கூறப்பட்டது. எனவே அந்த நூல்களின் விலைகளை கணிசமான அளவிற்குக் குறைக்குமாறு மாநில வாணிகக் கழகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

**(iii) மூலப்பட்டு.**—மைசூர் மாநிலத்தில் முசுக்கட்டைப் பட்டு குறைவாகவே உற்பத்தியாவதனாலும் அயல்நாடுகளிலிருந்து மூலப்பட்டினை இறக்குமதி செய்யக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதனாலும் மூலப் பட்டின் விலைகள் வியக்கத்தக்க அளவிற்கு உயர்ந்து விட்டன. எனவே, பட்டினைக்கொண்டு தயாரிப்புத் தொழில் நடத்துபவர்களுக்கு வழங்குவதற்காக 1967–68-ம் ஆண்டில் 60,000 கிலோ எடையுள்ள மூலப்பட்டினை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்குமாறு மாநில வாணிகக் கழகம் இந்திய அரசை வேண்டிக்கொண்டது. இந்தியாவில் இயற்கைப் பட்டுத் தொழில் செயல்பட்டுவரும் நிலை குறித்து ஆராய்வதற்காக இயற்கைப் பட்டுத் தொழில் ஆய்வுக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது.

**(iv) ஜரிகை.**—பொன் இழை கைத்தறித் தொழிலுக்கு வேண்டியுள்ள மற்றொரு மூலப் பொருளாகும். ஜரிகை விலைகள் வியக்கத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளன. இதன் விளைவாக இம்மாநிலத்தில் கலப்பில்லாத பட்டுத்துணி தயாரிப்போருக்குக் குந்தகமேற்பட்டுள்ளது.

**(v) சாயங்களும் இரசாயனப் பொருள்களும் :**—கைத்தறித்துறை இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், பம்பாயிலுள்ள இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடு இணைத்தலைமை அதிகாரி, மொத்தம் ரூபாய் 20·53 லட்சம் மதிப்புள்ள சாயங்களையும் இரசாயனப் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கு தமிழகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் உட்பட 110 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்மையில் பயன்படுத்துவோர் உரிமங்களை வழங்கியுள்ளார். ஏற்றுமதியைப் பெருக்குவதற்கான ஊக்கமளிக்கும் திட்டத்தின்கீழ்,

16 ஆயிரம் ரூபாய்க்குச் சாயங்களையும் இரசாயனப் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கு கைத்தறித்துறை இயக்குநர் பெயரிலும் ஓர் உரிமம் வழங்கப்பட்டது. கைத்தறித்துறை இயக்குநரின் முகவராகச் செயல் படும் தலைமைச் சங்கம் இந்த உரிமத்தின்படி சாயங்களையும் இரசாயனப் பொருள்களையும் இறக்குமதி செய்து இவற்றை ஒதுக்கி வழங்குவதற்குத் தகுதிபடைத்த கைத்தறி சங்கங்களுக்குப் பகிர்ந்தளிக்கவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கைத்தறித்துறை இயக்குநரின் பரிவுரையின்மேல், நெசவாளர்களுக்குத் தேவையான மூலப்பொருளாகிய பிசினிக்கட்டிகளை சுமார் 4·35 லட்சம் ரூபாய் மதிப்பிற்கு இறக்குமதி செய்வதற்கு ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு இணைத்தலைமை அதிகாரியால் 16 கைத்தறிச் சங்கங் களுக்கு இறக்குமதி உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

9. ஏற்றுமதி.—1961-ம் ஆண்டு முதற்கொண்டு சென்னைத் துறை முகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளின் அளவைக் கீழ்க்காணும் விவர அட்டவணையில் காணலாம்.

| ஆண்டு. | ஏற்றுமதி செய்யப்பட்ட வண்ணம் மாறும் துணி களின் மதிப்பு (ரூ. கோடியில்.) | ஏனைய துணிகள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1961 .. .. | 0·32 | 4·47 | 4·79 |
| 1962 .. .. | 1·91 | 3·53 | 5·44 |
| 1963 .. .. | 3·19 | 3·51 | 6·70 |
| 1964 .. .. | 4·16 | 3·79 | 7·95 |
| 1965 .. .. | 6·16 | 1·39 | 7·55 |
| 1966 .. .. | 0·03 | 3·63 | 3·66 |
| 1967 .. .. | 0·06 | 3·19 | 3·25 |

ஏற்றுமதி செய்யப்பட்ட வண்ணம் மாறும் துணிகளின் மதிப்பு 1961-ல் ரூ. 0·32 கோடியாக இருந்தது. இது 1965-ல் மகத்தான அளவிற்கு ரூ. 6·16 கோடியாக உயர்ந்து விட்டது. இருப்பினும் வண்ணம் மாறும் துணிகளின் ஏற்றுமதியானது 1965-ம் ஆண்டின் பிற்பகுதியிலும், 1966-ம் ஆண்டு முழுவதிலும் குறைந்துவிட்டது. நிலைமை சாதகமாக இல்லாததால், கடல் கடந்த நாட்டுச் சந்தைகளில் முக்கியமானதாயுள்ள அமெரிக்காவில் இத்துணி விற்பனை யாகாமல் தேங்கிவிட்டது. இழந்த சந்தைகளைத் திரும்பவும் அடைவதற் கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இதற்கிடையில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு அகலமான கைக்குட்டைகள் ஏற்றுமதி செய்வது அதிகரித்துள்ளது.

10. பொது.—தமிழ் நாட்டிலுள்ள கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் நெசவாளர்களாயுள்ள உறுப்பினர்களுக்குப் போதுமான அளவு உதவித் தொகை அளித்து வந்துள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்த நிதி உதவி, பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் கீழ் எய்திய சாதனைகள் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த ஆய்வுரையின் I-வது இணைப்பில் தரப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித் தொழில் அடைந்துள்ள நிலைப்பற்றிய புள்ளி விவரங்கள் II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிலில் முக்கியமாக துணி ஆலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலை கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்தைத் தடை செய்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் அவ்வப்பொழுது கைத்தறித் துணிகள்





விற்பனையாகாமல் தேங்கி வந்தன. அரசாங்கம் அவைகளுக்குச் சிறப்பாக கடனுதவி வழங்கி வந்துள்ளது. மேலும், கூட்டுறவுத் துறையில் பணி யாற்றி வரும் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பதற்காக துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. 1966-ம் ஆண்டில் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. அரசாங்கம் ஏற்றுமதி வாணிகத்தை அதிகரிப்பதற் காக தன்னால் இயன்றவற்றைச் செய்து வந்தபோதிலும், ஏற்றுமதி இன்னும் நல்ல நிலையை அடையவில்லை. கூட்டுறவுத் துறையிலும், கூட்டுறவுத் துறைக்கு அப்பாலும் அரசாங்கம் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான உதவிகளைச் செய்துள்ளது. ஆரம்ப நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் அரசாங்கம் போதுமான அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது. ஆரம்ப நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் முக்கிய நிறுவனமாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பணியாற்றுகிறது. இச்சங்கம் தமிழ் நாட்டில் 236 விற்பனைப் பிரிவுகளையும், தமிழ் நாட்டிற்கு வெளியே 110 விற்பனைப் பிரிவு களையும் செயல்படுத்தி வருகிறது. கைத்தறிச் சங்கங்களைப் பொறுத்த வரையில் அவை வியாபார நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். பயன்துய்ப்போரின் விருப்பத்திற்கும், மாறிவரும் நாகரீகத்திற்குமேற்ப அச்சங்கங்கள் தங்கள் உற்பத்தி மாதிரியை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய உற்பத்திப் பொருள்கள் உடனடியாக விற்பனையாகும். இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் பெரும் பான்மையினர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்கள் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்காகவும், அவர் களுடைய சமூக-பொருளாதார முன்னேற்றத்தைப் மேம்படுத்துவதற் காகவும் கைத்தறித் தொழிலுக்கு உதவுவதற்காக அரசாங்கம் பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## இணைப்பு III (அ).

### கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்.

திட்டகாலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் ஆய்வும் 1968–69-க்கான வேலைத் திட்டமும்.

திட்டவாரியான சாதனைகளும் திட்டப்பணிகளும்.

வளர்ச்சித் தலைப்பு : " கிராமத்தொழில்களும், சிறு தொழில்களும்—கைத்தறி ".

நிதி இலக்கு (ரூபாய் இட்சத்தில்).

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்ட செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67-ம் ஆண்டு கணக்குகள். | 1967–68-க் கான திட்ட மதிப்பீடு. | 1967–68-ல் எதிர்பார்க்கப் பட்ட செலவு | 1968–69-க் கான திட்டம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | பங்கு மூலதனம்—நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக்கொள்வது. | 38·23 | 50.00 | 4·16 | 6·00 | 6·00 | 4·00 |
| 2 | தொழில் மூலதனக்கடனுக்கு வட்டி வகையில் வழங்கப்படும் உதவித் தொகை. | 33·69 | 82·00 | 10·50 | 10·00 | 10·62 | 10·00 |
| 3 | ஆராய்ச்சியும் தொழில் நுட்பமும் .. .. | 67·16 | 57·20 | 6·03 | 8·00 | 2·13 | 4·00 |
| 4 | தள்ளுபடி .. .. .. .. .. .. | 314·52 | 315·00 | 64·00 | 60·00 | 64·00 | 60·00 |
| 5 | விற்பனையும் விளம்பரமும் .. .. .. .. | 30·37 | 92·50 | 7·11 | 9·00 | 7·69 | 7·00 |
| 6 | கூட்டுறவு நூற்பு ஆலைகள் .. .. .. .. | 119·81 | 200·00 | 70·00 | 15·00 | 12·20 | 13·00 |
| 7 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. | [11·93 | 21·15 | 0·04 | 0·02 | 0·28 | 1·51 |
| 8 | வீட்டு வசதி .. .. .. .. .. .. | 56·13 | 35·00 | 1·22 | .. | 0·08 | .. |
| 9 | உதவித் தொகை—சிக்கன நிதி .. — .. | 5·16 | 37·50 | 1·80 | 3·00 | 1·80 | 2·50 |
| 10 | பட்டு—செயற்கைப்பட்டு .. .. .. .. .. | 8·52 | 21·25 | 9·13 | 3·38 | 4·29 | 3·38 |
| 11 | பயிற்சி .. .. .. .. .. .. | 3·97 | 10·00 | 1·41 | 1·70 | 1·66 | 1·70 |
| 12 | நிர்வாகப் பணியாளர்களுக்கான உதவித் தொகை. | 3·10 | 5·00 | 0·50 | 1·00 | 0·50 | 1·00 |
| 13 | தலைமைச் சங்கத்திற்கு பங்கு மூலதனம் .. .. | 12·00 | 5·00 | .. | 2·00 | 2·70 | .. |
| 14 | நிர்வாகச் செலவுகள் .. .. .. .. | 23·50 | 30·00 | 5·46 | 4·83 | 3·61 | 4·56 |
| 15 | நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி. | 5·11 | 7·50 | 0·96 | 1·00 | .. | .. |
| 16 | கைத்தறி நிதி உதவிக் கார்போரேஷன் .. | 12·60 | .. | .. | .. | .. | .. |
| 17 | புள்ளி விவரங்களைத் திரட்டுதல் .. .. .. | 4·39 | 6·90 | 1·03 | 1·00 | 1·00 | 1·00 |
| 18 | அரசாங்க நெசவுப் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவு. | 0·06 | .. | .. | .. | .. | .. |
| 19 | நடைமுதல் மூலதனக் கடன்கள் வழங்கிய வகையில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக மத்திய பாங்குகளுக்கு உதவித் தொகை. | 0·05 | .. | 0·10 | .. | 1·29 | 0·50 |
| 20 | விசைத் தறிகள் .. .. .. .. .. .. | .. | 2,16·00 | .. | .. | .. | .. |
| | | 7,50·30 | 11,92·00 | 1,83·45 | 1,25·93 | 1,19·85 | 1,14·47 |

| இனமும், பிரிவும். | மூன்றாவது திட்ட சாதனை. | நான்காவது திட்ட குறிக்கோள் அளவு. | 1966–67-ல் எய்திய சாதனை. | 1967–68-ல் எதிர்பார்க்கப் பட்ட சாதனை. | 1968–69-க்கான குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|
| | | (திட்ட குறிக்கோள் அளவு.) | | | |
| (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ள தறிகள் .. | 61,446 | 50,000 | 4,912 | 2,500 | 5,000 |
| நவீன கருவிகள் .. .. .. .. .. .. .. .. | 2,19,392 | 1,50,000 | 22,402 | 15,000 | 15,000 |
| சிறிய சாயப் பட்டறைகள் .. .. .. .. .. .. .. | 112 | 150 | 2 | 3 | 3 |
| பெரிய சாயப் பட்டறைகள் .. .. .. .. .. .. .. | 1 | 5 | 1 | 1 | .. |
| பாவு அமைத்து கஞ்சிபோடும் இயந்திரம் .. .. .. .. .. | .. | 1 | .. | .. | .. |
| மறைப்புப் படுதா அச்சிடும் (ஸ்கிரீன் பிரிண்டிங்) இயந்திரம் .. .. | .. | 1 | .. | .. | .. |
| ஜரிகை இழை தயாரிப்புப் பிரிவு .. .. .. .. .. .. | .. | 1 | .. | .. | .. |
| எவரெஸ்ட் சுருக்கம் நீக்கம் இயந்திரம் .. .. .. .. .. | .. | 1 | 1 | .. | .. |
| பிற மாநிலங்களில் விற்பனை நிலையங்கள் .. .. .. .. .. | 7 | 10 | 2 | 2 | .. |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பட்டு கிடங்குகளும், விற்பனை நிலையங்களும் .. .. .. .. | 3 | 60 | .. | 2 | 3 |
| ஆயத்த உடைத் தயாரிப்புத் தொழிற்சாலை .. .. .. .. | 1 | 1 | .. | .. | .. |
| கிடங்குகள் (பெரியது) .. .. .. .. .. .. .. | 1 | 2 | .. | .. | 1 |
| ஏற்றுமதி செய்யத்தக்க துணி வகைகள் உற்பத்திக்கான திட்டம் .. | .. | 1 | .. | .. | .. |
| நூற்பு ஆலைகளின் பங்குமூலதனத்தில் மாநில அரசு எடுத்துக்கொண்ட பங்கு. | .. | .. | .. | .. | .. |
| பங்கு மூலதன, ஒரு மொத்தத் தொகை மூலதன உதவி .. .. | .. | 1,000 தறிகள். | .. | .. | .. |
| வீடுகள் .. .. .. .. .. .. .. .. .. .. | 1,181 | .. | .. | .. | .. |
| கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் .. .. .. .. .. | .. | 1,000 | .. | .. | .. |
| நகரப் பகுதிகளிலும் நகரம் போன்ற பகுதிகளிலும் வீடுகள் .. .. | .. | 500 | .. | .. | .. |
| பட்டுத் தறிகள் .. .. .. .. .. .. .. .. .. | 1,102 | 2,500 | 300 | 300 | 300 |
| பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் பங்கு. | .. | 5,000 தறிகள். | .. | .. | .. |
| செயற்கைப் பட்டுத்தறிகள் .. .. .. .. .. .. .. .. | 100 | .. | .. | .. | .. |
| துணி மாதிரி தயாரிப்புத் தொழிற்சாலை நெசவாளர்கள் .. .. .. | 821 | 2,000 | 380 | 400 | 400 |
| கணக்கு முதலியன பார்க்கும் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் .. .. | 495 | 1,000 | 155 | 229 | 200 |

| இனமும் பிரிவும். (9) | (திட்ட இலக்கு.) மூன்றாவது திட்ட சாதனை. (10) | நான்காவது திட்ட இலக்கு (11) | 1966-67-ல எய்திய சாதனை. (12) | 1967-68-ல் எதிர்பார்க்கப் படும் சாதனை. (13) | 1968-69-க்கான குறிக்கோள் அளவு. (14) |
|---|---|---|---|---|---|
| சாயக்காரர்கள் | 49 | 100 | 20 | 20 | 20 |
| பயனடையும் சங்கங்கள் | 351 | 500 | 61 | 50 | 100 |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| நெசவாளர்கள் | 5,118 | 7,500 | 723 | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |
| .. | .. | .. | .. | .. | .. |



1968 மார்ச் 22]

## இணைப்பு II (ஆ).

### தமிழகத்தில் கைத்தறித் தொழில் குறித்த புள்ளி விவரங்கள்.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | மூன்றாம் திட்டத்தின் முடிவில் (1966ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள்) உள்ள நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **கூட்டுறவுத் துறையில்** | | |
| 1 | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை— | | |
| | (a) பருத்தி .. .. .. .. | 842 | 1,049 |
| | (b) பட்டு .. .. .. .. | 5 | 20 |
| | (c) செயற்கைப் பட்டு .. .. .. | 1 | 6 |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 2 | தறிகளின் எண்ணிக்கை .. .. .. | 1·57 | 2·28 |
| 3 | பங்கு மூலதனம் .. .. .. .. | 72·12 | 172·21 |
| 4 | சேம நிதி .. .. .. .. | 79·77 | 177·18 |
| 5 | ஏனைய சேம நிதிகள் .. .. .. | 30·22 | 82·47 |
| 6 | ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் ஊதியம். | 137·88 | 384·17 |
| 7 | வசூலிக்கப்பட்ட சிக்கன நிதி .. .. | 8·29 | 32·60 |
| 8 | நடைமுதல் மூலதனம் .. .. .. | 277·86 | 796·68 |
| 9 | உதவித் தொகை—சிக்கன நிதித் திட்டம்— | | |
| | (a) பங்கு கொள்ளும் சங்கங்களின் எண்ணிக்கை. | .. | 153 |
| | (b) உறுப்பினர்களின் எண்ணிக்கை. | .. | 9,400 |
| | (c) நிதியிலுள்ள மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | .. | 18·80 |
| | (d) [9 (c)] மொத்த நிதியில் அரசாங்கம் வழங்கிய பங்கு (ரூபாய் இலட்சத்தில்). | .. | 6·15 |
| 10 | உற்பத்தி (ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்)— | | |
| | (a) அளவு (கஜம் இலட்சத்தில்) .. | 74·34 | 102·00 |
| | (b) மதிப்பு (ரூபாய் கோடியில்) .. | 8·00 | 13·02 |
| 11 | விற்பனைகள்— | | |
| | (a) மதிப்பு (ரூபாய் கோடியில்) .. | 5·91 | 13·03 |
| 12 | பெரிய சாயப் பட்டறைகள் .. .. | .. | 4 |

[1968 மார்ச் 22

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | மூன்றும் திட்டத்தின் முடிவில் (1966-ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள்) உள்ள நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கூட்டுறவுத் துறையில்—தொடர்ச்சி. | | |
| 13 | சிறிய சாயப் பட்டறைகள் .. .. | .. | 143 |
| 14 | நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்— | | |
| | (a) காலனிகளின் எண்ணிக்கை .. | 2 | 36 |
| | (b) வீடுகளின் எண்ணிக்கை .. | 65 | 2,683 |
| | (c) நிதி முதலீடு (ரூபாய் இலட்சத்தில்). | 1·08 | 127·65 |
| 15 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்— சங்கங்களின் எண்ணிக்கை .. .. | .. | 27 |
| 16 | மாநிலக் கைத்தறிச் சங்கம்— | | |
| | (a) உறுப்பினர்கள் .. .. .. | 999 | 1,083 |
| | (b) பங்கு மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 6·14 | 36·25 |
| | (c) துணி கொள்முதல் (ரூபாய் இலட்சத்தில்). | 136·21 | 377·40 |
| | (d) துணி விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 140·16 | 383·22 |
| | (e) நூல் கொள்முதல் (பேல்களின் எண்ணிக்கை). | 10,329 | 25,225 |
| | (f) நூல் விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). | 10,671 | 27,504 |
| | (g) சாயப் பொருள்கள் (ரூபாய் இலட்சத்தில்). | .. | 33·68 |
| | (h) கச்சாப் பட்டு (ரூபாய் இலட்சத்தில்). | .. | 1·13 |
| | (i) ஜரிகை (ரூபாய் இலட்சத்தில்) .. | .. | 0·11 |
| | (i) செயற்கைப் பட்டு (ரூபாய் இலட்சத்தில்) | .. | 5·12 |
| | (k) விற்பனைப் பிரிவுகளின் எண்ணிக்கை— | | |
| | மாநிலத்தில் .. .. .. | 258 (ஒருங்கிணைந்த மாநிலத்தில் | 236 (சென்னை லாபமற்ற பிரிவுகள் மூடப்பட்டன.) |
| | மாநிலத்திற்கு வெளியே .. .. | 23 | 110 |
| | (l) சேமநிதி (ரூபாய் இலட்சத்தில்) .. | 5·15 | 11·76 |
| | (m) நடைமுதல் மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 92·91 | 161·83 |
| | (n) சங்கத்தின் மூலதனத்தில் அரசாங்கத்தின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்). | .. | 18 |
| | (o) சங்கத்தின் ஏற்றுமதி .. .. | | (ரூபாய் 32,329 |



1968 மார்ச் 22]

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | மூன்றும் திட்டத்தின் முடிவில் (1966-ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள்) உள்ள நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கூட்டுறவுத் துறையில்—தொடர்ச்சி. | | |
| 17 | கூட்டுறவு நூற்பு ஆலைகள்— | | |
| | (a) மொத்தக் கதிர்கள் .. .. | .. | 1,64,360 |
| | (b) ஆண்டு உற்பத்தித் திறன் (பேல்கள் ஆண்டுக்கு). | .. | 66,000 |
| | (c) ஆலைகளுக்குகான மொத்த மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்). | .. | 9 |
| 18 | தமிழ்நாடு கைத்தறி நிதிக் கார்ப்பொரேஷன். | .. | 1 |
| | (a) கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் (ரூபாய் இலட்சத்தில்). | .. | 217 |

## இணைப்பு II (இ)

### 1967-ம் வருடத்திய கூட்டுறவு நூற்பாலைகளின் நடைமுறை பலன்கள்.

| தொடர் எண்ணும், கூட்டுறவு நூற்பாலைகளின் பெயரும். | அமைப்பு திறனளவு | தினசரி சராசரியாக ஒவ்வொரு முறைநகரும் இயங்கும் கதிர்களின் எண்ணிக்கை | 1967-ம் வருடத்தில் வேலை செய்த மொத்த நாட்கள் | 1967-ம் வருடத்தில் தயாரித்த நூல் மொத்த அளவு (கிலோவில்). | 1967-ம் வருடத்தில் விற்ற நூல் மதிப்பு (ரூபாயில்). | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 தென் இந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை— [ஏ] பிரிவு .. | 17,600 | 15,943 | 285 | 855,820 | 61,73,497 | மூன்றும் முறை மாற்று [ஏ] பிரிவில் மட்டும் 6—11—67 முதல் புகுத்தப் பட்டது. |
| [பி] பிரிவு .. | 12,096 | 11,480 | 284½ | 189,138 | 30,15,436 | |
| 2 திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிபுத்தூர். | 12,544 | 11,432 | 276 | 556,793 | 38,01,895 | |
| 3 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருச்செந்தூர். | 13,200 | 11,763 | 288 | 714,959 | 58,28,630 | |
| 4 சேலம் கூட்டுறவு நூற்பாலை, சேலம் .. .. | 12,320 | 11,780 | 285 | 299,208 | 38,41,278 | |
| 5 மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மதுரை .. | 12,000 | 9,740 | 263 | 1,009,508 | 59,12,240 | |
| 6 கோயம்புத்தூர் மாவட்ட நூற்பாலை, தாராபுரம். | 12,000 | 10,488 | 284 | 948,088 | 58,16,951 | |
| 7 திருச்சி மாவட்ட நூற்பாலை, கரூர், திருச்சி .. | 12,000 | 11,078 | 286 | 824,785 | 55,87,801 | மூன்றும் முறை மாற்று இந்த நூற்பாலையில் 13—9—1967 முதல் புகுத்தப்பட்டது. |
| 8 கன்னியாகுமரி மாவட்ட நூற்பாலை, அரம்போலி .. | 12,000 | 9,843 | 275 | 636,413 | 43,08,879 | மூன்றும் முறைமாற்று 25—9—1967 முதல் புகுத்தப்பட்டது. |
| 9 காஞ்சீபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை காஞ்சீபுரம். | 12,312 | 9,184 | 277 | 236,761 | 21,64,749 | |
| 10 தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சாரம். | 12,096 | 8,965 | 246 | 204,691 | 24,42,327 | |
| 11 வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, வேலூர். | 12,096 | 11,538 | 289 | 334,911 | 42,22,993 | |
| 12 தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு. | 12,096 | 9,540 | 270 | 186,705 | 25,00,899 | |
| | 164,360 | .. | .. | 6,997,780 | 5,56,17,575 | |



## இணைப்பு III

[317-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### பெருந்தொழில்களும் நடுத்தரத் தொழில்களும்

#### முகவுரை

உழவையே பெருந்தொழிலாகக் கொண்ட தமிழ் நாடு தொழில்துறையில் சிறிது முன்னேற்றமடைந்த ஒரு மாநிலமாக உருமாறியிருப்பது, நாட்டின் விடுதலைக்குப் பிறகு இன்றைய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. சிறிய நிலப்பரப்பு, அடர்ந்த மக்கள் தொகை, நாளும் பல்கி வரும் மக்களின் பெருக்கம்; கனிவளம், எரி பொருள், காட்டுவளம், சில நேரங்களில் நீர் வளம் முதலிய குறைபாடுகள் இருந்தும், இவற்றின் இடையை தமிழகத்தில் இப்பெருமாற்றம் ஏற்பட்டுள்ளதை எண்ணிப் பார்த்தால், இதன் சிறப்பு மேலும் மிளிர்வதைக் காணலாம். ஆயினும் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கும், தொழில் துறையில் தொடர்ந்து முன்னேறுவதற்கும் ஏற்ற சில கூறுகள் உள்ளன. புதிய தொழில்களைத் தொடங்கும் வண்ணம் நிலவுகின்ற இனிய பொருளாதாரச் சூழல், செவ்விய நிர்வாக அமைப்பு, சிறந்த பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழிலாளர்களும் திட்டமிட்ட அளவிற்குப் போதிய எண்ணிக்கையில் கிடைத்தல் ஆகியவையே இந்தக் கூறுகளாகும். கடந்த ஆண்டில் இத்தகைய வாய்ப்பான நிலைமைகள் தொடர்ந்து நிலவியதோடு அவை வளரவும் வகை செய்யப்பட்டது. இவ்வாறு, இது வளர இம்மாநிலம் இத்துறையில் அடைந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து பேணிவரத்தக்க நிலையில் இம்மாநிலம் உள்ளது.

தற்காலப் பொறியியல் தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவற்றை நிறுவியிருப்பது நமது மாநிலத்தின் வளமாய் தொழில் வளர்ச்சியினைச் சிறப்புற எடுத்துக் காட்டுவதாகும். இரண்டாவது திட்டக் காலத்தில் குறிப்பாக அதன் பிற்பகுதியில் நடுத்தர பெருமளவு உற்பத்தி நிறுவனங்களுக்கான பல தொழிலுரிமங்கள் பெறப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டன.

மூன்றாவது திட்டக்காலம் தொழிற் துறையில் இதுகாறும் ஏற்பட்ட முன்னேற்றத்தை ஒன்று திரட்டி நிறை வேற்றும் மற்றுமோர் வளர்ச்சிப் படியைக் கண்ணுற்றது. தமிழகத்தும் புறத்தும உள்ள தொழிலதிபர்கள், இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக தங்கள் மூலதனத்தை முதலீடு செய்து, இம்மாநில அரசாங்கத்தின் தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு ஆக்கம் அளித்தனர்.

என்றாலும், தமிழ் நாட்டில் இயற்கை வளங்கள் சில போதிய அளவில் இல்லை. இதனால், நமக்குத் தொழில் துறையில் தொடர்ந்து சில இடர்ப்பாடுகள் இருந்து வருகின்றன. எனவே அரசாங்கம் ஆக்கம் தரும் புதிய துறைகளை வளர்க்கப் பெரிதும் ஆர்வங்கொண்டுள்ளது. இதற்கு வேண்டிய பெருந் திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. இம்மாநிலத்தின் உற்பத்தி அமைப்பில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படக்கூடிய இடைவெளிகளைக் குறித்து ஆய்வு செய்து, அவசியமான திட்டங்களுக்கு ஆதரவு நல்கி, அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தொழில் முனைவர்களுக்கு வேண்டிய உரிமங்களை வாங்கித் தருதல், கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற உதவியளித்தல், அடிப்படைத் தேவைகளான நிலம், நீர், மின் விசை, தொழில் நுட்பப் பணியாளர், தொழில் நுட்ப ஆலோசனை ஆகிய இவை அனைத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற இந்த நோக்கங்களைக் கொண்டதுதான் இம்மாநில அரசாங்கத்தின் தொழிற் கொள்கையாகும். எந்த உற்பத்தித் துறைகளான உற்பத்திப் பி[illegible]

[1968 மார்ச் 22

ஒரு பகுதி நாட்டின் பாதுகாப்பினைக் கருதி கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறையிலோ இருந்தாக வேண்டியுள்ளதோ, அந்த உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலைவாசிகள் மீது உள் நாட்டில் ஓரளவிற்குக் கட்டுபாடு செய்யும் நோக்கத்துடன் அரசு அந்த உற்பத்திப் பிரிவுகளை மட்டும் தானே சொந்தமாக நிறுவ முன் வந்துள்ளது. தனிப்பட்ட தொழிலதிபர்கள் தொழில் தொடங்க முன் வராத அல்லது முன்வர இயலாத தொழில் துறைகளிலும் அரசாங்கம் அத் தொழில்களைத் தானே தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வண்ணம், தமிழ் நாட்டில் தொழில் துறையில் தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்குப் பெருமளவில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்து வருகிறது. இக்காரணத்தால் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி வேகம் பேணப்பட்டு வருவதுடன் அது பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியின் சில முக்கியமான குறியீடுகளை கவனித்தோமானால், தொழில துறையில் தமிழ்நாடு சாதித்துள்ள மாபெரும் முன்னேற்றம் தெளிவாக விளங்கும். உதாரணமாக, தொழிற் பணிகளுக்கு இம்மாநிலத்தில் 1956–57-ம் ஆண்டில் 56 கோடி யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருக்க, இந்த அளவு 1966–67-ம் ஆண்டு 177·3 கோடி யூனிட்டாக உயர்ந்துளளது. மொத்தம் விற்பனையான மின் சக்தி அளவில் இது 53 : 47 என்ற விகிதத்திலுள்ளது. (நெய்வேலி, மைசூர், கேரள மாநிலங்களிடமிருநது வாங்கிய மின் சக்தி உட்பட) கடந்த 10 ஆண்டுகளில் உற்பத்தியான மின்சாரத்தின் அளவையும் அக்கால அளவில் தொழில் துறைகள் பயன்படுத்திய அளவையும், 2-ம் பக்கத்திலுள்ள வரிவடிவப் படம் விளக்கிக் கூறுகிறது. 1967-ம் ஆண்டில் பொதுத் துறையில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட 11 வணிக நிறுவனங்களும், தனியார்துறையில் அத்தகைய 83 நிறுவனங்களும் இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டன. இவற்றின் அதிகாரம் பெற்ற மொத்த மூலதனம் ரூ. 788 லட்சமாகும். தொகை செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 15·38 லட்சமாகும் 1967-ம் ஆண்டில் மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாடு அதிகாரி தனிப்பட்டவர்களின் தொழில் மூலதன வெளியீட்டுக்கு அனுமதியளித்தது பற்றிய தமிழ் நாடு, அனைத்திந்தியப் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | மூலதன வெளியீடுகளின் எண்ணிக்கை | | இசைவளித்த தொகை. | |
|---|---|---|---|---|
| | இந்தியா. | தமிழ்நாடு மட்டும். | இந்தியா. | தமிழ்நாடு மட்டும். |
| | | | (ரூ. லட்சத்தில). | |
| தொடக்க நிலை .. .. .. | 27 | 3 | 5,235·02 | 482·50 |
| மேற்கொண்டும் .. .. .. | 62 | 5 | 5,821·70 | 238·63 |
| பூரிப்பு பங்குகள் .. .. .. | 344 | 43 | 4,784·61 | 549·55 |
| கடன் பத்திரங்கள் .. .. | 22 | 3 | 4,010·00 | 270·00 |
| கடன்கள் முதலானவை .. .. | 26 | 5 | 3,611·16 | 1,308·72 |
| மொத்தம் .. | 481 | 59 | 23,462·49 | 2,849·40 |

[மேலே கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் குறித்தவையாகும். 1966-ம் ஆண்டு மூலதன முதலீட்டு (விலக்களிப்பு) திருத்த ஆணையின்கீழ் கொடுக்கப்பட்ட "இசைவு"களின் கீழும் "ஆட்சேபமில்லை" என்ற அறிவிப்புகள் கீழும் உள்ளவையும் இவற்றி லடங்கும்.]



1968 மார்ச் 22]

மூன்று திட்டக் கால அளவிலும் 1967 டிசம்பர் வரையிலும், துணியாலைத் தொழில் நீங்கலான பல்வேறு தொழில்களுக்கு 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொழில்கள். | முதல் திட்டம். | இரண்டாம் திட்டம். | மூன்றாம் திட்டம். | 1967 டிசம்பர் வரையில். | மொத்தம். | நிறைவேற்றப்பட்ட உரிமங்கள் (நிறைவேற்றப்பட்டு வரும் உரிமங்கள்) | தொழில் அமைக்கப்பட்டு வரும் உரிமங்கள். | ரத்து செய்யப்பட்டவை, வேண்டாமெனத் திருப்பிக் கொடுக்கப் பட்டவை முதலியன. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| உலோகவியல் .. .. .. | 9 | 59 | 45 | 4 | 117 | 61 | 28 | 28 |
| பொறியியல் (இயந்திரத் துறை) .. | 16 | 130 | 73 | 6 | 225 | 153 | 45 | 27 |
| பொறியியல் (மின்சாரத் துறை) .. | 4 | 45 | 25 | 6 | 80 | 49 | 22 | 9 |
| ரசாயன உரங்கள்— | | | | | | | | |
| ரசாயனத் துறை | | | | | | | | |
| நேர்த்தியான ரசாயனப் பொருள்கள் P.V.C. பூச்சு வர்ணங்கள், வெடி மருந்துகள், பூச்சிக் கொல்லிகள் முதலியவைகள். | 19 | 48 | 31 | 5 | 103 | 71 | 17 | 15 |
| உணவு— | | | | | | | | |
| உணவுப் பொருள்கள், சர்க்கரை சாராயம், மாவு, தாவர எண்ணெய் வனஸ்பதி முதலியன. | 11 | 33 | 43 | 4 | 91 | 56 | 19 | 16 |
| பலவகை— | | | | | | | | |
| காகிதம், சோப்பு, ஒப்பனைப் பொருள்கள், கண்ணாடி, மட்பாண்டங்கள், சிமிட்டி, வெட்டு மரப் பொருள்கள் முதலியன. | 9 | 66 | 37 | 5 | 117 | 84 | 17 | 16 |
| மொத்தம் .. | 68 | 331 | 254 | 30 | 733 | 474 | 148 | 111 |

துணியாலைத் தொழிலைப் பொறுத்தவரையில், கடந்த 10 ஆண்டுகளில் ஆலைகளின் எண்ணிக்கை, திறன் இவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியினைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் உணர்த்தும்:—

| ஆண்டு. | நூற்பாலைகளின் எண்ணிக்கை. | நூற்பு-நெசவு ஆலைகளின் எண்ணிக்கை. | ஆலைகளின் மொத்த எண்ணிக்கை. | கதிர்கள். | தறிகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1—1—1956 .. | 58 | 24 | 82 | 2,171,276 | 8,016 |
| 1—1—1961 .. | 109 | 25 | 134 | 3,141,841 | 7,346 |
| 31—12—1966 .. | 158 | 25 | 183 | 3,787,860 | 9,404 |
| 1—7—1967 .. | 166 | 24 | 190 | 3,917,498 | 9,360 |

இம்மாநிலத்தின் மொத்த வருமானமும், மாநில வருமானத்திற்கு தொழில்துறையளிக்கும் பங்கும் தொடர்ந்து பெருகி வந்துள்ளன

1960–61 ஆண்டில் மாநில வருமானத்தில் 15·3 சத வீதத்தினை தொழில் துறை தன் பங்காக வழங்கியது. இது 1966–67-ம் ஆண்டில் 19·87 சத வீதமாக உயர்ந்தது. இதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:—

அட்டவணை

தொழில்கள் மூலம் மாநிலத்தின் வருமானம்—தமிழ்நாடு

(நடப்பு விலைகளில்—தற்காலிகமானவை.)

| ஆண்டு. | மாநிலத்தின் மொத்த வருமானம். | இரண்டாம் நிலைத் துறைமூலம் வருவாய் (சுரங்கம், தயாரிப்பு, சிறு தொழில்கள் முயற்சிகள் முதலியன). | மாநிலத்தின் மொத்த வருமானத்தில் இரண்டாம் நிலை துறைமூலம் வந்த வருவாயின் சத வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. கோடியில்.) | |
| 1960–61 .. .. | 1,129·61 | 172·97 | 15·31 |
| 1961–62 .. .. .. | 1,222·64 | 195·20 | 15·96 |
| 1962–63 .. .. .. | 1,265·20 | 216·35 | 17·10 |
| 1963–64 .. .. .. | 1,385·27 | 240·54 | 17·36 |
| 1964–65 .. .. .. | 1,532·82 | 277·59 | 18·11 |
| 1965–66 (முதல மதிப்பீடு). | 1,622·82 | 316·54 | 19·51 |
| 1966–67 (விரைவு மதிப்பீடு). | 1,763·46 | 350·36 | 19·87 |

குறிப்பு.—1960–61 முதற்கொண்டு காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகள், புது டில்லியிலுள்ள மத்தியப் புள்ளி விவர நிறுவனம் உருவாக்கியுள்ள புள்ளி விவர தர முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன.

மத்திய அரசுத் துறையிலும், மாநில அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும், வேலைத் திட்டத்தின் முக்கியமான வளர்ச்சிக் கூறுகள் அடுத்துவரும் பாராக்களில் கூறப்பட்டுள்ளன.

## மத்திய அரசுத் துறை

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு பொதுத்துறை ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத் தக்கதாகும். மத்திய அரசுத் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால், இம்மாநிலத்தில் ரூ. 357 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் தொடங்கப்படவிருக்கும் எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை (Madras Refineries Ltd.), சென்னை உரத் தயாரிப்புத் தொழிற்சாலை (Madras Fertilisers Ltd.) இவற்றிற்கான செலவு மதிப்பீடும் மேற்கூறியமைய அரசு முதலீட்டில் அடங்கும். இதன் காரணமாக, 46,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம், இம்மாநிலத்திலுள்ள பல்வேறு பொதுத் துறை வேலைத் திட்டங்களில் முதலீடு செய்துள்ளதும், முக்கியமான காரணங்களுள் ஒன்றாகும். இதைக் கீழ்க்கண்ட புள்ளி விவர அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.





| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | மூலதன முதலீடு. | தயாரிப்புப் பொருள்கள். (ஆண்டு) திறன். | தயாரிப்புப் பொருள்கள். உற்பத்தி. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூ. லட்சத்தில்.) | | | (எண்ணிக்கை.) |
| நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி. | 16,632·11 (31–12–67 அன்றுள்ளபடி.) | பழுப்பு நிலக்கரி 63 லட்சம் டன். நைட்ரஜன் 46 சத வீதம் அடங்கிய யூரியா உரம் 152,000 டன். சுட்ட அச்சக்கரி 380,000 டன். கார்பயின்கள் 129,000 டன். எரி எண்ணெய் 50,000 டன். கார்பாலிக் அமிலம் 1,341 டன். பாலிவேலண்ட் பினைல் 1,404 டன். ஆர்தோ கிரிசால் 1,431 டன். சைலோனுல்ஸ் 582 டன். இலேசான எண்ணெய் 300 டன். வெள்ளைக் களிமண் 6,000 டன். | பழுப்பு நிலக்கரி 2,334,066 டன். மின்சக்தி உற்பத்தி (நிகரம்) 1,258 M.K.W. மணி. யூரியா 41,908 டன். சுட்ட அச்சக்கரி 68,135 டன் (1–4–67 முதல் 31–12–67 வரை). | 17,218 |
| 2 இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர், சென்னை. | 3,155·00 (31–3–67 அன்றுள்ள படி). | 700 பெட்டிகள் (அகலப் பாதை மூன்றும் வகுப்புப் பெட்டிகளின் கணக்கில்). | கூடுகள் 474, மெத்தை முதலியன வைக்கப்பட்ட பெட்டிகள் 514 (1967–68 டிசம்பர் வரை) உற்பத்தி மதிப்பு ரூ. 1,128 லட்சம். | 10,700 |
| 3 அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புச்சாலை, நந்தம்பாக்கம், சென்னை. | 434·00 (தோராயமாக). | அறுவை சிகிச்சைக் கருவிகள் 25 லட்சம் கருவிகள். | 52,800 கருவிகள் (1967 ஏப்ரல் முதல் 1967 டிசம்பர் வரை) உற்பத்தி மதிப்பு ரூ. 9,49,687). | 1,135 |
| 4 இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், கிண்டி, சென்னை. | .. | டெலிபிரிண்டர்களும் அவற்றுடன் இணைந்த கருவிகளும் (1970–71-ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது 8,500 இயந்திரங்கள். | 2,640 இயந்திரங்கள் (1967 ஏப்ரல் முதல் 1967 டிசம்பர் வரை) (உற்பத்தி மதிப்பு ரூ. 124·80 லட்சம்). | 928 |
| 5 இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்புக் கம்பெனி லிமிடெட், உதகமண்டலம். | 1,074·08 31–12–67 அன்றுள்ள படி). | சினிமா பிலிம் பாசிடிவ் (டயாபாசிடிவ் உட்பட) சதுர மீட்டரில் 2,000,000. சினிமா நெகடிவ் பிலிம் 5,00,000. சினிமா ஒலிப்படம் 5,00,000. | சதுர மீட்டரில் (1–4–67 முதல் 31–12–67 வரை) 481,000 (மதிப்பு ரூ. 61.77 லட்சம்). | 1,212 |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும் (1) | மூலதன முதலீடு. (2) (ரூ. லட்சத்தில்) | தயாரிப்புப் பொருள்கள் — (ஆண்டு) திறன் (3) | தயாரிப்புப் பொருள்கள் — உற்பத்தி (4) | வேலை வாய்ப்பு (5) (எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | மருத்துவ எக்ஸ்ரே பிலிம்கள் 10,00,000.<br>உருவப்படம் எடுக்கும் பிலிம் 50,000.<br>அச்சுருவப் படம் 50,000.<br>பிலிம் சுருள் 5,00,000.<br>லெய்கா (Leica) 50,000.<br>போட்டோ காகிதம் 15,00,000. | 43,500 (மதிப்பு ரூ. 14.95 லட்சம்). | |
| 6 உயர் அழுத்தக கொதிகலன் தொழிற்சாலை, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி. | 2,324.00 | கொதிகலன் துணைப் பகுதிகள் 32,000 டன்.<br>உயர் அழுத்த வால்வுகளும் சில விரைவு கொதிகலன்களும் (Package Boilers) 1,800 டன். | 7,150 டன் (மதிப்பு ரூ. 7 5 கோடி).<br>7,450 வால்வுகள் (பல அளவுகளுள்ளவை) (மதிப்பு ரூ. 45 லட்சம்). | 5,14⁵ |
| 7 கனரக வண்டிகள் (டாங்குகள்) தொழிற்சாலை, ஆவடி, சென்னை. | 1,727.00 | நடுத்தர டாங்குகள் .. .. .. | உற்பத்தியிலுள்ளது .. .. | .. 690 (5,000 பேருக்கு வேலை வாய்ப்பு). |
| 8 படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி. | 1,200.00 (தோராயமாக). | .... | 3–7–1966–ல் தொடங்கப்பட்டது. | .. 3,500 பேருக்கு வேலை வாய்ப்பு. |
| 9 சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை, மணலி, சென்னை. | 4,479.00 (திட்டமிட்டுள்ளது). | ஆண்டு ஒன்றுக்கு டன்கள்—<br>குறைந்த அழுத்த காசலின் 1,666<br>காசலின் 9,416<br>நாப்தா 25,000<br>உயர்ந்த மண்ணெண்ணெய் 33,666<br>கடுவேக டீசல் எண்ணெய் 42,833<br>உயவு எண்ணெய் 16,666<br>எரி எண்ணெய் 2,500<br>தார் 6,666<br>கந்தகம் 1,166 | 31–12–1967 பணியில் மொத்த முன்னேற்றம் 55.05 சத வீதமாகும். | 66 (400 பேருக்கு வேலை வாய்பு). |
| 10 சென்னை உரத் தொழிற்சாலை, மணலி, சென்னை. | 5,500.00 (மதிப்பீடு). | யூரியா 210,000 டன். .. .. ..<br>அமோனியா 243,000 டன்.<br>கலப்பு உரம் 360,000 டன். | கட்டுமானத்திற்கு முற்பட்ட நிலை. | .. .. |



1968 மார்ச் 22]

## நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம்

இத்திட்டத்திற்கு ரூ. 166·32 கோடி மூலதன முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில், 17,000 பேருக்கு வேலைவாய்ப்பு உள்ளது. இந்த வேலைத் திட்டம் இம்மாநிலத்தின் பொதுத்துறை திட்டங்களிலே தலை சிறந்த திட்டமாகத் திகழ்கின்றது. ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி வேலைத் திட்டத்தில் நான்கு பெருந்திட்டங்கள் உள்ளன. சுரங்கம் வெட்டி பழுப்பு நிலக்கரி எடுத்தல், மின்சக்தி உற்பத்தி, உர உற்பத்தி, சுட்ட அச்சுக் கரி உற்பத்தி ஆகியவை இந்த நான்கு பெருந் திட்டங்களாகும். சுரங்கப் பணியின் முதல் நிலையில் ஆண்டு ஒன்றிற்கு 35 லட்சம் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும். முடிவில் ஆண்டு ஒன்றுக்கு 63 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுககப்படும். வெட்டி எடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி கீழ்க்கண்டவற்றிற்குப் பயன் படுத்தப்படும் :—

(i) மின்சத்தி உற்பத்தி செய்தல் (தற்போதைய 400 மெகாவாட் உற்பத்தியளவு 600 மெகாவாட்டாக உயர்த்தப்படும்).

(ii) ஆண்டொன்றுக்கு 1,52,000 டன் யூரியா உரம் உற்பத்தி செய்தல், இந்த உரத்தில் 46 சதவீதம் நைட்ரஜன் கலந்திருக்கும்.

(iii) வீடுகளில் பயன்படுத்தப்படுவதற்காக ஆண்டொன்றுக்கு 3,80,000 டன் சுட்ட அச்சுக்கரி உற்பத்தி செய்தல், இவற்றைத் தவிர, சார்பைன்ஸ் (Charfind) எரி எண்ணெய், கார்பாலிக் அமிலம், பாலி வெலண்ட்பினைல், ஆர்தோகிரீசால், மெட்டாகிரசால், பாராகிரசால், க்ஸைலினோல் (Xyland) பழுப்பு நிலக்கரி எண்ணெய் முதலிய பொருள்களும் உற்பத்தியாகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 6,000 டன் வெள்ளைக்களிமண் உற்பத்தி செய்யப்படும்.

திட்டப்பணி முன்னேற்றம்—இந்த நான்கு திட்டங்களின்கீழும் உற்பத்திப்பணி நடந்தேறி வருகிறது. அனல் மின்சாரத் திட்டத்தின்கீழ் ஏழாவது மின் உற்பத்திப் பிரிவு (100 மெகாவாட்) இந்த ஆண்டுத் தொடக்கத்தில் மின்சார இணைப்புடன் இணைக்கப்பட்டது. இத்துடன் அனல் மின்சார நிலையத்தின் உற்பத்தி அளவை 250 மெகாவாட்டிலிருந்து 400 மெகாவாட்டாக உயர்த்தும் பணி முடிவுற்றது. மின் உற்பத்தியளவினை 400 மெகாவாட்டிலிருந்து 600 மெகாவாட்டாக உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 1969-ம் ஆண்டில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. உரத்தொழிற்சாலையை விரிவு படுத்துவதற்கும், பல வகையான பொருள்களைத் தயாரிப்பதற்கும் சில செயற்குறிப்புகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் துணைப் பொருள்களைக் கொண்டு வேறு பல பொருள்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளைத் துவக்குவது இயலுமாவென்கிற ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கருதப்படுகிறது.

## இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலை

பொதுத்துறையில் சென்னையில் நிறுவப்பட்ட மிகப்பெரிய தொழிற்சாலை இதுவேயாகும். இதில் 11,000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிற்சாலை 1955-ம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும். ஆண்டொன்றுக்கு 700 இரயில் பெட்டி தயாரிப்பதென்ற, இதன் முழு உற்பத்தியளவை இது எட்டிவிட்டதென்றே சொல்லலாம். இத்தொழிற்சாலையில் இரண்டு ஷிப்டுகளில் வேலை நடக்கிறது. இந்தத் தொழிற்சாலை இப்பொழுது தனது உற்பத்தி அமைப்பினை பலவகைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் உற்பத்திப் பணி பெருகி தற்போது 22 வகை இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. தானியங்கி டீசல் இரயில்கார்கள், மோட்டார் கோச் வண்டிகள், உலாவு வண்டிகள், சுற்றுலா வண்டிகள உட்பட 25 கிலோவாட் ஏ.ஸி. மின்சார பல யூனிட் வண்டிகள் போன்ற பலவகைச் சிறப்பினப் பெட்டிகளும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. வெப்ப நிலை சீர் செய்யப்பட்டு, சீர் வசதிகள் உள்ள வண்டிகள் நான்கினை அகலப் பாதைக்காகத் தயாரிக்கும் பணியிலும் இத்தொழிற்சாலை ஈடுபட்டுள்ளது. சீர் வசதி பெற்ற இவ்வண்டிகளில் ஒரு முனையில் ஒன்றாக இரண்டு

ஜெனரேட்டர் கார்களிருக்கும். மேலும் வெப்பநிலை சீர் செய்யப்பட்ட நான்கு பெட்டிகள் (மூன்றும் வகுப்பு சங்கிலித் தொடர் பெட்டிகள்) வெப்பநிலை சீர் செய்யப்படாத ஒரு பெட்டி (இதில் ஒன்று மூன்றடுக்கு வகையினதாகவும், மற்றொன்று இரண்டடுக்கு வகையினதாகவும் இருக்கும்). இத் தொழிற்சாலை மற்ற வகைகளுடனகூட, அகலப்பாதை, இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் 50 தயாரித்துள்ளது. இவற்றில் அமர்ந்து செல்லவும், இரவில் தூங்குவதற்கும் வசதி இருக்கும். இத்தொழிற்சாலை குறுகிய பாதை டீசல் இரயில் கார்கள் பத்தினைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இத்தொழிற்சாலை பல நகரங்களை இணைக்கும் கடுவிசைப் பெட்டிகளையும் விரைவில் தயாரிக்கத் தொடங்கும். இந்த இரயில் பெட்டிகள் சீர் வசதி கடுவிசை இரயில் பெட்டிகளைப் போலவே இருக்கும்.

அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை அதிகமாக இருப்பதன் காரணமாக இரயில் பெட்டியில் அந்நியப் பகுதிகளுக்குப் பதிலாக, உள்நாட்டில் தயாரிக்கப்படும் பகுதிகளை பயன்படுத்துவதிலும் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. இரயில் பெட்டிகளுக்கு வேண்டிய பல பகுதிகளும், கிண்டி தொழிற்பேட்டை, அம்பத்தூர் தொழிற்பேட்டை போன்ற சென்னை நகரைச் சுற்றியுள்ள தொழில் பிரிவுகளிலிருந்தும், சென்னையிலுள்ள தொழில் பிரிவுகளிலிருந்தும் கிடைக்கின்றன.

### அறுவை மருத்துவ சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் திட்டம்

இந்திய மருந்துகள் — மருந்துப் பொருள் லிமிடெட் என்னும் நிறுவனம் ரஷ்யாவின் உடனுழைப்புடன சென்னையிலேயே அறுவைக கருவிகள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை ஆண்டு ஒன்றுக்கு 25 லட்சம் கருவிகளைத் தயாரிக்கும் வகையில் ஏற்படுத்தியுள்ளது. இத்தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு, 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதியன்று கருவிகளை உற்பத்தி செய்யத் தொடங்கியது. 1967 ஏப்ரல் முதல் 1967 டிசம்பர் வரை ஒன்பது திங்களில் 52,800 கருவிகள் உற்பத்திசெய்யப்பட்டன, இந்தத் தொழில் நிறுவனம் குடும்ப நலத்திட்டக் கருவிகளை தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. உற்பத்தியிலிருக்கும் கருவிகள் உட்பட, உற்பத்தி செய்த கருவிகளின் மதிப்பு ரூ. 9,49,687 ஆகும். மயக்க மருந்து ஊசி முதலானவற்றைத் தயாரிப்பது முதற்கொண்டு இத்தொழிற்சாலைகள தயாரிக்கப்படும். பொருள்களைப் பலவகைப் படுத்தவும் விரிவு படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### இந்துஸ்தான் டெலிபிரிண்டர்கள் நிறுவனம்

இந்துஸ்தான் டெலிபிரின்டர் நிறுவனம் இந்திய அரசுக்கு முழுதும் உரிமையுள்ள நிறுவனம் ஆகும். முதல் நிலையில் ஆண்டொன்றுக்கு 1,300 டெலிபிரின்டர்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. இறக்குமதியான உதிரிப் பகுதிகளை இணைப்பது மூலம் 1961–62-ல் 270 டெலிபிரின்டர்கள் தயாரிக்கப்பட்டன. 1967–68-ல் 3,500 டெலிபிரின்டர்களைத் தயாரிக்கும் நிலையை அந்த நிறுவனம் அடைந்துள்ளது அவற்றில் 90 சதவீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்தவையாகும். இருமுறை வேலை அடிப்படையில் 8,500 இயந்திரங்களைத் தயாரிக்கும் வகையில் இந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் பணி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்பணி 1970–71-க்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிக்கும் நிறுவனம்

புகைப்பட பொருள்களின் பல்வேறு வகைகளைத் தயாரிக்க உதகமண்டலத்தில் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு பிரான்ஸ் நாட்டு புவேஷ என்கிற கம்பெனியுடன் 1960-ல் இந்திய அரசு தொழில் நுட்ப உடனுழைப்பிற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. இத்தொழிற்சாலையை 1967-ம் வருடம் ஜனவரி மாதம் 7-ம் தேதியில் இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.



கட்டிட வேலையும் இயந்திரங்கள் நிறுவும் வேலையும் 1966 டிசம்பரில் முடிந்த பிறகு திரைப்படத்திற்கான நேரப்படிகளை வாணிக அடிப்படையில் உற்பத்தி செய்யும் வேலை 1967 ஜனவரியில தொடங்கப்பட்டது. அந்த உற்பத்தி படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. 1967 டிசம்பரில் திரைபடங்களுக்கான நிழற்பட நேரப்படிகளை தயாரிப்பதில் ஒரு தொழிற்சாலைக்கு வேண்டியுள்ள உற்பத்தித் திறனை இந்த நிறுவனம் எட்டியது. திரைப் படங்களுக்கான நிழற்பட நேரப்படிகள் குறித்த இந்நாட்டுத் தேவைகள் முழுவதையும் ஈடு செய்யும் நிலையில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இனிமேல் இறக்குமதிகள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இந்த நிறுவனம் உடனுழைப்பாளர்களிடமிருந்து எக்ஸ்—கதிர் நிழற்படச் சுருள்களைப் பெற்று மருத்துவ மனைகளுக்கும் மருத்துவர்களுக்கும் தேவையான அளவிற்கு அவற்றை மாற்றியுள்ளது. புரோமைடு காகிதம் தயாரிக்கும் வேலையையும் இந்த நிறுவனம் அண்மையில் தொடங்கியுள்ளது.

1969–70 முடிவில் இந்த நிறுவனத்திற்கு முடிவு செய்யப்பட்ட உற்பத்தித் திறன் அடையப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு பல பொருள்களைத் தயாரிப்பது குறித்தும், வண்ண நிழற்படங்களைத் தயாரிக்கும் வேலையை மேற்கொள்வது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் உற்பத்தித் திறனை 61·5 லட்சம் சதுர மீட்டரில் இருந்து 87·1 லட்சம் சதுர மீட்டருக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை விரிவு படுத்தும் திட்டம் குறித்த விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### உயர் அழுந்த கொதிகலன் தொழிற்சாலை

இத் தொழிற்சாலை பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனத்தில் தொழிற் பிரிவுகளில் ஒன்றாகும். இது இந்திய அரசின நிறுவனமாகும். 32,000 டன் கொதிகலன் துணைக் கருவிகளையும் 1,800 டன் உயர் அழுத்த வால்வுகளையும் ஒரு சில விரைவுக் கொதிகலன்களையும் (P.ckage boile s) தயாரிக்கும் வகையில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிலையம், குடியிருப்புகள் உட்பட, இத் தொழிற்சாலைக்கான மூலதன முதலீடு ரூ. 23·24 கோடியாகும்.

தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திங்களுக்குத் திங்கள் இத் தொழிற்சாலையின் உற்பத்தி ஒரே சீராக அதிகரித்து வந்துள்ளது. இந்த நிதியாண்டில், சுமார் 7·5 கோடி மொத்த மதிப்புள்ள சுமார் 7,150 டன் கொதிகலன் துணைக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதைத் தவிர, 200 டன் எடையுள்ள 7,450 வால்வுகள் உற்பத்தி செய்யபபட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 45 லட்சமாகும் நடப்பு நிதியாண்டில் 10,500 டன் கொதிகலன் துணைக் கருவிகளையும் சுமார் 300 டன் உயர் அழுத்த வால்வுகளையும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967 டிசம்பர் முடிவில், 4,920 டன் கொதிகலன் துணைக் கருவிகள் எண்ணூரில் வேலை நடக்குமிடத்திற்கு அனுப்பப்பட்டன. 23,600 டன் ஹர்த்துவாகஞ்சில் வேலை நடக்குமிடத்துக்கு அனுப்பப்பட்டன. இத் தொழிற்சாலையை விரிவு படுத்தும் வேலையை இந்திய அரசு நான்காவது திட்டத்தில் சேர்த்துள்ளது. அதற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை

நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம், சென்னை அருகில் மணலியில் எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதாகும். நட்பு விலை வாசிகள், ரூபாய் நாணயச் செலாவணி வீதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், இதற்கான மூலதன முதலீடு ரூ. 44·79 கோடியாகும். தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது. 25 லட்சம் டன் தூய்மைப்படுத்தாத எண்ணெயை அது தூய்மைப்படுத்தும். 1967-ம் ஆண்டு டிசம்பரில் இருந்த நிலவரப்படி இத் திட்டம் செயல்படுத்தப்படுவதில் 55·05 சதவீதம்

முன்னேற்றம் காணப்பட்டது. சாயப் பொருள்கள், மருந்துகள், செயற்கை நூல், செயற்கை ரப்பர், ஏனைய செயற்கை இரசாயனப் பொருள்கள் போன்ற பல துணைத் தொழில்களுக்குத் தேவையான முக்கிய மூலப் பொருள்களை இந்த ஆலை வழங்கும். 1968-ம் ஆண்டு முடிவுக்குள் இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சென்னை உரத் தொழிற்சாலை.

எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் ஆலையை அடுத்து, இந்திய அரசு சென்னை உரத் தொழிற்சாலையை நிறுவி வருகின்றது. இத் தொழிற்சாலைக்கான கட்டட வேலை துவக்கப்படவில்லை. கட்டட வேலை வெகு விரைவில் துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை, ஆண்டொன்றுக்கு 210,000 டன் யூரியாவையும் 243,000 டன் அம்மோனியாவையும் 360,000 டன் கலப்பு உரங்களையும் தயாரிக்கும். இந்தத் தொழிற்சாலைக்கான மூலதன முதலீடு ரூ. 55 கோடியாகும். நியூயார்க்கிலுள்ள கெமிகல் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பொரேஷனுடன் இத் திட்டக் கட்டட வேலை குறித்து ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் நிலங்களை அளந்து மண்வளப் பரிசோதனையையும் செய்துவிட்டனர். தொழிற்சாலைக்குப் புறம்பான வேலைகள் இந்த நிறுவனத்தின் நேரடி மேற்பார்வையில் செய்யப்படும். 1970-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து இத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும்.

### நாட்டின் பாதுகாப்புக்குத் தொடர்பான தொழில்கள்.

**கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.**—எஞ்ஜின், கியர் பெட்டிகள், சஸ்பென்ஷன் யூனிட்டுகள் உட்பட டாங்கிகளின் முக்கியப் பகுதிகள் அனைத்தையும் தயாரிப்பதற்கென ஆவடி கனரக வண்டிகள் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. எஞ்ஜின் ட்ரான்ஸ்மிஷன் துப்பாக்கிக் கட்டுப்படுத்துக் கருவி முதலியன போன்ற பல்வகைக் கருவிகளைத் தயாரிப்பதற்காக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. எஞ்ஜின்களையும், கியர் பெட்டிகளையும் ஆய்வு செய்வதற்காக ஒரு சோதனைக் கூடம் நிறுவப்பட்டுள்ளது. எஞ்ஜின்களும் கியர் பெட்டிகளும் இயங்குவது குறித்து விஞ்ஞான அடிப்படையில் சோதித்து மதிப்பிடுவதற்கான எல்லா வசதிகளும் அங்கு உள்ளன. உற்பத்தி விரைவாக செய்யப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் படைகளுக்கு டாங்கிகள் வழங்குவது ஏற்கெனவே தொடங்கியுள்ளது. இவ்வளவு பெரியதொரு தொழிற்சாலையில் தொழில் நுட்பத் திறனுள்ள கைவினைஞர்கள் தேவைப்படுவர். அதற்கென கைவினைஞர் பயிற்சிப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளது. சுமார் 690 பேருக்கு அங்கே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இத் திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள் மேற்கொண்டும் இத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

**படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.**—இத் தொழிற்சாலைக்கான மூலதன முதலீடு சுமார் 13 கோடியாகும். இதில் சுமார் 3,500 பேர் வேலைக்கு அமர்த்தப்படலாம். இத் தொழிற்சாலை 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதியன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**நெய்வேலி சேலம் உருக்குத் தொழிற்சாலை.**—சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து இந்திய அரசின் முடிவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்க வேண்டியதன் அவசியத்தை மாநில அரசாங்கம் உயர் மட்டத்தில் மத்திய அரசினை வற்புறுத்தி வருகிறது. இந்திய அரசின் முடிவு விரைவில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு முன்பே இத் திட்டம் குறித்த எல்லாத் தொடக்க வேலைகளையும் முடித்துவிட்டது. இது மட்டுமின்றி இந்திய அரசு கேட்டுக்கொண்டதன் மேல் மாநில அரசாங்கம் இத் திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.



1964-ம் ஆண்டு ஜனவரியில் சேலம் மாவட்டத்தில் சுமார் 24,000 ஏக்கர் நிலத்தை, அரசாங்கம், நிலங்களைக் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ்க் கையகப்படுத்துவதற்காக அறிவித்தது. சாதனங்களை வழங்கவும் நிறுவவும் ஒப்பந்த விவரங்களை வரையறைத்தல், கட்டட வேலைகளுக்கான வரைப் படங்களைத் தயாரித்தல், சுரங்கங்களைத் திறத்தல், மற்றும் அது போன்ற பல வேலைகளைத் துவக்கும் அளவிற்குத் தற்போதைய நிலை உள்ளது. இத் திட்டம் முடிக்கப்பட்டால் 500,000 டன் உருக்கை உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருக்கும்.

உருக்காலையை நிறுவுவது குறித்து இந்திய அரசின் முடிவு இன்னும் கிடைக்கவில்லை. அதற்கிடையில் சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்பு கல் படிவங்களை வெளியேடுத்தல், அறிவிக்கப்பட்ட பகுதியில் கட்டட வேலைகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், நிலங்களைக் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் அறிக்கைகளை வழங்குவதற்கான அறிவிப்புகளைத் தயாரிக்க விரிவான விசாரணைகள் நடத்தல் ஆகிய வேலைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

### மாநில அரசுத் துறை.

இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இன்னும் அதிக அளவில் முக்கியமானதொரு பங்கினை வகிப்பதற்காக மாநில அரசாங்கம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தை நிறுவியது. இது ஒரு மாநில அரசு நிறுவனமாகும். ரூ. 10 கோடி அதிகாரம் பெற்ற மூலதனத்துடன் இது கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக்கொண்டுள்ளது.

**சென்னை உருக்குத் தொடர் வார்ப்படச்சாலை, அரக்கோணம்.**—இத் தொழிற்சாலை உருக்கு மறு உருளைக் கலன் ஆலைக்கு (re-rolling mill) வேண்டிய உருக்குப் பாளங்களைத் (steel billets) தயாரிக்கும். இது ஆண்டொன்றுக்கு 1 லட்சம் டன் உருக்குப் பாளங்களைத் தயாரிக்கும் திறனுள்ளதாகும். (முதல் நிலையில் ஆண்டு தோறும் 50,000 டன் அளவிற்கும் இரண்டாம் நிலையில் ஆண்டொன்றுக்கு 1 லட்சம் டன் அளவிற்கும் தயாரிக்கும்.) அடுத்துப் பின்னர் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் அளவுக்கு உருக்குப் பாளங்களைத் தயாரிக்கும் வகையில் விரிவுபடுத்தும் வசதியுடன் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வறை ஆண்டில், ரஷ்யர்களிடமிருந்து பெற்ற விரிவான திட்ட அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு அவர்களிடம் விவாதிக்கப்பட்டு, திருத்தப்பட்டு தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த வாரியத்தாலும் அரசாங்கத்தாலும் ஏற்கப்பட்டது. இதன் அடிப்படையில், இறக்குமதியாகும் சாதனங்களை வழங்குவதற்காகவும் தொழில் நுட்பப் பணிக்காகவும் ரஷ்யர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இத் திட்டத்திற்குத் தேவையான உயர் தொழில் நுட்பப் பணியாளர்கள் வேலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். கட்டட வேலைகள் நிறைவேறி வருகின்றன. கிளை இரயில் பாதை அமைப்பது குறித்த ஆய்வு வேலை முடிந்துவிட்டது. பொதுப்பணித் துறை மூலமாக நீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அவ் வேலைகள் முடியும் நிலையில் உள்ளன. அதே போல், துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து மின்சார வாரியத்துடன் ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டுள்ளன. விரிவான வடிவமைப்புகளும் கட்டட வரைப்படங்களும் ரஷ்ய அறிவுரையாளர்களிடமிருந்து தொகுதிகளில் பெறப்பட்டு வருகின்றன. உள்நாட்டு இயந்திரங்களை வாங்குவதற்கென ஒப்பந்த விவரங்களை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை, ஆலங்குளம்.**—ஆண்டொன்றுக்கு 400,000 டன் அளவு சிமிட்டியை உற்பத்தி செய்ய இத் திட்டம் வகை செய்கிறது. இராஜபாளையத்திற்குத் தெற்கில் 12 மைல் தொலைவில் ஆலங்குளம் என்ற இடத்தில் இத் தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தின் மூலதன முதலீடு ரூ. 6 கோடியாகும். இயந்திரங்களை நிறுவும் வேலை 1968 முடிவில் நிறைவெய்துமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969-ம் ஆண்டின் முதல் கால் ஆண்டில் இத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறிய அளவு சிமிட்டித் தொழிற்சாலை, டால்மியாபுரம்.**—சிறு அளவு அடிப்படையில் சிமிட்டி தயாரிக்கப்படுவதற்காக டால்மியாபுரத்திற்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. இத் தொழிற்சாலையின் சிறப்பான தன்மை என்னவெனில் அண்மைக்காலத்தில் சிமிட்டி உற்பத்தித் தொழிலில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சியான தானே இயங்கி—சுரங்க வழியில் சூடேற்றப்பட்டுச் சிமிட்டி தயாரிப்பு முறை உள்ளதாகும். சுரங்க வழியில் சூடேற்றப்பட்டுச் சிமிட்டி தயாரிப்புத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 30 மெட்ரிக் டன் சிமிட்டி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டதாகும்; இதைத் தமிழக அரசு நிறுவியுள்ளது; 1966, செப்டம்பரில் டால்மியாபுரத்தில் இது தொடங்கப்பட்டது; இதில் விரிவான சோதனைகள் நடத்தப்பட்டன. 30 டன் உற்பத்தி செய்யக்கூடிய இந்த சிமிட்டித் தொழிற்சாலையில் ஆகும் உற்பத்திச் செலவு, பெரிய சுழல் இயங்கி சூளைவாய் சிமிட்டித் தொழிற்சாலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் குறைவாகவே உள்ளது; பெரிய தொழிற்சாலைகளைவிட இதில் அதிக ஆதாயம் கிடைப்பதற்குரிய காரணம், சிப்பம் செய்தல், எடுத்துச் செல்லல் இவற்றிற்காகும் செலவு குறைவதே. இத் தொழிற்சாலைக்கான மொத்த மூலதன முதலீடு ரூ. 24·00 லட்சமாகும்.

இந்த ஆண்டில் தொழில் வளர்ச்சிக் கழகம் டால்மியாபுரத்திலுள்ள முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலையைத் தமிழக அரசாங்கத்திடமிருந்து எடுத்துக்கொண்டுள்ளது. அத்தகைய தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனையும் விற்பனைகளையும் அதிகரிப்பதற்கென மாதிரி அமைப்புகளை உருவாக்குவது குறித்து மேற்கொண்டு செய்ய வேண்டிய பணியை அரசாங்கம் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. நாள் ஒன்றுக்கு 75 டன் முதல் 150 டன் வரை பல்வேறு திறனளவுள்ள தொழிற்சாலைகள் குறித்து பணிகளை ஏற்கும் நிலையில் இந்தத் தொழிற்சாலை உள்ளது. தொழில் வளர்ச்சிக் கழகம் செய்துள்ள விளம்பரம் காரணமாக, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இத் தொழிற்சாலை குறித்து பெருமளவில் அக்கறை காட்டி வருகின்றனர். அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் சில தொழிற்சாலைகள் விற்பனைகளை மேற்கொள்ளும் என்று கழகம் எதிர்பார்க்கிறது.

**ஏனையத் திட்டங்கள்.**—இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை, இயந்திரக் கருவித் துணைச் சாதனங்கள் தொழிற்சாலை, துணைக்கு இரும்புத் தொழிற்சாலை (Sponge Iron Plant) ஆகியவை பொறுத்தவரையில், சாத்தியக் கூறுகள் குறித்த அறிக்கை, திட்ட அறிக்கை முதலியன தயாரிக்கப்பட்டு வருகின்றன. இயந்திரக் கருவிகள் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ஜப்பானிய ஆலோசகர்கள் விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளனர். தொழில் உரிமம் வழங்கும்படி இந்திய அரசிற்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. தொழிற் உரிமம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. துணைக்கு இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ஆலோசகர்களுடனும் சாதனங்களை, வழங்கக்கூடியவர்களுடனும் உரையாடல்கள் நடந்து வருகின்றன.

## கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் சரியான நூல் வழங்குவதற்கும், நூலின் சந்தை விலையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதென்கிற இரு குறிக்கோள்களுடன், கூட்டுறவுத் துறையில் புதிய நூற்பு ஆலைகளை நிறுவ அரசாங்கம் ஊக்கமளிக்க வேண்டுமென்னும் கொள்கையைப் பின்பற்றியது,



பங்கு மூலதனத்திற்கு மொத்தம் ரூ. 160·56 லட்சம் வழங்கி, அதன் மூலம் அரசாங்கம் இந்த ஆலைகளுக்குக் கணிசமான அளவில் உதவியுள்ளது. மேலும் கடனுதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து அந்த ஆலைகள் வாங்கியுள்ள, 607 லட்சம் ரூபாய் அளவிற்கு கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு உத்தரவாதமும் அளித்துள்ளது. மற்றும், அயல்நாடுகளிலிருந்து வாங்கப்பட்ட நெசவாலை இயந்திரங்கள் குறித்துச் செலுத்த வேண்டிய தவணைத் தொகைகளைப் பின்னால் திருப்பிச் செலுத்துவது குறித்தும் அரசாங்கம் சுமார் 70·39 லட்சம் ரூபாய் அளவிற்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

தற்போது 12 நூற்பு ஆலைகள் உள்ளன. அவை அனைத்தும் ஆய்வுரை ஆண்டில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. 1967-ம் ஆண்டில், அந்த 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் செயல்பட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

1967-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் செயல்பட்ட விவரங்கள்.

| தொடர் எண், கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பெயர்கள். | நிறுவியுள்ள திறனளவு (கதிர்கள்). | ஒரு நாளில் முறைப்பணி ஒன்றில் இயங்கிய கதிர்களின் சராசரி எண்ணிக்கை. | 1967-ம் ஆண்டில் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை. | 1969-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மொத்த அளவு. (கிலோ கிராமில்) | 1967-ம் ஆண்டில் விற்கப்பட்ட நூலின் மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை பேட்டை— | | | | | |
| "ஏ" பிரிவு .. .. .. .. .. .. | 17,600 | 15,943 | 285 | 855,820 | 61,73,497 |
| "பி" பிரிவு .. .. .. .. .. .. | 12,096 | 11,480 | 281½ | 189,138 | 30,15,436 |
| 2 ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு ஆலை, ஸ்ரீவில்லிபுத்தூர். | 12,544 | 11,432 | 276 | 556 793 | 38,01,895 |
| 3 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை (திருச்செந்தூர்), நாகர்கோயில். | 13,200 | 11,763 | 288 | 714,959 | 58,23,630 |
| 4 சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை, சேலம் .. .. | 12.320 | 11,780 | 285 | 299,208 | 38,41,278 |
| 5 மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர் .. | 12,000 | 9,740 | 263 | 1,009,508 | 59,12,210 |
| 6 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, தாராபுரம். | 12,000 | 10,488 | 284 | 948,088 | 58,16,951 |
| 7 திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, கரூர், திருச்சி. | 12,000 | 11,078 | 286 | 824,785 | 55,87,801 |
| 8 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய்மொழி. | 12,000 | 9,843 | 275 | 636,413 | 43,08,879 |
| 9 காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சீபுரம். | 12,312 | 9,184 | 277 | 236,761 | 21,64,749 |
| 10 தென் ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, சாரம். | 12,096 | 8,965 | 246 | 204,691 | 24,42,327 |
| 11 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வேலூர். | 12,096 | 11,533 | 289 | 334,911 | 42,22,993 |
| 12 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மணல்மேடு. | 12,096 | 9,540 | 270 | 186,705 | 25,00,899 |
| | 1,64,360 | | | 6,997,780 | 5,56,17,575 |



மேற்படி கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள் 1967-ம் ஆண்டில் நிறுவிய மொத்தத் திறனளவாகிய 164,360 கதிர்களுடன், 20-ம் நம்பரி லிருந்து 100-ம் நம்பர் வரையிலான 6,997,780 கிலோகிராம் பருத்தி நூல் உற்பத்தி செய்துள்ளனவென்றும், ரூ. 5,56,17,575 மதிப்புள்ள நூலை விற்பனை செய்துள்ளனவென்றும் இந்த விவர அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள, ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையும், நாசரேத்திலுள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையும் தங்கள் நிறுவிய திறனளவை 25,000 கதிர்கள் என்ற கணிசமான அளவுக்கு விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளன. விரிவுபடுத்தும் திட்டம் குறித்த கூடுதலான சிவில் பணிகள் பல்வேறு நிலைகளில் நிறைவேறி வருகின்றன. இந்த ஆலைகள் கோரிய கூடுதல் நெசவாலை இயந்திரங்களின் பெரும்பாலானவை குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு வந்து சேரத் தொடங்கியுள்ளன. இந்த ஆண்டில் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு, அதன் விரிவுத் திட்டத்திற்காக ரூ. 10 லட்சம் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் மறுவாழ்வு அமைச்சகம் ஒப்பளித்த நிதி உதவியிலிருந்து இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கூடுதல் விடுமுறை நாட்கள், முறைப் பணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல் போன்ற பொதுத் தடைகளை இந்திய அரசு நெசவாலைகளின் மீது விதித்ததன் காரணமாக, 31-8-1967 வரையில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் இடருற்றன. ஆய்வுரை ஆண்டில் நூல் வாணிகத்தில் நிலவியுள்ள மந்த நிலையும், பஞ்சு விலைகள் மிகவுயர்ந்துள்ளமையும், கூட்டுறவு நூற்பு ஆலைகள் வெற்றிகரமாகச் செயல்படுவதைத் தடை செய்தன.

**கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்.**—அன்றுடம் மொத்தம் 6,500 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில் திம்மனஹள்ளியில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட புதிய ஆலை ஒன்று கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட்டு வருகிறது. ஏழு சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்காக அரசாங்கம் இதுவரையில் ரூ. 162·93 லட்சம் முதலீடு செய்துள்ளது. மேலும் இந்திய தொழில் நிதி உதவிக் கழகத்திடமிருந்து இந்த ஆலைகள் ரூ. 435 லட்சம் அளவில் பெற்றுள்ள கடன்களுக்கும் உத்தரவாதம் அளித்துள்ளது. கடந்த சர்க்கரை ஆண்டில் (அதாவது 1966 நவம்பர் 1-ம் நாள் முதல் 1967 அக்டோபர் 31-ம் நாள் வரை) இந்த ஆறு சர்க்கரை ஆலைகள் செயலாற்றியதைப் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து புலனாகும்.

அட்டவணை.

**தமிழ்நாட்டில் 1—11—1966 முதல் 30—10—1967 வரையிலுள்ள கால அளவில் ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயலாற்றியதைக் குறித்த விவரங்கள்.**

| தொடர் எண், சர்க்கரை ஆலையின் இருப்பிடம். | பருவம். | நிறுவியுள்ள திறனளவு. | கரும்பு பிழியும் பருவத்தின் கால அளவு. | பிழிந்த கரும்பின் மொத்த அளவு. | உற்பத்தி செய்த சர்க்கரையின் மொத்த அளவு. | சர்க்கரையின் விற்பனை மதிப்பு. | கிடைத்த சர்க்கரை சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (5) | (7) | (8) |
| | | மெ. டன். | நாட்கள். | மெ. டன். | | ரூ. | |
| 1 அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், உடுமலைப்பேட்டை. | முக்கிய பருவம். | .. | 35 | 17,759 | 1,410 | 2,02,82,850 | 7·94 |
| | சிறப்புப் பருவம். | 1,250 | 67 | 39,917 | 3,537 | 5,08,79,746 | 8·86 |
| 2 நேஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், அலங்காநல்லூர். | முக்கிய பருவம். | 1,000 | 51 | 4,110 | 296 | 42,57,960 | 7·20 |
| 3 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர். | முக்கிய பருவம். | 1,000 | 174 | 109,120 | 10,286 | 14,79,64,110 | 9·43 |
| | சிறப்புப் பருவம். | 1,750 | 9 | 4,539 | 390 | 56,10,150 | 8·60 |
| 4 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், வட புதுப் பட்டு. | முக்கிய பருவம். | 800-லிருந்து 1,250 | 145 | 122,710 | 11,840 | 17,04,47,865 | 9·65 |
| 5 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மூங்கில்துறைப் பட்டு. | முக்கிய பருவம். | 1,000 | 70 | 21,794 | 2,028 | 2,91,72,780 | 9·30 |
| 6 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், படாளம். | முக்கிய பருவம். | 800-லிருந்து 1,000 | 132 | 90,926 | 8,498 | 12,22,43,740 | 9·35 |



**இயந்திர செங்கற் சூளை பிரிவு.**—அன்றாடம் 66,000 செங்கற்களைத் தயாரிப்பதற்காக, திருமழிசையில் இயந்திர செங்கற் சூளைத் தொழிற் சாலை ஒன்றை நிறுவுவதற்கு 1963-ம் ஆண்டில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. தொழில்-வாணிகத் துறையின் இயக்குநர், பம்பாய், திரு' பெர்ஃபெக்ட் இயந்திரக் கருவிக் கம்பெனியுடனும், யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த திருவாளர்கள் இங்ரா என்கிற கம்பெனியின் இந்திய முகவர் களுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டார். இத் திட்டத்திற்காக முதற் கண் மதிப்பிடப்பட்ட செலவு சுமார் ரூ. 41 லட்சமாகும். இறுதியாக மதிப்பிடப் பட்ட செலவு ரூ. 71 லட்சமாகிறது. இத் தொழிற்சாலை சோதனை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

**தொழிற் பகுதிகள்.**—பெருந் தொழில்களும், நடுத்தரத் தொழில் களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பாகவும் உதவியாகவும் இணைந்து வளர்ச்சி பெற வகை செய்கிற தொழிற் பேட்டைத் திட்டத்தின் கீழ், தொழிற் பகுதிகளை ஏற்படுத்தியது மூன்றாவது திட்டக் காலத்தின் மிகவும் முக்கிய வளர்ச்சிப் பணியாகும். இத் திட்டம் அம்பத்தூரில் முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்டது. மேனிலைப்படுத்தப் பெற்ற தொழில் மனைகளை ஒதுக்குவதற்காக அங்கு 1,200 ஏக்கர் பரப் பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 400 ஏக்கர் பரப்பு மேனிலைப்படுத்தப்பட்டு, அங்கு குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல், சாக்கடை, மின்சார வசதி, சாலைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அரை ஏக்கரிலிருந்து பன்னி ரண்டு ஏக்கர் பரப்பளவு வரையுள்ள இந்த நிலங்கள் சிறிய, நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் தவணை அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இத் தொழில் மனைகள் அனைத்தும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. முப்பத்திரண்டு தொழிலதிபர்கள் தங்கள் தொழிற் சாலைகளை நிறுவியுள்ளனர். பதினாறு தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. சுமார் 600 ஏக்கருக்கான அமைப்புத் திட்டம் இறுதி செய்யப்பட்டு, சாலை போடும் முன்னோடி வேலைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. ஏனைய பகுதிகளில் நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இதுபோன்ற மேனிலைப்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டை களை அமைக்க கருதியுள்ளது.

திருவள்ளூர், ராணிப்பேட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, கிண்டி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் மேனிலைப்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற் பேட்டைகளை அமைக்கக் கருதியுள்ளது. மேட்டூரில், இரசாயனத் தொழிலுக்காக மேனிலைப்படுத்தப்பட்ட மனைகள் உள்ள தொழிற்பேட்டை ஒன்றினை அமைக்கக் கருதியுள்ளது. மேட்டூர், திருச்சிராப் பள்ளி, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் தொழிற்பேட்டை அமைப்பதற் காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கான அமைப்பு திட்டங்களுக்கும் ஏற்பளிக்கப்பட்டுவிட்டது. மேனிலைப்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட ஏனைய தொழிற்பேட்டைகளுக்காக நிலக்கையகப்படுத்தும் பணி நிறைவேறி வருகின்றது.

## தனியார் துறை.

இம்மாநிலத்தைத் தொழில் மயமாக்குவதில் தனியார் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மத்திய அரசும் மாநில அரசாங்கமும் கொடுக்க முன்வந்துள்ள பல்வேறு வசதிகளையும் இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள வலுவான அடிப்படை யையும் பயன்படுத்திக் கொண்டு, உலோகவியல் தொழில்கள் முதற் கொண்டு அன்றாட வாழ்வில் பயன்படுகிற பல பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களிலும், மின்சாரத் தொழில் முதற்கொண்டு ரசாயனத் தொழில் களிலும் தனியார் துறை பற்பல உற்பத்தித் துறைகளில் பெருமளவில் முன்னேற்றம் எய்தியுள்ளது. என்றாலும், இம்மாநிலத்தில் தனியார் துறை உற்பத்திப் பிரிவு எதிலும் தனியுரிமை பெறும் வகையில் வளர்ந்து விடவில்லை. உற்பத்தி மூலதனத்தைப் பரவலாக பயன்படுத்துவதில் இம் மாநில தனிப்பட்ட தொழில் முனைவர்கள் பெருமளவிற்கு உதவி செய் திருப்பது அவர்களுக்குப் புகழை ஈட்டித் தந்துள்ளது.

[1968 மார்ச் 22

1967-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் 16 தொழில் உரிமங்களும் 15 இசைவுக் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள தொழில்-உரிமங்களில் 5 உரிமங்கள் புதுத்தொழில்களை நிறுவுவதற்குரியவையாகும். உயிர்வளி ( Oxygen ) தயாரித்தல், கரையும் அசிடிலின் தயாரித்தல், கலவைப் பொருள்கள், செயலூவக்கிகள் தயாரித்தல், தொடர்வார்ப்பட முறையில் உருக்குப் பாளங்கள்-கட்டிகள் தயாரித்தல், கருவிகளில் ரப்பர் லைனிங் கொடுத்தல் (தொழில் நுட்ப) மத்தியான் தயாரித்தல் ஆகிய தொழில்களுக்கு இவ்வுரிமங்கள் வழங்கபபட்டன. ஆறு உரிமங்கள் கீழ்க்கண்ட பொருள்களைத் தயாரிப்பதற்குரியனவாகும். மிதி வண்டி டயர்கள், டியூபுகள், நிலக்கரித்தார் சோப்பு, உலோக அட்டைப் பாதுகாப்பு, பேரளவுத் தேவை காட்டும் கருவிகள் (Maximum Demand Indicators) நடுத்தர வோல்ட் திறனுள்ள காற்றேட்டத் துண்டிப்புகள் (Medium Voltage Air circuit Brakes ) மின் உருக்கு உலைகள் போன்ற புதிய பொருள்களை இந்த ஆறு தொழிற்சாலைகள் தயாரிக்கும். ரப்பர் கருத்தடைக் குழல்கள் ( Co dons ), மின் சக்தி-பங்கீட்டு அழுத்த மாற்றிகள் (Transformers), வனஸ்பதி, E.R.W. டியூபுகள், ஒரு டன் தரடிரக்குகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தற்போதுள்ள திறனளவை கணிசமான அளவு பெருக்குவதற்கு ஐந்து நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள 15 இசைவுக் கடிதங்களில் 4 கடிதங்கள் கீழ்க்கண்ட புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குரியவை. இவற்றில் B.H.C.M.S.,H.C. சிறப்பு உருக்குப் பாளங்களும் ஒட்டு நாடாக்கள், பருத்தி விதை எண்ணெய் தயாரிக்கப்படும். கீழ்க்கண்ட புதிய பொருள்களைத் தயாரிப்பதற்காக 9 அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. வளைவு கியர் வெட்டிகள், ரம்பங்கள், கருவிகள், தொடர்மையம் விட்டோடிகள், எண்ணெய் ஒட்ட, காற்றேட்டத் துண்டிப்புகள், திறன் அழுத்த மாற்றிகள், கடைசல் இயந்திரங்கள், இணைப்பு மின் கருவிகள், இடி தாங்கிகள், மின் ஒப்பியல் கணக்கு யந்திரங்கள், பியூட்டில் வாயு மிதிவண்டி டியூபுகள், வண்டித்தடை அறை குறியீடுகள் ஆகியவையாகும். காலணிகளையும் சினிமா ஆர்க் விளக்கு கரிமங்களையும் உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி அளவை உயர்த்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. 1967-ம் ஆண்டில் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயக்குநரிடம் பதிவு பெற்றுள்ள இம்மாநிலத்தைச் சேர்ந்த நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஐந்தாகும். இதுவரை முப்பத்தைந்து நிறுவனங்கள் இவ்வாறு பதிவு பெற்றுள்ளன. இம்மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களுடன் பல்வேறு நாடுகள் உடனுழைப்பு நல்கியுள்ள 19 நாடுகளுக்கு இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்த நிறுவனங்கள் பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்யும்.

1967-ம் ஆண்டில் கீழ்க்கண்ட பொருள்களை பதினான்கு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன. மின்பற்ற வைப்புக் கருவிகள், வார்ப்படத் தடைச் சாதனக் கருவிகள், வார்ப்பட கிளட்ச் திருப்பிகள் ( Moulded Clutch Facings ), வீட்டு மின் இணைப்பு மீட்டர்கள், அம்மோனியம் ஸல்பேட்டு, வண்ணங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், பிஸ்கோத்துகள், கல்நார் சிமிட்டிக் கூரைத் தகடுகள், அழுத்தக் குழாய்கள், பருத்தி நூல், சர்க்கரை, தோல் பதனிடு கலவைப் பொருள்கள், வைக்கோல் அட்டைகள், P.V.C. பிசின் கலவைகள், கரியமில வாயு ஆகிய இப்பொருள்களை இத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும்.

பெனிசிலின், ஸ்டெரெப்டோமைசின், கோதுமைப் பொருள்கள், சிமிட்டி பருத்தி விதை எண்ணெய் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காகச் சில தொழில் நிறுவனங்கள் தொழிற்சாலை கட்டி முடித்து முன்னோடி முறையில் இப் பொருள்களைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டன. இம்மாநிலத்தில் பல புதிய தயாரிப்பு முறைகள் முதன்முதலாகப் புகுத்தப்பட்டுள்ளன.



1968 மார்ச் 22]

P.V.C. பிசின் கலவை, தோல் பதனிடு கலவைப் பொருள்கள், பிஸ்கோத்து, கல்நார் சிமிட்டிக் கூரைத் தகடு, கல்நார் சிமிட்டி அழுத்தக் குழாய்கள் ஆகியவையே இவற்றுள் முக்கியமானவையாகும்.

முக்கியமான தொழிற் பிரிவுகள் சிலவற்றில் குறிப்பாக அலுமினியம், சிமிட்டி, சர்க்கரை, ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றில் உற்பத்தித் திறனளவு 1967-ம் ஆண்டில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் தொழிலுக்கு வேண்டிய வேளாண்மையல்லாத மூலப் பொருள்கள், பெருமளவில் கிடைக்கும் வாய்ப்பினைப் பெருக்கும். சர்க்கரை, சிமிட்டி, பொறிகளுக்கான வால்வுகள், மிதி வண்டிகள், கார் டயர்கள், டியூபுகள், மிதிவண்டி டயர்கள், டியூபுகள் ஆகியவற்றைப் பொறுத்தவரை விரிவுத் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றால் அடுத்துவரும் ஆண்டுகளில் இவற்றின் உற்பத்தி அளவு பெருகும்.

இம்மாநிலத்தில் அன்றாட வாழ்க்கைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்கள், யந்திரவியல் தொழில்கள், மின்சாரத் தொழில்கள், ரசாயனப் பொருள் தொழில்கள் ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ரசாயனத் தொழிலில் 1968-ம் ஆண்டின் தொடக்கத்தில் முக்கியமான வளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. மேட்டூர் ரசாயனப் பொருள்கள் தொழிற் பொருள்கள் கழகம் குளோரோமீதேன் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக நிறுவியுள்ளது. நான்கு வகை கரிம ரசாயனப் பொருள்களின் தொகுப்பான குளோரோமீதேன் என்னும் ரசாயனப் பொருளை இத்தொழிற்சாலை ஆண்டு தோறும் 6,000 டன் உற்பத்தி செய்யும். இம்மாநிலத்தில் பாலிஸ்டர் தார் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவதாக இந்திய அரசு மாநில அரசாங்கத்திற்கு உறுதியளித்துள்ளது.

1956, 1961, 1966, 1967 ஆகிய ஆண்டுகளின் போது பல்வேறு தொழில் துறைகளில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, உற்பத்தி அளவு ஆகியவற்றின் ஒப்பீடான விவரங்கள் பின்வரும் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

| பொருள்கள். | 1956. பிரிவுகளின் எண்ணிக்கை. | 1956. உற்பத்தி. | 1961. பிரிவுகளின் எண்ணிக்கை. | 1961. உற்பத்தி. | 1966. பிரிவுகளின் எண்ணிக்கை. | 1966. உற்பத்தி. | 1967. பிரிவுகளின் எண்ணிக்கை. | 1967. உற்பத்தி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 வேளாண்மை டிராக்டர்கள் .. .. .. | .. | .. | .. | .. | 1 | 3,400 | 1 | 3,819 |
| 2 கல்லைக் கரியகை .. .. .. .. | .. | .. | 1 | 5,057 (டன்.) | 1 | 9,200 (டன்.) | 1 | 9,275 (மெ.டன்.) |
| 3 கார்கள் .. .. .. .. .. | 1 | 2,251 | 1 | 3,364 | 1 | 1,008 | 1 | 2,774 |
| 4 கரிமிருதேபதை .. .. .. .. | 2 | 851 (டன்.) | 3 | 2,060 (டன்.) | 4 | 1,741 (டன்) (3 பிரிவுகள் மட்டும்) | 4 | 1,641 (மெ.டன்.) |
| 5 வார்ப்படங்கள் (எஃகு, வார்ப்பட இரும்பு) .. | .. | .. | .. | .. | 7 | 22,039 (டன்). | 7 | 22,903 (மெ.டன்.) |
| 6 எரி உவர்க்காரம் (Caustic Soda) .. .. | 1 | 3,729 (டன்.) | 2 | 25,191 (டன்.) | 2 | 62,232 (டன்.) | 2 | 77,941 மெ.டன்.) |
| 7 சிமிட்டி .. .. .. .. .. | 2 | 692,820 (டன்). | 4 | 115,123 (டன்.) | 5 | 18,79,181 (டன்.) | 5 | 18,68,935 (மெ.டன்.) |
| 8 வணிக லாரிதகள் .. .. . .. | 1 | 1,009 | 1 | 2,071 | 1 | 3,615 | 1 | 4,613 |
| 9 மிதி வண்டிகள் .. .. .. .. | 1 | 129,922 | 1 | 207,535 | 1 | 276,514 | 1 | 303,300 |
| 10 டீசல் எஞ்ஜின்கள் .. .. .. .. | 2 | 3,715 | 2 | 11,766 | 3 | 8,859 | 3 | 10,771 |
| 11 ரசாயன உரங்கள் .. .. .. .. | 2 | 40,829 | 2 | 119,312 | 8 | 249,442 (டன்.) | 8 | 263,251 (மெ.டன்.) |
| 12 சூளைச் செங்கற்கள், வெப்பம் தாங்கிக் கற்கள், உலைக்கட்டும் செங்கற்கள். | 2 | 4,995 (டன்.) | 6 | 94,040 | 6 | 97,294 (டன்.) | .. | தகவல் இல்லை. |
| 13 உலையிலிட்டு காய்ச்சி அடித்தல் .. .. | .. | .. | — | .. | 5 | 5,975 (மெ.டன்.) | 3 | 5,825·25 (மெ.டன்.) |
| 14 மாவு .. .. .. .. .. | 2 | 22,846 | 6 | 112,119 (5 பிரிவுகள் மட்டும்.) | 14 | 201,269 (டன்.) | .. | தகவல் இல்லை. |
| 15 மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் .. .. | 1 | 1,130 | 1 | 3,901 | 1 | 8,298 | 1 | 7,449 |
| 16 உயிர்வளி .. .. .. .. .. | 1 | 314,000 (கனமீட்டர்) | 1 | 102,000 (கனமீட்டர்) | 2 | 1,673,300 (கனமீட்டர்) | 2 | 1,852,728 (கனமீட்டர்). |
| 17 பூச்சு வண்ணங்கள் .. .. .. .. | 1 | 337,249 (காலன்கள்.) | 1 | 490,697 (காலன்கள்.) | 1 | 3,475,395 (லிட்டர்.) | .. | .. |
| 18 காகிதம் .. .. .. .. .. | — | .. | — | .. | 3 | 24,042 (டன்.) | .. | .. |
| 19 குழாய்களும், குழல்களும் (Pipes and Tubes) .. | | .. | — | .. | 1 | 13,247,855 (மீட்டர்.) | 1 | 11,263,193 (மீட்டர்.) |
| 20 வானொலிப் பெட்டிகள் .. .. | 2 | 1,685 | .. | .. | 2 | 9,358 | 2 | 6,978 |
| 21 மறு உருவைப் பொருள்கள் .. .. . | | 17,554 (டன்.) | 3 | 40,997 (டன்.) | 5 | 62,197 (மெ.டன்.) | — | .. |
| 22 வானொலி மின் அழுத்தமாற்றிகள் (Radio Transformers). | | .. | — | .. | 1 | 19,500 | 1 | 18,000 |
| 23 கண்ணாடித் தகடுகள் .. .. .. .. | .. | .. | — | .. | 1 | 5,360 (டன்.) | 1 | 49,990 (ச.மீட்டர்) |
| 24 சர்க்கரை .. .. .. .. .. | 6 | 64,227 (டன்.) | 7 | 129,306 (டன்.) | 14 | 225,907 (டன்.) | 15 | 172,164 (மெ.டன்.) |
| 25 கந்தக அமிலம் .. .. .. .. | 1 | 14,891 (டன்.) | 1 | 24,175 (டன்.) | 6 | 87,492 (டன்.) | .. | .. |
| 26 மின் அழுத்த மாற்றிகள் .. .. .. | 3 | 12,000 (கே.வி.ஏ.) | 3 | 183,160 (கே.வி.ஏ.) | 8 | 9,46,275 (கே.வி.ஏ.) | 3 | 966,880 (கே.வி.ஏ.) |
| 27 தட்டச்சு யந்திரங்கள் .. .. .. .. | 1 | 977 | 1 | 3,755 | 1 | 8,660 | 1 | 8,386 |
| 28 வண்டிகள் .. .. .. .. .. | .. | .. | — | .. | 1 | 7,000 | 1 | 2,000 |
| 29 மோட்டார் வண்டி டயர்கள் .. .. .. | .. | .. | 1 | 104,700 | 2 | 423,123 | 2 | 515,199 |
| 30 மோட்டார் வண்டி டியூப் .. .. .. | .. | .. | .. | .. | 1 | 22,306 | 1 | 291,576 |
| 31 சைக்கிள் டயர்கள் .. .. .. .. | .. | .. | 1 | 1,534,360 | 1 | 3,946,066 | 1 | 5,080,811 |
| 32 தாவர எண்ணெய் (வனஸ்பதி) .. .. | 4 | 8,453 (டன்.) | 4 | 12,714 (டன்.) | 4 | 13,320 (டன்.) | .. | .. |

**துணி ஆலைத் தொழில்.**—இந் நாட்டில் துணி ஆலைத் தொழிலில் கடந்த இரண்டாண்டுகளாகக் கடும் மந்த நிலை ஏற்பட்டது. தமிழ் நாட்டில் ஆறு ஆலைகள் மூடப்பட்டன. வேறு சில ஆலைகள் மூடும் நிலைக்கு வந்தன. நிதிவசதி குறைவே இதற்கு முக்கியக் காரணமாகும்.

இத்தொழில் நிலைமை மிகவும் சீர்கேடுற்றதால், இயங்க முடியாத நிலையிலிருந்த ஆலைகளுக்கு உதவி செய்வதற்கு வழிவகை காண்பதற்காக இந்த அரசாங்கம் ஆலை நிர்வாகிகளுடனும் தொழிலாளர் பிரதிநிதி களுடனும் பலமுறை கலந்து பேசியது. தமிழ் நாட்டில் பருத்தித் துணி யாலைத் தொழில் செயல்படுவதை ஆராயவும், மூடப்பட்ட ஆலைகளைக் குறித்தும் நெருக்கடி நிலையிலுள்ள ஆலைகளைக் குறித்தும் சிறப்பாக ஆராயவும் இடர் தணிப்புப் பணிகளைக் குறித்தும் அறிவுரை வழங்கவும் டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தலைமையில் முக்கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் நிர்வாகிகளின் பிரதிநிதிகள் ஐவ ரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், பட்டாக் கணக்கர் ஒருவரும் தொழில் நுட்ப வல்லுனர் ஒருவரும், தமிழ் நாடு கைத்தறி துறை இயக்குநரும் இடம் பெற்றுள்ளனர். இந்த இயக்குநரே இக் குழுவினைக் கூட்டுவதற்கு ஆவனவற்றைச் செய்வார்.

முக்கூட்டுக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் அக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவுக்குக் கீழ்க்கண்ட ஆலைகளுக்கு கட னுதவி வழங்குகிற வணிக வங்கிகளுக்கு ரூ. 1·1 கோடி வரை உத்தரவாத உதவியளிப்பதாக அரசாங்கம் ஆணை பிறப்பித்தது.

| ஆலையின் பெயர். | தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம். | 3·71 |
| 2. பங்கஜா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர் .. .. | 12·00 |
| 3. பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், திருநெல்வேலி மாவட்டம். | 7·50 |
| 4. பவானி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் .. | 3·00 |
| 5. சபரி ஆலை லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. | 1·75 |
| 6. பழனி ஸ்ரீமுருகன் ஆலை லிமிடெட், மதுரை மாவட்டம். | 2·50 |
| 7. திருப்பூர் பருத்தி நூற்பு-நெசவாலை லிமிடெட், கோயம் புத்தூர் மாவட்டம். | 0·75 |
| 8. அம்பாள் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் .. | 8·00 |
| 9. ஸ்ரீரெங்க விலாஸ் நூற்பு-நெசவாலை லிமிடெட், கோயம் புத்தூர் மாவட்டம். | 17·70 |
| 10. காவிரி நூற்பு-நெசவாலை லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 18·70 |
| 11. சாரதா ஆலை லிமிடெட், போதனூர், கோயம்புத்தூர் மாவட்டம். | 4·80 |
| 12. கோயம்புத்தூர் கமலா ஆலை லிமிடெட் .. .. | 5·56 |
| 13. நாகம்மாள் ஆலை லிமிடெட், நாகர்கோயில், கன்னியா குமரி மாவட்டம். | 7·72 |
| 14. கோயம்புத்தூர் முருகன் ஆலை லிமிடெட் .. .. | 9·40 |
| 15. சதர்ன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் .. | 7·69 |
| மொத்தம் .. | 110·78 |





## நிதி உதவும் நிறுவனங்கள்.

தொழில்வளம் விரைந்து பெருகிவருகின்ற இச்சூழ்நிலையில், நிறு வனங்கள் வழங்கும் கடன் வசதிகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தத் தேவையில்லை. குறிப்பாக நமது மாநிலத்தில் மூலதன முதலீடு குறித்த நிலைமை அவ்வளவு மன நிறைவு தருவதாக இராததால், நிறுவனங்கள் வழங்கும் கடன் வசதிகள் மிக இன்றியமையாதனவையாகவுள்ளன. தமிழ் நாட்டின் தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ் நாட்டு தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மூலமும் தொழில்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவிச் சட்டத்தின் கீழும் தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் பெருமளவுக்கு வெற்றி யுடன் நிறைவேற மாநில அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது.

(அ) **தமிழ்நாட்டுத் தொழில் முதலீடு கழகம்.**—1967-ம் ஆண்டில் தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டு கழகம் தொழில்களுக்குக் கடனுதவி வழங்குவது குறித்து மிகச் சிறந்த முறையில் தொடர்ந்து பணியாற்றியது. 1967-ம் ஆண்டில் இக் கழகம் வழங்கிய கடன்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| கடன்களின் வகை. | 1967 காலண்டர் ஆண்டில் ஒப்படைக்கப் பட்டது. | தொடங்கிய தேதியிலி ருந்து 31–12–67 வரை. | 1967 ஆண்டில் கொடுக்கப் பட்ட தொகை. | தொடக்கத் திலிருந்து 31–12–67 வரை கொடுக் கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய்.) | | |
| 1 ரொக்கக் கடன்கள் .. .. | 1,26,54,000 | 23,48,01,311 | 1,44,26,689 | 19,03,08,229 |
| 2 கூட்டுக் கடன்கள் .. .. | .. | 1,62,65,000 | .. | 10,98,770 |
| 3 உத்தரவாதம் அளித்த வகையில். | 24,07,084 | 6,36,15,084 | 24,90,101 | 4,59,16,554 |
| 4 பின்னிட்டுப் பணம் கொடுப்பது பற்றிய உத்தரவாதம். | 1,24,34,416 | 15,23,56,733 | 1,32,14,806 | 7,12,11,245 |
| (அ) பங்குகள் —நிறுவனங்களின் பங்குத் தொகைகளில் முதலீடு செய்தல். | 53,22,500 | 12,50,94,500 | 16,89,298 | 7,18,62,670 |
| (ஆ) கடன் பத்திரங்கள் .. .. | 15,00,000 | 15,00,000 | 14,30,000 | 14,30,000 |

(ஆ) **தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி.**—கூட்டுறவுத் தொழிற்சாலை களுககும், சிறு தொழிலதிபர்களுக்கும், நிதி உதவி வழங்குவதே இவ் வங்கியின் குறிக்கோளாகும். 1967-ல் முக்கியமாக தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனாகவும் ரொக்கமாகவும் மொத்தம் ரூ. 16·40 லட்சம் வழங்கியுள்ளது.

(இ) **தமிழ்நாடு கூட்டுறவு வங்கி.**—கூட்டுறவு நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெருந்தொழில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இவ் வங்கி உதவுகின்றது. இவ்வங்கி 1967-ல் ரூ. 32·70 லட்சம் வரை நிதி உதவி வழங்கியுள்ளது. தொழில்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவி பற்றிய சட்டத்தின்கீழ், 1967 அக்டோபர் 31-ம் நாள் வரையில் ரூ. 20·55 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கடனுதவி வழங்கும் மாநில நிறுவனங்கள் கொடுக்கும் நிதி உதவியைத் தவிர, நமது மாநிலத்தில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்கள் இந்தியத் தொழில் நிதிக் கழகம், இந்தியத் தொழில் கடன்—முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ஸ்டேட் பாங்க், இந்திய ஆயுள் காப்புறுதிப் பொறுப்பாண்மைக் கழகம் ஆகியவற்றினால் வழங்கப்படும் கடன் வசதிகளையும் பயன்படுத்திக்கொள்கின்றன.

1967-ம் ஆண்டில் இந்தியத் தொழில் நிதிக் கழகம் அனைத்திந்திய அடிப்படையில் மொத்தம் ரூ. 26·57 கோடி கடனுதவி வழங்கியது. இதில் ரூ. 0·80 கோடி தமிழ் நாட்டில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. 1967 டிசம்பர் 31-ம் தேதி வரையில் இக்கழகம் மாநில வாரியாக வழங்கிய கடனுதவியில், மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்த படியாக தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கே அதிக அளவுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

| மாநிலம். | பிரிவுகளின் எண்ணிக்கை. | கடனுதவி. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. .. | 29 | 2,229·23 |
| குஜராத் .. .. .. .. .. | 34 | 2,091·84 |
| தமிழ்நாடு .. .. .. .. .. | 50 | 4,305·28 |
| மகாராஷ்டிரம் .. .. .. .. | 89 | 5,676·73 |
| மேற்கு வங்காளம் .. .. .. .. | 53 | 3,542·62 |
| இந்தியா முழுவதற்கும் மொத்தம் .. .. | 430 | 29,942·12 |

1967-ம் ஆண்டில் இந்தியத் தொழில் கடன் முதலீட்டு கழகம் இந்தியா முழுவதிலும் உள்ள தொழில்களுக்காக (நிகரமாக) ரூ. 21·56 கோடி கடனுதவி வழங்கியது. இதில் தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 2·50 கோடி வழங்கப்பட்டது. இக்கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து 1967 டிசம்பர் 31-ம் நாள் வரையில் இந்தியா முழுவதிலும் உள்ள தொழில்களுக்கு நிகரமாய் ரூ. 199·56 கோடி கடனுதவி வழங்கியது. இதில் தமிழ்நாட்டில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு மட்டும் ரூ. 22·17 கோடி (அல்லது 11·1 சத வீதம்) வழங்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் வள வங்கி 1966–67-ல் இந்தியாவில் உள்ள தொழில்கள் அனைத்துக்கும் மொத்தம் ரூ. 33·8 கோடி கடன் வழங்கியது. இதில் தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழிற் பிரிவுகளுக்கு மட்டும் ரூ. 137·50 லட்சம் வழங்கப்பட்டது. சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்திய ஸ்டேட் பாங்க் 31–12–1967 அன்று வரை தமிழ்நாட்டில் உள்ள 2,083 பிரிவுகளுக்கு ரூ. 13·66 கோடி கடன் வழங்கியது. 1967-ம் ஆண்டில் இந்த பாங்க் 163 தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 1·89 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. கடன் வழங்கும் இந்த நிறுவனங்களைத் தவிர, பட்டியலில் கண்ட வணிக வங்கிகளும் இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தங்கள் பங்கைச் சிறந்த வகையில் நிறைவேற்றியுள்ளன. தொழில் மூலதனத்திற்காகக் கடன் வழங்குவது மூலமாகவும், குறிப்பிட்ட காலக் கடன்களுக்கு நிதி உதவுவதன் மூலமாகவும் இந்த வங்கிகள் உதவி அளித்துள்ளன.

## சுரங்கங்களும் கனி வளங்களும்

மாநிலப் புவியியல் பிரிவு முந்திய ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன் புதிய ஆய்வுப் பணிகளையும் தொடங்கியுள்ளது. 1967–68-ம் ஆண்டு முதற்கொண்டு இன்று வரையில் நிறைவேற்றப்பட்ட பணிகளில் முக்கியமானவற்றின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றைத் தவிர, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் தனி நிறுவன நிதியின் கீழ்,. தமிழ்நாடு கனி வளத் திட்டமொன்றைச் செயல் படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இரும்பு கலப்புள்ள கனி வளங்கள், இரும்பு கலப்பற்ற கனி வளங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதே இதன் நோக்கமாகும். விமானத்திலிருந்து



நிழற்படம் எடுப்பது போன்ற முன்னேற்றமடைந்த முறைகளினால் 13,000 ச. கிலோ மீட்டர் பரப்பளவில் இத்தகைய ஆய்வு வேலைகள் நடத்தப்படும். வேலூர், சேலம், விருத்தாசலம் ஆகிய நகரங்களுக்கிடையே உள்ள முக்கோணப்பகுதியில் இத்தகைய ஆய்வு வேலை நடத்தப்படும். இத்திட்டத்திற்கு 12 லட்சம் டாலர் வழங்குவதாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் வாக்களித்துள்ளது. மாநில அரசாங்கம் தனது பங்காக இதற்கு 35 லட்சம் ரூபாய் வழங்கவேண்டும். மேற்சொன்ன பகுதிகளில் மும்முரமாக ஆய்வு வேலை நடத்துவதுடன், இந்தியப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பையும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஆதரவில் வல்லுநர் குழு ஒன்று இத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக இங்கு செயல்படும். இத் திட்டம் 1967 செப்டம்பர் திங்களில் முறைப்படி தொடங்கப்பட்டது. பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற தொடக்கப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அருப்புக்கோட்டைத் தாலுகாவில் பந்தல்குடி, பழவநத்தம் ஆகிய இடங்களுக்கு அருகில் துளையிட்டு நுணுக்கமாக ஆராய்ச்சி நடத்தியதிலிருந்து அங்கே சுண்ணாம்புக் கல் படிவம் இருப்பதாகத் தெரிய வருகிறது. 19 இடங்களில் துளை போடப்பட்டன. இந்த ஆராய்ச்சியிலிருந்து இந்த இடத்தில் 150 லட்சம் டன சுண்ணாம்புக் கல் படிவங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சுண்ணாம்பு ஆக்சைடு சராசரி 48 சத வீத அளவில் உள்ளது. இங்குள்ள சுண்ணாம்புப் படிவம் சிமிட்டித் தொழிலுக்கு ஏற்றதாகும்.

பெரம்பலூர் வட்டத்தில் (குன்னம் அருகிலுள்ள கல்லையில்) துளையிட்டு நுணுக்கமாக ஆராய்ச்சி நடத்தியதிலிருந்து கிடைத்த முடிவுகளின் பயனாக லால்குடி வட்டத்தில் சிறுகனூர் அருகே சுண்ணாம்புக் கல் படிவம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இங்கு ஆய்வு வேலை விரிவான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு கிடைக்கும் சுண்ணாம்புக் கல் படிவம் தரத்தில் உயர்ந்தது. விட்டு விட்டு மூன்று இடங்களில் சுண்ணாம்புக் கல் கிடைக்கின்றது. சோதனைக்காக துளையிட்டு ஆராய்ச்சி நடத்தியதிலிருந்து இப்படிவங்கள் 4 அடி முதல் 101 அடி கனம் வரையில் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் 13 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் தரமுயர்ந்த சுண்ணாம்புக் கல் 10 லட்சம் டன் கிடைக்கும் என்று தெரிகினறது. இந்த இடத்திற்கு அணமையில் பெரம்பலூர், திருச்சி தேசீய நெடுஞ்சாலையில் சிறுகனூருக்கு ஒரு சில மைல்கள் தெற்கே கோனலிக்கு அருகே கல்பாளையம், மணிகண்டம் கிராமங்களில் சுண்ணாம்புப் படிகக் கற்கள் கிடைக்கின்றன. இவை தொன்மை வாய்ந்தவை. மூன்று இடங்களில் துளையிட்டு ஆராய்ச்சி நடத்தியதின் பலனாக இச் சுண்ணாம்புக் கல் தரம் குறைந்தவை என அறியப்பட்டது. ஆனால், சிமிட்டி தயாரிப்பதற்கான 30 லட்சம் டன் தரமான சுண்ணாம்புக் கல இப்பகுதியிலிருந்து கிடைக்கும் என்று தெரிகிறது. மேலூர் வட்டத்தில் சிறுகுடி, நத்தம் அருகே விரிவான அளவில் துளையிடுவதன் மூலமும் பள்ளம் வெட்டுவதன் மூலமும் டோல்மிடி ரகச் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்குமா என்ற ஆய்வு வேலை மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 20 குழிகள் வெட்டப்பட்டன. அதிக அளவு 60 மீட்டர் ஆழம் வரையில் நான்கு இடங்களில் துளைகள் போடப்பட்டன. இங்கு உள்ள சுண்ணாம்புக் கல் ஒரு சில இடங்களில் தரமுள்ளதாகவும் மற்றும் சில இடங்களில் தரக்குறைவானதாகவும் மாறி மாறி இருப்பது கண்டறியப்பட்டது. அடிப்படை மாதிரிகளை ரசாயன பாகுபாட்டுக்குட்படுத்தும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். இங்கு 1,600 அடி × 900 அடி பரப்பளவில் சுண்ணாம்புக் கல் கிடைக்கின்றது.

கோ[illegible]ம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப்[illegible]ட்டை] ஆகிய வட்டங்களில் வண்டல் சார்ந்த இடங்களில் கிடைக்கும் களிக்க[illegible]ின் தரத்தையும் அளவையும் கண்டறிவதற்காக இங்கு விரிவான அள[illegible] [illegible]ய்வு வேலை மேறகொளளப்பட்டது. இப்பகுதியில் நிலத்திலிருந்து 10 [illegible]டி ஆழத்தில் சுண்ணாம்புக் கல் சார்ந்த சிறு உருண்டைகள் சிறு துகள்க[illegible] வடில் களிக்கல் கிடைக்கின்றது. இக்களிக்கல் கிடைக்கு

பெரும் பகுதி தனிப்பட்ட சுரங்க உரிமையாளர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. முன்பு ஆய்வு செய்யப்படாத இடங்களில் முறையாகக் குழிகள் தோண்டி ஆய்வு வேலை நடத்தப்பட்டது. 3,000 எக்கர் பரப்பளவில் 8 லட்சம் டன் களிக்கல் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. இக் களிக்கல்லில் சராசரியாக கால்ஷியம் சல்பேட், தண்ணீர் இவை ($CaSO_4$ 2H 2O) 85 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது எனக் கண்டறியப் பட்டுள்ளது. இக் களிக்கல் முக்கியமாக சிமிட்டித் தொழிலுக்கும் வேளாண்மைக்குமே பயன்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கயத்தாற்றில் துளையிட்டு நுணுக்கமாக ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஐந்து இடங்களில் துளையிடப் பட்டது. இங்கு கிடைக்கும் சுண்ணாம்புக் கல் கலப்பு வகையைச் சேர்ந்ததாகும். இது 20 அடி முதல் 80 அடி வரையில் கனமுடையதாகும். இச்சுண்ணாம்புக் கற்களில் சான்ட்ரேடைட் ( chondrodite ) இருப்பதிலிருந்து இவை குணத்தில் டோல்மிடிக் வகையைச் சேர்ந்தவையாக இருக்குமென்று தெரிய வருகிறது. இப்பகுதியிலுள்ள வண்டற்பாங்கான இடங்களில் பல இடங்களில் களிக்கல் கிடைப்பது குறித்து விரிவான அகழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் மாமண்டூரில் பலவகை உலோக கனி வளங்கள் இருப்பது குறித்த ஆய்வு வேலை விரிவான அளவில் முந்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆய்வுக் கால அளவில், பொதுவாக நில அமைப்பை அறிவதையும், புவியியல் ரசாயனமாதிரிகளைச் சேகரிப்பதையும் தவிர, இந்த இடத்தில் உள்ள கனிப் பொருள்களின் அளவையும் அவற்றின் தரத்தையும் கண்டறிய ஆழமான துளைகளிடும் வேலை தொடங்கியது. இதற்கு முன்னர் இங்கு 5 சதவீதம் ஈயம், துத்தநாகம், செம்பு (அனைத்தும் கலந்த) கனிப் பொருள்கள் 10 லட்சம் டன் இங்கு கிடைக்குமென இந்தியப் புவியியல் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. (செங்குத்தான நிலையிலிருநது 17 டிக்ரி கோணத்தில் போட்டுள்ள) ஆழமான துளை 200 மீட்டர் (655 அடி) வரையில் சென்றுள்ளது. இந்த ஆழத்திலேயே கனிப்பொருள்கள் சில காணப்படுகின்றன. இங்கு கிடைக்கும் புவியியல் ரசாயனமாதிரிகளைப் பகுத்து ஆராய்வதற்காக களத்திலேயே ரசாயன ஆய்வுக்கூடமொன்று நிறுவப்பட்டுள்ளது. இதுவரையில் 600 மாதிரிகள் பகுக்கப்பட்டுள்ளன.

கல்லூத்து, நாகமலை, உசிலம்பட்டி ஆகிய இடங்களுக்கருகே காரீயகம் ( Graphite ) கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு இக்கனிப் பொருள் சுண்ணாம்புக் கல்லுடன் சேர்ந்து ஏராளமான அளவில் கிடைக்கின்றது. இச் சுண்ணாம்புக் கல் டோல்மிடிக் வகையைச் சேர்ந்ததாகும். 850 மீட்டர் நீளம், 20 மீட்டர் அகலத்திற்கு இச்சுண்ணாம்புக் கல் செறிவாகப் படிந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருமநல்லூர் அருகே கந்தக கனிப் பொருள் கிடைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுப் பணி தொடரப்பட்டது. இங்குள்ள கனிப் பொருளின் தன்மையை அறிந்து கொள்வதே இதன் நோக்கமாகும். ஏழு துளைகள் போடப்பட்டன. சில இடங்களில் கனிப் பொருள் அதிக அளவில் இருப்பது கண்டறியப் பட்டாலும், ஆழம் செல்லச் செல்ல கனிப் பொருள்கள் மிகக் குறைந்த அளவு இருப்பது கண்டறியப்பட்டது. ஒருசில இடங்களில் தவிர பொதுவாக ஆழமான இடங்களில் நிக்கல் உலோகம் அதிக அளவில் இல்லையென்பது தெரியவந்தது.

சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் காணப்படும் படிகப் பாறைகளில் நிக்கல் காணப்படுகின்றதா என ஆராயப்பட்டது. இப்பாறைகளில் 0·1 முதல் 0·3 சத வீதம் வரை நிக்கல் செறிவு காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வு வேலைகளைத் தவிர, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பவானி வட்டத்தில் கனிப் பொருள் ஆய்வுப் பணி நடத்தப்பட்டது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் ஜமீன்தாரிப் பகுதியிலும்





இத்தகைய ஆய்வு வேலைகள் நடத்தப்பட்டன. இப்பகுதிகளில் கயனைட் (Kyanite), பாரிய கந்தகை (Barytes) சிலிமனைட் (Sillimanite) ஆகிய கனிப் பொருள்கள் கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இரும்பு கலப்புள்ள, இரும்பு கலப்பற்ற கனிப் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கென 13,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முக்கோணப் பகுதியில் மும்முர ஆய்வுப் பணி நடத்துதல், அப்பகுதியில் புவியியல் ஆய்வுப் பணி செய்தல், மாமண்டூரில் செப்புக் கனிப்பொருள்கள் கிடைக்கின்றதாவென்று அறிவதற்காக ஆழ் துளையிடுதல், மேலும் விமானம் மூலம் இப்பகுதிகளை ஆய்வு செய்தல் ஆகிய இப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் வகை செய்கின்றது. சேலம் அருகே உள்ள கல்ராயன் குன்றுகள், பச்சைமலை, கொள்ளிமலை, சவ்வாது மலை, பிற பெரிய குன்றுகள் ஆகியவற்றில் ஆய்வு வேலையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாமண்டூர் பகுதியில் சுரங்க வேலையை மேற்கொள்வதற்காக ஏராளமான கருவிகள் வாங்கப்பட்டன. ஆனால், இத்திட்டம் ஐக்கிய நாடுகள் வேலைத் திட்டத்தின் கீழ் வருவதால், ஆய்வு வேலை முடிந்த பின்னரே மேற்கொண்டும் அகழ் வேலைகள் நிறைவேற்றப் படும்.

1–4–1967 முதல் 13–12–1967 வரை 1,113 மாதிரிகளை ரசாயனப் பிரிவு பாகுபாட்டிற்காகப் பெற்றது. இவற்றில் 958 மாதிரிகள் பகுக்கப் பட்டன. 550 பாக்சைட் மாதிரிகள், 174 சுண்ணாம்புக்கல் மாதிரிகள், 234 பல்வகைக் கனிப் பொருள் மாதிரிகள் இவற்றில் அடங்கும். இந்தியப் புவியியல் நிறுவனமும் இம்மாநிலத்தில் பயனுள்ள ஆய்வுப் பணியை நடத்தி வருகின்றது. இம்மாநிலத்தில் எண்ணெய் கிடைப்பது பற்றி எண்ணெய்—இயற்கை வாயு பொறுப்பாண்மைக் கழகம் நிறைவேற்றி வரும் ஆய்வு வேலை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

**1967-ம் ஆண்டில் மாநிலப் புவியியல் பிரிவு நிறைவேற்றிய ஆய்வுப் பணிப் பட்டியல்.**

1. அருப்புக்கோட்டை வட்டத்தில் பழவநத்தம், பந்தல்குடி அருகே சுண்ணாம்புப் படிகக் கற்கள் கிடைப்பது பற்றி விரிவான ஆய்வுப் பணி.

2. லால்குடி வட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் அருகே பவழக் கற்கள் கண்டுபிடிப்பதற்காக துளையிடும் வேலைகள்.

3. திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் கோனலி அருகே சுண்ணாம்புப் படிகக் கற்கள் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்காகத் துளையிடு வேலைகள்.

4. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் களிக் கற்கள் ஆராய்ச்சி.

5. கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டத்தில் கனிப் பொருள் ஆய்வுப் பணி.

6. செங்கற்பட்டு மாவட்டம், உத்திரமேரூரைச் சுற்றி வெள்ளைக் களி மண் கிடைப்பது குறித்த ஆராய்ச்சி.

7. கோயம்புத்தூர் மாவட்டம், சின்னமலை அருகே ரத்தினக் கற்களுக்கான ஆராய்ச்சி.

8. வட ஆர்க்காடு மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் மெருகுள்ள கற்கள் வெட்டி எடுப்பது குறித்த ஆராய்ச்சி.

9. மதுரை மாவட்டம், நாகமலைப் பகுதியில் கல்லூத்து அருகே காரீயகம் (Graphite) கிடைப்பது பற்றிய ஆராய்ச்சி.

10. மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நத்தம் அருகே சுண்ணாம்புக் கல் கிடைப்பது குறித்து ஆராய்ச்சி.

11. சேலம் மாவட்டம், சேலம், நாமக்கல், ஓமலூர் வட்டங்களில் நிக்கல் கிடைப்பது பற்றிய ஆராய்ச்சி.

12. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு அருகே அபட்டைட் (apatite) கனிப் பொருள் குறித்த ஆராய்ச்சி.

13. திருச்சி மாவட்டம், கடலூர் குன்றுகளில் கனிப் பொருள் ஆராய்ச்சி.

14. தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் அருகே சுண்ணும்புக் கல் பற்றிய ஆராய்ச்சி.

15. செங்கற்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள கோழியின வளர்ப்புப் பண்ணையில் நிலநீர் ஆராய்ச்சி.

16. தருமபுரிக்கு அருகே தொழிற்பேட்டைக்காக நிலநீர் ஆராய்ச்சி.

17. தருமபுரி மாவட்டம், ஒசூர் பட்டுப்பூச்சி வளர்ப்புப் பண்ணையில் நிலநீர் ஆராய்ச்சி.

18. தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் அருகே தொழிற் பேட்டைக்காக நிலநீர் ஆராய்ச்சி.

19. தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் அருகே தொழிற்பேட்டைக் காக நிலநீர் ஆராய்ச்சி.

20. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை அருகே மாநில விதைப் பண்ணை நிலநீர் ஆராய்ச்சி.

21. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அழகூர் அருகே களிமண் (Bentonitic Clay) ஆராய்ச்சி.

22. கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகர் அருகே செம்புக்கனி கிடைப்பது பற்றிய ஆராய்ச்சி.

23. தென் ஆர்க்காடு மாவட்டம், நெய்வேலிப் பகுதியில் வடலூர் அருகே நிலநீர் ஆராய்ச்சி.

24. தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மாமண்டூர் அருகே செம்புக்கனி படிவம் குறித்த விரிவான ஆராய்ச்சி.

25. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருமநல்லூரில் கந்தகைக் கனிப் பொருள் கிடைப்பது குறித்து விரிவான ஆராய்ச்சி.

26. காஞ்சிபுரம் அருகே நிறுவத் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பேட்டைக் காக நிலநீர் ஆராய்ச்சி.

## சிறு தொழில்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் வளர்ச்சிக்குரிய வேலைத் திட்டமொன்று ரூ. 2·76 லட்சம் செலவில் சிறு அளவில் தொடங்கப்பட்டது. இந்த வேலைத் திட்டம் இரண்டாவது, மூன்றாவது திட்டக் கால அளவுகளில், முறையே ரூ. 580 லட்சம், ரூ. 1,120 லட்சம் முதலீடு செய்யப்பட்டதன் வாயிலாக மேலும் முக்கியத்துவம் பெற்றது. 1964–65-ம் ஆண்டில் 45 சிறு தொழில் பிரிவுகள் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 29 உற்பத்திப் பிரிவுகளாகும்; 16 பணிப்பிரிவுகளாகும். 1965–66-ம் ஆண்டிற்குள் செயல்படும் உற்பத்தி-பணிப்பிரிவுகளின் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்தது.

பணி-உற்பத்திப் பிரிவுகள் மூன்று திட்டக்கால அளவுகளிலும் சீராகத் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தன.

உற்பத்திப் பிரிவுகள், சில பணிப் பிரிவுகள் ஆகியவை வணிக முறையில் செயல்படுவதற்காக, தமிழ்நாடு அரசாங்கம் ரூ. 10 கோடி அனுமதி பெற்ற மூலதனத்துடன், "தமிழ் நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன் லிமிடெட்" என்னும் பெயரில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட வணிக நிறுவனம் ஒன்றை நிறுவியுள்ளது. தொழில்-வணிகத் துறையைச் சேர்ந்த 65 பிரிவுகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நிறுவனம் 1965-ம் ஆண்டு டிசம்பர் 1-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இவற்றில் 42 பிரிவுகள் 1965–66-ம் ஆண்டிற்கு முன்னரே பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. எஞ்சியுள்ள 23 பிரிவுகள் 1966–67-ம் ஆண்டில் உற்பத்தி செய்யத் தொடங்கின.





தமிழ் நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன் லிமிடெட் என்னும் நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கட்டிட அமைப்புப் பொருள்கள், மின்சாரம் அனுப்புவதற்குப் பயன் படும் பொருள்கள், சுகாதார வசதிப் பொருள்கள், மண் குழாய்கள், காலணிகள், கண்கவர் தோல் பொருள்கள், பட்டையிட்டுப் பதப்படுத்திய தோல், குரோம் தோல், ஆய்வுக் கூட கண்ணாடிப் பொருள்கள், மரச் சாமான்கள், அலுவலக உருக்குச் சாமான்கள், மிதி வண்டிகள், மரைகளும் ஆணிகளும், எனமல் பூசிய பருத்தி நூல் சுற்றிய உயர் வகை மின் கம்பிகள், வேளாண்மைக் கருவிகள், மருந்து தெளிப்பான்கள், தூவு கருவிகள், பூட்டுகள், குறைந்த பரித்திறனுள்ள மின்சார மோட்டார் கள், கைத்தறிப் பகுதிகள், படிக்கல் பொடி (Quartz powder). மேற்கண்டவற்றுடன்கூட கீழ்க்கண்ட துறைகளிலும் சிறப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன—

உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்குதல், அழுத்தி எடுத்து வார்ப்படம் செய்தல், கருவிகள், அச்சுகள் செய்தல், உருக்கி வார்ப்படம் செய்தல், துத்தநாக முலாம் பூசுதல், மரம் பதப்படுத்துதல்.

கடந்த எழாண்டுகளில் சிறு அளவு தொழிற் பிரிவுகள் தங்கள் உற்பத்தியைக் கணிசமான அளவு பெருக்கியுள்ளன. 1959–60-ம் ஆண்டில் இவை ரூ. 33 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தன. இந்த உற்பத்தியளவு 1965–66-ம் ஆண்டில் ரூ. 389 லட்சமாகவும், 1966–67-ம் ஆண்டில் ரூ. 479 லட்சமாகவும் உயர்ந்தது.

சிறு தொழில் கார்ப்பரேஷனுக்கு மாற்றப்பட்ட இந்தப் பிரிவுகள் 1965–66-ம் ஆண்டில் செயல்பட்ட முதல் நான்கு மாதங்களில் ரூ. 150 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தன; பணிகளை நிறைவேற்றின. இதனால் (வரி விதிப்பிற்கும், சேம நிதிக்கும் தொகை ஒதுக்கு வதற்கு முன்) ரூ. 13·68 லட்சம் ஆதாயம் கிடைத்தது. 1966–67-ம் ஆண்டில் இப் பிரிவுகள் (வரிவிதிப்பதற்கும், சேம நிதிக்கும் தொகை ஒதுக்குவதற்கு முன்) ரூ. 12·88 லட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளன.

தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனின் கீழ் இந்தப் பிரிவுகள் 1966–67-ம் ஆண்டில் செய்த உற்பத்தியின் மதிப்பு, 1967–68-ம் ஆண்டில் அவை எய்தக் கூடிய சாதனை, 1968–69-ம் ஆண்டில் அவை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கும் அளவு ஆகிய விவரங்கள் எட்டாவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. உற்பத்தி குறைந்துவிடுமென 1967–68-ம் ஆண்டுத் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்படவில்லை. சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கான தேவைப்பட்டியல் கள் போதிய அளவில் பெறப்படாமையும் பொறியியல் தொழிலில் மந்த நிலை ஏற்பட்டதும், அரசாங்கத் துறைகள் பொருள்கள் வாங்குவது கடுமையாகக் குறைக்கப்பட்டதும் உற்பத்தி குறைந்தது, முக்கியக் காரணங்களாகும். உற்பத்திப் பிரிவில் முனைந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால், 1968–69-ம் ஆண்டில் இந்தப் பிரிவுகள் அதிக அளவில் உற்பத்தி செய்ய இயலுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பிரிவுகளின் உற்பத்தி மதிப்பு சுமார் ரூ. 500 லட்சமாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தக் கார்ப்பரேஷனின் கீழ் பதப்படுத்திய தோல் பொருள்களைத் தயாரிக்கும் பிரிவு, பதப்படுத்திய சில வகைத் தோல்களை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்கிறது. இதனால் மதிப்புள்ள அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

கார்ப்பரேஷனின் பிரிவுகளில் தொழில் நுட்பப் பணியாளர், தொழில் நுட்பமல்லாத பணியாளர் ஆகியவர்களைத் தவிர, 5,400 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், தற்போதைய திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும், திட்ட ஒதுக்கீட்டிலிருந்து 1966–67-ம் ஆண்டில் அரசாங்கம் இந்தக் கார்ப்பரேஷனுக்கு ரூ. 60·76 லட்சம் கடன் வழங்

இயது. நடப்பாண்டில் அத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும், இந்த ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் ரூ. 45 லட்சம் கடன் வழங்கப்படும். இவ்வாறு கடன் வழங்குவதற்காக 1968–69 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 27·11 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிண்டியிலுள்ள பணிக்கார்ப்பரேஷனும், மதுரையிலும், கோவையிலும் உள்ள மூலப் பொருள் கிடங்குகளும், ஏனைய 64 சிறு தொழில் பிரிவுகளுடன் 1965–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் தமிழ் நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனிற்கு மாற்றப்பட்டன. இவை 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் தொழில் வணிகத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் மீண்டும் மாற்றப்பட்டுள்ளன. பணிக்கார்ப்பரேஷனும், மூலப் பொருள் கிடங்குகளும் மூலப் பொருள்களை சிறு தொழிலதிபர்களுக்கும் அரசாங்கத் தொழில் பிரிவுகளுக்கும் வழங்கி வருகின்றன. கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களைப் பகிர்ந்தளிப்பதற்காகவும், இன்றியமையாத ஏனைய மூலப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கவும், பதிவு பெற்ற கிடங்குகளாகவும் இவை செயல்பட்டு வருகின்றன. எளிதில் கிடைக்காத மூலப் பொருள்களுக்கு 1967-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதியிலிருந்து கட்டுப்பாடு நீக்கப்பட்ட போதிலும் அவற்றைப் பகிர்ந்து கொடுக்கும் பணியையும் இவை கவனித்து வருகின்றன. பணிக்கார்ப்பரேஷனில் மூலப் பொருள்களை ஆண்டுதோறும் பங்கிட்டுக் கொடுக்கும் அளவு தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது. 1960–61-ம் ஆண்டில் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 13·57 லட்சமாக இருந்தது. இது 1966–67-ம் ஆண்டில் ரூ. 112·78 லட்சமாக உயர்ந்துள்ளது. 1966–67-ம் ஆண்டில் ரூ. 12·79 லட்சம் மதிப்புள்ள பொருள்களை மதுரையிலுள்ள மூலப் பொருள் கிடங்கும், ரூ. 20·07 லட்சம் மதிப்புள்ள பொருள்களை கோயம்புத்தூரிலுள்ள மூலப் பொருள் கிடங்கும் பகிர்ந்தளித்தன.

தொழில் துறை தொடர்ந்து நிறை வேற்றி வரும் ஏனைய பயிற்சிப் பணி வசதித் திட்டங்களுள் ஆய்வு புள்ளி விவரப் பிரிவம், பொதுக் குத்தகைப் பட்டறைகளும், தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகளும் மற்றவையும் அடங்கும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆய்வுப்புள்ளி விவரப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இம்மாநிலத்தில் தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் சிறு தொழில்கள் குறித்த விரிவான புள்ளிவிவரங்களைத் தொகுத்து பேணி வரவும் இப் பிரிவு அமைக்கப்பட்டது..

இப் பிரிவிடம் கீழ்க்கண்ட பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன :—

(1) இம் மாநிலத்திலுள்ள சிறு தொழில் பிரிவுகள் அனைத்தையும் பதிவு செய்தலும், பதிவுச் சான்றிதழ்களை அளித்தலும்.

(2) பதிவு செய்த பிரிவுகளின் உற்பத்திப் புள்ளிவிவரங்களைத் திரட்டுதலும், தொழில் வாரியாக அவற்றைத் தொகுத்தலும்.

(3) சிறு தொழில்களைப் பதிவு செய்யும்பொழுது சேகரித்த விவரங்களின் அடிப்படையில் இம் மாநிலத்தின் சிறு தொழில் பிரிவுகளைப் பற்றிய விவர விளக்க நூல் ஒன்றை வெளியிடுதல்.

(4) தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில் பணி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுதல்.

(5) மாநில அரசாங்கம் உத்திரவிடும் தனிப்பட்ட அல்லது சிறப்பு ஆய்வு ஏதேனும் நடத்துதல்.

இம் மாநிலத்தில் சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்யும் பணி இந்தப் பிரிவினால் 1960 நவம்பரிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படும் தொழிலின் வகை, அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் இவற்றின் அடிப்படையில் நிலையானது அல்லது தற்காலிகமானது என பதிவுச் சான்றிதழ் வகைப்படுத்தப்படும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். சிறு தொழில்களைப் பதிவு செய்





யும் பணி 1967-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதிமுதல் பரவலாக்கப்பட்டு இப் பிரிவுகளைப் பதிவு செய்யும் அதிகாரம் உதவி இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி நிலவரப்படி 11,929 பிரிவுகள் பதிவு செய்யப்பட்டு, பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

பதிவு மூலம் சேகரித்த விவரங்களின் அடிப்படையில், சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவர விளக்க நூல்கள் இரண்டினை இப் பிரிவு வெளியிட்டுள்ளது. 1961–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை பதிவு பெற்ற பிரிவுகள் (3,000 பிரிவுகள்) பற்றிய விவரங்கள் கொண்ட முதல் விளக்க நூல் 1962-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1963–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை பதிவு பெற்ற பிரிவுகள் (6,135 பிரிவுகள்) பற்றிய விவரம் கொண்ட இரண்டாவது விளக்க நூல் 1965-ல் வெளியிடப்பட்டது. 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் கொண்ட வெளியீடு ஒன்றை இரண்டாம் பதிப்பிற்கு துணை வெளியீடாக வெளியிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிய தொழில் துறைகளில் இறங்க விரும்பும் தொழில் முனைவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் மேற்படி விவர விளக்க நூல் மிகப் பயனுள்ள தகவல்களை அளிக்கின்றது.

விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்க பெருந்தொகை முதலீடு செய்ய இயலாத சிறு தொழிலதிபர்களுக்குச் செப்பனிடும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடன், தொழில் பண்ணைகளிலும், தொழில் பேட்டைகளிலும் பொதுக் குத்தகைப் பட்டறைகள் (common lease shops ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் தொழில் பிரிவுகளில் சில மோட்டார் தொழிலுக்கு வேண்டிய (அசைக்க முடியாத இறுகப் பற்றிக் கொள்ளும்) டெக்ஸ்டைல் வளையங்களைத் தயாரிக்கின்றன. பொதுக் குத்தகைப் பட்டறைகள் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ளன :—

(1) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பேட்டை.

(2) திருச்சிராப்பள்ளி.

(3) கோயம்புத்தூர்.

(4) கிண்டி.

(5) மதுரை.

(6) அம்பத்தூர்.

கிண்டியில் உள்ள தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி மூன்றாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. பொறியியல் பட்டம் அல்லது டிப்ளோமா பெற்றுள்ளவர்களுக்கு கீழ்க்கண்ட தொழில்களில் இப் பள்ளி பயிற்சி யளித்து வருகிறது :—

(1) அச்சு வடிவமைப்பு.

(2) அச்சு வார்த்தலும், கருவிகள் செய்தலும்.

(3) உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப்படுத்தல்.

(4) இயந்திரங்களை இயக்குதல்.

மேற்கண்ட தொழில்களில் 62 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த நிலையத்தை ரூ. 13 லட்சம் தொடராச செலவில் விரிவுபடுத்துவதற்கான திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இயந்திரங்களைத் தருவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சில பெறப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்திலும், ஓமலூரிலும் உள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் முறையே 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி அன்றும் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி அன்றும் செயல்

படத் தொடங்கியுள்ளன. அரக்கோணத்தில் கருமார் வேலை தச்சு வேலைப் பிரிவு 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதி அன்று செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த இடத்திற்கும், அதைச் சுற்றிலும் உள்ள இடங்களுக்கும், செப்பனிடு வசதிகளை உழவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே மேற்படி திட்டங்களின் நோக்கமாகும்.

மூன்றுவது திட்டத்தில் திண்டுக்கல்லில் துவக்கப்பட்ட கருவிகள்-அச்சு-மாதிரி அமைப்புப் பயிற்சி நிலையம் ஒன்று, III, IV-ம் தொகுதிகளின் கீழ் 32 பேருக்குப் பயிற்சி அளித்து வருகின்றது.

மின் மருத்துவக் கருவிகளுக்கான மத்திய பணி-செப்பனிடு பிரிவுக்கு 1966-ம் ஆண்டில் திட்டப்பணியாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1967 மார்ச் திங்கள் முதல் கிண்டியில் அது செயல்படத் தொடங்கியது. அரசாங்க மருத்துவ நிலையங்களிடமிருந்து பெறும் மின் மருத்துவக் கருவிகளை அது செப்பனிடுகின்றது. மதுரைக்கு அப்பாலுள்ள தென் மாவட்டங்களுக்கு அதேபோன்ற வசதிகளை அளிப்பதற்கென, மதுரையில் துணை நிலையம் ஒன்று 1967 டிசம்பரில் துவக்கப்பட்டது.

இரண்டாவது, மூன்றுவது திட்டங்களின்போது, கிண்டியில் ஒன்றும் மதுரையில் ஒன்றும், பேட்டையில் ஒன்றும் ஆக மூன்று தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் நிறுவப்பட்டன. மதிப்புயர்ந்த பல தொழில் நுட்ப நூல்களும், பத்திரிகைகளும், திட்ட அறிக்கைகளும் கொண்ட ஒரு நூலகம் இந்தப் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் பணி நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. தொழில் அதிபர்களுக்கும், தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கும், தொழில் நுட்ப அறிவினை அவை வழங்குகின்றன. இந்நாட்டிலும், வெளி நாடுகளிலும், நிலவும் தொழில் முன்னேற்றம் குறித்தும், பாதுகாப்பான உற்பத்தி முறைகள் முதலியவை குறித்தும் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. "தொழில்-வாணிபம் ( Ind-Com )" என்னும் பெயர் கொண்ட காலாண்டுப் பத்திரிகை ஒன்றும் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவால் வெளியிடப்படுகின்றது. அதன் மூலம் துறையின் நடவடிக்கைகளும், சிறு தொழில் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகளும் பொது மக்களின் நாட்டத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. கிண்டி தொழில் நுட்பத் தகவல் பிரிவுக்கு ஒரு தனிக் கட்டிடத்தை ஏற்படுத்தவும், நுட்பமான படங்களை எடுக்கும் இயந்திரங்களையும், நிழற்படம் எடுக்கும் இயந்திரங்களையும் கொண்ட பிரிவுகளை ஏற்படுத்தவும் வசதியாய் இருக்க, அப் பிரிவை விரிவுபடுத்துவதற்கான திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மட்பாண்டத் தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்று, வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத்தாயரிப்புப் பிரிவுடன் விருத்தாச்சலத்தில் செயல்பட்டு வருகின்றது. மூன்றுண்டுப் பயிற்சி முறைக்கென ஒவ்வோராண்டும் 25 மாணவர்களுக்கு இப்பள்ளியில் முனைப்பாகப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அப் பயிற்சி முடிந்த பின் வாணிகப் பிரிவுகளில் நேரடிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப் பள்ளியில் மிகச் சிறந்த முறையில் பயிற்சி பெறும் மாணவருக்கு ஒவ்வோராண்டும் தங்கப் பதக்கம் ஒன்றை தனியார்துறையில் உள்ள புகழ்பெற்ற மட்பாண்டத் தொழில் நிறுவனம் ஒன்று வழங்குகின்றது. மேலும் பயிற்சித் தேர்வுகளில் இரண்டாவதாகவும், மூன்றுவதாகவும் வரும் மாணவர்களுக்கு ரொக்கப்பரிசையும் அது வழங்குகின்றது. வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத் தொழில் பிரிவு, வேலைப்பாடுகள் அமைந்த-பயன்படுத்தத் தக்க மட்பாண்டப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தற்கால முறைகளில் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. நடப்பு ஆண்டில் இப் பள்ளி மாணவர்களுக்கென விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. கிண்டியிலுள்ள விஞ்ஞானக் கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், தரமான விஞ்ஞானக் கருவிகளையும், சில நுட்பப் பொருள்களையும் தயாரிப்பதில் ஒவ்வொரு தொகுதியிலிலும் 20 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றது. மேலும் ஒன்றுக்கொன்று மாற்றப்படத்தக்க சொர சொரப்பான கண்ணாடிக் கருவிகள், சரிவர மதிப்பாராயப்பட்டவையும், அளவுக் கூறுகள் குறிக்கப்பட்டவையும் காற்றின் பொருண்மையை அளப்பவையுமான கண்ணாடிக் கருவிகள், வெற்றிடப் பாதுகாப்பு அடைப்பான்கள், மெர்க்குரி சுவிட்சுகள் போன்ற சில நுட்ப கருவிகளைத் தயாரிப்பதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.





விசையால் இயங்கும் அடிப்படை இயந்திரங்களை இயக்குவதில் வேளாண்மைக் குடும்பங்களிலிருந்து வருவோருக்கு பயிற்சி அளிப்பதற்கென திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று ஆதாரக் கிராமப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மூன்றுவது திட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இயந்திர-உலோகத் தொழில் ஆய்வுக் கூடம் கிண்டியில் செயல்பட்டு வருகின்றது. இரசாயனப் பகுப்பாய்வைத் தவிர, இரும்பு கலந்த உலோகங்கள், இரும்பு கலவாத உலோகங்கள், கலப்பு உலோகங்கள், பிளாஸ்டிக்ஸ், ரப்பர் முதலியவற்றை எல்லா வகையிலும் பரிசோதிக்கும் வேலையை இந்த ஆய்வுக் கூடம் மேற்கொண்டுள்ளது. அரசாங்கத் துறைகளிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட, 1,170 மாதிரிகள் 1967-ம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்டன. கிண்டியிலுள்ள இரசாயன ஆய்வு-பகுப்பாய்வுக் கூடத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தின் கீழ், ஒரு இரசாயன பொறியியல் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. கடல் தாவரங்களிலிருந்து கிடைக்கும் "செல்ஸ் மிக்ஸ்" என்னும் பொருளிலிருந்து மக்னீசியம் சல்பேட்டைப் பிரித்து எடுப்பது குறித்து இப் பிரிவு முன்னோடி ஆய்வு செய்து வருகிறது.

கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளைச் செயல்படச் செய்தவற்கான வேலை நடந்தேறி வருகிறது :—

(1) நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து நின்று எரியும் கரியைத் (Active Corbon) தயாரிப்பதற்காக வடலூரில் ஒரு தொழிற் பிரிவு.

(2) தூத்துக்குடியில் மக்னீஷியம் கார்பனேட் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

(3) தூத்துக்குடியில் கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

(4) கிண்டியில் நுரைமம் (yeast) தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

(5) தூத்துக்குடியில் பாரிஸ் உறை மாவுத் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

இவற்றில், நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு 1968 மார்ச்சு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1968–69-ல், வட ஆர்க்காடு மாவட்டத்தில் சோடியம் டை-குரோமேட் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு ஒன்றை ரூ. 8·12 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவவும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய மின் கருவிகள் சோதனைக் கூடத்தை ரூ. 10·84 லட்சம் செலவில் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழில்களுக்கு அரசாங்கம் உதவி வழங்குவது குறித்த சட்டம்.

தொழில்களுக்கு அரசாங்கம் உதவி வழங்குவது குறித்த 1922-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் கீழ் 1966–67-ல் 2,494 சிறு தொழில் அதிபாகட்கு ரூ. 34·92 லட்சம் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டன.

1–4–1967 முதல் 30–11–1967 வரையில் 730 தொழில் அதிபர்களுக்கு ரூ. 9·40 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய கடன்களுக்கென 1968–69 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1956–57 முதல் 1967–68 வரையில் வழங்கப்பட்ட கடன்களைக் காட்டும் ஒரு விவர அறிக்கை இந்த ஆயவுரையின் 1-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## தொழிற்பேட்டைகளும் மேம்பாடு செய்த மனைகளும்

நீர், மின்சக்தி, போக்குவரத்து, சாலைகள் முதலிய வசதிகளுடன் சிறு தொழிலதிபர்களுக்கு நன்கு திட்டமிடப்பட்ட இட வசதியைச் செய்து தருவதன் மூலம் தொழில் மேம்பாட்டிற்கு ஊக்கமளித்து அதை விரைவு படுத்துவதே தொழிற்பேட்டையை நிறுவுவதற்கான முக்கிய நோக்கமாகும்.

A. பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.— இரண்டாவது திட்டத்தின் கீழ், பல்வேறு அளவுகள் கொண்ட தொழிற்சாலைப் பிரிவுகளுடன் ஒன்பது தொழிற் பேட்டைகளை அரசாங்கம் நிறுவியது. அந்தத் தொழிற்சாலைப் பிரிவுகள் குறித்து குறைந்த வீதங்களில் வாடகை வசூலிக்கப்பட்டது. இந்தத் தொழிற் பண்ணைகளில் கட்டப்பட்ட, ஒதுக்கப் பட்ட, செயல்பட்டு வருகிற தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | தொழிற் பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்டுள்ள தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | செயல்பட்டு வருகிற தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கிண்டி | 128 | 128 | 128 |
| 2 | மதுரை | 28 | 28 | 28 |
| 3 | விருதுநகர் | 15 | 9 | 6 |
| 4 | பேட்டை | 12 | 10 | 10 |
| 5 | ஈரோடு | 7 | 7 | 7 |
| 6 | காட்பாடி | 14 | 14 | 14 |
| 7 | தஞ்சாவூர் | 6 | 6 | 6 |
| 8 | திருச்சிராப்பள்ளி | 22 | 22 | 22 |
| 9 | மார்த்தாண்டம் | 5 | 5 | 5 |

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, அத்தகைய தொழிற் பேட்டைகள் பத்தினை நிறுவியுள்ளதற்குக் கூடுதலாக, மேலும் தொழிற் பிரிவுகளைக் கட்டுவதன் மூலம் இரண்டாவது திட்டத்தில் நிறுவப்பட்ட மூன்று தொழிற்பேட்டைகள் விரிவுபடுத்தப்பட்டன. ஒப்பளிப்பு வழங்கப் பட்ட, கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | தொழிற் பேட்டைகளின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அம்பத்தூர் | 70 | 70 | 70 |
| 2 | தேனி | 12 | 7 | 5 |
| 3 | திண்டுக்கல் | 25 | 18 | 12 |
| 4 | காரைக்குடி | 18 | 12 | 9 |
| 5 | கோவில்பட்டி | 18 | 11 | 8 |
| 6 | கிருஷ்ணகிரி | 18 | 12 | 11 |
| 7 | புதுக்கோட்டை | 18 | 12 | 7 |
| 8 | அரக்கோணம் | 18 | 6 | 6 |
| 9 | சிவகங்கை | 12 | 6 | 4 |
| 10 | நாகர்கோயில் | 12 | 6 | 6 |
| 11 | கும்பகோணம் | 12 | 4 | (கட்டப்பட்டு வருகிறது). |
| 12 | துணைத் தொழிற் பேட்டை, திருவெரும்பூர். | 10 | 10 | 9 (ஒதுக்கப்பட்டு வருகின்றன.) |





### இரண்டாவது திட்டத் தொழிற்பேட்டைகளை விரிவுபடுத்தல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மதுரை | 22 | 4 | 4 |
| 2 | ஈரோடு | 6 | 4 | 4 |
| 3 | திருச்சிராப்பள்ளி | 7 | 7 | 7 |

மூன்றாவது திட்டக்காலத்தில், தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தும் குறிக்கோள் அளவினை எய்தத் திட்டமிடப்பட்டிருந்தது. மேற்சொன்ன கொள்கையை யொட்டி (ஒரு துணைத் தொழிற் பேட்டை உட்பட) 11 தொழில் பேட்டைகளையும் தனித் தொழிலுக்கான 5 தொழிற் பேட்டைகளையும் ரூ. 141·80 லட்சம் மொத்தச் செலவில் நிறுவ அரசாங்கம் இதுவரை ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மொத்தம் ரூ. 69·134 லட்சம் செலவில் அம்பத்தூர், மதுரை, காட்பாடி, மாதவரம், அரக்கோணம், ஈரோடு ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இக்கால அளவில் தொழிற் பேட்டைகளில் இதுவரையில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் வருமாறு:—

| தொடர் எண். | தொழிற்பேட்டைகளின் பெயர். | செலவு (ரூபாய் லட்சத்தில்). | கட்ட திட்டமிடப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ஹோசூர் | 6·016 | 6 |
| 2 | காஞ்சிபுரம் | 6·15 | 4 |
| 3 | மேட்டூர் | 6·15 | 4 |
| 4 | கரூர் | 6·15 | 4 |
| 5 | நாகப்பட்டிணம் | 3·263 | 6 |

[1968 மார்ச் 22

| தொடர் எண். | தொழிற்பேட்டைகளின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). | கட்ட திட்டமிடப் பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டை (Functional Estates). | | |
| 6 | மின் கருவிகள் தொழில், கக்கலூர். .. | 23·172 | 16 |
| 7 | உணவுப் பொருள், பழத் தயாரிப்புத் தொழில். .. | 15·436 | 20 |
| 8 | கருவித் தொழில், அடையாறு | 16·18 | 15 |
| 9 | மருந்துகள்—மருந்துப் பொருள் தொழில். | 15·18 | 25 |
| 10 | மின்னணு இயக்க இயல் தொழில், சென்னையருகே. | 40·26 | 30 |
| 11 | துணைத் தொழில் பேட்டை, வடலூர் அருகே. .. | 3·844 | 6 |

**விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள்.**

| தொடர் எண்ணும் தொழிற்பேட்டையின் பெயரும். | | அனுமதிக்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப் பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 அம்பத்தூர் | .. | 47 | 47 | ஒதுக்கப்பட்டு வருகிறது. |
| 2 மதுரை | .. | 18 | 4 | கட்டப்பட்டு வருகிறது. |
| 3 காட்பாடி .. | .. | 12 | 2 | ஷை |
| 4 மாதவரம் .. | .. | 4 | 2 | ஷை |
| 5 அரக்கோணம் | .. | 6 | .. | .. |
| 6 ஈரோடு .. | .. | 2 | .. | .. |

1968-69-ல் கோயம்புத்தூரில் தொழிற் பேட்டை ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

**B. அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகள்.**—மூன்றாவது திட்டக்கால அளவில் விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்கான தொழிற்பேட்டை ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்கான தொழிற் பேட்டை ஒன்றும் ஆக இரண்டு தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டன. நிறுவ அனுமதி வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை, கட்டியுள்ள



1968 மார்ச் 22]

பிரிவுகளின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| தொழிற்பேட்டையின் பெயர். | அனுமதிக்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப் பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| விருத்தாசலம் .. .. | 29 | 8 | 8 |
| மதாவரம் .. .. .. | 21 | 14 | 14 |

1966-67, 1967-68-ம் ஆண்டுகளில் அனுமதி வழங்கப்பட்ட அடியிற் கண்ட தொழில்களுக்கேயுரிய தொழில்பேட்டைகள் ஐந்தினை நிறுவுவது குறித்த தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன—

(1) திருவள்ளூர் வட்டத்தில் கக்கலூரில் மின் கருவிகள் தொழிலுக்கான தனித் தொழிற்பேட்டை ;

(2) உணவுப் பொருள், பழத் தயாரிப்புத் தொழிலுக்கான தனித் தொழிற்பேட்டை (இது அமைக்கப்படவிருக்கிற இடம் முடிவு செய்யப் படவில்லை).

(3) அடையாறுக்கு அருகே கருவிகள் தயாரிப்புத் தொழிலுக்கான தனித் தொழிற்பேட்டை ;

(4) மருந்துகள், மருந்துப்பொருள் தயாரிப்புத் தொழிலுக்கான தனித் தொழிற்பேட்டை (இது நிறுவுவதற்கான இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.)

(5) சென்னைக்கு அருகே மின்னணுவியல் தொழிலுக்கான தனித் தொழிற்பேட்டை.

**C. துணைத் தொழிற்பேட்டைகள்.**—திருச்சிராப்பள்ளியிலுள்ள கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு உதிரிப் பகுதிகள் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான சிறு தொழிற் பிரிவுகளை அமைப்பதற்காக திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று நிறுவப்பட்டது. இதனை நிறுவும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. மட்பாண்டங்கள், துப்புரவுக் கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் (தனியார்) நிறுவனம், திருவாளர்கள் நெய்வேலி மட்பாண்ட—அதிக சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் ஆகிய இரண்டு பெரிய தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக வடலூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு 1967-68-ல் அனுமதி வழங்கப்பட்டது.

**D. தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டை.**—அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, அரசாங்கம் 1967 மார்ச் 31-ம் தேதி வரையில் ரூபாய் 91·96 லட்சம் வரையில் கடன் உதவி வழங்கியுள்ளது.

| தொழிற்பேட்டையின் பெயர். | அளிக்கப்பட்ட கடன் உதவி |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| 1. கே. ஆர். சுந்தரம் தனியார் தொழிற்பேட்டை லிமிடெட், திருவொற்றியூர். | 13·46 |
| 2. கோயம்புத்தூர் தனியார் தொழிற்பேட்டை, கோயம்புத்தூர். | 22·00 |
| 3. தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத்துக்குடி. | 8·00 |
| 4. சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி .. | 8·00 |
| 5. சக்தி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, பொள்ளாச்சி உடுமலைப் பேட்டை. | 16·00 |
| 6. வியாசர்பாடி கூட்டுறவு தொழிற்பேட்டை, வியாசர்பாடி. | 24·50 |
| மொத்தம் .. | 91·96 |

மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் இதுவரை 104 பிரிவுகள் கட்டப்பட்டுள்ளன. கோயம்புத்தூரிலும் தூத்துக்குடியிலும் உள்ள தொழிற்பேட்டைகளுக்கு அண்மையில் மாநில நிதிகளிலிருந்து முறையே ரூபாய் 10 லட்சமும் ரூபாய் 4·61 லட்சமும் கடன்கள் வழங்கப்பட்டன. தனியார் தொழில்பேட்டைகளுக்கும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளுக்கும் நிதி உதவி வழங்குவதற்காக மாநில அரசாங்கத்தின் உத்தரவாதத்துடன் இந்திய ஆயுள் ஈட்டுறுதி கழகத்திடமிருந்து கடன் பெறுவதற்கான முயற்சிகள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதி வசதிக் கிடைத்தால், சென்னையில் மோட்டார் பகுதிகளுக்குரிய கூட்டுறவுத் தொழிற்போட்டை ஒன்றை அமைக்க நிதி உதவி செய்வதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சேலத்திலுள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு நிதி உதவி வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தொழிற்பேட்டைக்கு மாநில நிதியிலிருந்து ரூபாய் 1·24 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

E. சீர் செய்த மனைகள் கொண்ட பேட்டைகள்.—இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களைக் குறைந்த விலையில் உடமையாக்கிக்கொண்டு, சாலைகள், மின் சக்தி, தண்ணீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, பொருள்களை ஏற்றி அனுப்ப இருப்புப்பாதை வசதிகள் முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி பெரிய, நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகை செய்யப்படுகிறது. அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் உதவும் இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பது கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| சீர் செய்த மனைகள் அமைந்துள்ள இடங்கள். | மேற்கொள்ள எண்ணியுள்ள நிலத்தின் பரப்பு. | மேற்கொள்ளப் பட்டுள்ள நிலத் தின் பரப்பு. | ஒதுககப் பட்டுள்ள மனைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (எக்கரில்) | (எக்கரில்) | (எக்கரில்) |
| இராணிப்பேட்டை .. .. | 831 | 659 | .. |
| அம்பத்தூர் .. .. .. | 1,200 | 1,078 | 433 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 476 | 476 | .. |
| மேட்டூர் * .. .. .. | 209 | 209 | 27 |
| மதுரை .. .. .. | 510 | 329 | .. |
| கிண்டி .. .. .. .. | 483 | 329 | 300 |

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம்மாநிலத்தில் திருவள்ளூர், அரக்கோணம், தூத்துக்குடி, கிண்டி, மணலி, கத்திவாக்கம் போன்ற பல்வேறு இடங்களில் சீர்செய்த மனைகள்கொண்ட தொழிற்பேட்டைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறு அளவு பிரிவுகள் குறித்த மாவட்ட வாரியான பட்டியல் இந்த ஆய்வுரையின் III-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**கைப்பணிகள்.**

பல்வேறு கைப்பணிகளில் பயிற்சி அளிப்பதன் மூலமும் விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும், நவீன கருவிகளையும் இயந்திரங்களையும் குறைந்த விலையில் வழங்குவதன் மூலமும் இம்மாநிலத்தில் கைவினைகளை மீண்டும் உயிர்ப்பிக்கவும் அவை தழைத்தோங்க

* தொழிற்பேட்டை ஒவ்வொன்றுக்குமாக 15 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது.



வகை செய்யவும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 1967–68-ம் ஆண்டுக்கான திட்ட வேலைகளுக்காக ரூ. 7·23 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முந்தைய திட்டக்கால அளவுகளில் தொடங்கப்பட்ட பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் சாதாரணத் திட்ட வேலைகளாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் நடத்தப்பட்டு வருகின்றது. சுவாமிமலை, தாம்பரம், சேலம், மதுரை, ஆகிய இடங்களில் வேலைப்பாடுகள் அமைந்த உலோகப் பொருளகள் தயாரிபபு வேலையில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. ரதம் தயாரிப்புப் பயிற்சி நிலையம் நாகர்கோயிலில் செயல்பட்டு வருகின்றது. வெண்கலப் பாத்திரங்கள் தயாரிப்பு வேலை குறித்த பயிற்சி நிலையம் நாச்சியார்கோயிலிலும் வேலைப்பாடுகள் அமைந்த தட்டுகள் தயாரிப்பு வேலைப்பயிற்சி நிலையம தாம்பரத்திலும், வெள்ளி சரிகை தயாரிப்புப் பயிற்சி நிலையம் சென்னை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும், சணல் இரட்டுகள் தயாரிப்பு நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோபாலசமுத்திரம், ஆயக்குடி ஆகிய இடங்களிலும், தென ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சின்ன சேலத்திலும், பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்பு நிலையம் புதுக்கோட்டை, இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலும், அலங்கரித்த பொம்மைகள் தயாரிப்பு பயிற்சி நிலையம் சென்னையிலும், கம்பளி இரட்டுகள் கோலக்குடியிலும், கற்றுழை, நார் பொருள்களை தயாரிப்புப் பயற்சி நிலையம் நெடுவாயிலிலும், அரக்குப் பொருள்களை தயாரிப்புப் பயிறசி நிலையம் சேரன்மகாதேவியிலும், கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் எழில் பொருள்கள் தயாரிப்பு நிலையம் சென்னையிலும், மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் 299 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக கால அளவு அந்தந்த கைப்பணிகளைப் பொறுத்து ஓர் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை பரந்துள்ளது. மேற்சொன்ன பயிற்சி நிலையங்களைத் தவிர, அரசாங்கம் கலைகள், கைப்பணிகளுக்கான கல்லூரி ஒன்றை சென்னையிலும், கலைகள் கைப்பணிகளுக்கான பள்ளி ஒன்றை கும்பகோணத்திலும் நடத்தி வருகின்றது. வண்ணம் தீட்டுதல், சிற்ப வேலை, வாணிபத்திற்குப் பயன்படும் சித்திர வேலை ஆகியவை இப்பாட முறைகளில் அடங்கும். மேலும், மர வேலை, உலோக வேலை, மட்பாண்டத் தொழில் ஆகிய கைப்பணிப் பிரிவுகளிலும் சென்னையிலுள்ள கலைகள் கைப்பணிகள் கல்லூரியில் நடத்தப்படுகின்றன.

நாகர்கோயிலில் உள்ள ரதம் செய்யும் பயிற்சி நிலையம், கனடாவைச் சேர்ந்த மாண்ட் தீவில் நடக்கும் அனைத்து நாடுகள் கண்காட்சிக்குக் காட்சிப் பொருளாக ரதம் ஒன்றையும் வாகனம் ஒன்றையும் அனுப்பி வைத்தது. இவை பல நாடுகளிலிருந்து வந்த பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. மேற்சொன்ன பயிறசி நிலையத்தின் கண்காணிப்பாளரும் மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பயிற்சி நிலையத்தின் ஆசிரியரும் 1968-ம் ஆண்டு தேசியப் பரிசுகள் பெறுவதற்காகத் தேர்நதெடுககப்பட்டுள்ளனர். மாமல்லபுரத்திலுள்ள சிறப பயிற்சி நிலையத்தில் உற்பத்திப் பிரிவு ஒன்றைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கு கம்பளிகளும், போர்வைகளும் வழங்கப்படுகின்றன. இது வரையில் இவை மைசூர் மாநிலத்திலிருந்தும், ஆந்திரப்பிரதேசத்திலிருந்தும் வாங்கப்பட்டு வந்தன. இக் கம்பளிகளையும் போர்வைகளையும் தயாரிப்பதற்காக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கோலக்குடியில் செயல்படும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு தருமபுரி மாவட்டத்திலும் பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரையிலுள்ள எழில் வேலைப்பாடு உலோகத் தொழில் பயிற்சி நிலையத்தில் கைத்தறி கைப்பணி ஏற்றுமதிக் கழகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக பித்தளைப் பொருள்களைத் தயாரித்து அனுப்புகின்றது. இதே மாதிரியாக வாலாஜாபேட்டை மூங்கில் பொருள் தயாரிப்புத்

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கைத்தறி கைப்பணி ஏற்றுமதிக் கழகத்தின் மூலமாகப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. கோபாலசமுத்திரத்திலும், ஆயக்குடியிலும் சணல் இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையங்கள், தங்களது தயாரிப்புப் பொருள்களை டெல்லியிலுள்ள ஒரு நிறுவனத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

கைப்பணிகள் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றிற்கு, பாதிச் செலவு அடிப்படையில் நவீன கருவிகள், சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

கைப்பணிப் பொருள் விற்பனையை அதிகரிப்பதற்காக இத்துறை பல்வேறு பொருட்காட்சிகளில் பங்கு கொண்டுள்ளதுடன், விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகின்றது. சென்னை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, நெய்வேலி, மாமல்லபுரம் ஆகிய இடங்களில் இத்துறை நடத்திவரும் விற்பனை நிலையங்களில் 1967–68-ல் கணிசமான அளவுக்கு விற்பனை அதிகரித்துள்ளது. 1961–62-ம் ஆண்டில் ரூபாய் 5,01,811·00 மதிப்புள்ள பொருள்களும் 1966–67-ல் ரூபாய் 32,09,948·67 மதிப்புள்ள பொருள்களும் விற்பனை செய்யப்பட்டிருக்க, 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை உள்ள கால அளவில் ரூபாய் 16,94,675 மதிப்புள்ள கருவிகள் விற்பனை செய்யப்பட்டன. கைப்பணிப் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக, அனைத்திந்தியக் கைப்பணி வாரம் ஒவ்வோராண்டும் நடத்தப்பட்டு வருகின்றது. கைப்பணிப் பொருள்களின் விற்பனை மீது 10 சத வீதக் கழிவு இக் கால அளவில் அனுமதிக்கப்படுகின்றது.

கைப்பணிப் பொருள்கள், பட்டியல் ஒன்று இந்த ஆய்வுரையின் IV-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### கயிறு.

ஏத்தமொழியிலுள்ள அரசாங்கக் கயிற்றுத் தொழில் பள்ளி 1961, நவம்பரில் தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் ஆண்டுதோறும் 40 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிப் படிப்பு இரண்டாண்டுக் காலத்திற்கு நீடிக்கிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 25 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. கயிறு திரித்தல், சங்கிலிப் பின்னல் முறையில் கயிறு திரித்தல், கயிற்றுப் பாய் நெய்தல், ஆகியவற்றில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. 1967–68-ல் முதலாமாண்டில் 29 மாணவர்களும, இரண்டாமாண்டில் 32 மாணவர்களும், பயிற்சி பெறுகின்றனர். நவீன உற்பத்தி முறைகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் அனுமதியளித்து அத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வெளி நாடுகளில் முரட்டு நாருக்கு அதிகத் தேவையுள்ளது. இந்தியாவில் கலப்பு நாருக்குத் அதிகத் தேவையுள்ளது. தரை விரிப்புக் கம்பளங்களையும் முரட்டு நார்களையும் தயாரிக்கும் பொருட்டு நார் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று தென்காசியில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ற உலர்ந்த தென்னை நாரிலிருந்து கிடைக்கும் நாரை இப்பிரிவு பயன் படுத்தும். மட்டையிலிருந்து நார் உரிப்பதற்கேற்ற இயந்திரம் ஒன்றை உருவாக்க கயிற்றுத் தொழில் வாரியம் ஒரு குழுவை அமைத்துள்ளது.

1968–69-ல் சேலம் மாவட்டத்திலுள்ள, தேர்ந்தெடுத்த ஐந்து கயிற்றுத் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை, அவற்றில் ஒவ்வொன்றிலும் பயிற்சிப் படிப்புகள் நடத்துவதன் மூலம், சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பிற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 53,000 ஆகும்.





### கிராமப்பணி நிலையங்கள்.

கிராமப் பகுதிகளிலுள்ள பெரும்பாலான இளைஞர்கள் நடுத்தரப் பள்ளி நிலைவரை படித்து விட்டு, ஏதாவது ஒரு காரணத்தினால் உயர் நிலைக் கல்வியை தொடராமல் விட்டு விடுகின்றனர். இத்தகைய இளைஞர்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ள முன் வருவதில்லை. இந்த இளைஞர்களுக்குக் கருமார் தொழில், தச்சுத் தொழில் போன்ற பயனமிகு தொழில்களில் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட நிலையங்களை நிறுவ அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது :—

| | இடம். | பிரிவின் பெயர். | தொடக்கத் தேதி. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | மாமண்டூர், செங்கற்பட்டு மாவட்டம். | அட்டை, கையால் செய்யும் காகிதம் முதலியன தயாரிக்கும் பிரிவு. | 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி. |
| 2 | கமுதி, இராமநாதபுரம் மாவட்டம். | கருமார், தச்சுப் பட்டறை. | 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம். |
| 3 | வாலாஜா, வட ஆற்காடு மாவட்டம். | ஷை | 1963-ம் ஆண்டு மே மாதம். |
| 4 | காங்கேயம், கோயம்புத்தூர் மாவட்டம். | பொது நோக்குப் பொறியியல் பட்டறை. | இன்னும் செயல் படத் தொடங்கவில்லை. |
| 5 | விருத்தாசலம், தென் ஆற்காடு மாவட்டம். | ஸ்விச் அடிக்கட்டையும், உருகு கம்பிக் கட்டையும் தயாரிக்கும் பிரிவு. | 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம். |
| 6 | ஆத்தூர், சேலம் மாவட்டம். | மட்பாண்டப் பிரிவு. | இன்னும் செயல் படத் தொடங்கவில்லை. |

இந்த நிலையங்கள் பயிற்சி-உற்பத்தி நிலையங்களென வகைப்படுத்தப் பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளில் சில தொடக்கக் கால அளவாகிய மூன்றாண்டு காலம் முடித்துள்ளதால், இவற்றின் எதிர்காலம் குறித்து ஆராயப்பட்டது. மாமண்டூரிலுள்ள பிரிவினை தனிப்பட்ட முறையில் நடத்துவதற்காக அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வாலாஜாவிலுள்ள பிரிவு 31—12—1967 அன்று மூடப்பட்டது. கமுதியிலுள்ள பிரிவு 29—2—1968 அன்று மூடப்பட்டது. காங்கேயத்தில் பட்டறை இருப்பதன் அவசியம் இல்லை. ஆதலால், இத்திட்டத்தைக் கைவிடுவதெனவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. விருத்தாசலத்திலுள்ள ஸ்விச் அடிக்கட்டைப் பிரிவு 1—10—1967 அன்று மூடப்பட்டது.

ஏற்ற நிலம் கிடைக்காததால், ஆத்தூர் பிரிவினைத் தொடங்க முடியவில்லை. எனவே, இந்தப் பிரிவினை ஓமலூர் திட்டப் பகுதியில் அமைப்பதற்கான ஆணைகள் இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### பட்டுத் தொழில்.

1956-ம் ஆண்டு மாநிலச் சீரமைப்பின் காரணமாகத் தமிழ்நாட்டின் மிக முக்கியமான பட்டுத் தொழில் பகுதிகள் மைசூருக்கு மாற்றப்பட்டன. அதன் பிறகு அரசாங்கம் உதவித் தொகைகள் அளிப்பதன் மூலம் முசுக்கட்டைச் செடிகளின் வளர்ப்பை அதிகப்படுத்த முயற்சி செய்து வருகிறது. கூடுதலான நிலப் பரப்பில் முசுக்கட்டை வளர்ப்பதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது.

[1968 மார்ச் 22

மசினகுடியில் ஒன்றும், தாளவாடியில் ஒன்றும், ஓசூரில் ஒன்றுமாக, பெருமளவுப் பண்ணைகளை மூன்றினை நிறுவ அரசாங்கம் 1966–67-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியது. இரண்டு பண்ணைகளில் வேலை தொடங்கி விட்டது. தருமபுரி மாவட்டம், ஓசூர் மாவட்டம், கோலட்டியில் 867 ஏக்கர் பரப்பு மேற்கொள்ளப்பட்டு 40 ஏக்கரில் முசுக்கட்டை வளர்க்கப்படுகிறது. 867 ஏக்கர் பரப்பு முழுவதிலும் இரண்டாண்டுகளுக்குள் முசுக்கட்டை வளர்க்கப்படும். நீலகிரி மாவட்டத்தின் மசினகுடியில் மரங்களைக் கழிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் முசுக்கட்டை வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக தீர்வை விதிக்கப்பட்ட அரசாங்கத் தரிசு நிலங்களை வெளியவர்களுக்கே குத்தகைக்கு விடுவதற்கும் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிணறு வெட்டுவதற்காகவும், பட்டுப்புழு வளர்ப்புக் கூடாரங்கள் கட்டுவதற்காகவும், பட்டு வளர்ப்பவர்களுக்குக் கடனும், உதவித் தொகையும் வழங்குவதற்காக, 1966–67-ம் ஆண்டில் ரூ. 93 ஆயிரம் வரை நிதி உதவியளிக்கத் திட்டமிட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் தாளவாடியில் இணைந்த பண்ணையும், களஞ்சியமும் நிறுவுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது; கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். ஓசூரில் பட்டுநூல் முறுக்கேற்றும் பிரிவு ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இளம் புழுக்களை வளர்ப்பதற்கு வேண்டிய பொது வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏற்ற இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன.

கிணறுகள் வெட்டுவதற்காகவும், பட்டுப்புழு வளர்ப்புக் கூடாரங்கள் கட்டுவதற்காகவும், பட்டு வளர்ப்போருக்குக் கடனும், உதவித்தொகையும் வழங்க, 1968–69 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ப்புத் திட்டங்களின் பட்டியல் இந்த ஆய்வுரையின் V-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, "கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்" என்னும் வளர்ச்சித் தலைப்பின் கீழ் பல தொகுதிகளில் 1966–67-ம் ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டப்பணிகளுக்குச் செய்த செலவையும், 1967–68-ம் ஆண்டில் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிற செலவையும் காட்டுகிற புள்ளி விவர அறிக்கை ஒன்று இந்த ஆய்வுரையின் 11-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதியில் உள்ள நிலவரப்படி பலதொழில்கள் உள்ளடக்கிய 404 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தில் இருந்தன. இவற்றில் எட்டு தேயிலைத் தொழிற்சாலைகளும் அடங்கும்; இத்தொழிற்சாலைகளுக்கு மத்தியப்பணிச் சங்கம் ஒன்றுண்டு. அது தேயிலைத் தொழிற்சாலைகள் அனைத்தின் கூட்டமைப்பாக இருக்கும். இத்தொழிற்சாலைகள் நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் தேயிலைகளை வாங்கும் தொழிற்சாலைகளுக்குத் தங்கள் தேயிலைகளைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்கின்றன; அவர்களின் தேயிலைக்குத் தற்போது நியாயமான விலை கிடைக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திட்டத்திற்கும் பணிவசதி வேலைத் திட்டத்திற்கும் மொத்தச் செலவு ரூ. 108·80 இலட்சம் ஆகும். இது தேயிலை வாரியம் அளித்த தாராளமான நிதி உதவி மூலம் சாத்தியமாயிற்று. இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும் மொத்தப் பரப்பு 8,000 ஏக்கராகும். தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியின் அளவு நாள் ஒன்றுக்கு 10,000 கிலோ கிராமாகும்; இது ரூ. 50,000 மதிப்புள்ளதாகும். குந்தாவிலும் கோத்தகிரியிலும் உள்ள இரண்டு தொழிற்சாலைகள், 1966–67-க்கு முன்னமே உற்பத்திப் பணியைத் தொடங்கி விட்டன. மேலும் இரண்டு தொழிற்சாலைகள் 1966 டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கின. எஞ்சிய நான்கு தொழிற்சாலைகளும் 1967–68-ல் உற்பத்தியைத் தொடங்



1968 மார்ச் 22]

கின. 1966–67-ல் தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியின் அளவு 647,051 கிலோ கிராமாகும்; 683,158 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 33,40,836 ஆகும்.

கையால் தயாரிக்கும் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியும் கூற வேண்டியுள்ளது. இரண்டு பணிச் சங்கங்களும் பொட்டாஷ் குளோரேட் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றும் உட்பட 14 சங்கங்கள் உள்ளன. நாள் ஒன்றுக்கு 13,000 குரோஸ் தீப்பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன; 13,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. 1966–67-ல் உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூ. 10,78,290-க்கும் ரூ. 10,79,970-க்கும் செய்யப்பட்டன. குளோரேட் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 5 டன் பொட்டாஷ் குளோரேட் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி கடனாக அளித்த நிதி உதவியினாலும் தொழில்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவி குறித்த சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கடன் வசதியாலும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் கண்டு வருகின்றன. மேற்கூறிய ஆதாரங்கள் மூலம் கிடைத்த நிதி உதவி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்—

| | 1—4—1961 முதல் 31—3—1967 வரையில். | | 1—4—1967 முதல் 31—12—1967 வரையில். | |
|---|---|---|---|---|
| | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிப்புச் சட்டம். | 292 | 17·27 | .. | .. |
| 2 தமிழ்நாட்டுத் தொழிலியல் கூட்டுறவு வங்கி— | | | | |
| (a) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | 195 | 89·89 | 17 | 16·20 |
| (b) சிறு தொழிலதிபர்கள். | 49 | 14·53 | .. | .. |

1966–67-ல் தமிழ் நாட்டில், தொழில் - கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுள்ளதன் முடிவுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1 31—3—1967-ல் உள்ள நிலவரப்படி செயல்பட்டு வந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 404 |
| 2 மூன்றாண்டுக் காலத்திற்கு மேலாகச் செயல்பட்டு வரும் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை. | 336 |

3 (a) இரண்டாம் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களின் 31-3-1967-ல் முடிவடையும் ஆண்டுக் காலத்தில் ஆதாயத்துடன் செயல்பட்டு வந்த சங்கங்களின் எண்ணிக்கை. 166

(b) இரண்டாம் இனத்தில் விரயத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை :—

(1) கைப்பணிச் சங்கங்கள் (ஹரிஜனங்கள், பெண்டிர், கயிற்றுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் நலனுக்கான சங்கங்கள் உட்பட). 105

(2) மற்றவை .. .. .. .. .. 32

(c) இரண்டாம் இனத்தில் குறிப்பிட்ட சங்கங்களில் ஆதாயமோ விரயமோ இன்றி இயங்குபவை. 53

4 (a) 3 (a) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 31—3—1967-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம். ரூ. 9·14 லட்சம்.

(b) 3 (b) இனத்தில் உள்ள சங்கங்களுக்கு 31—3—1967-ல் முடிவடைந்த ஆண்டில் ஏற்பட்ட விரயம். ரூ. 7·06 லட்சம்.

(c) 31—3—1967-ல் உள்ள நிலவரப்படி மொத்த விரயம். ரூ. 21·50 லட்சம்.

5 மூன்றாண்டுகளுக்கு மேலாகச் செயல்படும் சங்கங்களுக்குக் கிடைத்த ஆதாயம். ரூ. 2·08 லட்சம்.

6 (a) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் ஆதாயத்துடன் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. 186

(b) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில், விரயத்தில் செயல்பட்டு வரும் சங்கங்களின் எண்ணிக்கை. 157

(c) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் ஆதாயமோ விரயமோ இன்றி செயல்பட்டுவரும் சங்கங்களின் எண்ணிக்கை. 61

7 (a) 6 (a) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 31—3—1967-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம். ரூ. 9·98 லட்சம்.

(b) 6 (b) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 31—3—1967-ல் முடிவடைந் ஆண்டில் ஏற்பட்ட விரயம். ரூ. 7·86 லட்சம்.

(c) 31—3—1967-ல் உள்ள நிலவரப்படி மொத்த விரயம். ரூ. 22·30 லட்சம்.

8 இரண்டாம் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. 19,963

9 முதல் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. 27,751



தொடக்க நிலையாகிய முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும் தொடர்ந்து இழப்பில் இயங்கிக்கொண்டிருக்கும் சங்கங்களின் செயல் முறைகளைப்பற்றி அரசாங்கம் ஆய்வு செய்துவருகிறது. சிறப்புக் காரணங்களுக்காகத் தொடர்ந்திருக்கத் தகுதியுள்ள சங்கங்கள் தொடர்ந்து செயல்படும் ; ஏனைய சங்கங்கள் கலைக்கப்படும்.

1968–69-ல் கீழ்க்கண்டவற்றைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.—

(i) அந்த இடத்தின் தேவைகளுக்குப் பொருந்தப் புதிய முறைத் தயாரிப்பை மேற்கொள்ளும் வகையில் அதன் தற்போதைய தயாரிப்பு முறையுடன்கூட (மதிப்பீட்டுச் செலவு தொடராச் செலவு ரூ. 1·75 லட்சமும் தொடர் இனச் செலவு ரூ. 19,400-ம்) ஸ்ரீபெரும்புதூர் மரைகள்-ஆணிகள் தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்க நிறுவனத்தைச் சீரமைத்தல் ;

(ii) தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அச்சடித்த பொருள்கள் வழங்குவதற்காகச் சிவகாசியில் பணித்தொழில் கூட்டுறவு அச்சகம் ஒன்றை நிறுவுதல் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 1·04 லட்சம்) ;

(iii) புதிய மாதிரிகளைப் புகுத்துவதற்கும் தரத்தை உயர்த்துவதற்கும் தேர்ந்தெடுத்த ஐந்து பாய் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைத்தல் ;

(iv) ரூ. 22,500 வரையில் தேர்ந்தெடுத்த ஒன்பது தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு முதலீடு செய்தல் ;

(v) கடன் வழங்குதல் மூலம் அல்லது பங்கு மூலதனத்தில் பங்கு பெறுதல் மூலம் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு மேலும் நிதியளித்தல்.

இம்மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் மாவட்ட வாரியாக VI-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட திட்டப் பணிகளின் முன்னேற்றத்தை VII-ம் இணைப்பு காட்டுகிறது.

### வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு மறுவாழ்வளித்தல்.

1—6—1963 முதல் 31—12—1967 வரையுள்ள காலப்பகுதியில், வேலையிழந்த பொற்கொல்லர்கள் 24,581 பேருக்கு மாற்று வியாபாரம் அல்லது தொழில் செய்து மறுவாழ்வு காண்பதற்காக ரூ. 2·25 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. உரிய தேதிக்குள் வரப்பெற்ற கடன் விண்ணப்பங்களுக்காக கடன் அளிக்கத் தகுதிபெற்ற பொற்கொல்லர்களுக்குக் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. கடன் பெறுபவர் பொற்கொல்லர் தொழிலுக்கு மீண்டும் செல்லமாட்டோமென உறுதிமொழி எழுதிக் கொடுக்கவேண்டும் என்னும் நிபந்தனைக்கு உட்பட்டே மேற்படி கடன் வழங்கப்படுகிறது.

### கிராமத் தொழில் திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள்.

1962–63-ல், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூர், சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் மூன்று கிராமத் தொழில் திட்டங்களுக்கு தமிழக அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இவை மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்களாகையால், இவற்றுக்கு இந்திய அரசு மானியமும் கடனுதவியும் அளிக்கின்றது. இந்த மூன்று திட்டங்களிலும் நடைபெறும் செயல்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### I. பயிற்சித் திட்டம்.

இவற்றில் பனை ஓலைப் பொருள்கள், கோரைப் பாய்கள், சாக்குக் கட்டிகள், தோல் பொருள்கள், வெண்கலப் பொருள்கள், பிரம்புச் சாமான்கள், மரப்பொம்மைகள், களிமண் பொம்மைகள், பாலிதீன் பைகள் முதலியவற்றைத் தயாரிப்பது போன்ற தொழில்கள் உள்ளன.

தச்சுத் தொழில், கருமான் தொழில், பொறியியல், மற்றும் அச்சுத் தொழில், வானொலிப் பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. இத்திட்டங்களைத் தொடங்கியதிலிருந்து முடிவுபெற்ற வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை இப்போது செயல்பட்டுவரும் வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை, பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை பின்வரும் விவர அட்டவணையிலிருந்து காணலாம்.

| திட்டம். | 1—2—1968 அன்றைய நிலவரப்படி முடிவுபெற்ற வேலைத்திட்டங்கள். | | | 1—2—1968 அன்றைய நிலவரப்படி நடைபெற்று வரும் வேலைத் திட்டங்கள். | | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | பயிற்சி பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை. | வேலை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை. | எண். | பயிற்சி பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை. | வேலை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| ஸ்ரீபெரும்புதூர். | 21 | 416 | 27 | 5 | 51 | 10 |
| ஓமலூர் .. | 15 | 382 | 33 | 5 | 55 | 19 |
| நாங்குனேரி .. | 19 | 487 | 65 | 4 | 53 | 16 |
| மொத்தம் .. | 55 | 1,285 | 125 | 14 | 159 | 45 |

பயிற்சி முடிவு பெற்ற பின்னர் பயிற்சி பெற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முயற்சி செய்யப்படுகின்றது; இவ்வகையில் ஒரு சில சங்கங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

## II. பொது வசதி நிலையங்கள்.

உள்ளூர் தொழிலாளர்களின் உற்பத்தித் தொழில் நுட்பத்தை மேம்பாடு செய்யவும் உழவர்கள், தங்களுடைய பகுதிகளில் மின்சார மோட்டார்கள், தூவு கருவிகள், துடைப்பான்கள் முதலிய வேளாண்மைக்கருவிகளை செப்பனிட்டுக் கொள்ள அல்லது பழுத்து பார்த்துக் கொள்ளவும் தேவையான பணி வசதிகளை அளிக்கும் பொருட்டு மூன்று திட்டப் பகுதிகளில் 16 பொது வசதி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் சுமார் 60 பேர்கள் வேலையில் உள்ளனர். இந்த நிலையங்களுக்கு கிராம மக்களிடையே படிப்படியாக ஆதரவு கிடைத்து வருகின்றது. இந்த நிலையங்களின் உதவியில்லையென்றால், உழவர்கள் தங்களுடைய நவீன வேளாண்மைக் கருவிகளைச் செப்பனிட அல்லது பழுது பார்க்க, தொலைவிலுள்ள நகரங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்குமாகையினால் அவர்கள் இந்த நிலையங்களைப் பெரிதும் பாராட்டுகின்றனர்.

பதினாறு பொது வசதி நிலையங்களைத் தவிர, ஓமலூர்ப் பகுதியில் குடியிருப்புடன் கூடிய தொழிற் கூடங்கள் 24 கட்டப்பட்டு உள்ளூர் தொழிலாளர்களுக்குப் பெயரளவில் மாதம் 5 ரூபாய் என்னும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பொது வசதி நிலையங்களுக்காக ஏற்படும் செலவினம் இந்திய அரசிடமிருந்து மானிய உதவி பெறுவதற்குரியதாகும்.

## III. துறையின் பிரிவுகள்.

இவ்வகையில் மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள், உறைகள் தயாரிப்புப் பிரிவு ஒன்று, காலணி தயாரிப்புப் பிரிவு, பளபளப்பான ஓடுகள் (Mosais Tiles) தயாரிப்புப் பிரிவு முதலியவை உள்ளன.



பட்டறைகளில், நவீன வேளாண்மைக் கருவிகள், கோழியினப் பண்ணைக்கு வேண்டிய சாதனங்கள், ஊராட்சிகளுக்கு வேண்டியுள்ள குப்பை வண்டிகள், தண்ணீர் வண்டிகள் முதலியவையும் கட்டிடங்களுக்குத் தேவையான பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

இந்தத் தொழிற் பிரிவுகள் அனைத்திலும் 180 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

துறை வேலைத் திட்டங்களுக்குப் பணியாளர் பொருட்டு ஆகும்செலவைத் தவிர, மற்ற செலவினம் இந்திய அரசிடமிருந்து கடனுதவி பெறுவதற்குரியதாகும். பணியாளர் பொருட்டு ஆகும் செலவிற்கு படிப்படியாகக் குறைந்து வரும் முறையில் மானியம் வழங்கப்படுகிறது; அதாவது முதலாண்டில் 100 சத வீதம் மானியமும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, நான்காவது ஆண்டில் 25 சத வீதம் மானியமும் வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு மானியம் நிறுத்தப்படும்.

கிராமத் திட்டங்களில் பொது வசதி நிலையங்களையும்துறையின் தொழிற் பிரிவுகளையும் தொடங்கியதன் நேரிடைப் பலனாக அவை அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சியடைந்துள்ளன; இவற்றால் மறைமுகமாக கிராம மக்களிடையே தொழில் நுட்பப் பணி நோக்கும் உருவாகி வருகின்றது. இதனால் பொறியியல் துறையிலும் இயந்திரக் கம்மியத் தொழிலிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் சிறு அளவுத் தனியார் தொழிற் பிரிவுகளின் வளர்ச்சியையும் உணர்ந்து அவர்கள் இவற்றில் கருத்துச் செலுத்தும் நிலை உண்டாகியுள்ளது.

## IV. ஏனைய வளர்ச்சித் திட்டங்கள்.

இவற்றில் பாய் நெசவிற்கான கோரைப்புல் வளர்ப்பு, பட்டு எடுப்பதற்கான முசுக்கட்டை மரங்கள் வளர்ப்பு, ஒரு குறிப்பிட்ட அளவில் கோழி, வாத்துகளை வளர்த்தல் போன்ற வேலைத் திட்டங்கள் அடங்கியுள்ளன. இத்திட்டங்கள் இந்திய அரசிடமிருந்து மானிய உதவி பெறத் தகுதியுடையனவாகும்.

## V. தனியார்த்துறை தொழிலதிபர்களுக்குக் கடனுதவி.

தொழில்களுக்கு அரசாங்கம் உதவியளிப்பது குறித்த சட்டத்தின் கீழ் தொழில்களைத் தொடங்குவதற்காக தொழிலதிபர்களுக்குக் கடன்கள் வழங்குவது இத் திட்டப்பணியில் உள்ள குறிப்பிடத் தக்க மற்றொரு கூறாகும். மேற்படி மூன்று திட்டப் பகுதிகளில், 1965–66-ல் 6,02,850 ரூபாயும் 1966–67-ல் 5,38,700 ரூபாயும் கடனாக வழங்கப்பட்டது. இதனால் ஏராளமான மக்கள் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் தொடங்கியுள்ளனர்; இதன் விளைவாக பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. 1967–68-ம் ஆண்டில் ரூ. 1,82,000 கடனாக வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## VI. இந்திய அரசிடமிருந்து பெறும் நிதி உதவி.

(அ) இந்திய அரசு மாநில அரசுக்குப் பின்வரும் நிதிகளை ஒதுக்கியுள்ளது:—

| ஆண்டு. | மானிய உதவி. | கடனுதவி |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1964–65 .. .. .. | 8·43 | 3·83 |
| 1965–66 .. .. .. | 13·00 | 10·00 |
| 1966–67 .. .. .. | 9·00 | 11·00 |
| 1967–68 .. .. .. | 7·80 | 11·70 |

(ஆ) 1968–69-ம் ஆண்டிற்கான பணித்திட்டம்.—1968–69-ம் ஆண்டிற்கான பணித்திட்டம் கீழே விவரிக்கப்படுகிறது.

இந்திய அரசு, 1968–69-ம் ஆண்டிற்கும் 1967–68-ம் ஆண்டில் அளிக்கப்பட்ட அளவிலேயே மத்திய உதவி அளிக்கப்படும் எனத் தெரிவித்து ரூ. 19·50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. எனவே, 1968–69-ம் ஆண்டிற்கு மத்திய உதவி ரூ. 19·50 இலட்சம் மட்டுமே கிடைக்கும். அதற்கேற்ப, இத் தொகைக்கு பணித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த 19·50 இலட்சம் ரூபாயில், தனியார் தொழிற் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காக ரூ. 2·00 இலட்சமும் கிராமத் தொழில் திட்டப்பணிக்காக தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்ற நிலைப்பணியாளர் பொருட்டு ஏற்படும் செலவிற்காக 0·20 இலட்சமும் ஒதுக்கப் பட்டுள்ளன. எனவே, எஞ்சியுள்ள ரூ. 19·30 இலட்சம் ரூபாய் மேற்படி மூன்று திட்டப் பகுதிகளில் வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகக் கிடைக்கிறது.

## 1. ஸ்ரீபெரும்புதூர் திட்டம்.

1. (i) ஆவடியில் 25 காவலர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு ஆவடியில் கம்பளி உறைகளையும் அடியற்ற நீளக் காலுறைகளையும் பின்னுவதற்குப் பயிற்சி அளிப்பதற்கான வேலைத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. ஆவடியில் உள்ள தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்படும். இத்தொழிலில் தகுந்த பயிற்சி ஆசிரியர் கிடைக்காத காரணத்தால் இத் திட்டம் செயல் படுத்தப்படவில்லை. எனவே, இந்த வேலைக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வழங்குகின்ற ஒரு பஞ்சாப் நிறுவனத்துடன் இது குறித்து தொடர்பு கொண்டு பயிற்சி ஆசிரியர் ஒருவரின் பணி உதவி பெறப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டம் 1968–69-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இப்பயிற்சி ஆறு மாதக் காலம் நடைபெறும். இப்போது நடைபெற்று வரும் பின்வரும் பயிற்சி வேலைத் திட்டங்கள் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(ii) பாலீதின் பைகள் தயாரிப்புப் பயிற்சிநிலையம், ஊத்துக்கோட்டை.

(iii) மரப் பொம்மைத் தயாரிப்புப் பயிற்சி நிலையம், திருப்பாச்சூர்.

(iv) செம்பரம்பாக்கம் பொது நோக்குப் பொறியியல் பட்டறைகளில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(v) திருப்பாச்சூர் பொது நோக்குப் பொறியியல் பட்டறையில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(vi) மரவேலைப் பயிற்சி நிலையம் , குன்றத்தூர்.

2. சுங்குவார் சத்திரத்திலும் ஈக்காட்டிலும் செயல்பட்டு வரும் இரண்டு பொது வசதி நிலையங்கள் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படும்.

3. "ஏனைய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்" என்னும் வகையின்கீழ் வருகிற—கோட்டை மேட்டில் கோரைப்புல் வளர்க்கும் வேலை 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

4. 1968–69-ம் ஆண்டிலும் பின்வரும் துறைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்:—

(i) பொது நோக்குப் பொறியியல் பட்டறை ; திருப்பாச்சூர்.

(ii) பொது நோக்குப் பொறியியல் பட்டறை, செம்பரம்பாக்கம்.

(iii) காலணி தயாரிப்புப் பிரிவு, மாப்பேடு.

(iv) உறை-காகிதப்பை தயாரிப்புப் பிரிவு, ஊத்துக்கோட்டை.

(v) டிராக்டர்களைச் செப்பனிடும் வேலையையும் டிராக்டர்களுக்கு உதிரிப்பகுதிகளைத் தயாரிக்கும் வேலையையும் மேற்கொள்ளும் வகையில் திருப்பாச்சூரில் உள்ள பட்டறையை விரிவு படுத்துவதற்கான திட்டமொன்றுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. டிராக்டர் பட்ட



றைக்கு இயந்திர சாதனங்களை வழங்குவதற்காகவும் கட்டிடங்கள் கட்டப் படவும் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைப்பது போன்ற தொடக்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1968–69-ம் ஆண்டின் இடைப் பகுதியில் டிராக்டர்களைச் செப்பனிடும் பணி தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. ஓமலூர் திட்டம்.

இப்போது நடைபெற்று வருகின்ற பின்வரும் பயிற்சி வேலைத் திட்டங்கள் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

(i) வெண்கல வேலைப் பயிற்சி நிலையம், குளத்தூர்.

(ii) தோல் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், தாராமங்கலம்.

(iii) மரப் பொம்மைகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், ஓமலூர்.

(iv) பாய் நெசவுப் பயிற்சி நிலையம், ஓமலூர்.

(v) அச்சுத் தொழிலிலும் அது சார்பான தொழில்களிலும் பயிற்சி.

2. நான்கு பொது வசதி நிலையங்கள் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

3. (i) துறைத் தொழிற் பிரிவுகளின் கீழ் பளபளப்பான ஓடுகள் பிரிவு 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

(ii) பாலீதின் தட்டைக் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசாங்கம் ஒப்பளிப்பு அளித்தது. இந்தப் பிரிவைத் தொடங்குவதற்குக் கட்டடங்கள் கட்டுதல், தேவையான இயந்திர சாதனங்களை வழங்க ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்தல் முதலியவை போன்ற தொடக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1968-ம் ஆண்டு இறுதிக்குள் இந்தப் பிரிவு தொடங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## 3. நாங்குநேரி திட்டம்.

1968–69-ம் ஆண்டிலும் பின்வரும் பயிற்சி வேலைத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படும்:—

(i) அச்சுத் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் பயிற்சி.

(ii) வெண்கல வேலைப் பயிற்சி, வள்ளியூர்.

(iii) மீனவக்குளத்தில் உள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(iv) வள்ளியூரில் உள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(v) தோல் கையுறை தயாரிப்புப் பயிற்சிப் பிரிவு, வள்ளியூர்.

செல்லோடெக்ஸ் பொம்மைகளையும் பஞ்சு பொம்மைகளையும் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம் ஒன்றுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த நிலையம் இன்னும் தொடங்கப்படவில்லை. இதற்கான தொடக்க வேலைகள் பெரும்பாலும் முடிவடைந்துள்ளன. இந்த நிலையம் விரைவில் தொடங்கப்பட்டு, 1968–69-ம் ஆண்டில் தொடர்ந்து நடத்தப் படும்.

2. இப்போது நடைபெற்று வருகிற பத்து பொது வசதி நிலையங்கள் 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

3. "ஏனைய வளர்ச்சித் திட்டங்கள்" என்னும் வகையில் அடங்கும், பனைக்குடியில் உள்ள பட்டு உற்பத்திச் செய்முறை விளக்கப் பண்ணை தொடர்ந்து நடத்தப்படும்.

4. (i) துறையின் தொழிற் பிரிவுகளின்கீழ், வள்ளியூரில் செயல்பட்டு வரும் பொது நோக்குப் பொறியியல் பட்டறை தொடர்ந்து நடத்தப்படும்.

(ii) வடக்கு விஜய நாராயணத்தில் செயல்பட்டு வந்த சாக்குக் கட்டித் தயாரிப்புப் பயிற்சி நிலையம் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்து முடித்த பின்னர் 14–7–1967-ல் மூடப்பட்டது. அந்தப் பயிற்சி நிலையத்தை உற்பத்திப் பிரிவாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்திப் பிரிவு 1968–69-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

(iii) தொழில்களுக்குப் பயன் படுத்தப்படும் தோல் கையுறைகளைத் தயாரிப்பதற்கான உற்பத்தி-பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1967–68-ல் ஓராண்டுக் காலம் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்து முடித்த பின்னர் இந்தப் பயிற்சி நிலையம் 1968–69-ம் ஆண்டில் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு தொடர்ந்து நடத்தி வரப்படும்.

## இணைப்பு III (அ)

தொழில்களுக்கு அரசாங்க உதவியளிக்கும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்—

| ஆண்டு. | உதவியளிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட மொத்தத் தொகை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ரூ. | பை. |
| இரண்டாவது திட்டக்கால அளவு— | | | |
| 1956–57 .. .. | 201 | 11,27,865 | 00 |
| 1957–58 .. .. | 3,401 | 24,88,962 | 00 |
| 1958–59 .. .. | 4,057 | 24,56,687 | 00 |
| 1959–60 .. .. | 3,952 | 22,26,558 | 00 |
| 1960–61 .. .. | 4,148 | 26,31,076 | 10 |
| மொத்தம் .. | 15,759 | 1,09,32,048 | 10 |
| மூன்றாவது திட்டக்கால அளவு— | | | |
| 1961–62 .. .. | 4,061 | 33,92,474 | 65 |
| 1962–63 .. .. | 4,811 | 28,82,813 | 19 |
| 1963–64 .. .. | 2,889 | 25,92,617 | 06 |
| 1964–65 .. .. | 2,082 | 30,00,289 | 00 |
| 1965–66 .. .. | 1,797 | 29,90,760 | 00 |
| மொத்தம் .. | 15,640 | 1,47,68,953 | 90 |
| நான்காவது திட்டக்கால அளவு— | | | |
| 1966–67 .. .. | 2,543 | 34,97,249 | 25 |
| 1967–68 (30–11–1967 வரை). | 730 | 9,40,553 | 75 |





1966–67-ல் கடன்தொகை வழங்கப்பட்ட தொழில்கள் பற்றியவிவரங்கள்—

| தொடரிலக்கமும் உதவி பெற்ற தொழிலின் பெயரும். | உதவி பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட கடன் தொகை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ரூ. | பை. |
| 1 உணவுப் பொருள்கள் .. | 24 | 41,220 | 00 |
| 2 பலவகைத் துணிகள் .. | 24 | 72,100 | 00 |
| 3 மரம், மரப் பொருள்கள் .. | 339 | 4,06,443 | 00 |
| 4 தோல், தோல் பொருள்கள். | 60 | 74,700 | 00 |
| 5 ரப்பர், பெட்ரோலியம், நிலக் கரிப் பொருள்கள். | 1 | 5,000 | 00 |
| 6 இரசாயனம், இரசாயனப் பொருள்கள். | 8 | 97,250 | 00 |
| 7 உலோகமற்ற கனிப் பொருள்கள் (பெட்ரோலியம் நீங்கலாக). | 42 | 1,17,530 | 25 |
| 8 மூல உலோகங்களும் அவைகளின் பொருள்களும். | 80 | 1,07,450 | 00 |
| 9 (போக்குவரத்துச் சாதனம் நீங்கலாக மற்றெல்லா) இயந்திரங்கள். | 44 | 3,97,650 | 00 |
| 10 போக்குவரத்துக்கான சாதனங்கள். | 8 | 1,01,300 | 00 |
| 11 பலவகைத் தயாரிப்புத் தொழில். | 1,913 | 20,76,606 | 00 |
| மொத்தம் .. | 2,543 | 34,97,249 | 25 |

தமிழ்நாடு 1956-ம் ஆண்டு சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும், கடன்களும் உதவித் தொகைகளும், வழங்குவது குறித்த விதிகளைச் சேர்ந்த 19-வது விதியின்கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சேமிப்பு நிதிக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் :—

| ஆண்டு. | தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட உதவித் தொகை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ரூ. | பை. |
| 1957–58 .. .. | 43 | 65,000 | 00 |
| 1958–59 .. .. | 178 | 1,91,770 | 00 |
| 1959–60 .. .. | 198 | 1,79,925 | 00 |
| 1960–61 .. .. | 80 | 1,18,059 | 80 |
| 1961–62 .. .. | 71 | 1,25,000 | 00 |
| 1962–63 .. .. | 111 | 1,49,980 | 00 |
| 1963–64 .. .. | 83 | 1,21,047 | 00 |
| 1964–65 .. .. | 79 | 1,22,526 | 00 |
| 1965–66 .. .. | 92 | 1,22,941 | 00 |
| 1966–67 .. .. | 70 | 1,20,980 | 00 |
| 1967–68 (30–11–1967) | .. | .... | |

## இணைப்பு III (ஆ)

### ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்குச் செய்த செலவைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை

| வளர்ச்சித் திட்டத்தின் தலைப்பு. | நான்காவது திட்டத்தின் கீழ் முதலீடு. | 1966-67-ம் ஆண்டுச் செலவு. | 1967-68 செலவு (எதிர் பார்த்தது). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| தொழில்களுக்கு நிதி வழங்கல் | 525·00 | 70·26 | 35·26 |
| கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்— | | | |
| சிறு தொழில்கள் .. .. | 415·00 | 86·68 | 74·52 |
| தொழிற் பேட்டைகள் .. | 235·00 | 47·05 | 43·77 |
| சீர் செய்த மனைகள் .. .. | 500·00 | 34·60 | 35·53 |
| கைப் பணிகள் .. .. | 60·00 | 3·34 | 6·68 |
| பட்டு வளர்ப்பு .. .. | 75·00 | 2·44 | 7·10 |
| கயிற்றுத் தொழில் .. .. | 5·00 | 0·20 | 0·20 |
| கிராமப்பணி நிலையங்கள் .. | 10·00 | 0·73 | 0·18 |

குறிப்பு.—தொழில் கூட்டுறவுத் திட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் VII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு III (இ)

### தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள்—மாவட்டவாரியாக

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| 1 தொழில் பண்ணை, மார்த்தாண்டம் .. .. .. | 2·92 |
| 2 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில் * | 5·49 |
| 3 தொழில் காலனி, நாகர்கோயில் .. .. .. | 7·32 |
| 4 ரம்ப ஆலை, நாகர்கோயில் * .. .. .. .. | 2·33 |
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 1 தச்சுப் பட்டறை, பத்தமடை* .. .. .. .. | 0·77 |
| 2 தச்சுப் பட்டறை, கருமான் பட்டறை, பேட்டை* .. .. | 8·10 |
| 3 தொழில் பண்ணை, பேட்டை .. .. .. .. | 6·16 |
| 4 கருவி அறை பட்டறை, பேட்டை* .. .. .. .. | 5·73 |
| 5 பொதுக் குத்தகைப் பட்டறை, பேட்டை .. .. .. | 5·62 |
| 6 தொழிற்பேட்டை, கோவில்பட்டி .. .. .. | 9·69 |
| 7 மாதிரி வார்ப்படச் சாலை, பேட்டை* .. .. .. | 2·43 |

* தமிழக சிறு தொழில்கள் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.





| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 8 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, பேட்டை .. .. | 0·49 |
| 9 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, தூத்துக்குடி * .. | 5·12 |
| 10 சைக்கிள் உருவாக்கும் பிரிவு, தூத்துக்குடி .. .. | 3·73 |
| 11 அடிப்படைக் கிராமப் பணி நிலையம் .. .. .. | 3·08 |
| 12 மக்னீசியம் கார்பனேட் உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 2·76 |
| 13 கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி. | 7·60 |
| 14 பாரீஸ் உறை மாவு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 1·97 |
| **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம்* .. | 4·50 |
| 2 தொழிற்பேட்டை, விருதுநகர் .. .. .. .. | 28·49 |
| 3 கருவி அறை பட்டறை, விருதுநகர் * .. .. .. | 5·78 |
| 4 தொழிற் பேட்டை, காரைக்குடி .. .. .. | 9·69 |
| 5 தொழிற் பேட்டை, சிவகங்கை .. .. .. .. | 8·08 |
| **மதுரை மாவட்டம்** | |
| 1 மூலப் பொருள்கள் டிப்போ, மதுரை .. .. .. | 2·16 |
| 2 கருவிப் பட்டறைப் பிரிவுடன், துணி ஆலைப் பகுதிகளுக்குரிய பணி நிலையம், மதுரை *. | 4·56 |
| 3 அழுத்த உலோகப் பொருள்கள், பழனி * .. .. | 3·55 |
| 4 பூட்டுத் தயாரிப்புப் பிரிவு, திண்டுக்கல் * .. .. | 14·59 |
| 5 தொழில் பண்ணை, மதுரை .. .. .. .. | 6·19 |
| 6 தொழிற் பேட்டை, தேனி .. .. .. .. .. | 5·37 |
| 7 பொதுக் குத்தகைப் பட்டறை, மதுரை .. .. .. | 7·52 |
| 8 தொழிற் பேட்டை, திண்டுக்கல் .. .. .. .. | 15·90 |
| 9 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, மதுரை .. .. | 0·49 |
| 10 கருவிப் பட்டறை, மதுரை * .. .. .. .. | 11·54 |
| 11 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கோடைக்கானல்* | 4·40 |
| 12 பொதுக் குத்தகைப் பட்டறை, திண்டுக்கல் .. .. | 5·71 |
| 13 சீர் செய்த மனைகள், மதுரை .. .. .. .. | 63·53 |
| 14 மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடுவதற்கான துணை நிலையம், மதுரை † | |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | |
| 1 வேளாண்மைப் பண்ணைக் கருவிகள் பிரிவு, திருச்சிராப்பள்ளி.* | 4·07 |
| 2 தொழில் பண்ணை, திருச்சிராப்பள்ளி .. .. .. | 6·17 |

* தமிழகச் சிறு தொழில்கள் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.

† சென்னை மாவட்டத்திற்குரிய பட்டியலில் 21-வது இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 3 கருவி அறை பட்டறை, திருச்சிராப்பள்ளி * .. .. | 5·78 |
| 4 செயற்கைக் கற்களைத் தயாரிப்போருக்கு குளத்தூர் வட்டத்தில் நான்கு பட்டறைகள். | 0·45 |
| 5 தொழிற் பேட்டை, புதுக்கோட்டை .. .. .. | 9·69 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, கரூர் * .. .. | 5·49 |
| 7 பொதுக் குத்தகைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. | 5·62 |
| 8 சீர் செய்த மனைகள், திருச்சிராப்பள்ளி .. .. .. | 16·53 |
| 9 துணைத் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி .. .. | 20·55 |
| 10 தொழிற்பேட்டை, கரூர் .. .. .. .. .. | 6·15 |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| 1 சைக்கிள் உருவாக்கும் பிரிவு, தஞ்சாவூர் * .. .. | 7·50 |
| 2 தொழில் பண்ணை, தஞ்சாவூர் .. .. .. .. | 6·61 |
| 3 பித்தளைச் சாமான்கள், வெட்டுக் கருவிகள் தயாரிப்புப் பணி நிலையம், கும்பகோணம்.* | 7·83 |
| 4 தச்சு-கருமார் பட்டறை, மன்னார்குடி * .. .. .. | 4·80 |
| 5 கருவிப் பட்டறை, தஞ்சாவூர் * .. .. .. .. | 6·46 |
| 6 மாதிரி வார்ப்பட சாலை, தஞ்சாவூர் * .. .. .. | 2·47 |
| 7 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, மாயூரம் * .. | 5·12 |
| 8 தொழிற்பேட்டை, கும்பகோணம் .. .. .. | 8·59 |
| 9 தொழிற்பேட்டை, நாகப்பட்டினம் .. .. .. | 3·26 |
| **தென் ஆர்க்காடு மாவட்டம்** | |
| 1 தச்சு-கருமார் வேலைப்பட்டறை, கடலூர் * .. .. | 4·80 |
| 2 மட்பாண்டத் தயாரிப்பு நிலையம், விருத்தாசலம் .. .. | 34·83 |
| 3 மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலை, விருத்தாசலம் .. | 8·09 |
| 4 மட்பாண்டத் தொழில் பயிற்சிப் பள்ளி, விருத்தாசலம் .. | 5·21 |
| 5 மட்பாண்டத் தயாரிப்புத் தொழிற்பேட்டை, விருத்தாசலம் | 32·78 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம் * .. | 5·49 |
| 7 நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு, வடலூர் .. .. | 3·86 |
| 8 துணைத் தொழிற்பேட்டை, வடலூர் .. .. .. | 3·84 |
| **செங்கற்பட்டு மாவட்டம்** | |
| 1 காலணி பிரிவு, பல்லாவரம் * .. .. .. .. | 1·59 |
| 2 தொழிற்பேட்டை, அம்பத்தூர் .. .. .. .. | 195·07 |
| 3 அம்பத்தூர் சீர் செய்த மனைகள் வழங்குதல் .. .. | 80·20 |

*தமிழகச் சிறு தொழில்கள் லிமிடெட் கார்ப்பரேஷன் கீழ் உள்ள பிரிவுகள்.



| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 4 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம் .. | 5·35 |
| 5 கட்டுமானப் பொருட்கள் பட்டறை, அம்பத்தூர் .. | 29·25 |
| 6 பொதுக் குத்தகைப் பட்டறை, அம்பத்தூர் .. .. | 5·71 |
| 7 கருவிப் பட்டறை, அம்பத்தூர் * .. .. .. .. | 11·30 |
| 8 தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்பேட்டை, மாதவரம் | 19·33 |
| 9 தோல் தொழில் பொது வசதி நிலையம், மாதவரம் .. | 3·40 |
| 10 சீர்செய்த மனைகள், திருவள்ளூர் .. .. .. | 128·50 |
| 11 தொழிற்பேட்டை, காஞ்சீபுரம் .. .. .. .. | 6·15 |
| 12 மின்சாரக் கருவிகள் தனித் தொழிற்பேட்டை, திருவள்ளூர் | 23·17 |
| **வட ஆர்க்காடு மாவட்டம்** | |
| 1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர் * .. | 7·30 |
| 2 தோல் பதனிடும், வேலை நிறைவு செய்யும் பிரிவு, விண்ணமங்கலம். | 14·83 |
| 3 மாதிரி வார்ப்படச்சாலை, காட்பாடி* .. .. .. | 2·45 |
| 4 தொழில் பண்ணை, காட்பாடி .. .. .. .. | 9·04 |
| 5 தொழிற்பேட்டை, அரக்கோணம் .. .. .. | 9·69 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை* | 5·00 |
| 7 தச்சு-கருமான் வேலைப் பிரிவு, அரக்கோணம் .. .. | 3·48 |
| 8 சீர்செய்த மனைகள், இராணிப்பேட்டை .. .. .. | 15·50 |
| **சேலம் மாவட்டம்** | |
| 1 மின் மூலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணை * .. .. | 9·73 |
| 2 கைத்தறிப் பாகங்கள் பிரிவு, சேலம்* .. .. .. | 12·53 |
| 3 படிகக்கல் பொடி செய்யும் சாலை, சேலம்* .. .. | 3·85 |
| 4 தொழில் பண்ணை, சேலம் .. .. .. .. | 5·34 |
| 5 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல்* .. | 5·49 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ஓமலூர் .. .. | 5·35 |
| 7 தொழிற்பேட்டை, மேட்டூர் .. .. .. .. | 6·15 |
| **தர்மபுரி மாவட்டம்** | |
| 1 தச்சுப்பட்டறை, கிருஷ்ணகிரி * .. .. .. .. | 0·77 |
| 2 சைக்கிள் உருவாக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி * .. .. | 3·73 |
| 3 தொழிற்பேட்டை, ஓசூர் .. .. .. .. .. | 6·01 |
| 4 தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி .. .. .. .. | 9·69 |

* தமிழகச் சிறு தொழில்கள் லிமிடெட் கார்ப்பரேஷன் கீழ் உள்ள பிரிவுகள்.

[1968 மார்ச் 22

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| 1 மர வேலைப் பிரிவு, பொள்ளாச்சி * .. .. .. | 5·73 |
| 2 கருவிப்பட்டறை, ஈரோடு * .. .. .. .. | 5·36 |
| 3 மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு.* | 1·72 |
| 4 தொழில் பண்ணை, ஈரோடு .. .. .. .. | 9·11 |
| 5 கருவிப் பட்டறை, கோயம்புத்தூர்* .. .. .. | 10·09 |
| 6 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற்பட்டறை, கோயம்புத்தூர். * | 6·98 |
| 7 மூலப் பொருள்கள் டிப்போ, கோயம்புத்தூர் .. .. | 2·16 |
| 8 பொதுக் குத்தகைப் பட்டறை, கோயம்புத்தூர் .. .. | 7·52 |
| 9 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர் * .. | 5·49 |
| **சென்னை மாவட்டம்** | |
| 1 காலணிப்பிரிவு, பெரம்பூர் * .. .. .. .. | 6·69 |
| 2 காலணிப்பிரிவு, திருவல்லிக்கேணி, பெரம்பூர் * .. .. | 1·17 |
| 3 அழுத்தப்பட்ட உலோகப் பொருள்கள் தயாரிப்புக்கான பிரிவு, சென்னை.* | 12·94 |
| 4 மின்சாரப் பொருட்கள் பிரிவு, கிண்டி * .. .. | 17·71 |
| 5 மரவேலைப் பிரிவு, கிண்டி * .. .. .. .. | 7·42 |
| 6 கருவிப் பட்டறை, கிண்டி *.. .. .. .. .. | 25·64 |
| 7 பொது வேலை நிறைவுப் பட்டறை, கிண்டி * .. .. | 2·68 |
| 8 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற்பட்டறை, கிண்டி.* | 11·61 |
| 9 பணிக் கார்ப்பொரேஷன், கிண்டி .. .. .. .. | 4·43 |
| 10 கண்ணாடித் தொழிற்சாலை, கிண்டி * .. .. .. | 10·66 |
| 11 அழுக்க வகையில் சூடுறுத்தி, அச்சு வார்ப்படப் பிரிவு, கிண்டி.* | 9·69 |
| 12 மாதிரி வார்ப்படச் சாலை, கிண்டி* .. .. .. .. | 16·92 |
| 13 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, கிண்டி .. .. | 3·51 |
| 14 பொதுக் குத்தகைப் பட்டறை, கிண்டி .. .. .. | 7·70 |
| 15 தொழிற்பேட்டை, கிண்டி .. .. .. .. .. | 70·03 |
| 16 அச்சு வார்ப்படம்—கருவி வடிவ அமைப்புப் பிரிவு, கிண்டி.* | 7·39 |
| 17 தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி .. .. | 20·50 |
| 18 சீர்படுத்திய மனைகள், கிண்டி .. .. .. .. | 53·48 |
| 19 குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்பு பிரிவு, கிண்டி.* | 7·89 |
| 20 யந்திர உலோக ஆய்வுக் கூடம் .. .. .. .. | 20·73 |

* தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனின்மேல் உள்ள பிரிவுகள்.



1968 மார்ச் 22]

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **சென்னை மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 21 மின்மருத்துவக் கருவிகள் பணிமனை—செப்பனிடும் நிலையம். | 7·56 |
| 22 சென்னை நகர் அருகில் மின்சாரத் தொழில்களுக்கான தொழிற்பேட்டை. | 40·26 |
| 23 கருவிகள் தயாரிப்புக்கான தொழிற்பேட்டை, அடையாறு. | 16·18 |
| 24 நுரைமம் உற்பத்திப் பிரிவு, கிண்டி .. .. .. | 4·46 |

## இணைப்பு III—(ஈ)

கைப்பணி நிலையங்களின் பட்டியல்.

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **சென்னை மாவட்டம்.** | |
| 1 கலை—கைப்பணிக் கல்லூரி, சென்னை .. .. .. | 4·73 |
| 2 வடிவமைப்பு செய்முறை விளக்க நிலையம், சென்னை ... | 4·00 |
| 3 பொம்மை தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை .. | 1·18 |
| 4 பளபளப்பான களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், பெரம்பூர். | 1·76 |
| 5 விற்பனை நிலையம், சென்னை .. .. .. .. | 0·25 |
| 6 கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை. | 0·25 |
| 7 வெள்ளிச்சருகைப் பயிற்சி நிலையம் ... ... ... | 0·55 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1 சிற்பப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம் .. .. .. | 0·63 |
| 2 அச்சு வார்ப்படப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம் .. .. | 0·15 |
| 3 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள், தயாரிப்பு பயிற்சி நிலையம், தாம்பரம். | 0·49 |
| 4 சித்திர வேலைப்பாடுகள், கொண்ட தட்டுகள் தயாரிப்பு, பயிற்சி நிலையம், தாம்பரம். | 0·52 |
| 5 பித்தளை, வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், காஞ்சிபுரம். | 0·69 |
| 6 களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், ஸ்ரீபெரும்புதூர். | 0·20 |
| 7 சித்திர வேலைபபாடுகள் கொண்ட தோல் பைகள் உற்பத்தி நிலையம், பல்லாவரம். | 2·00 |
| 8 விற்பனை நிலையம், மாமல்லபுரம் .. .. .. | 1·56 |

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **தென் ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 1 சணல் நாரைக் கொண்டு விரிப்புகள், இரட்டிப்புகள், தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம், சின்ன சேலம் | 0·62 |
| 2 விற்பனை நிலையம், நெய்வேலி .. .. .. .. | 0·98 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 1 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை. | 0·37 |
| 2 வெண்கலப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாச்சியார்கோவில். | 0·49 |
| 3 வெண்கல விக்கிரகங்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை. | 0·30 |
| 4 விற்பனை-சேகரிப்பு நிலையம், தஞ்சாவூர் .. .. .. | 1·84 |
| 5 உலோகத் தொழிலுக்குப் பொதுசெதி நிலையம், நாச்சியார்கோவில். | 2·40 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 1 கம்பளங்கள், விரிப்புகள், தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடி. | 0·41 |
| 2 விற்பனை-சேகரிப்பு நிலையம், திருச்சி .. .. .. | 1.01 |
| 3 பனை ஓலைப்பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், புதுக்கோட்டை. | 0·56 |
| **மதுரை மாவட்டம்** | |
| 1 வேலைப்பாடமைந்த கைப்பிடிகள் தயாரிப்புப் பிரிவு நிலையம், மதுரை. | 0·87 |
| 2 சித்திர வேலைப்பாடமைந்த உலோகப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை. | 0·35 |
| 3 விற்பனை நிலையம், திண்டுக்கல் .. .. .. .. | 0·08 |
| 4 கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை. | 2·07 |
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 1 வெண்கலப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் வாகைக்குளம். | 1·85 |
| 2 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டிப்புகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், கோபால சமுத்திரம். | 1·40 |
| 3 கற்றாழைநார் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயல். | 1·26 |
| 4 அரக்குப் பூசிய பொம்மை தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேரன்மாதேவி. | 0·28 |
| 5 விற்பனை-சேகரிப்பு நிலையம், திருநெல்வேலி .. .. | 1·84 |
| 6 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டிப்புகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், ஆய்க்குடி. | 0·84 |





| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம், நாகர்கோயில். | 0·48 |
| **வட ஆர்க்காடு மாவட்டம்** | |
| கம்பளி உற்பத்தி நிலையம், விண்ணமங்கலம் .. .. | 13·10 |
| **சேலம் மாவட்டம்** | |
| 1 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேலம். | 0·56 |
| 2 விற்பனை-சேகரிப்பு நிலையம், சேலம். .. .. .. | 1·01 |
| **தர்மபுரி மாவட்டம்** | |
| கருங்கல் மெருகிடுவதற்கான உற்பத்தி நிலையம், கிருஷ்ணகிரி. | 0·65 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| விற்பனை-சேகரிப்பு நிலையம், கோயம்புத்தூர் .. .. | 1·01 |
| **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| பனை ஓலை உற்பத்தி பொருள் பயிற்சி நிலையம், இராமேஸ்வரம். | 0·53 |

## இணைப்பு III—(உ)

மாவட்டவாரியாக பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்கள் குறித்த பட்டியல்.

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 1 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, தென்காசி. | 1·47 |
| 2 பட்டுப்புழு வளர்ப்பு—டஸ்ஸார் பண்ணை, செங்கோட்டை | 2·15 |
| **மதுரை மாவட்டம்** | |
| அரசாங்கச் செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கோடைக்கானல். | 0·82 |

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **வட ஆர்க்காடு மாவட்டம்.** | |
| செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, குடியாத்தம். | 0·80 |
| **தர்மபுரி மாவட்டம்.** | |
| 1 சௌக்கி பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. .. | 0·82 |
| 2 முசுக்கட்டைப் பெரும் பண்ணைப் பிரிவு, ஓசூர் .. .. | 1·75 |
| 3 பட்டுப்புழு வளர்ப்புப் பிரிவுகள், வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை பிர்க்காக்கள். | 0·23 |
| 4 பட்டு நூல் எடுக்கும் நிலையம், ஓசூர் .. .. .. | 3·06 |
| 5 பட்டுப்புழு கலப்பினக் களஞ்சியம், பேரிகை .. .. | 2·15 |
| 6 பட்டுப்புழு வளர்ப்போருக்கு ஓசூர், பருகூர், பாப்பார பட்டி, அஞ்செட்டி ஆகிய இடங்களில் விற்பனை வசதி. | 1·40 |
| 7 டெங்கனிக்கோட்டையில் நாட்டு வகை பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும் களஞ்சியமும். | 0·58 |
| 8 அரசாங்க பட்டு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. .. | 4·74 |
| 9 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கிருஷ்ணகிரி. | 0·80 |
| 10 முசுக்கட்டை ஒட்டுச்செடி வளர்ப்புப் பண்ணைகள் .. | 1·44 |
| 11 பட்டுப் பரிசோதனை நிலையம், ஓசூர் .. .. .. | 0·15 |
| 12 பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்றை பெரிய அளவில் நிறுவுதல், கோலட்டி. | 2·47 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| முசுக்கட்டை ஒட்டுச்செடி உற்பத்தி .. .. .. .. | 0·02 |
| **சேலம் மாவட்டம்.** | |
| 1 அரசாங்கப் பட்டு வளர்ப்புப் பண்ணை, ஏர்க்காடு .. .. | 0·80 |
| 2 செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, கொல்லிமலை. | 1·41 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 1 சௌக்கி பட்டுப்புழு கூட்டு வளர்ப்புப் பிரிவு, தாளவாடி | 0·27 |
| 2 முசுக்கட்டை ஒட்டுச் செடி வளர்ப்புப் பண்ணை, தாளவாடி. | 0·55 |
| 3 பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்றை பெரிய அளவில் நிறுவுதல், தாளவாடி. | .... |



| சிறு தொழில்கள் (1) | திட்டச் செலவு (2) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **நீலகிரி மாவட்டம்.** | |
| 1 பட்டு வளர்ப்புப் பிரிவுகள், மசினகுடி .. .. .. | 0·46 |
| 2 கெட்டி நரம்பு தயாரிக்கும் பிரிவு, குன்னூர் .. .. | 4·00 |
| 3 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி. | 2·33 |
| 4 பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்றை பெரிய அளவில் நிறுவுதல், மசினகுடி. | 0·40 |

## இணைப்பு III (ஊ)

### 1967-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி அன்றுள்ள நிலவரப்படி தொழில் கூட்டுறவு சங்கங்களின் பட்டியல்.

| தொடர் எண். (1) | சங்கங்களின் வகைகள். (2) | சென்னை. (3) | செங்கற்பட்டு. (4) | வட ஆர்க்காடு. (5) | தென் ஆர்க்காடு. (6) | தஞ்சாவூர். (7) | திருச்சிராப்பள்ளி. (8) | சேலம். (9) | தர்மபுரி. (10) | கோயம்புத்தூர். (11) | நீலகிரி. (12) | மதுரை. (13) | திருநெல்வேலி. (14) | கன்னியாகுமரி. (15) | இராமநாதபுரம். (16) | மொத்தம். (17) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A. | சிறுஅளவுத் தொழில்கள். | | | | | | | | | | | | | | | |
| 1 | மாநிலச் சங்கங்கள் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 2 | கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | .. | 1 | .. | 1 | 5 |
| 3 | முன்னாள் படையினர் சங்கங்கள் | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 4 |
| 4 | தீப்பெட்டி தொழிலாளர் | .. | 1 | 1 | .. | 2 | .. | .. | .. | .. | .. | 1 | 2 | .. | 7 | 14 |
| 5 | செங்கல், ஓடு | .. | 3 | .. | 1 | 1 | 2 | .. | .. | .. | .. | 2 | 2 | .. | 1 | 12 |
| 6 | தோல் தொழிலாளர் | 1 | .. | 1 | .. | 1 | 1 | 1 | .. | 1 | 1 | 1 | 1 | .. | .. | 9 |
| 7 | உலோகத் தொழிலாளர் சங்கங்கள் | .. | 1 | 1 | 2 | 2 | 2 | 3 | .. | 1 | .. | 3 | 3 | .. | 5 | 23 |
| 8 | பஞ்சலோகம் | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | 4 |
| 9 | தச்சுத் தொழிலாளர் | .. | 3 | 1 | 3 | 3 | 4 | 2 | .. | 5 | .. | 4 | 5 | 1 | 10 | 41 |
| 10 | கைவினைக் கலைஞர்கள் | .. | .. | 2 | 1 | .. | 6 | 5 | .. | 3 | .. | 3 | 1 | .. | 4 | 25 |
| 11 | மகளிர் | 17 | 5 | 2 | 3 | 5 | 3 | 2 | 1 | 3 | 3 | 1 | 2 | 3 | 1 | 49 |
| 12 | தேயிலைத் தொழிற்சாலைகள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 9 | .. | .. | .. | .. | 9 |
| 13 | சிறப்புவகை சங்கங்கள் | 2 | 3 | .. | .. | 1 | 3 | .. | .. | .. | 2 | 1 | .. | .. | 2 | 14 |
| 14 | உடை | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 4 |
| 15 | பீடி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 |
| 16 | பல்வகை | 3 | .. | .. | .. | .. | 1 | .. | .. | 3 | .. | 2 | .. | .. | .. | 9 |
| 17 | தொழில் கூட்டுறவு பாங்கு | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| B. | கைப் பணிகள்— | | | | | | | | | | | | | | | |
| 1 | பாய் முடைவோர் சங்கங்கள் | .. | 6 | 3 | 3 | 10 | 4 | 8 | 2 | 5 | .. | 7 | 11 | 3 | 1 | 62 |
| 2 | வெண்கலம் | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | .. | 4 |
| 3 | சரிகை, பூ வேலைப்பாடு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | .. | 4 |
| 4 | பிரம்பு, மூங்கில் கூடை | .. | .. | 2 | 1 | 3 | 3 | 2 | .. | 6 | 1 | 1 | 6 | 2 | 2 | 29 |
| 5 | விலை மதிப்புள்ள கற்கள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 6 | இசைக் கருவிகள் | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 7 | சிற்பம் செதுக்குதல் | .. | .. | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | 4 |
| 8 | கம்பள நெசவு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 9 | புல், நார் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | .. | .. | 2 |
| 10 | மட்பாண்டத் தொழில் | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 11 | விளையாட்டுப் பொம்மைகள் | 2 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | .. | 6 |

| தொடர் எண். (1) | சங்கங்களின் வகைகள். (2) | சென்னை. (3) | செங்கற்பட்டு. (4) | வட ஆர்க்காடு. (5) | தென் ஆர்க்காடு. (6) | தஞ்சாவூர். (7) | திருச்சிராப்பள்ளி. (8) | சேலம். (9) | தர்மபுரி. (10) | கோயம்புத்தூர். (11) | நீலகிரி. (12) | மதுரை. (13) | திருநெல்வேலி. (14) | கன்னியாகுமரி. (15) | இராமநாதபுரம். (16) | மொத்தம். (17) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B. | கைப்பணிகள்—தொடர்ச்சி. | | | | | | | | | | | | | | | |
| 12 | நாடா, நூல் .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. | 3 |
| 13 | பனை ஓலை .. | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 10 | 15 |
| 14 | தமிழ்நாடு கைப்பணிப்பொருள் விற்பனை சங்கம். | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 15 | பல்வகை .. | .. | .. | 2 | .. | 3 | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 | 8 |
| 16 | கயிற்றுத் தொழில் .. | .. | 1 | 1 | 1 | 4 | .. | 12 | 1 | 3 | .. | .. | .. | 10 | 2 | 35 |
| 17 | பட்டுப்புழு வளர்ப்பு .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| | மொத்தம் .. | 31 | 25 | 20 | 18 | 39 | 32 | 37 | 6 | 37 | 17 | 29 | 40 | 25 | 48 | 404 |



## இணைப்பு III (எ).

## திட்டத்தின் கீழ்த் தொழிற் கூட்டுறவுகளின் முன்னேற்றம்.

| தொடரிலக்கமும், திட்டத்தின் பெயரும். (1) | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். (2) | 1966–67 கணக்குகள். (3) | 1967–68 கணக்குகள் (எதிர்பார்க்கப் படுவது). (4) | நான்காவது திட்டத்தில் எய்திய சாதனை. 1966–67 (5) | 1967–68 (எதிர்பார்க்கப் படுவது). (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1 கூட்டுறவு, தனியார் தொழிற் பேட்டைகள் .. .. | 85·00 | 14·03 | 11·50 | .. | .. |
| 2 சிறுதொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 50·00 | 2·62 | 5·76 | 4 | 6 |
| 3 கைப்பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 15·00 | 0·99 | 1·69 | 4 | 1 |
| 4 கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 5·00 | 0·59 | 1·02 | .. | .. |
| 5 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | 5·00 | 0·75 | 0·81 | .. | .. |
| மொத்தம் .. | 160·00 | 18·98 | 20·78 | 8 | 7 |

## இணைப்பு III (ஏ).

### தமிழ்நாட்டு சிறு தொழில் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| பிரிவின் பெயர். (1) | 1966–67-ல் உற்பத்தி. (2) | 31—12—1967 வரையில் உற்பத்தி. (3) | 1967–68-ல் எய்த எண்ணியுள்ள நிலுவை உற்பத்தி. (4) | 1967–68-ல் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி. (5) | 1968-69-க்கான குறிக்கோள் அளவு. (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம். | 11·050 | 4·173 | 1·477 | 5·650 | 10·900 |
| 2 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர் .. | 14·300 | 9·765 | 2·735 | 12·500 | 14·000 |
| 3 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, கரூர் .. | 2·700 | 1·441 | 0·359 | 1·800 | 2·570 |
| 4 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர் .. | 3·240 | 2·021 | 0·609 | 2·630 | 3·270 |
| 5 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல் .. | 2·700 | 2·715 | 0·635 | 3·350 | 3·350 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, தூத்துக்குடி. | 1·850 | 1·356 | 0·194 | 1·550 | 1·850 |
| 7 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, மாயூரம் .. | 2·290 | 1·360 | 0·490 | 1·850 | 1·880 |
| 8 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம். | 2·510 | 2·044 | 0·786 | 2·830 | 2·830 |
| 9 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை. | 1·300 | 2·110 | 0·610 | 2·720 | 2·700 |
| 10 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில் | 2·340 | 0·912 | 0·278 | 1·190 | 2·350 |
| 11 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, கோடைக்கானல். | .. | 0·237 | 0·063 | 0·300 | 1·000 |
| 12 அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, சென்னை. | 8·840 | 4·135 | 1·365 | 5·500 | 7·000 |
| 13 அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, பழனி. | 13·270 | 4·310 | 1·090 | 6·000 | 12·000 |
| 14 உலோக அழுத்தப் பட்டறை, கிண்டி .. .. .. | 6·250 | 4·602 | 1·898 | 6·500 | 8·000 |
| 15 கருவிப் பட்டறை, கிண்டி .. .. .. .. | 5·650 | 3·280 | 1·220 | 4·500 | 5·000 |
| 16 கருவிப் பட்டறை, ஈரோடு .. .. .. .. | 10·430 | 5·863 | 1·227 | 7·090 | 11·250 |
| 17 கருவிப் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. .. .. | 2·080 | 1·253 | 0·467 | 1·720 | 1·920 |
| 18 கருவிப் பட்டறை, விருதுநகர் .. .. .. .. | 4·220 | 1·509 | 0·481 | 1·990 | 4·260 |
| 19 கருவிப் பட்டறை, மதுரை .. .. .. .. | 1·860 | 0·884 | 0·346 | 1·230 | 1·740 |
| 20 கருவிப் பட்டறை, கோயம்புத்தூர் .. .. .. | 1·360 | 1·342 | 0·658 | 2·000 | 2·000 |
| 21 கருவிப் பட்டறை, அம்பத்தூர் .. .. .. | 3·520 | 1·308 | 0·552 | 1·860 | 3·000 |
| 22 பொது வேலை நிறைவுப் பட்டறை, கிண்டி .. .. | 3·640 | 4·037 | 0·963 | 5·000 | 8·000 |
| 23 அச்சு வார்ப்புப் பிரிவு, கிண்டி .. .. .. .. | 4·970 | 3·530 | 0·470 | 4·000 | 5·000 |
| 24 அச்சு வார்ப்பு—வெப்பப் பதனிடு பட்டறை, கோவை. | 1·710 | 1·229 | 0·391 | 1·620 | 1·620 |
| 25 அழுத்த வார்ப்புப் அச்சுப் பிரிவு, கிண்டி .. .. | 9·380 | 6·533 | 2·347 | 8·880 | 9·000 |
| 26 மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தஞ்சாவூர் | 7·090 | 2·518 | 0·482 | 3·000 | 4·000 |
| 27 மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தூத்துக்குடி. | .. | 0·006 | 0·094 | 0·100 | 1·000 |
| 28 மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி | 3·520 | 1·847 | 0·753 | 2·600 | 3·400 |
| 29 மரவேலைப் பிரிவு, கிண்டி .. .. .. .. | 9·590 | 7·218 | 2·002 | 9·220 | 9·400 |
| 30 தச்சு-கொல்லுப் பட்டறை, கடலூர் .. .. .. | 7·550 | 5·295 | 0·755 | 6·050 | 6·240 |
| 31 தச்சு-கொல்லுப் பட்டறை, மன்னார்குடி .. .. | 6·490 | 4·811 | 2·189 | 7·000 | 6·000 |

| பிரிவின் பெயர். (1) | 1966–67-ல் உற்பத்தி. (2) | 31—12—1967 வரையில் உற்பத்தி. (3) | 1967–68-ல் எய்த எண்ணியுள்ள நிலுவை உற்பத்தி. (4) | 1967–68-ல் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி. (5) | 1968–69-க்கான குறிக்கோள் அளவு. (6) |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்) | |
| 32 தச்ச-கொல்லுப் பட்டறை, பேட்டை .. .. .. | 8·990 | 4·433 | 1·317 | 5·750 | 7·000 |
| 33 தச்ச வேலைப் பட்டறை, பத்தமடை .. .. .. | 3·660 | 2·012 | 0·788 | 2·800 | 3·500 |
| 34 தச்ச வேலைப் பட்டறை, கிருஷ்ணகிரி .. .. .. | 3·570 | 2·624 | 0·946 | 8·570 | 3·300 |
| 35 மரவேலைப் பிரிவு, பொள்ளாச்சி .. .. .. | 10·870 | 4·051 | 0·949 | 5·000 | 9·070 |
| 36 மரம் அறுக்கும் பிரிவு, நாகர்கோவில் .. .. | 5·190 | 8·348 | 0·652 | 9·000 | 12·000 |
| 37 காலணி தயாரிப்புப் பிரிவு, பெரம்பூர் .. .. | 13·540 | 7·358 | 1·642 | 9·000 | 11·000 |
| 38 காலணி தயாரிப்புப் பிரிவு, திருவல்லிக்கேணி .. .. | 2·340 | 1·428 | 0·322 | 1·750 | 2·500 |
| 39 காலணி தயாரிப்புப் பிரிவு, பல்லாவரம் .. .. | 3·860 | 1·425 | 0·575 | 2·000 | 4·000 |
| 40 தோல் பொருள்கள் பொது வசதி நிலையம், மாதவரம். | 2·450 | 1·660 | 0·690 | 2·350 | 2·770 |
| 41 தோல் பதனிடுதல்-தோல் வேலை நிறைவுப் பிரிவு, விண்ணமங்கலம். | 41·600 | 39·257 | 20·743 | 60·000 | 60·000 |
| 42 விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, திண்டி. .. .. .. | 9·550 | 7·509 | 1·491 | 9·000 | 11·000 |
| 43 படிகக்கல் பொடி செய்யும் சாலை, சேலம் .. .. | 1·170 | 0·489 | 0·261 | 0·750 | 2·000 |
| 44 மட்பாண்டத் தொழிற்சாலை, விருத்தாசலம் .. .. | 2·820 | 2·590 | 0·870 | 3·460 | 3·460 |
| 45 மெருகிட்ட குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை, விருத்தாசலம். | 6·910 | 5·426 | 1·964 | 7·390 | 7·000 |
| 46 மின்முலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணைக்கட்டு .. .. | 54,850 | 41·603 | 12·397 | 54·000 | 61·000 |
| 47 கட்டுமான பட்டறை, அம்பத்தூர் .. .. .. | 60·220 | 31·560 | 28·440 | 60·000 | 61·000 |
| 48 துணி ஆலை பகுதிகளுக்குரிய தொழிற்பிரிவு, மதுரை. | 3·550 | 2·373 | 0·517 | 2·890 | 4·000 |
| 49 கைத்தறிக்குத் தேவையான பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, சேலம். | 10·630 | 6·932 | 0·868 | 7·800 | 10·000 |
| 50 பண்ணைக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு, திருச்சிராப் பள்ளி. | 11·290 | 7·756 | 1·744 | 9·500 | 11·000 |
| 51 பித்தளைச் சாமான்கள் தயாரிக்கும் பிரிவு, கும்ப கோணம். | 8·890 | 4·965 | 1·035 | 6·000 | 7·000 |
| 52 பூட்டு தயாரிக்கும் பிரிவு, திண்டுக்கல் .. .. .. | 4·850 | 2·593 | 0·507 | 3·100 | 3·600 |
| 53 மின்சாரப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம், கிண்டி. | 18·210 | 7·057 | 1·913 | 9·000 | 12·000 |
| 54 மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு. | 4·020 | 2·605 | 0·895 | 3·500 | 4·000 |
| 55 குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி. | 2·810 | 1·834 | 0·686 | 2·520 | 2·770 |
| 56 உலோக அழுத்தப் பிரிவு, கிண்டி .. .. .. | 1·660 | 1·200 | 0·300 | 1·500 | 1·500 |
| 57 மாதிரி வார்ப்படச் சாலை, கிண்டி .. .. .. | 8·970 | 7·050 | 2·340 | 9·390 | 9·500 |
| 58 மாதிரி வார்ப்படச்சாலை, காட்பாடி .. .. .. | 4·430 | 3·509 | 0·491 | 3·500 | 4·500 |
| 59 மாதிரி வார்ப்படச்சாலை, தஞ்சாவூர் .. .. .. | 7·280 | 3·775 | 0·475 | 3·750 | 4·500 |
| 60 மாதிரி வார்ப்படச்சாலை, பேட்டை .. .. .. | 5·380 | 4·189 | 0·811 | 4·500 | 4·500 |
| மொத்தம் .. | 479·260 | 311·855 | 114·645 | 425·000 | 500·000 |

வெளியீடு—16—12—1968]
Issued—16—12—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*சனிக்கிழமை, 1968 மார்ச் 23*
**Saturday, 23rd March 1968**

தொகுதி XII எண் 4
**Volume XII—No. 4**

©
தமிழக அரசு
1969
©
GOVERNMENT OF MADRAS
1969

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை. 50 காசுகள்]
Price, 50 Paise]

# தமிழக சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1968 மார்ச் 23.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண்கள் 290 லிருந்து 296 வரையிலும் தள்ளி வைக்கப்படுகின்றன.*

### *Fertiliser factories.*

*297. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether it is proposed to start small fertiliser factori s in the State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Sir, I remember that sometime back, the Hon. Minister for Industries gave an indication that this State is likely to start a small-scale fertiliser factory. Will the Minister tell us whether the Government have examined the possibility of starting such a factory and if so what the capital required is for a small fertiliser factory and whether any private companies have come forward to start such a factory and if so, the percentage of capital that may be invested in it ? Even though it may not be the immediate intention of the Government to start such a factory, have the Government examined the various possibilities of starting these factories and if so, will the Hon. Minister be pleased to give all the details connected therewith ?

**மாண்புமிகு திரு. இரா, நெடுஞ்செழியன்:** *சிறிய அளவிலே உரத் தொழிற்சாலைகள் வைத்தால் வர்த்தக முறையிலே இலாபகரமாக இருக்காது என்ற கருத்து சொல்லப்படுகிறது. 75 இலட்சம், 80 இலட்சம் ரூபாய் செலவிலே சிறிய அளவிலே வைக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. திரு. நல்லபெருமாள் என்பவராலே 75, 80 இலட்சம் ரூபாய் அளவிலே வைக்கப்படும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால், வர்த்தகத் துறையிலே அதிக இலாபம் தராது என்ற வகையிலே, வைப்பதற்கில்லை என்று இப்போது கருதப்படுகிறது. அவைகளெல்லாம் ஆராயப்படுகிற நேரத்திலே எதிர் காலத்தில்தான் இதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆராயச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.*

இப்பொழுது 9 உரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒரு உரத் தொழிற்சாலைக்கான அடிப்படை வேலைகள் நடைபெற்று வருகின்றன. மற்ற 8 உரத் தொழிற்சாலைகளும் இப்பொழுது உற்பத்தி செய்யும் நிலையில் இருக்கின்றன.

THIRU. K. VINAYAKAM : Sir, whereas the object of this question is that there is a paucity of supply of fertilisers needed for our farmers in our State, whereas they are not easily and freely available and that the quantity that is available for distribution as per the method adopted by the Central Government is not commensurate with the quanity thar we need for our consumption, will the Government at least consider the possibility of starting afactory as a State concern in spite of the fact that it is not economic or will not be a viable unit in the interests of the farmers of this State, in the interests of the agriculturists in this State and in the interests of increasing the food production in the State ? Will the Government reconsider the whole problem, or will they press upon the Central Government to start one or more number of factories in this State to meet the growing need for fertilisers in our State ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழி யன்: நான் முதலிலே சொல்லிய படி 8 உரத் தொழிற்சாலைகள் உர உற்பத்தி செய்துகொண்டு வருகின்றன. தி மெட்ராஸ் பர்டிலைசர்ஸ் லிமிடட் தொழிற்சாலையில் ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. இது முடிவுறும்போது அமோனியா 243,000 டன்களும், யூரியா 210,000 டன்களும், காம்ப்லக்ஸ் பர்டிலைசர் 36 0,000 டன்களும் உற்பத்தி செய்யும். இதுபோன்று மற்றப் பொருள்களையும் உற்பத்தி செய்ய இயலுமா என்பது ஆராயப்பெற்று வருகின்றது. தேவையைப் பொருத்து எந்த அளவிற்கு விரிவாக்கப்பட வேண்டும் என்பது எதிர்காலத்தில் ஆராயப்படும்.

DR. H. V. HANDE : Apart from the information given about the Madras Fertiliser Factory, will the Hon. Minister tell us the amount of fertilisers, that is, the various categories of fertilisers that are produced in Madras State from the factories that are already installed and the quantity that is likely to come out as a result of the half-stage factories that is from the factories that are in an incomplete stage ? Will the Hon. Minister tell us the total quantity that is likely to be produced and what will be its percentage to the entire country's production ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த 8 தொழிற்சாலைகளில் 1964-ம் ஆண்டு உற்பத்திக் கணக்கு மட்டும் இருக்கிறது. அகில் இந்திய அளவிலே அங்கே எவ்வளவு என்ற கணக்கு இப்போது இல்லை. ஈ.ஐ.டி. பாரி லிமிடெட், ராணிப்பேட்டை 39,355 டன்; ஷா வாலஸ் அண்டு கம்பெனி, ஆவடி, சென்னை—சூபர் பாஸ்பேட் 63,941 டன்; ஈ.ஐ.டி. பாரி லிமிடெட், கடலூர்—மிக்சட் பர்டிலைசர்ஸ் 25,159 டன்; ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், எண்ணூர்—சூபர் பார்ஸ்பேட் 23,273 டன் ; ப்ரீமியர் பர்டிலைசர் லிமிடெட், கடலூர்—சூபர் பாஸ்பேட் 20,979 டன்; ஈ.ஐ.டி. பாரி லிமிடெட், எண்ணூர்—அமோனியம் பாஸ்பேட் 30,309 டன்; கோயம்பத்தூர் பயனீர் பர்டிலைசர் லிமிடெட், கோயம்பத்தூர்—சூபர் பாஸ்பேட்—அது இப்போது உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறது. நெய்வேலி லிக்னைட் கார்பொரேஷன் லிமிடெட்—யூரியா, அது இப்போது உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறது.





THIRU K. VINAYAKAM : Sir, what is the total quantity of all kinds of fertilisers that are produced in our State, whether they are all distributed to meet our needs first and then if there is any excess, whether it is taken away by the Central Government for distribution to other States ? In that case, may I know how much we are short as a result of their taking away some portion of the production ? What measures will the Government adopt to fill up that shortage ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒருபோக நிலங்களாக இருப்பவைகள் எல்லாம் இரண்டு போக நிலங்களாக ஆக்கப்பட்டு அமோக விளைச்சலுக்கு வழியாக இருக்கிற இந்த நல்ல நேரத்திலே ஆரம்பிக்க இருக்கிற சிறிய உரத் தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் நிறுவுவதன் மூலம் அங்கே இருக்கின்ற உழவர் பெருமக்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உழவர் பெருமக்களை ஊக்குவிக்க வேண்டுமென்றுதான் தேவையான உரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன. தேவையைப் பொருத்து அவற்றை விரிவாக்குவதற்கும், பெருக்குவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடக்கின்றன. விவசாயிகளுக்கு உரம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. அவர்களுக்கு கூட்டுறவு முறையில் கூட உரம் விநியோகிக்கப்படுகிறது, கடனும் கொடுக்கிறோம். ஆகையால், இப்படி அத்தியாவசியமான உரத் தொழிற்சாலையைக் கூட்டுறவு முறையில ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சிறிய உரத் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டதுண்டா ? இல்லையென்றால், இனியாவது வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, if people who have financial stability but living in areas outside our State wish to come here and start a fertiliser factory, will our Government give any encouragement ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்டவர்கள் யாராவது வருவார்களானால் அதற்கான ஆதரவு தரலாம்.

திரு. டி. தங்கப்பன் : இராமனுதபுரம் பகுதியில் எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லை என்பது அரசுக்குத் தெரிந்திருக்கும். இதுபோன்ற சாதாரண சிறு தொழிற்சாலைகளை அங்கு நிறுவுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

[1968 மார்ச் 23

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு பல்வேறு வாய்ப்புக் கூறுகளெல்லாம் கவனிக்கப்பட வேண்டும். இராமநாதபுரத்தில் ஒரு உரத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருந்து, உரத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நபர்களும் முன் வந்தால், அதற்கு ஆதரவு கொடுக்கும் சூழ்நிலை ஏற்படுமானால், அது பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** இரசாயன உரங்கள் போடுவதன் காரணமாக பூமியின் தரம் குறைந்து போய்விடுகிறது. அதற்காக இயற்கை உரங்களை அதிகப்படியாகத் தயாரிப்பதற்காக, அரசு எந்த எந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்வி உர உற்பத்தியைப்பற்றியது. ஆகையால், இயற்கை உரங்கள் எவ்வளவு கொடுக்க வேண்டும், எப்படித் தயாரிப்பது என்பதைக் குறித்த விவரங்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த உரத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள்கள் என்ன என்ன ? அந்த மூலப் பொருள்களெல்லாம் எந்த மாநிலத்திலிருந்து கிடைக்கின்றன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. ஆராய்ந்துதான் சொல்ல வேண்டும்.

**திரு. கே பி. எஸ். மணி :** இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் கையாளும் ஃபார்ம் ப்ளான் முறையை உர விநியோகத்தைப் பொறுத்த வரையில் மாநிலம் பூராவும் கையாண்டாலே நமக்கு இருக்கும் உரங்களை வைத்துக் கொண்டு சரிக்கட்டிக் கொள்ள முடியும். பரவலாக அதைப் பரப்புவதோடல்லாமல், மேற்கொண்டு தேவைப்படுவதைச் சரிக்கட்டிக் கொள்ளுவதற்காக க்ளிரிசீடியா போன்ற பசுந்தாள் வகைகளைக் கட்டாயமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒருவித "கம்பல்சரி" முறையை அனுஷ்டிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிலமைச்சர் என்ற முறையில, உர உற்பத்தி அளவுக்குத்தான் எனக்கு அதைப்பற்றி எடுத்துச் சொல்ல இயலும். அது எப்படி விநியோகிக்கப்படுகிறது, எப்படிப் பெருக்கலாம் எனபதை வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதுபற்றிய விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி போடலாம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** உரத் தொழிற்சாலை என்ற பெயரில் கலப்பு உரங்களைத் தயாரிப்பதற்கு ஆங்காங்கு பல இடங்களில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தக் கலப்பு உரங்களில் எந்த அளவில் காம்பொஸிஷன் இருக்க வேண்டுமோ அந்த அளவில் போடுவது இல்லை. அதனால் தரம் கெடுகிறது. ஆகவே, ஒவ்வொரு கலப்பு உரத்திற்கும் இன்ன இன்ன தரம் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து, அந்தத் தரத்தில் கலப்பு உரம் தயாரிக்கும் தொழிலதிபர்கள் அதை வைத்துக் கொள்ளுமாறு சர்க்கார் பார்த்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. அதைப்பற்றி குறைபாடு ஏதாவது இருக்குமானால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தத் தொழிற்சாலைக்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம்.

**திரு. எஸ். முருகையன் :** நமது மாநிலத்தில் உரத் தொழிற்சாலைகள் எங்கெங்கு வைக்க வேண்டும் என்று அரசு ஏதாவது ஆராய்ச்சி செய்ததா ? அப்படியிருந்தால், எந்த எந்த இடத்தில் வைப்பதாக அரசு முடிவு எடுத்திருக்கிறது ?



1968 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எங்கெங்கு இருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை என்று இப்பொழுதுதான் சொன்னேன். எண்ணூரில் ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. அதுதான் இப்போதுள்ள நிலைமை.

### ஆலம்பூண்டியில் தொழிற்பயிற்சிப் பள்ளி.

*298. **விஞ.—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செஞ்சி வட்டம், ஆலம்பூண்டியில் ஓர் தொழிற் பயிற்சி பள்ளி நிறுவப் போவதாக இருந்த திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) அது எப்பொழுது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** (அ) செஞ்சி வட்டம் ஆலம் பூண்டியில் ஓர் தொழிற் பயிற்சிப் பள்ளி நிறுவப் போவதாக திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** செஞ்சி வட்டம் மிகப் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அங்கே எந்தவித உரத் தொழிற்சாலையும் இல்லாத காரணததால், தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்றை இந்தப் புதிய சர்க்காராவது நிறுவ ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** செஞ்சி வட்டத்தில் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளி வைக்க வேண்டும் என்ற கருத்து, மன்றத்தில் முன்பு இருந்த உறுப்பினர்களாலும் இப்பொழுது இருக்கின்ற உறுப்பினர்களாலும் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், இப்பொழுது 31 இடங்களில் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் இருந்து வருகின்றன. கிட்டத்தட்ட பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு பயிற்சிகள் கொடுக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. 1968–69-ல் 5,000 இடங்கள் உருவாக்கலாம் என்று ஒர்க்கிங் க்ரூப் ஃபார் க்ராஃப்ட்ஸ்மென் ட்ரெயினிங் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதில் 1,000 இடங்களை சென்னைக்கு ஒதுக்கலாம் என்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதுபற்றி சாங்ஷனுக்கு இந்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. ஆகவே, இந்திய சர்க்கார் அதற்கான இடங்களை ஒதுக்கித் தருவார்களானால், அப்பொழுது, இருக்கின்ற பயிற்சிப் பள்ளியை விரிவுபடுத்த வேண்டுமா, வேறொரு பயிற்சிப் பள்ளி வைக்கலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய கட்டம் அந்த நேரத்தில்தான் வருகிறது. இந்திய அரசினுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள், நிதி வசதி குறைந்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டில் விரிவுபடுத்த வேண்டாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும் வற்புறுத்தி யிருக்கிறோம் அதைத் தரவேண்டும் என்று. அவர்களுடைய பதிலையொட்டித் தான் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, விஞ எண் 299 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் 298 எண்ணுள்ள விஞவுக்கே இன்னொரு துணை விஞ கேட்க விரும்புகிறார் என்று கருதுகிறேன். ஆனால், அவர்கள் மூல விஞவுக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த விடையையொட்டி, அதாவது "செஞ்சி வட்டம், ஆல பூண்டியில் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த முடியாது" என்பதையொட்டி, 38-வது விதிக்கிணங்க, துணை விஞவைக் கேட்க வேண்டும்.

**Dr. H. V. HANDE :** Arising out of the answer to the main question and also the supplementary question. . . .

MR. SPEAKER : You cannot ask a supplementary question in respect of an answer to a supplementary question. That is why I referred you to rule 38. You may put a supplementary question for the purpose of eliciting a matter of fact regarding which an answer has been given to the starred question.

DR. H. V. HANDE : Sir, has the Minister received any complaints from the employees and instructors in the industrial training institutes with regard to scale of pay and other things and, if so, what action was taken by the Government, and in view of the fact that the Central Government finance to the tune of 60 per cent, will the Government consider the question of opening an industrial training institute in Gingee taluk ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல விடைக்குத் தொடர்பு உள்ளதாக இல்லை. அமைச்சர் விரும்பினால் விடை அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை. அதுபற்றி விவரக் குறிப்பு எதும் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

THIRU K. VINAYAKAM : I raise a point of order. This will be in the interest of the whole House. The Hon. Speaker was kind enough to point out some rule upon which our supplementaries will have to be based. The Speaker gave the impression while interpreting the wording that we should ask a question which relates to the main question.

MR. SPEAKER : I did not say that.

THIRU K. VINAYAKAM : Our supplementaries will be based upon the answer given to the main question. The Speaker will see that we begin our supplementary questions " Arising out of the answer given by the Minister ". That is the usual practice in the Lok Sabha. We cannot put questions regarding the main question. But we can put questions regarding the answer given to the main question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினவுக்கு அளிக்கப்பட்ட விடைக்கு விளக்கம் கேட்கும் வகையில் துணை வினா இருக்க வேண்டும். வினாக்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால் கண்டிப்பாக இருக்கவேண்டியிருக்கிறது.

DR. H. V. HANDE : Just now I asked a main question about the starting of fertiliser factories which relates to the Minister for Industries. But the Hon. Speaker was pleased to allow a number of supplementaries regarding distribution of fertilisers which relates to the Minister for Agriculture. I request the Speaker to relax the rule so that we will be able to have satisfaction.

MR. SPEAKER : When time permits.

*Distribution of Nationalised Text Books*

*299. *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :



(*a*) whether it is a fact that the district distributor for the Nationalised Text Books in Thanjavur district has been changed for this year ; and

(*b*) if so, the reason therefor ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) புத்தகப் பகிர்வு திருப்தியாக இல்லாததால்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, அம் மாதிரி மாற்றும் போது அந்த விநியோகஸ்தருக்கு ஏதாவது "மெமோ ஆப் எக்ஸ்பிளனேஷன்" கொடுக்கப்பட்டதா ? அவர் தன்னுடைய நிலையை விளக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட விற்பனையாளர் ஆங்காங்கு விநியோகிக்கின்ற நேரத்தில், விற்பனையாளர்களிடமிருந்து சில குறைபாடுகள் இருப்பதாக முறையீடுகள் வந்ததன் காரணமாகத்தான் அவர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். 5 கழிவு தருவதற்குப் பதிலாக 2 கழிவுதான் கொடுத்தார் என்றும் உரிய காலத்தில் புத்தகங்களைத் தரவில்லை என்றும் அவர்களிடத்திலிருந்து முறையீடுகள் வந்தன. அந்த விற்பனையாளருக்கு தன்னுடைய நிலையை விளக்க வாய்ப்பளிக்கப்பட்டதா என்ற விவரக் குறிப்புகள் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

**திரு. நா. காசிராமன் :** அந்த விநியோகஸ்தர் கும்பகோணத்தில் இருப்பவர். என்னிடம் அவர் சொன்னதனால் நான் சொல்லப் பிரியப்படுகிறேன். "உங்கள்மீது இன்னின்ன குற்றங்கள் உள்ளன; தங்கள் விநியோகத்தில் இன்னின்ன புகார்கள் வந்துள்ளன ; இதை ஏன் வேறொருவருக்கு மாற்றக் கூடாது" என்று கேட்டு தன்னுடைய விளக்கத்தைப் பெறவில்லை என்ற ஒரு புகார் கொடுத்தார். அப்படி அம் மாதிரி அவருக்கு வாய்ப்பளித்திருக்கவில்லையென்றால் அமைச்சர் அவர்கள் தீர விசாரித்து அம்மாதிரி தவறு இருந்தால் அதற்குப் பரிகாரம் காணும் வகையில் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல புகார் இருக்குமானால் அதைப்பற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

*Transport of rice.*

*300. *Q.*—THIRU K. VINAYAKAM THIRU. V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether it is a fact that the Central Government have instructed the State Government not to permit transportation of the Madras Measures of rice from place to place for personal consumption inside the State ; and

(*b*) if so, the action taken by the State Government thereon ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) (இ) தற்போதைய அமைச்சரவை பதவியேற்குமுன் இருந்த அரசாங்கம் இம் மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஒருவர் அதிக அளவு 10 லிட்டர் நெல் அல்லது அரிசி மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதி வ ங்கியிருந்தது. தற்போதைய அமைச்சரவை பதவி ஏற்றபின் மாநிலத்திற்குள் பயன் கொள்வோரின் உண்மையான தேவைக்காக, இம் மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஒரு தடவையில் 17·8 லிட்டருக்கு மேற்படாத

(10 பட்டணம் படிக்குச் சமமான) அரிசியைக் கட்டுப்பாடின்றி எடுத்துச் செல்வதை அனுமதிப்பதென அரசாங்கம் முடிவு செய்தது. இந்த முடிவுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், சட்டபூர்வமான பங்கீட்டு முறை செயலில் உள்ள பகுதிகளில் இவ்வாறு எடுத்துச் செல்வதற்கு இது பொருந்தாது என்னும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்திய அரசினால் வழங்கப்படும் கோதுமை, சட்டபூர்வமான பங்கீட்டு முறை நிலவும் பகுதிகளில் கொடுக்கப்படுகிற அரிசிப் பங்கீட்டளவை நிறைவு செய்யும் வகையில் பங்கீட்டளவிற்கேற்ப பங்கிட்டுக் கொடுப்பதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, அரசாங்கம் இம் மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஒரு தடவையில் 17·8 லிட்டருக்கு மேற்படாத அரிசியைத் தாராளமாக எடுத்துச் செல்லலாமென்று அனுமதிக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** சார், அப்படி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு 10 படி அரிசி கொண்டு போவதை மத்திய சர்க்கார் வேண்டாமென்று தடை செய்ததா என்றுதான் நான் கேள்வி கேட்டேன். அதற்கு எனக்கு விடை கொடுக்கவில்லை. சென்னையில் இன்று நம்மைப் பார்க்க பலர் வருகிறார்கள். சென்னையிலே இருப்பவர்கள் வந்த விருந்தாளிக்கு சோறு போடாதாக கதையே இல்லை. (குறுக்கீடு) ஆதலால், மிஸ்டர் ஸ்பீக்கர் சார், வந்தவர்களுக்குப் போடுவதில்லையென்று சொன்னார்கள். (குறுக்கீடு). இங்கு வருபவர்களை நாம் ஓட்டலுக்குப்போய் சாப்பிட்டுவிட்டு, எங்கள் வீட்டில் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அது விருந்தாளிகளுக்கு நாம் காட்டுகிற தர்மம் அல்ல. ஆதலால் இந்த 10 படியை மத்திய சர்க்கார் கொண்டு செல்லக் கூடாது என்று சொன்னாலும், நம்முடைய சர்க்கார் இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே வற்புறுத்தி அந்த முறை நீடித்து இருக்கும்படி ஒரு உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் நான் சொன்னேன். மத்திய அரசு ஸ்டாச்சுடரி ரேஷனிங் ஏரியாக்களிலே இந்த மாதிரி 10 பட்டணம் படி கொண்டு வரக்கூடாது என்றும், வெளியிலே வேண்டுமானால் இதை வைத்துக்கொள்ளுங்கள் என்றும் அதற்கு மட்டும் நாங்கள் அனுமதி கொடுக்கிறோம் என்றும்தான் சொன்னார்கள். சென்னையிலே இது மாதிரி பிளாக் மார்க்கட்டிங் மூலம் அரிசியின் விலையும் உயரக் கூடாது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன யோசனையை ஏற்று, மத்திய அரசினுடைய நிபந்தனையை ஏற்றுக்கொள்ளாமல் 10 பட்டணம் படி அரிசி கொண்டு செல்வதை நாம் நடைமுறையிலே அனுமதித்து வருகிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த 10 படி அரிசி வாரத்திற்கு ஒரு முறை 10 படி அரிசியா அல்லது மாதத்திற்கு ஒரு முறை 10 படி அரிசியா அல்லது தினந்தோறும் கொண்டுபோகலாம் என்பதா ? இதனால் பலபேர் பாதிக்கப்படுகிறார்கள். ஆதலால் 10 படி அரிசி என்று மொட்டையாகச் சொன்னால் போதாது. எத்தனை நாளைக்கு ஒரு முறை கொண்டு போகலாம் என்ற ஒரு உத்தரவை செக் போஸ்டுகளுக்கோ அல்லது மற்ற அதிகாரிகளுக்கோ திட்டவட்டமாக அறிவிப்பதன் மூலம் கௌரவ மானவர்கள் கொண்டுபோவதற்கு வழி செய்யுமா என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கௌரவமானவர்கள் அவர்களுடைய உபயோகத்திற்குக் கொண்டுவரலாம். ஆனால் எனக்கு இருக்கிற பயம் இதைத் தவறான வழிகளிலே பயன்படுத்துவோரும் பயன்படுத்திவிடக் கூடாது என்பதுதான்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்படி ஒரு பர்மிட்டை வைத்துக்கொண்டு அடிக்கடி தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு அதிகமாக அரிசியைக் கொண்டுபோவதற்கும் அதை கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்வதற்கும் அந்த பர்மிட் பயன்படுகிறது என்பதும் பயன்படுத்துகிறார்கள் என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் அதைத் தடுக்க தக்க நடவடிக்கை சர்க்கார் எடுக்க முன்வருமா ?



***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது விதி முறைகள் படி தான் நடக்கிறது. சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்கள் பர்மிட் அடிப்படையிலே அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய ரேஷன் கார்டுகளை சரண்டர் செய்துவிட்டுத்தான் எடுத்துச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை பிளாக் மார்க்கெட்காரர்கள் பயன்படுத்தினார்கள் என்பதற்கான புகார்கள் வரவில்லை. அப்படி அதைக் கறுப்பு மார்க்கெட்காரர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால் அதை நாம் கவனிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் கொள்முதலுக்குக் கொடுத்தது போக, தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக வைத்திருக்கின்ற நெல்லை ஒரு மாவட்டத்திலிருந்து ஒரு மைலுக்கு அடுத்துள்ள மாவட்டத்திற்குக் கொண்டு வருகின்ற நேரத்தில் அவர்களைப் பிடிப்பதுடன் மாத்திரமல்லாமல், அவர்கள் மீது வழக்கும் தொடர்ந்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இம்மாதிரி நிலைமைகளை மாற்றி சிறு விவசாயிகள் 10 மூட்டையிலிருந்து 15 மூட்டை அளவுக்கு அவர்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு செல்ல, ஒரு மைலுக்கு உட்பட்டுக் கொண்டு செல்ல அரசு வழி செய்யுமா ? தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு மைலுக்கு அடுத்து கரம்பக்குடி என்ற ஊர் இருக்கிறது........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினா கரம்பக்குடியை ஒட்டியதல்ல.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சிறு விவசாயிகளுக்கு ஒரு சலுகை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளாக அவர்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு வழி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு மாவட்டத்திற்குள், தாலுகாவிற்குள் நாம் போட்டிருக்கிற சில தடை உத்தரவுகள், கட்டுப்பாடுகள் கொள்முதல் காரணமாகத்தான் இருக்கின்றன. இந்த உத்தரவுகள் இயங்குகிறபோது நெல் நடமாட்ட கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுகின்றன. சில பகுதிகளை வளையமாக ஆக்கிவிடுகிறோம். ப்ரக்யூர்மெண்ட் முடிந்தவுடன் அதை எடுத்துவிடுகிறோம். அதே மாதிரி ஒரு மாவட்டம் முழுமையும் ஒரு வளையமாக ஆக்கப்படுகிறது. விதிமுறைகளுக்குட்பட்ட வரம்புமுறைகளுக்குட் பட்டமுறைகளை அனுசரித்துத்தான் செய்யவேண்டி இருக்கிறது. நமக்குள்ள பொதுப் பொறுப்பை அனுசரித்து இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மாவட்டத்திற்குள், தாலுகாவிற்குள் இந்த உணவுப் பொருள்களைக் குறிப்பாக, நெல், அரிசி கொண்டு போவதற்குத் தடை விதித்திருப்பதினால் தான் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது நெல் விளையக்கூடிய இடம். அங்கே படி அரிசி ரூ. 1–50–க்குக் கிடைக்கிறது. அங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள சின்னாளப்பட்டியில் படி அரிசி ரூ. 2–50–க்கு கிடைக்கிறது. இந்த ஏற்றத்திற்குக் காரணம் என்ன ? இந்தத் தடை இருப்பதுதானே ? ஆகவே, இந்தத் தடை உத்தரவை எடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தடை இருப்பதனால் என்று கனம் உறுப்பினர் சொல்வதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அவர்கள் சொல்கின்ற மாதிரி அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் போடாவிட்டால் நிலைமை சரியாக இருக்காது. இந்த சின்னாளப்பட்டியில் எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்படுகிறது. அங்குள்ள 20,000 பேர்களுக்குக் குடும்பக் கார்டு கொடுக்கப்படுகிறது. படி அரிசி ரூ. $1\frac{1}{4}$–க்கு அங்கே கிடைக்கிறது. இந்தத் தடை உத்தரவை எடுத்துவிட்டால் ரூ. 4–க்கு விற்கக்கூடிய ஆபத்து கூட ஏற்படலாம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** நடமாட்டத்துக்குத் தடை
மு' ப. 9-30. விதிப்பதால் விலையில் ஒரு இடத்திற்கும் மற்ருெரு இடத்திற்கும் வித்தியாசம் ஏற்படலாம். ஆனுல், அதை உத்தேசித்து தடை இல்லாமல் செய்துவிட்டால் பல பகுதிகளில் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் அதிகம் கொடுத்து வாங்கக்கூடிய சக்தியுள்ள பகுதிகளுக்கு எல்லாம் உணவுப் பொருள்கள் போய்விடும். அதைத் தடுப்பதற்காகத்தான் இந்தத் தடை என்ற முறை இருக்கிறது.

**Dr. H. V. HANDE:** Sir, arising out of the answers given by the Food Minister as well as the Chief Minister and also arising out of the answer to the main question, has this Ministry discussed the matter in detail with the Central Government ? The State is divided into statutory ration areas, informal ration areas and non-ration areas. As has been pointed out by Mr. Mani, how can rice flow to non-ration areas if the Government do not permit transport from one non-ration area to another non-ration area ? Let us accept the explanation given by the Chief Minister that rice will flow only to areas where there is a lot of money power. After the Government procure the required stock, there will be a balance, and there is need for rice in non-ration areas. Unless these restrictions are relaxed at least to a certain extent, how can rice go from one non-ration area to another non-ration area ? Have this Government stressed this fact before the Central Government ? After all, procurement is over and there is no need for further procurement, and therefore there may be free flow of rice.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு பல முறை விளக்கப்பட்டிருக்கிறது. நம் மாநிலம் உயர்ந்த பட்சம் பற்ருக்குறை—ஹெவி டெபிஃஸிட் பகுதி, மார்ஜினல் டெஃபிஸிட் பகுதி, சர்ப்ளஸ் பகுதி என்பதாக மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு நேரத்தில் ப்ரொக்யூர்மெண்ட் நடைபெற்று அது முடிந்த பிறகு எடுத்துவிடப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில், குடியாத்தம் போன்ற பகுதிகளில் தொழிலாளர்கள் அதிகம் இருப்பதால், எல்லைப்புறத்தில் இருப்பதால் விலைகள் ஏறுகின்றன. தடை விதிக்காமல் இருந்தால் ப்ரொக்யூர்மெண்ட் ஆகாமல் இருப்பது மட்டுமல்ல, அங்கிருந்து வெளியேபோகும் வாய்ப்பும் இருக்கிறது. இதெல்லாம் வருஷம் முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கொள்முதல், இலக்கை எட்டியவுடன் தளர்த்தப்படுகிறது. இதையெல்லாம் உணர்ந்து அரசாங்கம் அவ்வப்போது நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், ஸ்டேச்சுட்டரி ரேஷன் உள்ள பகுதிகளில் ஒரு வாரத்திற்குக் கொடுக்கிற ரேஷன் இரண்டு நாளைக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தடை நிலை இருக்கும்போது மற்ற ஐந்து நாட்களுக்கு அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான அரிசியை வாங்க இந்த அரசு என்ன வழிவகை செய்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவ்வாறு இந்த அரசு கருதவில்லை. கோதுமைமட்டும் ஒரு ஏற்று கூடுதலாகக் கொடுப்பார் களானுல் நிறைவு செய்கிற வகையில் சட்டபூர்வமான ரேஷன் முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 10 படி நெல் அல்லது 10 படி அரிசியை எடுத்துக்கொண்டு போகலாம் என்று சொன்னுர்கள். 20 படி நெல்லைக் குத்தினுல்தான் 10 படி அரிசி கிடைக்கும். ஆகவே நெல்லாக இருந்தால் 20 படியும், அரிசியாக இருந்தால் 10 படியும் என்று உத்தரவைத் திருத்த முடியுமா ?





**மாணபுமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பத்து லிட்டர் நெல் என்பது முதலில் இருந்த அரசாங்கம் போட்டது. நாம் 10 பட்டணம் படி என்று போட்டோம். இப்போது நடைமுறையில் 10 பட்டணம் படி நெல் அல்லது 10 பட்டணம் படி அரிசி என்றுதான் இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, விருந்துக்கு வருகிறவர்கள் 10 லிட்டர் அரிசி கொண்டுவருவது தமிழர்களுடைய உபசாரப் பண்பாட்டிற்கு விரோதம் அல்லவா ? இதை எதிர்பார்த்துத்தான் விருந்தினர்களை உபசரிப்பது என்பது பண்பாடாகுமா ?

(விடை இல்லை.)

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், குடும்பக்கார்டு இருக்கக்கூடிய இடங்களில் கொடுக்கக்கூடிய அரிசி போதுமானதாக இல்லை. சாதாரணமாக நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ளவர்களும் சாத்தான்குளம் சப்தாலுக்காவில் உள்ளவர்களும் சில சமயங்களில் ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவிலிருந்து கொஞ்சம் அரிசியை எடுத்துக்கொண்டு வரவேண்டிய நிலை இருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகள் கீழ்மட்டத்தில் இருக்கிறவர்கள் குடும்பக் கார்டுக்கும் ஸ்டாச்சூடரி ரேஷனுக்கும் உண்டான வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளாத அளவில் சில சமயங்களில் இந்த அரிசியைக்கொண்டுவருவதைத் தடை செய்து அதனுல் பொதுமக்களுக்குப் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. எனவே இது போன்ற ஒரு விளக்கம் அல்லது சுற்றறிக்கையாவது அரசாங்கம் அனுப்ப ஆவன செய்யுமா ?

**மாணபுமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத் தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படித் தடுப்பதற்கான புகார்கள் வந்தால் கவனிக்கலாம். இந்த அறிவிப்பையே இந்த அதிகாரிகள் எடுத்துக்கொள்ளலாம். குடும்பக் கார்டு முறை குறிப்பிட்ட அளவுக்குத்தான கொடுக்கிறோம். முழுத் தேவையையும் பூர்த்தி செய்தவர்களாக மாட்டோம். இருந்தாலும் ரொம்ப விலை ஏறக் கூடாது என்பதற்காக ஒரு நியாயமான விலையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. அந்த நிலையில் அவர்கள் நெருக்கடி செய்வார்களானுல் அது சரியானதல்ல.

(திரு கே. விநயகம் கையை உயர்த்தினுர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுவரை துணை வினு கேட்காதவர்களுக்கு இடம் கொடுங்களேன.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, 10 படி அரிசிக்குமேல் கொண்டு வரக்கூடாது என்று தடை இருக்கிறது. ஆனுல் 15 படி அளவிலும் 20 படி அளவிலும் பலகாரங்களும் மற்ற சமையல் வகைகளும் செய்து எடுத்துக்கொண்டு வந்தால் அதற்கு விதிவிலக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவரவர்களே, அரிசிக் குறுணை போனறவைகள் ப்ரொகயூர் செய்யப்படுகின்றனா ? இல்லையென்ருல் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னெரு மாவட்டத்திற்கு குறுணை கொண்டு செல்ல அனுமதிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ப்ரோக்கன் ரைஸ் என்பது நம் மாநிலத்தில் அதாவது சிதறுகிற நொய் என்ற குறுணை அனுமதிக்கப்படுகிறதா என்று கேட்கிருர்கள். மொத்தக் கொள்முதலிலே சில இருப்புகள் 500 டன், 300 டன் என்று சில வேளை வரலாம். அந்தந்த இருப்பை அனுசரித்து பஞ்சப் பிரதேசங்களாக உள்ள இடங்களுக்கு, பற்ருக்குறை வருகிற நேரத்தில் வுிவில் சப்ளைஸ் கமிஷனரால் முடிவு எடுக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

[1968 மார்ச் 23

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கட்டுப்பாடு வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பக்கம் இருந்தாலும், பஞ்சப் பிரதேசங்களாகிய எங்கள் பகுதிகளில் உள்ள மக்கள் இதை வரவேற்கிருர்கள். இதன் மூலம் பஞ்சப் பிரதேச பகுதிகளில் உள்ள மக்களின் கஷ்டத்தைக் குறைத்திருக்கிருர்கள். ஆகவே, அதைத் தொடர்ந்து செயல்படுத்த அரசுக்கு உறுதியான எண்ணம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி உறுதியான எண்ணம் இருப்பதால்தான் $1\frac{1}{2}$ கோடி மக்களுக்கும்......கேரள மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் இப்போது ரேஷன் முறை இல்லாத அளவில், நம் மாநிலத்தில் $1\frac{1}{2}$ கோடி மக்களுக்கு நல்ல அளவில் விலையைக் கட்டுப்படுத்துகின்ற அளவில் இந்த உணவுப் பங்கீட்டு முறையை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

**திரு. தா. விஜயராஜ் :** என்னுடைய தொகுதியிலும், குறிப்பாக திருவண்ணுமலை நகரத்தைச் சுற்றி செக் போஸ்டுகள் இருக்கின்றன. ஒரு படி அரிசி கூட நகரத்திற்குள் வர முடியாத நிலைமை இருக்கிறது. அந்த நகரத்தில் சர்க்காரால் வினியோகம் செய்யப்படாத நிலைமையும் இருக்கிறது. ஆகவே, அந்த நகரத்தில் தாலுகா அளவிலாவது அரிசி நடமாட்டம் இருக்க அனுமதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனால் வெளியிலே ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு என்று விற்கிற விலையை விட அங்கு பல இடங்களில் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. 90, 95 காசுக்கு திருவண்ணுமலை வட்டத்தில் பல நேரங்களில் அரிசி கிடைக்கிறது.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** நிலத்தில் அறுவடை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் கூலி நெல்லை கிராமங்களிலிருந்து நகரத்திற்குள் வந்து தங்கள் கிராமங்களுக்குக் கொண்டு சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அதற்கு பர்மிட் வாங்கிச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் தடுக்க ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கூலி விவசாயிகளுக்கு இதில் இடைஞ்சல்கள் ஏற்படாத வகையில் அந்தந்த தாலுகா சிவில் சப்ளை ஆஃபீஸர்கள் தாசில்தார் இவர்கள் அனுமதி பேரில் எடுத்துச் செல்வதற்காக எல்லா விதமான முறைகளும் இருக்கின்றன.

**திரு. இ. எம். சுப்பிரமணியம் :** மத்திய சர்க்கார் சர்க்கரை உற்பத்தி செய்யும் அளவில் 60—40 என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். அதே போல நம் அரசாங்கமும் இந்த உணவு தானிய உற்பத்தியில் ஒரு அறிக்கை வெளியிட்டு இவ்வளவுதான் கொள்முதல் செய்ய வேண்டும், மீதியை வினியோகிக்கத் தடையில்லை என்று செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த மாதிரியான 60—40 கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, அதன் எதிர் மறை விளைவுகளைத் தடுக்க இந்த அரசு முயற்சி செய்கிறது. அது நல்ல கொள்கை என்று ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, மத்திய அரசு ஸ்டாச்சூட்டரி ரேஷனிங் உள்ள ஏரியாக்களில் 10 படி அரிசி கொண்டு வரக் கூடாது என்று தடை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது தமிழக அரசை. அதற்கு இந்தச் சட்டத்தை அமுல்படுத்த தமிழக அரசு ஒப்புக்கொண்டால் மத்திய அரசு தேவையான கோதுமை கொடுப்பதற்கு முன்வந்தாக வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதா ?



1968 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை அமுல்படுத்தினாலும், அமுல்படுத்தா விட்டாலும் கோதுமையைக் கேட்டு நாம் வலியுறுத்திக் கொண்டிருப்போம். இருந்தாலும், அவர்கள் கோதுமை கொடுக்காதது, 10 படி அரிசியை உள்ளே விட வேண்டும் என்பதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

**திரு அ. ஆறுமுகம் :** கிராமப் பகுதிகளில் குடும்பக் கார்டுகள் இருந்தும், சந்தையில் வியாபாரிகள் உள்ளே வந்து வாங்க முடியாத அளவுக்கு வியாபாரிகளைத் தடுத்து விடுகிருர்கள், கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், ஏழை நடத்தர மக்கள் எங்கு உணவை வாங்க முடியும் என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நெல் விலையும், அரிசி விலையும் கடந்த ஆண்டில் இருந்ததற்கும், இப்பொழுது இருப்பதற்கும் நேரிடையாக இறங்கு முகமாக இருக்கிறது என்பதனாலே, இதனால் விலைவாசி வீழ்ச்சி பெறும் அளவிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றமும், தமிழகமும் மிகத் தெளிவாக அறியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஏற்கனவே இரண்டு துணை வினக்கள் கேட்டாகிவிட்டது.

**திரு, வி. கே. கோதண்டராமன் :** தயவு செய்து துணைக் கேள்விகளை அதிகப்படியாகக் கேட்கக் கூடியவர்களை அனுமதித்தால் ரொம்பவும் உதவியாக இருக்கும். அம்மாதிரி முறையைக் கையாள வேண்டும். அருள்கூர்ந்து உதவி செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். முன்பு ஒரு துணைக் கேள்விதான் கேட்டேன். இரண்டாவது இது.

பத்து படி அரிசியைக் கொண்டுபோவது ஒரு பக்கம் இருந்தாலும், நிலம் படைத்தவர்கள் தாலுகா விட்டு தாலுகா கொண்டுபோகக் கூடாது என்ற கட்டுப்பாடு, மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்குக் கொண்டு போகக்கூடாது என்ற கட்டுப்பாடு அந்த அளவுக்கு இருக்கிறதே, நிலம் படைத்தவர்கள் கூட அப்படி அனுமதி வாங்கிக்கொண்டு போக முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், கலியாணம் பண்ணியும் பட்டினி, பண்ணுமலும் பட்டினி (குறுக்கீடு) அதுதான் பிரும்மசாரி, அதன் பொருள் அதுதான்—நிலம் உடையவர்கள்கூட அரிசி, நெல்லை கொண்டு போக முடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே, உடனுக்குடன் கொண்டு போவதற்கு அனுமதி வழங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு, கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய நிலைமையிலே நடந்ததை வைத்துக்கொண்டு இப்பொழுது சொல்கிருர்கள். இப்பொழுது இந்த முறைகளெல்லாம் மிகவும் தளர்த்தப்பட்டு, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், மிகத் தாராளமாக டெப்டி கமிஷனர் அவர்கள் அனுமதி வழங்கிக்கொண்டு வருகிருர்கள். அம்மாதிரியாக ஒருவருக்கு நிலம் இருக்கிறது, அவருக்கு தேவை இருக்கிறது என்று சொல்லி கார்டைக் கொடுத்தால், அவர் கொண்டுவருவதை அனுமதிக்கும் நிலைமை மிகவும் தளர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் அப்படித்தான். ஆனால், அதற்காக, வேறு நோக்கத்திற்காக நிலச் சொந்தக்காரர், நிலம் வைத்திருப்பவர்கள் செய்கிற காரியத்தைப் பொது நன்மையை உத்தேசித்து அனுமதிப்பதற்கு இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, in our State excluding the areas where there is statutory rationing and also areas where there is informal rationing, there are large areas where the Government have not taken up responsibility of either distributing rice when it is necessary or controlling the price at a certain level. So, what steps the Government have taken to meet the needs of such areas ?

[1968 மார்ச் 23

THE HON. THIRU C. N. ANNADURAI : The Government have already taken necessary steps to see that highly deficit areas do come either the statutory rationing or informal rationing area.

### சங்கு எடுக்கும் தொழிலாளர்கள்

* 301 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் கடலில் சங்கு எடுக்கும் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ)&(இ) இதனை அரசாங்கம் ஆய்வு செய்து, 1967–68–ம் ஆண்டின் சங்குப் பருவம் முதல் முழு அளவுடைய ஒரு சங்கின் கிரய விலை 47 காசிலிருந்து 60 காசாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

THIRU T. MARTIN : Sir, the Fisheries Department classifies chanks under three categories, viz., full-sixed, undersized and worm-defective. The diver who got worm-defective chank catch is paid only a nominal remuneration. So, may I request the Hon. Minister to enhance the nominal remuneration that is being paid to diver for worm-defective chank ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது முழு சைஸ் பற்றித்தான் அவர்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். 47 பைசாவாக இருந்ததை 50 பைசாவாக உயர்த்த வேண்டும் என்று 1964–ல் டைரக்டர் அவர்கள் சிபார்சு செய்தும் கூட, அப்பொழுதிருந்த அரசு அதை உயர்த்தாமல் விட்டுவிட்டார்கள். இன்று விலைவாசி உயர்வு காரணமாக, ஃபுல் சைஸ் சங்கு 47 காசாக இருந்ததை 60 காசாக உயர்த்தித் தந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல், மற்ற இரண்டு சைஸ்களுக்கும் என்ன விலை கொடுப்பது என்பது குறித்து அவர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் பரிசீலனை செய்யலாம்.

### தென்னார்க்காடு மாவட்ட அரிசனங்களுக்கு மனைகள்

*302 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு 1967–68–ல் மனைகள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு, தாலுக்கா வாரியாக ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள், பாதைகள், இடுகாட்டிற்கு நடைபாதை, இடுகாடு ஆகியவற்றிற்காக வகை செய்வதற்கென தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1967–68 வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் ரூ. 7,88,500 ஒதுக்கப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தில் உள்ள எட்டு வட்டங்களுக்கும் அத் தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வகையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் ரூ. 98,563 கிடைத்திருக்கிறது.

திரு ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, அரிஜன மக்களுக்கு மனைகள் வழங்குவதிலே, அரசாங்கம் புறம்போக்கு இல்லாத இடங்களில் சொந்த பட்டாதாரர்கள் மனைகளுக்கு இடம் கொடுக்கிறோம் என்று ஒப்புக்கொண்டிருந்தும், அந்த இடங்களை வாங்கித் தராமல் சில மாவட்டங்களில் ஓரிரு ஆண்டுகள் தாமதப்படுத்தப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ? அதை விரைவிலே வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?



1968 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டாதாரர்கள் அரிசன மக்களுக்கு நிலம் தருகிறேன் என்று ஒப்புக்கொண்டு முன் வந்திருப்பதாக தகவல் இதுவரையிலும் இருக்கவில்லை. அரிசனங்களுக்குக் கொடுப்பதற்கு பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்தால், பட்டாதாரர்கள் வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடுத்து, இன்றைக்கு ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், யாராவது கொடுக்க முன்வந்தும், அதை எடுக்கவில்லை என்ற குறை இருக்குமானால், அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், நடவடிக்கை எடுக்கலாம்.

### தொழிலாளர் அரசு காப்புறுதித்திட்டம்

*303 வினா—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. நா. மருதாசலம் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊழியர் அரசாங்க இன்சூரென்ஸ் திட்டத்தின் (Employee State Insurance Scheme) கீழ் வந்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கும் வைத்திய வசதி அளிக்கும் திட்டம் ராஜ்யம் பூராவும் உள்ளதா ?

(இ) ஆமெனில் அவைகள் எந்தெந்தப் பகுதிகளில் உள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிக்கும் ஏற்பாடு இம்மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படவில்லை.

(இ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிப்பதற்காக மேற்படித் திட்டம் கீழ்க்காணும் இடங்களுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. சேலம்.
2. திருச்சிராப்பள்ளி.
3. காவேரி நகர்.
4. திண்டுக்கல்.
5. திருப்பூர்.
6. உடுமலைப்பேட்டை.
7. சிவகாசி.
8. இராஜபாளையம்.
9. விருதுநகர்.
10. திருநெல்வேலி.
11. செங்கோட்டை.
12. புதுக்கோட்டை.
13. நாகப்பட்டினம்.
14. கும்பகோணம்.
15. மேட்டுப்பாளையம்.
16. ஈரோடு.
17. பொள்ளாச்சி.
18. குடியாத்தம்.
19. வாணியம்பாடி.
20. வேலூர்.
21. நாகர்கோவில்.
22. ராணிப்பேட்டை.
23. டால்மியாபுரம்.
24. மேட்டூர் அணை.
25. சென்னை மாநகரமும் அதன் சுற்றுப்புறமும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக எல்லா ஊழியர்களுடைய குடும்பத்திற்கும் அது போன்ற மருத்துவ சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எனக்குப் புரியவில்லை. தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கு எல்லோருக்கும் உண்டு. இந்தத் திட்டம் எங்கெங்கே விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது கேள்வி. நான் குறிப்பிட்ட இடங்களில் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு எங்கெங்கே விரிவுபடுத்த வேண்டுமோ ஆங்காங்குள்ள மருத்துவ வசதிகளுக்கு ஏற்றவாறு அரசு முடிவு செய்து விரிவுபடுத்தும்.

**திரு. என். மருதாசலம்:** சார், கோயம்புத்தூரில் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் வரக்கூடிய தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் வைத்திய வசதி செய்து கொடுக்க உத்தேசம் உண்டா? அப்படி உத்தேசம் இருந்தால், தக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கோயம்புத்தூரில் விரைவில் இந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கான இந்த இன்ஷூரன்ஸ் திட்டம் நல்ல முறையிலே இயங்க ஆஸ்பத்திரிகள் கட்டப்படுகின்றன. ஆனால், மதுரையில், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கட்டப்பட்ட ஆஸ்பத்திரி உபயோகத்துக்கு வராமல் அது இன்ஃபெக்ஷஸ் டிஸீஸஸ் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் கட்டப்பட்டு இருப்பதால், அந்த இன்ஃபெக்ஷஸ் டிஸீஸஸ் ஆஸ்பத்திரியை அப்புறப்படுத்தாமல் இருப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரி உபயோகத்திற்குக் கொண்டுவரப்படாமல் இருக்கிறது. இந்தக் குறையை விரைவில் நீக்கி, அந்த ஆஸ்பத்திரியை தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி, உடனடியாக உபயோகத்திற்குக் கொண்டுவர அரசு தக்க முறையில் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மருத்துவ வசதியை அதிகப்படுத்த அதிகப்படுத்த குடும்பங்களுக்கும் விரைவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டவுடன், 143 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 178 லட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம். மருத்துவ விடுதி கட்டக்கூடிய அளவில், கிட்டத்தட்ட 292 லட்ச ரூபாய்க்குக் கட்ட முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது 213 லட்ச ரூபாய்க்குத் திட்டம் நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 677 லட்ச ரூபாய்க்கு திட்டம் தயாராகிக் கொண்டு இருக்கிறது.

மதுரை சம்பந்தப்பட்ட வரையில், ஏற்கனவே ஒரு சிறிய தவறு நடந்திருக்கிறது. ஐ.டி. ஆஸ்பிடலை வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றி ஒரு முடிவு எடுக்காமலேயே, அதன் பக்கத்திலே காலி இடம் இருந்தது என்பதால், அங்கே இந்த இ.எஸ்.ஐ.ஆஸ்பத்திரியைக் கட்டி, அதற்குப் பின்னால், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியையும் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியையும் இணைத்துச் செயல்படுவது என்றும் செய்தார்கள். அதற்குப் பின்னால், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியை 12 மைலுக்கு அப்பால் மாற்றுவது என்றும், முன்னால் இருந்த அரசு முடிவு செய்தது. அதை நிறைவேற்றும்போது, அங்கே உள்ள மக்களிடத்திலிருந்து எதிர்ப்பு வந்ததால், மேலே ஒன்றும் செய்யாமல் போய்விட்டார்கள். இப்பொழுது இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்காரிலிருந்து நாங்கள் இதற்குப் பணம் கொடுத்தோமே, கட்டாயம் அந்த ஹாஸ்பிடலை உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதைப் பற்றி, மதுரை மாநகரில் உள்ள மக்களை அழைத்து, முன்னால் தவறு நடந்துவிட்டது, ஆனால் அந்தத் திட்டத்தை வீணாக்கக் கூடாது, இடைக்கால ஏற்பாடாக—புதிதாக ஐ.டி ஹாஸ்பிடலுக்கு ஒரு மருத்துவ விடுதி





அமைக்கும் வரை—இதை மாற்ற ஒத்துக்கொள்ளுங்கள், என்று அந்த நகர மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி அந்த மக்கள் ஐ.டி. ஹாஸ்பிடலுக்குப் போக இரண்டு வான்களை அரசாங்கம் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லி சமாதானப் படுத்தியிருக்கிறோம். விரைவில் அந்த முயற்சி வெற்றி பெறும் என்றும், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியை மாற்றி, இ.எஸ்.ஐ. திட்டம் துவங்கப்படும் என்றும் அரசாங்கம் நினைத்திருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** சார், இந்தத் திட்டம் 500 பேர்களுக்குக் குறைவாக இருந்தால் அமுல்படுத்துவதில்லை. ஒரு 5 பேர்கள் குறைவாக இருந்தாலும் திட்டத்தை இப்பொழுது அமுல்படுத்துவது இல்லை. ஆகவே குறைந்த எண்ணிக்கை உள்ள இடங்களிலும் அமுலாக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** இந்தத் திட்டம் எந்த எந்த இடங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. 1,500-க்கு மேல் இருக்கும் இடங்களை முதன் முதலாக எடுக்கிறோம். கொஞ்சம் கொஞ்சம் வசதிகள் அதிகமாக ஏற்படும்போது எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்துவோம்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கோவைப் பகுதிக்கு விரைவில் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். உத்தேசமாக எவ்வளவு நாட்களில் விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க முடியுமா? அதோடு, கோவையில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் கட்டுகிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களும் மருத்துவ வசதி பெறும் என்கிற ஏற்பாட்டைச் செய்யமுடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மருத்துவத் துறை அமைச்சர் ஆர்வம் காட்டி, உடனடியாக அந்த நகரத்திற்கு விரிவுபடுத்த, இடைக்கால ஏற்பாடாக ஏதாவது கட்டடம் கிடைக்குமா என்றும் முயற்சிக்கிறார்கள். இப்பொழுது கட்டப்படும் கட்டடத்தை நானே பார்த்தேன். ஒரு பகுதி முடிவு பெற வேண்டும். அதிலே லாண்ட் அக்விஸிஷன் தகராறு இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி உடனடியாக முடிவு எடுத்தால் விரைவில் திட்டம் அமுலுக்கு வரும்.

**திரு. எஸ். அக்னிராஜு:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை கட்டி, ஆரம்பிக்க நாளாகின்றது. ஆகவே, இடைக்கால ஏற்பாடாக, "மொபைல் வான்" களைத் தொழிலாளர்களுடைய இல்லங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதே மொபைல் வான்கள் அனுப்புவது என்று திட்டத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 73 மொபைல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. குடும்ப திட்டம் விரிவு ஆகும்போது, மருத்துவ விடுதி நல்ல முறையில் அமையும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், தொழிலாளர்களிலே ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் பெரும்பாலும் ஆண் டாக்டர்களை மாத்திரம் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் ஆண்டாக்டர்களும், பெண் டாக்டர்களும் கலந்து நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்கெங்கு பெண் மருத்துவர் தேவையோ, அங்கெல்லாம் அப்படி நியமிக்கப்படும்.

### மேலூர், நத்தம் சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

*304 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மேலூர், நத்தம் நகரங்களில் சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஊர்களும் பேரூராட்சி மன்றங்களாக இயங்குகின்றன. ஞாயிறு, திங்கள் இரண்டு நாட்களிலும் பொதுச் சந்தை கூடும் நகரங்களாகவும், மக்கள் தொகை அதிகமாகவும் இருக்கிறதால், வருகிற ஆண்டிலாவது இதைப் பரிசீலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் அங்கத்தினர் சொல்வது உண்மை தான். நிதி நிலையை அனுசரித்துச் செய்யவேண்டியது அது.

### மாட்டுக்கொட்டகைகள் கட்ட கடன்.

*305 வினா :—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-67-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்திற்கென "மாட்டுக் கொட்டகை கட்டுவதற்கான கடன்" வழங்கும் திட்டத்தின் கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(இ) ஒதுக்கப்பட்ட முழுத் தொகையும் உபயோகப்படுத்தப்பட்டதா ?

(உ) 1967-68-ல் ராஜ்யம் முழுவதற்கும் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

(அ) ரூ. 4,52,000.

(இ) ஆம்.

(உ) 1967-68-ம் ஆண்டுக்கான கணக்குத் தலைப்பின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தனியாக நிதி ஒதுக்கம் எதுவும் செய்யப்படவில்லை. நில மேம்பாட்டுக்கான கடன்கள், உழவர்களுக்கான கடன்கள் சட்டங்களின் கீழ் அவரவர்களின் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்சொன்ன காரியத்திற்காகச் செலவுசெய்கிறார்கள் என்றாலும், மேற்சொன்ன காரியத்திற்காக 1967-68-ம் ஆண்டுக்கான நில மேம்பாட்டுக்கான கடன்கள் உழவர்களுக்கான கடன்கள் சட்டங்களின் கீழ் அவரவர்களின் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையே ரூ. 4,45,000, ரூ. 5,000, ரூ. 2,500 வழங்கி உள்ளதாக அறிவித்துள்ளனர்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மாட்டுக் கொட்டகைக் கடன், தஞ்சை மாவட்டத்தில் , பெருவாரியாக வதிச படைத்தவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. ஏழை எளிய விவசாயிக்குள அத்தகைய கடன் வாங்குவதற்குள்ள சட்ட திட்டம் அதிலே இல்லை. ஆகையினால், இனிமேலாவது கொடுக்கும் இத்தகைய மாட்டுக் கொட்டகை கடன்களை மாடு வைத்திருக்கிற, ஏழை, எளிய விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கொடுக்கின்ற கடனுக்கான விதி முறைகள் இருக்கின்றன. அவற்றை அனுசரித்து, ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தொகைகளைக் கொடுக்கிறார்கள். வேறு ஏதாகிலும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டால், அவற்றை நிவர்த்திக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.





**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, மாட்டுக்கொட்டகைகள் போடுவதற்கு என்று கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தக் தொகைகளெல்லாம், எந்தக் காரியத்திற்காக, "பர்பஸ்"க்காக கொடுக்கப்பட்டனவோ, அந்தக் காரியத்திற்கே உபயோகிக்கப்படுகின்றன, வேறு தவறான வழிகளில் பயன்படுத்தப்படவில்லை என்பதற்காக, "டெஸ்ட் செக்", என்று ஒன்றிரண்டு பேர்களை பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறதா ? ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் நடத்தப்படவில்லை. எந்த எந்த பகுதிகளில் மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன என்று அறிகிறார்களோ அதைச் சுட்டிக் காட்டினால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்தக் கொட்டகைகளுக்கு மானியம் ஏதாவது தரப்படுகிறதா ? அதே நேரத்திலே, இந்தக் கடன்களைப் பெற என்னென்ன தகுதிகள் இருந்தால் கொடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கெனவே ரூ. 50 மானியமாகவும், ரூ. 150 கடனாகவும் அளித்து வந்தார்கள். ஊராட்சிச் சட்டம் அமுலாக்கப்பட்ட பிறகு, வட்டார வசதிகளை அனுசரித்து கடன் உதவி அளிக்கப்படுகிறது. பிற்பாடு அது ரூ. 250 என்று உயர்த்தப்பட்ட மேலும் அந்தத் தொகை அதிகப்படுத்தப்படவேண்டும் என்று, இப்பொழுது அது ரூ. 500 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. தேவைகளை உத்தேசித்துக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, 1966-67-ல் இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். அதன் மூலம் எத்தனை மாட்டுக்கொட்டகைகள் கட்டப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. முற் பகல் 1-300

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, கடன் மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் எவ்வளவு ? குறிப்பிட்ட மூன்று ஜில்லாக்களில் செலவழிக்கப்பட்டது யூனியன்களின் மூலமாகவா ? கொடுக்கப்பட்ட தொகைகள் பூராவும் செலவழிக்கப்பட்டதா ? அல்லது திருப்பிக் கொடுக்கப்பட்டதா ? அப்படித் திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு தொகை ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1966-67-ல் கொடுக்கப்பட்ட தொகைகள் பூரணமாகச் செலவழிக்கப்பட்டன.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, 1966-67-ல் 4 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட கடன் தொகைள் மாட்டுக்கொட்டகைகள் கட்டுவதற்காக வழங்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எத்தனை மாட்டுக் கொட்டகைகள் கட்டப்பட்டன ? அவைகள் கட்டப்பட்டனவா என்று கண்காணிக்கப்பட்டனவா? கடனில் எத்தனை விழுக்காடு வசூல் செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதற்கென தனியாக நிதி வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் கணக்குகளிலிருந்து கொடுக்கப்பட்ட முழுத் தொகைகளிலிருந்து கட்டப்பட்டன. அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகள் பார்வையிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விழுக்காடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. நா. கிருட்டிணன் :** தலைவர் அவர்களே, இத்தகைய மாட்டுக் கொட்டகைகள் இன்னின்ன விதிகளின்படி, இன்னின்ன இடங்களில் தான் அமைக்கபபடவேண்டுமென்று ஏதாவது விதி முறைகள் இருக்கின்றனவா ? அப்படியாயின், சென்னை மாநகரத்தில் அந்த விதிமுறைகளை அமல்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : என்னென்ன விதி முறைகள் இருக்கின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*Detenus at the time of lifting emergency*

290. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of detenus kept in detention under (i) the Preventive Detention Act and (ii) the Defence of India Rules in this State at the time of lifting the emergency ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இம் மாநிலத்தில் நெருக்கடி நிலை நீக்கப்பட்டபொழுது தடுப்புக் காவல் சட்டத்தின் கீழோ அல்லது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழோ எவரும் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

**போலீஸ் தலைமை அதிகாரிகள் மாநாடு**

*291 விணு.—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில போலீஸ் தலைமை அதிகாரிகள் (ஐ.ஜி. ஆப் போலீஸ்) மாநாடு சமீபத்தில் டெல்லியில் நடைபெற்றதா ?

(இ) ஆம் எனில், அந்த மாநாட்டில் ஐ.ஜி. கலந்து கொண்டாரா ?

(உ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

(எ) இந்த மாநாட்டு முடிவு குறித்து மாநில அரசுக்கு விளக்க அறிக்கை ஏதேனும் ஐ. ஜி. அனுப்பியுள்ளாரா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :

(அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இந்த மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புக்களின் நகல் இந்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்படவில்லை.

(எ) இக் கேள்வி எழவில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியினரான இரண்டு அமைச்சர்கள் டெல்லியில் கைது செய்யப்பட்ட தற்குப் பிறகு, காங்கிரஸ் அல்லாத மாநிலங்களுக்கு மத்திய அமைச்சர்கள் சென்றால், அங்கே அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற புதிய சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, போலீஸ் தலைமை அதிகாரி களின் மாநாடு கூட்டப்பட்டது என்பது உண்மையா ? மத்திய அரசுக்கும், காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளுக்கும் கருத்து வேற்றுமை ஏற்படுகிற காரணத்தால், மாநில அரசுகள் மத்திய அரசின் ஆணையை ஏற்று நடக்க வேண்டுமென்ற காரணத்தை யொட்டி, போலீஸ் தலைமை அதிகாரி களுக்கு இந்த மாநாட்டில் திட்டவட்டமான அறிவிப்பு கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பயங்கரமான புகார்கள் என்னுடைய காதுக்கு எட்டவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களிலுள்ள சட்டம், ஒழுங்கு, அமைதி பற்றி விவாதிக்கப்பட்டதா ?



மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எதுவும் நடைபெற்றதாக எனக்குத் தகவல் இல்லை. நான், "இந்த மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் இந்திய அரசிட மிருந்து இன்னும் பெறப்படவில்லை" என்று பதில் கூறினேன். கனம் உறுப்பினர் அவர்கள் அதற்குத் தகுந்தபடி கேள்விகள் கேட்கலாம்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த மாநாட் டிலே நமது மாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஜி. அவர்கள் கலந்துகொள்ளவில்லை யென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐ. ஜி. அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையா ? அல்லது அவருக்குப் பதிலாக வேறு யாராவது மாநாட்டில் கலந்துகொண்டார்களா ? அல்லது யாருமே மாநாட்டில் கலந்துகொள்ளவில்லையா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நமது மாநில ஐ.ஜி. அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. இங்கு நடைபெற்ற "உலகத் தமிழர் மாநாடு, அகில இந்திய விளையாட்டுப் போட்டி போன்ற வைகளுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஐ. ஜி. அவர்கள் இங்கேயே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது, வருவதற்கில்லை வேலைகள் நிறைய இருக்கின்றன" என்று எழுதிவிட்டார்கள்.

DR. H. V. HANDE : Sir, whenever such conferences are held naturally the Central Government will correspond with the Hon. Chief Minister of the State and the Chief Minister will also pass on the information to the Inspector-General. That is the normal procedure and I do not know the present position. So, will the Hon. Chief Minister tell us the exact terms of reference which the Conference purported to discuss ? Before the conference was held, it was expected to di cuss certain subjects, and I want to know whether the Hon. Chief Minister has been posted with any information regarding the reasons for this conference and the subjects proposed to be discussed there. Will the Hon. Minister give at least details of all these things though he may not be in a position to give information regarding the subjects discussed there ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I understand and the hon. Member also can realise that such conferences are held from time to time to review the working of the Police throughout the country. As for the fact whether we have received any previous intimation about the agenda, I am not posted with that particular information now.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Chief Minister aware of the fact that such conferences of Inspectors-General of different States are held in Delhi just as an annual affair and nothing spectacular has happened at this conference as a result of the arrest of the two Ministers of some States in Delhi and there is no implication to starass non-Congress Governments in office ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member is replying to the allegation made by another hon. Member. I do not want to enter the controversy but as for the point raised by the hon. Member whether it is an annual affair, if by "annual affair" he really means a conference held annually, I am in perfect agreement with him but there is a sort of ring around the expression 'annual affair' that it is lighthearted. It is not so.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, ஐ. ஜி. ஆஃப் போலீஸ் போன்ற போலீஸ் அதிகாரிகளுடைய பதவிகளை நியமிப்பதோ அல்லது மாற்றுவதோ மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தில் உள்ளதா ? அல்லது மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தில் உள்ளதா ? அப்படி மத்திய அரசின் அதிகாரத்தில் இருந்தால், மத்திய அரசு மாநில அரசு களைக் கலந்து இந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுகிறதா ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I do not understand how this question arises out of the main question.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், ஐ. ஜி. உலகத் தமிழர் மாநாட்டிற்காகவும், அகில இந்திய விளையாட்டுப் போட்டிக்காகவும் சென்னையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார். ஐ. ஜி. அவர்கள் மாநாட்டிற்குச் செல்லவில்லை. அவருக்காக வேறு யாரையாவது சென்னையிலிருந்து அனுப்பி வைத்தார்களா ? அதுவும் அனுப்பப் படாமல் இருந்தால் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** தலைவர் அவர்களே, வேறு யாராவது மாநாட்டிற்குச் சென்றார்களா என்ற தகவல், என்னிடத்தில் இல்லை.

### போலீஸ் அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவர் பரிசுகள்

*292 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா ?

சுதந்திர தினத்தன்று எத்தனை தமிழ் நாட்டுப் போலீஸ் அதிகாரி களுக்கு ஜனுதிபதி பரிசு கிடைத்தது, அவர்கள் பெயர்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** குடியரசுத் தலைவரின் காவலர், தீயணைப்புக் படையினர் பதக்கத்தை/காவலர் பதக்கத்தை, பாராட்டத்தக்க பணிக்காக இம்மாநிலத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட பதினன்கு காவல் துறை அதிகாரிகள் 1967-ம் ஆண்டு சுதந்திர நாளன்று பெற்றனர்.—

| | |
|---|---|
| 1 திரு. பி. குப்புசாமி, ஐ.பி.எஸ்., காவல் துறை துணைத் தலைவர் (பதிலி). | குடியரசுத் தலைவரின் காவலர் தீயணைப்புப் படையினர் பதக்கம். |
| 2 திரு. ஆர். என். மாணிக்கம், ஐ.பி.எஸ்., காவல் துறைத் துணைத் தலைவர் (பதிலி). | |
| 3 திரு. எஸ். கிருஷ்ணராஜ், ஐ. பி. எஸ். காவல் துறை கண்காணிப்பாளர். | காவலர் பதக்கம். |
| 4 திரு. டி. கிருஷ்ணன், ஐ.பி.எஸ். .. .. | |
| 5 திரு. ஆர். வி. ராமசுவாமி, காவல்துறை இன்ஸ்பெக்டர். | |
| 6 திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, காவல் துறை இன்ஸ்பெக்டர். | |
| 7 திரு. எஸ். ராமதாஸ், ரிசர்வ் இன்ஸ்பெக்டர். | |
| 8 திரு. எ. அருளப்பா, ரிசர்வ் இன்ஸ்பெக்டர். .. | |
| 9 திரு. என். எஸ். ஸ்ரீநிவாசன், காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர். | |
| 10 திரு. கே. ரங்கசாமி, காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர். | |
| 11 திரு. பி. ராயப்பன், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர். | |
| 12 திரு. சி. சேதுராமன், தலைமைக் கான்ஸ்டேபிள். | |
| 13 திரு. கே. கண்ணன் நாயர், தலைமைக் கான்ஸ்டேபிள். | |
| 14 தி பிச்சையா, கான்ஸ்டேபிள் .. | |



DR. H. V. HANDE : Sir, while we are proud that these officers got the President's Awards, will the Hon. Chief Minister, without minding inconvenience, tell us the particular reasons fow which each one of them got the awards ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Usually police medal is awarded for valuable service characterised by resource and devotion to duty including prolonged service of ability and merit. The Government of India have laid stress that the medal may be awarded only for *conspicious merit* and the expression underlined demands a very high standard. The nominee should have put in at least fifteen years of service.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே குடியரசுத் தலைவரின் விருதுக்கும், பதக்கத்திற்கும் தகுதியுள்ளவர் களின் பெயரை மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறதா ? அப்படிச் சிபார்சு செய்கிறபோது சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை யும் கலந்து கொண்டு தானே சிபார்சு செய்கிறது ? ஆம் எனில், தங்களுடைய பெயர் அறிவிக்கப்பட்ட பின்னுல் ஜனுதிபதி விருதை வாங்கிக் கொள்ள சிலர் மறுப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** பதக்கத்தைப் பொறுத்த வரையில் 22 அதிகாரிகளின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டன, அவர்கள் 18 பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதோடு கூட பதக்கத்தை, விருதை அளிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுத் தானே அறிவிக்கிறீர்கள், அதை பெற்றுக்கொள்ள மறுப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். பொதுவாக இந்தப் பெயர்கள் எல்லாம் மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவிக்கிறது என்றாலும் அவர்களாகவே கூட தங்கள் நண்பர்கள் மூலமாக தனித்தனியாக இன்னர் இன்னருக்கு வழங்கப்படவேண்டும் என்று எங்களுக்கு எழுதுகிற வழக்கமும் உண்டு.

**திரு. பி. துரைராஜ் :** இப்படி ஜனுதிபதி பதக்கம் பெற்ற போலீஸ் அதிகாரிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா? இருந்தால் எவ்வளவு பேர் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** இப்படி ஜனுதிபதி பதக்கத்தைப் பெற்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக ஒருகாலும் இருக்கமுடியாது. இவ்வளவு உயர்ந்த பதக்கத்தைப் பெறக்கூடிய அவர்கள் மிகவும் உயர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : From the list read by the Hon. Chief Minister I find that only police officers of higher rank are many in proportion to the p licemen of the lower rank. Does that mean that only higher officers who are occupying a pedestal are in a position to do better work and merit the credit of the Government or does that mean lower officials like ordinary constables and head-constables who are actually in the police administration with the people are not deserving to that extent as to increase their number in proportion to the number of officers who get medals ?

THE HON. THIRU C. N. ANNADURAI : My Friend's conclusion is based upon not logic, but faulty logic.

THIRU K. VINAYAKAM : He is at liberty to evade my question, he can answer, he need not answer. But will the Government at least ueconsider ? It is not logic, he says. This is no time for me to qarrel with him about my knowledge of logic. I am a logic student. rIcan even mention the books I read.

1968 மார்ச் 23].

Mr. Speaker Sir, whereas there is a feeling among the rank and file of the Police Department that, in spite of the good work which they turn out, in spite of their actually maintaining law and order whenever it is broken, in spite of such wonderful work put in by our officers of the lower rank, their services are not properly recognised by their own officers and whereas it is very difficult for the Government to know their services, will the Government at least constitute a committee to go into the question, find out who exactly are the people who have put in good service and recommend them, so that they can at least have the satisfaction of having a gold medal, though not some monetary benefit, from our Government ?

THE HON. THIRU C. N. ANNADURAI : If the Government feels that it does not understand the problem, it will certainly constitute a committee. I may tell the House and the hon. Member that this Government is pleading for the ordinary Constables as much as for the officers. As a matter of fact, there is lively controversy going on between the Central Government and this Government in a case of award of a medal for meritorious services by a Constable.

*Central Intelligence Branch*

*293 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any personnel for the intelligence branch of the Government of India are located within this State ; and

(*b*) whether copies of reports made by such personnel are submitted to this Government ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :—**

(அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசின் புலனாய்வுப் பிரிவில் தயாரிக்கப்படுகிற அறிக்கைகள் முன்னாள் முதலமைச்சர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், புதிய அமைச்சரவை பொறு[ப்பு] பேற்ற பின் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்படாம[ல்] நிறுத்தப்பட்டு விட்டதாகவும் அறிகிறேன். அப்படியானால் அந்[த] அறிக்கைகள் இப்போதும் அனுப்பப்படவேண்டும் என்று இந்த அரசி[ன்] சார்பில் வற்புறுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பின[ர்] சொல்வது போல் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மத்திய அரசின் புலனாய்வு இலாக்காவில் இருந்து எந்த அறிக்கையும் வரவில்லை.

DR. H. V. HANDE : Is it not reasonable for us to expect that the Central Government should take this Government into confidence and part with the information that they have collected through the Central Bureau of Investigation? The Central Government appoint a number of officers to the Central Bureau of Investigation and



1968 மார்ச் 23]

collect information. It is but reasonable for our Government to expect this information to be conveyed to the Chief Minister. In the absence of this, will the Chief Minister have a perfect system of investigation and constitute a State Bureau of Investigation so that the Government may get information through this specialised body apart from the information that they get through the normal police channel, just as the Central Government is getting from a special channel ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Though the suggestion of my hon. Friend need not be connected with my receiving or not receiving the report, this Government is actively considering the streamlining of the Intelligence Department of this State.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய அமைச்சு, காங்கிரசல்லாத அமைச்சு என்பதற்காக, அமைச்சர்களையே கண்காணிக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால் அதை ஆட்சேபித்து இந்த அரசு மத்திய சர்க்காருக்கு என்ன எழுதியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற எங்களை மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கண்காணிக்கிறார்கள் என்றால், நாங்கள் அஞ்சுவதற்கு எந்தவிதமான முறைகேடும் எங்களிடத்தில் இல்லை.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that the Central Bureau of Investigation is not a strange body that has been constituted this year only simply because a Non-Congress Government is in power, that it has been there for so many years, that it has been screening our (the Congress) Ministers when they were in power and that it is an independent body upon which the State Government has no control of any kind ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I commend my Friend's explanation to the House.

**திரு. க. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த அமைச்சரவை இங்கிருப்பதன் காரணமாக இங்குள்ள அமைச்சர்களை நிழல்போல் தொடர்ந்து மத்திய அரசின் ஒற்றர்கள் கண்காணிக்கிறார்கள் என்பதால், இதற்கு இந்த அரசாங்கம் தன்னுடைய கண்டனத்தை மத்திய அரசுக்கு அனுப்புமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அமைச்சர்கள் பின்னாலே நிழல்போலச் செல்வதற்கு மத்திய அரசு ஒற்றர்களைப் போட்டிருக்கிறது என்றால், அது யாருக்குமே தெரியாமல் இருப்பதுதான் அதன் வெற்றியைத் காட்டும். கனம் உறுப்பினர் அதைச் சொல்வதில் இருந்து அந்த முறை சரியாக இல்லையோ என்கிற ஐயப்பாடு எழுகிறது. என்றாலும் நான் ஏற்கெனவே சொன்னது போல மத்திய அரசு தன் ஒற்றர்களின் மூலம் எங்களைக் கண்காணிக்க வேண்டுமென்று விரும்பினால், நாங்கள் அதற்கு எந்தத் தயக்கமும் காட்டவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மத்தியப்புலனாய்வுப் பிரிவில் தயாரிக்கப்படும் அறிக்கைகள் முன்னாள் முதல் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டதாக நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்த அறிக்கைகளைப் பார்த்திருக்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

1968 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : மத்தியப் புலனாய்வுப் பிரிவில் தயாரிக்கப்படும் அறிக்கைகள் முன்னாள் முதல் அமைச்சர் களுக்கு அனுப்பப்பட்டதாக நான் சொல்லவில்லை. அப்படி ஒர் உறுப்பினர் குறிப்பிட்டார். அந்த நகலை நான் பார்க்கவில்லை.

**திரு கே. என். குமாரசாமி** : ஜனநாயகத்திலே மத்திய அரசு மாநில அரசைக் கண்காணிக்கிற மரபை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வது என்றால், அது ஜனநாயக மரபா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : நான் ஏற்றுக் கொள்வது என்ற முறையிலே பொருள்கொள்ளத் தேவையில்லை, சகித்துக்கொள்வது என்ற முறையிலே பொருள் கொள்ளலாம்.

### மேலூரில் தீயணைப்புப்படை நிலையம்.

*294 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் அல்லது நத்தத்தில் தீயணைக்கும் படை நிலையம் ஒன்றை அரசு நிறுவ திட்டம் இட்டுள்ளதா ?

(இ) ஆம், எனில், எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை** : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, தற்போது நத்தம், கொட்டாம்பாடி இந்த இரண்டு இடங்களிலும் தீயணைக்கப்படவேண்டு மானால், மதுரையிலிருந்துதான் தீயணைப்புப் படைகள் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. நத்தத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதால், இதை மீண்டும் சர்க்கார் பரிவோடு கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : தீயணைப்பு நிலையங் கள் முக்கியமாக எந்த இடங்களில் இருக்கவேண்டுமென்பது நிதி நிலையின்வலுவைப்பொறுத்து இருக்கிறது. நத்தத்தைப் பொறுத்த வரையில் மதுரையிலிருந்து வரவேண்டுமென்று கனம் உறுப்பினர் அவர் கள் சொன்னார்கள். 35 கிலோமீட்டருக்கு உள்ளடங்கிய நிலையில் தீயணைப்பு இருப்பதாலே மற்ற பல இடங்களுக்கும் இடையூறு என்பதுகூட இருப்பதாகத் தெரியவில்லை. 1964, 1965, 1966 ஆகிய மூன்று வருடக் கணக்குகளை எடுத்துப் பார்த்தால் இரண்டே இரண்டு முறைதான் அந்தப் பகுதியிலே தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது ; ஆகையினாலே தீயணைப்புப் படை உடனடியாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

### ஆபாச நூல்கள் விற்பனை.

*295 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆபாச புத்தகங்கள் நாவல் என்ற பெயரால் விற்பனையாகி சிறுவர்களைக் கெடுத்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?



1968 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) ஆம், அது அரசாங்கத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) அதை அரசாங்கம் ஆலோசனை செய்து, இ.பி.கோ. 292, 292-எ, பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுத்து, இந்த நூல்களின் விற்பனையைத் தடுக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU K. VINAYAKAM : Sir, will the Hon. Minister be pleased to give a list of those obscene books which have been prohibited from being sold in the market ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, perhaps curiosity kindless in the minds of the hon. Members like Thiru Vinayakam. Anyhow if he wants to hav some delight, I do not have any objection to read it because these books are not only obscene but they have also got enticing titles. I have got a list of six books which were found out, and they are written under fictitious names. Though the author is somebody else, the author's name is fictitiously given and to give colour these six books are stated to have been written by 'Saroja Devi' (Thiru K. Vinayakam : At any rate not the notorious one). The name of the first book is 'வாழு வாழவிடு'. (Thiru K. Vinayakam : It looks innocuous). The w ould give the name of the other books,

2. " முதல் இரவு ".
3. இரவில் சொன்ன இன்பரசக் கதைகள்.
4. தென்காசி கொக்கோகம்.
5. Night Club.
6. உதட்டில் உதடு.

DR. H. V. HANDE : Does the Hon . Chief Minister know that the Hon. Member, Thiru Vinayakam, has put this question not only to know the names of these books but also to read them if possible (laughter) ?

(No reply.)

**திரு. வி. கே. கோதண்டராமன்** : நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு உத்திரவிட்டிருந்தாலும், ஒரு சில புத்தகங்களைத் தடைப் படுத்தி இருந்தாலும், அது வேறு பெயரிலே வெளியிடப்படுகிறது என்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதே புத்தகங்கள் மறைமுகமாக வைத்து ரகசியமாக அதிகப்படியான விலைக்கு விற்கப்படுகிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு கடையிலும் பார்க்கும்பொழுது அரை நிர்வாணத்தோடு தொங்கவிடப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. கொஞ்ச நாட்கள் போனால் முழு நிர்வாணத்தோடு தொங்கவிடப் படக்கூடிய நிலைமை வந்துவிடும் என்கிற அச்சம் இருப்பதாலே இதைப்பற்றிக் கடுமையான நடவடிக்கை அரசு எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இத்தகைய புத்தகங்கள் தடைசெய்யப்பட்டாலும் மறைமுகமாக விற்பனையாகிறது என்பது கனம் உறுப்பினருடைய புகார். அப்படி எந்த கடையிலும் விற்பனை செய்கிறார்களா என்று போலீஸ் துறையினர் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். பேருந்து நிலையங்களிலும்,

ரயிலடிகளுக்குப் பக்கத்திலேயும், மற்றப் பல இடங்களிலேயும் இவையெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று அவர்கள் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். இதிலே அக்கறை கொண்டிருக்கிற கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் அந்தக் கடைகளுக்குப் போய் அதைப் பெற்றுத் தகவல் கொடுப்பார்களானால், இந்த அரசு நன்றி தெரிவிக்கும். அரை நிர்வாணத்தோடு தொங்கவிடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள், அதைக் காணுகின்ற துப்பாக்கியம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை.

**திரு. வி. டி. அண்ணாமலை** : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆபாசப் புத்தகங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆபாச சினிமாகளும் காட்சிகளும் சென்னையிலே ஒரு இரவு என்பதாக நடந்து கொண்டிருப்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவற்றையும் தடுக்க சர்க்கார் எண்ணியிருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூல விடையோடு தொடர்பு இல்லை.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதற்காக தன்னிலை விளக்கம் கூறப்போகிறீர்களா ?

**திரு. கே. விநாயகம்** : இல்லை, இல்லை.

Sir, whereas I am above board from all these defects and whereas this entire House is behind the Chief Minister for prohibiting this kind of obscene matter being published or printed or even sold to the public, will the Hon. Chief Minister take steps to convene a conference of the so-called writers and set for them a code regarding what matter will have to be written or published or displayed in the shop-windows in our State ?

The Hon. Thiru C. N. ANNADURAI : Usually the writers who are fit enough to be called to a conference do not indulge in these writings and those who indulge in these writings will not conform to any code except the Indian Penal Code (Laughter).

Thiru T. MARTIN : Sir, with your permission I would like to put a supplementary question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூல விடையையொட்டியதாகக் கேளுங்கள்.

**திரு. டி. மார்டின்** : முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னதில் " நைட் கிளப் " என்ற புத்தகத்தையும் சொன்னார்கள். இன்று வெளியான தினத்தந்தி பத்திரிக்கையிலே பேனா மன்னன் பதில் சொல்வதாக எழுதி இருப்பதில் பம்பாயிலே என்ன, சென்னையில்கூட இரவு விடுதிகள் இருக்கின்றன என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இரவு விடுதிகளுக்கு இந்த அரசு லைசென்ஸ் வழங்கியிருப்பதாகத் தெரியவில்லை. கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே பேசும்போது, குற்றங்கள் எங்காவது இருந்தால் அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே முதலமைச்சர் அவர்கள் இந்த பத்திரிக்கை ஆசிரியர் அவர்களைக் கலந்து எங்கு எங்கு இரவு விடுதிகள் இருக்கின்றன என்று விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்கிற அவர்களே இந்தப் பேனா மன்னனைச் சந்தித்து தகவல்களை அனுப்பலாம்.





*Fire accident in cracker godown*

*296 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether fire broke out in a cracker godown in Walltax Road, Madras, on 28th September 1967 ;

(*b*) if so, the reasons therefor ;

(*c*) the extent of damages caused and the number of casualties ; and

(*d*) the steps taken to prevent such occurrences ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) ஆம்.

(இ) பட்டாசு முதலியவை அடங்கிய பெட்டிகளைக் கிடங்கில் வைப்பதற்காக லாரியிலிருந்து அவற்றை இறக்கிக்கொண்டிருக்கையில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட மொத்த விரயம் சுமார் ரூ. 36,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உயிர்ச் சேதம் எதுவும் இல்லை.

இது போன்ற விபத்துக்களைத் தடுப்பதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் :

(i) லாரி கொட்டகைகளின் உரிமையாளர்களும் கிடங்குச் சொந்தக்காரர்களும், வெடிமருந்துகள் ஒரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகையில் இடைத் தங்கலாகக் கூட தங்கள் கொட்டகைகளில் அவற்றைச் சேகரித்து வைக்கக்கூடாது என்று எச்சரிக்கப்படுவர்.

(ii) வெடிமருந்துகளின் போக்குவரத்திற்காக, வெடிமருந்துகளை அனுப்புகிறவர்களுக்கும், அவற்றைப் பெற்றுக் கொள்பவர்களுக்கும் வழங்கப்படும் போக்குவரத்து உரிமத்தின் நகல் காவல் துறை ஆணையருக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் அவர் அதனை ஓரளவு கண்காணிக்க முடியும்.

(iii) காவல்துறை மேற்பார்வையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியிலுள்ளவர்கள் வெடிமருந்து சேகரிப்பு உரிமம் வழங்குகையில், அவை தகுந்தபடி சேகரித்து வைக்கப்படுகின்றனவா என்று சரியானபடி கண்காணிக்க வேண்டும்.

(iv) தீபாவளி காலத்தில் இது குறித்துச் சிறப்பான நாட்டம் செலுத்தப்படவேண்டும்.

Thiru K. VINAYAKAM : Was this incident just an accident or was any sabotage suspected ? What does the Chief Minister exactly mean when he says ' vedimarundu ' ? Is it of an explosive and dangerous kind or is it just like the one which is used for making the Deepavali crackers ? மு. ப. 10-30.

The Hon. Thiru C. N. ANNADURAI : I was referring only to crackers. On investigation it was found that there was no sabotage.

Dr. H. V. HANDE : This happened in my constituency and I was there on the very day as soon as I got information. Will

the Chief Minister convey to the Fire Service men thanks for the exemplary manner in which they handled the situation and restored normalcy within a matter of few hours ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Fire Fighting Services and also the Police connected with it have acted in an exemplary manner.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இதே வட சென்னையிலே கோடவுன் தெருவில் 1964-ம் வருஷத்திலே அமிலம் வைக்கப்பட்டிருந்த கிடங்கு தீப்பிடித்து 26 பேருக்கு மேல் இறந்து விட்டார்கள். இந்தமாதிரி அமிலங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றை மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் வைக்காமல் வேறு பகுதிகளிலுள்ள கோடவுன்களில் வைக்க வேண்டுமென்று விதிகள் இயற்றப்பட்டு அமலுக்குக் கொண்டு வரப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன முறைப்படி இந்த விதிகளை மாற்ற வேண்டுமா என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று. இப்போது இருக்கும் இடத்திலே விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பு முறைகளை வைக்கலாம் என்பது யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்படி வெடி மருந்து கிடங்குகளில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம்—விஞ்ஞான அடிப்படையில் ரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மலிவாகக் கிடைக்கிறது என்ற காரணத்தால் சில நாட்டு மருந்துகளைக் கண்மூடித்தனமாகக் கலந்து தயார் செய்யக்கூடிய காரணத்தால்தான் அடிக்கடி இந்த விபத்துகள் ஏற்படுகின்றன என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது தீவிரமாகக் கண்காணிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எனக்கு அந்த விவரம் தெரியாததால்தான், எதனால் இந்த விபத்து ஏற்பட்டது என்று போலீஸ் துறையினர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. நா. காசிராமன் :** இந்தமாதிரி வெடி மருந்துகளால் விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தால் வெடி மருந்துகளை வைக்கக்கூடிய இடங்களிலும் , தயார் பண்ணக்கூடிய இடங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணி புரியும் ஊழியர்கள் எல்லோருக்குமே அந்த வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை முதலாளியே அவர் செலவில் இன்ஷூரன்ஸ் செய்து கொடுக்கவேண்டுமென்பதற்காக சட்ட திருத்தங்களைக் கொண்டு வர இந்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** விபத்து நடைபெற்றது வெடி மருந்து தயாரிக்கும் இடத்தில் அல்ல. கிடங்குகளில் இறக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் நிலையில்தான் விபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்திலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றால், தயார் செய்யும் இடத்தில் இன்னும் அதிகமாக ஏற்படும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் யூகித்துக் கொள்வதில் தவறு இல்லை. அதைப் பற்றித் தொழிற்துறை அமைச்சர் அவர்கள் தகுந்த கவனம் செலுத்துவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (i) பெரியாறு உற்பத்தியாகும் இடத்தில் அணைகட்டப்படுவதால் தமிழகம் பாதிக்கப்படுதல்

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை விதிஎண் 42-க்கு இணங்க கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியம் ஒன்றைப் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அதாவது—

" தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குப் பாசனத்துக்குப் பயன்படும் பெரியாறு நதியின் மீது, அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் அணை கட்டப்படுவதால் நமது மாவட்டங்களின் பாசனத்துக்குக் கிடைக்கும் தண்ணீர் குறைந்து போகும் நிலை ".

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியாற்றில் தண்ணீர் போதுமானதாக இல்லை. அந்த அணையில் கூட போதுமான அளவு தண்ணீர் இல்லை. பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கேரள அரசு அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் இடமலையாற்றில் அணை கட்டுவதாகத் தெரிகிறது. அவ்வாறு அங்கே அணை கட்டுவது (Riparian rights) முன் பாத்தியதை உரிமையை மீறியதாகும். அதனால் மதுரை, இராமநாதபுரம் பகுதிகளுக்குக் கிடைத்து வரும் தண்ணீர் குறையும். அதனால் மக்கள் பீதியும், பயமும் கொண்டிருக்கிறார்கள். இதைவிட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியம் இருக்க முடியாது. அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்ற நிலையில் இதைப் பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மன்றத்தில் எடுத்துக் கொண்டு விவாதிக்கப் படக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சபையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது அல்ல என்று கருதினாலும், இதுபற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும் காரணத்தால் எனது அனுமதியை மறுக்கிறேன்.

### (ii) தமிழகத் திரைப்படங்கள் மகாராஷ்டிரத்தில் திரையிடப்பட சிவ சேனையின் எதிர்ப்பு.

**திரு. சி. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42 ஆவது விதியின்படி கீழ் காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது

" தமிழகத்தில் எடுக்கும் படங்களைத் திரையிடக்கூடாதென்று சிவாஜி சேனை எதிர்ப்பதால் தொழில் பாதிக்கப்பட்டு அதனால் சுமார் 15,000 பேர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் நிலை "

தலைவர் அவர்களே, இந்த நிலை சமீப காலத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக தமிழகத்திலே இந்தியைத் திணிக்கக்கூடாதென்ற வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை இது. அங்குள்ள மகாராஷ்டிர அரசாங்கமோ, வேறு அரசாங்கங்களோ, சிவாஜி சேனை நடவடிக்கையைத் தடை செய்ய முன்வரவில்லை. இதனால் நம்முடைய தேசிய ஒருமைப்பாடு சீர்குலைகிறது. தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டுள்ள மத்திய அரசு இதிலே தலையிட்டுதடுத்து நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. அதோடு கூட இதனால் 15,000 தொழிலாள மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இதிலே சிவாஜி சேனை ஈடுபட்டிருப்பதோடு கூட அந்த நடவடிக்கைகளுக்கு வேறு சில அரசாங்கங்களின் பலமாக இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது. மீண்டும் இந்தித் திணிப்பைக் கொண்டு வரும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையில் நடக்கும் இந்தக் காரியத்தைப் பற்றி அன்றாடப் பிரச்சினை என்று கருதாமல் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, இது குறித்துப் படத் தொழிலில் ஈடுபட்டவர்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதைப் பற்றி இந்த அவையிலே விவாதிப்பதன் மூலம் நிலைமைகள் மேலும் சீர்கேடு அடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதையும் அரசின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதி இதிலே ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்க இந்த அரசு தகுந்த முறையில் கவனிக்கும் என்ற எண்ணத்தோடு இதை விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு தீர்க்கக்கூடிய காரியம் என்ற காரணத்தால், பேரவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

### (iii) கச்சத்தீவு செல்ல தமிழக மக்களுக்குத் தடை

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை 42-ஆவது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது—

" தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத் தீவுக்கு அர்ச். அந்தோணியார் திருவிழாவுக்குச் சென்ற தமிழக மக்களை சுங்க அதிகாரிகளும், துறைமுக அதிகாரிகளும் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலை ".

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் மிகக் குறுகலான பொறுப்பை அறிவேன். நான் அதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி இந்திய அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்ததாகக் காணோம். இந்த மன்றத்தின் உணர்வுகளையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் வகையில் இதைப் பற்றி விவாதிப்பது பயனுள்ளதாக அமையும். காலையில் பத்திரிக்கையில் படிக்கும்போது பார்த்ததில், " இங்கிருந்து செல்கின்றவர்கள் அர்ச் அந்தோணியார் கோவிலுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் " என்று போடப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. அந்தச் செய்தி உண்மையா என்று அறிய விரும்புகிறேன். இது சம்பந்தமாக இந்த அரசாங்கம்





இந்திய சர்க்காருக்கு என்ன முறையில் வலியுறுத்தி வருகிறது என்பதைப் பற்றியெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் நலமாக இருக்கும். இதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுபற்றி மத்திய அரசு மாநில அரசிடத்தில் தகவல் கேட்டிருக்கிறது. தகுந்த தகவல்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இதுபற்றி தனியாக அவையை ஒற்றிவைத்துத்தான் பேச வேண்டுமென்ற அவசியம் இல்லை. உறுப்பினர் அவர்கள் பொது நிர்வாகம் பற்றி பேசுகிற நேரத்தில் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடலாம். இங்கிருந்து சென்றிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்கு சௌகரியங்கள் எல்லாம் இருப்பதால் இதை விவாதிக்க அவையை ஒற்றிவைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் காரியத்தில் மாநில அரசு ஈடுபட்டிருந்தாலும் நம் விதி 50 (10) படி இது முற்றிலும் தமிழக அரசின் பொறுப்பிற்கு உட்பட்டதாக இல்லை. எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து, 41-வது விதியின்கீழ் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. சு. துரைசாமி அவர்கள் ஒரு காரியத்தைக் கொண்டு வருகிறார்கள்.

## 3. கவன ஈர்ப்பு.

### பல்லடம் தாலூகாவில் பருவமழை தவறியதும் கூட்டுறவுச் சங்கக் கடன் வசூல் ஒத்திவைப்பும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த காரியத்தை நான் சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

" பருவமழை தவறிய காரணத்தால் கோவை மாவட்டம் பல்லடம் வட்டத்தில் பயிர் விளைச்சலின்றியும், குடிதண்ணீர்கூட இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் விற்றுக்கொண்டும் மக்கள் அவதியுறுவதால் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களை ஓராண்டுக் காலம் ஒத்திவைக்கவேண்டும் ".

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழே இந்த விவர அறிக்கையை அளிக்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி வழங்கியுள்ள கடன்களை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் குடியானவர்கள் உரிய தேதியில் திருப்பிச் செலுத்த இயலவில்லையென, அம் மாவட்டத்தின் பல்லடம், தாராபுரம் வட்டங்களில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் முறையிட்டுள்ளன. எனவே, கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கியின் நிர்வாகக் குழு, பல்லடம் வட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் மிகவும் குன்றியுள்ள பகுதிகளைக் குறிப்பிடுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டது. அப்போதுதான், அத்தகவலின் அடிப்படையில், குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியமைப்பதன் மூலம் குடியானவர்களுக்கு உதவி அளிப்பது குறித்து ஆலோசிக்க முடியும். பல்லடம் வட்டம் முழுவதிலும் தாராபுரம், கோபிசெட்டிபாளையம், அவனாசி, ஈரோடு வட்டங்களில் சில வட்டாரங்களிலும் அணா வாரிக் கண்டுமுதல் ஆறணாவிற்கும் குறைவாக இருந்தது என்று கலெக்டர் தெரிவித்துள்ளார். எனவே, இந்தப் பகுதிகளில்

[திரு. செ. மாதவன்] [1968 மார்ச் 23

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கான செயற் குறிப்புகளை அனுப்புமாறு கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கேட்டுள்ளார். இந்தச் செயற் குறிப்புகள் கிடைத்தவுடன் பதிவாளர் இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கைகளைத் தொடருவார்.

பல்லடம் வட்டத்தில் கூட்டுறவு மேற்பார்வை யூனியன்கள் மூன்றும், 137 கிராமக் கடன் வழங்கு சங்கங்களும் செயலாற்றி வருகின்றன. இவற்றில் 99 சங்கங்கள் வேளாண்மைக் காரியங்களுக்காக கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து கடன் வாங்கியுள்ளன. இப்பகுதியில் பருத்தியும், புகையிலையும் முக்கியப் பயிர்களாகும். சிறு பான்மைப் பகுதியில் சோளம் பயிரிடப்படுகிறது. இவ்வாண்டு ஜனவரி 1-ம் தேதி வரையில் கூட்டுறவுக் கடன் நிலுவை ரூ. 55,44,583 ஆகும். இதில் ரூ. 3,11,398 உரிய காலத்திற்குப் பின்னரும் செலுத்தப்படாமல் நிலுவையாய் இருந்தது. 1—2—1968 தேதி முதல் 31—5—1968 தேதி வரை செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 33,83,291 ஆகும். இந்தப் பகுதியில் நிலவிவரும் வறட்சி நிலைமை காரணமாக, இதில் எவ்வளவு தொகையை வசூலிப்பது தள்ளிப்போடப்பட வேண்டும் என்பது குறித்துக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஆய்வு செய்வார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. என். பரமசிவம் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் அமைச்சர் அவர்கள் கூறியது பதிலாகக் கருதப்படுகிறது.

அடுத்து, திரு. சோ. அழகர்சாமி அவர்கள் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இருப்பிடத்தில் இல்லாததால், தீர்மானம் பேரவையின் அனும...யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### 4. அரசினர் தீர்மானம்

#### அவை அலுவல் வரிசை மாற்றம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 26—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்பதை 25—3—1968-லும், 25—3—1968-ல் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்பதை 26—3—1968-லும் மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.**

### 5. 1968—69-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

#### கோரிக்கை எண்—26. பாசனம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,87,64,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் திட்டங்களை நவீனமாக்கி தண்ணீரைச் சிக்கனப்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,87,64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.



1968 மார்ச் 23]

Thiru SOWDI S. SUNDARA BHARATHY: Sir, to discuss about investigating and undertaking a scheme to link at least all the rivers in the Southern States with their concurrence—I move the following cut motion:—

'That the allotment of Rs. 8,87,64,300 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100.'

Thiru V. GEORGE: Sir, to discuss the policy of the Government of allowing three Departments, namely, Public Works Department, Highways and Rural Works and Food Production Departments to look after the various categories of irrigation works and to point out the necessity of having one Department in charge of all the categories of irrigation works, I move the following cut motion:—

'That the allotment of Rs. 8,87,64,300 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100.'

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில், நீர்ப்பாசன ஆற்றுக்கரைகளை உயர்த்தி, வெள்ள ஆபத்தைத் தடுக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,87,64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,87,64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதியில், பள்ளபாளையம் குளம், கண்ணம்பாளையம் குளம், சூலூர் குளம், சாமளாபுரம் குளம் முதலியன தூர் எடுப்பது, பராமரிப்பு செய்வது முதலியனபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,87,64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

#### கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,96,62,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

Thiru SOWDI S. SUNDARA BHARATHY: Sir, to discuss about the de-silting of Peria Kanmai at Aruppukottai and all other tanks at Ramanathapuram district, I move the following cut motion:—

'That the allotment of Rs. 6,96,62,800 under Demand No. 41—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.'

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government for de-silting-*cum*-reclamation of irrigation tanks in channel-fed areas of Kanyakumari district, I move the following cut motion :-

' That the allotment of Rs. 6,96,62,800 under Demand No. 41 —Capital Outlay on Irrigation be reduced by Rs. 100. '

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தமிழகத்தி லுள்ள, தண்ணீர்த் தேக்கங்களை உடனடியாகக் கட்டி முடிக்கும் அவசியத்தைபற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,96,62,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவி களும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,23,81,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை யில் பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவி களும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ.3,23,81,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மா னத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, பணியாளர்களின் வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவி களும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,23,81,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மா னத்தை முன்மொழிகிறேன்.

கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,06,34,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும். "

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் போக்குவரத்துள்ள எல்லா சாலைகளையும் பெருவழித்துறை மூல மாகவே ஏற்று தார்சாலைகளாகப் போடும் அவசியத்தைப் பற்றி எடுத்துக் காட்ட—





" கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,06,34,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU V. GEORGE : Sir, to discuss the failure of the Government to provide for the construction of the office of the Revenue Divisional Officer, Padmanabhapuram in Kanyakumari district, I move the following cut motion :—

' That the allotment of Rs. 7,06,34,000 under Demand No. 27 —Public Works—Works be reduced by Rs. 100. '

கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள், மூலதனச் செலவுகள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

" கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,53,22,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும். "

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அதிகப்படியான நிதி ஒதுக்குவதைப் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,53,22,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கொண்டு வரப்பட்டி ருக்கிற நிதிக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

* தற்போதுள்ள பாசனத் திட்டங்களைத் தக்க முறையில் பேணி வருவதற் காகவும், அவற்றிலிருந்து பெருமளவு பயன்பெறும் பொருட்டு, அவற்றை விரிவு படுத்துதல், மேனிலைப்படுத்துதல், பேணி வருதல் ஆகியவற்றிற் கான செலவும், வெள்ளத்தாலும், புயலாலும் சேதமடைந்த பகுதிகளைச் செப்பனிடும் பணி முதலியவற்றிற்கான செலவும், " கோரிக்கை 26—பாசனம் " என்ற மானியத்திலிருந்து பெறப்படும். நிறைவேறி வருகிற அல்லது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் புதிய பாசன வேலைத் திட்டங்களுக்காக ஆகும் செலவினங்களின் பெரும் பகுதி " கோரிக்கை 41—பாசனத்திற்கான மூலதன முதலீடு " என்ற மானியத்திலிருந்து ஏற்கப் படும். வருவாய்த் துறையினரின் கண்காணிப்பில் உள்ள சிறு பாசன வேலைகளுக்கான ரூ. 75,21,500 மானியமும் கோரிக்கை 26-ல் அடங்கி யுள்ளது. பாசனப் பணிகளின் இயல்பான கட்டமைப்பிற்கும், ஆக்கத் திற்கும் வேண்டப்படும் பணியாட்கள், கருவிகள், பொறிகள் இவற்றின் மொத்தச் செலவுத் தொகை 28-வது கோரிக்கையின்கீழ் வருகிறது. பாசனச் செலவின் ஒரு பகுதியான ரூ. 39,21,600 " கோரிக்கை 26—பாசனம் " என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

* உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் அச்சிட்ட உரை.

1968-69-ம் ஆண்டில் பாசனத்திற்கெனச் செலவிடக் கருதியுள்ள மொத்த மானியத் தொகை ரூ. 15,84,27,100 ஆகும்.

**பருவமழை, பாசன முறை ஆய்வு.**—இந்த ஆண்டில் தென்மேற்கு, வட கிழக்கு ஆகிய இரு கார்ப் பருவங்களிலும் வானம் போதிய அளவு பெய்யாததால், இடையூறான ஒரு பருவ நிலைக்கு நாம் ஆளாக வேண்டி வந்தது. காவிரி, அமராவதி, பவானி, பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு முதலிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில் தென் மேற்குப் பருவ மழை இயல்பாக, ஜூன் திங்களின் பிற் பகுதியில் பொழியத் தொடங்கும். இந்த ஆண்டு இது காலந் தாழ்ந்து பெய்ததோடல்லாமல், வழக்கமான அளவிற்குக் குறைந்தும் பெய்தது. காவிரி நீர்கோள் பகுதியில் 13 சத வீதமாகவும், பவானியில் 24 சத வீதமாகவும் பெரியாற்றில் 28 சத வீதமாகவும், மழை குறைந்து பெய்தது. இதனால் நீர்த் தேக்கங்களுக்கு வந்த நீரின் அளவும் குறைந்தது. இப்பற்றுக்குறை மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 17 சத வீதமாகவும், பவானிசாகரில் 43 சத வீதமாகவும், பெரியாறு ஏரியில் 47 சத வீதமாகவும், பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் 45 சத வீதமாகவும், பெருஞ்சாணி நீர்த் தேக்கத்தில் 11 சத வீதமாகவும், அமராவதி நீர்த் தேக்கத்தில் 36 சத வீதமாகவும், பாபநாசத்தில் 28 சத வீதமாகவும் இருந்தது. மேட்டூர், வீடூர், மணிமுத்தாறு ஆகியவை தவிர, ஏனைய பாசன அமைப்புகள் அனைத்திலும் இயல்பான தேதிகளில் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டது. மேட்டூரில் தேக்க அளவு மிகவும் குறைவாக இருந்ததாலும், அதன் வரவு நீரின் அளவும் குன்றி இருந்ததாலும், அத் தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக வழக்கத்தை விட, 21 நாள் கழிந்த பின்பே திறந்து விடப்பட்டது. வீடூர், மணிமுத்தாறு நீர்த் தேக்கங்களிலும் நீர்ச் சிறை அளவு மேம்பட்ட பின்னரே அவை பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டன. 18,600 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் பயிர் விளைவிப்பதற்கென்றே கிருஷ்ணகிரி, சாத்தனூர் நீர்த் தேக்கங்களிலிருந்து சிறப்பாகத் தண்ணீர் விடப்பட்டது.

காவிரி, பவானி, அமராவதி, பெரியாறு, கோதையாறு முதலிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில், வடகிழக்குப் பருவ மழை பெரிதும் தவறி விட்டது. காவிரி நீர்கோள் பகுதியில் 60 சத வீதமாகவும், பவானியில் 40 சத வீதமாகவும், பெரியாற்றில் 50 சதவீதமாகவும், கோதையாற்றில் 33 சத வீதமாகவும், மழை குறைவாகப் பெய்தது. இதனால் நீர்த் தேக்கங்களுக்கு வந்த நீரின் அளவும் குறைவு. இந்தப் பற்றுக்குறை மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 65 சத வீதமாகவும், பவானி சாகரில் 60 சத வீதமாகவும், பெரியாறு ஏரியில் 47 சத வீதமாகவும், பேச்சிப்பாறையில் 20 சத வீதமாகவும், பெருஞ்சாணியில் 5 சத வீதமாகவும், அமராவதியில் 35 சத வீதமாகவும் இருந்தது. இந்த ஆண்டு வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததால், பவானி சாகரின் கீழ் உள்ள இரண்டாம் முறை ஆயக்கட்டிற்கு பாசன வசதியளிக்க இயலவில்லை. இந்த ஆயக்கட்டுக்காரர்களுக்கு துயர் தணிப்பு ஏற்பாடாக அவர்களிடமிருந்து மேம்பாட்டுக் கட்டணம் வசூலிப்பதை ஒத்திப் போடப்பட்டுள்ளது. முதல் அறையில் பாசனம் பெற்ற நிலங்களுக்கு இரண்டு பசலிகளுக்கு மேம்பாட்டுக் கட்டணம் வசூலிப்பதற்குப் பதிலாக, ஒரு பசலிக்கு மட்டும் மேம்பாட்டுக் கட்டணம் வசூலிக்குமாறும் அரசு ஆணையிட்டுள்ளது. மேட்டூரில் கிட்டிய குறைந்த தேக்க நீரை சிக்கனமாகவும், மிக்கபயனுறும் வகையிலும், வழங்கிப் பங்கீடு செய்யப்பட்டது. எனவே, பயிர் ஏற்றிய நிலங்கள் அறுவடை செய்யும் வரையில் அவற்றிற்கு பாசனம் நீடித்து வழங்க இயன்றது. இத்தகைய இடுக்கண், பெரியாறு, கோதையாறு பாசனத்திலும் ஏற்பட்டது. இதனைச் சமாளிக்க பாசனம் முறைப்படுத்தப்பட்டது.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த கடலோரப் பகுதிகளும், தஞ்சாவூர் மாவட்டமும் கடும் புயலினாலும் பெரு மழையினாலும் அவதியுற்றன. 1967, அக்டோபர் திங்களில் ஒரு முறையும், 1967, டிசம்பர் திங்களில் மற்றொரு முறையும் இப்பகுதிகள் இயற்கையின் சீற்றத்திற்குள்ளாயின. பாசன ஏரிகள் பல உடைந்தன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உடைப்பெடுத்த ஏரிகளில் சுற்றுக் கரைகள் அமைக்க





உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பாசனப் பருவ காலத்தில் எஞ்சிய பகுதிக்கு நீர் வழங்க இயன்றது. நிலையாக குளங்களைப் பழுது பார்க்க பணிகள் நிறைவேறி வருகின்றன. தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலால் பழுதடைந்த பாதைகளும் செப்பனிடப்பட்டு, பழைய நிலை எய்தும் பணிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

நமது மாநிலத்தில் நீரும் நிலமும் குறைந்த பரப்பளவிலேயே கிட்டியுள்ளன. இந்த உண்மையைக் கருத்திற் கொண்டு, மிகு பயன் தரும் குறுகிய காலப் பயிர் வகைகளைப் பயிரிடும் நிலப் பரப்பளவைப் பெருக்கியும், அதனை அடுத்து இரண்டாம் போகப் பயிரை விளைவிப்பதிலும் நாம் முன்னேறிச் செல்ல வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இதற்கு நாம் நிலத்திற்கடியிலுள்ள நீர் வளத்தை நாட வேண்டியுள்ளது. 17–3–1966 அன்று செயலுக்கு வந்த ஐக்கிய நாடுகள் நில-நீர்வளத் திட்டத்தினை காவிரி சங்கமுகப் பகுதியிலும் செயல்படுத்த வகை செய்யப்பட்டது. ஆனால், இத்திட்டம் இப்பகுதிக்குப் போதிய அளவினதாக இல்லை என்று உணரப்பட்டது. காவிரி சங்கமுகப் பகுதியில் நில—நீர் வள ஆராய்ச்சிப் பணியை விரிவு படுத்துவதற்காக வேளாண்மை, பொருளாதாரத் துறைகளிலும், துளையிடு பணியிலும் மேற்கொண்டும் வல்லுநர் உதவி வேண்டியும் கூடுதல் கருவிகளை வேண்டியும் இம்மாநில அரசு இந்திய அரசு மூலமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு திட்டம் ஒன்றை அண்மையில் வழங்கியுள்ளது. இந்த இரண்டாவது நிலைப்பணி முடிய 1½ ஆண்டுகளாகும். இதற்கென ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு 6·54 லட்சம் அமெரிக்க டாலர்களும், மாநில அரசாங்கத்திற்கு ரூ. 48·44 லட்சமும் செலவாகும்.

திட்டப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்களை அவை முன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரையில் காணலாம்.

### ஓராண்டு சாதனைகள்

கடந்த ஓராண்டில் இந்த அரசு செய்த குறிப்பிடத்தக்க மாறுதல்கள் பற்றியும் மேம்பாடுகள் பற்றியும் ஈண்டு கோடிட்டுக் காட்டும் வகையில் சில சொல்ல விழைகிறேன்.

இந்த அரசு உணவு உற்பத்தியைக் பெருக்க எடுத்துள்ள முக்கியமான நடவடிக்கைகளில் காவிரி சங்கமுகப் பகுதியில் இருபோகப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவைக் கூட்டி புதிய பயிர் முறையைச் செயலுக்குக் கொண்டு வந்தது தலையாயதாகும். வரும் ஆண்டுகளில் இத்திட்டம் திறம்படச் செயல்படுவதற்காக கல்லணைக் கால்வாயிலும் காவிரிப்பாசன அமைப்பிலும் ரூ. 66 லட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணைக் கால்வாயில் முழு அளவு நீர் செல்லும் வகையில் கால்வாயின் தலைப்பகுதியில் வண்டல் அகற்றவும், கட்டுக்கரை பகுதிகளிலும் உடைப்பு ஏற்படக்கூடிய பிற பகுதிகளிலும் கரைகளை வலுப்படுத்தவும் தேவையான இடங்களிலெல்லாம் கால்வாய் அடித்தளத்திற்கு காரை பூசவும், இரு கரைகளையும் காப்புக்கல் சார்த்தி வலுப்படுத்தவும் இத் திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளன. காவிரிப் பாசன அமைப்பில் பழவாறு, உப்பாறு, மன்னியாறு, வேலப்பாறு போன்ற ஆறுகளின் கரைகள் தரத்தளவிற்கு உயர்த்தப்படும். இந்த மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதற்காக 1968–69-ல் ரூபாய் 26 லட்சம் செலவு செய்யப்படும்.

கீழ்பவானித் திட்டம், பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டம் இவை உள்ளிட்ட எல்லா திட்டப் பகுதிகளிலும் புதிய கிணறுகளை வெட்டுதல் அவற்றிற்கு மின் இணைப்பு வழங்குதல் குறித்த தடையை அரசு தளர்த்தியிருப்பதும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் துறையில் அரசு மேற்கொண்ட சிறப்புடையப் பணியாகும். இவ் வாணைகளின்படி தலைமைக்

கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் ஆகியவற்றின் முனையிலிருந்து 50 மீட்டர் தொலைவிற்கு அப்பாலும், 'பங்கீட்டுக் கால்வாய்களின் கரைகளிலிருந்து 25 மீட்டர் தொலைவிற்கப்பாலும் புதிய கிணறுகளை வெட்டுவதும் தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டப் பகுதியைத் தவிர, பிற பகுதிகளில் கால்-பாசனம் அல்லாத காலத்தில் உழவர்கள் கிணற்று நீர் கொண்டு எப்பயிரை வேண்டுமானாலும் பயிரிடலாம். இவ்வாறு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதை உழவர் பெருமக்கள் வரவேற்று பயன் பெறுவார்கள் என நான் நம்புகின்றேன். பாசனத்திற்குத் தேவையான நீர் பற்ருக்குறை ஏற்பட்ட பகுதிகளில் இறைவைப் பாசனம் குறித்த விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் போன்ற சில பகுதியில் மட்டும் அரசின் செலவில் 25 ஏக்கர் வரையில் கண்ணி வாய்க்கால்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. மற்றப் பகுதிகளில் இதுவரை 50 ஏக்கர் தொகுதி வரையில் கண்ணி வாய்க்கால்கள் அரசின் செலவில் ஏற்படுத்தப்பட்டு வந்தன. உணவு உற்பத்தியில் ஏற்றங்காண வேண்டும் என்னும் குறிக்கோளினைக் கருதி, அரசின் செலவில் 25 ஏக்கர் தொகுதி வரைக்கும் கண்ணி வாய்க்கால்கள் அமைக்கும் இந்தச் சலுகையை எல்லாத் திட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு இப்போது கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

வைகைக் கால்வாய்களை ரூ. 395 லட்ச செலவில் புதுப்பிக்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளோம். சிறு பாசனத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில், 1967, டிசம்பர் இறுதிவரை ரூ. 223·10 லட்சம் செலவிட்டிருக்கிறோம். இதன் மூலமாக, 12,714 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்கப்பட்டுள்ளது. 30,349 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது. நீர்ப் பிடியிலிருந்து 595 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாசனத் திட்டப் பகுதிகளைப் பேணி வருவதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை ஈடு செய்யும் பொருட்டு இப்பகுதிகளிலும் இப்பகுதிகளைச் சூழ்ந்த இடங்களிலும் திரைப்படம் பிடிப்பதற்காக ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் வீதம் அரசு இதுவரை வசூலித்து வந்தது. எழில் மிக்க இடங்களைத் திரைப்படமெடுக்க அனுமதிப்பது சீர்ப்பயண வளர்ச்சிக்குப் பயன் தருவதாக அமையுமென இவ்வரசு கருதியது. எனவே, கலையையும், எழிற் சுவைப் பண்பையும் வளர்க்கும் நோக்குடன் பாசனத் திட்டங்களில் திரைப்படம் பிடிப்பதற்கு ஒரு நாளைக்கு 1,000 ரூபாயாக இருந்த கட்டணத்தை நாளொன்றுக்கு 300 ரூபாயாகக் குறைத்துள்ளது.

பாசனத் திட்டப் பணிகளுக்குப் பொறுப்பேற்கும் பணியில் பல்வேறு நிர்வாக அமைப்புகள் நின்று நிலவுவதால் பொதுமக்கள் தங்கள் குறைகள் தீர, எந்த நிர்வாக அலுவலரை நாடுவது என, குழப்பமும், ஐயப்பாடும் அடைந்துள்ளனர். ஓரளவிற்கு உணவு உற்பத்திக்கும் தடங்கலாக அமையும் வகையில் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு இல்லாத நிலையையும் இந்த பல்வேறு கூறுகள் ஏற்படுத்தியுள்ளது. இவ்வித முரண்பாடுகளை கருத்திற்கொண்டு, வட்டார அதிகார வரம்புடன் கூடிய இணைந்து ஒன்றிய நிர்வாக அமைப்பு ஒன்றினை ஏற்படுத்த 1967, ஜூலையில் அரசு ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையைக் கல்வி-நிதியாண்டின் இடைப் பகுதியில் செயலுக்கு கொண்டு வருவதனால் பணியாளர்களுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதுடன கணக்குகளை முடிப்பதும் எளிதாகாது என முறையிடப்பட்ட காரணத்தினால், மாற்றியமைக்கப்பட்ட அமைப்பு முறை 1—4—1968 முதல் செயல்படும் வண்ணம் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாற்றியமைக்கும் இத்திட்டத்தை வகுப்பதில் அரசு பின்வரும் கொள்கைகளைக் கருத்தில் கொண்டுள்ளது ; (1) பாசனத் தேவைகளின் அடிப்படையில் தற்போதுள்ள ஆற்றுப் பாசன அமைப்புகளின் எல்லைகளை மாற்ற வேண்டியதில்லை. (2) இப்போது நிர்வாகப் பொறியாளரால் நிருவகிக்கப்படுகின்ற பொதுப்



பணிக்களரியும், மற்றும், உள்ள கலன்-கருவி-கோட்டங்களையும் (அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின பரிவுரையின்படி) ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் பொறுப்பில் ஒப்படைத்தல். (3) உணவு உற்பத்தி பற்றிய வேலைகளைச் செய்வதற்காக வருவாய்த்துறை வாரியத்தில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களை அங்கிருந்து பிரித்து (பாசனத்) தலைமைப் பொறியாளருடன இணைத்தல். (4) இவை அனைத்துக்கும் மேலாக, பாசனம், கட்டிடங்கள் ஆகியவை குறித்த பணிகளை நேர்முகமாய் மேற்பார்வையிடவும், அவற்றை ஒருங்கிணைக்கவும் இயன்ற மட்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மேற்பார்வையாளர் பொறுப்பேற்றல். மாற்றியமைக்கப்பட்ட புது அமைப்பில் முறையான 10 பெரு வட்டங்களும் 6 சிறப்பு பெரு வட்டங்களும் இருக்கும். 80 கோட்டங்களும் 347 துணைக் கோட்டங்களும் இருக்கும். பெரு வட்டங்கள், கோட்டங்கள் ஆகிய ஒவ்வொன்றின் தலைமை இடங்களையும் அதிகார வரம்புகளையும் முடிவு செய்து அரசு கட்டளை பிறப்பித்துள்ளது ; மேலும் துணைக் கோட்டங்களுக்கு அதிகார வரம்புகளைத் தகுந்தவாறு முடிவு செய்யுமாறும் தலைமைப் பொறியாளருக்குக் கட்டளை யிடப்பட்டுள்ளது.

அவநாசி வட்டத்தைச் சேர்ந்த உழுகுடி பெரு மக்களிடமிருந்து அவ்வட்டம் வரண்ட நீர்ப்பற்றற்ற பகுதியா யிருப்பதாலும், அங்கு பெய்யும் மழையளவு மிகக் குறைந்திருப்பதாலும், நிலையான பாசன வசதி பெறுவதற்கு வேறு வழியில்லாததாலும் அவ்வட்டத்திற்குப் பாசன வசதிகள் செய்து தரும்படி பல முறையீடுகள் அரசாங்கத்துக்கு வந்துள்ளன. தமிழ் நாடு மின்சார வாரியம் மேற்கொண்டுள்ள நீர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகளால் மின்கலங்கள் வழி வழி ஓடி வெளிவரும் கடைக்கோடி நீரினை மட்டுமே அவநாசிப் பகுதிக்கு ஓரளவு வழங்கலாமென அரசிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இம்முறையில் சுமார் 300 கோடி கன அடி நீர் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது ; இந்நீரைக் கொண்டு கூடிப்போனால் ஏறக்குறைய 12,000 ஏக்கர் நன்செய் சாகுபடிக்கோ அல்லது 21,000 ஏக்கர் புன்செய் சாகுபடிக்கோ பாசனம் வழங்க முடியும் எனவும் அறிய வருகிறது. இத்திட்டம் பற்றிய ஆய்வு இப்போது நடந்து வருகிறது.

என்னுடைய பொறுப்பின் கீழ் உள்ள சாலைகள், துறைமுகங்கள் பற்றியும் ஒரு சில குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அரசு, ஆண்டு தோறும் மத்தியச் சாலை நிதியிலிருந்து அளிக்கும் நிதி நமது தேவைகளுக்கு நனிமிகக் குறைவாய் உள்ளது. 1966–67-ல் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது ; ஆனால், நடப்பு ஆண்டில் 44·91 லட்ச ரூபாய் ஒதுக்குமாறு நாம் வேண்டியதற்கு எதிராக ரூ. 22·80 லட்சம் மட்டுமே ஒதுக்கும் வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது ; இந்த முக்கிய வளர்ச்சித் துறையில் நமது தேவைகளை இந்திய அரசு பெரிதும் உணர வேண்டுமென்று ஈண்டு வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த அரசு வன்மையுடனும் இடைவிடாமலும் முறையிட்டதற்கு மேல் பொதுமக்களின் உரிமைக் குரலுக்கு இணங்கவும் இந்திய அரசு இறுதியாக தூத்துக்குடியில் ரூ. 24·40 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை மேம்படுத்த ஒப்பளிப்பு வழங்கியது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இறுதியாக முடிவு செய்துள்ள கால அட்டவணைப்படி தலைமைத் துறைமுகப் பணி 1970-ல் முடிவடையவிருக்கிறது. துறைமுக எல்லைவரை வெளிச்சாலைகள் அமைத்தல், துறைமுகத்திற்குப் புறப் பகுதிகளிலிருந்து நீர் வழங்குதல் போன்ற வசதிகளுக்காக மாநில அரசாங்கமும் இதுகாறும் ஏறக்குறைய ரூ. 110·00 லட்சம் செலவிட்டுள்ளது.

காண்ட்லா துறைமுகம் தங்குதடையற்ற வாணிகம் நடைபெற சுங்கந் தவிர்ந்த துறைமுகமாகச் செய்யப்பட்டிருப்பதைப் போல, தூத்துக்குடி துறைமுகத்தையும் சுங்கமற்ற துறைமுகமாக அறிவிக்க வேண்டுமென்று இந்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காண்ட்லாவிலுள்ள சுங்கமற்ற வாணிக மண்டலமே இன்னும் ஆய்வு நிலையில் உள்ள தென்றும்

காண்ட்லா மண்டலம் முழுதும் செயல்படத் தொடங்கிய பின்னரே தூத்துக்குடித் துறைமுகத்தை சுங்கமற்ற வாணிக மண்டலமாக அறிவிப்பது குறித்து ஆலோசிக்க முடியுமென்றும் இந்தியத் துணைப் பிரதமரும் மத்திய வர்த்தக அமைச்சரும் எழுதியுள்ளனர்.

எனது உரையை முடிப்பதற்கு முன், பொறியியல் பணியிலுள்ள அதிகாரிகள் ஓய்வுபெறும் வயது பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். தகுதி பெற்ற பொறியாளர்கள் பலர் வேலையின்றி மலிந்து மிகுந்த இன்றைய நிலையில், பலருக்குப் பணி உயர்வு பெற இயலாமல் தேக்க நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் இது பற்றி அரசு மறு ஆய்வு செய்து ஓய்வு வயது வரம்பினை 55-ஆக மீண்டும் ஆணையிட ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இது குறித்து அரசு முடிவு செய்யும்.

பாசனத்தைப் பெருக்குவதற்கும் இப்போதுள்ள பாசன வசதிகளை மேம்படுத்தவும் இயன்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர் என நம்புகிறேன். மேம்பாடு அடைந்த உழவு முறைகளைப் பின்பற்றும்படியும், பாசன நீர் வசதியை நல்ல வழிகளில் கையாளும்படியும் நாம் பெரிதும் வலியுறுத்த வேண்டும். அதிக அளவிற்கு விளைச்சலைப் பெருக்க மிகச் சிறந்த சிக்கன முறைகளில் நீரைப் பயன்படுத்துவது குறித்து உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைத் துறையினரும் பரிவுரை வழங்கி வருகின்றனர்.

பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த முன்னுரை உறுப்பினர்களுக்கு அச்சியற்றி வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பாசன வசதிகள் பற்றிய ஆய்வுரையும்*, தமிழகத்திலுள்ள சிறு துறைமுகங்கள் ஆற்றும் பணி குறித்த 1967–68 ஆண்டுக்குரிய ஆய்வுரையும்**, தமிழகத்தின் சாலை வளர்ச்சி, கட்டட அமைப்புத் திட்டங்கள் பற்றிய ஆய்வுரையும்† உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. *இதற்கிடையே நாம் புதிதாகச் செய்ய இருக்கிற பொதுப் பணித்துறை சீரமைப்புபற்றிய புத்தகம்*, 350 பக்கங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று விரைவில் அளிக்கப்பட இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்து, இறுதியாக என் உரையை ஆற்றுவதற்கு உறுப்பினர்கள் வழி வகுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்களின் உரை அச்சிடப்பட்டிருந்தாலும் அது பேரவையிலே ஆற்றிய உரையாகக் கருதப்பட்டு நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெறும்.

***திரு. வ. ஜார்ஜ்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் தங்களுடைய ஆட்சியின் கீழ் நடந்த ஓராண்டு சாதனைகளைப்பற்றி சில கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

முதலாவதாக, காவிரி சங்கமுகப் பகுதியில் இருபோகப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவைக் கூட்டி புதிய பயிர் முறையைச் செயலுக்குக் கொண்டு வந்த சாதனை என்றும், இரண்டாவதாக புதிய கிணறுகளை வெட்ட மின் இணைப்பு வழங்குதல் குறித்த தடையை அரசு தளர்த்தியிருக்கிற சாதனையென்றும், மூன்றாவதாக முன்பு 50 எக்கர் தொகுதி வரையில் கண்ணி வாய்க்கால்கள் அரசின் செலவில் ஏற்படுத்தப்பட்டு வந்ததை அரசின் செலவிலே 25 எக்கர் தொகுதி வரைக்கும் கண்ணி வாய்க்கால்கள் அமைக்கும் இந்தச் சலுகையை எல்லாத் திட்டங்களுக்கும் விரிவுபடுத்த கொள்கையளவில் முடிவு செய்துள்ள சாதனையென்றும், நான்காவதாக, தற்போது திரைப்படம் பிடிப்பதற்கு 1,000 ரூபாயாக இருந்த கட்டணத்தை 300 ரூபாயாகக் குறைத்த சாதனையென்றும், கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைக் கூறி முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

---

* 607—631-ம் பக்கங்களில் I-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
** 632—677-ம் பக்கங்களில் II-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
† 648—673-ம் பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



முதலாவதாக, ஒரு போகப் பயிர்கள் விளையும் இடங்களை இருபோக சாகுபடி செய்யும் நிலமாக ஆக்க வேண்டுமென்ற திட்டம் முன்னரே உள்ள ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின்படி இந்த அரசும் தொடர்ந்து செயல்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, புதிய கிணறுகளை வெட்ட மின் இணைப்பு வழங்குதல் குறித்த தடையைத் தளர்த்தியிருப்பது நல்ல முறையில் உழவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்று கருதிக்கொள்ள வேண்டிய ஒரு விஷயம்தான்.

அடுத்தபடியாக, 50 எக்கர் என்றிருந்த வரம்பே இப்பொழுது 25 எக்கர் தொகுதி வரைக்கும் அமைக்கும் சலுகையை விரிவுபடுத்த கொள்கையளவில் முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிக் கொள்கையளவோடு இந்த முடிவு நின்றுவிடுமா அல்லது தொடர்ந்து பல திட்டங்கள் அதன்கீழ் நீட்டப்பட்டு நடைபெறுமா என்று அறிய ஆசைப்படுகிறேன். இப்பொழுது 50 எக்கருக்கு மேற்பட்ட இடங்களில் பாசன வசதி செய்ய வேண்டுமென்றால் இந்தத் திட்டங்களுக்கு அரசாங்கத்தின் சாங்ஷன் வர வேண்டிய நிலைமையிருக்கிறது. இதனால் பெரிதும் தாமதப்பட வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இந்த அதிகாரத்தைக் கொஞ்சம் "டிசென்ட்ரலைஸ்" செய்து சூப்பரின்டெண்டிங் இன்ஜினியர் அளவிலும் கொடுக்க வழி முறைகளை வகுத்துச் செய்தால் சிறிய திட்டங்களுக்கு உபயோகமாக இருக்கும். அவ்வாறு செய்து அதை விரைவில் அமல்படுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். உதாரணமாக என்னுடைய தொகுதியில் திருவாங்கோடு, அலியோட்டுக் காத்திறகு எக்ஸ்டென்ஷன் கானல் ஸ்கீம் ஒன்று சுமார் 75 எக்கராவிற்குப் பயன்படக்கூடிய அளவில் இருந்தது. அது ஏழு வருடங்களுக்கு முன்னால் மாவட்டக் கலெக்டர் அளவில் சாங்ஷன் செய்யப்பட்டு இலாக்காவிற்கு வந்த பிறகும் அரசாங்கத்தினால் சாங்ஷன் செய்யப்படாமல் செயலற்று இருக்கிறது. எனவே இந்தமாதிரி குறைந்த எக்கர் அளவில் சாங்ஷன் செய்யும் வரம்பளவை அதிகப்படுத்தி சூப்பிரண்டெண்டிங் என்ஜினியருக்கு அந்த சாங்ஷன் பண்ணும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் திருவிளங்கோடு எக்ஸ்டென்ஷன் ஸ்கிம் பல வருஷமாக இருந்தும் கன்னியாகுமரி டிஸ்டிரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சிலில் கூட தீர்மானம் நிறைவேற்றியும் எந்தவித நடவடிக்கையும் இல்லாமலிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. இந்த அரசு அதில் கவனம் செலுத்தி உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, திரைப்படம் பிடிப்பவர்களுக்கு 1,000 ரூபாயாக இருந்த கட்டணத்தை 300 ரூபாயாகக் குறைத்திருப்பது நம்முடைய வருமானத்தைக் குறைத்துக் கொண்டிருப்பதாகத்தான் கருதுகிறேன். அதற்குக் கூறப்பட்டிருக்கும் காரணம், சீர்ப்பயண வளர்ச்சிக்குப் பயன் தருவதாக அமையுமென கருதுவதாகக் கூறப்படுகிறது. ஆயிரம் என்றேயிருந்தாலும் கூட திரைப்படப் பிடிப்பாளர்கள் நிச்சயமாக அந்தக் காட்சிகளை எடுக்கத்தான் செய்கிறார்கள். அப்படி எடுத்துத்தான் வந்தார்கள். இது உண்மையிலேயே திரைப்படம் எடுப்பவர்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடியதாக அமையுமே தவிர மற்ற முறையில் நமது வருமானத்தைப் பெருக்கியதாகவோ, சீர்ப்பயண வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் ஏற்றம் காணும் முறையிலோ அல்ல என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதிக்கு இந்த அரசு பெரிய அளவில் செயல்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், மொத்தமாக 15,84·27 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவிடப்போவதாக கணக்குக் காட்டியிருக்கிறார்கள் தங்களுடைய உரையில். ஆனால் உண்மையிலேயே நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தெளிவாக, உன்னிப்பாகக் கவனித்தால் சுமார் 357 இலட்சம் ரூபாய்தான் பெரிய பாசன வசதிகளுக்கும், சுமார் 769 இலட்சம் ரூபாய்தான் சிறு பாசனங்களுக்காகவும் பயன்படும். மீதமுள்ள தொகை எஸ்டாபிலிஷ்மெண்ட், மற்றும் மற்ற செலவுகளிலேதான் போகிறது. இந்த மாதிரி 1966–67-இல் கூட

இரிகேஷனுக்காக 438 இலட்சமும், மைனர் இரிகேஷனுக்காக 1054 இலட்சமும் செலவிடப்பட்டது 1966–67-ஐவிட இந்த ஆண்டு நீர்ப்பாசனத்திற்கு மொத்தமாகப் பயன்படத்தக்க வகையில் 'அலாட்' செய்திருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்ற வருஷம் 422 இலட்சம் இரிகேஷனுக்காக என்றால், மைனர் இரிகேஷனுக்கு 955 இலட்சம் மட்டும்தான் செலவிடப்பட்டது. கடந்த வருஷத்திலேகூட இந்தச் செலவு குறைவாகத்தான் உள்ளது. வரவர குறைந்துகொண்டே போகின்ற நிலைமையைப் பார்த்தால் உண்மையிலேயே பாசன வசதிக்காக அதிகமாக ஒதுக்கப்படுவதாகத் தோன்றவில்லை. பாசன வசதியின் கீழ் மேலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக என்னுடைய வெட்டுத்தீர்மானத்தில் கொடுத்திருப்பதைப் போல, பாசன வசதியை 3 இலாக்காக்களிலே சேர்த்துச் செய்யப்படுகின்றன. ஃபுட் புரொடெக்ஷன் இலாக்கா மானாவாரி குளங்களைப் பராமரிக்க 5 ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசனம் அளிக்கக்கூடிய அந்தக் குளங்களை மட்டும் பராமரிக்கவிருக்கிறது. 5 ஏக்கருக்கு உட்பட்ட அளவு பாசனம் அளிக்கும் மானாவாரி குளங்களைப் பராமரிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பிறகு கனால் நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய குளங்கள் அனைத்துமே பராமரிக்கும் பொறுப்பு பி. டபிள்யூ இலாக்காவிலும் என்ற முறையிலே மூன்று இலாக்காக்கள் நீர்ப்பாசனத் துறையைக் கவனித்து வருகின்றன. மூன்று இலாக்காக்களிலும் கவனம் செலுத்துவதால் நன்மை ஏற்படவில்லை. செலவுதான் அதிகமாகிறது. மானாவாரி குளங்களை ஃபுட் புரொடெக்ஷன் எடுப்பதற்கு வில்லேஜ் ஆஃபீஸர் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும். அதற்குக் காலதாமதம் ஆகிறது. அதை பி. டபிள்யூ. டிபார்ட்மெண்டியே ஏற்றுச்செய்தால் போதும் என்று தோன்றுகிறது. பி. டபிள்யூ இலாக்கா சானல் குளங்களைச் சரியாகப் பராமரிப்பதாகத் தோன்றவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் சேனல் பாசனத் திட்டத்திற்கு பல குளங்கள் இருக்கின்றன. அக்குளங்களையும் தூர்ந்துபோய் அங்குள்ள விவசாயிகளால் வெளவப்பட்டு சீரடைந்த நிலையில் இருக்கின்றன. கடந்த ஆண்டு தண்ணீர்த்தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் குளங்கள் பயன்படவில்லை. அநேக ஏக்கர்கள் பயனடையாமல் போயின. அவற்றைச் செப்பனிட்டால் சாதாரணமாக மழை பெய்யாது விட்டால்கூட விளைச்சலைப் பார்க்கமுடியும். இந்நிலையில் அங்குள்ள குளங்கள் பி. டபிள்யூ. இலாக்காவாலே கவனிக்காமலே தூர்ந்துபோய் விவசாயிகள் வெளவுதல் செய்து தங்கள் உடைமையாக மாற்றிக்கொள்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கடாரப் பெருந்தளம் என்று ஒரு குளம் கோதநல்லூர் பகுதியில் இருக்கிறது. அந்தக் குளத்தின் ஆயக்கட்டு சுமார் ஆயிரம் ஏக்கர் வரை செல்லும். ஆனால் கரை அடைந்து தூர்ந்ததாலே கையேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதைச் சீர் செய்தால் சுமார் ஆயிரம் ஏக்கர்களுக்கு, தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில், பயனடையச் செய்ய முடியும். அதைப்போலவே கல்குளம் வில்லேஜில் புனமாகுளம் என்றொன்று. இவ்வளவில் எல்லாம் ஆயிரம் ஏக்கர்கள் பாசனவசதி செய்யலாம். ஆனால் அந்தக் குளம் கவனிக்கப்படாமல் சீரழிந்து இருக்கிறது. அதேபோல் இரணியல் பகுதியில் கோவிலகுளம் என்று ஒன்று இருக்கிறது. அங்குள்ளவர்கள் அத்தனை பேரும் குடியானவர்கள். பி. டபிள்யூ. இலாக்காவினரும் இந்த சானல் புரவு குளங்களைப் பாதுகாப்பதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். ஒன்றில் பி. டபிள்யூ. டி. அதில் கவனம் செலுத்தி சிரத்தையோடு செய்ய வேண்டும். இன்றேல் இந்த அலுவல்களையும் ஃபுட் புரொடக்ஷன் இலாக்காவிலேயே ஒப்படைத்துக் கொடுத்தால் நலமாயிருக்கும் என்று கருதுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வேலைகளைப் பராமரிக்கிற ஹைவேஸ் டிபார்ட்மெண்ட், ரூரல் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட், டபிள்யூ. டி. டிபார்ட்மெண்ட் என்று மூன்று டிபார்ட்மெண்ட்களாக இருப்பதை சேர்த்து ஒரே டிபார்ட்மெண்டாக செய்வதன் மூலம் நலமாகவும் சிக்கனமாகவும் இருக்குமென்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக, இந்த இரிகேஷன் திட்டத்தின்கீழ் எங்கள் மு.ப 1100
கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்பொழுது சித்தாறு பட்டணங்கால் வேலைத் திட்டம் நடந்து வருகிறது. இந்த திட்டம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் முடியாமல் மிகவும் மெதுவான முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் மிகுந்த நாட்டம் கொண்ட இந்த அரசாங்கம் இந்த திட்டத்தை மிக விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த திட்டத்தின்கீழ் எங்கள் மாவட்டத்தில் கருங்கல்லில் ஒரு செக்ஷன் ஆபீஸர் அலுவலகமும் ஒரு டிராவலர்ஸ் பங்களாவும் கட்டுவதாக முதலிலே திட்டம் இருந்தது. ஆனால், இப்பொழுது அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டதாக அறிகிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே இந்த இரண்டு கட்டிடங்களையும் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஏன் அந்த கட்டிடங்கள் கட்டவில்லையென்று கேட்டதற்கு, நிலம் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். இப்பொழுதே நிலம் கிடைக்கவில்லையென்றால் பின்னால் நிலம் கிடைக்குமா? இந்த செக்ஷன் ஆபீஸர் அலுவலகத்தையும் டிராவலர்ஸ் பங்களாவையும் குளித்துறை என்ற இடத்தில் கட்டுவதாக முடிவு செய்திருக்கிறார்கள். குளித்துறை ஒரு முனிசிபல் நகரம். அங்கேயே எல்லா அலுவலகங்களையும் கட்டுவதென்று முடிவு செய்தது ஜனநாயகப் பண்பிற்கு உகந்ததா? டிசென்ட்ரலைசேஷன் என்ற முறையில் கருங்கல்லிலே அந்த இரண்டும் இருக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த கருங்கல் ஊரிலே பழைய திருவிதாங்கூர் ஆட்சிக்காலத்திலேயே ஒரு டிராவலர்ஸ் பங்களா இருந்தது என்பதும் நினைவுபடுத்தி அரசினர் உயர்நிலைப் பாடசாலைக்கு வேறு இடம் கிடைக்காமையால் அந்த டிராவலர்ஸ் பங்களாவை அதற்கு எடுத்துக் கொண்டார்கள் என்றும், அங்கே இப்பொழுது ஒரு டிராவலர்ஸ் பங்களா தேவை என்பதையும் சுட்டிக் காட்டி, அங்கே ஒரு டிராவலர்ஸ் பங்களா கட்ட மீண்டும் பரிசீலித்து திட்டமிட்டு அங்கே நிறுவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சாலை வளர்ச்சித் துறையிலே நமது அரசு போதிய அளவில் அக்கறை காட்டுவதாக எனக்குத் தெரியவில்லை. சென்னையிலுள்ள சாலை வளர்ச்சிக்குப் பெரிதும் அக்கறை காட்டுகிறார்கள். அதை நான் குறை சொல்லவில்லை. அதில் அக்கறை காட்டவேண்டியதுதான். ஆனால் மற்ற பகுதிகளிலுள்ள சாலைகளுக்கும் அதே அளவு அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாவேன். சாலை வளர்ச்சியில் 1966–67 ம் ஆண்டு ஸ்டேட் ஹைவேஸ்க்கு மட்டும் 65·3 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஆனால் கடந்த பட்ஜெட்டில் இந்தத் துறைக்காக 68·48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டும், ரிவைஸ்டு பட்ஜெட்டில் 48·48 இலட்சம் அளவே செலவு செய்யப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. அந்த அளவில் புதிய பட்ஜெட்டில் 61·73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. அதுவும் கடந்த பட்ஜெட்டைப் போலவே குறைவாகவே செலவுச் செய்யப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. இந்த அளவில் நாம் சென்றுகொண்டிருப்போமானால் போக்குவரத்து வசதிகள் பெரும் அளவில் பாதிக்கப்படும் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தியா முழுவதும் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 103 மைல் நீளமுடைய சாலை அமைப்பு இருக்கிறது என்றும், இங்கே நம்முடைய மாநிலத்தில் 104 மைல் நீள சாலைகள் இருக்கின்றன என்றும் சொல்வது எந்த விதத்திலேயும் திருப்தி அளிப்பதாக இல்லை. டென்ஸிட்டி குறைந்த மாநிலங்களில், ஜனத்தொகை குறைந்த மாநிலங்களில் ரோடு வசதிகள் குறைவாக இருந்தால் கூடப் போதும். ஆனால் நமது மாநிலம் டென்ஸிடி கூடுதலான மாநிலம் என்பதைச் சுட்டிக்காட்டி, ரோடு வளர்ச்சிக்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த வருஷம் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு பர்லாங் ரோடு கூட ஸ்டேட் ஹைவேஸ் லால் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்று மிகவும் மன வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாவேன். சாதாரணமாக, பேருந்து வண்டிகள் செல்லுகின்ற வழித் தடங்கள் அனைத்தையுமே தேசிய நெடுஞ்சாலையாக, மாநில நெடுஞ்சாலையாக மாற்றத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். ஆனால், உண்மையிலே இந்த திட்டம் இருந்தும்கூட, கன்னியாகுமரி மாவட்டத்திலே கடந்த வருஷம் ஒரு பர்லாங் ரோடு கூட இந்த திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை மாநில நெடுஞ்சாலைகளாக்கப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியது. ஆகவே, உடனடியாக அதிக மைல்கள் உள்ள ரோடுகளை இந்த திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆய்வுரையின் 12-ம் பக்கத்தில் கடந்த வருடங்களில் வருடம் ஒன்றுக்கு 250 மைல் தடங்களை இத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் எடுத்துக் கொண்டு வந்தது என்று இருந்ததை இந்த வருஷம் 300 மைல் அளவுக்கு உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே ஆய்வுரையின் அதே பக்கத்தில் 1960–61-ம் ஆண்டு முதல் 1966–67 வரை 4,512 மைல் நீளமுள்ள சாலைகள் இத்திட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளபபட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே, 7 வருஷத்திற்குள் 4,512 மைல் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், இது வருஷத்திற்கு 250 மைல் 300 மைல் அல்ல, இன்னும் கூடுதல் அளவாகவே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இப்பொழுது 300 மைல் அளவுக்குத்தான் எடுத்துக் கொள்ளப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாம் இருப்போமானால் அது போதாது. எனவே, இந்த திட்டத்தின் கீழ் கூடுதல இடம் எடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருநெல்வேலி ஹைரோட் என்ற இடத்திலே........

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** முன்பெல்லாம் ஆண்டொன்று 1,000 என்ற அளவிலே எடுத்தார்கள். அதற்குப் பிறகு 500 என்கின்ற அளவுக்கு அது குறைக்கப்பட்டது. ஆயிரம் என்ற அளவில் இருந்ததால் இந்த அளவுக்கு எடுத்தோம் என்று சொல்லிக்கொள்ள முடிந்தது பிறகு 250 என்று பழைய சர்க்கார் மாற்றியிருக்கிறது. அதை 300 என்று மாற்றியிருக்கிறோம். நாம் இப்படியே, 300, 500 என்ற அளவில் ஆயிரத்தை எட்டலாம் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்தத் திருநெல்வேலி ஹைரோடில் டிரெயின் கடந்து போகிறது. அது போக்கு வரத்து மிகவும் நிறைந்த இடம். அங்கு கேட்டை மூடும்போது போக்கு வரத்து பல மணி நேரம் நின்றுவிடுகிறது—பாதிக்கப்படுகிறது. சில சமயங்களில் ஒரு மணி நேரம் பொறுத்தும் கேட் திறக்கப்படுவதில்லை. அந்த முறையில் மக்கள் பெரிதும் இன்னல்படுகிறார்கள். எனவே, போக்கு வரத்து ஒழுங்காகச் செல்வதற்காக ஒரு திட்டம் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், என்னுடைய மாவட்டத்தில் நாகர்கோவில் திருவனந்தபுரம் நேஷனல் ஹைவேவின் ரோடு என ஒன்று இருக்கிறது. அந்த ரோடு சிமெண்ட் காங்க்ரீட்டால் ஆனது. பல வருடங்களுக்கு முன்னால் அது போடப்பட்டதால், இன்று பழுதடைந்து கிடக்கிறது. அப்படிப் பழுதடைந்த இடங்களிலெல்லாம் துண்டு துண்டாகத் தார் போட்டு வருகிறார்கள். அது மத்திய அரசின் கீழ் உள்ளதால் அங்கே மீண்டும் சிமெண்ட் கான்க்ரீட் ரோடு போடுவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த ரோடில் சிமெண்ட் கான்க்ரீட் போடுவதற்கு இந்த அரசு வழி வகை செய்ய வேண்டுமென்று மறு முறையும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, இந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் சாலைகளுக்காக இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் வெறும் 9 இலட்சம் ரூபாய்தான். இது போதாது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கிராமப் புறங்களில் எல்லாம் நாகரிகம் பரவி வருகின்ற இந்தக் காலங்களில் போக்கு வரத்து வசதியையும் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1966–67-ம் ஆண்டு 13.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இவ்வாண்டு 9 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவு என்று சுட்டிக்காட்டி, அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதிய வருமானம் இல்லையென்பதை உணர வேண்டுமென்று கூறி இப்பொழுது மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸேஷன் உள்ள வருமானப்படி அவர்களுக்கு ஒதுக்குகிற பங்கீட்டு முறையை மாற்றி பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வழி செய்ய வேண்டும். இப்பொழுது அவர்களுக்கு ரோடுகளைப் பராமரிக்கப் போதிய வருமானமே கிடையாது. ஆதலால் அவர்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி வசதிகள் கூடுதலாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சில பஞ்சாயத்து யூனியன்களில் ரோடுகளுக்குப் பாலம் கட்ட வேண்டுமென்றால் பணம் கிடையாது. அவர்கள் ஒரு பாலம் கட்டுகின்ற பணம் ஒரு வருஷத்திற்கு இந்த இனத்தின் கீழ் செலவு செய்கின்ற அளவுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் பாலங்கள் கட்டுவதை ஹைவேஸே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லாமலிருந்தால் இந்த ரோடுகளைச் சீர்படுத்த முடியாது. என்னுடைய தொகுதியில் தக்கலை யூனியன் இருக்கிறது. அந்த யூனியனுக்கு சாலைகள் வளர்ச்சி பராமரிப்பு என்ற வகையில் ஓராண்டுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ. 46,000. ஆனால் அந்த தக்கலை யூனியனில் தெங்கள் குழி கருங்கல்சாலையில் உள்ள புல்லத்தாள் குறிச்சி பாலம் என்று ஒரு பாலம் கட்டுவதற்குப் போடப்பட்ட எஸ்டிமேட்—மதிப்பு ரூ. 40,000. அந்தப் பஞ்சாயத்து யூனியன் அந்தப் பாலத்தைக் கட்டவேண்டுமானால் ஒரு வருஷத்திற்கு ரோடு மெயின்டினன்ஸ், வேறு புதிய ரோடுகள் போடுவது, வசதி செய்வது போன்ற எதுவுமே செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே, அந்த பஞ்சாயத்து யூனியன் ஒரு தீர்மானம் போட்டு, அந்தப் பாலம் கட்டுகின்ற பொறுப்பை ஹைவேஸே ஏற்றுகொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறது. ஆனால், இதுவரையிலும் அது செயல்படவில்லை. இந்த மாதிரி பல இடங்களிலும் பல பாலங்கள் இருக்கின்றன என்று அறிகிறேன். பஞ்சாயத்து யூனியன் இந்த ஒரு திட்டத்திற்கே ஒரு வருஷத்துப் பணத்தை செலவழிக்கவேண்டுமென்ற நிலை இருப்பதால், இதை ஹைவேஸே எடுத்துக்கொள்ள வேண்டும்; ஹைவேஸே அந்த மாதிரிப் பாலம் கட்டிக் கொடுக்கிற பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு கட்டிடங்கள் சம்பந்தமாக, இந்த அரசானது பல கட்டிடங்கள் கட்டி வருவதாகத் தெரிகின்றது. முன்னால் எமர்ஜென்ஸி காரணமாகப் பல கட்டிடங்கள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டன. எங்கள் மாவட்டத்தில் கருங்கல் உயர்நிலைப் பாடசாலைக்காக கட்டிடம் கட்டுவதற்கு 1½ இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது, 1964–லே. ஆனால், பின்னால் எமர்ஜென்ஸி என்ற பெயரில் அந்தக் கட்டிடம் நிறுத்தப்பட்டது. நமது அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் கூட அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்துவிட்டு, மாட்டுத் தொழுவத்தை விடக் கேவலமாக இருக்கிறது என்று பொதுக் கூட்டத்தில் கூறினார்கள். அந்த நிலையில் அந்தப் பாடசாலை உள்ளது. கடந்த வருஷம் எமர்ஜென்ஸி எடுக்கப்பட்ட நிலையில் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் சுமார் ஒரு இலட்சம் ரூபாயில் ஒரு கட்டிடம் கட்டலாம் என்று கூறினார்கள். அதையும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்-அதோடு பப்ளிக் வொர்க்ஸ் பட்ஜெட்டிலே கடந்த வருஷம் 60,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அதையும் பயன்படுத்தவில்லையென்று தெரிகிறது. இவ்வருடம் அந்த ஒதுக்கீடுக்கு மேலே செய்யவில்லையென்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் விலவூரில் அப்பர்பிரைமரி ஸ்கூலுக்கு எந்தவிதமான கட்டிடமும் இல்லை. பொதுவாகவே, எங்கள் மாவட்டத்தில் அரசாங்கப் பாடசாலைகள் அனேகதும் நாட்சடு ஷெட்டில், டெம்பரரி ஷெட்டில்தான் இருக்கின்றன. அவைகளுக்கு பெர்மனென்டாகவோ அல்லது செமி பர்மனன்டாகவோ கட்டடங்கள் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மநாபபுரத்தில் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்காக கட்டடம் கட்டுவதற்கு இடம் எடுக்கப்பட்டு பல வருஷங்கள் ஆகியும், அங்கே கட்டடம் கட்டப்படுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே, அங்கே ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு வழி வகை செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏற்கனவே 22 நிமிடங்கள் ஆகி விட்டன. இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்ல வேண்டியிருந்தால் சொல்லிக்கொள்ளுங்கள். முதல் முதலாக உங்கள் கட்சியின் சார்பிலே நீங்கள் பேசுவதால்இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. வ. ஜார்ஜ்** : என்னுடைய தொகுதியில் துறைமுகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். கொளச்சல், சிறிய துறைமுகங்களில் மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது. நாகப்பட்டினம், கடலூர் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக கொளச்சல் முக்கியத்துவம் வாய்ந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி உதவி சிறிய அளவில் அலாட் பண்ணி வேலை துரிதமாக நடைபெறுவதற்கு வழி வகை இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தி, இந்தத் துறைமுக வேலையை உடனடியாகத் தொடங்குவதற்கு வழி வகைகள் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வொர்க் சார்ஜ்டு பெர்ஸானல் பி.டபிள்யூ.டி., ஹைவேஸ், ஃபுட் ப்ரொடக்ஷன் எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் இருக்கிறார்கள். பழைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பி. டபிள்யூ.டி. கோடில் அவர்களுக்கு எந்த விதமான மனிதாபிமான உரிமைகளும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மாநில அளவிலே ஒரு சம்பள விகிதம் கூட இல்லாமல் இருக்கிறது. பல ஆண்டுகளாக அவர்கள் சேவை செய்துகொண்டு வந்தும், அவர்கள் பெர்மனென்டு செய்யப்படவில்லை, அதாவது வேலையில் ஸ்திரப்படுத்தப்படவில்லை. பெரிய ஆபீஸர்கள் வரும்பொழுது அவர்கள் தயவில் இவர்கள் ஜோலி பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய வீட்டுக் கூலிக்காரர்கள் போல் அநேகமாக பணியாற்ற வேண்டியிருக்கிறதே தவிர, அரசாங்க ஊழியர்கள் என்ற முறையில் பணியாற்றக்கூடிய நிலைமை இல்லை. தயவு செய்து பி.டபிள்யூ.டி. கோடில் வொர்க் சார்ஜ்டு பெர்ஸானல்களுக்கு ஏற்படுத்தப்பட்ட விதி முறைகளைத் திருத்தி அமைக்க வேண்டும். அவர்களுக்கு மாநில அளவில் ஒரு சம்பள விகிதம் கொடுத்து, வெகு நாட்களாகப் பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்று பிற்பகல் 1–30 மணிக்கு பேரவை ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் மாலை 5 மணி அளவில் கூடும் என்பதை நான் இப்பொழுது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உரையாற்றப் பெயர் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேரவையை விட்டுப் போகாமல் இங்கேயே இருக்க வேண்டும். காரணம், எந்த நேரத்திலும் அவர்கள் பேசுவதற்கு அழைக்கப்படலாம்.

**திரு. மு. சின்னசாமி** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து அவற்றையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல நான் விருப்பப்படுகிறேன். முதன் முதலாக என்னுடைய நினைவுக்கு



ஒரு குறிப்பு வருகிறது. 1953-ம் ஆண்டில், 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் இந்தப் பொதுப்பணித் துறை இலாகாவினை தன்னுடைய இரண்டாவது எதிரி என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த இலாகாவானது அரசியல் வாதிகளால் கருதப்பட்டது. ஆனால், 15 ஆண்டுகள் வளர்ச்சிக் கண்ணோட்டத்தை மையமாக வைத்துப் பார்த்தால், இந்த இலாகா தமிழகத்தில் இருக்கக்கூடிய..............................

**திரு. ஆ. கு. சுப்பையா** : பேரவைத் தலைவர் அவர்கள் சற்று முன்பு குறிப்பிட்டது பற்றி விவரம் தெரியவில்லை. தயவு செய்து மீண்டும் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்றைக்கு பிற்பகல் 1-30 மணிக்கு பேரவை ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் மாலை 5 மணிக்குக் கூடும். மாண்புமிகு உறுப்பினர்கள், பேசுவதற்குப் பெயர் கொடுத்திருப்பவர்கள், பேரவையில் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். அவர்களுடைய பெயர்கள் எப்பொழுதாவது கூப்பிடப்படலாம். மாலையில் தான் கூப்பிடப்படும் என்று நினைத்து பேரவையை விட்டுப் போக வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு மு. சின்னசாமி** : அப்படிப்பட்ட குற்றத்திற்கு இலக்கான இந்த இலாக்கா தன்னுடைய கடினமான உழைப்பின் மூலமாக, நிர்வாகத் திறமையின் காரணமாக தமிழகத்தில் இன்று உணவு உற்பத்தி பெருகுவதற்கு, இந்த நாடு தன்னிறைவு பெறுகிற அளவுக்கு தன்னுடைய கடமையை ஆற்றியிருக்கிறது. ஆகவே, அந்த இலாகா சம்பந்தப்பட்ட அனைத்து நண்பர்களுக்கும் முதலில் நான் நன்றி கலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் எவ்வளவு நீர்நிலைத் தேக்கங்கள் உருவாக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்கு அதைப் பெரிய அளவிலே செய்து முடித்து விட்டார்கள் என்று கருதுகிறேன். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இன்று இருக்கக்கூடிய பிரச்னைகளெல்லாம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எவ்வளவு அதிகமாகவும், விரைவாகவும் செய்ய முடியுமோ, அதனைப் பொறுத்துத்தான் நம்முடைய காரியங்கள் முழுமையாக வெற்றி பெறும் என்று நான் நம்புகிறேன். அதையொட்டித்தான் கடந்த ஓராண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்க அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, கடந்த 12 மாதங்களில் விறுவிறுப்பாக 27 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி மகிழ்ச்சி தரக்கூடிய நல்ல நிலைமையில் நாட்டிற்குப் பணி புரிந்து வருகிறது இந்த இலாகா. அதன் காரணமாகத்தான் இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த எதிர்க்கட்சி நண்பர் கூட, இந்த மானியத்தைப் பற்றி குறை எதும் சொல்லாமல், நிர்வாகத் துறையைப் பற்றி குற்றங்குறை எதும் சொல்லாமல், தொகுதியைப் பற்றிய கோரிக்கைகளையே பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தால், இந்த இலாகா முறையாகவும், ஒழுங்காகவும் கடமையைச் செய்திருக்கிறது என்று எதிர்க்கட்சி நண்பர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள் என்றுதான் என்னைப் பொறுத்தவரையில் நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில், 3, 4 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டு, ஏட்டிலே, புத்தக வடிவிலே இருப்பதை நான் படித்துப் பார்த்து, இந்த மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய யோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று இருக்கக்கூடிய கடுமையான உணவுப் பிரச்னையை மனதில் வைத்து, பெரிய நீர்த்தேக்க திட்டங்கள் அனைத்தையும் ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு தள்ளிப் போட்டுவிட்டு, லீவு கொடுத்துவிட்டு, அதிலே இருக்கிற மூலதனத்தை சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு "டைவர்ட்" செய்து, அத்தனை நீர்ப்பாசனத் திட்டங்களையும் வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தினை அருள் கூர்ந்து அவசியம் சிந்திக்கவேண்டும் என்று நான் கேட்பேன்.

[திரு. மு. சின்னசாமி] [1968 மார்ச் 23

அது மாத்திரமல்ல. சற்றேறக்குறைய 36,000-லிருந்து 37,000 ஏரிகள் வரை தமிழகத்தில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அவைகள் சேரன், சோழன ஆண்ட காலத்தில் உருவாக்கப்பட்ட ஏரிகள். அவைகளெல்லாம் மண் மூடி எந்த விதமான உபயோகமும் இல்லாமல் இருக்கின்றன என்ற கணக்கு தென்படுவதால் ஏரிகள் அனைத்தையும் உடனடியாகச் செப்பனிடுவதற்கு, ஏரிகள் நிர்வாகம் பி.டபிள்யூ.டி. நீர்ப்பாசன இலாகாவின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்என்ற யோசனையைக் கூற விரும்புகிறேன்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை).

அதுமட்டுமல்ல, உதாரணமாக, கோவை மாவட்டத்தில் நொய்யல் நதி ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கே ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தான் அதிகமாக மழை பெய்து காட்டாறு போல் வெள்ளம் வந்துகொண்டிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் ஏரிகளைச் சங்கிலித் தொடர்பு போல் இணைத்து அந்த ஏரிகள் அனைத்திலும் தண்ணீரைப் பிடித்துத் தேக்கிவைக்கும்படியான நிலைமையில், அம்மாதிரி சங்கிலித் தொடர்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற என்னுடைய யோசனையை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. இன்று ரெவின்யூ இலாகாவில் ஒரு கணக்கு வருகிறது, என்ஜினீயரிங் இலாகாவில் ஒரு கணக்கு வருகிறது நீர்ப்பாசன அளவைப் பற்றி. உதாரணமாக ஒரு பகுதியிலே ஒரு லட்சம் ஏக்கருக்கு நாங்கள் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் விட்டிருக்கிறோம் என்று என்ஜினீயரிங் டிபார்ட்மெண்டு சொன்னால், அதே நேரத்தில், ரெவின்யூ நிர்வாகத்திலிருந்து வருகிற கணக்கைப் பார்த்தால், 10,000 அல்லது 20,000 ஏக்கர் குறைத்துக் கணக்கு வருகிறது. எங்கேயோ சிறிய கோளாறு இருக்கிறது. எனவே, என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எப்படி மின்சார வாரியம் மின்சாரம் சப்ளை செய்து, அதற்கான கட்டணத்தையும் வசூல் செய்கிறதோ, ரெவின்யூ வசூலிக்கும் உரிமையும் மின்சார வாரியத்தினிடம் எந்த விதத்தில் இருக்கிறதோ அதே பிரகாரம் நம்முடைய மாநிலத்தில் நீர் கொடுக்கிற என்ஜினீயரிங் இலாகாவே நீர் வரியை வசூல் செய்கின்ற பொறுப்பு அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, அவை இரண்டும் ஒரே தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டால், சர்க்காருக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் அதிகமாக வரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், இப்பொழுது பணம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. ஒரு விவசாயி 10 ஏக்கருக்கு பாய்ச்சுகிறான் என்றால், ரெவின்யூ அடங்கலில், கணக்கு எழுதுவதில் 7 அல்லது 8 ஏக்கர் என்று தான் இருக்கும். சரிவரச் செய்வதில்லை. மாநில அளவில் பார்த்தால், கிட்டத்தட்ட 20 சத வீதம் கணக்குத் தவறு ஏற்படுகிறது. எனவே, நீர்ப்பாசன வரியை நீர்ப்பாசன இலாகாவே வசூல் செய்ய வேண்டும் என்கிற நிலையை ஏற்படுத்தினால், இந்த அரசுக்கு ஓர் ஆண்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் வரும் வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனையொட்டி, நீர்ப்பாசனத்தில் கடைக் கோடி வாய்க்காலில், கண்ணியில், இரட்டை ஆட்சி இருக்கிறது. 50 ஏக்கருக்குக் கீழே இருக்கும் பாசனங்கள் ரெவின்யூ இலாகாவினரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற சாதாரண விவசாயிகள் இரட்டை ஆட்சி முறையில் அல்லல்படுகிறார்கள். கடைக்கோடி வரைக்கும், ஆய்வு உரையில் 50 ஏக்கர் என்ற நிலையிலிருந்து 25 ஏக்கர் என்று போட்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி செலுத்தவேண்டும். என்றாலும், கடைசி நிலை வரையில், நீர்ப்பாசன இலாகாவே எடுக்க வேண்டும், ரெவின்யூ இலாகாவினரிடம் கொடுக்கக் கூடாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதில் சட்டச் சிக்கல்களும் வருகின்றன. எங்கள் பகுதியில் ஒரு வழக்கு 7 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நடந்து, ஒவ்வொரு விவசாயியும் 5,000 ரூபாய் முதல் 7,000 ரூபாய் வரையில் செலவு செய்து நீதி பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. கடைசி ஆயக்கட்டுதார் வரைக்கும் தண்ணீர் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த



1968 மார்ச் 23] [திரு. மு. சின்னசாமி]

வேண்டும். கோப்பு வாய்க்கால்—ஃபீல்ட் போதிஸ் ஆக்ட்—கடைசி வரைக்கும் வெட்டி பயன் அடையும் விவசாயிகள் நட்ட ஈட்டையும் விவசாயிகள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அனுபவ ரீதியாகச் சொல்லுகிறேன். இதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கவனத்தில் இறுத்திக்கொள்வார் என்று நம்புகிறேன்.

வழக்கம் போல இல்லாவிட்டாலும், என்னுடைய மாவட்டத்தில் துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. ஆய்வு உரையிலும் சொல்லபபட்டிருக்கிறது. அது போல, 10 கோடி ரூபாயைச் செலவழி விட்டு, 1,95,000 ஏக்கர் கீழ் பவானித் திட்டத்தில் இருக்கிறது. பரம்பிக்குளம்-அளியாறு திட்டத்தில் 2,40,000 ஏக்கர் இருக்கிறது. என்னுடைய பகுதியில் திட்டம் ஆரம்பித்தது முதற்கொண்டு அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக தண்ணீர் எவ்வளவு இருக்குமோ அதாவது வாடர் கபாசிடி, அதை விட அதிகமாக ஏரியாக்களை முந்தைய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை இப்பொழுது மாற்றி எழுத முடியாது. பொறியியல் தத்துவத்திற்கு, டெக்னிகல் நாலெட்ஜ்-க்கு அப்பாற்பட்ட வகையில் லோயர் பவானி ஏரியா அதிகமாக இருக்கிறது. அதே போலத் தான் பி.ஏ.பி. ஸ்கீமிலும் அதிகமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். அதன் காரணமாக, இப்பொழுது இருக்கும் நிலையில் இருக்கும் ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இல்லாமல் வருடந்தோறும் லோயர் பவானியில் சங்கடங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றமும் நன்கு அறியும் என்று நம்புகிறேன். அதற்கு என்னுடைய தாழ்மையான யோசனை என்னவென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எனனோடு ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் அவர்களும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் ; லோயர் பவானியில் வாணியாற்று நீர் வருகிறது ; அந்த வாணியாற்று நீரில், தட்டப்பள்ளி, அரககன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால் பாசன ஏரியாக்கள் இருக்கின்றன. அதையும் லோயர் பவானியையும் ஒரு யூனிட்டாக அமைத்து, உயர் மட்டக் கமிட்டி (ஹை லெவல் கமிட்டி) ஒன்று போட்டு, அதைப் பற்றிப் பரிசீலனை செய்து, அங்கே இருக்கின்ற, பொறியியல் நிபுணர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றுமுள்ள மாவட்ட அதிகாரிகள், இவர்களை நியமித்து, ஒரு நிரந்தரமான பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு லட்சம் ஏக்கர் 10 கோடி ரூபாய் செலவில் பயனடையவேண்டும் என்று திட்டம் போட்டாகிவிட்டது. ஆண்டுக்கு ஒரு லட்சம் ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் கொடுத்தால், பத்து கோடி ரூபாய் மூலதனச் செலவு செய்த சர்க்காருக்கு வரும்படி இல்லாமல், உழவர்களுக்கும் பயன் இல்லாமல், உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்படாமல் இருப்பதையெல்லாம் மனதில் இறுத்தி, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வருகிற ஐந்தாண்டு காலத்திற்கு எந்தவிதமான பெரிய திட்டங்களையும், நீர்த் தேக்கங்களையும் அருள் கூர்ந்து ஒத்தி வைத்து விட்டு, இந்த இரண்டு லட்சம் ஏக்கராக்களுக்கும் நிரந்தரமான பாசன வசதி கொடுக்கும் வாய்ப்புகளை செய்து, உணவு உற்பத்தி பெருகுவதற்குச் சாதகமாகச் செயல்படவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். எண்ணூரார், நெய்வேலியில் மின் உற்பத்தியான பிறகு, தண்ணீர் அதிகமாக இருந்தால், எப்பொழுது பயிர்கள் தேய்ந்து போகின்றனவோ அப்பொழுது தண்ணீர் கொடுக்கும் வாய்ப்பினை அளிக்க வேண்டும். எனக்கு இருக்கும் தகவல் வரையில், ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்கு கோவையில் எந்தப் பெரிய திட்டங்களையும் செயல்படுத்த வேண்டாம் என்கிறோம். இருக்கும் சங்கடம் தெரிகிறது. அவனாசியில், பல்லடத்தில் குடி தண்ணீர் இல்லாமல் இருப்பினும் கூட, ஏற்கெனவே 10 கோடி ரூபாயைச் செலவழித்து விட்டோம். இரண்டு லட்சம் ஏக்கராக்கள் பயன்படவேண்டும் என்பதை மையமாக மனதில் வைத்துச் செயல்படவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கருத்தினை வலியுறுத்திச் சொல்ல விழைகிறேன்.

அது மட்டுமல்ல. லோயர் பவானி ஏரியாவில், கசிவு நீர் (ஸீபேஜ் வாடர்) வருகிறது. சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் இலாகா சம்பந்தப்பட்ட என்ஜினியர் பணி புரிகிறார்கள். அதிலே இரண்டு விதமான

கேள்விகள் வருகின்றன. வாய்க்கால் பூராவும், லைனிங், செமண்ட் காங்கிரீட் போடுவதா என்பது ஒரு கேள்வி. அதற்குப் பல கோடி ரூபாய்கள் செலவாகும். அப்படித்தான் செய்யவேண்டும் என்கிற விருப்பம் இருந்தால், நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கசிவு நீரை, சிறு சிறு அணைகள் கட்டி ஒரு சொட்டு தண்ணீர் வீணாகாமல் செய்தால், எனக்குக் கிடைத்த தகவல்படி 27,000 எக்கர்களுக்கு மேற்கொண்டும் தண்ணீர் கிடைக்கும் என்றும், கொஞ்சங்கூட பஞ்சம் இல்லாமல் தண்ணீர் கிடைக்க முடியும் என்றும் கணக்கை சம்பந்தப்பட்ட என்ஜினியர் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே 2 லட்சம் எக்கர்கள் இருக்கின்றன. இவையெல்லாம் பாசனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தமிழகத்தில், எவ்வளவு தானியம் கிடைக்கும் என்பதையும் பார்க்கவேண்டும். கோவையில் விஞ்ஞானத்தின்படி எவ்வளவு விளைவிக்க முடியும் என்று இருக்கிறதோ, அந்த அளவிற்கு அதிகமாகவே விளைவிக்கக்கூடியது கோவை மாவட்டம் என்பதில் நான் பெருமைப்படுவேன்.

மற்றொன்றும் சொல்ல விரும்புகிறேன். மொசுக்கரடு ஸ்கீம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அதற்குச் செயற் குறிப்பும் இருக்கிறது. அதோடு காசிப்பாளையம் பள்ளம் என்ற வேறொரு ஸ்கீமும் இருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக, நீர்ப்பாசன இலாகா அடிப்படையில் மாறுதல்களைக் கொண்டுவரவேண்டும் என்றும் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது போல, நீர் வரி வசூல் செய்யும் பொறுப்பை, அந்த அதிகாரத்தை அந்த இலாகாவே ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும் என்றும், டெல்லிப் பேரரசிடமிருந்து அதிகமாக நிதிகளைப் பெற்று, சங்கிலித் தொடர்பு போல நீர்ப்பாசனத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். பெரிய பெரிய திட்டங்களைப் பிற்பாடு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்குச் சூழ்நிலைகள் நன்றாக இருக்கிறது, மூன்று ஆண்டுகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கி, தேவையான கரும்பு, பணப் பயிர்கள் இவற்றையும் வளர்ப்பது உதவியாக இருக்கும் என்கின்ற சிந்தனையோட்டம் சரியாக இருக்குமானால், அந்த இலாகாவினரும், மாண்புமிகு அமைச்சரவர்களும், வெகு வேகமாகச் செயல்படும் அமைச்சர் கடந்த 12 மாத காலத்தில் பொதுப்பணி இலாகாவினர் செய்கின்ற ஒரு சாதனைக்குக் காரணமாக இருக்கிறார் என்றும், ஆங்காங்கே மாவட்டங்களில் கருத்தரங்குகள் கூட்டி, கீழ்க்கோடி நிலைகளை, உணர்ச்சிகளைத் தெரிந்துகொண்டு, தத்துவரீதி என்று பார்க்காமல், விதி என்று பார்க்காமல், கிராமத்தில் உழவர்கள், விவசாயப் பெருங்குடி மக்களுடைய உணர்ச்சிகள் என்னென்ன என்று புரிந்துகொண்டு, அதிகமான முறையில் நற்பணிகள் செய்து கொண்டிருக்கிற இலாகாவினருக்கும் அமைச்சருக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக நன்றியுணர்ச்சிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

இறுதியாக ஒரு வேண்டுகோள், பெரிய பெரிய நீர்ப்பாசன அணைக் கட்டுகள் கட்டி முடிந்த இடங்களிலிருந்து, நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், ஸ்கில்ட் லேபர், பயிற்சி பெற்றவர்கள், உதாரணமாக, ட்ரைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 10, 12 ஆண்டு காலம் பயிற்சி அடைந்தவர்கள். அப்படிப்பட்டவர்களை மற்றப் பகுதிகளில் ரெஜிஸ்டர் செய்து அவர்களை எடுத்துக்கொள்ளுவதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிகள் எடுக்கத் தக்க முறையில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மு. ப. 11-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) :** இங்கே பேசுவதற்கு பெயர் தந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் காரணத்தால், இனி பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்களிலேயே அவர்களுடைய உரையை முடிக்கவேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.





***திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி :** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசுகையில், முதல் முதலாக நமது பொதுத் பணித் துறை அமைச்சரவர்கள் தங்களுடைய ஆய்வுரையின் கடைசி பக்கத்தில், இந்தப் பொறியியல் பணிகளிலுள்ள அதிகாரிகள் ஓய்வு பெறும் வயது வரம்பை 55-ஆக ஆக்குவது பற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை மிகவும் வரவேற்கிறேன். இந்த வயது ஒரு பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. எந்த இலாகாவில் வேலை பார்த்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் 55 வயதைத் தாண்டியவுடனே இன்னும் ஒரு வருடம், இரண்டு வருடம் மேலும் தொடர்ந்து வேலை கிடைக்காதா என்று, கடைசி நேரத்தில் தங்களுடைய நேரத்தை வீணாக்கிக்கொண்டு அதற்காக மதராசுக்கு வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் தங்களுடைய பணியைச் சரியாக செய்யமுடியாமல் இருக்கிறார்கள். எனவே, இது விஷயமாக ஏதாவது ஒரு வரம்பு கட்டி 55 வயது என்றால், குறிப்பாக அதுபற்றி முடிவு எடுத்துவிட்டால் அரசாங்கம் எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர்த்தாது என்ற நிலை ஏற்பட்டு, இந்தத் துறையில் மட்டுமல்ல, எந்தத் துறையில் பணி புரிகிறவர்களாக இருந்தாலும், அறிந்துகொண்டால், அவர்கள் நிம்மதியாக ஒரே முறையாக வேலை பார்ப்பார்கள். எனவே, அரசாங்கம் ஆலோசனை செய்து, இனிமேல், ஓய்வுபெறும் வயது 55 தான் என்று உடனடியாக முடிவாகச் சொல்லிவிடவேண்டும். எல்லாத் துறைகளிலும் இந்த ப்ரின்சிபிளைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பொதுப் பணித் துறையில் மட்டுமல்ல. எல்லாத் துறைகளுக்குமே, ஓய்வு பெறும் வயது 55 தான் என்று முடிவு எடுத்துவிட்டால் மிகவும் நலமாக இருக்கும். ஏனென்றால், ஒரு துறையில் பணி புரியக் கூடிய அதிகாரி 55 வயதில் விலகி விடவேண்டும் என்றும் மற்றொரு துறையில் பணி புரியக்கூடியய அதிகாரி 55 வயதுக்கு மேலும் பணி புரியலாம் என்றும் இருந்தால், டிஸ்க்ரிமினேட் செய்வதாக நினைக்க இடம் ஏற்படும். அந்த முறையிலே கூட முதலமைச்சரவர்கள் இதைப்பற்றி ஆலோசித்து, அரசாங்கமே முடிவு எடுத்து, ஓய்வு பெறும் வயது 55 தான் என்று இப்போதே சொல்லிவிட்டால், நமது அரசாங்கத்தில் பணி புரியக்கூடிய எல்லா உத்தியோகஸ்தர்களும் நிம்மதியாக எவ்வித வேறுபாடும் இன்றி வேலை பார்க்க முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆராய்வது என்ற காரணத்தால் அதிக நாள் ஆகிவிடுமோ என்று உறுப்பினரவர்கள் அஞ்சத் தேவை இல்லை. நாள் கணக்கிலேயே அது பற்றிய முடிவு அறிவிக்கப்படும். மு. ப. 11-3

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி :** மிகவும் நன்றி. இந்தத் துறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் இத்தகைய முடிவை பொதுவாக இதே நேரத்தில் அறிவித்து விட்டால் மிகவும் நலமாக இருக்கும்.

நேரம் மிகவும் குறைவாகக் குறிப்பிட்டு இருப்பதால் இந்தப் பாசனத் துறையைப் பொறுத்து ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைச்சரவர்களுடைய ஆய்வுரையில் 4-வது பக்கத்தில், நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய வாய்ப்பை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு இனிமேல் நாம் செய்யக்கூடிய முக்கியமான வேலை, நிலத்துக்கு அடியே இருக்கும் நீர் வளத்தை நாடவேண்டியுள்ளது என்பதாகும். அப்படிப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாகத் தான் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும், என்று குறிப்பிட்டார்கள். இதைப் பொறுத்தவரையில் நான் எங்கள் மாவட்டத்தைப் பொருத்த மட்டும் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி, உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சிறுபாசனத் திட்டத்தின் கீழ், முக்கியமாக இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் வைகைக் கால்வாய் சீர்திருத்தத்துக்கு 4 கோடி ரூபாய் வரையில் அமைச்சரவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை சீர் திருத்துவதால் இராமநாதபுரத்தில் இருக்கும் பகுதிகளில் முக்கியமாக ஒரு காலேயரைக்கால் பாகம் தான் பாசனத்திற்கு வருமென்று நினைக்கிறேன். மிச்சம் பகுதி பூராவும் இதிலே வராது. மிச்சப் பகுதியிலே இருக்கும் ஏரி, குளங்கள், கண்மாய்கள் ஆகியவைகளைச் சீர் செய்வதற்கு இந்த பட்ஜெட்டில் ஏதாவது தொகை ஒதுக்கி இருக்கிறதா என்றால், இல்லை. அதை மிகவும் ஆவலாய் எதிர்பார்த்து இருந்தோம். அருப்புக் கோட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில், தாலூக்காவைப் பொறுத்த வரையில் அங்கிருக்கக்கூடிய ஏரி, குளங்கள், கால்வாய்கள் இவைகளை சீர்திருத்துவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால், ஒன்றுமே இல்லை. அருப்புக்கோட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே 10, 12 புதிய கண்மாய்கள் அமைக்கமுடியும். ஆனால் கடந்த 10 வருடமாக இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டும் கூட முடிவு பெறாத நிலை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு இன்வெஸ்டிகேஷன் செய்வதற்கு தனியாக ஒரு துறையை ஏற்படுத்தவேண்டும். அதற்கு அதிகமான ஸ்டாஃப் இணைக்கவேண்டும். 10 வருட காலமாக நடந்து கொண்டிருக்கும் இன்வெஸ்டிகேஷனைத் துரிதப்படுத்தி சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

நமக்கும் ஒரு படி அரிசித் திட்டம் இருக்கிறது. ஆகவே, இந்த மாநிலத்தில் இருக்கும் அதிக விளைச்சலுக்குகந்த இடங்களைக் கண்டு பிடித்து அவைகளைப் பயன்படுத்திக் கொண்டால் நலமாக இருக்குமென்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே இருந்த பாசனத் திட்டங்களை எல்லாம் ஒருங்கிணைத்து விவசாயிகளுடைய குறைகளைப் போக்குவதற்காக பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக இந்த மாநில விவசாயப் பெருமக்கள் உண்மையிலேயே அமைச்சரவர்களை மிக மிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு ஏரி மராமத்து செய்யப்படவேண்டும் என்றால், அது எந்தத் துறையைச் சேர்ந்தது என்று தெரிந்துகொள்வதிலேயே பல சிக்கல்கள் நீண்டகாலமாக இருந்து வந்தன. இதே போல வாய்க்கால்கள், ஓடைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றாலும், இது போன்ற குறை நீண்ட காலமாக இருந்து வந்தது. சென்ற ஐந்து ஆண்டுக் காலமாக சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தும், அப்போது இருந்த அரசு இதைக் கவனிக்காததால் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இந்த நீண்ட நாளைய முக்கியமான குறையை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் என்று கவனம் செலுத்தி சரி செய்ததற்காக அவர்களுக்கு நானும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாத்தனூர் அணைப் பகுதியில் அதிகப்படியாக இருந்த தண்ணீரை 8 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்காக சென்ற ஆண்டு வரை நீர் விடாமலிருந்தாலும், புதிதாக இந்த ஆண்டு, இரண்டு போகம் சாகுபடி செய்வதற்காக சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் விட்டு, 8 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரச் செய்ததற்காக, அந்தப் பகுதி மக்கள் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களை மிக மிகப் பாராட்டுகிறார்கள். ஏனென்றால், அந்த நேரத்தில் அவர்கள் தண்ணீர் திறந்து விடாமல் இருந்திருந்தால் மேற்கொண்டு அடுத்த மழைக்காலத்தில் அதிகமாகத் தண்ணீர் வந்து, வீணாகி, பயன்படாத நிலை ஏற்பட்டிருக்கும்.





அப்படி நல்ல உரிய நேரத்தில் அதிகாரிகளையும் கலந்து, 8 ஆயிரம் ஏக்கர் நஞ்சை சாகுபடிக்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்தார்கள். அதே போல், தொடர்ந்து அந்த சாத்தனூர் அணையில் இப்போதும் ஏராளமாகத் தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. அடுத்த ஏப்ரல் மாதம் 30-ம் தேதி வரையில் அணையிலிருந்து தண்ணீர் விடப்போவதாகத் தெரிகிறது. அதற்குப் பிறகும் கூட தண்ணீர் இருக்கும். சென்ற ஆண்டு செய்ததைப் போலவே, இந்த ஆண்டும் அதைச் செய்து, இன்னொரு போகம் சாகுபடி செய்வதற்கு வேண்டிய வசதியைச் செய்து தர வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையில் முதலில் 120 அடி ஆழம் இருந்தபோது அதன் கீழ் 22 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு இருந்தது. சாத்தனூர் அணையில் இரண்டாவது கட்ட வேலை முடிந்துவிட்டதற்குப் பிறகு, இன்னும் 10 ஆயிரம் ஏக்கர் அதிகப்படியாக சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய வசதி இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் உடனடியாகப் பார்த்து, இந்த ஆண்டு எந்தெந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாயுமோ அதைப் புதிதாக ஆயக்கட்டில் சேர்த்துவிடவேண்டும். அப்படி இல்லையென்றால் இப்போது இருக்கக்கூடிய ஆயக்கட்டு நிலங்களுக்காவது மூன்றும போக சாகுபடிக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று இந்த நேரத்தில் அமைச்சரவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை தாலூகாவில் 6 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி, மழைக்காலங்களில் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டம் முடிந்ததற்குப் பிறகும், ஏராளமான தண்ணீர் வீணாகக் கடலைப் போய் சேருகிறது. 120 அடி ஆழத்திற்கு இப்போது இருந்துகொண்டிருக்கிறது. இரண்டாவது கட்டம், 15 அடி உயர்த்தப்பட்டிருக்கிறது. 115-வது அடியிலிருந்து திருவண்ணாமலைக்குத் தனியாகக் கால்வாய் வெட்டிக்கொண்டு வந்தால், வீணாகப் போகும் தண்ணீரைக் கொண்டு இன்னும் அதிகப்படியாக 10 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வசதியாக இருக்குமென்று அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி திருவண்ணாமலை வரை வாய்க்கால் வெட்டப்படும்போது, அது 16 மைல் தூரம் இருக்கும் ஆதலால், வழியில் உள்ள 10,000 ஏக்கர் நிலங்களை அதிகப்படியாக சாகுபடிக்குக் கொண்டுவர வாய்ப்பாக இருக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் 15 லட்சத்துக்கு உட்பட்ட திட்டங்களை எடுத்துக்கொள்வதற்கு புதிதான ஒரு கருத்தை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே. இது மிக மிகப் பாராட்டப்படவேண்டிய காரியமாகும். ஏனென்றால், இந்த ஏரிகள் மராமத்து, ஏரிகளை ஆழப்படுத்துவது, கரைகளைப் பலப்படுத்தி அகலப்படுத்துவது, இது போன்ற காரியங்களுக்கு இது முக்கியமான கடமையாக இருக்கும். இந்த ஏரிகள் மராமத்தில், பொதுவாக வரத்துக் கால்வாய்கள் நீண்ட காலமாகச் செப்பனிடப்படாமல் இருப்பதால் வரக்கூடிய நீர் எல்லாம் வீணாகப் போகிறது. அந்த ஆயக்கட்டில் 1,000 ஏக்கர் 500 ஏக்கர் பாசன வசதி பெற்றிருந்தாலும் கூட, இப்போது இருக்கக்கூடிய நிலையைப் பார்த்தால் அதில் நூறு, இருநூறு ஏக்கர் குறைவாகத்தான் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கிறது. வரத்துக் கால்வாய்களை உடனடியாகச் சீர் செய்து செப்பனிட்டால் மிக மிக வசதியாக இருக்கும்.

நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதியில் செய்யாற்றில் ஒரு சிறிய அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆற்றிலிருந்து மூன்று ஏரிகளுக்குத் தண்ணீர்ப் பாயக்கூடிய அளவில் ஒரு வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்கால் மிகத் தூர்ந்துபோன நிலையில் இருந்தது. நான் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மேற்பார்வை பொறியாள

ரிடத்தில் அதுபற்றி எடுத்துச் சொன்னேன். ஐந்தாயிரம், ஆறாயிரம் ரூபாய் செலவழித்து இந்த வாய்க்காலைச் சீர்படுத்தினால் நல்லது என்றேன். அந்த வாய்க்காலை இன்றையதினம் சீர்படுத்தியதன் காரணமாக அதிகப்படியாக 750 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்தது என்பதைக் கூறிக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், வரவு கால்வாய், ஊற்றுக் கால்வாய் போன்ற இவைகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழித்தாலும் அதிகமாகப் பலனைப் பெறலாம். இவைகளுக்கு இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் தேவை யில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஏரி மராமத்து போன்ற வைகளில் தனிக் கவனம் செலுத்தினால், இன்னும் அதிகப்படி யான பாசன வசதி பெற்று விவசாயம் முன்னேறும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஏரி மராமத்துக்களில் அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, பாசனத் துறை யிலே நம்முடைய மாநிலத்தில் அணைக்கட்டு வேலைகள் எல்லாம் முடிவடையும் நிலையில் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தன் னுடைய அறிக்கையில் கூறினார். அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்தில் நடுத்தர பாசனத் திட்டத்திலும் பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரை மேலே கொண்டுவரும் திட்டத்திலும் நம்முடைய கவனத்தை அதிகமாகச் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக புன்செய்ப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்களையும் விவசாயி களாகக் கருதி, அவர்களுக்கும் ஓரளவு உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் லெட்சுமணப்பட்டியில் குடவனாறு அணை கட்டலாம் என்ற ஆலோசனை அரசாங்கத்தின் கவனத் தில் இருந்தது. ஆனால் எனக்குச் சமீபத்தில் வந்த கடிதத்தில் இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக எழுதியிருந்தது. அந்தப் பகுதி வறண்ட பிரதேசம். புன்செய் தானியங்கள் விளையும் பிரதேசம். அந்தப் பகுதியில் ஒரு அணை கட்ட வேண்டுமென்பது நீண்ட நாட்களாக இருந்து வரும் கோரிக்கை. சென்ற ஆண்டு இதைக் குறிப்பிட்டுப் பேசும்போது, அமைச்சர் அவர்கள், "இந்த அணை கைவிடப்பட்டதாகக் கருதவேண்டாம்" என்று சொன்னார்கள். இந்த அணையின் மூலமாக வேடசந்தூர் வட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செலவழிக்கும் பணத்திற்கு வட்டி விகிதம் சரியாகக் கிடைக்காவிட்டா லும் உணவு உற்பத்தியைக் கருதியும், விவசாயிகளின் நன்மையைக் கருதியும் பாசன வேலைகளை மேற்கொள்வதாக அமைச்சர் அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கருத்தோடு குடவனாறு அணைத் திட்டத்தை அணுகவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். வறண்ட, பாலைவனம் போன்ற வேடசந்தூர் பகுதிக்கு உதவி செய்வது என்ற ரீதியில் அணுகவேண்டும். அடுத்த ஆண்டாவது இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில், கருமலை, ரெங்கமலைகளில் உற்பத்தி யாகும் ஆறு, வரட்டாறு, வெள்ளைப்பாறையாறு, தேவர் மலையில் உற்பத்தி யாகும் ஆறு போன்ற ஆறுகள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர் கொடுக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. ஒவ்வொரு ஆற்றிலும் சிறிய சிறிய அணைகளைக் கட்டினால் விவசாய மக்களுக்கு நன்மை ஏற்படும். விவசாய உற்பத்தியையும் அதிகப்படுத்த முடியும். ஆகவே, அரசாங்கம் விவசாய உற்பத்தியைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அணைக்கட்டுக்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பெரியகுளம் தாலூகாவில் சோத்துப்பாறை அணை, திண்டுக்கல் தாலூகா, ஆத்தூர் பகுதியில் பீலிக்காடு அணை போன்று சிறு சிறு அணைக்கட்டுகள் கட்டவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்று தமிழ்நாடு பூராவும் சிறு அணைகளை கட்டத் திட்டமிடவேண்டும்.

அடுத்தபடியாக, சமுதாய பாசனக் கிணறுகள் சம்பந்தமாக மாநில அரசு ஒரு புது முடிவுக்கு வந்திருப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆங்காங்கு இருக்கும் பஞ்சாயத்து யூனியன்களிடம் இந்தப் பொறுப்பை விட வேண்டுமென்று நினைப்பது சரியல்ல. அவர்களிடம் பணமும் கிடையாது. நம்முடைய பாசனத் துறையே இதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டால், ஒரு கிராமத்திற்கு நான்கு ஐந்து கிணறுகளைத் தோண்டினால் பாசனத்திற்கு மிக்க உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாசனத் துறையில் கிணறுகள் தோண்டப்பட்டால்தான் புன்செய் பிரதேசத்திலும் விவசாய அபிவிருத்திக்கு உதவியாக இருக்கும். சிறு விவசாயிகள் பயனடைய முடியும்.

அடுத்தபடியாக, குளத்து மராமத்தைப் பொறுத்தவரையில், போதுமான பலன் அளிக்காமல் இருப்பதற்குக் காரணம், மராமத்துக் காக நிர்ணயிக்கப்பட்ட ரேட் விகிதம் தான. இந்த ரேட் விகிதம் பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. மராமத்து செய்கிறவர்கள் இந்த ரேட் விகிதம் கட்டுப்படியாகவில்லையென்று சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு ரேட் விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் முறை சரியில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதனால் பொதுப்பணம் விரயம் ஆகிறது. இந்த ஊழலைத் தடுக்க வேண்டுமானால் அரசே நேரடியாக வேலைகளைச் செய்யவேண்டும். பொதுப்பணித்துறையில் நிரந்தரமில்லாமல் இருக்கும் தொழிலாளி களை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து காண்ட்ராக்ட் முறை கூடாது என வற்புறுத்தி வந்துள்ளது. ஆகவே, காண்ட்ராக்ட் முறைகளைப் படிப்படியாக குறைத்துக்கொண்டே, சர்க்கார் துறைகளே வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பொதுப் பணித் துறையிலே பல்வேறு நிலைகளில் தொழிலாளர்கள் நிரந்தர மாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டிய திட்டங்களை இந்த அமைச்சரவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அணைக்கட்டு தொழிலாளர்களை அணைகட்டி முடிந்தவுடன் வேலையை விட்டுப் போகச் சொன்னால் எங்கே போவார் கள்? அவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும்.

பல வருடங்களாக வேலை செய்துவரும் ரோடு "கேங் மஸ்தூர்" போன்றவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை யும் வேலையில் நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே வடிகால் திட்டத்திற்கு ஒரு "மாஸ்டர் பிளானு"க்கு ஏற்பாடு செய்யவேண்டும். அங்கு நடந்த பாசன கருத்தரங்கிலே கடலோரப்பகுதிகளுக்கு பவர் டிரில்ஸ் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறார்கள். அதையும் செய்யவேண்டும். அணைகள் கட்டப்படும்பொழுது பொது ஜனங்களுக்கு உபயோகப்படும் முறையிலே இருக்கவேண்டும்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலூக்காவில் வேம்பார்பட்டி என்ற ஊருக்கு அருகில் சிறு அணையைக் கட்டியிருக்கிறார்கள். மழை பெய்யும் காலங்களில் மலையிலிருந்து வரும் ஆற்றுத் தண்ணீர்

அதை அடித்துச் சென்று விடுகிறது. விவசாயிகள் அதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். திரு. கக்கன் அமைச்சராக இருந்த காலத்தில் தமது செல்வாக்கிற்குட்பட்ட நபருக்காக அந்த அணையைக் கட்டினார் என்று பேசப்படுகிறது. தனி நபருக்காக திட்டங்கள் போடுவதைத் தவிர்க்க வேண்டும். விவசாயிகள் அதை உபயோகமற்றது என்று கருதுகிறார்கள். அதனால் வருடா வருடம் பல ஆயிரம் ரூபாய் நாசமாகிறது. இந்த அணையை மேலும் புதுப்பிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பாசன இலாக்காக்களையெல்லாம் ஒன்றாக இணைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. பாசன ஆய்வு, திட்டமிடுதல் போன்ற துறைகள் தனியாக இருந்தால் திறமையாகப் பணியாற்றி விவசாயிகளுக்கு உதவ முடியும். அப்பொழுதுதான் சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் துறையைப் பரிசீலிக்க உதவியாக இருக்கும். அந்தத் துறைகளில் வேலை செய்பவர்களுக்கு "ஊக்க போனஸ்" கூட அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டமிடுகிற துறையைத் தனியாக வைத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் பி. டபிள்யூ. டி, ஒர்க் சார்ஜ்டு தொழிலாளர்கள் என்று ஆயிரக்கணக்கான சிப்பந்திகள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அதேபோல் பி.டபிள்யூ.டி., எலக்ட்ரிக் டிபார்ட்மெண்டிலும் சிப்பந்திகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு, பிராவிடெண்ட் பண்டு போன்றவை கிடைக்கவில்லையென்று புகார்கள் இருக்கின்றன. இந்த அமைச்சரவை இவைகளின்பேரில் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லுக்கு அருகாமையில் சிறுமலை என்ற மலை இருக்கிறது. "சிறுமலை வாழைப்பழம்" பிரபலமானது. சரியான ரோடு வசதிகள் இல்லாததால் விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல ரோடு இல்லாமல் இருப்பதால் வியாபாரப் பொருள்களைக் குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. மலைப்பகுதியில் ரோடு போடுவதற்கு பஞ்சாயத்து யூனியனால் முடியாது. மாநில அரசே இந்த ரோடு போட உதவி செய்யவேண்டுகிறேன். அடுத்த ஆண்டிலாவது வேடசந்தூர் குடவனாறு அணைக்கட்டுத் திட்டத்தை அமுலாக்கவேண்டுமெனக் கூறி, எனக்கு ஒதுக்கிய நேரத்தில் மீதி நிமிடங்கள் மற்றொரு உறுப்பினர் எடுத்துக்கொள்வார் என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. எஸ். கோவிந்தராசன்) :** கனம் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முழுவதையும் அவரே எடுத்துக்கொண்டு பேசிவிட்டார். இன்னொருவர் எடுத்துக் கொள்வதற்கு அவர் விட்டு வைக்கவில்லை. அடுத்து, திரு. வி. எஸ். எஸ். மணி அவர்கள் பேசுவார்கள்.

***திரு. வி. எஸ். எஸ. மணி :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1967–68-ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சுமார் ரூ. 35 கோடி செலவில் 9 நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து, 2·7 லட்சம் ஏக்கராவுக்கு நீர்ப் பாசன வசதியுடன் பராமரிப்பு செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த 9 திட்டங்களும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்துடன் இணைக்கப்பட்டு வேலை செய்யப்பட்டன. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் என்பது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி



தாராபுரம் தாலுக்காக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆக அமைந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் சப்ளை சானல்கள் நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் சப்ளை சானலில் தண்ணீர் விடுவதற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லப்படுகிறது. தடையின்றி தாராளமாகத் தண்ணீர் வரவேண்டுமானால் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்துடன் இன்னொரு திட்டம் கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து அணைக்கட்டுத் திட்டத்தைச் செயல் படுத்தியாக வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தையும் மேற்கொள்ள அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது மதுரை மாவட்டத்தில் உள்ள மஞ்சள் ஆறு ப்ராஜெக்ட் 3-ஆவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்றாலும் நான்-ப்ளானிங் ஸ்கீம் (Non-Planning Scheme) என்ற முறையில் வேலை எடுக்கப்பட்டு முடிய இருக்கிறது. 1967 நவம்பரில் வேலை முடிவுபெற்று கிட்டத்திட்ட 750 (எழுநூற்று ஐம்பது) ஏக்கருக்கு பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது.

எனது மாவட்டத்தில் மற்றொரு அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது —மருதா நதி அணைக்கட்டுத் திட்டம். கீழ் பழனி மலையில் உற்பத்தியாகி ஐயம்பாளையம் வழியாக அந்த நதி ஓடுகிறது. ஐயம்பாளையம் மலை கோம்பை அடிவாரத்தில் அந்த ஆற்றுக்குக் குறுக்கே அணை கட்டினால் இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். அதைப்பற்றி பொறியியல் வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். சுமார் 60 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டு சர்க்கார் அனுமதிக்கு வந்திருக்கிறது. அது சிறந்த ஒரு திட்டம். சென்ற ஆட்சியின் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டு இருக்கவேண்டிய திட்டம். எனினும், எதிர்க் கட்சி உறுப்பினர் அந்தத் தொகுதியில் இருந்து வந்துவிட்டார் என்ற காரணத்தினால் அது புறக்கணிக்கப்பட்டு செயல்படாமல் நின்றுவிட்டது. மீண்டும் அந்த வேலையைத் துவக்கவேண்டும். நான்-ப்ளானிங் ஸ்கீமிலாவது சேர்த்து இந்த வேலையைத் துவக்கினால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக் கொள்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கைராசிக்காரர். தம்முடைய ராசித திருக்கரங்களால் அந்த வேலையைத் துவக்கி வைத்து நிறைவேற்றித் தருவார்களேயானால் அவருடைய உருவச்சிலை ஒன்றை நாட்டுவதற்குக்கூட நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் கன்னிவாடி ஜமீன் நரசிங்கபுரம் கிராமப் பகுதியில் ராஜ வாய்க்கால் ஓடுகிறது. அந்த சப்ளை சானலுக்கு எந்த விதமான ஸ்லூயிஸ்களும் மதகுகளும் கட்டவில்லை. ஏழை விவசாயிகளுடைய நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் இருக்கிறது. அந்த வாய்க்காலுக்கு அங்கங்கே நல்ல முறையில் ஸ்லூயிஸ்களும் மதகுகளும் கட்டி நிலங்களுக்கு தண்ணீர் பாய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இத்துறையை எடுத்துக் கொண்டால், ஃபுட் ப்ரொடக்ஷன் என்றும், எஸ். எம். ஐ. பி. என்றும், பி. டபிள்யூ. டி., என்றும் இருக்கிறது. இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து சிம்பிலிபைப் பண்ணினால் விவசாயிக்கு எந்த வேலைக்கு யாரிடம் போவது என்கிற சங்கடம் இல்லாமல் வேலையைச் சுலபமாக முடிப்பதற்கு வசதியாக இருக்கும்.

***திரு. எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின மீது பொதுவாக என்னுடைய இரண்டு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள

ஆசைப்படுகிறேன். ஆங்காங்கு மாநிலம் முழுவதும் உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்று ஒரே கூக்குரலாக இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் பயிர்கள் நன்றாக இருக்கின்றன. அறுவடை ஆகும்போது தானிய அளவு குறைந்துவிடுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று யாராவது பார்த்தார்களா என்றால் இல்லை. இதற்குக் காரணம் விவசாயிகளுடைய குறையா, அரசாங்கம் கவனம் செலுத்தாத குறையா என்பதைப் பற்றி கொஞ்சம் யோசனை செய்து பார்த்தால் அரசாங்கம் அடிப்படையிலே செய்ய வேண்டிய சில காரியங்களைச் செய்யத் தவறிக்கொண்டிருக்கிறது என்று நான நினைக்கிறேன். இன்றைக்கு விவசாயம் என்பதற்கு தனி டிபார்ட்மெண்ட் இல்லை. மூன்று டிபார்ட்மெண்டுகள் இருக்கின்றன. அக்ரிகல்சரல், பி.டபிள்யூ.டி., ரெவின்யூ என்பதாக மூன்று துறைகள் இருக்கின்றன. மராமத்து இலாக்காவில் உள்ளவர்கள் நீர்ப்பாசன வேலைகளை மட்டும் கவனிக்கவில்லை. இதர கட்டட வேலைகள் எல்லாம் அதிகம் இருக்கின்றன. அப்படியே ரெவின்யூ இலாக்காவை எடுத்துக்கொண்டால் சர்க்கரை பர்மிட், நெல் பர்மிட் என்பதாக இப்படிப் பல வேலைகள் இருக்கின்றன. விவசாய இலாக்கா விவசாயத்தைக் கவனிக்கிறது என்றாலும், மற்ற இரண்டு இலாக்காக்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுவதால் அதன் காரியங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனக்கு எப்படிச் செய்வது என்று தெரியாது. எப்படியோ விவசாயத்திற்கு என்று பூரணமாக கவனம் செலுத்த ஒரு இலாக்கா அமைக்கப்படவேண்டும். வேறு எந்த வேலைகளுடனும் இதற்கு எந்தவிதமான சம்பந்தமும் இருக்கக்கூடாது. நானே நீர்ப்பாசனம் சம்பந்தமாக 1954-இல் மனுப்போட்டேன். தாசில்தார் வந்து பார்த்தார், ஒரு என்ஜினீயர் வந்து பார்த்தார், டெபுடி கலெக்டர் வந்து பார்த்தார் என்று இருக்கிறதே தவிர, அதற்குப் பிறகு மூன்று மனுக்கள் போட்டும் அந்தக் காரியம் எந்த அளவில் நிற்கிறது என்றே தெரியவில்லை. ஆகவே, விவசாயம், அது சம்பந்தப்பட்ட பாசனம், அணைக்கட்டுத் திட்டம் எல்லாம் ஒருங்கிணைந்து ஒரு இலாக்காவின் கீழ் செயல்பட வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்கே ஒரு குழு அமைத்து ஆங்காங்கே சென்று என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று பார்த்து, அவற்றைச் செய்வதற்கு முன்வந்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, விவசாயத்திற்கு எவ்வளவு காலம் தண்ணீர் விடுவது என்பதற்கு வரம்பு இருக்கவேண்டும். இரு போகத்திற்கு 8 அல்லது $8\frac{1}{2}$ மாதங்கள் தண்ணீர் விட்டால் போதும். ஒவ்வொரு ஆண்டும் ஜூலையில் தண்ணிர் விட்டால் பிப்ரவரி 15 தேதியோடு நிறுத்தி விடலாம். மார்ச் ஆகியும் தண்ணீர் விடுவதனால் நமக்கு லாபம் இல்லை. இந்தத் தண்ணீரைச் சேமித்து ஜூலை என்பதற்குப் பதில் ஜூனிலேயே விட்டால்—காலத்தே பயிர் செய் என்பதற்கிணங்க நல்ல பருவத்தில் பயிர் வைக்கலாம். அதனால் விளைவுகளும் அதிகமாக இருக்கும். பிப்ரவரிக்குப் பிறகும் தண்ணீர் விடுவதன் மூலம் எழுப்பப்படக்கூடிய பயிர்களின் விளைச்சல் கூட குறைவாகவேதான் இருக்கும். ஆகவே, ஜூனிலேயே தண்ணீர் விட்டு பிப்ரவரிக்குப் பிறகு தண்ணீர் விடாது—தண்ணீரைச் சேமிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது விவசாயத்திற்குச் சௌகரியமாக இருக்கும்.

ந. ப 12-00 இந்த வருஷத்திலே தஞ்சை மாவட்டம் சம்பந்தப்பட்டவரையிலே நிறைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. இது பாதிக் கிணறு தாண்டிய மாதிரி இருக்கிறது. கடைசிக் காலத்திலே நிறையத் தண்ணீரும் விடமுடியாது, விடாமல் இருக்கவும் முடியாது. வாரத்திற்கு ஒரு தடவை, பத்து நாட்களுக்கு ஒரு தடவை என்று தண்ணீர் விட்டாலும் கூட, ஒரு வரம்பு வைத்து



1969-ம் வருஷத்திலே விடக்கூடியது மார்ச் ஒன்றாம் தேதிக்குப் பிறகு என்றால், அதற்கு அடுத்த வருஷத்தில் பிப்ரவரி 15-ஆம் தேதிக்குப் பிறகு கிடையாது என்ற நிலையிலே ஒரு வரம்பு வைத்துக்கொண்டால்தான் முன்னதாகவே தண்ணீரைத் தேக்கி வைத்துப் பயிர் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

அதோடு, நான் முன்னாலே குறிப்பிட்டபடி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயம் சம்பந்தப்பட்டவரையில் ஒரே டிபார்ட்மெண்டாக இயங்கவேண்டும், அப்படி இயங்கச் செய்தால்தான் விவசாயிகளுடைய குறைகளை உடனடியாக நிவர்த்திக்க முடியுமென்று தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருக்கக்கூடிய மானியங்களைக் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் நெடுஞ்சாலை சம்பந்தமாக கடந்த பல ஆண்டுகளாகவே கோரிக்கொண்டு வந்துள்ள கடலோரப் பகுதி சாலையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமல் தட்டிக்கழித்து வருவது வேண்டுமென்றே தமிழக மக்களைப் புறக்கணிக்கக்கூடிய நிலைமையிலே மத்திய அரசு இருந்துகொண்டு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரையிலும் கடலோரப் பகுதிகளின் வழியாகவே செல்லுகின்ற ஒரு முக்கியமான அத்தியாவசியமான சாலையை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் மிகப்பெரும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூத்தாநல்லூர்–தில்லை விளாகம் வரை செல்லும் சாலைக்காக ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டு அரசினருக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. புதிதாக அமைக்கப்பட இருக்கிற இந்தச் சாலையில் வெண்ணாறும் அதிவீரனாறும் பிரிகின்ற இடத்திலே மேம்பாலம் ஒன்றையும் ரெகுலேட்டரையும் அமைத்துக் கொடுத்தால் இருபது கிராமங்களை இணைத்து அதன் மூலம் 5 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி செய்யக்கூடிய நிலைமை இருப்பதால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லையென்று காரணம் சொன்னாலும், ஆரூரான் சர்க்கரை ஆலை நிதி இருக்கிறது, அந்த நிதியை இந்தச் சாலை அமைப்பதற்குப் பயன் படுத்திக்கொள்ளலாம். இதைத்தவிர இரயில்வே செஸ் பண்ட் தஞ்சை மாவட்டத்திற்குரியது அரசாங்கத்திடம் இருக்கிறது, அதையும் உபயோகப்படுத்தி இந்தச் சாலை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைஞாயிறு-தட்டான்கோவில் சாலையைப்பற்றி பல ஆண்டுகளாகக் கோரி வருகிறோம். அமைச்சர் அவர்கள் தலை ஞாயிறிலிருந்து ஆலங்குடி வரையில்தான் சாலை அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அது போதாது ; அந்தச் சாலையை தலைஞாயிறிலிருந்து தட்டான்கோவில் வரையிலும் கொண்டு போவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டியிலிருந்து பரவாக்கோட்டை வரையில் உள்ள சாலையின் இருபுறத்திலும் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. அவற்றை இணைக்கவேண்டும். இடையிலே கோரையாறு, பாமினியாறு என்ற ஆறுகள் ஓடுகின்றன. அவற்றிலே பாலம் அமைத்து அந்தக் கிராமங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தி மக்களுக்கு வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்றுக் கரைகளை உயர்த்தி அகலப்படுத்தும் முயற்சி எடுத்துக்கொள்ளாமல் இருப்பதன் காரணமாக வெண்ணாற்று டிவிஷனிலும் காவேரி டிவிஷனிலும் உடைப்புகள் ஏற்பட்டு பெருத்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் ஒவ்வொரு ஆண்டும், விவசாயம் நடந்து, பயிர்கள், கதிர்கள் நீரில் மூழ்கி நாசமடைந்து போகின்றன. அதன்மூலம் கோடிக்கணக்கான ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே கோரையாறு, பாமினியாறு, மாக்காகோரையாறு, வெண்ணாறு, அடப்பாறு, முள்ளியாறு, அரிச்சந்திரா, நதி போன்ற நதிகளிலே உடைப்புகள் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் ஆற்றுக் கரைகளை உயர்த்தும் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும். திட்டங்கள் தயார் செய்யப்பட்டும், திட்ட மதிப்பீடுகள் அங்கீகாரம் செய்யப்படாமல் இருக்கின்றன. இப்படிச் செய்யப்படாமல் இருப்பது வேண்டுமென்றே செய்யப்படாமல் இருக்கிறதோ என்ற அச்சம் தஞ்சை மக்களிடத்திலே பரவலாக இருக்கிறது. ஆகவே, வண்டிகள் போகக் கூடிய அளவுக்கு கரைகளை உயர்த்திக் கட்டிக்கொடுக்காமல் வேறு என்னதான் செய்தாலும் இந்த உடைப்புகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்த ஆபத்துக்களைத் தடுக்க உடனடியாக கரைகளைப் பலப்படுத்தும் வேலைகளைத் தொடங்கவேண்டும்.

வடவாறு பாசனத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சுந்தரக்கோட்டை, மாவக்காடு, மேலநத்தம், திருமக்கோட்டை, கன்யா குறிச்சி ஆகிய கிராமங்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் இருபதாயிரம் எக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடிகால் வசதிகளைப்பற்றிச் சொல்லுகிற நேரத்தில் , நாங்கள் நீண்டகாலமாக இந்தச் சபையிலே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். திட்டங்கள், பலமாதிரியான திட்டங்கள் அதிகாரிகள் தயார்செய்து அனுப்பியிருக்கிறார்கள். அவற்றில் எந்தத் திட்டத்தையாவது எடுத்துச் கொள்ளுங்கள். பாமினியாற்றின் வடிகால் சரியாக இல்லாத நிலையிலுள்ளது. தண்ணீரைக் கடலில் நேராக கொண்டுபோய்விடக்கூடிய திட்டத்தை ஏற்பாடு செய்தாக வேண்டும். அந்த ஏற்பாட்டின் மூலம் அங்கே ஓடுகின்ற இரண்டு காட்டாறுகள், கண்ணன் ஆறு, பூனைக் குத்தியாறு இவற்றின் மூலம் வரும் ஆபத்தைத் தடுக்க ஏதுவாக இருக்கும். பாமினி ஆற்றில் உடைப்புகள் ஏற்படாமல் தடுக்கமுடியும். இந்த உடைப்புகள் மூலம் 20 ஆயிரம் ஏக்கர் வரையிலும் வெள்ளமாகக் காட்சி இருக்கிறது. 20, 25 கிராமங்களுக்கு 10, 15 நாட்கள் வரையிலும் தொடர்பு தடைப்பட்டுவிடுகிறது. உடைப்பு ஏற்படாத அளவுக்குக் கரைகளை உயர்த்திக் கட்டவேண்டும்.

அதேபோல் தென்பறை வடிகாலை எடுத்துக்கொண்டால் பாளையங்கோட்டை. பரசபுரம், சோத்திரியம், புளியகுடி, காடந்தகுடி, கருக்கான்குடி, பெரியகோட்டை இப்படிப்பட்ட கிராமங்களில் உள்ள 40 ஆயிரம் எக்கர், 50 ஆயிரம் எக்கர் நிலம் பாதிக்கப்படுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லிவருகிற இந்த நேரத்திலே வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாதிக்கப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு, அக்கறையோடு இந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.



கந்தபரிச்சான் வடிகால் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. வேண்டுமென்றே திட்டத்தைப் போட்டு ஜனங்களுக்கு அதனால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லாமல் இருக்கிறது. அதன் மூலம் தண்ணீர் வடிவதே கிடையாது. ஆகவே, மறுபரிசீலனை செய்து சைபனை உடைத்துவிட்டு கீழே இருக்கக்கூடிய ஆற்றை அகலப்படுத்தி கடலில் கொண்டுபோய் சுத்தமாய் வடிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மாடர்னைசேஷன் ஸ்கீம் இருக்கிறது. அது அவசியமில்லை என்று கருதுகிறேன். பழைய டெல்டா பிரதேசங்களில் தற்பொழுது மாடர்னைசேஷன் ஸ்கீம் தேவையில்லை. அதற்காக ஒரு எக்ஸிக்யூடிவ் எஞ்சினீயர், எட்டு அஸிஸ்டெண்ட் எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள். தேவையில்லாமல் 72 ஆயிரம் ரூபாய் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கப்படுகிறது. அவர்கள் திட்டம் தயாரிக்கிற வேலையைத்தான் செய்கிறார்களே தவிர, வேறு எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது, இதனால் வருஷத்திலே 72 ஆயிரம் ரூபாய் விரயமாகச் செலவழிக்கப்படுகிறது. அது தேவையில்லை. பழைய டெல்டா பிரதேசங்களிலே இந்த மாடர்னைசேஷன் ஸ்கீம் இருக்க வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, 1968–69–ம் ஆண்டுக்கான பாசனத் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய பெரம்பலூர் தொகுதி எந்தவித ஆற்றுப் பாசனமும் இல்லாத தொகுதி. வீட்டிலே குழந்தைகள், ஆரம்பப் பள்ளிக்கூடச் சிறுவர்கள், ‘காவிரி தென் பெண்ணை பாலாறு’ என்று படிப்பதை என் பகுதி விவசாயிகள் காதிலே கேட்டிருப்பார்களே தவிர, காவிரிக்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் கூட, இருக்கின்ற ஏரிகள், கிணறுகள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு எங்கள் பகுதியில் பஞ்சம் இல்லையென்று சொல்லத்தக்க அளவுக்கு, நாங்களும் சாப்பிட்டு, அரசாங்கம் கேட்கின்ற ப்ரொக்யூர்மென்டையும் அளவுக்கு அதிகமாகவே அளித்து வருகிறோம் என்பதை ஒரு சிறு குறிப்பு மூலம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1–2–1967 முதல் 30–4–1967 வரை 57,700 மூட்டையும், 1–5–1967 முதல் 30–9–1967 வரை 47,700 மூட்டையும், 1–10–1967 முதல் 31–12–1967 வரை 25,296 மூட்டையும், 1–1–1968 முதல் இன்றைய தேதி வரை 34,874 மூட்டையும், ஆக மொத்தம் 1,65,640 மூட்டைகளை கேட்டதற்கு அதிகமாகவே நாங்கள் தந்திருக்கிறோம். மற்கொண்டு சில திட்டங்களை எங்கள் பகுதியில் நிறைவேற்றினால் இதைவிட அதிகமான அளவுக்கு நல்ல முறையில் உயர்த்துவதற்கும், ப்ரொக்யூர்மெண்ட் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். இந்தத் திட்டங்கள் வெள்ளையர் காலத்திலிருந்து எடுக்கப்பட்டு கைவிடப்பட்ட திட்டங்களாகும். நான் படிக்கப்போகிற திட்டங்கள் புள்ளி விவரங்கள் கடந்த ஓராண்டுக் காலத்தில் பொதுப் பணித்துறையினரால்—சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் துறையினரால்—தயாரிக்கப்பட்ட திட்டங்களாகும். **Formation of a new tank across Ezhumur Odai in Ezhumur village.** இது அரசாங்கத்தினுடைய கரங்களில் இருக்கிறது. இதற்கு செலவாகக்கூடிய தொகை ரூ. 8,35,000. இதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, வர இருக்கின்ற ஆண்டில் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டும். அடுத்தது **— Construction of an anicut across Swedha and formation of two tanks in Nathupur and Nigumman village.**

இது மிகவும் பின்தங்கிய பகுதியான என்னுடைய தொகுதியைச் சார்ந்தது. இதற்கு ஆகும் தொகை ரூ. 6,06,000. Formation of a new tank across Kalinga Odai in Poolambadi Village. என் தொகுதியில் இதுதான் அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிற இடம். இந்தத் திட்டத்தை இந்த ஊரில் நிறைவேற்றினால் வசதியாக இருக்கும். Formation of a tank in Selliampalayam Village. இது மாண்புமிகு திரு. அழகமுத்து அவர்கள் அப்போது உறுப்பினராக இருந்த காலத்திலேயே துவக்கப்பட்டது என்றாலும், இடையிலே தடைப்பட்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமானது. அந்தப் பகுதி மக்கள் இந்தத் திட்டங்கள் நிறைவேறும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து இந்தத் திட்டத்தையும், மேலப்புலியூரில் 2.22 லட்சம் ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கும் திட்டத்தையும், ரங்கனாதபுரம், தழுதாழை, கோனேரிப்பள்ளம், விசுவகுடி ஆகிய பகுதிகளில் போடப்பட்டிருக்கும் திட்டங்களையும் பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

பொதுவான ஒரு கருத்தைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். மாநில அளவில் நீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரிக்கும் பணியை ஆய்வுப் பிரிவு தற்போது நடத்தி வருகிறது. இந்த அமைப்பு வெள்ளையர் காலத்தில் 'டிவிஷன்' என்ற பெயராலும், காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்தில் சர்க்கிள் என்ற பெயராலும் அழைக்கப்பட்டு, அதன் மூலம் சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளைத் துரிதமாக, பரந்த மனப்பான்மையுடன் செய்யும் முறையில் செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால், நடப்பு ஆண்டில் 1–4–1968 முதல் இதையெல்லாம் ஒரே இணைப்பின் கீழ் கொண்டுவரப் போவதாக முன்னுரையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் இதைப் பற்றிச் சிந்தித்துத்தான் அந்த முடிவுக்கு வந்திருப்பார்கள் என்றாலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு அது தனி அமைப்பாகவே இருந்தால் வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் திருவலந்தூர் என்ற ஊரில் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வெள்ளம் ஏற்பட்டு நெல், கம்பு, கடலை போன்ற தானியங்களை விளைவிக்கின்ற நஞ்சை, புஞ்சை நிலங்கள் 300 எக்கர் வரை எட்டடி, பத்தடி என்று மண் மேடிட்டிருக்கின்றன. அந்த விவரங்களையெல்லாம் திருச்சி மாவட்டக் கலெக்டர் அரசாங்கத்துக்கு அனுப்பியிருக்கிறார். பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்திருத்த அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் நமக்கிருக்கின்ற நீர்நிலை ஆதாரங்களை எல்லாம் பயன்படுத்திக் கொள்வதற்கான செயல்கள் எல்லாம் செய்யப்பட்டுவிட்டன. மேலும் அதிகப்படியாகச் செய்யப்படுவதற்கு ஒன்றும் இல்லையென்று கருதுகிறேன். ஆகவே, இன்றைக்குப் பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைப் பற்றியே அதிக அக்கறை செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். பருவ மழையை நம்பி நம்முடைய சாகுபடியைச் செய்து கொண்டிருந்தாலும், எப்போதும் பருவ மழை சரியாக இருக்குமென்று எண்ணிக் கொண்டிருக்க முடியாது என்பதைக் கடந்த ஆண்டிலே உணர்ந்து கொண்டோம். ஆகவே, பருவ மழை தவறினாலும் கூட, நம்முடைய விவசாயம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக என்ன வழிவகைகளைக் கையாள வேண்டுமென்ற முறையில் சிந்தித்துச் செயல்பட ஆரம்பிக்க வேண்டும்.

பூமிக்கடியில் இருக்கும் தண்ணீர் எந்த அளவுக்கு எங்கெங்கு கிடைக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தாலும், அதிலே அதிகக் கவனம் செலுத்தி, பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு





கிணறுகள் அதிகமாகத் தோண்டப்பட்டு தண்ணீர் இறைப்பதன்மூலம் வருஷா வருஷம் பூமியின் நீர்மட்டம் குறைந்துகொண்டே வருவதாகக் கூறுகிறார்கள். ஆகவே, இன்னும் சில ஆண்டுகள் கழிந்த பிறகு மிக அதிக ஆழத்திலிருந்து தண்ணீரைக் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்படலாம். அந்த நிலை ஏற்படும்போது குறைந்தது ஆயிரம் அடிகள் வரை ஆழக் குழாய்க் கிணறுகள் போட வேண்டி வரும். அதற்கான இயந்திரங்களை வாங்க முயற்சிக்க வேண்டும். தற்போது பல இடங்களில் 'போர் வெல்' போடப்பட்டுத் தண்ணீர் இல்லை என்று விவசாயிகளிடமிருந்து புகார்கள் இருக்கின்றன. ஆகவே, அதிக அடி ஆழம் தோண்டுகின்ற அளவுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்க வேண்டும்.

மேலும், சாகுபடி முறையில் அதிகமான அளவுக்குத் தண்ணீர் விரயமாகாமல், குறைந்த அளவு தண்ணீரைக்கொண்டு அதிக அளவு சாகுபடி செய்ய முயற்சிக்க வேண்டும். இஸ்ரேல் போன்ற நாடுகளில் தெளிப்பு முறையின் மூலம் அதிகப்படியான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து விளைச்சலையும் கண்டிருக்கிறார்கள் என்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஸ்பிரிங்லர் இரிகேஷன் என்ற முறையை அரசாங்கத் தரப்பிலுள்ள ஓரிடத்தில் பரீட்சார்த்தமாக நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளில் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு புதிய ஆறுகள் வெட்டப்பட்டிருந்தாலும், பழைய கால்வாய்கள், ஆறுகள் எல்லாம் சரியான முறையில் மராமத்துச் செய்யப்படாததால் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் பாசன வசதிகள், வடிகால் வசதிகள் மோசமான நிலைமையில் இருக்கின்றன. ஜி.ஏ. கனாலை எடுத்துக்கொண்டால், 4,000 கன அடி தண்ணீர் விடவேண்டுமென்று இருந்தாலும், 3,200, 3,400 கன அடி தண்ணீர்தான் விடக்கூடிய நிலை இருக்கிறது. அரசு வாய்க்கால் மராமத்துக்காக வேண்டிய தொகை ஒதுக்கி அதிலே கவனம் செலுத்தி இருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த வருஷத்திலேயே தண்ணீரைத் திறப்பதற்கு முன்னாலே தூர் எடுத்து, கரைகளைப் பலப்படுத்தும் செயல்களை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்க்கால்களில் தண்ணீர் 20 சத வீதத்திற்கு மேல் கசிவினால் வீணாகிவிடுகிறது. அம்மாதிரிக் கசிவுகளைத் தடுப்பதற்கு சிமெண்ட் லைனிங் போட அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் வடிகால் பாய்ச்சல் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மாஸ்டர் பிளான் ஒன்று தயாரிக்க வேண்டும். இதனால் நிதிச் சிரமம் இல்லாமல் இருக்க, ஐந்தாண்டுகளில் நிறைவேற்றக்கூடியதாக மாஸ்டர் பிளான் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எஸ்.எம்.ஐ.பி. டிவிஷன் இப்போது செயல்பட்டு வருகிறது. காட்டாறுகளில் உள்ள தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருவதைத் தடுக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இது மாதிரித் திட்டங்கள் பல ஆண்டுகளாக இருந்தும் இன்னும் அனுமதி வழங்கப்படாத திட்டங்கள் பல இருக்கின்றன. ஆகவே, அவற்றிற்கெல்லாம் உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நசணியாறுத் திட்டம், பனயக்குளம்வாரித் திட்டம், அக்கினியாறுத் திட்டம், நரியாறுத் திட்டம், வெள்ளிப்பட்டவாரித் திட்டம் போன்ற ஐந்து திட்டங்களுக்கு இது வரை அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அவற்றிற்கு அனுமதி வழங்கி, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வேதபுரி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் எட்டுப்புளி வாய்க்கால் பாசனத்திலுள்ள ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை ஏற்படுத்த முடியும். அதையும் துரிதமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவர த்து வசதிகள், ஜி.எ. கனுல் கரைகள் எல்லாம் போக்குவரத்து வசதிக்குப் பயன்படும் நிலையில் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்து போர்டுகள் அந்தக் கரைகளில் ரோடுகள் போடவேண்டுமென்று அனுமதி கேட்டும் பல ஆண்டுகளாகப் பல இடங்களில் அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அனுமதி கேட்ட இடங்களுக்கு உடனடியாக அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜி.எ. மெயின் கனுல் கரையில் வண்டிகள், பஸ்கள் போக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மெயின் கனுல் கரை பூராவையும் பொது மக்கள் உபயோகிக்கும் வகையில் ரோடுகளாகப் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும்.

பட்டுவஞ்சி வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்டும்கூட அதனுல் நல்ல பலன் கிடைக்கவில்லை. அது நல்ல முறையில் பயன்படுவதற்குப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்கள். அந்தப் பரிசீலனைக்கு அனுமதி வழங்கி அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பதினைந்து லட்சம் ரூபாய் செலவுசெய்தும் அத்திட்டம் பயனில்லாமல் இருக்கிறது. அது பயன்படும் நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உளவயல் எக்ஸ்டென்ஷன் சானல். அதில் கடைமடைப் பகுதி வரையில் தண்ணீர் வரவில்லை. ஆகவே, அது சரியான முறையில் மராமத்துச் செய்யப்பட்டு கடைமடைப் பகுதி வரை தண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிழக்குக் கடற்கரை ரோடு. அதில் அக்கினி ஆற்றில் ஒரு பாலம் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. முத்துப்பேட்டை மீமிசல் ரோடில் நசுணியாற்றில் ஒரு பாலம் கட்டினுல்தான் இந்த அக்கினி ஆற்றுப் பாலம் பயன்படும். ஆகவே, அதற்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

குந்தா கழிவுநீர்த் திட்டம் இருக்கிறது. அதுபற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்கள். அதை நிறைவேற்றினுல் கோவை, பல்லடம் பகுதிகளில் $1\frac{1}{2}$ லட்சம் எக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று கூறிக்கொண்டு, அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. எம். சுப்பிரமணியம்** : தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள்மூலம் தமிழ்நாட்டில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிருேம். பல லட்சக்கணக்கான எக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துதரப்பட்டுள்ளது. ஆனுல், அதே நேரத்தில் பழைய ஏரிகளும், நீர்ப்பாசனச் சாதனங்களும் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று நான் இந்தத் தருணத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல ஏரிகளில் தூர் பிடித்து, பாதி நீர் பிடிப்புத்தான் பிடித்துக்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனுல் கப்பாஸிட்டி குறைந்து போதிய அளவிற்கு நிர்ப்பாசன வசதிக்கு ஏற்ற நிலையில் அவை இல்லை. இந்த ஏரிகள் குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாவது கட்டாயமாக மராமத்துச் செய்ப்பட வேண்டும் என்ற விதியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரிகேஷன், ஃபுட் ப்ரொடக்ஷன் போன்ற இலாகாக்களை ஒன்ருக இணைத்திருப்பதாக இந்த ஆய்வுரையில் இருந்து தெரிகிறது. இது வரவேற்கத்தக்கது. இது விவசாயிகள் யாரை அணுகுவது என்ற பிரச்னை அவர்களுக்கு ஏற்படாமல் ஒருவரை அணுக ஏதுவாக இருக்கும் என்பது என் கருத்து. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு இரிகேஷன் கமிட்டி என்று இருந்தால் நலமாக இருக்கும். இரிகேஷன் கமிட்டீஸ், ஜில்லாவுக்குத் தகுந்தாற்போல் அல்லது ஆயக்கட்டுக்குத் தகுந்தாற்போல் இருந்தால் நலமாக இருக்கும். வினியோகமுறை இப்போது சரியாக இல்லை என்பது என் கருத்து. இது மிகவும் அவசியமானது. இருக்கிற தண்ணீரை ஆங்காங்குள்ள இரிகேஷன் கமிட்டிகள்? மூலம் செவ்வனே செயல்பட இது [illegible]க இருக்கும்.



குடி மராமத்து முறை என்ற முறை இருக்கிறது. இந்தக் குடி மராமத்திலுள்ள அநேகக் கால்வாய்கள் மராமத்துச் செய்யப்படாமல் தூர்ந்திருக்கின்றன. அவை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. குடி மராமத்து வேலையைச் சர்க்காரே செய்து ஆயக்கட்டுதாரர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்தால் மிகவும் நலமாக இருக்கும். இந்தக் குடிமராமத்து வாய்க்கால்களில் என்க்ரோச்மென்ட்ஸ் அதிகமாக இருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குடி மராமத்துக் கால்வாய்களை உடனடியாக மராமத்துச் செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

என் தொகுதியில், திருவெண்ணெய்நல்லூர் பகுதியில், ஸ்ப்ரிங் சானல்ஸ் இருக்கின்றன. இதற்குத் தனி ஆயக்கட்டு இருக்கிறது. ஏரித் தண்ணீர் பாய்வதைவிட இந்த ஸ்ப்ரிங் சானல் நிலங்களுக்கு அயன் தீர்வை அதிகமாக இருக்கிறது. இந்த ஸ்ப்ரிங் சானல் நிலங்கள் மைனர் இரிகேஷன் கீழ் வந்திருக்கிறது. அது சரியாக இதுவரையில் வேலை செய்யவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மைனர் இரிகேஷன் என்பது பஞ்சாயத்து யூனியன்மூலம் வேலை செய்யப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்மூலம் வேலை செய்யப்படுகிற ஸ்ப்ரிங் சானல்ஸ்க்கு எக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கணக்கிடப்பட்டு வேலை செய்யப்படுவதாகத் தெரிகிறது. இந்தத் தொகை மிகக் குறைவு. ஆகவே, வேலைகள் முழு அளவில் நன்ருக செய்யப்படவில்லை. எக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 10 ரூபாய் அளவிற்காவது செலவுசெய்ய சர்க்கார் எதிர் காலத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு வட கடலூர் நீர்பாசன விவசாய மாநாடு விழுப்புரத்தில் நடந்தது. அதில் மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது என் தொகுதியில் உள்ள பல குறைகளை நான் சுட்டிக்காட்டினேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மாநாட்டு முடிவுரையில் கூறினுர்கள். என் பகுதியில் ஆமூர் வாய்க்காலில் வேலை 15 ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருக்கிறது. அதன்கீழ் சுமார் 2,000, 3,000 எக்கர் நிலம் நீர்ப்பாசன வசதிபெற வாய்ப்புடையது. அதைச் செய்ய வேண்டுமென்றும், அதேபோல் திருவெண்ணெய்நல்லூர் அருகாமையில் மலட்டூர் ஆறில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டதற்கு அந்த இரண்டு வேலைகளையும் உடனடியாகத் தொடங்கி, சீக்கிரத்தில் ஒரு வருட காலத்திற்குள் அவை முடிவடையும் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஆனுல் அந்த வேலைகள் இன்று வரை துவங்கப்படவேயில்லை என்பதைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சாத்தனுர் அணையிலிருந்து இரண்டாம் போகச் சாகுபடிக்கு திருக்கோவிலூர் அணைக்கட்டுவரையில் தண்ணீர் விடப்போவதாகத் தெரிவித்துள்ளார்கள். அதற்குக்கீழே எல்லிஸ் அணைவரையில் நீடித்தால் பல ஆயிரக்கணக்கான எக்கர் நன்செய் நிலங்களை இரண்டாம் போகச் சாகுபடிக்குக் கொண்டுவர ஏதுவாக இருக்கும். திருக்கோவிலூர் ஏரிக்கு பெண்ணையாற்றிலிருந்து நீர் பிடிக்கப்படுகிறது. இந்த ஏரிக்குத் தண்ணீர் வர நாலைந்து மைல் தூரம் உள்ளது. ஆகவே, குடி மராமத்து வாய்க்கால்களில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வாய்க்கால்கள் இந்த ஆண்டு இதுவரையில் சரிவர வெட்டப்படாததால், சரிவர மராமத்துச் செய்யப்படாததால், மூன்று போகம் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களில் கூட ஒரு போகம் சாகுபடி செய்ய சிரமமாகப் போய்விட்டது என்பதைத் பிற்பகல் 12.30. தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல், இதுபோன்ற சானல்களுக்கு பி.டபிள்யூ.டி. இலாக்காவிலே இதைச் செய்து எக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறதோ, அதை வசூல் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்தால் காலத்தில் ஏரியில் நீர் பிடிக்கவும், மூன்று போகம் சாகுபடி செய்யவும் ஏதுவாகவிருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு உடனடியாகத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல சாலைகளில் பஸ் போக்கு வரத்து அதிகமாக இருந்தும் என் தொகுதியில் பல இடங்களில் பாலங்கள் கட்டப்படாமல் இருப்பதால் மழை காலத்தில் போக்கு வரத்துக்குத் தடையாக இருக்கிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப் பட்டுள்ளது. அவற்றையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

*THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Chairman, Sir, while supporting the Demands for Irrigation moved by the Hon. Minister for Irrigation and Public Works I wish to say a few words consestint wish the shortness of the time that is given to me.

The taluk of Hosur which I represent remained under the British Rule for 160 years and under the Congress regime for 20 years. In this total period of 180 years it has been completely neglected. Not a single dam has been constructed over any of the rivers, big or small, in that area. So the entire taluk is very backward. When ever the Ministers in the previous Congress Ministry used to come to Hosur, they used to express lip sympathy. I feel very much that that lip sympathy never took concrete shape during all the twenty years. But fortunately I find a change with the advent of the present Government. The Hon. Minister in charge of irrigation has been showing consideration. I find that the human aspect of the problem is getting more consideration at the hands of the present Government and I hope that we will be able to make some progress in irrigation in future years. We have got there an excellent set of officers and people who know the technique of cultivation. The officers are prepared to do their bit provided they are given all the facilities. But the necessary sanction is not being given. The power of sanction lies with the Hon. Minister in charge of irrigation. If only he makes up his mind and shows sympathy and imagination, Hosur will progress and the people will be very happy in the coming years at least. I have already sent some mahazars and applications. The Minister in charge of irrigation has given convincing replies and he has promised to look into them. More than two-thirds of Hosur taluk is zamindari area. The zamindars completely neglected their areas. Though there are a number of tanks, no tank is in good condition. Every tank is full of silt and even if it gets water two or three times a year, it is not possible to grow even one crop. No doubt our taluk has the advantage of getting rain from both the monsoons, south-west and north-east monsoons. But on account of the vagaries of the monsoon, in the last three years we have not been able to grow any food crops. The Hon. Ministers have prepared a list of backward areas affected by drought and I am glad that Hosur taluk is one among them.

The following dams are being proposed for that area and I hope they will be finished soon.

Byragondapalli Project is a dam across the Sanathkumara river. This work was taken up twenty years back but not completed. If it is completed, nearly one thousand acres will be brought under





cultivation, six tanks will get supply and the Hosur Livestock Farm also will get supply. I request the Hon. Minister to considerthis

Kodayalam Dam on South Pennar also was taken up fifteen yea s ago. Now I find that some work is being done ;? some investigaion is going on. The Government should consider this work

Next is the construction of reservoir at Chennasamudram over South Pennar. Recently action has been taken up and investigation is going on. The officers there are doing their work very earnestly and I hope it will be finished soon.

Doddahalla project near Anchatty was proposed nearly one hundred years ago. All these one hundred years nobody took any interest. Only last year some work has been done. I think that the first report has been sent to the Government and the Board of Revenue and that it is in the hands of the officers. I request the Hon. Minister to look into this and accord necessary action.

Venkata Gowdueri dam near Pac chapanathy is a small dam across Sanathkumara river. This is a small project and it will not require a large amount. This work also may be completed.

* திரு சி. பழனி : தலைவரவர்களே, சேலம்மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான ஓமலூர் தொகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் மிகவும் பின்தங்கிய விவசாயிகள். அவர்களுக்கு நீர்ப்பாசன வசதி குறைவாக இருக்கிறது. அவர்கள் பருவ மழையை நம்பி வாழும் நிலையிலிருக்கிறார் கள். என்னுடைய பகுதியிலே தொப்பையாறு என்ற இடத்தில் அணை கட்ட இருந்த திட்டம் 1913-லே கைவிடப்பட்ட காரணத்தினால், நம் அரசாங்கம் அக்கறை எடுத்து, தொப்பையாற்றில் அணை கட்டவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அவ்வாறு கட்டினால் அங்கு சுமார் 5,000 ஏக்கர் நிலங்களும், தர்மபுரி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலங் களும் பாசன வசதிபெற்றுப் பயனடையும். இதற்கு உடனே தமிழக சர்க்கார் ஆவன செய்து, விவசாயிகள் வாழ வழிசெய்யுமாறு பணிவன் போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஓமலூர் அருகில் வலிவாய்க்கி கிராமத்தில் சரபங்கா நதியில் அணை கட்டினால் ஆயிரம் ஏக்கர் வரை பாசன வசதியடையும்.

என்னுடைய பகுதி விவசாய மக்கள் பருவ மழையை நம்பி வாழ் பவர்கள். அந்தப் பகுதியில் ஒரு அணை கட்டி அங்குள்ள விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்து வாழ வழிசெய்ய பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதே நிலையில் ஓமலூர் கிழக்காறில் 80,000 ரூபாய் செலவில் அணை கட்டப்பட்டிருக்கிறது. பாதி சிறு வாய்க்கால் வெட்டியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பெரமசூர் ஏரியில், அந்த வாய்க்காலை இணைத்து விட்டால் செட்டியப்பனூர், பெரமசூர், முத்துநாயக்கம்பட்டி பகுதிகளுக்குப் பாசன வசதி கிடைக்குமென்று சொல்லி, அதைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியான ஓமலூர் தொகுதியில் இருக்கும் டேனிஸ் பேட்டையிலிருந்து மோரூருக்கு இருக்கும் வழி மலைக்காடான பகுதி. சிறிய ரோடு இல்லாததால் அங்கு கஷ்டமாகயிருக்கிறது. அங்கு டேனிஸ்பேட்டையிலிருந்து மோரூருக்குச் செல்ல ரோடுபோட்டு விட்டால் பஸ் போக வசதியாக இருக்கும். அதனால் பெரும்பாலான விவசாய மக்களும், வியாபாரிகளும் பயனடைவார்கள். இப்பொழுது பஸ் இல்லாத

தால் விவசாய மக்களும், வியாபாரிகளும் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே அந்த ரோட்டையும், பாலத்தையும் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டு என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதாலும், அங்குள்ளவர்கள் பருவ மழையை நம்பியிருப்பதாலும் 1968–69 லேயே இந்தத் திட்டத்தைச் செய்துகொடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொண்டு, 1968–69-க்கான நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, உரையை நான் முடித்துக்கொள்கிறேன்.

**திரு க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய சபாநாயகரவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் வைத்த காரணத்தாலே நாம் அதிகமாக நீர்ப் பாசனத்தில் புதிய வேலைகளைச் செய்ய முடியாத சூழ்நிலை. இந்த நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கான சூழ்நிலைகளை நாம் கேரளாவோடு பேசுவதாகயிருந்தாலும், ஆந்திராவோடு பேசுவதாகயிருந்தாலும், மைசூரோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதாகயிருந்தாலும் உருவாக்கிப் பயன்பெற முடியுமா என்பதைத் தீவிரமாக நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கேரளாவோடு பேச்சு நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதில் எந்தவிதமான முன்னேற்றமும் நட்டுப்படவில்லை. என்னைப் பொறுத்தவரையில் பத்திரிகையிலே பார்த்ததில் அவர்கள் ஏதாவது உணவு தானியத்தைக் கேட்டால் நாம் அவற்றைக் கொடுத்து, நாம் அவற்றிற்குப் பதிலாக நீரைக் கொண்டுவர ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றிருப்பதாகத் தெரிகிறது. அந்த ஒப்பந்தத்தினால் கொடுக்கும் உணவுப் பொருள்களை அந்தத் தண்ணீரினால் எந்தப் பகுதி பயன் பெறுகிறதோ, அந்தப் பகுதியிலிருந்தே உற்பத்தி செய்ய நம்மால் முடியும். அதைத்தான் என்னைப் போன்ற விவசாயிகள் சொல்ல முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தண்ணீர் தருவதற்குப் பதிலாக நம்மிடம் உள்ள உணவு தானியத்தைத் தரவேண்டுமென்ற அடிப்படையிலே தண்ணீர்ப் பிரச்சினைபற்றிப் பேசவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இப்படிப்பரவலாகக் காணும் சந்தேகத்தைச் சொல்லி விளக்கம் பெற இதுவொரு சந்தர்ப்பமாயிற்று.

வேறு வகையிலே அவர்கள் பேசுவார்களானால்கூட, அவர்களிடத்திலே கொஞ்சம் நாம் விட்டுக்கொடுத்து இதைக் கவனிக்க வேண்டும். அந்தப் பிரச்சினையிலே சில சங்கங்கள் இருக்கின்றன. சமீபத்திலே ஒவ்வொரு ராஜ்யமும் மத்திய சர்க்காரை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதை இன்று பத்திரிகையிலே பார்த்தேன். இதைப் பொறுத்தவரையில் நாம் செய்ய வேண்டியது என்னவென்று கேட்டால், நாம் நம்முடைய பக்கத்திலே இருக்கிற அண்டை ராஜ்யங்களோடு எவ்வளவு தூரம் பேச முடியுமோ, அவ்வளவு தூரம் பேசி இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கு வழி காண வேண்டும். ஒன்று பல்வேறு இராஜ்யங்களிலே ஓடக்கூடிய ஆறுகளைப் பற்றி அவர்களோடு பேசித் தீர்க்க வேண்டும். இல்லாவிட்டால் மத்திய சர்க்காராவது ஏதாவது திட்டவட்டமான நடவடிக்கை எடுப்பதற்கு நாம் வழி செய்யவேண்டும். ஒரு அதிகாரப் பூர்வமான அமைப்பு உண்டு பண்ணுவதன்மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இப்பொழுது சென்ட்ரல் இரிகேஷன் போர்டு இருக்கிறது. ஆனால், அதன் மூலம் பலன் ஏற்படுவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரை வற்புறுத்தியபோதிலும் அவர்கள் செய்யாமலிருப்பதால் இந்த மாதிரி ஒரு வலுவான அமைப்பை ஏற்படுத்தச் சொல்ல வேண்டும். அதன்மூலம் இரண்டு மூன்று ராஜ்யங்களுக்குள்ளே ஓடுகின்ற ஆறுகளைப்பற்றி பாரபட்சமற்ற முறையிலே முடிவு செய்வதற்கான வழியை நாம் காணமுடியும். அதை ஏற்படுத்தும்படி மத்திய சர்க்காரை நாம் வலியுறுத்த வேண்டும். அண்டை மாநிலங்களில் காங்கிரஸ்தான் ஆட்சியில் இருக்கிறது. ஆகையால் அவர்கள் அதை வற்புறுத்தமாட்டார்கள். ஆகவே, இதைக் கேட்பதன்மூலம் நாம் ஓர் வழி ஏற்படுத்திவிட்டால், இதன் மூலம் போதிய தண்ணீரைப் பெறுதற்கு வசதியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.



பெரியாறு, நொய்யாறு இவற்றைப்பற்றியெல்லாம் பேசி முடித்தால் நமக்கு சிக்கல் ஏற்படாமல் இருக்கும். பரம்பிக்குளம்,—ஆளியார் சம்பந்தமான ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்கூட அவையில் கொடுக்கப்பட்டன அதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும்.

காவேரியைப் பொறுத்தவரையில 1974-லே நடவடிக்கை எடுக்க வேண்டியதைப்பற்றி இப்பொழுதே மைசூர் அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. 1974-லே நடைபெறப் போவதற்கு இப்பொழுதே குழுக்களை அமைத்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இந்த விஷயத்தில ஒன்றும் செய்யாமல் இருக்கிறோமோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, இதிலே கனம் மராமத்து அமைச்சர் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதிலே நாம் கீழே இருப்பவர்கள் ; அவர்கள் மேலே இருக்கக்கூடியவர்கள். ஆகவே, நமமுடைய உரிமையைக் கட்டிக் காத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தண்ணீரைப் பயன்படுத்துவதிலே நாம் ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆறுகள், வாய்க்கால்கள், ஏரிகள் இவற்றிலெல்லாம் கடந்த அரசு முக்கியமான அக்கறை காட்டவில்லை. ஏதோ இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும் புதிய வாய்க்கால்களையும் புதிய ஆறுகளையும் ஏற்படுத்தியதே தவிர, பழைய வாய்க்கால்களையும் ஆறுகளையும மதகுகளையும் நவீனப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் எதையும் தீவிரமாகச் செய்யவில்லை. எப்படி 20 ஆண்டுக் காலத்திலே அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சங்கடங்களும் தொல்லைகளும் மண்டிக் கிடந்தனவோ அதேபோல் இந்த வாய்க்கால்களிலே ஒரு நவீனம் இல்லை. ஒரு ஆறு கூட நவீனப்படுத்தப்படவில்லை. ஒரு நவீனப்படுத்தப்பட்ட வாய்க்கால் இல்லை. அவர்கள் திட்டம் தீட்டி செய்த ஒரு நவீன ஆற்றைப் பார்க்க முடியாது, ஒரு கால்வாயைப் பார்க்க முடியாது, ஒரு மதகைப் பார்க்க முடியாது. அதையெல்லாம் மாற்ற வேண்டும். நம்முடைய ஆறுகளையும் ஏரிகளையும், மதகுகளையும், நவீனப்படுத்த வேண்டும். எப்படி ஆறுகளிலே, வாய்க்கால்களிலே மண்ணடித்துவிடுகின்றதோ, அந்த மண் அடித்துப் போகின்ற நிலை இருக்கக் கூடாது.

இப்பொழுது புதிய அரசு வந்து ஓராண்டுக் காலம்தான் ஆகிறது. அதிகாரிகள் எல்லாம் நீண்ட நெடுங்காலமாக ஒரே மாதிரி வாழ்ந்து வந்தவர்கள், சிந்தித்து வந்தவர்கள், செயல்பட்டு வந்தவர்கள். ஆகவே, ஓராண்டிலே அவர்களுடைய செயல்முறையிலே, சிந்தனையிலே, எண்ணத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆகவே, அவர்களுடைய சிந்தனையிலே ஒரு புதுமையைப் புகுத்த வேண்டுமென்று சொன்னால் இந்த அரசு கொஞ்சம் வேகமாகவும், விரைவாகவும் செயல்பட வேண்டும். அவர்களைப் பாராட்டிப் பேசுவதால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

அது மட்டும் அல்ல, இப்படி இருக்கிற தவறான சிந்தனைகளை நாம் களைவதன் மூலம், ஒரு புதிய நிலைமையை ஏற்படுத்துவதன்மூலம், ஆறுகளை நவீனப்படுத்துவதன் மூலம், வாய்க்கால்களை நவீனப்படுத்துவதன் மூலம், ஏரிகளை நவீனப்படுத்துவதன் மூலம் அவற்றைச் சீர்படுத்தினோமானால் இன்னும் அதிக அளவு நிலங்களை நாம் சாகுபடிக்குக் கொண்டு வர முடியும். நமது மதிப்பிற்குரிய நண்பர் சுப்பையா அவர்கள் பேசும்போது நவீனப்படுத்த வேண்டாமென்று சொன்னார்கள். ரூ. 72,000 செலவு செய்யப்படுகிறது ; ஆனால் திட்டம் போடப்படுகிறதே தவிர, அந்த திட்டம் நடைமுறையிலே வருவதே கிடையாது. கடந்த 4 ஆண்டுகளாக அதற்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு வேலையும் கிடையாது. அவர்களுக்கு வேலையே இல்லாத நேரத்தில் ஏன் ரூ. 72,000 செலவு செய்யவேண்டும் ; அது தேவையில்லை என்ற பொருளில்தான் சொன்னார்கள், என்று நான் கருதுகிறேன். முன்பு காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது ; ஆகவே இந்த நிலைமைகள் இருந்திருக்கலாம். ஆகவே, இந்த அரசு வருகிற 5 ஆண்டுக் காலத்திலே எப்படிக் கழிவு நீர் சுத்தப்

படுத்துவதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறதோ அதேபோல் எல்லா பழைய வாய்க்கால்களையும், ஆறுகளையும் நவீனப்படுத்துவதற்கு ஒரு வழிவகை செய்ய வேண்டும்.

மத்திய அரசினுடைய நடவடிக்கைகள் நம்மைப் பெரிதும் பாதிக்கின்றன. இரண்டு புறத்திலும் நமக்குத் தடை இருக்கிறது. ஒரு புறத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய தடை. இன்னொரு புறம் வருவாய்க்காக வரி போட வேண்டுமென்று போட்டுவிட்டால் மக்கள் எதிர்க்கிறார்கள். நல்ல உதவிகளையெல்லாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்மால் பெற முடியவில்லை. இந்தத் துறைகள் எல்லாம் செயல்பட்டு இதே வேகமாகப் போனால் 100 ஆண்டுக் காலம் ஆகும் நமக்குத் தேவையான தண்ணீர் கிடைக்க என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 100 ஆண்டுக் காலத்திற்கு இந்தத் தேசம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இருக்க இடமில்லை; தண்ணீர் வசதியே கிடையாது; வயிற்றுக்குச் சோறில்லை என்று கூப்பாடு போடுகின்ற அளவுக்குத் தான் நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இந்த விஷயத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணுவதற்குத் தயவு செய்து இந்தத் துறை அமைச்சர் அவர்கள் தீவிரமான சிந்தனையை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நீர்ப்பாசனத் துறையிலே தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால் அதை ஒத்துக்கொள்ள முடியாது. இருக்கிற கஷ்டத்தை நான் உணருகிறேன். குறைவாகத் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்ய வேண்டுமென்பதை அதிகாரிகள் பயிற்றுவிக்க வேண்டும். மற்றொரு பக்கத்திலே அவர்களை வற்புறுத்தக்கூடிய முறையிலே ஒரு திட்டத்தை நாம் உண்டுபண்ண வேண்டும். இன்னொன்றையும் தெளிவாக நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்திலே ஒரு வேறுபாடு இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குக்கூட அது தெரியும். ஒரு பக்கம் ஒரு க்யூசெக்ஸ் 60 எக்கருக்குப் பாய்ச்சப்படுகிறது. கீழ் பவானி போன்ற பகுதிகளிலெல்லாம், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற பகுதிகளிலெல்லாம் ஒரு க்யூசெக்ஸ் தண்ணீரை 25 எக்கருக்குப் பாய்ச்சுகிறார்கள். இந்த வேறுபாடு இன்றைக்கு இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, அது பழைய காலம். இப்பொழுது 50-லிருந்து 60 வரை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன்:** உதாரணம் சொல்வதற்காகத்தான் சொன்னேன். கீழ் பவானி என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே, திட்டம் போடப்பட்டும், 30,000 எக்கரை தாராபுரம் தாலூகாவில் சேர்க்க வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். தடப்பள்ளி, இருங்குடி இதிலே கிடைக்கக்கூடியதை, தயவுசெய்து நவீனப்படுத்துவதன் மூலமாகத்தான் நமக்குத் தேவையானது கிடைக்கும். இல்லாவிட்டால் நேரடியாகப் பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கவே கிடைக்காது.

பம்பிங் ஸ்கீமின் மூலமாக அதிக நிலங்களைச் சாகுபடி செய்யமுடியும். அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிற அதிகாரிகளும் ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் ஜில்லாவைச் சேர்ந்த வேலப்பன் அவர்களுடைய தொகுதியில் ஒரு வாய்க்கால் இருக்கிறது. அங்கே விடக்கூடிய தண்ணீரின் அளவு 250 க்யூசெக்ஸ். அங்கே முன்பிருந்த நில விஸ்தீரணத்தின்படி 6,000 எக்கருக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. 250 க்யூசெக்ஸைக்கொண்டு 6,000 எக்கருக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. அங்கே இருந்த விவசாயிகள் உற்சாகத்தின் காரணமாக 6,000 எக்கருக்கும் பம்பிங் ஸ்கீம் மூலமாக தண்ணீர் பாய்ச்சியிருக்கிறார்கள். அது சட்ட விரோதம்தான். ஆனால், அதன் மூலம் அதிகப் பலன் கிட்டுகிறது. அந்த விவசாயிகளுக்குத் தயவுசெய்து. . .



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வி. எஸ். கோவிந்தராசன்):** ஏற்கனவே அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் சீக்கிரமாக முடித்துவிடுங்கள்.

**திரு. க. ர. நல்லசிவன்:** ஆகவே, விவசாயிகளுக்கு பம்பிங் ஸ்கீம் மூலமாக தண்ணீர் பாய்ச்சுவதற்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், சர்க்காரே அதை செய்ய முடியுமா என்ற பயம் கூட இருக்கிறது. நீங்கள் தயவுசெய்து அதைப் போய்ப் பார்க்க வேண்டும். இதைப்போல நவீன முறையைப் பயன்படுத்துவதன் மூலமாக ஒரு க்யூஸெக்ஸுக்கு 40 எக்கர் என்று அனுமதிக்குமானால் இன்னும் நல்ல முறையில் காரியங்கள் செய்யமுடியும். தஞ்சைப் பகுதியிலே முதல் பரிசு வாங்கியதை நாம் பார்க்க முடிந்தது. எங்கே குறைவாகத் தண்ணீர் பாய்ச்சுகிறார்களோ அங்கேதான் அதிக விளைச்சலை நாம் பார்க்க முடிகிறது.

கீழ் பவானியில் ஒரு க்யூசெக்ஸுக்கு 60 எக்கர் பாயக்கூடிய நிலைமையிருக்கிறது. இரண்டு மாதங்கள்தான் தண்ணீர் கேட்டோம். வருகிற காலத்திலே ஒரு வருஷத்திற்குத் தண்ணீர் வேண்டும். தண்ணீர் இல்லையென்று சொன்னால் தண்ணீரைக் கண்ணாலே பார்த்தாலே கூடப் போதும். தண்ணீரை 4 மாதங்கள் வேண்டுமென்று கேட்கவில்லை. 2½, 3 வாரங்கள் தண்ணீரைப் பாய்ச்சினால்கூட போதும். அதன் மூலம் பக்கத்திலேயிருக்கிற கிணறுகளில் தண்ணீர் சுரந்து பயிர்கள் எல்லாம் உயிர் பெற்றுவிடுமென்று சொன்னேன். ஆதலால், அந்த உணர்வைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார அணைகளினால் நீர்ப்பாசனத்திற்கு தொல்லையில்லாத ஏற்பாட்டைச் செய்யவேண்டும். எப்பொழுது கேட்டாலும், மின்சார அணைக்கு பூரண உதவி என்று சொல்லப்படுகிறது. அதன் விளைவாக ஒரு போகம், இரண்டு போகம் விளைச்சலுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த மட்டில் ஒரு க்யூஸெக்ஸுக்கு 25 எக்கர் என்றிருப்பதை அடியோடு ஒழிக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு க்யூஸெக்ஸுக்கு 40 எக்கர் என்று வைக்க வேண்டும். ராஜ்யத்திலுள்ள எல்லா ஏரிகளுக்கும், கால்வாய்களுக்கும் இந்த விதி பொருந்தும்படியாக மாற்றி அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் ராஜ்யத்திலுள்ள உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும். விவசாயிகளிடையே நீர்ப்பாசன ஆவலையும் தீர்த்து வைக்க முடியும் என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. தங்கப்பன்:** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பாசனத் திட்டங்களின் கீழே இந்த அரசு தங்களுக்குள்ள நிதி வசதிகளுக்கேற்ப ஒரு சில நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிகின்றோம். உதாரணமாக, பாசன அபிவிருத்திக்காக கிணறுகள், துளைக்கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள், மற்றும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களை விரிவு படுத்துதல் போன்ற காரியங்களெல்லாம் இங்கே மன்றத்தில் கொடுக்கப்பட்ட பட்ஜெட் புத்தகங்களிலே காணப்படுகிற நிலைமையைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் எனது பகுதியிலிருக்கிற நிலங்கள் வைகைப் பாசனத்தின் கீழே வருகிறது. அந்தப் பகுதி விவசாயத்திற்கு பாசன வசதிகளை அடைந்துகொண்டிருக்கிற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபொழுது அந்தப் பகுதியிலே முறையாக தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்த்தால், அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற நிலை இல்லை. உதாரணமாக, அங்கே வைகைப் புனரமைப்புத் திட்டம் என்று ஒரு திட்டம் போட்டு, அதற்கு ரூ. 4 கோடி அளவில் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறதே ஒழிய, காரியங்கள் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு அங்கே நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை என்கின்ற நிலைமை இருந்து வருகிறது.

பரம்பிக்குளம்–ஆளியார் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து அந்தத் திட்டம் நிறைவேறிக்கொண்டே வருகிறது. அதற்குக் கூட இந்த ஆண்டில் ரூ. 2 கோடியே 6 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் எனது பகுதியாகிய இராமநாதபுரம் பகுதி பிற்பட்ட பகுதி, ஒதுக்கப்பட்ட பகுதி, கைவிடப்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. அந்தப் பகுதிக்கு வைகைப் புனரமைப்புத் திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அந்தப் பகுதியில் விவசாய முன்னேற்றம் ஏற்படுவதற்கு வேறு வழி எதுவும் கிடையாது என்பது நமது அரசு அறிந்ததே. அந்தப் பகுதி முன்னேற்றம் அடையவேண்டுமானால், இந்த ஆண்டு விட்டு விட்டாலும் கூட, அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை துவக்குகின்ற நிலைமையை நாம் காண வேண்டும். இங்கே ரூ. 4 கோடி முதலீடு செய்யப்படவில்லை, எஸ்டிமேட் என்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பணிகள், தொடக்கப் பணிகளைச் செய்வதாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனது நண்பர் சௌடி. சுந்தரபாரதி அவர்கள் பேசும்பொழுது, ரூ. 4 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலீடு செய்யப்படவில்லை. எஸ்டிமேட் தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது 1967 டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையின் காரணமாக 18 மணி நேரத்தில் 26 சென்டிமீட்டர் அளவு மழை பெய்ததால், அந்தப் பகுதியிலுள்ள கண்மாய்கள், ஏரிகளெல்லாம் உடைப்பெடுத்து பெரும் சேதத்திற்குள்ளாகி விட்டன என்பதைத் தமிழ்நாடு பூராவும் உள்ளவர்கள் அறிவார்கள். அந்த நிலையில் அங்கே ரூ. 70 லட்சம் செலவு செய்து கண்மாய்களையெல்லாம் புனரமைப்புச் செய்ய வேண்டும். கரைகளையெல்லாம் பலப்படுத்த வேண்டும், அவைகளை ஆழப்படுத்த வேண்டும் என்கின்ற அளவிலே அமைச்சர் அவர்களுடைய ஒப்பளிப்பிற்காக வந்திருக்கிறது. ஆனால், இதுவரையில் கரைகள் போட்டதோடு நின்றுவிட்டது.

உதாரணமாக எனது பகுதியை எடுத்துக் கொண்டால், இராமநாதபுரத்தில் 104 கண்மாய்கள் இருக்கின்றன. இராமநாதபுரம் தாலூகாவில் மாத்திரம் பெரியகண்மாய்கள் என்று சொல்லக்கூடிய வரையில் பெரிய கண்மாய் 4,000 எக்கர் பாசன வசதிஉள்ளது. அடுத்தபடியாக சக்கரைக் கோட்டை கண்மாய் 2,000 எக்கர் பாசன வசதி உள்ளது. மேலும் களரிக்கமங்கலம் கண்மாய், புள்ளங்குடி கண்மாய் போன்ற கண்மாய்கள் இருக்கின்றன. அவைகளுக்கு தண்ணீர் வருகின்ற உத்திரவாதம் கட்டுப்பாடான முறையிலே வைகைத் திட்டத்தின் கீழ் இல்லை என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதனால் என்னுடைய பகுதியில் இருக்கும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் அடைந்த கஷ்டங்களைப் போல், இப்பொழுதும் கஷ்டங்களைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு, புயல், வெள்ளத்தின் காரணமாக ரோடுகளெல்லாம் ரிப்பேராகி ரொம்பவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றன. அந்தப் பகுதிக்கு ஏராளமான யாத்திரிகர்கள் வெளி மாநிலங்களிலிருந்து கூட வருகிறார்கள். அந்தப் பகுதியில்தான் தெற்கே சேதுக் கரையும், வடக்கே நவ பாஷாணமும் இருக்கிறது. நமது பகுதி மக்களுக்கு சௌகரியம் குறைந்திருந்தாலும், வெளி மாநிலங்களிலிருந்து, இந்தியா பூராவிலுமிருந்து வருகிற யாத்திரிகர்களுக்கு நாம் அதிக வசதி செய்து கொடுக்க வேண்டும். ஆகவே, யாத்திரிகர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்தாவது அந்த ரோடுகளை முறைப்படுத்தவேண்டும் என்று நான் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். . . (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. ந. தருமலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவைமுன் நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களை இங்கே கூறி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்





கள் தந்திருக்கிற குறிப்புகளைப் பார்க்கிறபொழுது, கடந்த ஒரு ஆண்டில் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிவந்திருக்கிற பணி நாம் அனைவரும் பாராட்டுவதற்குரியதாக அமைந்திருக்கிறது. நம்முடைய அதிகாரிகள் சென்ற 20 ஆண்டு காலத்தில் இருந்ததுபோல் இல்லாமல், சென்ற ஓராண்டு காலத்தில் சுறுசுறுப்பாக பணியாற்றி வருகிற காரணத்தினால், பொதுப்பணித் துறையின் மேம்பாடும், இந்தத் துறையை நாடு எதிர்பார்க்கிற தன்மையும் நன்றாக உணரப்படுகிறது. இன்றைய நிலையில், நமக்கு இருக்கிற பொருளாதார நிலை, வேறு பல சூழ்நிலையையும் வைத்து, இவ்வளவுதான் அலுவல்கள் நிறைவேற முடியும் என்பதை நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவித்திருந்தாலும், ஒரு சில இடங்களில் இன்னும் சற்று கவனம் செலுத்தி, தனி அக்கறையையும் காட்டியிருக்கலாம். அப்படி தனி அக்கறை காட்டப்படவேண்டிய பகுதிகள் நிறைய உண்டு.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பெயரில் "கருணை" என்ற சொல் சேர்ந்திருப்பதால், கருணை உள்ளம் படைத்த அந்த அமைச்சரை நான் கேட்டுக்கொள்ள வந்தது என்னவென்றால், தஞ்சை மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி வட்டாரம் கடலோரத்தை ஒட்டிய பகுதி என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவார்கள். 7, 8 ஆறுகள் எங்கள் தாலூகாவைக் கடந்து கடலில் போய் விழுகின்றன. உடனே நீங்கள் கருதலாம் 7 8 ஆறுகள் தாலூகாவைக் கடந்து போகின்றன என்றால் பாசனத்திற்குப் பஞ்சமே இல்லையென்று. ஆனால், இருக்கிற நிலை அப்படியில்லை. அம்மாதிரி 7, 8 ஆறுகள் திருத்துறைப்பூண்டி தாலூகாவை கடந்து போவதால், அந்தப் பகுதிக்கு மிகப் பெரிய ஆபத்து உருவாகியிருக்கிறது என்று மிகுந்த சங்கடத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 7, 8 ஆறுகள் இந்தத் தாலூகாவைக் கடந்துபோகிற நேரத்தில், மழை காலங்களில், 20 மைல்களுக்கு அப்பால் பெய்கின்ற மழையினால் வருகின்ற தண்ணீர், வடிகால் தண்ணீரெல்லாம் இந்தத் தாலூகாவைக் கடந்து போவதால், திருத்துறைப்பூண்டி தாலூகாவே வெள்ளத்தில் மூழ்கி விடுகிறது என்று சொன்னால் அது நயமில்லை. 20 நாட்களுக்கு நீர் சூழ்ந்து விடுகிறது. வெள்ளப் பகுதியைக் கூட நமது அமைச்சர் அவர்கள் அண்மையில் வந்து பார்வையிட்டார்கள். நான் இதைக் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால், தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்திலும், வேறு பல பகுதிகளிலும் திட்டங்கள் தீட்டவேண்டும் என்று எடுத்துக்கொண்ட பகுதிகள் அல்லாமல், திருத்துறைப்பூண்டி தாலூகாவைப் பொறுத்தவரையில் அதைத் தனிமையாக எடுத்து, தனிக்கவனம் செலுத்தி, காரியங்கள் ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சங்கடமான செய்தியையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற வாரம் திருத்துறைப்பூண்டியைப் பற்றி சென்னையிலிருந்து வெளியாகிற ஒரு தினசரி செய்தித்தாளில் ஒரு செய்தி வெளி பி. ப.
வந்தது. அதாவது, திருத்துறைப்பூண்டியில் நிறைவேற்றப்பட இருந்த 1–00.
இறவைப் பாசனத் திட்டங்கள் அதிகாரிகளின் மந்தப் போக்கால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தி சென்னைப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு, அந்தப் பக்கம் திருத்துறைப்பூண்டிக்குப் போய்விட்டது. அந்தப் பத்திரிகையை அமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன். பத்திரிகைக்கு அந்தச் செய்தி எப்படி வந்தது என்று தெரியவில்லை. அதிகாரிகளைப் பார்த்து கேட்டுக்கொண்டபோது, அப்படி நிறுத்திவைக்கப்படவில்லை, பரிசீலனையில்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே இருக்கும் சிக்கல், ஒப்பந்த தொகையை ரத்து செய்வதா இல்லையா என்பதுதான். அதை அரசு பரிசீலனை செய்கிறதே அல்லாமல், திருத்துறைப்பூண்டி தாலூகாவிற்கு அது வேண்டாம் என்று அரசு முடிவு செய்யவில்லை என்பது உண்மையாக இருக்கும் போது, பத்திரிகையில் இப்படி வந்திருப்பது பொதுப்பணித் துறைக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முக்கியமான திட்டம், பாமணியாறு பிரச்சினை. அது வெகு காலமாக இருந்து வருகிறது. அதைச் செயல்படுத்தினால் 30, 40, 50 கிராமங்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும். நவம்பர் மாதத்தில், வங்காளக்குடாவில் புயல் உருவாகும்போது, கடல் கொந்தளிப்பு ஏற்படும் காரணத்தால் கடல் காற்று அடித்து, வெள்ளம் வருகிறது. அந்த வெள்ளத்தை பாமணியாறு தாங்கமுடியாமல், உடைப்பு ஏற்படுகிறது. அதனால் கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பாமணியாறு ஸ்ட்ரெயிட் கட் வெட்டி கடலிலே விட்டால் அங்கே ஏற்படும் தொல்லைகளைக் குறைக்க முடியும் என்பதை அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த திட்டத்தை விரைவில் நிறைவேற்றினால், நலமாக இருக்கும். அவைத் தலைவர் அவர்கள் கண்ணைக்காட்டுகிறார்கள். தயவு செய்து இரண்டு நிமிஷங்கள் கொடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முன்பெல்லாம் பொதுப்பணித் துறைச் சிறப்புக்களை மக்கள் உணருவது கிடையாது. ஆனால் இப்பொழுது, அந்தத் துறை மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்று அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். கடந்த 20 ஆண்டு காலமாக, பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. தீர்க்க முடியாதவை அல்ல. கடந்த ஓராண்டுக் காலத்தில் செய்ய முடிந்தது எல்லாம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு இணங்கவே அமைந்திருக்கின்றன.

திருத்துறைப்பூண்டி தாலூகாவில் உணவு உற்பத்தியைப் பெருக்க' இறவைத் திட்டங்கள் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இறவைப் பாசனம் ஒன்றுதான் அந்தக் கடற்கரைப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். இல்லாவிட்டால், அந்தத் தண்ணீர் வீணாக கடலில் போய் விழுகிறது. ஆகவே, இறவைப் பாசனத்திற்கு உடனடியாக உத்தரவு இடத் தக்க காரியம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பாமணியாறு ஸ்ட்ரெயிட் கட் வெட்டி விட்டு, அந்த அளவில் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். இப்பொழுது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள், இந்த அறிக்கையில் சென்ற ஆண்டு இந்த அரசு சாதித்திருக்கிற சாதனைகளை, பாராட்டிப் பேச வேண்டிய அளவிற்கு பல செயல்கள் இருந்தாலும், காலம் அனுமதிக்காததால், பாராட்டுதலை இத்தோடு முடித்துக்கொண்டு, என் தொகுதிக்கு வேண்டிய காரியங்களைச் சபை முன் வைக்க விரும்புகிறேன்.

என் தொகுதியாகிய திருச்செந்தூர் பகுதியைப் பொறுத்தவரை அதற்கு வேண்டிய பாசனத் தண்ணீரை தாம்பிரபரணி ஆறும், மணிமுத்தாறும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அங்கே நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், பெரிய குளமாக இருப்பது கடம்பார் குளம் தான். அந்தக் குளத்திற்கு தண்ணீர் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து வழிந்துவரும் தண்ணீர்தான். ஆகவே, அதற்குக் கீழே இருக்கும் 12 குளங்களுக்கு சரியாகத் தண்ணீர் இல்லாமல், விவசாயம் பாதிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் கடம்பார் குளத்தின் ஆயக்கட்டு விவசாயிகள் ஆண்டு தோறும் இரண்டு போகம் விளைச்சல் எடுக்கும்போது, அதறகுக் கீழே உள்ள நிலங்கள், அந்தக் குளங்களுக்கு தண்ணீர் வருடா வருடம் நிச்சயமாக இல்லாததால், விளைச்சல் செய்யும் நிலையில் இல்லை. ஆகவே கடம்பார் குளத்திற்குக் கிடைக்கும் தண்ணீரும், அதற்குக் கீழே இருக்கும் 12 குளங்களுக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டால், என்னுடைய தொகுதியில் கிழக்கே உள்ள 12 குளங்களுக்கும் தண்ணீர் கிடைத்து, அங்கேயும் இரண்டு போகம் விளைச்சல் செய்ய முடியும். அந்த அடிப்படையில் ஸ்ரீ வைகுண்டம் தென்காலில் கடையனோடையிலிருந்து காலை வெட்டி, அந்தத் தண்ணீரை, மேல் புதுக்குடி குளத்திற்கும் இன்னும் 11 குளங்களுக்குக்கும் தாராளமாக வினியோகம் செய்யலாம். அப்படிச் செய்தால் நிச்சயமாக அங்கே இரண்டு போக விளைச்சலைச் செய்ய முடியும். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சருடைய அறிக்கை



யிலிருந்து காவிரிப் பகுதியில் அம்மாதிரிச் செய்வதால் விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. அதே போல நல்ல நிலையை திருச்செந்தூர் பகுதியிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணிமுத்தார் பாசனத்திலிருந்து என் தொகுதியிலுள்ள ஒரு பகுதி மக்கள் விவசாயம் செய்கிறார்கள். பெரும்பாலான காலங்களில் அந்த மக்களுக்கு விவசாயம் செய்ய முடியவில்லை. விளைச்சலையும் உண்டாக்க சாத்தியக் கூறுகள் இல்லை. காரணம் என்னவென்றால், அதில் ஒரு விதிமுறை இருக்கிறது. 80 அடிக்கு மேல் தேக்கத்தில் தண்ணீர் நிரம்பினால் தான், வழிந்து ஓடும் தண்ணீர் குளத்திற்குக் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. கிழக்கே போனால், தாம்பிரபரணி பாசனத்திற்கு கொண்டு போகப்படும். அணைக்கட்டில் 80 அடி தண்ணீர் வேண்டும் என்றால், மேலே அதிக மழை பெய்ய வேண்டும். ஆகவே, கீழே இருக்கிறவர்களுக்கு மணிமுத்தார் அணைக்கட்டினால் எந்த விதமான பலனும் கிடைக்கவில்லை. ஆண்டுதோறும் கிடைப்பதில்லை. எதாவது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கிடைக்கிறது. இந்த ஆண்டு மணிமுத்தாரில் அதிகத் தண்ணீர் இருந்ததால், விவசாய மக்கள் அதிகப்படியான தண்ணீரைக் கொண்டு விவசாயம் செய்திருக்கிறார்கள். மணிமுத்தார் தேக்கத்திலிருந்து ஆண்டு தோறும் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றால் 80 அடி தண்ணீர் மட்டம் என்று இருப்பதை 70 அடி என்று குறைத்துக் கொண்டால், அந்தப் பகுதி மக்களுக்கு விவசாயம் செய்ய நல்ல வழிவகை ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுத்தான் தாம்பிரபரணியில் கடைசி அணைக்கட்டு. அதன் கீழே போகும் தண்ணீர் வீணாக கடலிலே போய் விழுகிறது. அதற்கும் கடலுக்கும் உள்ள தூரம் 19 மைல். இந்த 19 மைல் தூரத்திற்கு எந்தவிதமான அணைக்கட்டுகளும் கிடையாது. ஆகவே, ஸ்ரீ வைகுண்டத்திற்குக் கீழே போகும் நீர் வீணாகிறது. மழை காலங்களில், அக்டோபர், நவம்பர் திங்கள்களில் கடுமழை காலத்தில், ஸ்ரீ வைகுண்டம் அணையில் நிரம்பி வழிந்து போகும் தண்ணீர் வீணாகக் கடலுக்குச் செல்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில், சேது வாய்க்கால் பகுதியில் அணைக்கட்டு ஒன்றைக் கட்டினால், விவசாயத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்த முடியும். அதோடு அந்தப் பகுதியில் புஞ்சை விவசாயத்திற்கு கிணற்றில் நிறையத் தண்ணீர் தேங்கி நிற்கும் சூழ்நிலையும் ஏற்பட்டு, புஞ்சைப் பயிரையும் உற்பத்தி செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, இந்த திட்டங்களை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் எங்களுக்குச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே திருநெல்வேலி தாலூகா வட பகுதிக்கு பயனுள்ள திட்டமான கல்லாறு, ஆச்சங்கோயில் திட்டங்களையும் நிறைவேற்றித் தாவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி செலுத்தி முடிக்கிறேன், வணக்கம்.

***திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, நீர்ப்பாசனக் கோரிக்கை மீது பேசும் சந்தர்ப்பத்திலே, வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் பெருமளவிற்கு திட்டங்களைத் தீட்டி, முன்பிருந்த அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு, உணவு உற்பத்தியைச் சிறந்த முறையில் பெருக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வந்திருப்பதை நாம் அறிவோம். ஆகிலும், இன்றைய நிலையில், செயல் படாமல் இருக்கும் பாசன வேலைகளையாவது செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கும் இந்த அரசு துரிதமாக மேற்கொள்ளும் என்று பார்த்தோம். ஏனோ காலதாமதம் ஆகிறது ; ஏன் என்பது தெரியவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

குறிப்பாக, சென்ற ஆண்டில் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், சிறிய பாசனத் திட்டங்களையெல்லாம் துரிதமாக செயல்படுத்துவதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். எனது தொகுதியான ஆடுதுறையிலே பழவாறு, மண்ணியாறு போன்ற ஆறுகள் இருக்கின்றன. இந்த ஆற்றுத் திட்டம் துரிதமாக நடைபெற்றுவிடும் என்று சென்ற ஆண்டே நினைத்திருந்தோம். ஆனால் இது வரையிலும் நடைபெறவில்லையென்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே உணவு உற்பத்தியை அதிகமாக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் நேரத்தில், ஆடுதுறையில் ஜப்பானிகா என்ற நெல் விதையுடன் நம் நாட்டு நெல் விதைகளையும் ஒட்டி ஏ.டி.டி-27 என்ற புதியநெல் வகையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். தஞ்சையைச் சேர்ந்த அந்தப் பகுதி மக்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், நமக்குத் தண்ணீர் பஞ்சமே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பழவாறு, மண்ணியாறு போன்றவைகள் எல்லாம் நமது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பழவாறு என்பது கரையே இல்லாத ஆறு. பழவாற்றினுடைய நிலைமை உள்ளபடியே பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. ஓரிரு ஆண்டுகளாக அடிக்கடி ஏற்படக்கூடிய வெள்ளப் பெருக்கினால் அப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். ஆனால் எங்கள மாவட்டக் கலெக்டர் அவர்கள் தகுந்த முயற்சிகள் எடுத்துக் கொண்டு அப்பகுதி மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார்கள். கலெக்டர் அவர்கள் வெள்ளக்காலங்களிலே அந்தப் பகுதிகளில் கஞ்சித் தொட்டிகளை அமைத்தும், வேஷ்டி, புடவை போன்றவைகளை மக்களுக்குக் கொடுத்தும் பல உதவிகளைச் செய்தார்கள். என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கத்திலுள்ள அத்தனை அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு, பழவாறு கரையை நல்ல முறையிலே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதாளத்திலுள்ள நீரைப் பயன்படுத்தும் முறையில், தஞ்சை மாவட்டத்தில் பல வடிமுனைக் குழாய்களை முந்தைய சர்க்கார் அமைத்துத் தந்திருக்கிறார்கள். அவை இன்றைய தினம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. வடிமுனைக் குழாய் திட்டத்தினால் ஏழை எளிய விவசாயிகள் நன்மை அடைகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லையென்றே சொல்ல வேண்டும். வடிமுனைக் குழாய்த் திட்டத்தினால் ஆஸ்தியுள்ளவர்கள்தான் பயன் பெற முடிகிறது. 25 சதவீதமுள்ள நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் கடன் கிடைக்கிறது. 75 சதவீதமுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் கடன் பெற முடிவதில்லை. ஆகவே, 75 சதவீதமுள்ள ஏழை விவசாயிகளும் உழவடை நிலத்தின் பொறுப்பின் பேரில் இந்தச் சலுகை அடைய வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

எனது தொகுதியிலே திருநாகேஸ்வரம் நாட்டாற்றிலிருந்து பிரியும் தேவனார் விளாகம் வாய்க்காலினால் தண்ணீர் பாசனமே இல்லாது திருநாகேஸ்வரம் கோயிலுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் நல்ல முறையில் சாகுபடி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. ஆகவே அதையும் கவனத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் தண்ணீர் பாசனத்தை நல்ல முறையில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு, மேட்டூரில் தண்ணீர் திறக்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்த நாளை விட, பத்து நாட்கள் கழித்து தண்ணீர் விடப்பட்டதால், ஆடுதுறை பகுதிகள் ஏ.டி.டி-27 நாற்றை 35, 40 நாட்களுக்குப் பிறகு நடக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதன் காரணமாக, நாள் பின்னுக்குத் தள்ளப்பட்டு மகசூல் குறைந்து, அதிக மகசூலை அடைய முடியாத நிலைமை ஏற்பட்டது. அமைச்சர் அவர்கள் தண்ணீர் திறக்கும் நாளை, மற்ற அதிகாரிகளுடன் கலந்து முடிவெடுத்து, திறக்கப்படுவதாகக் குறிப்பிடும் நாளன்றே தண்ணீரைத் திறந்துவிட தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).





**திரு. ரா. ரா. முனுசாமி**: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறை மானியங்களின்மீது பேசுகின்ற வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

செஞ்சி வட்டம் இருபதாண்டுக் காலமாக இருந்த ஆட்சியில் மிகப் பின்னுக்குத் தள்ளப்பட்ட வட்டமாக ஆக்கப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்திலே செஞ்சி வட்டம், யாரும் கை கொடுத்து காப்பாற்றப்படாத நிலையில் அவர்கள் ஆட்சியில் நின்றுவிட்டது. இன்று தமிழக அரசு பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டபிறகு மக்கள் மனதில் கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது. 1966–ல் ஏற்பட்ட புயலின் காரணமாக பல ஏரிகளில்—கிட்டத்தட்ட 66 ஏரிகள்—உடைப்பு எடுத்து, அதன் காரணமாக, விளைநிலங்கள் எல்லாம் பாழாகிவிட்டன. விவசாய மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளானார்கள். அங்குள்ள அதிகாரிகள் எல்லாம் பொது மக்களுக்கு , குறிப்பாக விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக செயல்பட்டு வருகிறார்கள். விவசாயத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நிலையில் கிட்டத்தட்ட 66 ஏரிகளில் மராமத்து வேலைகளை மேற்கொள்ள தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிதியில் ஏறத்தாழ முக்கால் பாகம் செலவழிக்கப்பட்டு, இன்னும் கால் பாகம்தான் செலவழிக்கப்படாமல் இருக்கிறது. பொதுப்பணித் துறை மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு செஞ்சி வட்டத்திற்கு உதவி செய்து வருகிறது. அதற்காகப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி, மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செஞ்சி வட்டத்தில் நந்தன் கால்வாய் ஒன்று இருக்கிறது. இந்த மன்றத்தில் 1952-ல் உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த, இன்றைய விவசாய அமைச்சர் அவர்கள் கூட இதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள். நந்தன் கால்வாய் வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக்கு அப்பால், பள்ளிக் கொண்டாப்பட்டியிலிருந்து துவங்கி, திருவண்ணாமலை, செஞ்சி வட்டம் வழியாக, எனது தொகுதியான மேல் மலையனூரிலுள்ள அனந்தபுரம் பனமலை ஏரியில் வந்தடைகிறது. இந்தக் கால்வாய், செஞ்சி, விழுப்புரம் வட்டத்திலுள்ள விவசாய மக்களுக்கு நல்ல பயன் அளிக்கக்கூடிய கால்வாயாக அமைந்திருக்கிறது. இன்று பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் 1957-ல் இந்த மன்றத்திலே நந்தன் கால்வாயைப் பற்றிப் பேசியதை நான் பத்திரிகை வாயிலாகப் படித்திருக்கிறேன். ஆகவே, அந்தக் கால்வாயைச் செப்பனிட்டு, சீர்ப்படுத்தித் தந்தால் அதன் மூலமாக கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கர் நிலங்கள், விவசாயிகள் பயிரிடக்கூடிய நிலங்களாக மாறும் சூழ்நிலை ஏற்படும் என்பதைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான மேல் மலையனூரில் உள்ள ஏரியில் வெள்ளையன் காலத்திலே மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டனவோ என்னவோ, கடந்த கால ஆட்சியில் மராமத்து வேலைகள் நடைபெறவில்லை. இப்போதுதான் புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மராமத்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்காக இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன். ஓரிரு குறைபாடுகள் இருந்தாலும், நாளாவட்டத்தில் அவைகள் எல்லாம் ஒழிந்துவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அதிகாரிகள் எல்லோரும் நல்ல முறையில் உற்சாகத்தோடு ஒத்துழைத்து, நல்ல வழிகளைக் காட்டக் கூடியவர்களாக அமைந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.).

மேல் மலையனூர் ஏரியிலிருந்து சங்கராபரணி ஆறு உருவாகிப் போகிறது. அந்த ஆற்றில் இரண்டு மூன்று தடுப்பு அணைகள் போடப்பட்டிருக்கின்றன. மேல் மலையனூர் ஏரிக்கு வரும் கால்வாயில் செயப்பாண்டி

கலிங்கல் பகுதியில் ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. இதுவரை சரியாக இல்லை. இந்த அணையைக் கட்டினால் இதன் மூலம் சுமார் 5 ஆயிரம் எக்கர்கள் பாசனம் பெறும். அந்த அணையில் சில உடைப்புகள், அரிப்புகள் இருப்பதால் கீழே தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. அந்த அணையை நல்ல பாதுகாப்பாகக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து........

DR. H. V. HANDE : Hon. Chairman, first of all I wish to state that we must give a great deal of importance to Irrigation for the simple reason that the farmers in our State are extremely irrigation-conscious. Unless we take this fact into consideration, we will not be able to assess the degree of importance which we should attach to Irrigation. Let us take the surrounding States. What is the position there ? When I go to the neighbouring States, I find that the people there are not so irrigation-conscious. Let us take for instance the Tungabhadra Project. Though everything was ready, it needed a lot of persuasion from the authorities to make the people utilise the water. But in our State even if a drop of water is given, it will be utilised fully by the ryots. If this fundamental aspect is properly grasped, we will attach the proper degree of importance to Irrigation.

Taking the State as a whole there are roughly between 60 lakhs and 70 lakhs of acres of cultivable land. What percentage of these acres is served by irrigation projects ? We find that it comes to about 25 per cent. For another 25 per cent, we give a little water. We give water for dry crops also. In view of the fact that we are utilising water to the fullest extent, the next step we have to take is, when we meet the officers of the Central Water and Power Commission, to impress upon them that whatever additional water is given will be fully utlised. If we produce more rice, it will be an advantage to the whole country and not merely for the Madras State. If we properly explain and impress on the Central Water and Power Commission that whatever water we get will be fully utilised, I am quite sure that we will be able to get some water from the West-flowing rivers. That is why I want the Madras Government to discuss this matter with the Central Water and Power Commission and the Ministers concerned. If water from the West-flowing rivers is given to us, it is not as if it is given to another country, it is given only to our own country. We have the technical know-how, an excellent team of officers and an excellent Ministry which will be able to each these. We must utilise these to the fullest advantage and request the Centra Water and Power Commission to consider our case sympathetically.

Construction of big irrigation projects and storage of water are no doubt necessary. But the most important thing is that adequate care must be bestowed on the system of distribution. Are we going to distribute on political considerations or on the basis of the fertility of the soil ? Or on the basis of socialism are we going to say that every place should get water without taking into consideration the fertility of the soil ? Fertility of the soil, the optimum quantity of water that is needed—these have to be decided not by politicians but by experts. Adequate attention



should be bestowed on distribution so that the ayacuts may receive their fair share. A decision as to how much quantity of water should be let in should be made by the Public Works Department. Many Members were saying that distribution of water was based on political considerations. That should not be the case. No parochial considerations should come into play.

The Deputy Leader of my Party wanted me to say this. He is absent ; otherwise he himself would have said it. In the Tirunelveli District water from the Papanasam reservoir and Manimuthar reservoir is being released indiscriminately in the Tambaraparani system for Kar cultivation. This is the complaint. I request the Minister to come to a decision without any political consideration (The time bell was rung.).

Only three Members of my Party are going to speak. Hence I request the Chair to allow me five more minutes.

Standing Orders are not properly observed and this results in unnecessary and unfortunate man-made famines.

I come to the next point. The most important project in the Madras State namely the Parambikulam-Aliyar Project is situated in the Coimbatore District. In respect of this particular project, there are certain problems. There is a long history behind the project. This project was created because of the extraordinary political pull of the Coimbatore District. There is a long-drawn controversy as to whether the water should be given to wet crops or dry crops. The World Bank Mission gave a decision and a report. The report has not seen the light of day. That has been my complaint for a long time past. Water has been given to dry crops also. Let us not go back on that decision. We should intimate to the ryots when and how much quantity of water is going to be released. A clear-cut policy has not been there. I would like this Ministry to adopt a clear-cut policy. The ryots must know sufficiently in advance how many cusecs of water we are going to release. The project supplies water to Pollachi, Udumalpet Dharapuram and Palladam taluks. In Pollachi there is no controversy. The extent of dry crops there is 90,000 acres and 90,000 acres are getting water. The extent in Udumalpet as 65,000 acres and these 65,000 acres are getting water. But there is a snag. There is an extent of 5,000 acres between Palladam and Dharapuram on the northern border of Arasur. If my information is correct, if a canal for a length of 2,500 feet is dug, water can be supplied to these 5,000 acres. The canal can be dug in no time if a decision is taken at the ministerial level. I request the Minister to look into this, and see that these 5,000 acres are given irrigation facilities as early as possible and brought under cultivation. There has been so much of political wrangle, one party saying one thing and issuing a pamphlet and another party saying another thing and issuing another pamphlet. This has become a very, very political issue. It is a sickening sight. A clear-cut policy must be evolved.

With regard to what Mr. Nallasivan said whether the Electricity Department or the Irrigation Department should get preference in the supply of water, the most important thing we should understand is that they are not rivals. Unless we have enough electricity to energise pumpsets, there will not be enough water.

Next I come to the newly constructed Legislators' Hostel. Some defects are there. I had recently been to the Hostel to meet a distinguished friend of mine. A number of complaints were there. I would request the Minister for Public Works to rectify the defects at this stage itself. If Members begin to stay there, then it will be difficult to rectify them.

There is the Otteri Nullah in Madras City. It is a canal. I was discussing this matter with my friend Mr. K. B. S. Mani who was there yestereday. I had been there a number of times. The problem is this. There is a slaughter house and a lot of blood and other things are let into it. Unless a cover is made, it will not be possible for the people living in the large number of houses on the banks to lead a normal life. They are very poor people living in tragic circumstances. If this is attended to, it will be a great boon and the people there will worship the Minister concerned. I request the Minister to have a comprehensive plan.

I know that such a kind of plan would already be there. I have seen some masonry work being carried on there. But something should be done immediately there and I would like the whole
ப work to be completed as early as possible so that the people on
1·30. both sides of the 'nullah' would be able to live a normal life. I hope the Hon. Minister will look into the matter.

Next I come to the Ramanathapuram district. If my hon. Friend, Thiru Cheemaichamy had been here he would have spoken only about the Ramanathapuram district because it is in such a bad plight and I request the Hon Minister to bestow his kind attention on this district.

Now I come to the last point. I want to refer to minor ports like Cuddalore, and it is an important point. I come from a sea-faring family. I would like the minor ports to be made attractive so that a proper climate can be created for the sea-faring people. We have got a thousand kilometres of sea-coast and now nobody is utilising it. The only way to encourage sea-transport is to make minor ports like Cuddalore and Nagapattinam attractive and make provision for the plying of boats, launches etc. from Madras to Cuddalore and from Madras to Nagapattinam and also from Cuddalore to Nagapattinam. We can have regular service and the launches can be utilised for that purpose by our young men. We have got N.C.C. and we have also got the three services, Air Force, Navy and the Army and they can use this steamer service for training purposes. Further, it would serve as a lever for the naval cadets to join a bigger Naval establishment like 'Dufferin' where intensive training is given to the naval cadets. So, if the



minor ports are made attractive our sea-faring people also will interest themselves in this matter. I request the Hon. Minister ,o look into this matter. With the hope that the Hon. Minister will refer to my constructive suggestions in his reply, I conclude my speech.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) : இத்துடன் இந்த அவையின் காலை நிகழ்ச்சிகள் முடிந்து மீண்டும் மாலை ஐந்து மணிக்குப் பேரவை கூடும்.-

*பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

இடைவேளைக்குப்பின் மாலை 5–00 பி.ப· ·32.

*பேரவை மீண்டும் மாலை 5-மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.*

### 5. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

***திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமது நாட்டிலே விவசாயம் பெருக வேண்டுமென்று சொல்லிக் கொண்டே வருகிறோம். நமது நாடு விவசாய நாடுதான். இருந்தும் போதிய அளவு விவசாயத்தைப் பெருக்க முடியாத நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் நம்மால் முடிந்தவரை எந்த அளவுக்கு விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அந்த அளவுக்கு நாட்டிலே நீர்வளம், நில வளம், விவசாயிகளுடைய மன வளம் ஆகிய மூன்று வளங்களும் இருக்க வேண்டும். நீர் வளத்தைப் பற்றி இன்றைக்குப் பெரிதாகப் பேசப்படுகிற இந்த நேரத்திலே நீர்வளம், பெரிய நீர்ப்பாசனம், நடுத்தர நீர்ப்பாசனம். சிறிய நீர்ப்பாசனம், என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையிலே பெரிய நீர்ப்பாசனத்தை ஏற்படுத்துவதற்கு, விரிவுபடுத்துவதற்கு இன்றைக்குச் சாத்தியக் கூறுகள் அதிகமாக இல்லையென்றாலும், இருக்கின்றவற்றைப் பயன்படுத்தும் முறையில் முக்கியமாக இரண்டொரு காரியங்களைச் செய்துதான் தீரவேண்டும். இதை யொட்டித் தான் அண்ணா அவர்கள் பாராளுமன்ற மேலவையிலே முதல் தடவை பேசும் போது விவசாயத்தைப் பெருக்குவதற்கு என்னென்ன காரியங்களைச் செய்தால் விவசாயம் பெருகும் என்று சொன்ன கருத்துக்களில் இரண்டொன்றை இங்கே சுட்டிக் காட்டுவது நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

நமது நாட்டுக்கு, குறிப்பாக தென்னகத்திலே ஆந்திர மாநிலத்தில் ஓடுகின்ற கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளிலே அணை கட்டி அந்த நீரைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தால் செங்கற்பட்டு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்கள் பயன்பெற முடியும். அந்த அளவுக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே திட்டம் உருவாக்கப்பட்டு என்ன காரணத்தாலோ, ஆந்திர மாநிலம் பிரிந்த காரணத்தினாலோ என்னவோ முடிவு பெறாமல் நின்றுவிட்டது. அந்தத் திட்டம் உருப்படியாக நிறைவேற்றப்பட்டு நம்முடைய தமிழ் நாட்டுக்கு கிருஷ்ணா. கோதாவரி தண்ணீர் வந்திருக்குமானால், நல்லதொரு பலனை அடைந்திருக்க முடியும். இப்போதும் ஒன்றும் பாதகம் இல்லை. நல்ல உற்சாகத்தோடு பணியாற்றுகின்ற அண்ணாவின் அமைச்சரவை டெல்லி பாராளுமன்ற மேலவையில் அன்று அண்ணா அவர்கள் பேசிய, வலியுறுத்திய திட்டத்தை நமது நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு வழி வகை செய்ய வேண்டும். கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் இந்த மாநிலத்திற்கு வந்தால் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடி நீருக்கு அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் சென்னைக்கும் அது நன்மை பயப்பதாக இருக்கும்.

இன்றைக்கு கூவம் ஆற்றையும், பக்கிங்காம் கால்வாயையும் சுத்தப்படுத்த கடல் நீரைச் செலுத்துவதற்கு ஏதோ கணக்கிடப்படுகிறது. கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் இங்கே வந்தால் அது கூவம் ஆற்றின் வழியாக கடலில் சென்று கலக்கும் நிலையில் கடல் நீரைக் கூவம் ஆற்றில் செலுத்த வேண்டிய கஷ்டங்கள் எல்லாம் இராது. எவ்வளவு செலவானாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆந்திர அமைச்சர்களோடு கலந்து பேசி முடிவுக்கு வர வேண்டும். அதனால் சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிவிடலாம். கூவம் ஆற்று நாற்றத்தையும் போக்கிவிடலாம். விவசாயப் பெருக்கத்திற்கும் வசதியாக இருக்கும். இப்போது பாலாற்றுப் பிரச்சினையில் மைசூர் மாநிலத்தோடு வாதிட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமையும் தீர்ந்துவிடும். ஆகவே, நம்முடைய அமைச்சரவை ஆந்திர மாநில அமைச்சர்களோடு கலந்து பேசி கூடிய சீக்கிரத்தில் இந்தத் திட்டத்தை செய்து முடிப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நடுத்தர நீர்ப்பாசனத்தைப் பற்றி இன்று காலையில் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். சாத்தனூர் அணையிலிருந்து தென்னாற்காடு மாவட்டத்தின் பெரும் பகுதி நன்மை பெற முடியும் என்று நினைத்தோம். முதல் தவணை முடிந்தது. இரண்டாவது தவணையிலாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்து அதிலும் ஏமாந்தோம். இப்போது கூட அதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீண்ட பெருங்காலமாக நந்தன் கால்வாய் என்ற கால்வாய் திருவண்ணாமலையிலிருந்து விழுப்புரம் வரை வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கால்வாய்ப் பகுதி தூர்ந்து விட்டது. அந்தக் கால்வாயை நிலமாக்கி விவசாயம் செய்கிறார்கள். அந்த விவரமும் அரசாங்கத்தின் பார்வையில் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். சென்ற ஆண்டு கூட முதலமைச்சர் அவர்கள் நேரில் போய்ப் பார்த்து வந்தார்கள். சாத்தனூர் அணையிலிருந்து அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டு வர வழிவகைகள் செய்ய வேண்டும். வீடூர் அணைக்குச் சாத்தனூர் அணையில் இருக்கும் தண்ணீரை நந்தன் கால்வாய் மூலமாகக் கொண்டுவர ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் பற்றி பரிசீலனை செய்து உடனடியாக வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள். எங்கள் பகுதியைப் பொறுத்த வரை பெரிய நீர்ப்பாசனமும் இல்லை, நடுத்தர நீர்ப்பாசனமும் இல்லை. சிறிய நீர்ப்பாசனமும் இல்லை. கிணற்றை வெட்டி இறைத்துப் பிழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த வருஷம் கொடுத்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும் போது இராமநாதபுரம், திருச்சி, கோயம்புத்தூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்குத்தான் கிணறுகள் வெட்டுவதற்காகப் பெருந் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தை மறந்து விட்டார்களோ அல்லது கணக்கில் இருந்தே எடுத்து விட்டார்களோ என்று தெரியவில்லை. மறந்து விட்டிருந்தாலும், விட்டு விட்டிருந்தாலும் இப்போதாவது எங்கள் பகுதியையும் அதிகமாகக் கிணறு வெட்டும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1966 கடைசியில் அடித்த புயலால் எங்கள் பகுதியில் உள்ள ஏரிகள் எல்லாம் சுத்தமாக உடைந்து தரைமட்டமாகப் போய்விட்டன. நம்முடைய அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு சென்ற ஆண்டு அத்தனை ஏரிகளையும் சீர் செய்வதற்கு வழிவகைகளைச் செய்தார்கள். அதிகாரிகள் அனைவரும் மிகத் திறம்படப் பணியாற்றி சீக்கிரமாகச் சீர் செய்து கொடுத்தார்கள். அதற்கான இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் சங்கராபரணி என்ற ஆறு ஓடுகிறது. வானூர் யூனியனிலிருந்து கண்டமங்கலம் பஞ்சாயத்து யூனியன் பகுதிக்குப் போவதற்குக் குறுக்கே அந்த ஆறு இருந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு பெரிய பாலத்தைக் கட்டாவிட்டாலும் கூட, சில தரைப் பாலமாவது கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும். கடலூரில் துறைமுகத்தைக் கட்டுவதற்காக எனது ஊரிலிருந்து கற்களை லாரிகளில் ஏற்றி 50 மைல் சுற்றிப் போய்க் கொண்டிருக்கிறது. இதிலே பாலம் கட்டுவதைப் பற்றி ஒரு கேள்வி கேட்ட போது ரூ. 3 இலட்சம் செலவாகும் என்று சொன்னார்கள். பெரிய பாலம் கட்டினால் அந்தத் தொகை ஆகலாம். சிறிய பாலமாகக் கட்டினால் கடலூர் துறைமுகத்திற்கு கல் எடுத்துச் செல்வதற்குச் சர்க்காருக்கு ஆகும் செலவு குறைவதோடு அந்தப் பகுதி மக்களுக்கும் பஸ் போக்குவரத்து பலன் ஏற்படும். நேரம் அதிகமாக இல்லாததால் எல்லாவற்றையும் சொல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால், முக்கியமாக நான் கூறியிருக்கும் சில யோசனைகளையும் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



*திரு எம். கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கும் இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகளை ஆதரித்து நான் என் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் இன்று நடுத்தரப் பாசனத்தையும், சிறிய நீர்ப்பாசனத்தையும், சிறப்புத் திட்டங்களாக ஏற்று இந்த அரசு சிறப்பான முறையில் கொண்டு வந்து செயல்படுத்தியிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கால்வாய் பாசனம், ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்று மூன்று விதமாகப் பிரித்துக் கொண்டால் கால்வாய் பாசனத்தைப் பொறுத்த வரையில் நீர்த் தேக்கங்களில் இருந்து தண்ணீர் வரும் காலத்தில் நல்ல முறையில் சாகுபடி செய்ய முடிகிறது. ஆனால் இந்த ஆண்டு தமிழகத்தைப் பொறுத்த வரையில் எல்லா நீர்த் தேக்கங்களிலும் போதிய மழையில்லாததினாலும், அணைகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலும் கால்வாய்களில் சரியான முறையில் தண்ணீர் விடப்படவில்லை. இருந்தாலும் அமைச்சர் அவர்கள் அங்குள்ள விவசாயிகளின் நிலைமையை உணர்ந்து அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று தண்ணீரை சிக்கனப்படுத்தியும், முறைப்படுத்தியும் சிறந்த முறையில் பாசன வசதிசெய்து தந்தார்கள்.

என் தொகுதியில் உள்ள பழைய கட்டளை மேட்டு வாய்க்காலில் சென்ற ஆண்டு தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் வேதனைப்படும் போது அங்குள்ள பயிரைக் காக்க, அப்போது மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் இருந்ததால் உடனே அதிகாரிகளை அழைத்து விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் விடப்பட்டது. அதற்காக நான் விவசாயிகள் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய கட்டளை மேட்டு வாய்க்காலில் இந்த ஆண்டும் அந்த நிலைமை இருந்து வருகிறது. பழைய கட்டளை மேட்டு வாய்க்காலின் 19/3 மைல் கிழக்கில் உள்ள ஏறத்தாழ 11,000 எக்கர் விவசாயம் செய்யத்தக்க விவசாய நிலங்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் (அன் ஆதரைஸ்ட் கல்டிவபுள் லாண்ட்ஸ்) நீர்ப்பாசனம் உறுதிப் படுத்தாத காரணத்தால் அந்த நிலத்திற்குரிய விவசாயிகள் ஒரு சிக்கலான நிலையில் இருந்து வருகிறார்கள். இதை அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் மூலம் கொடுத்து நேரிலேயே நிலைமைகளைத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே அந்த 19/3 மைலுக்குக் கிழக்கிலுள்ள 11,000 எக்கர் நிலங்களையும், நிரந்தர நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தரிசு நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக ஆக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் புள்ளம்பாடி கால்வாய்ப் பகுதியிலும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பகுதியிலும் ஏறத்தாழ 165 லட்சம் ரூபாய் செலவில் 4,000 விசை யேற்றங்களை அமைத்து 2,200 கிணறுகளும் வெட்ட திட்டமிட்டு இருப்பது கண்டு அமைச்சரவர்களுக்கு திருச்சி மாவட்ட விவசாயிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளித்தலையில் பஞ்சப்பட்டி ஏரி என்பது மிகப் பெரியதொரு ஏரி. அங்கு மழைக் காலத்தில் அதிக நீர் வருவதால் ஏரிகளின் கரைகள் பழுது பார்க்கப்படாமல் இருப்பதன் காரணமாக கரை உடைந்து விடும்

என்று அஞ்சி மதகுகள் மூலம் தண்ணீரைத் திறந்துவிடும் போது மருதூர், பரளி, குமாரமங்கலம் போன்ற ஊர்களில் உள்ள நன்செய் நிலங்கள் சேதமாகிவிடுகின்றன. ஒவ்வொரு ஆண்டு மழைக் காலத்தில் இது நடந்து வருகிறது. ஆகவே அந்தப் பஞ்சப்பட்டி ஏரியில் தூர் எடுத்து அதன் கரைகளை எல்லாம் உயர்த்த வேண்டும்.

சென்ற 20 ஆண்டுகளாக என் தொகுதியில் தோகமலை, மணப் பாறை பகுதிகளில் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள வடசேரி, கல்லடை, சமுத்திரம் போன்ற ஊர்களில் உள்ள ஏரிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் பழுதுபார்க்கச் செய்தால் அங்குள்ள விவசாயிகள் நல்ல பலனை அடைவார்கள். ஆகவே அவற்றை பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதினால் ஒவ்வொரு ஏரி மூலம் 2,000, 3,000-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் விளைநிலங்களாக மாறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

என் தொகுதியில் கீழ்க்கோடியில் உள்ள சூரியனூர் கிராமத்தில் இரண்டு பக்கத்திலும் வடிகால் இருப்பதால், மழை காலத்தில் பெரிய வெள்ளம் வருகிற காரணத்தினால் அந்த சூரியனூர் கிராமத்திலிருந்து மக்கள் வெளியே போக முடியாமலும், கிராமத்திற்குள் வரமுடியாமலும் இருக்கிற நிலை இருக்கிறது. இன்று பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அந்த ஊருக்குச் சென்று பார்வையிட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த ஊரில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதைக் கவனித்து அந்தப் பாலத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதி நிலைமை சரியாக இல்லையென்றாலும், ஓரளவு நடைப் பாலமாவதுஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் குளித்தலை, முசிறி, காவேரி பாலம் இன்றியமையாத ஒன்று. கடந்த 20 ஆண்டுகளாக பல சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுத்தும் அது பேச்சளவிலேயே இருந்து வந்தது. ஆனால் நம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை நன்குணர்ந்த காரணத்தினால் சென்ற ஆண்டு நம் மாநிலத்தில் உள்ள திட்டங்களில் அதற்கு முதல் இடம் தந்து மத்திய அரசுக்குப் அனுப்பி அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பது கண்டு அதற்காக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதி வருவாய் குறைந்திருந்தாலும் கூட எல்.ஐ.சி. மூலம் கடன் பெற்றாவது எப்படியாவது அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பாலத்தைக் கட்டி முடித்த பிறகு சுங்கவரி மூலம் நாம் வசூல் செய்து கொள்ளலாம் என்ற யோசனையையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கூவம் ஆறு மேம்பாடு திட்டத்தை இந்தப் புதிய அரசு துணிச்சலுடன் செய்ய ஏறத்தாழ முதல் நிலையாக 32 லட்சம் ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருப்பதற்காக இந்த அரசுக்கு என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஜேம்ஸ் அவர்கள் என்னுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி ஐந்து நிமிடங்கள் பேசுவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, என் கட்சி சார்பில் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தையொட்டி என் கருத்துகள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தின் கழிந்த மூன்று ஆண்டு கால நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது ஒவ்வொரு வருடமும் நிதி நிலை வருவாய் வளர்பிறை போல் வளர்ந்துகொண்டே இருக்கிறது. முதல் ஆண்டு 195 கோடி, இரண்டாம் ஆண்டு 217 கோடி, இந்த ஆண்டு 248 கோடி ரூபாய் என்று வருவாய் இருக்கும்போது இந்த பொதுப்பணித் துறை பாசனத் துறை இவற்றிற்காக ஒதுக்குகிற பணத்தைப் பார்க்கும்





போது தேய்பிறை போல் தேய்ந்து கொண்டு வருவதைப் பார்க்கலாம். இது இந்த மாநிலத்தின் வளர்ச்சியைக் காட்டுவதை விட தளர்ச்சியைத் தான் காட்டுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தை எடுத்துக் கொண்டால் வர வர ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படுகிற தொகை குறைந்து கொண்டே வருகிறது. ஆக திட்ட கால வரம்பில் இத் திட்டம் பூர்த்தியாகாது. இந்த ரீதியில் போனால் நாம் எதிர்பார்க்கிற தொகையில் நில்லாது இத் திட்டத்தைப் பூர்த்திசெய்ய கூடுதல் தொகை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இன்னொரு பிரச்னை. ராதாபுரம் கால்வாய் வெட்டியபோது கன்னியா குமரி ஜில்லாவிற்குப் போக உபரி தண்ணீர் இருந்தால் ராதாபுரம் கால் வாய்க்குத் தண்ணீர் கொடுப்பது என்பது அந்தத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் பத்திரிகை களில் பார்த்தேன், அதிகாரிகள் ராதாபுரம் கால்வாய்க்கு தண்ணீர் விடுவதற்கான வழிவகைகளை யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று. சிற்றாறு பட்டணங்கால் திட்டம் இன்னும் அரை மட்டம் கூட பூர்த்தியாக வில்லை. இத்திட்டம் பூர்த்தியாவதற்குள் ராதாபுரத்திற்குத் தண்ணீர் விட்டால் பல பிரச்னைகளை அது உண்டுபண்ணும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு வந்து அங்கு பொதுப் பணிகள் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்துவதாக கழிந்த சில மாதங்களுக்கு முன்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் தொகுதிகளில் எடுத்துக்கொள்வதற்கான வேலைத் திட்டங்களை எழுதி கலெக்டர் அவர்களிடம் கொடுத்திருந்தோம். ஆனால் இதுவரையிலும் அந்தக் கருத்தரங்கு நடைபெறவில்லை. என் மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் திட்டங்களை ஒருவேளை இந்த பட்ஜெட்டில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றாலும் கூட இனி அந்தத் திட்டங்களில் முக்கியமானவற்றையாவது நடத்தித்தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முக்கியமாக, எனது தொகுதியில் அமைக்கவிருக்கின்ற அணைக்கரை பாலம். இது ஒரு அணையாகவும், பாலமாகவும் உபயோகிக்கும் திட்டம். இது ஒரு சில ஆயிரம் ஜனத் தொகை கொண்ட அணைக்கரை ஊருக்கு மிகவும் பயன் தரக்கூடிய திட்டம். அதோடு மேல்புரம் பஞ்சாயத்தில் அமைக்கவிருக்கும் ஞாரான்விளை பாலம், தொடுவட்டி அரண்மனை ரோட்டில் குழித்துறை ஆற்றின் குறுக்கே கட்ட வேண்டியது.

அடுத்து, திரு வட்டாறு பாலத்தின் இரு பக்கங்களிலும் உள்ள ரோடை அகலப்படுத்தும் திட்டம். அந்த ரோடானது பல்லாண்டுகளுக்கு முன்பாக போக்குவரத்து வாகன வசதிகள் இல்லாத காலத்தில் அமைக்கப்பட்டது. இதன் இரு பக்கங்களிலும் 50 அடி 60 அடி ஆழமுள்ளது. ஆகவே இப்பொழுது பல விபத்துக்கள் அங்கே நடைபெறுகின்றன. ஓரிரண்டு பஸ்கள் கூட மறைந்துவிட்டன. ஒருவேளை அவைகள் தனியார் பஸ்கள் என்ற காரணத்தினால் அரசாங்கத்தின் கவனத்திற்கு வராமலிருக்கலாம். இந்த ஆபத்துகளைத் தடுப்பதற்காக பாலத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை அமல் நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனது தொகுதியிலிருக்கும் 17,000 பேர் ஜனத் தொகை கொண்ட அரமனை பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஒரு டிஸ்பென்ஸரி இருக்கிறது. அங்கு கட்டிட வசதியில்லாமலிருப்பதால் அதை விஸ்தரிக்க வழியில்லாமல் இருக்கிறது. இப்பொழுது இந்தக் கட்டிடத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அதை விரிவுபடுத்தித் தேவையான ஒரு கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியில் கழிந்த புயலில் சில ஆரம்பப் பாடசாலைகள் விழுந்து அழிந்து போய்விட்டன. மேல்புரம், திருவட்டார் போன்ற இடங் களில் எல். பி. எஸ்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாடசாலை இந்த டிமாண்டில் வருகிறதா ?

**திரு ஜே. ஜேம்ஸ் :** கட்டிட வேலைகள் பற்றிக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி.

**திரு ஜே. ஜேம்ஸ் :** அந்தப் பள்ளிக்கூடங்களைக் கட்டித்தர வேண்டு மென்று கேட்டுக் கொள்வதோடு கழிந்த பட்ஜெட் தாக்கல் செய்த பொழுது திருப்பரப்பு வலதுகரை கால்வாய்த் திட்டம் சித்தாறு–பட்டணங் கால் திட்டத்தோடு சேர்த்துக் கொள்ளப்படுமென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் ஒரு சில தனிப்பட்டவர்களின் நன்மையைக் கருதி அந்தத் திட்டம் கைவிடப் பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின் றேன்.

ஃபுட் பரொடக்ஷன் ஸ்கீம் முன்பு நல்ல முறையில் சேவையாற்றியது. அது இப்பொழுது மந்த நிலையிலிருக்கிறது. அதற்கு அதிகப் பணம் ஒதுக்கி மாவட்டத்தில் இருக்கக்கூடிய குளங்களில் தூர் வாரி சிறு பாசனத் திட்டத்தை அமுல் நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாம்பழத்துறை, பொய்கையணைத் திட்டங்களையும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொளகின்றேன். இந்த மாம்பழத்துறை திட்ட மானது தக்கலை நகரசபை, கொளச்சல் நகரசபை, இரணியல் நகரசபை போன்ற ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமாகும். ஆகவே இவை களை அமைத்துத் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

* **திரு. டி. ஏ. ராஜவேலு :** மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் அவை முன் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

“வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர குடி உயரும்,
குடி உயர கோன் உயரும்”

என்ற ஒளவை மூதாட்டியின் கருத்தை நன்கு உணர்ந்த இந்த அரசாங்கம் காவிரி சங்கமுகப் பகுதியில் இரு போகப் பயிர் விளைச்சலை உண்டாக்கும் பரப்பளவைக் கூட்டி நல்ல புதிய பயிர் முறையை ஏற்படுத்தி செயலுக்குக் கொண்டு வந்தமைக்காக நல்லெண்ணம் கொண்டவர்கள் அத்தனைபேரும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இதேபோல தமிழகம் முழுவதும் பயன்படும் வகையில் ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை தூத்துக்குடியில் அமைக்க, தமிழகத்து மக்களின் எழுச்சிக் குரலை மத்திய அரசுக்கு எடுத்துரைத்து, வன்மையுடனும் இடைவிடாமலும் இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் எடுத்துக்கூறி இந்தத் திட்டத்தை ஏற்படுத்த சுமார் 24 40 கோடி ரூபாய் வரை ஒப்புதல் வாங்கியுள்ளதையும், இந்தத் திட்டத்திற்கு முன்னதாகவே நமது தமிழக அரசாங்கம் 110 இலட்சம் ரூபாய் செலவிட்டிருப்பதையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். தமிழகமே அதைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளது.

திருமணிமுத்தாறு–பொன்னியாறு திட்டம் என்ற திட்டம் சேலம் மாவட்டத்தில் சரபங்க நதியில் கட்ட, 1960-இல் திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு மத்திய சர்க்கார் செயல்படுத்த முன் வந்தது. ஆனால் ஏற்கெனவே



இருந்த காங்கிரஸ் அரசாங்கம் இதைச் செயல்படுத்த ஏனோ முன்வரவில்லை. 5-30. இந்தத் திட்டத்திற்கு சுமார் ரூ. 312.50 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. இதனால் இந்தப் பகுதியில் 10,000 ஏக்கர் பாசன வசதி யடையுமென்றும், அதன் பயனாக 5,000 டன் உணவு உற்பத்தி அதி கரிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் செயலபடுத்த முன்வந்தும் மாநில அரசு ஏனோ எடுத்துக்கொள்ள வில்லை. ஆகையால் புதிய தமிழக அரசு இந்தத் திட்டத்தின் சிறப்பினை யுணர்ந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

1961-ஆம் ஆண்டு காவிரியாற்றில் வெள்ளப் பெருக்கெடுத்தது. அதனால் ஒரு கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டது. அதற்கு நிவாரண வேலை செய்யும் வகையில் அப்பொழுதிருந்த அரசாங்கம் தனி அதிகாரியை, என்ஜினியரை ஆய்வுரை செய்வதற்காக ஏற்படுத்தியது. அந்த ஆய்வுரை யில் தனி அதிகாரி அவர்கள் பரிந்துரையை வழங்கியுள்ளார்கள். அதில் ஐந்து திட்டங்கள் உள்ளன. அதில் ஒரு திட்டம் மேட்டூர் டன்னல் ஸ்கீம் சுமார் 2½ கோடி ரூபாய் அளவில் நிறைவேற்றும் திட்டம். அதை முன் பிருந்த அரசாங்கம் இதுவரையில் செயல்படுத்தவில்லை. அதையும் இந்தத் தமிழக அரசு நன்கு பரிசீலித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதை இந்த அரசு நன்குணர்ந்திருக்கிறது. அதிலும் சங்ககிரி, திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய வட்டங்கள் பஞ்சப் பிரதேசம் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதையே நமது மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள், கோவை மாவட்டத்தைவிட சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களையும், சேலம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒப்பிட்டு சுட்டிக் காட்டினார்கள். இப்படி எங்கள் மாவட்டத்தின்பால் பரிவைக் காட்டிய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் இந்தத் திட்டங்களைக் கண்டிப்பாக நிறை வேற்றித் தருவார்கள் என்று மிகவும் நம்புகிறேன்.

அடுத்து காவேரி கீழ்கரை வாய்க்காலை மராமத்து செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதிலுள்ள கிளை வாய்க்கால்களி லுள்ள மதகுகளில் பெரும் பகுதி கடைசி வரை உள்ள நிலங்களுக்குப் பாய்வதில்லை. அதனால் தண்ணீர் கடைசி வரை பாய்வதில்லை. இதை யடுத்து அமைக்கப்பட்டுள்ள தலைமை வாய்க்காலில் உள்ள பெரிய மதகு களில், கீழே பாயும் தொட்டிகள் இல்லாதிருப்பதால் கடைசியாக உள்ள நிலங்களுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. இதை நீக்க பெரிய மதகுகளின் கீழ்ப் பகுதிகளில் தொட்டிகள் அமைத்து இந்த வருஷம் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதைப் போலவே மேட்டூர் கீழ்கரை வாய்க்காலை இன்னும் 7 மைல் நீளத்திற்கு மௌசி வரை வெட்டினால் 5,000 ஏக்கர்களில் பாசனம் செய்ய முடியுமென்று கூறப்படுகிறது. பத்தாண்டுக் காலமாக எங்கள் பகுதி மக்கள் இந்தத் திட்டத்தை மிகவும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன். மத்திய சர்க்காரை இந்த மாநில சர்க்கார் 100 கோடி ரூபாய் நீர்ப் பாசனத்திற்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அதை மத்திய சர்க்கார் கண்டிப்பாகத் தரவேண்டு மென்று வற்புறுத்திக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. ஏ. கே. மூர்த்தி :** அவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பாசன மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல ஆசைப்படு கிறேன். ஜெயங்கொண்டான் தாலுகாவானது திருச்சி மாவட்டத்திலேயும்

மிகவும் பின்தங்கிய தாலுகா. அந்த தாலுகாவிலுள்ள சில பெரிய ஏரிகள் இது வரையில் செப்பனிடப்படாமல் இருப்பதால் அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு பாசன வசதியில்லாமல் இருக்கிறது.

அடுத்து, ஜெயங்கொண்டான் நகரத்தில் அந்தப் பகுதியிலுள்ள எல்லா ஏழை விவசாயிகளுக்கும் நீர்ப்பாசனம் வழங்குகின்ற அளவு ஆவேரி என்ற ஒரு பெரிய ஏரி உள்ளது. அந்த ஏரித் தலைப்பை செப்பனிட்டு கால்வாய் அமைத்துக் கொடுத்தார்களானால் அந்த ஏரியின் மூலம் சுமார் 500 ஏக்கர்களுக்கு மேல் உள்ள நிலங்கள் ஜெயங்கொண்டான் நகரத்தில் ஏழை விவசாயிகளுக்குப் பயன்படும்.

அடுத்து, சுமார் 2,000 ஏக்கர் பயிராகக் கூடிய புதுக்குடி என்ற ஒரு பெரிய ஏரி அந்தப் பகுதியில் இருக்கிறது. அந்த ஏரி தூர் எடுக்கப்படாமல் மிகவும் ஓட்டை உடைச்சல்களாக இருக்கிறது. அந்த ஏரியை செப்பனிட்டு, ஆழப்படுத்தி, அணை கட்டுவார்களானால் அந்த ஏரியின் மூலம் 2,000 ஏக்கர்கள் பயிராகின்ற அளவுக்கு அந்த பாசனம் கொடுக்கக்கூடிய ஏரி என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டீப்பளூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள கோவைத் தட்டை என்ற ஒரு பெரிய ஏரியின் மூலம் 2,000 எக்கர்களுக்கு மேல் தலைப்புப் பாசனம் செய்ய முடியும். அந்த ஏரியை இன்னும் அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, அதற்கு அணைகட்டி இந்த அரசாங்கம் தருமானால் அந்த பகுதியிலுள்ள ஏழை விவசாயிகள் பாசன வசதி மூலம் நல்ல பலன் அடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல் டீப்பளூர் பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்ற பாண்டியன் என்ற ஒரு பெரிய ஏரி நீர்ப்பாசன வசதி அளிக்கக் கூடியதாக இருக்கிறது. மழை நேரங்களில் அந்தப் பகுதியில் தண்ணீர் தேங்கி நிற்காத காரணத்தினால், மழை வருகின்ற பொழுது தண்ணீர் தேக்க முடிவதில்லை. அந்த ஏரியை விட்டால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு வேறு தண்ணீர் கிடையாது. எனவே, அந்த பாண்டியன் ஏரியை ஆழப்படுத்தி, அணைக்கட்டி தடுத்து செப்பனிட்டுத் தருவார்களானால் அதன் மூலம் சுமார் 1,200 ஏக்கர்களுக்கு மேல் பாசனம் கிடைக்கும் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீபுரந்தானியில் காட்டு ஏரி என்று ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அங்கு சுத்தமல்லிக்கு அருகில் காட்டு ஏரி ஒன்று இருக்கிறது. அந்த சுத்தமல்லி கிராமத்திற்குப் பக்கத்தில் இருக்கிற அந்த காட்டு ஏரியில் மழைக் காலங்களில் உடைப்பெடுத்து, உறுப்பு எடுத்து போக்குவரத்துக்குத் தடையாக இருக்கிறது. மழைக் காலங்களில் பொது மக்கள் அங்குமிங்கும் செல்வதற்கு மிகுந்த தடையாக இருக்கிறது. ஆதலினால் அதில் ஒரு பாலம் அமைத்து போக்கு வரத்துக்கும் பொது மக்களுக்கும் நன்மை செய்கின்ற அளவுக்கு வழி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கைவிடப்பட்ட மருதையாற்று திட்டத்தை மீண்டும் அந்தப் பகுதியில் கொண்டு வருவார்களானால் — செயல் படுத்துவார்களானால் அந்த ஜெயங்கொண்டான், அரியலூர், செந்துறை, ஆண்டிமடம் போன்ற தாலுக்காக்களில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு அதிகமான நீர்ப்பாசனம் கிடைக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, டீப்பளூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பொன்னேறு என்ற ஒரு ஏரி. அந்த ஏரியின் மூலம் மழைக் காலங்களில் தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அந்தப் பொன்னேரியினுடைய தலைப்பை மாற்றி அமைத்து அல்லது பாதுகாத்துத் தருவார்களானால் சாகுபடி செய்கின்ற நேரத்தில் தண்ணீர் கேட்டுப் பெற்று அதன் மூலம் அங்குள்ள ஏழை விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நமசு ஓடைத் திட்டம், செந்துறை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சின்னாறு திட்டம், இந்த இரண்டு திட்டங்களை நிறைவேற்றித் தருவதன் மூலம் பயிரைப் பெருக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் இது போன்ற ஏரிகள் இல்லாமல், ஓடையும் இல்லாமல், வாய்க்காலும் இல்லாமல், நீர்ப் பாசனம் இல்லாத சில பகுதிகள் இந்த டீப்பளூர் பஞ்சாயத்து யூனியனிலும், ஜெயங்கொண்டான் பகுதியிலும், மீன்சுருட்டி, செந்துறை ஆகிய பகுதிகளிலும் ஆண்டிமடம் பகுதியிலும் இருக்கிறது. அங்கு வாய்க்கால்களை வெட்டி, ஏரிகளை வெட்டி, வசதி செய்து தரும்படி நான் மிகவும் விரும்பி வேண்டிக் கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்ல. பச்சைமலை என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் அந்தப் பகுதியில் ஆண்டிமடம், டீப்பளூர், செந்துறை, ஜெயங்கொண்டான், அரியலூர் ஆகிய ஐந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு மேல் உள்ள பகுதிகளிலுள்ள ஏழை விவசாயிகள் நீர்ப் பாசன வசதி பெறுவார்கள். ஆகவே, அந்த திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டும் அல்ல, இந்த ஜெயங்கொண்டான் தாலுகா மிகவும் பிற்போக்கான நிலையில் இருப்பதால் அந்த தாலுகாவில் மழைத் தண்ணீரை தவிர வேறு தண்ணீரே பார்க்க முடியாது. எனவே தான் அந்தப் பகுதியிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு, அந்தப் பகுதியிலிருக்கின்ற ஆயக்கட்டு ஏரிகளை செப்பனிட்டு தருவார்களானால், உண்மையாக தஞ்சை மாவட்டத்திற்கு சவால் விடுகின்ற அளவுக்கு நல்ல உணவு உற்பத்தியைத் தர முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் என்னுடைய தொகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்த பொழுது, என்னுடைய தொகுதியினுடைய நிலைமையை நன்றாக அறிந்தார்கள். எனவே தான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என் வட்டத்தில் இப்பொழுது செயல் படுத்தப்பட்டிருக்கின்ற திட்டங்கள் அனைத்தையும் நல்ல முறையில் செயல்படுத்தி மிக அதிகமான அளவுக்கு ஏரிகளையும், வாய்க்கால்களையும் ஆழப்படுத்தியும், அதிகப்படுத்தியும் பல கால்வாய்களை ஏற்படுத்திக் கொடுத்தும் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெயங்கொண்டானிலுள்ள பொன்னேரி தலைப்பைப் பற்றி முதலிலே குறிப்பிட்டேன். அந்த பொன்னேரியைப் பற்றி பல முறை சாகுபடி சமயத்தில் பெரிய அதிகாரிகளிடம் நான் கேட்டிருக்கிறேன். அவர்கள் பல முறை முயற்சித்தும் அந்த குறித்த காலத்திற்கு தண்ணீர் விட முடியவில்லை. காரணம், அந்தத் தலைப்பை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது புதுப்பித்துத் தரவேண்டும். அதிகாரிகள் முயற்சித்தும் நேராநேரத்திற்கு, காலாகாலத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியாத காரணத்தால் அங்கே இருக்கிற ஏழை விவசாயிகள் அடிக்கடி அதிகாரிகளைச் சந்தித்து வலியுறுத்திக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது ; உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்போதுள்ள ஜெயங்கொண்டான், உடையார் பாளையம் போன்ற பகுதிகளில் உள்ள வாய்க்கால்களை சீர்படுத்திக் கொடுத்து நல்ல முறையில் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய திட்டங்களை செயல்படுத்தித்தர வேண்டுமென்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, எனது வணக்கத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

• **திரு அ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இன்று நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பாசன மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். முந்திய அரசைக் காட்டிலும் பிந்திய அரசு பாசனத்தில் பெரிய

அக்கறை கொண்டிருப்பதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருப்பது பாசனத் திட்டம். தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை மேம்படுத்த மத்திய அரசு ரூ. 24·40 கோடி கொடுத்திருப்பது நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருடைய முயற்சியாலாகும். வைகை கால்வாயைப் புதுப்பிக்க ரூ.395 இலட்சம் செலவிடுகின்ற அரிய திட்டத்தை உருவாக்கியிருப்பதையொட்டி நம்முடைய அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கீழ்பவானி, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டப் பகுதிகளில் புதிய கிணறுகளை வெட்டி மின் இணைப்பு கொடுத்து உணவு உற்பத்தியை பெருக்குவதில் நம்முடைய அரசு முக்கிய கவனம் செலுத்தியிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. இருக்கண்குடி, சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்பட்டதால் 18,600 எக்கர் நிலம் பாசனம் அடைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். அது மட்டும் அல்ல. இந்த அரசு இருபோகப் பயிர், புதிய பயிர் முறைகளைச் செயலுக்குக் கொண்டு வந்திருப்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய எடப்பாடி தொகுதியில் மதுரை காளியம்மன் பள்ளம் என்று ஒரு சிறிய நீர்த் தேக்கம் இருக்கிறது. அந்த நீர்த் தேக்கத்தை பல ஆண்டுகளாக முயற்சித்தும் கட்டித்தரவில்லை. இந்த நம்முடைய அரசு பொறுப்பேற்று ஓர் ஆண்டு ஆகிறது. இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பார்களானால் இந்தத் திட்டத்தின் மூலமாக 2,000 எக்கர் நிலங்களுக்குப் பாசனம் தருகின்ற ஒரு வாய்ப்பினை நாம் ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். அதன் மூலம் நாம் விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஒரு உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் எடப்பாடி சரபங்கா நதியில் நீர் நிரம்பி, பெருமழை நேரங்களிலே நகரத்தை சேதப்படுத்துகிறது. அந்தத் தண்ணீர் நகரத்திற்குள் புகாவண்ணம் அதைக் தடுத்து ஒரு சிறிய நீர்த் தேக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அமைச்சரவையை கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், பல ஏரிகள் பல ஆண்டுகளாக தூர் எடுக்கப்படாமல் இருப்பதால், பல தொல்லைகளைக் கொடுத்திருக்கின்றது. இந்த ஏரிகளையெல்லாம் உடனடியாக தூர் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏரிகளில் பெரிய ஏரிகளான குள்ளம்பட்டி ஏரி, கொண்டையம்பாளையம் ஏரி, சித்தூர் ஏரி, இவைகளெல்லாம் நீண்ட நாளாக தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் தூர் எடுத்து விவசாயத்திற்கு — விவசாயிகளுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று நான் நம்முடைய அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மேட்டூர் இடது கரை வாய்க்கால் வலது கரை வாய்க்கால் வெட்டியதிலிருந்து இன்று வரை மராமத்து வேலைகள் செய்யப்படவில்லை. மராமத்து செய்யப்படாத காரணத்தினால் வாய்க்கால் தூர்ந்து அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறையாவது கால்வாய்களை சுத்தப்படுத்தி, மராமத்து வேலைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கால்வாய்களில் சில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது, விவசாயிகளால் கரை உடைக்கப்பட்டு, அருகில் இருக்கிற நிலங்களுக்கு அதிகத் தண்ணீர், தூரத்திலிருக்கிற நிலங்களுக்கு தண்ணீரே போகாத நிலைமை ஏற்படுகிற காரணத்தினால், தண்ணீர் வருகின்ற நேரத்தில் விவசாயிகளிடையே அடிதடிகள் ஏற்பட்டு, அவர்களுக்கு சில நேரங்களில் தொல்லைகள் ஏற்படுகின்றன. அந்த நேரங்களில் நாங்கள் சென்று உறுதுணையாக இருந்து, தண்ணீரை முறைப்படுத்தி பாய்ச்ச ஏற்பாடு செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க தண்ணீர் வருகின்ற நேரத்தில் நம்முடைய அரசு மூன்று மைல்களுக்கு ஒரு தனி அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரிகள் அந்த வேலையைக் கவனிப்பதற்கு உறுதுணையாக இருப்பார்களேயானால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த நேரங்களில் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாமல் இருக்கும்.



சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதை நம்முடைய அரசு அறியும். அதை இதற்கு முன்பிருந்த அரசும் நன்கு அறிந்திருக்கிறது. இந்த அரசில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் இருக்கிற காரணத்தினால் இம்மாதிரி நல்ல திட்டங்களை உடனடியாக நிறைவேற்றி, மக்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டும், நம்முடைய அரசு இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஐந்தாண்டுக்குள் சேலம் மாவட்டத்தை ஒரு முதன்மையான மாவட்டமாக ஆக்க நம்முடைய அரசு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் திருமணிமுத்தாறு, பொன்னியாறு திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இதைப்பற்றி பல தடவை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 5,000 எக்கர் பாசனத்திற்கு வரும். ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் 50,000 டன் நெல் விளையக்கூடிய ஒரு திட்டமாக இருக்கக்கூடும். ஆகவே, நம்முடைய உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு இதுமாதிரி சிறிய நீர்த்தேக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிக எக்கர் நிலம் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கிற ஏரிகளை, வாய்க்கால்களை சீர்திருத்தித் தரவேண்டும். திருமணிமுத்தாறு திட்டத்தை இந்த ஐந்தாண்டுக்குள் நிறைவேற்றிக் கொடுத்தால், அது நமது அரசு நாட்டு மக்களுக்கு செய்யக்கூடிய ஒரு நல்ல பணியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ.ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, பாசனத்துறை மானியவிவாதத்தில் என்னுடைய அபிப்பிராயங்கள் சிலவற்றை சொல்லிக் கொள்ளுகிறேன். நம் தமிழக அரசில் சுமார் 37,000 நீர்நிலைகள் இருக்கின்றன. அற்றில் சுமார் 2,000 நீர்நிலைகள் பி.டபிள்யூ.டி.-யின் மேற்பார்வையில் இருக்கின்றன. அது போக, ஜமீன் ஒழிப்பு ஏரியாக்களில் இருக்கக்கூடிய நீர்நிலைகள் 14,000. அது போக பஞ்சாயத்து மேற்பார்வையிலும், ரெவின்யூ இலாகா பொறுப்பிலும் 20,000 நீர்நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. எக்ஸிஸ்டிங் பங்ஷனல் ஆர்கனைஸேஷனை மாற்றி டெரிடோரியல் ஜூரிஸ்டிக்ஷன் என்ற முறையில் இப்பொழுது இருக்கக்கூடிய ரீ-ஆர்கனைஸேஷன் ஸ்கீம் இருக்கிறது. அது ஒரு விதத்தில் வரவேற்கக்கூடிய நிலைமையில் இருந்தாலும், நடைமுறைக்கு சரியாக வருமா என்ற ஒரு ஐயப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால், நான்-லிஸ்டம் டாங்ஸுக்கு இது பிரயோசனப்படுமா, செய்ன் ஆஃப் டாங்ஸ் இருக்கக்கூடிய இடத்தில் இது பிரயோசனப்படுமா என்று ஆராயவேண்டியிருக்கிறது. ஒரு பக்கம் லிஸ்டம் டாங்ஸைப் பொறுத்தவரையில் ரீ,ஆர்கனைஸேஷன் மூலமாக ஒன்றும் மாற்றம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இன்னொரு பக்கம் நான்-லிஸ்டம் டாங்ஸுக்கு இதனால் நன்மை ஏற்படுமா என்று பார்த்தால், யோசிக்க வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால், நாம் பிரித்து இருக்கக்கூடிய சர்கிள், டிவிஷனை எடுத்துக்கொண்டால், இரண்டு டிவிஷனில் ஒரு நீர்ப்பாசனம் வருகிறது. நான்-லிஸ்டம் டாங்ஸ் இரண்டு டிவிஷனுக்கு வருகிறது அப்பொழுது வேலை பகிர்ந்து செய்யப்படுமா, குறைந்த காலத்தில் செய்யப்படுமா என்று ஐயப்பாடாக இருக்கிறது. டெரிடோரியல் ஜூரிஸ்டிக்ஷன் பணம் வசூல் செய்வதற்கு பிரயோசனப்படும், நிதி இலாகாவுக்கு பிரயோசனப்படும். அபிவிருத்தி வேலைகளுக்குப் பிரயோசனப்படுமா என்பதை யோசித்துப் பார்த்தால், கொஞ்சம் கவலைக்கு இடம் கொடுக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால்—பொதுப்பணித் துறை அமைச்சர் தவறுதலாக நினைக்கக்கூடாது—ஒரு ஆஸ்பத்திரியில் 100 படுக்கைகள் இருந்தால், இரண்டாகப் பிரித்து ஒருவர் எல்லாவற்றையும் பார்க்கவேண்டும் என்று முடிவு செய்தால், அது சரியாக செயல்படுமா என்றால், 20 வருஷம், 30 வருஷங்களுக்கு முன்பு அம்மாதிரி செயல்பட்டு வந்தது. இப்

பொழுது எல்லா திட்டங்களுக்கும், எல்லா காரியங்களுக்கும் ஸ்பெஷலிஸ்டு வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்திலும் ஸ்பெஷலைஸ் பண்ணி, அன்னிய நாடுகளுக்குப் போய் ஆராய்ச்சி மூலம் செயல்பட்டு வரக்கூடிய என்ஜினியர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களை ஒன்றாகச் சேர்த்து இம்மாதிரி ரீ-ஆர்கனேஸேஷன் மூலம் டெரிடோரியல் ஜுரிஸ்டிக்ஷன் கொடுத்தால், தனியாகப் படித்து ஆராய்ச்சி செய்தது பிரயோசனப்படுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதுபோக எனக்குத் தெரியும், சிலகால்வாய்கள் ஒரு பகுதியிலும், கால்வாய்களுடைய கரை இன்னொரு பகுதியிலும் இருக்கும். அப்பொழுது வேலை உடனடியாக செய்ய முடியுமா என்று கூட சந்தேகப்படுகிறேன். டிவிஷன்படி பார்த்தால், கரை ஒருவருக்கு இருக்கும், கால்வாய் ஒருவருக்கு இருக்கும். இதை நினைக்கும் பொழுது தான் கொஞ்சம் பயப்பட வேண்டியிருக்கிறது. அதுபோக, பஞ்சாயத்து குளங்கள், ரெவின்யூ குளங்கள் பழைய நிலையிலே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இது மாதிரியே பின்னால் செய்யப்போகிறோம் என்று ஓர் இடத்தில் சொல்லப்படுகிறது. 1958-ல் பஞ்சாயத்துச் சட்டம் வந்தது. கிட்டத்தட்ட 10 வருஷங்கள் ஆகிவிட்டன. இன்னும் மாற்றப்பட்ட நீர்நிலைகள், மாற்றப்படாத நீர்நிலைகள் (டிரான்ஸ்பேர்டு ஸோர்ஸஸ் டெரிடரி, நான்-டிரான்ஸ்பேர்டு ஸோர்ஸஸ் டெரிடரி) என்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு பக்கம் பஞ்சாயத்துப் பொறுப்பில் இருந்துகொண்டிருக்கிறது. 10 வருஷம் ஆகியும் நீர்நிலையாரிடம் இருக்கிறது என்ற முறையே இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரி 1948-ல் ஜமீன் ஒழிப்பு ஏற்பட்டது. ஜமீன் பிரதேசத்தில் 14,400 ஸோர்ஸஸ் இருந்துகொண்டிருக்கின்றன. 1967–68-ல் 5,500 ஸோர்ஸஸ், நீர்நிலைகள்தான் மராமத்து செய்யப்பட்டதாக சொல்கிறார்கள். அதாவது 20 வருஷம் கழிந்த பிற்பாடு, ஐந்தில் இரண்டு பங்கு தான் மராமத்து வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் சொல்லிக்கொள்ளப்படுகிறது. குறைந்தது 100 வருஷமாவது ஆகவேண்டும், ஜமீன் பிரதேசங்களிலுள்ள நீர்நிலைகளைச் செப்பனிட என்றால், அதாவது ஒரு செஞ்சரி வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இவ்வளவையும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்று நீர்ப்பாசனத்தை இந்த வழியில் பிரிப்பது உசிதமாக இருக்குமா என்பது தான் என்னுடைய ஐயப்பாடு. அதைவிட மைனர் இர்ரிகேஷன், மேஜர் இர்ரிகேஷன், என்று இரண்டாகப் பிரித்து, மைனர் இர்ரிகேஷனுக்கு ஒரு சீஃப் என்ஜினியர், மேஜர் இர்ரிகேஷனுக்கு ஒரு சீஃப் என்ஜினியர் என்று வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பி.டபிள்யூ.டி. செகரடரி கூட 1965-ம் ஆண்டில் ஒரு ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள், இது மாதிரி இரண்டாகப் பிரித்து, மைனர் இர்ரிகேஷன் பிராஞ்ச, மேஜர் இர்ரிகேஷன் பிராஞ்ச என்று பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்தனி சீஃப் என்ஜினியர் போட்டால், குறுகிய காலத்தில், சீக்கிரமாக வேலை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டால், மைனர் இர்ரிகேஷன் பூராவும் ஒருவரிடமும், 250, 300 ஏக்கருக்கு மேல் உள்ளது ஒருவரிடமும் இருக்க வேண்டும். இப்பொழுது கட்டடத்தையும் ஒப்படைத்திருக்கிறோம், கட்டட மராமத்தையும் ஒப்படைத்திருக்கிறோம். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்பொழுது பஞ்சாயத்து ஞாபகம் வருகிறது, பஞ்சாயத்து யூனியன் ஞாபகம் வருகிறது. இப்பொழுது அக்ரிகல்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபீஸரை எடுத்துக்கொண்டால், அவருக்கு ஆர்.டி.ஓ.-வின் கீழும் பொறுப்பு இருக்கிறது, பி.டி.ஓ.-விடமும் பொறுப்பு இருக்கிறது. ஒரு இடத்தில் சொல்வார், ஆர்.டி.ஓ. கூப்பிட்டார் என்று. இன்னொரு இடத்தில் சொல்வார் பி.டி.ஓ. கூப்பிட்டார் என்று. இம்மாதிரி பாகுபாடு ஏற்பட்டால், நிர்வாகம் செம்மையாக நடக்க வழி இல்லாமல் போகும். ஆகவே, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருஷம் நீங்கள் பாருங்கள், எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை. நீங்கள் 26–8–1968-ல் திருநெல்வேலியில் ஒரு மாநாடு போட்டீர்கள். ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. அதன் குறிப்புகள் எங்கே இருக்கிறது? என்ன செய்யப்பட்டிருக்கிறது? அதற்குக் காரணம், இதெல்லாம் ஒரு இலாகா பொறுப்பில் இருக்க வேண்டும். இன்று ஃபுட் ப்ரொடக்ஷன் வேலைகள் செய்யாமல் இருப்பதற்குக் காரணம், ரெவின்யூ டிபார்ட்மெண்டும், இர்ரிகேஷன்



டிபார்ட்மெண்டும், இரண்டும் இணைந்து வேலை செய்யத் தாமதம் ஏற்படுவது தான். பஞ்சாயத்தில், 14,000 டாங்குகள் இருந்தும், 5,000 வேலை செய்ய முடியவில்லை. காரணம், "டுயல் கண்ட்ரோல்", "டுயல் ரெஸ்பான்ஸிபிலிடி". அதே மாதிரி, நீங்கள் அந்த மாநாட்டில் எந்தக் காரியத்தை வேகமாக தீவிரமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும், அதைச் செய்ய முடியவில்லை. எட்டு மாதம் ஆகிறது. ஒன்றும் நடக்கவில்லை. நீர்ப்பாசன இலாகாவில் கேட்டால், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் கணக்குகள் வரவில்லை என்று சொல்கிறார்கள். இது மாதிரி இருப்பதை மாற்றி, கண்ட்ரோல் அண்ட் டிஸ்ட்ரிப்யூஷன் இன் இர்ரிகேஷன் ஸிஸ்டம் ஒருவர் கையிலே இருப்பது நலம். மராமத்து செய்வது ஒருவர், வினியோகம் செய்வது இன்னொருவர். ஆகையினால் நாம் மக்களுக்கு செவ்வனே செய்ய வேண்டும் என்றாலும், நன்மை கிடைக்கவில்லை. தண்ணீர் காலாகாலத்தில் கிடைக்கவில்லை. ஆகையினால், எப்பொழுதும் நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட வரையில், கண்ட்ரோல் அண்ட் டிஸ்ட்ரிப்யூஷன் ஒருவரிடம் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஸிஸ்டத்திற்கும் ஒரு இர்ரிகேஷன் கமிட்டி இருந்தால், அங்கங்கேயுள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

என்னுடைய இன்னொரு வேண்டுகோள் என்னவென்றால், இப்பொழுது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். அதே போல, பல விதத்திலும் தகுதியுள்ளவர்கள் எஞ்ஜினியர்கள். அவர்களையும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப்போன்று, ஐ.இ.எஸ். என்று வைத்தால், அவர்களுக்கு ஒரு பொறுப்பும், பெருமையும், உற்சாகமும் ஏற்படும். ஏதோ காரணத்தினால் அது தாமதப்படுகிறது. அவர்களுக்கு அப்படியொரு அந்தஸ்து கொடுக்கும் நிலை ஏற்பட்டால், நல்லதாய் இருக்கும்.

அடுத்து, 58 வயது என்று போட்டிருக்கிறது. ஏன் ஒரு பகுதிக்கு மட்டும் பாகுபாடு காட்டவேண்டும் என்பது புரியவில்லை. கொடுத்தால் எல்லோருக்கும் 58 வயது என்று கொடுங்கள். சில அதிகாரிகளுக்கு 55 வயது, சிலருக்கு 58 என்றால் அது சரியாக இருக்காது. ஸெண்ட்ரல் கவர்ன்மெண்டு இலாகாக்கள் எல்லாவற்றிலும் 58 வயது என்று இருக்கிறது. பக்கத்து வீட்டுக்காரர் ஸெண்ட்ரல் கவர்ன்மெண்ட் கிளார்க் 58 வயது என்று சொல்லும்போது, நம மாநில ஊழியர்களுக்கு மட்டும் 55 வயது என்பது சரியாக இல்லை. இப்பொழுது உள்ள நிலைமையில் எல்லோருக்கும் 55 வயது என்று செய்தால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட வரையில், கருப்பா நதித் திட்டம் தேவை. உங்கள் காலத்திலேயே அதைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். அதே மாதிரி, சங்கரன்கோயில் தாலுகாவிற்கு கீரியாறு திட்டம். நீங்கள் அதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை நீர்ப்பாசன மாநாடு ஒன்று செயல்பட்டுக் கொண்டு இருந்தது. குறைகளையெல்லாம் அதிலே சொல்லிக் கொண்டு இருந்தார்கள். நன்றாகவும் செயல்பட்டுக் கொண்டு இருந்தது. இப்பொழுது டி.டி.ஸி. வந்த பிறகு அதைப் புறக்கணித்து விட்டார்கள். ஆகவே, பழையபடியும் அதற்குப் புத்துயிர் கொடுத்து, நல்ல நிலையில் வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மிஸ்யூஸ் ஆப் வாடர்" ரொம்பவும் இருக்கிறது. மேலும் கால்வாயில் "எங்க்ரோச்மெண்ட்" இருக்கிறது. மகாராஷ்ட்ராவில் பொதுப்பணி நிர்வாகஸ்தர்களுக்கு "கிரிமினல் பவர்ஸ்" கொடுத்திருக்கிறார்கள். தண்ணீர் தப்பிதமாகக் கொண்டு போனால், நீர்ப்பாசன இலாகா அந்த ஆட்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. "மிஸ் யூஸ் ஆப் வாடர்", "எங்க்ரோச்மெண்டு" செய்யக்கூடிய நிலைகள் இருந்தால், அதைக் கண்டிக்கும் அதிகாரம், கிரிமினல் பவர் எஞ்ஜினியரிங் இலாகாவிடம் கொடுத்தால் செவ்வனே வேலை செய்ய முடியும். 1965-ல் பல இலாகா பெரிய அதிகாரிகளும் இருந்து ஒரு ரிபோர்ட்டை, "ரிபோர்ட் ஆன் அக்ரிகல்சரல் ப்ரொடக்ஷன்" என்று கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது

நீர்ப்பாசன செக்ரடரியாக இருப்பவரும், நீர்ப்பாசன இலாகா முதல்வராக இருப்பவரும், எல்லோரும் சேர்ந்து, ஏக மனதாக ஒத்துக்கொண்டு செய்தது. மேஜர், மைனர் என்று இரு பிரிவாகப் பிரித்தால் உடனடியாக நன்மை வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் மனம் வைத்து, அதைக் கவனிக்க வேண்டும். அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்குக் காரணம், எந்தக் காரியத்தையும் செய்தால், உடனே நன்மை அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்கள். என்னைப் போன்றவர்கள், மழை இல்லாமல் கஷ்டப்படும் பகுதியிலிருந்து வருபவர்கள், சொல்வதைக் கேட்டுச் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு டிவிஷன்களுக்குப் போக வேண்டியிருக்கிற கஷ்டம் இருக்கிறது. ஆகவே, அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த இலாகா செவ்வனே நடக்க வேண்டும் என்ற அக்கறையினால் இதைச் சொல்லுகிறேன், இத்துடன் என் பேச்சை முடிக்கிறேன்.

*திரு. தி. சி. திம்மராய கவுண்டர் : சட்டசபைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கும் பாசன மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே பெரிய நதிகளாய் சொல்லப்படும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும். அப்படி பிரசித்தி பெற்ற பாலாற்றை இன்று பார்த்தால் தண்ணீரே இல்லாமல் சுமார் 150, 160 மைல் தூரம் வரை மணலாகத்தான் காட்சி அளித்து வருகிறது. காரணம், இந்தப் பாலாற்றில் ஒரு சிறு நீர்த் தேக்கம் கூட கிடையாது. அதனால், தண்ணீர் தேக்கம் இல்லாததால், பூரா ஆறும் காய்ந்து விடுகிறது. இந்த ஆறு ஆந்திராவிலிருந்து, தமிழ் நாட்டில் கலந்து சென்னைவரை சுமார் 150 மைல் தூரம் ஓடுகிறது. பாலாறு என் தொகுதியைச் சேர்ந்த வாணியம்பாடிக்கு மேற்கே புல்லூர் கிராமத்தில், தமிழ் நாட்டில் ஆரம்பமாகிறது. மேலும் தற்சமயம், திருப்பத்தூர், ஆம்பூர், நகராட்சிகளுக்கு குடி தண்ணீர் திட்டம் தயாராய் சுமார் 40, 50 லட்சம் ரூபாயில் வேலை தொடங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த இரண்டு நகராட்சிகளுக்கும் பாலாற்றிலிருந்துதான் தண்ணீர் கொண்டு போக வேண்டும். ஏற்கனவே ஜோலார்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்கு பாலாற்றிலிருந்துதான் தண்ணீர் கொண்டு போகப்படுகிறது. தற்சமயம், ஆற்றில் தண்ணீர் இல்லாமல், சுற்றிலுமுள்ள கிணறுகள் எல்லாம் காய்ந்து கொண்டு வருகின்றன.

இந்த பாலாற்றில் புல்லூர் கிராமத்தில் ஒரு சிறு நீர்ப் பாசன திட்டம் தயார் செய்து, இஞ்சினியர்கள், எல்லாம் நேரில் போய்ப் பார்த்து ஒரு திட்டம் போட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத் திட்டத்தை உடனே கவனித்து இந்த அரசு செய்யாவிடில், நகராட்சிகளுக்கு லக்ஷக்கணக்கான பணம் செலவு செய்தும் குடி தண்ணீர் திட்டம் நிறைவேறாமல் போய் விடும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் பாலாற்றில் இந்த சிறு நீர்த்தேக்கம் கட்டினால், விவசாயதிற்கு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாயவும் ஏதுவாக இருக்கும். மேலும் வடாற்காடு மாவட்டத்திலே இந்த திட்டத்தில் ஒரு நீர்ப்பாசன திட்டம் கூட இல்லை. அதனால், எங்கள் வடாற்காடு ஜில்லாவைப் புறக்கணிப்பதாகவே தெரிகிறது. அதனால் தயவு செய்து நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் இதில் கவனம் செலுத்தி உடனடியாக கவனிக்க வேணுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் தொகுதியில் இந்த வருஷம் மழையே கிடையாது. தற்சமயம் விவசாயம் செய்து, கரும்பு, கேழ்வரகு, நெல், எல்லாம் காய்ந்து கொண்டு வருகின்றன. எப்போதுமே எங்கள் தொகுதி மேட்டுப் பிரதேசம். அதனால் இந்தத் தமிழக அரசு எப்படியாகிலும் பாலாற்றில் ஒரு அணைத் திட்டம் போட்டு, உடனடியாக கவனித்து செய்யத் தொடங்க வேண்டுமென்று தமிழக அரசை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.





மேலும்; திருப்பத்தூர் தாலுகா ஏலகிரி நத்தத்தில் ஒரு சிறிய நீர்ப்பாசனத் திட்டமும் இருந்து வருகிறது. அதையும் இந்த அரசு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாலை 6–00.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் கிணறுகள் வெட்டினால், சுமார் 15 அடி, 20 அடிக்குள் பாறை வந்துவிடுகிறது. ஒரு கிணறு வெட்டுவதற்குக் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. யூனியனில் புதிய கிணறுகள் வெட்டுவதற்குத் தரப்படும் கடன் இரண்டாயிரம் ரூபாய்தான். ஆனால் பழைய கிணறுகளைச் சீர்படுத்துவதற்குத் தரப்படும் கடன் தொகை 500 ரூபாய்தான். விவசாயிகள் கடன் வாங்கியும், கடன்காரர்களாகி வருகிறார்களே தவிர, அவர்களுக்கு எந்த விதப் பலனும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எங்கள் தொகுதியில் நாட்றாம்பள்ளி, கந்திலி யூனியன்களில், புதிய கிணறுகளுக்குக் குறைந்தது ஐயாயிரம் ரூபாயும், பழைய கிணறுகளுக்குக் குறைந்தது இரண்டாயிரம் ரூபாயும் கொடுத்து, விவசாய மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் தொகுதியில் ரொம்பவும் மழை இல்லாமல், வறண்ட பிரதேசமாக இருப்பதால், விவசாய மக்கள் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, எங்கள் திருப்பத்தூர் பகுதியை பஞ்சப் பிரதேசமாக எடுத்துக்கொண்டு, பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்காவிடில் ஏழை மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் விவசாயம் தவிர, வேறு தொழில் ஏதுவும் கிடையாது. மழை இல்லாததால் விவசாய மக்களுக்கு வேலைகள் கிடையாது. ஆகவே, அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புத் தர தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எங்கள் திருப்பத்தூர் தாலுகாவை பஞ்சப் பிரதேசமாக எடுத்துக்கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நான் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, படி அரிசித் திட்டம் எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படாவிட்டாலும், மாதா மாதம், ஏதாவது கோட்டா மாதிரி கொஞ்சம் அரிசியை —படி அரிசித் திட்டத்தின் கீழ்—ஒதுக்கித் தந்தால் ஏழை மக்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் விவசாயம் தவிர, வேறு தொழில்கள் கிடையாது. அதனால் ஏழை மக்கள் வாழ வழி கிடையாது. அதனால் கிராமப் பகுதிகளில் ஐந்து மைல், பத்து மைல் என்ற அளவிலாவது கிராமப்புறங்களில் சிறு தொழிற்சாலைகளை இந்த அரசு ஏற்படுத்தினால் கிராம மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று, ஏழை விவசாய மக்கள் வாழ வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசு கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை உடனடியாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

## 6. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. சட்டப் பேரவை 6-வது விதிக்கிணங்க, திரு எஸ். முருகையன் அவர்களுக்குப் பதிலாக, திரு இராம. அரங்கண்ணல் அவர்களை மாற்றுத் தலைவராக நியமிக்கிறேன். அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. வி. கோ. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இப்போது நமக்கு முன்னால் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே உள்ளது. பொதுப்பணித்துறை மிகவும் அத்தியாவசியமான ஒரு துறையாகும். மிகவும் முக்கியமான துறையும்கூட. இப்பேர்ப்பட்ட ஒரு துறையை இன்றைக்குத் துண்டுதுண்டாக, தன்னந்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்ததை இப்போது ஒன்றாக இணைத்து, சீரமைப்பு என்கிற பெயரிலே ஒரு புத்தகத்தையும் நம் கையிலே கொடுத்திருக்கிறார்கள்.

(திரு. இராம. அரங்கண்ணல் தலைமை.)

இந்தப் புத்தகத்தை ஒரு வாரத்திற்கு முன்னால் கொடுத்திருந்தால், படித்துப் பார்த்து, நல்ல முறையிலே ஆலோசனைகளைக் கொடுக்க வசதியாக இருந்திருக்கும். விவாதத்தை ஆரம்பித்தபிறகுதான் இந்தப் புத்தகம் கைக்கு வந்தது. சீரமைப்பு என்ற பெயரிலே ஏற்படுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க அம்சம். அது எந்த அளவிற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைக் கொஞ்சம் பரிசோதனை செய்து பார்த்தால் நலமாக இருந்திருக்கும். ஒருவேளை மாவட்ட ரீதியில் என்ஜினீயர் கூட்டங்களைப் போட்டுவிட்டு மாத்திரம் இந்த முடிவுக்கு வந்தார்களா ? அல்லது என்ஜினீயரிங் அசோசியேஷன் கூட்டங்களைக் கூட்டி ஆலோசனை கேட்கப்பட்டு இந்த முடிவுக்கு வந்தார்களா அல்லது என்ஜினீயர், சூப்பர்வைசர் ஆகியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு இந்த முடிவுக்கு வந்தார்களா என்பது பற்றி என்னால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை.

மனிதனுக்கு எந்த அளவிற்குத் தண்ணீர் அத்தியாவசியமோ, அதைப் போன்றே விவசாயத்திற்கும் தண்ணீர் அத்தியாவசியம். தண்ணீர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. ஆகவேதான் இந்தத் தண்ணீரை எப்படியெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும், நீர்த் தேக்கங்களையெல்லாம் எங்கெல்லாம் கட்ட வேண்டும், நீர் உள்ள இடங்களை இன்வெஸ்டிகேஷன் செய்வது போன்றவைகள் நீண்ட நாட்களாக மாநில ரீதியிலே தனியாகத்தான் இயங்கி வந்திருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம், அசிஸ்டெண்ட் என்ஜினீயர், சூப்பர்வைசர்களைப் போட்டுவிடுவதால் உருப்படியாக எதுவும் நடக்க முடியாது என்பதுதான் எனது அபிப்பிராயம். தனியாக ஒரு சீ.‘.ப் என்ஜினீயர் இர்ரிகேஷன் போடப்பட்டிருக்கிறாரே என்று கூறலாம். தனியாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல. மாவட்ட ரீதியிலே ஒன்றாக இணைந்து இருக்கக்கூடிய தன்மையிலே நல்ல முறையில் பணியாற்ற முடியாது என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை வேண்டுமானால் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வந்துள்ளதைக் கூட ஒன்றிரண்டு மாவட்டங்களில் சோதனை செய்யக்கூடிய தன்மையிலே ஆரம்பித்துப் பார்த்ததற்குப் பிறகு கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். சீரமைப்பு ஒன்றாக இருக்க வேண்டுமென்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் இர்ரிகேஷன் பிளானிங் தனியாக மாநில ரீதியிலே இருக்கக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. தண்ணீர் இல்லை. பணம் இல்லை, பக்கத்து ராஜ்யங்களில் கேட்டு வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இருந்தாலும் பூமிக்கடியிலுள்ள தண்ணீரையெல்லாம் எடுத்து உபயோகப்படுத்தக்கூடிய அளவிலே கண்டுபிடிக்கக்கூடிய நிபுணர்களை இர்ரிகேஷனிலோ, தனியாகவோ, ஏற்படச் செய்து, மிகப் பெரிய அளவுக்குக் கவனம் செலுத்துவது மிகமிக நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

ஏரி கசிவுக் கால்வாய், நீர்ப்பிடிப்பு எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் பிரம்மாண்டமான கிணறுகளைத் தோண்டி, பிரம்மாண்டமான பம்பு செட்டுகளை வைத்து, 200 ஏக்கர், 100 ஏக்கர் என்ற அளவில் தண்ணீரை உபயோகப்படுத்தக்கூடிய அளவிலே இர்ரிகேஷனிலே கவனம் செலுத்துவதன் மூலமாகத்தான் அபிவிருத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று இதில் பங்கெடுக்கக் கூடிய என்ஜினீயர்களோ, சிப்பந்திகளோ நல்ல விதத்தில்



பணியாற்றினால்தான் வேலைகள் சிறப்பாக நடைபெறும். ஒரு நாடு நல்ல முறையில் நலம் பெற வேண்டுமென்றால், முன்னேற வேண்டுமென்றால், மக்களுடைய வாழ்க்கை உயர வேண்டுமென்றால், எல்லாம் என்ஜினீயர்களின் கையிலேதான் இருக்கிறது. இவர்களுடைய குறைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஆகவே, நாம் இவர்களுடைய குறைகளையெல்லாம் கவனித்து நல்ல முறையில் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பீ.டபிள்யூ.டி. ஒர்க் சார்ஜ்டு தொழிலாளர்கள் இதிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். மற்றும் மின்சார சிப்பந்திகள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சிப்பந்திகளுடைய குறைகள் அப்படியே இருக்கின்றன. பல வருட காலம் வேலை செய்தாலும் அவர்கள் டெம்பரரியாக, பர்மனெண்ட் செய்யப்படாமல் இருந்து வருகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்தக் காலத்திலும் அவர்களுடைய குறைகளைக் கவனிக்கவில்லையென்றால், அந்த இலாகாவை நல்ல முறையிலே இயங்க வைக்கக்கூடிய நிலைமை இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பி.டபிள்யூ.டி.யில் இன்ஜினீரிங் செக்ஷனில் அப்ரூவ்டு புரபோஷனர்ஸ் என்ற பெயரால் இருக்கிறார்கள். அவர்களுக்கு டெம்பரரி அடிப்படையில் கூலி கொடுத்து, பர்மனெண்ட் செய்யாத அளவில், அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் உதவிகள் எல்லாம் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறார்கள். அந்த சிப்பந்திகளுக்குப் பதவி உயர்வு கொடுத்தல், பர்மனெண்ட் செய்தல் போன்றவற்றிற்குத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதையும் செய்வதற்கு வழி வகைகள் காண வேண்டும்.

குந்தா நீர்த் தேக்கத் திட்டத்தில் டெயில் ரேஸ் வாட்டர் என்று சொல்லப்படுகிறது. மத்திய சர்க்காரிலே அமைச்சராக இருக்கும் திரு கே. எல். ராவ் அவர்களும் இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார். இதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதிலே இந்த அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டும். கோவை வட பகுதியில் இருக்கக்கூடிய இடங்களுக்கு இதைப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதிலே தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று மத்திய அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார். அந்தத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலே தண்ணீர் பிரச்சினை ஒரு பக்கத்தில் இருந்தாலும் பாலாறு பேசின் ரூல்சும் இதிலே சேர்ந்திருக்கிறது. நீண்ட நெடுங்காலத்திற்கு முன் 1931-ஆம் ஆண்டிலே ஒரு கமிட்டி போட்டார்கள். வெள்ளைக்காரர்கள் 3 பேர், இந்தியர்கள் 4 பேர்—ஒரு ஆளும் வரமுடியாதபடி தடுத்து இது 3, அது 3—சமமாக இருக்கிறதென்று, தங்களிடம் இருந்த அதிகாரத்தைக் கொண்டு பாலாறு பேசின் சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயத்தையே கொலை செய்கின்ற அளவுக்கு அது இருக்கிறது. அந்தப் பாலாறு பேசின் ரூல்சை இன்றைக்குக் கண்டிப்பாக எடுப்பது நலமாக இருக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது பக்கத்து மாநிலத்திலே கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் இருக்கிறது. மத்திய சர்க்காருடன் பேசி பக்கத்து மாநிலத்தோடு ஒரு உடன்பாடு கண்டு சித்தூர் ஜில்லாவில் மிகப்பெரிய கால்வாயை வெட்டி பாலாறு உற்பத்தியாகக்கூடிய இடத்தோடு இணைத்துவிட்டால் மைசூர் மாநிலமும் பயன்படும். நம்முடைய மாநிலத்திலும் பயன்படுத்தலாம். இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்க்கரை ஆலைகளில் வசூல் செய்யக்கூடிய செஸ் நிதி இருக்கிறது. அந்த அந்த ஜில்லாக்களில் உள்ள சர்க்கரை ஆலை செஸ் நிதியைக்கொண்டு முறையாக அந்த அந்த ஜில்லாவில் உள்ள சாலைகளை நல்ல முறையில் பராமரிக்கிறார்கள். ஆனால் வடாற்காடு மாவட்ட ஆம்பூர் சர்க்கரை ஆலை செஸ் நிதி 11 லட்சம் ரூபாய் அரசாங்கத்திடம் இருக்கிறது. இதுவரைக்கும் அதைக்கொண்டு அந்த மாவட்டத்தில் எதுவுமே செய்யப்படவில்லை.

திட்டவட்டமாகச் சொல்கிறேன், தெரிந்தே சொல்கிறேன். ஆகவே அந்தத் தொகையை அந்த மாவட்ட விவசாய மக்களுக்குப் பயன்படும் வகையில் செலவழிக்க வேண்டும்.

இதே நேரத்தில் மிகப்பெரிய அளவு மாவட்டவாரியாக சிறுசிறு நீர்த் தேக்கங்களைக் கட்டக்கூடிய அளவுக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன. கிணத்தில் இருந்தால்தான் கரண்டியில் வரும் என்று சொல்வார்கள். கிணத்திலும் நாம்தான் தயார் பண்ணவேண்டும். கரண்டியாலும் நாம்தான் எடுத்துப்போட்டாகவேண்டும். காரணம் இன்றைக்கு நம்முடைய கொள்கை விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்தி, ஒரு ரூபாய்க்கு ஒரு படி—இது நிறைவேற வேண்டுமானால் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தியாவது போராடிப்பெற்று இவற்றை நிறைவேற்றியே ஆக வேண்டும்.

கடைசியாக கால்வாய்கள்—அது ஏரிக்கால்வாயோ, அணைக்கட்டு கால்வாயோ—மனிதனுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் வியாதி என்று சொல்வது போல—நீர்ப்பாசன கால்வாய் தூர்ந்து மேடிட்டுப் போனால் அது விவசாயத்திற்கே ஆபத்து என்று அர்த்தம். இன்றைக்குப் பல கால்வாய்கள் தூர்ந்து கிடக்கின்றன. அமைச்சர் அவர்கள் உடனே அவற்றை குடிமராமத்து மூலம் செப்பனிடலாம் என்று சொல்லக்கூடும். அப்படிச் சொல்லி தப்பிவிட முடியாது. குடிமராமத்து என்பதே போய்விட்டது. அப்படியே பத்துபேர் சேர்ந்து இடுப்பளவு வெட்டி விட்டாலும் ஆடுமாடு போய் தூர்ந்துபோகிறது. கால்வாயைக் காலால் கெல்லிவிட்ட காலம்போய் விட்டது. ஆகவே முறையான வகையில் கால்வாய்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தில் ஆறுகள் என்று எங்கே இருந்தாலும் அவை சர்வே செய்யப்பட்டு நீர்த்தேக்கங்கள் அமைப்பதிலே முழு கவனம் செலுத்தினால்தான் விவசாய அபிவிருத்தி என்கிற முக்கியமான திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். இல்லை என்றால் நடக்காது. காங்கிரஸ்காரர்கள் அதை வைத்தே நமக்கு எதிராகப் பிரசாரம் பண்ணுவார்கள் என்பதை நினைப்பூட்டி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. க. து. நடராசன்: வணக்கத்திற்குரிய பேரவை நாயகம் அவர்களே, நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துக்களைக் கூறி நான் முடித்துக்கொள்கிறேன். காவேரி ஆற்றின் பாசனப் பகுதிகளில் லால்குடி பகுதியில் ஓடுகிற ஆறு ஆறுகளும் தலைசிறந்த ஆறுகளாக இருக்கின்றன. அந்த ஆறுகளில் எல்லாம் 1836ம் ஆண்டிலிருந்து தண்ணீர் எல்லாம் கல்லணைப் பக்கம் சேர்ந்துவிடுவதை அகற்றும் பொருட்டு அங்கே ஒரு தடுப்புச் சுவரை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்தத் தடுப்புச் சுவரால் இப்போது காவிரியில் மணல் அதிகமாகத் தேங்கி அங்கே ஊறிக்கொண்டிருந்த நீரும் அற்றுவிட்டது. ஊற்று நீரும் போய் விட்டது. ஆறும் சமமாகிவிட்டதனால் அந்த ஆற்றுக் கால்வாய்களிலும் இப்போது தண்ணீர் வருவது—சற்று அல்ல மிக அதிகமாக விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய வகையில் இருக்கிறது. அந்தக் காவிரியில் எழுப்பப் பட்ட அந்தத் தடுப்புச் சுவற்றிலே சர்க்கார் இப்போது பெட் ரெகுலேடர் அமைத்து வேண்டியபோது அந்த நீரை வாய்க்கால்களில் திருப்பிவிடுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தால் அதற்காகும் செலவில் நான்கில் ஒரு பங்கை குடியானவர்களின் சார்பில் கொடுக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம். அதோடு அங்குள்ள ஆறுகள் எல்லாம் எவ்வளவு மணல் அடித்துத் தூர்ந்து போக முடியுமோ அந்த அளவு மணல் அடித்துத் தூர்ந்துவிட்டன. பெட் ரெகுலேடர் மூலம் நல்ல ஏற்பாட்டை நம் அரசு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவிரி ஆற்றின் தண்ணீரை நல்ல வழியில் முன்பு பயன்படுத்திக்கொள்ள கரிகாலனால் தான் முடிந்தது. அதைப்போலவே இப்போது கலைஞரால்தான் அந்த ஏற்பாட்டினைச் செய்துதரமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிற காரணத்தால் குடியானவர்கள் சார்பில் எங்கள் பங்கை அளிக்கக் காத்து இருக்கிறோம்.



நிற்க, அந்தப் பகுதியில் பல காட்டாறுகள் ஓடி, அடிக்கடி பலகுக்கிராமங்கள் அழிந்து, நாசப்பட்டு மிக அதிகமான சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. கள்ளகம், கீழரசூர், வாலையூர், மணியாங்குரிச்சி ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் காட்டாறுகள் பல முறைகளில் சேதத்தை ஏற்படுத்திவருகின்றன. அரியலூர் ரயில் விபத்துக்குக்கூட இதுவேதான் மூலகாரணமாக இருந்தது. இந்த ஆறுகளை ஆங்காங்கு தடுத்தும் ஏரிகள் அமைத்தும், அந்த ஏரிகளுக்குப் போதுமான தண்ணீரைத் தேக்கிவைத்தும், மீதியுள்ள தண்ணீரை இருங்கலூர், மகிழம்பாடி, தச்சன்குரிச்சி, கண்ணகுடி, கும்முளூர், சங்கேந்தி போன்ற கிராமங்களில் உள்ள இருபது முப்பது ஏரிகளுக்குக் கொண்டுவந்து நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தித் தரமுடியும். அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம். குறிப்பாக இன்றைக்குக் கீழ்ப் பகுதியில் இருக்கக்கூடிய நத்தம், மாங்குடி, கள்ளிக்குடி, ஆலங்குடி, செங்கரையூர், விரகாலூர் தின்னக்குளம் போன்ற பல கிராமங்கள் ஆண்டுதோறும் வெள்ளத்தால் அடைந்துவரும் சேதத்தையும் தவிர்க்கலாம். இன்றைக்கு வெள்ளக் காலத்தில் அவை பூமியே தெரியாத அளவுக்குத் தண்ணீர் பெருகி விடுகிறது. இந்த ஆண்டுகூட சிறிய மழையாக இருந்தும் அந்தப் பகுதியில் எழெட்டு கிராமங்களும் தண்ணீரால் பாதிக்கப்பட்டு மிகவும் சேதம் அடைந்துள்ளன. எங்கும் கண்டிராத முறையில் மக்கள் வீடிழந்து அதில் நீச்சல் அடிக்கக்கூடிய நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இதைவிட அதிகமாக மழை பெய்திருந்தால் அவர்கள் எங்கே இருந்திருப்பார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க, சர்க்கரை செஸ் என்று ஒரு நிதி இருக்கிறது. எங்கள் பகுதியில் கோத்தாரி சர்க்கரை ஆலையில் இருந்து எழெட்டு ஆண்டுகளாக மிக அதிகமான செஸ் நிதி சர்க்காரிடத்தில் சேர்ந்து இருந்தும் அந்த செஸ் நிதியில் இருந்து இதுவரை எங்களுக்குப் போதுமான அளவு வசதிகள் எதுவும் செய்துதரப்படவில்லை. ஆனால் ஒரு சில இடங்களிலே சம்பந்தமற்ற இடங்களிலேதான் அந்த ரூபாய்களிலே ஒரு பகுதியைச் செலவு செய்திருக்கிறார்களே தவிர மற்றப் பகுதியிலே உள்ள இடங்களுக்கு எந்த அளவும் நல்ல ஏற்பாடுகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்கக்கூடிய ரூபாய்களை, அங்குள்ள சாலைகள் பழுதடைந்திருக்கின்றன, அந்தச் சாலைகளுக்குச் சர்க்காருடைய பணம் எங்களுக்குக் கொடுக்காவிட்டாலும்கூட, அந்த செஸ்ஸிலே இருக்கக்கூடிய பணத்தை மட்டிலும் கரும்பு உற்பத்தி பகுதிகளுக்குக் கொடுத்தால் அதைக்கொண்டே நல்ல முறையிலே ரோடுகளையும் நல்லமுறையிலே பாலங்களையும் நாங்கள் அமைத்துக் கொள்ளமுடியும்.

மைனர் இர்ரிகேஷன் ஏற்பாட்டிலே ரெவின்யூ டிபார்டுமெண்டிற்கும் இர்ரிகேஷன் டிபார்டுமெண்டிற்கும் சம்பந்தப்பட்ட சில ஏரிகள் இருக்கின்றன. இதுவரையிலும் ஊராட்சி ஒன்றிப்புகளுக்கு ஒப்படைக்கப்படவேண்டிய அந்த ஏரிகள் ஒப்படைக்கப்படவில்லை. திருமங்கலம் என்ற கிராமத்திலே ஒரு ஏரியை (மைனர் இர்ரிகேஷன்) ரெவின்யூ டிபார்டுமெண்டிலிருந்து ஒன்றிப்பு மன்றத்திற்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த ஏரியின் நல்ல நிலையும் கெட்டுவிட்டது. இந்த ஏரிகளையும் நாம் இதுவரையில் நினைக்காமலும் சிந்திக்காமலும் இருந்தாலும்கூட வர வர வானம் பொய்த்துக்கொண்டு வருவதைப் பார்க்கும்பொழுதும், அண்டை மாநிலங்களிலேயிருந்து நமக்கு வருகிற தண்ணீர் குறைக்கப்பட்டு வருவதைக் காணும்பொழுது நாம் ஏரிகளையும் செப்பனிடுவதற்கு முயற்சி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், மின்சாரம் எந்த அளவிற்கு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வழங்குவதிலே தாமதம் இருப்பதால் நீர் இறைக்கும் பிரச்னையில் சில தொந்தரவுகள் இருக்கின்றன. அந்த அளவுக்கு இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் மாற்றி நல்ல முறையிலே ஒரு ஏற்பாட்டைச் செய்தும், பல கிராமங்களிலே உள்ள அப்படிப்பட்ட ஏரிகளையெல்லாம் தூர் எடுத்தும் சுத்தம் செய்தும் பயன்படுத்துவதற்கான நல்ல ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. க. ஐ. நடராசன்] [1968 மார்ச் 23]

பில்டர் பாயின்ட் என்ற முறையிலேகூட இருக்கக்கூடிய திட்டம் லால்குடி பகுதியில் மிக ஏற்றமாக இருப்பதனாலே மேலும் அதை அதிகமாகச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அக்ரிகல்சர் டிபார்டுமென்டிலே ஒரு சில எஞ்சினியரிங் வேலைகள் இருக்கின்றன. அவற்றிற்காக இருக்கக்கூடிய இயந்திரங்கள் எல்லாமே பழுதடைந்துவிட்டன. பழுதடைந்துவிட்டன என்ற முறையிலே நிறுத்தி வைக்கப்பட்டு கண்காட்சி போன்று வைத்திருக்கிறார்களே தவிர குடியானவனுக்குப் பயன்படுத்துவதற்கேற்ற முறையிலே இல்லாமல் இருப்பதால் அவற்றை மாற்றியமைத்து, ஒருங்கிணைத்து விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்த பேரவை நாயகம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் நான் என்னுடைய ஆலோசனைகளை பத்து அம்சத் திட்டமாகத் தர விரும்புகிறேன்.

முதல்முதலாக நம்முடைய தமிழ் நாட்டில் 39 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. அவற்றின் மொத்தப் பரப்பளவு 55 ஆயிரம் சதுர மைல்கள். செப்பனிடவும், தூர் வாரவும், கரைகளை உயர்த்தவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பார்ப்போமானால் அதிகமாக இருக்கிறது. இதுவரையில் 25 ஆயிரம் சதுரமைல்கள் அளவுக்குத்தான் திட்டமிடப் பட்டிருக்கிறது. இப்பொழுது மத்திய சர்க்காரிலிருந்து பணம் கூடக் கிடைக்கும்போல் தெரிகிறது. திட்டங்கள் தயாரிக்கவென 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஏராளமான பொறியியல் வல்லுநர்கள் வேலையில்லாமல் இருப்பதால் இதற்கான திட்டங்களைத் தயாரித்து வைத்திருப்போமானால் இந்திய அரசு பணம் தரும்பொழுது திட்டங்களை உடனடியாக மேற்கொள்ளலாம். அப்பொழுது இதைப் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். மாவட்ட அளவிலே சூப்பிரன்டென்டிங் எஞ்சினியர் போடப்போவதாக நிர்வாகச் சீரமைப்புத் திட்டத்தில் இருக்கிறது. இதன் கூடவே ஒரு தனி டிவிஷனல் எஞ்சினியர் போட்டால் திட்டங்கள் தயாரிக்க வசதியாக இருக்கும்.

இரண்டாவதாக, நிர்வாகச் சீரமைப்புப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள்கூடச் சொன்னார்கள். நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிய பிரச்னைகள் வேறு. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிய பிரச்னைகள் வேறு. ஏரிகளைப் பாதுகாப்பது வேறு. ஆறுகளைப் பாதுகாப்பது வேறு. இப்பொழுது பின்னதற்கு வெளிநாட்டு அனுபவம் பெற்றவர்கள்கூட தேவைப்படலாம்.

எஸ். எம்.ஐ.பி., புட் புரடக்ஷன், பிளானிங் சர்க்கிள் எனப் பல்வேறு துறையில் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஒருமுகப் படுத்திக்கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். மேலும் பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஏரிகளையும், குளங்களையும் இந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காகச் சட்டத்தைத் திருத்தவேண்டுமானாலும் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மூலதனச் செலவு போட்டு ஏராளமான கட்டடங்கள் கட்டப்படுகின்ற நிலை இருப்பதால் அதற்காக ஒரு தனி அமைப்பு ஏற்படுத்தலாம். இந்திய அரசிலே பில்டிங் எஞ்சினியர்கள், இர்ரிகேஷன் எஞ்சினியர்கள், ரோட்ஸ் எஞ்சினியர்கள் என்று போடுகிறார்கள். ஆகவே பில்டிங் சம்பந்தமாகத் தனியாகப் பிரித்தால் நன்றாக இருக்கும். மேஜர் இர்ரிகேஷனுக்காக ஒரு சீஃப் எஞ்சினியர் போட்டால் நல்லது. காவிரி, வைகை, லோயர் பவானி இவற்றையெல்லாம் ஒருமுகப் படுத்தி அவற்றைப் பாதுகாத்துக் கவனித்துக்கொள்ள உதவியாக அது இருக்கும்.



1968 மார்ச் 23] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

மூன்றாவதாக, பொறியியல் வல்லுநர்கள் பொறியியல் சம்பந்தப்பட்ட பிரச்னைகள்பற்றி முடிவுகள் எடுக்கக் கூடிய இடத்தில் இருப்பதில்லை. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் இன்றைய தினம் அரசாங்கத்திலே ஒரு எஞ்சினியரே செயலாளராக இருக்க வேண்டும், இப்பொழுது ஐ.ஏ.எஸ். அதிகாரி தான் செயலாளராக இருக்கிறார். திரு. சுப்பையா முதலியார் அவர்கள்கூட இதைப்பற்றிச் சொன்னார்கள். எஞ்சினியரிங் ப்ராப்ளம்ஸ் வருகின்றபொழுது அதைப்பற்றி ஆராய்ந்துமுடிவு எடுக்கக்கூடிய முறையிலே பொறியியல் வல்லுநரைத்தான் செயலாளராக நியமிக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபொழுது 1926-ம் ஆண்டு வரையிலே ஒரு பொறியியல் வல்லுநர்தான் செயலாளராக இருந்தார். அவருக்கு ரெவின்யூ போர்டு மெம்பர் அந்தஸ்து கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த முறை ரத்து செய்யப்பட்டது. இந்திய எஞ்சினியர்கள் வர ஆரம்பித்தபொழுது நம்பிக்கைக் குறைவு காரணமாக ஆங்கிலேயர்கள் ஐ.சி.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டார்கள். அதன் விளைவு அப்படியே அந்த நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. ஆந்திரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பொறியியல் வல்லுநரை அடிஷனல் செக்ரடரியாகப் போட்டிருக்கிறார்கள். அஸ்ஸாமிலும் அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். ஆகவே செயலாளராக ஒரு பொறியியல் வல்லுநரைப் போடவேண்டும். சோவியத் யூனியனிலிருந்து இந்த நாட்டிலே பொதுத் துறையிலே எந்த விதமான முன்னேற்றமும் காணப்படாததற்குக் காரணம் என்ன என்று ஆராய்வதற்காக வந்திருந்த நிபுணர் கமிட்டி மத்திய சர்க்காரிடத்திலே ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே தெளிவாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

Officers who were only birds of passage had no real stakes and were therefore not able to give thier best. Instead, the Team had proposed that the system of recruitment of top men must be from within the department.

அந்தத் துறையிலே அனுபவப்பட்டவர்கள், நல்ல அறிவைப் பெற்றவர்கள் வந்தால்தான் நல்ல முறையிலே பயன்படுவதற்கு வாய்ப்பு இருக்கும். கோயில் மாடப் புறாக்கள்போல் ஒரு மாடத்திலிருந்து இன்னொரு மாடத்திற்குப் போய்க்கொண்டிருப்பவர்களால் பயனில்லை. உதவிகள் எல்லாம் சரியாகப் பயன்படவில்லை என்ற காரணத்தால் சோவியத் நாட்டிலிருந்து நிபுணர்கள் ஆராய்ந்து இந்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதையும் நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பூதலூருக்கு அருகில் கல்லணைக் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அதைச் செப்பனிடுவதற்கான முறைகள் மேற்கொள்ளப்படவில்லை. நாங்கள் அதைப் பற்றிக் கேட்டதற்கு அவர்கள் தெரிவித்தார்கள், இதைப்பற்றிய திட்டங்கள் அனுப்பப்பட்டும் அனுமதியளிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த நிலை வெகு நாட்களாக இருந்து வருகிறது. அதற்குத் தான் நான் முன்பே சொன்னேன். பொறியியல் வல்லுநர்கள் முடிவுகள் எடுக்கப்படுகின்ற இடங்களில் இருக்க வேண்டும் மென்று. அதன் காரணமாக 75 ஆயிரம் ஏக்கர் நிலம் பாழடைந்துவிட்டது. அங்கே மண் கொட்டி நிரப்புவதற்கு லாரிகூட இல்லை. மூன்று லாரிகள்தான் தஞ்சை டெல்டாவிலே இருக்கின்றன. மாலை 6-0.
தந்திமூலம் தொலைபேசி மூலம் சொல்லி லாரிகள் வருவதற்குள் ஒரு வாரமாகி, வேலை துவங்குவதற்கு 10 நாட்கள், 15 நாட்கள் ஆகிவிட்டதால் அந்தப் பகுதி மக்களிடத்திலே அதிருப்தி ஏற்பட்டது. இதையெல்லாம் கவனத்தில்கொண்டு நல்ல முறையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட 60 கோடி ரூபாயை அங்கு செலவிட இருக்கிறோம். இதுவரை செலவிடப் பட்டது 43 கோடி ரூபாய். அங்கிருக்கின்ற நிலைமை, நீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது

என்பதிலே இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. கேரள ராஜ்யத்திலிருந்து தண்ணீர் வரவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். கடந்த காலத்தில் நடந்த நடவடிக்கைகளைப் பார்க்கின்ற நேரத்தில் சந்தேகம் ஏற்படுகின்றது. அந்த அளவுக்கு ஏற்கனவே இருந்த சர்க்கார் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே தான் அவர்கள் தரவில்லை. அதே நேரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஓடுகின்ற ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்தி கேரள மாநிலத்தில் நெல்லை விளைவிக்க வாய்ப்பு இல்லை. அங்கு சம பூமி இல்லை. அங்கு காஷ் கிராப் பயிரிடப்படுகிறது. அது அவர்களுக்கு நல்ல வருவாய் தரக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் இந்தத் தண்ணீரை வைத்துக்கொண்டு நெல் பயிரிட வேண்டிய அவசியம் இல்லை. அதே நேரத்தில் நம்முடைய பகுதியில் நல்ல நிலங்கள் இருக்கின்றன. அவர்களிடத்தில் நீர் இருக்கிறது. அந்த நீரைப் பெற நம்முடைய அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். தற்போது அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுகிறது. அதிகாரிகள் தங்களுடைய கவுரவத்தைத் தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். அதிகாரிகளிடையே எழும் கவுரவப் பிரச்சினை பெரிய அளவுக்கு வந்து விடுகிறது. அரசியலில் இருக்கக்கூடிய அமைச்சர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே கலந்து பேச வேண்டும். இல்லை யென்றால் பொறி இயல் வல்லுநர்களையாவது பேசச் சொல்லலாம். புள்ளி விவரங்களைக் கொண்டு அவர்களைப் பேசச் சொல்லலாம். கடல் தண்ணீர் உள்ளே வந்து விடுகிறது என்று கேரளத்தில் சொல்கிறார்கள். அதற்கு ஹாலந்து நாட்டிலே அணை கட்டியது போல் அணை கட்டிக் கொள்ளலாம். அதனால் கடல் தண்ணீர் உள்ளே வருவதையும் தடுக்கலாம், வெள்ள காலத்தில் இந்தத் தண்ணீரையும் கடலில் கலக்கச் செய்யலாம். அணை கட்டும் முயற்சியில் அந்தச் சர்க்கார் ஈடுபட்டு அந்தத் தண்ணீர் நமக்குக் கிடைக்கும் நிலை ஏற்பட்டால் நம்முடைய நாடு நல்ல நிலைமையில் வளத்தைப் பெற முடியும். நம்முடைய நாட்டில் நதிகள் அதிகம் இல்லை. மற்ற மாநிலங்களோடு ஊக்கத்துடன் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குல்காத்தி கமிஷன் என்று நியமித்து அதிலே ஒரு ரிப்போர்ட் தயாரித்திருந்தார்கள். கிருஷ்ணா, கோதாவரி ஆகியவற்றின் உபரி தண்ணீரை சென்னை நகரத்திற்குத் தருவதற்காக ஆந்திராவும், மைசூரும், மகாராஷ்டிரமும் ஒப்புக் கொண்டது. குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து கிட்டத்தட்ட 15,000 மில்லியன் கன அடி தண்ணீர் தருவதற்காகத் தீட்டப்பட்ட அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. மாநிலங்களுக் கிடையே ஆலோசனைகள் எல்லாம் முடிவுற்றும் எப்படி நிறைவேற்ற முடியாமல் போனது என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இதர மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும். இந்தப் பேச்சு வார்த்தைகளுக்கு அதிகாரிகளை அனுப்பாமல் தாங்களே நேரிலே சென்று இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு எப்படியாவது நம்முடைய மாநிலத்திற்குத் தண்ணீரைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடற்கரைச் சாலை அமைக்க இருக்கிறார்கள். கடற்கரைச் சாலை என்பது உல்லாசப் போக்குவரத்திற்காக அல்ல. ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டுவிட்டால் கடல் மூலமாகவும் வந்து தாக்குவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆகவே, படைகளைக் கொண்டு செல்லவும், ஆயுதங்களை எடுத்துச் செல்லவும், அந்த ரோடு அத்தியாவசியமானது. மத்திய சர்க்கார் பார்டர் ரோடு டெவலப்மென்ட் என்று ஏராளமான பணத்தை இமாலயப் பகுதியிலே செலவழித்துக் கொண்டிருக்கிறது. ஒரு தடவை பெரிய யுத்தம் என்ற நிலைமை வந்தால் கடல் வழியாகவும் படையெடுத்து வரலாம். இப்போதே பத்து மைலில் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்தக் கடற்கரை ரோடு போடுவதற்



கான முழுச் செலவையும் இந்திய சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்து அவர்களுடைய பாதுகாப்பு நிதியிலிருந்து பணத்தைப் பெற்று இந்தச் சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொறி இயல் வல்லுநர்களுக்கு கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் ரகசிய அறிக்கையை ஐ.ஏ.எஸ். பெரிய அதிகாரிகள் எழுதுகிறார்கள். எஞ்சினியர்களைப்பற்றி அவர்கள் என்ன எழுதுகிறார்கள என்று தெரியவில்லை. ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் செய்த வேலைகளின் கணக்குக்கு பர்ஃபார்மன்ஸ் ரிப்போர்ட் வாங்கவேண்டும். இப்போது ஒருவர் வேலையே செய்யாமல் நல்ல பெயர் வாங்கிக் கொண்டு போய்விடலாம். எவ்வளவு வேலை செய்தார்கள், வேலையின் தன்மை என்ன, சிக்கனமாகச் செய்தார்களா என்பனவற்றுக்கெல்லாம் பர்ஃபார்மன்ஸ் ரிப்போர்ட் (Performance report) வாங்கி அதற்கு மேல்குறிப்பை எழுத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத் திட்டக்குழு நம்முடைய மாநிலத்தில் போட யோசனையில் இருக்கிறது. திட்டக் குழுவில் பொறி இயல் வல்லுநர்களுக்கு இடம் தரவேண்டும். திட்டக் குழு அமைக்கும்போது நான்-அபிஷியல்ஸ் உத்தியோகப் பற்றற்றவர்களில் அனுபவம் மிக்கவர்களைச் சேர்த்துக்கொண்டு திட்டங்களை வகுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்போது திட்டக் குழுவைப் போட்டாலும் குறிப்பிட்ட அதிகாரிகளே எல்லா கமிட்டிகளிலும் வருவதால், கமிட்டிகளில் வேலை நடைபெறுவதில்லை. அவர்களும் சகல கலா வல்லுநர்கள் அல்ல. உடனடியாக இந்தக் குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்றால் இத்தகைய யோசனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவைத் தலைவர் அவர்களே, அவையின்முன் இருக்கும்படியான மானியக் கோரிக்கைகளிலே என் கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எத்தனையோ மானியக் கோரிக்கைகள் இருப்பதிலே பலவற்றைப்பற்றி அபிப்பிராய பேதம் இருந்த வண்மையாக அதிகமாக வேண்டுமென்றோ, மறுத்தோ ஆதரித்தோ பேச முடியும். நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் மக்கள் நலனுக்காக, விவசாயிகளுடைய நலனுக்காக, தேசத்தினுடைய நலனுக்காக அதிகமான தொகையைப் பெற்றுத் திறம்பட நடத்தப்பட வேண்டு மென்பதுதான் ஆலோசனைகளாகக் கூற முடியும். விவசாயமும் தொழிலும்கூட நீர் வசதியின் அடிப்படையில் வைத்துத்தான் நம்முடைய நாட்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று சொன்னால் அது மிகையாகாது.

அந்த நிலைமையில் நீர்ப்பாசனத் திட்டங்களிலே வேலை செய்யும்படியான சிறந்த எஞ்சினியர்கள், திறம்பட வேலைசெய்யக் கூடியவர்கள் தமிழகத்திலேதான் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இங்கே மட்டுமல்ல, இந்தியாவிலே பல இடங்களுக்கு நம்முடைய எஞ்சினியர்கள் சென்று பெரிய பெரிய அணைகளெல்லாம் கட்டுவதிலே, பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதிலே எல்லாம் பணியாற்றிப் பெரும் புகழோடு திரும்பி வந்திருக்கிறார்கள். நமது தமிழ் நாட்டில் இருந்த எஞ்சினியர்கள்தான் வடக்கே இருக்கும்படியான பெரிய நீர்ப் பெருக்குத் திட்டங்களையெல்லாம் கட்டிக் காக்கும்படியான பொறுப்பை முன் காலத்தில் வகித்து வந்தார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் காவிரி நதி ஒன்றுதான் பெரிய நதியாக இருக்கிறது. அதிலே 97 சத விகிதம் தண்ணீரைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்களைப் போட்டு அதிலே வெற்றி கண்டிருக்கிறோம். சிறு ஆறுகளைப் பொறுத்து, தாம்பிரபரணி ஆற்றை எடுத்துக்கொண்டால் 99 சத விகிதம் நீரைப் பயன்படுத்தும் நிலையை

அடைந்திருக்கிறோம். எந்தப் பெரிய திட்டமும் விட்டுவைக்கப்படவில்லை. பாதியில் விட்டது எல்லாம் கூட நல்ல முறையில் தொடங்கப்பட்டு நிறைவேற்றி வைக்கும்படியான தருவாயில் இருக்கிறது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் இன்னும் ஒரு பகுதி முடிய வேண்டியிருக்கிறது. இப்போது இருக்கும்படியான சர்க்கார் அதை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இப்போது சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காவிரியில் சில சமயங்களில், 20 வருஷத்திற்கு ஒரு முறை, 30 வருஷத்திற்கு ஒரு முறை பெரிய வெள்ளம் வந்து நஷ்டத்தை உண்டாக்கிக் கொண்டு வருகிறது. 1924-ம் வருஷத்தில் வெள்ளம் வந்தது. 1930-ம் வருஷம் ஒரு வெள்ளம் வந்தது. 1965-ம் வருஷம் பெரிய வெள்ளம் வந்தது. மேட்டூருக்குப் பக்கத்திலுள்ள ஓவர் பிரிட்ஜையே பூராவும் அழித்துவிடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது, அப்போது இருந்த பாசன வசதி எஞ்சினியரிடம் ஒன்றைக் கேட்டேன். காவிரி நதி இப்படிப் பெருக்கெடுத்து வெள்ளம் ஏற்படும்போது அதைத் தடுப்பதற்கு ஹொகனேகல்லில் ஒரு பெரிய அணையைக் கட்டினால், அந்த அணை பாசனத்திற்கு அல்ல, மைசூர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கட்டினால் அவ்வாறு வரும்படியான வெள்ளத்தைத் தடுப்பதற்கும் வசதியாக இருக்கும், மின் உற்பத்தியையும் செய்து கொள்ள முடியுமே என்று கேட்டேன்.

அதை மத்திய சர்க்காரும் சேர்ந்து செய்யவேண்டியிருப்பதால் தமிழக அரசாங்கம் அவர்களோடு வாதாடி ஹொகனேக்கல் அணையை நிறைவேற்ற ஏற்பாடு செய்தால் வருகிற வெள்ளத்தைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், மின்சாரத்தைப் பெருக்கவும் முடியும். தர்மல் ஸ்டேஷனைவிட ஹைட்ரோ எலக்ட்ரிக் ப்ராஜெக்டில்தான் செலவு குறையும். அதை நிறைவேற்றுவதினால் தொழில் வாய்ப்பு பெருகவும், விவசாயிகளுக்கு மின்சாரம் எளிதில் கிடைக்கவும் வழி ஏற்படும். சில சமயங்களில் மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாதிருக்கும் நிலை இருக்கிறது. இப்போதுள்ள நிலையில் 10, 12 அடிதான் தண்ணீர் இருக்கிறது. தஞ்சையில் தண்ணீர் கிடைப்பதில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னால் மேட்டூர் அணையை நம்பியிருந்தபோது தஞ்சை மாவட்டத்தில் நல்ல பெருத்த மழை பெய்து வேளாண்மையைக் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேட்டூரில் தண்ணீர் இல்லாமலிருந்தாலும்கூட தஞ்சையில் உள்ள 13 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக் கூடிய அளவிற்குச் சிறிய நீர்பாசனத் திட்டங்கள், கிணறுகள் இவற்றை ஏற்பாடு செய்து, வடிமுனைக் கிணறுகளையும் ஏற்பாடு செய்து, பாசன வசதிகளைப் பெருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நல்லது. அதனால் மேட்டூரில் உள்ள தண்ணீர் பல பகுதிகளில் உள்ள அதிகப்படியான நிலங்களுக்கு கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். அண்டை ராஜ்யங்களில் நீர்நிலைகள் இருக்கின்றன. கேரளாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதில் முந்திய அரசாங்கத்திற்கு எந்த அளவிற்கு ஒத்துழைப்புக் கிடைத்தது என்று தெரியாது. இப்போதுள்ள முதல் அமைச்சர் அவர்களும் கேரளா முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். கேரளாவில் அவர்களுக்கு வேண்டிய தண்ணீரை அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்வதில் ஆட்சேபணையில்லை. அங்கு அதிகமாகப் போகும் தண்ணீரை நம் நீர் பிடிப்புகளிலிருந்து அந்தப் பக்கம் போகும் தண்ணீரை நாம் ஓரளவு பெற முயற்சித்தால் நலமாக இருக்கும்.

ஆந்திர பிரதேசத்தில் இருந்து தண்ணீர் பெறுவதற்குரிய ஒரு திட்டத்தை முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் கொடுத்தார்கள். கோதாவரி, கிருஷ்ணா நதித் தண்ணீரை அவர்கள் 10 அல்லது 15 சதவிகிதம்கூட உபயோகப்படுத்துவதில்லை. சென்ட்ரல் ரிவர் போர்ட் என்ற நிலையில் மத்திய சர்க்காரிடம் சொல்லி, கிருஷ்ணா நதித் தண்ணீரைப் பாலாறு பேசினுக்குக் கொண்டுவந்து தெற்குப் பகுதிகளிலுள்ள வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு



போன்ற பகுதிகளுக்கு கொண்டு வந்தால் தமிழ்நாடு சிறப்புற்று விளங்க முடியும். கிருஷ்ணா கோதாவரியில் தண்ணீர் மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்தத் தண்ணீரை நம் பகுதிகளுக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. அவர்களுக்குப்போக எஞ்சியுள்ள நீரைத்தான் கேட்கிறோம். பாரத தேசம் என்பது எல்லோருக்கும் பொதுச் சொத்து. இங்குள்ள ஆறுகள் எல்லாம் தேசம் பூராவிற்கும் பயன்பட வேண்டும் என்பதை எடுத்துச்சொல்லி அந்த நீரை நம் பகுதிகளுக்குக் கொண்டு வந்தால் நம் உற்பத்தியைப் பெருக்க அது உதவிகரமாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

நம் விவசாயிகள் தண்ணீரைச் சிக்கனமாகத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். அதிகமாகத் தண்ணீரைப் பயன்படுத்துவதால் வேளாண்மை குறைகிறது. அதிகமாகத் தண்ணீர் இருந்தால்தான் நன்கு நெல் விளையும் என்று சில பிராந்தியங்களில் கருதுகிறார்கள். முன்பெல்லாம் வரப்பு உயர என்றால் வரப்பில் அதிக அளவிற்குத் தண்ணீர் இருக்க வேண்டும் என்று நினைத்து வந்தார்கள். வரப்பு உயர என்றால் வரப்பு உயரத்தில் தண்ணீர் இருக்க வேண்டுமென்றில்லை. வரப்பின் மேல் குடியானவன் போய் கவனித்து, வேண்டிய தண்ணீரை வைக்க வேண்டுமென்ற பொருளே தவிர வரப்பு உயரத்திற்குத் தண்ணீர் இருந்தால் வேளாண்மை குறைவாகத்தான் இருக்கும். தண்ணீர் குறைவாக இருந்து முறை போட்டுப்பாய்ச்சும்போது நல்ல வேளாண்மை இருக்கிறது. அதிகமாக மழைபெய்து தண்ணீர் அதிகமாக இருக்கும் நிலை இருக்கும்போது, வேளாண்மை குறைவாகத்தான் இருக்கிறது. எனக்குத் தெரியும், முன்னால் 200 இஞ்ச் விடப்பட்டது, இப்போது 150 இஞ்ச் என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. கோவையை எடுத்துக்கொண்டால் 60 இஞ்ச் தண்ணீரில் சிறந்த நல்ல வேளாண்மை ஏற்படும் நிலையைப் பார்க்கிறோம்.

காலையில் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது கீழ்பவானித் திட்டத்தைஒப்பிட்டுப் பார்த்து என் தொகுதியில் உள்ளவர்கள் 20 ட்யூட்டிதான் உபயோகப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். அது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்திருக்கலாம். இப்போது ஆயிரம் க்யூசெக்ஸ் பவானி ஆற்றில் விடப்பட்டிருக்கிறது. ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீரில் 40,000 ஏக்கர்கள் சாகுபடியாகிறது. தடப்பள்ளி வாய்க்கால், அரக்கோட்டை வாய்க்கால், காளிங்கராயன் வாய்க்கால் இவற்றின் கீழ் 40,000 ஏக்கர்கள் இருக்கின்றன. கடைசியில் 50 அல்லது 60 ட்யூட்டி உபயோகப்படுத்துகிறார்கள். காளிங்கராயன் வாய்க்காலில் 1946 வரையில் ஒரு போகச் சாகுபடிதான் இருந்து வந்தது. எப்ரல் 15-ம் தேதி திறந்து விடுவார்கள், பிப்ரவரி 15-ம் தேதி மூடிவிடுவார்கள். பத்து மாதங்களுக்குத்தண்ணீர் விடப்படும். நூறு ஆண்டுகளாக அங்கெல்லாம் ஒரு போகச் சாகுபடிதான் நடத்தி வந்தார்கள். அப்போது விளைந்த வெள்ளாமை 12 அல்லது 16 மூட்டைக்கு மேல் இல்லை. 1946-ல் இருந்து தண்ணீரை அதிகமாக உபயோகிக்காது தண்ணீரைக் குறைத்து, வேளாண்மை செய்து ஒரு போகமாக இருந்ததை இரு போகமாகச் செய்திருக்கிறோம். பத்து மாதத் தண்ணீரைத்தான் முன்புபோல் பெற்று வருகிறோம். ஆனால் இப்போது இரு போகம் செய்யப்பட்டு வருகிறது. இப்போதுள்ள வெள்ளாமை 20 முதல் 40 மூட்டைவரை வருகிறது. ஆக தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் நம் வெள்ளாமையை அதிகரிக்க முடியும்.

நீரை வீண்படுத்துவதால் விவசாயத்தைச் செய்துவிட முடியாது. இதற்கு அனுபவமும் ஆராய்ச்சியும் தேவை. குறைந்த தண்ணீரைக் கொண்டு வேளாண்மை செய்தால் நல்ல விளைச்சல் பெறலாம். தண்ணீரை அதிகமாக உபயோகப்படுத்தினால் விளைச்சல் குறைகிறது. இதைக் கூறும்போது என்சினியர்கள்கூட ஆச்சரியப்பட்டார்கள். தண்ணீர் எப்போதும் வயலில் நின்று கொண்டிருக்கவேண்டுமென்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. முதலில் உழுது நடவு நடும்வரையில் தண்ணீர் இருக்கலாம். இரண்டு தண்ணீர் பாய்ச்சிய பின்னர்

தண்ணீரைப் பூரணமாக நிறுத்தி வயலில் நடந்து போகும் நிலை அமைந்து, அங்கு ஈரம் இருந்தால்தான் வேருக்குப் பிராண வாயு கிடைக்கும். பின்னர் பூ பிடிக்கும் சமயத்தில் தண்ணீர் விடவேண்டும். 150 அங்குலம் தண்ணீர் விட்டதுபோக அதை 60 அங்குலமாகக் குறைத்த காரணத்தினால் மூன்று பங்கு வெள்ளாமையை அதிகரிக்க முடிந்திருக்கிறது. இப்போதுள்ள தண்ணீரை வைத்துக் கொண்டு நல்ல முறையில் முன்பிருந்ததைவிட இரண்டு பங்கு அளவிற்கு விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, குந்தா கழிவு நீர்பற்றிப் பேசுகிறார்கள். இதில் பிரத்தியட்ச நிலை என்னவென்றால் அங்கு வரும் கழிவு நீர் அதிகம் என்ற நிலை இல்லை. பவானி நதியின் கிளை நதிதான் குந்தா ஆறு. குந்தா மின்சாரத் திட்டம் வருவதற்கு முன்னால் அங்கிருந்து வெளியே வந்துகொண்டிருந்த தண்ணீர் இப்போது குழாய்கள்மூலம் வருகின்றன. குந்தாவில் கழிவு நீர் அதிகமாக இருக்கிறது என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள். அது அதிகப்படியான நீர் அல்ல. குந்தாவிலிருந்து வரும் தண்ணீர் உபரியான தண்ணீரோ அல்லது அதிகமான தண்ணீரோ கிடையாது. மலையிலேயிருந்து வரும் தண்ணீரைக் குழாய் மூலமாக மின் உற்பத்திசெய்ய, வரும் தண்ணீரை "ரெகுலேட் பண்ணி" விடுவது. முன்பு வெள்ளம் வந்தால் நிறைய வரும். இல்லாவிட்டால் குறைவாய் வரும். அதைத் தவிர்க்கத்தான் இது செய்யப்பட்டது. தஞ்சாவூர்க்காரர்கள் ஆட்சேபணை செய்து வந்திருக்கலாம். ஏற்கெனவே காளிங்கராயன் வாய்க்கால் போன்றவற்றிற்கு உத்தரவாதம் அளித்து கீழ் பவானிக்கு விடவேண்டுமென்று ஒரு "ஜெனரல் அக்ரிமெண்ட்" செய்தோம். முதலில் 2 மாதம் விடுவதற்கு எதிர்ப்பு வரும். அப்பொழுது நாற்று நட்டு விடுவார்கள். பிறகு அமைச்சரவர்களைப் பார்த்துப் பயிரை நடவேண்டும், அதைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, அரசியல் "பிரெஷர்" கொடுத்து அதிகப்படியான தண்ணீர் கேட்கும்பொழுது சர்க்காருக்கும் தர்மசங்கடமான நிலையேற்படும், விவசாயிகளும் பரிதாபகரமான நிலையிலிருப்பார்கள். அப்படி எந்தவொரு கட்சிக்கும் தர்மசங்கடமான நிலை வேண்டாம். ஒரு திட்டத்தைப் போட்டுவிட்டால் அந்தத் திட்டத்தை எந்த முறையிலே செய்யவேண்டுமோ அந்த முறையிலே செய்துவிட்டோம் என்ற முறையிலே நிறைவேற்ற வேண்டும்.

முக்கியமான வரவேற்கத்தக்க அம்சம் என்னவென்றால், கிணறு வெட்டுவது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள சலுகையாகும். இந்தச் சலுகை மிகவும் சௌகரியமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது விவசாய மக்களுக்கு நல்ல பயனை அளிக்கும்.

அடுத்தபடியாக பொதுப்பணித் துறையில் சீரிணைப்புச் செய்திருப்பது வரவேற்கத் தகுந்தது என்று கூறுகிறேன். சாதாரண விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய திட்டங்களை நேரிலே சொல்லுவதற்கு வசதியாக இதை மாற்றியமைத்துச் சீரிய முறையிலே வைத்திருக்கிறார்கள் என்பதையறிந்து பாராட்டுகிறேன். இதில் கஷ்டங்கள் இருக்கலாம். ஒரு பகுதி இப்படியிருக்கவேண்டுமென்றால் இன்னொரு பகுதி எப்படியிருக்க வேண்டும்? சீப் என்சினியர் ஒரேயொருவர்தான் இருக்கவேண்டும். இங்கு கொடுத்திருப்பதைப் பூரணமாகப் படிப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பமில்லை. ஃபுட் புரொடெக்ஷன், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன், பில்டிங்ஸ், இரிகேஷன் என்று ஒவ்வொரு மாவட்ட அளவிலே ஒவ்வொரு சூப்பரண்டெண்டெண்டிங் என்சினியர் என்று வைத்திருப்பது சீக்கிரத்திலே வேலை நடக்க நன்றாக அமையுமென்று எனக்குத் தெரிந்த வரையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கஷ்டங்கள் இருக்குமானால் அதை மாற்றி நிச்சயமாக இதை ஏற்றுக்கொண்டு நடத்துவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

சிறுபாசனம், சிறப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள் சீக்கிரமாக உடனடியாக வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நான் டெல்லிக்கு போயிருந்தபொழுது காரியதரிசி திரு. சிவராமன் அவர்களைச் சந்தித்தேன்.



அவர்கள் சொன்னார்கள். எஸ். எம். ஐ.பி.-க்களுக்கு 20 கோடி 30 கோடி கொடுக்கத் தயாராகயிருக்கிறோம். தமிழகத்திலேயிருந்து ஆக்கப்பூர்வமாகத் திட்டங்கள் வந்தால் நிச்சயமாக நிறைவேற்றித் தருகிறோம் என்று காரியதரிசி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 20 கோடி ரூபாய் அளவுக்குத் தருவதற்கு அவர்கள் தயாராகயிருக்கிறார்கள். நீங்கள் அந்தக் காரியத்திலே முன்னணியில் நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சில பகுதிகளில் சில திட்டங்களைச் சீக்கிரத்திலே உடனடியாகப் பயனளிக்கக்கூடிய வகையிலே நிறைவேற்ற வேண்டும். என் தொகுதியைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசனத்தைப்பற்றி அமைச்சரவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் சபையிலே வைத்து அதை நிறைவேற்றுவதில் முன்னணியில் நிற்பார்கள் எனபதில் எனக்கு எந்த விதச் சந்தேகமும் கிடையாது. பழைய காலத்தில் காண்டூர் சானல்ஸ் வாய்க்கால் சம்பந்தமாகப் போராடி இரண்டு வருஷங்களுக்கு முன்னாலே அது பெரிய பிரச்சினையாகவே ஆகிவிட்டது. அதை வெட்டுவதற்குத் தீர்மானமாக சர்க்கார் உத்தரவும் போட்டு 2, 3 வருஷங்கள் ஆகின்றன. வாணிப்புத்தூர் கிளை வாய்க்கால் திட்டம் 650 ஏககர்களுக்குப் பயனளிக்கவும் அது மிகவும் சௌகரியமான திட்டம். சிறப்புப் பாசனத் திட்டத்திலே மிகச் சிறந்த திட்டம். ஏற்கனவேயிருந்த சர்க்கார் உத்தரவு போட்ட பிறகும் இப்பொழுது எடுத்து வேலை நடத்தப்படவில்லை. இப்பொழுது என்ன காரணத்தினாலோ ஒரு சிலர் ரெப்ரசென்டேஷன் பண்ணியதால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பூரணமாக எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவு போடப்படவில்லையானாலும் ஏதோ சில பேர் ஆட்சேபணை சொல்லுகிறார்கள் என்பதற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. வேடிக்கையான, விநோதமான ஆட்சேபணைகளைச் செய்திருக்கிறார்கள். சில விநோதமான நண்பர்கள் அத்தகைய ஆட்சேபணைகளைச் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த விநோதமான நண்பர்களில் உங்கள் கட்சியையும் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள் அல்லவா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாராயிருந்தாலும் அவர்கள் விநோதமானவர்கள்தான். நிலச் சீர்திருத்தத்தினால் பாதிக்கப்பட்டுவிடுவோமோ என்று அஞ்சிய காரணத்தினால் அவ்வாறு ஆட்சேபித்திருக்கிறார்கள். யார் சொன்னாலும் நிறுத்தக் கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். பெரிய பணக்காரர்கள், வசதியுள்ள நிலச்சுவான்தார்கள் செய்யும் ஆட்சேபணைகளினால் இவ்வாறு செய்வது சகிக்க முடியாத நிலை. இதுவரையில் வேலை நடந்திருந்தால் இருபோகம் செய்யப்பட்டு அதிக உற்பத்தியாகியிருக்கும். எனவே யார் சொன்னாலும்சரி, நானே வேண்டாமென்று சொன்னாலும் சரி, அதை நிறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். யார் ஆட்சேபணை செய்கிறார்களோ அவர்கள் சமூகத் துரோகிகள் என்று கூறுகிறேன்.

என்னுடைய பிரச்சினை என்னவென்றால், ஏற்கனவே சர்க்கார் உத்தரவு போட்டு, வேலையும் ஆரம்பித்து, வேலை பாதி முடிந்தபிறகு பாதிக்கிறது என்றால் எப்படிப் பாதிக்கும்? எனவே அந்தத் திட்டத்தை உடனடியாகக் கவனித்து பரிசீலித்து உடனடியாக செய்வீர்களேயானால் நல்ல காரியத்தைச் செய்தவர்கள் என்ற பெருமை உண்டாகும். இந்த, பிரச்சினை சாதாரணப் பிரச்சினை அல்ல சர்க்கார் உத்தரவுபோட்டு, அவர்கள் திட்டங்கள் போட்டதற்கு பின்னாலே அது நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் அது சாதாரணக் காரியம் அல்ல. அதை நியாயமான முறையில் கவனிக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

இரவு 7-00.

அடுத்து, இந்த சாலை வசதிகளைப் பொறுத்த வரையிலும் பல இடங்களிலே அதிகமான வேலைகள் நடைபெறவில்லை. பெரும்பாலான சாலைகள் எப்பொழுதுமே தொடர்ந்து கவனிக்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. இப்பொழுது நாம் இந்தச் சாலை செலவுகளைக் குறைத்து

விடுவோமானால், இப்பொழுது ரூ. 100 பராமரிப்புச் செலவாவது இன்னும் 4, 5 வருடங்கள் கழிந்தால் ரூ. 1,000 என்ற முறையில் உயர்ந்து விடும். அப்பொழுது நம்மால் அவ்வளவு செலவுசெய்து பராமரிக்க முடியாது. ஆகவே, இப்பொழுதே ஒழுங்காக ரோடுகள் போடவேண்டும். பராமரிப்பு வேலைகள் ஒழுங்காக நடைபெறவேண்டும். சீராக நடைபெற வேண்டும். சீராக நடைபெற்றால்தான் வளர்ந்துவரும்படியான போக்குவரத்தை நல்ல முறையில் நாம் பாதுகாக்க முடியும். அப்பொழுதுதான் அந்த வளர்ச்சி தடைபெறாமல் இருக்குமென்று நான் சொல்லி, அதன்பொருட்டு சாலைப் பராமரிப்பை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே, பல இடங்களிலே நல்ல ரோடுகள் இருந்தாலும்கூட அங்கு சிறுசிறு பாலங்கள் கட்டாததனாலே மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கீழ் பவானியில் கொத்தமங்கலம், சத்தியமங்கலம் பகுதிகளில் இரண்டு மூன்று பாலங்கள் உடைபட்டுள்ளன. அந்த கொத்தமங்கலத்திலும், சத்தியமங்கலத்திலும் இரண்டு பெரும் பள்ளங்கள் இருக்கின்ற காரணத்தினால் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி, அந்தப் பகுதிக்கு அருகிலுள்ள 10 கிராமங்களில் வசிக்கும் மக்கள் வெளியே போகமுடியாத ஒரு துன்பமான நிலை அங்கே இருக்கிறது. இந்த வருஷம் சீக்கிரத்திலே அதை எடுத்து நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான இந்த சீரிணைப்பு சிக்கன நடவடிக்கையின் காரணமாக பல இடங்களிலே இந்த ரோடு வேலை செய்கின்ற மேஸ்திரிகள், கொத்தனார்கள், அந்த இலாகாவிலே இருக்கிற க்ளார்க்குகள் இவர்கள் எல்லாம் மிகுந்த ஐயப்பாடுடன் இருக்கிறார்கள். ஆகவே, சாதாரண ஏழை விவசாயிகளிடம் அதிகமான வேலை வாங்கும்படியான நிலை இருக்க வேண்டுமேயொழிய அவர்களை வீட்டுக்கு அனுப்புவது மனிதாபிமானத்துக்கு உகந்ததல்ல என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்களுக்காக நான் பேசுவதாக அல்ல, இருந்தாலும்கூட சிறப்பான விஸ்தரிப்பு இல்லாவிட்டாலும்கூட பாதகம் ஏற்படுத்தக் கூடாது. ஏற்கனவே தற்காலிகமாக இருக்கக் கூடியவர்களை நிரந்தரமாக்கவேண்டும். நிரந்தரமாக இருப்பவர்களுக்கு அதிக வேலை கொடுத்து, அவர்களைச் செய்யச் சொன்னால் அவர்கள் சிறப்பாக செய்வார்கள் என்ற என்னுடைய ஆலோசனை யைக் கூறி, அதோடு இப்பொழுது இருக்கும்படியான இந்த மானியத்திலே இன்னும் அதிகப்படியான ஒரு நிலையை சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த அளவிலே, ஏற்கனவே மத்திய சர்க்காரைப் பொறுத்த மட்டிலும், நான் பார்த்த அந்த காரியதரிசியைப் பொறுத்த மட்டிலும் 20 கோடி அல்ல, 25 கோடிகூட கொடுப்பதாக என்னிடம் சொன்னார்கள். இங்கிருந்து திட்டங்கள்தான் அனுப்ப வேண்டும். நான் விவசாய அமைச்சரிடத்திலேகூட அதைப்பற்றி சொன்னேன். இங்கிருந்து விவசாயத் திட்டங்கள் சரியாக அவர்களுக்குக் செல்லுமானால், சட்ட சபையிலே வைக்கும்படியான திட்டங்களை அவர்களுக்கு அனுப்புவார்களானால், உங்களுக்கு நிச்சயம் உதவுவார்கள் என்று நினைவுப்படுத்தி, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பணியாற்றும்படியான நிலையை நினைத்து என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்த வெட்டுப் பிரேரேணையை வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நீர் வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, துறைமுகங்கள் ஆகிய மானியங்களின் பேரில் இன்று காலையிலிருந்து எதிர்க் கட்சித் தலைவர் உட்பட 32 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இதில் எதிர்ப்பதற்கு ஒன்றுமே இல்லையென்று சொல்லுகின்ற அளவுக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இந்த மானியக் கோரிக்கையை வெகுவாக ஆதரித்து, இந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கைகளின்மீது எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் பலவற்றையும், திட்டங்களையும் வரவேற்றுத் தங்களுடைய உரைகளை நிகழ்த்தி இருக்கிறார்கள். அந்த அளவில் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள்





அனைவருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்தத் துறையினுடைய பொறுப்பினை வகிக்கின்ற அமைச்சர் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளபெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்து இன்று திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தலைமை நிர்வாகம் ஒரு பொறியாளருடைய மேற்பார்வையிலேதான் இருக்க வேண்டும், அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கக் கூடாது என்பதனை மிகவும் வலியுறுத்துகின்ற அளவில் எடுத்துக் காட்டி, அதற்குச் சில ஆதாரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். இன்றையதினம் செயலாளர் என்கின்ற பெயரில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தாலும், அவர்கள் தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுக்கவில்லை என்பதையும் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பொறியாளரைக் கலக்காமல், அவருடைய யோசனையைக் கேட்காமல் எந்த முடிவையும் அவர் எடுக்கவில்லை என்பதனையும் நான் உணர்த்துவதற்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். செயலாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும், பொறியாளர்கள், நீர்ப்பாசனத் துறையிலாகட்டும், அல்லது நெடுஞ்சாலைத் துறையிலாகட்டும், எடுத்துச் சொல்கின்ற நல்ல கருத்துக்களை ஆராய்ந்து அவற்றை நல்ல முறையிலே சிந்தித்து ஒரு முடிவினைமேற்கொள்ளுகிறார்கள். அந்த முடிவையும் அரசு இறுதியாக ஏற்றுக்கொண்ட பிறகுதான் அது செயல்படுத்தப்படுகின்றது. அந்த நிலையில் பொறியாளர் ஒருவர்தான் இந்த இலாகாவினுடைய செயலாளராக இருக்க வேண்டுமென்ற கூற்று அவ்வளவு பொருத்தமுடையதாக எனக்குத் தெரியவில்லை. அவர் எப்படித் தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதற்கு உதாரணத்தைச் சொன்னார்கள். "பூதலூரிலே ஏற்பட்ட உடைப்பு உடனடியாக அடைக்கப்படவில்லையென்றும் அதற்குக் காரணம் அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைக்கவில்லை, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி செயலாளராக இருக்கிற காரணத்தினால் அந்த அனுமதி பெறுவதற்குத் தாமதப்பட்டது" என்றெல்லாம் சொன்னார்கள். அது முற்றிலும் பொருந்தாத கூற்றாகும். ஏனென்றால் பூதலூரில் உடைப்பு ஏற்பட்டதும் அதை அடைப்பதற்குரிய அனுமதியை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய அவசியமே இல்லை. அங்கு இருக்கின்ற எஸ்.இ. பதவி வகிக்கின்ற பொறியாளரே அதற்கான உத்தரவை வழங்கி, அந்த ஏற்பாடுகளைக் கவனிக்க கடமைப்பட்டிருக்கிறார். 70,000 ஏக்கர் நிலம் இதனால் பாழடிக்கப்பட்டது என்பதும் தவறான தகவல், 20,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டது. 20,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டதற்கான காரணம் அந்த உடைப்பு மாத்திரம் அல்ல. பல காரணங்களிலே உடைப்பு ஒரு பக்கத்திலே இருந்தாலும், ஆகஸ்டு திங்களிலே பெய்திருக்க வேண்டிய பரவலான மழை அங்கு இல்லாத காரணத்தினாலும், அதோடு ஏரி நீர் பாய வேண்டிய கிளை வாய்க்கால்களிலே, பாயக் கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினாலேயும் அங்கே அந்த 20,000 ஏக்கர் பாதிக்கப்பட்டதேதவிர, முழுவதும் இந்த உடைப்பின் காரணமாக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய உறுப்பினர்கள் பலரும் தண்ணீரைச் சிக்கனப்படுத்தி நவீனமான முறையில், வேகமான முறையில், நீர்பாசன வசதியைச் செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். சிக்கனப்படுத்துவதை இந்த அரசும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்காகப் பல நிலைகளில் ஆராய்ச்சிகள் நடத்தி, சில வேலைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. பழைய ஆற்றுக்கால் பாசனங்களில் நீர்த் சேதம் அதிகப்படுகிறது. பரந்த வாய்க்கால்களும் திறந்த மடைகளும் அதற்குக் காரணமாக இருந்து வருகின்றன. அவ்வப்பொழுது தேவையாக அமைந்த பல "கனெக்ஷன் பைப்ஸ்" என்று சொல்லப்படுகிற இந்த சொருகுக் குழாய்களும் அதிகமான தண்ணீர் சேதத்திற்குக் காரணமாக இருந்து வருகின்றன. நீர் வீண் விரயம் தடுக்கப்படுவதற்கும் கடைப் பாசன வாயக்கால்களிலே ஏற்படுகின்ற உடைப்புக்களை நீக்குவதற்கும் இந்த அரசு எல்லா விதமான நலல திட்டங்களையும் மேற்கொண்டிருக்கிறது. தண்ணீரைச் சிக்கனப்படுத்த வேண்டுமென்ற தலைப்பிலே பேசிய நேரத்தில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், காலையிலே உரையாற்றிய நண்பர் திரு. நல்லசிவன் அவர்களும் ஒரு கியூசெக்ஸ் சில பகுதிகளிலே 60

எக்கருக்குப் பாசன வசதி தருகின்றது என்றும் சில இடங்களிலே 25 எக்கருக்குத்தான் தருகின்றது என்றும் இதை ஒருசமப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பகுதியிலேகூடஒரு க்யூசெக்ஸ் தண்ணீரைக்கொண்டு அதிகமான அளவு எக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இதை ஒருசமநிலைப்படுத்துவதென்பது இயலாத காரியம். ஆங்காங்கு இருக்கிற மண் வளம், ஆங்காங்கு இருக்கிற பல்வேறு நிலைகள், ஆங்காங்கு இருக்கிற பாசன வசதிகள், களிப்பற்று, பயிர்முறை இவை அத்தனையையும் பொறுத்துத்தான் இவ்வளவு க்யூசெக்ஸ் இவ்வளவு எக்கருக்கு உபயோகப்படுத்தலாம் என்று நிர்ணயிக்க முடியுமே தவிர, அதிலே பொது உடைமைத் தத்துவம் பேசி, எல்லா இடங்களிலும் சமமாக 60 எக்கர் தான் தஞ்சாவூரிலும் இருக்க வேண்டும், கோவையிலும் இருக்க வேண்டும், சேலத்திலும் இருக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமுடையதாக அமையாது என்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிக்கனப்படுத்தவும், நவீன முறைகளை மேற்கொள்வதற்காகவும் இந்த அரசு இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிற சில செயல்களைச் சுட்டிக்காட்டுவது நலம் என்று கருதுகிறேன். சிக்கனப்படுத்துகின்ற முறையில் கால்வாய்க்குக் கரை அமைத்துக் கெட்டிப்படுத்துகின்ற திட்டம்; உடைபட்டிருக்கக்கூடிய இடங்களில் காப்புக்கல் (ரிவெட்மெண்டு) இவற்றைச் செய்து, அந்த உடைப்புகளை, உடைபடக்கூடிய இடங்களைப் பாதுகாக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு திட்டம்; கால்வாய்களுடைய அகலத்தைக் குறைத்து, அதிக மட்ட நீரை வெகு விரைவாகச் செலுத்தி, கடைமடை வரையிலே சென்று பாயக்கூடிய அளவுக்குக் கால்வாய்களுடைய அகலத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டம்; எங்கே தண்ணீர் மதகுகளில் ஏறிப் பாயவேண்டிய நிலைமைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் நாட்சஸ், நெருக்கக் கண் வழிகள் இவறறை அமைத்து, தண்ணீரை ஏறிப் பாயச் செய்கின்ற அப்படி ஒரு திட்டம்; பாசன மட்டத்திற்கேற்ப மதகுகளை மாற்றி, தேவையற்றவைகளை அகற்றி, அதன்மூலம் தண்ணீரைச் சிக்கன முறையிலும், நவீன முறையிலும் உபயோகப்படுத்துவதற்கான திட்டம்; பெரிய கால்வாய், தலைக் கால்வாய்களில் தரைமட்ட அணைகள் (பெட் டாம்ஸ்) என்று சொல்லப்படுகின்ற தரைமட்ட அணைகளைக் கட்டுவதற்கும், ரெகுலேட்டர்களை அமைப்பதற்கும் சிக்கனப்படுத்துவதும், நவீனமுமான முறைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்கிற அளவுக்கு இத்தகைய திட்டங்கள் இருக்கின்றன.

இந்த அடிப்படையிலேதான் இந்த அரசு தாமிரபரணியில் மூன்று கால்வாய்களைச் சீர்படுத்தியிருக்கிறது. நான்கில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. எஞ்சிய இரண்டு கால்வாய்களில் வேலைகள் 1968–69-ல் மேற்கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் பாசனத்தில் நூற்றுக்கணக்கான கால்வாய்கள் இருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துக்கொண்டு, சிக்கனப்படுத்துகிற நவீன முறைகளை அங்கே மேற்கொள்வது என்றால், தற்போதைக்கு இயலாது என்றாலும், இப்பொழுது முன்னோடித் திட்டமாக 16 கால்வாய்களை 1967–68-ம் ஆண்டில் இந்த அரசு மேற்கொண்டு, அதற்காக மொத்தச் செலவு ரூ. 38 லட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, இதுவரையிலே ரூ. 3,08,000 அதற்காகச் செலவிட்டிருக்கிறது. இந்த 16 கால்வாய்களுடைய வேலை முன்னோடித் திட்டங்களாக இருக்கிற அளவில் தஞ்சை மாவட்டத்தில் இந்த வேலை இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இந்த 16 கால்வாய்கள் சீர்திருத்தப்பட்டு, அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து, மேற்கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மற்றக் கால்வாய்களை—அது மற்ற மாவட்டங்களைப்போல், அல்ல, பல சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் அ





இருக்கின்றன—குறுக்கிடுகிற கால்வாய்கள், ஆங்காங்கிருக்கிற காரணத்தினால் பாசன வசதிகளை பாதிக்கக்கூடிய வகையில் இந்த சீரமைப்பு வந்துவிடக்கூடாது என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், இந்த முன்னோடித் திட்டங்களுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து, மேற்கொண்டு பல கால்வாய்களை எடுத்துக்கொள்கிற அளவில் இந்த அரசு இருக்கிறது.

ரூ. 2,23,000 செலவில், இந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் அமராவதியில் 13 கால்வாய்களுக்குத் திட்டம், சிக்கனப்படுத்தி நவீன முறைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, 13-ல், 12-ல் வேலை நடக்கிறது. ஒரு வேலைத் திட்டம் கோர்ட்டில் இருக்கிறது. இந்த வேலைத் திட்டம் அங்கே வேண்டாம் என்று அங்கிருக்கிற சில விவசாயிகள் மறுக்கின்ற காரணத்தினால், அந்த ஒரு வேலைத் திட்டம் கோர்ட்டில் இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது. 12 கால்வாய் திட்டங்களுடைய வேலைகள் இரண்டு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அதேபோல, திருச்சி அமராவதியில் 11 கால்வாய்கள். அவற்றில் இரண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது; இரண்டு அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருககின்றன. 7 திட்டங்கள் தலைமைப் பொறியாளரின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் நான் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அதைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் மேலும் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, இந்த ஆண்டிலே இந்த 11 கால்வாய்களுக்கான வேலைகளும் விரைவுபடுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

கோவை அமராவதியில், ரூ. 72 இலட்சம் செலவில் கால்வாய்களுக்குக் காரை பூசி, கரைகளையும், தளத்தையும் மேம்படுத்த அனுமதி வழங்கப்பட்டபிறகு, வேலை தொடங்குகிற நிலைமையில் இன்று கோவை அமராவதித் திட்டம் இருக்கிறது. காரை பூசுகின்ற காரணத்தினால், நீர் உறிஞ்சப்படாமலும், நீர் ஆவியாக மாறுகிறது என்கின்ற நிலைமையிலிருந்து நீர் வீணாகாமலும் பாதுகாக்கப்படுகிறது என்பதையொட்டி, கோவை அமராவதியில், ரூ. 72 இலட்சம் செலவில், காரை பூசிக கரைகளையும், தளத்தையும் மேம்படுத்துகிற திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

பெரியாற்றிலும் இந்த விதமான திட்டங்களுக்கு செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின்கீழ், வீரகனூர், பார்த்திபனூர் அணைகளைக் கட்டி, ஆங்காங்கு இருக்கின்ற கால்வாய்களை ஒரு சீராக அமைத்து, குளங்களுக்குப் பாயும் கிளைக் கால்வாய்களையும் வகுத்து, பாசன நீரைச் சேமித்து, நஞ்சை நிலங்களுக்குள்ள பற்றுக்குறையைப் போக்க, ஏறத்தாழ ரூ. 400 இலட்சத்தில் ஒரு திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 1968–69-ல் இந்த திட்ட வேலைகள் தொடங்க இருக்கின்றன. செய்த வேலைகளினுடைய பயனாக, தண்ணீர் விரைவாக கடைமடைப் பகுதிகளுக்குக் கிடைக்கவும், சிக்கனமாகப் பயனுறவும் இந்த நவீன முறைத் திட்டம் நிச்சயம் பயன்படும் என்று நாம் நம்புகிறோம். இதனை மேலும் பரவலாக்க இருக்கிற வாய்ப்புக் கூறுகளையும் இந்த அரசு ஆராய இருக்கிறது.

சென்ற ஆண்டு பருவ மழை ஓரளவுக்கு தவறிவிட்ட போதிலும், 1966–67-ம் ஆண்டைவிட 1967–68-ல் பெருமளவுக்குப் பருவமழை குறைந்துவிட்டபோதிலும், வேளாண்மைத்துறை குறுகிய காலப் பயிர்களைப் பயிர் செய்யும் முறையினைக் கடைப்பிடித்ததை ஒட்டியும், இருந்த நீரை முறைப்படுத்தி, சிக்கனமாக வழங்கியதாலும், உணவு உற்பத்தி பாதிக்கப்படாத அளவுக்கும், குறிப்பாகத் தஞ்சையிலும் அதிக விளைச்சல் காண்கின்ற அளவுக்கும் நாம் வெற்றி காண முடிந்திருக்கிறது. பொறியாளர்களும், ஆங்காங்கு மாவட்ட ரீதியிலிருக்கிற அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையில் இருக்கிற ஏனைய அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டு தந்த

நல்ல ஒத்துழைப்பின் காரணமாகவும் இந்தப் பயனை மழை குறைவாக இருந்தும், விளைச்சலை அதிகமாகப் பெற்றோம் என்கின்ற வெற்றியினை நாம் காண முடிந்தது.

ஆற்றுப்பாசனத்தை மாத்திரம் நம்பி இடையிலே இயற்கையால் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்க, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் கிணறுகள் வெட்ட, வடிமுனைக் குழாய்கள் அமைக்க, அவற்றிற்கு மின்சக்தி வழங்க இதற்கு முன்னிருந்த தடை விதிகளையெல்லாம் இந்த அரசு தளர்த்தி யிருக்கிறது. அதைப் பாராட்டி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியதை நாம் கேட்டோம்.

நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பாலாறுப் பகுதியைப் பொறுத்தவரையிலே, இந்தப் பாலாறு விதிகள் தளர்த்தப்படவில்லை என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். பாலாறுப் பகுதியிலும் நாம் இன் றைய தினம் இந்த விதிகளையெல்லாம் ஓரளவுக்குத் தளர்த்தி, 2½ குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் இருந்த இடங்களில், 5 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் பொருத்தலாம், 5 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் இருந்த இடங்களில் 10 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் பொருத்தலாம் என்றும், அதைப்போலவே, ஊற்றுக்கால்வாய், ஊற்று நீர்ப் பகுதியிலிருந்து 400 கிலோ மீட்டர் தொலைவில் பம்புசெட்டு வைப்பது என்று இருந்ததை, இப்பொழுது 200 என்று குறைத்தும், 200 என்று இருந்ததை 100 என்று குறைத்தும் நாம் பாலாறு பேஸின் பொறுத்தவரையில் இருக்கிற விதிகளை இன்றையதினம் தளர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, எப்பொழுதும் நீர் வசதிகளைப் பெற்று, நல்ல விளைச்சலைக் பெருக்குவதற்கு சாத்தியக்கூறான வழிகளில், இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்கள் உதவி பெறவேண்டும் என்ற உணர்வுடன் இந்த விதிகளையெல்லாம் தளர்த்துவதுபற்றி பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

வடிகால் பிரச்சினையைப்பற்றி பல உறுப்பினர்கள் எடுத்துக்கூறினார்கள். அதிலும் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப்பற்றிப் எடுத்துச் சொன்னார்கள். தஞ்சையில் மழை மிகு பகுதிகளில் இந்த வடிகால் பிரச்சினை வெகுவாக பேசப்படுகிற, உணரப்படுகிற ஒன்றாக இருக்கிறது. இதனை ஆராய்ந்து வடிகால்கள் அமைக்க ஒரு தனிக் கோட்டமே இப் பொழுது பணி புரிந்துகொண்டு வருகிறது. இந்தத் தனிக்கோட்டம் திருவாரூரைத் தலைமையகமாகக் கொண்டு அந்த வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. தனிக்கோட்டம் 1966-ல் தொடங்கியது. அடிநீர் ஆராய்கின்ற கோட்டத்தில் இணைந்து இதுவரையில் பணியாற்றிக் கொண் டிருந்தது. இந்த ஆண்டுதான் இந்தக் கோட்டம் வடிகால் வசதிகளை முழுவதுமாகக் கவனிக்க வேண்டும் என்று அரசு அவர்களுக்கு ஆணை பிறப்பித்து அவர்கள் அந்தக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல. தஞ்சை மேல் பகுதியில் கந்தர்வகோட்டை என்ற இடத்தில் ஓடிக்கொண்டிருக்கிற காட்டாற்று நீரைத் திருப்பி, ஆங்காங்கு விவசாயிகளுக்குப்பயன்படக்கூடிய வழிவகைகள் செய்ய வேண்டும் என்றும், அதற்கான ஆராய்ச்சியை நடத்த வேண்டும் என்றும் அரசு காரியங்களை மேற்கொண்டிருக்கிறது.

புது நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் குறைவான நிலையில், சிறிய பாசனத் திட்டங்களை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்று வெகு வாக மாண்புமிகு உறுப்பினர்களால் பேசப்பட்டது. பரம்பிக்குளம்-ஆழி யாறு திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டது என்றாலும், 1,48,000 ஏக்கர்களுக்குப் பாசனம் கொடுக்க நிறைவேற்றியிருக்கிறது என்றாலும், இது வரையிலும் மொத்தச் செலவு, 1967–68 வரையில் ரூ. 36 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றால், இன்னும் செலவழிக்கப்படவேண்டி யது, செலவழிக்கப்பட வேண்டியது மாத்திரமல்ல பெறுகின்ற பாசன வசதிகளைப பெற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதுபோல, அண்டை மாநிலத்தோடு நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடியும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கி றோம். நம்முடைய திரு. கோதண்டராமன், “ஏன் அண்டை மாநிலத்





தோடு பேச்சு வார்த்தைகளை விரைவாக முடிக்கவில்லை ?” என்று குறிப் பிட்டார்கள். திரு. நல்லசிவன் அவர்களும், மிகுந்த அவசரப்பட்டார்கள். ஏன் முடிக்கவில்லை என்று கேட்டார்கள். அவர்கள் இருவரும்கூட, முயற்சி எடுக்கலாம். எப்படியென்றால், கேரளத்தில் நடைபெறுவது கோதண்டராமன் கட்சியைச் சார்ந்த அமைச்சரவை : அதிலும் குறிப்பாக நீர்ப்பாசன அமைச்சராக இருக்கிறவர் திரு. குருப் அவர்கள், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, கோதண்டராமன் அவர் களும், நல்லசிவன் அவர்களுமே கூடி, அமைச்சரவை அவர்கள் கட்சி என்று கோதண்டராமனும், குறிப்பிட்ட துறையில் தொடர்புள்ளவர் எஸ். எஸ். பி. அமைச்சரென்று நல்லசிவனும்கூட இந்த காரியத்திற்கு கூறு துணையாக இருக்கலாம். பேச்சு வார்த்தைகள் முறிந்துவிடும் சூழ் நிலையில் இல்லை. நல்ல வெற்றிகரமாக நடக்கவேண்டும். திரு. இராமச் சந்திரன்கூட அதிகாரிகள் கூடாது, அமைச்சரே செல்ல வேண்டும் என்றது போல, அமைச்சர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடக்கிறது. அமைச்சர் மட்டத்தில் என்றால், முதல் அமைச்சர் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை ஆந்திராவிலிருந்து பெறுவதற்கு அந்தக் காலத்தில் ஓ.பி.ஆர்,.—திரு ராமசாமி ரெட்டியார் அமைச்சராக இருந்த அப்பொழுதே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட் டதே, அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். திரு. ஓ.பி.ஆர். மந்திரியாக இருந்த காலத் திற்கும் நாங்கள் மந்திரிகளாக இருக்கும் காலத்திற்கும் இடையே சென்ற ஆண்டுகள் எண்ணற்றவை. இடைக்காலத்தில், யார், யார் மந்திரிகளாக இருந்தார்கள் என்று எண்ணிப்பார்த்தபோது, இது வரையில், ஓ.பி.ஆர். காலத்திலிருந்து காங்கிரஸ் மந்திரிகள்தான் இருந்து வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களைப் பார்த்து அவ்வளவு வேகமாகக் கேட்ட கேள்வியை அவர்களைப் பார்த்து ஒரு முறையாவது கேட்டாரா என்பது சந்தேகமே. அப்படிக் கேட்டு இருந்தால் மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பேன் (குறுக்கீடு). “கேட்டு இருந்தால் விட்டிருப்பார்களா” என்று முதல் அமைச்சர் கேட்கிறார்கள் (சிரிப்பு).

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி நதித் திட்ட வேலை ரூ. 110 லட்சம் செலவில் நடை பெறும் வேலை, இந்த ஆண்டு முடிவு அடைகிறது. அது முடிந்தபிறகு 5,000 ஏக்கர்கள் பாசன வசதியை, கோமுகி நதித் திட்டத்தின்மூலம், தென்னாற்காடு பகுதியில் உள்ள விவசாயிகள் பெற முடியும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், சித்தாறு-பட்டணங்கால் திட்டம். 415 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. வேலைகள் அடுத்த ஆண்டில் முடிவு அடையாது என்றாலும், வேலைகள் முடிந்ததும்தான் பாசன வசதி பெறவேண்டும் என்று இல்லை. பயனுறுகின்ற அளவு, எந்தக் கட்ட அளவிற்கு வேலைகள் சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தில் பூர்த்தியாகின்றனவோ, அதன் மூலம் 32,000 ஏக்கர்கள் பாசன வசதி பெறும். அடுத்த ஆண்டு, 30,000 ஏக்கரா இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம், 10,000 அல்லது 12,000 ஏக்கர்கள் அளவிற்கு இன்னும் 20,000 ஏக்கர்கள் அளவிற்கு பாசன வசதி பெறக் கூடிய அளவிற்கு வேலைகள் அடுத்த ஆண்டில் முடிவடையும் என்று கருதுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில், மணிமுத்தா நதித் திட்டத்திற்கு ரூ. 45 இலட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் மொத்தம் ரூ. 60 இலட்சமும் முழுமையும் செலவழிக்கும் முன்னாலேயே பயனுறக்கூடிய அளவு, விவசாயிகள் மகிழத்தக்க அளவிற்கு பல கட்ட வேலைகள் முடிவுறும். 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற முடியும்.

நெல்லை மாவட்டத்தில், இராம நதித் திட்டத்திற்கு 110 இலட்ச ரூபாய் மதிப்பிடப்பட்டு, 4,170 ஏக்கர்களுக்கு உறுதியளிப்பும், 500 ஏக்கர்களுக்கு புதிய பாசனமும் தரக்கூடியது அந்தத் திட்டம் 1968–69-ம் ஆண்டில்

அதனுடைய வேலைகள் முனைப்பாக ஆரம்பமாக இருக்கிறது. முடிவு அடைய வில்லை. முனைப்பாக இராமநதித் திட்டம் தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் கடனா நதி திட்டத்திற்கு 163 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, உறுதிப்பாடு செய்யப்படுகின்ற நிலங்கள், ஏற்கனவே பாசனத்திற்கு வந்திருக்கிற நிலங்கள், 7,112 ஏக்கரும், புதிய பாசனத்திற்கு 1,000 ஏக்கரும் பயனுறும் அளவுக்கு வேலைகள் தொடங்கியுள்ளன.

பரம்பிக்குளம் -ஆளியாறு திட்டப்பகுதிகளில் கண்ணிவாய்க்கால்கள், ஃபீல்ட் போதிஸ், இருக்கின்றன. பரவலாக இந்தச் சலுகையை எல்லாத் திட்டங்களுக்கும் விரிவு படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மன்ற உறுப்பினர்களும், விவசாயிகளும் மிகவும் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

காவிரி சங்கமுகப் பகுதியில் இருபோகச் சாகுபடிக்கு உதவியாகக்கல்லணை கால்வாய், காவிரிக் கால்வாய் இவற்றை மேநிலைப்படுத்தும் திட்டத்திற்கென்று இந்த அரசு 66 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. சங்கமுகப் பகுதியில் காவிரியில், கல்லணைக்கால்வாயை மேநிலைப்படுத்த 1968–69-ல் ரூ. 26 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. மிச்சம் ரூ. 40 இலட்சமும் செலவழிக்கப்பட்டபிறகு பயனை அந்தப்பகுதியிலேயே தரக்கூடிய அளவில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

சென்னை உரத் தொழிற்சாலைக்கு நிலநீர் வழங்க ரூ. 180 இலட்சம் செலவில் திட்டம் ஆய்வில் இருக்கிறது. காவிரி சங்கமுகத்தில் ஐக்கிய நாடுச் சங்க விரிவாக்கும் திட்டம் ஒன்றும் ஆய்வில் இருக்கிறது.

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி நீர் கொண்டுவர என்ற திட்டத்திற்காக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 25 இலட்சம். இவை அன்னியில் தங்கள், தங்களுடைய மாவட்டங்களுடைய குறைபாடுகளையும், தங்கள் தொகுதி களிலுள்ள திட்டங்களும் வரவேண்டும் என்ற கருத்தையும் பல உறுப் பினர்கள் பேசியிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் அடிக்கடி இந்த மாமன்றத்தில் வலியுறுத்தி அந்த வகையிலும், இன்றைய தினம் சுட்டிக்காட்டிப் பேசிய வகையிலும், பொது மக்களுடைய முறையீடுகள் அடிப் படையிலும், இந்த அரசு சுமார் 10 திட்டங்களைப் பற்றிய ஒரு அறிவிப் பினை இந்த மன்றத்திலே வழங்கக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த பத்துத் திட்டங்களும், கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிற திட்டங்கள் இல்லை. முதல் அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்வார்கள். கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டு நிறைவேற்றப் படுகிற திட்டங்களைவிட, பரவலாக இலட்சக்கணக்கான ரூபாயில் பரவலான திட்டங்கள் நிறை வேற்றப்பட வேண்டும் என்றும், ஆங்காங்கே விவசாயிகளுடைய குறை களைத் தீர்க்கும் அளவிற்குத் திட்டங்கள் அமைந்திடும் என்ற கருத்தினை முதல் அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்திற்கு ஏற்ப, பரவலாக பல மாவட்டங்களில், ஏறத்தாழ 10 திட்டங்களை அரசு முனைப்பாக ஆராய்ந்து வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில், தண்டரை அணைக்கட்டு. திரு வி.டி. அண்ணாமலை மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்கள். ரூ. 47 இலட்ச மதிப்பீட்டில் தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.

தென்னாற்காடு மாவட்டத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் எதிர்க்கட்சியில் இருந்த காலம் தொட்டு வலியுறுத்திக்கொண்டு வந்த நந்தன் கால்வாய்த் திட்டம். ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம்.



நம்முடைய ஆத்தூர் திரு. வி. எஸ்.எஸ். மணி காலையில் எடுத்துச் சொன்னார்கள், மருதா நதித் திட்டத்தை அமுல் நடத்தினால், ஒரு சிலையே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன் என்று. சிலை வைக்க என்று இல்லை. அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே, ஆய்வு செய்யத் தீர்மானித்திருக்கிறது. திண்டுக்கல் தாலுக்காவில் ரூ. 62 இலட்சம் மதிப்பீட்டில் மருதா நதித் திட்டம்.

அதே போல் கோவை மாவட்டத்தில், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ரூ. 72 இலட்சம் செலவில் அமராவதி கால்வாய்களுக்கு செமண்ட்காரை பூசும் திட்டம்.

முகவை மாவட்டத்தில், பிள்ளருவாய்க்கால் திட்டம் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில்.

நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதி நீரைத் தடுக்க, திரு. சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்த கருப்பா நதி நீர்த் தேக்கத் திட்டம் ரூ. 80 இலட்ச மதிப்பீட்டில்.

நெல்லை மாவட்டத்தில் வைப்பார் அணைக்கட்டு திட்டம் ரூ. 23 இலட்ச மதிப்பீட்டில்.

தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 48 இலட்சம் மதிப்பீட்டில் தொட்டஹல்ல நீர்த் தேக்கத் திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் ரூ. 46 இலட்ச மதிப்பீட்டில், பொன்னணியாறு நீர்த் தேக்கத் திட்டம்.

குளித்தலை தாலூகாவில் ரூ. 46 இலட்சம் மதிப்பில் பிரம்பலார் இரவு 7–30
நீர்த்தேக்கத்திட்டம். இவை எல்லாம் பல கட்ட ஆய்வுகளை முடித்து, அரசினுடைய பரிசிலனைக்கு வந்து, ஒப்புதலுக்குப்பின் விரைவில் அமுலாகும்.

குடகனாறு திட்டம் கைவிடப்பட்டது என்று திரு. என். வரதராஜன் அவர்களும், குளித்தலை உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எங்கள் செங்கற்பட்டுக்கு ஒன்றும் இல்லையா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செங்கற்பட்டுக்கு ஒன்றும் இல்லையா என்று அண்ணா அவர்கள் கேட்கிறார்கள். செங்கற்பட்டுக்கு அண்ணா அவர்களே இருக்கிறார்கள். (பலத்த சிரிப்பு).

குடகனாறு திட்டம் கைவிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பப்பட்ட நேரத்தில் முன்பிருந்த அரசு ஆராய்ந்து அது கைவிடப்பட்டது என்று அறிவித்தது. ஆனால் குடகனாறு திட்டத்தை எந்த அளவிலாவது அங்கிருக்கிற விவசாய மக்களுடைய மனம் மகிழத்தக்க விதத்தில் பரிசீலனை செய்யவேண்டுமென்று இப்போது மறுபரிசீலனைக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் நோக்கோடு சில திட்டங்கள் பார்ப்பதற்கு இயலாதவை. பின் தங்கிய பகுதிகள், உணவு உற்பத்தி அவசியம் தேவைப்படுகின்ற இடங்கள், எந்தவிதமான பாசன வசதியும் பெற முடியாத இடங்கள், இங்கெல்லாம் வருவாய் என்பதை அடிப்படையாக வைத்தே திட்டங்களை நோக்கக் கூடாது. அதிலும் நாம் ஒரு எல்லை வகுத்திருக்கிறோம். எந்த அளவிற்கு செலவு செய்யலாம் என்றால், திட்டத்தினால் ஒரு டன் அரிசி கிடைக்கும் என்றால், 3 ஆயிரம் என்ற கணக்கில், அல்லது பாசன வசதி ஒரு ஏக்கர் பெறும் என்றால் ஆயிரம் ரூபாய் என்ற கணக்கில் திட்டங்களுக்காகச் செலவு செய்யலாம் என்ற ஒரு முறையை வைத்திருக்கிறோம். கூடிய

மட்டில் இந்த குறிக்கோளுக்கு உகந்த திட்டங்களை அரசு மேற்கொள்ளும். பின்தங்கிய பகுதி, உணவு தேவைப்படுகின்ற பாசன வசதியற்ற பகுதி இங்கெல்லாம் ஓரளவு சலுகை அளிப்பது என்றால், ஒரு டன்னுக்கு 3 ஆயிரம் என்பதை 4 ஆயிரம், 5 ஆயிரம் என்கின்ற அளவிற்குக் கொஞ்சம் உயர்த்தலாம். ஆனால் பழைய அரசு இந்தக் கொள்கையை உதட்டளவில் மட்டும் வைத்துக்கொண்டு செயலளவில் சில தவறுகளைச் செய்திருக்கிறது என்பதை ஒரு உதாரணம் காட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறுத் திட்டம். மஞ்சளாறு திட்டத்திற்கு திட்டக்குழுவே ஒப்புதல் அளிக்காத நிலையில், ஆனால் எந்தக்கொள்கைக்கும் ஒவ்வாத நிலையில் பழைய அரசு 109 லட்சம் ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது. அரசின் கணக்குப்படி ஒரு டன்னுக்கு 3 ஆயிரம் ரூபாய் செலவழிக்கலாம். ஆனால் இந்தத் திட்டத்தில் ஒரு டன்னுக்கு 10,850 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு டன்னுக்கு 10,850 ரூபாய் வீதம் செலவிட்டு, அந்த மஞ்சளாறு திட்டத்திற்கு அவர்கள் செலவிட்டிருக்கிற தொகை 109 இலட்ச ரூபாய். அதிலே ஏற்கெனவே பாசன வசதி உறுதியளிக்கப்பட்டவை 3,136 ஏக்கர் நிலம். இதனால் புதிதாகப் பாசன வசதி பெறுவது 2 ஆயிரம் ஏக்கர்தான். இந்த 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்காக 109 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, 3 ஆயிரம் என்ற அளவில் மூன்று மடங்குக்கு மேலாகச் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. காலையில் பேசிய நண்பர்கள் சில திட்டங்கள் தனிப்பட்டவர்களுக்காக, தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக நிறைவேற்றப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். இந்த மஞ்சளாறு திட்டம் அதற்கோர் உதாரணம். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு இந்த அளவிற்குச் செலவழிக்காமல் இருந்திருப்பார்களேயானால், வருவாய் தரக்கூடிய வேறு பல திட்டங்களை நிறைவேற்றியிருக்க முடியும். இப்படிப்பட்ட திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியாது, எடுத்துக் கொள்ளக்கூடாது என்று அல்ல, வாய்ப்புக்கூறுகளும் அத்தியாவசியமான நிலைமைகளும் இருக்கின்ற இடங்களில், நம்மிட தில் இருக்கின்ற பொருளாதாரத்தை, நிதி நிலைகளை வைத்து இலாபகரமான, அவசியமான திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, எல்லாம் முடிந்துவிட்ட பிறகு, இனிமேல் வருவாயைப் பற்றிக் கவலை இல்லை என்ற சூழ்நிலை இருக்கும்போதுதான் அப்படிப்பட்ட திட்டங்களை ஆரம்பிக்கலாம். நியாயமான செலவில், நியாயமான பலன்களைப் பெற்ற பிறகு இதுபோன்ற திட்டங்களுக்குச் செல்லலாம். ஆரம்ப காலத்திலே இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுவது நல்லது அல்லவென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு இந்த மஞ்சளாறு திட்டம் உதாரணமாக விளங்குகிறது.

பாசனத்திற்கு ஆறுகளை மட்டுமல்ல, ஏரி, குளங்களைக் காப்பாற்றுவதையும் அவைகளைப் பாதுகாப்பதையும், அவைகளைச் செம்மைப்படுத்துவதையும், அவைகளைத் தூர் வாருவதையும் முக்கியமாகக் கருத வேண்டுமென்று உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மழைநீர் வீணாகாமல் காக்கப்பட வேண்டுமென்ற முறையில் புதிய அரசு 52 புதிய குளங்களை இந்த ஓராண்டுக் காலத்திலே எடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2 குளங்கள் ; திருச்சி மாவட்டத்தில் 6 குளங்கள்; மதுரை மாவட்டத்தில் 7 குளங்கள் ; இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 குளங்கள் ; கோவை மாவட்டத்தில் 8 குளங்கள் ; தர்மபுரி மாவட்டத்தில் 1 குளம் ; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1 குளம் ; நெல்லை மாவட்டத்தில் 6 குளங்கள் ; சேலம் மாவட்டத்தில் 14 குளங்கள். ஆக, புதியதாகவே 52 குளங்களை உருவாக்கி வருகிறோம். இவற்றில் 4-ன் வேலைகள் முடிவடைந்திருக்கின்றன. 48-ன் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவைகள் எல்லாம் நாமே உருவாக்குகின்ற குளங்கள். ஆங்காங்கு தேங்குகின்ற மழைநீர் வீணாகாமல் இப்படிப்பட்ட புதிய குளங்களை உருவாக்கி, அதன்மூலம் பாசன வசதி பெறுவதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.



புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சென்ற ஆண்டில் உடைப்பு எடுக்கப்பட்ட ஏரிகள் அத்தனையையும் நாம் பழுதுபார்த்து, அவைகளைச் செம்மைப்படுத்தியிருக்கிறோம். செங்கற்பட்டு மாவட்டத்தில் 261 ஏரிகளிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 329 ஏரிகளிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 99 ஏரிகளிலும் உடைப்பு எடுத்தன. அப்போது அடித்த புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இவையனைத்தும் ஓராண்டுக் காலத்திலே பழுதுபார்க்கப்பட்டு, உடைப்பைச் சீர்படுத்தும் வேலைகள் முடிவுற்றன. ஓராண்டுக் காலத்திலே என்றுகூடச் சொல்லமுடியாது. ஐந்தாறு மாதக் காலத்திற்குள் மராமத்து வேலைகள் முடிவுற்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில்—

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. | 443 |
| வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருப்பவை. | 382 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. .. | 130 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. .. | 61 |

அதேபோல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்—

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. | 548 |
| வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருப்பவை. | 356 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. .. | 101 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. .. | 192 |

அதேபோல் வட ஆர்க்காடு மாவட்டத்தில்—

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. .. | 767 |
| வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருப்பவை. | 671 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. .. | 211 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. .. | 96 |

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட ஏரி உடைப்பு உணவு உற்பத்தி இலாகா மூலமாக அநேகமாகச் செம்மைப்படுத்தப்பட்டு, முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. பாதிக்கப்பட்ட குளங்களுக்கும் உணவு உற்பத்தி இலாகா மூலமாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஏரிகள், குளங்கள், ஆறுகள் இப்படி பல பகுதிகளிலே வருகின்றவை மைனர் இரிகேஷன், எஸ்.எம்.ஐ.பி., ஃபுட் புரொடக்ஷன் என்ற பல கூறுகளாக இருக்கின்ற காரணத்தால் வேலைகள் விரைவிலே முடியவில்லை என்ற கருத்தினைக் கொண்டும், ஆங்காங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் யாரை அணுகினால் இந்த வேலைபற்றிக் கேட்கலாம், விவரம்பற்றிப் புரிந்துகொள்ளலாம் என்ற சிக்கலிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு சீரிணைப்புத் திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டது.

இம்மானியத்தைப்பற்றி பேசிய 32 உறுப்பினர்களில்ஐந்தாறுபேர்தான் இந்தச் சீரிணைப்புத் திட்டத்தைப்பற்றிப் பேசியதாக எனக்கு நினைவிற்கு வருகிறது. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் இதை வரவேற்றாலும், "இது பயன்தரக்கூடியதாக இருக்குமா" என்ற ஐயப்பாட்டினை எழுப்பினார்கள். "இருந்தாலும் ஓர் ஆண்டுக் காலம் பார்ப்போம்" என்று

சமாதானம் சொன்னார்கள். இந்தச் சீரிணைப்பை, விவசாயப் பெருங்குடி மக்கள் யாரை அணுகி, தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது என்பதை முதல் கட்டமாக வைத்துத்தான் இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது 1—4—1968-ம் தேதி முதல் அமலுக்கு வர இருக்கிறது.

இந்தச் சீரிணைப்பினுடைய திட்டத்தின் அடிப்படைகள் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல், எஸ்.எம்.ஐ.பி., ஃபுட் புரொடக்ஷன், நீர்ப்பாசன மராமத்து வேலைகள்—இப்படிப்பட்ட பல பிரிவுகளை ஓர் அமைப்பாக இணைப்பதுதான். இந்த அமைப்பினால் பாசனப் பகுதிகளினுடைய அடிப்படையில் கோளாறுகள் வரும், பல தகராறுகள் வரும், பல முரண்பாடுகள் வரும் என்ற கருத்தினை திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாசனப் பகுதிகளின் அடிப்படையில் இயங்கும் அமைப்புக்களின் எல்லைகளை மாற்ற இயலாது என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்து, பொறியாளர்களையெல்லாம் வைத்துக்கொண்டு, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, இந்தத் துறையினுடைய தலைமைச் செயலாளர் அவர்களுடைய கருத்தினையும் அறிந்து, முதலமைச்சர் அவர்களையும் கலந்து ஆலோசித்தது மாத்திரமல்ல, மாவட்ட ரீதியில் இருக்கின்ற பல்வேறு பொறியாளர்களிடத்தில் கலந்துபேசி, விவசாய மக்களிடத்திலும் பெரும்பாலும் பேசி, ஆங்காங்கு நடைபெற்ற நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை மாநாடுகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையெல்லாம் அடிப்படையாக ஆராய்ந்துதான் இந்தச் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. பாசனப் பகுதிகளின் அடிப்படையில் இயங்கும் அமைப்புக்களின் எல்லைகளை மாற்ற இயலாது, நீர் வாய்க்கால்களைக் கட்டுப்படுத்தி நிறைவேற்ற முடியாது என்பதை திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் உணர்ந்ததைப்போலவே, நாங்களும் உணர்ந்து, ஒருவர் பொறுப்பிலே பாசன முறையும்—நீர் வழங்குதலும்—கட்டுப்பாடும் செவ்வனே நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறோம். முரண்பாடான நோக்குகளும் தேவைகளும் எழ வாய்ப்பிராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது காவிரிப் பாசனம் என்றால், அதற்கு தஞ்சை மாவட்டத்திலே ஒரு எஸ். இ. இருக்கிறார். காவிரி செல்லும் பகுதி வரையிலும் முரண்படாத சூழ்நிலை உருவாக திருச்சி மாவட்டத்திற்கு என்று ஒரு எஸ்.இ. இருப்பார். இதில் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் கூறிய முரண்பாடு எழாது என்ற நம்பிக்கை இருக்கிறது. நல்ல முறையில் செயலாற்ற எல்லையை கூடியமட்டும் ஒரு வட்டத்திற்குள் அமைத்திருக்கிறோம். மற்றப் பகுதிகளை இயங்கும் திட்டத்தை பொறுத்தல்லாமல், செயலாற்று எல்லையை கூடிய மட்டும் ஒரு வட்டத்திற்குள் அமைத்திருக்கிறோம். பாசனம்-கட்டடம் ஆகிய பணிகளை ஒரு நிர்வாகப் பொறியாளரிடத்தில் (இ.இ.) விட்டுவிடுகிறார்கள். இப்பணிகளை நேர்முகமாக மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் கூடிய மட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும்—வேலைப் பளுவைப் பொறுத்து—ஓரிரு மாவட்டம் இணைந்தும்—ஒவ்வொரு பெரு வட்டத்திலும் மேற்பார்வைப் பொறியாளர் (எஸ்.இ.) இன் கீழ் இயங்கும்.

இப்போதுள்ள ரெகுலர் பெருவட்டங்கள் 5. சிறப்புப் பெருவட்டங்கள் 10. புது அமைப்பில் ரெகுலர் பெருவட்டங்கள் ஐந்தில் இருந்து பத்தாகிறது. சிறப்புப் பெருவட்டங்கள் பத்து என்பதில் இருந்து 6 ஆகக் குறைகிறது. பத்து ரெகுலர் பெருவட்டங்கள் அமைகிற காரணத்தினால் பொறுப்பு மிகுந்த பணிகள் மிக செவ்வையாக நடைபெறும் குறுகிய கால அளவில் நடைபெறும், திறமையாக நடைபெறும் என்று கருதி இந்த புது அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 80 கோட்டங்களும்—டிவிஷன்களும்—347 துணைக்கோட்டங்களும்—சப் டிவிஷன்கள்—தொடர்ந்து செயல்படும். ஆகவே இந்தச் சீரிணைப்பினால் வேலையிழப்பு ஏற்படுமோ என்ற அச்சத்திற்கு யாரும் ஆளாகத் தேவையில்லை. ரெகுலர் டிவிஷன்களும், சர்க்கிள்களும் கூடுதலாகியிருக்கின்றன. சிறப்புக் கோட்டங்களின் எண்ணிக்கை குறைகின்றன. இதன்மூலம் யாரை அணுகுவது, யாரிடத்தில் எந்த விஷயத்திற்குச் சென்று பேசுவது என்பதை விளக்குகிற அளவில் ஒரு புத்தகம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் வழங்கப்





பட்டிருக்கிறது. புத்தகம் பெரும் அளவில் இருக்கிறது என்றாலும் ஆங்காங்கு இருக்கிற வட்டங்களைப் பொறுத்து பிரித்து அச்சிட்டுக் கொடுக்கின்ற ஏற்பாட்டினையும் நாங்கள் கவனிப்பதாக இருக்கிறோம்.

அதற்கடுத்து நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்து பல மெம்பர்கள் பேசியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தங்கள் தொகுதிக்கும் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோள் அனைத்தையும் நிறைவேற்றுகிற கட்டத்தில் இந்த அரசின் நிதி நிலைமை இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், போக்குவரத்துக்கான சாலைகளை சீரமைக்கவும், அதன்மூலம் வேளாண்மைத் துறையை வளப்படுத்த முடியும் என்ற திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டப் பொறியாளர் ஒருவர் ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசினருக்கு அளித்தார்கள். இந்தத் திட்டத்தின்படி 20 கோடி ரூபாய் செலவாகும். ஆனால் நான்காவது திட்டத்தில் மத்திய அரசு மாநில அரசுக்கு இந்தத் துறையில் மாநிலம் முழுவதற்கும் ஆக ஒதுக்கியுள்ள பணம் 18 கோடியாகும். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் சாலைப் போக்குவரத்து சீரமைப்புத் திட்டத்திற்குக் கேட்டிருப்பது 20 கோடி, இந்த இரண்டையும் பொருத்திப் பார்த்து, எல்லா வேண்டுகோளும் நிறைவேற்றப்படவேண்டியவையே என்றாலும், அவற்றை நிறைவேற்ற இயலாது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

சாலைகள், பாலங்கள் இவைகளைப் பொறுத்த அளவில் 1967–68-ல் இந்த அரசு மேற்கொண்ட திட்டங்களின் விவரங்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

சென்னை நகரில் எலியட்ஸ் பீச்சு சாலையிலிருந்து பக்கிங்காம் கால்வாய் ஓரமாக பாலிடெக்னிக்கை இணைக்கும் சாலை போட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம். தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணாம்பேட்டை சாலையில் மைல் 1/5 இல் ஒரு பாலம் கட்ட 2 லட்சத்து 12 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம். அதே சூணாம்பேட்டை சாலையில் மைல் 1/7 இல் ஒரு பாலம் கட்ட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம்.

கோவை மாவட்டத்தில் அந்தியூர்—அம்மாபேட்டை சாலையில் மைல் 5/6–7 இல் ஒரு பாலம் கட்ட 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயிலும், கோவை மாவட்டத்திலேயே திருப்பூர்—உடுமலைபேட்டை சாலையில் மைல் 38/4 இல் நொய்யல் ஆற்றில் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்காக 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயிலும் இரு திட்டங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் ஆலங்குடி—தலைஞாயிறு சாலையில் மைல் 23/7-ல் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டமும், தஞ்சை மாவட்டத்தில் மாவூர்—சத்தியகுடி சாலையில் கல் பரப்பி தார் போட 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டமும், அந்த மாவட்டத்திலேயே வேளாங்கண்ணி—வேதாரண்யம் சாலையில் கல் பரப்புவதற்காக 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டமும் ஆக 3 திட்டங்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் —சிக்கல் சாலையில் கல் பரப்புவதற்காக 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

சென்னை நகரில் கொக்கரான் பேசின் பாலச் சாலையை சீர்படுத்துவதற்காக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் எண்ணூர் கடற்கரைச் சாலையில் மைல் 3/1 இல் இருந்து திருவொற்றியூர்—பொன்னேரி சாலையை 2/2-3 இல் இணைக்கும் மணலிச் சாலைக்கு 32 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம்.

தஞ்சை மாவட்டத்தில் பாப்பநாடு—சோளங்கரை சாலை மைல் 1/2 இல் பாலம் அமைக் ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டு—சதுரங்கப்பட்டணம் சாலையில் பலக்குறைவான பாலங்களைக் கெட்டிப்படுத்த 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் திருச்சியில் காவேரி தென்கரை—வடகரை சாலையில் கப்பி பரப்ப 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்னை—திருச்சி தேசீய நெடுஞ்சாலையில் 17/4 இல் தாம்பரம் அருகே மேம்பாலம் கட்ட 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்னை—நெல்லூர் சாலையில் 32/8 மைலில் ஒரு பாலம் அமைக்க 3·47-இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம்.

திருச்சி—தஞ்சை மாவட்டங்களில் பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் திருமானூர் அருகே ஒரு மூழ்குபாலம் கட்டுதற்காக ரூ. 44 இலட்சத்தில் ஒரு திட்டமும் ஆக 134 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மொத்தச் செலவில் இந்த வேலைத் திட்டங்கள் எல்லாம் 1967–68-ல் மேற்கொள்ளப் பட்டன.

அடுத்து 1967–68-ல் முடிவடைந்த பாலங்கள், சாலை வேலைகளின் பட்டியலையும் நான் இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திருக்கலிகுன்றம்—திருப்போரூர் சாலையில் மைல் 1/6-ல் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயில் ஒரு தாம்போதி கட்டப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திக்குளம்—வேம்பார் சாலை மைல் 0/0—13/7-ல் கல் பரப்பி தரம் உயர்த்தும் வேலை 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாயில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதே மாவட்டத்தில் தருவைக்குளம்—சூரங்குடி சாலையில் மைல் 16/5 இல் ஒரு பாலம் 20 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளகுறிச்சி—கச்சிராபாளையம் சாலையை சீர் செய்யும் திட்டம் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயில் நிறைவேறி யிருக்கிறது.

கோவை மாவட்டத்தில் மன்னார்காட்—சின்னதடாகம் சாலையில் மைல் 16/5 இல் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப் பட்டிருக்கிறது. அதற்கடுத்து அந்தச் சாலையிலேயே மைல் 17/5-இல் 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து அந்தச் சாலையிலேயே மைல் 18/5 இல் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடல் சாலையில் பாலாற்றின் குறுக்கே ரூ. 7 இலட்சம் செலவில் ஒரு தாம்போதி கட்டப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர்—சூரையூர் சாலையில் உய்ய கொண்டான் குறுக்கே மைல் 2/2 இல் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில் அங்கிருந்த பாலத்தை புதுப்பிக்கும் வேலை நடந்திருக்கிறது.

உதகை மாவட்டத்தில் கூனூர்—கோத்தகிரி சாலையில் மைல் 0/1-இல் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் சென்ட்ரல் ரயில் நிலையத்தின் அருகில் சுரங்கப் பாதை 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் முடிந்திருக்கிறது. இது முன்பே துவங்கப்பட்டது என்றாலும் இந்த ஆண்டிலும் நம் அரசு வந்து இதற்காகப் பணம் ஒதுக்கி இதை முடித்திருக்கிறது.





தஞ்சை மாவட்டத்தில் நாச்சியார் கோவில்—திருநாகேஸ்வரம் சாலையில் அரசலாற்றின் குறுக்கே 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டம்புதூர்—மாவிலைபட்டி சாலையில் 0/8 மைலில் 2 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் ஒரு தாம்போதி கட்டியிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு ஒரு சுற்று சாலையை 6 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்திருக்கிறது. வேளாங் கண்ணி—வேதாரண்யம் சாலையில் 19/5–6 இல் எட்டு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு அடப்பார் பாலத்தை அமைத்திருக்கிறது. நீடூர் நாரணமங்கலம் சாலையில் 0/5 மைலில் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் பலவாறு பாலத்தை அமைத்திருக்கிறது. தென்னவக்குடி—வைத்தீஸ்வரன் கோவில் சாலையில் 0/6 இல் கூப்பிடுவனார் பாலம் 3 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதீச்சபுரம்—கூத்தாநல்லூர் சாலையில் 1/6 அரிச்சந்திர நதியில் 1 லட்சம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை—எம்பல் சாலையில் 3/8 மைலில் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு தாம்போதி கட்டப்பட் டிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மதராஸ்—திருச்சி - திண்டுக்கல் சாலை யில் 33/5 மைலில் 3 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் காட்டு மாவடி மிமிசல் சாலையில் 32/7, 45/1 இல் 3 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் தாம்போதிகள் கட்டப்பட்டிருக் கின்றன.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலை யில் அனேக சிறு பாலங்கள் அகலப்படுத்துதல் வேலையும், கெட்டிப் படுத்துதல் வேலையும் நடைபெற்றிருக்கின்றன. ஆக இப்படி 93 இலட்சம் ரூபாயில் இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

இவை அன்னியில் கட்டடங்கள் பலவற்றை இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கட்டி முடித்திருக்கிறது. அவற்றின் பட்டியலை எல்லாம் நேரம் இல்லாத காரணத்தினால் படிக்க இயலவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஒன்றுமே செய்யவில்லை என்பதாக கனம் உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கு இவை நல்ல பதிலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன.

நம்முடைய உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களும்; மற்றவர் களும் இந்தத் துறையில் இருக்கிற தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார் கள். வேலை இழப்பு அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வொர்க் சார்ஜ்ட் ஊழியர்களைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கு வொர்க் சார்ஜ்ட் ஊழியர்களை எடுத்துக்கொண்டால் நம்முடைய நெடுஞ்சாலைத்துறையில் 15,701 பேர்கள் இருக்கிறார்கள். பரம்பிக்குளம் திட்டப் பகுதியில் 1,052 பேர்கள் இருக்கிறார்கள். பொதுப் பணித் துறைப் பிரிவில் 8,322 பேர்கள் இருக்கிறார்கள். ஆக மொத்தம் 25,075 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கிட்டத்தட்ட நாலாயிரம் பேர்கள் மாநில ஊழியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மாநில ஊழியர்கள் என்ற அளவில் மாநில ஊழியர்களுக்குள்ள பென்ஷன் தவிர மற்ற சலுகைகள் எல்லாம் பெற்று வருகிறார்கள். இவர்கள் எங்களுக்கும் பென்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். இவர்களுக்கு பென்ஷனுக்குப் பதில் க்ராஜுடி கொடுக்கப்படுகிறது. மாநில ஊழி யர்களாக அல்லாதவர்கள் மாநில ஊழியர்களாக மாற்றப்படவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய மொத்த எண் ணிக்கையை மனதில் வைத்து இந்தத் திட்டத்தை ஆராய்ந்தால் கோடிக் கணக்கான ரூபாய் செலவாகும் என்பதைக் கனம் உறுப்பினர்கள் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

ஆகவே, அதை அறவே கைவிட்டுவிட்டதாக இல்லை. அதைப்பற்றித் தலைமைப் பொறியாளரை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இந்த அரசு கேட்டிருக்கிறது. ஆய்வினைத் தலைமைப் பொறியாளர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வேலையிழப்புப் பற்றிப் பேசப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பேசும்பொழுது நூற்றுக்கணக்கானவர்கள் வேலை இழந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இருக்கின்ற போஸ்ட்கள் எவ்வளவு என்பதை முதலிலே பார்க்கவேண்டும். ஜே. ஈ.-க்களை எடுத்துக் கொண்டால் அனுமதிக்கப்பட்ட மொத்த வேலைகள் நிரந்தரமான ஜே.ஈ.-க்கள் 353 ; தற்காலிகம் 949 ; நிரந்தரமும் தற்காலிகமும் சேர்ந்து மொத்தம் 1,302 போஸ்ட்கள் இருக்கின்றன. சூப்பர்வைசர் போஸ்ட்களைப் பொறுத்தவரையில் நிரந்தரமான சூப்பர்வைசர்கள் 117 ; தற்காலிகம் 317 ; ஆக மொத்தம் 434 போஸ்ட்கள். இப்பொழுதுள்ள நிலை, சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்த அலுவலர்கள் 1967 உள்பட 836 ஜே.ஈ.-க்கள் ; அவசர நிமித்தம் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஜே.ஈ.-க்கள் 126 ; ஆக மொத்தம் 962 போஸ்ட்கள்தான். ஆனால் 1,302 பேர்கள் ஜே.ஈ.-க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் மிச்சம் 300 முதல் 400 பேர்கள் வரை நியமிக்கப்படவில்லை என்றால் இங்கே சூப்பர்வைசர்களுடைய நிலையைப் பற்றியும் ஆராயவேண்டும். சூப்பர்வைசர்கள் 117 பேர்கள் நியமிக்கப்படவேண்டிய இடத்திற்கு 524 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; அவசர நிமித்தப் பகுதிக்கு 317 பேர்கள் நியமிக்கப்படவேண்டியதற்கு 338 நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 962 ஜே.ஈ.-க்களும், 862 சூப்பர்வைசர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1,302 ஜே.ஈ.-க்கள் நியமிக்கப்படவேண்டியதற்கு 962 ஜே.ஈ.-க்கள்தான் இருக்கிறார்கள் ; 434 சூப்பர்வைசர்கள் நியமிக்கப்படவேண்டியதற்கு 862 சூப்பர்வைசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜே.ஈ.-க்களைப் பொறுத்தவரையில் 962-ஐ 1,302 ஆக ஆக்கவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 400 சூப்பர்வைசர்கள் வேலையிழப்பார்கள். ஆகவே, புதிதாக ஜே.ஈ.-க்களை வேலைக்கு எடுக்காமல், 400 சூப்பர்வைசர்களைப் பரிதாபகரமான நிலைக்கு வேலையிழக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்காமல் பாதுகாப்புத் தரப்படுகிறது. 1966 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு ஆறுவது மாதம் முடிய 123 சூப்பர்வைசர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். இதைத்தான் ஒரு நாள் பட்ஜெட்டிலே பேசும்போழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். 123 பேர்கள்தான் வேலையிழந்து இருக்கிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு அவர்கள் எல்லோரும் வேலையிழக்கவில்லை. 4—7—1966-ல் காங்கிரஸ் அரசு இருந்தபோது 46 பேர்கள் வேலையிழந்தார்கள் ; 26—9—1966-ல் காங்கிரசு அரசு இருந்த பொழுதே 10 பேர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். 56 பேர்கள் அந்த அரசு இருந்த பொழுதே வேலையிழந்திருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகு 65 பேர்கள்தான் வேலையிழந்திருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகுதான் 123 பேர்களும் வேலையிழந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குச் சூடான பதிலைக் கொடுத்துவிட்டோம் என்பதற்காக நான் இந்த விளக்கத்தைத் தரவில்லை. பொதுப்பணித் துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்துவிட்டார்கள், நெடுஞ்சாலைத் துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்துவிட்டார்கள் என்று கருதுகிறார்கள், அது உண்மைக்குப் புறம்பானது என்பதை விளக்கத்தான் இதை நான் கூறுகிறேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு வந்த பிறகு வேலையிழந்தவர்கள் 12 பேர்கள்தான். இந்த 12 பேர்களுக்கும் இப்பொழுது வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 123 பேர்கள் அன்னியில் இன்னும் 36 பேர்கள் வேலையிழக்கக்கூடிய சங்கடமான நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்கள் அந்த 36 பேர்களும் வேலையிழக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று.

இதற்கு வேண்டிய வகையிலே இன்றைய தினம் நடந்த மந்திரி சபைக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. காலையிலே பேசியவர்களும் திரு. சுந்தரபாரதி அவர்களும் இதற்குத்தான் முழு உருவம்





கொடுத்துப் பேச்சைப் பேசினார்கள். பொதுப்பணித் துறையில் பொறியியல் வல்லுநர்களின் வயது நிர்ணயம் செய்யப்படுவதைப் பற்றித்தான் பேசப்பட்டது. ஓய்வு பெறும் வயது 58 என்று இருக்குமானால் புதிதாக பதவி உயர்வுகள் பெற முடியவில்லை ; அத்துடன் வேலை வாய்ப்புக்கள் உருவாகாமல் இருப்பதன் காரணமாக வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் படித்தவர்கள் வீட்டிலே இருக்கிறார்கள் அல்லது திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் இல்லாமல் இருக்கிறது, இதைப் போக்குவதற்கு இதை நன்னிலைப் படுத்துவதற்கு வயது நிலையிலே மாறுதல் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். அதைப் பற்றித்தான் நான் என்னுடைய முன்னுரையிலே ஜாடையாகக் குறிப்பிட்டேன். ஆராய்வோம் ஆராய்வோம் என்று சொல்லி நாள் கடத்தக் கூடாது என்று சொல்லப்பட்டது. நாள் கணக்கு என்ற அளவிலேகூட இல்லாமல் நாழிகைக்குள்ளேயே முடிவு வருகிறது. இன்று மாலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலே பொதுப்பணித் துறையிலே பொறியாளர்களின் பதவிக்காலம் 58 வயதுவரை என்று இருந்தது ரத்து செய்யப்பட்டுவிட்டது. அவர்களுடைய பதவிக்காலம் 55 வயது வரைதான் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் முடங்கிக் கிடந்த பதவி உயர்வுகள் இப்பொழுது ஏற்படவும், அடித்தளத்திலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

துறைமுகங்களைப் பொறுத்தவரையில் தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்க ஒப்புக்கொண்டதற்காக மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றியை நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசும்பொழுது தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி மீண்டும் மீண்டும் பேசவில்லை அதற்காக அதிகமாக பணத்தைப் ஒதுக்கவேண்டுமென்று மன்ற உறுப்பினர்கள் சார்பிலே வேண்டுகோள் விடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன என்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்களோ, அவர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள், தேவைகள், விளக்கங்கள், யோசனைகள் அவற்றையெல்லாம் அதிகாரிகள் குறிப்பெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அக்குறிப்புக்களை அவர்கள் மீண்டும் ஒருமுறை படித்து ஆராய்ச்சி செய்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றை நிறைவேற்ற இயலுமா இயலாதா என்ற குறிப்புக்களை பொறியாளர்கள் அவர்களும் செயலாளர் அவர்களும் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவிலே செயலாளர் அவர்களுக்கும் பொறியாளர்களுக்கும் நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரின் சிரிப்பு எனக்குப் புரிகிறது. வாணிப் புத்தூர் பற்றிச் சொல்லாமலே முடிக்கிறாரே என்று கேட்கிறார். இந்தப் பிரச்சினைபற்றி ?பத்துக் கேள்விகளை எழுப்பி தலைமைப் பொறியாளரின் அறிக்கையைக் கேட்டிருக்கிறேன். சுமூகமான முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறேன். யாருக்கு என்று அவர் கேட்பார்? சுமூகமான முடிவு வரும் என்று சொல்லி அந்த அளவோடு பேச்சை முடிக்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் விளக்கம் தந்தபொழுது வொர்க் சார்ஜ்டு ஸ்டாஃப் விஷயத்திலே என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்யலாம் என்று சொன்னார்கள். ரோடு காங்கிலே வேலை செய்கின்றவர்கள் மூன்று ஆண்டுக் காலம் வரை வேலை செய்தவர்களுக்கும், வொர்க் சார்ஜ்டு ஸ்டாஃபிலே உள்ளவர்கள் எல்லோருக்கும் முடியாவிட்டாலும் சில ஆண்டுகள் சர்வீஸ் உள்ளவர்களுக்காவது இந்த விஷயத்திலே முயற்சி செய்ய வேண்டும். கோவையிலே உள்ள அமராவதி வாய்க்காலிலே சிமிண்ட் காரை போட்டுச் செப்பனிடப்பட்டதாகச் சொன்னார்கள். சிமிண்ட் காரை உறுதியாக இருக்கும் என்பதால் அதைப்போன்று மற்ற வாய்க்கால்களிலும் ஏன் கையாளக் கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலில் வொர்க் சார்ஜ்டு ஸ்டாஃபைப் பொறுத்தவரையில் சர்வீசை வைத்தாவது அவர்களை மாநில ஊழியர்களாக ஆக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அதுபற்றி ஆராய்ந்து தலைமைப் பொறியாளரை அறிக்கை தரும்படி கேட்கப்பட்டிருக்கிறது. கோவை அமராவதி சிமிண்ட் காரை போல் மற்ற வாய்க்கால்களிலும் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டார்கள். மற்ற வாய்க்கால்களிலும் அப்படிச் செய்யவேண்டுமென்பதுதான் எண்ணம். நிதிநிலை காரணமாகப் படிப்படியாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான். இதிலே பாரபட்சம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அமைச்சர் அவர்கள் நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கு ஒரு டன்னுக்கு சர்க்கார் விதித்து இருக்கிற ரூபாய் 3,000 என்று சொன்னார்கள். அது நீண்டகாலத்திற்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுது 4,000 ஆகலாம் என்றும் கூறினார்கள். அதேபோன்று 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மஞ்சளாறு திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். இந்த மாநிலத்திலே 1,500 ரூபாய்க்கு அல்லது 2,500 ரூபாய்க்குள் திட்டங்கள் பல இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்துக்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உடனடியாக எடுக்கின்ற திட்டங்கள் எவை என்பது பற்றி உறுப்பினர் அவர்கள் கூறுவார்களேயானால் அவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்) :** 28-ம் எண்ணுள்ள கோரிக்கைக்கு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை வற்புறுத்தாததால் அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 28—'பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்' என்ற தலைப்பின் கீழ் ரூ.3,23,81,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்) :** 27-ம் எண்ணுள்ள கோரிக்கைக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை வற்புறுத்தாததால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 27—'பொதுப் பணிகள்—பணிகள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,06,34,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்) :** 42-ம் எண்ணுள்ள கோரிக்கைக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை வற்புறுத்தாததால் அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 42—'பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,53,22,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இராம. அரங்கண்ணல்) :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 25—3—1968, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

* 113. Notification issued with G.O. Ms. No. 3417, Home, dated the 19th December 1967, making an amendment to the Madras Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79–104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated, the 30th January 1957 as subsequently amended. [*Laid on the Table of the House under section* 10(3) *of the Madras Cinemas (Regulation) Act*, 1955 (*Madras Act IX of* 1955).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 72. Notification issued with G.O. Ms. No. 1733, Revenue, dated the 4th October 1967, exempting from payment of stamp duty in respect of the instruments executed by, or on behalf of, or in favour of the United Nations Children's Fund under Indian Stamp Act. 1899 (Central Act II of 1899).

* 73. Notification issued with G.O. Ms. No. 2087, Revenue, dated the 28th November 1967, exempting from levy of stamp duty in respect of the mortgage deed executed by the Madras State Electricity Board for taking loan from the Life Insurance Corporation under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

* 74. Notification issued with Memorandum No. 94291 VI/66-4, Revenue, dated the 5th October 1967, making an amendment to the Indian Stamp Rules, 1925, issued in the Notification of the Government of India, Finance Department (Central Revenues) Simla No. C 63 Stamps/25, dated the 5th May 1925 as in force in the State of Madras.

† 75. A Review on Industrial Development in Madras State 1967–68 (Tamil).

† 76. A Review on the Progress made in the Handloom Industry (English).

† 77. A Review on Irrigation in Madras State 1967-68 (English).

† 78. A Review on Road Development and Building Progress in Madras State, 1967–68 (English and Tamil).

† 79. A Review on the Progress made in the Handloom Industry (Tamil).

‡ 80. A Review of the Working of Minor Ports in Madras State, 1967–68 (Tamil).

* Laid on the Table of the House on 22nd March 1968.
† Despatched to Members on 21st March 1968.
‡ Despatched to Members on 22nd March 1968.



## இணைப்பு I.

[..520-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ்நாட்டின் பாசன வசதிகள்

### ஆய்வுரை 1967–68.

இவ்வாய்வுரை, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னர் கழிந்த இரண்டாவது ஆண்டிற்கு உரியதாகும். 1967–68 இறுதிவரை பாசன வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் கீழே சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளது. நான்காவது திட்டத்திற்கான வேலைத் திட்டங்களின் மீது மேற்கொண்ட செயல்களும் இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

### முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் 21·95 லட்சம் ஏக்கர் நிலம் பெரும் பாசனத் திட்டங்களின் கீழ்ப் பாசன வசதி பெற்றது. முதலாவது திட்டக்காலத்தில் 9 புதிய பாசன வேலைகள் தொடங்கப்பட்டன. இவற்றுல் 1·32 லட்சம் ஏக்கர் பரப்புள்ள ஆயக் கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 1·7 லட்சம் ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது 1·2 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி நிலையாக்கப் பட்டது. முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது பாசனத் திட்டங் களுக்கென முறையே ரூ. 20·15 கோடியும், ரூ. 14·45 கோடியும் செல விடப்பட்டன.

### மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைத் தவிர, 9 வேலைத் திட்டங்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இவற்றில் பாலாறு அணைக்கட்டிற்கும், கால்வாய்களுக்கும் மேம்படுத்தும் பணியும், சாத்தனூர்த் திட்டம் இரண்டாம் நிலைப் பணியும் முற்றுப்பெற்று அவற்றின் பயன்களும் பெறப்பட்டன. கோமுகி நதித் திட்டமும் முடிவுற்று 1966, செப்டம்பரில் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது.

சித்தாறு-பட்டணங்கால் திட்டம், மணிமுக்தா நதித் திட்டம் ஆகிய பணிகளும் நல்லமுறையில் நிறைவேறி வருகின்றன. இராம நதி, கடானு நதித் திட்டங்களுக்கு 1966–67 ஆண்டு இறுதியில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. நடப்பாண்டில் இவற்றின் முன்னேற்பாட்டுப் பணிகள் நிறைவேற்றபபட்டு வருகின்றன. மஞ்சளாறு திட்டம், ஐந்தாண்டுத் திட்டப் பணியினின்றும் நீக்கப்பட்டு, திட்டத்தின்கீழ் வராத பணியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டத்திற்குத் திட்ட ஆணைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத் திற்கு இந்த ஆண்டு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மூன்றுவது திட்டத்தில் பெரும் பாசனத் திட்டத்திற்காக ரூ. 27·42 கோடி ஒதுக்கப் பட்டது; ரூ. 31·28 கோடி செலவாயிற்று.

[1968 மார்ச் 23

1967-68 முடிய மூன்றுவது திட்டத்திலிருந்து தொடர்ந்து செயல்படும் டங்கள் குறித்த முன்னேற்றமும், 1968-69-ம் ஆண்டிற்குரிய வேலைத் டமும் கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்.

| (1) | பாசனம். (2) | நீர் மின்சாரம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்) | |
| வேலைத் திட்டத்திற்கான செலவு. | 37,00·00 | 21,85·00 | 58,85·00 |
| இரண்டாவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு. | 426·71 | .. | .. |
| மூன்றுவது திட்டத்தில் செய்யப் பட்ட செலவு (1961-66). | 26,21·16 | .. | .. |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 823·06 | .. | .. |
| 1966-67-ல் செய்த செலவு .. | 312·84 | .. | .. |
| 1967-68 திருத்த மதிப்பீடு .. | 250·71 | .. | .. |
| 1967--68 இறுதி வரை மொத்தச் செலவு. | 36,11·42 | .. | .. |
| 1968-69 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 206·34 | .. | .. |

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் பன்னோக்கப் பெருந் திட்டமாகும். இது இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டதாகும். இத் திட்டம் மூன்றுவது திட்டக் காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வந்தது. நான்காம் திட்டத்தில் இது எல்லா வகைகளிலும் முற்றுப் பெறும். இத்திட்டத்திற்கு ரூ. 58·85 கோடி செலவாகுமென மதிப்பிடப் பட்டுளளது. இத் திட்டத்திஞல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2·40 லட்சம் எக்கர் பரப்புள்ள நிலத்திற்குப் பாசன வசதி கிடைப்பதுடன், தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் பாலாறு, ஆளியாறு ஆகியவற்றின் கீழ் சுமார் 30,000 எக்கர் பரப்புள்ள பழைய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி மேலும் கிடைக்கும். இத் திட்டத்திலுள்ள நான்கு மின் நிலையங்களிலுமாகச் சேர்த்து 185,000 கிலோவாட் அமைப்புத் திறனுள்ள மின் சக்தி உற்பத்தி செய்யப்படும்.

சார்புடைய இரு மாநில ஆறுகளை இரண்டு மாநிலங்களின் நலன்களுக் காகப் பயன்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாதலால், அண்டை மாநிலமான கேரளத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வது மிகவும் தேவையானது. கேரள அரசாங்கம் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கியதால், நீராறு, தேக்கடி ஆறுகளைப் பயன்படுத்தும் முறை தவிர இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏனைய பெரும்பாலான பணிகள் குறித்து ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வுடன்பாட்டின்போது கேரள அரசு அளித்த இனிய ஒத்துழைப்பிற்காக அதற்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இவற்றைப் பயன்படுத்துவது குறித்து உரையாடல் கள் நடந்து வருகின்றன.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும்போதே, படிப்படியாக உடனுக் குடன் பயனுக்குக் கொண்டு வந்துள்ளதே இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகும் ; அதாவது திட்டம் முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்படும் வரை காத்திராமல், பகுதிப் பணி முடிவுற்றதும் ஏற்பட்ட பாசனத் திறன் உடனடியாக பயன்படுத்தப்படுகிறது. ஆளியாறு அணை, பரம்பிக்குளம்



1968 மார்ச் 23]

அணை, தூணக்கடவு அணை, சர்க்கார்பதி மின் நிலையம், திருமூர்த்தி அணை, தண்ணீரை எடுத்துச் செல்வதற்கான இடை இணைப்பு ஏற்பாடுகள் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முன்னூற்று நாற்பத்தைந்து அடி உயரமுள்ள சோலையாறு அணை (இதுவே தமிழ்நாட்டிலுள்ள மிக உயர மான அணையாகும்) திட்டமிட்டபடியே நிறைவேறி வருகிறது. 1968 ஜூனில் இதில் தண்ணீர் திருப்பிவிடும் நிலை ஏற்படும். சோலையாறு தண்ணீர் திருப்பி விடப்பட்டவுடன், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் முக்கிய வேலைப் பகுதி முடிவடைந்து விடும். நீராறு, தேக்கடி தண் ணீரைப் பயன்படுத்தும் வகை குறித்துக் கேரள அரசாங்கத்துடன் உடன் பாடு ஏற்பட்டவுடன், இந்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றி முடிக்கப்படும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் 1967-ம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவு பெய்தது. ஆனல் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது. எனவே தான், பரம்பிக்குளம்-ஆளி யாறு திட்ட நீர்த்தேக்கங்களில் போதிய அளவு நீர் இல்லை. என்றுலும், வந்து சேர்ந்த நீரை வைத்துக்கொண்டு, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டில் 1,48,000 எக்கர் நிலத்திற்கு 1967-ம் ஆண்டில் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. கீழே காட்டியுள்ளபடி 63,326 எக்கர் பரப்புள்ள நிலம் மட்டுமே இப்பாசன வசதியைப் பயன்படுத்திக்கொண்டது.

| கால்வாயின் பெயர். | பாசனம் அனுமதிக்கப் பட்ட பரப்பளவு. | 1967 டிசம்பர் வரை கால்வாய் நீர் பயன் படுத்தப் பட்ட பரப்பளவு. |
|---|---|---|
| | எக்கர். | எக்கர். |
| 1 பொள்ளாச்சிக் கால்வாய் .. .. .. | 23,378·93 | 8,389·29 |
| 2 வேட்டைக்காரன்புதூர்க் கால்வாய்— | | |
| மண்டலம் I .. .. .. .. | 5,890·70 | 2,620·43 |
| மண்டலம் II .. .. .. .. | 5,455·34 | 2,454·81 |
| 3 ஆளியாறு கிளைக் கால்வாய் .. .. | 4,592·66 | 699·35 |
| 4 சேதுமடைக் கால்வாய் .. .. .. | 4,971·33 | 383·44 |
| 5 பரம்பிக்குளம் தலைக்கால்வாய்— | | |
| 9/5 மைல் வரை .. .. .. .. | 26,359·16 | 20,024·56 |
| 9/5 மைல் முதல் 15/5 மைல் வரை .. | 19,014·10 | 10,957·25 |
| 15/5 மைல் முதல் 27/5 மைல் வரை .. | 40,460·09 | 8,762·63 |
| 6 உடுமல் பேட்டைக் கால்வாய்— | | |
| 9/5 மைல் வரையில் .. .. .. | 7,477·27 | 4,608·12 |
| 9/5 மைல் முதல் இறுதிப் பகுதி வரையில்.. | 10,464·8 | 4,425·87 |
| மொத்தம் .. | 148,064·46 | 63,325·75 |

எனினும் உப்பாறு நீர்த் தேக்கத்தின் கீழ் 1,500 எக்கர் ஆயக் கட்டில் விளைந்துவரும் பயிர்களுக்கு 1968 பிப்ரவரியில் சிறப்புப் பாசன வசதி அளிக்கப்பட்டது. மேற்சொன்னவற்றைத் தவிர; தமிழ் நாட்டிலும்

கேரள மாநிலத்திலும் பாலாற்றின் கீழும் ஆளியாற்றின் கீழும் சுமார் 30,000 ஏக்கர் பரப்புள்ள தற்போதைய பழைய ஆயக்கட்டுக்கும் பாசன வசதி வழங்கப் பட்டது. தண்ணீர் தட்டுப்பாடு மிகுதியாய் இருந்த சமயத்தில் கேரளத் தில் ஆளியாற்றின்கீழ் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்கு உரிய காலத்தில் போதிய அளவிற்கு நீர் வழங்கியதை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த இரு மாநிலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகவும், நாட்டு நலனில் அக்கரை காட்ட வும் அவ்வாறு செய்யப்பட்டது. வரையறுத்த அளவிற்கே நீர் கிடைத்தா லுங்கூட, அதை நாட்டமுடனும், நியாயமான அளவிற்கும் வழங்கி, முழு ஆயக்கட்டிலும் விளைந்து வந்த பயிர்கள் முதிர்ச்சியடைவதற்கு வகை செய்யப்பட்டது. வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை போன்ற பல துறைகள், முறையான ஆயக்கட்டு மேம்பாடு குறித்த பணியில் இணை ந்து செயலாற்றுவதற்கென, மாநில அளவில் செயல் இணைப்பு வாரியம் ஒன்றையும் திட்ட அளவில் ஒரு பயன்பாட்டுக் குழுவையும் அரசாங்கம் அமைத்துள்ளது. அதற்கு முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தலை வராவார். பயிர் வகையை விருப்பம்போல் தெரிந்தெடுப்பது, கால்வாய் நீரைப் பயன்படுத்திப் பயிருக்குப் பாசன வசதி செய்வது, உரங்களைப் பயன்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொண்டு பாசனப் புன்செய்ப் பயிர்களைப் பயிரிடுவது குறித்து உழவர்களுக்கு விளக்கும் பொருட்டு, வேளாண்மைத் துறை துணை இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் 30 செய் முறை விளக்கப் பண்ணைகளை அரசாங்கம் துவக்கியுள்ளது. மேலும், வேளாண்மை மறு கடனுதவிக் கழகத்தின் உதவியுடன், திட்டப்பகுதி உழவர்களுக்குக் கடன்கள் வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அத் திட்டத்தின் கீழ் நிலங்களைப் பண்படுத்தல், விதைகளையும் உரங்களையும் எருக்களையும் வாங்குதல் முதலிய பணி களுக்கென ஒரு ஏக்கருக்கு ரூ. 600 வீதம் அந்த உழவர்களுக்குக் கடன் வழங்கப்படும். அத் திட்டம் செயலில் உள்ளது. பாசனத்துக்கு வகை செய்யப்பட்ட பரப்பளவுக்கும் திட்ட நீரைக் கொண்டு பாசனம் அளிக்கப்பட்ட பரப்பளவுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நீக்க, திட்டப் பயன்பாட்டுக் குழு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

(2) கோமுகி நதித் திட்டம்.

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| மொத்தச் செலவு .. .. .. .. .. .. | 125·00 |
| மூன்றுவது திட்டச் செலவு (1961–66) .. .. .. | 109·75 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | 1·03 |
| 1966–67-ல் செலவு .. .. .. .. .. | —0·46 |
| 1967–68 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 1·62 |
| 1967–68 இறுதி வரை மொத்தச் செலவு .. .. .. | 110·91 |
| 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 0·50 |

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கோமுகி நதியில் 56 கோடி கன அடி கொள் அளவு கொண்ட ஒரு நீர்த் தேக்கத்தை அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் 5,000 ஏக்கர் புதிய பரப்பளவு பாசன வசதி பெறும். இத் திட்டத்தின் கீழ் உள்ள இறுதி வேலையினங்கள் 1967–68-ல் நிறைவேற்றப்பட்டன; 5,000 ஏக்கர் பரப்பளவு முழுவதும் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதில் 3,200 ஏக்கர் நிலங்கள் பாசன நீரைப் பயன்படுத்தின.





(3) சித்தாறு-பட்டணங்கால் திட்டம்.

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| மொத்த திருத்தச் செலவு .. .. .. .. .. .. | 7,34·88 |
| மூன்றுவது திட்டச் செலவு (1961–66) .. .. .. | 2,05·35 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | 5,29·53 |
| 1966–67-ல் செய்த செலவு .. .. .. .. .. | 1,05·18 |
| 1967–68-ல் திருத்த மதிப்பீடு .. .. .. .. | 1,05·00 |
| 1967–68 முடிய மொத்தச் செலவு .. .. .. .. | 4,15·53 |
| 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 95·00 |

பேச்சிப்பாறை அணைக்குக் கீழ், கோதையாறுக்குள் விழும் இரு சிற்றாறுகளின் குறுக்காக இரு சிறு நீர்த்தேக்கங்களை அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போதுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் முழு நீர்த்தேக்க மட்டத்தை உயர்த்தி, அவற்றின் கொள் அளவைக் கூடுதலாக்குவதும் இத் திட்டத்தின் நோக்கம் ஆகும். பட்டணங்கால் கால்வாய் எனப்படும் ஒரு புதிய கால்வாயை வெட்டவும் திருப்பரப்பு கலிங்கலின் இடது, வலது பக்க வாய்க்கால்களை விரிவுபடுத்த வும் திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்திலுள்ள 17,000 ஏக்கர் வறண்ட நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென நீலப்பாறைக் கால்வாயிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் வெட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில், 15,000 ஏக்கர் இரு போகப் பரப்பளவும் (மொத்தப்பரப்பளவு 30,000 ஏக்கரா) திருநெல் வேலி மாவட்டத்தில் 17,000 ஏக்கராவும் புன்செய் பயிரிடுவதற்கென இத் திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும். இத் திட்டத்தின் செலவு, பலன் குறித்த விகிதாசாரம், 5 சத வீத வட்டி வீதத்தில் 1·81, 10 சத வீத வட்டி வீதத்தில் 1·09 ஆகும். சித்தாறு I-ம் அணையைப் பொறுத்த வரையில், கல்லணைக்கான மண் வேலை, மிகுதி நீர் ஓடும் பாதையை வகுத்தல், பாசன மதகுகளைக் கட்டுதல், ஆற்று மதகுகளைக் கட்டுதல்-முதலிய வேலைகள் நல்ல முறையில் நிறைவேறி வருகின்றன. சித்தாறு II-ம் அணையைப் பொறுத்த வரையில், மண் அணை, ஆற்று மதகு ஆகிய வற்றை அமைக்கும் வேலை நடந்தேறி வருகின்றது. இணைப்புக் கால் வாய் அமைத்தல், பங்கீட்டுக் கால்வாயை குடைந்து அவற்றின் கரை களுக்குக் காரை பூசுதல், பேச்சிப்பாறை அணையை உயர்த்தி வலுப்படுத்து தல், பேச்சிப்பாறை அணையின் பின்புறம் கசிவு நீர் வடிகால் கட்டுதல், பேச்சிப்பாறை அணையின் உபரி நீர் மதகில் உபரி நீரினை வெளியேற்றப் பொறி மதகு ஒன்றைக் கட்டுதல் முதலிய ஏனைய வேலைகள் நல்ல முறை யில் நிறைவேறி வருகின்றன.

(4) புதிய திட்டங்கள்.

(அ) மூன்றுவது திட்டத்தைச் சேர்ந்த மணிமுக்தா நதித் திட்டம், இராம நதித் திட்டம், கடானு நதித் திட்டம் ஆகியவற்றை மூன்றுவது திட்டத்தில் நிறைவேற்ற எடுத்துக் கொள்வதற்கு இயலவில்லை. அவற்றிற்கு 1966–67-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம், நான்காவது திட்ட நிதி ஒதுக்கம், அவற்றின் விவரம், 1968-69-க்கான நிதி ஒதுக்கம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) மணிமுக்தா நதித் திட்டம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| மொத்தச் செலவு .. .. .. .. .. .. | 1,00·00 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | 1,00·00 |
| 1966–67-ல் செலவு .. .. .. .. .. | 20·61 |
| 1967–68 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 45·00 |
| 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 34·00 |

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள மணிமுக்தா நதியின் குறுக்கே 72 கோடி 80 லட்சம் கன அடி கொள் அளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதும், வலது பக்கத்தில் 7½ மைல் நீளமுள்ள கால்வாயை வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது பாசனம் பெறும் சுமார் 250 ஏக்கருக்கு பாசன உறுதி அளிக்கவும் 4,000 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலமாக மாற்றவும் இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1966 ஜூன் திங்களில் இத் திட்ட நிறைவேற்றத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது ; இத் திட்டம் நன்கு முன்னேறி வருகிறது.

### (ii) இராம நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மொத்தச் செலவு .. .. .. .. .. | 1,01·61 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. | 1,01·61 |
| 1966–67-ல் செலவு .. .. .. .. .. | 0·10 |
| 1967–68 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 10·00 |
| 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. | 10·00 |

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரவருணியின் கிளையாகிய இராம நதியின் குறுக்கே 15 கோடி கன அடி கொள் அளவு நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதும் புதிய கால்வாய் ஒன்றை அமைப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றின் மூலம் பாசனம் பெறும் தற்போதுள்ள 4,170 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன உறுதியளிப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 500 ஏக்கர் புதிய நிலப்பரப்புப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வரப்படும் ; ஆனால், இந் நிலங்களில் அக்டோபர்-பிப்ரவரி பருவத்தில் ஒரே ஒரு போகம் மட்டும் பயிரிடப்படுவதற்கு நீர் வழங்கப்படும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட 1966 நவம்பரில் அனுமதி வழங்கப்பட்டது. 1967–68-ல் தொடக்க வேலைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. 1968–69-ல் இத் திட்டம் குறித்த வேலைகள் விரைவாக நடக்கும்.

### (iii) கடானு நதித் திட்டம்.

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| மொத்தச் செலவு .. .. .. .. .. | 1,63·91 |
| நான்காம் திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | 1,63·91 |
| 1966–67-ல் செலவு .. ... .. .. .. | 0·10 |
| 1967–68 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 9·00 |
| 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. | 10·00 |

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பான்குளத்திலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் (தாமிரவருணியின் கிளை) கடானு நதியின் குறுக்கே 35 கோடி கன அடி நீர் கொள்ளும் நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவது இத் திட்டத்தின் நோக்கமாகும். மேற்படி ஆற்றின் உபரி நீரைச் சேமிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றினால் பாசனம் பெறும் தற்போதுள்ள 7,112 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்திற்குப் பாசன உறுதியளிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இரண்டு பருவங்களிலும் கூடுதலாக 1,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்தின்கீழ்க் கொண்டுவருவதற்கும் இத் திட்டம் வகை செய்கின்றது. இத் திட்டத்திற்கு 1967, ஜனவரித் திங்களில் ஒப்புதல் வழங்கப்பட்டது. 1967–68-ல் தொடக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் இப்பணி இன்னும் விரைவாக நிறைவேற்றப்படும்.



**(ஆ) வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல்.**—வைகை ஆற்றிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட வாய்க்கால்களின் மூலம் 132,000 ஏக்கர் நிலம் கொண்ட 414 ஏரிகளுக்கு நீர் பாய்கின்றது. இவற்றில் பல கால்வாய்களுக்குத் தலை மதகுகள் இல்லாததால், நீர் பெருகும் காலங்களில் கட்டுப்படுத்த முடிவதில்லை. இவை முன்னாள் ஜமீன்தாரிப் பகுதியில் இருந்ததால், நன்முறையில் பேணப்படவில்லை. ஆகவே, எல்லாக் கால்வாய்களுக்கும், ஏரிகளுக்கும் போதுமான அளவு தண்ணீர் விட, வைகை ஆற்றில் இரண்டு மதகுப் பலகைகள் அமைத்து அதன் இரு பக்கங்களிலும் கால்வாய் அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு ரூ. 395 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள 95,882 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன உறுதி அளிப்பதுடன், எஞ்சியுள்ள 13,900 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன இணைப்பு அளிக்கவும் இத் திட்டம் வகை செய்கின்றது. இத் திட்டத்தின் "பயன்-செலவு விகிதாசாரம்" 5 சத வீத வட்டிக்கு 2·53 ஆகவும், 10 சத வீத வட்டிக்கு 1·51 ஆகவும் நிற்கிறது. நான்காம் திட்டத்திலுள்ள வேலைத் திட்டத்திற்கு ரூ. 300 லட்சம் தொகையும், 1968–69-ம் ஆண்டிற்கு ரூ. 1·00 லட்சம் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**(இ) வெள்ளத் தடுப்புப் பணியும், கடல் அரிப்புத் தடுப்புப் பணியும்.**—நான்காவது திட்ட வரைவில் இத் திட்டங்களுக்காக முறையே ரூ. 30 லட்சமும், ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வெள்ளத் தடுப்புப் பணி, கடல் அரிப்புத் திட்டங்கள் பற்றிய ஆய்வு வேலை மேற்கொள்ளப்பட்டு, இந்த நிதி ஒதுக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளத்தக்க திட்டங்கள் வகுக்கப்படும்.

1968–69, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 357·56 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறுப் பாசனச் சிறப்புத் திட்டம்.**—விரைவில் பயன் தருபவையும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 15 லட்சத்திற்கும் குறைவாகச் செலவாகக்கூடியவையுமான சிறு பாசனப் பணிகளை மேற்கொள்ள இத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அடியிற்கண்ட வகையைச் சேர்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(i) நீண்ட காலமாகக் கவனிக்கப்படாமல் இருந்த அல்லது உடைப்பெடுத்திருந்த ஏரிகளைச் செப்பனிட்டு முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வருதல் ;

(ii) புதிய ஏரிகள் வெட்டுதல், மண் அடித்துவிட்ட வாய்க்கால் ஊற்றுக்களைப் புதுப்பித்தல் அல்லது ஆறுகளிலிருந்து பிரிந்து போகும் வெள்ளக் கால்வாய்களில் மண்ணடித்திருப்பின மணலை அகற்றுவதன் மூலம் அக்கால்வாய்களைப் புதுப்பித்தல் ;

(iii) பாசன ஏரிகளுக்கு அதிகப்படி நீர் வழங்குவதற்காக வடிகால் கால்வாய்களுக்குக் குறுக்கே அல்லது ஆறுகளின் குறுக்கே ஆற்று நீரைத் திருப்புவதற்கான வழிகளை அமைத்தல் ;

(iv) உப்பங்கழிகளினால் பாதிக்கப்பட்டவையும் கடற்கரை அருகே அமைந்துள்ளவையுமான சதுப்பு நிலங்களில் தக்க வடிகால் வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் இச் சதுப்பு நிலங்களைப் பண்படுத்துதல் ;

(v) ஆறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கான திட்டம் ;

(vi) கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் குளங்களை வெட்டுதல் ; நிலத்திற்கடியில் 3,000 அடிக்குள் அமைந்துள்ள நீர் மட்டத்தை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும் ;

(vii) ஓடைகளுக்குக் குறுக்கே புதிய அணைக்கட்டுகளைக் கட்டுதல்.

தற்போது இத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை பாசனத் தலைமைப் பொறியாளரும் உணவு உற்பத்தி மேற்பார்வை பொறியாளரும் மேற்கொண்டுள்ளனர். பாசனத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற

பொதுவானதொரு நிறுவனம் அமைக்கப்பட்டு வருகிறது. சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் அனைத்தும் பாசனத் தலைமைப் பொறியாளரின் அதிகாரத்தின் கீழ் விரைவில் வரும்.

மூன்றாவது திட்டத்தில், இத் திட்டத்தின் கீழ் ரூ. 800 லட்சம் செலவிட வகை செய்யப்பட்டது. இதனால் 4·70 லட்சம் ஏக்கர் பயனடைந்தது. ஆனால், இப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 1,113·99 லட்சம் முதலீடு செய்யப்பட்டது. இத் திட்டங்களினால் மொத்தம் 5·46 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பாசனம் பெற்றன. இவற்றில் நன்செய்ச் சாகுபடியின்கீழ்க் கொண்டு வரப்படக்கூடிய 1·35 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள புதிய நிலங்களும் அடங்கும். இதனால் 1·21 லட்சம் டன் கூடுதலாக உணவு உற்பத்தி கிடைக்கும்.

இம்மாநில அரசாங்கம் வகுத்துள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 1,300 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 2.94 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும். 1·24 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள புது நிலங்கள் பயன் பெறும். 1966–67–ல் ரூ, 326·44 லட்சம் செலவிடப்பட்டது. இப்பாசனத் திட்ட வேலைகளினால் 73·909 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது. 23,059 ஏக்கர் பரப்பளவுள்ள புதிய நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 3,416 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் நீரில் மூழ்கி விடுவதினின்றும் பாதுகாக்கப்பட்டன. இத்திட்டங்களினால் 23,004 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் கிடைத்தது. 1967–68–ல் 527 சிறு பாசனச் சிறப்புத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டன. மொத்தம் 2,732 பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சிறு பாசனச் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் முக்கியமான பணிகளின் பட்டியல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது, 1–ம் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. 1967–68–ம் ஆண்டிற்கு ரூ. 247·61 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 223·10 லட்சம் 1967–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி வரை செலவிடப்பட்டுள்ளது. 30,349 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 12,714 ஏக்கர் பரப்பளவுள்ள புதிய நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 595 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் நீரில் மூழ்கி விடுவதினின்றும் பாதுகாக்கப்பட்டன. இப்பணிகளினால் 10,211 டன் கூடுதலாக உணவு உற்பத்தித் திறன் கிடைத்தது.

1968–69–ம் ஆண்டிற்கு ரூ. 253·34 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கால அளவில் 580 பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளினால் 83,500 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பயனடையும். இதில் 21,500 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறுபவையாகும்.

முன்னாள் ஜமீன்தாரி நீர்நிலைகள் 14,400–ல் இதுவரை ஏறத்தாழ 5,500 பாசன வாயில்கள் செப்பனிடப்பட்டுள்ளன. தற்போது செயல்படும் வேகத்திலேயே இப்பணி நிறைவேற்றப்படின், ரயத்துவாரி நீர் நிலைகள் அனைத்தையும் செப்பனிட ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மேல் ஆகும். முன்னாள் ஜமீன் நீர் நிலைகள் அனைத்தையும் செப்பனிட 35 ஆண்டுகள் ஆகும். இப்பணிகள் நிறைவேற்றப்படும் விரைவினை அதிகரிக்க அரசாங்கம் ஆவலாக உள்ளது. நீர் நிலைகள் அனைத்தையும் குறுகிய கால அளவுக்குள் பண்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும். இவ்வேலைத் திட்டத்தினை விரைவாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்துவது இனி கிடைக்கப்போகும் மத்திய உதவியினைப் பொறுத்ததாகும்.

**தூர் எடுத்துச் செப்பனிடுதல்·**—மண் மேடிட்டுப் போய்க் கொள்திறனை இழந்துள்ள ஏரிப் படுகைகளில் தூர் எடுப்பதற்கும் அத்தகைய ஏரிகளின் முழு ஏரி மட்டம் அளவிற்குக் கொள் அளவை உயர்த்துவதற்கும்



இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இழந்துவிட்ட அரை மடங்கு கொள்திறன் தூர் எடுப்பதன் வாயிலாகவும் எஞ்சிய அரை மடங்கு ஏரியின் முழு மட்டத்திற்குக் கொள் அளவை உயர்த்துவதன் காரணமாகவும் மீட்கப்பட முடியும். தேர்ந்தெடுத்த மாவட்டங்களில் சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், இப்போது மாநிலம் முழுவதிலும் செயலில் உள்ளது.

மூன்றாம் திட்டக் காலத்தில், ரூ. 108·05 லட்சம் செலவில் 2,039 ஏக்கர் புதிய நிலப் பகுதி பயிர் விளைச்சலின்கீழ் கொண்டுவரப்பட்டதுடன், ஏரி எதிர்வாய் நிலம் 1,038 ஏக்கர் செப்பனிடப்பட்டது. இதன் மூலம் 1,281 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழியேற்பட்டது.

ஏரி எதிர்வாய் நிலம் 1,250 ஏக்கர் செப்பனிடப்படவும், 2,500 ஏக்கர் புதிய நிலப் பகுதிக்குப் பயன் விளைவிக்கவும் ரூ. 60·00 லட்சம் செலவிட நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் வகை செய்கிறது. இதனால் 1,562 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகையேற்பட்டுள்ளது. 1966–67–ல், ரூ. 21·09 லட்சம் செலவில் 45 ஏக்கர் ஏரி எதிர்வாய் நிலம் செப்பனிடப்படுவதும் 174 ஏக்கர் புதிய நிலப் பரப்பு பயிர் விளைச்சலின்கீழ் கொண்டுவரப்படுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 98 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழியேற்பட்டுள்ளது. 1967–68–ம் ஆண்டுக்கு ரூ. 8·14 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், 1967–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி வரையில் ரூ. 9·04 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. அறுபத்தியேழு ஏக்கர் எதிர்வாய் நிலத்திற்கும் 260 ஏக்கர் புதிய நிலப் பகுதிக்கும் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 147 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழியேற்பட்டுள்ளது.

1968–69–ம் ஆண்டில் ரூ. 7·29 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 295 ஏக்கர் ஏரி எதிர்வாய் நிலத்தைப் பண்படுத்துவதற்கும், 575 ஏக்கர் புதிய நிலப் பரப்பை பயிர் விளைச்சலின் கீழ் கொணரவும், 12 பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது ; இதனால் 360 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி பெருக வழியேற்பட்டுள்ளது.

### வடிமுனை குழாய்க் கிணறுகள்.

கடந்த காலத்தில், பல பெரிய, நடுத்தர, சிறு பாசனத் திட்டப் பகுதிகளில் பயிர் வளர்ச்சியடையும் பருவத்தில் தண்ணீர் போதுமான அளவுக்குக் கிடைக்காமல் பெருமளவு பற்றுக்குறை இருந்தது. நாற்றங்கால்களில் நாற்று வளர்ப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணமான அத்தகைய பெருமளவு தண்ணீர்ப் பற்றுக் குறையைப் போக்க, தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களின் நீர் கிடைக்கக்கூடிய பகுதிகளில் வடிமுனைக் கிணறுகளை வெட்டுவதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியது. இதனால் பயிர் வளரும் பருவத்தில் இக்கிணறுகள் பாசன வசதியை அதிகப்படுத்துவதுடன் பாசன நீர்ப் பற்றுக்குறையைச் சரிக்கட்டவும் முடியும். இந்த ஆண்டில் 1,732 கிணறுகள் வெட்டப்பட்டன. 1967–68-ல் 2,000 கிணறுகள் வெட்டத் திட்டமிடப்பட்டது. அவற்றை நிறைவேற்றும் பொருட்டு, மேலும் கிணறுகள் வெட்டப்படும். 1968–69-ல 2,000 கிணறுகள் வெட்டப்படும்.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

திட்டங்களினால் எவ்வளவு ஆதாயம் கிடைக்குமென்பதைக் கருதாமலும் திருப்பிக் கிடைக்கும் வருவாய் பற்றி கொள்கை அடிப்படையில் நோக்காமலும் இதற்காகும் செலவு-பெறும் பயன் என்ற வீதாசாரத்தில் மூன்றும் திட்டத்தில் வெவ்வேறு வகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய திட்டங்களினால் மறைமுகமாகப் பெறக்கூடிய பயன்களும் இவற்றினால் அப்பகுதிகள் அடையக்கூடிய பொருளாதார மேம்பாடுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன. இம்மாநிலத்தில் கிடைக்கத்தக்க பாசன நீரின் அளவில் 94 சத வீதத்தை ஏற்கனவே பயன்

படுத்திக்கொண்டது. எனவே புதிய பாசனப் பெருந் திட்டங்களையோ அல்லது நடுத்தர பாசனத் திட்டங்களையோ உருவாக்குவதற்கு அதிக வாய்ப்பில்லை. எனவே முந்தைய பாசன ஏற்பாடுகளைத் திருத்தி புதுப்பிப்பதின் அடிப்படையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட பாசனத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இதனால் பாசன வேலைகள் திறமையுடன் நடைபெறுவதுடன் பாசன வசதியும் பெருகும். இதனால் மிச்சப்படும் நீரைக்கொண்டு மேற்கொண்டு பாசன வசதியைப் பெருக்கலாம்.

நான்காவது ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் மூன்றாம் திட்டத்திலிருந்தே தொடர்ந்து செயல்படும் (1) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம், (2) சித்தாறு–பட்டணங்கால் திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கும் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மூன்றாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படாத பின்வரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்திட்டங்களாவன : (அ) இராமநதித் திட்டம், (ஆ) கடானா நதித் திட்டம், (இ) மணிமுக்தா நதித் திட்டம், (ஈ) வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல் ஆகிய திட்டங்களாகும். இன்னும் கூடுதலாக பெரியாறு கால்வாய்களை மேம்படுத்துதல், அவிஞசிப் பகுதிக்கு பாசன வசதிகள் செய்தல், பரப்பலாறு, சின்னாறு, பாலாறு—பொரந்தலையாறு ஆகிய சில இடைப்பட்ட திட்டங்களுக்காகவும், காவிரி சங்கமுகப் பகுதியில் முக்கியமான சில வடிகால் திட்டங்களுக்காகவும், நிதி வகை செய்யப்பட்டுள்ளது. வெள்ளக் கட்டுப்பாடு செய்தல், கடல் அரிப்புத் தடுத்தல், ஆகிய பாதுகாப்புப் பணிகள் குறித்தும் நாட்டம் செலுத்தப்படும்.



## ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வராத வேலைத் திட்டங்கள்.

மேற்சொன்ன திட்ட வேலைகளுடன், ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராத பல பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கொள்ளக்கூடிய திட்டங்களை ஆராயும் பொருட்டு பாசனத் திட்டச் சிறப்பு ஆய்வு வட்டம் ஒன்று செயல்படுகிறது. திட்டத்தில் சேராத சில மிக முக்கிய பாசனத் திட்டங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு. | இப்போதுள்ள நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | |
| 1 | சொர்ணவூருக்கு அண்மையில் பொன்னியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல். | 17,56,000 | வேலை நிறைவேறி வருகிறது. |
| 2 | காவிரி சங்கமுகப் பகுதியில் 123 முதல் வகுப்புக் கால்வாய்களில் தூர் எடுத்தல். | 5,00,000 | ௸ |
| 3 | காவிரி, வெண்ணாறு வடிகால்களில் களை நீக்குதல். | 1,50,000 | வெண்ணாறு கோட்டப் பிரிவில் இரண்டு கால்வாய்களிலும் கொடி விநயகநல்லூர், பில்லவனூர் பொரை வாய்க்கால், திருநகரி கால்வாய்களிலும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள கால்வாய்களில் களை வளர்ந்து வருவது கண்காணிக்கப்பட்டு வருகிறது ; அகற்ற வேண்டிய இடங்களில் அகற்றப்படும். இந்த ஆண்டு அதிக அளவில் களை வளரவில்லை. |
| 4 | பதின்மூன்று அமராவதி வாய்க்கால்களைக் புதுப்பித்தல். | 13,08,000 | பல வாய்க்கால்களில் பணிகள் 75 முதல் 90 சதவீதம் வரை முடிவு பெற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. |

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) | இப்போதுள்ள நிலை. (4) |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 5 | திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்பது தாமிர வருணி வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 23,78,000 | மொத்தம் ஒன்பது வாய்க்கால்களில் மூன்று வாய்க் கால்களில் பணி முடிந்துள்ளது. எஞ்சிய நான்கு வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட பணி 1968-69-ல் பாசனத்திற்கு நீர் விடுவது நிறுத்தப்படும். காலப் பகுதியில் முடிவுறும். கண்ணடியான் வாய்க்கால் திருநெல்வேலி வாய்க்கால் ஆகிய எஞ்சிய இரண்டு வாய்க்கால்களைப் புதுப்பிக்கும் பணி 1968-69-ம் ஆண்டுக்கு இரண்டாம் பகுதித் திட்டங்களாக அனுமதிக்கப்படும். |
| 6 | மஞ்சளாறு திட்டம் .. .. .. .. .. | 1,09,00,000 | முக்கிய கால்வாயில் எல்லாப் பணிகளும் முடிவுற்றன. சாலைக்குத் தார் போடும் பணி தவிர மண் அணை அமைக்கும் பணி முடிவுற்றது. வளைவுக் கதவுகள் அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. |
| 7 | மதுரை மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைத் தடுக்க வஞ்சியாற்றைத் திசை திருப்புதல். | 50,000 | 480 அலகு பணி வேலை செய்யத் திட்டமிடப்பட்டது. அதில் 184 அலகுகு மண் வேலை செய்து முடிக்கப் பட்டுள்ளது. கால்வாய்களின் L.S. 750 2,850 லும் மதகுகளைப புதுப்பித்துக் கட்டும் பணியும் நடந்து வருகிறது. |



1968 மார்ச் 23] **நிலநீர் ஆய்வு.**

சென்னை மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் பாலாற்றுப் பரப்பு, நெய்வேலிப் பகுதி, காவிரி சங்கமுகம் ஆகிய தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளிலும் நில நீர்வளம் குறித்து ஆய்வு செய்வதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஐக்கிய நாடுகள் சிறப்பு நிதியின் உதவியுடன் ஒப்பளிக்கப்பட்டு, 17-3-1966-ல் செயல்படத் தொடங்கியது ; இதன் ஆய்வுப் பணி மூன்று ஆண்டுகளில் முடிவடையும். இத்திட்டத்தின் பொருட்டு, ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு சுமார் 10·46 லட்சம் அமெரிக்க டாலர்கள் செலவாகு மென்றும், அதற்கு இணையாக மாநில அரசுக்கு ஏறக்குறைய ரூ. 30·55 இலட்சம் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அவை உலக வல்லுநர்க் குழு ஒன்றையும், சாதனங்களையும் அளித்துள்ளது. இப்போதுள்ள திட்டம் காவிரி சங்கமுகப் பகுதி முழுவதிலும் ஆய்வு செய்வதற்குப் போதியதாக இல்லாத காரணத்தினால் காவிரி சங்கமுகப் பகுதியில் நில நீர் ஆய்வுப் பணியை விரிவுபடுத்தும் பொருட்டு, கூடுதலாக உதவியளிக்குமாறு இவ்வரசு இந்திய அரசின் மூலமாக அண்மையில் ஐ.நா-வை வேண்டியுள்ளது. இந்த இரண்டாவது கட்டம் ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு நீடித்துச் செயல்படும்; இவ்வகையில் ஐ.நா.விற்கு 6·54 இலட்சம் அமெரிக்க டாலர்களும் மாநில அரசுக்கு ரூ. 48·44 இலட்சமும் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அண்மை யில், இந்த இரண்டாவது கட்ட திட்டத்தை நேரில் மதிப்பீடு செய்வதற்காக ஐ.நா. வளர்ச்சித் திட்ட நிறுவனம் ஐ.நா. தூதுக் குழு ஒன்றை அனுப்பி வைத்தது. இத்திட்டம் ஐ.நா. நிர்வாக மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் வைக்கப்படும். ஒரே சமயத்தில் இத்திட்டத்தின் நான்கு பகுதிகளிலும் ஆய்வுப் பணிகள் முனைப்பாகத் தொடங்கப்பட்டுள்ளன. சென்னைப் பகுதி யில் கடல் நீர் ஊடுருவதல் குறித்த நில பௌதிக ஆராய்ச்சி முடி வடைந்துள்ளது. பாலாற்றுப் பரப்பில் ஆங்காங்கே ஆய்வுக் கிணறுகள் தோண்டும் வேலையும் முடிவு பெற்றுள்ளது. திட்டப் பகுதிகளில் விமா னத்தின் மூலம் ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. விமா னத்தின் மூலமாக ஆய்வு செய்யும் பணிக்கு ரூ. 4·50 இலட்சம் செலவிட அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஐ.நா. திட்டம் செயல்படாத தெரிந்தெடுக்கப்பட்ட வேறு பகுதிகளில் பொதுப் பணித்துறையின் கீழ் செயல்படும் நில நீர் ஆய்வுப் பிரிவினால் ஆய்வு செய்யப்படும் பொருட்டு, மத்திய அரசு ஊக்கமளிக்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கும் இந்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வேலைத் திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ. 60 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் பாதியை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

1965-ம் ஆண்டு பிப்ரவரியில் ஒப்புதல் வழங்கப்பட்ட நிலநீர் ஆய்வுப் பிரிவு, இப்போது மணலியில் உள்ள சென்னை எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலைக்கும், சென்னை உர உற்பத்தித் தொழிற்சாலைக் கும் நீர் வழங்குவதற்கான உற்பத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. இந்த இரண்டு தொழில்களுக்கும் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 10 மில்லியன் காலன் நீர் வழங்குவதற்கு மேற்படி நில நீர் ஆய்வுப் பிரிவு பொறுப்பேற்றுள்ளது. கட்டுமான வேலைக்காக எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைக்கு ஒரு நாளைக்கு 0·75 மில்லியன் காலன் தண்ணீர் ஏற்கெனவே வழங்கப் பட்டு வருகிறது.

**கூவம் ஆறு மேம்பாட்டுத் திட்டம்.**

சென்னை நகரில் ஓடும் கூவம் ஆற்றைக் கடல் ஓதம் உடையதாகவும் தூய்மையானதாகவும் நீர்ப் போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் அமைக்கும் பொருட்டு, ரூ. 118·50 இலட்சம் செலவாகிற ஒரு வேலைத் திட்டத்திற்கு அரசாங்கம் கொள்கையளவில் ஏற்பளித்துள்ளது. இத்திட்டம் இரண்டு

நிலைகளில் நிறைவேற்றப்படும். இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் பின் வரும் பணிகளுக்காக ரூ. 32 இலட்சம் செலவாகும். இத் திட்டத்தின் முதல் நிலையை நிறைவேற்றும் பணி நடைபெற்று வருகின்றது.

(முதல் நிலை)

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) முகத்துவாரத்தில் கடலோர அணை கட்டுதலும் பயிற்சிப் பணிகளும். | 13·70 |
| (2) தூர் எடுத்து அவற்றை அகற்றுவது முதலிய வற்றுக்கான செலவு. | 10·30 |
| (3) கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் மணல் எடுப்புக் குழாய் நிறுவப்படுவதற்காகத் தோணித் துறை கட்டுதல். | 8·00 |
| மொத்தம் .. | 32·00 |

1967–68-ம் ஆண்டுக் காலத்தில் முதல் நிலைப் பணிகளுக்கு ரூ. 2·00 இலட்சம் செலவிடப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆற்றினை ஆழப்படுத்துதல், இதன் இரு மருங்குகளையும் அழகு படுத்துதல் ஆகியவற்றுக்கு ரூ. 56·50 இலட்சம் செலவாகிற இத்திட்டத்தின் இரண்டாவது நிலை முதல் நிலைப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப் படும்.

பருவ நிலைகள்.

1967–68-ம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை காலங் கடந்து பெய்தது. இம்மழை காவிரி, பவானி, அமராவதி, பெரியாறு, தாமிர வருணி, கோதையாறு ஆகியவற்றின் நீர் வரவுப் பகுதிகளில் வழக்கமாகப் பெய்வதை விடக் குறைவாகவே பெய்தது. மேற்படி நீர் வரவுப் பகுதி களில் வடகிழக்குப் பருவ மழைகூடப் பொய்த்துவிட்டது. இத்தகைய ஊறுபாடானப் பருவ நிலைகள் காரணமாகவே கிடைத்த நீரை காவிரிச் சங்கமுகத்திற்கும், பெரியாறு, கோதையாறு, திட்டங்களுக்கும் பகிர்ந் தளிப்பதில் இடர்ப்பாடுகள் நேரிட்டன. இதன் விளைவாகவே, நீர் வழங்கும் அளவைக் குறைக்கவும், முறை ஏற்பாட்டினை மேற்கொள்ளவும் அவசியம் நேரிட்டது.

பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலிருந்தே மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே நீர் தேங்கி இருந்த காரணத்தி னாலும், தென்மேற்குப் பருவ மழை காலங் கடந்து பெய்ததாலும், நீர்த் தேக்கம் 1967, ஜூலை 3-ம் நாளன்றுதான் அதாவது 21 நாள் காலந் தாழ்த்திப் பாசனத்திற்குத் திறக்கப்பட இயன்றது. இதன் விளை வாக காவிரி சங்கமுகப் பகுதியில் பெருவாரியான நிலப்பரப்பில் குறுகிய கால அல்லது நடுத்தரக் கால வகையைச் சேர்ந்த இரண்டே பயிர்களை விளைவிப்பதற்காக இயல்பான பயிர் முறையை மாற்றி வேறு முறை பின்பற்ற வேண்டியதாயிற்று. தென்மேற்குப் பருவ மழைக் காலத் தின் போதும் மேட்டூர் நீர்த் தேக்கம் நிறைந்து உபரி நிலை ஏற்படவில்லை. மொர்க்காராவில் காவிரி நீர் வரவுப் பகுதியில் தென்மேற்குப் பருவ மழைக் காலத்தின் போது 13 சத வீதம் குறைவாகவே மழை பொழிந்தது. நீர்த் தேக்கத்தினுள் 17 சத் வீதம் குறைவாகவே நீர் வந்து சேர்ந்தது. இந்தக் காலத்தின்போது நீர்த் தேக்கத்திற்குக் கிடைத்த நீரைக்கொண்டு பாசனத்திற்கு நீர் விடுவதை விவேகமுடனும் விழிப்போடும் முறைப்படுத்தியதன் மூலமாக குறுவையும், ஆடுதுறை 27 நெல்லும் செவ்வனே விளைவிக்கப்பட்டன.

காவிரி நீர் வரவுப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழை முற்றிலும் தவறிவிட்டது. மொர்க்காராவில் 60 சத வீதம் அளவிற்கு மழை குறைந்துவிட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நீர் வரவு 65 சத வீதம்



தறைந்துவிட்டது. இந்த நிலைமைகளின் காரணமாக, கட்டுப்பாடான அளவு ளில் முறை ஏற்பாட்டினைப் பின்பற்றி பாசனத்திற்கு நீர் வழங்கவேண்டிய தாயிற்று. பாசனம் பெறுகின்ற பகுதிகளில் நல்ல மழை பெய்த போதெல்லாம் நீர்த் தேக்கத்திலிருந்து அந்தப் பகுதிகளுக்கு நீர் விடுவ தும் நிறுத்தப்பட்டது. சம்பாப் பயிர்கள் நன்குகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டன. தாளடிப் பயிர்களைக் காக்கும் பொருட்டு 15–2–1968-ம் நாள் வரை நீடித்து நீர் வழங்கப்பட்டது. 1968–ம் ஆண்டு பிப்ரவரித் திங்களின் இறுதியின்போது விளைந்துவந்த பயிர்களுக்கு இறுதியாகப் பாசனம் அளிக்கும் பொருட்டு 14·55 அடிமட்டத்திற்கு நீர்த்தேக்கத்தை வற்றச் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வகையில் அளிக்கப்படும் நீருடன் விசை ஏற்றத்தின் மூலம் இறைத்து நீர் வழங்கவும் எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தாளடிப் பயிரை இயன்ற அளவு காப்பாற்றுவதற்குக் கூடுமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாயும் புள்ளம்பாடிக் கால்வாயும் வழக்கம்போல் ஆகஸ்டு முதல் நாளன்றே திறந்து விடப்பட்டு 15–2–1968 நாள் வரை இரண்டு மாதங்கள் கூடுதலான காலத்திற்கு நீர் வழங்கப்பட வும் அனுமதிக்கப்பட்டது. மேட்டூர்க் கால்வாயும் வழக்கம்போல் ஆகஸ்டு முதல் நாளன்றே பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டு 31–1–1968–ம் நாள் வரையிலும் $1\frac{1}{2}$ மாதங்கள் கூடுதலான காலத்திற்கு நீர் வழங்கப் படவும் அனுமதிக்கப்பட்டது.

கீழ் பவானி மையக் கால்வாயின் கீழ் உள்ள முதல்முறைப் பாசன ஆயக்கட்டிற்கும் 1–8–1967–ம் நாளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. கூடுத லாக 15 நாட்களுக்கு நீர் வழங்கப்பட்ட பின்னர் இக்கால்வாய் 16–12 1967–ம் நாள் மூடப்பட்டது. பருவ மழை தவறியதன் காரண மாக இரண்டாம் முறைப் பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்க முடியவில்லை. இருந்தபோதிலும், குரங்கன்பள்ளம் வடிகாற் பாசனத் தின்கீழ் விளைந்துவந்த பயிர்களைக் காக்கும்பொருட்டு மையக் கால்வாய் மூலம் ஏறத்தாழ 22 நாட்கள் தனிப்பட்ட வகையில் நீர் வழங்கப்பட்டது.

அமராவதி தலைக்கால்வாய், வழக்கமான நாளான, ஆகஸ்ட் திங்கள் முதல் தேதியன்று பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டது. 21–2–1968 வரையில் நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது.

பெரியாறு, கம்பம் பள்ளத்தாக்கில் இரு போகப் பயிர் விளையும் பகுதி களில் முதல் போகப் பயிருக்கு, வழக்கமான தேதிக்கு 15 நாட்களுக்கு முன்னரே, அதாவது 15–5–1967 முதற்கொண்டே நீர் வழங்க அனு மதிக்கப்பட்டது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக போதுமான அளவு நீர் கிடைக்கவில்லை. தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் பெய்த மழை அளவு வழக்கமான அளவை விட 28 சத விகிதம் குறை வாகவும், கிடைத்த நீர் அளவு வழக்கமான அளவை விட 47 சத விகிதம் குறைவாகவும் இருந்தது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெய்த மழை அளவு வழக்கமான மழை அளவை விட 50 சத விகிதம் குறைவாகவும், கிடைத்த நீர் அளவு வழக்கமான அளவை விட 47 சத விகிதம் குறைவாகவும் இருந்தது. எனவே, ஒரு போகப் பயிர் விளையும் பகுதிக்கும், பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கும் நீர் வழங்குவது ஒத்திப் போடப்பட்டது. ஒரு போகப் பயிர் விளையும் பகுதிக்கு 10–9–1967 முதற்கொண்டும், பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கு 24-10-1967 முதற்கொண்டும், நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. திருமங்கலம் தலைக் கால்வாய் 15–7–1967 அன்று பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டது. நீர் வழங்குவது நீடிக்கப்பட்ட பிறகு இந்தக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடுவது 15–1–1968 அன்று நிறுத்தப்பட்டது. பெரியாறு, வைகை நீர்த் தேக்கங்களில் தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர், இயன்ற அளவு பரப்பளவில் விளையும் பயிர்களைப் பாதுகாப்பதற்காக முழுவதும் பயன் படுத்தப்பட்டது. ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துக்கொள்ள உழவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில், பரப்பளவு முழுவதிலும் குறுவைப் பயிர் விளைவிப்பதற்காக, முன்னதாகவே 25—6—1967 முதல் நீர் வழங்குவது அனுமதிக்கப்பட்டது. ஆயக்கட்டுப் பகுதியில் இரண்டாம் போகப் பயிர் பயிரிடுவதற்காக, இயன்ற இடங்களில் நீர் வழங்கப்படுகிறது. நீர் வழங்குவது 31-3-1968 வரையில் நீட்டிக்கப்படும்.

சாத்தனூர் நீர்த் தேக்கத்தில், 12,000 எக்கர் பரப்பளவில், கூடுதலாக ஒரு பயிரை விளைவிப்பதற்காக 16-6-1967 முதல் 31 10 1967 வரையில் நீர் வழங்கப்பட்டது. 21,000 எக்கர் பரப்பளவு முழுவதும் குறுவை நெல் பயிரிடுவதற்காக 15-1-1968 முதல் நீர் வழங்கப்படுகிறது. திருக்கோயிலூர் அணைக்கட்டு அமைப்பின் கீழ், இரண்டாம் போகம் பயிரிடுவதற்காக நீர் வழங்கப்படுகிறது.

வீடூர் நீர்த் தேக்கம், சுமார் 22 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு 1967, அக்டோபர் 23-ம் நாள் அன்று பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டது. பரப்பளவு முழுவதற்கும் பாசனம் செய்யப்பட்டது.

தாமிரவருணி மைப்பில்—தென்மேற்குப் பருவ மழை தவறியதன் காரணமாக பாபநாசம் நீர்த் தேக்க நிலைமை பாசன கால ஆரம்பத்திலிருந்தே குறைவாக இருந்தது. இதற்காக மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெறப்பட்ட தண்ணீரைக் கொண்டு கார் பயிரை அறுவடை செய்வதற்காக முறையாக தண்ணீர் விடப்பட்டது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் நீர்த் தேக்கத்திற்கு போதுமான தண்ணீர் கிடைத்ததால், பிசாணப் பயிர்களுக்குத் தண்ணீர் விடுவதில் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை.

மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திற்கு, நவம்பர் திங்களின் பிற்பகுதியில்தான் போதிய அளவு தண்ணீர் கிடைத்தது. முறைப் பட்டியல், ஒதுக்கப்பட்டியல் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள ஏரிகள் அனைத்திற்கும், இந்த அமைப்பின்கீழ் சேர்க்கப்படாத 40 ஏரிகளுக்கும் 14—12—1967 முதல் நீர் வழங்கப்படுகிறது.

கோதையாறு திட்டம் வழக்கமான நாளன்று (1-6-1967) திறந்து விடப்பட்டது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக நீர்த் தேக்கத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. 1968, ஜனவரி முதல் போதுமான தண்ணீர் வழங்குவதில் இடையூறுகள் ஏற்பட்டன. அளவுடன் தண்ணீர் விடுவதன் மூலமும், முறை போட்டுத் தண்ணீர் விடுவதன் மூலமும் பாசனம் தொடர்ந்து நடைபெறுகிறது. விளையும் பயிர்களுக்கு முறையாகத் தண்ணீர் அளித்துப் பாது காப்பதற்காக அரசாங்கம் முடிந்த அளவு நாட்டம் செலுத்தி வருகிறது.

கோமுகி நீர்த் தேக்கம், 2,500 எக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்பதற்காக 1-10-1967 அன்று திறந்து விடப்பட்டது. 11-11-1967 முதல் கூடுதலாக 2,500 எக்கர் பரப்பிற்கும் நீர் வழங்கப்பட்டது.

மஞ்சளாறு நீர்த் தேக்கம், 750 எக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்பதற்காக 1-11-1967-ல் திறந்து விடப்பட்டது.

1967-ல் பருவ நிலைமைகள் பாதகமாக இருந்தபோதிலும் பாசன அமைப்புகள் எல்லாவற்றின் மூலமும் போதுமான அளவு நீர் வழங்கப்பட்டது. காவிரி கழிமுக அமைப்பின்கீழ் உள்ள தாளடிப் பயிரும், கோதையாறு, பெரியாறு, அமைப்புகளின் கீழுள்ள இரண்டாம் போகப் பயிரும் நமது கட்டுக்கு மீறிய காரணங்களினால், இறுதி நிலையில், தண்ணீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படக்கூடும்.





புயலின் காரணமாக, 1966 நவம்பரில் பெரு மழையும், சூறாவளிக்காற்றும் வீசின. பெரும்பாலும் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள பாசன அமைப்புகள் சேதமடைந்தன. உடைப்பேற்பட்ட இடங்களில் உடனடியாக சுற்றுக் கரைகளை அமைப்பதற்கும், விளைந்துவரும் பயிர்களுக்கு உறுதியாக நீர் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1967-ம் ஆண்டில் உடைப்புகளை நிரந்தரமாக அடைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. சேதமடைந்த 2,447 பாசன அமைப்புகளில், 689 உடைப்பெடுத்த ஏரிகள் குறித்தவையாகும். எஞ்சிய 1,758 பாதிக்கப்பட்ட ஏரிகள் குறித்தவையாகும். உடைப்பெடுத்த ஏரிகள் அனைத்திற்குமான பணிகளும், பாதிக்கப்பட்ட 1,283 ஏரிகள் குறித்த பணிகளும் முடிவடைந்து விட்டன. எஞ்சியுள்ள 475 பாதிக்கப்பட்ட ஏரிகள் குறித்த பணிகள் விரைவில் முடிந்துவிடும். 1967–68-ல் (டிசம்பர் 1967 முடிய) செய்த செலவு ரூ. 106·60 லட்சமாகும்.

அப்பொழுது உடைப்பெடுத்துக்கொண்ட வீடூர் அணைக்கட்டு திரும்பவும் கட்டப்பட்டு விட்டது. இந்த ஆண்டில் 23—10—1967 முதல் அதிலிருந்து பாசனத்திற்காக நீர் வழங்கப்பட்டது. இந்த அணைக்கட்டு மிகவும் குறுகிய காலத்தில் நன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த அணைக்கட்டின் கீழ் உள்ள நிலங்களுக்கு, ஒரே ஒரு பாசன காலத்திற்கு மட்டுமே தண்ணீர் விடப்படாமல் இருந்தது.

1967-ம் ஆண்டில் ராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்கள் கடுமையான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதன் விளைவாக, பல ஏரிகள் உடைப்பெடுத்துக்கொண்டன. எஞ்சியுள்ள பாசன காலத்திற்குத் தண்ணீரைத் தேக்கிக்கொள்வதற்காக, உடைப்பெடுத்த இடங்களில் சுற்றுக் கரைகள் அமைப்பதற்கு உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உடனடியாகப் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும், பாதிக்கப்பட்ட பாசன வாயில்கள் குறித்த பணிகளில் ஈடுபட்டு பாசன வாயில்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்காகவும் ரூ. 5 லட்சத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[1968 மார்ச் 23

## விவர அறிக்கை 1.

### 1967–68-ம் ஆண்டில் நிறைவேற்றப்படும் சிறுபாசனச் சிறப்புத் திட்டத்தின் முக்கிய வேலைத் திட்டங்கள்.

#### (i) பொதுப் பணித் துறை.

*தஞ்சாவூர் மாவட்டம்—*

(1) நற்பவழக்குடிக்கும் ஏனைய 11 ஏரிகளுக்கும் நீர் வழங்குவதற்காக வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ 5·05 லட்சம்.

(2) பூவனம் கிராமத்தின் எல்லைக்குள் உள்ள அக்கினியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 9·47 லட்சம்.

(3) வேளாங்கண்ணி விசையேற்றுத் திட்டம்—ரூ. 6·50 லட்சம்.

(4) ஒரத்தநாடு-ஊரையூர் விசையேற்றுத் திட்டம்—ரூ. 14·46 லட்சம்.

*சேலம் மாவட்டம்—*

(5) ஓமலூர் வட்டத்தில் சேமுமலைக்கும் சிவிலிக்கரடுக்கும் இடையே பெரியபள்ளத்தின் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 5·18 லட்சம்.

*கோயம்புத்தூர் மாவட்டம்—*

(6) சென்னம்பட்டி கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 7·65 லட்சம்.

(7) பெரும்பள்ளம் வடிகாலின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 7·90 லட்சம்.

(8) குரங்கன்பள்ளம் வடிகாலின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 8·00 லட்சம்.

(9) கோயில்புதூர் கிராமத்தின் அருகே பெரியபள்ளம் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 5·55 லட்சம்.

(10) வரபாளையம் கிராமத்தின் அருகே சந்தைப்பாளையத்தின் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 5·94 லட்சம்.

(11) வேமந்தபாளையம் கிராமத்தில் ஏரி வெட்டுதல்—ரூ. 5·46 லட்சம்.

*தர்மபுரி மாவட்டம்—*

(12) குண்டுகோட்டை கிராமத்தின் அருகே அட்டவங்காவின் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 5·77 லட்சம்.

(13) மட்டல்ப்பள்ளத்தின் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 6·52 லட்சம்.

*கன்னியாகுமரி மாவட்டம்—*

(14) அருவிக்கரை வலக்கரைக் கால்வாயையும் இடக்கரைக் கால்வாயையும் மேம்படுத்துதல்—ரூ. 5·02 லட்சம்.

(15) ஊழக்கரந்தை கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 9·39 லட்சம்.

(16) பராக்கிரமபாண்டியன் ஏரியைத் திரும்ப நன்னிலைக்குக் கொண்டு வருதல்—ரூ. 7·27 லட்சம்.

(17) கோரம்பள்ளம்-பொட்டைக்குளம் ஆகியவற்றை மேம்படுத்துதல்—ரூ. 5·17 லட்சம்.



1968 மார்ச் 23]

*திருச்சி மாவட்டம்—*

(18) லாடபுரம் கிராமத்தில் கோனேரி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுதல்—ரூ. 7·73 லட்சம்.

(19) சோபனபுரம் கிராமத்தில் ஏரி வெட்டுதல்—ரூ. 6·61 லட்சம்.

(20) தொப்பம்பட்டி கிராமத்தின் அருகே ஏரி வெட்டுதல்—ரூ. 13·86 லட்சம்.

*செங்கற்பட்டு மாவட்டம்—*

(21) லட்சுமிபுரம் கிராமத்தின் அருகே ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 8·19 லட்சம்.

(22) அன்னப்ப நாயக்கன் குப்பம் கிராமத்தின் அருகே ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 12·60 லட்சம்.

#### (ii) உணவு உற்பத்தித் துறை

*இராமநாதபுரம் மாவட்டம்—*

(1) திருவாடானை வட்டத்தில் ஹனுமந்தாநதி கிராமத்தில் மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 10·16 லட்சம்.

(2) திருவாடானை வட்டத்தில் உள்ள சிறுகணிகை ஏரிக்கும் ஏனைய 12 ஏரிகளுக்கும் நீர் வழங்குவதற்காக மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 6·40 லட்சம்.

(3) முதுகுளத்தூர், பரமக்குடி வட்டங்களிலுள்ள நீர் வழங்கும் ஏரிக்காக கூத்தங்கால் நீர் வழங்கு கால்வாயை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வருதல்—ரூ. 12·80 லட்சம்.

(4) ராஜசிங்கமங்கலம் ஏரியை மேம்படுத்துதல்—ரூ. 26·40 லட்சம்.

*திருநெல்வேலி மாவட்டம்—*

(5) ஆலந்தூர் கிராமத்தில் உள்ள காட்டாற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டுதலும் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் ஓலக்குடி ஆகிய கிராமங்களுக்காக நீர் வழங்கு வாய்க்கால் ஒன்றை வெட்டுதலும்—ரூ. 5·22 லட்சம்.

## விவர அறிக்கை II.

### ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் உள்ள பாசனத் திட்டங்களைப்பற்றிய விவரங்கள்

| தொடர் எண், திட்டத்தின் பெயர். | அணைக்கட்டிற்கு ஆன செலவு. | | அணைக்கட்டு திறக்கப் பட்ட ஆண்டு. | குறிக்கோள் அளவு. | | பாசனம் செய்யப்பட்ட பரப்பு. | | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப் பட்டது. | திருத்தப் பட்ட மதிப்பீடு. | | புதிய நிலம். | பாசன உறுதி பெறுவது. | புதிய நிலம். | பாசன உறுதி பெறுவது. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | (ஏக்கர் லட்சத்தில்.) | | | | |
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்— | | | | | | | | |
| 1 கீழ் பவானித் திட்டம் .. .. | 951·00 | 1,020·00 | 1952 | 1·95 | .. | 1·95 | .. | .. |
| 2 காவிரிச் சங்க முகப் பகுதியில் வடிகால் மேம்பாட்டு வேலைகள். | 30·00 | .. | 40,000 ஏக்கரில் வடிகால் இடர்களை போக்குவதற்காக 12 முக்கிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. எல்லா வகையிலும், எல்லாத் திட்டங்களும் முதல் திட்டத்திலேயே முடிக்கப்பட்டுவிட்டன. வடிகால் தேக்கத்தை நீக்குவதற்கும் பயிர் விளைவை அதிகரிப்பதற்கும் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதால் எந்தக் குறிக்கோள் அளவும் நிச்சயிக்கப்படவில்லை. | | | | | |
| 3 மேட்டூர் கால்வாய் திட்டம் .. .. | 244·75 | 192·91 | 1954–55 | 0·45 | .. | 0·45 | .. | .. |
| 4 மணிமுத்தாறு திட்டம் .. .. | 398·00 | 505·00 | 1958 | 0·20 | 0·83 | 0·20 | 0·83 | .. |
| 5 ஆரணியாறு திட்டம் .. .. .. | 95·22 | 105·89 | 1956 | இத்திட்டத்தின் தலைப்பு ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டதால், இதற்கு இடமில்லை. தமிழ்நாட்டில் உள்ள சுருட்டப்பள்ளி அணைக்கட்டு 1956-ல் திறக்கப்பட்டது. | | | | |
| 6 அமராவதித் திட்டம் .. .. .. | 27·231 | 329·76 | 1957 | 0·21 | 0·32 | 0·21 | 0·32 | .. |
| 7 வைகை திட்டம் .. .. .. | 300·00 | 330·00 | 1959 | 0·218 | .. | 0·218 | .. | .. |
| 8 சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் .. | 263·00 | 258·00 | 1956 | 0·21 | .. | 0·21 | .. | .. |
| 9 கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் .. | 184·03 | 202·43 | 1957 | 0·09 | .. | 0·09 | .. | .. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்— | | | | | | | | |
| 1 புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய். | 156·65 | 224·58 | 1959 | 0·207 | .. | 0·181 | .. | .. |
| 2 புள்ளம்பாடிக் கால்வாய் .. .. | 142·45 | 205·89 | 1959 | 0·22 | .. | 0·216 | .. | .. |
| 3 வீரோ நீர்த் தேக்கத் திட்டம் .. .. | 51·37 | 88·94 | 1959 | 0·02 சென்னை 0·012 புதுச்சேரி. | | 0·015 சென்னை புதுச்சேரி (விவரம் கிடைக்கவில்லை). | .. | .. |
| 4 நெய்யாறு இரண்டாம் நிலை .. .. | 41·00 | 90·30 | .. | 0·058 | .. | 0·022 | .. | .. |

விவர அறிக்கை II—தொடர்ச்சி.

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் உள்ள பாசனத் திட்டங்களைப்பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| தொடர் எண், திட்டத்தின் பெயர். | அணைக்கட்டிற்கு ஆன செலவு. | | அணைக்கட்டு திறக்கப் பட்ட ஆண்டு. | குறிக்கோள் அளவு. | | பாசனம் செய்யப்பட்ட பரப்பு. | | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப் பட்டது. | திருத்தப் பட்ட மதிப்பீடு. | | புதிய நிலம். | பாசன உறுதி பெறுவது. | புதிய நிலம். | பாசன உறுதி பெறுவது. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| **இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—தொடர்ச்சி.** | (ரூபாய் லட்சத்தில்) | | | (ஏக்கர் லட்சத்தில்) | | | | |
| 5 கன்னியாகுமரி மாவட்டத்தில் நடுத்தர பாசனத் திட்டங்கள். | 22·00 | .. | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது முடிக்கப் பட்டது. | இத் திட்டங்கள் கோதையாறு திட்டத்தில் உள்ள வாய்க்கால்களை புதுப்பிக்கவும் ஏரிகள் தூர் வாரவும் செயல் படுத்தப் பட்டது. குறிக்கோள் அளவு எதுவும் நிச்சயிக்கப்படவில்லை. | | | | |
| 6 பரம்பிக்குளம் ஆளியாறுத் திட்டம் .. | 3,508·00 | 5,885·00 | .. | 2·40 | .. | 1·48 | .. | .. |
| **மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—** | | | | | | | | |
| 1 பாலாறு அணைக்கட்டையும், கால்வாய்களையும் மேம்பாடு செய்தல். .. | 48·10 | 63·00 | 1964–65 | 0·03 | .. | 0·03 | .. | .. |
| 2 சாத்தனூர் திட்டம்—இரண்டாம் நிலை .. | 55·00 | 60·00 | 1964–65 | 0·05 | .. | 0·05 | .. | .. |
| 3 சித்தாறு-பட்டணங்கால் திட்டம் .. .. | 680·00 | 734·88 | .. | 0·47 | .. | .. | .. | .. |
| 4 கோமுகி நதித் திட்டம் .. .. .. | 87·00 | 121·50 | .. | 0·05 | .. | 0·05 | .. | .. |
| 5 மஞ்சளாறு திட்டம் .. .. .. | 65·80 | இவ் வேலைத் திட்டம் திட்டத்திலிருந்து இப்பொழுது எடுக்கப்பட்டு விட்டது. | | | | | | |
| **நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்—** | | | | | | | | |
| 1 மணிமுக்தா நதித் திட்டம் .. .. | 100·00 | .. | .. | 0·04 | 0·025 | .. | .. | .. |
| 2 இராம நதித் திட்டம் .. .. .. | 101·61 | .. | .. | 0·035 | .. | .. | .. | .. |
| 3 கடானா திட்டம் .. .. .. .. | 163·91 | .. | .. | 0·01 | 0·071 | .. | .. | .. |
| 4 வைகைக் கால்வாய்க்களைப் புதுப்பித்தல் .. | 395·00 | .. | .. | 0·05 | 0·45 | .. | .. | .. |
| 5 தஞ்சாவூர் வாய்க்கால்களை புதுப்பித்தல். | 1,150·00 | .. | .. | 0·17 | 0·40 | .. | .. | .. |
| 6 பெரியாறு வாய்க்கால்களை மேம்பாடு செய்தல். | 381·00 | .. | .. | 0·02 | .. | .. | .. | .. |
| 7 அவிநாசி திட்டம் .. .. .. .. | 430·40 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8 பரப்பலாறு திட்டம் .. .. .. | 35·57 | .. | .. | 0·0123 | 0·0109 | .. | .. | .. |
| 9 பாலாறு-பொரந்தலாறுத் திட்டம் .. | 269·75 | .. | .. | 0·0250 | 0·10 | .. | .. | .. |
| 10 சின்னாறு திட்டம் .. .. .. .. | 40·50 | .. | .. | 0·0119 | 0·0263 | .. | .. | .. |
| 11 காவிரி சங்கமுகப் பகுதியில் வடிகால் திட்டம். | 1,000·00 | .. | .. | .. | 0·10 | .. | .. | .. |

## விவர அறிக்கை III

### 1968–69-ற்கான நீர்ப்பாசனத் திட்டம்.

| தொடரிலக்கமும், திட்டத்தின் பெயரும். | 1968–69-ற்கான நிதி ஒதுக்கம் | திட்ட குறிக்கோள் அளவு. பாசன வசதி அளிக்கும் திறன். | பயன் படுத்தியது. |
|---|---|---|---|
| (1) | (2) (ரூபாய் லட்சத்தில்). | (3) | (4) |
| | | (1000 ஏக்கராவில்.) | |
| 1 பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் .. .. .. .. .. .. .. | 206·34 | 148·00 | 148·00 |
| 2 கோமுகி நதித் திட்டம் .. .. .. .. .. .. .. .. .. | 0·50 | (முழுவதுமாக மேம்படுத்தப் பட்டது.) | |
| 3 சித்தாறு-பட்டணங்கால் திட்டம் .. .. .. .. .. .. .. .. | 95·00 | 10·00 | 6·50 |
| 4 மணிமுக்தா நதித் திட்டம் .. .. .. .. .. .. .. .. | 34·00 | 1·50 | 1·00 |
| 5 இராம நதித் திட்டம் .. .. .. .. .. .. .. .. .. | 10·00 | .. | .. |



| | | | |
|---|---|---|---|
| 6 கடானு நதித் திட்டம் .. .. .. .. .. .. .. .. .. | 10·00 | .. | .. |
| 7 தஞ்சாவூர் வாய்க்கால்களைப் புதுப்பித்தல் .. .. .. .. .. .. | 0·72 | .. | .. |
| 8 வைகை வாய்க்கால்களைப் புதுப்பித்தல் .. .. .. .. .. .. .. | 1·00 | . | .. |

# இணைப்பு II.

[520-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## தமிழகத்திலுள்ள சிறுதுறைமுகங்கள் ஆற்றும் பணி குறித்த ஆய்வுரை—1967-68.

தமிழகத்தில் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மூன்று நடுத்தரத் துறைமுகங்கள் உள்ளன. பரங்கிப்பேட்டை, தொண்டி, பாம்பன், ராமேசுவரம், கீழக்கரை, குலசேகரப்பட்டினம், கொளச்சல் ஆகிய ஏழு சிறு துறைமுகங்களும் தமிழகத்தில் உள்ளன. மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டண நிதி, மாநிலக் கப்பல் வழிகாட்டுக் கட்டண நிதி ஆகியவற்றிலிருந்து மாநிலத் துறைமுகச் செலவு சரிக்கட்டப்படுகிறது. துறைமுகங்கள் நிதி இம் மாநிலத்தின் எல்லாச் சிறு துறைமுகங்களுக்கும் பொதுவாகும். ஏற்றுமதி; இறக்குமதிக் கட்டண நிதிகள் ஒவ்வொரு துறைமுகத்திற்கும் தனித்தனியாக இருக்கும். கடல்துறை, துறைமுக நிதிகளை இம் மாநிலத் தொகுநிதியுடன் இணைக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. அம்முடிவைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், தூததுக்குடித் துறைமுகம் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள பெருவாரியத்தினுல் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. இது மத்திய அரசால் நிர்வகிக்கப்படும். ஆழ்கடல் துறைமுகத்தை நிர்வகிக்கும் பொறுப்பாண்மைக் கழகத்திடமே, சிறு துறைமுகத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அவை இரண்டின் பணிகளையும் இணைப்பதற்காக இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழகதிலுள்ள சிறு துறைமுகங்கள் குறித்த வளர்ச்சித் திட்டங்கள் (Civil) பொதுப்பணித் துறையைச் சேர்ந்த கடற் பணிப் பிரிவினுல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவுருத எஞ்சிய வேலைத் திட்டங்களில் முன்னேற்றம்.

**கடலூர் துறைமுகம்.**—தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம், மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இதில் (i) ஆற்றுப் பயிற்சி வேலை, (ii) அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டுதல் எனற இரண்டு பிரிவுகள் உள்ளன. ஆற்றுப் பயிற்சி வேலைகள் நிறைவேறி வருகின்றன. அவை விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கான வடிவமைப்பு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, அலைத் தடுப்புச் சுவர்களுக்குப் பதிலாக கான்கிரீட் மேடை ஒன்றின் மீது 350 டன்கள் மொத்த கொள் அளவு கொண்ட இரண்டு மணல்வாரிக் குழாய்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் முழுவதும் 1971 மார்ச்-ல் முடிக்கப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ரூ. 139·24 இலட்சமாகும். அதில், 44·83 இலட்சம் 1968 சனவரி வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது.

**நாகப்பட்டினம் துறைமுகம்.**—நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டும் வேலை தற்போது நிறைவேறி வருகிறது. இதுவும் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8 இலட்சமாகும். 1968 சனவரி வரையில் 5·26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1968 ஆகஸ்டில் இந்த வேலை முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நீரியல் ஆய்வுகள்** (Hydrographic Surveys நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குலசேகரப்பட்டினம், எண்ணூர், வெப்பலோடை ஆகிய துறைமுகங்களை மேம்படுத்தும் செயற் குறிப்புகளுக்குத்



தொடர்பாக அந்த இடங்களில் நீரியல் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப்பட்டதால், இந்த திட்டங்கள் முன்னேற முடியவில்லை.

**தூத்துக்குடித் துறைமுகம்.**—தூத்துக்குடித் துறைமுகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசு 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

| | |
|---|---|
| (i) 300 பரித் திறனுள்ள டீசல் இழு படகு ஒன்று வாங்குதல். | கட்டுமான வேலை கல்கத்தாவில் நிறைவேறி வருகின்றது. விரைவில் தூத்துக்குடிக்கு, இந்த இழு படகு ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ii) இயங்கும் கிரேன்கள் இரண்டை வாங்குதல். | கிரேன்கள் ஏற்கெனவே வாங்கப்பட்டு, இயக்கப்படுகின்றன. |
| (iii) 2½ கனகஜம் அளவு கொண்ட தூர் வாரிக் கப்பலை (Grab Dredger) வாங்குதல். | அரசு இத்திட்டத்தைத் தற்போது ஒத்திவைத்துள்ளது. |
| (iv) மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள மூன்று தோணிகளை வாங்குதல். | இத்தோணிகள் ஏற்கெனவே வாங்கப்பட்டு தற்போது செயல்படுகின்றன. |
| (v) 300 டன் திறனுள்ள மூன்று சரக்குத் தோணிகளை வாங்குதல். | இந்தத் தோணிகள் ஏற்கெனவே வாங்கப்பட்டு தற்போது அவை செயல்படுகின்றன. |
| (vi) நீரைக் கலக்கி மண்ணை வெளியகற்றும் பம்புகள் குழாய்த் தொடர்களுடன் கூடிய தோணி ஒன்றை வாங்குதல். | ஹாலந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய இயந்திரங்கள் அனைத்தும் கல்கத்தாவில் வந்திறங்கியுள்ளன. ஒப்பந்தக்காரர்கள் தோணியைக் சட்டத் தொடங்கியுள்ளனர். |
| (vii) துறைமுகங்களுக்கான சறுக்குப் பாதை கட்டுதல். | இவ் வேலை பொதுப் பணித்துறையைச் சேர்ந்த கடற் பணி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ் வேலைக்கான திருத்த மதிப்பீடு பொதுப் பணித் துறையின் (பொது) தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| (viii) பணிமனை, கருவிகள் முதலியன அமைத்தல். | பணிமனை செயல் படத் தொடங்கியது. |
| (ix) கரைதட்டி உடைந்து போன "கலேஷியா" கப்பலை அகற்றுதல். | இந்தப் பணி கைவிடப்பட்டது. |

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்கள்.

இம்மாநிலத்திலுள்ள நடுத்தரத் துறைமுகங்களையும், சிறு துறைமுகங்களையும் மேம்படுத்தவும், எண்ணூர், வெப்பலோடை, புன்னைக்காயல் ஆகிய இடங்களில் புதிய துறைமுகங்களை நிறுவவும் ரூ. 607 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறு துறைமுகம் குறித்த மாநிலச் செயற்குழு பரிவுரை செய்துள்ளது. ஆயினும் இந்திய அரசு

[1968 மார்ச் 23

ரூ. 100 இலட்சம் செலவை மட்டும் மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பல்வேறு துறைமுகங்களை மேனிலைப் படுத்துதவற்கான நிதி ஒதுக்கம் பின் வருமாறு :—

| | எஞ்சிய வேலைத் திட்டங்கள். | புதிய வேலைத் திட்டங்கள். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கடலூர் துறைமுகம் .. .. .. .. | 90·71 | 63·49 |
| நாகப்பட்டினம் துறைமுகம் .. .. .. | 8·73 | 17·27 |
| கொளச்சல் துறைமுகம் .. .. .. | 1·23 | 16·00 |
| வெப்பலோடை துறைமுகம் .. .. .. | .. | 1·80 |
| குலசேகரப்பட்டினம் .. .. .. .. | .. | 1·44 |
| மொத்தம் .. | 1,00·67 | 1,00·00 |

பெரு மொத்தம் ரூ. 2,00·67 இலட்சம்.

**தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம்.**—ஏறக்குறைய 10 இலட்சம் டன் சரக்குகளை இறக்கவும், அனுப்பவும் பயன்பட்டு வருகிற தூத்துக்குடித் துறைமுகம் நடுத்தரத் துறைமுகங்களில் மிகப் பெரிய துறைமுகமாகும். இதனை ஆழ்கடல் துறைமுகமாக மாற்ற வேண்டுமென்று நடுத்தரத் துறைமுக வளர்ச்சிக் குழு 1960-ம் ஆண்டில் பரிவுரை செய்தது. இப் பரிவுரையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இத் திட்டம் 1961-ம் ஆண்டில் மூன்றுவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ரூ. 14 கோடி தொடக்கச் செலவு மதிப்பீடு அடிப்படையில் 1961-ம் ஆண்டிற்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டது. இவ் வேலையை 1963-ம் ஆண்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அப்போது இத் திட்டத்திற்கான தலைமைப் பொறியாளரும், நிர்வாக அதிகாரியும் நியமிக்கப்பட்டார். இது மத்திய அரசாங்கத் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ் வேலைத் திட்டத்தை தமிழக அரசு அரசியலமைப்பின் 258-எ பிரிவின் கீழ் இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது.

விவரமான மதிப்பீடுகள் குறித்தும், திட்ட அமைப்பினை இறுதி செய்வது குறித்தும் இந்திய அரசாங்கத்தின் இறுதி ஒப்பளிப்பை எதிர்பார்த்து பல்வேறு வேலைகளுக்கு அவ்வப்பொது ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1967, டிசம்பர் இறுதி வரையில் இத் திட்டத்திற்காக 5·83 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வேலை கீழ்க்கண்டவாறு நிறைவேறி வருகின்றது :—

**வேலை முன்னேற்றம்.**—தூத்துக்குடித் துறைமுகத் திட்ட அமைப்பினை இறுதி செய்வதை எதிர்பார்த்து, சாலை போடும் வேலை, இருப்புப் பாதை போடும் வேலை, தாற்காலிக அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் வேலை, துறைமுகப் பணியாளர்களுக்கான நிலையான குடியிருப்புகளில் ஒரு பகுதியைக் கட்டும் வேலை போன்ற தொடக்க முன்னேற்பாட்டு வேலைகள் ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டன. அவை தற்போது முடிக்கப்பட்டு விட்டன. கரைக்கு அப்பாலுள்ள வேலைகளைப் பொறுத்த வரையில், வடக்கு, தெற்கு அலைத் தடுப்புச் சுவர் வேலைகளில் 5 மீட்டர் ஆழம் வரையிலான வேலை முடிவடைந்துவிட்டது. 5 மீட்டர் ஆழத்திற்கு மேற்பட்ட வேலை நிறைவேறி வருகின்றது. கீழ்க்கண்ட 3 மதிப்பீடுகளுக்கு இந்திய அரசாங்கம் அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| வேலை. | செலவு (ரூ. இலட்சத்தில்). |
|---|---|
| 1 வடக்கு அலைத் தடுப்புச் சுவரில் 5 மீட்டரிலிருந்து 5·3 மீ. ஆழம் வரையில் கட்டுமான வேலை. | 20·00 |
| 2 தெற்கு அலைத் தடுப்புச் சுவரில் 5 மீட்டரிலிருந்து 5·4 மீ. ஆழம் வரையில் கட்டுமான வேலை. | 18·67 |
| 3 படகில் அமைந்துள்ள கிரேன் ஒன்றை வாங்குதல் .. | 12.00 |



1968 மார்ச் 23]

**இத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கத்தின் ஏற்பளிப்பு.**—தூத்துக்குடித் துறைமுகத்தில் போக்குவரத்து வாய்ப்புகள் குறித்து சோதனை நடத்துவதற்காக, திட்டக்குழு போக்குவரத்துப் பிரிவுத் தலைவர் திரு. லுத்ரா, தமிழக பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. திருமலை ஆகியோர் கொண்ட இணைக் குழு ஒன்று 1967 ஆகஸ்டில் அமைக்கப்பட்டது. திட்டமிடப்பட்டுள்ளனவும், அண்மையில் உருவாகக் கூடியவையுமான பல்வேறு தொழில் வளர்ச்சிகளின் அடிப்படையில், 1971–72-ம் ஆண்டில் 22·35 இலட்சம் டன்களும், 1975–76-ம் ஆண்டில் 35·10 இலட்சம் டன்களும் இத் துறைமுகத்தின் வழியாகப் போக்குவரத்து நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக 1967 செப்டம்பரில் கிடைத்த இணைக் குழுவின் அறிக்கை குறிப்பிட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட போக்குவரத்து அளவை ஏற்பதற்காக, எல்லாக் காலங்களிலும் பயன்படக்கூடிய துறைமுகம் ஒன்றிருக்க வேண்டியது அவசியமாயிருக்கும். எனவே நிலக்கரி, உப்பு, சிமெண்ட் ஆகியவற்றிற்காக ஒவ்வொன்றும், ஏனைய பொருள்களுக்காக இரண்டுமாக ஐந்து துறைகள் கொண்ட 30 அடி ஆழமுள்ள துறைமுகம் ஒன்று கட்டப்பட வேண்டும். இந்த வசதிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 22·80 கோடியாகும். பின்னர் அதிகரிக்கக்கூடிய போக்குவரத்தை ஏற்பதற்காக கூடுதல் துறைன்றும், மற்றும் துணை வசதிகளும் 1·60 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் சலவில் செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆழ்கடல் மீன்பிடி கலங்ளுக்குக் கூடுதலாகத் துறைகள் கட்டுவதற்காகத் துறைமுகத்தின் மாதிரி அமைப்பும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் ரூ. 24·40 கோடி மதிப்பீட்டுச் செலவில் தூத்துக்குடியில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்று கட்டுவதற்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்படுகையில் திட்டக் குழுவினைக் கலந்தாலோசித்து, ஆண்டுவாரி அடிப்படையில் இத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

**மாநில அரசால் நிறைவேற்றப்படும் வேலைகள்.**—தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் விரைவில் செயல்படுவதற்காக மாநில அரசும் கணிசமான அளவுக்கு உதவி வழங்கியுள்ளது. சாலை போடுதல், நீர் வழங்கல், மின்சார வசதி செய்து தருதல் மற்றும் இது போன்ற வசதிகள் உட்பட துறைமுகப் பகுதிக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் தங்களுடைய செலவிலேயே செய்து தரவும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

துறைமுகத்திற்கும் அப்பகுதியின் தொழில் மேம்பாட்டிற்கும் தேவைப்படும் நிலங்களுக்காக 13,000 ஏக்கர் நிலத்தை நிலம் கையகப் படுத்துதல் சட்டத்தின் அதிகார வரம்பின்கீழ் அரசு கொண்டுவந்துள்ளது. 1,760 ஏக்கர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு இத் திட்டத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் தேவை, வீட்டுத் தேவை மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் சுமார் 5,800 ஏக்கர் பரப்பளவு தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தைக் கட்டி முடிக்கும் பணியுடன் துறைமுகத்திற்கு அருகிலுள்ள தொழிற் பிரிவுகளையும் திட்டமிட்ட முறையில் அமைக்க முடியும். துறைமுகத் திட்டத்திற்கு மணல் கொண்டு வருவதற்குத் தேவைப்படும் 1,049 ஏக்கர் நிலத்தை அரசு தன் சொந்த செலவில் வாங்கியுள்ளது. துறைமுக அதிகாரிகள் கட்டணம் ஏதுமின்றி இங்கிருந்து மணலைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துறைமுகத்திற்கும், அங்கிருந்து செல்லுவதற்கும் தேவையான போக்குவரத்து வசதி செய்து தருவதற்காக ரூ. 63·45 இலட்சம் செலவில் துறைமுக எல்லைக்கு அப்பால் முக்கியமான சாலைப் பணிகளை மாநில அரசு தன் சொந்த செலவில் மேற்கொண்டுள்ளது. தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் இணைப்புச் சாலைப்பணி நீங்கலாக ஏனைய சாலைப் பணிகள் முடிவடைந்துவிட்டன. 1967 டிசம்பர் இறுதி வரையில் மொத்தம் ரூ. 53·70 இலட்சம் செலவாகியுள்ளது.

துறைமுகக் கட்டிடம் பணி நிறைவேறி வரும் நிலையில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் காலன் தண்ணீர் வழங்கும் திட்டத்தை மாநில அரசே எடுத்துக்கொண்டது. 1963 ஜூலையில் முடிவுற்ற இத்திட்டத்திற்கு ரூ. 4·46 இலட்சம் செலவாகியது.

ஆழ்கடல் துறைமுகத்திற்கும் தொழில் பகுதிக்கும் தாமிரவருணி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 30 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கும் திட்டத்தை ரூ. 76·50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்துவதற்கும் அவர்கள் முன்வந்தனர். 1967 டிசம்பர் இறுதி வரை இத் திட்டத்திற்கென ரூ. 54·80 இலட்சம் செலவாகியுள்ளது.

தொழில் மேம்பாட்டுக்குத் தேவைப்படும் நீரை வழங்குவதற்காக நாளொன்றுக்கு 1 கோடி காலன் நீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

## சேது சமுத்திரத் திட்டம்.

இந்தியாவின் மேற்குக் கரையையும், கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையை மேம்படுத்துவதற்காகவும், அதன் நீளத்தைக் குறைப்பதற்காகவும் மன்னர் வளைகுடாவை வங்காள விரிகுடாவுடன் இணைப்பதே சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் பெரிய கப்பல்கள், இலங்கையைச் சுற்றியும் அதன் தென் முனையைச் சுற்றியும் வளைத்துப் போவதைத் தவிர்த்து, சுற்றி வளைத்துப் போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும், புயலும் வீசுவதாலும் இக் கடற்பாதையை அபாயமின்றி பயன்படுத்தமுடியும்.

**இடைக்கால அறிக்கை.**—இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் இந் திட்டத்தின் தலைமைப் பொறியாளர் தயாரித்துள்ள இடைக்கால அறிக்கையானது இத் திட்டத்தை நான்காவது திட்டத்தில் சேர்ப்பது குறித்து திட்ட ஆணைக்குழு ஆலோசனை செய்வதற்கு வழியாக இருக்கும்பொருட்டு இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. இத் திட்டம் குறித்த தொழில்நுட்ப, பொருளாதார கூறுகள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் இத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியம் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்தியர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதை முன்னிட்டு மிகுந்துவிட்டதென்று மாநில அரசு திட்ட ஆணைக்குழுவிடமும், இந்திய அரசிடமும் வற்புறுத்தியுள்ளது. ஆனால், இந்திய அரசு இத் திட்டத்திற்காக, எந்த நிதி ஒதுக்கமும் செய்யவில்லை. மேலும், ஆய்வுப்பணிகள் முடிவடைந்த பிறகு, இத் திட்டத்தை மேற்கொள்ளுவது குறித்து ஆலோசிக்கலாம் எனவும் முடிவு செய்துள்ளது.

**ஆய்வுப் பணிகள்.**—சேதுசமுத்திரத் திட்டம் குறித்த ஆய்வுப் பணிகள் முன்பு 1956-ம் ஆண்டில் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்பட்டது. மண்டபம் நிலப் பகுதிக்குக் குறுக்காகக் கால்வாய் ஒன்றை அமைக்க வேண்டுமென்றும், சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் ஆகிய இரண்டினையும் ஒரே சமயத்தில் மேற்கொண்டு நிறைவேற்றுவது அவசியம் என்றும் இக்குழு பரிவுரை செய்தது. ஆயினும், இந்திய அரசு இது குறித்து மேற்கொண்டும் ஆய்வுப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கருதியது. தற்போதைய ஆய்வுப் பணிகள் 1965-ம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இவை இப்பொழுது வெகுவாக முன்னேறியுள்ளன. இதுவரையில் நிறைவேற்றப்பட்ட ஆய்வுப் பணிகளின் விளைவாக இரண்டு விதமான அமைப்புகள், அதாவது மண்டபம் அமைப்பு, இராமேசுவரம் அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புகள் சாத்தியமானவையாகும் எனத் தெரிய வருகிறது. இரண்டு அமைப்புகள் குறித்த ஒப்புநோக்கு விவரங்கள் வருமாறு :—

| | மண்டபம் வழியாக. | இராமேஸ்வரம் வழியாக. |
|---|---|---|
| (1) அடி ஆழம் .. .. .. | 30 அடி | 30 அடி |
| (2) செலவு மதிப்பீடு .. .. | 44·5 கோடி | 35·4 கோடி |
| (3) வெட்டப்பட வேண்டிய நிலத்தின் நீளம் | 20,400 அடி | 11,500 அடி |
| (4) கடலை இணைக்கும் கால்வாயின் நீளம். | 1,24,000 அடி | 32,200 அடி |
| (5) ஆழப்படுத்த வேண்டிய பகுதியின் நீளம் | 28 மைல். | 8[illegible] மைல் |



இராமேசுவரம் வழி சிறந்தது எனக் கருதப்படுகிறது. இதற்கான செலவு மதிப்பீடு ரூபாய் 35·4 கோடி.

### செலவின் விவரங்கள் இனவாரியாக.

| | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (1) தெற்கு அணுகுக் கால்வாய் .. .. .. | 3,60·92 |
| (2) தரைக் கால்வாய் .. .. .. .. | 2,54·95 |
| (3) வடக்கு அணுகுக் கால்வாய் .. .. .. | 1,71·48 |
| (4) வங்காள விரிகுடா கால்வாய் .. .. .. | 8,02·61 |
| (5) பிற இனங்கள் .. .. .. .. .. | 12,42·00 |
| (6) நிறுவனச் செலவு .. .. .. .. | 4,11·00 |
| (7) வரவு, வசூல் இனங்கள் .. .. .. | (—) 25·00 |
| (8) ரூபாய் மதிப்பீடு குறைவால் அதிகரிப்பு .. .. | 5·16 |
| | 37,34·00 |
| (9) படிப்படியாக திட்டத்தை நிறைவேற்றுவதால் சேமிப்பு .. .. .. .. .. .. | (—) 1,90·00 |
| | 35,44·00 அல்லது 35·4 கோடி. |

இதனைப் பேணி வருவதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 55 இலட்சம் செலவு நேரிடும். இத் திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 98 இலட்சம் நிகர வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இராமேசுவரம் வழி குறித்த ஆய்வுப் பணிகள் ஏறத்தாழ முடிந்துவிட்டன. சேதுசமுத்திரம் திட்டக் கால்வாய் பகுதியை அடுத்துள்ள பல்வேறு துறைமுகங்களைப் பயன்படுத்தும் கப்பல்கள் பற்றிய விவரங்களும், சேதுசமுத்திரம் திட்டக்கால்வாய் வழியே செல்லக்கூடிய கப்பல் விவரம், சேதுசமுத்திரம் கால்வாய் திட்ட வருவாய் ஆகிய விவரங்களை இத் திட்ட அதிகாரி முடிவுசெய்து வருகிறார்.

சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் அனைத்தும் பகுக்கப்பட்டு, இத் திட்டம் குறித்த இறுதி அறிக்கை 1968 ஏப்ரல் திங்களுக்குள் தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இத் திட்டத்திற்கான செலவு மதிப்பீட்டை முடிவாகக் கணக்கிடலாம். இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர், இத்திட்டம் குறித்த வேலைகளைத் தொடங்கலாம். ஒப்புதல் அளிக்கப்படும் காலம் தொடங்கி இத் திட்டத்தினை முழுவதும் முடிக்க ஐந்தாண்டுகளாகும்.

## இணைப்பு II (அ).

### 1968-69-ம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். | தொடர் எண்ணும் வேலையின் பெயரும். | செலவு மதிப்பீடு. | 1968-69-க்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **எஞ்சிய வேலைத் திட்டங்கள்.** | | |
| கடலூர் .. .. .. | (1) அலைத் தடுப்புச் சுவர்களைக் கட்டுதலும், ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 1,20 74 | 16·70 |
| நாகப்பட்டினம் .. .. | (2) பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டுதல் .. | 8·00 | 2·50 |
| | மொத்தம் .. | | 19·20 |
| | **நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய வேலைத் திட்டங்கள்.** | | |
| கடலூர் .. .. .. | (1) தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரிக்குப் பதிலாக நீருக்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சு வாய் அமைப்புடையதும், குழாய் தொடர்பு உடையதும் ஆகிய தூர்வாரி ஒன்றை வாங்குதல். | 11·00 | 4·25 |





| | | | |
|---|---|---|---|
| நாகப்பட்டினம் .. .. | (2) சரக்குக் கொட்டகை ஒன்றை அமைத்தல் .. .. .. .. | 0·75 | 0·75 |
| | மொத்தம் .. | | 5·00 |

**சுருக்கம்.**

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. எஞ்சிய வேலைத் திட்டங்கள் .. .. .. | 19·20 |
| 2. புதிய வேலைத் திட்டங்கள் .. .. .. .. | 5·00 |
| மொத்தம் .. | 24·20 |

## இணைப்பு II (ஆ).

**மத்திய அரசின்கீழ் உள்ள வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காக செய்யப்பட்ட செலவு விவரங்களைக் காட்டும் அறிக்கை (எஞ்சிய வேலைத் திட்டங்கள்).**

| வேலைத் திட்டத்தின் பெயர். | மூன்றாவது திட்ட காலத்தில் நிதி ஒதுக்கீடு. | மூன்றாவது திட்டக்கால முடிவுவரை ஏற்பட்ட மொத்த செலவு. | 1966–67-ல் செலவு. | 1968–69-ல் எதிர்பார்க்கப்படும் செலவு. | 1968–69-ல் நிதி ஒதுக்கம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| **கடலூர் துறைமுகம்—** | | | | | | |
| 1. அலைத் தடுப்புச் சுவர்களைக் கட்டுதல்—ஆற்றுப் பயிற்சிப் பணிகள்—மதிப்பீடு ரூ. 1,20·74 இலட்சம். | 50·00 | 30·03 | 14·69 | 15·44 | 16·70 | பணி நிறைவேறி வருகிறது. |
| **நாகப்பட்டினத் துறைமுகம்—** | | | | | | |
| 2. கம்பிகள் பொருத்தி உறுதியான கற்கலவைக் காரையால் தோணித் துறைமுகம் ஒன்றைக் கட்டுதல். இயங்கும் மணல்வாரி இயந்திரம் ஒன்றை நிறுவுதல்—மதிப்பீடு ரூ. 16·40 இலட்சம். | 10·00 | 15·03 | 0·52 | இல்லை. | இல்லை. | பணி முடிந்து விட்டது. |
| 3. பயணிகள் தங்கும் நிலையம் ஒன்றைக் கட்டுதல்—மதிப்பீடு ரூ. 8 இலட்சம். | — | 0·64 | 3·49 | 2·25 | 2·50 | பணி நிறைவேறி வருகிறது. |
| **கொளச்சல் துறைமுகம்—** | | | | | | |
| 4. சரக்குகளை அடுக்கி வைப்பதற்கான மேடையுடன் கூடிய சரக்கு இறக்கும் மேடை ஒன்றைக் கட்டுதல்—துணையிடும் வேலைகளுக்கான திருத்த மதிப்பீடு ரூ. 87,000. | 2·00 | 0·77 | 0·09 | இல்லை. | இல்லை. | துணையிடும் வேலை முடிந்து விட்டது. |
| **தூத்துக்குடி துறைமுகம்—** | | | | | | |
| 5. 300 பரித் திறனுள்ள இழுபடகு ஒன்றை வாங்குதல். | 5·00 | 6·57 | இல்லை. | 2·17 | | ரூ. 27 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவு. தூத்துக்குடி பொறுப்பாண்மைக் கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (1967–68 வரையில் செலவு ரூ. 31·58 இலட்சமாகும்.) |
| 6. இரண்டு டன் சுமை எடுக்கும் இயங்கும் கிரேன்களை வாங்குதல். | 2·50 | 4·37 | இல்லை. | இல்லை. | | |
| 7. 2½ கன கஜம் தூர் வாரிக் கப்பலை வாங்குதல். | 5·00 | 0·04 | இல்லை. | இல்லை. | | |
| 8. மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள 3 தோணிகளை வாங்குதல். | 2·50 | 4·77 | இல்லை. | இல்லை. | | |
| 9. 300 டன் கொள்ளளவுள்ள 3 சரக்குத்தோணிகளை வாங்குதல். | 5·00 | 3·04 | 4·85 | 3·86 | | |
| 10. நீரைக் கலக்கி மண்ணை வெளியகற்றும் பம்புகள், குழாய்த் தொடர்களுடன் கூடிய தோணி ஒன்றை வாங்குதல். | 3·00 | 0·04 | இல்லை. | 6·87 | | |
| 11. சறுக்குப் பாதைக் கட்டுதல் .. | 2·00 | இல்லை. | இல்லை. | இல்லை. | | |
| 12. தொழிற் பட்டறை, சாதனம் முதலியன அமைத்தல். | 2·00 | 0·58 | 1·37 | 0·05 | | |
| பெரு மொத்தம் .. | 89·00 | 65·88 | | | | |
| தூத்துக்குடி துறைமுகம் மட்டும். | 27·00 | 19·41 | 6·22 | 12·95 | | |

# இணைப்பு II (இ).

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள புதிய திட்டங்கள் குறித்த விவரங்கள்.

| துறைமுகத்தின் பெயரும் திட்டமும். | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **கடலூர் துறைமுகம்—** | |
| முறைவைப்பில் முதலிடம்— | |
| 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் சுமார் 30 வருடத்திய இயந்திரத்திற்கு பதிலாக, நீருக் கடியில் தூர் வாருவதற்காக, 12 அங்குல அளவு உறிஞ்சிவாய் அமைப்புடையதும் குழாய் தொடர்பு உடையதும் ஆகிய தூர்வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல் .. .. .. .. .. | 11.00 |
| 2. மரக்கலங்களை இழுப்பதற்காக 300 பரித்திறனுள்ள இழு படகு ஒன்றை வாங்குதல் .. .. .. | 7·00 |
| 3. 100 டன் திறனுள்ள உருக்காலான சிறு கப்பல், சாதனங்களுடன் .. .. .. .. .. .. | 3·60 |
| 4. தெற்கு தோணித் துறையிலும், வடக்கு தோணித் துறையிலும், மையத் தோணித் துறையிலும் சரக்கு அடுக்கும் பகுதிகளுக்கு சிமெண்ட் காரை போடுதல் .. .. .. .. .. | 3·09 |
| 5. வடக்கு தோணித் துறையையும், மையத் தோணித் துறையையும் இணைக்கும் தோணித் துறை கட்டுதல் .. .. .. .. .. .. .. .. .. .. .. | 2·40 |
| 6. தரைநீர்த் தேக்கத்தொட்டி ஒன்றைக் கட்டுதல்—நகராட்சி நீர்த் தேக்கத்திலிருந்து அவசியமான பம்புகளையும், குழாய்த் தொடர்களையும் எடுத்துவரும் செலவு .. .. .. .. | 1·00 |
| மொத்தம் .. | 28·09 |



| | |
|---|---|
| **முறைவைப்பில் இரண்டாமிடம்—** | |
| 7. இரண்டு மண் எடுக்கும் இயந்திரங்களுடன்கூடிய ஒரு தூர்வாரிக் கப்பலை வாங்குதல் .. .. .. | 13·30 |
| 8. உப்பளத்திற்கு வடக்கிலும், கிழக்கிலும் 1,500 அடி நீளமுள்ள சரக்குமேடை ஒன்றைக் கட்டுதலும், அதற்கு மின்சார வசதி செய்தலும் .. .. .. .. .. .. .. .. .. | 10·00 |
| 9. உப்பளப் பகுதிகளை பயன்படுத்துதலும், உப்பளத்திற்குள் சாலை வசதிகள் செய்தலும் .. .. | 5·00 |
| மொத்தம் .. .. | 28·30 |
| முறைவைப்பில் மூன்றுமிடம்— | |
| 10. விளக்கு, பெரு விளக்குகள், இரவு வேலைக்காக விளக்குகள் பொருத்தப்பட்ட மிதவைகள் போன்ற வசதிகள் செய்துதருதல் .. .. .. .. .. .. .. .. .. .. | 1·10 |
| 11. திட்டமிடப்பட்ட தோணித் துறைக்குப் பின்பக்கத்திலுள்ள சரக்கு இறக்கும் மேடையை 200 அடி அகலத்திற்குக் கடினப்படுத்துதல் .. .. .. .. .. .. .. .. | 3·00 |
| 12. உப்பளப்பகுதியில் ரயில்வசதிகளை நீட்டித்தல் .. .. .. .. .. .. .. .. | 3·00 |
| மொத்தம் .. .. | 7·10 |
| பெரு மொத்தம் .. | 63·49 |
| **நாகப்பட்டினம் துறைமுகம்—** | |
| முறைவைப்பில் முதலிடம்— | |
| 1. பயணிகள் தோணிகளை இழுத்துச் செல்லும் இழுபடகு .. .. .. .. .. .. .. | 7·00 |
| 2. சரக்குக் கொட்டகை ஒன்றை அமைத்தல் .. .. .. .. .. .. .. .. .. | 0·75 |
| மொத்தம் .. | 7·75 |

| துறைமுகத்தின் பெயரும் திட்டமும். | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய்இலட்சத்தில்.) |
|---|---|
| நாகப்பட்டினம் துறைமுகம்—தொடர்ச்சி. | |
| முறைவைப்பில் இரண்டாமிடம்— | |
| 3. ஒரு சிறு தூர் வாரும் கப்பலை (suction Dredger) வாங்குதல் .. .. .. .. .. | 5·52 |
| முறைவைப்பில் மூன்றுமிடம்— | |
| 4. இழு படகுகளுக்காகவும், தூர் வாரும் கலன்களுக்காகவும் சறுக்குப் பாதைகள் கட்டுதல் .. .. | 4·27 |
| | 00 |
| பெரு மொத்தம் .. .. | 17·— |
| கொளச்சல் துறைமுகம்— | |
| முறைவைப்பில் முதலிடம்— | |
| 1. சரக்குகளை அடுக்கிவைப்பதற்கான மேடையுடன் கூடிய சரக்கு இறக்கும் மேடை ஒன்றைக் கட்டுதல் .. | 15·00 |
| முறைவைப்பில் இரண்டாமிடம்— | |
| 2. துறைமுக அலுவலகமும், துறைமுகப் பணியாளர்களுக்கு குடியிருப்பும் கட்டுதல் .. .. .. | 0·50 |
| 3. சரக்குக் கொட்டகை ஒன்றைக் கட்டுதல் .. .. .. .. .. .. .. .. .. | 0·50 |
| மொத்தம் .. | 16·00 |
| குலசேகரப்பட்டினம் துறைமுகம்— | |
| முறைவைப்பில் முதலிடம்— | |
| நீரியல் ஆய்வுப் பணி .. .. .. .. .. .. .. .. .. .. .. | 1·44 |
| வெப்பலோடை— | |
| நீரியல் ஆய்வுப் பணி .. .. .. .. .. .. .. .. .. .. .. | 1·80 |
| பெரு மொத்தம் (எல்லாத் துறைமுகங்களும்) .. | 1,00·00 |



1967–68 வரவு–செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். | | தொடர் எண்ணும், வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | 1967–68 திருத்த மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | எஞ்சிய வேலைத் திட்டங்கள். | | |
| கடலூர் .. .. .. | (1) | அலைத்தடுப்புச் சுவர்களைக் கட்டுதலும், ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 1,20·74 | 15·44 |
| நாகப்பட்டினம் .. .. | (2) | பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டுதல். | 8·00 | 2·25 |
| | | மொத்தம் .. | | 17·69 |
| | | புதிய திட்டங்கள். | | |
| கடலூர் .. .. .. | (1) | தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்கு பதிலாக நீர்க்கடியில் தூர்வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சு வாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர்பு உடையதுமாகிய தூர்வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 11·00 | 2·50 |
| நாகப்பட்டினம் .. .. | (2) | சரக்குக் கொட்டகை ஒன்றை அமைத்தல் .. .. | 0·75 | 0·25 |
| குலசேகரப்பட்டினம் .. .. | (3) | நீரியல் ஆராய்ச்சி .. .. .. .. .. | 1·44 | 1·44 |
| | | மொத்தம் .. | | 4·19 |

நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய திட்டங்கள், இந்திய அரசின் ஒப்பளிப்பு கிடைக்காத காரணத்தால் இன்னும் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## இணைப்பு II (ஈ)

1959–60 முதல் 1966–67 வரை தமிழகத்தில் உள்ள துறைமுகங்களின் மூலமாகச் சென்ற மொத்தச் சரக்குகளின் பெறுமானம் (டன் கணக்கில்).

| தொடர் எண்ணும், துறைமுகத்தின் பெயரும். | 1959–60. | 1960–61. | 1961–62. | 1962–63. | 1963–64. | 1964–65. | 1965–66. | 1966–67. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 தூத்துக்குடி .. .. | 882,738 | 959,366 | 842,533 | 1,025,173 | 934,893 | 1,050,272 | 993,734 | 953,922 |
| 2 கடலூர் .. .. .. | 4,21,804 | 4,28,913 | 4,66,850 | 467,811 | 498,478 | 545,494 | 416,440 | 397,375 |
| 3 நாகப்பட்டினம் .. .. | 53,371 | 39,813 | 40,757 | 57,619 | 52,340 | 71,929 | 72,162 | 91,179 |
| 4 பரங்கிப்பேட்டை .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5 அதிராம்பட்டினம் .. .. | 17 | இல்லை. | இல்லை. | இல்லை. | இல்லை. | .. | .. | (துறைமுகம் மூடப்பட்டது). |
| 6 தொண்டி .. .. .. | 13 | 9,71 | இல்லை. | இல்லை. | இல்லை. | .. | .. | .. |
| 7 பாம்பன் .. .. .. | 2,192 | 3,105 | 1,420 | 1,478 | 6,129 | 2,094 | 8,152 | 1,436 |
| 8 தனுஷ்கோடி .. .. | 8,112 | 8,125 | 7,753 | 7,221 | 7,430 | 3,581 | .. | (துறைமுகம் மூடப்பட்டது). |
| 9 கீழக்கரை .. .. .. | 2,474 | 1,426 | 1,302 | 1,058 | 1,538 | 1,243 | 4,795 | 9,760 |
| 10 கொளச்சல் .. .. | 10,155 | 9,800 | இல்லை. | இல்லை. | 14,455 | 25,598 | 26,900 | 28,200 |
| 11 குலசேகரப்பட்டினம் .. | 819 | 782 | 644 | 252 | 800 | 150 | .. | .. |
| மொத்தம் .. | 1,381,695 | 1,452,301 | 1,361,259 | 1,560,612 | 1,516,063 | 1,700,361 | 1,522,183 | 1,481,872 |
| (தூத்துக்குடி நீங்கலாக) .. | 498,957 | 492,935 | 518,726 | 535,439 | 581,170 | 650,089 | 528,449 | 527,950 |

[1968 மார்ச் 23

## இணைப்பு III.

[520-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டில் சாலை வளர்ச்சிக் கட்டிட அமைப்புத் திட்டங்கள்.

(1967-68-ம் ஆண்டிற்குரிய அறிக்கை).

### நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை.

அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலைகள் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. அவை வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியாலும், பொருளாதார முன்னேற்றத்தாலும் நாளுக்கு நாள் பெருகிவரும் தேவையை நிறைவேற்ற வேண்டியுள்ளன. சாலைப் போக்குவரத்து, கிராமங்களின் நீர் வழங்கு திட்டங்கள், குடியிருப்பு வசதிகள், ஊராட்சி-ஊராட்சி ஒன்றியங்களின் செயற் திட்டங்கள் ஆகியவற்றைக் கவனித்துவரும் நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை இவ்வாறு வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய இடையறாது பணிபுரிகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டுச் சாலைகளின் மொத்த நீளம் 21,198 மைல்களாக (34,115 கிலோ மீட்டர் கள்) இருந்தது. இத்திட்ட காலத்தின் இறுதியில், இந்த நீளம் 24,045 மைல்களாக (38,697 கிலோ மீட்டர்கள்) விரிவடைந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்நீளம் 1,822 மைல்கள் (2,932 கிலோ மீட்டர் கள்) கூடிற்று. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப் பெற்ற போது தமிழ்நாட்டுச் சாலைகளின் மொத்த நீளம் 25,867 மைல்கள் (41,629 கிலோ மீட்டர்கள்) ஆக இருந்தது. மூன்றாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் மூலம் சுமார் 5,933 மைல்கள் (9,548 கிலோ மீட்டர்கள்) அமைப்பது சாத்தியமாயிற்று. 1965-66-ம் ஆண்டு இறுதியில் அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினால் பராமரிக்கப்பட்டுவரும் சாலைகளின் மொத்த நீளம் 31,8?0 மைல்களாக (51,177 கிலோ மீட்டர் கள்) உயர்ந்தது. 1966-67-ம் ஆண்டில் 1,661 மைல்கள் (2,674 கிலோ மீட்டர்கள்) மொத்த நீளமுள்ள சாலைகள் புதிதாகப் போடப்பட்டன. 1966-67-ம் ஆண்டில் 1,400 மைல்கள் (2,354 கிலோ மீட்டர்கள்) மொத்த நீளமுள்ள சாலைகள் போடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. தமிழ் நாட்டுச் சாலைகள் பற்றிய புள்ளி விவரம், இந்தியாவின் சாலைகளைப் பற்றிய விவரங்களோடு கீழே ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு எவ்வளவு நீளமுடைய சாலைகளின் அமைப்பு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

| | இலட்சம் மக்கள் தொகைக்கு சாலையின் நீளம் (மைல்களில்). |
|---|---|
| இந்தியா முழுவதும் .. .. .. | 103 |
| தமிழ்நாடு .. .. .. .. .. | 104 |

3. இதுவரை நிறைவேற்றப்பட்ட சாலைப் பணிகளை பற்றியும், 1968-69-ம் ஆண்டுக்குரிய திட்டங்களைப் பற்றியும், சுருக்கமாக கீழே ஆய்வுரை கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மிக முக்கியமானவையும் பெரும் தொகை தேவையற்றவையுமான திட்டங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.



1968 மார்ச் 23]

4. திட்டங்கள் கீழ்க்காணும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப் படுகின்றன :—

(1) தேசிய நெடுஞ்சாலைகள்.

(2) மாநில நெடுஞ்சாலைகள்.

(3) மாவட்டப் பெருஞ்சாலைகள்.

(4) மாவட்ட மற்றச் சாலைகளும், கிராமச் சாலைகளும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளும், ஊராட்சிச் சாலைகளும்.

### தேசிய நெடுஞ்சாலைகள்.

5. மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்கும் பொறுப்பையும் பராமரிக்கும் பொறுப்பையும் இந்திய அரசு ஏற்றிருக்கிறது. ஆயினும், அந்த அரசின் சார்பாக, மாநில நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை இதைச் செயலாற்றி வருகிறது. நகரங்களுக்கு வெளியே அமைந்துள்ள இத் தகைய சாலைகள் அனைத்திற்கும் உரிய செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கிறது. நகரங்களில் அமைந்துள்ள இச்சாலைப் பகுதிகளில் புதிய அமைப்புகளுக்கான செலவை மாநில அரசாங்கமும், நகராண்மைக் கழகங் களும் பகிர்ந்து கொள்ளுகின்றன. பராமரிப்புச் செலவு முழுவதையும் மாநில அரசாங்கம் மட்டுமே ஏற்கிறது.

6. முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தேசியச் சாலைகளின் மேற்பரப்பை மேம்படுத்தவும், பெரிய பாலங்கள், சிறு வாராவதிகளைச் சீர்படுத்தவும், புதிதாக அமைக்கவும், ரூ. 151 இலட்சமும், ரூ. 182 இலட்சமும் முறையே செலவிடப்பட்டன. மூன்றாவது திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட விழைந்தது 200 இலட்சம் ரூபாய். ஆனால் மத்திய அரசு 152 இலட்சம் ரூபாய் கொடுத்து, அது செலவழிக்கப்பட்டது.

7. தமிழ்நாட்டில் இத்தகைய நெடுஞ்சாலைகள் அனைத்தும் அநேகமாக இரு அணிப் பாதைகள் கொண்டவை. சாலைகள் அகலமாக அமைக்கப்பட்டபின், நீண்ட தூரப் பயணத்திற்கு வசதியாக முக்கிய நகரங்களின் நெரிசலான போக்குவரத்தை தவிர்த்து நகரைச் சுற்றி, புறச் சாலைகள் அமைக்கப் பட வேண்டியதாயிற்று. மதுரை நகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டுள்ள புறச்சாலை, வைகை ஆற்றின் பாலம், திருச்சி நகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டுள்ள ஏழு மைல் நீள புறச்சாலை, காவிரி பாலம் ஆகியவை மூன்றாவது ஐந்தாண்டுக் திட்டக் காலத்தில் முடிக்கப்பட்டவையாகும். புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்துவதற்குச் சட்டத்தின் கீழ் அதிகக் காலம் தேவைப்படும். ஆகையால் புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும் பணியை மேற்கொள்வதுடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப் பெற்று முற்றுப் பெறாத வேலைகளை முடிப்பதில் மட்டுமே மூன்றாவது திட்டத்தில் நாட்டம் செலுத்தப்பட்டது. கீழ்க்காணும் நகரங்களுக்கான புறச்சாலைகளுக்குரிய நிலப் பகுதியைக் கையகப்படுத்துவதற்குரிய வேலைகள் நடந்து வருகின்றன.

ஸ்ரீபெரும்புதூர், பூவிருந்தவல்லி, வாணியம்பாடி, விஷாரம், வேலூர் கோயில்பட்டி, திருநெல்வேலி, இராமநாதபுரம், சென்னை.

சுமையேற்றிய நிலையில் பன்னிரண்டு டன் வரை எடையுள்ள வண்டிகளுக்கேற்ற முறையில் சிறு பாலங்கள் பல வலுப்படுத்தப்பட்டன.

8. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 30·25 கோடி ரூபாய் செலவழிக்கப்பட இருக்கிறது. கீழ்க் கடற்கரைச் சாலையை அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு இந்திய அரசைப் பல முறை கேட்டுக்கொண்ட போதிலும், இதுவரை அதற்குரிய ஒப்புதல் கிடைக்கப் பெறவில்லை. ஆயினும், மாநில

அரசாங்கத்தின் தனியான வற்புறுத்தலுக்கு இணங்க, இந்திய அரசு கிழக்கு கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலிருந்து தென் ஆர்க்காடு எல்லை வரை அமைக்கப் பெருத கடற்கரைச் சாலைப் பகுதிகளை 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கி இருக்கிறது. இதற்கான செலவுத் தொகை "மாநில இணைப்புப் பொருளாதார முக்கியத்துவம் கருதிய சிறப்புத் திட்டத்தின்" கீழ்க் கிடைக்கும். மத்திய அரசு நிதியிலிருந்து பாதிப் பங்கு மானியமாகக் கிடைக்கும். மற்றப் பாதிச் செலவு மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

9. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரை இம்மாநிலத்தில், இது வரை பாலமின்றி இருக்கும் பகுதி பாம்பன் கால்வாய் மட்டுமே. இதற்காக நான்காவது திட்ட வரைவில் ரூ. 250 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதற்குரிய மதிப்பீடுகளும், அமைப்பு முறை விவரங்களும் இந்திய அரசினால் இன்னும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

10. 967-68-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் செய்யப்படும் புதிய அமைப்புப் பணிகளுக்காக இந்திய அரசு 10·00 இலட்சம் ரூபாய் வழங்கியது. ஆனால் 12·50 இலட்சம் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாக்கித் தொகைக்கு இந்திய அரசு அங்கீகாரம் செய்ய அணுகப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை பெரும்பாலும் மூன்றாவது திட்டக் காலத்திலேயே எடுக்கப்பட்டு முற்றுப்பெருத வேலைகளை முடிக்கச் செலவு செய்யப்படுகிறது. 1966–67-ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மேம்படுத்தும் பணிகள் பின் வருமாறு :—

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) தேசிய நெடுஞ்சாலை 45-ல், 17/4-வது மைலில் தாம்பரத்திற்கருகில் கட்டப்படும் மேம்பாலத்திற்கு அணுகு சாலைகள் அமைத்தல். | 13·51 |
| (2) தேசிய நெடுஞ்சாலை 46-ல், இராணிப்பேட்டை-கிருஷ்ணகிரிச் சாலை 76/4-வது மைலில் விஷாரம் நகரின் புறச்சாலைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்தல். | 3·865 |
| நெடுஞ்சாலை 5-ல், 32/8-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 3·49 |

மேற்படி வேலைகளில் முதலாவது வேலை 1967–68-ல் போதிய பணமின்மையால் எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை. இரண்டாவது வேலைக்குரிய நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது ; இப்பணி டிசம்பர் 1968-ல் முடிக்கப்படும்.

சென்னையிலிருந்து திருச்சி வழியே திண்டுக்கல் செல்லும் சாலையில் 86/4-வது மைலில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்காக, 11·75 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. இந்தப் பணி 1968 ஜூன் மாதம் முடிவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னை நகரச் சாலைகள்.

11. வேகமாக வளர்ந்து வரும் சென்னை நகரில் செல்லும் போக்குவரத்து இடையருது இயங்க, முக்கியச் சாலைகளைச் சிறப்புறப் பராமரிக்க வேண்டியிருக்கிறது. மவுண்ட் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, வடக்கு நெடுஞ்சாலை (நெல்லூர் சாலை) ஆகியவை ஒரு கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன. நான்காவது திட்டக் காலத்தில், நகரச் சாலைகளை மேம்படுத்தும்பணி, பெருநகர் வளர்ச்சித் திட்ட அமைப்பின் கீழ் இடம் பெறும். இதற்குரிய ஒப்புதல் இந்திய அரசினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. நகரச்சாலை வேலைகளில் 1966–67-ம் ஆண்டில் 25·77 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. முற்றுப் பெருத வேலைகள் பலவும் 1967–68-ம் ஆண்டில் தொடர்ந்து எடுத்து முடிக்க 11·73 இலட்சம் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகரின் தெற்கு நுழைவாயிலாக அமைந்துள்ள மர்மலாங்கு பாலம் 81 அடி அகல சாலையும், இரு புறமும் 10 அடி அகல நடை பாதையும், கொண்டதாக புதுப்பிக்கப்பட்டு இதன் மேல் அறுவழி பாட்டையில் வண்டிகள் ஒருங்கே செல்ல வசதி உண்டு. சைதாப்பேட்டை அருகே டாட் ஹண்டர் நகர் பாலத்தின் பணியும் நடந்து கொண்டிருக்கிறது. இவ் வேலை மார்ச் 1968-ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணி முடிவடையும் போது, சென்னையில் கோட்டை முதல் நகர் எல்லைவரை மவுண்ட் சாலை அறுவழி பாதை கொண்டதாக அமையும். மற்ற இரு தேசிய நெடுஞ்சாலைகளும் நால்வழிப்பாதை கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கின்றன.



12. மவுண்ட் சாலையில் செல்லும் மொத்தப் போக்கு வரத்தில் ஒரு பகுதி நடந்து செல்வோரைக் கொண்டது என மதிப்பிடப்பட்டுள்ளது. நடந்து செல்வோரையும், சாலையில் செல்லும் வண்டிகளையும் தனித்தனியே வழிப்படுத்த, தரைக் கீழ்ப் பாதைகளும், மேம்பாலங்களும் தேவை. முக்கியமான போக்குவரத்துப் பகுதிகளில் இத்தகைய வேலைகள் திட்டமிடப்பட்டு, மவுண்ட் சாலை வட்டச் சதுக்கம் அருகே ஒரு சுரங்கப் பாதையும் மத்திய புகைவண்டி நிலையத்தின் அருகே பூவிருந்தவல்லி சாலையில் ஒரு சுரங்கப் பாதையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## அரசாங்கச் சாலைகள் (மாநில நெடுஞ்சாலைகளும், மாவட்டப் பெருஞ்சாலைகளும்).

13. தேசிய நெடுஞ்சாலைகளில் நகரங்களினூடே செல்லும் இணைப்புகளையும், மாநில நெடுஞ்சாலைகளையும் மாவட்டப் பெருஞ்சாலைகளையும் மாவட்ட மற்ற சாலைகளையும் கிராமச் சாலைகள் உட்பட வேறு சில சாலைகளையும் பராமரிக்கும் பொறுப்பை மாநில அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. முதல் இரு திட்ட காலத்தில் இச் சாலைகள் அனைத்தையும் பராமரிக்கவும், பாலங்களையும் சிறு பாலங்களையும் சீர்படுத்தி அமைக்கவும் செலவழிக்கப்பட்ட தொகை வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் .. .. .. | 163 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் .. .. | 296 |

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை, நெய்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி துறைமுகத் திட்டப் பகுதி ஆகிய நகர்ப்புறங்களில் அமைந்த, தொழில்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி பகுதியில் மட்டும் நெடுஞ்சாலை-கிராமப்பணி துறையினால் 72 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இவைகளில் 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் மத்திய அரசின் நிதி உதவியோடு நிறைவேற்றப்பட்டன. இதைத் தவிர 9·20 இலட்சம் ரூபாய் செலவில் தூத்துக்குடி நகரத்தையும், துறைமுகத்தையும் இணைக்கும் சாலைத் திட்டம் ஒன்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இவ் வேலையில் சாலைப் பகுதி முடிக்கப்பட்டது. தவிர உப்பாறு ஓடையின் குறுக்கே கட்டப்படும் பால வேலை (4 இலட்சம் செலவில்) நடந்து கொண்டிருக்கிறது.

14. அரசாங்கச் சாலைகளில் செல்லும் வண்டிகள் 12 டன் வரை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதால், பாலங்களையும், சிறு பாலங்களையும் அதற்கேற்ப வலுப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்காக மாநில நெடுஞ்சாலைகளுக்கும் மாவட்டப் பெருஞ்சாலைகளுக்கும் 45 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது.

15. அரசாங்கச் சாலைகளை மேம்படுத்துவதற்காக, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 572 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றுவது திட்டக் காலத்தில் முடிக்கப்பட்ட வேலைகளின் அளவு வருமாறு :—

| | |
|---|---|
| சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் .. .. .. | 12 மைல் 3 பர்லாங்கு (20 கிலோ மீட்டர்கள்). |
| ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகள் .. .. | 1 மைல் (1·60 கிலோ மீட்டர்கள்). |
| தார் சாலைகள் .. .. .. .. | 148 மைல்கள் (238 கிலோ மீட்டர்கள்). |
| புது ஜல்லி போட்ட சாலைகள் .. .. .. | 95 மைல்கள் (153 கிலோ மீட்டர்கள்). |
| புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் .. .. | 37 மைல்கள் (60 கிலோ மீட்டர்கள்). |
| பெரிய பாலங்கள் .. .. .. .. | 47. |
| சிறு பாலங்களும் வாராவதிகளும் .. .. | 183 |

16. கடினமாக பொருளாதார நெருக்கடி காரணமாக 1966–67-ம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று வேலைகளுக்கு மட்டுமே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. "திருநெல்வேலி-செங்கோட்டை சாலையில் 1/4-வது மைலில் ரயில்-சாலைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலம் அமைத்தல்" என்ற வேலைக்கு 35·00 இலட்சம் ரூபாய் செலவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும். 1967–68-ம் ஆண்டில் 31·72 இலட்சம் ரூபாய் செலவில் கீழ்க்காணும் 10 புதிய வேலைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன.

| வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **முக்கிய மாவட்டச் சாலைகள்.** | |
| **செங்கற்பட்டு மாவட்டம்—சைதாப்பேட்டை கோட்டம்—** | |
| (1) பக்கிங்ஹாம் கால்வாய் கரையின் ஓரமாக எல்லியட்ஸ் கடற்கரையிலிருந்து ஏற்கெனவே உள்ள சாலை வரை புதிய சாலை அமைத்தல். | 3·00 |
| **தென் ஆர்க்காடு மாவட்டம்—விழுப்புரம் கோட்டம்—** | |
| (2) சூணாம்பேட்டை சாலையில் 1/5-வது மைலில் பாலம் கட்டுதல். 4/5-வது மைல் வரை ஜல்லி போட்டு தார் வேலை செய்தலும், வாராவதிகளைப் புதுபித்துக் கட்டுதலும். | 2·12 |
| (3) சூணாம்பேட்டை சாலையில் 1/7-வது மைலில் பாலம் கட்டுதல். | |
| **தஞ்சாவூர் மாவட்டம்—நாகப்பட்டினம் கோட்டம்—** | |
| (4) மாவூர்-புத்தியகுடி சாலையில் 1/7-வது மைல் முதல் | 4·20 |
| (5) ஆலங்குடி-தலைஞாயிறு சாலையில் 23/7-வது மைலில் வேதாரண்யம் கால்வாயில் பாலம் கட்டுதல். | 3·00 |



| வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்—தஞ்சாவூர் கோட்டம்—** | |
| (6) வேளாங்கன்னி-வேதாரண்யம் சாலையில் 6/7-வது மைல் முதல் 10/4-வது மைல் வரை கருங்கல் ஜல்லி பரத்தல். (அரசினர் எடுத்துக்கொண்ட பேருந்து வழித்தடச் சாலை). | 3·15 |
| **இராமநாதபுரம் மாவட்டம்—சிவகங்கை கோட்டம்—** | |
| (7) முதுகுளத்தூர்-சிக்கல் சாலையில் 0/0 மைல் முதல் 12/3 மைல் வரை கருங்கல் ஜல்லி பரத்துதலும் குறுக்கு நீர் வடிகால் அமைப்புகள் ஏற்படுத்தலும். | 3·70 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்—ஈரோடு கோட்டம்—** | |
| (8) அந்தியூர்-அம்மாபேட்டை சாலையில் 5/6-7 மைலில் பாலங்கட்டுதல். | 2·60 |
| **கோயமுத்தூர் மாவட்டம்—கோயம்புத்தூர் கோட்டம்—** | |
| (9) திருப்பூர் நகராட்சி எல்லைக்கும் உடுமலைப்பேட்டை-திருப்பூர் சாலையில் 38/4-வது மைலில் நொய்யல் ஆற்றுப் பாலத்தை அகலப்படுத்தல். | 5·75 |
| **தேசிய நெடுஞ்சாலை-நகர்ப்புற இணைப்பு—** | |
| (10) கரூர் நகராட்சி எல்லைக்குள் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (தே.நெ. எண். 7) 46/7-வது மைலில் உள்ள சந்திப்பைச் சீர்படுத்தி அமைத்தல். | 1·20 |
| மொத்தம் .. | 31·72 |

17. 1966–67-ம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்பட்ட முடிவுறுத வேலைகளுக்காகவும், புதிய வேலைகளுக்காகவும், 56·55 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்பட்ட முடிவுறுத வேலைகளுக்காகவும், புதிய வேலைகளுக்காகவும் ரூபாய் 52·72 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனம் 1967–68-ம் ஆண்டில் முடிக்கப்பட்ட வேலைகளில் சில வருமாறு :—

| தொடர் எண். | வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | மைல் 4/7 கோட்டாறு-தர்மபுரம் சாலையிலிருந்து காவிளை வாய்க்காலுக்கு சாலை அமைத்தல் (கன்னியாகுமரி மாவட்டம்). | 0·48 |
| (2) | குன்னூர்-கோத்தகிரி சாலையில் மைல் 0/1-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல் (நீலகிரி மாவட்டம்). | 2·30 |
| (3) | மைல் 17/4-ல் குன்னூர்-குந்தா சாலையில் அணைப்புச் சுவர் கட்டுதல் (நீலகிரி மாவட்டம்). | 0·23 |

1968–69-ம் ஆண்டில் 38·32 லட்ச செலவில், 13 புதிய வேலைகள் (6 பாலங்களும் 7 சாலை மேம்பாடு வேலைகளும்) 1-வது அட்டவணையில் விவரித்துள்ளவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. 1968–69-ம் ஆண்டில் இச் செலவுக்காக 10·00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மற்ற சாலைகள் (ஊராட்சி ஒன்றியங்களாலும் ஊராட்சிகளாலும் பேணப்பட்டு வருபவை).

8. முதலில் இந்தச் சாலைப் பணிகளை மேற்கொள்ள முன்னர் மாவடக் கழகங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மாவட்ட கழகங்கள் கலைக்கப் பட்ட பிறகு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்பிய வேலைகள் அனைத்தும் அரசாங்க வேலைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள (ஆனால் செலவு 160 இலட்சம் ரூபாய்க்கு மேலிடாமல் வரையறுக்கப்பட்ட) வேலைகள் தொடர்ந்து செய்யப்பட்டன. 1965–66-ம் ஆண்டில் மொத்தம் 28·94 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பதினாறு புதிய வேலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடரப்பட்ட வேலைகளுக்கும், புதிய வேலைகளுக்கும், மொத்தம் 170 இலட்சம் ரூபாய் செலவாகி உள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்பட்ட வேலைகளின் அளவு வருமாறு :—

| | |
|---|---|
| தார் சாலைகள் .. .. .. .. | 11 மைல்கள் (18 கிலோ மீட்டர்கள்). |
| புது ஜல்லி போட்ட சாலைகள் .. | 135 மைல்கள் (217 கிலோ மீட்டர்கள்). |
| புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் .. | 747 மைல்கள் (1,202 கிலோ மீட்டர்கள்). |
| பெரிய பாலங்கள் .. .. .. | 33 |
| சிறு பாலங்களும், வாராவதிகளும் .. | 259 |

19. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வாறான வேலைகளுக்காக 190 இலட்சம் ரூபாய் செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக 8 புதிய வேலைகளே மேற்கொள்ளப் பட்டன. இவற்றுக்காக 1966–67-ல் அனுமதி வழங்கப்பட்ட வேலைகளின் மொத்த மதிப்பீடு 25·58 இலட்சம் ரூபாய் (விவரம் 2-வது அட்டவணையில் உள்ளது). 1967–68-ல் 51·42 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 10 வேலைகளுக்கு (அட்டவணை 3-ல் குறிப்பிட்டுள்ளபடி) ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

1966–67-ம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்பட்ட முடிவுறாத வேலைகளுக்காகவும், புதிய வேலைகளுக்காகவும், ரூ. 13·33 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்பட்ட முடிவுறாத வேலைகளுக்காகவும் புதிய வேலைகளுக்காகவும் 23·66 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனம் 1967–68-ம் ஆண்டில் முடிக்கப்பட்ட வேலைகளில் சில வருமாறு :—

| வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. காரியப்பட்டி-திருச்சுழி சாலையில் மைல் 41/4-ல் படுகைப் பாலம் கட்டல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1·82 |
| 2. மேல் கொடுமானூர்-நல்லகுறிச்சி சாலையில் மைல் 1/1-ல் படுகைப் பாலம் கட்டல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1·18 |

### பராமரிப்பு.

20. ஊராட்சி ஒன்றியங்கள் பேருந்துகள் வழித்தடச் சாலைகளைத் தகுந்த முறையில் செலவு செய்து பராமரிக்க முடியாத நிலையிலிருக்கின்றன. ஆகையால் அவற்றுக்கு உதவி செய்யும் முறையில் அரசாங்கம் 1960–61-ம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 4,512 மைல் நீளமுள்ள



சாலைகளை அவற்றிடமிருந்து தானே மேற்கொண்டு மேம்படுத்தி பராமரித்து வருகிறது. 1968–69-ல் மேலும் 300 மைல் நீளமுள்ள சாலைகளை இவ்வாறு மேற்கொண்டு மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முந்திய ஆண்டுகளில் 250 மைல் நீளமுள்ள பேருந்து சாலைகளே எடுத்துக் கொள்ளப் பட்டன. அடுத்த நிதி ஆண்டில் 50 மைல் நீளமுள்ள அதிகப்படி சாலைகளை எடுத்துக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. 1968 எப்ரல் மாதம் 1-ம் தேதியில் மிகுதியுள்ள இத்தகைய சாலைகளின் மொத்த நீளம் 1,920 மைல்கள் (புதிதாக அண்மையில் பேருந்து வழித்தடச் சாலைகளாக அறிவிக்கப்பட்டதை தவிர) படிப்படியாக இவைகளையும் பராமரிப்புக்காக அரசாங்கம் மேற்கொள்ளும்.

21. 1968–69-ம் ஆண்டில் மாநிலச் சாலைகளுக்காக (அரசாங்கச் சாலைகள்) கோரப்படும் பராமரிப்புச் செலவுத் தொகை 4·96 கோடி ரூபாய். சென்னை மாநகர் சாலைகள் நீங்கலாக இத்தகைய சாலைகளை பேணி வருவதற்கு 1967–68-ல் 4·85 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தகைய பராமரிப்பு வேலைகளை மிகவும் சிக்கனமாக செய்து முடிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.

### கருவிகளும் தளவாடங்களும்.

22. சாலைகளை அமைக்கவும் செப்பனிடவும் பால வேலைகளுக்காகவும் தேவைப்படும் பல்வேறு கருவிகளும் தளவாடங்களும் வாங்குவதற்கும் செலவு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ஆய்வுக் கூடத்தில் நுட்பமான விஞ்ஞானக் கருவிகள் பல வாங்கப்பட்டுள்ளன. முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் இவ் வகையில் செலவிடப்பட்ட தொகையின் விவரம் வருமாறு :—

| | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. .. | 99 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. | 46 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. | 69 |

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வகையில் 60 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1966–67-ம் ஆண்டில், தொடர்ந்து செய்யப்படும் முற்றுப் பெறாத வேலைகளுக்காக 20·89 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1967–68-ம் ஆண்டில் தொடர்ந்து செய்யப்படும் முற்றுப் பெறாத வேலைகளைத் தவிர, புதிதாகக் கருவிகளும் தளவாடங்களும் வாங்க 6·50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1968–69-ம் ஆண்டுக்கு புதிதாகக் கருவிகளும் தளவாடங்களும் வாங்க 1·5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1966–67-ல் ஆண்டில் இவ்வகையில் 13·114 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1967–68-ம் இவ்வகையில் 7·7 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மத்தியச் சாலை நிதி (செலவு ஒதுக்கீடு).

23. இத் திட்டத்தின்கீழ், அரசாங்கச் சாலைகளிலும் மற்ற சாலைகளிலும் குறித்த வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்தியச் சாலை நிதி (ஒதுக்க நிதி) யிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு, இந்திய அரசு முழுமையாகவோ ஓரளவோ ஒதுக்க நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்குகிறது. எஞ்சியவற்றிற்கு மத்தியச் சாலை நிதி (செலவு ஒதுக்கீடு) யிலிருந்துதான் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் மாநிலத்தின் முதல், இரண்டாவது திட்டங்களுக்குப் புறம்பாகத் தனியே கவனிக்கப்பட்டது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் சாலைகளை மேம்படுத்தவும் பாலங்கள் கட்டவும் 405 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

24. பெரும்பாலும் இந்தச் செலவினங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர்ந்து செய்யப்பட்ட வேலைகளுக்கானவையே ஆகும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்தியச் சாலை நிதியில் (செலவு ஒதுக்கீடு) 73·25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 29 புதிய வேலைகளும், மத்தியச் சாலை நிதி (ஒதுக்க நிதி)யிலிருந்து 55·75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 16 புதிய வேலைகளும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இந்த 55·75 இலட்சம் ரூபாயில் 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு நிதிக்குச் சாரக் கூடியது.

25. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ் வகையில் முடிக்கப்பட்ட வேலைகளின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| தார் சாலைகள் .. .. .. .. | 5 மைல்கள் (8 கிலோ மீட்டர் கள்). |
| புதிய சாலைகள் அமைப்பு .. .. | 5 மைல்கள் (8 கிலோ மீட்டர் கள்). |
| புதிதாக கற்பரத்தல் செய்த வேலைகள். | 70 மைல்கள் (113 கிலோ மீட்டர் கள்). |
| பெரிய பாலங்கள் .. .. .. | 27 |
| சிறு பாலங்களும், வாராவதிகளும். .. | 10 |
| மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தில் செலவழிக்கப்பட்ட தொகை. | ரூ. 149 இலட்சம். |

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு, முடிவுருத வேலைகளைச் செய்து முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இவற்றுக்குத் தேவைப்படும் தொகை 76·10 இலட்சம் ரூபாய். இந்திய அரசு 1966–67-ம் ஆண்டில், கீழ்க்காணும் இரு புது வேலைகளை மட்டுமே மத்தியச் சாலை நிதி (செலவு ஒதுக்கீடு) யிலிருந்து செலவு செய்து முடிக்க அனுமதி வழங்கி உள்ளது.

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | பெரம்பலூர்-மானுமதுரை சாலையில் (தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி மாவட்ட எல்லை) திருமானூர் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் படுகைப் பாலம். | 44·00 |
| 2. | கிழக்குக் கடற்கரைச் சாலையில் கோவளம் அருகே கட்டப் படும் பாலம். | 25·00 |

1966–67-ம் ஆண்டில் மத்தியச் சாலை நிதியின் (செலவு ஒதுக்கீட்டின்) கீழ் 25·71 இலட்சம் ரூபாயும், மத்திய சாலை (ஒதுக்க) நிதியின் கீழ் 6·82 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டது. 1967–68-ல் மத்தியச் சாலை நிதியின் (செலவு ஒதுக்கீட்டின்) கீழ் 10·55 இலட்சம் ரூபாயும், மத்தியச் சாலை (ஒதுக்க) நிதியின் கீழ் 11·55 இலட்சம் ரூபாயும் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாண்டில் முடிக்கப் பெற்ற வேலைகள் வருமாறு :—

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவுத் தொகை. (ரூபாய் (இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம்-திருப்போரூர் சாலையில் மைல் 1/6-ல் படுகை பாலம் கட்டல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 2·50 |
| 2 | விளாத்திக்குளம்-வேம்பார் சாலையில் மைல் 0/0—13/7ஐ கருங்கல் ஜல்லி சாலை 6 அங்குலம் போட்டு மேம்பாடு செய்தல் (திருநெல்வேலி மாவட்டம்). | 5·22 |



நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்தியச் சாலை நிதியில் (ஒதுக் கீட்டிலிருந்தும் தனி ஒதுக்க நிதியிலிருந்தும்) மேற்கொள்ளப்படும் புதிய வேலைகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 213·57 இலட்சம் ரூபாய் செலவில் 26 வேலைகளை மத்திய சாலை நிதி (ஒதுக்கீடு) யிலிருந்தும், 69 இலட்சம் ரூபாய் செலவில் 6 வேலைகளை மத்திய சாலை (ஒதுக்க) நிதியிலி ருந்தும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்து முடிக்கத் தமிழ்நாடு அரசாங்கத்துக்குத் திட்டம் பணிந்தனுப்பப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**பொருளாதார பல மாநில முக்கியத்துவம் கொண்ட சாலைத் திட்டங்கள்.**

26. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலை வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசினால் தொடங்கி நடத்தப்படுபவை.

27. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவுருத வேலைகள் யாவும் மூன்றுவது திட்டக் காலத்தில் தொடர்ந்து செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்கப்பட்ட வேலைகளின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| புதிய சாலைகள் அமைத்தல் .. .. | 10 மைல்கள் (16 கிலோ மீட்டர் கள்). |
| தார் போடுதல் .. .. .. | 9 மைல்கள் (15 கிலோ மீட்டர் கள்). |
| புதிதாக கல்பரத்தப்பட்ட சாலைகள் .. | 2 மைல்கள் (3 கிலோ மீட்டர் கள்). |
| பெரும் மேம்பாட்டு வேலைகள் .. | 3. |

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை 44·79 இலட்சம் ரூபாய். இதில் 31·77 இலட்சம் ரூபாய் மாநில அரசாங்கம் பங்கு. 12·99 இலட்சம் ரூபாய் மத்திய அரசின் பங்கு.

28. சேலம், தருமபுரி மாவட்டங்களில், இத்திட்டத்தின் கீழ் 31·50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரு புதிய வேலைகளுக்கு மூன்றும் திட்டக் காலத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டன. இந்திய அரசு இத்திட்டத்தின் கீழ் மானியமாக வழங்க ஒப்புக் கொண்ட தொகை 31·50 இலட்சம் ரூபாய். முடிவுருத இவ்விரு வேலைகளையும் 1966–67-லும் 1967–68-ல் செய்து முடிக்கப்படவிருக்கிறது.

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | சென்னை மாநில எல்லையில் உள்ள மேட்டூரை மைசூர் மாநிலத்தில் உள்ள மாதேசுவரத்துடன் குளத்தூர் வழியே இணைக்கும் சாலையில் தமிழ்நாட்டுப் பிரிவுக்கு மேம்பாட்டு வேலைகள். | 17·00 |
| 2 | தீர்த்தம்-பேரிகை சால்யை அமைத்தலும் பாலங்கள் கட்டு தலும். | 14·50 |
| | மொத்தம் .. | 31·50 |

1966–67-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு கீழ்க்கண்ட ஒரு வேலையை மட்டுமே அனுமதித்துள்ளது :—"சென்னையிலிருந்து கன்னி யாகுமரிக்கும் செல்லும் கீழ் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலி — —

மரக்காணம் வரை தென் ஆர்க்காடு மாவட்ட எல்லை வரை இணைக்கப் பெருத பகுதிகளை அமைத்தல்." இந்த வேலையின் செலவு மதிப்பு 32 இலட்சம் ரூபாய். மத்திய அரசு இவ்வேலைக்கான செலவில் பாதிப் பங்கை 16 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் மானியமாக வழங்கமுன் வந்துள்ளது. மிகுதியை மாநில அரசாங்கம் ஏற்க வேண்டும். இது கீழ்க் கடற்கரைச் சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியே. கீழ்க் கடற்கரைச் சாலை முழுவதையும் அமைக்கும் 14 கோடி ரூபாய் திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசிட மிருந்து பெற்று 1966-67-ல் செலவிடப்பட்ட தொகை 7·40 இலட்சம் ரூபாய் ஆகும். 1967–68-ம் ஆண்டில் 7 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுங்கவரி.

29. மலைப் பாதைகளுக்கும், பாலங்களுக்கும் சுங்கவரி விதிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்தது. பத்து இலடசம் ரூபாய் மதிப்பிற்குட்பட்ட பாலங்களுக்கும் மலைப் பாதைகளுக்கும் சுங்கவரி விதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது. 1965–66-ம் ஆண்டில் இருந்து பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட பாலங்களுக்கு மட்டுமே சுங்கவரி விதிக்கப்படும். இவைகளிலும் குறிப்பிட்ட வகையான வண்டிகளுக்கு சுங்க வரியினின்று விலக்களிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

### இரயில் பாதை சாலைக் கடவில் மேம்பாலமோ சுரங்கப் பாதையோ அமைத்தல்.

30. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபாயில் கீழ்க்காணும் இரு வேலைகள் சென்னை நகரில் மேற்கொள்ளப் பட்டன :—

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் ஒரு மேம்பாலம் கட்டுதல். | 48·20 |
| 2 | சென்னை உயர்நீதி மன்றம் அருகே ஸ்ப்ரிங் ஹெவன் சாலையில் ஒரு சுரங்கப் பாதை அமைத்தல். | 69·30 |

அந்த இரு வேலைகளும் இப்போது முடிக்கப்பட்டு, போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றும் திட்டத்தில் முடிவு பெருத ரூபாய் 17·33 இலட்சம் மதிப்புள்ள வேலை 1966–67-ம் ஆண்டில் உயர்நீதி மன்றம் அருகே ஸ்ப்ரிங் ஹெவன் சாலையில் உள்ள சுரங்கப் பாதைக்காகத் தொடர்ந்து செய்யப்பட்டது. 1966–67-ம் ஆண்டில் இதற்காகச் செலவிடப் பட்ட தொகை 15·18 இலட்சம் ரூபாய்.

31. திட்ட வேலைகளின் கீழ் வராமல் 39 இலட்சம் ரூபாய் செலவில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் மேம்பால வேலை ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இதற்கான செலவில் 50 சதவீதம் மாநில வீட்டு வசதி வாரியம் கொடுப்பதற்கு முன் வந்தது. இவ் வேலை இப்போது முடிக்கப்பட்டு போக்கு வரத்துக்குப் பயன்பட்டு வருகிறது.

32. 1967–68-ம் ஆண்டில் புதிய வேலை எதுவும் ஒப்பளிப்புக்கு அனுப்பப் படவில்லை. இவ் வாண்டில் 0·55 இலட்சம் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### தலைநகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

33. சென்னை நகரம் நிலப்பரப்பிலும், மக்கட் தொகையிலும் பெருகிக் கொண்டே வருகிறது. வேகமாக செல்லும் கார், பேருந்து போன்ற வண்டிகளின் தொகை கூடிக் கொண்டே வருகிறது. ஆகையால், போக்கு வரத்து மிகுந்த நேரங்களில் நெரிசல் மிக அதிகமாகி சிரமம் உண்டாகிறது. நகர் அமைப்புத் திட்டம் வகுக்கும் துறையினர் இதற்காக பேரளவில் தலை நகர்ப்புறம் ஒன்றை அமைக்க, அளவைக் கணக்குகள் சிலவற்றைத் தயா ரித்துள்ளார்கள். இதன்படி, சென்னை மாநகராட்சி எல்லையைச் சேர்ந்த பகுதி, சைதாப்பேட்டை வட்டம் முழுவதும், ஸ்ரீபெரும்புதூர், பொன்னேரி, திருவள்ளூர், செங்கற்பட்டு தாலூக்காக்களின் சில பகுதிகள் அணைந்த 450 சதுர மைல் பரப்புள்ள இடம் சென்னைக்குரிய பெருநகர்த் திட்டம் ஒன்றை உருவாக்கத் தேவைப்படும். இந்தப் பகுதியில் செல்லும் போக்குவரத்து, வண்டிகள் ஓட்டம் குறித்த சிக்கல்கள் யாவையும் கவனிக்கப்பட்டு வழிப் படுத்தப்படும். இப்பணியை நெடுஞ்சாலைத் துறையினர், மாநகராட்சி காவல் (சாலை போக்குவரத்து ஒழுங்குப் பகுதி) துறையினர் ஆகியோர் மேற் கொள்ளுவார்கள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டக் குழு தலை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்காக 6·63 கோடி ரூபாய் அளிக்கப் பரிந் துரைத்துள்ளது. திட்டமிடப்பட்டுள்ள முக்கியமான திட்டங்கள் வருமாறு:—

(1) தொழிற்சாலைகள் அமைந்த பகுதியை மூன்று தேசிய நெடுஞ் சாலைகளுடன் இணைத்தல், அதாவது நகரின் உள்ளேயும், வெளியேயும் சுற்றுப் பாதைகள் அமைத்தல்.

(2) புதிய சாலைகள் அமைத்தல்.

(3) துறைமுகத்தோடு இணைக்கும் முக்கியமான சாலைகளை மேம் படுத்துதல்.

(4) முக்கிய சாலைகளில் பாலங்களை மேம்படுத்துதல்.

(5) சாலைகளில் முக்கியமான இடங்களில் நடந்து செல்வோர் கடக்க, மேம்பாலங்களோ, சுரங்கப் பாதையோ அமைத்தல்.

(6) சாலை சந்திப்புக்களை ஒழுங்கு படுத்துதல்.

(7) கார், வண்டிகளை நிறுத்த இடம் அமைத்தல்.

(8) சாலைப் போக்குவரத்தை வழிப்படுத்தும் சாதனங்களை நிறுவுதல்.

(9) சாலைகளின்கண் ஆங்காங்கு ஒதுங்குமிடம் அமைத்தல்.

(10) சாலைப் பாதுகாப்பும் அதற்குரிய கல்விப் பயிற்சிகளும்.

(11) நடந்து செல்வோரை வழிப்படுத்தும் காப்பு வேலிகள் அமைத்தல்.

(12) சாலை விபத்துக்களை ஆராய்ந்து தவிர்க்க குழு அமைத்தல்.

(13) இருப்புப்பாதை-சாலைக் கடவுகளில் மேம்பாலமோ சுரங்கப் பாதையோ அமைத்தல்.

இவைகளை நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சி, காவல் (சாலைப் போக்கு வரத்து ஒழுங்குப்பகுதி) துறையினர் ஆகியோர் செயல்படுத்துவார்கள். முறையே 442·50 இலட்சம் ரூபாய், 174·38 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் அவர்களால் தத்தம் பங்குக்குச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வகையில் அனுமதி வழங்கப்பட்ட வேலைகள் 4-வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

34. சென்னை நகரில் கண்ணம்மாப்பேட்டை சாலையில் சுரங்கப் பாதை அமைப்பதற்கான திட்டம் சென்னை மாநராட்சியின் பரிசீலனையில் உள்ளது. துரைசாமி ஐயர் சாலையில் சுரங்கப்பாதை அமைப்பதற்கு மாநில அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. கண்ணம்மாப்பேட்டை சாலை சுரங்கப்பாதை மதிப்

பீடு சென்னை நகரசபையால் தயாரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துக் கணக்கீடுகளின்படி கீழ்க்காணும் இடங்களிலும், அவைகளின் அதே முக்கியத்துவ முறைப்படி சுரங்கப் பாதையோ மேம்பாலமோ அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது:—

(1) கெங்குரெட்டி சாலை.

(2) ஜோன்ஸ் சாலை.

(3) ஹாரிங்டன் சாலை.

(4) ஏரிக்கரை சாலை.

தலைநகர்ப்புற வளர்ச்சித் திட்டப்படி நான்கு மேம்பாலங்களோ, சுரங்கப் பாதையோ அமைக்கப்படவிருக்கிறது. தங்கள் பங்குக்குக் கீழ்க்காணும் செலவுத் தொகைக்குத் தற்காலிகமாக இரயில்வே துறையினர் ஒப்புதல் வழங்கி இருக்கிறார்கள் :—

| | ரூபாய் (இலட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 .. .. .. .. .. .. | 9·76 |
| 1968–69 .. .. .. .. .. .. | 10·69 |
| 1969–70 .. .. .. .. .. .. | 12·20 |
| 1970–71 .. .. .. .. .. .. | 13·01 |

35. மணலி அருகே நிறுவப் போகும் எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் சாலையை இணைக்கும் திட்டத்திற்கு தனிக்கோட்டம் ஒன்று நிறுவ அண்மையில் தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1967–68-ல் தலைநகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு திருத்த மதிப்பீட்டில் ரூ. 17·86 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புறச் சாலைகள்.

36. கிராமப்புறச் சாலைகளின் பணிகளுக்காக ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பெறும் நிதியிலிருந்து கிராம இணைப்புச் சாலைகளும், குடிநீர்த் திட்டங்களும், மேற்கொள்ளப்படுகின்றன. இணைப்புச் சாலைகளுக்குரிய வேலைகள், புதிய கிராமச் சாலைகள் அமைத்தல், ஏற்கனவே அமைந்துள்ள சாலைகளுக்கு செம்மண் இடுதல் அல்லது கற்கள் இட்டுப் பரத்தல், வாராவதிகளும் சிறு பாலங்களும் கட்டுதல், படுகைப் பாலம் அமைத்தல் ஆகியவையாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென முதலில் ஒதுக்கப்பட்ட தொகை 15 கோடி ரூபாய். பின்னர் இதே தொகையை ஐந்து ஆண்டுகளுக்குப் பதிலாக நான்காவது திட்ட முதலாண்டு உள்ளிட்ட ஆறு ஆண்டுகளுக்குச் செலவு செய்யலாம் என ஆணையிடப்பட்டது. இவ் வகையில் 1966–67 வரை செலவிடப்பட்ட தொகை 635 இலட்சம் ரூபாய். 1967–68-ல் செப்டம்பர் 1967 முடிய செலவு செய்யப்பட்ட தொகை 43·59 இலட்சம் ரூபாய்.

### நெடுஞ்சாலை ஆய்வுக் கூடம்.

37. சென்ற ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும், நெடுஞ்சாலை ஆய்வுக்கூடம், சாலைகளில் வேலை செய்யுமிடத்திலும், சோதனைச் சாலையிலும், ஆராய்ச்சிகள் நிகழ்த்தி, சிக்கனமான முறையில் நன்கு பலன் தரக்கூடிய பொருட்களையும் அவற்றின் பலனையும் குறித்து, கணக்கீடுகளையும் செய்முறைகளையும் வகுத்தது.





மண் ஆராய்ச்சிப் பகுதியில் கட்டிடங்களின் கடைகால் நிறுவுவதற்குரிய மண் சோதனைகள், சென்னை மாநிலத்தில் உள்ள பல்வேறு மண் அமைப்புகளைக் குறித்த விவரம் சேகரித்தல், மண்களை வலுப்படுத்திச் சாலைகள் அமைக்கும் செய் முறைகள், இவை பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டன. வெளித் துறைகளுக்கு வேண்டிய மண் ஆராய்ச்சி வேலைகளும் இந்த ஆராய்ச்சி பகுதியில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

நிலக்கீல் ஆராய்ச்சிப் பகுதியில், சாலைகள் நிறுவுவதில் நிலக்கீல் பயன், அவற்றின் இயங்கு திறன், நிலக்கீல் காங்கிரிட் சாலைகளில் நிரப்பு பொருளாக சாம்பல் எரிபொருட் கழிவுகளைப் பயன்படுத்தல் இவை பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டன.

சரளைக் கற்கள் ஆராய்ச்சிப் பகுதியில், மாநிலத்தின் வெவ்வேறு கற்சுரங்கங்களினின்று எடுக்கப்பட்ட கற்களின் தேய்மானம், மற்ற பண்புகள் குறித்து சோதனைகள் நிகழ்த்தப்பட்டன. சாலையில் வழுக்குதலைத் தடுத்து நிறுத்துவது குறித்து பலவகை மேற் பரப்புகள் அமைக்கும் ஆய்வுகள் நிகழ்ந்தன.

தார் ஆராய்ச்சிப் பகுதியில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்திலிருந்து துணைப் பொருளாகக் கிடைக்கும் தாரினைச் சாலைகளுக்குப் பயன்படுத்துவது குறித்து ஆய்வுகள் நிகழ்த்தப் பட்டன. நெய்வேலியில் சில பகுதிகளில் இத்தகைய தாரினைப் பயன்படுத்திச் சோதிக்கப்பட்டது. இந்தச் சாலைகள் எவ்வளவு தூரம் பயன் தரக்கூடியவை, எவ்வாறு உழைக்கக் கூடியவை, என்பது இப்போது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கான்கிரீட் கட்டிட அமைப்பு ஆராய்ச்சிகள் நிகழும் பகுதியில், கான்கிரீட் மாதிரிகளைச் சோதித்தல், செங்கற் கலவைப் பொருட்களுக்கு களிமண்ணின் உபயோகம், முறுக்கேற்றப்பட்ட கம்பிகளை வலுவேற்றி கான்கிரீட் உத்தரங்களுக்கு உபயோகித்தல் ஆகியவை குறித்து ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன.

போக்குவரத்து வழிப்படுத்துதல் குறித்த ஆய்வுப்பகுதியில், சாலைகளில் குறியிடப் பயன்படுத்தும் வர்ணப் பொருள், சிக்கனச் செலவு முறைகள், வேகம், தாமதம் குறித்த சோதனைகள், நடந்து செல்வோரின் இயக்கப் பண்புகள் ஆகியவை ஆராயப்பட்டன. சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து தாம்பரம் இரயில் நிலையம் வரை உள்ள பகுதியில் மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களையும், அவற்றின் முறை வைப்பு குறித்தும், பார்வையிடலும் கணக்கிடுதலும் மேற்கொள்ளப்பட்டன.

### கருவிகள் தளவாடங்களைப் பேணிவரும் கோட்டம்.

38. இந்தப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் பணிகளுக்குத் தேவையான கருவிகளும், தளவாடங்களும் தயாரிக்கப்படுகின்றன. அவற்றைப் பழுது பார்த்துப் பராமரிக்கும் வேலையும் செய்யப்படுகிறது. நிலக்கீல் வேலைகளுக்கான உருளைக் கலவை இயந்திரம், பல அளவைகளில் தார் காய்ச்சும் கலன்கள், கையால் துளையிடும் கருவிகள், பின்னால் கட்டி இழுத்துச் செல்லப்படும் வண்டிகள், குளிர்ந்த ஆஸ்பால்ட் கலவை இயந்திரங்கள், நெடுஞ்சாலை ஆய்வுக் கூடத்துக்குத் தேவையான கருவிகள், கான்கிரீட் கலவை இயந்திரங்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. தவிர உள்ளாட்சி மன்றங்களுக்காகவும் அரசாங்கத்தின் ஏனைய துறைகளுக்காகவும், உருளைக் கலவை இயந்திரம், கையால் தள்ளும் சிறுவண்டி கழிவுப் பொருள் குவிக்கும் கலன் ஆகியவை போன்ற தளவாடங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன.

## போக்குவரத்துப் பொறியியல் பகுதி.

39. இப் பகுதியில், சென்னை மாநகரில் வெவ்வேறு சாலை சந்திப்புகளிலும் முக்கிய சாலைகளிலும் பார்வையிடலும், கணக்கிடுதலும் நடத்தப்பட்டன. மாநகராட்சி காவல் (போக்குவரத்து ஒழுங்கு) துறை, ஆகியோரின் துணை கொண்டு தகுந்த செய்முறைகளும், போக்குவரத்தை வழிப்படுத்தும் அமைப்புகளும் போக்குவரத்துப் பொறியியல் கோட்டப் பொறியாளரால் திட்டமிடப்பட்டன.

## சாலைத் திட்ட ஆய்வு வட்டம்.

40. மாநிலத்தின் முக்கியமான சாலைத் திட்டங்களையும் பாலங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளுமுன் அவற்றுக் குரிய மதிப்பீடுகளையும் வரை முறைகளையும் தயார் செய்ய, முன்னோடியான ஆய்வுகளை அவற்றுக்குரிய தலத்தில் நிகழ்த்திக் கணக்கிடுதல் இவ் வட்டத்தின் முக்கிய பணியாகும். கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் வேலைகளுக்காக தனியே ஒரு கோட்டம் இருக்கிறது. இதுவும் ஆய்வுத் துறைவட்டப் பொறுப்பிலுள்ளது. 1967–68-ம் ஆண்டில் இவ்வாறு ஆய்வுகள் நடத்த மதிப்பீடுகளைத் தயாரித்த விவரம் வருமாறு.—

| | பணிகளின் எண்ணிக்கை. | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட திட்டங்கள். | 160 | 2,120 |
| தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட விவரமான மதிப்பீடுகள். | 48 | 317 |
| மதிப்பீடுகளைத் தணிக்கை செய்து தொழில் நுட்ப அனுமதி வழங்கிய வேலைகள். | 64 | 21 |

## பொதுப் பணித்துறை—கட்டிடங்கள் 1967–68-ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை.

தமிழக அரசின் பல்வேறு துறையினருக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டித்தரும் பொறுப்பு பொதுப் பணித்துறையின் கட்டிட அமைப்புப் பகுதியைச் சார்ந்ததாகும். பிற துறையினரின் தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி, அவைகளைச் செயல்படுத்துவது பொதுப் பணித்துறையின் கடமையாகும். இவைகளைத் தவிர மத்திய அரசுக்காகவும், அரசு உரிமை பெற்ற நிறுவனங்களுக்காகவும் சில வேலைகளைச் செய்து வருகிறது. தமிழகத்தில் உள்ள அரசினர் கட்டிடங்களையும் இத் துறையே பராமரித்து வருகிறது.

இருபத்தேழாவது கோரிக்கையில் கண்டுள்ள தொகை, ரூ. 20,000 வரை மதிப்புள்ள புதிய கட்டிட வேலைகள் அனைத்தையும் கொண்டது. மத்திய அரசு உதவி அளிக்கும் திட்டங்களில் அந்த உதவியின் அளவுக்குச் செலவினங்களை மூலதனக் கணக்கிலிருந்து வருவாய்க் கணக்கிற்கு இங்கே திரும்ப எழுதப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறை பராமரித்து வரும் கட்டிடங்களின் பராமரிப்புச் செலவு, சொத்து வரி ஆகியவை இந்தக் கோரிக்கையில் இடம் பெறுகின்றன. இந்தத் தலைப்பின்கீழ் 1967–68-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 52·75 இலட்சம் ரூபாயாகும். இதற்குரிய திருத்திய மதிப்பீடு இப்பொழுது 47·64 லட்சம் ரூபாயாகும்.

"50. டி. பழுது பார்த்தல்" என்ற தலைப்பில் 1967–68-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 78 இலட்சம் ரூபாய். இதற்குரிய திருத்திய மதிப்பீடு இப்பொழுது 80 இலட்சம் ரூபாய். இந்தச் செலவினம் பொதுப் பணித்துறை மேற்கொண்டுள்ள கட்டிடங்களின் பராமரிப்புச் செலவு,



சொத்து வரி, தனிப்பட்ட பழுது பார்க்கும் வேலைகள் ஆகியவைக்கு உரியது. 1967-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதிய கணக்குப்படி பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இருக்கும் கட்டிடங்களின் மெத்தமதிப்பு 31·57 கோடி ரூபாய். இத் தலைப்பின் கீழ் செவுகள் கூடியவரை சிக்கனமாகவும் அதே சமயம் அவசியமான வேலைகளைத் தரம் குறையாமல் செய்து பழுது பார்க்கும் வகையிலும் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

1967–68-ம் ஆண்டு , ரூ. 20,000-க்கு மேல் மதிப்புள்ள கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 262·17 இலட்சம் ரூபாய். இதற்குரிய திருத்திய மதிப்பீடு 321 ·86 இலட்சம் ரூபாய்.

**மருத்துவம்**—மூலதனச் செலவுகளில் பெரும்பகுதி மருத்துவ நிலையங்களுக்காகவும், மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்காகவும் தேவையான கட்டிடங்களுக்கே செலவிடப்படுகிறது. இந்தக் கட்டிடங்களுக்காக 1967–68-ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் 109·71 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் படிப்படியாகக் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. செங்கற்பட்டிலும், திருநெல்வேலியிலும் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொன்றுக்கும் 28 இலட்சம் ரூபாய் செலவில் கல்லூரிக்கு உரிய கட்டிடங்கள், மாணவர் விடுதி, ஆசிரியர்கள் குடியிருப்பு ஆகியவை முதற்படியாகச் செய்து முடிக்கப்பட்டன. இக் கல்லூரி கட்டிடங்களில் இரண்டாது படியாக, முறையே 12·90 இலட்சம் ரூபாய், 17·80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன. இவை அடுத்த நிதியாண்டின் முற்பகுதியிலேயே முடிவடையும். மூன்றுவது படியாக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு 13·60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களும் கட்டுவதற்கு அரசினர் ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்படியாகக் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு 12·54 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள் (மாணவர் விடுதி தவிர) இந்த ஆண்டு முடிக்கப்பட்டன. மாணவர் விடுதி முடியும் நிலையில் உள்ளது. இந்த ஆண்டு, இரண்டாவது படியாக, ஒப்பளிக்கப்பட்ட கட்டிடங்களின் மதிப்பு 18·40 இலட்சம் ரூபாயாகும். இந்தக் கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டத் தொடங்கி, 1968–69-ல் முடிக்கப்படும்.

சென்னை நகரிலே, தலைமை பொது மருத்துவ மனையில், இருதய நோய் சிகிச்சைப் பகுதிக்கான கட்டிடம் 16·00 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றது ; கடைக்கால் பணிகள் முடிக்கப்பட்டு, மேல் கட்டுமானம் தொடங்கப் பட்டுள்ளது. மூளை, நரம்பு அறுவை சிகிச்சைக்கான கட்டிடம் கட்டுவதற்கு ஏழு இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தலைமைப் பொது மருத்துவ மனையில், கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எழும்பூர், கண்நோய் சிகிச்சை மருத்துவ மனையில், 14·09 இலட்சம் ரூபாய் மதிப்பில், வந்து செல்லும் நோயாளிகள் பகுதிக்கான கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது ; 1968–69-ல் முடிக்கப்பட்டுவிடும்.

எழும்பூர், தாய் சேய் மருத்துவ மனையில் 26·36 இலட்சம் ரூபாய் மதிப்பில் குழந்தைகள் சிகிச்சைப் பகுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மனநோய் மருத்துவ மனையில் கடுமையான நோய் கண்டவர்களுக்காக, வந்து செல்லும் நோயாளிகள் பகுதி, 6 இலட்சம் ரூபாயிலும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், வெள்ளி விழா அரங்கு 5 இலட்சம் ரூபாயிலும் முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

இராயப்பேட்டை, மருத்துவ மனையில், சுமார் 6¼ இலட்சம் ரூபாய் மதிப்பில், முடநீக்கு இயல் பகுதி, எக்ஸ்-கதிர் பகுதி முதலியனவற்றுடன் கூடிய மூன்று மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அதற்கான கடைக்கால் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், கீழ்க் குறிப்பிட்ட கட்டிடங்களும் முடிக்கப்பட்டுள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில், 50 மாணவிகள் தங்க, கூடுதல் விடுதிக் கட்டிடங்கள். | 2·50 |
| (ஆ) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், 100 மாணவர்கள் தங்கக் கூடுதல் விடுதிக் கட்டிடங்கள். | 5·25 |
| (இ) திருச்சிராப்பள்ளி, மாவட்ட தலைமை மருத்துவ மனையில் பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை குழந்தைகள் சிகிச்சைப் பகுதிக்கான கட்டிடம். | 2·20 |

கட்டிடப் பணிகள் நடைபெற்று வரும், சில பெரிய வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (அ) சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில், நோய்க் குறியியல் மற்றும் கிருமி இயல் பகுதிக்கான கட்டிடம். | 3·50 |
| (ஆ) சென்னை, மனநோய் மருத்துவ மனையில் காச நோய் சிகிச்சைப் பகுதிக்கான கட்டிடங்கள். | 2·00 |
| (இ) ஆம்பூரில் அரசினர் மருத்துவ மனைக்கான புதிய கட்டிடங்கள். | 7·59 |
| (ஈ) ஸ்ரீபெரும்புதூரில், அரசினர் மருத்துவ மனைக்கான புதிய கட்டிடங்கள். | 9·20 |

அறந்தாங்கியில், அரசினர் மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் 8·72 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது ; தொகை ஒதுக்கீடு இல்லாததால் இந்த வேலை இந்த ஆண்டு தொடங்கப்படவில்லை ; 1968–69-ல் எடுத்துக் கொள்ளப்படும். மற்றும், தேவக்கோட்டை, தேனி, தாம்பரம், திருத்தணி ஆகிய இடங்களில், அரசினர் மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் அரசின் ஆலோசனையில் உள்ளன. இந்த வேலைகள் 1968–69-ல் எடுத்துக் கொள்ளப்படலாம்.

**தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டங்கள்.**—இத் திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டும் பொறுப்பை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி நிறுவனம் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைத்துள்ளது. கட்டிடங்களுக்கான எல்லாச் செலவுத் தொகையும் ஈட்டுறுதி நிறுவனத்தாரால் ஏற்கப்படுகின்றது. இதுகாறும், இத் திட்டத்தின்படி, அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீடு சுமார் 4·90 கோடி ரூபாயாகும் ; இதில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி முடிய சுமார் 3·35 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்ட முப்பத்தாறு மருந்தகக் கட்டிடங்களில், முப்பத்திரண்டு மருந்தகக் கட்டிடங்கள் முடிக்கப்பட்டு மருத்துவத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மருந்தகங்களைத் தவிர தங்கி சிகிச்சை பெறுவதற்காக, மருத்துவ மனைகள் கட்டப்பட்டுள்ளது. ஐந்நூறு படுக்கைகள் கொண்ட, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவ மனை யொன்று, சென்னை கீழ்ப்பாக்கத்தில் சுமார் எழுபது இலட்சம் ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளது ; கூடுதல் மின் உயர்த்திகள் அமைக்கும் வேலையும், பனிக்கட்டி மற்றும் குளிர்ப்பதன சேமிப்பு வசதியடங்கிய கட்டிடங்கள் கட்டும் வேலையும் நடைபெற்று வருகின்றன.



கோயம்புத்தூர் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் முடிவடையும் நிலையில் உள்ளது ; நீராவிச் சலவைச் சாலை, பனிக்கட்டி மற்றும் குளிர்ப்பதன சேமிப்பு வசதி ஆகியவற்றுக்கான கட்டிடங்கள், கட்டப்பட வேண்டும். இதுவரை அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீடு சுமார் 132·44 இலட்சம் ரூபாயாகும்.

மதுரையில் இரு அறுவை சிகிச்சை அரங்குப் பகுதி உள்பட, எல்லா கட்டிடங்களும் முடிக்கப்பட்டுவிட்டன. தற்போதுள்ள தொற்று நோய் மருத்துவ மனையினை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவ மனையுடனும் இணைக்க, மேம்பாட்டுப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை ; தொற்று நோய் மருத்துவ மனை வேறு கட்டிடங்கட்கு மாற்றப்பட்ட பிறகு இந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

பதின்மூன்று அரசினர் மருத்துவ மனையில், தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் நோயாளிகளுக்காக, பதினாறு படுக்கைகள் கொண்ட பகுதிக்கான கட்டிடங்களும், பெண்ணாத்தூரில் 26 படுக்கைகள் கொண்ட காச நோய் சிகிச்சைப் பகுதிக்கான கட்டிடங்களும், கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், பல இடங்களில் மருந்தகங்கள் மற்றும் சென்னை, கோடம்பாக்கம்-புதூரில், தென் சென்னை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவ மனை, ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் அமைக்கும் திட்டங்கள் நிறுவனத்தின் ஆய்வில் உள்ளன.

**ஆரம்பச் சுகாதாரர் நிலையங்கள்.**—1962, தேசிய நெருக்கடிக்குப் பிறகு, புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்ட எதும் அனுமதி அளிக்கப்படவில்லை ; அப்போது நடைபெற்று வந்த பணிகளே தொடர்ந்து முடிக்கப்பட்டன. தற்போது ஆரம்ப நல நிலையங்களுடன் இணைந்த குடும்பநல திட்ட நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல், குடும்ப நலத் திட்ட துணை நிலையங்கள் அமைத்தல் ஆகியவை அரசின் ஆய்வில் உள்ளது. இவைகட்கு, மத்திய அரசின் மானியம் கிடைக்கும் ; கிடைத்தவுடன் பணிகள் துவக்கப்படும்.

**விவசாயம்.**—மதுரையில் இரண்டாவது, விவசாயக் கல்லூரிக்கான கட்டிடங்கள் சுமார் 31·87 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மதுரையில் இயந்திரக் கலப்பை பட்டறைக்கான கட்டிடங்கள் சுமார் 2·4 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்க, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கால்நடைப் பராமரிப்பு.**—ஊட்டியில், 12 இலட்சம் ரூபாய் செலவில் அரசினர் பாற்பண்ணைக்கான கட்டிடங்கள் அனைத்தும் ஏறக்குறைய முடிக்கப்பட்டுள்ளன. சென்னை, கால் நடை மருத்துவக் கல்லூரியில், சுமார் நான்கு இலட்சம் ரூபாயில் ஊண் சோதனை நிலையக் கட்டிடம் முடிக்கப்பட்டுள்ளது.

**மீன்வளம்.**—நீலங்கரை, கோவளம் ஆகிய இடங்களில், பனிக்கட்டி மற்றும் குளிர்ப்பதன சேமிப்பு சாதனங்கள் கொண்ட கட்டிடங்கள் முறையே 63,250 ரூபாய், 60,500 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இராயபுரத்தில், படகு கட்டும் துறைக்கு முதற்படியாகக் கட்டிடங்கள் எண்பதாயிரம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

கீழ்க்குறிப்பிட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

| | ரூபாய். |
|---|---|
| (அ) தூத்துக்குடியில், மீன் பிடிப்பு பயிற்சி நிலையத்தை விரிவாக்க, கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | 50.000 |
| (ஆ) அடையாற்றில், மீன்பிடிப்பு பயிற்சி நிலையத்தை விரிவாக்க, கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | 82 00 |

| | ரூபாய். |
|---|---|
| (இ) வீடூரில் (ரூ. 60,000), கோமுகியில் (ரூ. 71,900) மற்றும் பூஞ்சன் சதுப்பு நிலத்தில் (ரூ. 3,72,000) மீன் பண்ணைகள் அமைத்தல். | 5,03,900 |
| (ஈ) எண்ணூரில் குளிர்ப்பதனச் சாதனங்கட்கான கட்டிடங்கள் கட்டுதல். | 2,26,000 |
| (உ) இடிந்தகரையில் பனிக்கட்டி மற்றும் குளிர்ப் பதனச் சேமிப்பு சாதனங்கள் கொண்ட கட்டிடங்கள் கட்டுதல். | 85,500 |

**கல்வி**.—சென்னையில் கன்னிமேரா பொது நூல் நிலையக் கட்டிடங்கள், சுமார் 12·70 இலட்சம் ரூபாயிலும், திருச்சியில் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரிக் கட்டிடங்கள், ஆறு இலட்சம் ரூபாயிலும், கும்பகோணம், அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் விஞ்ஞானப் பகுதிக்கான கட்டிடங்கள் 6·05 இலட்சம் ரூபாயிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டிடப் பணிகள் துவக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (அ) சென்னை கல்வித்துறை நெறியாளர் அலுவலகத்தில் தேர்வு மண்டபம் அமைத்தல். | 5·50 |
| (ஆ) கும்பகோணம் அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரியில் கூட்டம் மற்றும் தேர்வு மண்டபம் அமைத்தல். | 1·15 |
| (இ) கும்பகோணம் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி இரண்டாம் படியான கட்டிடங்கள். | 8·80 |
| (ஈ) மதுரை மீனாட்சி பெண்கள் கல்லூரிக்கான கூடுதல் கட்டிடங்கள். | 5·00 |

குடியாத்தத்தில் 8·80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரிக்கான கட்டிடங்கள் துவக்கப்பட்டுள்ளன. 1967–68-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் கல்வித் துறைக்கு வேண்டிய கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 45 இலட்சம் ரூபாய்.

**சுற்றுப் பயணம்**.—திருச்செந்தூரில் 2·30 இலட்சம் ரூபாயில், திருத்திய மதிப்பீட்டின்படி, சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருகின்றது. ஊட்டி, கோடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள ஏரிகளில் தூர் எடுப்பு வேலையும், ஊட்டி படகு வீடும் முடிக்கப்பட்டு விட்டன. கோடைக்கானலில் 9·60 இலட்சம் ரூபாய் செலவில் பிரயாணிகள் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

**அரிசன நலம்**.—அரிசன மாணவ, மாணவிகட்கான தங்கும் விடுதி கட்டிடங்கள் இந்தத் தலைப்பில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1·09 இலட்சம் ரூபாயில் அன்பிலில் மாணவர் தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செங்கத்தில், 95,000 ரூபாயில் மாணவர் தங்கும் விடுதியும், கோவையில் மாணவிகள் தங்கும் விடுதி 1·75 இலட்சம் ரூபாயிலும் கட்டப்பட்டு வருகின்றன. சிதம்பரம், நந்தனார் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பு அறைகள் அமைக்கும் வேலை நடைபெற்று வருகின்றன. ஊட்டியில் 5·63 இலட்சம் ரூபாய் செலவில் மாணவிகள் விடுதி அமைக்கவும், புதுக்கோட்டையில், 1·80 இலட்சம் ரூபாயில் மாணவர் விடுதி அமைக்கவும், திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன.



**காவல்துறையினர் குடியிருப்பு**.—காவல்துறை பணியாளர்களுக்காக, இதுவரை 7,261 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், சுமார் 23·38 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் ஆகஸ்டு 1967-ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அரசு, சமீபத்தில் இத் தடையை நீக்கியுள்ளது ; இந்த வேலைகள் விரைவில் துவக்கப்படும்.

**சட்டசபை உறுப்பினர் தங்கும் விடுதி**.—சட்டமன்ற உறுப்பினர் தங்குவதற்கான பல மாடி விடுதிக் கட்டிடம், சென்னையில், சுமார் 51·35 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பணியாளருக்கான, குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் மறு பரிசீலனையில் இருந்து வருகிறது. விடுதிக் கட்டிடம் 1968 ஜனவரி 5-ல் இந்திய ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

**கதர் விற்பனை நிலையம்**.—சென்னையில் கதர் விற்பனை நிலையக் கட்டிட வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அடித்தளம் முடிக்கப்பட்டு, கதர் கழகத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. பிரதான கட்டிடத்தில் மேலும் ஒரு மாடி அமைக்கவும், சேமிப்புக் கிடங்குப் பகுதியில் மேலும் இரண்டு மாடிகள் அமைக்கவும், திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இது கதர் கழகத்தின் ஆய்வில் உள்ளது.

**பொது அலுவலகங்கள்**.—சேப்பாக்கத்தில் 55 இலட்சம் ரூபாய் செலவில் நிர்வாக அலுவலகக் கட்டிடங்கள் எல்லா வகையிலும் முடிக்கப்பட்டு, பல்வேறு அலுவலகங்கட்கு ஒதுக்கப்பட இருக்கின்றன. " ட " வடிவக் கட்டிடத்தின் விரிவுப் பணிகள் விரைவில் துவக்கப்படும்.

**தருமபுரி மாவட்ட அலுவலகக் கட்டிடங்கள்**.—குடியிருப்புகள் முதலியன 15·82 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

மதுரையில், ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன ; கட்டிடங்களின் மதிப்பு 40 இலட்சம் ரூபாயாகும்.

**இந்திய அரசினர் கட்டிடங்கள்**.—திருச்சியில் போர்க் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்காக 509 இலட்சம் ரூபாயில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. சமீபத்தில் அனுமதியளிக்கப்பட்ட, கூடுதல் குடியிருப்பு கட்டிட வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அஞ்சல், தந்தி துறையினர் வேண்டுகோளுக்கு இணங்க, மாநிலத்தில் ஆங்காங்கு அஞ்சலகங்களும், தொலைபேசி நிலையங்களும் அமைக்க ஒப்புக்கொண்டு, பொதுப் பணித் துறை இதுவரை சுமார் 4·77 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகளை முடித்துக் கொடுத்துள்ளது ; சுமார் 5·98 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்து வருகின்றது.

**நகராட்சிக் கட்டிடங்கள்**.—நகராட்சிக்கான, பஸ் நிலையங்கள், அங்காடி, விழா மண்டபம் ஆகியவற்றை அமைக்க பொதுப் பணித்துறை உதவி வருகிறது. திருவள்ளூர், தாம்பரம் நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள், குற்றாலம் நகராட்சி விழா மண்டபம், வேலூர் நகராட்சி அங்காடி, திருச்சி நகராட்சி பேருந்து நிலையம் ஆகியன பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்பட்டு வருகின்றன.

**கட்டிட ஆராய்ச்சி**.—கட்டிட வேலைகளுக்கான திட்டம் தவிர, பொதுப் பணித் துறை கட்டிடப் பொருள்கள் ஆராய்ச்சி. வேலைகளையும் கவனித்து வருகிறது. இத்துறையைச் சார்ந்த கட்டிட ஆராய்ச்சிப் பகுதி, கட்டிடப் பொருட்கள் பற்றிய விஞ்ஞானக் குறிப்பு விவரங்களையும் சிக்கனமாக பொருட்களைப் பயன்படுத்தும் முறை பற்றியும், கட்டிட வேலையில் ஈடுபட்டுள்ள, பொறியாளர்கட்கு அனுப்பி, அவர்களைக் கட்டிடத் துறையில் நிகழ்ந்துள்ள புதிய மாறுதல்களை, அவ்வப்போது அறிய உதவி வருகிறது.

பொதுப் பணித்துறையில் நூதன கட்டிட அமைப்பு முறை பற்றிய நுணுக்கங்கள் பற்றி அறிய, பல்வேறு பகுதிகளில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அவை, சேப்பாக்கத்தில் உள்ள, கட்டிட ஆராய்ச்சிப் பகுதி

மண் ஆராய்ச்சிப் பகுதி, பூண்டியில் உள்ள, நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம் ஆகியவை ஆகும். பொது சுகாதாரப் பொறியியல் ஆராய்ச்சிக்கான புதிய பகுதியும் தொடங்கவிருக்கிறது. இவை அனைத்தையும் ஒரு வழிப்படுத்தி, செயல்படுத்துதல் சாலச் சிறந்தது. இத்தகைய இணைந்த ஆராய்ச்சி நிலையத்திற்காக, திருவான்மியூர் அருகே 50 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் விரைவில் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## அட்டவணை 1.

### மாநிலச் சாலைகள் (அரசாங்கச் சாலைகள்).

### 1968–69-க்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய வேலைகள்.

| வேலைகளின் விவரம். | செலவு மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மாநிலச் சாலைகள்—தஞ்சாவூர் மாவட்டம்—தஞ்சாவூர் கோட்டம்— | |
| (1) தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குள் செல்லும் தஞ்சாவூர்-கந்தர்வக்கோட்டை சாலையில் மைல் 0/3-ல் உள்ள ரயில்வே பாலத்தின் கீழுள்ள சாலையின் மட்டத்தைத் தாழ்வு செய்தல் .. .. .. .. .. | 0·40 |
| வட ஆர்க்காடு மாவட்டம்—வேலூர் கோட்டம்— | |
| (2) வேலூர் நகராட்சி எல்லைக்குள் செல்லும் கடலூர்-சித்தூர் சாலையில் மைல் 117/7–118/2 வரையுள்ள பகுதியை உயர்த்தி அகலப்படுத்துதல் .. .. | 2·00 |
| மாவட்டப் பெருஞ்சாலைகள்—செங்கற்பட்டு மாவட்டம்—செங்கற்பட்டு கோட்டம்— | |
| (3) காஞ்சீபுரம் நகராட்சி எல்லைக்குள் செல்லும் சதுரங்க பட்டினம் சுரப்பான் சாலையில் மைல் 40/0–40/8 (1 மைல்) வரை தார் பரப்பினை அகலப்படுத்துதல் .. | 1·11 |
| (4) காஞ்சீபுரம் நகராட்சி எல்லைக்குள் செல்லும் செங்கற்பட்டு-காஞ்சீபுரம் சாலையில் மைல் 30/4–8 (5 பர்லாங்) வரை தார் பரப்பினை அகலப்படுத்துதல் .. | 0·91 |
| (5) காஞ்சீபுரம் நகராட்சி எல்லைக்குள் செல்லும் பொன்னேரிக்கரை-காஞ்சீபுரம் சாலையில் மைல் 13/2–8 (7 பர்லாங்குகள்) வரை தார் பரப்பினை அகலப்படுத்துதல் .. .. .. .. .. .. | 1·00 |
| தருமபுரி வட்டம்—கிருஷ்ணகிரி கோட்டம்— | |
| (6) ஹோஸுர்-தள்ளி சாலையில் மைல் 11/6-ல் உள்ள, வெள்ளத்தால் பழுதடைந்த சிறு பாலத்தைப் புதுப்பித்தல் .. .. .. .. .. .. | 0·30 |
| தென் ஆர்க்காடு மாவட்டம்—கடலூர் கோட்டம்— | |
| (7) குள்ளஞ்சாவடி-காட்டுக்கூடலூர் சாலையில் மைல் 1/2-ல் ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் .. .. .. .. | 1·50 |
| ஏனைய மாவட்டச் சாலைகள்—தென் ஆர்க்காடு மாவட்டம்—விழுப்புரம் கோட்டம்— | |
| (8) பாப்பனப்பட்டி-வழுதாவூர் சாலையில் மைல் 10/4–5-ல் சங்கராபரணியாற்றில் மூழ்கு பாலம் கட்டுதல் .. | 12·00 |
| தஞ்சாவூர் மாவட்டம்—தஞ்சாவூர் கோட்டம்— | |
| (9) முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் மைல் 12/4-ல் அக்னியாற்றில் பாலம் கட்டுதல் .. .. .. .. | 10·00 |
| மதுரை மாவட்டம்—மதுரை கோட்டம்— | |
| (10) நத்தம்-செந்துறை சாலையில் மைல் 10/3-ல் பாலாற்றில் பாலம் கட்டுதல் .. .. .. .. .. | 1·50 |

| வேலைகளின் விவரம். | செலவு மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (11) மதுரை-செந்துறை சாலையில் மைல் 12/8-ல் முது மலையாற்றில் பாலம் கட்டுதல் .. .. .. | 1·00 |
| (12) மதுரை-தேனி சாலையில் மைல் 42/1 (கி.மீ. 66)-ல் இருந்து வைகை அணைக்குச் செல்லும் சாலையைச் செம்மை செய்தல் .. .. .. .. .. | 0·60 |
| (13) ஆவுடையார் கோவிலில் இருந்து ஒக்கூர் செல்லும் சாலையை மேம்பாடு செய்து, பாம்பாற்றில் பாலம் கட்டுதல் .. .. .. .. .. .. | 6·00 |
| மொத்தம் .. | 38·32 |





**அட்டவணை 2.**

**1966–67-ம் ஆண்டில் மற்ற சாலைகள்—ஊ ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் புதிதாக அனுமதி வழங்கப்பட்ட வேலைகள்.**

| வேலையின் விவரம். | செலவு மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|
| வட கடலூர் வளர்ச்சி மாவட்டம்— | |
| (1) வேலந்தாங்கல்-அத்திப்பட்டு-மேல் மலையனூர் சாலையில் மேம்பாட்டு வேலைகள் மைல்கள் 0/0–3/4 .. | 88,000 |
| தெற்கு திருச்சிராப்பள்ளி வளர்ச்சி மாவட்டம்— | |
| (2) இராபூசாவிலிருந்து கொளத்தூர்-பாக்குடி சாலையை இணைக்கும் சாலையின் 0/0 முதல் 4/6 மைல் வரையிலும் 6/1–8 மைலிலும் கருங்கற் சல்லி பரத்துதலும், காங்கிரீட் குழாய் வைத்து வாராவதிகள் கட்டுதலும் .. .. .. .. .. .. .. | 97,000 |
| கிழக்கு மதுரை வளர்ச்சி மாவட்டம்— | |
| (3) நாகதீர்த்தம் சாலையில் 0/0–1/2-வது மைல் வரை கருங்கற் சல்லி பரத்துதலும் 0/5-வது மைலில் சிறு பாலம் ஒன்று கட்டுதலும் .. .. .. .. | 1,00,000 |
| சேலம் மாவட்டம்— | |
| (4) ஓடப்பள்ளி-பாப்பம்பாளையம் சாலையில் 1/7-வது மைல் முதல் 6/1-வது மைல் வரை கருங்கற் சல்லி பரத்துதல் .. .. .. .. .. .. .. | 98,000 |
| தென் ஆர்க்காடு மாவட்டம் தென் கடலூர் வளர்ச்சி மாவட்டம்— | |
| (5) புவனகிரி-குறிஞ்சிப்பாடி சாலையில் பரவனாற்றின் குறுக்கே 7/2–4 மைலில் மூழ்கு பாலம் ஒன்று கட்டுதல் .. .. .. .. .. .. .. | 8,00,000 |
| இராமநாதபுரம் மாவட்டம் மேற்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்— | |
| (6) பட்டாம்புதூர் மாலைப்பட்டி சாலையில் 0/3-வது மைலில் கௌசிக ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் ஒன்று அமைத்தல் .. .. .. .. .. .. | 2,25,000 |
| கோயம்புத்தூர் மாவட்டம்—கிழக்கு கோயம்புத்தூர் வளர்ச்சி மாவட்டம்— | |
| (7) குண்டாடம்-கோவிந்தபுரம் சாலையில் 6/4–5 மைலில் உப்பாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் ஒன்று அமைத்தல் .. .. .. .. .. .. .. | 3,50,000 |
| மேற்கு தஞ்சாவூர் வளர்ச்சி மாவட்டம்— | |
| (8) அம்மாபேட்டை-கோவிந்தகுடி சாலையில் சேரி கிராமத்தின் அருகே வெட்டாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் .. .. .. .. .. .. | 8,00,000 |
| மொத்தம் .. | 25,58,000 |

[1968, மார்ச், 23

## அட்டவணை 3.

### நடப்பு ஆண்டிலேயே அதாவது 1967–68-லேயே, ஒப்பளிப்பு வழங்கப் பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியச் சாலை வேலைகள்.

| வேலையின் விவரம். | செலவு மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **வட திருநெல்வேலி வளர்ச்சி மாவட்டம்—** | |
| (1) வெம்பூர் மவில்பட்டி சாலையில், மைல் 1/2-ல் சிறு பாலமும், மைல் 1/3, 1/4, 2/8 ஆகிய இடங்களில் படுகைப் பாலமும் கட்டுதல் .. .. .. .. | 4·00 |
| **தெற்கு திருநெல்வேலி வளர்ச்சி மாவட்டம்—** | |
| (2) நெட்டூர் அருகே ஆலங்குளம்—மேட்டூர் சாலையில் சித் தாற்றில் பாலம் கட்டுதல் .. .. .. .. | 3·50 |
| (3) ஆண்டிபூரில் தாமிரவருணி ஆற்றின் குறுக்கே உயர் மட்டம் பாலம் ஒன்று கட்டுதல் .. .. .. | 8·25 |
| **கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம்—** | |
| (4) பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையில் வள்ளி வாய்க் கால் இடத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை எண். 49-ல் உள்ள பாண்டிக் கண்மாய் புகைவண்டி நிலையத் திற்கு வெங்கடகுறிச்சி வழியாக சாலை அமைத்தல் (14 மைல் 3 பர்லாங்) .. .. .. .. .. | 14·27 |
| (5) சிங்கம்புணரி-கிரிகன்கோட்டை சாலையில் மைல் 0/0–6/2 வரை சரளை போடுதல், உப்பாறு பாலாறு ஆகிய கடவு களை இணைப்பது உட்பட (சிவகங்கை கோட்டம்) .. | 5·00 |
| **கிழக்கு மதுரை வளர்ச்சி மாவட்டம்—** | |
| (6) பள்ளப்பட்டி-பிராண்மலை சாலையில் மைல் 0/6-ல் பாலாற்றில் மூழ்கு பாலம் கட்டுதல் .. .. .. | 1·90 |
| **வடக்கு திருச்சிராப்பள்ளி வளர்ச்சி மாவட்டம்—** | |
| (7) வி. குளத்தூர்-கைக்களத்தூர் சாலையில் மைல் 9/7-ல் படுகைப் பாலம் கட்டுதல் .. .. .. .. | 1·50 |
| **வடவேலூர் வளர்ச்சி மாவட்டம்—** | |
| (8) விரிஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் சாலையில் மைல் 1/5–6, 2/4-ல் பாலாற்றின் குறுக்கே படுகைப் பாலம் கட்டுதல் .. .. .. .. | 4·10 |
| **தெற்கு வேலூர் வளர்ச்சி மாவட்டம்—** | |
| (9) விலாசூர்-படாகம்-மன்சுராபாத் சாலையில் மைல் 4/3–10/6 வரை சரளை போடுதல் .. .. .. .. | 2·15 |
| **வடசேலம் (தருமபுரி) மாவட்டம்—** | |
| (10) கல்லாவி-சம்மந்தபள்ளி சாலையில் மைல் 4/8-ல் பெண்ணையாற்றில் படுகைப் பாலம் கட்டுதல் .. .. | 6·75 |
| மொத்தம் .. | 51·42 |



1968 மார்ச் 23]

## அட்டவணை 4.

### தலைநகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட வேலைகளின் பட்டியல்.

| வேலையின் பெயர். | வேலையின் மொத்தச் செலவு. ரூ. |
|---|---|
| 1) எண்ணூர் துரித வழிச் சாலையில் 3/1-வது மைலி லிருந்து திருவொற்றியூர்-பொன்னேரி-பூஞ்செட்டி சாலை 2/3-வது மைல் வரை மணலி அருகே நிறுவப் போகும் எண்ணெய் தூய்மைப்படுத்தும் சாலையை இணைக்குமாறு, புதிய சாலை அமைத்தல் .. .. | 32,00,00 |
| (2) சென்னை-கல்கத்தா சாலையில் (தேசிய நெடுஞ்சாலை) சென்னை நகர எல்லையில், பேசின் பாலம் அருகே மூன்று பாலங்களை அகலப்படுத்திக் கட்டுதலும் அணுகு சாலைகளை மேம்படுத்தலும் .. .. .. .. | 20,00,000 |
| (3) சென்னை-பங்களூர் சாலையில் 4/2 மைலில் அமைந்த கரைக்கு அருகிலிருக்கும் பாலத்தை அகலப்படுத்தல் | 4,50,000 |
| (4) சென்னை துறைமுகத்திலிருந்து சென்னை கல்கத்தா சாலையில் 5/1-வது மைல் வரை (தேசிய நெடுஞ்சாலை எண். 5) சாலையை மேம்படுத்தல் நிலம், கையகப் படுத்தல் மட்டும் .. .. .. .. .. | 21,00,000 |
| (5) மர்மலாங்கு பாலத்திலிருந்து இரும்புலியூர் செல்லும் சாலைக்குரிய மேம்பாட்டு வேலைகள் .. .. .. | 18,00,C0 |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**20th to 23rd March 1968**

**Volume XII (Nos. 1 to 4).**

PAGES.

## A


ACCIDENT(S)—

Fire accident, cracker godown, Madras ... ... 507–508

Fire accident, Sivashanmugapuram ... ... 149–151

AGRICULTURE—

Failure of monsoon and postponement of recovery of Co-operative Society loans in Palladam taluk (C.A.) ... ... ... ... ... ... 511–512

AGRICULTURISTS—

Loans for fertilisers ... ... ... ... 143–147

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Co-operation ... ... ... ... ... 219–221

Stationery and Printing ... ... ... 163

ANNADURAI, THIRU C. N.—

Budget, 1968–69, Voting—

Industries 347,

Capital Outlay on Industries 348, 349, 356–357

A—cont.

ANNADURAI, THIRU C. N.—*cont.*
Budget, 1968–69, Voting—*cont.*
Police ... ... ... ... ... ... 28, 29, 30, 31, 78, 79, 80, 90, 91, 92, 93, 94, 95, 106–118
Katcha Theevu, restrictions to enter for people from Tamil Nadu (A.M.) ... ... ... ... 510–511
Ryots in Gingee area, alleged harassment by Police (C.A. St.) ... ... ... ... ... 24–26
Tamil Films, screening in Maharashtra, Shiva Sena's agitation (A.M.) ... ... ... ... 509–510

ANNAMALAI, THIRU V. D.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... ... 243–245

ARUMUGAM, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 569–571

ARUMUGAM, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 604

AUTHIMOOLAM, THIRU D. S.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 85–89

AWARDS—
President's awards for Police Officials ... ... 500–502





B

BACKWARD CLASSES—
Christian converts, extension of concessions given to most backward classes ... ... ... ... 300–303

BALAKRISHNAN, THIRU A. G.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 561–563
Police ... ... ... ... ... ... 66–69

BALARAMAN, THIRU L.—
Overbridge across Naganadhi near Kilnagar ... 293–294

BALASUBRAMANYAN, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 325–328
Police ... ... ... ... ... ... 28, 29, 30, 31, 51–55
Stationery and Printing ... ... ... 166–167, 190

BALASUBRAMANIAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 199
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 315
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 512
Police ... ... ... ... ... ... 28, 69–71
Katcha Theevu, restrictions on people from Tamil Nadu to enter (A.M.) ... ... ... ... 510–511

PAGES.

B—cont

BELLIE GOWDER, THIRU J.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 350–351
BHUPATHY, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 316, 351–353
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 514
Christian converts, extension of concessions given to most backward classes ... ... ... ... 300–303
BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 342–350, 357
Stationery and Printing ... ... ... ... 176–187, 196–197, 198, 199
BOOKS—
Obscene books, sale ... ... ... ... 504–506
Text Books (Nationalised), change of Thanjavur district distributor ... ... ... ... 484–485
BRIDGE(S)—
Nagercoil—Manavalakurichi road, near Kannakurichi ... ... ... ... ... 293
Over-bridge across Naganadhi near Kilnagar ... 293–294

C

CALLING ATTENTION—
Agriculture, failure of monsoon and postponement of recovery of Co-operative Society loans in Palladam taluk ... ... ... ... ... 511–512
Engineering Colleges, Central Government's request for reduction in intake of students ... ... 159–161



PAGES.

C

CALLING ATTENTION—*cont.*
Food, failure of crops due to failure of monsoon in Radhapuram sub-taluk (Tirunelveli district) ... 158–159
Foodgrains, supply through family cards due to drought in Tirunelveli district ... ... ... 315
Ryots in Gingee area, alleged harassment by Police ... ... ... ... ... 24–26
Water-supply scheme for Ramanathapuram Municipality ... ... ... ... ... 26–27
CHAIR—
*Rulings and Observations of the Chair*—
Adjournment motions—
*Closure of Raja Mills in Madurai City*—
Consent was withheld after the Minister explained that steps had been taken to open the Mills and the matter would not come under the purview of Adjournment Motions ... ... ... ... 315
*Construction of an anicut across the Periyar river and its adverse effects on Tamil Nadu*—
Consent was withheld despite the fact that the matter might be considered to be one which did not come under the day to day administration of the Government, as there was scope for speaking on the matter in the course of the discussion on the relevant Demands for Grants which was to take place on that day ... 509
*Elucidation*—
No questions by way of elucidation could be asked under an adjournment motion, whereas such questions could be asktd on a call-attention statement ... ... ... 157
*Hardships likely to be caused to persons engaged in jasmine trade in Madurai district consquent on the proposed stoppage of Air Service during day time from Madurai to Madras*—
The Minister explained that air transport was not under the purview of the State Government and any action on the part of

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Adjournment Motions—*cont.*

the State Government to approach the proper authorities to mitigate the suffering of the people concerned was a matter coming under the day to day administration of the Government. There-upon, the Chair withheld consent to the matter ... ... 158

*Plight of Weavers on account of non-export of handloom cloth from Madurai*—

After the Minister's statement about the action taken by the Government, the Member did not press the motion and the Chair announced that it was deemed to have been withdrawn with the leave of the House ... 157

*Prevention of Tamilians to enter Katchathivu to witness the St. Anthony Festival*—

Consent was withheld on the ground that it was not a matter in which the responsibility of the Stae Government was clearly involved ... ... ... ... 510

*Shiv Sena's opposition to screening in Maharashira of films produced in the Madras State*—

Consent was withheld on the ground that the matter came under the day to day administration of the Government ... 510

*Calling Attention Notice*—

If a member who had given notice of a call-attention notice was absent when the item was to be taken up, it would be deemed to have been withdrawn by leave of the House ... ... ... 315, 512

*Decorum*—

*Personal charge*—

A member must not make a personal charge against another member and the Chair was bound to protect the member against such personal charges ... ... ... ... 33, 34, 35, 41

Portions of a member's speech containing personal charges were ordered to be expunged from the proceedings ... ... ... 39



CHAIR—*cont.*

*Personal references*—

There should be no reference to the conduct or character of a person except in his official or public capacity. Hence officers should be referred to by the designation of their office and not by name ... ... ... ... 32, 33, 35, 37

*Reference to individuals who are not in the House*—

When a member referred to an officer, another member rising on a point of order referred to the convention that there should be no reference to persons who are not in the House. The Speaker said though such an opinion was widely prevalent, there was no rule to that effect. All that the rule said was that there should be no reference to the conduct or character of a person except in his official or public capacity. But in a cut motion there should be no imputation or defamatory statement against anybody ... ... ... 36

*Rulings and Observations*—cont.

Decorum—*cont.*

*Reference to political parties*—

While members could express their views it was not desirable to explicitly refer to a political party ... ... ... ... ... 364

Demands for grants—

*Introductory speeches of Ministers*—

A printed speech of a Minister which was circulated to members was ordered by the Chair to be taken as read in the House and to be incorporated in the Official Report of the Proceedings ... ... ... ... 520

Matters sub judice—

If there is a case or a possibility of a case coming up later on, a member should not refer to the matter ... ... ... ... ... ... 43–44

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

**Matters sub judice**—

Reference to a matter on which a judicial decision is pending should not be made ... ... ... 30–31

When a member said that a leader of his party was attacked by group of another party a member belonging to the latter party rose on a point of order and enquired whether it was in order to refer to it as the matter might go before a Court. Thereupon the Speaker observed : " If there is a case or a possibility of a case coming up later on, a member should not refer to it. The law of *Lis pendens* with regard to land and property is different. But with regard to conduct of the Assembly, it is different. The moment there is a possibility of a case coming up in due course later on you should not mention about it. *Lis pendens* starts from the date of filing of the case, but Rule 67 is similar to the law relating to contempt and operates from the date when the possiblity is apparent " ... ... ... ... ... 43–44

*Reference in the " Review on Madras Police "*—

After the Chief Minister moved the Police Demand and before the discussion on it commenced, a member drew the attention of the Chair to the following statement in the " Review on Madras Police " circulated to the Members :

" On 5th October 1967 there were attacks on Mirasdars by armed Kisans in Poonthalangudi village, Thanjavur district which resulted in the opening of fire by Police ".

(தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தாழங்குடி கிராமத்தில் 1967 அக்டோபர் திங்கள் 5-ம் தேதி அன்று படைக்கலன் தாங்கிய குடியானவர்கள் மிராசுதார்களைத் தாக்கினர் )

The member contended that the case whether the Kisans attacked or Mirasdars attacked was before a Court which will decide after enquiry who attacked whom. Hence, the statement that here were attacks on Mirasdars by armed Kisans not in order. Another member pointed out the assertive statement that there were



CHAIR—*cont.*

*Rulings and Observations*—

Matters sub judice—*cont.*

attacks on Mirasdars by armed Kisans before it was proved in the case before the Court was not in order.

The Chief Minister suggested that the particular sentence may be corrected as follows :

தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தாழங்குடி கிராமத்தில் 1967 அக்டோபர் திங்கள் 5-ம் தேதி அன்று படைக்கலன் தாங்கிய குடியானவர்கள் மிராசுதார்களைத் தாக்கியதாக வழக்கு ஒன்று இருக்கிறது.

(" It is alleged that on the 5th October 1967, armed Kisans attacked the Mirasdars in Poonthalangudi village, Thanjavur district. The case is pending ".)

The Speaker requested the members to carry out the change and cautioned them against giving any opinion about or referring to the matter as a judicial decision on it was pending and allowed the discussion on the Police Demand to proceed ... 29–31

Parliamentary etiquette—

*Mode of reference to members*—

Members should be referred to by their constituencies and not by their names ... ... 33

A member cannot interrupt another member or a Minister on a point of explanation unless the member or Minister who held the floor resumed his seat ... ... ... ... ... ... 180–190

Should relate to the person offering the explanation ... ... ... ... ... ... 63

Point of Order—

Cannot be raised at the time of voting ... ... 118

*Distribution of portfolios during Chief Minister's visit to U.S.A.*—

A member rose on a point of order and enquired how the portfolios held by the Hon. chief Minister would be distributed during his visit

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Paint of *order*—cont.

*Distribution of postfolios during Chief Minister's visit to U.S.A.*—cont.

to U.S.A. and whether there was any proposal to appoint Deputy Ministers. The Chair observed that a point o order should relate to the procedure of the House. Though the point of order could be raised in the manner done by the member, it was not necessary to answer it ... ... ... ... ... 162

*Scope*—

Must relate to the procedure of the House ... 93–162

Should be raised only when there is a deviation from the rules ... ... ... ... ... 40

Should relate to the matter just then before the House and not to anything which might have happened sometime earlier ... ... ... 30–31

Presentation of Papers to Ministers in the House—

When a member wanted to read from a paper and said that he would be presenting the paper, the Speaker said that the paper should be handed over to the Minister concerned in his office and not to the whole House. If he wanted to present it to the House, it must be by way of a petition to the House ... ... ... ... ... 36–37

*Procedure*—

The House has no authority to try charges against individuals ... ... ... ... ... 36

Questions and Answers—

*Supplementary questions*—

A member cannot ask a supplementary question in respect of an answer to a supplementary question. But he may ask a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question ... ... 484

If the Minister wishes, he can answer a question though it does not relate to the main question ... 19, 133



PAGES.

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

*Questions and answers*—cont.

*Imputations not permissible*—

There should be no imputation in a question ... 146

Members who had put supplementaries would do well to give chances to other members who had not put any supplementaries till then ... 489

Members would do well to put their supplementary questions direct without preambles ... ... 19

*Member's responsibility for statements*—

If a member's question contains a statement, the member must make himself responsible for the accuracy of the statement ... ... ... 21

*Ministers' Answers*—

A Minister has got the right to give an answer, not to give an answer or to give an answer to a point different from the one raised in the question. It should always be presumed that the Ministers give the answer only after understanding the question and not without understanding it ... ... ... ... ... 140, 146

*Preference*—

As the question hour was coming to a close, the Chair observed that preference would be given to those members who had not till then put even a single supplementary ... ... ... 20

*Relevancy*—

Should relate to the main question ... ... 484, 487, 506

When a main question related to Staff Nurses, a supplementary about inadequacy of medicines is out of order ... ... ... ... ... 149

Question hour—

*Requests not to be made*—

During question hour no request should be made ... ... ... ... ... ... 4

PAGES.

CHAIR—*cont.*

Quotations—

If a member wants to read from any letter or private document, he must show it to the Speaker before the commencement of the meeting and get his prior approval for reading ... ... ... 34

Unparliamentary expressions—

'Confusing' (குழப்புகிறார்கள்) in the sentence "The Hon. Member is confusing the two questions"—Held to be not unparliamentary ... 22

CHANKS—

Chank divers, Tuticorin, wages enhancement ... 492

CHEEMAICHAMY, THIRU K.—

Budget, 1968–69, Voting—

Industries—

Capital Outlay on Industries ... ... ... 316

Police ... ... ... ... ... ... 28

Gazetted and non-Gazetted Officers, Corruption Charges ... ... ... ... ... ... 153–156

Jasmine trades in Madurai district, hardship due to stoppage of day air service (A.M.) ... ... 157–158

President's Awards for Police Officials ... ... 500–502

CHIDAMBARANATHA NADAR, THIRU A.—

Bridge, Nagercoil–Manavalakurichi road, near Kannakurichi ... ... ... ... ... 293

Budget, 1968–69, Voting—

Police ... ... ... ... ... ... 32–42

Lift Irrigation Scheme, Manavalakurichi ... ... 7

Slums in Madras city, improvement ... ... 20–23

CHINNASAMY, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Irrigation ... ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Capital Outlay on Public Works ... ... ... 526–530





PAGES.

CHITHAN, THIRU N. S. V.—

Anicut across Periyar at its source and its adverse effect on Tamil Nadu (A.M.) ... ... ... 509

Government employees, enhancement in emoluments ... ... ... ... ... ... 312–314

Handloom workers, Madurai district plight due to accumulation of handloom goods (A.M.) ... 156–157

Metals, Thirumangalam taluk ... ... ... 5–7

COLLECTORS—

Change in designation ... ... ... ... 305–307

COLLEGES—

Engineering Colleges, Central Government's request for reduction in intake of students (C.A.) ... 159–161

CONFERENCES—

Collectors' conference, Tiruchirappalli decisions ... 311–312

Inspectors-General of Police conference, particulars ... ... ... ... ... ... 498–500

D

DETENUS—

Detenus at the time of lifting emergency, particulars ... ... ... ... ... 498

DHARMALINGAM, THIRU N.—

Budget, 1968–69, Voting—

Irrigation ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Capital Outlay on Public Works ... ... ... 552–554

DRAINAGE—

Drainage (underground) scheme, Gudiyatham town ... ... ... ... ... ... 23–24

Drainage schemes, Melur and Natham ... ... 495–496

**D—cont.**

PAGES.

DURAISAMY, THIRU S.—
Agriculture, failure of monsoon and postponement of recovery of Co-operativ Societies' loans in Palladam taluk (C.A.) ... ... ... ... 511
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 357–360

E

EDMUND, THIRU G. R.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 554–555

ELAMVAZHUTHI, THIRU Ere.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 321–323

EMPLOYEES STATE INSURANCE SCHEME—
Medical facilities to families ... ... ... 493–495

EXPUNCTION—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 364, 368, 369
Police ... ... ... ... ... ... ... 35, 39, 40, 42

F

FACTORIES—
Cement factory, Melur taluk ... ... ... 1–5
Fertiliser ... ... ... ... ... ... 479–483



PAGES.

**E—cont.**

FINANCIAL BUSINESS—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 199–257
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 315–383
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 512–605
Police ... ... ... ... ... ... 27–119
Stationery and Printing ... ... ... ... 162–199

**F—cont.**

FIRE—
Fire service station, Melur ... ... ... 504

FLOODS—
Damage due to floods during 1957–66 and compensation ... ... ... ... ... ... 13–16

FOOD—
Failure of crops in Radhapuram sub-taluk (Tirunelveli district) (C.A.) ... ... ... ... 158–159
Fair price shops for weavers ... ... ... 138–141
Food production corporation, establishment .. 16–18

FOODGRAINS—
Rice for Kerala State ... ... ... ... 141–143
Rice transportation for personal consumption ... 485–492
Supply through family cards due to drought in Tirunelveli district (C.A.) ... ... ... ... 315

G

GEORGE, THIRU V.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...

PAGES.

F—*cont.*

GEORGE, THIRU V.—cont.
Budget, 1968–69, Voting—
Public Works—Works ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 513, 520–526, 514, 515

GNANASAMBANDAM, THIRU K. R.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 316
Industrial Training Institute, Instructors' pay scales ... ... ... ... ... ... 130–131

GOMATHISANKARA DIKSHIDAR, THIRU G.—
Detenus at the time of lifting emergency, particulars ... ... ... ... ... ... 498
Groundnut, ban on export ... ... ... ... 9–13
Madras city, removal of drinking water scarcity ... 134–138

GOVERNMENT SERVANTS—
Deputy Collectors (temporary), reversion ... ... 151–153
Enhancement in emoluments ... ... ... 312–314
Gazetted and non-gazetted officers, Corruption charges ... ... ... ... ... ... 153–156

GOVINDARAJAN, THIRU C.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 199, 226–229
Fair price shops for weavers ... ... ... 138–141
Tamil films, screening in Maharashtra, Shiva Sena's agitation (A.M.) ... ... ... 500–510

GOVINDARAJAN, THIRU Cho.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 222–224

GROUNDNUT—
Ban on export ... ... ... ... ... 9–13



PAGES.

H

HANDE, DR. H. V.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 245–247
Industries,
Capital Outlay on Industries ... ... ... 353–356, 369
Irrigation,
Capital Outlay on Irrigation,
Public Works—Establishment and Tools and Plant.
Public Works—Works,
Capital Outlay on Public Works ... ... ... 558–561
Stationery and Printing ... ... ... ... 162, 172–174
Factories, fertiliser ... ... ... ... 479–483
Madras city, removal of drinking water scarcity ... 134–138

HARIJANS—
House-sites for Harijans in South Arcot district ... 494–495

HOSPITALS—
City Hospitals, appointment of Receptionists ... 303–305
Staff Nurses in General Hospital, appointment ... 147–149

HOUSE-SITES—
*See* Harijans.

I

IRRIGATION—
Lift Irrigation Scheme, Manavalakurichi ... ... 7
Moredhana dam, Gudiyatham taluk ... ... 292–293

J

JAGGERY—
Palmyrah jaggery, price fluctuation in Tirunelveli district ... ... ... ... ... ... 294–300

PAGES.

J—*cont.*

JAMES, THIRU J.—
Budget, 1968–69, Voting—
Irrigation,
Capital Outlay on Irrigation,
Public Works—Establishment and Tools and Plant,
Public Works—Works,
Capital Outlay on Public Works ... ... 564–566

JAYARAMAN, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Industries—
Capital Outlay on Industries ... ... ... 336–338

K

KANAGASABAI, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 202–205

KANDASAMY, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Irrigation,
Capital Outlay on Irrigation,
Public Works—Establishment and Tools and Plant,
Public Works—Works,
Capital Outlay on Public Works ... ... 563–564

KANDASAMY GOUNDER, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 219–212

KANNAN, THIRU M. R.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 83–85

KANNAPPAN, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 61–64



PAGES.

K—*cont.*

KARUNANIDHI, THIRU M.—
Anicut across Periyar at its source and its adverse effect on Tamil Nadu (A.M.) ... ... ... 509

KARUNANIDHI, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Irrigation,
Capital Outlay on Irrigation,
Public Works—Establishment and Tools and Plant,
Public Works—Works,
Capital Outlay on Public Works ... ... 512, 513, 514, 515–520, 524, 588–604

KARUPPIAH, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 232–233

KARUTHIRUMAN, THIRU P. G.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 360–368

Irrigation,
Capital Outlay on Irrigation,
Public Works—Establishment and Tools and Plant.
Public Works—Works,
Capital Outlay on Public Works ... ... ... 583–588
Police ... ... ... ... ... ... 31, 33 98–105

KASIRAMAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 316, 317–321

K—cont.

KASIRAMAN, THIRU N.—cont.
Bus permits, applications pending ... ... 289–292
Text Books (Nationalised), change of Thanjavur district distributor ... ... ... ... 484–485

KITTAPPA, THIRU N.—
Loans, cattle-sheds for Thanjavur district ... 496–498

KOTHANDAM, THIRU KOLATHUR—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 216–219
Madurantakam tank, desilting ... ... ... 7–9
Staff nurses in General Hospital, appointment ... 147–149

KOTHANDARAMAN, THIRU V. K.—
Agriculturists, loans for fertilisers ... ... ... 143–147
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 212–216
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 514, 515, 576–578, 604
Police ... ... ... ... ... ... 29
Stationery and Printing ... ... ... ... 163
Collectors' Conference, Tiruchirappalli, decisions ... ... ... ... ... ... 311–312
Deputy Collectors (temporary), reversion ... 151–153
Drainage (underground) scheme, Gudiyatham town ... ... ... ... ... ... 23–24
Employees State Insurance Scheme, medical facilities to families ... ...... ... ... 493–495
Floods during 1957–1966, damage and compensation ... ... ... ... ... ... 13–16
Madras City, removal of drinking water scarcity 134–138
Moredhana Dam, Gudiyatham taluk ... ... 292–293
Rice, transportation for personal consumption 485–492



K—cont.

PAGES.

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Budget, 1968–69, Voting—
Industris,
Capital Outlay on Industries ... ... ... 338–340
Irrigation,
Capital Outlay on Irrigation
Public Works—Establishment and Tools and Plant.
Public works—Works
Capital Outlay on Public Works ... ... ... 546–547

KRISHNAMOORTHY, THIRU C.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 207–208, 209–210

KRISHNASAMY GOUNDER, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 241–243

KUMARASWAMY, THIRU K. N.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 513

L

LOANS—
Cattle-sheds for Thanjavur district ... ... 496–498

M

MADHAVAN, THIRU S.—
Agriculture, failure of monsoon and postponement of recovery of Co-operative Societies loans in Palladam taluk (C.A. St.) ... ... .. 511–512
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 199, 200–202, 214, 251–257

PAGES.

MALAICHAMY, THIRU P.—
Cement factory, Melur taluk ... ... ... ... 1–5
Deputy Superintendent of Police's Office, Periakulam, shifting to Theni ... ... ... ... 149
Drainage schemes, Melur and Natham ... ... 495–496
Fire Service Station, Melur ... ... ... ... 504

MANI, THIRU K. B. S.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 28

MANI, THIRU V. S. S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ...
536–537

MARIMUTHU, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...
555–556

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 238–241
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant. ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 542–544



PAGES.

MARTIN, THIRU T.—
Chank divers, Tuticorin, wages enhancement ... 492

MARUDACHALAM, THIRU N.—
Employees State Insurance Scheme, medical facilities to families ... ... ... ... ... 493–495
Slums in Madras City, improvement ... 20–23

MATHIALAGAN, THIRU K. A.—
Food, failure of crops due to failure of monsoon in Radhapuram sub-taluk (Tirunelveli district) (C.A. St.) ... ... ... ... ... ... 158–159
Foodgrains, supply through family cards in Tirunelveli district (C.A. St.) ... ... ... 315

METALS—
Thirumangalam taluk ... ... ... ... 5–7

MOORTHY, THIRU A. K.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ...
567–569

MOTION(S)—
Adjournment Motions—
Anicut across Periyar at its source and its adverse effect on Tamil Nadu ... ... ... ... 509
Handloom workers, Madurai District, plight due to accumulation of handloom goods ... ... 156–157
Jasmine traders in Madurai district, hardship due to stoppage of day air service ... ... ... 157–158
Katcha Theevu, prevention of Tamilians to enter. 510–511

PAGES.

MOTION(S)—cont.
Adjournment Motions—*cont.*
Raja Mills, Madurai, closure ... ... ... 314–315
Tamil films, screening in Maharashtra, Shiva Sena's agitation ... ... ... ... 509–510
B.O.H., Change in order ... ... ... ... 512

MUNU ADHI, THIRU—
Budget, 1968–69, Voting—
Stationery and Printing ... ... ... ... 167–171, 187

MUNUSAMY, THIRU R. R.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 557–558
Industrial Training School, Alampoondi ... 483–484
Ryots in Gingee area, alleged harassment by Police (C.A.) ... ... ... ... ... 24

MURUGAIYAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 532–534

## N

NAGASUNDARAM, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Stationery and Printing ... ... ... ... 171–172



PAGES.

NALLASIVAN, THIRU K. R.—
Budjet , 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 224–226
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 548–551

NATARAJAN, THIRU M. K. D.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 578–580

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... 315, 316, 317, 330, 349–350, 365, 369–382
B.O.H., change in order (M) ... ... ... 512
Engineering Colleges, Central Government's request for reduction in intake of students (C.A. St.) ... 160–161
Madurai district, plight of handloom workers, due to accumulation of handloom goods (A.M.) ... ... 157
Jasmine traders in Madurai district, hardship due to stoppage of day air service (A.M.) ... ... 157–158
Raja Mills, Madurai, closure (A.M.) ... ... 314–315

P

PAGES.

PALANI, THIRU C.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 547–548

PALANIVEL RAJAN, THIRU—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 42–46

PANEL OF CHAIRMEN ... ... ... ... 575

PAPERS LAID ON THE TABLE—
Cinemas (Regulation) Act, 1955, notifications ... 605–606
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... 383
Co-operative Development Schemes, 1967–68, Review ... ... ... ... ... ... 258
Entertainments Tax Act, 1939, notification ... ... 258
General Sales Tax Act, 1959, notification ... 119
Handloom Industry, review ... ... ... ... 606
Hindu Religious and Charitable Endowments Act, 1959, notification ... ... ... ... 119
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 119
Indian Stamp Act, 1899, notification ... ... 606
Indian Stamp Rules, 1925, amendment ... ... 606
Industrial Development in Madras State, 1967–68, review (English) ... ... ... ... ... 383
Industrial Development in Madras State, 1967–68, review (Tamil) ... ... ... ... ... ... 606
Irrigation in Madras State, 1967–68, review ... 606
Labour in Madras State, 1967–68, review ... 119



PAGES.

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Labour, policy note ... ... ... ... ... 119
Madras Police, 1967–68, review ... ... ... 119
Ports (Minor) in Madras State, 1967–68, review (English) ... ... ... ... ... ... 383
Ports (minor) in Madras State, 1967–68, review (Tamil) ... ... ... ... ... ... 606
Road Development Building Progress in Madras State, 1967–68, review ... ... ... ... 606
Stationery and Printing Demand 34, for 1968–69, Minister's speech ... ... ... ... ... 258
Stationery and Printing Department, 1967–68, review ... ... .... ... ... ... 258

PARISUTHA NADAR, THIRU A. Y. S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 537–539

PEER MOHAMMED, HAJI M. M.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 96–98

POLICE—
Central Intelligence Branch, location within the State ... ... ... ... ... ... 502–504
Deputy Superintendent of Police's Office, Periakulam, shifting to Theni ... ... ... 149

PONNAMBALAM, PULAVAR P.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... ... 340–342

PAGES.

PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 247–251
Stationery and Printing ... ... ... ... 174–176
Food, failure of crops due to failure of monsoon in Radhapuram Sub-taluk (Tirunelveli district) (C.A.) ... ... ... ... ... 158–159

PUBLIC GRIEVANCES—
Hearing by Collectors ... ... ... ... 307–310

R

RAJA, THIRU A. M
Budget, 1968–69, voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 323–325
Conference of Inspectors-General of Police, particulars ... ... ... ... ... ... 498–500

RAJAVELU, THIRU T. A.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 566–567

RAJU, THIRU J. S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 541–542



PAGES.

RAMACHANDRA DORAI, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 76–80

RAMACHANDRAN, THIRU K. N.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 74–76

RAMACHANDRAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 580–583
Central Intelligence Branch, location within the State ... ... ... ... ... ... 502–504
Engineering Colleges, Central Government's request for reduction in intake of students (C.A.) ... ... ... ... ... ... 159–160
Groundnut, ban on export ... ... ... ... 9–13
Madras City, removal of drinking water scarcity ... 134–138
Public grievances, hearing by Collectors ... ... 307–310

RAMAMOORTHY, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Stationery and Printing ... ... ... ... 163

RAMASWAMI GOUNDER, THIRU K. M.—
Fire accident, Sivashanmugapuram ... ... 149–151

RAMASWAMY, THIRU S. J.—
Collectors, change in designation ... ... ... 305–307

RAMASWAMY NAIDU, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 233–238
**Police** ... ... ... ... ... ... 46–51

R—*cont.*

PAGES.

RATHINASABAPATHY, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 73–74

RYOTS—
Ryots in Gingee area, alleged harassment by Police (C.A.) ... ... ... ... ... ... 24–26

## S

SADIQ PASHA, THIRU S. J.—
Water-supply scheme for Ramanathapuram Municipality (C.A. St.) ... ... ... ... ... 26–27

SANKARIAH, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 603
Raja Mills, Madurai, closure (A.M.) ... ... 314
Tamil Pandits Association, Madurai district, representation ... ... ... ... ... ... 129–130

SATHIAVANIMUTHU, DR. (THIRUMATHI)—
Budget, 1968–69, Voting—
Stationery and Printing ... ... ... ... 162, 163–164, 187–196, 197–198

SCHOOL—
Industrial Training School, Alampoondi ... ... 483–484

SERVICES—
Collectors, change in designation ... ... ... 305–307
Deputy Collectors (temporary), reversion ... ... 151–153
Gazetted and non-Gazetted Officers, Corruption charges ... ... ... ... ... ... 153–156



S—*cont.*

PAGES.

SIVAGNANAM, THIRU M. P.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 55–60

SIVASUBRAMANIAN, THIRU S.—
Collectors' Conference, Tiruchirappalli, decisions ... 311–312
House-sites for Harijans in South Arcot district ... 494–495
Kodaikanal, development as hill resort and tourist centre ... ... ... ... ... ... 18–20
Obscene books, sale ... ... ... ... ... 504–506

SLUMS—
Slums in Madras City, improvement ... ... 20–23

SOUNDARAPANDIAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... 334–336

SRINIVASAN, THIRU P.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 205–207

SUBBARAJA, THIRU A. A.—
Budget, 1968–69, Voting—
Police ... ... ... ... ... ... 28, 71–73

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 316
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 513, 514, 539–541
Police ... ... ... ... ... ... 28, [illegible]

PAGES.

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Budget, 1968-69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 571-574
Foodgrains, supply through family cards in Tirunelveli district (C.A.) ... ... ... 315

SUBRAMANIAM, THIRU A. L.—
Palmyrah jaggery, price fluctuation in Tirunelveli district ... ... ... ... ... ... 294-300

SUBRAMANIAM, THIRU E. M.—
Budget, 1968-69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 544-546

SUNDARA BHARATHY, THIRU SOWDI. S.—
Budget, 1968-69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ... 328-331
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 513, 531-532

SURENDRAN, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Co-operation ... ... ... ... ... 199
Police ... ... ... ... ... ... 28, 80-83



PAGES.

SWAMINATHAN, THIRU V.—
Budget, 1968-69, Voting—
Stationery and Printing ... ... ... ... 164-166

T

TANK(S)—
Madurantakam tank, desilting ... ... ... 7-9

TEACHERS—
Industrial Training Institutes, Instructor's Pay Scales ... ... ... ... ... ... 130-131
Tamil Pandits Association, Madurai district representation ... ... ... ... ... 129-130

THANGAPPAN, THIRU T.—
Budget, 1968-69, Voting—
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 551-552
Water-supply Scheme for Ramanathapuram Municipality (C.A.) ... ... ... ... ... 26

THEERTHAGIRI GOUNDER, THIRU T.—
Budget, 1968-69, Voting—
Co-operation ... ... ... ... ... 229-232, 531-532

THIMMARAYA GOUNDER, THIRU T.—
Budget, 1968-69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 574-575

PAGES.

TOURISM—
Kodaikanal, development as hill resort and tourist centre ... ... ... ... ... ... 18–20

TRANSPORT—
Bus permits—Applications pending ... ... 289–292

**V**

VARADARAJAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...
513, 534–536

VEZHAVENDAN, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industries ... ... ...
331–334

VINAYAKAM, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Co-operation ... ... ... ... ... 199
28,
Police ... ... ... ... ... ... 89–96
City Hospitals, appointment of Receptionists ... 303–305
Fire accident, cracker godown, Madras ... ... 507–508
Food Production Corporation, establishment ... 16–18
Madras city, removal of drinking water scarcity ... 134–138
Palar river, water supply from Mysore State ... 131–134
Public grievances, hearing by Collectors ... ... 307–319
Rice for Kerala State ... ... ... ... 141–143
Rice, transportation for personal consumption ... 485–492
Slums in Madras city, improvement ... ... 20–23



**W**

PAGES.

WATER-SUPPLY—
Madras city, removal of drinking water scarcity ... 134–138
Palar river, water supply from Mysore State ... 131–134
Water-supply scheme for Ramanathapuram Municipality (C.A.) ... ... ... ... ... 26–27

61441